விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

12 SEP 1918

தொகுதி XI } காளயுக்திஸு ஆனிமீ :: 1918-ஸு ஜுலைமீ { பகுதி 1

விடாமுயற்சி

PERSEVERANCE

சலைமுழு தோர்ந்து கிரிசெலா மறுத்த
காந்தனே பருமணி யரவத்
தலைஇடங் திமைக்குந் தாத்திரி யதனிற்
சாற்றருந் தக்கநன் முயற்சி
யுலைவறப் புரியா வொருவனுக் கெங்ங
னுற்றிடுஞ் செல்வநன் னிலத்தை
நிலைபெற வுழுது வித்திலான் றனக்கு
நீள்பய னுற்றிடுங் கொல்லோ!

மானிட னொருவன் றனக்கருஞ் செல்வம்
வாய்க்கவென் றனுதின முயற்சி,
தானுஞற் றுவனேற் கடவுளு மதனைத்
தந்தளிக் குவனதா லன்றோ,
வானபே ரறிஞர் திருவினை முயற்சி
யாக்குமம் முயற்சியி லாமை,
யீனமா ரின்மை புகுத்திடு மாலென்
றியாருநன் குணர்தர நவில்வார்!

மக்களே தேவர் நரகரென் றறிஞர்
வகுக்குறு முயர்திணை யாதி
தக்கபல் லுயிர்க்குஞ் சக்கர முதலாச்
சாற்றுமைம் படைகரத் தேந்து
மைக்கடன் மேனி வள்ளல்வேண் டியவீ
வானென வாய்மலர்ந் தனையான்
மிக்கபன் முயற்சி புரிகிலார் தமக்கவ்
விண்ணவன் யாங்ஙன மருளும்?

செயத்தகு முயற்சி செய்திடிற் செயிர்தீர்
செய்யவண் மணுளனு மிரக்கி

வியத்தகு வேண்டு மியாவையு மளிப்பன்
விளம்புறு முயற்சிசெய் யானே
னயத்தகு போக மளித்திடா னென்று
ஞானிலத் தறிஞர்நன் குரைப்ப
ருயத்தகு நெறியோ லடியுண லென்றே
யோர்ந்தமா தவப்பெருங் கடலே.

முன்புல் வினைசெய் தவர்முயற் றின்றி
முன்னிய வெலாமுண்ப ரென்னி
லின்பவா லரியே முதலுப் கரண
மெலாமினி திடையவ ரேனும்
வன்புறு மடுதன் முயற்சியில் லாமை
வயிற்றெழு பசித்தழ லவிய
நன்று தம் வாயின் மறைமுழு துணர்ந்த
நற்றவக் குணப்பெருங் குன்றே.

கடவுளீ குவனென் றெண்ணிநித் திபமுங்
கருதுறு முயற்சிசெய் யானே
லடலுறு செல்வ மடைகுவ னோகொ
லருங்கலத் திட்டபா லடிசின்
மிடலுடைக் கரத்தா லெடுத்துண் டெங்ஙன்
வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்ப
னுடல்பவந் தனக்கோ ராகர மாகு
முடனனி வாட்டுமெய்த் தவத்தோய்.

முன்பொரு காரவான் மொய்வலி சிந்து
மும்மதக் கறையடிக் கயமும்
வன்புடைப் பொன்னன் புரிகொடு மையினல்
மனமெலி பிரகலா தனனு
மன்பினோ டேத்தி யழைத்தலா னன்றே
யலைமடல் வண்ணன்வந் தாண்டா
னென்பரா தலினுன் முயற்சிசெய் பவருக்
கெய்தரும் பொருளுமொன் றுளதே?

விவேக போதினி

தொ. 11] காளயுக்தி௵ ஆனிமீ [ப. 1

நஞ்சுண்ட நாதன்

THE POISON SUCKER

மாதுல னாகியும் ஏதில னாகியும்
வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலொடு
போதர வுண்ட புயல்வண்ணா!
மாதவ! யாதவ! வாதவ! கேசவ!
மாயா! ஆபா! மதுஸூதா!
ஆதியு மந்தமு மாகிய நின்புகழ்
அறியா துரையேன் அடியேனே.

—வில்லி பாரதம்.

அலைபரந்து தவழ்ந்து முத்தமிட்டு அன்போடு அணைத்து யமுனை குளிரப்பாடி விளையாடும் கோகுலம் ஓர் இடையர் சேரியாகும்; அதன் அதிபன் நந்தன். அவன் மனைவிதான் யசோதை. அவள் பிரஸவித்த குழந்தைக்குப் பதிலாகத்தான் வஸுதேவர் அந்நள்ளிரவில் தனது குழந்தையை மாற்றி வைத்துவிட்டுப் போனது.

வஸுதேவர் வெகு பரபரப்புடன் அப்பராசக்தியாகியபெண்குழந்தையைஎடுத்துச்சென்றதும், நித்ராதேவியின் வேகம் வரவரக்குறையவாரம்பித்தது. காற்று முதல் முதல் வீசவாரம்பித்தது. ஆகாயத்தில் கவிந்திருந்த மேகங்கள் தாமேஒதுங்கி அப்போது கிளம்பிய பாதிச்சந்திரனை வழிபட்டு மரியாதை செய்ய வாரம்பித்தன. குவிந்திருந்த மொக்குகளெல்லாம் சற்றே வாய் திறந்து தேன்சிந்திக் காற்றையினிக்கச்செய்து மணம் வீசும்படி பூந்தாதுத்துகளைவெளியிட்டன. அப்போது வீசிய காற்றிலேயே ஒரு ஸுகமிருந்தது. அதன் ஸ்பர்சம் பட்டாரது மனதையுந் தளிர்க்கச் செய்யும். அதனால் பிரகிருதியே ஒரு நவயௌவன நிலையை யடைந்திருந்தது.

பூமிதேவியானவள் இவ்வளவு ஸந்துஷ்டியுடன் விளங்கும் காலத்தில்தான் யசோதை தன்னுணர்ச்சி பெற்றாள்; நந்தகோபனும் தன் மெய்யுணர்ச்சி யடைந்தான். வஸுதேவர் வந்ததாவது, தமது குழந்தை மாற்றப் பட்டதாவது அவர் அறியார். எனவே, அவர் தமக்கு ஆண்குழந்தை பிறந்ததெனக் கண்டதும் பேரின்பக் கடலில் ஆழ்ந்தனர்; உடல் மயிர்க் கூச்சிட ஆனந்தக் கண்ணீர் வடித்துக் களித்தனர்; உள்ளங்குளிர்ந்து,தமதுபிள்ளைக்கலியைத் தீர்த்துப்பெரும்பேறளித்த கடவுளின் கிருபையை நினைந்து நினைந்து வாயாரத் துதித்துக் கொண்டாடினர். பொழுது விடிந்ததும், நந்தகோபன் பல்லாயிரம் பசுக்களைப் பூசுரர்களுக்குத் தானஞ் செய்து, அவர்களைச் சந்தோஷமடையச் செய்தான். மற்றும் பிள்ளைப் பேற்றிற்கென்று செய்யவேண்டிய வைதிகச் சடங்குகளை விதிப்படி செய்து, பித்ருக்களையும், தேவர்களையும் கொண்டாடி, ஏழை எளியவர் யாவரும் தனது ஸந்தோஷத்தி லீடுபடும்படி அவர்க்கு அநேகவித தானங்கள் செய்து, தனது குளிர்ந்த மொழியால் அவரது மனத்தைக் கவர்ந்தான். அச்சமயம் கோகுலமே அக்கடவுட் குழந்தையின் பிறப்பைக் கொண்டாடியது. அவ்வாயர் பாடியில் கண்ணனது வரவைக் கொண்டாடா வீடே கிடையாது.

அந்நாள் பெருந் திருநாளாகவே கொண்டாடப்பட்டது. வாழையுங் கமுகுங் குலவப் பந்தரிட்டு, சித்திர மாட மமைத்து, பூரண கும்பங்கள் பொலிவித்து, மங்களவாத்திய மெங்கும் இன்னிசை பரவச் செய்வித்து, சோபனம் பாடிக் களித்துக் கூத்தாடி ஆயச் சிறுவர் சிறுமியர் வருங் களிகொண்டனர். மற்று நந்தகோபனது வீட்டில் தவழ்ந்து விளையாட வந்த தெய்வக்குழந்தையைக் காணவந்தவர்க்கு அளவேயில்லை. யக்ஷகின்னர கீதங்களிடை தேவதுந்துபி இசைந்து ஒலிக்க, அதன் இனிமையில் மயங்கி இம்மாய உலகை யறியாதவன்போல மாயஞ் செய்து, அண்டங்களைக் கடந்தளாவிய தன்னுருவைக் கேவலஞ் சிறு மானிடக் குழந்தைபோலடக்கிக் கொண்டிருந்த அந்த மங்கள உருவைக் கண்டுங்

162025 அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வருமா?

காணாது திகைத்துத் தம் கண்ணை அதை விட்டு அப்புறந் திருப்பமுடியாமல் பிரமித்து அங்கு நின்ற யாவரும், அக்குழந்தையின் பாதாதி ஸர்வாங்க லக்ஷண ஸௌலப்யத்தில் ஆழ்ந்து அதற்குப் பல்லாண்டிசைத்து ஆசிகூறி வாழ்த்தினர்; பொன்னும் பொருளுமளித்துக் களிகூர்ந்தனர்; ஒருவர்மே லொருவர் வெண்ணெய், பால். தயிர், மங்கள நீர் முதலியவைகளை வாரி யிறைத்து, ஆநந்தக் கடலில் ஆழ்ந்து விளங்கினர். இவ்வாறு நந்தகோபரது புத்ரோத்ஸவக் கொண்டாட்டம் கோகுலமுழுதுமே உத்ஸவமாக விளங்கிற்று.

நிற்க, ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோகுலத்துள் குழந்தையாக அமர்ந்த நாள்முதல் அவ்விடம் செழிக்க வாரம்பித்தது. பட்டமரங்களெல்லாம் தளிர்த்தன; வறண்ட குளமெல்லாம் நீர் நிறைந்தன; காயாமரங்கள் கனிகள் குலுங்கச் செழித்தன; பயிர்களெல்லாம் அழிவற்றோங்கின; கால்நடைகள் நோயற்று விளங்கின; பசுக்கள் அளவிற் கடங்கா அளவு பால் தந்தன; இடையர் சேரி முழுதும் கிளிகள் கொஞ்சவிளங்கின; திருமகளே தனது தலைவனைத் தேடி அங்கு நாடினளெனில், ஓர் தவறாகாது. கன்றுகள் துள்ளிவிளையாடக் கண்ட பசுக்கள் களித்து வெறிக்கப்பார்க்குங்காளைகள் திமிரியோட நோக்கும் ஆயமாதர்கள் தமது பொன்மாலைகளை எறிந்து மயக்குவ ரென்றால் கோகுலத்திற் குண்டான லக்ஷ்மீகடாக்ஷத்தைப்பற்றி விரித்தல் மிகையன்றோ? இவ்வாறு கோகுலங் காரணமின்றிச் செழிப்பானேனெனக் கம்ஸன் பலமுறையும் சிந்தித்ததுண்டு. அப்பொழுது அவனுக்கு அம்மாயப் பெண்ணுரைத்த மொழியே மனத்தி லுறுத்தும். ''அவன்தான் அங்கு ஒருவேளை மறைந்து வளர்கிறானோ'' எனவே யவன் எண்ணி எண்ணி ஏக்க முறுவன்.

நந்தகோபன் கம்ஸனுக்குக் கப்பங் கட்டும் ஓர் சிற்றரசன்; விரஜை என்னும் குறுநாட்டுத் தலைவன். ஆகவே அவன் பன்முறையும் மதுரை சென்று கம்ஸனைக் கண்டு கப்பம் செலுத்துவது வழக்கம். ஆனால் அவன் தன் வீட்டிற்குள் ஸ்ரீகிருஷ்ணன் சிறு குழந்தையாய்த் தாமே யமர்ந்த பிறகு, கோகுலஞ் செழித்து, வருமான மதிகமாகவே, அவனுக்கு ஓர் விதப் பெருமையும் சோபையு முண்டாயின; மேலும், அவனது வயோதிக வயதில் குழந்தை பிறந்ததென்னும் ஸந்தோஷ மிகையால் அவன் உள்ளங் கிளுகிளுத்ததும் அவற்றிற்கு இடந் தந்ததென்பது மிழுக்காகாது. ஆகவே, கப்பங்கட்ட வந்தபொழுது அவனது ஏற்றத்தைக் கண்ட கம்ஸன், அதற்கென்ன காரண மிருக்குமென வெண்ணினான். அவனிடத்தேதான் தன்னைக் கொல்லவந்த யமன் ஒருவேளை வளர்ந்து வருகிறானோ என்னும் ஸந்தேஹம் அவனுக் கிருந்தாற் போலவிருந்து உண்டாயிற்று. அது கவலை வேரிட்டு, அவலங் காய்க்கவே வேலைசெய்ய வாரம்பித்தது போலும்!

அந்நாள் அம்மாயப் பெண், தன் கையை விட்டு மேற்பறந்து பேரொளியுடன் மறைந்த போதே அவன் மனங் கவலையில் ஆழ்ந்தது. தன்னைக் கொல்லும் யமன் வந்திருப்பதாகவே அவன் எண்ணினான். அதை எண்ண எண்ண அவன் பலம் அவனுக் கிருப்பதாகவே படவில்லை. அவன் மனம் நைந்து நைந்து அவனுடைய வீரமும் அடங்கா வன்மையும் அடங்கியே விளங்கின. எனினும் அவன் கொடுமையும் ஸந்தேஹமும் முன்னினும் அதிக வேகமாக வேலைசெய்தேவந்தன. எங்குபார்த்தாலும் அவனுக்கு அவ்வசரீரி மொழியே காதிற்படும் போலவிருக்கும்; ஸாதாரண உருவங்களும் அவன் முன் வேறுவிதமாகத் தோன்றும். பிராணபயம் என்றால் மனம் எப்படியிருக்கும்? தூக்கிலிடவிருக்கும் மனிதனது மார்பு எப்படிப் படபடக்கும்? தனது அழிவிற்குக் காலங் குறுகிவிட்டதென்ற நம்பிக்கையும் பயமும் அவன் மனதை முற்றுங் கவர்ந்தன. அப்படி வெருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேயல்லவா! இத்தகைய நிலைமையிலிருப்பவனுக்குக் கோகுலத்திலிருந்த நந்தகோபனது ஊர் சிறப்புற்று எங்குமில்லா வளத்துடன் விளைவதாகக் கேட்டால் சந்தேக முண்டாவதும் தவறுமா? அல்லது ஒருவேளை நாய்களுக்கு மோப்பினால் விஷயம் ஏற்படுவது போல நந்தகோபன் விஷயத்தில் ஸந்தேக மேற்பட்டதோ? அது யாருக்குத்தான் தெரியும்? ஒவ்வோர் நல்ல செயலும் தோன்றாமற்றோன்றியும், தோன்றினும் சிறிதுகாலம்மறைந்து விளங்கவேண்டுமாயினும், அது சரியான

அப்பனருமை செத்தால் தெரியும், உப்பின் அருமை உப்பில்லாவிட்டால் தெரியும்.

வலிவுடன் வெளிவரக் கூடிய வழிக்கு இயற்கையே துணை செய்வதுபோலத் தெய்விகமாக அவன்மனத்துள் இச்சந்தேகமுதித்ததுவோ?

நிற்க, நந்தகோபனது வரவைப்பற்றிக் கேள்விப்பட்ட வஸுதேவர் அவன் விடுதிக்குச் சென்று அன்புடன் அவனைக் கண்டு குசலப்ரச்னஞ் செய்து குழந்தையின் பெருமையைக் கேட்கஅவாக்கொண்டு "என் அன்ப! நீ வெகு பாக்யசாலி! இத்தனை நாளாய்ப்புத்திரப்பேறில்லாமையைப்பற்றிக் கவலை கொண்டிருந்தாய். உனக்குப் புத்திரோத்ஸவமுண்டானது எனக்குப் பேரின்பந் தந்தது. உன்னை இப்பொழுது பார்த்தால் நவயௌவனங்குலவுவதாக எவரும் சொல்வர். அன்பரைக் காண்பது ஆனந்தமே தரும். எனினும் பலதுறையில் விளங்குபவர் ஒரேயிடத்துக் கூடிவாழ்தல் இயலாதன்றோ? உனது பண்ணைநிலங்கள் பரிஜனங்கள் முதலிய யாவும் ஸுகமாகவே விளங்குகின்றனவா? ஊர் பீடையற்று விளங்குகிறதா? பசுக்கள் எல்லாம் ஸுகமா? அவற்றிற்குப் புல்லுக்கும் நீருக்கும் குறையொன்று மின்றே?" என வினவினர். மேலும் "என் அன்பா! உன்னாலும் உன் மனைவியாலும் வளர்க்கப்பட்டுவரும் என் குழந்தையும் அதன் தாயும் ஸுகமே விளங்குகின்றனரா?" என்றாவலுடன் கேட்டனர். இம்மொழிகளைக் கேட்ட நந்தன் "அந்தோ! தேவகியிடந் தோன்றிய குழந்தைகள் எல்லாம் கம்ஸனால் கொலையுண்டன. கொல்லாதெஞ்சிய அவ்வழகிய பெண்ணும் வானுலகை நாடி மறைந்தது. விதியே உலகை யாள்வது போலும்!" எனத்தேற்ற வஸுதேவர் "நந்தா, நீ கப்பங்கட்ட இங்கு வந்தனை. வந்தவேலையுமாயிற்று. எங்களையும் பார்த்தாயிற்று. இங்கு நீ அதிக நாளிருக்கலாகாது. இனிமேல்தான் கோகுலத்திற்குப் பல கஷ்டங்கள் ஏற்படப் போகின்றன. ஜாக்ரதை!ஜாக்ரதை!" என எச்சரித்து நந்தகோபனைக் கோகுலத்திற்குடனே புறப்படும்படி தூண்டினர். வஸுதேவர்சொன்னால் அதில் பொய்யொன்றுமிராதென்பதே நந்தகோபனது திடமான நம்பிக்கை. ஆகவே அவன் கோகுலத்திற்குத் திரும்பிவரும் வழி முழுதும்தனக்கு என்னகேடுவர இருக்கின்றதோ வெனச் சிந்தித்து ஹரிநாம ஸ்மரணஞ் செய்துகொண் டிருந்தான்.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தாற்
மனக்கவலை மாற்ற லரிது [கல்லால்

அன்றோ?

நிற்க, தன்னைக் கொல்லப் பிறந்த குழந்தையை வலைபோட்டுப் பிடிக்க கம்ஸன் ஆயத்தம் செய்துகொண் டிருந்தான். அவன் செய்த பிரயத்தனங்களைச் சொல்லவும் தரமா? அக்குழந்தையாக எந்தக்குழந்தை யிருக்குமோ வென ஐயமுற்ற அவன், தனது நாட்டிலுள்ள குழந்தைகளையெல்லாம் கொலைசெய்ய மனந் துணிந்தான். இஜ்ஜீவஹிம்ஸைக்காகவேவுகாரர்களாகவும் ஊழியர்களாகவும் உழைத்த துஷ்டர்கள் அநந்தம். இவ்வகை ஊழியத்திற் கமர்ந்தவர் ஆடவர் மாத்திரமல்ல. மாயக்காரிகள், மந்திரவாதிகள், சூன்யவித்தையர் முதல் யாவரும் இக்கொடுஞ் செயற்கு உடந்தையாக உழைத்தனர். கொடுமை புரிய நேரே அரசனே சொன்னால் துஷ்டர்கள் ஏன் ஸம்மதிக்கார்? இத்தகைய துஷ்டர்களுள் பூதனை ஒருவள். இவள் பெருமாயாவி; பொய் வேஷங் கொள்வதில் தேர்ந்தவள்; கம்ஸனது ஏவலுக்குட்பட்டு ஊரிலுள்ள வீடுகள்தோறுஞ் சென்று, நயவஞ்சகம் பேசி, அங்கிருக்கும் சிறு குழந்தைகளிட மிக்க அன்புகொண்டவள்போல நடித்து, தனது விஷந்தடவிய ஸ்தன்யத்திலிருந்து பாலூட்டி அச்சிசுக்களைக் கொல்ல வழி தேடிக் கொண்டிருந்தாள். இப்பூதனை யசோதை வீட்டிற்கும் வந்தாள்.

அப்பொழுதுதான் குழந்தை தொட்டிலிலாடுவதைக்கண்டு யசோதை,

"கிடக்கில் தொட்டிற் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதிரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேனங்காய்!'

என்று வியந்து அதன் அழகில் ஈடுபட்டுக் கிடந்தனள். அவளது மனோபவப் பெருக்கை வார்த்தைகளால் வர்ணிப்பதசாத்யம்; அதன் வைபவத்தையும் எழுச்சியையும் கண்டுணர மாட்டாது, கவிஹ்ருதயமும் ஒருவேளை மயங்கும். அக்குழந்தை நெளிந்து, தவழ்ந்து, வளைந்து, குழைந்து, அசைந்து, புரண்டு, நிர்க்குணத்துடன் அநந்த ஆநந்தத் திரட்டெனப் பதிந்து, பார்த்தவர் கண்ணைப் பறிக்கும் பரம உருவாகிக் கிடப்பதைக் காணக்காண அவள் மனத்துள் ஆனந்த வெள்ளந் ததும்பிப் பர

ளும். அதன் அங்கங்கள் ஸர்வ லக்ஷணங்களும் பொருந்தி, இணையற்று இத்தகைத்தெனச் சொல்லமுடியாது விளங்குவதே அவளுக்கு அதிசயத்தில் அதிசயம். நெடு நாளில்லாப் பிள்ளைக்கலியைத்தீர்த்த அந்தச்சேமநிதியைக்காணுந்தோறும் அவள்உள்ளங்கிளைத்து, அன்பு பூரித்து, மார்புகளிலிருந்து தாமே பால்பெருகி வழிந்து, கண்களிலிருந்து யதேச்சையாகப் பொங்கிவரும் ஆநந்தக் கண்ணீருடன் கலந்து மயங்கும். அக்குழந்தையின் அசைவு, அதன் கைகால்கள் அசைதல், அது பிரமித்து விழித்தல், அதன் இளஞ்சிரிப்பு, சிறு அழுகை, இவையெல்லாம் அவளுக்கின்பம் தந்தன. அதன் முகமண்டலத்தைப்பார்க்கப் பார்க்க, உலகில் வேறு மண்டலங்களிருப்பதாகவே அவளுணராள். அதன்மெல்லிய சரீர அமைப்பு, அதன்காந்தி, அழியாவனப்பு, இவற்றுடன்அக்குழந்தையின் பெருமையைப் பற்றி யவள் கொண்ட எண்ணங்கள், விருப்பங்கள், மனோபாவங்கள் இவையெல்லா மவளை இந்த உலகத்திலிருப்பதாகவே கருதாது, கனவிலேயே ஆழ்த்திவிடும். அவளது அன்பின் பெருக்கை மற்றெப்படி வெளிப்படையாக அறியமுடியும்?

இவ்வாறு, கடவுட்குழந்தையின் பெருமையிலும், அத்திவ்யமங்கள விக்ரஹத்தின்ரூபலாவண்யத்திலும் ஈடுபட்டு அவள் மயங்கிச் செயலற்றுக் கிடக்கும் போதுதான், பூதனையங்கு வந்துவிளங்கினாள். அவள், திவ்ய ஸௌந்தரவடிவுடையவள்போலத் தனது மாயையாலுருக்கொண்டு, கண்டார், கைத்தாமரை எடுத்துப் பாற்கடலில் வந்த லக்ஷ்மி யென்றெண்ணி அவளைத் தொடர்ந்துவர, யசோதையும் குழந்தையும் இருக்குங் கூடத்துள் நுழைந்தாள். அவளது மாயா உருவைக் கண்டு எவரும் பேசவும் நாவெழாமல் பிரமித்து விளங்கினர். வந்தபூதனைதொட்டிலிலிருந்தகுழந்தையருகிற் சென்று "என்ன அழகு! என்ன அந்தம்! இத்தகைய குழந்தையைக் காண்பது எளிதன்று. இதன் ஸௌந்தர வடிவைக் கண்ட எவர்தான் இதையெடுக்க ஆசை கொள்ளார்? இதைப் பார்க்கும்போதே எனக்கு அளவற்ற அன்புண்டாகிறது. எனக்குந் தெரியாமல் என் மனங் கிளைக்கிறது. ஆஹா! என் மார்பிலிருந்து பால்பெருகச் செய்யு மிக்குழந்தையை, யானெப்படி எடுக்காமல் இருக்கமுடியும்? என்னப்பனே! உன்னை எடுக்காக் கைகளிருந்தென்ன, போயென்ன?" என்று சொல்லிக்கொண்டே அக்குழந்தையை வெகு ஆதரவுடன் எடுப்பவள்போல அபிநயித்தெடுத்துத் தன் முலைப்பா லூட்டினாள். இச்செயலைக்கண்ட யாவரும் திகைத்து நின்றனர். வேறென்ன அவரால் செய்யமுடியும்?

நிற்க, அப்பூதனையின் ஸ்தன்யங்களிலிருந்து பாலை யுண்ணவாரம்பித்த அத்தெய்வக் குழந்தை என்றுங்காணா உணவைக் கண்டது போல வெகு ஆவலுடன் அவள் முலைப்பாலை உறிய உறிய, அதன் வழியாகவே அப்பூதனையின் பிராணஸாரமும் அதனுடலுள் கலந்து வந்து கொண்டேயிருந்தது. அதைத் தாங்க முடியாது, அப்பூதனை "விடு! விடு!" என அலறிக்கொண்டு அக்குழந்தையின் வாயிலிருந்து தனது ஸ்தன்யங்களை விடுவித்துக்கொள்ள முயன்றனள். குழந்தைப் பிடியுங் குரங்குப் பிடியும் ஒன்றல்லவா? அவள் என் செய்வள்? அக்குழந்தை பாலுண்ணும் வேகத்தைத் தாங்கமுடியாது கத்தினள்; கதறினள்; வீறிட்டலறினள். அங்கு ஊரே கூடிவிட்டது. விஷந் தடவிய முலையை வாயிற்றிணித்துக் குழந்தையைக் கொல்லவந்த அவள், யமனது வலையில் தானே சிக்கிக்கொள்ள நேர்ந்ததேயென ஏங்கி ஏங்கி யழுதாள். சிறிது நாழிகைக்குள் அவள் உயிரற்ற பிணமாய்க் கீழே விழுந்தாள். எனினும், வரவரத் தன் சுயரூபமான விகாரத்தை அடைந்துவந்த அந்தச் சவத்தின்மேல் நஞ்சுண்டு களித்த நாயகக் குழந்தை தவழ்ந்து கொண்டிருந்தது.

அப்போதுதான் யசோதை தன் கனவிலிருந்து தன் குழந்தையைக் காணவந்தாள்? அந்தோ! அவள் கண்டகாட்சி எத்தகைத்து! அக் கோர ராக்ஷஸிமேல்தன் குழந்தையைக் கண்ட அவள் மனம் என்ன பாடுபடும்? பாவனமாகப் பெற்றெடுத்துச்சீராட்டிவளர்த்த குழந்தை பிறர்கையில் பட்டதைக் கண்டதும் அவள் அதற்கு எத்தனை ஆலத்தி, ரக்ஷைகள், திருஷ்டி தோஷத்தைப் போக்கும் பரிகாரங்கள் செய்வள்? அக்குழந்தையின் பெருமையை என்னென்றவள் கொண்டாடுவள்?

'பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத் துண்டிட்டு
உறங்குவான் போலே கிடந்தவிப் பிள்ளையின்"

அத்புத குணத்தை எடுத்துரைத்து அவள் மெய்ம்மயங்கி அளவற்ற அன்பில்ஆழ்ந்து கிடந்தாள். மற்று அக்குழந்தையைக் கண்ட ஆய மாதர்கள் மூக்கின்மேல் விரல்வைத்து மயங்கி நின்று "ஆயர் புத்திரனல்ல அருந்தெய்வ"மென்றுவாயாரவாழ்த்திப்புகழ்ந்தனர்.

கோபால் ராவ் ஹரி பீடே

GOPAL RAO HARI BHIDE

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

என்னும் கவி வாக்கிற்கிணங்கத் தனது சுகத்தை விரும்பாது, செய்யும் வினையிலேயே கவலைகொண்டு பிறரது இன்பத்தை நாடும் எவனும் அவர்களைக் கஷ்டத்திலிருந்து நீக்கிக் கீழ்விழாது தாங்கும் வலிநிறைந்த தூண்போல ஆவன் என்பது திண்ணம். அத்தகையான், கேவல சுகத்தை விரும்பாது, பொதுஜன சௌகர்யத்தையே பெரும் பயனாகப் பெறுவதனால், மக்களுள் பெரியவனாகக் கொண்டாடப்படுவது இயற்கையேயாம். அத்தகையாரது வாழ்க்கையின் வழியைப் பின்பற்றி யாவரும் தமது செய்வினை வழியைச் சரிவரத் திருத்திக் கொள்ளமுடியுமெனவே அவரது ஜீவசரிதம் ஆவலோடு கற்றுணர்ந்தோரால் கவனிக்கப்படும். எனவே, பல பெருங்காரியங்களுக்கும் பொதுஜன இயக்கங்களுக்கும் இயக்கங்கொடுத்து ஊக்கங் குன்றாது உழைத்து விளங்கிய மஹாராஷ்ட்ர அந்தணர் வகுப்பைச் சார்ந்த **கோபால்ராவ்ஹரிபீடே** அவர்களதுவாழ்க்கைச் சரிதத்தைச் சற்றுக் கவனிப்பது தவறாகாது.

இவர் பம்பாய் இராஜதானியில் **தானா** என்னும் ஜில்லாவில் **மஹாபாத** க்ஷேத்திரத்தில் சிறந்த வைதிகப் பிராமண வம்சத்து 1843-ம் ஹு பிறந்தவர். வறுமையால் பீடிக்கப்பட்ட இவர் தந்தை, உடலையும் உயிரையும் காக்கும் பொருட்டுக் குடும்பத்தாருடன் **கல்யாண** நகரத்தில் அமர்ந்தனர். இவரது சீமந்த புத்திரர்க்குப் பூனாவில் சிறிய சம்பளத்தில் குமாஸ்தா வேலை கிடைத்ததும் அங்கு கோபால் ராயர் ஆங்கிலம் கற்கும்பொருட்டு அனுப்பப்பட்டனர். தமது தமயனது வரும்படி ஸ்வல்பமாயிருந்தபடியால் கோபாலராயர் தமது படிப்பிற்காகப் பிறரது ஆதரவையே எதிர்பார்க்க வேண்டியிருந்தது. எனவே, அவரது பத்தொம்பதாம் வயதில் பூனாவில் ஸிக்நலர் வகுப்பில் சேர்ந்து அப்பரிக்ஷையில் தேர்ச்சிபெற்று **விஹார** நாட்டில் ரயில் உத்தியோகத்தில் அமர்ந்தனர். 1865-ம் ஹு அவர் **நாகபுரத்துக்கு** மாற்றப்பட்டனர்.

நாகபுரத்திலிருக்குங்காலில் அவர்க்கு அவ்விடத்து ரெவினியூ உத்தியோகஸ்தராகவிருந்த தினகர் **ஆனந்தராவ்** என்பவரிடம் பரிச்சயமேற்பட, அவர் கோபால் ராயரது சிறந்த குணங்களைக் கவனித்து அவரை ரயில்வே உத்தியோகத்தைவிட்டுச் சட்டப் படிப்பிற்குப் படிக்கும்படி தூண்டினர். மேலும் அவரே நாகபுரத்து ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அவர்களின் அந்தரங்ககுமாஸ்தாவாகக் கோபால ராயருக்கு வேலையைச் சம்பாதித்துக் கொடுத்தனர். இரண்டு வருஷத்திற்குள்ளாக அவர் அக்கச்சேரியின் பிரதான குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டனர். இதற்குள்ளாகவே அவர் சட்டப் பரீக்ஷையில் தேறி, தமது வேலையை ராஜீநாமா கொடுத்து 1869-ம் ஹு வக்கீல் வேலையில் அமர்ந்தனர்.

கோபால ராயர் கோர்ட் வியவஹாரங்களில் ஜயிக்கக்கூடியவைகளையே, அதாவது நியாயமான கேஸ்களிலேயே வாதித்து, சிறிதும் பயமில்லாமல் விளங்கினதால் அவர் வெகு சீக்கிரத்தில் வக்கீல்களுக்குள் முதன்மை பெற்றாரென்பது அதிசயமல்ல. அக்காலத்து நியாயாதிபதிகள் ராணுவ உத்தியோகஸ்தராயிருந்தபடியால் உடனுக்குடன் தீர்ப்பு செய்வதிலேயே கண்ணாயிருந்தனர். சில சமயங்களில் அவர் தீர்ப்பு நியாய விரோதமாகவும் இருந்தன வென்பது தவறாகாது. வக்கீல்கள் நிர்த்தாக்ஷண்யமாகத் தமது கக்ஷிகளையெடுத்து அவர்முன் வாதிப்பது, அக்காலத்தில் பெரும் கஷ்டமாக விருந்தும், கோபால ராயர் சிறிதும் பயமின்றி விளங்கினரென்பது கவனிக்கத்தக்கது. உத்தியோகஸ்தர்கள் கோபால ராயரிடம் சிறிதும் அன்புகொண்டு விளங்கவில்லை. அவரது படபடப்பும் அஞ்சா வன்மையும் அசையாக்கண்டிப்பும்அவர்களுக்குப் பெருந்தடையாக யிருந்தமையால், அவரை எவ்வாறேனும் அடக்கவேண்டு மென்பதே

அவர்களது பேரவா. ஒரு சமயம் ஒரு முக்கியமான கேஸ்விஷயமாகக் கோபாலராவ் வாதித்த காலத்து, அப்போதைய நியாயாதிபதியாகவிருந்த **கர்னல் லூஸீ ஸ்மித்** என்பவர்,

பொய்க்கேஸ் கல்பித்ததாகவும், பொய்ப் பத்திரங்கள் ஏற்படுத்தியதாகவும், பொய்சாக்ஷியம் தயாரித்ததாகவும் அவர்மேல் குற்றஞ்சாற்றி, நியாயமான சட்டவழிகளைச் சிறிதும் கவனியாது மேற்சொன்ன கேஸை நடத்திக்கொண்டிருக்கும்போது, இக்குற்றங்களுக்காக அவரைச் சமாதானம் அளிக்கும்படி கேட்டனர்; உடனே அவரது நடத்தையைப்பற்றி ஒழுங்கற்ற விசாரணை செய்யவும் ஆரம்பித்தனர். அப்போது சாயங்கால வேளை. கச்சேரியில் வக்கீல்கள் ஒருவரும் இல்லாமையால் உதவியின்றியே கோபாலராயர் சமாதானம் அளிக்கவேண்டி வந்தது. இராத்திரி நெடுநேரமாயும் கோபாலராயர் வீட்டுக்கு வாராமையால், வக்கீல்கள எல்லோரும் ஏதோ விபரீதம் நடப்பதாயெண்ணி உடனே கச்சேரிக்கு ஓடிவந்து, கோபால ராயருக்கு உதவிசெய்ய விரும்பினர். ஆனால் அவ்வுதவியை ஏற்காது, கோபாலராயர் ஆணித்தரமாகத் தமது கக்ஷியை வாதித்து வெற்றியுடன் வெளிவந்தனர். அதனால் அவரது பெருமையும், உண்மையில் ஆவலும், மேன்மேலும் சிறப்புற்றோங்கின.

கோபாலராயருக்குப் பொது ஜனங்களைச் சீர்திருத்த வேண்டுமென்ற பேராவல் உண்டு. விதவைகளது சுகதுக்கங்களைக்கவனிக்க அவர் வெகுவாய்ப் பாடுபட்டனர்; பெண் கல்வியை விருத்திசெய்ய அபாரமாக உழைத்தனர்; அப்பெண்களுக்கென்றே ஒரு பள்ளிக்கூடத்தையும் அவர் ஸ்தாபித்தனர்; அதற்குக் கவர்ன்மெண்டாரும் உதவிசெய்ய முன்வந்தனரென்பது கவனிக்கற்பாலது. கோபாலராயர் ஏழை எளியவர்களது நிலைமையை உயர்த்தவேண்டி மிகவும் பாடுபட்டு, எப்பதவியிலிருந்து செய்யும் எத்தகைய தீமையையும் தடுக்கத் தீரத்துடன் விளங்கினர். ஆனால் அவரது கடைசி நாட்களில், பொதுஜனச் சீர்த்திருத்தங்களினாலாவது, ராஜரீக இயக்கங்களினாலாவது தம் நாட்டிற்கு வரக்கூடிய நன்மையைக் காட்டிலும், நாட்டின் இயற்கைப் பொருள்களையும் உள்நாட்டுத் தொழில்களையும் விருத்திசெய்வதால் அபாரமான நன்மை ஏற்படக்கூடுமென்று அவர் திடமாக நம்பினர். ஆதலால் அவர் கற்றவர்களையும் புத்தி நுட்பங்கொண்ட வகுப்பினரையும், வியாபாரம்; வியவசாயம், கைத்தொழில் இத்துறைகளில் இறங்கும்படி தூண்டினர்; பேச்சாலன்றித் தமது செயலாலும் காட்டவேண்டுமென்ற ஆவலை முற்கொண்டு, அவர் நாகபுரத்தில் விசாலமான புறம்போக்கு ஒன்றை விலைக்கு வாங்கி, அதில் நவீனமான நீர்ப்பாசன முறைகளை அனுஷ்டித்தும், நீர் நிலைகளைக் உண்டாக்கியும், அதில் மதகுகள் கால்வாய்கள் முதலியன கட்டி அதிசயமான பழத்தோட்டமாக மாற்றி, முயற்சியால் வரக்கூடிய பலனை வெளியிட்டனர். அவர் ஒவ்வொரு காலையிலும் மூன்றுமணி நேரம் இத்தோட்டத்தைக் கவனித்து வந்தனர். கிருஷிக முறையைக் கையாண்டு, அவர் கால்நடைகளின் இனத்தை விருத்திசெய்ய விசேஷ இடமிருக்கக்கண்டு, அக்காலத்து விளங்கிய இயக்கத்தை முற்கொண்டு நாகபுரத்தில், பசு ஸம்ரக்ஷண சபை ஒன்றேற்படுத்தி, அதைப் புதிய வழிகளைக் கையாளும்படி செய்தனர். அவர் குடிகளை நேரில்கண்டு, பசுக்களையும் கால்நடைகளையும் விருத்திசெய்வதால் ஏற்படும் நன்மைகளையும், அவைகளிடமிருந்து கிடைக்கக்கூடிய சிறந்த அளவுமிக்க உரமும் அதன் பிரயோஜனமும் இவைகளைப்பற்றியும்

வற்புறுத்திவந்தனர். மேலும், இவ்விஷயமாக ஓர் பெருநிதி கூட்டி, குடிகளுக்கு வேண்டிய காலங்களில் முன்பணங் கொடுத்துதவவும்படி செய்தனர். குடியானவர்கள் கஷ்டப்படும் போது உதவுவதால் ஏற்படக்கூடிய நன்மையைப் பொது ஜனங்கள் உணருமாறு அவர் உழைத்ததல்லாமல். அந்தவிலைக்குப் பயனற்ற மாடுகளைக் கசாப்புக்கடைக்காரர்க்கு விற்பதால் உண்டாகக்கூடிய தீமைகளையும் அவர் ஜனங்கள் மனத்தில் வற்புறுத்திவந்தனர். அவர் பசுக்கொலை தடுக்கும் பிரசாரத்தை வைதிக தர்மமாகவே வெளியிடாது, பொருளாதாரமுறைக்கு முதல்வழியாமெனப் போதித்து வந்தது இங்கு குறித்தல் இழுக்காகாது. இவ்வகைய ஜீவகாருண்ய முறையிலீடுபட்டு, நமது ராயர் குக்கிராமங்கள்தோறும் சென்று உழைத்தனரென்பதை வள்ளுவ ருயிருடனிருந்து கண்டிருந்தால் தாமெழுதிய,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்னுங்குறளைப் பிரசாரஞ்செய்யக் கிடைத்த இந்நண்பனை இறுகத் தழுவி இணையற்ற இன்பமடைவரென்பது இம்மியும் தவறாகாது. இத்தகைய தர்மவ்ருத்திக்காக, கோபாலராயர் ஓர் வர்த்தமான பத்ரிகையை ஏற்படுத்தி, அதற்கென ஓர் அச்சுக்கூடமும் அமைத்துழைத்தனர். வாயில்லாப் பிராணிகளின் விஷயத்தில் அவர் கொண்ட சிரமத்திற்குக் கைம்மாறு எதுவோ? தனது தர்மத்தைச் செய்வதற்கு ஏதேனும் பலனை அபேக்ஷித்தல் தகுமா?

கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு?

விவசாயம்,பசுக்களின் பாதுகாப்பு இவ்விஷயங்களில் உழைத்ததுபோலவே, கைத்தொழில் விஷயமாவும் அவர் முயற்சித்து வந்தனர். நாகபுரவாசிகளை அந்த ஜில்லாவில் விளையும் பருத்தியை அயல்நாட்டிற் கனுப்பி நாட்டிற்கு வீணே உண்டாக்கும் நஷ்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு, அந்நகரத்திலேயே பஞ்சாலை ஒன்றேற்படுத்தும்படி தூண்டினர். முதல்முதல் சிறு முதலே வைக்கப்பட்டது; பின் ஆலைக்காக, ஓர் கட்டிடம் சமைக்கப்பட்டது; அதன் பிறகு யந்திரங்கள் நாட்டப்பட்டன. ஆயினும் வியாபாரிகளும், படிப்பாளிகளும் இவ்விஷயத்தில் தலையிடாது ஒதுங்கியிருந்தனர். ஆதலால் அவ்வாலைக்காகப் பட்டபாடு ஆற்றிற் கரைத்த பெருங்காயம்போல மணமற்றுவிடும் போல விருந்தது. எனினும், ஊக்கங்குன்றாது கோபால ராயர், ஜனங்களைத் தூண்டித் தூண்டி அத்தொழிற்சாலை அழிவடையாது காத்தனர்; தமது அளவு கடந்த சிரமத்தால், அதற்குப் போதிய முதல்சேர்த்து, அவ்வேலையை நேராகக் கவனித்து ஓங்கி விளங்கச்செய்தனர். இச்சாலையே "சுதேசி பஞ்சாலை" எனப்படுவது. அதன் அபார வேலையை இப்போதும் நாகபுரத்துக்குக் போவோர் கவனிக்கலாம்.

க்ஷய வியாதிக்குட்பட்ட கோபாலராயர் இவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்யக்கூடிய சக்தி வாய்ந்திருந்தது மெச்சத் தகுந்தது. அதற்கு அவர் அடங்கா ஆவலும் ஊக்கமும் முயற்சியுமே ஆதாரமாகி யிருந்தன. படாடோப மென்பதின்னதென் றறியாத அவர், பலநாளாகத் தம்மை வருத்திய க்ஷயரோகத்திற்கே 1896௵ ஜனவரி ௴ 4உ விருந்தாயினர். உயர்ந்த அந்தணர் வகுப்பைச் சார்ந்தவரேனும், அவர்க்கல்லாது ஏனையோர்க்கு மேல்வரும் வள்ளுவர் வாக்குப் பொருந்தாதெனச் சொல்லுவ திழுக்காகாது:

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

தைர்யம்

COURAGE

"வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்."

பாபங்களுள் மிகக் கொடியது பயமே. ஆயுதங்கள் அனைத்தினும் சிறந்தது தைர்யம். "பயந்தவனை ஓர் பூனையும் கொன்று தின்றுவிடும்." பயங்காளிகள் இருந்தும் இறந்தவர்களே. இந்நடைப் பிணங்கள் உயிர் இழப்பதற்குமுன் பலதரம் ப்ராணனை யிழந்தாலென வருந்துவர். வீரஸ்வர்க்கம் சேரும் க்ஷத்ரியனோ இப்பொய்யுடலைத் துரும்பாய் நினைத்து, மரணத்தை ஓர் அணங்கென அணைவன். நீர்ச்சுழி போன்ற புகழை விரும்பி, பீரங்கியின்

வயிற்றுட் புகும் தீரன் இஹத்தில் அழிவற்ற புகழும், பரத்தில் வீரஸ்வர்க்கமும் அடைவான். ஜராசந்த, பகாசுர, கீசக, துரியோதனாதி தீரர்களைத் தனித்தனி பொருது அவர்களை உயிர் மாய்த்த அதியற்புத வலிமை வாய்ந்த சிங்கக்கொடி யேற்றிய பீமசேனன்; காலகேய நிவாத கவசர்களை. (மாதலி ஓட்டிய இந்திரன் ரதத்திலேறி)ஒற்றைத்தனிவீரனாய்ப் போய் வதைத்துத் திரும்புமுன், வேடவேஷம் பூண்டு வரமருள வந்த ஸாக்ஷாத் பரமசிவனுடன் போர்புரிந்து நடுத்தலையில் அடித்த விஜய காண்டீபமேந்திய அர்ஜுனன்; த்ரோணர், க்ருபர், அச்வத்தாமா, கர்ணன், விச்வகேது ஆதியாம் ப்ரபல வீரர்கள் நாலா பக்கமும் சூழ்ந்தடிக்கையில், அத்தனை பேரையும் தானொருவனே தாக்கி, கால்வேறு கைவேறு தலைவேறு உடல்வேறாகவும், குதிரை யற்ற ரதம், காலற்ற குதிரை, தலையிழந்த யானை, ஸாரத்ய மொழிந்த ரதிகன், மதியிழந்த மன்னர், விதிகிழிந்த வீரராகத் தட்டுக் கெட்டுத் தடுமாறித் திகைக்கும்படி அச்சூரர் யாவரையும் வலியழிக்கவே, 'ஈடும் எடுப்பும் இல்லாத புஜபல பராக்ரமம் அமைந்த இக்காளை மாறுவேடம் பூண்ட கைலாநாதனோ! சூரபத்மனை அழித்த ஸுப்ரஹ்மண்யனோ!' என்று கூறிய ஸகலரும் நடுநடுங்கி உயிர் பதைத்தோடுமாறு யுத்தம் புரிந்த அபிமன்யு; அனைய (பாரத மாதாவின்) இணையற்ற வீரர்களை நினைத்த மாத்திரத்தில், (இப்போது ஒரு பாம்பைக் கண்டால் பத்துக் குட்டிக்கரணம் போட்டோடும்) நமக்கும் கூட, ஆயிரக்கணக்கான எதிரிகளைப் போர்க்களத்தில் அடித்துத் துரத்தும் தீரமும் வீர்யமும் நம்முள் ஒவ்வொருவருக்கும் உண்டாகும் என்பது ஒரு காலும் மிகையாகாது.

தைர்யம் என்னும் ஆயுதம் க்ஷத்ரிய ஜாதிக்கு மாத்திரம் உரித்தானதல்ல. ஸர்வ ஜனங்களுக்கும் அதில் பாத்யம் உண்டு. இம்மாம்ஸமய சரீரத்துக்கு நேரும் ஆயிரக் கணக்கான ஆபத்துக்களினின்றும் நம்மைக் காக்கக் கூடியது இவ்வாயுதமே யன்றோ! ஸர்வ வல்லமை பொருந்தி ஆதியந்தமற்ற ஸ்வயம்புவாயுள்ள நான் அநித்யமும் அழிவுள்ளதுமான இத்தேஹமாகேன் என்னும் த்ருடஞானமுடையோரைப் பாம்பு புலியாதிகள்தாம் என் செய்யும்? உடலின் நினைவை முற்றிலும் இழந்து ஆத்ம பராஜக்ய அனுபவத்தால் ஆனந்தமுற்று "நானே கடவுள்" 'என்னையன்றி வேறொன்று மில்லை' என்று புகன்றமையால் மூடஜனங்களால் மிகவும் கொடூரமான உபாதைகளுக்குட்படுத்தப்பட்ட பூர்வகாலத்து மஹான்களில் (Shamas Tebriz) ஷாமாஸ் டெப்ரிஸ் என்பார் ஒருவர். ப்ரஹ்மஞான அனுபவத்தால், (அனல்ஹாக்) 'நான் கடவுள்' என்று ஸதாகாலமும் கூறிவந்த அவரது தந்தையை, பூமியில் நட்ட ஓர் இரும்புத்தூணின் கூரிய நுனியின் பேரில் (அவரது ஹ்ருதயம் பிளக்குமாறு படுக்கவைத்துக் கீழாக அமிழ்த்துகையில் (அக்குரூரச் செய்கைக்கு வெகுகாலத்துக்கு முன் தொடங்கியே) ப்ரஹ்மாத்மைக்ய ஞான ஆனந்தக்கடலில் ஆழ்ந்திருந்த அம்மஹாத்மாவின் முகதேஜஸானது ஒரு சிறிதும் குறையவில்லை; வாட்டமாவது வியஸனக்குறியாவது காணவில்லை; ஒருபொட்டுக்கண்ணீரும் சிந்தவில்லை. அவர் உடலினின்றும் பெருகிய ரக்தத்தை ஓர் பாத்திரத்தில் பிடித்துக் குடித்த ஓர் மாதின் வயிற்றிலுதித்த ஷாமாஸ் டெப்ரிஸ் ஆனவர் சுக ப்ரஹ்மரிஷிபோல், பிறந்ததினம் முதல், ஸச்சிதானந்த மூர்த்தியாக விளங்கியும் அவரை அறியாத (காட்டுமிராண்டிகளினும் கடையரான) மூடஜனங்கள், "கடவுள் க்ருபையால் எழுந்திரு" என்று பலதரம் சொல்லியும் பயனற்றுப்போகவே, "என் கட்டளையால் எழுந்திரு"என்று அவர் கூறலும், இறந்த அரசிளங்குமரன் துயில் நீங்கி யெழுபவன்போ லுயிர்பெற்று மீளவே, பொறாமையும், கோபமும், மூர்க்கமும், வயிற்றெரிச்சலும் தூண்டியதால் அவரது தந்தையைத் தண்டித்தவாறே, அவரையும் கழுவி லேற்றக் கருதிய நிமிஷமே அம் மஹாத்மாவானவர் தமது கைநகங்களால் உடலைக் கீறி, தோலையுரித்து, மாம்ஸத்தை அறுத்து, அப்பாபிகளெதிரில் எறிந்து "விஷம்போன்ற (உலக) விஷயஸுகங்களை அம்ருதமாய் நினைக்கும் நாய்களே! தின்னுங்கள்" என்று கூறி ஆத்ம மகிமையைக்குறிக்கும் பாட்டொன்று பாடி ப்ராணனை விட்ட கதை இந்தியனாகிய நீ அறியாததோ?

தாழ்வும் துயரும் உற்ற காலையில் தைர்யமும், செல்வமும் உயர்வும் தழைத்தோங்குகையில் க்ஷமை, சாந்தம் ஆதி குணங்களும் உடையவனாய் இருத்தல்வேண்டும் என்று வற

புறுத்தும் நமது சாஸ்திரங்களை மறவாதே. ஸர்வ கார்யங்களையும் பிறர் சகாயமின்றியே நிர்வஹித்து நடத்தும் சக்தியையும், பொறுமையையும் சிறுவயதிலிருந்து வ்ருத்தி செய்துவா. நீ செய்யும் தர்மங்களுக்கிடையே தோன்றும் கஷ்டங்கள் அபாயங்களிவைகளை ஒருபொருட்டாய்ப் பாராட்டாதே. உன்கடமையைச்செய்து வருகையில் மரணம் நேரினும், அதைர்யம் அடையர்தே. உலகம் முழுதும் ஒன்றுகூடி உன்னை எதிர்த்தபோதிலும் சிறிதேனும் மனம் அழியாதே. அரேபியாவில் தோன்றிய "மஹம்மத்"என்னும் மஹானைப்போலவே, உன் கார்யங்களில் த்ருடபக்தியும் உன் வீர்யந்தில் உயர்ந்தநம்பிக்கையும் வைத்துவா. மெலிந்தோர்இழிந்தோர்களை ஆதரித்துயர்த்துவது உன் கடன் என்றறி. உனது அரசன் அல்லது தேசத்தின் நன்மைக்காக உன்ப்ராணனையேபலிகொடுக்கச் சமயங்கள் நேர்ந்தால் சந்தோஷத்துடன் தயாராயிரு; ஒருபோதும் அதைர்யப்படாதே. பிறரையும் எக்காரணம்பற்றியேனும் அதைர்யப்படுத்தாதே. ஏனெனில் பயங்காளித்தனமே எல்லா வியாதிகளினும் மிகக் கொடியது.

சமுத்ர குப்தன்

SAMUDRA GUPTA

நமது பரதகண்டத்தில் முன்னாளில் பிரபலமாக ஆண்டு,தம் புகழைப் பரப்பிச்சென்ற முடிமன்னர்கள் பலருண்டு. அவரது வீரச்செயல்களும், கொடை வன்மையும், மனத்தூய்மையும் அக்காலத்து உடனிருந்த புலவர்களால் வாயாரப் புகழப்பட்டுள்ளன. சில மன்னரைப்பற்றிய செயல்கள் கல்மேல் வரையப்பட்டுள்ளமையால், என்றென்றும் அவரது புகழ் இவ்வுலகில் நிலவுவதாகின்றது. ஆயினும் காலத்தின் கொடுமையாலும், பரதகண்டம் அடைந்த பல மாறுபாடுகளாலும், நாம் ஒருவாறு அன்னோரை மறக்கலாயினோம். அவரது சிலாசாஸனங்களும், அவரைப்பற்றித் தெரிவிக்கும் நூல்களும் நாளடைவில் மறைந்து போயின வாயினும், சென்ற சில ஆண்டுகளாக சிலாசாஸனப் பரிசோதகரது அரிய ஆராய்ச்சிகளாலும், ஏடு தேடிச் சேமித்துவைக்கும் இயல்புடைய நம்மவரது பெரிய முயற்சியாலும், அவை மறுபடியும் உலகத்தாருடைய கண் பார்வைக்கு அவ்வப்போது கொண்டுவரப் படுகின்றன. இவை மூலம் நம் பரத கண்டத்தில் வாழ்ந்து வெற்றிப் புகழ் விளைத்த வீரர்களையும், மதிநலம் பழுத்து மாண்புடன் அரசு நடாத்திய மன்னர்களையும் நாம் தற்போது அறிந்துகொள்வது எளிதாகின்றது.

இவ்விதம் காலாந்தரத்தில் மறக்கப்பட்டுச் சின்னாளாக மறுபடியும் ஜனங்களது ஞாபகத்திற்குக் கொண்டுவரப்பட்டவருள் **சமுத்ர குப்தன்** முக்யமானவன். இவ்வரசனதுவீரச்செயல்கள் யாவராலும் போற்றத்தகுந்தவை. தன் காலத்திலிருந்த முடிமன்னர்கள் பலரையும் வென்று இந்திய ஏகசக்ராதிபத்யத்தைக் கைக்கொண்டு, நிலவுலகை ஒருகுடைக்கீழ் ஆண்ட உத்தம வீரருள் வீரன்; வரையாத வள்ளண்மையை இயல்பாகவுடையவன்; இசைநூற்பயிற்சியில் இணையில்லாதவன். சாஸ்திர ஆராய்ச்சியையும் கவிபாடுவதையும் தன் பொழுதுபோக்காகக் கொண்டவன். இசைநூற் புலவர்களும், பாவலர்களும் வறுமையெனும் வெப்பம் தாங்காது ஒதுங்குவதற்கு நிழல் போன்றவன். இமயமுதல் ஈழம் வரையிலும், ஆக்ஸஸ் (Oxus)முதல், அஸாம் வரையிலுமுள்ள நாடுகளுடன் வெற்றிமூலமாகவும், உடன்படிக்கை மூலமாகவும் தன் நாட்டிற்குச் சம்பந்தம் உண்டாக்கினவன். இத்தகைய மேதாவியின் சரித்திரத்தை அறிவது நமக்கு உள்ளக்கிளர்ச்சியையும், பேரறிவையும் பெரியோரது சரித்திரத்தில் சுவையையும் ஊட்டும் என்பதற்கு ஐயமில்லை.

இவ்வரசன், கி. பி. 4-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்பாடலீபுரத்தில்பேரரசாட்டிப் பெரும்புகழ் கட்டிக்கொண்ட **குப்தவம்சத்திற்** பிறந்தவன். இந்த வம்சத்திற்கு மூலபுருஷன் சந்திரகுப்தன் என்பான். இவன் பாடலீபுரத்திலோ அல்லது அதற்குச்சமீபத்திலோஇருந்த ஒருசிற்றரசன். இவன் கி. பி. 308-க்குஸமீபத்தில் **லிக்கவி** என்ற தொல்குடியில் பிறந்த **குமாரதேவி** என்ற பெண்ணரசியை மணந்துகொண்டான். இந்த லிக்கவி குடியைச் சேர்ந்தோர் புத்தர்காலந் தொட்டுப் பெருங்கீர்த்தியுடன் விளங்கிய வீரசூரர்கள். புராதன பௌத்த நூல்களில் இவரது ஆண்மை பலபடப் பாராட்டப்பட்டுள்ளது. ஆயினும் குமாரதேவி விவாகத்திற்கு முன்பு 800 வருஷங்களாக அவரது சரித்திரம் பகுதிகளில் பல மறதியின் வாய்ப்பட்டு மாண்டுபோயின. எஞ்சி நின்றவை ஒரு சிலவே. இந்த வம்சத்தார்கள், நேபாளத்தை வென்று ஆண்டதோடு, அங்கு கி. பி. 111-ல் ஒரு சகாப்தத்தைத் தொடங்கினரென்றும் தெரிகின்றது. இவர்கள் முன்னாளில் வைசாலியில் பிரபலமாக ஆண்டுவந்தபோது, இவர்க்கும் பாடலீபுர அரசர்களுக்கும் அடிக்கடிப் போர் நிகழ்ந்து வந்தது. இவரது முன்னேற்றத்தை ஒடுக்குவதற்கும் படையெழுச்சிகளைத் தடுப்பதற்கும் மகதநாட்டரசர்கள் பாடலீபுரத்தில் உயர்ந்ததோர் அரண் சமைத்தனர். பின்னாளில் மகத நாடு நிலைகுலைந்து போனபோது, இவர்கள் பாடலீ நகரைக் கைவசப்படுத்திக்கொண்டு திறமையுடன் ஆண்டுவந்தனர் என ஊகிக்க இடமுண்டு. குமாரதேவியின் மணம் அதுவரை இருட்டறையி லிருந்த குப்த அரசர்களைத் திடீரென்று வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துவிட்டது. இந்த விவாகத்தின் மூலம் சந்திரகுப்தனுக்கு லிக்கவி வம்சத்தாரது பேரும், கீர்த்தியும், செல்வாக்கும், நாடும் கிடைத்தன. அதனால்அவனதுசிற்றரசு பேரரசாகிவிட்டது. நாளடைவில் அவனது இராஜ்யம் தழைத்தோங்கிற்று. சுற்றிலுமுள்ள மன்னர்கள் அவனுக்குத் திறையிடும் நிலைமைக்குத் தாழ்ந்துவிட்டனர். சந்திரகுப்தனும் மகா ராஜாதிராஜன் என்ற பட்டத்தைப் புனைந்து கொண்டான். தனது பிரதாபத்திற்கு அறிகுறியாகத் தன் பேராலும் தன் மனைவி பேராலும் லிக்கவி குடிப் பேராலும்ஒருங்கேநாணயங்கள்செய்து வழங்கி வந்தான். லிக்கவி வம்சத்துப் புத்ரீ ரத்தினத்தால் இந்தக் குப்த வம்சம் விருத்திக்கு வந்ததை நெஞ்சார நினைத்து, சந்திரகுப்தன் மகனும் அவனுக்குப்பின்சக்ரவர்த்தியுமான சமுத்திரகுப்தன் தன்னை லிக்கவி வம்சத்துப் பெண்மணியின் புத்திரனென்றே எப்போதும் புகழ்ந்துகொள்வான். சந்திரகுப்தனது ராஜ்யம் பிரயாகை வரையுமுள்ள கங்கா பிரதேசம் முழுவதும் பரவியிருந்தது. நீர் வளமும் ஜன நெருக்கமும் இங்குத்தான் அதிகம்.

மௌரிய அரசர்களது ஆட்சிக்குப் பிறகு சீர்குலைந்து உட்பகை புறப்பகைகளால் தளர்ச்சியுற்றிருந்த பரதநாட்டை புனர் உத்தாரணஞ் செய்து மறுபடியும் தலையெடுக்கும்படி செய்த மன்னன் சந்திரகுப்தன்தான். இவ்வரிய காரியத்தைச் செய்ததற்காக இவன் மகுடாபிஷேகஞ் செய்துகொண்ட தினத்திலிருந்து [26 - 2 - 320 கி. பி.] **குப்தசகாப்தம்** என்ற வோர் சகாப்தம் தொடங்கப்பட்டது.

சமுத்ரகுப்தனது வீரம், அஞ்சாமை முதலிய குணங்களைக்கண்டு இவனே தனக்குப் பின் பட்டத்திற்கு உரியவனெனச் சந்திரகுப்தன் தீர்மானித்திருந்தான். அவ்வாறே தந்தை இறந்தபிறகு 326-ல் சமுத்ரகுப்தன் மகுடஞ் சூடினான். முடிதரித்தது முதல் தன்நாட்டைச் சூழ்ந்துள்ள வேற்று நாடுகளை ஜெயித்துத் தன் நாட்டைப் பெருக்க வேண்டுமென்ற அவா அவன் மனதில் குடிகொண்டிருந்தது. இது அந்நாளில் முடிதரித்தோர் யாவர்க்கும் இயற்கையாக எழும் ஒரு தீக்குணம். இத்தீக்குணம் இந்நாளிலும் உலகிலுள்ள சில மன்னர்களிடம் அநேகமாய்க் காணப்படுகின்றது. ஆதலின்,

> வையகம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
> போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறுஅது
> இடஞ்சிறிது என்னும் ஊக்கம்துரப்ப
> ஒடுங்காவுள்ளத்துடன். —(புறநானூறு)

சமுத்திரகுப்தன் பிறவரசர்களை வென்று அவர்களை வணங்கும்படி செய்ய முயல்வானாயினன். இவனது திக்குவிஜயச் செயல்களும், இவன் வென்ற அரசர்களும், இவன் அடக்கிய வம்சத்தார்களும், இவனைப்பற்றிய இன்னும் பல விஷயங்களும் இவனது ஏவலால் வடமொழியில் உரையிடையிட்ட ச்லோக ரூபமாக ஹரிசேனன் என்ற இவனது ஆஸ்தான பண்டிதனால் செய்யப்பட்டு, அசோக சக்ரவர்த்தி நாட்டியவோர் சிலா லிகித ஸ்தம்பத்தின் பின்புறத்தில் செதுக்கப்பட்டுள்ளன. இந்த இருவித கல்வெட்டுக்களையுமுடைய ஸ்தம்பம் இப்போது பிரயாகைக் கோட்டைக்குள் நிறுத்தப்பட்டுள்ளது. அசோகன் சாஸன பாஷை வேறு. இவனது சாஸன பாஷை வேறு. அசோகன் புத்த தர்மத்தைப் பரப்புவதற்காக அக்கல்தூணில் பௌத்த நீதிகளைப் பொறித்து வைத்தான். இவன் தன் புகழ் நிலைபெறுவதற்குத் தன் திக்கு விஜயத்

தையும் தான் செய்த ரணவீரத்தையும் பொ
றிக்கச் செய்தான். இச்சிலா சாஸனமில்லாமற்
போனால், சமுத்திரகுப்தனது வீரமும் பிர
தாபமும் நஷ்டமாகிவிடும்.

இவனது சிலாசாஸனப்படி இவனது படை
யெழுச்சி நான்கு கூறுகளாகப் பகுக்கப்பட்
டுள்ளது. இவன் தக்ஷிணத்திலிருந்த பதி
னோரசர்களையும் ஆரியவர்த்தத்தி லிருந்த
பெயர் குறித்த ஒன்பது அரசர்களையும்
வேறு பல அரசர்களையும் அரணியங்களில்
வசித்துவந்த பல சிற்றரசர்களையும், தன்
நாட்டு எல்லைப்புறத்திலுள்ள தேச அரசர்
களையும் குடியரசுகளையும் வென்றானென்று
சாஸனம் கூறுகின்றது. இன்னும் இவனது
ஆட்சிக்குள் வரஇயலாத பல வேற்றரசர்களு
டனும் இவன் சம்பந்தம் பெற்றிருந்ததாகவும்
அது கூறும். இதில் கூறப்பட்டுள்ள விஷயங்
கள் யாவும் அவையவை நடந்த காலமுறைப்
படி வரையப்பட்டனவாக விளங்கவில்லை.
அவை யாவும் சமுத்திரகுப்தன் இறப்பதற்கு
முன்பு செதுக்கப்பட்டன என்பதற்கு யா
தொரு சந்தேகமு மில்லை.

இனி இவனது திக்கு விஜயத்தைப்பற்றிச்
சற்று விசாரிப்போம். பண்டைக்காலத்தில்
பேரும் புகழும் விரிய ஆண்டுவந்த மொரியர்
களைக் காட்டிலும் மேன்மை பெறவேண்டு
மென்பது. அவனது கருத்து. ஆதலின்
மொரிய சக்கிரவர்த்திகளின் ராஜ்ய எல்லை
களைத் தாண்டித் தன் அதிகாரஞ் செல்ல
வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்.
இவனது நாடு தொடக்கத்தில் பிரயாகைமுதல்
வங்காளம் வரை தொடர்பாக இருந்தது. ஆரி
யாவர்த்தத்திலுள்ள பிற நாடுகளையும் அடக்கி
ஆண்டாலொழிய இவன் தென்னாடுகளைக்
கைப்பற்ற அடிகோலுவது இயலாது. இத
னால் ஆரியநாடுகளைத் தன்னடிப் படுத்துவது
முதல் காரியமாக ஏற்பட்டது. அதற்குத் தகு
ந்த ஒருபலத்த சேனையைத் திரட்டிக்கொண்டு
தன் தகப்பனால் தாக்கப்படாத கங்காதீர நாடு
களின்மேல் படையெடுத்துச் சென்றான். ஒன்
றன்பின் ஒன்றாக எண்பதின்மரது நாடுகளைக்
கவர்ந்து அவ்வரசர்களை வேரறுத்துவிட்டதாக
சாஸனம் விருதுகூறுகின்றது. பெயர்குறித்துக்
கூறப்பட்ட இந்த ஒன்பது அரசர்களில் பத்
மாவதி (நார்வார்)யில்ஆண்ட கணபதி நாகனைத்
தவிர மற்ற அரசர்களது பேரும் ஊரும் நமக்
குப் புதியனவாக இருக்கும். இவர்களைப்பற்றிய
விஷயங்கள் சிறிது சிறிதாக ஆராய்ச்சியால்
தான் விளங்கவேண்டும்.

தென்னாட்டுப் படையெழுச்சிக்கு முன்பு,
வட இந்தியாவை அவன் ஒரு குடைக்கீழ்க்
கொண்டுவந்திருக்கவேண்டுமென்பதுநிச்சயம்.
அதன்பிறகுதான் இவன் தென்திசையை
நோக்கிச் சென்றிருப்பான். தக்ஷிணத்திலுள்ள
நாடுகளைக் கைப்பற்றுவதற்குவேண்டிய சேனை
களைத்திரட்டுவதற்கும்அவர்களுக்குவேண்டிய
வற்றைத்தேடிச் சேமிப்பதற்கும் சில வருஷங்
கள் சென்றிருக்கும். இவனுக்கு முன்பு பல
ஆரியமன்னர்கள் விந்திய பர்வதங்களைக்கடந்து
சென்று, பல நாடுகளை அமைத்து ஆட்சி செய்
துள்ளார்களாயினும், அவரது படையெழு
ச்சியெல்லாம் தெற்கே வெகுதூரஞ் செல்ல
வில்லை. மொரியர்கள்மட்டும் தெற்கே பொதிய
மலைவரைச் சென்று பாண்டியர்களைப் பணி
வித்தார்கள் என்று தமிழ்ப் புராதன நூல்
கள் கூறுகின்றன. ஆயினும் அவர்கள் சமுத்
திரகுப்தனைப்போல அவ்வளவு மும்முரமாகப்
பல நாடுகளின்மேல் படையெடுக்கவில்லை.
திக்குவிஜயம்செய்து பரதகண்டத்தில் முன்னா
ளில் புகழ்விளைத்து இன்றைக்கும் பல்லோரு
டைய நாவிலும் நெஞ்சிலும் வசித்து வரும்
தசரதர் யுதிஷ்டிரர் முதலிய சுத்தவீரர்களைப்
போலத் தானும் பெயர் படைக்கவேண்டுமெ
ன்ற அவா சமுத்திரகுப்தனது மனதைவிட்டு
அகலவில்லை. தென்னாடுகளை வெல்லுவதற்கு
வேண்டிய யாவும்சேகரித்தபின்பு அவன் யுத்த
கோலம் பூண்டு நாற்படைகளுடன் மிக்க கம்
பீரமாகத் தலைநகராகிய பாடலீபுரத்தை
நீங்கித் தென்திசை நோக்கி பூவலமாகப் பிர
யாணமானான். சூட்டியாநாகப்பூர் மார்க்கமாக
ஸத்புராமலைத் தொடரின் கிழக்கே வந்து,
பரதகண்டத்தின் கிழக்குத் தீரத்தை அங்கு
நின்றும் அணுகி, மகாநதி தீரத்திலுள்ள
தக்ஷிண கோசலத்தை ஆண்டுவந்த மகேந்
திரனை முதன்முதல் வென்றான். பின்பு அதை
அடுத்துள்ள காடுகளில் வசித்துவந்த சிற்
றரசர்களை ஒருவர்பின் ஒருவராக முறியடித்
தான். இவனது படைப் பெருக்கத்திற்கும்,
அணிவகுப்புக்கும், ஆயுதச்சிறப்பிற்கும் முன்
எது நிற்கும்? (தொடரும்.)

அடியென் றழைக்கப் பெண்டீர் இல்லை, ஆண் எத்தனை, பெண் எத்தனை என்கிறதுபோல்.

கிருஷிகருக்குதவும்பட்சிகள்

BIRDS USEFUL TO AGRICULTURISTS

பெரிய கருஞ்சிட்டு

இந்தப் பட்சிக்கு இந்துஸ்தானியில் தயால்
என்றும் தெலுங்கில் பெத்த நலஞ்ச்சி யென்
றும் பெயர் வழங்கிவருகிறது.

ஆண் பட்சியானது பெண் பட்சியைவிடச்
சற்று வித்தியாசமுள்ள நிறமுடையதாய்த்
தோன்றும். ஆண்பட்சிக்குத் தலை, கழுத்து,
நெஞ்சு, மேல் உடல், வால்தூவிகளில் மத்தி
யிலிருப்பவை இவையெல்லாம் பளபளப்பான
நீலந்தோய்ந்த கறுப்பு நிறமுள்ளன.சிறகுகளும்
கறுப்பாகவேதா னிருக்கின்றன. என்றாலும்,
அவைகள் பளபளப்புள்ளவை யல்ல. உடலின்
அடிப்பக்கம் முழுவதும் வெண்மையா யிருக்
கும்.

பெண் பட்சி ஆண் பட்சியைப் பார்க்கிலும்
மங்கின வர்ணமுள்ளது. அதன் நெஞ்சு சாம்
பல் நிறமுள்ளதா யிருக்கும்.

இந்த ஜாதிப் பட்சிகள் சுமார் $8\frac{1}{2}$ அங்
குல நீளமுள்ளன. அதில் வால்மட்டும் $3\frac{1}{4}$
அங்குல நீள மிருக்கும். செட்டைகள் சுமார்
4 அங்குல நீளமுள்ளன.

இவைகள் வெகுவாய் அநேகருக்குத் தெ
ரிந்த பட்சிகள். இவ்விராஜதானியில் சமபூமி
யுள்ள பாகங்களிலும், மலைநாடுகளில் சமுத்
திர மட்டத்துக்குமேல் 5000 அடி உயரம்
வரையிலும் இந்தப் பட்சிகளைப் பார்க்கலாம்.
அவைகள் ஜோடி ஜோடியாகவே சஞ்சரிக்
கின்றன. அடிக்கடி வீட்டின் மோட்டு மூலை
களிலும், உச்சிகளிலும் ஸந்தோஷத்துடனும்
உல்லாசத்துடனும் ஆண்பட்சியானது பெண்
பட்சியுடன் சல்லாபிப்பதுபோல் மனோகர
மான சங்கீதங்களைப் பாடிக்கொண்டு, இங்கு
மங்கும் சென்று, விளையாடிக்கொண் டிருக்
கும். மனிதரைக் கண்டாலும் பழகிய பட்சி
களைப் போலவே தம்பாட்டில் பாடிக்கொண்
டிருக்குமே யல்லாது, அவர்கள் மிகவும் சமீ
பத்தில் சென்றாலொழிய அவைகள் பறந்தோ
டிப் போவதில்லை. காலையிலும், மாலை நேரத்
திலும், அவைகள் பாடும் கீதம் மிகவும் இனி
மையா யிருக்கும்.

வீட்டுச் சுவர்களிலுள்ள துவாரங்களிலும்,
மோட்டு மூலைகளிலுள்ள ஓடுகளின் இடையி
லும், மரங்களிலும், முட்புதர்களிலும் அவை
கள் கூடுகட்டி முட்டையிடுகின்றன. ஒரு
வீட்டில் அவைகள் கூடுகட்டி வசித்து, அந்த
வீட்டில் வசிக்கும் ஜனங்கள் அப்பட்சிகளிடத்
திலும் அவைகளுடைய கீதத்திலும் பிரிய
முள்ளவர்களா யிருக்கும் பட்சத்தில், அவர்
கள் மிகவும் அதிர்ஷ்டசாலிக ளென்றே சொ
ல்லவேண்டும்.ஏனெனில் பிரதிதினமும் குறிப்
பிட்ட காலங்களில் அவைகள் அந்த வீட்டின்
மோட்டுச்சியிலோ மூலையிலோவந்துட்கார்ந்து
கொண்டுஅதிகசல்லாபத்துடன் உல்லாசமாய்ப்
பாடிக்கொண்டிருக்கும். அவைகளைத் தொந்
தரவுசெய்து விரட்டிவிடாமல்மட்டும் ஒரு பக்
கத்தில் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தால்
அவைகளின் பாடலை வெகுநேரங்கேட்கலாம்.

இந்த ஜாதிப் பட்சிகளுக்கு விட்டில்கள்,
புழுக்கள் சிறுவண்டுகள் முதலான பூச்சிகள்
தான் ஆகாரம். பயிர் செய்திருக்கும் பாத்தி
களில் இவைகள் வந்துட்கார்ந்துகொண்டு,
தோட்டக்காரன் களைக்கொட்டு கொண்டு
தோண்டிக் களையெடுப்பதுபோலத் தங்கள்
மூக்கலகுகளால் மண்ணைத் தோண்டிக்கிளறி,
அங்கே மறைந்துகொண் டிருக்கும் அநேக
பூச்சிகளைப் பிடித்துத் தின்பதை ஊன்றிக் கவ
னித்தால் தெரியவரும். இதனால் இளம் பயி
ரைத் தின்னும் பூச்சிகள் தொலைந்து போவது
டன், பயிர்களின் வேர்களுக்கு அவசியமான
காற்றோட்டமும் பிராணவாயுவும் கிடைக்க
ஹேதுவுண்டாகிறது. ஆகவே இப்பட்சிகள்
கிருஷிகருடைய சம்பளமில்லாச் சிப்பந்திகளில்
சேர்ந்தவைகள். எனவே, இப்பட்சிகளைக் காப்
பது கிருஷிகருடைய கடமையாகும்.

கருஞ்சிட்டு

இந்தப்பட்சிக்கு இந்துஸ்தானியில் கால்சூரி
என்றும் தெலுங்கில் நலஞ்ச்சி யென்றும்
தமிழ்நாட்டில் சில இடங்களில் கருஞ்சிட்
டென்றும் வேறுசில்இடங்களில் வண்ணாத்திக்
குருவி யென்றும் பெயர் வழங்கிவருகிறது.
சாதாரணமாய் ஜனங்களுக்கு இந்தப் பட்சி
நன்றாய்த் தெரியும்.

ஆண்பறவை பளபளப்பான கறுப்பு நிற
முள்ளது. சிறகுகளில் ஒரு வெள்ளைப் புள்ளி

அடித்துவிட்டவன் பின்னே போனாலும், பிடித்துவிட்டவன் பின்னே போகலாகாது.

மட்டு மிருக்கும். நடுவயிறும் வாலடியிலுள்ள உரோமங்களும் சிவப்புத் தோய்ந்த மங்கல் நிறமாயிருக்கும். பெண்பறவை பளபளப்பில்லாத மங்கலான புகைபடிந்த அறை போன்ற வர்ணமுள்ளது; வாலும் சிறகுகளும் அதிக கறுப்பா யிருக்கும். வாலடியிலுள்ள உரோமங்கள்சிவப்புத்தோய்ந்த மங்கல் நிறமாயிருக்கும்.

இந்தப் பட்சிகளின் நீளம் சுமார் 6 அங்குலமிருக்கலாம்; அதன் வால் $2\frac{3}{4}$ அங்குலமும், சிறகு 3 அங்குலமும் இருக்கும்.

இவைகள் சாதாரணமாய்க்கிராமங்களிலும், கோபுரங்களிலும், பழைய கட்டிடங்களிலும், மண்சுவர்களிலும் இருக்கக் காணலாம். சில வேளைகளில் வீட்டுமோடுகளின்மேலும் சுவர்களின்மேலும் இருந்துகொண்டு, வீட்டுத் தாழ்வாரங்களிலும் வேளாவேளைகளில் வீடுகளுக்குள்ளும் பறந்துசென்று சிறுசிறு பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். வீடுகள் கிராமங்களின் அருகில்மட்டுமன்றி,கல்லாம்பாறைகளிலும் குன்றுகளிலும் இவைகள் சாதாரணமாய்க்காணப்படும். பனங்காடுகளிலுமீச்சமரங்களிலும் இந்தப்பட்சி அடிக்கடி காணப்படும். இது தனிமையாகவும் ஜோடியாகவும் நிலத்தின்மேல் தத்திச்சென்று வேகமாகக், குதித்துப் பாய்ந்து பறந்து ஓடும்; பூச்சிகளைப் பொட்டென வாயில் கௌவிக்கொள்ளும். இப்படி ஐந்தாறு பூச்சிகளைப் பிடித்துத்தின்றவுடன் வீட்டு மோட்டின்மேலாவது, மரத்தின் மேலாவது முன்னிருந்த இடத்தில் போய் உட்கார்ந்து கொள்ளும். இந்தப் பட்சிக்கு ஒருவிசேஷ பழக்கமுண்டு. அது என்னவெனில், எப்போதும், அதிலும் முக்கியமாகப் பூச்சிகளைத் தின்னும்போது அது தன் வாலைத் திடீர்திடீரென்று மேல்தூக்கித் தன் தலையை மூடும்விதமாய் அவ்வளவு உயரத்துக்குக் கிளப்பிக்கொண்டிருக்கும். இதனாலேயே அநேகர் இக்குருவியை இனங் கண்டுபிடிப்பர்.

இதுபாறையிடுக்குகளிலும்வீடுகளிலுமுள்ள துவாரங்களிலும், அல்லது மண்சுவர்ப்பொந்துகளிலும் கூடுகட்டி முட்டையிடும். ஆண் பறவையானது வீட்டின் மேலிருந்தாவது மரத்துச்சியிலிருந்தாவது மிகவும் இனிமையாக அடங்கிய குரலிற் பாடும்.

இந்த ஜாதியைச்சேர்ந்த இன்னொரு பட்சியும் கிருஷிகருக்கு உபயோகமுள்ளது. இந்தச் சிட்டுக்குருவி ஜாதிகளில் அநேகம் பூச்சிகளைத் தின்பனவா யிருந்தாலும், அவைகளில் ஒவ்வொன்றையும் பற்றி எழுதுவது அசாத்தியமானதால் ஒன்றைப்பற்றிமட்டும் சில விவரங்கள் தெரிவிக்கிறோம். எல்லாச் சிட்டுக்குருவிகளும் உபயோகமுள்ள பறவைகள். அவைகள் எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டும்.

வெள்ளைச்சிறகுள்ள கருஞ் சிட்டுக்குருவி

இதற்கு இந்துஸ்தானியில் **காலாபிடா** என்றும், தெலுங்கில் கம்பாலஞ்ச்சி யென்றும் பெயர். இது சாகுபடியாகும் நிலங்களிலும் வேலிகளிலும் தோட்டங்களிலும் வெளியாயுள்ள விடங்களிலும் காணப்படுகிறது. மலைகளிலுங் காடுகளிலும் இது அகப்படுவதில்லை. ஆண்பறவை கறுப்பு நிறமுடையது; சிறகுகளில் ஒருவெள்ளைப்பட்டையுடையது; வால்தூவிகளிலும் அடிவயற்றிலிருந்து வால்வரையிலும் வெண்மையான உரோமங்களுள்ளது.

பெண்பறவை மங்கல் வர்ணமுள்ளது. ஆண்பறவையில் வெள்ளை நிறம் விழுந்திருக்கும் பாகங்கள் எல்லாம் பெண்பறவையில் மங்கியசிவப்பு நிறமுள்ளனவா யிருக்கும். சிறகுகளின் மேல்தூவிகள் பிரகாசமுள்ள சிவப்பு நிறமுள்ளன. இது மொத்தத்தில் சுமார் 5 அங்குல நீளமுள்ள சிறுபட்சி. அதன் வாலின் நீளம் சுமார் $2\frac{1}{4}$ அங்குலமும் செட்டைகள் $2\frac{3}{4}$ அங்குலமும் இருக்கும்.

இந்தப் பறவையும் பூச்சிகளையே தின்று ஜீவிக்கிறது. சாதாரணமாய் நிலத்தின்மேலுள்ள பூச்சியை இது பாய்ந்து பிடித்துக்கொண்டு மறுபடியும் தான் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பறந்துபோவதை எல்லாரும் கவனித்திருக்கலாம். பெண்பறவை முட்டையிடப் போகும் காலத்தில், ஆண்பறவை வெகு இனிமையான சிறு குரலில் பாடுவதுண்டு.

:: :: விவேக போதினி :: ::

இரண்டாம் தொகுதி நீங்கலாக, மற்றையத் தொகுதிகள் விலைக்கு அகப்படும். சில காப்பிகளே கைவச மிருப்பதால், வேண்டுவோர் தாமதியாது எழுதிப் பெறவேண்டும். பயிண்டு செய்த ஒவ்வொரு வருஷப் பிரதியின் விலை ரூ 5. ஒன்பது தொகுதிகளையும் சேர்த்து வாங்கும் சந்தாதார்க்கு ரூ. 40.

இந்திய பூர்வ அரசியல்

ANCIENT HINDU POLITY

மந்திராலோசனைச் சபை

அரசன் தனது மந்திரிகளைத் தனித்தோ அல்லது சேர்த்தோ அவர்களது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி கேட்கலாம். தங்களது அபிப்பிராயங்களுக்கு ஆதாரமாக அவர்கள் உரைக்கும் முகாந்தரங்களைக்கொண்டு அவர்களது திறமையை அறிந்துகொள்ளலாம்.

மனுவின் சீடர்கள் மந்திராலோசனைச் சபையில் மந்திரிகள் பன்னிருவர் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

பிரகஸ்பதியின் சீடர்கள் அதில் பதினாறு மந்திரிக ளிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

ஆனால் **கௌடில்யர்** அரசனது மந்திராலோசனைச் சபையில் அவனது இராஜ்யத்துக்கு அவசியமான அளவு மந்திரிகள் இருக்கவேண்டுமென அபிப்பிராயப்படுகிறார்.

அவஸரகாலங்களில் அரசன் தனது மந்திரிகளையும் மந்திராலோசனைச் சபையையும் அழைத்து, நடக்கவேண்டிய காரியத்தைக் குறித்து அவர்களுடன் கலந்து ஆலோசிக்கவேண்டும். அவர்களில் பெரும்பான்மையோர் சொல்லுவதையே அரசன் ஏற்று நடந்துகொள்ளவேண்டும்.

மேற்கூறிய விஷயங்கள் **கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரத்திலிருந்து** வெளியாகின்றன. பூர்வத்தில் இந்தியாவில் அரசன்தன்னிச்சைப்படி இராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான், என்னுமுறையின் பொய்ம்மையை அவை நன்கு விளக்கும்.

இனி, குடிகளுக்கு யாதொரு விதமான குறைகளும் நீடித்திருக்க வொட்டாது தடுப்பதற்காக, அவர்களுக்கு ஏற்படும் குறைகளை உடனுக்குடனேயே அரசனுக்குத் தெரியப்படுத்தும்பொருட்டுப் பூர்வ இந்திய இராச்சியங்களில் ஒற்றர்களை (உளவர்களை) நியமனஞ் செய்த ஏற்பாட்டைப்பற்றிச் சிறிதே கவனிப்போம்.

ஒற்றாடல் (உளவரை விடுத்தல்.)

பூர்வீக இந்திய மன்னர்கள் தங்களது குடிகளுக்கு யாதொரு குறைகளும் நீடித்திருக்கவொட்டாது தடுப்பதற்காகவே ஒற்றரை முக்கியமாக நியமித்தனர் என்பது திருக்குறளிலிருந்து நன்கு விளக்குகின்றது.

“ஒற்று முறைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்”—திருக்குறள்.

ஒற்றனும், புகழமைந்தநீதி நூலுமாகிய இவ்விரண்டனையும் அரசன் தன்னிரண்டு கண்களுமாகத் தெளியக்கடவன். ஒற்றன் தன் கண்கள்செல்லமாட்டாதபரப்பெலாஞ் சென்று கண்டு, ஆண்டு நிகழ்ந்தன வெல்லாம் உணர்த்தலானும், நூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு சொல்லமாட்டாத வினைகளையெல்லாஞ் சொல்லி யுணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டு அரசன் ஒழுகுக என்பதாம்.

“எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்” —திருக்குறள்

எல்லார்கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும் நாள்தோறும் ஒற்றான் விரைந்தறிதல் அரசனுக்கு உரிய தொழில். நிகழ்வன வெல்லாமென்றது நல்லவுந் தீயவுமாய சொற்களையுஞ் செயல்களையும். அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத் தக்கவழியாகத் தேறுதலாகச் செய்ய வேண்டுதலின் வல்லறிதலென்று கூறினார்.

மேற்கூறியவற்றால் ஒற்றன் பூர்வ இந்திய இராஜ்யங்களில் செங்கோன்மைக்கு எவ்வளவு இன்றியமையாதவனாகக் கருதப்பட்டானென்பது தெரியவரும். ஒற்றரைத் தெரிந்தெடுப்பதைப்பற்றியும், அவர்களைப் பல வகுப்புகளாகப் பிரிப்பதைப்பற்றியும், அவர்களை ஆளும் விதத்தைப் பற்றியும், அர்த்தசாஸ்திரத்தில் விவரமாய்ப் பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

“ஒற்றர்களைக்கொண்டு பரீக்ஷித்துத் தெரிந்தெடுக்கப்பெற்ற அமைச்சர்களது சபையை உதவியாக வைத்துக்கொண்டு, ஒற்றர்களை அரசன் நியமிக்கவேண்டும்.”—**அர்த்தசாஸ்திரம்.**

ஒற்றன் என்பவன் யாவன் என்பதைக் குறித்துத் திருக்குறளில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.—திருக்குறள்.

எவரது செய்தியை அறிதற்குச் சென்றானே அவராலே சந்தேகிக்கப்படாத வடிவோடு பொருந்தி, அவர் சந்தேகித்து அறியத் தொடங்கினால் கோபித்துப்பார்க்கின்ற அவர் கண்ணிற்கு அஞ்சாமனின்று, நான்கு உபாயங்களும் செய்தாலும் மனத்திலுள்ளவைகளை உமிழாதிருக்கவல்லவனே ஒற்றனாவான்.

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்க்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.—
திருக்குறள்.

முற்றத் துறந்தாராயும் விரத வொழுக்கினராயும் உள்புகுதற்கரிய விடங்களிலெல்லாம் உள் புக்கு ஆராயவேண்டுவன ஆராய்ந்தறிந்து ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத்துன்பமுஞ்செய்து கேட்டாலும் தன்னைவெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான்.

இத்தகைய வல்லமையை யுடையவர்களையே அரசன் ஒற்றராக நியமிக்கவேண்டும். "ஒற்றர்கள் ஒன்பது வகைப்படுவர்:—(1) கபடசீடன், (2) துறவி, (3) இல்வாழ்வான், ( ) வர்த்தகன், (5) தவசி, (6) தொழிற்பயில்வோன், (7) கொள்ளிக்கட்டை, (8) நஞ்சிடுவோன், (9) தவசினி." —அர்த்தசாஸ்திரம்.

1. பிறருடைய மனத்திலுள்ளதை ஊகித்து அறியவல்லவன் கபடசீட ஒற்றனாவான்.

2. துறவறம்பூண்டு ஊக சக்தியும் மனத்தூய்மையும் வாய்ந்தவன், துறவிஒற்றனாவான். இத்தகைய ஒற்றன் ஏராளமான பொருளையும் அரசனிடம் பெற்றுக்கொண்டு, தனக்கு அரசனால் விடப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்தும், கால்நடைகளை வளர்த்தும், வியாபாரம் செய்தும் காலத்தைக் கழிக்கவேண்டும். அவ்வாறு செய்து, தான் ஈட்டும் தானிய முதலானதுகளைக் கொண்டும் லாபங்களைக்கொண்டும் அவன் பல தவசிகளுக்கு உணவு, உடை, இருப்பிடம் இவைகளை அளித்து, அவர்களில் தமக்குத் தாமே பொருளீட்டிப் பிழைக்கவேண்டு மென்ற இச்சையுடையவர்கள் ஒவ்வொருவரையும் அரசனது பொருள் சம்மந்தமாகச் செய்யப்பட்டிருக்கக் கூடிய குற்றம் யாதாயினு மொன்றைக் குறித்து ஆராய்ச்சி செய்து, தன் சாப்பாட்டுச் செலவையும் ஊதியத்தையும் பெற்றுக்கொள்ள வரும்போது அவ்வாறுஆராய்ச்சி செய்ததின் மூலம்வெளியானதைத்தன்னிடம் தெரிவிக்கும்படி கட்டளையிட்டு, ஒற்றனாக விடுக்கவேண்டும். இவ்வாறே துறவியின் கீழ் வேலைக்கமரும் தவசிகளில் ஒவ்வொருவரும் தமது சீடர்களை அதே மாதிரியாக ஒற்றராக விடுக்கலாம்.

3. கஷ்டகாலத்தினால் தனது விவசாயத் தொழிலைக் கைவிட்டவனாய் ஊகசக்தியும் மனத்தூய்மையும் வாய்ந்தவன் இல்வாழும் ஒற்றனெனப்படுவான். இத்தகைய ஒற்றன் அரசனால் தனக்கு விடப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்து, துறவியானவன் தவசிகளைப் போஷித்து வினைசெய்ய விடுமாறே, இல்லறத்தவர்களைப் போஷித்து ஒற்றராக வினைசெய்ய விடுக்கவேண்டும்.

4. காலவித்தியாசத்தினால் தனது வர்த்தகத் தொழிலைக் கைவிட்டவனாய் ஊக சக்தியும் மனத்தூய்மையும் வாய்ந்தவன் வர்த்தக ஒற்றனெனப்படுவான். அவன் அரசனால் தனக்கு விடப்படும் நிலங்களில் வியாபாரச் சரக்குகளைச் செய்து, துறவியானவன் தவசிகளைப் போஷித்து ஒற்றராக விடுவதைப் போலவே, வர்த்தகர்களைப் போஷித்து ஒற்றராக விடுக்கவேண்டும்.

5. தனது ஜீவனத்துக்கு வேண்டிய பொருளைத்தேடிக்கொள்ளுவதற்காக, தலையை மழித்துக் கொண்டோ சடைதரித்துக்கொண்டோ கொடிய தவமியற்றுவனைப்போல் நடிக்கவுடன்படுவான் தவசி ஒற்றனெனப் படுவான். இத்தகைய தலையை மழித்துக்கொண்டோ சடைதரித்துக்கொண்டோவுள்ள எண்ணிறந்த சீடர்களின் கூட்டத்துடன் ஓர் நகரத்தின் பக்கத்தில் தங்கியிருந்து, மாதத்துக் கொருமுறையோ இரண்டு மாதங்களுக் கொரு முறையோ ஓர் பிடி காய்கனிகளையோ புற்பூண்டுகளையோ உட்கொண்டு உயிரைக்காப்பாற்றி வருவதாக நடித்து, இரகசியமாய்த் தனக்கு இஷ்டமான உணவுகளைப் புசிக்கவேண்டும். வர்த்தக ஒற்றர்கள் அவனது சீடர்களாக நடித்து, தெய்வீக சக்தியுடையவனாக அவனை ஆராதிக்க வேண்டும். அவனுடைய மற்ற சீடர்கள் இத்தவசி தெய்வீகசக்தியுடையவர் என்று பலரு மறியும்படி பிரசித்தமாய்ச் சொல்லவேண்டும்.

அத்தவசியானவன், தன்னிடம் தமது வருங்கால அனுபவங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளுமாறு திரண்டு வரும் உயர்குடிப்பிறந்தவர்களுடைய கைகளை ஹஸ்தரேகை சாஸ்திர முறைப்படி பரிசோதிப்பதுபோல் நடித்து, தனது சீடர்கள் செய்யும் சைகைகளின் உதவியைக்கொண்டு குறிசொல்ல வேண்டும். அவன், லாபநஷ்டங்கள், தீயினால் கேடு, அந்ய தேசசம்பந்தமான விஷயங்கள், திருடர்பயம், ராஜத்ரோஹிகளுக்கு மரண தண்டனை, யோக்யர்களுக்குப் பரிசு இவைகள் எப்போது எவ்வாறுண்டாகுமெனக் குறிசொல்லவேண்டும். அவன் சொல்வன்மை, ஊகம், தைரியம் முதலிய குணங்களையுடையோர்களுக்கு அரசனிடமிருந்து கிடைக்கப்போகிற பரிசுகளையும், அமைச்சர்களின் நியமனங்களில் ஏற்படப் போகிற மாறுதல்களையுங் குறித்தும் குறிசொல்ல வேண்டும்.

அரசனது மந்திரிகள் அத்தவசி ஒற்றன் குறிசொன்னதற் கிணங்கத் தங்கள் காரியங்களை நடத்த வேண்டும். அவர்கள் தகுந்த காரணத்தைக் கொண்டு அரசனிடத்தில் விரோதங் கொண்டவர்களுக்குப் பொருளும் பட்டங்களும் கொடுத்து, அவர்களது கோபத்தைத் தணித்து, காரணமின்றி அரசனிடத்தில் விரோதம் பாராட்டுபவர்களையும் அரசனுக்குக் கெடுதிசெய்யச் சூழ்ச்சிசெய்பவர்களையும் தண்டிக்கவேண்டும்.

6. அரசன் அவசியமாய் ஆதரித்துப் போஷிக்கவேண்டியவர்களான அநாதைகளைச் சைகைசாஸ்திரம், ஹஸ்தரேகை சாஸ்திரம், மாயவித்தை சாஸ்திரம், மதத்துக்குரிய பலவித விதிகளை யுணர்த்தும் நூற்கள், ஜாலவித்தை, சகுனசாஸ்திரம் முதலியவைகளைக் கற்றறிந்து ஜனசமூகத்திற் கலந்து பழகி உளவறியும்படி செய்யவேண்டும். அவர்களே தொழிற்பயில்வோராகிய ஒற்றராவார்கள்.

7. தங்களது உயிரைப்பற்றிச் சிறிதும் கவலையின்றி, கேவலம் பொருள்தேடுவதற்காகவே புலிகளையும் யானைகளையும் எதிர்த்துச் சண்டைசெய்ய ஒப்புக்கொள்ளும் துணிந்தகட்டைகள் கொள்ளிக்கட்டை ஒற்றரெனப்படுவர்.

8. அன்பு என்பதைக் கனவிலும் அறியாதவராய்க் குரூரம், சோம்பல் என்னுங்குணங்கள் நிரம்ப வாய்ந்தவராய் உள்ளவர்கள் நஞ்சிடுவோராய ஒற்றர்களெனப்படுவர்.

9. மிகுந்த சாமர்த்தியம் வாய்ந்தவளாயும் தனது பிழைப்புக்கு வேண்டிய பொருளைத் தேடிக்கொள்ளப் பிரிய முடையவளாயு முள்ள எளிய பிராமணக் கைம்பெண், தவசினி ஒற்றியாவாள். அரசனது அந்தப்புரத்தில் அவளை மிகுந்தமரியாதையாய் நடத்தவேண்டும். அவள் அரசனது முக்கியமான மந்திரிகள் வீட்டுக்கு அடிக்கடி போக்குவரத்துள்ளவளாயிருக்கவேண்டும். மேற்கூறியன தலையை முண்டிதஞ்செய்துகொண்டுள்ள ஸ்திரீகளுக்கெல்லாம், அவர்கள் எச்சாதியாராயிருந்தாலும், ஏற்கும்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி.]

உண்மைத் துறவு

முன்னொருகாலத்தில் நீர்வளம் நிலவளம் குன்றாது மநுநீதி தவறாமல் ராஜ்யபரிபாலனம் செய்துவந்த ஓரரசன் ஒருநாள் காலையில் தனது சபையில் தன்னைப் பார்க்கவந்த சாஸ்திர பண்டிதர்களுக்கும், வைத்ய சிரோமணிகளுக்கும், கீதவித்வான்களுக்கும், பரதநாட்டியப்பெண்களுக்கும், எக்யயாககர்த்தர்களான தீக்ஷிதர்களுக்கும் அவரவர்களுக்குத் தக்கபடி வெகுமானங்களும் பொருளுதவியும் செய்து சபையைக் கலைத்துவிட்டுஇருபுறத்திலும் நோக்காமலும்நான்குபக்கங்களிலும் ஈசுவர சிருஷ்டியால் நிறைந்து மனதை நிமிஷநேரத்தில் வெகு தூரம் கவர்ந்து செல்லக்கூடியதும், மாதங்களையும் வருஷங்களையும் ஒரு க்ஷணிகமாக்கக் கூடியதுமான பலவித விருக்ஷங்களின் ரமணீயமான காட்சியையோ, புஷ்பச் செடிகளின் அழகையோ, அச்செடிகளிலுள்ள புஷ்பங்களின்லாவண்யத்தையோ, அப்புஷ்பங்களின் சுகந்த வாசனையையோ, விருக்ஷங்

களில் கூடிக் குலாவிக் கொண்டிருக்கும் நாநாவர்ணமுள்ள பக்ஷிகளின் அழகையோ, அப்பக்ஷிகளின் தொனியின்கண் கீத இனிமையையோ, தன் ஆஞ்ஞையையெதிர்பார்த்து, கைகட்டிவாய்பொத்திஆவலுடனும், பணிவுடனும் பிரீதியுடனும், தன் கண்ணோட்டத்தாலோ, கை ஜாடையினாலோ, தலை அசைத்தலாலோ, இடப்பட்ட வேலைகளை அந்தக்ஷணமே மலர்ந்த முகத்துடன் செய்யக் காத்துக்கொண்டு இரு பக்கங்களிலும் நிற்கும் ஏவலாளர்களையோ, ஒன்றையும் கவனியாமல் நேராகத் தன் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றான்.

அந்தப்புரமோ! இப்புவியில் பஞ்சேந்திரியங்களும் அடையக்கூடிய ஆநந்தத்தை அவ்வந்தப்புரத்திலேயே ஒருவன் அடையக்கூடியது மன்றி,

"மதுமழை பொழியும் புதுமர் தாரத்தில்
தெய்வ மண்டபத் தைவகையமளி
சிங்கம் சுமப்ப வேறி மங்கையர்
இமையா நாட்டத் தமையா நோக்கத்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கும்
ஏனைச் செல்வத்து வானோ ரின்பமும்"

அடையக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. அவனது இந்திரியங்களோ அவ்வொன்றையும் அறியவில்லை. ஆனால் அவன் தன் படுக்கைக் கட்டிலின் பக்கம் போனதும் பிரமித்துநின்றான். அவன் முகமோ அவனுக்கு அச்சமயம் உண்டான ஆச்சரியத்தை வெளியிட்டது. "ஆஹா! இது என்ன ஆச்சரியம்! என் சரீரத்தைத் தவிர வேறு எந்தப் பிராணியின் சரீரத்தையும் இதுவரையில் கண்டறியாத இந்தப் பட்டுப் பஞ்சணையின்மீது, ஒரு வேலைக்காரி, என் வேலைக்காரன் ஏவும் வேலைகளைச் செய்யப்பட்டவள், ஒரு சிறு பெண்,—என்ன தைரியம்—பரட்டைத் தலையுடன், அழுக்குத் துணியுடன், புழுதியடைந்த கருத்த மேனியுடன் வேலை செய்த இளைப்பினால் தலைகால் தெரியாமல் அயர்ந்து கொஞ்சமேனும் பயமில்லாமல் குறட்டை விட்டுக்கொண்டு தூங்குகின்றாள்! ஆஹா! என்ன தைரியம்! இவளுக்குத் தகுந்த சிக்ஷை விதிக்கவேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு சேவகர்களை அங்கிருந்தபடியே அழைத்தான். அவர்களும் வந்தார்கள்.

"இவளை அழைத்துச் சென்று இவளது முதுகில் பிரம்பினால் ஐம்பது அடி அடியுங்கள்" என்று கடுமையாக உத்தரவிட்டான். இவ்வார்த்தைகள் அப்பெண்ணின் காதில் விழ அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அவள் உடம்பு நடுங்குகின்றது; வாய் பேசமுடியவில்லை. இவ்விதம் அரசன்முன் கைகட்டி, வாய்பொத்தி, தலை குனிந்து நின்றாள். தான் செய்த குற்றம் அவ்வளவு பெரிதென்றும் அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்வது பிரயோஜனமில்லையென்றும், என்ன தண்டனை விதித்தாலும் அதற்கு உடன்பட வேண்டியதுதான் என்றும் அவளுக்குத்தெரியும். அரசனது அந்தப்புரத்தைத் துலக்குவதற்குப் போனதும், அந்தப் பட்டுப் படுக்கையின் சுகத்தைச் சற்று மனதில் நினைத்தாள். வெகு மிருதுவாயும் அழகாயும் அலங்கரிக்கப்பட்டிருந்த அப்படுக்கை அவளது மனதைக் சலைத்தது. 'இப்படுக்கையில் சற்றுப் படுத்து அதிலுள்ள சுகத்தை அனுபவித்துப் பார்ப்போம்' என்று நினைத்தாள். படுத்துக் கொண்டாள். அன்று வேலை கடுமையாயிருந்ததனால் தானறியாமல் தூங்கிவிட்டாள். அரசனது கடுமையான வார்த்தைகள், அவளைத் தூக்கத்தினின்றும் எழுப்பின. மிருதுவான படுக்கையில் துயின்ற அவளது சரீரத்தை மிருத்யுபோன்ற சேவகர்களின் கடினமான கைகள் தள்ளிக்கொண்டு போயின. அவ்வறையைவிட்டுச் சற்றுதூரம் வேலைக்காரர்களால் தள்ளப்பட்டுப் போனாள். போகும்போது அவள் தனது இனிமையான குரலில் கிரீச்சென்று அரண்மனை முழுதும் பிரதி தொனி கேட்கும்படி நகையொன்று நகைத்தாள். அரசனுக்கு முன்னிலும் பதின்மடங்கு ஆச்சரியமுண்டாய்விட்டது. அவன் கோபம் அவ்வாச்சரியத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. "என்ன இது ஒரு விந்தையிலும் விந்தை! இப்பெண் தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படிக்கும், விதிக்கப்பட்ட தண்டனையை ரத்துசெய்யும்படிக்கும் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்க, ஏதோ ஒரு விளையாட்டுப்போல் நினைத்து அலட்சியமாய்ச் சிரிக்கின்றாள். இதில் என்ன ரகசியம் இருக்கிறது" என்று தனக்குள் கேட்டுக்கொண்டு அப்பெண்ணைப் பார்த்து "ஏ பெண்ணே! நீ இப்போது எதற்காகச்சிரித்தாய்? உள்ளவிஷயத்தை மறைக்காமல் சொல்லிவிடு. சீக்கிரம் உன் சந்தோஷத்திற்குத் தகுந்த துக்கம் உண்டாகும்படி செய்யப்போகிறேன். பின் பிரம்படிகளைப் பெற்றுக்கொண்டு நாட்டியமாடலாம்! சொல் சீக்கிரம்; ஏன் சிரித்தாய்?" என்று கேட்டான்.

"ராஜாதிராஜனே! என் மனதில் ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதைப்பற்றி நான் சிரித்துவிட்டேன். ஐந்து நிமிஷங்கள்தான் நான் அப்படுக்கையில் படுத்தேன். இவ்வைந்து நிமிஷங்களில் நான் அடைந்த சுகத்திற்கு ஐம்பது பிரம்படிகள் தண்டனையானால், தினம்ஒன்றுக்குமுப்பது நாழிகையாக அநேக வருஷங்கள் அப்படுக்கையில் துயின்று சுகமனுபவித்தஒருவருக்குக் கிடைக்கக்கூடிய தண்டனை எவ்வளவாகும் என்பதை மகாராஜா நினைக்கவில்லையேஎன்று எண்ணினேன். என்னையறியாமலே சிரிப்பு வந்துவிட்டது" என்றாள். அரசன் இவ்வார்த்தைகளைச் செவியுற்றான். சேவகர்களை அவரவர்கள் வேலைக்குப் போகும்படி ஆஞ்ஞாபித்தான்; ஆழ்ந்தயோசனையிலமர்ந்தான். அப்பெண்ணோ, தான் தைரியமாய்ச் சொன்னவார்த்தைகளை நினைத்து நடுங்கிக்கொண்டு முகம் வெளுத்துக் குனிந்த தலையுடன் நின்றுகொண்டிருந்தாள். அப்பெண்ணைப் பார்த்து "சிறு பெண்ணே! நீ ஒரு வேலைக்காரி; என்னிடத்திலுள்ள வேலைக்காரர்களுக்குள் இழிவான குலத்தைச் சேர்ந்தவள். ஆனால் நீ இப்போது எனக்குத் தத்துவமாகிய கைவல்ய ஞானம் உபதேசித்த குருவாகிவிட்டாய். சாந்தமான மனதுடன் நீ போகலாம். இன்றைய தினம் நான் உன்னிடத்தில் பரம வைராக்ய சித்தியடையஹேதுவானதும், அதிசூக்ஷ்மமானதுமான உண்மையை உபதேசம் பெற்றுக்கொண்ட சிஷ்யனானேன். எவ்வளவுக்கெவ்வளவு சுகம் அனுபவிக்கிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு துக்கம் கட்டாயம் அனுபவிக்கவேண்டுமென்பது வாஸ்தவந்தான். ஈச்வரன்கருணாநிதி; இவ்வற்பப் பிராணியினிடத்தில் மனது வைத்து இச்சிறிய இழிவான குலத்திலுதித்த ஒரு பெண் வாக்கினின்றும் மகா ரகசியத்தை உபதேசித்தார். ஆஹா! என்ன கருணை, என்ன கருணை!" என்று சொல்லிக்கொண்டே கண்களினின்றும் ஆநந்தபாஷ்பம்பெருகக் கற்சிலைபோல் நின்றான். அன்று பகல்முழுதும் இரவு முழுமையும் அன்னிய சிந்தை யின்றி அப்பெண் சொன்ன வார்த்தைகளையே மனனம் செய்துகொண்டிருந்தான். "என்ன! ஐந்துநிமிஷநேரம்என்படுக்கையில்படுத்துச்சுகம்அனுபவித்த முதுகுக்குத் துக்கந்தாக்கூடிய ஐம்பதுஅடிகள் கொடுக்க உத்தரவிட்டேன். நான் எவ்வளவு தடவைகளில் நீதி தவறி யிருக்கிறேனோ? எவ்வளவுபாபச்செயல்கள் செய்திருக்கிறேனோ? அப்படிப்பட்ட நான் என் வாழ்நாட்களில் பாதியை அப்படுக்கையில் படுத்தே சுகமனுபவித் திருக்கிறேன். இவ்வரண்மனையிலிருக்கும் எல்லாவற்றையும் நான் ஒருவன் மாத்திரந்தானா அனுபவிக்கத் தகுந்தவன்? ஈசுவரனால் அளிக்கப்பட்ட ஆசீர்வாதங்களுக்கும் நான் தகுந்தபாத்திரமோ! என் ஸ்திதிக்குத் தகுந்தபடி பிறர்களைப்பற்றிக் கனவிலும் நினைத்திருப்பேனோ? நான் ஜனசம்ரக்ஷகன். நான் என்ன! அகம்பாவத்துடனும், எனக்காகத்தான் நான் ஜீவித்திருப்பதென்றும் நினைத்தல்லவோ என்னை நானே நிந்தித்துக்கொள்ள ஹேதுவாக்கிக்கொண்டேன். இப்பெண் சிரித்த சிரிப்பே எனக்கு ஒரு பெரியநிந்தனையல்லவா?" என்று நினைத்து நினைத்து மனமுருகினான். மறுநாள்காலையில் தான் அணிந்திருந்த அரசனுக்குரிமையான விலை மதிக்கப்படாத உடுப்புகளையும், தான் பூண்டிருந்த ஆபரணங்களையும் களைந்தெறிந்து தன் ராஜாங்கத்திலுள்ள மிகவும் எளிமையான ஒரு பிச்சைக்காரன்போல் ஆடையணிந்து, அருகாமையிலிருந்த காட்டிற்குள் சென்று அங்கு சமாதியிலிருக்க ஆரம்பித்தான். ஒரு பகல் ஒரு இரவு செல்ல ஒரு நாள் முழுதும் ஆகாரமின்றிப் பசியால்வருந்தியும், அவனுக்குத் தன்னிடத்தில் வெறுப்பும் தான் செய்திருக்கக்கூடிய பாபச் செயல்களில் அருவருப்பும் உண்டாகி விட்டபடியால் ஆகாரத்தில் லக்ஷியம் வைக்கவில்லை. இகலோக சுகதுக்கங்களை விட்டு நீங்கினால் போதும் என்று நினைத்தான். பூனையானது பாலினிடத்தில் அதிகப்பிரியம் வைத்துச் சூடான பாலை அருந்த வாய் வைக்கும் சமயம், அதன் முகம் சுடுபட, மீண்டும் குளிர்ந்த பாலையும் குடிக்க அஞ்சும். மான், ஒரு வேடனால் பசும் புல்லிருக்கும் இடத்தில் போடப்பட்ட பச்சை நிறமுள்ள வலையில் அகப்பட தெய்வானுகூலத்தால் அதினின்று விடுபட்டோடிய பிறகு, புல்மாத்திர மிருக்கப்

அகதிக்கு ஆகாயம் துணை. : : அகதி சொல் அம்பலம் ஏறுது.

அகதிபெறுவது பெண்பிள்ளை, அதுவும் வெள்ளி பூராடம்.

பட்ட இடத்திற்கும் போக அஞ்சும். ஒரு மனிதன் ஒரு உத்யானவனத்தில் நான்கு பக்கங்களிலும் மல்லிகை முல்லை ஜாதி ரோஜா சண்பகம் தாழை மகிழ்பன்னீர் முதலான பலவித சிறந்த வாசனையுள்ள புஷ்பச் செடிகளால் சூழப்பட்டு, மா, பலா, வேம்பு, மகிழம் முதலான மரங்களினால் குளிர்ச்சி கொடுக்கப்பட்டு, சிந்தைமகிழ மந்தமாருதம் வீச, ஒரு கட்டடத்தில் கவலையின்றி இன்பம் அனுபவித்துக் காலம் கழித்துக் கொண்டிருக்க, அக்கட்டடத்தில் பேய்களும் பிசாசங்களும் உலாவிக்கொண்டு தனக்குக் கெடுதி உண்டாக்குவதைத் தெரிந்துகொண்டபிறகு அவ்விடத்தைவிட்டு வெளிப்பட்டு மீண்டும் அக்கட்டடத்தைப்பற்றி நினைக்கவும் அஞ்சுவன். அவ்விதமே இவ்வரசனும் ஆகாரத்தைப் பிரயாசைப்பட்டுத் தேடி அதனால் இத்தேகத்தை வளர்ப்பது தானே தனக்குக் கேட்டைத்தரும் அகம்பாவத்தை அதிகரிப்பதாக எண்ணியதனால் ஆகாரத்தினிடத்திலும்வெறுப்புக்கொண்டான். இப்படியிருக்க மறுநாள் மத்திய காலத்தில் ஒருவன் விலையுயர்ந்த வெகு ருசியான ஆகாரங்களை எடுத்துக்கொண்டு அரசன் முன்னிலையில் வைத்து "ஸ்வாமி! தாங்கள் கொடிய தவம் செய்வது தங்களுக்குச் சம்மதமாயினும் ஆகாரமின்றி ஒருவர் தன்னுயிரை மாய்த்துக் கொள்வது சரியல்ல. இவ்வற்பன் கொண்டு வந்திருக்கும் இச்சிற்றுண்டிகளைத்தயவுசெய்து புஜித்துப் பசிதீர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சற்றுக் கிருபை செய்ய வேண்டும். நான் தங்கள் அடிமை, தயவு செய்து இவ்வாகாரத்தைப் புஜிக்கவேண்டும்'' என்றான். அரசனும் கண்களைத் திறந்துபார்த்தான். அப்போது சற்றுத் தூரத்தில் தன்னை நோக்கிக் கொண்டிருந்த ஒரு சந்நியாசியைக் கண்டான். அச்சந்நியாசி அரசனருகில் வந்தார். அரசன் "சுவாமி! இந்த சாது, நாயினும் கடையேனை எனக்குக் கொண்டு வந்திருக்கிற இவ்வாகாரங்களில் தாங்களும் கொஞ்சம் புஜிக்கலாமா'' என்று அவரைக் கேட்டான். அதற்கு அவர் ''என்ன ஆச்சரியம்! நீ அறுபது நாழிகை தான் தபஸ் செய்திருக்கிறாய். அதற்குள் இவ்வளவு மரியாதையா உனக்கு! நான் இப்பன்னிரண்டு வருஷங்களாக இக்காட்டில் வசித்துக்கொண் டிருக்கிறேன். எனக்கு மிகக் கெடுதலான ஆகாரங்கள்தான் கிடைக்கின்றன. அதற்கும் கூட நான் யாசிக்கும்படியா யிருக்கிறது. அப்படியிருக்க, உனக்கு நீ கேட்காமலே நல்ல விலையுயர்ந்த மிகவும் ருசியான பதார்த்தங்கள் ஒருவன் தானாகக் கொண்டுவந்து கொடுக்கும்படி உன்னிடம் என்ன சக்தியிருக்கின்றது? இது ஒரு பெரிய அநியாயம்; பக்ஷபாதம். இவைகள் சந்நியாசிகளிருக்கு மிடத்திலும் யோகிகள் வசிக்குமிடத்திலும் நெருங்கவே கூடாது'' என்று கோபமான முகத்துடன் பதிலுரைத்துவிட்டு வெகு வேகமாய்த் திரும்பி விட்டார்.

உடனே, ஆகாரம் கொண்டுவந்த மனிதன், கோபாவேசத்தால் பேசிவிட்டுப் பொறுமையினால் அவ்வாகாரத்தைக் கையினாலும் தொடாமல் திரும்பிவேகமாய்ப்போய்க்கொண்டிருந்த சந்நியாசியைப் பார்த்து, "ஐயா! இவர் இவ்வறுபது நாழிகை நேரத்திற்குமுன்பு ஒரு மகாராஜாவாக அதிகாரம் செலுத்திக்கொண்டு அரசாண்டவர். இவருடைய அந்தக்கரணம் சுத்தப்பட்டு, இகலோக சுகத்திலும் பரலோக சுகத்திலும் ஆசையை விலக்கிச் சுக அனுபவம் எவ்வளவோ அவ்வளவுக் கவ்வளவு துக்கம் பின் தொடரும். அவைகளையும் அனுபவிக்கவேண்டும். என்பதுதான் இகலோக பரலோகங்களின் வாஸ்தவமான குணம்' என்று பூராவும் உணர்ந்து மனப்பூர்ணமாய்ச் சர்வசங்க பரித்தியாகஞ் செய்து எதை அறிந்தால் எல்லாமறிந்ததாக ஆகுமோ, எந்தச்சுகம் சாசுவதமோ, எந்தவஸ்துவைத் தவிர வேறு வஸ்து நித்தியமில்லையோ, எது சத் சித் ஆனந்த ஸ்வரூபமுடையதென்று வேதங்கள் முறையிடுகின்றனவோ, எந்த வஸ்துவில் இப்பதினான்கு லோகங்களும் கற்பனையாகத் தோன்றப் படுகின்றனவோ, எது வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத பரம்பொருள் என்று உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றனவோ, எதனின்றும் இவ்வண்டாண்ட புவனங்களின் தோற்றம் உற்பத்தியாகி லயிக்கின்றனவோ, விருக்ஷம், மிருகம், மக்கள், தேவர், ஈச்வரன் முதலிய சராசர வஸ்துக்களெல்லா வற்றிற்கும் சாக்ஷி ரூபமாய் விளங்காநிற்கின்ற வஸ்து எதுவோ, எது ப்ருதிவீ ஸ்வரூபமான ஆயுதங்களால் துண்டிக்கப்படக்கூடாததோ, எது அப்பு ஸ்வரூபமான நீர்முதலியவற்றால்திரவமாக்கக்கூடாததோ, எது தேயுஸ்வரூபமான அக்கினியினால் தஹிக்கப்படாததோ, எது வாயு ஸ்வரூபமான காற்றினால் வற்றடிக்கக்கூடாததோ, எது ஆகாயத்தினால் தன்னுள் அடக்கப்படக் கூடாததோ, எது தேசத்தினாலாவது, காலத்தினாலாவது வஸ்துவினாலாவது பரிச்சின்னமாக்கப் படக்கூடாததோ, அப்படிப்பட்ட ஆத்மா தான் தான் என்று அறிந்து ஆனந்தநிஷ்டையில் ஒருவித கிலேசமு மில்லாமல் அமர்ந்து கேவலம் ஜீவன் முக்தராகி விட்டார். இவர்தான் மஹாயோகி. இவர்தான்வாஸ்தவசந்யாசி. இவர்தான் பரப்ரும்மம். மனிதர்களால் இகலோகத்தில் பகிர்முகமா யடையக்கூடிய உத்தம சுகமான ராஜரீகத்தை விட்டு, கேவலமான ஒரு பிச்சைக்காரன் புஜித்த மிச்சமாகும் ஒருபருக்கைச்சோறும் யாராவது வலுவில் கொடுத்தால் உண்டு ஜீவிக்கத் தீர்மானங்கொண்டது எவ்விதம் மதிக்கத்தக்கது? அப்படிப்பட்ட மகாத்தியாகிக்கு நான் ஆகாரம் கொண்டுவந்தேன். இவ்வழியிலாவது

மண்ணினிற் பிறந்தார் பெரும் பயன் மதிசூடு
மண்ணலார் அடியார்தமை யமுது செய்வித்தல்

என்றபடி நான் இவ்வுலகில் பிறந்ததன் பயனை அடையக் கருதினேன். நீயோ புல் வெட்டுகிறவன். தரித்திரமும் துக்கமும் உன்னிடம் குடிகொண் டிருக்கின்றன. உனக்கு வயிறுவளர்ப்பதற்கு வழியொன்று மில்லை. இகபோகானுபவத்திற்குச் சாமக்ரியைக ளில்லாததனால் இவ்விதம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாய். உன் மனதிலோ ராகத்துவேஷங்கள் பூரணமாய் இருக்கின்றன. ஆகாரம் சம்பாதிக்கச் சக்தியற்ற புலி, தங்கக் காப்புகள் தானம் செய்யப் பிராம்மணனை அழைத்தபோது வேஷம் தரித்ததுபோல, இச்சந்நியாசி வேஷம் பூண்டு பலவித கெட்ட நடவடிக்கைகள் செய்ய நினைத்திருக்கிறாய்; இத் துறவறத்தை ஒரு ஜீவனமாக வைத்துக் கொண்டிருக்கிறாய். இவ்வரசர், தான் சம்பத்து நிரம்பிய தன் ராஜ்யத்தைவிட்டு மனிதர்களுள் கஷ்டப்பட்டவனாக விருந்து காலம் கழிக்க நினைத்திருக்கிறார். நீயோ புல்வெட்டியாயிருந்து மண்வெட்டியை விட்டு மனிதர்களால் பூஜிக்கத்தக்க தபசியாகப் பிறர் உன்னைக் கொண்டாட வேண்டுமென்று எண்ணி யிருக்கிறாய்'' என்று அச்சந்நியாசியை இகழ்ந்துபேசி, அரசனை வணங்கிக் காட்டுக்குள் மறைந்துவிட்டான். அரசன் இவ்வாச்சரியமான நாடகத்தைக் கண்டு கொஞ்சமேனும் லட்சியம் செய்யவில்லை. மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு ஆத்மானந்தத்தில் ஆழ்ந்து விட்டான்.

இவ்வரசனது மன ஒழிவுதான் வாஸ்தவமான மன ஒழிவு என்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

ருஷ்யர்களின் பெருக்கல் முறை

RUSSIAN METHOD OF MULTIPLICATION

ருஷியா தேசத்திலுள்ள மத்ய வகுப்பு ஜாதியார் பெரும்பான்மையோர் கல்வி அறிவில்லாதவர்கள். அவர்களுக்குக் கணக்கில் கூட்டல், கழித்தல் நன்றாகத் தெரியுமாம். பெருக்கல் வகுத்தல்களில் இரண்டால் மாத்திரம் செய்யத் தெரியுமாம். இருந்தாலும் இந்த அறிவை வைத்துக்கொண்டு பெரிய பெருக்கல் கணக்குகளை போடுகிறார்கள். எப்படியெனில் பெருக்கல் எண்களின் 2-ல் ஒன்றை 1-விடை வருகிறவரையில் வகுத்துக்கொண்டே போகிறது; மீதியை கவனிக்கிறதில்லை. மற்ற எண்ணை அவ்வளவு தடவை இரண்டால் பெருக்கிக்கொண்டே போகிறது. வகுத்த எண்ணில் இரட்டைப்படை ஈவுகளுக்கு சரியாக பெருக்குத்தொகையில் தள்ளிவிட்டு மீதியைக் கூட்டினால் விடை சரியாகவரும்.

உதாரணமாக 49 × 65

2	49	 65	
		2	
2	24 ×	...... 130 ×	
		2	65
2	12 ×	...... 260 ×	1040
		2	= 2080
2	6 ×	...... 520 ×	3185 விடை.
		2	
2	3	1040	
		2	
	1	2080	

வஸந்த மந்திரம்

(ஒரு சரித்திர சம்பந்தமான நவீனம்.)

முதலதிகாரம்

ஸிந்து நதி

அது நல்லநடுவேனிற்காலம்; மேஷமாதம்; சாயங்கால வேளை; அழகிய ஆகாயத்தின் நடுவில் சந்திரன் வெள்ளித் திலக மிட்டதுபோல் பிரகாசிக்கின்றான்; மேற்கே உருக்கி ஊற்றிய செம்பொன் மயமாய்ச் சூரியன் அப்பொழுதுதான் மேற்குக் கடலில் சிறிது சிறிதாய் மூழ்கிக் கொண்டிருக்கின்றான். வானமெல்லாம் சிவந்த ஜலம் நிரம்பிய சமுத்திரம்போல் விளங்குகின்றது. அதிகமாய் அடர்ந்திராமல் சற்றே இங்குமங்கும் சிதறிக்கிடக்கும் மேகக்கூட்டங்கள் செங்குன்று பலவெழுந்து நிற்பன போல்தோன்றின. இதற்குள் சூரியன் இன்னும் சிறிது கீழ் இறங்கவே சிவப்புநிறம் மாறி எல்லாப்புறமும் மஞ்சள் நிறமாயின. இது என்ன மாயவித்தை! நேரே கண்ணால் பார்த்திருக்கப் பார்த்திருக்கவே நம்மை மயக்கி மாறுவேஷம் போட்டுக் கொள்ளுகிறாளே, சுபாவம் என்றும், இயற்கை யென்றும், அழைக்கப்படும் இப்பெண்! இயற்கை யழகைப் பார்த்துக் களிக்காத கண்களும் கண்களா! பசிய மஞ்சள் நிறம் நிலத்தின்மேல் உள்ள வஸ்துக்களில் படுவதால் அவைகள் எல்லாம் ஒரு விநோத ஒளியுடன் செப்படி வித்தைக்காரனால் உண்டாக்கப்பட்ட மாயசிருஷ்டிபோல் பிரகாசிக்கின்றன. எதுதான் இவ்வற்புத வெளிச்சத்தில் கண்ணுக்கு இனிமையாய்த் தோன்றா வஸ்து? 'கூப்பிடு' தூரத்தில் உள்ள ஸிந்து நதியின் ஜலமோ உருகின தங்கவெள்ளத்தை அடித்துக்கொண்டு போவதுபோல் காண்கின்றது! அந்நதி வடபுற மிருந்து தென்முகமாய் ஓடுவதால் ஒரு பாகத்தில் மட்டுமே இவ்வெளிச்சம் ஜலத்தின்மேல் விழுகின்றது. மற்றொரு புறத்தில் மரங்களும் தோப்புகளும் குன்றுகளும் தங்கள் நிழல்களை அந்நதியின் மீது பரப்புகின்றன. மரங்களின்மீதோ வெளுப்பும், சிவப்பும், மஞ்சளும், இன்னு மற்ற நிறங்களும் கலந்த புஷ்பங்கள் நிரம்பி யிருக்கின்றன. இவையெல்லாம் ஒருங்குகூடி ஸிந்து தேசமாகிய ஆரியப்பெண்ணுக்குத் தங்கத்தாலும், மாணிக்கத்தாலும், நவரத்தினத்தாலும் இழைத்துச் செய்த ஆபரணங்கள் போட்டிருப்பதுபோல் தோன்றின.

இவ்வழகிய அந்திப்பொழுதில் காற்றென்பதே சற்றும் அடிக்கவில்லை. வெளியிடத்திலேயே நிற்பதற்கு வெகு வெப்பமாய் இருந்த தென்றால், சிறிது தூரத்தில் உள்ள ஐந்திர புரியில் எங்ஙனம் இருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகள்கூட "ஐயோ இருள் மூளுகின்றதே. கூட்டுக்குள், இவ்வெப்பத்தில் எப்படியடைகின்றது?" என்று வருந்தி மனமில்லாமல் தம் மிருப்பிடம் நோக்கிப் பறந்து செல்லுவன போல் வெகு மெதுவாய்ப் பறந்து சென்றன. எங்கும் சப்தமே கிடையாது. வெப்ப மிகுதியால் காட்டிலுள்ள மிருகங்களும் வாய்திறக்கவில்லை. வழிநடப்போர் அந்திப்பொழுதின் அழகைக்கண்டு ஆனந்தித்தாராயினும், சுற்றிலுமுள்ள அமைதி அவர்களுக்குப் பயத்தை உண்டாக்கிற்று. இதற்குள் சிறிது சிறிதாய்ச் சூரியனுடைய ஒளியெல்லாம் மழுங்கிப் போகவே, நடுவானத்தில் நின்ற திங்களின் வெளிச்சம் பிரகாசிக்கத் தொடங்கிற்று. பக்ஷிகள் எல்லாம் தத்தமிடங்களுக்குச் சென்று விட்டன. வௌவால்களும், ஆந்தைகளும், கோட்டான்களும் இராஜ்யமாளப் புறப்பட்டன. மரப்பொந்துகளிலிருந்து கிளம்பிச் சில ஆந்தைகள் கிளைகளில் உட்கார்ந்து தலையை ஆட்டுவதும், இன்னும் சில பொந்துகளிலிருந்து தலையைத்தூக்கி எட்டி எட்டிப் பார்த்து, அடாதகாரியம் செய்த ஒருபுருஷன் பகலெல்லாம் ஒளிந்துகொண் டிருந்துவிட்டு அஸ்தமித்தவுடன் நடுக்கத்துடன் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு பதுங்கிப் பதுங்கி வெளிப்புறப்படுவதுபோல் இருந்தன.

இருள்பரந்து நிலவொளி பிரகாசிக்கவே, வேட்டையாடும் பொருட்டு வெளிச்செல்லும் துஷ்டமிருகங்கள் மெதுவாய்ச் சப்தம்செய்து கொண்டு வெளிவந்தன. நீர்குடிக்கத் தண்ணீரண்டை போகும் சிலமிருகங்கள் வழியில் தம்மிலும் பலமுள்ள மிருகங்கள் வருவனவற்றைக்கண்டு, மறைந்து நின்றன. ஜலத்தண்டைவரும் பலமற்ற மிருகங்களைச் சில அடித்துத்தினும் பொருட்டு ஒளிந்துகொண்டன; சில, மிக்க ஒளியுடன் துள்ளித்துள்ளி விழும் மீன்களைக்கண்டு மலைத்து நின்றன; சில

தரையின்மேல் வெப்பமாற்றாமல் படுத்துக் கிடந்த முதலைகளைக் கண்டு அஞ்சிநின்றன.

இவ்வாறிருக்க, அக்கரையில் படகிறங்கும் துறையில் ஒரு வலையன் ஆற்றோரம் வந்து ஒருவிளக் கொன்றேற்றித் தன் இனத்தார் இருவரைக் கூப்பிட்டான். அவர்கள் வந்து சேர, மூவருமாய் ஒரு படகை பிரயாசைப்பட்டு ஜலத்துள் தள்ளினார்கள். படகு தண்ணீரில் சரியான நிலைக்கு வந்தவுடனே, தீபம் வைத்திருந்தவன் "தயார் சாகிப்ஜீ" என, கரையிலிருந்து இரண்டுபேர் அப்படகில் வந்து ஏறிக்கொண்டனர். அவர்களுடன் வலையர்கள் இருவரும் ஏறிக்கொண்டு படகை நடத்தத் தொடங்கினர். விளக்கு வைத்துக்கொண்டு நின்றவன் மற்றவர்களுக்கு விடைகொடுத்து விட்டு விளக்குடன் வீடுநோக்கிப் புறப்பட்டான்.

படகில் உட்கார்ந்து வரும்போதே நிலா வெளிச்சத்தில் அவர்களது தோற்றம் எத்தகைத்தென வர்ணிப்பது தவறாகாது. படகேறிய இருவருள் பெரியவனுக்கு வயது நாற்பதுக்குமேலிருக்கலாம்; நிறம் அவ்வளவு கறுப்பு இல்லை என்னலாம்; உஷ்ணத்தால் முகம்வாடி மாசுபடிந்திருந்தது. சிறியவனுக்கு வயது இருபதுக்கு இரண்டு மூன்று வருஷம் அதிகம் இருக்கலாம். சிறுபிள்ளையான படியால் அவ்வளவு சிரமப்பட்டவன்போல் தோன்றவில்லை. அவர்களது அகன்றநெற்றியையும் மலர்ந்தகண்களையும், பரந்த மார்பினையும், வலிய தோள்களையும் பார்த்து, அவர்கள் இராணுவ உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லிவிடலாம். பக்கத்தில் சுழற்றிவைத்திருந்த ஜோடுகள் அதிகமாய் மண்படவில்லை; சிறுவனுக்குப் பக்கத்தில் குதிரைச்சாமான்கள் இரண்டுஜதைகள் இருந்தன. இவற்றால் அவர்கள் கால்நடையாய் வந்தவர்கள் அல்லரென்பது விளங்குகின்றது. இவர்கள் இருவரும் சுல்தான் ஆமத்ஷாவின் இராணுவ உத்தியோகஸ்தர்கள்; வீட்டுப் பரிவாரங்களுக்குத் தலைவர். படகு நடு ஆற்றிற்கு வரும் வரையில் ஒருவரும் பேசவில்லை. முதலில் பெரியவன் "கவுஸ்! குப்பியில் ஷர்பத் இருந்தால் இப்படிக்கொடு" என்று கைநீட்டினான். சிறுவன் உடனே எடுத்துக்கொடுக்கப் பெரியவன் கொஞ்சம் குடித்துவிட்டுக் குப்பியை, கையிலேயே பிடித்துக்கொண்டு "இன்று அதிக உஷ்ணமாய் இருக்கிறதல்லவா, கவுஸ்? என்னால் உஷ்ணம் பொறுக்க முடியவில்லை. வியர்வை எப்படி ஊற்றுகிறது பார்" என்று ஓரங்களில் சரிகை வேலைப்பாடு செய்துள்ள தனது நயமானமேல்ஆடையைக் கழற்றிவைத்தான். இப்பொழுது மறுபடியும் ஷர்பத்குடித்தால் கொஞ்சம் குளிர்ச்சியாய் இருக்குமென்று எண்ணம் கொண்டவன் போல் திரும்பக் கொஞ்சம் குடித்து, பட்டு வஸ்திரத்தால் வாயைத் துடைத்துக்கொண்டு, பாரசீக பாஷையிலேயே:—"இன்னும் இரண்டு நாள் அப்பா! இந்தப்பாடு படவேண்டும்; சுல்தான் வஸந்த மந்திரம் போய்ச் சேர்ந்துவிட்டால், அங்கு இவ்வளவு உஷ்ணமாக இராது. என்ன சொல்லுகிறாய் கவுஸ்மியா?" என்றான். சிறுவன் (கவுஸ்)மௌனமாய், 'ஆம் நீர் சொல்வது சரியே' என்று பதில் சொல்வதுபோல் தலையை அசைத்தான்.

பெரியவன் "இந்த இரண்டுமூன்று நாளாய் நாம் படும் கஷ்டம்போல் இதுவரையில் எப்பொழுதாவது இருந்ததுண்டா?—இராஜகாரியம் கடினமான வேலைதான்; சொல்லு, வாயைத்திறந்து" என்றான்.

கவுஸ் "கடினமே; சேவகருக்கு எப்பொழுதும் சரியாய்த்தான் இருக்கின்றது" எனப் பதில் கூறினான்.

பிறகு இருவரும் தாங்கள் வஸந்த மந்திரம் போய்ச் சேருமுன் அரண்மனையில் என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ, அவற்றைக் குறித்துப் பேசத் தொடங்கினர். சிறுவனே கூடியமட்டில் தலையை அசைத்தும், புன்சிரிப்புக் காட்டியும், ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் அவசியமானபோது பேசி, பெரியவனுக்குத் தங்கு தடையில்லாமல் தாராளமாய் வார்த்தையாட இடங்கொடுத்தான்.

படகு கரைவந்து சேர்ந்தது. கவுஸ் குதிரைச்சாமான்களை ஒரு கையிலும் தன் ஜோடுகளை மற்றொரு கையிலும் பிடித்துக்கொண்டு இலாகவமாய்க் கீழே குதித்தான். பெரியவன் தனது ஜோடுகளை எடுத்துக்கரையில் எறியும்படி உத்தரவு செய்துவிட்டுத் தானும் பின் தொடர்ந்தான். படகுக்காரர் சாமான்களை எடுத்துவர, இருவரும் ஜோடுகளைத் தரித்

துக் கையில் ஒரு பந்தத்தைக் கொளுத்திக்கொண்டு 50, 60 அடி தூரத்துக்கு அப்பாலுள்ள மரமடர்ந்த தோப்பில் நுழைந்தார்கள். அத்தோப்பினுள் ஒரு பங்களா காணப்பட்டது அதன் முன்னே, இரண்டு வலிமையான குதிரைகள் மேய்ந்துகொண்டிருந்தன. ஜனங்கள் வரும் சப்தம் கேட்டு நான்கு சேவகர்கள் ஓடிவந்தனர். அவர்களின் உதவியால் குதிரைகளைத் தயார் செய்துகொண்டு, படகுக்காரர்களிடமிருந்து சாமான்களைப் பெற்று, அவர்களை யனுப்பிவிட்டு. ஐந்திரபுரியை நோக்கிப் புறப்பட்டனர்.

விந்து தேசத்துப் படத்தில் நாம் ஐந்திரபுரியைக் காணுவது கஷ்டமே. அத்தேசத்துக்குப் போனோமானாலும், அப்பெயர் கேட்க முடியாது! ஏனெனில், இந்து நகரங்களே இப்பொழுது முற்றிலும் நாசமடைந்தது மன்றி வேறுவேறு துருக்கப் பெயர்களைப் பெற்று, நிலைமாறி உருமாறிக் கிடக்கின்றன. ஐந்திரபுரியென்று பழைய ஆரியப்பெயரையே நாம் உபயோகித்தபோதிலும், இக்கதை நடந்த அக்காலத்திலேயே, விந்து தேசத்தை ஜயித்த மகமதியர்கள் அதனை **இஸ்மலாபாத்** என்று அழைத்தனர் போலும்! ஆகவே பெயரில் என்ன இருக்கின்றது? விஷயத்தைத் தொடருவோம். (34-ம் பக்கம் பார்க்கவும்.)

கல்விக் குறிப்புகள்
Educational Notes

[வித்யா விஷயமாகச் சில குறிப்புகளை "போதினி"யில் வெளியிட வேண்டுமென்று நமது அபிமானிகளில் பலர் கேட்டுக்கொண்டதற் கிணங்க, நாளது மாதமுதல் அதாவது, போதினியின் பதினோராவது ஆண்டுத் தொடக்கமுதல்; அப்படிப்பட்ட குறிப்புக்களை மாதந்தோறும் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இவைகள்வித்யா விஷயத்தில் கவனம் செலுத்துவோருக்கும் மற்றையோர்க்கும் பயன் கொடுக்கும் என்பதற் கையமில்லை. கல்வி விஷயமாக ஆங்காங்கு அவ்வப்போது நடந்துவரும் விசேஷங்களை யொட்டி நேர்த்தியான சிறு குறிப்புகளும் விமர்சனங்களுமே இந்தப் பகுதியில் வெளிவரும்.]

மாணவர்களின் பரீக்ஷைகள்.

வருஷா வருஷம் கவர்ன்மெண்டார் வித்யா விஷயமாக ஒரு ரிபோர்ட்டு தயார் செய்து வெளியிடும் வழக்கத்தை யொட்டி, சென்ற வருஷத்திய அறிக்கையை இப்போது வெளியிட்டிருக்கின்றனர். அதில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய அம்சம் மாணவர்களின் பரீக்ஷைகள். சென்ற வருஷத்தில் இந்திய சர்வகலாசாலைகள் எல்லாவற்றிலுமிருந்தும் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு 30,000 வித்யார்த்திகளும், இன்டர்மீடியேட் பரீக்ஷைக்கு 16,000 பேர்களும், பீ.ஏ., க்கு 9143 பேர்களும்,பி.எஸ்.ஸி. பரீக்ஷைக்கு 7?8பேர்களும் சென்றனரென்றும் அவர்களில் முறையே 18,000, 600?, 4686, 440 பேர்களே பரீக்ஷைகளில் தேறினரென்றும் தெரிகின்றது. அதாவது பிரவேச பரீக்ஷைக்குச் செல்பவர்களில் ஆறில் ஒருவர்தாம் பி. ஏ. பரீக்ஷையில் ஒப்பேறுகின்றனர். நமது மாணவர்களில் பெரும்பாலார் சாமர்த்திய மற்றவரென்று நாம் நம்பவே மாட்டோம். ஆகவே, அவர்கள் பரீக்ஷைகளில் தேறாமல் போவதற்குக் காரணங்கள் வேறிருக்கவேண்டும். சொல்லிக் கொடுக்கப்படும் விஷயங்களைச் சரியானபடி மாணாக்கர்கள் கிரகித்திருக்கின்றனரா என்று மட்டும் பார்ப்பது பரீக்ஷையின் பிரதான நோக்கமாக இருந்தால், வருஷாவருஷம் அநேகமாயிரம் பிள்ளைகள் பரீக்ஷைகளில் தேறாது தவிக்கும் துர்த்தசை ஒருவாறு நீங்கும். இன்னும், தொழிற்கல்வி யபிவிருத்தியும், மாணவர் மூளைவன்மைக்கேற்ற போதனாமுறையும் ஏற்படுமானால், காலக்கிரமத்தில் மேற்கூறிய சீர்கேடுகள் அகன்றொழியும். பரீக்ஷாதிகாரிகளும் சற்று நிதானமாகத் தமது கடமைகளைச் செய்வார்களானால் மாணவர்களுடைய கதி அவ்வளவு கேவலமாகவிராது.

* * *

பம்பாய்க் கல்விச் சபை.

சென்ற மாதத்தில் பம்பாய் ராஜதானியில் பூனா நகரத்தில் கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரவர்களின் தலைமையின்கீழ் நடந்த கல்விச் சபையார் தீர்மானம் செய்த விஷயங்களிற்சில

அந்த ராஜதானியாரால் மட்டு மன்றி, எல்லோராலுமே கவனிக்கப்பட வேண்டிய தாகின்றன. தாழ்ந்த ஜாதியாருக்கு இன்னும் வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து அவர்களிடம் கல்வி அதிகமாகப் பரவச் செய்யும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொண்டது முதல் தீர்மானம். தேச வர்த்தமானங்களுக் கிணங்க, பிரதமப் பள்ளிக் கூடங்களில் போதனா முறைகள் வேறுபட வேண்டுமென்பது ஒரு தீர்மானம். பள்ளிக்கூடங்களில் ஆங்கிலேயபாஷை, கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக இருக்கக்கூடா தென்று ஒரு தீர்மானம் உண்டாகியது. வருஷத்தில் இரண்டு தரம் பரீக்ஷைகள் நடத்தப்படவேண்டு மென்பதும், ஒரு தடவையில் தேறிய பாடத்தில் இன்னொரு விசை மாணாக்கர்கள் பரீக்ஷிக்கப்படக் கூடாதென்பதும், ஜில்லாக்கள்தோறும்பெண் பிள்ளைகளுக்குப் பிரத்யேகமாகப் பாடசாலைகள் ஏற்படவேண்டு மெனபதும், வித்யா இலாகா முழுவதும் இந்தியர்களாலேயே வகிக்கப்படவேண்டு மென்பதும், உபாத்தியாயர்களுக்கு இராஜ்ய விஷயங்களில் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாகச் சுதந்தரங்கள் இருக்க வேண்டு மென்பதும் வேறு சில தீர்மானங்களாம். இந்தியஸர்வகலாசாலைகளில் தேசபாஷைகளே பிரதானமாக இருக்கக்கூடுமா என்பதைப் பற்றி ஆலோசித்து முடிவு சொல்ல ஒரு கமிடியார் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களுடைய தீர்மானத்தை யாவரும் ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள்.

* * *

இந்தியாவில் கல்வி யபிவிருத்தி.

யுத்தம் காரணமாக பற்பல விஷயங்கள், பணத் தட்டுப்பாட்டால், நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. வென்பதை அபிமானிகள் அறிவார்கள். இந்தத் துர்த்தசை, கல்வி யபிவிருத்திக்கும் கொஞ்சம் ஏற்பட்டுள்ளது. என்றாலும் அது காரணமாகப் புரோபிவிருத்தி முற்றிலும் நின்றுவிடவில்லை. சென்ற வருஷத்தோடு முடிவு பெற்ற ஐந்து வருஷத்திய "கல்வி ரிபோர்ட்"டினின்றும், காலெஜ்கள் 100-க்கு 4 வீதமும், ஸெகிண்டரி பாடசாலைகள் 20 வீதமும், பிரதமப் பாடசாலைகள் 16 வீதமும் அதிகமாகியிருக்கின்றன. மாணவர்கள், முறையே 61, 23, 17 வீதம் அதிகமாகியிருக்கின்றனர். ஜாதிகளை யொட்டிப் பார்க்குமிடத்து, பௌத்தர்களில் 100-க்கு 32 வீதமும், ஆங்கிலோ-இந்தியக் கிறிஸ்துவர்களில் 22 வீதமும் முகம்மதியர்களில் 17வீதமும் அதிகரித்திருக்க, ஹிந்துக்களில் மட்டும் 100-க்கு 12 வீதம் மாத்திரமே அதிகரித்திருக்கிறது. செலவு விஷயமாக நோக்குமிடத்து 1911-12 வருஷத்தில் பிரதி மாணாக்கனுக்கும் வருஷமொன்றுக்கு ரூ 9-4-11 செலவு ஆகியது. இந்தத் தொகை 1913-14ல் ரூ 10-2-4 ஆகவும், 1916-17ல் ரூ. 11-6-8 ஆகவும் உயர்ந்திருக்கிறது. பிரதமப் பள்ளிக் கூடங்கள் 1,3?,183 லிருந்து 1,42,203 ஆகவும், அவைகளில் படிக்கும் மாணாக்கர்களின் சங்கியை 55,42,263 லிருந்து 58;18,930 ஆகவும் அதிகமாகி யிருக்கிறது. இவை யெல்லாம் நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. என்றாலும் இப்போதைய ஐரோப்பிய யுத்தம் இல்லாதிருந்தால் மேலே காட்டிய புரோபிவிருத்தி இன்னும் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் தடையில்லை. ஆகவே, யுத்தம் நின்றதும் வித்யாபிவிருத்தி முன்னிலும் பன்மடங்கு அதிகமாகுமென எதிர்பார்க்கிறோம்,

* * *

இலவச உயர் தரக் கல்வி.

உயர்தரக் கல்வியை இலவசமாக்க, மைசூர் சர்வ கலாசாலைச் சங்கத்தார் ஒரு தீர்மானங்கொணர்ந்திருப்பதைக் கேட்டு நாம் அத்யந்த சந்தோஷ மடைகிறோம். அனேகமாயிரம் சிறுவர்கள் பணச்சவுகரியம் இராதபடியால், பாதியில் படிப்பை நிறுத்திவிட்டுப் போகின்றனர். மேற்கூறிய சவுகரியமிருப்பின், அவர்கள் வித்தையில் தேர்ச்சியடைந்து ஜனசமூகத்தில்மேலான பதவிகளை அடையக் கூடும். உயர்தரப்படிப்பை வெகு "கிராக்கி"யாக்கிவிட்ட சென்னைச் சர்வகலாசாலையார் அப்படிப்பட்ட புண்ணியத்தைக் கட்டிக்கொள்ள மாட்டார்கள். என்றாலும் "அடுத்தகத்து" மைசூர் சர்வகலாசாலையார் செய்ததை இவர்கள் கண்டித்துப் பேசாமல், சந்தோஷத்துடன் ஆமோதிப்பார்களென்று எண்ணுகிறோம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

கற்பலகையின் வரலாறு

சிறுவர்களே! நான் உங்களுக்கு ஓர் ஸ்வாரஸ்யமான கதை சொல்லப்போகிறேன். இதற்குமுன் இதை நீங்கள் கேட்டிருக்கமாட்டீர்கள். கவனமாய்க் கேளுங்கள்.

கிருஷ்ணன் என்னும் பையன் ஓர் நாள் பள்ளிக்கூடத்திற்குச் சென்றான். உபாத்தியாயர் அவனை ஓர் கணக்குப் போடச்சொன்னார். அவன், அதை வெறுத்து, சோம்பேறியாய்த் தூக்கக் கலக்கங் கொண்டிருந்தான். கணக்குப் போடுவதற்குப் பதிலாகக் கற்பலகையில் மனிதனுடைய தலைபோன்ற சித்திரம் ஒன்று எழுதலானான். அச்சித்திரம், உருண்டை யுருண்டையாய் இரண்டு கண்களும், பெரிய வாயும், சுருட்டையான மயிரும் உடையதாய் இருந்தது. அவன் பலப்பத்தால் எழுதும்போது, பலப்பம் கீச்சிட வாரம்பித்தது. பிறகு, அக்கீச்சலிடும் சப்தம் அதிகமாக, யாரோ மெதுவாகப் பேசுவதை அவன் அறிந்தான். அக்குரல், "நான் எப்படியுண்டானேன் என்பது உனக்குத் தெரியுமா?" என்றது.

அவனால் தன்காதை நம்பக்கூடவில்லை. எனவே, அவன் கனவு காண்பதாக நினைத்தான். ஆனால், அவன் அச்சித்திரத்தைப் பார்த்தபோது அதன் வாய் உண்மையாகவே அசைவதாகத் தோன்றிற்று. அதனால், அவன் கதிகலங்கிப் போனான். உடனே, தன் துணியால் சித்திரத்தைத் துடைக்க வாரம்பித்தான். அவ்வாழ்ந்த குரல், "அப்பா! அப்பா! என்னைத் துடைத்துவிடாதே" என்றது. "கற்பலகையில் எழுதியிருக்கும் சித்திரம் எனக்கென்ன தீங்கு செய்யக்கூடும்" என்று அவன் துடைப்பதை நிறுத்திவிட்டான்.

"உனக்கு நிரம்ப வந்தனம். இப்போது நான் எங்கிருந்து வந்தேனென்று சொல்லு; பார்ப்போம்" என்று புன்சிரிப்புடன் அம்முகம் சொல்லியது.

"ஏன், நான்தான் உன்னை உண்டாக்கினேன்" என்றான் கிருஷ்ணன்.

முகம், "இல்லை நீ என்னை உண்டாக்கவில்லை" என்றது. கிருஷ்ணன், "அது பொய்; நான்தான் செய்தேன்" என்றான். "நீ செய்யவேயில்லை" என்று அது தன் தலையை நிமிர்த்திக்கொண்டு மறுத்துரைத்தது.

"நான்தானே உண்டாக்கினேன். நான்தான் உன்னை எழுதினேன். நீ இப்படி முரட்டுத்தனமாய் ஆக்ஷேபித்தால் உன்னை அடியோடு துடைத்துவிடுவேன்" என்று துணியை எடுத்தான்.

"ஓ, நீ முகத்தை எழுதவில்லை. கற்பலகைதான் என்னை எழுதியது நான்தான் அக்கற்பலகை. நான் எங்கிருந்துண்டானேன் என்பது உனக்குத் தெரியுமா என்று நான் அறிய விரும்புகிறேன்."

"அதற்கென்ன? கடையிலிருந்துதான்" என்று உரத்த குரலோடு கிருஷ்ணன் சொன்னான்.

"கற்பலகைகள் கடையில் விளைகின்றனவென்று நீ நினைக்கிறாயா?"

"நான் அப்படி நினைக்கவில்லை. நீ அங்கிருந்துதான் உண்டானாய்."

"நீ நினைக்கிறதைவிட அதிக தூரத்திலிருந்து நான் வந்தேன். நான் மிகவும் பழைய குடும்பத்தைச் சேர்ந்தவன். என் வரலாறு மிகவும் ஸ்வாரஸ்யமானது."

"அதை எனக்குச் சொல்லு. நான் கவனமாய்க் கேட்கிறேன்."

"நல்லது நான் கற்பலகைகளைப் பற்றியும், நான் எங்கிருந்துண்டானேன் என்பதையும், எப்படி உண்டானேன் என்பதையும் சொல்லுகிறேன். கற்பலகைகள் எவைகளால் செய்யப்படுகின்றன என்பதுகூட உனக்குத் தெரியாதென்று நான் நம்புகிறேன்."

"எனக்குத் தெரியும். அவை ஸ்லேட்டால் செய்யப்படுகின்றன."

"நிரம்ப சரி பையா! ஸ்லேட் என்றால் என்ன?" என்றப்பலகை கண்ணைச் சிமிட்டிக்கொண்டு கேட்டது.

"ஸ்லேட், ஸ்லேட்டால்தான்"

"இல்லை, அப்படியல்ல. அதன் விஷயம் விரிவானது. ஸ்லேட் அநேக பொருள்களால் உண்டாகிறது. அது ஸ்படிக தாதுவாலும், படிகாரத்தாலும், லவணதாதுவாலும், க்ஷாரவுப்பாலும், சுண்ணாம்பினாலும், இரும்பினாலும் எல்லாம் கலந்து உண்டாகிறது. ஸ்படிகதாதுவால்தான் கண்ணாடி செய்யப்படுகிறது. அலுமினியம் என்னும் படிகாரத்தால்தான் அலங்காரப் பொருள்களும், பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. பொங்கும் சோடாவில் லவண தாது காணப்படும். காரமான ஜலத்தில் காரவுப்பு காணப்படும். உன்னுடைய தேக எலும்புகளும், பற்களும் சுண்ணாம்பால் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொருட்களெல்லாம் கற்பலகையில் கலந்திருக்கின்றன."

"யார் அவைகளைக் கலந்தனர்?" என்றான் கிருஷ்ணன். "நதிகளும், கடல்களுந்தான்" என்றது அப்பலகை. "அப்படி யொருநாளுமிராது. ஏனென்றால் கற்பலகை, கற்கள் வெட்டி யெடுக்கப்படும் இடத்திலிருந்து வந்தது."

"இரு, நான் அதைப்பற்றி யெல்லாம் சொல்லுகிறேன்" என்று கற்பலகை புத்திசாலி போன்றும், அறிந்ததுபோன்றும் சொல்லியது.

"அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன், மிகப் பெரியமலை யொன்றிருந்தது. ஆயிரக்கணக்கான வருஷங்களாக அதனுடைய உச்சி, நீரோட்டங்கள் மலையின் கீழே உண்டாகி, முதலில் கால்வாய்களாகவும், பிறகு நதிகளாகவும் ஆகும்படி மழையால் கழுவப்பட்டது. நதிகள் உயரத்தில் உண்டாகிப் பாய, அவைகள் முதலில் கால்வாய்களையும், பின்பு ஆற்றுத்தரைகளையும் உண்டாக்கிக் கொண்டன. அவைகள் பிறகு பெரிய தாழ்வரைகளைச் செய்துகொண்டு பாறைமலை (rocky mountains) சிறிதுசிறிதாக அரித்து கண்ட துடங்களை மண்ணாகக் கடலில் கொண்டு அந்த மண், கடலடியைச் சேர்ந்து களிமண்ணாயிற்று. இவ்வாறு அநேக மாயிர வருஷங்களாக நடந்துகொண்டிருந்தது. மலைகள் வரவர அரிக்கப்பட்டுப் போயின. அதேகாலத்தில் பிரம்மாண்டமான பசையுள்ள மண் கடலடியில் சேர்ந்திருந்தது. நக்ஷத்திர மீன்கள் (Star fish), ஓட்டுமீன்கள் முதலியன கணக்கற்றவையாகப் பிறந்து இறந்தன. அவைகள் இறந்தபோது அம்மண்ணில் விழுந்து அம்மண்ணால் மூடிப் புதைக்கப்பட்டன. இன்னும் கடலுள் மேன்மேலும் மண் சேர்ந்து கொண்டே யிருந்தது."

"நதிகள் மலையை எப்படி யரிக்கக்கூடும்?" என்று கிருஷ்ணன் மறுத்துரைத்தான்.

"ஹோ, அவைகளால் முடியாதா? நீ காவேரி கங்கை முதலிய நதிகளைப் போய்ப் பார்த்துவா; அப்போது தெரியும்."

"எனக்கது தெரியாது. ஆனால் நீ ஒருவேளை சரியாக விருக்கலாம்."

"நான் உண்மையைச் சொல்லுகிறேன். என்னுடைய அனுபவத்திலிருந்து நான் இப்போது சொல்லிக் கொண்டுவரும் மலையில் நான் ஓர் துண்டென்பது எனக்குத் தெரியும்.

"நல்லது, நீ ஆக்ஷேபித்தபோது நான் சொல்லியது போல, ஸ்படிகதாதுவும், படிகாரமும், லவண தாதுவும், காரவுப்பும், சுண்ணாம்பும் இரும்பும், மீன் ஓடுகளும் அடங்கிய மலையின் மண்ணானது அநேக கோடி வருஷங்களாகக் கடலின் அடியில் சேர்க்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் சிறுவர் சிறுமிக ளொருவருமில்லை. இது அவர்கள் காலத்திற்கு முன்னமே நடந்தது. அக்காலம் நம்மால் அறியப்படாதது. ஆனால் நான் அப்போது மலையின் மண்ணாக விருந்தேன். அதைப் பற்றியெல்லாம் எனக்கு ஞாபகமிருக்கிறது. மண் சேர்ந்துவந்த காலத்தில் பூமி குளிர்ச்சியடைந்துகொண் டிருந்தது. பூமி குளிர்ச்சியடைந்ததும், அது சுருங்கிப்போயிற்று. அதனுடைய பலனாகச் சமுத்திரத்தின் அடியிலிருந்த மண், கல்போல் சேர்த்துக் கெட்டிக்கப்பட்டது. கடைசியாக மிகப் பெரிய படைப்பாறை முகடுகள் சமுத்திரத்தின் வெளியே தோன்றின" என்றது பலகை.

"ஆனால் ஸ்லேட் மலைகள் பாறையாலல்லவோ செய்யப்பட்டிருக்கின்றன. மண்ணாலல்லவே."

"அப்படித்தான். ஆனால் மண்ணினுடைய நெருக்கம் பாறையாக மாறும்படி செய்தது. ஆகையால், மலையின் மண்ணாகவிருந்த நான் படைப்பாறையாக மாறினேன். இம்மாறுதல் மிகவும் முக்கியமானது. அநேக கோடி வருஷங்கள் சமுத்திரத்தினடியில் இருந்துவிட்டுப் பிறகு சூரிய சந்திரரைப் பார்த்தேனெனில், அதை நான் எப்படிச் சொல்லக்கூடும்?"

"நீ எவ்வளவுகாலம் அப்படி யிருந்தாய்? உனக்கு என்ன வயது இப்போது?"

"அநேக யுகங்கள் நான் அங்ஙனம் இருந்திருக்கிறேன். கடலடியிலிருந்து நான் மேலே முதலில் வந்தபோது என்னைச் சுற்றிலும்

அக்காள் இருக்கிறவரையில் மச்சான் உறவு : : அக்காளைக் கொண்டால், தங்கையை முறை கேட்பானேன்?

அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச்சொன்னால், வெங்காயம் கருவேப்பிலை என்பாள்.

நெருப்பைக் கக்கிக்கொண்டு பல பெரிய எரிமலைகள் இருந்தன.”

“ஆனால் நீ ஓர் காலத்தில் கடலடியில் மண்ணாகவிருந்தாயென்று நீ உறுதியாகச் சொல்வாயா? நீ கனவுகாணவில்லையென்பது நிச்சயந்தானா?”

‘நான் உறுதியாகச் சொல்லுகிறேன். நான் உற்பத்தியான வேல்ஸ் (Wales) தேசத்திற்கு நீ போய்ப் பார்த்தால் நீகூட உறுதிப்படுவாய். ஏனெனில் நீ, கடலின் அடியில் மண்ணில் விழுந்த மீன் ஓடுகளையும், நக்ஷத்திரமீன் (Star-fish)களையும் எங்கு பார்த்தாலும் காண்பாய். அநேக தடவைகள் கடலடியில் நான் இருக்கவில்லையா, மறுபடியும் மேலே வந்தேனா என்பதுதான். நான் உறுதிப்படாதது,”

“சொல்லாய்கற்பலகையே! நீ இவ்வளவு தட்டையாகவும், மெல்லியதாகவும், வழவழப்பாகவும் எப்படி யானாய்?”

“ஸ்லேட் அல்லது படைக்கல் என்று ஏன் சொல்லப்படுகிறதெனில் அதைப் படைபடையாகச் செய்யக்கூடுமாதலால்தான் (Slate-slit).”

“ஆனால் அதை எப்படிப் படைபடையாக எடுக்கக்கூடும் ?”

“நல்லது அதை விரிவாகச் சொல்வது கஷ்டந்தான். ஆனால் நான் ஒருகை பார்க்கிறேன். அது படையாகி மாறியதற்கு நெருக்கமே காரணமாகும். நீ ஓர் தேன்மெழுகுத் துண்டை எடுத்துக்கொண்டு இரண்டுதட்டுகளின் இடையில் வைத்துக் கெட்டியாகப் பிழிந்தால், அது மெல்லிய படைகளாகப் பிரிவதைப் பார்ப்பாய். பிசைந்த மாவை யெடுத்து மரக்குழவியின் கீழ் வைத்துவிட்டால் அதேமாதிரி நேருவதை நீ காண்பாய். மா மெல்லிய படைகளாகப் பிரிந்து போகும். அதேமாதிரி, சிப்பிகளும், நக்ஷத்திரமீன் முதலிய ஜலசரங்களின் மிச்சங்களும் நசுக்கப்பட்டு உருவழிந்து படைப் பாறை மலை (slate rocks) களாகின்றன.”

“அப்படியானால் எவ்வளவு படைப்பாறை மலைகளிருக்க வேண்டும் ?”

“ஆமாம், இங்கிலாந்தில் ஒவ்வொரு வருஷமும், கல்வெட்டு மிடங்களிலிருந்து கோடி ரூபாய் பெருமான 4,50,000 டன் ஸ்லேட் எடுக்கப்படுகின்றது. அப்பணத்தை அணாவாகக் குவிக்கின் ஒருபெரிய மலையாகும். இங்கிலாந்தில் ஸ்லேட் கூரையாகப் போடப்படுகிறது. ஸ்லேட் அதிக காலமாக உபயோகப்பட்டு வரவில்லை, ஐம்பது, அறுபது வருஷங்களுக்கு முன்னே நீ இங்கிலாந்திற்குப் போயிருந்தால் பட்டணங்களிலுள்ள வீடுகள் எல்லாம் ஓடுகளால் மூடப்பட்டிருக்கும்.”

“ஓடுகளென்றால் என்ன ?”

“ஓடுகள் காய்ந்துபோன களிமண்ணே யாகும். ஸ்லேட்டைப்போல் அது இயற்கையாய் அல்லாமல் மனிதனால் செய்யப் படுகின்றன. அவைகள் அவ்வளவு சிறந்தவை யல்ல.”

“இன்னும் எவைகளுக்கு ஸ்லேட் உபயோகப்படுகிறது ?”

“உனக்கு ஓர் உபயோகமாவது தெரிந்திருக்கும். ஸ்லேட் பொம்மைகளெழுதவும், கணக்குப்போடவும், சிறுவர் சிறுமிகளுக்குக் கற்பலகையாக உபயோகப் படுத்தப்படுகிறது. மிகப் பெரிய ஸ்லேட் பீடப்பந்தாட்ட (Billiard-Table) மேஜைகளுக்கு உபயோகப்படுத்தப் படுகிறது. இப்பலகைகள் இரண்டு அங்குல கனமும், சுமார் இரண்டரையடி அகலமும், ஆறு அடிக்குமேல் நீளமும் கொண்டன. மற்ற பெரிய பலகைகள் சிலசமயம் சமாதிகளுக்கு உபயோகப்படும்.”

“உனக்கு எவரிடத்திலிருக்கப் பிரியம் ?”

“எனக்கு சிறுவர் சிறுமிகளுடைய கையில் இருந்து, அவர்கள் என்மேல் சித்திரங்களையும், கணக்குகளையும் எழுதும்படி அவர்களுக்கு உதவியாக இருப்பதே யெனக்கிஷ்டம். உலகத்தில் மிகவும் பெயர்பெற்ற அறிவாளிகள் என்னை உபயோகப் படுத்தியிருக்கிறார்கள். நான் உங்களைப் புத்திசாலிகளாகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும் செய்கிறேன் என்பதைப்பற்றிச் சந்தோஷிக்கிறேன்.”

“நான் இதற்குமுன் கற்பலகையைப்பற்றி இவ்வளவு தூரம் அறிந்ததில்லையே” என்று கிருஷ்ணன் விடையளித்தானோ யில்லையோ உடனே கையிலிருந்த பலகை நழுவிக் கீழே விழுந்து விட்டது. அவன் விழித்துப் பார்க்கிறான், எல்லாம் கனவாக முடிந்தது !

சிறுவர்களே ! இதை நாம் கனவென்று சொல்லலாகாது. ஏனெனில் கிருஷ்ணன், அப்பலகை சொல்லியதெல்லாம் உண்மையென்று அறிந்தான். அதன் பிறகு கற்பலகையிடம் சிரத்தையும் மரியாதையும் கொண்டிருந்தான்.

ஸ்த்ரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி: 16—துப்பு

—வாக்கினுன் மன்னவனை யொப்பான் மதித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவனல்லன்—பூக்கமழும்
கூந்தலாய்! மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூல் மார்பன் எடுத்து.

அது நல்லவேளை; விதர்ப்ப நாட்டில் அன்றைக்கு எங்குமில்லா எழுச்சி விளங்கியது. தென்றல்காற்று அன்று வெகு மனோஹரமாக வீசிக்கொண்டிருந்தது. தன் எதிர்ப்பட்டதையெல்லாம் பொன்னாக மாற்றி ஜனங்களை மயக்கிய சூரியன், அவற்றையெல்லாம் வெளிரச்செய்து, வெருண்டு பிடியில் அகப்படாது திமிறியோடும் ஜாலக்காரன்போல ஆகாயவீதியில் மேலேற வாரம்பித்தான். அப்போதவனது வெப்பமும் காற்றின் மந்தவிசையுங் கலந்து யாவர்க்கும் உத்ஸாகமூட்டும். அப்போதுதான் விதர்ப்பநாட்டில் பெரும் ஆரவாரம் எழும்பியது. பூர்ணசந்திரனது வரவைக்கண்டு பொங்கி எழும்பும் கடல்போல அவ்வூரே அவ்வொலி வருமிடத்தை நாடிச்சென்றது.

முதல்முதல், பல யானைகள் வரிசைவரிசையாக ஊர்க்குள் கம்பீரமாக அடிமேல் அடிவைத்து நுழைந்தன. அதன்பின் குதிரைப்படை கடலலை யெழும்புவதுபோல வலசாரியும் இடசாரியுமாக அசைந்து தொடர்ந்தன. தேர்கள் பல, அவற்றைப் பின்பற்றி வந்தன. ஆலவட்டமும், சாமரமும், மற்றும் ராஜவைபவமும் முன்தோன்ற, அழகு திரண்டிருக்கொண்ட பெண்கள் நாயகமாகிய ச்ருங்கார பொக்கிஷத்தை உட்கொண்ட பொன்னாலும் மணியாலும் இழைக்கப்பட்ட பல்லக்கொன்று மறங்கொண்ட வீரர் சுமந்துவர, பல்லாயிர வீரரும், சேடியரும், மற்றும் பதாதியாக நடந்துவரும் பகுஜனங்களும் ஒருவரையொருவர் நெருக்கிக்கொண்டு நடந்து வந்தனர். மங்கள வாத்யங்களும், கட்டிய முழக்கும், எச்சரிக்கையும் இவை முதலாகிய அரசர்க்குரிய ஆடம்பரங்கள் ஒன்றோடொன்று மயங்கி விளங்கக்கண்ட ஜனங்கள் அங்கு வந்து பெருங்கூட்டமாகக் கூடினர்; மெதுவாகத் தமக்குள் தாம் பேசி, வந்த ஆள் யாராகவிருக்கலாமோவெனச் சிந்தித்தனர்; தமக்குத் தோன்றினவாறெல்லாம் பேசினர். வரவரக் கூட்ட மதிகரித்தது; வந்த பரிவாரங்களின் வேகமும் தணிய வாரம்பித்தது. வெகு உல்லாஸமாக வந்த அந்தக் கோலம் வீமராஜனது அரண்மனையின்முன் நின்றது. பல்லக்கிலிருந்த தமயந்தியை இறங்கிவரக் கண்ட பந்து ஜனங்கள் சற்றே யசைவற்று நின்றனர். வெயிலில் நடந்து உடனே இருட்டில் நடப்பது எவ்வளவு மயக்கத்தைத் தருமோ, அவ்விதமே அவர் காணத் தயாராகவிராத பொருளைக் கண்டதும் பிரமைக் காளாயினர். ஆனால், அது ஒரு க்ஷண நேரம். அப்புறம் அவர் தமயந்தியை இறுகப் புல்லிப் பரவசமாகிச் சற்றுத் தமது ஞானம் தமக்கு வந்ததும் அவளது க்ஷேமலாபங்களை விசாரித்தனர். தமயந்தியின் வரவைக் கேள்விப்பட்ட அவள் தாய் உள்ளிருந்து ஓடோடியும் வந்து அவளைத் தழுவியணைத்து, கண்களில் நீர் சோர“என் அம்மணீ! உன்னை உயிருடன் கண்டேனே”என்று சொல்லி மேலொன்றுஞ் சொல்ல நாவெழும்பாது தயங்கினள். தனது மகளைக் கண்ட அவளது ஆநந்தத்திற் களவேயில்லை. இதற்குள் வீமராஜனும் குழந்தைகளிரண்டுடன் அங்குவர, தனது குழந்தைகளை வாரி யெடுத்துக் கட்டியணைத்து முத்தமிட்டு உள்ளங் கிளைத்தனள். தனது தோழிகளும் மற்றவரும் சௌக்யமாக விருப்பதைக் காண அவளுக்குப் புது உயிர் வந்ததென்று சொல்வது தவறாகாது. தனது தாய் தந்தையரையும் மைந்தர்களையும் மற்றுந் தனக்குவேண்டியவரையுங் காண, அவள் உடம்புதெரியாமல் மயங்கிக் கிடந்தாள். சற்றே தெளிந்ததும், தேவர்களையும் பூசுரர்களையும் பூஜித்து வழிபட்டனள். தனது மகளது வரவைக் கொண்டாடப் பீமன் பலவித தானங்கள் செய்தான்; அவளைக் கண்டு அவ்விடம் வரும்படி செய்த ஸுதேவரைத் தக்கவிதம் மரியாதைசெய்து பொன்னும் பொருளும் பசுவும் நிலமுந் தந்து சந்தோஷிப்பித்தான். அன்று ஊர் முழுதும் வெகு கோலாஹலமாகவே விளங்கியது. எங்கும் தமயந்தியின் வரவைப்பற்றியே யாவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

ஊரின் அமளி குமளி, வரவர அடங்கலாயிற்று; எங்கும் சாந்தம் குடிகொள்ள வாரம்

பித்தது; சூர்யனும் குடபால் பாய்ந்து பூமியின் பின்புறங்காணச் சென்றான். மயக்கக் காற்றுடன் இரவு உலகத்தைத் தொடர்ந்து கவரவாரம்பித்தது. அப்போது தமயந்தி தனது மாளிகையில் ஸுகமே படுக்கச்சென்றாள். அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அத்தனை ஸுகங்களும் அவளுக்கேன் இன்பம் பயக்கவில்லையோ? நளனென்னும் உருவம் அவள்முன் தோன்றித் தோன்றி அவளது பழைய நிலைமையை ஞாபகப் படுத்தியதோ? என்னவோ? அவளுக்கு உறங்க மனம் வரவில்லை. எனினும், வந்த சிரமத்தின் பெருக்கால் அக்கலவர மனத்துடனேயே அயர்ந்து நித்திரைக்காளானாள்.

ஸூர்யனோடு தமயந்திக்குக் கவலையும் உதயமாயிற்று. தன் பெண்ணைக் கண்ட அவள் தாய், மடியிலிருத்தி "என் செல்வமே! உன்னைக்காணாதென் கண்கள் பூத்துவிட்டனவே! என் இனியமகளே! நீயில்லாது இவ்வுலகு இருள்மூடிய நாடாகவன்றோ இருந்தது? அந்த ஸுதேவர் வெகு நல்லவர்; உன்னை இங்கு கொணர்ந்துவிட்டு என் வயிற்றில் பால் வார்த்தனர். அவர் என்றென்றைக்கும் நன்மை பெறுவாராக!" எனத் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள். அம்மொழிகளைக் கேட்ட தமயந்தி சிந்தை நொந்து கண்களில் நீர்தளும்பத் தன் தாயைப் பார்த்து "அம்மா! உமக்கு என்னைப் பார்த்தால் வயிற்றில் பால்வார்த்தாற்போல வாயிற்று. எனக்கெப்படி இருக்கிறதென்பதை நீங்கள் அறியவில்லை போலும்! உங்களுக்கென்னைக் காண ஆவலிருந்தது உண்மைதான். அதேமாதிரி எனது நாதரைக் காணக் கவலை எனக்கிருக்காதா! அம்மா! நான் சொல்வதைச்சற்றே கவனித்துக்கேளும். என் தலைவரைக் காணாதென் உயிர்நிலையாது. யான் உயிரோடிருக்க வேண்டுமென்றால், எனது நாயகரை யடையும் வழியைத் தேடுங்கள். இல்லாவிடில் என் உயிர் நிற்காது. இது ஸத்யம்! ஸத்யம்!" எனச்சொல்லிக் கண்ணீர் வடித்தாள். தன் மகள் துக்கப்படுவதைக் காணச் சகியாதவளாய்த் தானும் துக்கத்தில் ஆழ்ந்த தமயந்தியின் தாய் மனவருத்தமுற்று, நெடுமூச்சுவிட்டுக் கண்ணீர் சிந்த வாயுலற, பேச நாவெழாது, தாங்கமுடியாத துன்ப மிகுதியால் தமயந்தியை யணைந்து கட்டிக்கொண்டாள்; சற்று நிதானத்துடன் தனது துயரத்தைச் சமாளித்துக்கொண்டு தமயந்திக்குத் தேறுதல் கூறி நளமன்னவரை யடைவதற்கான வழிகளையெல்லாம் செய்வதாகத் தமயந்திக்கு நம்பிக்கை யுண்டாகும்படி இங்கிதம் பேசி அவளது துயரத்தைப் பங்கு கொண்டாள். அப்போது இவ்விருவரது நிலையைக் கண்ட அந்தப்புரத்து ஜனங்கள் எலரும் சிந்தை நொந்து தமயந்தியின் துயரத்தை எண்ணி எண்ணித் துயரிலாழ்ந்தனர். மற்று அவளது நிலையைக் கண்ட வீமனது துயரமோ வெனில்:

"அழுத உண்கணும் அற்றமெல்லாடையும் அலங்கல்
கழுமச் சூட்டுபு கைசெயாக் கருங்குழற் காடும்
விழியி ஞெக்கலும், விதர்ப்பர்கோன் வெய்துயிர்த் [தடன்றான்
பழியிற்றந்தையர் உறு துயர்பணிக்கலாந்தகைத்தே?'

நிற்க, வீமனைக் கண்டு அவன் மனைவி, தமயந்தியின் நாயகவாஞ்சையின் பெருக்கையும், நளமன்னவரைப் பிரிந்ததால் அவளுக்கேற்பட்ட மனோ வேதனையையும் எடுத்துச் சொல்லி "நான் என்னவென்று சொல்கிறது? நாணத்தையும் கடந்தவள் நளனைக் கொண்டுவந்து தரும்படி வற்புறுத்துகிறாள். தன் கணவனை நினைத்து அவள் கவலை கொள்கிறாள்; புலம்புகிறாள்; கண்ணீராறாகப் பெருக்குகிறாள். தயவு செய்து, நீங்கள் தாமதியாது நளனைத் தேடச் செய்யவேண்டிய பிரயத்னம் யாவும் செய்ய வேண்டும். வீட்டுப்பெண் வயிறெரிந்தால் கொடிச்சேலை நின்றெரியும் அன்றோ?" என்று சொன்னாள்.

இம்மொழிகளைக்கேட்ட வீமராஜன் தன்னிடமிருந்த பிராமணர்களைக் கூப்பிட்டு நளனைத் தேடும்படி யாணையிட்டான். அம்மன்னனது உத்தரவின்படி அவர் பல திசைகளிலும் சென்று தேடப் புறப்பட்டனர். அவர்களை நோக்கித் தமயந்தி "நீங்கள் போகுமிடங்களிலெல்லாம் ஜனங்கள் கூட்டமாக இருக்கும் இடங்களில் தங்கி நீங்கள்,

'சூதாடி உள்ளதைத் தோற்றுக் காட்டில் மனைவியின் துணியையே தானுங் கட்டிக் கொண்டிருந்தபோது, உம்மையே நம்பி உமது ஸுகதுக்கமெவற்றையும் தனதாகக் கொண்டிருந்த மனைவியை, அவள் தூங்கும்போது அவளது துணியிற் பாதியைக் கிழித்துக்கொண்டு நடுநிசியில் நடுக்காட்டில் விட்டுவிட்டு எங்கு ஓடி ஒளித்துக்

கொண்டீரோ? முன்னிருந்த நிலையிலேயே அவள் இருக்கிறாள்; உம்மைக் காண விரும்புகிறாள். அப்படியிருந்தும், நீங்கள் ஏன் அவளைக் காண விரும்பவில்லை? நீர் எவ்விடம் ஓடினீர்? நீங்கள் ஆணையிட்டபடியே அவளிருந்து வருகிறாள்; உமது வரவையே எதிர் பார்க்கிறாள்; நீர் கிழித்துக் கொண்டு போனது பாதிபோக, நின்ற பாதித் துணியையே இன்றும் அவள் கட்டிக்கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாள். உம்மை நம்பியிருக்கும் அவளை நீங்கள் ஏன் கருதவில்லை? அவளைக் காப்பாற்றுவது உமது கடமை யல்லவா? பதில் கூடப் பேசுவது தகாதா?'

என்று இம்மாதிரியான மொழிகளைக் கூறுங்கள்; மேலும், முக்கியமாக இவ்விஷயங்களை வற்புறுத்தி,

கணவனென்னும் நெய்யில்லாவிட்டால் மனைவியென்னும் தீபம் எப்படி எரியும்? அவளை ஆபத்திலிருந்து காப்பாற்றுதற்குக் கணவனே கடமைப்பட்டவனன்றோ? காட்டில் காற்று வீசவீசக் காட்டுத்தீ படர்ந்து விரிம் என்பது தாங்கள் அறிந்த விஷயந்தானே. நீரோ எல்லாம் வல்லவர்; படித்தவர்; நற்குலத் துதித்தவர்; கனிந்த நெஞ்சமுடையவர்; உமக்கெப்படி மறதிவரும்? ஏன் தாங்கள் இவ்விஷயங்களை மறந்து விட்டீர்? ஏதோ அவளுடைய கால வித்யாஸம், உமது கருணை அவளிடம் குறைந்துவிட்டது போலும்! இனி அப்படி இராதிரும். அவளைச் சந்தோஷப்படுத்துவதைப் பாருங்கள். அருள்சேர்ந்த நெஞ்சினார்க்குத் தருமத்தின் பெருமையை விரித்துரைக்கவும் வேண்டுமோ?

என மேலுஞ் சொல்லுங்கள். நீங்கள் சொல்லுவதை யாராவது செவிகொடுத்துக் கேட்டு மறுமொழி சொன்னால், அதைக் குறிப்பாகக் கவனியும்; அவரைப்பற்றிய எல்லா விஷயங்களையும் அறிந்துகொள்ளுங்கள்; உமக்கவர் சொன்ன மறுமொழியை எழுத்துக்கூடப்பிறழாது அவர் சொன்னபடியே என்னிடம் சீக்கிரம் வந்து தெரிவியும். நீங்கள் சொல்லும் விதத்தால், அவர் நான் சொல்லியனுப்பிச் சொல்வித்ததாக எண்ணாதிருக்கும்படி யிருக்கவேண்டும். அவர் யார்? அவர் குணமென்ன? அவர் என்ன செய்கிறார்? ஏழையா பணக்காரரா? பணத்தில் ஆசைகொண்டவரா? அவர் எண்ணங்களென்ன? நடத்தை யென்ன? இவை முதலியவற்றைப் பற்றியும் நீங்கள் அறிந்து வரவேண்டும். உங்களால்தான் நான் உயிர் பெறவேண்டும்; உங்களுக் கநந்தகோடி நமஸ்காரம். நான் சொல்லியதை வெகு ஜாக்ரதையாக நடத்துங்கள்" என்று சொன்னாள்.

தமயந்தியின் உத்தரவுக் கிணங்கி அந்தணர் மூலைக்கொருவராக நளமன்னவரைத் தேடிச் சென்றனர். அவர் அலைந்து திரிந்த நாடு நகரங்கள், காடு மலைகள், கிராமங்கள் சேரிகள், சிறுகுப்பங்கள், பாக்கங்கள், ஆச்ரமவாசங்கள் முதலிய வனாந்தம். அவர் சென்றவிடமெங்கும்,

கவறாடிப் பொருளிழந்தான்—அவன்
காட்டிற்கு மனைவியைக் கூட்டிச் சென்றான்
தவறாத வாய்மையாளன்—மனைத்
தாட்டியை யேதானும் வெட்டுடுத்து
எடுத்தான் பெருமோட்டம்—நடு
நிசியினிற் றன்மனை யசைவற்றுத்
படுத்துறங் கும்போது—சற்றும்
நசையற்றுச் செய்யுமிவ் வசையாதற்கு
நல்லோ ரிணங்குவரோ—நல்ல
குலத்தவர்க் கிதுதான் சொலத் தகுமா
பொல்லாச் சமயமென்றே—யவள்
சலத்திற் கிடந்தாராக் குலத்துவந்தாள்
காட்டில்விட்ட கோலமாக—இன்றும்
பாதித்துணியோடுமிகப் பீதியுற்றும்
கோட்டைத்தான் டாக்குணத்தாள்—அவன்
ஓதிவைத்த படிக்கே யாதும் நடத்தும்
ஒன்றுமறியாப்பேதை—அவன்
வரவெதிர் பார்த்த வுறக்கமற்ற
கண்ணும்பூத்துப் போச்சு—இது
தருமமோ அவனுக்குப் பெருஞ் சுகமோ
யாதோ தெரியவில்லை—தன்
மனைவியைக் காப்பதுதனைபொருத்த
தேதென் றிருந்தானோ—அன்று
தனிவனத்தவளை நடு நிசியில்
விட்டது மறந்தானோ—எது
வாயினுங்கஷ்டமத்துயவளைக்
கிட்டியருள் செய்வதுவே—காதல்
நாயகர்க் கெங்குநியாயமுறை
பழிக் கிடந்தாரா ஒழுக்கம்—வீர
சீயகுணனத்துயர்க்கதே
அழியாப் பேரின்பம்—என்றும்
ஆயுங்குணக்குன்ற மேயர்க்கதே
அழியாப் பேரின்பம்—[கவறாடிப்]

என்று இந்தவிதம் பாடிக்கொண்டே சென்றனர். ஆயினும் அப்பாட்டைக் கவனித்தவரே கிடையாது.

பல நாட்கள் நடந்தன. திசை திசையாகச் சென்றவரெவரும் வரவில்லை. தமயந்தி சிந்தைநொந்து மெலிந்து துக்கத்தில் ஆழ்ந்து

கிடந்தாள். அவளைக் கண்டவர் அஞ்சும்படியாக அவள் வாடி யிளைத்து, தன்விதியை எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாக்கிக் கொண்டிருந்தாள். "இப்பாழும் ஜன்மம் எடுத்துஎன்ன ஸுகத்தைக் கண்டுவிட்டேன். இணையற்ற தலைவனைக் காணாது உயிரிருந்தென்ன போயென்ன? கிடைக்கக்கூடாத கணவரையடைந்தும், என் துர்அதிர்ஷ்டம் அவரைவிட்டுப் பிரிந்திருக்கச் செய்துவிட்டதே! ஸுகமும் துக்கமும் மாறி மாறி வருமென்பார்கள்; ஆனால் என் விஷயத்திலோ அப்படிச்சென்று சொல்லமுடியுமோ? உலகில் நல்லவரும், குணவந்தரும், ஒழுக்கமுடையருமாகிய பெரியோர்கள் கஷ்டப்படுவதையும், கொடியோர் ஸுகப்படுவதையுமே நாம் காண்கிறோம். இது என்ன அநீதி! கடவுளிருப்பது மெய்யென்று எப்படிச் சொல்லமுடியும்? அந்தப் பாழுந்தெய்வத்திற்குக் கண்ணென்பதில்லையோ"—இவ்வாறு தமயந்தி தன்னோடு தானேபேசித் தனது துக்கத்தை வெளியிட்டுக்கொண் டிருக்கும்போது, தன்முன் யாரோ வருவதாகக் கண்டவள்சற்று நாணி எழுந்தாள்.

அங்கு வந்தவர் ஓர் அந்தணர்; அவர் பெயர் பர்ணாதர்; தமயந்தியைக் காணவென்றே யிங்கு வந்தனர். அவர்க்குவேண்டிய உபசாரங்களைச் செய்து, வந்த விஷயத்தைப்பற்றிவிசாரித்தாள். அவர் சொல்லலுற்றார்:—

"அம்மணீ! நளமன்னவரைத் தேடியலைந்ததுகொஞ்சநெஞ்சமல்ல, ஆனால் அயோத்தியை அடைந்து ருதுபர்ண மஹாராஜனது ஸபைக்குச் சென்று தாங்கள் சொன்னவிதமேசொன்னேன், அதற்கு ருதுபர்ணர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. மற்று அவரோடு இருப்பவராம்; வாகுகர் என்றவர் பெயர்; வெகு விகாரமான உருவமுடையவர்; தொழிலால் தேர்ப்பாகன்; அவர் கைகளோ கூழை; குதிரையோட்டுவதில் மிகக் கெட்டிக்காரராம்; அவற்றைப் பழக்குவதிலும் அப்படியே; அமிர்தமென்று யாரும் சொல்லும்படிபோஜனபதார்த்தங்களைச் சமைப்பதில் வல்லவர்; மனைவியைப் பிரிந்து துக்கித்துக் கொண்டிருப்பவர்; அவர்தான் யான் சொன்னமொழிகளைக் கேட்கக் கேட்கப் பெருமூச்செறிந்து, என்னை யாரெனவிசாரித்து மறுமொழி சொன்னார்: அவரது பேச்சும் முகமும் அவரது உருவத்திற்கு முற்றுமாறாகவிருந்தன. அவர் "நற்குலத்து வந்த மாதர், தங்களைத் தாமே காப்பவர் அன்றோ? தம்மை விட்டுக்கணவர் பிரிந்தால், அதனால் அவரிடம் ஒருநாளும் வெறுப்புக்கொள்ளார். ஏதோ துர்த்தசையால் மயங்கித் தன் கணவன், ஸுகத்தையே துறந்து புத்திபழிந்து தன் மனைவியைத் தனியேவிட்டோடினால், அவனிடம் அனுதாபங் கொள்ளாது, கோபித்துக்கொள்வது நியாயமா? உணவிற்காகப் பிடிக்க முயன்றபோது, கையிற் சிக்காது பறந்த பறவைகள் துணியையே பிடுங்கிக்கொண்டோட, அதில் மனஞ் செலுத்தி நெஞ்சமழிந்து கிடந்தவன்மேல், அவ்வழகி கோபிப்பதில் என்ன பிரயோஜனம்? அவள் எவ்வளவு சீலையாயிருந்தாலென்ன? இல்லாமலிருந்தால்தான் என்ன? நாட்டையிழந்து, பொருளெலாமற்று, ஸுகங்களெவற்றையுந் துறந்து, புத்திகெட்டு, பசியால் வருந்தி, துக்கத்திலாழ்ந்தோடினவனிடம் அவள் கோபிப்பது சிறிதும் தகாது.

ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண்—தன்தாளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்
நீத்தானென் றையுமேல் நீ" [வனத்தே

என அவன் சொன்னபதிலை இம்மியும் பிசகாது உம்மிடம் உரைத்தேன். இனி உங்களிஷ்டப்படி நடக்கலாம். நன்றாக யோசித்துச் செய்யுங்கள்."

இம்மொழிகளைக் கேட்டதும், கண்களிலிருந்து சிந்தும் நீர் பூமிமேற்படிந்துவர, தமயந்தி ஆத்திரத்துடன் யாரும் அறியாதபடி தனது தாயிடமடைந்தாள்.

பர்ணாதரது சிரமத்திற் கேற்றபடி மரியாதை செய்து வேண்டியமட்டும் வெகுமதிகள் அவர்க்குக் கொடுக்கப்பட்டன.

ஒரு தமிழபிமானியின் மரணம்.—மதுரை ஸ்ரீமான் பி. ஆர். வேங்கடேசலு நாயுடு அவர்கள் காலமாகி விட்டாரெனக் கேட்டு மிகவும் வருந்துகிறோம். இவர், சிலகாலம் மதுரை முனிசிபல் சேர்மனாகவும், முனிசிபல் கௌன்ஸிலராகவும்வேலைபார்த்ததல்லாமல் சென்னை இங்கிலீஷ் தினசரிப் பத்திரிகைகளுக்கும் அடிக்கடி விஷயதானம் செய்து வந்திருக்கிறார். போதினியின் அபிவிருத்தியில்விசேஷ அக்கரை கொண்டவர். இவரது குடும்பத்தினர்க்கும், இவரது சகோதரர் ஸ்ரீமான் பீ. ஆர். ரங்கஸ்வாமி நாயுடு அவர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

இந்திய ராஜாங்கச் சீர்திருத்தங்கள்.

இந்திய ராஜாங்க ரீதியில் சிற்சில மாறுதல்களையும் சீர்திருத்தங்களையும் செய்வதற்காக, கனம் இந்தியா மந்திரியான ஸ்ரீமான் மாண்டேகு அவர்கள் இந்தியாவுக்கு வந்து விசாரணை செய்துபோனது அபிமானிகளுக்கு ஞாபகமிருக்கும். அவர் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் ரிபோர்ட் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதைப்பற்றிய பிரஸ்தாபமே இப்போது நமது நாடு முழுவதிலும் மும்முரமாகக் கேட்டுவருகிறது. ராஜகீய விஷயத்தில் அதிகமாகத் தலையிடுவதில்லையென்பது நமது போதினியின் முக்கிய ஸங்கல்பங்களில் ஒன்று. ஆகவே, இப்போது வெளியிடப்பட்டிருக்கும் சீர்திருத்த ரிபோர்ட்டை ஆமோதிக்கும் கக்ஷியாரைப்பற்றி யாவது, கண்டிக்கும் கக்ஷியாரைப்பற்றியாவது நாம் யாதொன்றும் சொல்வதற்கில்லை. நாம் பார்த்தமட்டில், சீர்திருத்தங்கள், நமது நாட்டின் புரோபிவிருத்தி நோக்கமாகவே செய்யப்பட்டிருக்கின்றன. காலக்கிரமத்தில் இன்னும் அதிகமான சுதந்தரங்களைக் கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறபடியால், இப்போது தருவதாகச் சொல்பவைகளை நாம் முழுமனதோடும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் தகுதி. இந்தியா மந்திரியின் சம்பளம், இங்கிலாந்து ராஜாங்கத்தின் செலவுப்பட்டியில் இனிமேல் அடங்கவேண்டும்; இந்திய விஷயங்களுக்கென்று பிரத்யேகமாக ஒரு ஸபை பார்லிமெண்டாரால் ஏற்படுத்தப் படவேண்டும்; முழு இந்தியாவுக்காக ஒரு "பிரிவிகவுன்ஸில்" என்னும் விசாரணைச் சபை ஏற்பாடாகவேண்டும்; ராஜப்பிரதிநிதியின் ஸபையில்இந்திய மெம்பர்களின் ஸங்கியை அதிகமாகவேண்டும்; 50 மெம்பர்களடங்கிய "ராஜ்யஸபை"யும், 100 மெம்பருள்ள சட்ட நிருபண ஸபையும் உண்டாகவேண்டும்; மாகாணககவர்ன்மெண்டுகளில் இப்போதுள்ள நிர்வாக உத்யோகஸ்தர்களுடன் இரண்டொரு மந்திரிகளும் இருக்கவேண்டும்; சுதேச ராஜ்யங்களுக்கென்று ஒரு பிரத்யேகமான "மன்னர் ஸபை" ஏற்பாடாகவேண்டும்; சுதேச ராஜ்யங்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் விவாத முண்டானால், அதைத் தீர்க்க ஒரு சிறு ஸபை ராஜப்பிரதிநிதியால் ஏற்படுத்தப்படலாம்; சர்க்கார் உத்தியோகங்களில் ஜாதி பேதமும் மதபேதமும் பாராட்டக்கூடாது; உத்தியோகங்களில் ஐரோப்பியர் ஸங்கியை வரவரக் குறையவேண்டும்; சம்பள விகிதங்களும் ரஜாமுறைகளும் சீர்திருத்தப்படவேண்டும்;—இவைதாம் இத்தீர்மானங்களில் மிகவும் முக்கியமானவை. இத்தீர்மானங்கள் நன்றாகத் தர்க்கிக்கப்பட்ட பின், பார்லிமெண்டில் மசோதா மூலம் ஒப்பேறிச் செலாவணியாகும். இந்த அரும்பெரும் முயற்சிக்கு இடையூறு வராமல் காப்பது ராஜ்ய தந்திர நிபுணர்களின் முதற் கடமையாகும். எதற்கும் ஈசன் கிருபை வேண்டும்.

* * *

பொன் மோகரா.

பஞ்சாப் மாகாணத்தில் கோதுமை வாங்கும் சவுகரியத்தை உத்தேசித்து, பொன் மோகராக்களைக் கவர்மெண்டார் அடித்து வெளியிடுவதாகச் சென்ற மாதத்திய போதினியில் தெரிவித்தோம். மோகராவைப்பற்றிய சிறு குறிப்பு ஒன்றை நமது அபிமானிகளில் ஒருவர் பின்வருமாறு எழுதியனுப்பி யிருக்கிறார்:—

"நமது நாட்டில் பெரும்பாலார்க்கு மோகரா நாணயம் காதால் கேட்டதாகவே இருக்கும். என்றாலும் ஒரு காலத்தில் அது ஏராளமாகச் செலாவணி யாகிவந்தது. கீழிந்தியா கம்பெனி(East India Company)யாரால் முதல் முதலில் அடிக்கப்பட்ட மோகரா கி. பி. 1766-ம் வருஷத்தில் செலாவணிக்கு வந்தது. அப்போது அதன் மதிப்பு 14 ரூபாயாகவிருந்தது. இந்த மதிப்புச் சற்றுச் சவ்கரியக்குறைவாக விருந்தப்டியால், கி.பி. 1769-ல் 16 ரூபாய் மதிப்புள்ள மோகரா அச்சடிக்கப்பட்டுச் செலாவணிக்கு வந்தது. கடைசியாக 1835-ல் மோகராவானது 15 ரூபாய்க்குச் சமானம் என்று ஒரு சட்டம் உண்டாயிற்று. அது முதல் கி. பி. 1892-ம் வருஷம் வரையில் மோகராக்கள் அச்சடிக்கப்பட்டு வந்தன. அப்பால் அடிக்கப்படவில்லை. கி. பி. 1899-ம் வருஷம் முதல், பவுன் நாணயம், செலாவணிக்கு வரவே, எஞ்சிநின்ற இரண்டொரு மோகராவும் தலைகாட்டாது மறைந்தன. கன

வான்களின் கடிகாரச்சங்கிலிகளில் பதக்கம் போலவும் ஸ்திரீகளுடைய கழுத்துச்சரடுகளில் கோர்வை போலவும் மோகராக்கள் தென்பட்டன."

இனி, பம்பாய் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நாணயச் சாலையில் பவுன் நாணயமும் அடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் மேற்கூறிய மோகராவும் பவுனும் ஒருங்கே செலாவணியாகும் காலத்தில், இரண்டுக்கும் உண்டாகக் கூடிய போட்டி காரணமாக, மோகராக்கள் பழையபடி சில நாளைக்கெல்லாம் மறைந்தாலும் மறையலாம்.

* * *

உலகத்தில் பாஷைகள்

உலகமுழுவதிலும் பேசப்படும் பாஷைகளின் ஸங்கியை 3,664 என்று ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். அவைகளில் ஆசியா கண்டத்தில் 937-ம், ஐரோப்பாவில் 587-ம், ஆப்பிரிகாவில் 276-ம், அமெரிக்காவில் 1624-ம், ஓஷியானியாவில் 240-ம், பேசப்படுகிறதாம். வெகுவாகப் பேசப்படும் பாஷைகளில் இங்கிலீஷ் பாஷையானது 10 கோடி ஜனங்களாலும், ருஷிய பாஷை $8\frac{1}{2}$ கோடி ஜனங்களாலும், ஜெர்மானியபாஷை $5\frac{1}{2}$ கோடியாலும், பிரஞ்சுபாஷை 44 கோடியாலும், பேசப்படுகின்றன. ஆகவே, அந்நிபுணர் கணக்கின்படி, இங்கிலீஷ் பாஷையே வரவர விருத்தியடைந்து உலகபாஷையாக விளங்குமாம்.

* * *

வங்காளத்தில் துணிப்பஞ்சம்

வங்காளத்தில் யுத்தம் காரணமாக நேர்ந்திருக்கும் துணிப்பஞ்சம் வெகு கடுமையாகவிருக்கிறதென்று வெளியாகிறது. ஜவளிக்கடைகள் சூறையிடப்படுவது, வழிப்போக்கர்கள் கொள்ளை யடிக்கப்படுவது, ஸ்திரீகளுடைய வஸ்திரங்களைக் கவர்வது முதலிய துர்த்தசைகள் அங்குள்ள துணிப்பஞ்சத்தை நன்கு தெரிவிக்கின்றன. சிற்சில விடங்களில் மானத்துக்கு அஞ்சிய ஜனங்கள் தற்கொலை புரிந்துகொண்டு மிருக்கிறார்களாம். நமது மாகாணத்தில் இப்படிப்பட்ட சீர்கேடுகள் நேரவில்லையென்றாலும், துணிகளின் விலை வெகு ஜாஸ்தியாக ஏறிவிட்டது. 6 ரூபாய்க்கு விற்ற சீமை "மல்" இப்போது 25 ரூபாய்க்கு விற்கிறது. நாட்டுத் துணிகளின் விலையும் ஒன்றுக்கு மூன்றாகவுள்ளது. இத்தருணத்தில் கவர்ன்மெண்டார் முன் வந்து, காரணங்களையறிந்து தகுந்த பரிகாரம் செய்யவேண்டியது அவசியம்.

வஸந்த மந்திரம்

இரண்டாம் அதிகாரம்

தர்பார்

ஐந்திரபுரியில் கீழக்கோடியில் ஒரு பெரிய அரண்மனை இருக்கின்றது. வடபுறத்து வாயிலில் 4,5 பெரிய தீபங்கள் எரிகின்றன. வாயிலின் இருபுறமும் சிப்பாய்கள் காவல் நிற்கின்றனர். உள்ளே நுழைந்து 100 அடிக்கு அப்பால்போனால், விசாலமான ஆஸ்தான மண்டபம் தென்படும். அதனுள் நுழைவோம். அங்கே மேல் பாகத்தில் நீண்டதாடியுடனும், கன்றிய முகங்களுடனும், வெள்ளிய குப்பாய்ங்களை அணிந்துள்ள மகம்மதிய சபையோர் வரிசையாய் உட்கார்ந் திருக்கின்றனர். அவர்களுக்கப்பால் மேடையின் பக்கத்தில் முறுக்கிய மீசையும், வலியபுஜமும், அகன்ற கண்ணும், பரந்த மார்பும் உள்ள சேனைத் தலைவர் பலர் கூடியிருக்கின்றனர். இவ்வீரர்கள் போர்செய்து பணம் சம்பாதிப்பதற்காக, அபிசீனியா, பாரசீகம், துருக்கி முதலான தேசங்களினின்று விந்து தேசம் வந்து சேர்ந்தார்கள். அவர்களின் உருவமே அவர்களின் வீராண்மைக்குச் சான்றாகும். தேகத்துடன் ஒட்டிய அவர்களது மேற்சட்டையும், சரிகை மேம்பட்டுப் பிரகாசிக்கும் தலைப்பாகையும், சிறிதும் துருப்பிடியாத நீண்டு வளைந்த கூரிய இடைக்கத்தியும், அவர்களுக்கு அலங்காரத்தின்மீதுள்ள ஆசையை நன்கு விளக்கின. இவர்களைத் தாண்டி அப்பால் சென்றால், பாக்ஷாவுடைய இராஜ்யத்திலுள்ள சிறந்த வித்துவான்கள் உட்கார்ந்திருக்கக் காணலாம்.

கீழண்டையில் ஹிந்துப் பிரஜைகள் நிறைந்திருக்கின்றனர். மேடையண்டை இருப்பவர் சாஸ்திர பண்டிதர். அவர்களின் அரையில் தூய உடையும், மேலே உத்தரீயமும், கையில் அழுக்கற்ற துண்டும், அவர்களுடைய தேக சுத்தத்தையும் கர்வமற்ற குணத்தையும் காட்டின; உயர்ந்த நெற்றியும்பருத்ததலையும் அவர்களுடைய இயற்கையறிவைப் புலப்படுத்தின.

அஞ்சிலே விளையாதது ஐம்பதிலே விளையுமா? அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.

நெற்றியில் அணிந்த விபூதி, அவர்கள் சாயங்காலம் செய்யவேண்டிய வைதீக காரியங்களைச் செய்து முடித்து வந்திருக்கின்றனர் என்று சொல்லுகின்றது. அவர்களுள் சிலர், தங்கள் கையில் உள்ள நூல்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். சிலர், தாங்கள் பகல்முழுதும் படித்துவந்த விஷயங்களை ஆலோசித்துக் கொண்டே மேலேபார்த்த வண்ணமாய் இருந்தனர்.

சாதாரண ஜனங்கள் சிறிதும் கவலையின்றி மந்தஹாஸ முகத்துடன் சுற்றிலும் நடப்பவற்றைப் பார்த்துக் களிக்கின்றனர். வீரர்களோ, ஒருவருக்கொருவர் தாழ்ந்த குரலில் வெகு உக்ரமாய்ப் பேசுகின்றனர். மந்திராலோசனைச் சங்கத்தார் அபூர்வமாய் ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டுமே பேசிக்கொண்டு அந்தப்புரத்துக்குப்போகும் கதவை நோக்கிய வண்ணமே யிருந்தனர்.

எல்லாப் பக்கங்களிலும் வெள்ளிக் கொத்து விளக்குகளில் நறுமணம் பொருந்திய தைலத்தால் எரியும் தீபவரிசைகள் பிரகாசித்தன. அவற்றின்பாதங்களில் ஊதுவர்த்திகளும் வாசனைப்புகைவீசும் மட்டிப்பால் முதலிய வஸ்துக்களும் எரிவதால் அந்த ஆஸ்தான மண்டபம் முழுவதும் மணம் நிரம்பி, மனோக்கியமாய் இருந்தது. பாக்ஷா வரவேண்டியதுதான் தாமதம், அதற்காகத்தான் இவ்வளவு ஆடம்பரம்.

வெளியே ஒரு வாத்தியம் ஊதிற்று. எல்லாரும் திரும்பிப் பார்த்தனர். இரண்டு அழகிய புருஷர்கள் மண்டபத்துள் நுழைந்தனர். இருவரும் சரிகை இழைத்த பட்டுக் கால்சட்டையும் மேற்சட்டையும் அணிந்திருந்தனர். தலையில் மிக நேர்த்தியாய்ப் பிரகாசிக்கும் பட்டுக் குல்லாய், பக்கத்துக்கு ஒருவர்ணமாய் மின்னுகின்றது. அவர்கள் சபையில் நுழைந்ததும், எல்லோரும் எழுந்து நின்றனர். அவ்விருவருமே அரசனுடைய மந்திரிகள். அவர்கள் தமது ஆசனத்தினருகில் நின்றனரோ இல்லையோ, அந்தப்புரத்தின் கதவும் திறக்க, பாக்ஷா தூரத்தில் வருவது பலருக்கும் தென்பட்டது. முன்னே நால்வர் தீவர்த்தி பிடித்து வருகின்றனர். பக்கத்தில் நான்கு மெய்க்காவலர் உல்லாசமாய் நடந்து வருகின்றனர். அவர்களுக்கு நடுவே பாக்ஷா நக்ஷத்திரக் கூட்டங்களுக்கு இடையில் சந்திரன்போல, அசைந்தசைந்து மதயானைபோல் கம்பீரமாய் முன் வந்தான்.

அவனது உயரம் ஆறடியிருக்கும்; இளமைப் பருவம் முகத்திலிருந்து விளங்கிற்று; வயது முப்பத்தைந்துக்குமேல் இராது; நிறம் வெளுப்பாய் இராவிட்டாலும், மாநிறத்துக் காக்ஷபணையில்லை. அவனது கரிய மயிரடர்ந்த தாடி வெகு நேர்த்தியாய்க் கத்தரிக்கப்பட்டிருந்தது. உதடுகள் புன் சிரிப்பால் சற்றே பிரிந்து, அழகான வெள்ளிய பல்வரிசைகளைக் கொஞ்சம் காட்டுகின்றன. மூக்குச் சிறிது நீண்டும் நுனிவளைந்தும் இருக்கின்றது. விசாலமான நீண்ட கண்கள் நாற்புறமும் பார்த்துக் கொண்டே யிருக்கின்றன. வளைந்த புருவமும், உயர்ந்தகன்ற நெற்றியும் உண்மையாகவே இராஜலக்ஷணத்தை விளக்கின. தலையில் முத்தும், வைரமும், மணியும் பதித்ததோர் சிறிய கிரீடம். திரண்டுருண்ட புயமும், விசாலமான மார்பும், சிறிதும் வளையாத முதுகும், முழங்கால் வரையில் நீண்ட கைகளும், உயர்ந்த கால்களும் அவனுடைய வீரத்தன்மையையும், பலத்தையும் எடுத்துக்காட்டின. உடலின்மேல் சிவப்புப்பட்டில் சரிகை இழைத்த குப்பாயமும், அதேமாதிரியான காற்சட்டையும், அவற்றிற்குமேல் இராஜ பதவிக்குரிய ஒரு விலையுயர்ந்த சால்வையும் அணிந்திருக்கிறான். சால்வையின் நிறம், சிறிது நீலம் கலந்த வெண்மையாய் இருப்பதால், தேகத்தின் மேல் அணிந்துள்ள சட்டைகளோடு முரண்பட்டுப் பிரகாசிக்கின்றது. இத்தகைய அலங்காரத்துடன், கையில் பொற்றடி தாங்கி, காலில் ஜோடு போட்டுக்கொண்டு, சபாமண்டபத்தின் நடுவில் நின்ற சிம்மாசனத்துக்கு அருகில் பாக்ஷா வந்து சேர்ந்தான்.

இந்து ராஜாக்கள் எத்தனைபேர் உட்கார்ந்து அரசுபுரிந்த சிம்மாசனம் அது! சலவைக் கல்லால் செய்த மணிமண்டபத்துக்கு நடுவே இரண்டு பொற் சிங்கங்களால் தாங்கப்பட்டதோர் பீடம்; அதன்மேல் நீல நிறமுள்ள பட்டினால் தைத்து மெல்லிய இறகுகள் அடைத்ததோர் மெத்தை; அம்மெத்தையின் மீதுதான் அரசர்கள் உட்கார்வது; இருபுறமும் கை வைத்துக்கொள்ள இரண்டு பொன் யானைகள் நின்றன. பின்புறம் சாய்ந்துகொள்வதற்கு ஒரு மெத்தையும், அதைத் தாங்க வேலைப்பா

அஞ்சுகாசுக்குக் குதிரையும் வேண்டும், அதுவும் ஆற்றைக் கடக்கப் பாயவும் வேண்டும்.

டமைந்த தேக்குப் பலகையும், அத்தேக்குப் பலகையின் நடுவிலிருந்து மேற் செல்லும் வெள்ளித்தடியின் நுனியில் ஒரு தங்கக்குடை விளங்கிற்று. குடையின் ஓரமெல்லாம் நவரத்தினங்களால் இழைத்து அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. இச்சிம்மாசனத்தில் பாக்ஷா ஏறி, கம்பீரமாய் உட்காரும்போது எல்லா மகமதிய ஜனங்களும் மண்டியிட்டு நிலநோக்கி நிற்கின்றனர். சேவகர்கள் சாஷ்டாங்கமாய் நிலத்தின்மீது நமஸ்கரித்தனர். இந்துப் பிரஜைகள் நின்ற நிலையிலேயே தலைவணங்கி வந்தனம் செய்தனர். இம்மாதிரி பரிஜனங்கள் புடைசூழ, அதிக சந்தோஷத்தோடு அரியாசனத்து அமர்ந்தான் சுல்தான் ஆமத்பாக்ஷா.

சுல்தான் பீடத்தில் உட்கார்ந்ததும் இனிமையான கீதம் முழங்கவே எல்லாரும் தத்தமிடத்தில் இருந்தனர். ஒரு நிமிஷம் கழித்து அரசன் மந்திரியின் முகத்தைப் பார்த்தான். அவன் தன்னிடத்திலிருந்து எழுந்து நிற்கவே, அரசன் "மந்திரி! நேற்று நாம் வேட்டையாடி வரும்போது பேசிவந்த விஷயத்தைப்பற்றி விசாரணை செய்தீரா?" எனக் கேட்டான்.

"ஆம், விசாரித்தேன்; அவ்விஷயம் தங்களிஷ்டப்படியே முடிந்துவிட்டது என்பதைக்கேட்கத் தாங்கள் சந்தோஷப்படுவீர்கள் என்று எண்ணுகிறேன். நமது சபையில் அரபி பாஷையில் எல்லாரிலும் மேம்பட்ட தாதாகான், தங்கள் வெற்றியையும், புகழையும், தாங்கள் இராஜ்யம் அடைந்த வரலாற்றையும்பற்றி எழுதி முடித்துவிட்டார். அதைப்போல ஸம்ஸ்கிருத பாஷையிலும் விசித்திரவீரியர் தங்கள் புகழைப் பாடியிருக்கிறார். இரண்டு நூல்களும் தயாராய் இருக்கின்றன. சமுகத்தில் இஷ்டப்பட்டால இப்பொழுதே—" என்று சொல்லிக் கொண்டிருந்தான் மந்திரி.

"சரி, சரி; அவற்றைச் சாவகாசமாய்க் கேட்போம்; இப்பொழுது உடனே கவனிக்க வேண்டிய வேலை இன்னொன்றுஇருக்கின்றது. நமது வஸந்தமந்திரம் என்னவாயிற்று? அதைப்பற்றி ஏதாவது விவரம் தெரிந்ததா? இரண்டு தினத்திற்கு முன் அவ்வேலையைப் போய்ப் பார்த்துவர அனுப்பிய சிப்பாய்கள் திரும்பி வந்தனரா? தாபம் அதிகரிக்கின்றது; சிறிதும் பொறுக்க முடியவில்லை. தினத்துகுதினம் உஷ்ணம் பலப்படுகிறது; எவ்வளவு சீக்கிரம் நாம் வஸந்தபுரிக்குப் போகக் கூடுமோ அவ்வளவு சீக்கிரம் புறப்படுவது அநுகூலமாயிருக்கும். சபையோர் கஷ்டப்படுவதைப் பாரும்."

"வஸந்தமந்திரம் கட்டுவதற்கு மேற்கொண்ட சிற்பசாஸ்திரியும், அவரிடம் வேலை செய்தவனரும் நேற்று இராத்திரியே இங்கு வந்து சேர்ந்துவிட்டனர். வேலையெல்லாம் முடிந்துவிட்டதாம். சில சில்லரை வேலைகள் இருப்பன, இன்றுஅல்லது நாளைக்குள் முடியுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. நாம் அனுப்பிய வீரர்கள் நடக்கும் வேலையை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் போலும்; அவர்கள் இன்னும் திரும்பிவரவில்லை. சிற்ப சாஸ்திரி இந்த சபையிலேயே இருக்கிறார்; உத்தரவானால் தங்கள் முன் வரவழைக்கின்றேன்."

அரசன் தன் நெற்றியில் முத்து முத்தாய் நிறைந்து நிற்கும் வியர்வையைச் சிறு பட்டுத் துணியால் துடைத்துக்கொண்டு, அருகில் நிற்கும் அடிமை ஒருவன் கொடுத்த வாசனைப் பொடியை வாயிற்போட்டு மென்று கொண்டே "வரச்சொல்லும் அவரை" என, மந்திரி தன்னருகில் நின்ற ஒரு சேவகனுக்கு ஜாடை காட்ட, அவன் சபையின் ஒருமூலையில் உட்கார்ந்திருந்த சிற்பநிபுணரை அழைத்துவந்தான்.

பாக்ஷாவின் முன்வந்து வணக்கமாய் நின்ற சிற்ப நிபுணருக்கு வயது நாற்பதிருக்கும். வெய்யல் மழை இவற்றைக் கவனியாது வெளியே வெகுவாய் வேலை செய்ததுபற்றி அவர் முகம் கன்னியிருந்தது. புஜங்கள் வலிமையுடையனவாய் இருந்தும், தோள்கள் இரண்டும் சற்றே உட்புறம் வளைந்திருந்தன. செய்தவேலை செவ்வனே இருக்கின்றதோ என்று உற்றுநோக்கி நோக்கி, அவனது கூரிய கண்கள் இரண்டும் கொஞ்சம் இடுங்கியிருக்கின்றன. பலவகை வேலைகளைப்பற்றி ஆலோசனை செய்து, நெற்றியில் 3, 4 மடிப்புகள விழுந்திருக்கின்றன. (தொடரும்.)

நம் நேயர்களுக்கு.

வெளிநாட்டுச் சந்தா நேயர்களில் பலர், தங்கள் சந்தாபாக்கியை இன்னும் அனுப்பாமலிருக்கிறார்கள். இக்கொடும் காகிதப் பஞ்சகாலத்தில நமக்கேற்படும் சிரம மிகுதியை மறுபடியும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

19 OCT 1918

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XI } காளயுக்திஸு ஆடிமீ :: 1918-ஸு ஆகஸ்ட்மீ { பகுதி 2

செல்வச் செருக்கு

THE PRIDE OF WEALTH

உயிர்க்கொலை புரித லுண்ணு
 முணவுமா றுட்டஞ் செய்த
லயிர்ப்பிலா நண்பர் மாட்டு
 மமைதரக் குய்யஞ் செய்தல்
புயிர்ப்புமிக் குறநல் லோரைப்
 பழித்தல்பொய்க் கரியு ரைத்தல்
செயிர்ப்பிலா லயத்தி டத்துஞ்
 சென்றுபட் டிமைமி யற்றல்.

இவைமுதற் பலவு மாந்த
 ரியற்றிநாள் கழியா நிற்ப
ரவையெலாம் பொருணி மித்த
 மாகுமப் பொருளைப் பெற்றுற்
குவையுறப் புதைத்து வைத்துக்
 குதுகுதுப் படைந்து காத்து
நவையுறு பணப்பே யென்னு
 நாமமும் பெறுவர் மாதோ.

ஒருசிறு தரும மேனு
 முஞற்றிடா ரிரப்போர் வந்து
தருநிகர் கரத்தா யென்று
 சாற்றினுங் கொள்ளா ராகிக்
கருணைசற் றின்றி யெல்லை
 கடந்திடத் துரந்து மீள்வர்
மருவுபல் கிளையு மோம்பார்
 வளம்படைத் தென்பெற் றாரால்?

முறைதவிர் கொடுங்கோன் மன்னர்
 முனிவிற்கு நனியு மச்சங்
கறைகெழு கரவு செய்வார்க்
 கரத்திற்கு மழற்கு மச்ச
மறைவறு தாய மாக்கள்
 வெளவுவ ரென்று மச்ச
மறைபொருள் பெற்று ரல்லர்
 அச்சமே பெற்றார் போலும்

ஒல்லொழுக் கினரைத் தீய
 வொழுக்கரென் றுரைக்கச் செய்யும்
புல்லொழிக் கினரைத் தூய
 புலத்தரென் றுரைக்கச் செய்யு
நல்ல கற்புடைய மாதர்
 நலத்தையஞ் சாமை செய்யும்
பல்வகைத் துயருஞ் செய்யும்
 பாழ்ம்பொருள் பற்று ளார்க்கே.

பொருவறு பந்த மெல்லாம்
 புணர்த்திடுந் தெய்வ சிந்தை
யொருவமே லிட்டு நிற்கு
 மூறக்கமு மிறக்கச் செய்யுங்
கருவினுட் புகுத்து மின்னே
 கரிசுகண் டதனு லன்றோ
விருநிலத் திடைவெ றுக்கை
 யென்மனுர் புலமை சான்றோர்?

சிறியரே மதிக்கு மிந்தச்
 செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
 வாயுள்ளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும்
 பயிறரு செவிட ராவர்
குறிபெறு கண்ணு ளாருங்
 குருடராய் முடிவ ரன்றே!

பல்கதிர் விரித்துத் தோன்றிப்
 பாடுசெய் கதிரே போல
மல்லனீ ருலகிற் றேன்றி
 மறைந்திடு நும்மை விட்டுச்
செல்வமென் றுறுவ தற்குஞ்
 செல்வமென் றுரைக்கும் பேர்நன்
நல்லலை விளைப்ப தாக
 தரும்பெறற் செல்வம் பாவாய்!

விவேக போதினி

தொ. 11] காளயுக்திஸ்ரு ஆடிமீ [ப. 2

வாயிடத் துலகு

THE UNIVERSE IN A MOUTH.

"கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய வாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித் தாளுக்கங் காந்திட
வைய மேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே"

எவ்வுருவும் தானாகி விளங்கும் எம்பெருமானைத் துஷ்டவிஷயமூலமாக அடையும் பாக்யமிருந்தால், அவர்க்கும் நன்மையே யுண்டாகும் என்பதற்குப் பூதனையே சாட்சியாகும். முலைப்பாலை யூட்டித் தெய்வக் குழந்தையைக் கொல்லவந்தவள், தன்னுயிரையே கொடுத்துப் புனிதமானாள் எனில், அது ஓர் பெருமையாகுமன்றோ? மாயக்குழந்தையாக வளர்ந்துவரினும்,பாமரஜனங்களும் அதனது தெய்விகத்தை இடையிடையே அறியுமாறு அத்புதச் செயல்களை எம்பெருமான் செய்துகொண்டு வந்தது, உலகத்தில் நிலைநின்றுவந்த நம்பிக்கையில், அதாவது அக்காலத்து மீறிவிளங்கிய கொடுமையை ஒழிக்கக் கருணாகரக் கடவுள் உலகில் தாமே வந்து உதவிசெய்வர் என்ற நம்பிக்கையில், அப்பாமரர்கள் அசையாது நிலைப்பதற்கேயாம். யமுனையாற்றைக் கடக்கும்போதே வஸுதேவர் தமது குழந்தையின் பெருமையை எண்ணி அளவுகடந்த ஆச்சரியமடைந்தனர். ஆனால் யசோதை, நந்தகோபன் இவராதியர் தம்மிடம் வளர்ந்துவருங்குழந்தையின் பெருமையை யறிவதற்குப் பூதனையின் வரவே யிடந்தந்தது. ஒரு சிறுகுழந்தை விளையாட்டாகப் பாலுறிஞ்சும்போது, கொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன், பரு விஷத்தைத்தடவித்தந்தமுலைப்பாலையூட்டும்போது, பாலை யுறிஞ்சுவதுபோல் உயிரையே உறிஞ்சிவிடுமானால் அது குழந்தையோ? எதுவோ? விஷத்தை யுண்டு, தேக்கி விளையாடிக் கற்கண்டை வாயுட்கொண்டாற்போலக் களிக்கும் குழந்தை அது மனிதஜாதியைச்சேர்ந்ததுவோ? அல்லது விஷத்தைக்கடந்த பொருளோ? மரணத்தையற்ற வஸ்துவோ? எதுவோ? இவ்வெண்ணங்கள் யார் மனத்திலுதிக்கா?

பேய்ச்சி முலைப்பாலுண்ட கடவுட்குழந்தையையே யசோதை கவனித்தாள். ஆனால் அப்பேய்ச்சியுடல் கோராகாரமாக விளங்குவதைக் கண்ட கோபாலர்கள், அவளது சவத்தைக் கொண்டுபோய்க் கோடரிகளால் பிளந்து குவியலாகச் சேர்த்து, காட்டு விறகுகளுடன் அடுக்கித் தீமூட்டினர். அத்தீ வேகமாகப் படர்ந்து வீசியபுகை எங்குஞ் சூழ்ந்து சந்தனப் புகையைப்போல வாசனை வீசியது! இதுவும் ஓர் அற்புதம்போலும்! இந்நறுமணம் பூதனை புனிதையானாள் என்றுகோகுலத்தவரை எண்ணச் செய்ததென்றால் மற்றும் சொல்லவும் வேண்டுமோ? அப்பொழுதுதான் அங்கு வந்துசேர்ந்த நந்தகோபர் நடந்தவற்றை யுணர்ந்து, பேரன்புடன் குழந்தையை எடுத்து, உச்சிமுகந்து உள்ளங்களித்தனர். அதுவன்றோ பெற்றோர்க் காணும் பேரானந்தம்!

இவ்விஷயங்களெல்லாம் அத்தெய்வக்குழந்தையிடம் யசோதை கொண்ட அன்பை வளர்த்தே வந்தது. அவள் அக்குழந்தையின் கல்லா மழலைச் சொற்களையும், தளர்நடையையும், சிறு செயலையுங்கண்டு,

பொன்னியற் கிண்கிணி சுட்டி புறங்கட்டித்
தன்னிய லோசை சலன்சல னென்றிட
மின்னியன் மேகம் விரைந்தெதிர் வந்தாற்போல்
என்னிடைக்கோட்டரா அச்சோ! அச்சோ!
எம்பெருமான் வாரா வச்சோ! அச்சோ!

எனக்கூறிக் களிப்பள்; தன்னை மறந்து தனது குழந்தையின் மாயப்பெருமையில் ஆழ்ந்து கிடப்பனள். இவ்வாறே நித்தம் நித்தம் அவளும் அவள் காதலனும் அக்குழந்தையின் வைபவத்தி லீடுபட்டுக்கொண்டே யிருந்தனர்.

இப்படியிருக்க, குழந்தைக்கு முதல் ஜன்ம நக்ஷத்திர தினம் வந்தது. அந்நாள் அதற்குவேண்டிய யாவும் செய்து, நந்தகோபர் வீட்டிலிருந்தவ ரெல்லோரும் குதூஹலமாக

அக்காள் உடமை அரிசி, தங்கச்சி உடமை தவிடா ?

விருந்தனர். மஞ்சன மாட்டிய குழந்தையை ஒருபக்கமாக விட்டுவிட்டு, தானழைக்க வந்த ஸ்திரீகளைத் தகுந்தவிதம் மரியாதைசெய்து, யசோதை அவரவர்களை வீட்டிற் கனுப்பிக் கொண்டிருந்தாள். இந்த ஆடம்பரத்தில்அவள் குழந்தையைக் கவனிப்பதைச் சற்றே மறந்து கிடந்தாள். ஆனால் அப்போது குழந்தை யழுகையுடன் இடியிடித்தாற்போலச் சப்தமும் கேட்டது. "அகோ" என்றலறிக் கொண்டு யசோதை ஓடினாள்; "பால்குடிக்க அழும் குழந்தைக்கென்ன பிரமாதம் விளைந்து விட்டதோ?" என்று திகில் கொண்டே ஓடினாள். ஆனால் குழந்தைக்கு ஒருவிதக் கெடுதியையும் அவள் காணவில்லை. அதன் பக்கத்திலிருந்த வண்டிமாத்திரம் தலைகீழாகக் கவிழ்ந்து இருசு முறிந்து அச்சுவேறு ஆணிவேறாக வீழ்ந்து கிடந்தது. அதைக்கண்டதும் யசோதை பிரமித்து நின்றாள். பக்கத்திலிருந்த ஆயச்சிறுவர்கள் "அகோ! இக்குழந்தை உதைக்க இவ்வண்டி இக்கதியடைந்தது" என்றுசொன்னால் யசோதை எப்படி நம்புவள்? கண்டவர் சொன்னாலும்கூட, நேரில் காணாதவர் ஸந்தேகம் எப்படி ஒழியும்! ஆனால், கம்ஸன் ஏவலினால் சிறு வண்டிபோலவந்த அசுரன், அவ்விளங் குழந்தையின் சிறு சதங்கைக்கால் மெல்லிய உதைதாங்காது சிதறுண்டு போனானென்பது மாத்திரம் உண்மையிலு முண்மையே. கண்டாற்கது அதிசயத்தி லதிசயம். யசோதைக்கு மாத்திரம் பிள்ளைப்பித்தினால் அது ஏற்படவில்லை போலும்! அவள் அழுங்குழந்தையை எடுத்துத் தாலாட்டிச் சீராட்டி அநேகவிதரக்ஷைகள் செய்தாள். ஜகதேக ரக்ஷகனுக்கு ரக்ஷை செய்யும் பாக்கியம் யார்க்குக் கிடைக்கும்?

'தன்னைத் கொல்லவந்த குழந்தை கோகுலத்திலேயே வளர்ந்து வருகிறான்' என்னும் எண்ணம் கம்ஸன் மனதில் வரவரத் திடப்பட்டுக்கொண்டே வந்தன. பூதனை யழிந்ததும், வண்டி யுருவாச் சென்ற சகடாசுரன் முறிந்ததும் இவ்வெண்ணத்தை ஊர்ஜிதப் படுத்தியதல்லாமல், யசோதை யகத்தில் சிறு துயில் அமரும் சிறு குழந்தையே தனக்கு யமனாக வளர்வதாகவும் அவனை எண்ணச் செய்தன. தனக்குப் பகைவன் வளர்ந்து வரும் இடம் நிர்ணயமாகத் தெரிந்ததும் அவன் சும்மா இருக்கவில்லை. நல்லகாரியங்களுக் கேற்படும் பலவிக்கினங்களைப் போலப் பலவழியிலும் அக்குழந்தையை அவன் கொல்ல வழிதேடினான். அவ்வேவலுக்குட்பட்ட திருணாவர்த்த னென்னும் அசுரன் திடீரெனப் புயற்காற்றாய்க் கோகுலத்தில்புகுந்து, தாயருகிலிருந்த அக்குழந்தையை எடுத்துக்கொண் டாகாயத்தில் எழும்பினான்.

அப்பொழுதுதான் யசோதை தன் மடியிலிருக்கும் குழந்தை என்றுமில்லாதபடி அஸாதாரணமாய்அதிபாரமாக விளங்குவதாக எண்ணினாள்; அப்பாரத்தைத் தாங்க முடியாது ஏக்கத்துடன் அதைக் கீழேவிட்டனள். வந்த புயற்காற்று, கல்லையும் மண்ணையும் தூசியையும் வாரியிறைத்ததால், அவ்வசுரன் குழந்தையைக் கவர்ந்து போனதை யாரும் கவனிக்கவேயில்லை; கவனிக்கவுமுடியாது.

"தன்முகத்துச்சுட்டித்
தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணி
யார்ப்பப் புழுதி யளைகின்றான்"

என்றுள்ளங் களிக்கும் யசோதை சற்றே விழித்துக்கொண்டு தன் குழந்தையைக் காணாது பரிதபித்தனள்; துக்கித்தனள்; அலறினள்; மெய்பதறினள். அப்போது கோகுலத்தவர் எல்லோரும் அவளுடன் துக்கித்தனர்.

ஆனால் அவ்வஸுரன், தன்னை மிகுந்த உயரம் எடுத்துப் போகும் வரையும், அக்குழந்தை ஒன்றும் செய்யாது சாந்தியும் அமைதியும் தவழ்ந்து விளங்கியது. எனினும், தனது நிறையை மாத்திரம் விருத்தியாக்கிக் கொண்டேயிருந்தது. மிக்கவுயரம் சென்றதும், அக்கடவுட் குழந்தை தனது பெரும்பாரத்தை அவ்வஸுரன்மேல் வைத்துத் தாக்கியது. பெருமலை போல் தன் மேல் அச் சிறு குழந்தை கனப்பதைக் கண்டதும் திருணாவர்த்தன் நடுங்கினான்; மேலும் அக்கனம் வரவர அதிகமாவதைக் கவனிக்க அவனுக்குப் பெரும் ஆபத்து வந்துவிட்டதென்ற பயம் ஏற்பட்டது. குழந்தையும் பயந்து கொண்டது போலக் காட்டிக்கொண்டு அவன் கழுத்தைக் கெட்டியாக இறுகக் கட்டிக்கொண்டது. அவன் என் செய்வான்? அக்குழந்தையை வீசி எறிய எவ்வளவோ முயற்சித்தான். அது ஏன் அவனைவிடும்? தன்னை யடைந்தவரை விடும் வழக்கம் அதற் கென்றேனு மிருந்ததுண்டா? நிற்க, அக்குழந்தையை விடவும்

அகோர தவசி,விபரீதசோரன் :: அகோர தவசி விபரீத நிபுணன்.

முடியாது, வைத்துக் கொள்ளவு முடியாது, திருணாவர்த்தன் கைகால்களை உதறிக்கொண்டு பதறிக்கொண் டிருந்தான். மற்றுக் கழுத்தை யிறுக்கிய குழந்தையின் கைகளோ சிறிதும் தளராது முறுக்கிக்கொண்டே யிருந்தன. அவன் மூச்சுத் திணறியது;கண்விழி பிதுங்கிக் கலங்கியது. குழந்தையின் அளவுகடந்தபாரமும், தன் நிறையும், தன் கைகால்களை உதறிக் கொள்ளும் வேகமு மிழுக்க, அலறிக்கொண்டு, அவன் பெரிய மலைபோலப் பூமிமேல் உயிரற்று விழுந்தான். மலைமேற் கிளம்பும் செழுஞ் சுடர்ப் போல அம்மாயக் குழந்தை அவன் மார்பின் மேல் தவழ்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட கோகுலத்தார் ஆச்சரிய மடைந்து, "அஹோ! இக்குழந்தை பிழைத்தது அற்புதம்! அற்புதம்!" என்று வாயார வாழ்த்தினர். யசோதையோ அக்குழந்தையை ஓடோடியும் வந்து எடுத்துச்சிமுகந்து முத்தமிட்டு மார்போடணைத்துக் கொஞ்சிவிளையாடி மெய்ம்மறந்து,

"நாள்க ளோரைந்து திங்க ளளவிலே
தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள்கொள் வளையெயிற் றாருயிர் வவ்வினான்
தோள்க ளிருந்தவா காணீரே!
சுரிகுழலீர் வந்து காணீரே!"

எனக் கொண்டாடினள். நந்தகோபன் மாத்திரம் "அந்த வஸுதேவர் மஹான் மஹானே! அவர் அப்போதே எச்சரித்தனரே! அவர் வருங்கால ஞானமுடையவர். இக்குழந்தையே பெரியவனாகிப் 'போரொக்கப் பண்ணி யிப் பூமிப்பொறை தீர்ப்பான்!' இது நிச்சயம்" என எண்ணி எண்ணி வியந்து கொண்டிருந்தான்.

ஏன் யசோதை மாத்திரம் தன் குழந்தையின் தெய்விகத்தை நம்பாது கிடந்தனள்? அதற்கு அவள் தன்குழந்தையிடங் கொண்ட அளவு கடந்த ஆசையே காரணமோ? அல்லது அதன் தெய்விகத்தை யுணர்ந்துவிட்டால் அதனிடம் அன்பு நீங்கி, அச்சமும் மரியாதையும் ஏற்பட்டுவிடுமெனத் தாயன்பின் பெருக்கைக் காட்ட எம்பெருமான் செய்த லீலா விசேஷமோ? எதுவாயிருக்கலாம்?

ஆனால் ஒருநாள் என்றிலுமதிக ஆதரவுடன் யசோதை தன் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தனள். தன் மடிமீது தவழ்ந்து ஒரு கையால் சிறு குறும்பு செய்து, மறுகையால் பிடித்துப் பாலுண்ணும் குழந்தையின் திவ்விய வைபவத்தை அனுபவித்து,

"வைத்த நெய்யும் காய்ந்த பாலும்
வடிதயிரும் நறுவெண்ணெயும்
இத்தனையும் பெற்றறியேன்,
எம்பிரான்! நீபிறந்தபின்னை
எத்தனையும் செய்யப் பெற்றாய்
ஏதும்செய்யேன் கதம் படாதே
முத்தனைய முறுவல் செய்து
மூக்குறிஞ்சி முலையுணாயே!
ஓடவோடக் கிண்கிணிக
ளொலிக்கு மோசைப் பாணியாலே
பாடிப்பாடி வருகின்றாயைப்
பற்பநாப னென்றிருந்தேன்
ஆடியாடி யசைந்தசைந்திட்
டதனுக்கேற்ற கூத்தையாடி
ஓடியோடிப் போய்விடாதே
உத்தமாநீ முலையுணாயே!"

எனத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டதனிடம் கொஞ்சிக்கொஞ்சித் தன் முலைப் பாலமுத மூட்டினாள். அவ்வன்பின் மிகுதியால் பாலுண்டு திருப்தி யடைந்த அந்தக் குழந்தை பால்குடிப்பதை விட்டுத் தன் தாய் முகத்தைப் பார்த்துச்சிரித்துக் கைகளை முறுக்கிக்கொண்டு கொட்டாவிவிட்டது. அப்போது யசோதை என்ன காட்சி கண்டனள்! என்ன ஆச்சரியமது! அண்டபிண்ட சராசரங்களும், அகிலபுவனங்களும், சூர்யசந்திராதிச் சுடர்களும், நக்ஷத்திரங்களும், காற்றும் புகையும், மலையுங்கடலும், நாடும்நகரமும், ஆறுகளும் காடுகளும்இவைமுதலாய தாவரஜங்கமங்களும் சராசிகளும்,பல்லுயிர் ஆக்கமும் பெருக்கமும் அழிவும் ஆகிய ஸர்வஜீவ சிருஷ்டியின் வைபவங்களையும்அச்சிறு வாயுள் ஒடுங்கி விளங்கக் கண்ட அவள் கண்கள் ஏன் திகைக்காதிருக்கும்? அக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட, கேவலம் தாயாசையிற் பதிந்து விளங்கும் அவள் ஏன் பயங்கொள்ளாள்? அக்கண்விண்ட கோலத்தைக்கண்ட அவள், மயங்கித்தன்கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டாள். மாயையே யல்லவா உண்மையை யறியவொட்டாதெப்போதும் தடுப்பது? யசோதை கண்ணைத் திறந்தாள். குழந்தையும் அதற்குள் வாயை மூடிக்கொண்டது; அக்காட்சியு மறைந்தது; யசோதைக்கு அக்குழந்தை அற்புதக் குழந்தை என்ற நினை வழிந்தது. அக்குழந்தையின் தெய்விகத்தை அவளுணராததற் கிப்போதாவது காரணந் தெரிய வருமென்? அது எதுவோ?

புளியம் விதையை கால்நடைத் தீவனமாய் உபயோகித்தல்

TAMARIND SEEDS AS FOOD FOR CATTLE

இவ்விந்து தேசத்திலுள்ள மரவர்க்கங்களில் மிகவும் உபயோகமுள்ளதும் பார்வைக்கு அழகுள்ளதுமான மரங்களில் புளியமரம் ஒன்று. இம்மரத்தை அநேக இடங்களில் தோப்புகளாயும், சாலை யோரங்களில் சாலை மரங்களாயும் பயிராக்கும் வழக்கம் எங்கு மிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இம்மரம் விதைபோட்டு உண்டாக்கியபின், அநேகமாய் ஜலமில்லாமல் வளரக்கூடிய சக்தியுடையதால், இதை அநேக இடங்களில் தோப்புகளாய் உண்டுபண்ணி யிருக்கிறார்கள். இத்துடன் இதன் இலை, பூ, காய், பழம் ஜனங்களுக்கு மிகவும் உபயோகமுள்ளவைகளாயும், அதன் பழத்திலிருந்து எடுக்கும் புளி நமது ராஜதானியிலுள்ள ஏழை முதல் மகாராஜாவரையுள்ள எல்லோருக்கும் தினசரிச் சாப்பிடும் காய்கறி குழம்பு ரசம் முதலாகிய பதார்த்ததங்களின் சமையலில் ஏராளமாய் உபயோகப்படுத்தப்படுகிறது எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். ஆகவே, இம் மரம்ஜனங்களுக்குப்போஜன விஷயங்களுக்கு இன்றியமையாத புளியைக் கொடுப்பதுடன், சாலைகளிலும் தோப்புகளிலும் வேண்டிய நிழலைக் கொடுத்து உபகாரப்படுகிறது. இதன் விறகும், ஜாஸ்தி உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடிய விறகுகளில் சேர்ந்ததால், இம்மரம் பட்டுப் போனபின் சூளைகளுக்கும் அடுப்பெரிக்கவும் உபயோகப் படுவதுடன், இம் மரத்தின் வைரப்பாகத்திலிருந்து உலக்கைகள், செக்குகள் முதலாகியவைகளும் செய்யப்படுகின்றன. இம்மரம் ஸாதாரணமாய்ச் சித்திரை வைகாசி(ஏப்பிரல், மே) மாதங்களில்புஷ்பித்துக்காய்த்து, மார்கழி (ஜனவரி) மாதத்தில் அக் காய்கள் பழுக்கும். சாதாரணமான ஒரு பெரிய மரத்திலிருந்து சராசரி 400 முதல் 500 இராத்தல்வரை புளி எடுக்கக்கூடும். இப்புளி இந்தத் தேசத்தில் சமையல் கறி துவையல் முதலியவைகளுக்கு உபயோகப் படுவதுடன் ஏராளமாய் மற்றப் பிராந்தியங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மரங்களிலிருந்து எடுத்து விற்கத் தயாராயிருக்கும் புளியம் பழங்களை எடுத்து அதில் எவ்வளவு தோல், புளி, விதை முதலாகியவைகள் கிடைக்குமென்று கணக்கிட்டபோது, 100 இராத்தல் உலுக்கிய பழங்களில் 55 இராத்தல் புளியும், 34 இராத்தல் விதையும், 11 இராத்தல் நரம்பு முதலியவைகளும் கிடைத்திருப்பதாய்க் கணக்கிட்டிருக்கிறார்கள். புளிய மரங்கள் ஏராளமாயிருக்கு மிடங்களி லெல்லாம், பழங்களிலிருந்து புளியை அப்புறப்படுத்திவிட்டு, விதைகளைத் தூர எறிந்துவிடும் வழக்க மிருந்துவருகிறது. இப்படித் தூரத்தில் எறிந்துவிடும் விதைகளைச் சில ஏழை ஜனங்கள் வறுத்து, பஞ்சகாலங்களில் சாப்பிடுகிறார்க ளென்பது நமக்கெல்லோருக்கும் தெரிந்த விஷயம். சிலர் இதைச் சாதாரண காலங்களில்கூட, வறுத்துச் சாப்பிடுகிறதை நாம் பார்த்திருக்கிறோம். இவ்விதைகளுக்குச் சாதாரணமா யாதொரு விலையும் கிடையாது. ஆனால் இவ்விதைகளிலிருந்து பசைசெய்து, காகிதப் பெட்டிகள் முதலியவைசெய்பவர்கள், இவ்விதைகளைப் பொறுக்கிக் கொண்டுவந்து கொடுப்பவர்களுக்கு ஏதோ இனாம் கொடுப்பதுண்டு. கிருஷ்ணா ஜில்லாவில் மாத்திரம் இவ் விதைகளை அற்பவிலைக்குவிற்றுக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் இவ்விதையைச் சாப்பிடுமுன், வறுத்தாவது அல்லது வேகவைத்தாவது மேல் தோலை நீக்கி, உள்ளிருக்கும் பருப்பைத் தின்பதுண்டு. சிலர் இந்தப் பருப்பிலிருந்து மாவுசெய்து, அதை ரொட்டிகளாய்ச் செய்துசாப்பிடும் வழக்கமுமுண்டு. இவ்விதையிலிருந்து செய்யும் பசையைப் புஸ்தகங்கள் பயிண்டு செய்வதிலும், செருப்பு முதலிய பாதரக்ஷைகள் செய்வதிலும் உபயோகப்படுத்தி வருகிறார்களே ஒழிய, வேறு விஷயங்களில் உபயோகப்படுத்தி வருவது எல்லாருக்கும் தெரியாது. திருநெல்வேலிஜில்லா தென்காசித் தாலுக்காவிலும், செங்கோட்டை முதலிய இடங்களிலும் இவ்விதைகளைச் சந்தைகளில் கொண்டுவந்து விற்கிறார்கள். சிலர்இதைமாட்டுத்தீவனத்திற்காகவும் உபயோகப்படுத்துகிறார்களென்று தெரியவருகிறது. சாதாரணமாய்ப் புளியம்பழம் அகப்படும் காலங்களில், விதைகளை ஏராளமாய் வாங்கி அவற்றைச் சட்டியில் போட்டு வறுத்து, சாக்குகளில் கட்டிவைத்துக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்வதில்,

புளியம்விதைகள் லேசில் புழுத்துப்போகாமல் அப்படியே இருக்கும்சக்தியை அடைகின்றன. அப்பால் தினசரிவேண்டிய அளவு புளியங்கொட்டையைஎடுத்து உரலில்போட்டுக்குத்தித்தோல்நீக்கிப் புடைத்துஉள்பருப்பைச்சுமார் 20 மணிநேரம் ஊரப்போட்டுவைத்து மாடு ஒன்றுக்கு பட்டணம்படி அரை வீதம் வைத்தால்மாடுகளுக்குப்பிண்ணுக்குபருத்திக்கொட்டை முதலியவைகள் வைக்கவேண்டுவதில்லை. முதல் முதல் மாடுகள் இதைத் தின்று வழக்கமாகிறதற்காக, பருத்திக்கொட்டை, கொள், அல்லது பிண்ணுக்கு முதலிய தீவனப் பொருள்களை ஊரப்போட்டு, அந்த தண்ணீரை மாடுகள் குடித்து வழக்கம் வந்த உடனே இப்புளிய விதைகளை மாத்திரம் தனியே ஊரப்போட்டு வைத்து வருகிறார்கள். புளிய விதையை, ரசாயன பரிசீலனம் செய்து பார்த்து ஹூப்பர் என்பவர் மாட்டுத் தீவனத்துக்கு வேண்டிய உயர்ந்த உணவுப் பொருள்கள் அதிலிருப்பதாகக் கண்டிருக்கிறார்.

மேலும், இப்புளிய விதையையும் பருத்திக்கொட்டையையும் ரசாயன பரிட்சைசெய்து பரிசீலனம் பண்ணி இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தால், புளியம் விதையிலுள்ள அம்சங்கள் அநேகமாய்ப் பருத்திக்கொட்டையிலுள்ளவைகளுக்குத் தாழ்ந்திருக்கவில்லை யென்றூகிக்கவேண்டியதாயிருக்கிறது. புளியம்விதை தற்காலத்தில் பொதி ஒன்றுக்கு ரூபாய் 2-க்குள் கிடைக்கிறது. ஆனால் பருத்திவிதையின் விலையோ ரூபாய் பத்துக்குக் குறைகிறதில்லை. ஆகையால் புளியம்விதை பருத்திவிதையைப் போலச் சத்துள்ள கால்நடைத் தீவனமாயிருந்தபோதிலும், விலை சரசமாயுள்ளதால் அதை எல்லாரும் கையாடக்கூடிய வஸ்துக்களில் ஒன்று. இந்த விதையைத் திருநெல்வேலி ஜில்லாவின் சில பாகங்களிலும் மலையாளத்தில் செங்கோட்டை முதலிய சொற்ப இடங்களிலும் மாத்திரம், கால்நடைத் தீவனமாய்த் தற்காலம் உபயோகப்படுத்துகிறார்கள்.

ஒரு கால்நடைத் தீவனத்தின் கிரயம் அந்தத் தீவனத்தின் உபயோகம் நல்லதென்று தெரியும்வரைதான் சரசமாய் இருக்குமே தவிர, தெரிந்தபின் கிரயம் ஜாஸ்தியாய்விடும். நமது அனுபோகத்தில் மணிலாக்கொட்டைப் பிண்ணுக்கு 1875-ம் வருஷத்தில் 500 இராத்தல் கொண்ட பாரம் ஒன்றுக்கு ரூ. 5-க்கு மேல்படாமல் வாங்கியிருக்க, தற்காலத்தில் அது ரூ. 13 முதல் 15 வரையும் விற்கிறது. 1875-ம் வருஷத்தில் இப்பிண்ணுக்கைக் கால்நடைத் தீவனமாய் உபயோகப்படுத்தலாமென்று காலஞ்சென்ற ராபர்ட்ஸன் துரையவர்கள் சைதாப்பேட்டை விவசாய காலேஜ் வருஷாந்தர ரிபோர்ட்டுகளில் எழுதியதை ஜனங்கள் நம்பாமல், அதைக் கால்நடைகள் தின்றால் கெட்டுப் போய்விடுமென்றும் கண்தெரியாதென்றும் சொன்னார்கள். ஆனால் தற்காலத்தில் அநேகர் அதைக் கால்நடைத் தீனியாய் இத்தேசத்திலும், அயல் தேசங்களிலும் உபயோகித்து வருகிறார்கள். இதேமாதிரி தற்காலத்தில் கோட்டை ஒன்றுக்கு அதாவது பட்டணம் படி 112-க்கு ரூபா 3 வீதம் விற்கும் புளியம் கொட்டை, இனி சில வருஷங்களுக்குள் மும்மடங்கு ஜாஸ்தி கிரயத்திற்கு விற்குமென்பதில் சந்தேகமில்லை.

கல்விக் குறிப்புகள்

Educational Notes

மைஸூரில் கீழ்த்தர ஜாதியாரின் கல்வி.

மைஸூர் ஸர்வ கலாசாலைக்குள்பட்ட பள்ளிக் கூடங்களில் பிரதம வகுப்புக்களில் படிக்கும் 'கீழ்த்தர' ஜாதிப்பிள்ளைகளின் சவுகரியத்துக்காக எழுபது வித்யாவிர்த்தி (Scholarship)கள் கொடுக்கப்படுகின்றனவென்பதைக் கேட்டு நாம் சந்தோஷிக்கிறோம். அவைகள் ஒவ்வொன்றும் மாதம் பத்து ரூபாய் அளவினதாய்ச் சென்ற ஜூலை மாதம் 1௳ முதல்கொடுக்கப்படுமெனவும்தெரிகின்றது. அவைகளில் 18 விர்த்திகள் லிங்காயதர்களுக்கும், 12 விர்த்திகள் மகம்மதியர்களுக்கும், 6 விர்த்தி பணஜிகர்களுக்கும், 5 விர்த்தி வொக்கலிங்கருக்கும், பாக்கியுள்ளன வேறு பத்தொன்பது வகுப்பினருக்கும் கொடுக்கப்படுகின்றன. நமது மாகாணத்திலும் புத்திவன்மையில் முதிர்ச்சியடையாத வகுப்பார்க்கு வித்யாவிர்த்தி கொடுக்கப்படுகிறது என்பதை அபிமானிகள் அறிவார்கள். வித்யா விஷயமாக எவ்வளவு தூரம் சவுகரியம்செய்து கொடுத்தபோதிலும் நன்மைதான்.

* * *

பர்மா ஸர்வ கலாசாலை.

இந்திய மாகாணங்களில் ஒன்றாகிய பர்மாவுக்குப் பிரத்யேகமாக ஒரு ஸர்வ கலாசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டியதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றனவென்பது அபிமானிகளுக்குத் தெரிந்திருக்கலாம். அது விஷயமான மசோதா ஒன்று சீக்கிரம் இராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் கொணரப்படும். முதன்முதல் ரங்கோன்காலேஜும், பாப்டிஸ்ட் காலேஜுமே ஸர்வ கலாசாலையைச் சேர்ந்த காலேஜ்களாக இருக்கும். ஸர்வகலாசாலை ஏற்படும்போது வேண்டியிருக்கும் சிப்பந்திகளைப்பற்றிய கணக்கு ஒன்று தயார் செய்யவேண்டியதற்காக அந்த மாகாணத்து லெப்டினண்டு கவர்னர் ஒரு கமிட்டி ஏற்படுத்தி, விஷயங்களைத் தீர விசாரிக்கும்படி செய்திருக்கின்றனர். பாடங்களின் கிரமம், பரீக்ஷைதோரணை, யோக்கியதா பத்திரங்கள், வேறு விதமான வித்யாபட்டங்கள், சிப்பந்திகளின் ஸங்கியை, ஸன்மானம், யோக்கியதை முதலியவைகளைப்பற்றி இந்தக் கமிடியார் விசாரித்துத் தீர்மானம் எழுதுவார்கள்.

* * *

உஸ்மானிய ஸர்வ கலாசாலை.

ஹைதராபாத் ராஜ்யத்தில் "உஸ்மானிய ஸர்வ கலாசாலை" என்ற பேருடன் ஒரு ஸர்வ கலாசாலை ஏற்படப் போகிறதென்பதையும் அதில், உர்து பாஷை மூலமாகவே கல்வி கற்பிக்கப்படுமென்பதையும் அபிமானிகள் அறிந்திருக்கலாம். அதற்கு வேண்டிய புஸ்தகங்களை இங்கிலீஷ் பாஷையிலிருந்து உர்து பாஷையில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கின்றனர் என்ற சமாசாரம் நமக்கு எட்டுகின்றது. அடுத்த அக்டோபர் மாதம் முதல் காலேஜ் வகுப்புக்கள் தொடங்கும். பிரதான உபாத்தியாயர் (Principal) ஒருவர் 1,000 ரூபா சம்பளத்தில் அமர்த்தப்படுகிறார். அவருக்கு மாதமொன்றுக்கு 500 ரூபா உதவிப்பணமாகவும் கொடுக்கப்படும். 500ரூபாவில் தொடங்கி 1,000ரூபாவில் முடியும் பதினொரு உபன்யாஸகர்களும், 50-600ரூபாவில் பதினொரு உதவி உபன்யாஸகர்களும் நியமிக்கப்படுகிறார்கள். வருஷமொன்றுக்கு அதமபக்ஷம் 1,18,800ரூபா செலவாகுமென்றும், உயர்ந்தால் 2,19,600ரூபாவுக்குமேல் செலவுபோகாதென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே புஸ்தகங்கள் வாங்குவதற்காகக் 65,500ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. இதே விஷயத்துக்காக வருஷவாரியில் 10,780 ரூபா கொடுபடவும் ஏற்பாடு ஆயிருக்கிறது.

இந்த உஸ்மானிய ஸர்வ கலாசாலையார் நடத்திய 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷை நாளது மாதத்தில் நடைபெற்றது. 500 வித்யார்த்திகள் பரீக்ஷைக்கு வந்திருந்தனர்.

இந்தியாவில் உள்ள மற்றைய ஸர்வ கலாசாலைகளில் காணப்படும் சீர்கேடுகளும் துர்த்தசைகளும் இந்த உஸ்மானிய ஸர்வ கலாசாலையில் நிகழாமலிருக்கும்படி அங்குள்ள அதிகாரிகள் ஜாக்கிரதை எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறோம். விஷயங்களைப் பிள்ளைகள் கிரகித்துக் கொள்வதுதான் கல்வியின் முதல் நோக்கம். பரீக்ஷையில் அநேக மாணாக்கர்களைத் தேற வொட்டாமல் செய்யும் கேள்விகளைக் கேட்பதுதான் வித்யா விஷயத்தின் சிறப்பென்று கொள்வது பெருந்தவறு.

* * *

பிரதம உபாத்தியாயர்களின் மஹாநாடு

உயர்தரப் பள்ளிக்கூடங்களில் தலைமை வகிக்கும் உபாத்தியாயர்கள் நாளது மாதத்தில் சென்னை, திருவல்லிக்கேணி, ஹிந்து ஹைஸ்கூல் கட்டடத்தில் கூடினார்கள். 31 உபாத்தியாயர்கள் வந்திருந்தனர். ஸ்ரீமான்ராவ் பஹதூர், எஸ் அப்புசாஸ்திரியாரவர்கள் தலைமை வகித்தனர். வித்யாவிஷயமாய்ச் சிரத்தை யெடுத்துக் கொள்ளும் இவர்கள் கீழ்க்கண்ட முக்கியமான தீர்மானங்களைச் செய்திருக்கின்றனர். அவையாவன: நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்கு இன்னும் ஜாஸ்தியான சம்பளம் கொடுபடவேண்டும்; பிரவேசபரீக்ஷையில்ஒரு பாகம் தவறிய மாணாக்கன் அடுத்த தடவை பரீக்ஷைக்குப் போகும்போது, அவனிடமிருந்து முழுக்கட்டணமான 12 ரூபாவை வாங்

காமல் பாடத்துக்குத் தகுந்த குறைந்த விகிதமான கட்டணத்தை வாங்கவேண்டும்; ஸ்கூல் பைனல் பரீக்ஷாதிகாரிகளில் பள்ளிக்கூடங்களில்கல்விபோதித்துவரும்உபத்தியாயர்களின் ஸங்கியை அதிகமாக வேண்டும்; நடுத்தரப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களில் சிலர் ஸர்வ கலாசாலேச் சங்கத்தில் அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்; கைத்தொழிலே அபிவிர்த்திசெய்வதற்கான தொழிற் பள்ளிக்கூடமொன்று சென்னேயில் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படவேண்டும்; ஸ்கூல்பைனல் பரீக்ஷைக்கு ஏற்படும் புஸ்தகங்கள் இன்னின்னவை யென்று ஒவ்வொரு வருஷத்திலும் மே மாதத்திலேயே வெளியிடவேண்டும்; இங்கிலாந்தில் உள்ளதைப்போல இங்கும் கைத்தொழில் முதலிய விஷயங்களில் சிரத்தைகாட்டி உழைக்கும் பள்ளிக்கூட அதிகாரிகளின் முழுச்செலவையும் கவர்ன்மெண்டார் ஒத்துக்கொடுக்கவேண்டும்;— என்பனவே.

மஹாநாடு முடிவில், வித்யா இலாகா அதிகாரியான ஸ்ரீமான் ஸ்டோன் துரையவர்களே வரவேற்றி உபசரித்ததுடன் ஸபை கலேந்தது. அடுத்த மஹாநாடு அடுத்த வருஷம் அக்டோபர் மாதத்தில் கூடும்.

* * *

கல்வியும் ஐரோப்பிய யுத்தமும்

ஐரோப்பிய யுத்தம் காரணமாகப் பணத்தட்டுப் பாட்டால் நமது நாட்டில் தள்ளிவைக்கப்பட்டிருக்கிற பற்பல விஷயங்களில் வித்யாவிஷயமாகச் செய்ய வெண்ணிய சில சீர்திருத்தங்களும் அடங்கும். ஆனல் இந்த யுத்தம் பிற நாடுகளில் வித்யா விஷயமான முயற்சிக்குக் குறுக்கே நிற்கவில்லே. இங்கிலாந்தில் வித்யாமந்திரியான ஸ்ரீமான் பிஷர் (Fisher) பார்லிமெண்டில் கொண்டு வந்த மசோதாவைப்பற்றி முன்பு ஒரு சஞ்சிகையில் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறேம். பிரான்சுத் தேசத்தில் பிள்ளேகளுக்கு இருபது வயது வரையிலும், பெண்களுக்குப் பதினெட்டுவயதுவரையிலும்கல்வி கட்டாய மாக்கப்படுவதற்கான மசோதாவொன்று சட்டசபையில் இருக்கிறது. ஜர்மனி தேசத்திலும் கல்வியை விஸ்தாரமாக்குவதற்கான ஏற்பாடு வெகுதூரம் வரையிலும் விருத்தியடைந்திருக்கிறது. ருஷியாதேசத்தில் புதிய பள்ளிக்கூடங்கள் தலேகாட்டுகின்றன. இதாலி தேசத்தில் கல்வியைக் கற்காத யுவாக்களுக்கு வேண்டிய வித்யா சவுகரியத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. போலண்டு தேசம் வெகு சிறியது. இந்த யுத்தத்தில் அதற்குத் தற்காலிகமான சுயேச்சை கிடைத்தது. அத்தருணத்தில் அங்கு பிரதமக் கல்வியை இலவசமாகவும், கட்டாயமாகவும் ஆக்கிவிட்டனர். யுத்தச் செலவு ஒரு புறமிருக்க, செலவோடு செலவாய், கல்வி விஷயத்திலும் நமது கவர்ன்மெண்டார் கவனம் செலுத்திப் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேம்.

* * *

ஸ்திரீகளும் வித்யா இலாகவும்.

பம்பாய் மாகாணத்தில் எல்பின்ஸ்டன் கலாசாலேயில் தேச சரித்திர பாடத்துக்கு மிஸ் மார்ஜரி மாய்னெட் என்ற ஸ்ரீமதி உபந்யாஸிகையாக நியமிக்கப் பட்டிருக்கிற சங்கதியை அபிமானிகள் அறியவேண்டுகிறேம். இதுவரையில் இந்தியாவில் இப்படிப்பட்ட நியமனம் செய்யப்படவில்லே. ஸர்வ கலாசாலேப் பரீக்ஷைகளில், புருஷர்களே ஒப்பந்தம், "பாஸ் செய்த" ஸ்ரீமதிகளுக்கு அப்புருஷர்களுக்குக் கொடுபட்ட சுவாதந்திரியம் இதுவரையில் கொடுபடாமலிருந்தது அநியாயம் என்றே நாம் சொல்வோம். இப்படிப்பட்ட நியமனத்தினுல் எங்கே ஸ்திரீகள் "போட்டியாக" வந்துவிடுவார்களோ என்ற சங்கை புருஷர்களுக்கு இருக்கவேண்டியதில்லே. உபாத்தியாயர்களும் உபன்யாஸகர்களும் அடங்கிய கோஷ்டியில் ஸ்ரீமதி ஒருத்தி இருப்பாளானுல் அக்கோஷ்டிக்குப் பிரத்யேகமான சோபையுண்டாகும்.

நிற்க, நமது மாகாணத்தில், இந்திய ஸிவில் ஸர்வீஸைச் சேர்ந்த ஒருவருக்குக் காலேஜில் உபன்யாஸக உத்தியோகம் கொடுப்பட்டதையும் அபிமானிகள் அறியவேண்டும். இதுவும் புதியநியமனம். மேற்கூறிய இரண்டு உதாரணங்களும் கல்வி விஷயத்தில் உண்டானதோர் நவீனக் கிளர்ச்சியைக்காட்டுகின்றன. வித்யாபிவிருத்தியின் பொருட்டேதான் இக்கிளர்ச்சியுண்டாயிற்றென்று நாம் நம்புகிறேம்.

* * *

தாய்ப்பாஷையில் கல்விப்பயிற்சி

EDUCATION IN VERNACULARS

[மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பதினேழாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்து அக்கிராசனர் திருவனந்தபுரம் ஹைகோர்ட் ஜட்ஜ் ம-ா-ா-ஸ்ரீ கே. ஜி. சேஷய்யரவர்கள் செய்த உபந்யாஸம்.]

சங்கப் புலவரொடு தாமிருந்து தண்டமிழைத்
துங்கம் பெறப்புரந்த சுந்தரின்—பங்கசத்தாள்
சென்னிமிசை வைப்பாஞ் செந்தமிழ்நம் சங்கமிது
மன்னி வளரும் பொருட்டு.

பல்கலேயாயும் பல்சான்றீரே!

நும்மனேர் குழுமிய இவ்வவையின்கண் தலேமை யேற்றுக்கோடற்குரிய பண்பும் ஆற்றலும் ஒரு சிறிது மில்லேனுயினும், தமிழன்னேயின்பால் யான் கொண்டுள பேரன்பும், இம் மதுரைச் சங்கம் புரப்பவராய்ச் செந்தமிழ் வளர்க்கு முரிமையும் போற்றுந் திறனும் பெற்றுப் புகழ்வாய்ந்த மாண்பரும் என் நண்பருமாகிய கௌரவம் பொருந்திய ஸ்ரீமான் இராஜாதிராஜ முத்துவிஜய ரகுநாத ராஜ ராஜேச்வர முத்துராமலிங்க சேதுபதி மன்னரது ஆணேயை மறுக்க வலியின்மையுமே என்னே இப்பெரும் பதவி வகிக்க இசைவித்தன. இப்பதவி வகிக்கும் வண்ணம் என்மாட்டுக் கௌரவம் காட்டின நமது சங்கத்தின் அக்ராசனுதிபதியவர்கட்கும் சங்கத்தைச் சேர்ந்த ஏனேயோர்கட்கும் எந்நன்றி செலுத்துவன்?

இன்றைத்தினம் ஆகஸ்டுமீ 4உ என்பதை நீங்கள் அறிவீர்கள். நான்கு வருடங்கட்கு முன்பு 1914ஹ இதே தேதியில் ஜயமானியர் துரைத்தனமுறை வழுவி, பெல்ஜிய ராஜ்யத்தில் கடக்க, பெல்ஜிய மன்னன் நம் சக்ரவர்த்திப் பெருமானிடம் உதவிவேண்ட, நம் காவலர் பெருமான் பெல்ஜியத்திற் குற்ற பேரிடரை நீக்கி, அச்சிறு ராஜ்யத்தின் சுதந்திரத்தை ஜர்மானிய அரசனது கொடுங்கோல் முறைமைக்கு இரையாகவிடாமல் மீட்டுதற்காக, தர்மப்போர் புரியத் தலேப்பட்டனரென்பது எல்லோரும் நன்கறிந்த விஷயம். தர்மமும் அதர்மமும் ஒன்றேடொன்று போர் புரிந்தால், அதர்மம் எவ்வளவு வலியுடையதாய்த் தோன்றினும், கடைசியில் தர்மமே ஜயிக்கும் என்பதற்கு மஹாபாரதப் போரே நற்சான்றுகும். மஹாபாரதப் போரோ பதினெண் தினங்களே நிகழ்ந்ததாகப் புராணம் கூறும். இக்கொடும் போரோ, இந்நான்கு வருடங்களாக ஓயாமுயற்சியுடன் செய்யப்பெற்றும் இன்னு முடியவில்லே. இதனுல் உலகத்திற்கு இதுகாறு மேற்பட்ட கஷ்டமும் நஷ்டமும் அளவிடற்பாலதல்ல. போர் நிகழுமிடமட்டுமன்றி உலகமுழுதுமே பலவாற்ருனும் கருங்கலியால் வருந்தித் துன்புறுவதை யாரே மனம்பதைக்காமல் நினைக்கவல்லார்! துஷ்டநிக்ரகமும் சிஷ்டபரிபாலனமும் உரிமையாகக் கொண்ட இறைவர்க்கிறையான பரம்பரனருளால் கடிதில் நம் ஆங்கில ஸாம்ராஜ்யமும் அத்துடன் ஐக்யங்கொண்டுள ராஜ்யங்களும் முற்றும் ஜெயம்பெற்று வெற்றிமாலேயை மேதகப் புனேந்து, வையகத்தின் துயர்தீர்க்க, இன்று ஆங்கில அரசாக்ஷிக்குட்பட்ட எல்லா நாடுகளிலும் ஜனங்களனேவரும் கடவுளே வேண்டுவராவார். நாமும் அவ்வண்ணமே தமிழ்க்கடவுளே யொருமனத்துடன் வேண்டுவோமாக! சீக்கிரத்தில் நம்மவர் இவ்வன்போரில் வெற்றமுறவும் உலகில் தீயவெலா மாழ்ந்து அறம்பொருள் இன்பம் பெருகவும் கடவுள் பூர்ணமாய் க்ருபைசெய்வாராக!

நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாவது ஆட்டைத்திருநாள் கொண்டாட இன்று கூடியிருக்கின்றேம். ஹிந்து தர்மசாஸ்திரத்தின்படி பதினுருவது வயதுமுடிய, வாலிபப் பருவம் நீங்கலாகும். பாலப்ராயத்தைவிட்டு யௌவனப்ராயத்தை இப்பொழுது இச்சங்கமடைந்திருக்கிறது. இப்பொழுது நீங்கின இளமைப்பருவத்தில் நம் சங்கம் செய்துவந்த பெருங்காரியங்கள் எத்துணேயென்பது இச்சங்கத்தால் வெளியிடப்பட்டுவருகிற செந்தமிப் பத்திரிகையாலும், சங்கம் பதிப்பித்துள்ள அரியநூல்களாலும் இனிதறியக்கிடக்கின்றது. 'தமிழ் நாட்டாரது இக்காலவாழ்வுக்கு அநுகுணமானவறிவையூட்டச், சங்கம்முயற்சிசெய்யவில்லே'யென்றுசிலர் குறைகூறுவது கேட்டுள்ளேன். "செந்தமிழ்"ப் பத்திரிகை வாயிலாக வெளிவரும்விஷயங்களும், சங்கம் பதிப்பித்து வெளிவிட்ட நூல்களும் பொதுஜனங்கட்கு உபயோகமற்றனவென்றும், அதனுல் சங்கத்தின் முயற்சிகள் தக்கவழியில் செலுத்தப்படவில்லே யென்றும் பழிகூறுவர் சிலர். ஆனுல்

இத்தகையோர் மனக்காட்சி விசாலமற்ற
தென்றே சொல்லவேண்டும். சின்னாள்முன்
தமிழ்ப் பாஷை யடைந்திருந்த நிலைமையை
யும் தற்பொழுது அதற்கு இச்சங்கத்தின்
காரணமாய் உற்றிருக்கும் ஸ்திதியையும் கவ
னித்தால் இம்மாதிரிப் பழிக்கூற்றிற்கு இட
மிராது. சங்கமேற்பட்ட காலத்திற்குமுன்
தமிழ்க்கலைஞர் பலருமிருந்தனராயினும்,அவர்
ஆங்காங்கு குடத்திலேற்றிய விளக்கைப்
போலப் பதுங்கிக் கிடந்தனர். தமிழபிமானி
களை ஒருவன் விரல்களால் கணக்கிடலாகும்.
பண்டைக்காலத்து வழக்கம்போல ஆசிரிய
னைத் தேடி மாணவர் கல்விகற்கப் போகும்
சம்பிரதாயம் இல்லாததால், நாட்டில் தமி
ழொளி மங்கலடைந்தே யிருந்தது. அக்கா
லத்து ஆங்கிலங் கற்றுவந்த ஆடவர் பெரும்
பான்மையரும் தமிழையுந் தமிழாசிரியனை
யும் அசட்டை செய்துவருவது வழக்கமா
யிருந்தது. 'அம்மையப்பிள்ளை'யை மாணவர்
கள் படுத்திய பாடுகள் யாரே அறியார்!
ஆகவே நாட்டில் நல்லாசிரியனை நாடித் தமிழ்
படிப்பாருமில்லை. பள்ளிக்கூடங்களில் பரீ
ைக்ஷகட்காகக் கற்பிக்கப்பட்டு வந்த தமிழ்க்
கல்வியும் பயனொன்றும் விளைக்காது வீணே
முடிந்தது. தமிழ்ப் பாஷையின் கிளர்ச்சியுங்
குன்றிவந்தது. செல்வாக்கும் குறைந்தது.
இத்தகை யிடரி லகப்பட்டு வருந்தும் தமிழை
வளர்க்கும்பொருட்டே ஸ்ரீமான் பாண்டித்
துரைத் தேவரவர்கள் இச்சங்கத்தை நிறுவி
யது. சுவையிலுங் கவித்திறத்திலும் பொருள்
விளக்கு மாற்றலிலும் ஏனைய பாஷைகளுக்
குச் சற்றும் குறையாத, தொன்று தொட்டு
வழங்கிவரும் நம் ஜீவபாஷைக்கு ஜனங்களின்
அனாதரவா லேற்பட்ட தள்ளாட்டத்தைப்
போக்கி, அதற்கு உயிரும் வலியும் பெருக்கி,
அபிமானத்தோ டெல்லாரும் அதைக்கொண்
டாடி, மேன்மேலும் அதன் மேன்மை
யோங்க முயற்சிசெய்யத் தூண்டி வருவது
இச்சங்கமன்றோ! இப்பேரவையிற் பண்
டித சிகாமணிகளும் தமிழபிமானிகளும்
ஒருங்கே கூடியிருக்கும் இவ்வானந்தக்காட்சி,
பதினைந்து வருடங்கட்கு முன் காண்ட
லெத்துணை அரிதாயிருக்குமென்பது சொல்ல
வும் வேண்டுமோ? தமிழ் ஏற்கனவே வனப்புந்
திறமும் பெற்று, தென்இந்தியாவின் பூர்வீக
நாகரீகத்திற்குச் சாதகமும் இருப்பிடமுமாகி
யிலங்கியதோடு, நாம் குழவிப்பருவமுதல் எங்
கும்யாண்டும் இன்பிலும் துன்பிலும் நம்தாய்ப்
பாஷையாகப் பயின்று வருதற்குரிய பாஷையா
யிருந்தும், சமீப காலத்திலேயே அதைச்சீரா
ய்ப்பேசுவதிலும்கற்பதிலும்பரப்புதலிலும்நாம்
ஆசைகொண்டவராய்க்காணப்படுகிறோம். இந்
தஸ்வபாஷாபிமானம் நம்மிடம் ஜனித்துவளர்
தற்கு இச்சங்கம்புரிந்த உதவி பெரிதேயாகும்.
இத்துடன் நில்லாது, அறிஞர் யாவரும் தம்மா
லீட்டப்பட்டுள்ள கலைஞானத்தைப்பலருமறிந்
துய்யச் "செந்தமிழ்"ப் பத்திரிகையில் வெளி
யிட இடங்கொடுத்துத் தமிழரின் ஞானப்பெ
ருக்கத்திற்கு ஏதுவாயும் நம் சங்கம் நின்றது.
பன்னாள் முன்னரே பதுங்கியொளித்த தொன்
னூல் பலவும் துலங்கப் பதித்துத் தமிழர்க்கு
மனமகிழ்ச்சி ஏராளமாய் ஊட்டி வந்திருக்கின்
றது. ஈண்டு வேறொரு விஷயமும் கவனிக்
கத்தக்கது.நம்பாஷையை மாணவர் மறந்திடச்
சர்வகாலசாலையார் வரையற்ற உபாயங்கள்
இப்பொழுது சிலவருடங்களாகச் செய்துவரு
கின்றனர். சின்னாள் முன்னர்ஆங்கிலக்கல்லூரி
களில் பெயருக்காவது தமிழ்ப்பாடங்கள் உயர்
தரப் பரீட்சைகட்கும் ஏற்பட்டிருந்தன. இப்
போழ்தோ அப்பட்டாங்கும் போய்விட்டது!
ஆங்கிலப் பயிற்சிக்குத் துணையாக லோஜர்மன்,
காதிக், முதலான பாஷைகளின் தத்வங்களை
யும் ரகசியங்களையும் படிக்க நேர்ந்த இவ்வவச
ரத்தில்,மாணவர் நாட்டுப்பாஷையான தமிழை
யும் படிக்க அவகாசங் கிடைப்பது எங்ஙனம்?
அதுபற்றியே தமிழ் முதலிய தேசபாஷை
கள் சர்வகலாசாலைப் பரீட்சைகளினின்று
முழுதும் நீக்கிவிடப்பட்டன போலும்! நம்
மாணவர்களிடையில் தமிழ் நடமாடாதிருத்
தல் போதாதென்று நினைத்து, உருது அல்லது
ஹிந்திபாஷையை நாம் பேசும் பாஷையாய்ச்
செய்துகொள்ளவேண்டு மென்றும் ஆங்கிலங்
கற்ற அற்புதர் அநேகர் தற்பொழுது கூறுவது
முண்டு. பல்லாற்றானும் இங்ஙனம் நம் அரும்
பெறலன்னையாம் தமிழ்மாதை அலங்கோலப்
படுத்த முயன்றுவரும் இத்தருணத்தில், நம்
சங்கம் ஆதிமுதல் ஆங்கிலக் கல்விச்சாலை
களிற் படிக்கும் மாணவர்கட்குத் தமிழ்ப் பரீ
ைக்ஷகள் ஏற்படுத்தி, விஜயிகட்குப் பரிசுகளு
மளித்து, தேசீய சிறுவரிடத்துத் தமிழின் சீர்

சிதையாமற் காத்து வருகின்றது. இவ்வருஞ்
செயல்கட்குத் தமிழ் நண்பர் யாண்டும் சங்கத்
திற்கு நன்றிபாராட்டுங் கடமைப்பா டுடைய
ராவார்.

இளம்பிராயத்தில் நம் சங்கம் நிறைவேற்றி
யது வியக்கத்தக்கதேயாயினும், மேல் அதற்கு
நேருங்கடமை சாலவும் பெரிதேயாகும். இக்
காலத்தில் பிராசீநாட்டார்கள்தம்முள்கிளம்பி
யிருக்கும் தேசீய வபிமான எழுச்சியால் ஏற்
பட்ட பலவிஷயங்களில் ஒரு முக்கிய விஷயம்,
தேசீய வித்யாப்பயிற்சி. நாகரீக நாடுகளென்று
மதிக்கக்கூடிய நாடுகளுள் இந்தியா நீங்கலாக
வேறெவ்வொரு நாட்டிலும் அத்தேசத்திய
பாஷையிலேயே கல்வி கற்பது வழக்கம். நம்
நாட்டில் மாத்திரம் தாய்மொழியைவிட்டுப்
பிறமொழியில் கல்வி புகட்டி வருகிறார்கள்.
அன்றியும் இங்கு நிகழும் போதனா முறையும்
விதேச முறை யென்றே கூற வேண்டும். நம்
நாட்டின் நன்மை வளர்ச்சிக்கு அம்முறையை
மாற்றவேண்டுமென்ற எண்ணம் சென்ற சில
காலமாக ஜனங்களின் மனதைப் பற்றியிருக்
கின்றது. இவ்விஷயத்தை ஆராய்ந்துள்ளோர்
யாவரும் நம் நாடு நலன் மிகப்பெற வேண்டு
மானால், நங்கலாசாலைகளிலும் ஏனைய பள்ளிக்
கூடங்களிலும் கல்விகற்கக் கருவியாக நடை
பெறவேண்டியவை நம் நாட்டுச் செம்மொழி
களே என்கின்றனர். எவ்வாறு பழக்கமில்லா
உணவைப் புகட்டினால் அது சீர்ணமாகாது
தேகத்திற்கு அஹிதம் விளைக்கின்றதோ,
அதுபோல பிறமொழிவழிக் கல்வி யூட்டப்
பெற்றால் அது நமக்குரியதாய் நிலைத்துப் பய
னளிப்பதில்லை என்பது அவர்கள் திண்ண
மான கொள்கை. 'கல்வியினாங்கில்லை சிற்று
யிர்க் குற்றதுணை' என்று கூறியது ஆங்கில
மொழிவழிக் கற்கும் கல்வியை மாத்திரந்
தானா உத்தேசித்துக் கூறியது? நம் நாட்டார்
பலரும் ஆங்கிலத்தில் கல்வி பயில ஆற்றலற்
றவர்களாயிருக்கிறார்கள். அவர்கட்குப் புத்தி
நுட்ப மெவ்வளவுதான் இருந்தபோதிலும்,
ஆங்கிலம் பயில அளவில் ஊதியச்செலவு
வேண்டிவருவதால், வறுமையின் கொடுமை
யால் ஆங்கிலவழி அணுகவும் அவர்களால் முடி
யாது. அதனால் தேசியபாஷையில் கல்விகற்கு
முறை ஏற்படாவிட்டால், நம்மவர்பெரும்பான்
மையரும் அறிவினொளியற்றவராய்ப். பூதேவிக்
குப்பாரமாய் முடிவர். "ஒரு மனிதனை அவன்
வித்யாதனம் பெறுதற்குமுன்னிருந்ததைவிட
மிகச்சிறந்த வேலைக்காரனாக்குவதற்கு மாத்திர
மன்று; அவனை முன்னினும் மிக்க நலம்
பொருந்தியவனாக்கவும் நாம் கல்வி ஆவசியக
மென்று தேர்ந்துரைக்கின்றோம்" என்றார்
ஸர் ஜான் லபக்கென்ற ஆங்கில கலைஞர்.
மனிதனுக்கு நலமளிக்குங் கருவி கல்வியேயா
கும். பற்பல விஷயங்களை ஆய்ந்தறிந்து, நற்
குண நற்செய்கைக ளமையப்பெற்று, பௌதி
கம், மானஸிகம், ஆமுஷ்மிகம் ஆகிய எல்லாக்
காரியங்களிலும் செவ்வனே ஒழுகுதற்குக்
கல்வி யின்றியமையாத ஸாதனமாகும். நம்
நாட்டு ஜனசமூகம் பொதுவாய்க் கல்வியின்பய
னடைந் துய்யவேண்டுமானால், நம்பால் இயற்
கையிலேயே அமைந்துள்ள நம்முன்னோர்
விளக்கிய உயர்ந்த வுண்மைகளைத் தெற்றன
விளக்கும் தேசியபாஷையில் கல்வியெய்தப்
பெறவேண்டும். ஒருதேசத்தாராவது தம் நாட்
டுப்பாஷையாலன்றி வேறொருஸாதனத்தாலும்
ஒருபொழுதும் உண்மையாக நாகரீகத்தையும்
கல்வியையும் பெற்றிலர் என்பது சரித்திர
வாராய்ச்சியால் விளங்கும்.ஒரு ஜாதியாரின்ஒற்
றுமை வளர்ச்சிக்கு, அவரது மொழியும், அம்
மொழியிலமைந்த நூல்கள் விளக்கும் அரும்
பெரும் போதனைகளும், அவர் அப்போதனை
களின் பயனாய்க் கைகொண்டனுட்டித்துவரும்
ஒழுக்கங்களும் உதவிக்கருவிகளாய் ஏற்படும்.
நம்மவர் முற்பட்டுயர ஆங்கிலம் போன்ற
விதேசபாஷையின் அறிவால் அதிகம் பலன்
விளையுமென்று நினைத்தல் பிழையாகும். ஆங்
கில ஸாம்ராஜ்யத்தினது பற்பல அங்கங்கள்
தம்முள் ஐக்யமுற்று, அவற்றின் பரஸ்பர
ஸஹவாஸத்திற்கு எத்துணையோ ஆவசியகமா
கும் ஆங்கிலமொழியின் உபயோகத்தை யான்
குன்றக் கூறவில்லை. ஆனால் ஒரு ஜாதியார்க்கு
உரியனவான உயர்ந்த மனோபாவங்களும் உத்
தம உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய உண்மை
களும் உபதேசங்களும் அவர்களாண்டுவரும்
ஸ்வபாஷையில் முன்னர் அமைக்கப்பெற்றன
போல இன்னும் அமைக்கப்பெற்றால் மாத்தி
ரமே பயன் பெறுவனவாம். ஒவ்வொரு
நாட்டுமக்கள் திரட்சிக்கும் ஏனைய நாட்டுமக்
கள் தொகுதிகட்கில்லாத சிறப்புக் குணங்கள்
உள்ளனவாகையால், வையகத்தின்அறிவு விசா

லத்திற்கும் நல்லொழுக்கப் பெருக்கத்திற்கும் நல்வளர்ச்சிக்கும் நாகரீகக்கிளர்ச்சிக்கும், அவ்வம்மக்கள் தொகுதியும் அவரவர்க்குரிய விகிதம் உதவவேண்டும். அம்மாதிரி நம்மவரும் உதவ வேண்டுமானால், நம் தாய்மொழி வளர்ச்சியாலேதான் அவரினின்று அவ்வுதவி உலகம் பெறும். நம்நாட்டு எல்லா மக்கட்கும் ஆங்கிலங் கற்றுத் தேர்தலியலாது. அவ்வா றியன்றாலும் அம்மொழியின் இயல்புக்கு முற்றிலும் மாறாகும் நம்மவர் கருத்துகளைத் தெரிவித்தற்குரிய இயற்கைக் கருவியாய் அப்பாஷை ஒருகாலு மமையாது. இக்காரணத்தாற்றான் ஒவ்வொரு திறத்தாரின் வித்யாபிவிருத்திக்கும் அவ்வவரது தாய்மொழியே கருவியாகவேண்டுமென்று சாதிப்பது. தாய்மொழியிற் கல்வி கற்றால்தான் அக்கல்வி அம்மொழியாளர்க்கு நிலையுற்ற வுடைமையாகும். அக்கல்வியே கற்றவர்க்குக் கேடில்விழுச் செல்வம். அவ்விதங் கற்ற கல்வியே ஒருவ னுயிரிடத்தே தங்கி 'எழுமையு மேமாப் புடைத்து'. அதனால்,

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்

என்ற திருக்குறளின் கருத்தை யறிந்து, நந்நாட்டில் மனிதப் பிறப்பைக் கடவுள் கிருபையாற் பெற்றவர் மிருகங்களாகத் திரியாமலிருக்க, நம் தாய்மொழி வாயிலானேவறியோரும் கல்வியும் அதினின்று விளையும் அறிவும் பெறற்கு இச்சங்கமும் சங்கத்தினங்கத்தினர்களும் விடாமுயற்சி செய்யவேண்டியது முக்கிய கடமை என்று கூறவேண்டும்.

தமிழ் மொழி வாயிலாக இக்காலத்திற்கேற்ற கல்வி பயிற்ற முடியாதென்று சாதிப்பார் கூறும் ஓர் முக்கிய ஆக்ஷேபம் தமிழ்ப் பாஷையில் சாத்திரக் கலைகள் கற்றற்கேற்ற பாட புத்தகங்களில்லாமையும் வேண்டிய புத்தகங்களியற்ற முடியாமையுமாம்! வேண்டிய புத்தகங்கள் தமிழில் ஏற்படவில்லையென்பது மெய்யே; ஆனால் தேசீயபாஷையிலேயே, கல்விகற்பித்தலில் ஊக்கஞ்செலுத்தி முயன்றால் புத்தகங்களோ ஏற்படா! படிப்பவருளரேல், பாடபுத்தகங்கள் முறையேதோன்றும். இவ்விஷயத்தில் ஜப்பான் தேசம் நமக்கு நெறிகாட்டும். சகல நூல்களும், சாத்திரங்களும் ஜப்பான் பாஷையிலேயே போதிக்கப்படவேண்டுமென்ற உத்தேசத்தோடு கௌண்ட் ஓகூமா என்ற ஜப்பானிய பிரபு 1882-ல் வஸிடா ஸர்வகலாசாலை ஏற்படுத்தினார். போதிய பாடபுத்தகங்களில்லாமையால் நேருங்கஷ்டத்தை நீக்குவானென்றே அக்கலாசாலையில் ஓரச்சுயந்திரசாலை அமைத்துத் தக்கபுத்தகங்கள் வரையச்செய்துபதிப்பித்தார். அங்கு சகல மேனாட்டுச் சாத்திர அறிவையும் மாணவர் ஜப்பான்பாஷை வாயிலாக இப்பொழுது பெறுகின்றனர். அக்கலாசாலையில் இப்பொழுது 180போதகாசிரியர்களும் 7000 மாணவர்களுமுளராம். ஐம்பது வருடங்கட்குமுன் ஜப்பான் பாஷையின் நிலைமை நம்நாட்டில் நம்மொழிகள் இப்பொழுதடைந்திருக்கும் நிலைமைக்குச் சற்றேனும்மேலதாயிருக்கவில்லை. இந்தியாதேசத்தும் ஹரித்துவாரத்துள்ள குருகுலத்தில் உயர்தரக் கல்வி தேசீய பாஷை யொன்றில் செவ்வனே பயிற்றப் பெற்றுவருகிறது. பரோடா ராஜ்யத்தில் "கலாபவன்" என்ற கைத்தொழிற் பாடசாலையில் சாத்திரங்களனைத்தும் ஸ்வபாஷையிலேயே கற்பித்து வருகின்றனர். பூனா நகரத்தில் சமீபத்தில் ஏற்படுத்தப்பெற்ற ஸ்த்ரீ வித்யாலயத்தும் அவ்வாறே முயன்று வருகின்றனர். அஃதற்றாக, தமிழில் உயர்தரக்கல்வி பயிற்றல் முடியாதென்ற கூற்று வீண்கூற்றே யன்றோ? நந்தமிழில் இற்றைப் பொழுதே அரும் பெருநூல்கள் அளவிலாதமைந்துள. 'சுதேசமித்திரன்' போன்ற தினசரி பத்திரிகைகளும் 'விவேக போதினி' 'விவேக சிந்தாமணி' போன்ற நற்றமிழ் மாசிகைகளும் நாடெங்கும் நடைபெற்று, சமயோசிதம்போல சொற்றொடர்களமைத்துத் தமிழ் மொழியைப் பெருக்கி வருகின்றன. இத்தகை இருநிதி தமிழகத்திற்குக் கிடைத்திருக்க, அந்நிதியம் நம்முன்னோர்கட்குக் கல்வித் தேர்ச்சியு நாகரீகமு மடைய பெரியவோர் கருவியாய் நின்றதுபோல, நம்பின்னோர்கட்கும் அவ்வாறு பயன்படுமாறு நம்மால் போற்றப்படாவிட்டால், நாம் நம் புதல்வரின் பழிமொழிக் காளாக வேண்டும். அதனால் இக்காலத்திய கல்வி முறைக்கிசைந்த பாடங்கள் படித்தற்குத் தக்க புத்தகங்கள் தமிழிலெழுதப் பெறவேண்டும். இதற்கு ஆங்காங்குத் தனித்தனியாய் ஒவ்வொருவர் உழைத்தால் போதாது. நந்தேச வளர்ச்சிக்கு வேண்டும் விஷயங்கள் ஒவ்வொன்றையும் நம் பாஷை

யில் விளக்கிப் புத்தகங்களெழுத இச்சங்கம் மேற்பாடு செய்யவேண்டும். மேனாட்டுச் சாத்திரங்களையும் ஏனைய படித்தற்குரிய விஷயங்களையும் தென்மொழியில் செவ்வனே கைம்மாறு கருதாமல் எழுதி யுதவுதற்குப் "பயன்றூக்கார் செய்தவுதவி நயன்றூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்ற குறளையுணர்ந்த மிக்கோர் ஏற்படாராயின், அத்தகைப் புத்தகங்களெழுதவல்லார்க்குக் கைம்மாறாக நன்கொடை யாதேனு மளிக்க நிதியொன்று ஏற்பட்டால் புத்தகங்கள் எளிதில் வெளிவரும். இப்புத்தகங்கள், இப்பொழுது ஆங்கிலத்தில் Jack's People's Books என்றும் Home Library Series என்றும் பெயர்கள் வழங்கும் புத்தகத் தொகுதிகளில் வெளியிடப்படும் புத்தகங்களைப்போல எழுதப்பெற்று இச்சங்கத்தால் நியமிக்கப்படும் சில பிரபல வித்வான்களுடைய பொது மேற்பார்வையில் பிரசுரஞ் செய்யப்பட வேண்டும். இராஜாங்கத்தாரும் சர்வகலா சங்கத்தாரும் நம் பாஷையின் மேம்பாட்டிற்காகச் சிரத்தை காட்டினாலன்றிப் பாஷாவிர்த்திக்கு வழிகள் ஏற்படுதலிலகுவன்று என்று நீவிர் நினைப்பீர்களானால், ராஜாங்கத்தார்க்கும் கலாசாலையார்க்கும் ஊக்கம் இவ்விஷயத்தில் உண்டாகும்படி செய்ய வேண்டுவது நம் தமிழ்ச் சங்கத்தின் கடமையாகும். ஆனால் தமிழ் முதலிய தாய்மொழிகளை ஆதரிப்பதில் சென்னைச் சர்வ கலாசங்கம் எவ்வளவு முன்னின்று முயன்று வருகிறதென்பதை நினைக்குங்கால், சர்வ கலா சங்கத்தின் உதவி ஏற்படுமோவென்று ஐயமுற இடமுண்டாகின்றது. அது எவ்வாறாயினும் நம் சங்கத்தின் பொறுப்புச் சற்றும் மாறாது. சின்னாட்கட்குமுன், உர்தூ சர்வ கலாசாலை ஏற்படுத்தக் கருதி மாட்சிமை தங்கிய நிஜாம் கோமான் அக்கருத்து நிறைவேறுதற் பொருட்டு, உர்தூ பாஷையில் தக்க புத்தகங்கள் வரைதற்குப் புலவர்குழாம்நியமித்திருக்கின்றனர். நமது ஆந்த்ர சகோதரர்களும் வங்காள மாகாணத்தார்களும் மேனாட்டுச் சாத்திரப்பயிற்சிக்கும் ஏனைய நவீனகலைத் தேர்ச்சிக்கும் பயன்படத்தக்க புத்தகங்கள் அவரவர் தாய்மொழியில் எழுதிவருகின்றனர். முற்காலத்தில்ஞானமார்க்கத்தைநாடிவீடுபெற முயன்ற நம்முன்னோர் லௌகீக கலைகளையும் நன்கு கற்றுவந்தனர். பொருளும் இன்பமும் புருஷார்த்தம் நான்குள் அடங்கியிருத்தலே அதற்குப் போதுமான சான்றாகும். லௌகீக கலைகளுள் இயற்கைச் சாத்திரங்களும் வளர்க்கப்பெற்று வந்தனவென்பது Hindu Achievement in Exact Sciences என்ற தலைப்பின் கீழ் இப்பொழுது மாடர்ன் ரிவ்யூ என்ற மாசிகையில் வெளிப்படுத்திவரும் விஷயத்தாலும், டாக்டர் ப்ரோஜேந்திரநாத சீலர் என்ற பேரறிஞர் எழுதிய 'ஹிந்துக்களின் சக்தி தத்வ சாஸ்திரம்' (The Physical Science of the Hindus) என்றும் 'ஹிந்துக்களின் உண்மை இயற்கைத் தத்துவ சாஸ்திரங்கள்' (The Positive Sciences of the Hindus) என்றும் பெயர்கள் புனைந்த அரிய நூல்களாலும் நன்கு விளங்கும். ப்ராசீன சாத்திரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் தமிழ் மொழியில் விளக்குதல் சாத்தியமோவென்று ஐயுறுவார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையவர்கள் செய்த "நூற்றொகை விளக்கம்" என்ற அருமையான நூலை வாசித்திரார் போலும். எவ்வகை முயற்சியையும் பயனறச் செய்வது ஐயுறுதலே யாதலால், ஐயந் தெளிந்து, நம் பாஷையின் ஆற்றலைப் பெருக்கித் தேசீய வித்யாப்யாசத்திற்கு வேண்டும் புத்தகங்கள் ஏராளமாய் எழுதியுதவக் கடன்பட்டவராவார் ஆங்கிலங்கற்ற தமிழர். இவ்விஷயமாக நம் சங்கத்திற்கேற்படும் பொறுப்பின் நிறைவேற்றம் அன்னோரையே சார்ந்ததாகும். அன்னோர்பயின்ற ஆங்கில வித்தைக்கு வேண்டிவந்த தனச்செலவில் அற்பபாகமன்றோ அவர் கைப்பொருளினின்று செலவானது? அஃதவ்வாறாக, அன்னோர் நலமடைய ஊதிய முதலிய ஊரார்க்கு நன்றிசெலுத்த வித்யாதனத்தை ஊரார்மாட்டு வினியோகஞ் செய்தலினுஞ் சிறந்த மார்க்கம் என் சிற்றறிவுக்குத் தோன்றவில்லை. ஸ்ரீமான் ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யரவர்கள் "செந்தமிழ்" வாயிலாய் இவ்விஷயத்தில் உழைத்து வருவது மிகவும் மெச்சத்தக்கது. நிற்க, நாம் மேம்பாடடைய சாத்திரப் பயிற்சிமாத்திரம் போதாது. நம்மவர்க்குத் தொன்று தொட்டுரியதாய் நிற்கும் இயற்கை நலங்களும் அநுபவ சித்திகளும் பரக்கவிளக்கும் ஆன்றோராக்கிய அரிய பெரிய நூல்களைக் கற்றறித

னும் இன்றியமையாததாகும். ஒலித்தோடிய ஓலைச்சுவடிகளைக் கண்டுபிடித்துக் காலப்போக்கையும் பொருட்செலவையும் சற்றுங் கவனியாது, விடாவாராய்ச்சி செய்து, தீர்க்க காலமாய்த் தொன்னூல் பலவும் பதிப்பித்து, படிப்போர் மனதிற்கு மகிழூட்டி நல்லிசை பெற்றிலங்கும் புலவர் பெருமானாகிய மகாமகோபாத்யாய ஸ்ரீமான் சாமிநாதய்யரவர்கள் தமிழகத்திற்குப் புரிந்துவரும் பேருதவியை இங்கு வியந்து கூறற்பாலது. நம்பண்டிதசிகாமணி வெளிப்படுத்தும் பண்டைத் தமிழ் நூல்கட்கு வரைந்துள்ள ஆராய்ச்சி முகவுரைகளே நவீனக்கருத்துக்களை நயம்பட விளக்குமாற்றல் நந்தமிழ் மொழிக்குளதென்பதைப் புலப்படுத்துகின்றன. இலக்கியப் பயிற்சியோடு சரித்திரப் பயிற்சியும் லௌகீக வாழ்க்கைக்கு மிக்க உபயோகமுள்ளதாகும். சரித்திர நூல்கள் நம் பாஷையிற் சற்றுமில்லையென்ற பெருங்குறை நிலைத்து நிற்கின்றது. அதை நீக்குவதும் நங்கடமையாகும். பண்டைக்கால முதல், உயர்ந்த நாகரீகமும் யாவரும் வியக்கத்தக்க சொற்சுவை பொருட்சுவை நிறைந்த சிறந்த இலக்கியமும் பெற்று விளங்குவதும், புலவர் பலரால் புகழ்ந்து பாடப்பெற்ற முடிமன்னர்களால் ஆளப்பட்டு வந்ததுமான தென் இந்தியாவின் சரித்திரம் இதுகாறு மெழுதப்படவில்லை. 'கரிகாலச் சோழன்,' 'சேரன் செங்குட்டுவன்,' 'வேளிர் வரலாறு,' 'சோழவம்ச சரித்திரம்' என்பன நம்மவர் சரித்திர வாராய்ச்சிசெய்ய ஆற்றலுடைய ரென்பதை நன்கு விளக்கும்.

ஒருவன் உண்மையில் நல்லறிவடைந்து நலம்பெற விரும்பினால், அவன் சாஸ்திர நூல்களில் சிறிதேனும் அறிவும், இலக்கியத்திலும் சரித்திரத்திலும் சாமானியப் பயிற்சியும்உடையவனாதல் இன்றியமையாததாகும். நந்நாட்டில் அறிவும் நலனும் ஒழுங்குறப்பெருக நம் சங்கத்தினரெல்லோரும் ஊக்கமும் ஒற்றுமையும் பொருந்த வுழைத்தல் வேண்டும். தேசநலன் விளைத்தற்கு எத்தனையோ வழிகளுள. நாடுவோர்க்கு அவை எளிதில் தென்படும். ஆனால் உழைக்க இச்சையும் சங்கற்பமுமே வேண்டியவை. நம் நாட்டில் நல்லறிவு பரவ, பலருமொருங்கே முயற்சிசெய்தால்,

ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை

என்ற தேவர் வாக்கிற்கிணங்க, காரியசித்தி நிச்சயமாகப் பெறுவோம். மன ஊக்கத்தோடு உண்மையாய் உழைப்பவன் வழி நலமெப்பொழுதுஞ்சேரும், என்று கார்லைல் என்ற ஆங்கில ஆசிரியருங் கூறுகின்றார். வள்ளுவனாரின் கூற்றுமஃதேயன்றோ?

உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று

என்ற குறளால் ஊக்கத்தின் பெருமையுஞ் செவ்வனே விளங்கும்.

சீரியர்காள்! பண்டிதசிகாமணிகள் நிறைந்த இச்சபையில் புதிதாய் நான் கூறக்கூடியதொன்று மிலதேயாயினும், சிற்சில வமயங்களில் யாவரும் நன்றாயறிந்த சில விஷயங்களை வற்புறுத்திக் கூறுதலால் நற்பயன் விளைவது நம்மனுபவமானதுபற்றி, நான் இவ்வார்த்தைகளை இங்குமொழியத் துணிந்தேன். என் புன்சொல்லைப் பொறுமையுடன் நீங்கள் கேட்டதற்கு வினயத்துடன் வந்தனம் சமர்ப்பிக்கின்றேன். ஆலவாயரன் திருவருளால் நம் மதுரைத் தமிழ்ச்சங்கம் "ஆநாணிறைமதியலர்தரு பக்கம்போனாளினாளின்" நல்லொளி பரப்பித் தமிழகத்திற்குப் பயன்பட்டோங்கி வளரக்கடவது!

ஸ்ரீராமாயண ஸாரம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் முதல் ஐந்து காண்டங்களின் கதையை ஸாரமாகக் கொண்டது. எளிய நடையில் இருபாலார்க்கும் உபயோகமாகும்படி இனிய தமிழில் இடை இடையே கற்பனை பொதிந்து விளங்கும்படி எழுதப் பெற்றது. இதில் முதலில் எழுதப்பட்டுள்ள பிரவேசம் என்னும் பாகத்தில் ராமாயண நூலின் ஆதாரம், இயற்கை, மகிமை, படிப்பினை, குண விமர்சனம் முதலிய விஷயங்கள் அழகாய் யாவர் மனத்திலும் பதியும்படியாகக் காட்டப்பட்டுள்ளன. * * * *

கம்பராமாயணச் செய்யுட்களைத் தலைமகுடமாகக் கொண்ட இப்புத்தகம் அழகிய படங்களுடன் விளக்கப்பட்டு நன்றாக அச்சிடப்பட்டுள்ளது. இதைப் பள்ளிக்கூடங்களில் பலவிதமாயும் உபயோகப்படுத்தலா மென்பது எமது திடமான நம்பிக்கை. கல்வி இலாகா அதிகாரிகள் பாடப் புத்தகங்களில் ஒன்றாக இதைச செய்வது வெகு சிலாக்கியமாகும்.

விலை ரூபா ஒன்று சந்தாதார்க்கு அணா 12.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

சமுத்திரகுப்தன்

SAMUDRA GUPTA

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் மலையும் காடுகளும் நெருங்கிய தேசங்களின் வழியாகச் செல்லவேண்டியிருந்ததால் சேனைக்கு வேண்டிய உணவு முதலிய பொருள்களைக் கூடவே அனுப்புவது கஷ்டசாத்தியமாக விருந்தது. இப்போதோ, இவனது சேனை சமபூமியை அடைந்து விட்டதால், எல்லாம் சமுத்திரகுப்தனுக்கு அனுகூலமாக விருந்தன. கிழக்குத் தீரத்திலுள்ள பெருவழி மூலமாகச் சென்று கலிங்கநாட்டுத் தலைநகராகிய பிஷ்டாபுரத்தை யாண்டுவந்த சிற்றரசனை முறியடித்து மகேந்திரகிரி, கோட்ரோ மலையரண்களைக் கைப்பற்றிக்கொண்டு கொல்லேரி சமீபத்தில் ஆண்ட மாந்தராஜாவையும், வெங்கியையாண்ட பல்லவனையும், காஞ்சியையாண்ட விஷ்ணுகோப பல்லவனையும், பாலக்காவையாண்ட உக்கிரசேன பல்லவனையும் புறங்கண்டு தக்ஷிணத்தின் மேற்றிசை வழியாகத் தன்னாடு நோக்கித் திரும்பி, வழியிலுள்ள தேவராஷ்டிரம், ஏரண்டபள்ள முதலிய நாடுகளையும் ஜெயித்துக்கொண்டு, முடிவில் தன் நகர் சேர்ந்தனன்.

இவ்வரிய செயல் யாவருக்கும் வியப்பைத் தருமென்பதற்குத் தடையொன்றுமில்லை. இவன் சென்று வந்த சுமார் 3000 மைல் தூரமிருக்கும். படைகள் சென்ற வழிகளோ பயங்கரமான மலைவழிகளும் அடர்ந்த காட்டு வழிகளுமாகும். இப்படை எழுச்சி சுமார் 2,3 வருஷங்கள் பிடித்திருக்கும். தென்னாடுகளைக் கைப்பற்றி ஆளவேண்டுமென்ற எண்ணம் அவன்மனதில் இராதென்பது உண்மை. இது இயற்கையில் அந்நாளில் அசாத்தியமாகும். செங்குட்டுவன்போன்ற சில தென்னரசர்கள் வடநாடுகளைப் படையெடுத்துக் கொள்ளை கொண்டது போலவே, இவனும் தென்னாட்டைக் கொள்ளையிடக் கருதிப் படையெடுத்துச் சென்றான். இவன் கொண்டு வந்த திறைப்பொருள்களும் கொள்ளைப் பொருள்களும் அளவிறந்தனவாகும். அப்போது பாடலீபுரம் பொற்குவியல்களால் பொலிவு பெற்றது.

இனி இவன் தன்னாட்டின் எல்லைப் புறத்துள்ள நாடுகளையும், குடியரசுகளையும் வென்றதைப்பற்றிக் கூறுவோம். இவைகளைப்பற்றிக்கூறும் சாஸனத்தால் சமுத்திரகுப்தன் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின் நான்கெல்லைகளும் நன்கு விளங்கலாகும். கிழக்கேயுள்ள சமதாடம், காமருபம், தேவாகம் முதலிய நாடுகள் அவனுக்குத் திறைகொடுத்தன. வடக்கேயுள்ள நேபாள தேசம் தனது சுதந்திரத்தை இழக்காமலே சமுத்திரகுப்தனுக்குக் கீழிருந்து வந்தது. இமயமலை அடிவாரம் வரையில் இவனது நேராட்சி சென்றிருந்தது. கர்தூரிபுரதேசமும் அவ்வாறே இவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தது.

பாஞ்சாலம், கீழ் இராஜபுதனம், மாளவம் இவைகளில் குடியரசு நாடுகள் தழைத்தோங்கின. யாதேய கிளையைச் சேர்ந்தோர் ஷடத்ரு நதிக்கரை இருபுறமும் குடியேறியிருந்தனர். மாத்ரகக் கிளையினர் பாஞ்சால மத்தியில் குடியேறி யிருந்தனர். இவன் காலத்திலிருந்தது போலவே, அலக்ஸாண்டர் காலத்திலும் இந்த ப்ராந்தியத்தில் குடியரசு நாடுகள் பல இருந்தன. யமுனை நதிதான் சமுத்திரகுப்தன் ராஜ்யத்திற்கு வடமேற்கு எல்லை. அர்ஜுனயனர், மாளவர், அபீரர் முதலியோர் கீழ்இராஜபுதனத்திலும் மாளவத்திலும் வாழ்ந்துவந்தனர். ஆதலின் சம்பல் நதியே இப்பாகத்தின் எல்லை என்று சொல்லலாம். நர்மதை யாறு இவன் நாட்டிற்குத் தெற்கெல்லையாக விருந்தது.

மேற்கூறிய நான்கெல்லைகளிலிருந்து சமுத்திரகுப்தனது இராஜ்யம் வட இந்தியாவிலுள்ள வளமுள்ள நாடுகள் அனைத்தையும் தனக்குள் கொண்டிருந்ததென்று நாம் அறிந்துகொள்ளலாம். வடக்கே இமயமும், தெற்கே நர்மதை யாறும் கிழக்கே ஹூக்ளி நதியும் மேற்கே சம்பல் நதியும் அவனது நாட்டின் எல்லைகளெனலாம். இவற்றிற்குப் புறம்பேயுள்ள நாடுகளும் இவனுக்குக் கீழ்ப்பட்டனவென்று கூறினோம். தென்னாட்டிலுள்ள தேசங்களும் இவன் படை எழுச்சிக்கு முன்னர்த் தாழ்ந்து பணிந்தன.

அசோகனுக்குப் பிறகு 600 வருஷகாலமாகப் பரதகண்டத்து முடிமன்னர்களெல்லாரும் ஒரே அரசனுக்கு முடிதாழ்ந்ததில்லை.

இவ்வண்ணமாய் வேற்றரசர் யாவரையும் பரத கண்டத்திலுள்ள தன் ஆட்சிக்குக்கீழ்க்கொண்டு வந்ததைக் கேட்ட அயல்நாட்டு வேந்தர்கள் இவனது நட்பை வேண்டினார்க ளென்பது சொல்லாமலே அமையும். இவனோடு இவ்வாறு உறவு கொண்டவருள் முக்கியமானவர்கள் காந்தார தேசத்தரசனும், ஆக்ஸஸ் நதிக்கரையில் ஆண்டுவந்த குஷான் வம்சத்தரசனும், இலங்கை வேந்தனும் ஆவர். இன்னும் பிற வேந்தரும் உறவுகொண்டனர் என்பர்.

இலங்கை வேந்தனுடன் இவனுக்கு நட்பு அகஸ்மாத்தாய் ஏற்பட்டது. கி. பி. 330-ல் மேகவர்ணன் என்ற பௌத்தவரசன் இலங்கையை ஆண்டுவந்தான். அவன் பௌத்த சந்நியாசி இருவரைப் புத்த கயைக்கு அனுப்பி அங்குள்ள வஜ்ஜிர பீடத்தைத் தரிசித்து, வட விருக்ஷத்திற்குக் கீழ்பால் அசோக மகாராஜனால் கட்டப்பட்ட பௌத்த ஆசிரமத்தையும் கண்டுவரும்படி ஏவினான். இவ்வாறு அனுப்பப்பட்ட இருவருள் ஒருவர், மேகவர்ணராஜனது சகோதரர். இவ்விருவரும் வடஇந்தியாவுக்கு யாத்திரை சென்றனர். , ஈழ பௌத்தர்களுக்கும் இந்திய பௌத்தர்களுக்கும் உள்ள ஆசார வேறுபாடுகளால், இவர்களை இந்திய பௌத்தர்கள் புறக்கணித்து விட்டனர். சென்றவிடங்களில் எல்லாம் இவ்விதம் உபேக்ஷை செய்யப்பட்ட செய்தியை அவர்கள் தம் அரசனுக்குத் தெரிவித்தபோது, அவனும் தன் நாட்டிலிருந்து பௌத்த ஸ்தலங்கட்கு யாத்திரையாகச் செல்லும் ஜனங்கள் வேண்டிய சௌகரியங்களைப் பெறுவதற்காகப் புத்தகயையில் ஒரு ஆசிரமம் ஏற்படுத்த எண்ணி, சமுத்திரகுப்தனுக்கு ஒரு தூது போக்கினான். தூதுவர் தனக்குக் காணிக்கையாகக் கொணர்ந்த அரதனப் பொதியை இலங்கை வேந்தனது திறையாக மதித்து மிக்கக் களிப்புடன் மேகவர்ணனது வேண்டுகோளுக்கு, சமுத்ரகுப்தன் உடன்பட்டான். மேகவர்ணனும் வடவிருக்ஷத்திற்கு வடபால் ஒரு திவ்யமான கட்டிடத்தைக் கட்டுவித்து, தன் கருத்தை ஓர் செப்பேட்டில் வரைந்து பிரசுரப்படுத்தினான். அக்கட்டிடம் மூன்று மாடிகளோடு கூடிய உன்னதமான மாளிகை. ஆறு கூடங்களும் மூன்று கோபுரங்களும் அதில் அமைந்திருந்தன. அதைச்சுற்றிலும் 40 அடி உயரமுள்ள பலத்த மதில்கள் எடுக்கப்பட்டன. அதில் சித்திர வேலைகள் மிகவும் ரம்மியமாகவும் திறமையாகவும் கண்கவரும்படி தீட்டப்பட்டிருந்தன. அங்கு எழுந்தருளப் பண்ணியிருந்த புத்த விக்கிரகம் பொன்னாலும் வெள்ளியாலும் வார்க்கப்பட்டு மணிகளால் இழைக்கப்பட்டிருந்தது. புத்தரது ஞாபகச் சின்னங்கள் அடங்கிய மற்றைய ஆலயங்களும் இதேவிதமான வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டன.

ஏழாம் நூற்றாண்டில் ஹ்யூன்த்ஸாங் இந்தியாவுக்கு யாத்திரையாக வந்தபோது இந்த மடத்தில் மகாயனத்தில் ஸ்தவீர வகுப்பைச் சேர்ந்த 1000 சந்நியாசிகள் வசித்து வந்ததோடு, இலங்கையிலிருந்து வரும் யாத்திரிகருக்கு அவர் வேண்டிய சௌகரியங்களையுஞ் செய்துவந்தனர்.

சமுத்ராகுப்தன் தென்னாடுகளைப் படையெடுத்துக் கொள்ளைகொண்டு திரும்பியவுடன், துரங்கவேள்வி ஒன்று இயற்றினான். இவ்வேள்வி பண்டைநாளில் திக்குவிஜயம் செய்து பரதகண்டத்தை ஒரு குடைக்கீழ் ஆண்ட உத்தம வீரர்களால் நடத்தப்பட்டு வந்தது. மோரிய வரசை வீழ்த்திவிட்டுச் சங்க வம்சத்தை நாட்டிய புஷ்யமித்திரன் ஒரு துரங்க வேள்வி இயற்றினான். அவனுக்குப் பின்பு (184. கி. மு.) இது நின்றுபோய் விட்டது. இப்போது இதை வெகு விமரிசையாகச் சமுத்திரகுப்தன் நடத்தினான். அத்தருணம் நான்மறையோர்களுக்குப் பொன்மாரி சொரிந்தனன். இத் தருணத்தில் அவன் அடித்து வழங்கிய பொன்காசுகளிற் சில, இப்போது அகப்பட்டுள்ளன. அதில் ஒருபுறம் சில எழுத்துகளும் மற்றோர் புறம் யாகக் குதிரையின் உருவமும் வரையப்பட்டுள்ளன. ஒரு கற்குதிரையும் அதனடியில் சுருக்கமான சிலா லிகிதமும் சமீபத்தில், வட அயோத்தியில் கண்டெடுக்கப்பட்டு இப்போது லக்ஷ்மணபுரத்தின் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுவும் சமுத்திர குப்தன் இயற்றிய துரங்க வேள்வியின் ஞாபகார்த்தமாகச் செதுக்கப்பட்டதெனக் கருதுவதற்கு இடமுண்டு.

இந்திய ஸ்திரீ ரத்னங்கள்
திரௌபதீ அணா 8 ருக்மிணி அணா 6
சகுந்தலை அணா 4

வஸந்த மந்திரம்

(ஒரு சரித்திர சம்பந்தமான நவீனம்.)

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

சிற்ப நிபுணன் என்ற பெயர் அவனுக்குத் தகும். ஏனெனில், தக்கசைலம், பாடலீபுரம், கூர்ஜ்ஜரம் முதலான இடங்களிலுள்ள பல புத்தமடங்களையும், கோவில்களையும், மற்ற சித்திரசாலைகளையும் தானே நேரே பார்த்து அவ்விதம் வேலைசெய்யக் கற்றுக் கொண்டவன். அவனிடம் வேலை செய்யப் பல யவனர் வந்து கூடினர். சிற்ப நிபுணனிடத்தில் வேலை செய்கிறான் என்பதே சிற்பிகளுக்கு ஒரு கௌரவம் என்றால் அவன் சாமர்த்தியத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! பாக்ஷாவிடம் தோல்வியடைந்து இராஜ்யம் இழந்த ஹிந்து அரசனுக்குப் பல மண்டபங்களும் அரண்மனைகளும் நிருமித்துக் கொடுத்தவன் இவனே. அவற்றுள் பலவற்றை மகமதிய ஸேனை அழித்துவிட்டபோதிலும் மீதியுள்ளவற்றைப் பார்த்து மிகவும் ஸந்தோஷமடைந்த பாக்ஷா, தனக்கும் ஒரு வஸந்த மண்டபமும், அரண்மனையும் சிற்ப நிபுணனால் செய்து கொள்ள எண்ணங்கொண்டு, வஸந்தபுரியில் ஸ்வர்ண ஸரஸின் அருகில் வஸந்தமந்திரம் கட்டிக்கொடுக்கும்படி உத்தரவு செய்தான். பாக்ஷாவுக்குப் பாரசீகம், அரபி, ஸம்ஸ்கிருதம், இப்பாஷைகளில் கொஞ்சம் தேர்ச்சியுண்டு. வித்தியாபிவிருத்தியில் அவனுக்கு எவ்வளவு ஊக்கம் இருந்ததோ, அவ்வளவு ஊக்கம் சிற்பசாஸ்திரிகளை ஆதரிப்பதிலும் இருந்தது. சில மகமதியச் சக்ரவர்த்திகள் போன்று மகமதியரையே ஆதரித்து ஹிந்துக்களைப் பலவகையிலும் கருவறுக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டவன் அல்லன். தனது மகமதிய குடிகளைப்போலவே ஹிந்துக் குடிகளும் க்ஷேமமாயும், இராஜ விசுவாசத்துடன் சந்தோஷமாயும், திருப்தியாயும் இருந்தால்தான் தனக்கும் தன் நாட்டிற்கும் க்ஷேமம் என்று, முன் நடந்த சரித்திர முறைகளால் நன்கு அறிந்துகொண்டவன். ஆகையால் ஒவ்வொரு பாஷையிலும் சிறந்த பண்டிதர் பலர் அவனுடைய தர்பாரில் வெகுமானம் பெற்றுக்கொண்டே இருப்பார். இதுவரையில் சுல்தான் ஆமத் ஒரு வித்வானையாவது! அல்லது சிற்பியையாவது அவமதித்தான் என்பதே கிடையாது.

இவ்வகை நற்குணங்கள் பொருந்திய சுல்தான் வெகு பரிவுடன் "ஐயா! சிற்ப நிபுணரே! இப்படி இரும்" என்று பக்கத்தில் ஒரு ஆசனம் காட்டவே, சிற்ப நிபுணன் அதில் அமர்ந்தான். அரசன் "சிற்ப நிபுணரே! நமது வஸந்தமந்திரம் எம்மட்டில் இருக்கின்றது? உம் வாயாலேயே வர்ணிக்கக் கேட்போம்" என்றான்.

சிற்பநிபுணர் எழுந்து "அரசே! உம்மிடம் காட்டிய படத்தின்படி எல்லாவிடங்களையும் என் சாமர்த்தியத்துக்கு எட்டியமட்டில் நன்கு அமைத்திருக்கிறேன். ஆஸ்தான மண்டபத்துக்கு வேண்டிய சலவைக் கற்கள் யவன தேசத்திலிருந்து வந்தவை; என் முன்னிலையில் இருநூறு வேலைக்காரர் அவற்றை வேலை செய்தனர். அவருள் யவன தேசத்தவரே சிலர். அரண்மனைக்கு வேண்டிய மரவகைகள் குமரி நாடென்று சொல்லும் திராவிட நாட்டினின்றும் வந்தன. அந்நாட்டு வேலைக்காரரும் நாற்பது ஐம்பது பேர் நம்மிடம் வேலை செய்துவந்தனர். தாங்கள் குறிப்பிட்டபடியே மேஷம் 25 தேதிக்குள் வேலை முடிந்துவிட்டது. ஆயினும் இன்னும் சிறிது முன்னமேயே முடித்திருக்கலாம்; அதிக் சௌகரியமாயும் இருந்திருக்கும்; ஆனால் அவ்வாறு செய்யக்கூடவில்லை. இவ்வருஷம் சீக்கிரமே வெயிற்காலம் ஆரம்பித்துவிட்டது. தாங்கள் எப்பொழுது புறப்பட்டாலும் சரியே. மந்திரம் தயாராய் இருக்கின்றது" என்றான்.

இதைக்கேட்ட அரசன்—"சிற்பநிபுணரிடம் ஒப்புவித்த வேலை சரியாய் முடியாமலும், நேரே நடத்தப்படாமலும் இருந்ததுண்டா? ஆயினும் உம்மிடமிருந்து 10, 15 நாளாய் சமாசாரம் ஒன்றும் வரவில்லை என்று மந்திரி சொல்லிக்கொண்டிருந்தார். மேலும் தாபம் பொறுக்கமுடியாமல் வஸந்தபுரிக்குப் போக வேண்டுமென்ற ஆசைதூண்ட, 2 நாளைக்கு முன்னர் நாமே ஆள் அனுப்பினோம். அவர்கள் உம்மைச் சந்திக்கவில்லைபோலும். நீர் திரும்பிவந்து சமாசாரம் தெரிவித்தது மிகத் திருப்தியாயிற்று". என்று சொல்லிக் கொண்டே தனது பிரதானிகளான மகபத்

காண்', சுமாலி என்னும் இருவரையும் பார்த்து "இவர்கள் இஷ்டப்பட்டால் நாளையதினமே கூட வஸந்தபுரிக்குப் புறப்படலாம்" எனவே அவர்கள் இருவரும் ஒருமிக்க "ஆக்ஷேபணையில்லை; உத்தரவுப்படி நடந்துகொள்ள சித்தமாயிருக்கிறோம்" என்றனர். அதனால் அவ்விதமே செய்யச் சுல்தான் உத்தரவிட்டான்.

அதே சமயத்தில் ஆஸ்தான மண்டபத்துக்கெதிரே தெருவில் இரண்டு குதிரை வீரர்கள் படுவேகமாய் ஓடிவந்து வாயில் முன்னர் இறங்கினர். உடனே குதிரைகளை வாசல் காப்போரிடத்தில் ஒப்புவித்துவிட்டு உள்ளே சீக்கிரமாய் நுழைந்து பாக்ஷா முன்னிலையில் மண்டியிட்டு நின்றனர். சுல்தான் அவர்களைக் கையமர்த்தி, இவர்கள் சொல்லப்போகிற சமாசாரத்தைச் சிற்பநிபுணர் மூலமாய் முன்னரே தெரிந்துகொண்டபடியால், "சபாஷ்! வெகு உஷாராய்க் காரியம் முடித்து வந்தீர்கள். நானும் இப்பொழுதே வஸந்தமந்திரத்தைப் பற்றிச் சிற்பநிபுணரிடமிருந்து கேள்வியுற்றேன். பின்னே போய் உமது இடத்தில் உட்கார்ந்து இளைப்பாறுங்கள்" என, பெரியவன் "சில்லரை வேலைகள்கூட எல்லாம்—" என்று சொல்லும்போதே அரசன் "சரி சரி! சந்தோஷமாயிற்று! மல்லீக், நீ போனால் என்ன பாக்கியிருக்கும்? போய் இளைப்பாறு" என்று பேச இடங்கொடுக்காமல் அனுப்பிவிட்டான். இருவரும் முகத்திலிருந்து கீழேசொட்டும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, அப்பால்போய், இரத்தின கம்பளத்தின்மீது உட்கார்ந்துகொண்டு 'உஸ்' என்று பெருமூச்சுவிட்டனர். இவர் இருவருமே ஸிந்துநதி தாண்டி வந்த கவுஸ் சாகிப்பும், மல்லீக் மகமத்கானும்.

இவை முடிந்ததும், சிறிது நேரம் இராஜாங்க விசாரணை நடந்தது. வழக்கப்படி இராஜகாரியங்கள் முறை தவறாமல் நடந்தவுடன் சுமாலி "சுல்தான் பகதூர் அவர்களின் உத்தரவுப்படி, சபையோர்காள்! நாளையதினம் ஸர்க்கார் வஸந்தபுரிக்குப் புறப்படும். மறுதினம் தர்பார் கூடுவது வஸந்தமந்திரத்தில்; இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் மறுதினத்துற்குள் வஸந்தபுரி வந்து சேரவேண்டுமென்று உத்தரவு" என்றான். உடனே எல்லோரும் எழுந்துநிற்க, முன்வந்தபடியே தீபவரிசைகளுடன் மெய்க்காப்பாளரும் மந்திரிகளும் தொடர்ந்துவர, அரசன் அந்தப்புரம் திரும்பினான். தலைவாயில் நுழைந்தவுடன் அக்கதவு மூடிக்கொண்டது. உடனே ஸபாமண்டபத்தில் 'ஹம்' என்று சப்தம் கிளம்பிற்று. இரவில் பொழுதாய் விட்டபடியால் வீடுபோய்ச் சேர எல்லோரும் வெளிக்கிளம்பினர்.

மூன்றாம் அதிகாரம்

கல்யாண விசாரம்

ஸிந்து தேசத்துக்குக் கிழக்கேயுள்ளது இராஜஸ்தானம். இராஜஸ்தானத்தில் மாளவ தேசம் என்று ஒரு நாடுளது. அந்நாட்டின் அரசர் **பிரதாப சிங்கர்**. அவருடைய பிரதான பட்டணம் **உதயபுரி**. அரவல்லி மலைச்சாரலின் கீழ்ப்புறம் இருப்பதுபற்றி, மழைமாரி சிறந்திராவிடினும், மலையினின்று இழிந்து வரும் அருவிகளும் ஆங்காங்கே உள்ள ஏரிகளும் குடியானவர்களுக்கு வேண்டுமளவு ஜலம் கொடுத்தன. சில வருஷங்களில், மழையின்றி நீர் நிலைகள் வற்றிப்போய்ப் பயிர் விளையாமல் உதயபுரியிலும் சுற்றுப் பக்கங்களிலும் பஞ்சம் வருவதும் உண்டு. சாதாரணமாய் அவ்விடத்துக் குடியானவர்கள் அமைதியாய்த் தங்கள் நிலங்களை உழுது பயிரிட்டு, நல்ல காலத்தில் ஏராளமாய்த் தானிய வகைகளைக் குவியல்குவியலாய்ச் சேகரித்து வைத்துக்கொள்வார்கள். மகமதியருக்குப் பயந்து பிரதாபசிங்கரின் முன்னோர் பஞ்சால தேசத்தினின்றும் இவ்விடம் ஓடிவந்து சுயேச்சையாய் ஆளவேண்டுமென்று ஏற்படுத்திக்கொண்ட நாடுகளில் இது ஒன்று. இதுபோன்ற பல நாடுகள் அரவல்லி மலைச்சாரலில் தழைத்தோங்கின. மிக வளப்பமுள்ள கங்காதீரம், யமுனாதீரம், ஸிந்துதீரம் இவற்றைவிட்டு அவற்றினும் வளப்பம் குன்றிய இராஜஸ்தானத்துக்கு ஹிந்து தேசத்து அரசர் வந்து குடியேறினது தங்கள் இராஜ்யத்தைத் தாங்கள் சுயேச்சையாய் ஆளவேண்டுமென்ற ஆசையாலேயே தவிர, வேறு ஒரு காரணமும் பற்றியன்று. 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்றபடி இராஜபுத்திரர் தங்கள் தேசங்களைவிட்டு இராஜஸ்தானத்துக்கு வந்துவிட்டபோதிலும், மகமதியர் இவர்களை அமைதியாய் இருக்கவிடவில்லை. ஸிந்து தேசத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள நாடுகளையும், பாஞ்சால

தேசத்தையும், காந்தார தேசத்தையும் கைப்பற்றிக்கொண்ட மகமதிய அரசர் எத்தனையோ பேர் இராஜபுதனத்தின்மீது படையெடுத்துச் சென்று இராஜபுத்திரர்களைத் தோற்கடித்தும் அவர்கள் கையால் தோல்வி யடைந்தும், இடைவிடாது இராஜபுத்திரர்களுக்குத் தொந்தரவு செய்துகொண்டே இருந்தனர். இராஜபுத்திரர்களும் இலேசானவர்கள் அல்லர். சமயம் கிடைத்தபோது 'ஒரு கை பார்க்கலாம்' என்று, இமைகொட்டாமல் காத்திருந்தனர். இவ்வாறு பகை முற்றவே, ஒருவரை ஒருவர் ஜயிப்பதற்குத் தேடும் வழிகளும் பலவாயின. மகமதிய அரசர்கள் சில சமயங்களில் இராஜபுத்திரர்களைத் தோற்கடித்து, அவர்களது நகரங்களைக் கொள்ளையடிப்பதுமன்றி அவர்களுடைய பெண்டிர்களையும் சிறுவர்களையும் பலாத்காரமாய்த் தங்களுக்கு வேலைக்காரர்களாகச் செய்துகொள்வது முண்டு; ஸ்திரீகளுள் வயதும், வடிவும், அழகும் பொருந்தியவர்களை மணம் செய்துகொள்வது முண்டு. சில நாடுகளில் ஜயமடைந்த மகமதிய இராஜாக்கள் ஜயிக்கப்பட்ட இராஜபுத்திர வீரர்களுடன் சிநேகம் செய்துகொண்டு, இருவருடைய சம்மதத்தின்மேல் ஒரு குடும்பத்தார் மற்றவருடன் சம்பந்தம் செய்துகொள்வதும் சாதாரணமாய் இருந்தது.

இவ்வாறு மாளவதேசத்தைச் சுற்றிலும் பல ஊர்களிலும், நகரங்களிலும், நாடுகளிலும் ஹிந்து மகமதியச் சம்பந்தங்கள் தாராளமாய் நடந்துவந்த போதிலும், அவ்வழக்கங்கள் மாளவதேசம் வரையில் எட்டவில்லை. மலைச்சாரலிலுள்ள அவர்களுடைய பல துர்க்கங்களை எதிர்ப்பது சாத்தியமில்லையென்று எண்ணினர் சில அரசர்கள். ஆகையால் பிரதாப சிங்கர் காலம் வரையில், ஒரு மகமதியனாவது உதயபுரியில் கால் வைத்தவன் அல்லன். தெய்வானுகூலத்தால் இதுவரையில் ஜனங்களும் மகமதியர் கொள்ளைக்கு உட்பட்டதுமில்லை. மேலும் இக்கதைக்காலத்து அரசுபுரிந்த பிரதாபர் மகா தேகவலிமை யுள்ளவர்; அதிபுத்திசாலி; நீதிநெறி தவறாதவர்; தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காப்பவர். ஜனங்களுக்கும் அவரிடத்தில் அதிக பக்தியுண்டு. குடிகள் விருத்தியாகவேண்டுமென்ற எண்ணத்தோடே இடைவிடாது உழைத்ததுபற்றி குடிகள் அவரைத் தந்தையாகப் பாவித்தனர். குடியுயரவே கோனுடைய செல்வாக்கும் உயர்ந்தது.

பிரதாபசிங்குக்கு, தசரதருக்குச் சுமந்திரன் போன்ற ஒரு மந்திரி இருந்தான். அவன் பெயர் சுமதி. சுமதியுடைய ஆலோசனையின்றிப் பிரதாபசிங்கன் ஒரு இராஜகாரியமும் செய்ய மாட்டான்.

ஐந்திரபுரியிலே தர்பார் நடந்ததினம் ஸாயங்காலம், ஐந்நூறுமைல் தூரம் அப்பாலுள்ள உதயபுரியில் பிரதாபசிங்கன் இராஜாங்க வேலை முடித்துவிட்டு அந்தப்புரம் சென்று, தன்னுயிர்க்காதலியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு உத்தியான வனத்தில் உலாவச்சென்றான். தோட்டத்திலுள்ள மரமடர்ந்த நிழல் நிரம்பிய இடங்களின் வழியே போகும்போது இனிமையாய் வீசும் தென்றல், அப்பொழுதுதான் மலர்ந்த மல்லிகை முல்லை இவற்றின் வாசனையைத் தேக்கிவர, அந்த நறுமணத்தை நுகர்ந்து, ஆனந்தத்துடன், பக்ஷிகள் பாடும் கானத்தையும், கீழே ஓடும் சிற்றருவிகள் செய்யும் மெல்லிய ஒலியையும், மரங்களின் ஊடேசெல்லும் இளம் காற்றின் அமர்ந்த ஓசையையும் கேட்டு, மனவமைதியுடன் அத்தோட்டத்து நடுவே செய்துள்ள லதாக்கிரகத்தில் சந்திரகாந்தக் கல்லால் இழைத்த ஆஸனத்தில் இருவரும் உட்கார்ந்தார்கள். வடிவழகுக்கேற்ற பெயர்பெற்ற காந்திமதி என்னும் பட்டமஹிஷி தான் வழிநெடுகக் கொய்துவந்த நறுமணம் நிரம்பிய தேன்வழியும் புஷ்பங்களைத்தொடுத்து, அத்தொடையலை இரண்டு பாகமாக்கி ஒன்றைத் தன் பிராணநாதன் முடிமீதும் இன்னொரு பாகத்தைத் தன் தலையிலும் அணிந்துகொண்டாள். அவ்வாறு சூட்டிய தன் மனைவியின் வலது கரத்தைப்பற்றித் தன் இருகரங்களிலும் பிடித்துக்கொண்டு புன்சிரிப்புடன் அவள் முகத்தை உற்று நோக்கினான். இதுவரையில் இருவரும் ஒருவார்த்தைகூடப் பேசவில்லை. உற்று நோக்கிய முகத்தை ஏறிட்டுப் பார்த்து, ஸூக்ஷ்ம புத்தியுள்ள காந்திமதி "நாதா! நீவிர் இன்று இராஜகாரியத்தில் அதிக சிரமம் எடுத்துக்கொண்டீர் போலும்! ஆழ்ந்த யோசனையுடன் இருக்கின்றீர். வழிவிளங்காக் கடினமான இராஜ இரகசியங்கள் ஏதாவது மனதை வருத்துகின்றனவோ? என்னுடன்

இதுவரையில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே. மனத்தளர்வைக்காட்டும் இம்முகவாட்டத்திற்குக் காரணம்யாது? என்னிடம் தெரிவிப்பதில் பயனுண்டென்று எண்ணினால், நானும் அறிந்துகொண்டு தங்கள் கவலையைப் பாகம் செய்து கொள்ளுகிறேன். எப்படி இருப்பினும், உம்முடைய முகவாட்டம் என் மனத்தைக் கலக்குகின்றது" என, அரசன் இன்னமும் புன்சிரிப்புடன், சற்றே பெருமூச்சுவிட்டு "காதலியே! இம்மனத்தளர்ச்சி முற்றிலும், இராஜ்யபாரத்தால் வந்ததன்று. நம் மிளங்குமரியின் வயதை எண்ணுங்காலத்திலெல்லாம்என்மனம் இவ்வாறே தளர்கின்றது. அவளுக்கோ வயது 16-க்கு மேல் ஆய்விட்டது. 16 வருஷத்துக்குமுன் நாம் இருவரும் மகப்பேறு இல்லாக் குறையால் அரவல்லிமலைமேலுள்ள, சுயம்புவாய் விளங்கும் எம்பெருமான் ஜோதிவடிவான சிவபிரானைச் சேவித்ததும், அவன் கருணைபெறும்பொருட்டுக் கடுநோன்புமேற்கொண்டு அவன் பாதாரவிந்தத்தில் அடைக்கலம் புகுந்ததும், அவ்விடத்தில் எம்பெருமான் திருவருளால் சித்த புருஷர் நம் முன் தோன்றியதும், அவர் அநுக்கிரகத்தால் நமக்கு இக்குமரி அவதரித்ததும், எனக்கு நேற்று நடந்ததுபோல் தோன்றுகின்றன. நமது மகளோ, இப்பதினாறு ஆண்டினுள் அறிவும், வனப்பும்,மனவலியும் வாய்ந்து, இராஜபுதனத்தையே விளக்கவந்த லக்ஷ்மி போல் விளங்குகின்றாள். இவ்விஷயத்தை நாம் இருவரும் நன்கு அறிகின்றோம். அவளுக்குத் தக்க கணவனை நாம் எவ்வாறு தேடப் போகிறோம். பெண்மணியே! இதுதான் என் மனத்தை வருத்துகின்றது. இது விஷயமாகவே 10, 15 நாளாய் நானும் சுமதியும் இடைவிடாது ஆலோசனை செய்கிறோம்" என்றான்.

இதைக்கேட்டதும், அரசியின் முகமும் வாடியது; கண்கள் சலித்தன; அரசிக்கும் இவ்வெண்ணம் அடிக்கடி துக்கத்தை உண்டு பண்ணிற்று; ஆனால் இவ்விஷயத்தில் அரசன் மனம் இவ்விதம் பதைக்கும் என்று எண்ணவில்லை. கல்யாண விஷயத்தைப்பற்றி இராணி பேசின ஸமயங்களில் எல்லாம் பிரதாப சிங்கர், 'இராஜஸ்தானத்தில் இராஜபுத்திரர்களுக்குக் குறைவா; இதற்குக் கவலைப்படுவதா; போ! போ! இதற்கென்ன கவலை?' என்று தன் மனைவி சொல்வதைத் தட்டிப்பேசுவார். அவளும் புருஷனுடைய தைர்யத்தை ஒட்டித் தானும் தைர்யமடைவாள். இணையில்லாத் தன் புருஷன் எப்படியாவது தன் அருமைப் புதல்விக்குத் தக்க வரன் நிச்சயம் செய்வார் என்பது அவளுக்குத் தீர்மானமாய்த் தெரிந்தது. உண்மையாகவே மாப்பிள்ளை தேடுவது சிரமமான காரியம் என்று பிரதாபசிங்கருக்குச் சில நாளைக்கு முன்வரையில் தோன்றவில்லை. மந்திரியுடன் உட்கார்ந்து யோசிக்கும்போது, குலம், கோத்திரம், மரியாதை, உலகவாழ்வு முதலான எத்தனையோ விஷயங்களில் பல பிள்ளைகள் கீழ்ப்பட்டு இருந்தனர். தக்க வம்சத்தில், ஒருவர் இருவரே கிடைத்தனர். அரசன் விழித்துக்கொண்டான். அப்பொழுது முதல், கல்யாண விசாரமே பெரு விசாரமாயிற்று. அரசனுடைய விசாரத்தைக் கண்ட அரசிக்கோ ஒன்றும் தோன்றவில்லை.

இருவரும் சிறிது நேரம்வரையில் மௌனமாய் இருக்க, அரசன் "காந்திமதி! என் மனதை வருத்துவது இன்னொரு கவலை. நமது இரர்ஜஸ்தானத்துக்கும் ஆரிய அரசர்களுக்கும், நமது நாகரீகத்துக்கும் தீராப்பகை கொண்டு நம்மவரைக் கருவறுக்கும் மகமதியப் பாக்ஷாக்கள் நம் குமரியைக் கைப்பற்றும்பொருட்டு, கொடும்பாவிகளான, நாகரீகமற்ற, வானரசேனைகள் போன்ற, ஹூணர்கள் முதலியோரைக் கூலிப்படைகளாகக் கொண்டு, நம் மேற்சென்று நம் நாட்டிற்குத் தீங்குவிளைவிப்பார்களோ என்றும் எண்ணுகிறேன். அதை எண்ணுங்கால் என் மனம் பதைக்கின்றது. நமது குமரி காரணமாகக் குடிகள் நாசமடைவார்கள். ஆகையால் தோள் வலியும், துணை வலியும், அறிவும், சூழ்ச்சியும், பெருந்தன்மையும், தர்மமும் நிறைந்த இளவரசனைத் தேடிப் பிடித்து அவனுக்கு நமது குமரியைத் தானம் செய்து விட்டேனேயானால் தேசத்துக்கும் க்ஷேமம் தேடினவனாவேன்; தகப்பன் குமாரிக்குச் செய்யவேண்டிய கடமையும் முடித்தவனாவேன். அப்புறம் என் முன்னோர் போன்று உன்னுடன் ஹிமயமலைச்சாரலில் சென்று எம்பெருமான் மீது மனதைச் செலுத்திக் கவலையற் றிருப்பேன். சீக்கிரத்தில் என் எண்ணம் முடிவுபெறு மென்ற நம்பிக்கையும் தோன்றுகின்றது. நம்பிக்கை

பலப்படும்போதல்லவா மனதுக்கு பயமும் அதிகரிக்கின்றது? இதல்லவா உலக வியற்கை! தீவில் விடப்பட்டவனுக்குத் தனியாய் இருக்கும்வரையில் தனியாய் இருக்கிறோமே என்ற ஒரே பயம்; தூரத்தில் கப்பலைக் கண்டானாகில் அதில் இருப்பவருக்கு ஜாடை காட்டுகிறான். அவர்கள் இவனைக் காப்பாற்றவரும்போது மனத்தில் நம்பிக்கை ஏற்படுகின்றது; அந்த நம்பிக்கையுடன் கப்பல் பாறையில் பட்டு உடைந்துவிடுமோ என்ற கவலை எவ்வளவு பலமாய் இருக்கும் என்பதை நீயே யோசித்துப்பார்! அங்ஙனம் இருக்கின்றது என் மனது!" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தான்.

அரசி "என் அன்பே! நீர் ஆலோசிப்பது மிகவும் சரியென்று சொல்வதைத்தவிர நான் இன்னும் என்ன சொல்லக்கூடும்! எனக்கு ஒன்றும் தோற்ற வில்லையே! மேனாள் நான் என் அருமைத் தகப்பன் வீட்டில் இருக்குநாளில் அத்தேசத்தைக், கோரி வம்சத்தார் படையெடுத்ததும், பெண்டிர்களை அவர்கள் வருத்தியதும், அதற்காக என் தகப்பனார் எங்களை உதயபுரிக்கு அனுப்பியதும், தமது உதவியால் என் தகப்பன் அவர்களை ஒருவாறு வென்றதும், எனக்கு ஞாபகம் வருகின்றது. ஹா! ஹா! அவர்கள் கொடுமையை என்னவென்று சொல்வது!——" என்று துக்கப்பட்டாள்.

அரசன் "இதையெல்லாம் திரும்பத் திரும்ப ஆலோசனை செய்து கடைசியாய் நமது—" என்று வாயெடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, "ஜயவிஜயீபவ! ஆஸ்தான மண்டப வாயிலில் சுமதி வந்து நிற்கின்றார். உடனே சமுகத்தைத் தரிசிக்க வேண்டுமாம். உத்தரவு கேட்கின்றார்" என்று ஒரு சேடி எட்டி நின்று தாழ்ந்த குரலுடன் சொல்லவே, அரசி "சுமதி வருவதில் என்ன தடை; அரசே! அவரை வரச்சொல்வோமே?" என அரசன் "சத்தியவல்லி! சுமதிக்காகவே நாங்கள் இங்கு காத்திருப்பதாகச் சொல்லி உடனே உள்ளே வரச்சொல்" என்றான். சத்தியவல்லி, மின்னல் தோன்றி மேகத்துள் மறைவது போல் மரங்களுக்கு நடுவே மறைந்தாள்.

அரசன் "என் உயிர்க்காதலியே! பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று இப்பொழுது சுமதி வருவது. நாம் செய்யும் ஆலோசனை சுமதிக்குத் தெரிவது மிகவும் நல்லதேயல்லவா? சுமதி எங்கிருந்து வருகிறார் தெரியுமா உனக்கு? என் அருமை மனைவியே நீ அறியாய்! அவரை இதே விஷயமாய் ஜோதிபுரிக்கு அனுப்பியிருந்தேன். ஆரிய அரசர்களுக்குள் நமது ஜயபாலனைவிட ஒருவரும் நமது லலிதாம்பிகைக்குத் தக்க கணவன் என்று எனக்குத் தோற்றவில்லை. அதைப்பற்றி ஜயபாலனுடைய அபிப்பிராயத்தை அறிந்துவரும்பொருட்டுத்தான் சுமதியை ஜோதிபுரத்துக்கு அனுப்பினேன். மேலும் ஜயபாலன் நமக்கு நெருங்கிய பந்துவல்லவா? அவன் தகப்பன் எனது அம்மான் குமாரன்; மகமதியர்களுடன் சம்மந்தம் செய்துகொண்டவனு மல்லன்; வயது 25 ஆயிற்று; அதிபுத்திசாலி யென்று சொல்லுகிறார்கள். தைரியமோ சொல்லி முடியாது. 18-வது வயதிலேயே மகமதிய ஆப்கன் தேசத்தார் ஜோதிபுரியை எதிர்த்தபோது ஆட்டு மந்தையில் புலி பாய்ந்ததுபோல் அவருடன் போராடிச் சின்னாபின்னப் படுத்தினானாம். அவனையே நம்து செல்வக் குழந்தைக்குக் கணவனாக்க வேண்டும் என்பது எனது கோரிக்கை. ஈசன் திருவுள்ளம் எப்படியோ! நல்லவேளையாய்ச் சுமதியும் திரும்பிவந்து விட்டாரே. அவர் சொல்வதைக் கேட்டால் எல்லாம் விளங்குகின்றது" அதற்குள் சுமதியும் வர—"வாரும் மந்திரி! இப்படி உட்காரும்" என சுமதி, அரசன் அரசி இருவருக்கும் தக்கபடி வந்தனம் செய்து உபசாரம் சொல்லி அவருக்கு எதிரில் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தான்.

அரசன்.—"ஜோதிபுரியிலிருந்து இப்பொழுதுதான் வந்தீர்போலும்! அவ்விடத்தில் எல்லோரும் சுகமா? நீர் போன காரியத்தைப் பற்றி இப்பொழுதுதான் நமது அரசியிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவ்விஷயத்தைக்குறித்து நீர் என்ன சொல்லப் போகிறீரோ அதைக்கேட்க மிகவும் ஆவல்கொண்டிருக்கின்றோம்."

மந்திரி.—"மேன்மை பொருந்திய எனது அரசியர் அபிப்பிராயம் என்ன அவ்விஷயத்தைப்பற்றி?"

அரசி.—"எனது அபிப்பிராயமா? அது என்ன அப்படிக் கேட்கிறீர்கள்! நீங்கள் இருவரும் தீர்க்காலோசனை செய்து, மேற்

கொண்ட காரியம் எனக்கும் சம்மதமே; அதைப்பற்றித் தடையும் உண்டோ! என்னைக் கேட்பானேன்?"

சுமதி.—"அப்படியானால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. போனவாரம் திங்கட்கிழமையன்று இவ்விடம் விட்டுப் புறப்பட்டதும், அரவல்லீ மலையைத் தாண்டிச் செல்ல இரண்டுநாள் ஆய்விட்டது. பிறகு இரண்டுநாள் வழி நடந்து வெள்ளிக்கிழமை தினம் ஜெயபாலர் அரண்மனை சேர்ந்து விசாரிக்கவே, அவர் அன்று காலைதான் வேட்டையாடச் சென்றதாகவும், விலங்குகளால் குடிகளுக்குண்டான இடர்களைத் தீர்த்துவிட்டு வேட்டை முடித்துவர இரண்டு நாள் செல்லுமென்றும் அரண்மனை அதிகாரியின் மூலமாய் அறிந்து கொண்டோம். அரண்மனையிலேயே நாங்கள் விருந்தினராக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் அங்கேயே ஒரு விடுதியில் இரண்டுநாள் தங்கினோம். ஞாயிற்றுக்கிழமை காலையில் அரசர் வேட்டம் செய்து களைத்து வந்தனர். எனது வரவு கேட்டதும் களைப்பையும் கவனியாது என்னை வரவழைத்துச் சற்றுநேரம் அளவளாவி, நான் வந்தபொழுது தாம் ஊரில் இல்லாமல் இருந்ததற்காகவும், இரண்டுநாள் அலுவலுள்ள மந்திரியாரைத் தாமதம் செய்து விட்டதற்காகவும் வருத்தப்பட்டார். நான் என்னால் கூடிய மட்டில் அவருக்கு உபசாரம் சொல்லிய பின், எல்லோருடைய க்ஷேமத்தையும்விசாரித்துத் தாம் மறுபடி என்னை அழைத்துப் பேசுவதாகச் சொல்லிவிட்டு இளைப்பாறப் பூஞ்சோலையில் சென்றுவிட்டார்."

அரசி.—"ஹா! ஹா! என்ன பெருமை! என்ன மரியாதை! மஹா கம்பீரகுணமுடையவர்போலும் அவ்வரசு!"

சுமதி.—"தாயே! இம்மட்டுமோ! நம்மைக் கௌரவப்படுத்தவேண்டுமென நாம் இறங்கியிருந்த இடத்தில் நமது புலிக்கொடியைப் பறக்கவிடும்படியும், கோட்டைவாயிலிலும், ஆஸ்தான மண்டபத்திலும், தோரணவீதியிலும், தமது யாளிக்கொடியுடன் நமது புலிக்கொடியைப் பறக்கவிடுக என்றுப் பறையறைவித்தனர். அன்றிரவே போஜனமுடித்து, தனது பள்ளியறைக்கு என்னை வரும்படி சொல்லியனுப்பினார். நான் போனதும் பின்னொரு முறை உபசார வார்த்தைகள் சொல்லி "வந்த விஷயம் சொல்லுக" வென்றார். அப்பொழுது யான் தாம் சொன்னவற்றையும், அவ்வாறு சம்பந்தம் ஏற்படுவதால் உண்டாகும் க்ஷேமத்தையும்,சம்பந்தம் ஏற்படவேண்டிய அவசியத்தையும் எடுத்துக்காட்டினேன். அதற்கு ஜயபாலர் சிறிது நேரம் மௌனமாய் இருந்து ஆலோசனை செய்துவிட்டு, 'ஐயா! என் தகப்பனாரும் உம்மரசும் நெருங்கிய பந்துக்கள்; மேலும் ஆப்த சினேகிதர்கள்; என் தகப்பனார் இறக்கும் வரையில், தனக்குப் பிரதாபசிங்கரைவிட உற்ற நண்பர் இல்லை என்றே சொல்லிக் கொண்டிருந்தார். ஆகையால் அவர் எனக்குப் பிதா போன்றவர். அவர் உத்தரவுப்படி நடக்கச் சித்தமா யிருக்கிறேன். ஆயினும் என் தகப்பன் இறந்தது முதல், பிதாவுக்குப்பிதாவாய் என்னையும்,அரசுக்குஅரசாய் என் பிரஜைகளையும் காப்பாற்றிவரும் என் உத்தம மந்திரியாராகிய சிதானந்தரை முதலில் ஆலோசனை கேட்கவேண்டும். அவர் ஸம்மதமின்றி ஒன்றும் செய்ய இயலாது; அவரையும், அவர் மூலமாய் என் குடிகளின் மனப்போக்கையும் விசாரித்து ஒரு வாரத்துக்குள் உம்மரசருக்கு சமாசாரம் அனுப்புவேன். தவிர என் அன்னை அகிலாண்டநாயகியார் இருக்கிறார். அவருடைய மனம் கோணாமலும் நான் நடந்துகொள்ளவேண்டும். இவ்விஷயங்களை நீவிர் நும் வீராதிவீரரான அரசருக்கு இயம்பலாம். முன்னமேயே அனாவசியமாய் இரண்டு நாள் நிறுத்திவிட்டேன். இனி நீர் தாமதிக்காமல் புறப்பட்டு உதயபுரி போகலாம். எல்லோரையும் கேட்டுத் தக்க பதில் சீக்கிரமே அனுப்புகிறோம்' என்று சொன்னார்."

சுமதி சொல்லி முடித்தவுடன் அரசனுக்கும் அரசிக்கும்அதிக சந்தோஷமாயிற்று. புன்சிரிப்போடுஅரசன் அரசியின்முகத்தைப்பார்த்தான். இராணியும் மனத்துக்குள் "இவ்வரன் நமது மகளுக்கு நிச்சயம் ஆய்விட்டால் எவ்வளவு சந்தோஷமா யிருக்கும்!" என்று தன் மனதிலேயே ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், சாயங்கால வேளையான படியாலே மரத்தின்மேல் உட்கார்ந்து கத்திக்கொண்டிருந்த காக்கைகளில் இரண்டு சண்டைபிடித்துக்கொண்டு மூவருக்கும் நடுவில்

அன்னம் மிகக் கொள்வானும் ஆடை அழுக்கு ஆவானும் பதர்.

'பொத்' தென்று விழுந்து பலமாய்க் கத்திக்கொண்டே இரண்டு நொடியில் பறந்தோடின. மூவருக்கும் முகங்கள் வெளுத்தன. உடல் வியர்த்தது; கைகால்கள் பதறின, இராணி 'ஓ' வென்று கத்திக்கொண்டு அவ்விடம் விட்டோடத் தலைப்பட்டாள். அரசர் "ஹா, ஹா, பயப்படாதே! பயப்படாதே!" என்று அவளைப் பின்தொடர்ந்தார். மந்திரி என்ன செய்வான்? பாவம்! மேலும் கீழும் பார்க்கின்றான். சற்றுத் தூரத்தில் அரசனும் அரசியும் நிற்கவே, மந்திரி மெதுவாய் அங்கே சென்றான். ஒருவர் மனக்கலக்கத்தை மற்றவர்களுக்குக் காட்டக்கூடாதென்று அம்மூவருள் ஒவ்வொருவரும் பிரயாசைப் படுகிறார்கள். முதலில் அரசன் மனத்தைத் தேற்றிக்கொண்டு "என் அன்பே! ஏதோ இரண்டு காக்கைகள் சண்டை பிடித்துக்கொண்டு கீழ் விழுந்தால் நீ அதற்குப் பயப்படலாமா? ஏன் அப்படி ஓடிவந்தாய்? தினம் தினம் இப்படித்தான் ஸாயங்காலத்திலும் காலையிலும் பக்ஷிகள் சண்டை போடுகின்றன. நாம் அவற்றைக் கவனிக்கக் கூடுமா?" என்று அரசிக்கும், சுமதியை நோக்கி "சுமதியாரே அதிகப் பிரயாசைப்பட்டு வழிநடந்துவந்திருக்கின்றீர். நாளை மறுபடி பார்ப்போம். எப்படியும் ஜயபாலர் அனுப்பும் சமாசாரத்தை எதிர்பார்ப்போம். நாம் போய் வரலாமா?" என, சுமதி "சித்தம், அப்படியே செய்யலாம்" என்று புறப்பட்டான். அரசனும் இராணியும் அந்தப்புரம் நோக்கிப் புறப்பட்டனர். (தொடரும்.)

நமது சிறு கதை

OUR SHORT STORY

நன்னெறி

நின்றவூர்ப் பக்கத்தில் அது ஒரு சிறு கிராமம். செல்லுகுடி என்ற பெயர் வழங்கிவந்தது. பெரும்பான்மையும்,இக்கிராமத்திலுள்ள நஞ்சை நிலங்களைப் பயிரிடும் குடியானவர்களேதான் வசித்து வந்தார்கள். அநேகமாக அவ்வூரிலிருந்த ஜனங்களெல்லாம், ஒரே ஜாதியாராயும், கட்டுப்பாடுள்ளவர்களாயும் விவேகமோ,அவிவேகமோ, தங்களுடைய ஸமுதாயப் பழக்க வழக்கங்களைக் கைவிடாதவர்களாயுமிருந்தார்கள். அவைகளில் சில, மிகவும் ஆழ்ந்த கருத்தோடு விதிக்கப்பட்டவைகளாயிருந்தன. சில, ஏற்பட்டகாலத்தில் பயன் தரக் கூடியவையா யிருந்தாலும், தத்காலத்தில் பிரயோஜன மதிகமில்லாதவை யாய்விட்டன. இன்னும் சில, நாகரீகமடைந்து விளங்கும் நம் நேயர்களுக்கு வியப்பையும் நகைப்பையும் தரும்.

இத்தகைய பழக்கங்களை இங்கு விவரிப்பது நம் நோக்கமல்ல. அதில் ஜாஸ்தி ஆவலுள்ளவர்கள் நேரில் சென்று கண்குளிரப் பார்த்தாநந்தித்து வரலாம். இங்கிருந்து ஒருநாள் ப்ரயாணந்தானே. அது ஒரு ப்ரமாதமா? ஆனாலும் நம் கதைக்கு அவசியமாயுள்ள ஒரேயொரு விசித்ரமானஏற்பாட்டைமட்டும்சொல்வோம். இந்தக் 'கரும்பர்' என்ற ஜாதியாருள் குழந்தை பிறந்தால், அதற்குப் புண்யாவாசனம் பண்ணும்போது யாராவது ஒருவர், அக்குழந்தையின் தந்தை தாய் கைவிட்டு விட்டாலும், குழந்தையைத் தான் காப்பாற்றுவதாக வாக்ப்ரதானஞ் செய்யவேண்டும்.அதன் பின்பே மற்றச் சடங்குகள் நடக்கும். எக்காரணத்தாலாவது அப்படி வாக்களிக்க ஒருவரும் முன்வரவில்லையென்றால், அக்குழந்தை ஜாதியில் சேர்த்துக் கொள்ளப்படாது. அதைச் "சனியன்" என்று எல்லோரும் விலக்கி விடுவார்கள். ஆனால் விசேஷமாக அப்படி நேருவது கிடையாது. மாமனோ பாட்டனோ, யாராவது ஒருவர் கைகொடுக்க மாட்டார்களா?

நிற்க, கிராமத்தின் தென்னண்டை வீதியில் இருக்கும் ஒரு வீட்டில், வாசலில் சித்ரமாக மாக்கோலங்கள் போட்டும், மாவிலை, தென்னங்குறுத்து முதலியவைகளால் தோரணங்கள் கட்டியும், ஏதோ வொரு சுபகார்யத்தின் அறிகுறிகள் விளங்குகின்றன. என்னவாயிருக்கலாம்? உள்ளே போகலாம். கூடத்தில் பாய்விரித்து ஒரு ஸ்த்ரீயும் புருஷனுமே உட்கார்ந்து, கவலை காட்டும் முகத்துடன் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். புருஷனுக்கு ஸுமார் 45 வயதிருக்கலாம்.

'அன்றைக்குத் தின்கிற பலாக்காயைவிட இன்றைக்குத் தின்கிற களாக்காய் பெரிது.

சரீரக்கட்டுள்ளவனாகவும், நல்லெண்ணங்களை மனதி லுள்ளவனாகவும் காணப்படுகிறான். ஸ்த்ரீக்கும் ஸுமார் 35 வயதிருக்கும். அவர்களிருவரையும், அவ்வீட்டிலுள்ள ஸாமான் வகைகளையும் கவனிப்போமானால் நிரம்பவும் எளியவர்கள் என்பது விளங்குகிறது. என்றாலும், அன்று நடக்கவேண்டிய வைபவத்தை யுத்தேசித்து, விலையுயர்ந்த தல்லாததாயினும், புதிதான வஸ்திரங்களை அணிந்திருக்கின்றனர்.

“நான் அதற்குத்தான் அப்பொழுதே சொன்னேன். எது எப்படியிருக்குமோ? வருவது என்னவராதது என்னஎன்று யாரறிவார்கள். நமக்குவேண்டியவர்கள் 4 பேர் இல்லாத இடத்துக்குப் போகவேண்டாமென்று. ஏதோ, இங்கேவந்தால் கோட்டையைப் பிடித்துவிடலாமென்று வந்தீர்கள். ‘ஏழை சொல் அம்பலமேறுமா?’ இப்பொழுது இத்தனை வருஷங் கழித்து, நமக்கு மந்தபாக்யமுண்டாகுமா என்றேங்கி யிருந்து, ஒரு புருஷக்குழந்தை பிறந்துங்கூட, அதற்குப்புண்யவாசனத்தன்று கண்ணீர் விடும்படியான ஸ்திதியி லிருக்கிறோம். கடவுளுக்கு இதுவும் ஒரு விளையாட்டாகும்” என்று ஒரே மூச்சாய்ச் சொல்லி முடித்தாள்.

“வாஸ்தவந்தான். நீ சொல்லவில்லையென்று யார் சொன்னார்கள்? இருந்தாலும், தான் என்ன? இப்படி நிஷ்கண்டகர்களாக விருப்பார்கள் என்று எப்படி யெதிர் பார்ப்பது? என்ன ப்ரமாதம், வாய்ச்சொல்லில் முத்தா உதிரப்போகிறது? ஏதோ சாஸ்திரத்துக்காகப் ‘பெற்றோர் கைவிட்டாலும் நான் காப்பாற்றுவேன்’ என்று சொன்னாலென்ன? ஓட்டியாகொள்ளும்? இல்லை நாம்தான் ப்ரமாண நஷ்ட வ்யாஜ்யம் தொடுக்கப்போகிறோமோ—”

“ஆமா. ஊரிலுள்ளவாளுக் கென்னவந்தது? ஏழை எளியவர்கள் என்றால், எல்லாருக்குமே ஏளனந்தான். ‘பத்தும் பெத்துப் பவிஷாக வாழ்ந்தால், நான், நீ என்று வந்து விழுவார்கள். நம்மால் யாருக்கென்ன ஆகணும். அதிருக்கட்டும், நீங்களும் யாரெல்லாமோ கேட்டீர்களே, என்னதான் சொன்னார்கள்?”

“ம்—சொன்னார்கள். ராமன் வீட்டிற்குப் போய்ப் பேசினேன். அவன் சொன்னான் ‘அப்பா, வாக்களிப்பதென்றால் அக்கார்யம் நம்மால் முடிந்ததா என்று சீர் தூக்கிப் பிறகு செய்ய வேண்டும். யோசனையில்லாமல், வாக்குக் கொடுத்துவிட்டு, பின்பு விழிப்பதில் என்னபலன்? என்னமோ பாட்டுக்கூட உண்டே. என்ன—

நகையமுங்க நின்றோடி பொய்த்தனிரை தொடீஇ
செய்யன்றி கொன்றாரில் குற்றமுடைத்து—,

என்று. என்னமோ இவன்தான் ஹரிச்சந்திரன்மாதிரி பேசினான்”

“அப்புறம் யாரைக் கேட்டீர்கள்?”

“கோடிவீட்டுத்தடிராங்கனைக்கேட்டேன். ‘நம்மால் முடியாதப்பா அந்த வேலை யெல்லாம். வீண்தண்டாவி லகப்பட்டு விழிப்பானேன்? நம் வேலையை நாம் பார்ப்பதற்குக்கூட ஸாவகாசமில்லை. பகல் 60 நாழிகை யிருந்தால் தேவலை யென்று தோன்றுகிறது. அந்த லக்ஷணத்தில் பிறர் கார்யத்தைத் தோளிற்போடுவானேன்’ என்று ஏதோ நம்முடைய குடும்ப பார முழுமையும் இவன் தாங்கவேண்டியவன் போல் பேசினான். அருவருப்பாயிருந்தது. வந்துவிட்டேன்.”

“அப்புறம்?”

“ஸரி, இந்தப் பேச்சில் என்ன லாபம்? விட்டுத்தள்ளு. மனதுக்கு நிரம்ப சல்லியமாயிருக்கிறது. ஒவ்வொருவனும் ஏதோ புராணம் படிக்கிறானே யொழிய, ஒருவனுக்காவது, மனிதர்கள் ஒருவர்க்கொருவர் உதவுவதே ஜீவ தர்மம். அதிலும் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்களுக்குப்பரஸ்பர உதவி அத்யாவச்யகமென்று தெரியவில்லை. படித்தென்ன, பதவியிருந்தென்ன? மனதில் ஈவு இரக்கமல்லவா மனிதனுக்கழகு?”

“பின் மேலே கார்யம் எப்படி நடக்கிறது? இப்படியே விட்டுவிடுங் கார்யமா? ஆயிரங் காலத்துப் பயிரல்லவா நம்மருமைக்குழந்தை? எதற்கும் நம்மாலானதைச் செய்ய வேண்டாமோ? மணி எட்டு இருக்கும்போ லிருக்கு. மெள்ள நின்றவூருக்குத்தான் போய்ப்பார்த்து வாருங்களேன்.”

“அதில் என்ன உபயோகம், நாம் இங்குவந்து ஒருவருஷமாகிறது. அப்படியிருந்தும் இங்கேயே, நமக்குதவ ஒருவரும் முன்வரவில்லையென்றால், நமக்கு ஜாஸ்தி யறிமுகமே யில்லாத வூரில், நம்மை யார் கவனிக்கப் போகிறார்கள்? ஆனால், அந்தக் குறைதான் எதற்கு? அங்கும்போய்ப் பார்த்துவிட்டால், பச்சாத்தாபத்திற்கு இடமில்லை. முடிவு பகவான் கையிலல்லவா இருக்கிறது?” என்று சொல்லிவிட்டு நின்றவூரை நோக்கி நடந்தான்.

வெயில் மந்தமாக அடித்துக்கொண்டு தேகத்திற்கு ஹிதமாக விருந்தது. நந்தவனத்தின் வழியாகப் போகும்போது பரிமளத்தோடு கூடிய குளிர்ந்த காற்றுவீசி, மனிதனின் கல்நெஞ்சத்தாலுண்டான மனப்புண்ணை மாற்றிற்று. இலைகள் அசைவதாலுண்டான ‘சல சல’வென்ற ஓசையும், அங்குமிங்குமோடியாடி இரைபொருக்கி விளையாடும் பக்ஷிகளின் ரமணீயமான த்வனியும், அவனுக்குந் தெரியாமலே ஒருவித உத்ஸாகத்தை எழுப்பின. ஆகா! பகவத் ச்ருஷ்டியில் குறைந்த அறிவுள்ள பிராணிகளை உத்ஸாகப்படவும், ஸந்தோஷத்தை யுண்டாக்கவும் சக்தியுற்றிருக்கின்றன. பகுத்தறிவையும் படைத்த மனிதன் மட்டுந்தான் கவலையையும், கஷ்டத்தையும் விளைக்கிறான்” என்று எண்ணமிட்டுக்கொண்டே நிமிர்ந்தான். கருடன் ஒன்று உல்லாஸமாகப் பறந்துகொண்டிருந்தது. கருடன் விஷ்ணுவின் வாகனமாகையால் பூஜ்யதையானது என்ற கொள்கையுடையோனாதலால், “ஹரி! ஹரி! க்ருஷ்ண, க்ருஷ்ண!” என்று பக்தியோடு அஞ்சலிபண்ணிவிட்டு, “ஸரி, நல்ல சகுனந்தானாகிறது. போகுங் கார்யம் பலியாது போகாது” என்று தைர்யமுண்டாக, மனோத்ஸாகத்தோடு நடக்கலானான்.

நாலடி நடப்பதற்குள் எதிரில் ஒருவன் எதிர்ப்பட்டான். எதிர்ப்பட்டவன் இவனைக் கண்டதும் நின்று “ஏனப்பா? எங்கே காலை நேரத்தில் இவ்வளவு வேகமாகச் செல்லுகின்றாய்?” என்றான்.

“ஐயா! நமஸ்காரம். நிரம்ப நாட்கள் குழந்தையில்லாமலிருந்து இப்பொழுதுதான் கடவுள் க்ருபையால் ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. அதற்கு இன்று புண்யாவாசனம். எங்களுக்குள் ஒரு வழக்கம், இன்று யாராவது, அக்குழந்தையை ரக்ஷிப்பதாக வாக்களித்தாலொழிய, குழந்தை ஜாதிப்ரஷ்டமாகும் என்று. கிராமத்திலுள்ளவர்கள் ‘நான் மாட்டேன், நான் மாட்டேன்’ என்று சொல்லிவிட்டதால், கடைசி ஆசைக்கு நின்றவூர் போய், யாரையாவது கேட்கலாமென்று போகிறேன்.”

“இதென்ன? நிரம்ப விந்தையான பழக்கமாகவல்லவோ இருக்கிறது? ஆமா, அப்படி ரக்ஷகர் வருவது யாராகவிருக்கவேண்டுமென்ற நியதி யேதாவதுண்டோ?”

“அதெல்லாமொன்றுமே கிடையாது. யாராயிருந்தாலும் ஸரியே.”

“அப்படியானால், கவலையை யொழியுங்கள். என்னோடு வீடு திரும்புங்கள். நான் கங்கணங் கட்டிக்கொள்கிறேன் உங்கள் குழந்தையை ரக்ஷிக்க.”

“ஐயா, அநேக கோடி நமஸ்காரம் உமக்கு. நீர் எனக்குச் செய்வதுதான் ஆபத்ஸகாயம். நீர் மகராஜனா யிருக்கவேண்டும்” என்று மனதார வாழ்த்திவிட்டு, திரும்பி வீடுவந்து சேர்ந்தான் புது மனிதனோடு.

கிரமப்படி, புண்யாவாசனம் நடந்தது. ஆடம்பரமாகச் செய்யக் கையிற் பொருளில்லாவிட்டாலும், செய்யவேண்டிய கார்யங்கள் ஒன்றும் விடாமல் செய்து, ஒரு பெருங்கவலை நீங்கினதாக மகிழ்ந்தார்கள் தாயும் தகப்பனும்.

குழந்தையும் லக்ஷணமாயும், புத்திகோசரமாயும் வளர்ந்து, மழலைச் சொற்களாலும், அரிய பல சிறு விளையாட்டுகளாலும் பெற்றோரை ஸந்தோஷக் கடலில் மூழ்குவித்தது. காலக்ரமத்தில் வயதும் 5 முடிந்தது. ஸர்க்காரில் ஏற்படுத்தியிருக்கும் கட்டாயப்படிப்புப் பள்ளியில் வித்யாப்யாஸத்திற்காக விடப்பட்டது. குழந்தையின் குசாக்ரமான புத்தியைக் கண்டு எல்லாருமே வியக்கும்படி யிருந்தது. படிப்பில் மிகுந்த ஆஸக்தியுள்ளதாயும், ஒருதரம் சொல்லுமுன் க்ரஹிக்கும் சக்திவாய்ந்ததாயுமிருந்தது. அந்தக் கீழ்தரக்கலாசாலை உபாத்யாயர் அவ்வளவாக புத்திசாலி யென்று சொல்லவிடமில்லை. குழந்தை அவரை ஸதா, ‘அதென்ன’ ‘இதென்ன’ ‘அதேன்’ ‘அதெப்படி’ என்று கேள்விகேட்டு அவரை வாயெடுக்காமல் செய்யும். ‘இப்படி ஓயாமல் ஏதாவது கேட்டுக்கொண்டேயிருந்தால் அதிக் ப்ரஸங்கி என்று எல்லாரும் சொல்லுவார்கள்’ என்று சொல்லிக் குழந்தையைப் பயமுறுத்துவதை உபாயமாகக்கொண்டார் அவ்வுபாத்தியாயர்.

அப்பள்ளியில் படிப்பு முடிந்ததும், மேலே படிப்பிக்கச் சக்தியில்லாததால் வீட்டிலேயே நின்று தகப்பனுருக்கு ஸகாயமாகவிருந்து வந்தான். ஸாவகாசமாக விருக்கும் வேளைகளில் புண்யாவாசனத்தன்று பட்ட கஷ்டத்தையும், யாரோ ஒரு மகாநுபாவர் வந்துதவினதையும் கதையாகச் சொல்லுவார்கள் தங்கள் புத்ரனுக்கு. அவனும் கவனமாகக்கேட்டு அவரிடம் மிகுந்த பக்தியும், அவரைக் கண்டுபிடித்து நமஸ்கரித்து, தன்னுடைய நன்றியை யறிவிக்க வேண்டும் என்ற ஆசையும் அவனுக்கு மேலிட்டுக் கொண்டிருந்தது.

வயது பனிரண்டு ஆயிற்று. ஒரு நாள் இரவு போஜநம் முடிந்து தாய் தந்தையரிருவருமிருக்கும் ஸமயம். புத்ரன் வந்து,

"அப்பா, அப்படி நமக்கு ஆபத்துக்குதவின புருஷன் யார், எங்கிருப்பவர் என்று தெரியவே தெரியாதா?" என்றுன்.

"இல்லையே, ஏனப்பா?"

அதற்குப் பிறகு நீங்கள் அகஸ்மாத்தாகக் கூட அவரை ஸந்திக்கவே யில்லையா?"

"இல்லை. அன்று கல்யாணம் முடிந்ததும், 'நான் வரவேண்டிய ஸமயம் நேர்ந்தால் வருவேன்' என்று விடுகதை போட்டதுபோல் சொல்லிவிட்டுச் சென்றனரே யதுதான். பிறகவரை, ஸ்வப்நத்தில்கூடக் காணவில்லை. ஏன், அது எதற்கு?"

"ஒன்றுமில்லை. நமக்கு அத்தகைய ஸமயத்தில் ஒத்தாசைசெய்த புண்யபுருஷனைக் கண்டு நமஸ்கரித்து, என் நன்றியை யவருக்கு அறிவிக்கவேண்டிய தென் கடமையென்று என் மனம் தூண்டுகிறது. ஆகையால் நீங்கள் அவர் எப்படி யிருப்பார் என்ற அடையாளத்தையாவது சொன்னுல், இந்தப் பக்கமெல்லாம் சுற்றிப்பார்த்து வரலாமென்று நினைக்கிறேன்."

"அதற்கென்ன அவஸரமப்பா? அவரோ இன்னவூர் என்றுகூட நமக்குத் தெரியாது. நீயோ பால்யம், இன்னும் சில வருஷங்கள் கழித்துப் போகலாமே வேண்டுமென்றுல்."

"அப்படியல்ல; இந்தவுலகில் எதை நிலையென்று நம்புவது. நான் பால்யமென்றுலும், அவராவது வயதுசென்றவரல்லவா? ஆகவே, ஜீவித்திருக்கையிலேயே கண்டால் தானே. தாங்கள் மறுக்காமல் எனக்கு விடை கொடுத்தால், நான் எப்படியும் அவரைக் காணுவேன் என்ற தைர்யமட்டும் எனக்குண்டாகிறது" என்றுன் பணிவுடன் அச்சிறுவன்.

தாய் தந்தையரும் தங்கள் புத்ரனின் நல்ல சிந்தையையும், க்ருதக்ஞதையையும், மனோதைர்யத்தையும் பார்த்து ஸந்தோஷித்தவர்களாய்த் தம் உயிரையேவிடுவதுபோல், தம்மை விட்டுப் பிரிய புத்ரனுக்கு உத்தரவு கொடுத்தனர். அவனும் தன் தாயாரால் தயார் செய்து கொடுக்கப்பட்ட வழியுணவு முதலிய வழித்துணைகளுடன், மறுநாட்காலை விடிய ஒரு நாழிகைக்கே புறப்பட்டுவிட்டனன்.

(தொடரும்.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

அன்பெனும் வலிய ஆயுதம்

காசி நகரத்தை ஓர் அரசனும் அரசியும் ஆண்டுவந்தனர். அவர்களுக்குப் பிள்ளைகளில்லை. அரசன் வயது சென்றவனுயிருக்கும்போது கோசல தேசத்துக் கொடுங்கோலரசன் காசி நகரத்தரசன்மீது படையெடுத்து வந்து அரசனைத் துரத்திவிட்டு, நகரத்தைப் பிடித்துக்கொண்டான்.

நகரத்தை விட்டு நீங்கின அரசனும் அரசியும் பக்கத்திலுள்ள காட்டில் வசித்து வந்தனர். பக்தியும் தைர்யமும் மிகுந்த அரசி "நாம் ஆண்ட நகரத்தில் இருக்கும் ஸேனையை ஒரு தடவை யுத்த ஸந்நாகத்துடன் பார்த்தால் என் குறையெல்லாம் தீரும். அவர்கள் தம் வாளைத் தீட்டுமிடத்தைக் கண்ணுரக்கண்டு, அவர்கள் ஸ்நானஞ் செய்யுமிடத்தில் நானும் ஸ்நானஞ் செய்தால் அப்பொழுதே என் ஜன்மக் குறை நீங்கும்" என்று தன் கணவனிடம் பலமுறை கூறினுள். அரசன் என்ன ஸமாதானம் கூறியும் அவள் கேட்காததால், ரஹஸ்யமாகக் காசிநகரத்தில் தனக்கு முன்பு குலகுருவாயிருந்தவரை வரும்படி சொல்லியனுப்பினுன்

ஆகாதவர்க்கு ஏற்றுல் ஆராய்ந்து ஏற்றுக்கொள்.

அரசனும் அரசியும் மிகவும் நல்லவர்களானதால், காசி நகரத்தார்கள் எல்லாரும் புதிய அரசனை வெறுத்து வந்தனர். குலகுருவிற்குத் தம்முன்னரசனிடம் மிகவும் பிரியம் இருந்தபடியால் ஒருவருக்கும் சொல்லாமல் காட்டிற்குச் சென்று அரசனைக் கண்டார். அரசன் தன் குறையைக் கூற, அவர் அதன் உண்மையை அறிய அரசியிடம் சென்றனர். குரு, சாஸ்திரம் நன்றுய்ப் படித்தவராதலால் ராணியைப் பார்க்கும்போதே, "அம்மா! உங்களிஷ்டம் கூடிய சீக்ரம் நிறைவேறும். உங்களுக்குப் பிறகு காசிநகரை ஆளும் ராசகுமாரன் உமக்குப் பிறக்கப் போகிறுன்" என்று சொல்லிவிட்டு நகரத்திற்குச் சென்றுர்.

நகரத்திற்குள் சென்ற குலகுரு, புதிய அரசனைக்கண்டு மஹாராஜாவே! நீர் இந்நகரை அடைந்தது முதல், இந்நகர்ச் சேனையைப் பார்க்கவில்லையே. உம்மை நேரில் பார்த்தால் அவர்களுக்குத் திருப்தியும், எம்மாதிரியான ஸேனை என்பது உமக்கும் தெரியவரும் என்று கூற, அரசனும் அடுத்த வெள்ளிக்கிழமை ஊருக்கடுத்த காட்டின் ஓரத்தில் ஸகல முஸ்தீப்புடன் ஸேனை வரவேண்டுமென்று ஆக்ஞாபித்தான்.

அந்தக் காட்டினருகே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது குறிப்பிட்ட தினத்தில் ஸேனைமுழுவதும் அங்குவந்து பலவித யுத்தப் பயிற்சிகளை அரசன்முன் செய்து, ஆற்றில் ஸ்நாநம் முதலியன செய்து ஸாயங்திரம் நகரம் சென்றனர். இவைகளை யெல்லாம் காசிநகர்த்துப் பழைய அரசனும், ராணியும் மரத்தில் ஒளிந்து கொண்டு பார்த்தனர். எல்லாரும் போய்விட்ட பிறகு, ராணி ஆற்றில் ஸ்நானம் செய்து குறை தீர்ந்தவளைப் போலக் காட்டிற்குள் சென்றுள்.

சில நாட்களுள் கர்பந்தரித்து, பத்தாமாதம் அழகு சொரியும் மகனைப் பெற்றுள்.

அரசனும் அரசியும் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தனர். குழந்தைக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. தம் பழைய அரசனையும், அரசியையும் அவர்களுடைய குழந்தையையும் காண காசிநகரத்துச் ஜனங்கள் அடிக்கடிவர ஆரம்பித்தனர். இந்த ஸமாசாரம் எப்படியோ புதிய அரசன் காதில் எட்டிற்று. அரசனும் அவன் ராணியும் உயிருடனிருப்பதாலல்லவா இந்தக் கஷ்டமெல்லாம் என்று கொடுங்கோலரசன் நினைத்து, அவர்களைப் பின் கட்டுமுறையாக இழுத்துக்கொண்டுவரும்படி தனக்கு இசைவான ஸேவகர்களை அனுப்பினுன். அவர்களும் அப்படியே செய்தனர். அந்த ராஜகுமாரன் அவர்களோடேயே வந்தனன். அரசகுலத்தில் பிறந்தவனுகையால் அவனுக்குக் கோபம் பொங்கிற்று. சிறு குழந்தையாகையால் என்ன செய்வதென்று தெரியவில்லை. இதற்கெல்லாம் காரணமான புதிய அரசனை ஒரே ஓட்டமாக ஓடிக் கொன்றுவிடலாமா என்று நினைப்பான். தன் குமாரனுடைய கோபத்தைக் கண்ட கிழ அரசன், அவனைப் பார்த்து "அப்பா, குழந்தாய்! கோபம் பொல்லாது. அவரவர்கள் விதிப்படியே நடக்கும். நீ ஒன்றும் செய்யவேண்டாம்" என்றுன். தன் தகப்பனுரிடம் பக்தி உள்ளவனுதலால், கோபத்தை அடக்கி வந்தான். அந்த ஊர் காளி கோவிலிற்கு எதிரே போகும்போது புதிய அரசன் அவர்களுக் கெதிரே வந்து, காளிக்குப்பலியாக இருவரையும் வெட்டிவிடும்படி தன் ஸேவகர்களுக்கு உத்தரவுசெய்தான். இதைக்கேட்டதும் அரசகுமாரனுக்கு அடக்க முடியாதகோபம் உண்டாயிற்று. அப்பொழுது கிழ அரசன் தன் மகன் கையைப் பிடித்துக் கொண்டு, "மகனே, போன ஜன்மத்தில் செய்த பாபத்தின் பயன் இது நமக்கு. நம்பகைவர்மீது உண்டாகும் கோபத்தைத்தீர்க்கும் வழி ஒன்று உண்டு. அது 'அன்பு' என்னும் வலிய ஆயுதம். அதனுல் ஆகாதது ஒன்றுமில்லை. என்னருமை மகனே! இதுவே உனக்கு நான் சொல்லும் கடைசி மொழி" என்றுன். ஸேவகர்கள் அவ்விருவரையும் அரசனையும் அரசியையும் பிடித்துச் சிரச்சேதம் செய்தனர்.

பழைய அரசனுடைய ஸேவகர் சிலர் அரசகுமாரனை தம்முடன் மறைவாக அழைத்துக் கூட்டிக்கொண்டு போயினர். அரசகுமாரனுக்கு ஸங்கீதத்தில் பிரியம் இருந்தபடியால், அடுத்த நகரத்திலுள்ள ஸங்கீத வித்துவான் ஒருவரிடம் சென்று, ஸங்கீதம் பயின்றுன். அவனுக்குப் பதினுறு வயதானபோது, அவனைப்போல ஸங்கீத வித்தையில் வல்லவர்கள் ஒருவருமில்லை. ஆனுல் அவன் தான் ராஜகுமாரனென்று ஒருவரிடமும் சொல்லவில்லை.

காசி நகரத்தையாண்ட கொடுங்கோலரசன்

ஆகாத நாளையில் பிள்ளை பிறந்தால், அண்டை வீட்டுக்காரனை என்ன செய்யும்?

ஸங்கீதக் கச்சேரி ஒன்று வைத்தான். அதற்கு வந்த பல பாடகர்களில் நம் அரசகுமாரனும் ஒருவன். இவன் பாட்டைக் கேட்ட அரசன் மிகவும் ஸந்தோஷித்துத்தன் ஆஸ்தான வித்வானாக நியமித்தான். அப்பொழுதுமுதல் அரசனுக்கும், ஸங்கீத வித்வானாக அமர்ந்த இராஜகுமாரனுக்கும் நெருங்கின நேசம் உண்டாயிற்று. அரசகுமாரன், தன் பெற்றோர்களைக் கொன்ற பாதகனை எப்பொழுது ரஹஸ்யமாகக் கொல்வதற்கு ஸமயம் ஏற்படுமென்று காத்துக் கொண்டிருந்தான். ஸமயமும் சீக்கிரம் ஏற்பட்டது.

ஒருநாள் கொடுங்கோலரசன் தன் பரிவாரங்களுடன் வேட்டையாடப்போனான். அவனும் ராஜகுமாரனும் மற்றவர்களுக்கு முன்னே சென்றதனால் மற்றவர்கள் பின் தங்கினர். கடைசியில் நடுக்காட்டில் வழி தெரியாது நின்றது கொடுங்கோலரசனும் ராஜகுமாரனுமே. அரசன் மிகவும் களைப்படைந்ததால் தன் பரிவாரம் வரும்வரைக்கும் இளைப்பாறலாமென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். நம் இராஜகுமாரனும் கூடவே வந்தவனாதலால் அவனும் கீழே இறங்க, அரசன் குதிரையை அவனிடம் ஒப்புவித்துவிட்டு தான் மரத்தடியில் படுத்துத் தூங்கினான்.

அப்பொழுது அரசனிடம் நம் இராஜகுமாரனைத்தவிர வேறொருவருமில்லை. தன் பெற்றோரை அரசன் கொன்றது அவன் ஞாபகத்திற்கு வந்தது. அவர்களைக் கொன்ற பாதகனைக் கொலை செய்யவேண்டுமென்று வெகுநாளாய் எண்ணங்கொண்டே, அரசனிடம் வேலைசெய்து வந்தான். இதுதான் தகுந்த ஸமயமென்று, அரசனது உடைவாளைச் சந்தடி செய்யாமல் உருவி, வெட்டப்போனான். அவன் கையை உயரத்தூக்கினபோது தன் தகப்பனார் இறக்குமுன் தனக்குச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அன்பு என்னும் வலிய ஆயுதத்தால் நம் பகைவர்களைத் தண்டிக்கவேண்டும் என்றது அப்பொழுதுதான் சொன்னது போலத் தோன்றிற்று. அரசகுமாரன் தன்னுள்ளெழுந்த கோபத்தை அடக்கி; 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்று எண்ணி உருவின வாளைக் கீழே வைத்தான்.

தூங்கிக்கொண்டிருந்த அரசன் விழித்தெழுந்தான். "அப்பா, நான் பயங்கரமான கனவு ஒன்று கண்டேன், அது என்னவெனில், முன் நான் சென்ற காசி நகரத்து அரசனின் மகன் என்னைக் கொல்வதற்கு வாளை ஓங்கினதாக—என்ன பயங்கரமாயிருந்தது தெரியுமா ?" என்று அலறிக்கொண்டு கேட்க, அரசகுமாரன் தான் இன்னானென்றும் இத்தனை வருஷமாய்ச் செய்ய எண்ணியிருந்ததையும் கூறினான். அரசன், தான் செய்த பாபத்திற்குப் பச்சாத்தாபப்பட்டுத் தன் புத்ரியை அவனுக்கு விவாஹம் செய்வித்துக் காசி நகரத்தை அவனிடமே ஒப்புவித்தான்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி: 17—சிந்தனை

முன்னை விதியான் முடிந்ததோ? மொய்குழலாள்
என்னைக் காண இசைந்ததோ?—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ இது?

தமயந்தி நெடுநேரம் சிந்தனை செய்துகொண்டிருந்தாள். தன் தாயுடன் பலவாறு எண்ணமிட்டுத் தன்னைத் தானே தேற்றிக்கொண்டு "அம்மா! நான் ஒரு யோசனை சொல்கிறேன். கொஞ்சம் கவனித்துக் கேளும். ஏதோ நான் சொல்கிறேன் என்று இருக்காதீரும். இப்போது நான் சொல்லப்போவது என் தந்தைக்குக்கூடத் தெரியக்கூடாது; பரம ரஹஸ்யமாக இருக்கவேண்டும்; என் க்ஷேமத்தில் உமக்குக் கருத்திருக்குமானால் இந்தச் சமாசாரத்தை வெளிவராதபடி வெகு மறைவாகக் காக்க வேண்டும். எனக்கு நல்லதே உண்டாகுமென்ற திடநம்பிக்கை வந்திருக்கிறது. அதற்குப் பல நல்ல குறிகள் நான் கண்டிருக்கிறேன். அவற்றையெல்லாம் இப்போது சொல்வதில் காலதாமதம் ஏற்படும். எந்த அத்ருஷ்டம் என்னை உங்களிடம் அடையும்படி ஸுதேவர் மூலமாக வேலைசெய்ததோ, அதே அத்ருஷ்டம் அவர் மூலமாகவே என் தலைவரையும் காணும்படி செய்யும் என்பது என் திடமான நம்பிக்கை. ஆகவே நான் சொல்வதைத்

தடுக்காதிருக்க வேண்டும். ஸுதேவரை இப்போது அயோத்திக்குப் போகும்படி அனுப்புவித்தால், அவர் நிச்சயமாக நளமன்னவரை இங்கு அழைத்துவந்து விடுவர். இது ஸத்யம். ஆகவே நான் ஏதோ செய்கிறேன். ஆனால் இந்த விஷயம் என் தகப்பனாரும் அறியாதிருக்கும்படி நீங்கள் தயவுசெய்யவேண்டும். நான் செய்வதை நீங்களும் சுதேவருமல்லாது இந்தக் காற்று மறியக்கூடாது" என்று தமயந்தி சொன்னாள். இம்மொழிகளைக் கேட்ட விதர்ப்பநாட்டரசி ஒன்றுந்தோன்றாது செயலற்றுத் திகைத்துக் கிடந்தாள்.

பர்ணாதர் அப்பொழுதுதான் தமயந்தியை வாழ்த்திச் செலவு பெற்றுச் சென்றனர். அதே ஸமயம் தனது தாயின் ஸம்மதத்தைப் பெற்றுத் தமயந்தி ஸுதேவரை அழைத்துவரச் சொல்லியனுப்பினாள். மீண்டும் துயர்க்காளாய்த் தன் தாயின் மடிமீது சாய்ந்து சோர்ந்து கிடந்தாள். ஸுதேவர் வந்ததும் தமயந்திக்கு அடக்கமுடியாத் துக்கம் மேலிடக் கண்களில் நீர்ததும்ப, மார்பு படபடக்க எளியகுரலில் அவரை நோக்கி "விப்ரர் தலைவரே! உமக்கு அநந்தகோடி நமஸ்காரம்;

அந்தண ரென்போ ரறவோர், மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

என்றபெரியோர் வாக்கு உமக்கே பொருந்தும். படித்தறிந்த பெரியவரே! உம்மையல்லால் எமக்குச் சரண் யாருண்டு? ஏழை எளியவர் கீழ்த்தசை யடைந்தவர் இவர்களைக் காப்பதே உமக்கு விரத மல்லவா! இந்த ஏழையிடமும் சற்றுத் தயவு புரியவேண்டும்? எனக்கோர் உதவிசெய்யவேண்டும்; பெண்பணியென்று மறுக்கத்தகாது. உம்மினுமுயர்ந்த உறவுஎனக்குயாருளார்? ஆபத்தில் உதவிசெய்பவரல்லவா உண்மை உறவினர்? என்தந்தைபோலும் நீங்கள்அயோத்தி செல்லவேண்டும். தற்செயலாக அங்குநீங்கள் போனதுபோல ருதுபர்ண மன்னவனைக்கண்டு இப்படிச் சொல்லுங்கள்: தமயந்திக்கு நாளை ஸ்வயம்வரம் நடக்கப்போகிறது. நாலா பக்கங்களிலிருந்தும் அரசர்களும் அரச குமாரர்களும் கூட்டங் கூட்டமாக அங்கு வந்துகொண்டிருக்கின்றனர். அவ்வழகி நளமன்னவரை மணந்தவள். எனினும், அவ்வீரர் உயிரோடிருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. ஆகவே அவள் மறுபடியும் ஸ்வயம்வரம் கூட்டி இரண்டாவது புருஷனை நாளைக்கு மாலையிடுகிறாள். பொழுதுவிடிந்ததும் ஸ்வயம்வர காலம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவளை நீங்கள் அடைய விரும்பினால் அக்காலத்துக்குள் போகவேண்டும்."

இவ்வாறு சொல்லிய தமயந்தியின் உள்ளெண்ணத்தை முற்று முணர்ந்த, நல் விஷயங்களிலல்லாமல் வேறொன்றிலுந் தலையிடா அவ்வந்தணர்ச் சிகாமணி, அவ்வாறே செய்ய ஒப்பி அயோத்தி சென்று ருதுபர்ண ராஜனைக் கண்டு,

'நாட்ட மூன்றுடை நாயகன் வரத்தினால் நங்கை
மீட்டுங்கன்னிகையாயினள்சுயம்வரம் விழைந்தாள்
கேட்டு மானிலக் கிழவரு மவ்வழி யிறுத்தார்;
பூட்டு வார்சிலை மன்னநீ போதியேற் போவாய்'

எனக் கூறினார்.

இம்மொழிகளைக் கேட்ட ருதுபர்ணன் அளவற்ற ஸந்தோஷ மடைந்தான். தமயந்தியை மணக்கவேண்டுமென்ற பேராவல் கொண்ட அவன், வாஹுகனை நோக்கி, அவனைப் பலவாறு புகழ்ந்து, "உமது உதவிதான் வேண்டும். நீங்கள் மாத்திரம் மனம்வைத்தால் நான் ஓரே நாளில் விதர்ப்பை அடையலாம்; குறிப்பிட்ட காலத்துள் தமயந்தி ஸ்வயம்வரத்துக்கும் போகலாம். நான் அங்குபோக வெகு ஆவலாயிருக்கிறேன் என்றுமக்கு நான் சொல்லவேண்டியதில்லை என்பது திண்ணம்" என்றான். இம்மொழிகளைக் கேட்ட நளன் அளவிடமுடியாத் துயரமுற்று, மனம் பிளந்து, தன்னுணர்வற்றுச் சற்றே கிடந்தான். எனினும், தனது அளவுகடந்த துக்கத்தை வெளியிடாமலே சிந்திக்கலானான் :

"இதுவும் உண்மைதானோ? தமயந்தியும் இவ்வாறு செய்வளா? இவ்வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வந்திருக்கக்கூடுமோ? அவளுக்கேதாவது ஒருவேளை புத்தி மாறாட்டமோ? அல்லது அதிக கஷ்டத்தினால் அவ்வழகிக்கு என்னிடம் வெறுப்பேற்பட்டதோ? அல்லது இது என்னை அறிய அவள் செய்த உபாயமோ? ஏதோ? நான் வெகு கொடியவன்; நல்லெண்ண மில்லாதவன்; பழியே உருவெடுத்தவன். நான் அவளுக்கு இழைத்த தவறுக்கு அளவேயில்லை. கஷ்டத்திலு மென்னையே தெய்வமென நம்பி, காட்டிலும் என்னைத் தொ-

டார்ந்து வந்த, அந்த உத்தமிக்கு நான் செய்த அக்கிரமத்தால், இவ்வாறு செய்ய மனந்துணிந்துவிட்டதே! ஆஹா! மனமோ மந்தி! அதிலும் பெண்மனம் ஸஞ்சலத்திற்கே யிடந்தருமன்றோ? அது அடிக்கடி மாறிக் கொண்டிருக்கும். என்றாலும், அவள் அப்படிச் செய்வாளா என்பதுதான் எனக்கு ஸந்தேகம். நான் குற்றம் செய்தவன்தான். அப்படியிருந்தாலும், அவளவ்வாறு செய்வாளா என்பது என்றால் நம்ப முடியவில்லை; எண்ணவும் என் மனமிடந்தராது. ஏனெனில் அவள் அவ்வளவு பழிகடந்த பாவை. உலகில் கிட்டவிருந்தால் முட்டப்பகை, தூரவிருந்தால் நிகளவுறவென்று சொல்வதுண்டு. ஒருவேளை என் விஷயத்தில் அதுவும் பொய்த்ததுவோ? அல்லது கிட்டவிருந்தால் நட்பு அப்படிக்கில்லாட்டால் வேறாகுமோ? ஒருகால், என்னைப் பிரிந்த துயரத்தால், சிந்தை முறிந்து, என்னிடத் தாசையை யொழித்து, இவ்வாறு செய்ய அவள் துணிந்தனளோ? இல்லாவிட்டால் அவள் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? ஒருபொழுதும் செய்யாளல்லவா? போனாற் போகட்டும். தனக்குக் குழந்தைகளிருப்பதையும் மறந்தா இப்படிச் செய்வள்? இப்போதெனக்கென்ன கனவா, நினைவா, அல்லது மனக்கலக்கமா? உண்மை எதுவோ? எல்லாம் நேரில் கண்டால் நன்கு விளங்கும். அவ்வாறு செய்வது ருதுபர்ணனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவது மாத்திரமாகாது; என் மனத்தைக் கவர்ந்த ஸந்தேகத்தையும் போக்கச் சாதனமாகும். அது உண்மை!"

இவ்வாறு க்ஷணநேரத்துக்குள் அளவற்றுச் சிந்தித்து, அவ்வாறு செய்தது தோன்றாதபடி தனதரசனை நோக்கி,

"குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத என்திழையாள் இன்று,—பறிபீறி
நெல்லிற் பருவரால் ஓடு நெடுநாடா!,
சொல்லப் படுமோவிச் சொல்"

எனமொழிந்து, தன் காதுகளை விரல்களால் பொத்திக் கொண்டான். மேலும், "அரசரேறே! அது எப்படியிருந்தா லென்ன? அதைப் பற்றிக் கவலை நமக்கேன்? மன்னவரே! நீங்கள் ஒன்றைச் சொன்னால் அதற்கிணங்க நடப்பதல்லாது வேறு யான் சிந்தித்தற் பொருந்துமா? அவ்வாறு சிந்திக்கத்தான் என் மனம் இடந்தருமா? ஆகையால், உமது கவலையை ஒழியும். தாங்கள் விரும்பியவிதமே உம்மை ஒரே நாளில் விதர்ப்பத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். மற்றேன் யோசனை?" என்று சொன்னான். ருதுபர்ணன் வெகு ஸந்தோஷமடைந்தான். அவனுக்குத் தமயந்தியை மணக்க வேண்டுமென்ற அவா சிறு நாளிலிருந்தது, இந்நாளும் உதித்தது. எனவே அவன் வாஹுகனைப் பார்த்துப் பிரயாணத்திற்கு ஆயத்தமாகும்படி சொன்னான். அவனும் அதற்கிணங்க நல்ல குதிரைகளைப் பொறுக்கியெடுக்கக் குதிரை லாயத்திற்குப் போனான்.

அப்போது அவன் மனம் பெரு வியாபாரம் செய்து கொண்டிருந்தது. அது கட்டுக்குள் அடங்காது அபரிமிதமாக வேலைசெய்ய வாரம்பித்தது. "இவ்வாறு தமயந்தி உண்மையாகச் செய்திருப்பாளா? அப்படிச் செய்திருக்கக் கூடும் என்று நம்ப இடமில்லையே. அந்தப் பிராஹ்மணர்க்கென்ன பொய் சொல்லத் தலைவிதியா? அவரும் பொய் சொல்லார்; அவளும் இவ்வாறு செய்யத் துணியாள். பின் இந்த விஷயத்தின் உண்மை என்னவாக யிருக்கலாம்? இதுவென்ன?

முன்னை வினையான் முடிந்ததோ? மொய்குழலாள்
என்னைத்தான் காண இசைந்ததோ?—தன்மா
கொவ்வாத வார்த்தை உலகத் துரைப்பட்ட [புக்
தெவ்வாறு கொல்லோ இது?

இதில் ஏதோ சூழ்ச்சியில்லாம லிருக்காது. நேரிற் சென்றால் பட்டப் பகற்போல் தானே வெட்டவெளியாய்விடும். ஆத்திரப்படலாகாது. பொறுமையே நன்மை பயக்கும்" என்று எண்ணமிட்டுக்கொண்டே அவன் கடிய நடந்து தனது வேலைக்குதவக்கூடிய நல்ல உயர்ந்த ஜாதிக் குதிரைகளைப் பார்த்து யோசித்து வெகு வேகமாகப் போகக்கூடியவைகளும், நெடுந்தூரம் சளைக்காது செல்லக் கூடியவைகளுமான குதிரைகளைப் பொறுக்கி யெடுத்துத் தேரில் பூட்டினான். அக்குதிரைகள் மிகச் சிறந்தன. பார்வைக் கிளைத்தனபோலக் காணப்பட்டாலும், வேகத்தில் காற்றையும் பின்வாங்கச் செய்யக்கூடியன. அவற்றின் கால் நடையின் வேகத்திற்கிணையாக மனோவேகமும் வெட்குமெனலாம். மற்று அவற்றின் சுறுசுறுப்பும் பரபரப்பும் பராக்கிரமும் சொல்லுந் தரத்தவன்று. அவை உத்தம ஜாதிக் குதிரைகள்;

களங்கமற்று நற்சுழிகள் பத்தும் கொண்டவிந்து நாட்டுத் தாவும் புரவிகள்; நெடுநாழி காற்றையடக்கி விசையுடன் சிறிதும் சளைக்காதுவல்லமையுடன் ஓடக்கூடியன. இத்தகைய குதிரைகள் பூட்டிய தேரைத் தன்முன் வாஹுகன் ஓட்டிவரக்கண்ட ருதுபர்ணன், சற்றே மனஞ்சுளித்துக் கோபத்துடன் "இது என்ன? என் விருப்பத்தை நிறைவேற்றவோ அல்லது என்னை மோசஞ் செய்யவோ. இக்குதிரைகளை நெடுநாழி பார்த்துப் பார்த்துப் பொறுக்கினீர்? இக்குதிரைகள் இப்பொழுதோ இனிச் சற்று நேரத்துக்கோ உயிரைவிடக்கூடிய கேவல நிலையிலிருக்கின்றன. இவற்றிற்குப் பலம் எங்கிருந்து வரும்? எவ்வாறு இவை நம்மையும் தேரையும் சேர்த்திழுக்கும்?" என்று கேட்டான். அதற்கு வாஹுகன் குதிரை லக்ஷணங்களைப்பற்றி விரித்துச் சொல்லித் தான் பொறுக்கியெடுத்த குதிரைகள் விதர்ப்பத்திற்குக் குறித்த பொழுதுக்குள் போகக் கூடியனவென்று சொல்லியதல்லாமல் "நான் சொல்வதில் உமக்கு ஸந்தேஹமிருந்தால், நீங்கள் எந்தக் குதிரைகளைப் பூட்டச் சொல்கிறீரோ அவற்றையே பூட்டுகிறேன். தாங்கள் சொல்லும் வார்த்தைக்கு இரண்டாவது முண்டோ?" எனக் கேட்டான்.

இம்மொழிகளைக்கேட்ட அயோத்திஅரசன் "வாஹுகரே! அவ்விஷயத்தில் தாங்கள் அல்லவோ நிபுணர். குதிரைகளின் மனத்தின் உண்மையான ஸ்வபாவத்தையும் அவற்றின் குணகுணங்களையும் தாங்களேயன்றோ நன்குணர்ந்தவர்? உங்களுக்குத் தெரியாததல்ல. நீங்கள் நமது அவஸரத்திற்குத் தகுந்த குதிரைகளென எவற்றை அறிகிறீரோ அவற்றையே தேரில் பூட்டும்" எனச் சொல்லி வாஹுகனை புகழ்ந்து பேசினான். வாஹுகனும் தான் பொறுக்கியெடுத்த குதிரைகளைத் தேரில் பூட்டித் தன் கையாலவற்றின் கடிவாளங்களைப் பிடித்து நின்றான்.

முதன்முதல் அரசன் அதனுள் ஏறியதும், வார்ஷ்ணேயனையும் அதிலேயே ஏறும்படி வாஹுகன் திட்டஞ்செய்தான். அதற்கிணங்கி அவனும் ஏற, நளன் தேரை வெகு வேகவாக ஓட்டினான். குதிரைகளின் குளம்புகள் பூமி மேல் பட்டும்படாது விளங்க, அவன் தேரைப் பகுவேகமாக நடத்தினான். குதிரைநூல் முறைப்படி அவன் ஓட்டிய குதிரைகள் தம்மை யோட்டுஞ் சாரதியே பிரமிக்கும்படி வெகு வேகமாய்க் காற்றுங் கண்டஞ்சும்படி பறந்தோடின. அவ்வாறு குதிரைகள் ஓடுவதை அதுவரை கண்டிராத அயோத்திமன்னன் ஆச்சர்யமுற்றுத் திகைத்துக் கிடந்தனன். நளனும், தான் கேட்ட மொழிகள் தன் மனதைக் குடைய அதன் வியாபாரத்தின் பரப்பிலாழ்ந்து கனவேகமாகச் சிந்தித்துக் கனவு கண்டு கொண்டிருந்தான். தேரோ காற்றினுங் கடியதாய்ப் பறந்து கொண்டிருந்தது!

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

இந்திய ஜாதீய மஹாநாடு.

நமது இந்திய ராஜாங்கரீதியில் செய்ய உத்தேசித்திருக்கும் சீர்திருத்தங்களைப்பற்றிய ரிபோர்ட்டு இந்தியா மந்திரியால் வெளியிடப்பட்டிருக்கிறதென்பதையும் அதைப் பற்றியபிரஸ்தாபமே கொஞ்சநாளாக எங்கும் கேட்டுவந்ததென்பதையும் சென்ற மாதத்தில் தெரிவித்தோம். அந்தச் சீர்திருத்தங்கள் நம் நாட்டுக்கு எவ்வளவு தூரம் அனுகூலத்தைக் கொடுக்கும் என்பதை ஆலோசிக்கிறதற்காக நாளது மாதத்தில் பம்பாய் நகரில் இந்திய ஜாதீய மஹாநாடு கூடிற்று. பதிவாக டிஸம்பர் மாதத்தில் கூடிப் பொதுவிஷயங்களைத் தீர்மானிக்கும் இந்தமஹாஸபை இப்போது மேற்கூறிய விஷயத்துக்காக மட்டும் பிரத்யேகமாக ஒருதரம் கூடிற்றென்றால் சீர்திருத்தத்தைப்பற்றி ஜனங்கள் கொண்டிருக்கும் அவா ஒருவாறு விளங்கும். இந்த மஹாஸபையில் அக்கிராசனாதிபத்யம் வகித்தவர் ஸ்ரீமான் **ஹஸன் இமாம் ஸாஹிபு பகதூர்** ஆவார். அவர் இதற்கு முன்னர் கல்கத்தாவில் ஐகோர்ட்டு ஜட்ஜியாக இருந்தவர். ஆகவே அவர் தீர்க்காலோசனையும் விஷயங்களை நன்றாகச் சீர்தூக்கிப்பார்க்கும் ஆற்றலும்உடையவர் என்பதில் தடையில்லை. சுமார் பதினாயிரம் பிரதிநிதிகள் கூடித் தீர்மானித்ததில், இந்தியா மந்திரியாருடைய ரிப்போர்ட்டைப்பெரும்பாலும் அங்கீகரித்தும், சில அம்சங்களை ஒரு சிறிது மாற்றுவதற்கு வேண்டிய விதத்தைத் தெரிவித்தும்

இம்மஹாநாடு தனது பொது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளது. இந்த மஹாஸபை விஷயமாக நேர்ந்த ஒரு சில்லறைத் துர்த்தசையைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது ராஜகீய விஷயத்தில் "மிதவாதிகள்" என்ற கக்ஷியார் இந்த ஸபைக்கு வராமலிருந்து விட்டனர். சீர்திருத்த ரிபோர்ட்டை அடியோடே கண்டனம் செய்து விடப்போகிறார்கள் என்ற எண்ணத்தினால் அவர்கள் வராதொழிந்தனர் எனப்படுகிறது. இன்னும் அவர்கள் பிரத்யேகமாக வேறொரு மஹாநாடு கூடித் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளப் போவதாகவும் வதந்தி. இரு கக்ஷிக்காரர்களுடைய நோக்கமும் ராஜ்யத்தின் க்ஷேமமே. ஆதலால் ஒருவரையொருவர் ஸமரஸப்படுத்திக்கொண்டு போவது மேன்மை. "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது" என்ற பழமொழி நமது ஞாபகத்துக்கு வருகிறது.

* * * *

பத்திரிகை ஆசிரியர்களின் ஐரோப்பிய ஆகமனம்

ஐரோப்பிய ரணரங்கத்தைப் பத்திரிகாசிரியர்கள் பார்வையிட்டு, அங்கு நடக்கும் விஷயங்களைத் தங்கள் தங்களது பத்திரிகைகளில்வெளியிட்டு ஜனங்களுக்கு உண்மையைத் தெரிவிக்கச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இங்கிலாந்துகவர்ன்மெண்டார் இந்தியாவிலிருந்து சில பத்திரிகாசிரியர்களை அழைத்திருக்கின்றனர். சென்ற வருஷத்திலும் சில பத்திரிகாசிரியர்கள் கிழக்கரங்கமாகிய மெஸ்பொடோமியாவுக்குச்சென்றுவந்தனர். இவ்வருஷத்தில் மேற்கரங்கத்தைப் பார்வையிட அழைக்கப்பட்டவர்களில் நமது மாகாணத்து "ஹிந்து" பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்கய்யங்கார் அவர்கள் ஒருவராவார். ஸ்ரீமான் அய்யங்காரவர்களுடைய தேசபக்தியும் ராஜபக்தியும் முதல்தரமானவை. சென்ற பன்னிரண்டு வருஷங்களுக்கதிகமாக அவர்கள் தமது பத்திரிகையை நடத்திவரும் மாதிரியிலிருந்து அவர்களுடைய சுயேச்சா மனப்போக்கும், புகழையும் இகழையும் கவனியாமல் செய்யும் கடமையும் நன்கு வெளியாகும். இத்தகைய உத்தமகுணம் வாய்ந்த சிறந்த தேசாபிமானியைக் கவர்ன்மெண்டார் அழைத்தது நமக்கெல்லாம் பெருமையைத் தருகின்றது. இன்னும் ஒரு விஷயம் கவனிக்க வேண்டியுள்ளது. ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் ஒரு உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ குலத்தி லுதித்தவர்கள். ஆகவே, கடற்பிரயாணம் செய்யக்கூடாது என்று விதித்திருக்கும் பழைய கொள்கையைப் புறக்கணித்துவிட்டு, கடமையையே பிரதானமாகக் கொண்டு, இந்த வார்த்திகத்தில் தேகச் சிரமத்தையும் கருதாது, ஐரோப்பாவுக்குச் செல்லும் பிரயாணிகளுக்கு, ஜர்மனியரால் நேரக்கூடிய அபாயங்களையும் பொருள்படுத்தாமல், ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் சென்றதைக் கவனிக்கும்போது நமது மனம் அத்யந்த சந்தோஷத்தால் பூரிக்கின்றது. பரதனுடைய குணாதிசயங்களைக் கேட்டகுகன், "இரவியென்பான்,தன் புகழ்க்கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்குமாபோல், மன்புகழ் பெருமை நுங்கள் மரபுளோர் புகழ்களெல்லாம், உன் புகழாக்கிக் கொண்டாய் உயர்குணத் துரவுத் தோளோய்" என்ற கம்பர் வாக்கு நமது ஞாபகத்துக்கு வருகிறது. ஸ்ரீமான் அய்யங்காரவர்களுக்கு ஆரோக திடகாத்திரமும் மென்மேலும் புகழும் உண்டாகவேண்டுமென்று நாம் ஸர்வேச்வரனை ஸதா பிரார்த்தித்த வண்ணமாகவே இருப்போம்.

* * *

ஆயுர்வேத யூனானி வைத்ய விஷயம்

நாளது மாதம் நிகழ்ந்த சென்னைச் சட்டசபையில் ஆயுர்வேத சாஸ்திரத்தையும் கவர்ன்மெண்டார் கவனித்து அபிமானிக்கவேண்டுமென்று ஒருதீர்மானம் கொணரப்பட்டது. அதைக் கவர்ன்மெண்டார் ஒப்பவில்லை. அதனோடு நிற்காமல், அவ்விஷயத்தைக் கண்டித்துப் பேசிய ஆங்கில ஸ்ரீமான், ஆயுர்வேத முறையை ஒரு 'முறை' யென்று சொல்லக்கூடாதென்று தம் கருத்தைத் தெரிவித்தனர். ஐரோப்பாவில் வைத்ய சாஸ்திரம் பிரபலமடைவதற்குப் பல நூற்றுண்டுகள் முன்னமேயே, ஆயுர்வேத சாஸ்திரம் இந்தியாவில் பிரபலமடைந்து, கோடிக்கணக்கான ஜனங்களுடைய தேக ஆரோக்கியத்தைக்கவனித்து வந்ததென்பதை ஸ்ரீமான் மறந்து போயிருக்கலாம், அல்லது தெரிந்துகொள்ளாமலிருக்கலாம், இது நிற்க, இவ்விஷயமாக மைஸூர் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் காரியம் நமக்கு இன்பத்தைக் கொடுக்கின்றது. ஆயுர்வேத யூனானி முறைகளைக் கைப்பற்றுவோர்க்குப் புரோத்ஸாகம் உண்டாகும்படி அந்த ராஜ்யத்தார் மாதம் ஒன்றுக்கு 75. ரூபா வித்யாவிர்த்திகொடுத்துஇரண்டு(மேல்நாட்டுமுறை)வைத்யர்களைக் கல்கத்தாவுக்கும் டில்லிக்கும் அனுப்பி முயையே ஆயுர்வேதக்கிரமத்தையும் யூனானிக் கிரமத்தையும் கற்றுக்கொள்ளச் செய்திருக்கின்றனர். இன்னும் ஆயுர்வேத யூனானி முறைகளை அவலம்பிக்கும் இரண்டு வைத்யர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபா விகிதம் விர்த்தி கொடுத்து, மேல்நாட்டு முறையைக் கற்றுக் கொள்ளும்படியும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு நிஷித்தமாகத தோன்றியவை மைஸூருக்கு உத்கிருஷ்டமானதற்குக் காரணம் என்ன? "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் நமது போதினியின் தலையங்கக் கோட்பாடான திருவள்ளுவர் வாக்கை நமது கவர்ன்மெண்டாருக்கு நாம் எடுத்துச் சொல்லலாமா?

* * *

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XI } காளயுக்திஸு ஆவணிமீ : : 1918-ஸு செப்டம்பர்மீ { பகுதி 3

தாயின் அன்பு

MOTHER'S LOVE

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
 கை நீட்டு முந்தி மேல்வீழ்ந்
திருமகவுங் கைநீட்டு மும்மகவுங்
 கை நீட்டு மென்செய் வாளாற்
பொருமியொரு மகவழுங்கண் பிசைந்தழுமற்
 றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெவ்
 வனஞ்சகிப்பாள் பெரிதும் பாவம்.

அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற்
 றில்லையென வழுமா லோர்சேய்
சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக்கன்
 னையெனப்பொய் செப்பு மோர்சேய்
முந்தார்வத் தொருசேய்மிசை யப்புகும்போ
 தினிலொருசேய் முடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயு மெதிரீர்ப்பச்
 சிந்துதற்கு நயக்கு மோர்சேய்.

இவ்வண்ணங் கலாம்விளைக்கு மைந்தர்களை
 நனி நோக்கி யிரங்கி யேங்கிச்
செவ்வண்ணக் காதலத்தா லணைத்துமடித்
 தலத்திருத்திச் சிறப்புச் செய்து
மைவ்வண்ணக் கண்ணீரைத் துடைத்துமுகம்
 வெரிந்புறந்தை வந்து மாம்ப
லவ்வண்ண வாய்முத்தங் கொண்டுநயத்
 தோர்விதத்தி லாற்றல் செய்வாள்.

அடுத்தமனைச் சிறுனொருவ னின்றுநம
 தகங்கறியென் னட்டா ரென்று
தொடுத்துவினை யினனைலச் சொற்பொருள்யா
 தெதுதானெச் சுவைத்தன் னுய்நீ
யெடுத்துரையென் றிடுமழவுக் குரைக்கிலது
 செய்யெனிலென் செய்வா மென்று
மடுத்தவஃ தறிந்திலே னெனமற்றொன்
 றுரைத்ததனை மறக்கச் செய்வாள்.

வேறுமனைச் சிறுனயின்ற பக்கணங்கண்
 டோடி வந்து விழிநீர் வாரச்
சீறுதலி லாதவனை முகம்பார்த்தின்
 னினென்ன தின்றா னென்வர்
பூறுதலா லிப்பொழுதே செய்தளித்தி
 யெனவுவுடுத்த வுடைதொட் டீர்க்குந்
தேறுதலில் சிறுமகவை யெடுத்துமார்
 பிடையணைத்துச் சிந்தை நோவாள்.

குண்டலமோ திரங்கடகஞ் சுட்டியயன்
 மனையார்தங் குழவிக் கிட்டார்
புண்டரீ கக்கணன்றே யெனக்குநீ
 யிடாதிருக்கும் பொறுமை யென்னே
கண்டெடுத்திப் போதிடெனக் கரைமதலைக்
 கில்லாதான் கடன்றந் தானுக்
கென்டபச்சொல் வார்த்தையென
 நாளைக்கென் றியம்பிச் சோர்வாள்.

பருப்போடு குளமளித்தி யெனக்கென்று
 மெனக்கினிய பால்வெண் ணெய்யும்
விருப்போடு தருதியென்று மக்களழும்
 போதெல்லாம் விள்ளா ளொன்று
நெருப்போடு புகையுயிர்க்கு நிரியாணக்
 கரடமத நெடுங்கை யானைப்
பொருப்போடு செறுநர்படை முழுதழக்கிச்
 சவட்டிவரும் புகர்வேல் வேந்தே.

சிறியசித மணிப்பூணே யன்றிவே
 றொருபூணச் சேய்கட் கில்லை
வறியமா சாருரியே யுடையன்றி
 மற்றுடைகண் மருவ லில்லை
வெறியபொழிற் றழைத்தவிலை யுண்கலமல்
 லாதுகலம் வேறொன் றில்லை
குறியமனை வயிற்புகுமோ ரெறும்பினுக்கு
 மாங்குணவு கொடுத்தற் கில்லை.

நண்புகூர் தருமன்னப் பால்சிறிதல்
 லாமன்மற்றோர் நற்பா லில்லை
பண்புகூர் தருதனையர்க் கெந்ஞான்றும்
 பசிதீர்ந்த பாடு மில்லை
கண்புகா விவ்வறுமை கண்டுமறை
 யவனு * மூளங்கவற்சி யில்லை
யெண்புகாப் புகழவன்றன் செயல்கண்டு
 மனவி† விருப் பிகத்த லில்லை.

† சுசீலை]

[* குசேலன்

விவேக போதினி

தொ. 11] காளயுக்தி௵ ஆவணி௴ [ப. 3

பிள்ளைக் குறும்பு

PRANKS OF CHILDHOOD

தின்றான் தெருமணைச் செப்பக்கேட் டாவலொ [டார்த்
தன்றாய் வெருட்டவாய் ஆங்காத்து—துன்றுலக
மீரேழுங் காட்ட விறும்பூதின் கண்விண்டாள்
சீராழ் பவர்க்கே சிறப்பு.

மனோவேகத்தினால் நாம் எவற்றையும் அறியும் வன்மை வாய்ந்தவராக விருப்பது ஒரு வேளை உண்மையாக விருக்கலாம். இயற்கையழகின் வைபவத்தைச் சிறு புகைப்படத்தால் நாம் விளக்கினும், இயற்கையின் விரிவும் பெருமையும் அதனிட மிருப்பதில்லை; மற்று ஓவியங்கள் எழுதிச் சித்திரித்தாலும் இயற்கையின் பரப்பையும் திரட்சியையும் தெய்விகத்தையும் தீட்டும் வர்ணங்கள் கிடைக்கா; சிற்பம் உருவையும் எழுச்சியையும் காட்டினும் இயற்கையின் வளர்ச்சியையும் உயிரையுங் காட்டாது. எனவே, ஓவியஞ் சிற்பம் முதலிய சிறந்த உதவிகளால் இயற்கையின் விரிவை வெளியிடல் முடியாதெனில் தவறாகாது. அவ்வியற்கையின் பொலிவிற்கு உயிரான பொருளே, சிறுகுழந்தை யுருக்கொண்டு பிள்ளைக் குறும்புகள் செய்து விளங்கினால், அதன் சேஷ்டிதங்களை விளக்க, மனிதனது ஒப்பந்தத்தினால் ஏற்பட்டபாஷையி லமைந்த பதங்களா பயன்படும்? அக்குறும்பின் வைபவத்தை விரிக்கப் பின்வாங்காது எப்பாஷை இருக்கும்? எப்பொருளின் அசைவினால் ஏற்படும் நாத அணுத்திரளொலியால்வரும் சொற்களா, வாக்கு மனத்திற் கடங்கா அப்பொருளின் விளையாடலை வெளியிட முன்வரும்? கோகுலத்தில் யசோதை மனையில் பூமிமேற் புரண்டு, தவழ்ந்து, சிறுகரங்களை ஆட்டியசைத்து, இளநகையால் யாவர் மனத்தையும் உயிர்க்கச் செய்து, சற்றே எழுந்து, குனிந்து, நிமிர்ந்து, தகதகவெனத் தள்ளாடித் தள்ளாடித் தப்படி வைத்து, பொத்தென விழுந்து, எழுந்து, தலையசைத்து, கண்சுளித்து, வாயில் சிறுவிரல் வைத்துச் சுவைத்து, சற்றே உடலை முன்வாங்கி, கீழே விழுந்து, சிறு குரலில் தேம்பி யழுது, சிறு நீர்விட்டு, அதைத் தன் மெல்லிய தளிர்க்கரங்களால் தட்டிச் சிரித்து, அவ்வழகிய செயலில் ஈடுபட்டதுபோல எண்ணி மயங்கித் தலையைக் கம்பித்து, இளநகை தந்து, உரத்த குரலில் தாயைக் கூப்பிட்டுக் கேக்கையிட்டு, அவ்வொலியுடன் தன் இடையிலும் காலிலும் கட்டிய சதங்கைகள் பேசிக் கலந்தொலிக்கக் கீழ்த்தரைமேல் வீழ்ந்து, கைகால்களை வீசி யெறிந்து கொண்டு, கண்டார் உள்ளத்தைக் கவரும்படி தவழ்ந்தோடிவரும் குழந்தையின் ஆடலைச் சொல்லவுந் தரமா? அது ஆடி ஆடி, ஒதுங்கி ஒதுங்கி, கையி லகப்படாது ஓடி, தன் தாயைப் பலமுறையும் நெருங்கி, அப்புறந் தடதடவென்று காற்றுப்போல் வேகமாகச் சென்று ஓர் மூலையிலுட்கார்ந்து, தாய் வருவதைக் கண்டஞ்சியதைப்போல நடிப்பதைத் தொடுத்துச் சொல்வது கூடுமென்? தன் தாயைப் பாராதுபோலக் கண்ணை மூடிக்கொண்டு, சற்றே சிரித்துத் தன் கால் விரலை இரு கரத்தால்பற்றி வாயிற் திணித்து மறு காலை யாட்டிக்கொண்டு தன்னைத் தன்னன்னை கண்டு களிக்க, அது மாயஞ்செய்வதைக் கண்டனுபவியாது சொல்லவும் பெறுமோ? தேஜோமயமாகி, அழகே திரண்டு உருக்கொண்டு விளங்கும் அந்தத் தெய்வக் குழந்தைமேற் சென்ற கண்கள் அதை விட்டெப்படி வெளிவரும்? காந்தத்திற்பட்ட ஊசி, அதிலேயே பற்றுடன் விளங்காது கீழே விழுமா? வாயிலிருந்து வழவழத்த இனிய தேனில் பதிந்து ஊறிக்கசிந்துவரும் அதன் சிறு குதலைமொழிகளின் இணையற்ற ஸங்கீதத்தைக் கர்ணபாத்திரங்களில் கொண்ட எச்செவி மற்றைய விஷயங்களை அதிற் கொள்ளவிரும்பும்? அவ்விளங் குழந்தையின் சிறு செயலைப் பார்க்கும்போதே நமது அறிவின் சிறுமையும், அகந்தை

யின் பெருக்கும் வெளியாவதல்லாமல், அசைவற்ற மோனமுங் கைகூடுமன்றோ! நமது படாடோபம், வெளிவேஷம், டம்பம் இவையெல்லாம் அதன்முன் நிற்காது நம்மைப் பிறந்த வடிவாக விட்டுவிட்டு ஓடுகின்றனவென்றால், நமது மனத்தில் எழும் எண்ணங்கள், அவற்றால் நமக்கேற்படும் அனுபவங்கள், அவை பயக்கும் கட்டுக்கடங்கா ஸந்தோஷம் இவற்றை யார் அனுபவியாது, அக்குழந்தையை வெறுத்து வாழ்ந்தனர். அக்குழந்தை யழும்போது அழுதும், சிரிக்குங் காலத்தில் சிரித்தும், அது குதிக்கும் ஸமயத்தில் குதித்தும், அது களைக்கும்போது களைத்தும், அதனுடன் பழகுபவர் விளங்கினாரெனில், பிரக்ருதி யுருவமே அக்குழந்தை வடிவமென்று அவரெண்ணினர் என்றால் அவரை வசைகூற வல்லவருமுண்டோ?

இத்தகைய பிள்ளைக்குறும்பின் வைபவத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்காமையாலன்றோ தேவகி,

"தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணா
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி யாடிவந்தென்
மார்பில் மன்னிடப் பெற்றிலே னந்தோ
வண்ணச் செஞ்சிறு கைவிர லனைத்தும்
வாரிவாய்க் கொண்ட வடிசலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ கொடு வினையேன்
என்னை என் செய்யப் பெற்ற தெம்மோயே"

என எண்ணி எண்ணி மனமயர்ந்தனள். என்ன விந்தை! பெற்றவள் அடையாச் சுகத்தை யசோதைபெற்ற பாக்கியம் பெரியதன்றே. தாயன்பே யுருவெடுத்த அவளது தெய்விகத்தைச் சொல்லவும் பெறுமோ? தாயெனில் வழிபடாத பொருளேது? இதயம் பொங்கி, அருளலை வீசி, அன்பு மடை பாய, தன்னை மறந்து, உயிர் பொருள் யாவும் தனது மக்கட் களித்துக், களித்து வாழும் தாயவளது சீரைப் பாராட்டாது எங்ஙா பிழைக்கும்? இயற்கையின் பொலிவே தாயுருவன்றே! அதிற் பொலிந்து விளங்கும் அநந்த சக்திகளும் அவளன்பின் ஆரவாரமெனில் தவறுமுண்டோ? ஐம்புலன் வழியை யடக்கி, தன்னுயிர் நிலைத்து விளங்கும் பாஞ்ச பௌதிக உடலை முற்று மறந்து, வேண்டிய வேண்டியாங்கு தம்மக்கட் களிக்கும் தாயின் பெருமையி லீடுபட்டன்றே ஞானியர் கடவுளை யெந்தாய் என்றனர்? ஸத்ய பராக்ரமும், அழிவிலின்பமும், அன்பின் பெருக்கையும் விரிக்கவந்த தெய்வக் குழந்தையைப் பெற்ற தாயின் தெய்விகத்தை எற்றெனச் சொல்வது? யசோதையின் வாழ்க்கையில் மானுஷா தெய்விகம் விளங்கிற்றெனில் பிசகாகாது. தன் குழந்தையிடம் அவள் விளங்கிய நிலைமை தெய்விகங்கொண்டது; மற்று அவள் ஜன ஸமூகத்தில் கலந்து விளங்கிய தன்மை மானுஷங் காட்டும். இவ்விரண்டின் கலப்பே யசோதையின் பெருமை போலும்! லோக மாறுட்டங்களுக்கும் கிருக சாரங்களுக்கும் கதிபேதங்களுக்கும், ஸர்வலோக எழுச்சிகளுக்கும் உள் உயிராக நின்று ஊன்றுகோலான ஆதிமுதற்பொருள், மனிதவுடலுள் மயங்கி, சிறு குழந்தைபோல் மாயஞ் செய்து விளையாடும் குழந்தைக்குறும்பைக் காணக் காண அவளுள்ளத்தெழுச்சி சந்திரனைக் கண்ட கடலினும் பெரிதன்றே! அவளையும், அக்குழந்தையையும் பிணித்த உறவு தெய்வ மானுஷ பாந்தவ்யம் எனலாம். அவள் தாயாய் விளங்குபவள்; அக்குழந்தை அத் தாய் அன்பின் தெய்விகத்தை விளக்க வந்தது. தன் கர்ப்பத்திலிராது வெளிவந்த அக்குழந்தையிடம் அவள் அன்பின் எழுச்சிமுன் இமயமும் நிற்கநாணுமெனலாம்; அவ்வளவு அளவு கடந்து அது எழும்பி விளங்கியது. தன் வயிற்றிருந்து பொன்னொக்க வந்த அப்பெண் குழந்தை, தான் பார்க்கும்போதே தனக்குத் தெரியாது மேகச்யாமள வடிவந்தாங்கி மனதை மயக்கும் ஆணுருவுற் றிருந்ததென அவளேன் அறியவில்லை? தாயன்பினாலே யன்றோ? உலகிலுள்ள பொற்குவியல் முழுதும் பெறினும் அச்சிறு பிள்ளை நிதியின் முன் கனக்குமோ? அல்லது அவள் மனதை அதன்பா லிழுக்குமோ? சிறிய மனித உடலின் ஒருசிறிய மூலையிற் கிடக்கும் ஸாமானிய இதயக்கூட்டின் சிறுமையையும், அதிலிருந்து கசிந்து கசிந்து அழிவற்றூறி வெள்ளமாய்ப் புரண்டு ஓடி அளவற்று மடைபாயும் தாயன்பின் பெருக்கையும் அளக்கும் அளவையே யசோதை எனலாம். அவ்வளவை காலமென்னும் அழிவில் அரசனால் தெய்விக முத்திரை பதிக்கப்பெற்றதெனலாம். அவ்வளவையின் உண்மையையும் செம்மையையுமே அது விளக்குமன்றே! எனவே அக்

குழந்தை முக சந்திரனது நிலவில் தவழ்ந்து உள்ளங்களித்து வருங்கால நன்மைகளையும் விருப்பங்களையும் அவள் கனவுகொண்டிருந்தன ளென்பது வசையாகாது. அதன் வளர்ச்சியில், தான் பெறலரும் எண்ணங்கள், செயல்கள், பெருமைகள், கண்காணுச்சேர்வைகள், ஆத்மலாபங்கள், இவையெலாம் அவளை இன்பக் கனவிலாழ்த்தி, மற்றெந்தப் பொருளையுங் கவனியாது அக்குழந்தையையே தான், வாழு மூலமாகச் செய்த தெனினும், அவ்வன்பின் பெருக்கே அவளைத் தன் குழந்தையின் தெய்விகத் தன்மையைக் காணவொட்டாது திரை யிட்டதுபோலும்! அத்திரையின் வைசித்ரிகத்திற்கு இவ்வுலகு என்றும் கடமைப்பட்டுள்ளதெனின் மிகையாகாது. அதனாலன்றே தாயன்பின் பெருக்கை வெளியிட இடமுண்டானது!

தாயன்பின் மிகையை யெண்ணியே, தாயுமானவரும் "பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ புகலிடம் பிரிது முண்டோ?" எனவலறினர். "தாயினும் நல்லன் நல் தாழ்குடையோனே" னமாமூலனார்வெளியிட்டதும அவ்வன்பின் தெய்விகத்தை நினைத்தேயாகும். அதை வெளியிடவே வேதமும் "மாத்ருதேவோபவ!" என வாயாற முறையிடுவதும். எம்பெருமான் தமது வைசித்ரிகப் பெருமையால் குழந்தை யுருக்கொண்டு, தான் அளவுகடந்து செய்யும் பிள்ளைக்குறும்புகளில் சலியாது ஈடுபட்டிணையற்ற தாயென உரைக்கவே யசோதைக்கு மாத்திரம் இளங்குழந்தையாகவும் மற்றவர்க்குப் பெருந்தெய்வமாகவும் விளங்கினர் போலும்!

நிற்க, அத்தெய்விகக் குழந்தையை மடியில் இருத்தி, அது ஆனைபோ லசைந்தசைந்தாடுவதையும், தலைமேல் கைகுவித்துக் பொருள்படாத கலகலத்த மொழிகளை வெளியிட்டுக் குனிந்து நிமிர்ந்தாடுவதையும், கால்களைத் தூக்கித்தூக்கியெறிந்து கீழிறங்கித் தவழ்ந்து தளர் நடையிடுவதையும், முன்தாள்களை மடித்துச் சப்பாணி கொட்டுவதையும், செங்கீரையாடுவதையும், அப்பூச்சி காட்டி மயக்குவதையும், இவை முதலான அக்குழந்தையின் செயல்களைக் கண்டு பரவசமடைந்து, அதைக் கட்டியணைந்து முத்தமரும்பி உவகை பூத்து விளங்குவள். அவர் அவ்வாறு செய்யும்போது அவள் முன் யாரிருப்பினும் அவள் உணராள்; அவர் பேசு மொழிகளும் அவள் காதுகளில் நுழையா. அக்குழந்தையே அவளுக்கு ஊனும் உறவும் உலகும் எவையுமாகி விளங்கி, "உண்ணும் சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்ற பெரியார் வாக்குக் குறுதி பயக்கும்.

இவ்வாறு தாயன்பின் பெருக்கில் அக்குழந்தை தவழ்ந்து வளர்ந்துவரு நாளில், வஸுதேவரனுப்ப வந்த யாதவரது புரோஹிதரான கார்கரென்னும் ரிஷிச்ரேஷ்டர், நந்தகோபனிடம் வந்தனர். அவனும் அவர்க்குவேண்டிய மரியாதைகள்செய்து, அத்தெய்வக் குழந்தைக்கும் ரோஹிணி மகவுக்கும் விதிமுறைப்படி நாமகரணஞ்செய்யும்படிவேண்டினன் அதைக் கேட்டமுனிவர் "யானோ யாதவர்புரோஹிதன் என்பது உலகப்பிரஸித்தம். ஆகையால் இவ் வைதிகக் கார்யங்களைச் செய்தால், இக்குழந்தையைத் தேவகி மகனே என்று எண்ணுவார்கள். கம்ஸனோ கொடியவன். உனக்கும் வஸுதேவர்க்கும் உள்ள நட்பும் எல்லாரும் அறிவர். தேவகியின் எட்டாவது பிறப்புப் பெண்பிறப்பாயிருக்க முடியாதென்று சொல்லப்படுகிறது. தேவகியின் மகளது மொழிகளையுங் கேட்ட அவன், உனது குழந்தையிடம் ஸந்தேஹங் கொள்வன்; அதைக் கொல்வன். உனக்களவிட ஒண்ணாத் துன்பம் வந்து விடுமன்றோ?" என்று சொல்ல, நந்தன் அவரை வணங்கிச் செய்துகொண்ட வேண்டுகோளுக்கிணங்கி வெகு ரஹஸ்யமாக நாமகரணச் சடங்கை அவரைக்கொண்டு நடப்பித்தனன். அத்தெய்வக்குழந்தை மேகச்யாமளமாகியகிருஷ்ணவர்ணமாக விளங்கியதால் கிருஷ்ணனென்று அதற்குப் பெயரிடப்பட்டது. ரோஹிணியின் மகனுக்குப் (பல) ராமன் என நாமகரணஞ் செய்தனர். பின் கிருஷ்ணனது அபாரதெய்விகத்தின் பிரபாவத்தை எடுத்துச் சொல்லி வாழ்த்தி கார்கர் சென்றார்.

கிருஷ்ண (பல) ராமர்கள் இணைபிரியாது விளையாடிவந்தனர். கண்ணனது பிள்ளைக் குறும்புகள் சொல்லுந்தரத்த வன்று. தெருவில்சற்றே அடிவைத்து நடக்கத்தெரிந்ததும், அவர் தெருவிலோடிக் கன்றுகளைப்பிடித்தும் துரத்தியும், ஓட்டியும் விளையாடுவர்; கட்டியிருக்கும் கன்றுகளையும் மாடுகளையும் அவிழ்த்து,

ஆடு கொழுக்கிறது எல்லாம் இடையனுக்கு லாபம்.

வெளியோட்டிடுவர்; யாராவது யிடையே நோக்கிவிட்டால் நடுத்தெருவிலிருந்து புழுதியளைவர்; அப்புழுதி படிந்த வடிவத்துடனேயே வெருண்டவர்போல ஓடிவந்து "அம்மா! அம்மா!" என்றலறிக்கொண்டு தாய் மடியில் போய் வீழ்வர். அதை எடுத்தணைந்த தாய், அன்பினால் பால்பெருக, அதை முத்தமிட்டு அதன் வாயிலிருந்து வெளிவரும் இளஞ்சிரிப்பில் களைத்துக் கொண்டிருக்கும் போதே, கீழே குதித்துப் பரபரவென வோடி மூலையில் அடுக்கிவைத்திருக்கும் அடுக்குப் பானைகளைத் தள்ளி அவற்றிலிருந்து வரும் பாலையுந் தயிரையும் வெண்ணெயும் விரலால் வாயிலிட்டுச் சுவைத்துச் சிரித்துக் கண்மூடிக் கொண்டு பரவசமா யாடுவதுபோலத் தலையசைத்துத் தன் தாயைக் கூப்பிட்டு, அவற்றையுண்ணும்படி சைகைசெய்யும் அச்செயலைக் கண்டதும், பொருட் சேதத்தால் உண்டான கடுங்கோபமெல்லாம் பஞ்சாப் பறக்கும். நின்றவிடத்தில் நில்லாது, அது செய்யும் சேஷ்டைகளைத் தடுக்கமுடியாது அவள் வியப்பள்; அதை மிறட்டவென அவள் வாய்திறக்கும்போது அது சிரித்துக் கண்மயக்குவதைக் கண்டவள் மயங்கி, அதை அணைத்து முத்தமிடுவள். மற்றும், கன்றுகளின் வாலைப் பற்றிக்கொண்டு துள்ளித்துள்ளி அவற்றுடன் ஓடி அவற்றை யிழுத்து விளையாடுவதைக் கண்ட கோபிகள், தமது வேலையை விட்டு விட்டு அதையே நோக்கிக் கொண்டிருப்பர். கிருஷ்ண ராமர்கள் செய் ததுடுக்குகள் அநந்தம். அவர்க்குத் துஷ்ட ஜந்துக்களிலிடமிருந்து அபாயங்களேற்படாது பார்த்துக்கொள்ள அவர் தாய்களால் முடியவில்லை. வீட்டுவேலையும் தாயின் ஆவலும் அவர்மனத்தை ஊசலாடச்செய்தன.

வரவரக்குழந்தைகள் வேகமாக நடக்கக் கற்றதும், ஊர்ப்பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிச்செய்தவம்புச்சண்டைகளுக்களவேயில்லை. கிருஷ்ணனுடைய துடுக்கே ஊரெங்கும் கோஷம். கட்டியிருக்கும் கன்றுகளை அவிழ்த்துப் பசுக்களை ஊட்டச் செய்வர்; எல்லா வீட்டிற்குள்ளும் நுழைந்து, அங்கிருக்கும் பால், தயிர், வெண்ணெய் இவைகளைத் தன்னுடன் வருவாருடன் உண்டு ஒருவருங் காணாதபடி ஓடிவிடுவர்; வெண்ணெயைத் திருடிக் குரங்குகளுக்கிட்டு அதை உண்ணும்படி அவற்றை வெருட்டிக் கட்டாயப்படுத்துவர்; தன் ஸகாக்களுடன் வீடு வீடாக நுழைந்து பால் தயிர் வெண்ணெய் கிடைக்காவிடில், ஒருவர்மேல் ஒருவரேறிக் கழியால் உறியிலிருக்கும் பானைகளை முட்டி அவற்றிலிருந்து கொட்டும் தயிரையும் பாலையும் அப்படியே நிமிர்ந்த வண்ணமாகவே உட்கொண்டு விட்டு, ஒன்றும் செய்யாதவர்போல வெளிவந்து தன் பரிவாரஞ் சூழக் கூத்தாடிக் கொண்டோடுவர்; வழியில் யாராவது 'என்னடா செய்தாய்?' என்று ஏதாவது கேட்டால், நடுநடுங்கினவர்போலக் குடுகுடு வென்றோடித் தன் தாயின் முன்றானையைப் பிடித்துக்கொண்டு ஒன்றுந் தெரியாதவர்போல நிற்பர். மாயக் கிருஷ்ணனது குறும்புகளைத் தாங்கமுடியாத கோபிகள் யசோதையிடம் வந்து முறையிட்டபடியேயிருந்தனர். எனினும் "அவன் வெகு ஸாது; ஒருநாளும் அப்படிச் செய்திருக்கமாட்டானே!" என்றே அவர்க்கெல்லாம் பதில் சொல்லுவள். ஆகவே கிருஷ்ணன் துடுக்கும் குறைந்ததில்லை; அவர் முறையும் ஒழிந்ததில்லை.

"அம்மா! யசோதை! உமது பிள்ளையைச் சற்று அடக்கமாட்டீரா? அவன் அகாலங்களில் கன்றுகளை அவிழ்த்து ஊட்டவிடுகிறான். யாராவது கோபித்துக்கொண்டால் அவன் சிரித்து விளையாடுகிறான். தினம் புதுவிதமாக அவன்தயிர்பால்திருடி, தான்குடிப்பதல்லாமல் குரங்குகளுக் கெல்லாம் பங்கிடுகிறான். அவை யுண்ணாவிட்டால், பால் தயிர்ப் பாண்டங்களையுடைத்துத் தவிடுபொடி யாக்கிவிடுகிறான்; திருடவரும் வீட்டில் தனக்கொன்றுங்கிட்டாவிட்டால் தொட்டிலிற் றூங்கும் குழந்தையைக் கிள்ளி அழவிட்டு ஓட்டம் பிடித்துவிடுகிறான்; பால் தயிர் இவை உயர உறியிலிருந்தால், உரல் முதலியவைகளை அடுக்கி, தந்திரமாய்க் கோல் கொண்டு அவற்றில் ஓட்டைவிட்டு அதிலிருந்து வழியும் பாலையுந் தயிரையும் குடித்துக் களிக்கிறான். இவை மாத்திரமன்று அவன் செய்வது. நாங்கள் சமையல் வீட்டில் வேலைசெய்துகொண் டிருக்கும் ஸமயங்களில் உட்புறமாக இருட்டறையில் சோரவேலை நடந்துகொண்டே யிருக்கும். அவற்றோடு நின்றால் நலமாயிருக்குமே. அறியாப்பிள்ளையென் றவனைச் சும்மாவிடலாகாது.

ஆடு கொண்டவன் ஆடித் திரிவான், கோழி கொண்டவன் கூவித் திரிவான்.

தவருன துடுக்குகள் பல அவன் செய்கிருன். வீட்டில் எங்கு பார்த்தாலும் மூத்திரம் பெய்துவிடுகிருன்; மலமிடுகிருன்; அசுத்தம் செய்துவிடுகிருன். எங்கள் வீட்டில் செய்வதெல்லாம் துடுக்குத்தனம், இந்த பார்! வெகு ஸாதுபோல உமது முன்ருனையைப் பிடித்துக்கொண்டு பின் புறமாக அரைக் கண்ணுற் பார்த்துப் புன்சிரிப்புச் சிரிக்கிருன். என்ன மாயம்!" என்று அங்கு வந்த கோபிகளின் கூட்டம் ஒருவர் பின் ஒருவராக வெகு அபிநயத்துடன் படபடத்துக் கோபத்துடன் சோளப் பொரிபோலப் பொரிந்தனர். அவர்கள் எது சொன்னுலென்ன? அவளுக்குக் கோபமேன் அரும்பும்? அவர்கள்கூறிய மொழிகள் எல்லாம் செவிடன் காதில் சங்கூதினுற் போலவிருந்ததால், வந்த கோபிகள் மூக்கின் மேல் விரல்வைத்து "அடி யசோதை! என்னடி உனக்கெல்லாஞ்சிரிப்புத்தான். உன்வீட்டில் எங்கள் பிள்ளை அப்படிச் செய்தால் நீ சும்மா இருப்பாயோ? இது அடாது! கொஞ்சம் அவனை அடக்கினுல், உங்கள் அப்பன் வீட்டுஆஸ்தியெல்லாம் போய்விடுமோஎன்ன?" என்று கேளாதிருப்பரா? "குழந்தை! தெரியாமல் செய்தால் அதை யென்ன செய்வது? தெரிந்தால் அது செய்யுமா?" என்று சிரித்துக்கொண்டே யசோதை அவர்களுக் கெல்லாம் சமாதானஞ் சொல்லுவள்.

நிற்க, ஒரு நாள் யாதவச் சிறுவருடன் கிருஷ்ண (பல) ராமர்கள் மாடுமேய்க்கச் சென்றவிடத்தில் மண்ணையள்ளித் தின்றதாக ராமன் யசோதையிடம் வந்து கோள் சொன்னுன். கோபிகள் சொன்ன வார்த்தைகளைச் சிறிதும் கவனியாத அவள், கண்ணன் மண்ணையுண்டான் எனக்கேட்டதும் அளவற்றகோபமேன் அடையவேண்டும்?. அக்குழந்தையின் க்ஷேமத்தை யுத்தேசித்த அன்பின் வேகமல்லவா அவளை அவ்வாறு கோபமடையச் செய்தது? தாய் மிறட்ட வெருண்டதுபோல் அபிநயித்த அக்குழந்தை ஒடுங்கி நடுங்கி அடங்கிய குரலில் "இல்லை அம்மா! நான் மண் தின்னவில்லை, பயல்களெல்லாம் பொய் சொல்கிருர்கள். அவர் சொல்வது மெய்யானுல், என் வாயைவேண்டுமானுல் பார்த்துக்கொள்." என சொல்லிக்கொண்டு தன் வாயை நன்ருய்த் திறந்து காட்டியது. அவள்அதில் என்ன கண்டாள்! தான் முன்கண்டு மறந்திருந்த காட்சி மீண்டும் அதனுள் விளங்குவதைக் காண அவளடைந்த ஆச்சரியத்திற் களவேயில்லை.

"இது என்ன கனவோ? தெய்வமாயையோ? என் மயக்கத்தால் ஏற்பட்ட தோற்றமோ? அல்லது ஒருவேளை என் குழந்தைக்கு வரக்கூடிய அத்ருஷ்டமே உள் மறைந்து விளங்குகின்றதோ! வாசாமகோசரமாக விளங்கும் எப்பொருள், ஸர்வலோகங்களுக்கும் அடைக்கலமாகவிருக்கிறதோ, ஸர்வபூத சிருஷ்டிக்கு மாதரவாயிருக்கிறதோ,எப்பொருள்யான் என்னும் செறுக்குள் பொதிந்துவிளங்கும்படி பல்லுயிரையும்தனதுமாயையுள்பாய்விக்கஎன்னை 'இவன் என் கணவன்,' 'இது என்குழந்தை' 'இது என் ஊர்,' 'இப்பசுக் கூட்டம், கோபர்கள், இந்நாடு எல்லாம் எனது,' 'நான் கோபர்த் தலைவனுடைய மனைவி' என்றிவ்வாறு எண்ணச்செய்கிறதோ, அதே பொருள் என்னுயிரைக் காக்குமாக!"

இவ்வாறு பிரமித்து அவள் எண்ணிக்கொண் டிருக்கும்போதே, கண்ணன் தனது வைஷ்ணவ மாயையைப் பரப்பித் தன் வாயை மூடினர். கண்ணனது உண்மைப் பிரபாவத்தி லீடுபட்டுக்கொண்டிருந்த யசோதை கனவு கண்டு திடுக்கிட்டெழுந்தவள் போலத் தன்னுணர்ச்சியடைந்து கண்ட காட்சியை முற்றும் மறந்துவிட்டாள். ஸர்வ புவனங்களுச்கும் தாயானவனைத் தம் மகனுகவே அவள் எண்ணினுள். என்ன பேதமை! அது என்ன ஆச்சர்யம்! தாயன்பிற்கு மயக்கமே உயிராய் விளங்குமோ!

: : மரகதவல்லி : :

இஃது **பஞ்சாக்ஷரம்** என்னும் அரிய நூலின் ஆசிரியர் ப. கோவிந்தசாமிராஜா அவர்கள் இயற்றியது.மரகதவல்லி, அநேகம் பதிப்புகள் வெளிவந் திருப்பதே இதன் பெருமையை நன்கு விளக்கும். தமிழ் அபிமானிகள் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்றது. இரு பாலாரும் வாசிக்கத்தகுந்தது. எளிய நடையில் எழுதப்பெற்றது. பள்ளிக் கூடங்களில் உபபாடமாக வைக்கத்தகுந்தது. விலை அணு **8**.

போதினிச் சந்தாதாரர்க்கு அணு **6**.

ஆடுங்காலம் தலைகீழாய் விழுந்தாலும் கூடும் புசிப்புதான் கூடும்

ஆறுமுக நாவலர்

ARUMUKHA NAVALAR

ஆறுமுக நாவலர் என்பவர் தமிழுலகத்திலே தமிழையும் சைவசமயத்தையும் வளர்த்த பெரியார்களுள் ஒருவர். அவரளவு சிறந்தவர் சென்ற இரண்டு மூன்று நூற்ருண்டுகளில், இத்தமிழ் நாட்டில் ஒருவரும் இருந்திலரென்று ஒருதலையாகச்சொல்லலாம். அவ்வளவு சிறந்தார் ஒருவருடைய பிறப்பு வளர்ப்புக்களையும்சொற் செயல்களையும் அறிவது யாவர்க்கும் பெரும் பயன் தருமென்பதில் சந்தேகமில்லை.

நமது தமிழ் மொழியில், கல்வி முதலியவற்ருற் பெரியாருடைய சரிதங்களைக் கூறும் நூல்கள் இல்லாமை ஒரு பெருங்குறை. இத்தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய அரசர், புலவர், கணிதர், மருத்துவர்களுள் எவரைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? சிற்சிலரைப் பற்றி, ஆதாரமற்றவைகளும் நம்பத் தகாதவைகளுமான சிற்சில பழங்கதைகள் தெரியுமேயன்றி, உண்மைச் சரிதமென்று உறுதியாய்க் கூறத்தகுந்தவை எவையேனுந் தெரியுமா? திருவள்ளுவர், திருத்தக்கதேவர், கம்பர், சேக்கிழார் முதலிய புலவர் பெருமான்களுடைய சரிதங்களில் உண்மையாக நாம் அறிந்தவை யாவை? திருத்தக்கதேவரைப் பற்றி ஒன்றுமே தெரியாது. திருவள்ளுவரையும் கம்பரையும் பற்றி வழங்குங் கதைகளுள் ஒன்றேனும் தக்க ஆதாரமுள்ளதன்று. சேக்கிழாரைப்பற்றி ஒரு புராணமுண்டு. அப்புராணமும் அவர் காலத்துச் செய்ததன்று. அதனுல், அது சேக்கிழாரைக்கொண்டு பெரிய புராணம் பாடுவித்த சோழன் எவனென்றே தெளிவாகக் கூறவில்லை; சேக்கிழார்பெரியபுராணம் பாடிய விஷயம் ஒன்றேயன்றி மற்ருென்றும் அதுகூறவுமில்லை. அன்றியும், சேக்கிழார் தமது புராணம் அரங்கேறியது "அநபாயனரசவை"யில் என்றுகூற, அதுதில்லையில் "வள்ளலார்திருநடஞ்செய் மன்றின் முன்றில்" என்று கூறுகின்றது. இதனுல் அஃது எவ்வளவு நம்புதற்கிடமானது என்பது தெரியவில்லை.

மேற்கூறிய புலவர்களெல்லாம் பல நூற்ருண்டுகளுக்குமுன் இருந்தவர்கள். அக்காலத்தில் புலவர் முதலானவர்களுடைய ஜீவிய சரிதம் எழுதும் வழக்கமிருக்கவில்லை; அதனை ஒரு பொருளாக நமது புலவர்கள் மதிக்கவுமில்லை. அவர்கள் அரசர் முதலானவர்மேல் பிள்ளைக் கவியும் கோவையும் பாடிச் சன்மானம் பெறுதலையே பெருங்காரியமாக எண்ணினுர்களன்றி, அரசர்களுடைய அரசியலையும், வீரச் செயலையும் உள்ளபடி எழுதித் தமது வழித்தோன்றுவார்க்கு அறிவும் ஆநந்தமும் விளைக்கக்கருதினுரில்லை. முற்காலத்துப்புலவர் கதி இங்ஙனமாக, பிற்காலத்துப் புலவர் வரலாறு ஏதேனும் எழுதப்பட்டுளதோவெனின், அதுவுமில்லை. வில்லிபுத்தூரர், கச்சியப்பர், பரஞ்சோதி முனிவர், சிவஞான முனிவர் முதலிய புலவர்களது சரிதந்தான் நமக்கு யாது தெரியும்? இவர்களையும் சில நூற்ருண்டுகளுக்கு முன்னிருந்தவரென நீக்கி, ஐம்பது அறுபது வருடங்கட்கு முன்னிருந்த புலவர்கண் மாட்டுத் திரும்புவோமாயின், அவர்கள் கதியும் அவ்வாருகவேதான் இருக்கின்றது. சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளும், திரிசிரபுரம் மீனுக்ஷி சுந்தரம்பிள்ளையும் ஐம்பது அறுபது வருடங்கட்குமுன் னிருந்த புலவர்கள். அவர்களுடைய சரிதந்தான் உள்ளபடி யாரால் எழுதப்பட்டுளது? ஒருவராலுமில்லை.

ஆறுமுக நாவலர் ஏறக்குறைய நாற்பது வருடங்கட்குமுன் னிருந்தவர். ஏனைய புலவர்களுடையசரிதம்போல்அவருடையசரிதம் முற்றும்,மறையாது அவரது மாணுக்கர்முதலியோர் முயற்சியால் சிறிது தெரிவதாயிற்று. முதலில் ம-ா-ா-ஸ்ரீ, வே. கனகரத்தினம் பிள்ளை என்பவர், 1882-ம் ஆண்டில், **நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம்** என்று ஒரு சிறு புத்தகம் எழுதி வெளியிட்டனர். இது நாவலர் சரிதத்தில் முக்கியமானவைகளை எடுத்துச்சொல்லிச் செல்லுகின்றது. இச்சிறு புத்தகம் இப்போது கிடைப்பது அரிது. இரண்டாவதாக, 1898-ம் ஆண்டில் சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ இராமசாமிக் கவிராயர் குமாரரான அருணுசலக்கவிராயர் நாவலர்சரித்திரத்தை விருத்தப் பாவினுல் 361 செய்யுள் கொண்ட ஒரு சிறு நூலாக இயற்றி வெளியிட்டனர். இது மேற்கூறிய கனகரத்தினம் பிள்ளை எழுதிய வசன நூலையே பெரிது மொட்டிச் செல்லுகின்றது; இனிய நடை வாய்ந்தது; செய்யுணடை விரும்புவோர்க்கு

ஆடு தவுமா குருக்களே என்ருல், கொம்பும் குளம்பும் தவிரச் சமூலமும் ஆகும் என்கிருர்.

மிக்க இன்பந்தரத் தக்கது. மூன்றாவதாக, 1914-ம் ஆண்டில் ம-ா-ா-ஸ்ரீ, ஸி. செல்லையா பிள்ளை என்பவர் "ஆறுமுக நாவலரவர்கள் சரித்திரச் சுருக்கமும் அவர்களியற்றி யருளிய தனிப்பா மாலையும் *" என்றொரு சிறு புத்தகமெழுதி வெளியிட்டனர். இது கனகரத்தினம் பிள்ளை எழுதிய சரித்திரத்துக்குச் சுருக்கமாயுள்ளது; நாவலருடைய படம் அமையப்பெற்றது; நாவலரை நேரிற் காணாதவர்கள் அவருடைய சாயலையும் தோற்றத்தையும் அறிந்துகொள்வதற்கு இன்றியமையாதது. நான்கு வருடங்கட்கு முன்னே அச்சிடப்பட்டதாதலின் இதன்பிரதிகள் * இப்போது அகப்படும். இம்மூன்று புத்தகங்களும் நிரம்பிய விஷயமுள்ள அன்மையின், நாவலருடைய தமையனார் புத்திரரான ஸ்ரீமத் கைலாச பிள்ளையவர்கள் நாவலர் சரித்திரத்தை இயன்றவரை விரிவாயெழுதி அச்சிட்டு வருகின்றனர். அது விரைவில் வெளிவரும். இனி நாவலர் சரிதத்தை நாமும் இங்கே மிகச் சுருக்கி வரைகுதும்.

ஆறுமுகநாவலர். இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரிலே, வேளாளர் குலத்திலே, சகவருஷம் 1745-குச் சரியான சித்திரபானுவருஷம் மார்கழிமீ 5-ந்தேதி (18-12-1822) புதன்கிழமை பிறந்தனர். இவர் தந்தை பெயர் கந்தப்பிள்ளை; தாயார் பெயர் சிவகாமியம்மை. இவர் உரிய வயதில் வித்தியாரம்பஞ் செய்யப் பெற்று; முதலில் சுப்பிரமணிய உபாத்தியாயரிடத்தும், பின்னர் வேலாயுத முதலியாரிடத்தும், அதன் பின்னர்ச் சேனாதிராய முதலியாரிடத்தும், கடைசியாக மனப்புலி சரவணமுத்துப்புலவரிடத்தும் தமிழ் கற்றுக்கொண்டனர். இவர் ஜயவருஷம் (1834), அஃதாவது தமக்குப்பன்னிரண்டாம் வயதில், பீற்றர் பார்சிவல் (Peter Percival) துரையுடைய இங்கிலீஷ் வித்தியாசாலைக்கு இங்கிலிஷ் கற்கச்சென்றனர். நாலைந்து வருஷம் இங்கிலீஷ் கற்றபின் அவ்வித்தியா சாலையிலேயே ஒருபாத்தியாயராயமர்ந்தனர். பின்னர்ப்பிலவ வருஷம் (1841), அஃதாவது தமக்குப் பத்தொன்பதாம் வயசில், பார்சிவல்துரைக்குத்தமிழ்ப் பண்டிதராயினார்.

பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதராய் இருந்து பைபிளின் தமிழ் மொழி பெயர்ப்பைத் திருத்திக்கொண்டுவருங் காலத்தில், தமது வேலையை இயன்றவரை நன்றாகச் செய்ய வேண்டி, இவர் பைபிளையும் அதற்குக் கிறிஸ்து மதாசாரியர்களாலே செய்யப்பட்ட வியாக்கியானங்களையும் கற்றுக் கொண்டார். அதனால் இவருக்குப் பைபிளிலேசிறந்தஞான முண்டாயிற்று. அதிலே அவருக்குண்டான அறிவளவு அறிவுகிறிஸ்துமதபிரசாரகர்களான பாதிரிமார்களில் பலருக்கு இருந்ததில்லை. இவ்வாறு பைபிளை ஆராயுங்காலத்தில் அதிலுள்ள குற்றங்களை யெல்லாம் செவ்வனே தெரிந்து கொண்டார். அதனோடு பாதிரிமார்கள் ஏதிலரைக் கிறிஸ்தவர்களாக்குதற்குச் செய்யும் உபாயங்களையுமெல்லாம் நன்றாக அறிந்து கொண்டார். பெரும்பாலும் இந்த உபாயங்களினாலே யாழ்ப்பாணத்திலே கல்வியறிவில்லாதவர்களிடத்தே, பரமதமாகிய கிறிஸ்துமதம் பரம்புதலையும், சுவமதமாகிய சைவசமயங் குன்றுதலையும் கண்டார். அப்போது இவர் சைவர்கள் கல்வியறிவு இல்லாமையினாலும், சமயநூலுணர்ச்சி இல்லாமையினாலும் கிறிஸ்தவர்களாகிறார்களென்றும், கிறிஸ்துசமயிகள் பெரும்பாலும் தங்கள் சமயநூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிறவிடங்களிலும் யாவருக்கும் போதித்தும் வருகிறபடியினாலே, அவர்கள் சமயம் வளர்ந்தோங்கி வருகின்றதென்றும், சைவசமயிகள் சைவநூல்களைக் கல்லாமையினாலும் எங்கேயாயினும் சிலர் கற்றாலும் அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும், யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும் சைவசமயம் வரவரக் குன்றுகின்றதென்றும் அறிந்தார். ஆதலால், தமிழ்நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்துப் பிள்ளைகளுக்குச் சமயநூல்களையும், அவைகளுக்கு வேண்டும் கருவி நூல்களையும், இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக் காரணமாயுள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல்களையும் கற்பிக்கவேண்டு

* இதன் விலை அணாஎட்டு; கொழும்பு, புதுச்செட்டித் தெரு, 386 நெம்பருள்ள வீட்டில், C. வேலாயுதன் என்பவரிடம் விலைக்கு அகப்படும்.

மென்றும், திருக்கோயில்கள்தோறும் சனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பிக்க வேண்டுமென்றும் எண்ணினார். இக்காரியங்களைச் செய்பவருக்கும் செய்விப்பவருக்கும் சமய நூலுணர்ச்சி இன்றியமையாதது என்று கொண்டு தமது சமயநூலுணர்ச்சியை விருத்தி செய்ய விழைந்து, சைவசித்தாந்த சாத்திரங்களை முன்னையிலும் அதிக கவனமாகக் கற்றார். அவைகளைச் சந்தேக விபரீதமறத் தெளிதற்கு அவற்றின் முதனூல்களாகிய சிவாகமங்களைக் கற்றறிதல் அவசியம் என்று கண்டு, அவைகளைப் படிக்க முயன்று, சிலநாட்களுள் சம்ஸ்கிருத நூல்களை வாசிக்கவும் அவற்றின் பொருளை விளங்கவுந் தாமே கற்றுக்கொண்டார். இவ்வாறு தமதறிவை விருத்திசெய்துகொண்டதனால், சம்ஸ்கிருதம், தமிழ், இங்கிலிஷ் என்னும் முப்பாஷைகளுந் தெரிந்தவர் எனவும், சைவசித்தாந்த சாஸ்திரத்தில் வல்லவரெனவும் பெயரெடுத்தார். அதனால், யாவரும் இவரை நன்கு மதித்து மரியாதை செய்யவும் தங்களுக்குத் தெரியாத விஷயங்களை இவரிடத்தில் கேட்டறியவும் தலைப்பட்டார்கள்.

இக்காலத்தில் இவர் கருவி நூல்களையும் சமய நூல்களையும் சிலருக்குக் கற்பிக்க எண்ணங்கொண்டு, பிள்ளைகளைச் சேர்த்து விசுவாவசு வருஷம் (1846) தைமாதம் முதலாகக் காலையிலும் மாலையிலும் கற்பிக்கத் தொடங்கினார். பின்னர்ச் சைவசமயத்தின் உண்மைகளையும், சமயாசாரங்களையும், சநாதன தருமங்களையும் சனங்களுக்குப் போதிக்கவிரும்பி, வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலிலே பிலவங்கவருஷம் (1847) மார்கழிமாதம் 18-ந்தேதி தொடங்கி வெள்ளிக்கிழமை தோறும் சைவப் பிரசங்கம் செய்து வந்தார். இவர் செய்த பிரசங்கங்கள் பாதிரிமார் செய்யும் பிரசங்கங்களினும் கடினமான விஷயங்களாயும் பலநூல்களின் சாரங்களாயும், காதுக்கு இனியனவாயும், கேட்போருக்கு இனிது விளங்குவனவாயும் இருந்தமையால், சனங்களெல்லாம் அதிக ஊக்கத்தோடும் அன்போடும் வந்து கேட்பாராயினர். இப்பிரசங்கங்களைக் கேட்டவர் பலர், சைவசமயத்தின் இலக்கணம் இது வென்றும், சைவ சமயிகள் வழிபடுங் கடவுளின் இலக்கணம் இது வென்றும், சைவசமயிகள் அத்தியாவசியகம் தரிக்கவேண்டிய சின்னங்கள் இவை என்றுமறிந்து, மாமிசபோசனம், மதுபானம் முதலியவைகளை விலக்கி, சமயதீக்ஷை பெற்றுக் கிரமமாகச் சந்தியா வந்தனம் செய்து, உருத்திராக்கந் தரித்துச் சிவாலய தரிசனம் செய்யத் தொடங்கினார்கள்; தேவார திருவாசகங்களைக் கற்றுக் கடவுளைத் தோத்திரிக்கத் தொடங்கினார்கள்; பாதிரிமார்கள் சைவ சமயத்தை இழித்துக் கூறுவனவற்றுள் ஒன்றும் உண்மையன்று என்று அறிந்து கொண்டார்கள். இவ்வாறு யாழ்ப்பாணம் முழுதும் கிறிஸ்து சமயங் குன்றச் சைவசமயம் தலையெடுத்தது.

பின்னர் நாவலர், 1848-ம் ஆண்டுக்குச் சரியான கீலக வருஷம் ஆவணிமாதம் வண்ணார் பண்ணையிலே பிள்ளைகளுக்குத் தமிழ்க் கல்வி கற்பிக்கவும் சமய வுணர்ச்சி புகட்டவும் வேண்டி, சைவப்பிரகாசவித்தியாசாலை என்று பெயரிட்டு ஒரு தமிழ்ப்பாடசாலை ஸ்தாபித்தார். இந்தவித்தியாசாலையை முதலில் அவர் ஊரிலே பிடியரிசி தண்டியும், தமது மாணாக்கர் சிலரைக்கொண்டு வேதனமில்லாது படிப்பித்தும் நடத்தினார். அடுத்த சௌமிய வருஷம் (1849) தமது வித்தியாசாலையிலேகல்விகற்கும் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதற்குச் சில புத்தகங்களைப் புதிதாயெழுதியும் சில பழைய புத்தகங்களைப் பிழையின்றித் திருத்தியும் அச்சிடுவதற்கும், கிறிஸ்தவ பாதிரிமார்கள் சைவசமயத்தைத் தூஷித்து எழுதிப் பரப்பும் துண்டுப் பத்திரிகைகளுக்கும் புத்தகங்களுக்கும் மறுப்பு எழுதி அச்சிடுவதற்குமாகச் சென்னபட்டினம் சென்று அச்சுயந்திரம் வாங்கி வந்து, வித்தியாநுபாலன யந்திரசாலை எனப் பெயர் கொடுத்து ஓர் யந்திரசாலை ஸ்தாபித்தார். இந்த அச்சுயந்திரசாலையிலே இவர் தாமியற்றிய பாலபாடம், சிவாலய தரிசன விதி, ஆத்திசூடி கொன்றைவேந்தனுரை, திருமுருகாற்றுப்படை யுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, பெரிய புராண வசனம் முதலிய புத்தகங்களையும், சைவதூஷண பரிகாரம், வச்சிரதண்டம், சுப்பிரபோதம் முதலிய கிறிஸ்துமத கண்டனங்களையும் அச்சிட்டதன்றி, கொலைமறுத்தலுரை, நன்னூல் விருத்தியுரை முதலியவைகளையும் சுன்னாகத்து முத்துக்குமார கவிராசர் இயற்

றிய ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம் என்னும் நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். இந்நாட்களில் இவர் கிறிஸ்து மதத்தைக் கண்டித்து அதைப் பரவவிடாமல் செய்த முயற்சிகள் அதிகம். அவற்றிற்குக் கிறிஸ்துமத பாதிரிமார்களே தக்க சான்றாயிருக்கின்றனர். அவர்கள் 1855-ம் ஆண்டில் உவெஸ்லியன் மிஷன் ரிபோர்ட்டில் (Wesleyan Mission Report)-எழுதியிருப்பதைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கும். இந்நாளில் நாவலர் தோன்றி இவ்வாறு கிறிஸ்து மதத்தைக் கண்டித்துச் சைவ சமயத்தின் உண்மையைப் பிரசங்கியாவிடின், யாழ்ப்பாணம் முழுதும் இப்போது கிறிஸ்தவ நாடாயிருக்கும்.

சில வருடங்களின் பின் வண்ணார் பண்ணையிலே ஸ்தாபித்த அச்சுயந்திரசாலை தமது வேலைக்குப் போதாமையால் அதனை விற்றுவிட்டுக் காலயுக்தி (1858) வருஷத்தில் சென்னைக்குச் சென்று அங்கே வித்தியாநுபாலன யந்திரசாலை என்ற பெயரோடு ஓரச்சுயந்திரசாலை ஸ்தாபித்துத் தமது புஸ்தகங்களை அச்சிடுவாராயினர். இந்நாளில்தான் இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவர் கேள்விப்படி திருக்குறள், திருக்கோவையார், தருக்க சங்கிரகம் முதலியவற்றை இவர் பரிசோதித்து அச்சிட்டது. இவ்வேலைகளுக்காகச் சென்னபட்டினத்தில் சிலவருடம் தங்கிப் பின்பு துர்மதி (1861) வருஷம் யாழ்ப்பாணம் திரும்பினர். பின்பு ருதிரோற்காரி (1863) வருஷம் இந்தியாவிற்குச் சென்று, ரத்தாக்ஷி (1864) வருஷம் ஐப்பசிமாதம் சிதம்பரத்தில் ஒரு வித்தியாசாலை ஸ்தாபித்துவிட்டுச் சென்னை சென்று சில நூல்களுக்கு உரைகள் எழுதியும் சில நூல்களைப் பரிசோதித்தும் அச்சிடுவாராயினர். இக்காலத்தில்தான் சேதுபுராணம், தொல்காப்பியம் சேனாவரையம், இலக்கணக்கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலிய நூல்களைப் பரிசோதித் தச்சிட்டதும், சைவசமயநெறி, கோயிற்புராணம். முதலியவைகளுக்கு உரை எழுதி அச்சிட்டதும். சென்னையில் வசிக்கும்போது சைவப் பிரசங்கங்களும் முறையாகச் செய்துகொண்டிருந்தனர். சென்னையில் நாலைந்து வருஷம் கழித்துவிட்டுச் சுக்கில (1869) வருஷம் ஊருக்குத் திரும்பினர்.

பின்னர் யாழ்ப்பாணத்தி லிருந்துகொண்டு நன்னூற் காண்டிகையுரை, சைவவினாவிடை முதலிய நூல்களை இயற்றியும், கோப்பாய், புலோலி முதலிய இடங்களில் வித்தியாசாலைகள் ஸ்தாபித்தும், கோயில்களைச் சீர்திருத்தியும், ஊருக்கு நன்மை பயக்கும் பலகாரியங்களைச் செய்தும், பிரமாதி (1879) வருஷம் சிவபதமடையும் வரையும் எப்போதும்பொது நன்மைக்காகவே பாடுபட்டு வந்தார்.

இவரிடத்தில் சமயாபிமானம், தேசாபிமானம், அஞ்சாமை, ஆண்மை, பரோபகாரசிந்தை முதலிய நற்குணங்கள் சிறந்துவிளங்கின. இவருடைய சமயாபிமானம் இவரெழுதிய சைவதூஷண பரிகாரம் என்னும் நூலைப் படிப்பதனாலும், அஞ்சாமை முதலிய மற்றைய குணங்கள் ஸ்ரீமான் கைலாசபிள்ளையவர்களால் எழுதப்பட்ட இவருடைய சரித்திரத்தைப் படிப்பதனாலும் இனிதுவிளங்கும்.

நிலத்தன்மைப் பரிசோதனை

SOIL: ITS STUDY

யாதொரு நிலத்தைத் தெரிந்தெடுக்கையிலாவது அதைப் பயிரிடப் பிரவேசிக்கையிலாவது, அதிலிருந்து எவ்வளவு பலனடையப் பயிரிடுகிறவனுக்குச் சுதந்தரமிருக்கிறதோ அவ்வளவுமட்டில் பலனை யடைவதற்காக அவன் தன்னுடைய நிலத்தில் என்னென்ன விதமான மண் இருக்கிறதோ அதைப் பரிசோதித்து அறிந்துகொள்ள முதலில் ஆரம்பிக்கவேண்டியது.

இனிமேல் அவன் செய்யப்போகிற காரியங்களுக்கெல்லாம் இது முக்கிய ஆதாரமாயிருக்கிறது. அவன் தன்னுடைய நிலத்திலுள்ள ஒவ்வொரு பாகத்திலும் உண்டாக்கத்தக்க பிரயோசனங்களையும் அதைஎப்படித் தனக்கு

ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு, ஐயம்பிடாரிக்கு மூன்று கொம்பு.

அனுகூலமாகப் பொருத்திக் கொள்வதோ அதையும், எவ்வளவு புத்தி நுட்பத்தோடு தெரிந்துகொண்டு வேலை செய்கிறானோ அதற்குத் தக்கபடி அநேகமாய்ப் பலனடைவான். தன்னுடைய நிலத்தைச் சேர்ந்த அந்தந்தப் பாகங்களின் குணாகுணங்கள் இன்னின்னவென்பதையும், அவைகளை இன்னின்ன விதங்களாகச் சீர்திருத்துவதென்பதையும், அதற்கு இன்னின்ன பயிர் மிகவும் தகுதியான தென்பதையும் அவன் அறிந்துகொள்ளவேண்டியது. இப்படி அவன் அறிந்துகொள்ளுவதினால் உண்டாகிற பிரயோசன மென்னவென்றால், ஒன்றுக்கொன்று நேர்விரோதமான குணங்களையாவது, ஒன்றுக்கொன்று வேறுபட்ட குணங்களையாவது உடைய நானாவிதமான மண்ணை ஒன்றாய்க் கலந்தாகிலும், நிலத்திற்கு முன் இருந்த குணத்தை மாற்றுவதற்காக அனுகூலமா யிருக்கும்பொருட்டு, தாவர வஸ்துக்களையாவது தாதுவர்க்கங்களையாவது சேர்த்தாகிலும் அவன் தன்னுடைய நிலத்திலுள்ள மண்ணின் குணத்தை மாற்றிக்கொள்ளக் கூடியவனாவான். புலங்களில் விதை விதைப்பதற்கு முன்பாவது நாற்று நடுவதற்கு முன்பாவது அவைகளிலுள்ள மண் என்ன இலக்ஷண முடையதாயிருக்கிறது, அல்லது என்ன ஸ்திதியி லிருக்கிறதென்று சற்றே யோசித்துப் பார்ப்பவர்கள் பயிரிடுபவர்களுக்குள்ளே எத்தனை பேர்? புலத்திலுள்ள மண்ணின் சாராம்சத்துக்குத் தக்கபடி அதற்கு என்ன மாதிரியான எருவை எவ்வளவு மட்டில் போடவேண்டியதோ அவ்வளவை அந்தப்படி போடுகிறவர்கள் எத்தனை பேர்? புலத்திலுள்ள மண்ணின் சாராம்சத்துக்குத் தக்கபடி தங்களுடைய தானியங்களை விதைக்கிறவர்கள் எத்தனை பேர்? தங்களுடைய புலங்களை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துவிட்டால் ஒரே தன்மையான இந்திரிய வஸ்து (organic matter) என்று சொல்லப்படுகிற புல் பூண்டு பிராணி இவைகளின் சம்பந்தமான வஸ்துக்கள் அந்தப் புலங்களிலிருக்காமற் போகலாமென்பதை யோசிக்கிறவர்கள் எத்தனை பேர்?

நிலத்திலுள்ள மண்ணில் பெரும்பாலும் தாவரவஸ்துக்கள் அடங்கியிருந்தாலும் இருக்கலாம்; அப்படிக்கில்லாவிட்டால், பெரும்பலும் தாதுவர்க்கங்கள் அடங்கியிருந்தாலும் இருக்கலாம்; அதற்குத் தக்கபடி அந்தந்த நிலத்தின் விளைச்சலும் அநேகமாய்ப் பேதப்பட்டிருக்கும், புல் பூண்டு முதலிய தாவரவஸ்துக்கள் அழுகி மட்கித் தாதுவர்க்கத்தைச்சேர்ந்த வஸ்துக்களானாலன்றி மற்றப்படி பயிரைப் போஷிப்பதற்கு ஏற்ற ஆதாரமாகாது. மிகவும் விலையுயர்ந்த நிலங்களாயிருந்தபோதிலும், அவைகள் எவ்வளவு வளப்பமாயிருக்கக் கூடியதோ, அந்த ஸ்திதிக்கு அவைகளைக் கொண்டுவரவேண்டுமானால் சாதாரணமாய் யாதொரு நிலத்தைப் பண்படுத்தி எருப்போடுவது போலல்லாமல், சற்றேறக்குறைய அவைகளில் ஏக்கரா ஏக்கராவாய் அநேக பாகங்களை விசேஷமாய்ச் சீர்திருத்த வேண்டியதாயிருக்கிறது. ஒவ்வொரு விதமான மண்ணையும் என்னென்ன முகாந்தரங்களைக் கொண்டு என்னென்ன விதங்களாய்ச் சீர்திருத்தக்கூடுமோ அப்படிப்பட்ட எல்லா விஷயங்களையும் பயிரிடுகிறவன் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கவேண்டியது. மேலும் யாதொரு நிலம் வளப்பமுள்ளதாயிருந்தபோதிலும் விளைச்சலுக்கு யோக்கியதை யில்லாததா யிருக்கக்கூடும். அநேக புலங்கள் சுவல்பமான பயிர்கூடவிளைவதற்கு யோக்கியதையற்றதா யிருந்தபோதிலும் வளப்பமாயிருப்பதற்கு வேண்டிய அம்சங்கள் மாத்திரம் அவைகளில் ஏராளமா யிருக்கக்கூடும். ஆகவே, நன்றாய் யோசித்துப் பார்க்கும்போது யாதொரு நிலத்திலே வளப்பத்திற்கு வேண்டிய அம்சங்கள் மாத்திரமே இருப்பதினால் அந்த நிலம் வளப்பமுடையதாகமாட்டாது; ஆனால் அந்த அம்சங்கள் என்னென்ன மாதிரியாய் எவ்வளவு கலந்திருக்கவேண்டியதோ அந்தப்படி யிருந்தால்தான் அந்த நிலம் வளப்பமுடையதாகும். இப்போது எடுத்துக் காட்டப்பட்ட இந்த விஷயந்தான் சற்றேறக்குறைய விவசாய சாஸ்திர முழுமைக்கும் ஆதாரமாயிருக்கிறது. யாதொரு நிலத்தைப் பயிரிட ஆரம்பிக்கிறவனுக்கு அந்த நிலத்தின் வளப்பமும் பிரயோஜனமும் இலேசாய்க் கிடைக்கத் தக்கதல்ல; அதனால் அவன் பிரயோசனப்படுவதற்கு முன்பாக அவன் அத்தோடு அநேகமாய்ப் போராடி உழைப்பெடுத்துக்கொள்ள வேண்டியவனா யிருக்கிறான். வளப்பத்திற்கு வேண்டிய மேற்படி

ஆட்டைக் காட்டி வேங்கை பிடிக்கப் பார்க்கிறான்.

அம்சங்களி லெதுவுமே யாதொரு நிலத்தி லில்லாமலிருந்து, என்னென்ன எருக்கள் அல்லது நிலவளப்பத்தை யுண்டாக்கத்தக்க வஸ்துக்கள் அந்த நிலத்தில் போடப்படுகிறதோ அதற்குத் தக்கபடி விளைவுமாத்திரம் விளையுமானால் எனவே போடப்பட்ட எருக்கள் உருமாற்றப்பட்டு, புல்லாகவாவது தானியமாகவாவது வேர் கிழங்காகவாவது விளைவதற்குத் தகுதியான வஸ்துசோதனா சாலையைப்போல் (Laboratory) மாத்திரம் அந்த நிலம் வாஸ்வதத்தில் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலத்தில் பயிரிடுவதினாலே அதில் போடுகிற முதலுக்கும் விளைகிற விளைவுக்கும் சரிக்கட்டிப்போய் விடும்; யாதொரு இலாபமும் கிடைக்கமாட்டாது. போட்டமுதலுக்கு மேல் யாதொரு இலாபமுங் கிடைக்காவிட்டாலும் சேர்த்துவைத்துக் கொள்வதற்கு யாதொன்றும் மிகுதியாயிராவிட்டாலும் பயிரிடுகிறவன் பிழைப்பதற்கு வழியில்லையாதலால் விவசாயத்தொழில் கட்டுப்படியாகமாட்டாது. பயிரிடுகிறவன் நிலத்திலிருந்து எவ்வளவு பின்னால் அடைய விருப்பங்கொள்ளுகிறானோ, அவ்வளவையும் முன்னதாகவே லத்தில் போடவேண்டியவனா யிருந்தால், அப்படிச்செய்வதுஅவனுக்கு அசாத்தியமான காரியமானபடியினாலே அவன் பயிரிடுகிற வேலையை ஆரம்பிக்கப் போகிறதேயில்லை. ஆனால் வளப்பத்திற்குவேண்டிய அம்சமிராத நிலம் கிடையவே கிடையாது. அநேகமாய் எல்லா நிலங்களினுமே வளப்பத்திற்கு வேண்டிய சகல அம்சங்களும். எந்தக் காலத்திலும் குறைவுபடாத அளவுக்கு இருக்கின்றன. ஆனால் பயிரின் வேர் அடிவரையில் இறங்கி நிலத்தின் சாரத்தைக் கிரகித்துப் பலனடைவதற்காக நிலத்தைப் பண்படுத்துவதற்கும் அதில் ஒன்றாய்க் கட்டிப்போய்ப் பிர்யோசனப்படாமலிருக்கிற சாராம்சங்களைப் பிரயோசனப்படும்படி செய்வதற்கும் அதை நன்றாய்ப் பரிசோதித்து நுட்ப புத்தியோடு பிரவர்த்திக்க வேண்டியதா யிருக்கிறது.

கல்விக் குறிப்புகள்

Educational Notes

சென்னையில் வித்யா இலாகா அதிகாரியின் மாறுதல்

சென்ற நாலரை வருஷங்களாக இச் சென்னை இராஜதானியில் வித்யா இலாகாவில் தலைமை வகித்த கனம் ஸ்டோன் துரையவர்கள் இந்த மாதம் 9-ம் தேதி தமது வேலையை ராஜிவைத்துப் பென்ஷன் பெற்றுக்கொண்டு ஜன்மதேசம் போகிற சங்கதியை அபிமானிகளுக்குத் தெரியப்படுத்துகிறோம். கனம் ஸ்ரீமானவர்கள் நமது மாகாணத்தில் சுமார் 33 வருஷங்கள் வேலை பார்த்திருக்கின்றனர். 1886-ம் வருஷ ஜனவரிமீ 4௳ இவர் சைதாப்பேட்டை உபாத்தியாயர்களின் பள்ளிக்கூடத்துத் தலைவராக நியமனம் பெற்றார். நான்கு வருஷங்களுக்கு அப்பால் இவர் கும்பகோணம் காலேஜ் தலைவராகவிருந்தனர். 1894-ல் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில் "இங்கிலீஷ்" உபன்யாஸகராக நியமனம் பெற்று, அடுத்த வருஷத்தில் அதே காலேஜின் உதவித் தலைவரானார். 1898-ல் ராஜமஹேந்திரக் காலேஜில் தலைவராகச் சென்று, அடுத்த வருஷத்தில் மேல் வட்டம் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராகக் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டார். மறுபடியும் 1900-ல் ராஜமஹேந்திரத்துக்கும் 1902-ல் சைதாப்பேட்டைக்கும் மாற்றப் பட்டார். 1903 ஐரோப்பிய பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டராகநியமனம்பெற்று, பின் 1907-ல் சென்னைக் காலேஜின் தலைவரானார். பிரதமக் கல்வியை விருத்தியாக்கும் விஷயமாகச் சில காலம் இவர் பிரத்யேகமான உத்தியோகத்தையும் வகித்திருந்தனர். 1914-ல் வித்யா இலாகாவின்தலைவராக நியமனம் பெற்றார். ஆகவே இவருக்கு, வித்யா இலாகாவில் பொறுப்பேறிய உத்தியோகங்களிலெல்லாம் பரிசயமுண்டு. வித்யா விஷயமாக இவர் செய்திருக்கும் நற்காரியங்களை யெழுதவும் எடுத்துச் சொல்லவும் இங்கு இடம்போதாது. தயாள குணமும் காட்சிக்கெளிய சுபாவமும், இந்தியர்களிடம் இவர் காட்டிய அனுதாபமும், பொதுவாகக் கல்வி யபிவிருத்தியில் இவர்

ஆட்டைத்தேடி அயலாள் கையிற் கொடுப்பதைப்பார்க்க, வீட்டைக்கட்டி நெருப்பு வைப்பது நல்லது.

எடுத்துக் கொண்ட சிரத்தையும் ஊக்கமும் நாமெல்லாரும் கொண்டாடக் கூடியவையேயாம். இத்தகைய பெருமை வாய்ந்த ஸ்ரீமானை நாம் விட்டுப் பிரிவதற்குத் துக்கிக்கிறோமாயினும், இவருக்கு ஸர்வேசுவரன் தீர்க்காயுளையும் திடகாத்திரத்தையும் தந்தருள வேண்டுமென்று நாம் பிரார்த்திக்கிறோம்.

இவர் ராஜி வைத்த ஸ்தானத்தை வகிக்க வரும் ஸ்ரீமான் H. S. டன்கன் துரையவர்களுக்கு நாம் சந்தோஷ சித்தராய் நல்வரவு கூறுகிறோம். இவர் நமக்குப் புதியவரன்று. வித்யா இலாகாவில் இவருக்குப் பரம்பரையான அனுதாபமுண்டு. இவருடைய பிதா இந்த இராஜதானியிலேயே வித்யா இலாகாவில் உத்தியோகம் வகித்துப் புகழைக் கட்டிக்கொண்டுபோன ஸ்ரீமானவர். ஆகவே, இவர் ஸ்ரீமான் ஸ்டோன் துரை தொடங்கிய காரியங்களை இடையறாமல் முற்றுவித்துக்கீர்த்தியைக் கைக்கொள்வாரென எதிர்ப்பார்க்கிறோம்.

* * *

அலஹபாத் ஸர்வகலா சாலை.

மேற்படிப்பில் அபிலாஷை கொண்டிருக்கும் சிறுவர்களில் பலர் சவுகரியக் குறைவால்—அதாவது காலேஜ்களில் இடமில்லாத் துர்த்தசையால்—படிப்பை நிறுத்தி விட்டு, உத்தியோகங்களில் அமர்வதை நாம் அடிக்கடி காண்கிறோம். இதுபற்றியே நமது பிரமுகர்கள் அனைவரும் காலேஜ்களை அதிகமாக்கவேண்டுமென்று அடிக்கடி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்விஷயம் இப்படியிருக்க, அலஹபாத் ஸர்வகலாசாலையார் செய்திருக்கும் காரியத்தைக் கேட்க நமது மனம் வருந்துகிறது. அங்குள்ள காலேஜ்களில் படிக்கும் பிள்ளைகளின் ஸங்கியை பொதுவாக 45-க்கு மேற்படக்கூடாதென்றும், அவசியமானால் அறுபது வரையில்தான் இருக்கலாமென்றும் ஒரு உத்தரவு வெளிவந்திருக்கிறது. இப்படிப்பட்ட உத்தரவு நமது இராஜதானியில் இருப்பதாகத் தெரியவில்லை. காலேஜ்களில் படிக்கும் பிள்ளைகளின் விஷயம் கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளின் விஷயத்தைக் காட்டிலும் முற்றிலும் வேறானது. காலேஜ் மாணாக்கர்கள் பொதுவாக வயது வந்து தங்கள் பொறுப்பைத் தெரிந்து கொண்டவர்கள். பள்ளிப் பிள்ளைகளின் விஷயத்தில் வேண்டியிருக்கும் கவனம் காலேஜ் பிள்ளைகளிடம் வேண்டிய அவசியமில்லை. இன்னும் காலேஜ் வகுப்புக்களில் மாணாக்கர்கள் அதிகமாகும் அளவுக்கு, உபாத்தியாயர்களுக்கு உற்சாகம் அதிகமாக உண்டாகு மென்பதில் தடையில்லை. ஆகவே, அலஹபாத் ஸர்வகலாசாலையார் செய்த காரியத்தை நாம் ஒப்பவில்லை. காலேஜ்களை அதிகப்படுத்திய பிறகு இப்படிப்பட்ட உத்தரவை வெளியிட்டிருப்பார்களானால் நாம் தடைசொல்லியிருக்க மாட்டோம். துர்த்தசையின் காரணத்தை அகற்றாமல் செய்யும் காரியம் அத்துர்த்தசையை மேன்மேலும் அதிகரிக்கும் என்பதை அலஹபாத் ஸர்வகலாசாலையார் அறிந்து, இந்த உத்தரவை உடனே ரத்து செய்வார்களென எதிர்பார்க்கிறோம். இவர்களுடைய செய்கை மேல் படிப்பைத் தடைசெய்துவிடும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே, அபிமானிகள் அனைவரும் ஏகோபித்து இந்த உத்தரவு ரத்தாகும்படி முயற்சி செய்யவேண்டும்.

* * *

சென்னை சட்ட ஸபையில் கல்வி விஷயமான பிரஸ்தாபம்.

சென்ற மாதம் நடந்தேறிய சென்னைச் சட்ட ஸபையில் வித்யாவிஷயமாக மூன்று பிரேரபணைகள் கொண்டு வரப்பட்டன. கனம் யாகூப் ஹஸேன் சாயபு பகதூர் அவர்கள், சென்னையிலும் சென்னைக்கு வெளியிலுமுள்ள கவர்ன்மெண்ட் காலேஜ்களில், இண்டர்மீடியட் வகுப்பில் படிக்கும் பிள்ளைகளுக்கு இன்னும் அதிகமான இடவசதி செய்து தரவேண்டுமெனக் கேட்டனர். காலேஜ்களில் இடமில்லாதபடியால் மாணாக்கர்கள் மேல்படிப்பை நிறுத்தி விடுவதையும், சிரமப்பட்டுப் படிப்பதையும் நாம் அறிவோம். என்றாலும் இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் வெறுமனே இருந்துவிடவில்லை. சென்ற இரண்டு வருஷங்களுக்குள், அனந்தபூரில் ஒரு காலேஜையும், சென்னையில் மேரி மஹாராணி காலேஜையும், முகம்மதியர்களுக்கென்று ஒரு காலேஜையும் ஸ்தாபித்திருப்பதினின்றும் அவர்கள் இவ்விஷயத்தில் கூடுமானவரையில் சிரத்தை எடுத்து வருகிறார்க

ஆண்டியைக் கண்டால் லிங்கன் என்கிறான்; தாதனைக் கண்டால் ரங்கன் என்கிறான்.

ளென்பது விளங்கும். காலேஜ்களை ஸ்தாபிப்பதில், செல்வவான்களும் கொஞ்சம் சிரத்தை காட்டலாமென்று கனம் யாகூப் ஹஸேன் சொன்னதை நாம் ஆமோதிக்கிறோம். காலக்கிரமத்தில் அவர்கள் தனித்தோ, பிறருடன் கூடியோ, காலேஜ்களை ஸ்தாபித்துக் கல்விவிளக்கையேற்றுவார்களென நம்புகிறோம். கனம் இராமய்யங்கார வர்கள், "ஸகிண்டரி ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட்" பரீக்ஷையில் சில பாடங்களில் மாணாக்கர்கள் பெறவேண்டிய 'மார்க்கு'களைக் குறைக்க வேண்டுமென்று கொணர்ந்த தீர்மானத்தைக் கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவில்லை. கனம் ரங்காசாரியாரவர்கள், சாஸ்திர விஷயமான நூல்களைத் தமிழில் இயற்றுவதற்குக் கவர்ன்மெண்டார் பணவுதவி செய்யவேண்டுமென்று கேட்டனர். இவ்விதமான புஸ்தகங்களை வெளியிடுவது வியாபார முறையாதலால் அது விஷயத்தில் கவர்ன்மெண்டாருடைய பண உதவியை எதிர்பார்ப்பது அழகல்லவென்று ஸ்ரீமான் ஸ்டோன் துரை பதில் சொன்னார். இதை நாம் ஒப்புவோம். என்றாலும் இப்படி புஸ்தகங்களைப் பிரசுரிப்பதில் பணவுதவியாலல்லாமல் வேறு விதங்களிலும் கவர்ன்மெண்டார் ஒத்தாசை செய்யக்கூடுமென்பதை நாம் எடுத்துக் காட்டுவோம்.

நவராத்திரி விழா

THE NAVARATHRI FESTIVAL

நவராத்திரிவிழா புரட்டாசி மாதத்தில் இந்த இந்துதேசம் முழுவதும் கொண்டாடப்படும். எந்த விழாவையேனும் நாம் கொண்டாடுவதற்கு முன், அந்த விழாவின் தன்மை என்னவென்றும், அது எதன் பொருட்டுக் கொண்டாடப்படுகிறதென்றும், அது கொண்டாடுவதால் வரும்பயன் என்னவென்றும் அறிந்து கொள்வது நல்லதன்றோ? அவ்வாறு ஒரு விழாவின் தன்மை முதலியவற்றை அறிந்து கொள்ளாது அதனைக் கொண்டாடுவதும், "எங்கள் தாதை மூதாதைகள் கொண்டாடிவந்தார்கள்; அதுபோல நாமும் கொண்டாடுகின்றோம்" என்று சொல்லிக் கொண்டாடுவதும், "அயல் வீட்டார் கொண்டாடுகின்றார்கள். ஊரார் கொண்டாடுகின்றார்கள்; அதனால் நாமும் கொண்டாடுகின்றோம்" என்று சொல்லிக் கொண்டாடுவதும் அறிவுடைமக்களுக் கழகாகாது. அதனால் இந்த நவராத்திரி விழாவின் வரலாறு யாதென்று ஆராய்வோமாக.

நவராத்திரி என்றால் ஒன்பது இரவு என்று பொருள்படும். ஆசுவின மாதத்தின் முதல் ஒன்பது நாளுமே நவராத்திரி என்று சொல்லப்படும். ஆசுவின மாதம் என்பது சாந்திரமான மாசம். அது நமது புரட்டாசி மாதத்தில் வரும் பூர்வ பக்ஷப் பிரதமையில் தொடங்குவது. ஆகவே புரட்டாசி மாதத்துப் பூர்வ பக்ஷப் பிரதமைமுதல் நவமி வரையிலுள்ள ஒன்பது நாளும் நவராத்திரி எனப்படும். இந்த நவராத்தியில் முதன் மூன்று நாளும் பார்வதி தேவியையும், அடுத்தமூன்று நாளில் லக்ஷ்மி தேவியையும்; கடைசி மூன்றுநாளில் சரஸ்வதி தேவியையும் பூசிக்கின்றார்கள். கடைசிமூன்று நாளிற் பூசையும் சரஸ்வதிக்கே உரியதாயினும் ஒன்பதாம்நாட் பூசையையே சரஸ்வதி பூசை என்று விதந்து கூறுவார்கள். இது தென்னிந்தியாவின் வழக்கமா யிருக்கின்றது. வங்காளம் முதலிய வட இந்தியாவில் இந்த ஒன்பது நாளிலும் துர்க்கா தேவியைப் பூசித்து இந்த நவராத்திரி விழாவைத் துர்க்கை பூசை என்று சொல்லுகிறார்கள். துர்க்காதேவி என்பது பார்வதி தேவிக்கு மறுபெயராகும். துர்க்காதேவி மூர்த்தம் பார்வதி தேவியின் உக்கிர மூர்த்தமாகும்.

இந்த நவராத்திரி விழா எதன் பொருட்டுக் கொண்டாடப் படுகின்றதென்பது நன்கு விளங்கவில்லை. புராணங்கள் சொல்வது என்ன வென்றால்:—.

கிருத யுகத்திலே சுகேது என்றோர் அரசன் இருந்தான். அவன் குடிகளைப் பாதுகாத்தலே தனது பெருங் கடமையாகக் கொண்டு மிகவும் நீதியாக அரசாண்டுவந்தான். அவனுடைய தாயாதிகள் அவன்மேற் பொறாமைகொண்டு அவனை மிகவுந் தொந்தரவு செய்தார்கள். அதனால் அவனுக்கும்

ஆண்டி கிடப்பான் மடத்திலே சோளிகிடக்கும் தெருவிலே.

அவர்களுக்கும் போர்மூண்டது. அந்தப் போரில் சுகேதுவே தோல்வியடைந்தான். தனது உயிரைக் காப்பாற்றுவதற்காகச் சுகேது இராச்சியத்தைத் துறந்து தனது மனைவி சுவேதியோடு காட்டிற் கோடினான். அங்கே போரிற்பட்ட காயத்தினாலும், தக்க ஊணும் உடையும் இன்மையினாலும், இராச்சியத்தை இழந்த விசனத்தினாலும் சுகேது நோயுற்று, நடக்கச் சக்தியற்றவனானான். அதனைக் கண்ட சுவேதி மிக்க மனவருத்தமுற்று, தனது நாயகனைத் தன் தலைமீது சுமந்து கொண்டு, தாம் போய் ஒதுங்கி இருத்தற்கு ஓர் ஊர் தேடிக் காட்டைவிட்டுப் புறப்பட்டாள். அப்போது ஆங்கீரச முனிவர் அவளை எதிர்ப்பட்டார். அவர் அவளைக்கண்டு பரிவு கூர்ந்து "நீ யார்? உன் வரலாறு என்னை? நீ ஏன் இந்தக் காட்டில் வந்தனை? நீ சுமந்து செல்வது யாரை?" என்று வினவினார். சுவேதி தங்கள் வரலாற்றை ஆதியோடந்தமாய் அவருக்குக் கூறினள். ஆங்கீரச முனிவர் அதுகேட்டு மனமிரங்கி, அவளுடைய துன்பத்தை நீக்கக் கருதி, அவளைப் பஞ்சவடி தீரத்திற்கு அழைத்துச்சென்று, அங்கே நவராத்திரியில் பார்வதி தேவியைப் பூசிக்கும்படி செய்தார். சுவேதி மிக்க பயபக்தியோடு நவராத்திரி பூசையை நிறைவேற்றினாள். அதனால், முதலில் அவள் நாயகனான சுகேது நோய் நீங்கிச் சுகமடைந்தான். பின்னர் அவள் கருப்பமுற்று ஓர் அழகிய ஆண்குழந்தையைப் பெற்றாள். அதற்கு ஆங்கீரச முனிவர் சூரியப் பிரதாபன் என்று பெயரிட்டனர். தக்க வயது வந்தவுடன், அக்குழந்தை ஆங்கீரச முனிவரிடத்திலேயே கல்விகற்று, அஸ்திர சஸ்திர வித்தைகளும் பயின்று சிறந்த வீரனாயினான். அவன் தன் தந்தையின் பகைவர்களான தங்கள் தாயாதிகள்மேற் போருக்குச் சென்று அவர்களை வென்று, தமது இராச்சியத்தை மீட்டுத் தன் தந்தையைச் சிம்மாசன மேற்றினான். சுகேது மீட்டும் அரசனாகிப் புத்திர பௌத்திரர்களோடு சிறப்புற்று வாழ்ந்திருந்தான் என்பது.

இதனால் நவராத்திரி பூசையை முறைப்படி செய்பவர்கள் சுவேதியைப்போல இஷ்டசித்தியடைவார்கள் என்பது உலகத்தார் கொள்கை.

இந்த **வரலாறு** ஸ்காந்தபுராணத்திலுள்ளதென்று பண்டித நடேச சாஸ்திரியார் கூறுகின்றார். ஸ்காந்தபுராணத்தில் எந்தச் சங்கிதையில் எந்தக் கண்டத்தில் இது வருகின்றதென்று அவர் கூறவில்லை. அதனால், இவ் வரலாறு அந்தப் புராணத்தில் உளதோவென்று நிச்சயிப்பது முடியாததா யிருக்கின்றது. ஸ்காந்தபுராணமோ மிகப்பெரிய தொருநூல். அது ஐம்பது கண்டங்களமைந்த ஆறு சங்கிதைகளையுடையதென்றும் ஒரு லக்ஷம் கிரந்தங்களாலாய தென்றும் கூறுவர். அவ்வாறு சங்கிதைகளும் யாவையெனின், சநற்குமார சங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என்பன. இவற்றுள், சநற்குமார சங்கிதை ஐயாயிரங் கிரந்தமும், சூதசங்கிதை ஆறாயிரங் கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரங் கிரந்தமும், விட்டுணு சங்கிதை ஐயாயிரங் கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினாயிரங் கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரங்கிரந்தமும் உடையனவாம். இந்தச் சங்கிதைகளுள் சூதசங்கிதையும் சங்கரசங்கிதையில் ஒரு பாகமுந்தான் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. முப்பதினாயிரங் கிரந்தமுடைய சங்கரசங்கிதை பன்னிரண்டு கண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசியகண்டம். இது பதின்மூவாயிரங் கிரந்தமுள்ளதாய் சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழு காண்டங்களை யுடையது. இவற்றுள் முதலாறு காண்டத்தையும் கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணமெனப் பெயரிட்டுத் தமிழில் மொழிபெயர்த்தனர். ஏழாவதாகிய உபதேசகாண்டத்தைக் கோனேரியப்ப முதலியார்மொழிபெயர்த்தனர். சூதசங்கிதையை மொழிபெயர்த்தவர் குசேலோபாக்கியானம் பாடிய வல்லூர் தேவராஜ பிள்ளை. காசிகண்டம் என்பதும் ஸ்காந்தத்தில் ஒரு பகுதி. இது அதிவீரராமபாண்டியரால் மொழிபெயர்க்கப்பட்டுளது.

இந்த ஸ்காந்தபுராணம் சமஸ்கிருதத்தில் தானும் ஒரு முழுநூலாய் எங்கும் அகப்படுவதில்லை. பலபல இடங்களில் பலபல சங்கிதைகளும், கண்டங்களும், மான்மியங்களும் ஸ்காந்தத்தில் பகுதிகள் என்று சொல்லப்படுகின்றன. இவைகள் எல்லாம் ஆதியில் ஸ்கா

ஆணிக்கு இணங்கின பொன்னும், மாமிக்கு இணங்கின பெண்ணும் அருமை.

ந்தத்தைச் சேர்ந்தவைகளென்று சொல்வதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லை.

இந்தச் சுவேதியின் சரிதையன்றி மற்றொரு காரணமும் இந்நவராத்திரி விழாவிற்குச் சொல்லப்படும். அதனையும் இங்கே சுருக்கமாகக் கூறுவேம்:—

ஒரு காலத்திலே மகிடாசுரன் என்பவன் உலகம் முழுவதுக்கும் தலைவனாகித் தேவர் முனிவர் முதலிய யாவருக்கும் பெருந்துன்பஞ் செய்துவந்தான். அவனுடைய கொடுமையை நீக்கி உலகத்தை உய்விக்கப் பார்வதி தேவியார் திருவுளங்கொண்டனர். அவர் அவனோடு போர் செய்யும்படி அஷ்ட லக்ஷ்மிகளையும் தினம் ஒவ்வொருவராக அனுப்பி ஒன்பதாம் நாள் தாமே சென்று அவனைச் சங்கரித்தனர். இவ்வாறு பார்வதி தேவியார் செய்த பேராண்மையைக் கொண்டாடுவதற்காக அவர் மகிடாசுரனோடு போர்செய்த நாள்களாகிய ஒன்பது நாளிலும் அவரைப் பூசித்துக் கொண்டாடுவது தான் நவராத்திரி என்பார்கள்.

இது இல்லற சாரசங்கிரஹம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாறு எந்தப் புராணத்தில் கண்டதென்பதை அந்நூலாசிரியர் கூறவில்லை.

இனிச் சரித்திர ஆசிரியர்கள் இந்நவராத்திரியைப் பற்றி என்ன சொல்லுகின்றார்கள் என்று பார்ப்போம்.

ஆதிகாலத்திலே ஆசுவயுகி என்றொரு விழா ஆசுவின மாதத்துப் பௌர்ணிமியில் கொண்டாடப்பட்டது. அப்போது இந்திரனுக்குப் பாற் பொங்கலும், தயிரும், வெண்ணெயும் ஆகுதி செய்யப்பட்டன. அன்றிரவு கன்றுகளை வேறு பிரித்துக் கட்டாது அவற்றின் தாய்ப் பசுக்களோடு சேர்ந்து நிற்க விடுவார்கள். இந்த ஆசுவயுகி முடிந்ததன் பின் உழவுசாலின் தெய்வமாகிய சீதைக்கு ஆகுதி செய்வார்கள். சீதையை அவர்கள் இந்திரனுடைய மனைவி என்றும், குதிரையும் பசுவும் மிகவுமுடையவளென்றும், உயிருள்ள பொருள்களை எல்லாம் தளராது தாங்குபவள் என்றும், எல்லாப் பொருளும் உண்டாகும் நிலமாகிய உருவரை என்றும், தானியங்களடிக்கின்ற களங்களை மாலையாக உடையவளென்றும் துதித்தார்கள். இவைகளால் இந்த ஆசுவயுகி விழவென்பது ஆசுவின மாதத்தில் விளைந்த தானியங்களை அறுத்துக்களந்தில் சேர்த்தபின் கொண்டாடப்படும் விவசாய விழாவென்று தெரிகின்றது. இந்த விழாப்பிற்காலத்தில் கோஜாகரலக்ஷ்மி பூசையாக மாறிற்று. இந்த நவராத்திரி பூசை கோஜாகரலக்ஷ்மி பூசைக்குப்பின் தோன்றியது. இப்போது அது கோஜாகரலக்ஷ்மி பூசையைக் கீழ்அடக்கித் தான் மேற்பட்டு விளங்குகின்றது. அறுப்புக்காலத்தில் நிகழ்வதனால் அது எங்கும் பரவிப் பெரு விழாவாகிவிட்டது. ஆதிகாலத்தில் இந்திரனுக்கும் அவன் தேவி சீதைக்கும் அறுப்புக்காலத்தில் நன்றியறிதற் சடங்காகச் செய்துவந்த ஒரு சிறிய விவசாய விழவு இப்போது எவ்வளவு பெரிய விழாவாகிவிட்டது!

இவ்வாறு கூறுவர் "இந்தியாவின் பண்டைக்காலச் சீர்திருத்தம்" என்னும் நூலாசிரியரான இராமச்சந்திரதத்தர். இந்த நவராத்திரி விழா ஆசுவின மாதத்துப் பூரணைக்குப் பின்பு நிகழாது அதற்கு முன்பு நிகழ்தலினால் பண்டைக்காலத்து ஆசுவயுகி விழாவே இப்போது நவராத்திரியாக மாறிற்று என்று கொள்ளுதல் பொருந்தாது போலும். இராமச்சந்திரதத்தரும் அவ்வாறு கூறுவதாகக் காணப்படவில்லை. அவருடைய கருத்து ஆசுவினமாதத்தில் நிகழ்வதால் இதுவும் விவசாய விழாவே என்பதுதான். ஆசுவயுகி விழாவின் லக்ஷணங்கள் எல்லாம் நவராத்திரி விழாவில் காணப்படவில்லை. இந்திரனுக்குப் பாற்பொங்கல் நிவேதித்தலும் பசுக்களையும் கன்றுகளையும் சேர்த்து விடுதலும் இக்காலத்தில் தென்னிந்தியாவில் தைப்பொங்கல் விழாவில் நிகழுகின்றன. விளைந்ததானியங்களை அறுத்துக்களத்தில் சேர்த்தலும் தைமாதத்தில் நிகழும். இக்காரணங்களால் தைப்பொங்கலை விவசாய விழா என்று சொல்லுவதற்குத் தடையே இல்லை.

சந்தாதார்க்குக் குறைந்த விலை.

ஸ்ரீராமாயணஸாரம்	ரூ.	1	0
ஐரோப்பிய மஹாயுத்தம்		1	4
வியாஸ விதானம்		0	12
முரளீதரன்		0	10
மரகதவல்லி		0	8
பஞ்சாத்தினம்		0	6
இயற்கை அற்புதங்கள்		0	8

மானேஜர் விவேக போதினி, மயிலாப்பூர்.

வஸந்த மந்திரம்

(ஒரு சரித்திர சம்பந்தமான நவீனம்)

(59-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் அதிகாரம்

படகின்மேல் நிலவு

உதயபுரியில் மேற்சொன்ன விஷயங்கள் நடந்து நாலைந்து தினங்கட்குமேல் ஆய்விட்டன. இதற்குள் வஸந்தபுரியில் ஆமத்பாக்ஷாவின் இராஜாங்கம் கூடிவிட்டபடியால் அங்கே நிகழ்ந்தவற்றைக் கவனிப்போம்.

சாயங்காலம்; அஸ்தமித்து இரண்டு நாழிகை இருக்கும். சந்திரன் ஆகாயத்தில் ரம்மியமாய்ப் பிரகாசிக்கின்றான். அருகிலுள்ள கிராமத்தில் இரண்டு செம்படவர்கள் வெகு அவசரமாய்ப் போஜனம் முடித்துத் தம் பிள்ளைகளுடன் இங்கும் அங்கும் ஓடுகின்றனர். என்ன விசேஷமோ, பார்ப்போம்.

பெரியவன்.—"தம்பீ! ராம! படவு தண்ணியில் போட்டாச்சா? இல்லையா? பொழுது போவுது; அஞ்சுநாழிக்குள் அரமனை போகுணுமல்லவா?"

ராமன்.—"ஆம்! அண்ணே! படவு தயாராயிருக்குது; நாம் போனால் ஓட்டிக்கிண்டு போவேண்டியதுதான். வேறே ஒருவேலையுமில்லை."

"வேண்டிய சாமாங்கள் கொண்டுபோய்ட்டாங்களா? பெருந் துடுப்புகளை ஜாக்ரதையாய்ப் பாத்துக்கொள்."

ஒரு பையன் "எல்லாம் வைச்சுட்டோம்; அப்பா நாங்கள் இரண்டுபேர்மட்டும் வரப்படாதா?" என்றங்குவந்து கேட்க, ராமன் "பேசக்கூடாது; நல்லபிள்ளைபோல் வீட்டேயிரு அப்பா! வரவேகூடாது, இன்னிக்கு" என்றான்.

பெரியவன் "குழந்தே! அங்கே கூட்டம் ரொம்ப இருக்கும்; உன்னைக் கூட்டிண்டு போவது தப்பு! இன்னொருநாள் பார்க்கலாம்" என்று சொல்லித் தங்களுக்குவேண்டிய இன்னும் சில சாமான்களையும் எடுத்துக்கொண்டு அண்ணனும்தம்பியும் புறப்பட்டனர். கரடுமுரடான அம்மலைவழியே நடந்து போகும்போது இளங்காற்று வீசிற்று; சாரலில் உள்ள மரங்களெல்லாம் 'ஓ' வென்று ஒலித்தன. இரவில் சஞ்சரிக்கும் ஆந்தை, கோட்டான், வௌவால் இவற்றின் சப்தம் அடிக்கடி தோப்புகளிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தது.

சீக்கிரத்தில் ஸுவர்ண ஸரஸின் கரையில் வந்து சேர்ந்தனர். அவ்வேரியை எங்ஙனம் வர்ணிப்பது? இளந்தென்றலால் உண்டாகும் சிற்றலைகளில் சந்திர பிம்பம் பல இடங்களில் பரந்து தோன்றுவது, அளவற்ற விசாலமான மரகதத்தட்டில் கணக்கற்ற வைரங்களைக் குவியல் குவியலாய் வைத்திருந்ததுபோல் தோன்றிற்று. ஸரஸின் ஓரங்களில் நீர்குடிக்க வந்த புலி ஓநாய் இவற்றின் தழல்போன்ற கண்கள் கரையில் சுடர்போல் விளங்குவதன்றி நீரிலும் பிரகாசிப்பதனால் அத்தோட்டம் முழுவதும் இரத்தினங்கள் ஆங்காங்கே பதித்து இருந்தனபோல் காணப்பட்டன. செம்படவர்நின்ற இடத்துக்குச்சற்று அப்பால் ஜலத்தில் நின்ற ஓடங்கள் இரண்டும், இரண்டு கலசங்கள் போன்று விளங்கின. அப்பாலுள்ள மாமடர்ந்த தோட்டங்களும், வஸந்தபுரியாகிய கிராமமும் சற்று மந்தமாய்ச் சந்திரனது வெளிச்சத்தில் தெரிந்தும் தெரியாமலும் மயன் நிருமித்த மாயா நகரங்கள்போல் கண்களைக் கவர்ந்தன.

படகில் சேவகர்கள் விளக்கேற்றிக்கொண்டிருக்கின்றனர். இரண்டு பரதவரும் வந்து சேரவே, ஒரு சேவகன் "எல்லாம் தயாராய் இருக்கின்றன: படவு விடவேண்டியதுதான். நாழிகையும் நாலாய்விட்டது. அஞ்சு நாழிக்குள் அரமனைவாசலுக்குப் போயிடலாம்" என்றான். பரதவர் இருவரும் லாகவமாய் ஆளுக்கு ஒரு படகில் எட்டிக்குதித்தனர். படகின் நாற்புறமும் போய் எல்லாம் சரியாய் அமைத்திருக்கின்றதா என்று பார்த்து விட்டுப் படகை அரண்மனை நோக்கிச் செலுத்த ஆரம்பித்தனர். உடனே அவ்விடமிருந்து அலைகள் ஏரி முழுவதும் பரவின. நொடியில் இரண்டு ஓடங்களும் நடு ஏரிக்கு வந்து விட்டன. அங்கே கொஞ்ச நேரம் தாமதம் செய்து, மறுபடி துடுப்புகளை வேகமாய் வாங்கினர். அக்கரை நெருங்கவே வஸந்தபுரி மறைந்து விட்டது. வஸந்த மந்திரமும், அதன் கோபுரவாயிலும், பூந்தோட்டங்களும் நன்கு புலப்படுகின்றன. அரண்மனைவாயில் குளத்தை நோக்கியிருக்கின்றது. அரண்மனை

முன்னால் அரை வட்டமாய்ப் பளிங்குக் கல்லால் செய்திருப்பது நிலவு துய்க்கும் மண்டபம். அதைச் சுற்றிலும் விதவிதமான பூஞ்செடிகளும் கொடிகளும் நிரம்ப வைத்திருப்பதால் நறுமணத்தோடுகூடிய காற்று அங்கு மெதுவாய் வீசுகின்றது. வாயிலின் உள்ளே முதலில் தோன்றுவது ஆஸ்தான மண்டபம். அதில் பாக்ஷா போஜன முடித்து, அரியாசனத்தில் இனிது வீற்றிருக்கின்றான். இருபுறமும் சாமரை வீச, கம்பீரமாய்ச் சார்ந்துகொண்டு தன் சபையாருடனே பேசிக்கொண்டிருக்கின்றான். படகுகள் வந்து சேர்ந்த சங்கதியைச் சேவகர்கள் வந்து சொல்லவே, சுல்தான் ஆமத் தன் முதல் மந்திரியைப்பார்த்து "மந்திரியாரே! நாம் ஏரிமீது நம் பொற்படகில் ஏறிப்போய் நிலாவெளிச்சத்தில் பொழுதைச் சற்று உல்லாசமாய்க் கழித்து வருவோமா?" என்று கேட்க, மந்திரி உடனே தன்னைச் சுற்றிலும் உள்ள சேவகர்களுக்கு ஜாடைகாட்ட, அவர்கள் அநேக விளக்குகளையும் பந்தங்களையும் கொளுத்திக்கொண்டார்கள்.

அவ்வெளிச்சத்தில் அந்தத் தர்பார் மண்டபம் சூர்ய வெளிச்சத்தில் பிரகாசிப்பதுபோல் பிரகாசித்தது. முன்பு சிலர் விளக்கெடுத்துக் கொண்டு செல்ல, அரசன் மந்திரி கையைப் பற்றிக்கொண்டு, மதயானைபோல் உல்லாசமாய் நடந்துவர, பின்னே அரண்மனை உத்தியோகஸ்தரும் பலரும் சுல்தான் நடையை அநுசரித்துவந்தனர். விசாலமான நிலவு துய்க்கும் மண்டபத்தண்டை வந்து சேரவே, வெளிப்புறத்தில் வாயிலின் இருபுறத்திலும் கூடியிருந்த ஜனங்கள் அரசனைக்கண்டு களிப்போடு ஆர்த்தனர். சிலர் அரசனது விலையுயர்ந்த ஆடையாபரணங்களை நோக்கி ஆச்சரியத்துடன் அதையே பார்த்து நின்றனர். சிலர் சுல்தானுடைய பரந்த தோளையும் மார்பையும் விசாலமான கண்களையும் கூரிய மூக்கையும் நோக்கின வண்ணமே திகைத்து நின்றனர். சிலர் ஒளி வெளிச்சத்தையும் அரசனும் பரிவாரங்களும் போகும் முறையையும் நோக்கிக் களித்தனர். பந்தவொளியாலும், நிலவொளியாலும், விளக்கொளியாலும், முன்னின்றபடகில் பரந்தெரியும் தீபவொளியாலும் அவ்வரண்மனையின் முற்புறம் எங்ஙனமிருந்ததென்று வாயாற் சொல்லியும் முடியுமா?

மெதுவாய்ப் போய்க்கொண்டே அரசன் தாழ்ந்த குரலில் மந்திரியைப் பார்த்து "மந்திரீ! தாதாகானும் விசித்ரவீரியரும் கூடவருகிறார்களா?" என, மந்திரி திரும்பிப்பார்த்து "ஆம் வருகின்றனர்" என்று பதில் உரைத்தான். அரசன் "மந்திரீ! தாதாகானுடைய அரபிப் பாட்டுகளையும் விசித்ரவீரியருடைய சம்ஸ்கிருத சுலோகங்களையும் கேட்க இதைவிட நல்லசமயம் வேறில்லை. ஆகையால் இருவரும் நமது படகிலேயே வரட்டும்" என்றான். இவ்வாறு பேசிக்கொண்டே ஏரியின் கரை சேர்ந்ததும், பரதவர் படகுகளைக் கரை ஓரமாய்க் கொண்டுவந்து நிறுத்தினார்கள். மந்திரி மெதுவாய்ப் படகில் குதித்து அரசனையும் இலாகவமாய்க் கைகொடுத்து அழைத்துக் கொண்டான். இதர மந்திரி பிரதானிகளும், தாதாகானும், விசித்ரவீரியரும், வேறுசில பண்டிதரும் பாடகரும் பசும்பொன்னாலிழைத்த அப்படகில் ஏறித் தத்தமக்குரிய இடத்தில் அமர்ந்தனர்.

படகு புறப்பட்டது. ஏரிநடுவில் சேர்ந்ததும் விளக்குகளையெல்லாம் அவித்து விடும்படி பாக்ஷா உத்தரவு செய்யவே, நிலாவெளிச்சம் மட்டும் படகுகளின்மேல் பிரகாசித்தது. ஏரியின் நடுவே படகுகள் நின்ற சமயத்தில் அவ்விடத்துள்ள காட்சியை என்னவென்று வர்ணிப்பது! ஆகாயத்தின் நடுவே வட்டமான சந்திரனும், அதைச் சுற்றிலும் விசாலமான பரிவேடமும், வலியுடையோரைக் கண்டு கரந்துறையும் வேற்றரசர் போன்று நக்ஷத்திரக் கூட்டமும் மனதுக்கு இன்பத்தைக் கொடுத்தன. இவையெல்லாம் ஒருங்கமைந்த ஆகாயமே சுல்தானுடைய சிம்மாஸனத்துக்கு மேலமைத்த போர்வைபோன்றிருந்தது. மெதுவாய்ச் சத்தமின்றிச் செல்லும் படகினால் ஆக்கப்பட்ட அலைகளின்மேல் சந்திரன் பிரகாசிப்பதால் வெள்ளியையே அவ்வேரியில் உருக்கி விட்டிருப்பது போல் தோன்றிற்று. அச்சமயத்தில் பலர் இச் சுவர்ண ஸரஸை 'வெள்ளிக்குளம்' என்று ஏன் பெயரிடவில்லையென்று சந்தேகப்பட்டனர். படகும் நில்லாமல் மெதுவாய்ச் சென்று அவ்வேரியின் மத்தியில் உள்ள சிறுசிறு தீவுகளைச் சுற்றிச் செல்லவே, அவ்விடங்களிலுள்ள மரங்களின்மேலும் புதர்களின்மேலும் நிலவு

வெண்மையான துகில் விரித்ததுபோல் பரவியிருந்தது. இளந்தென்றலோடு, அவ்விடத்தில் மலர்ந்துள்ள புஷ்பங்களிலிருந்து நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. இரவில் பாடும் பக்ஷிகளும் களியுண்டு, மெய்ம்மறந்து பாடுகிறவனைப் போல் நிலவெளிச்சத்தைக் கண்டும், நறுமணத்தை நுகர்ந்தும், ஆனந்தம் பெருகிப் பாடுவனபோல் தோன்றின. இவற்றையெல்லாம் கண்டும், கேட்டும், நுகர்ந்தும் பாக்ஷா வெகு உல்லாசமாய் "மந்திரீ, தாதாகானை நமது முன்னிலையில் வரவழையும். அவரிடம் சில அரபிப் பாட்டுகளைக் கேட்போம்" என, தாதாகான், அதிக விநயத்துடன் அரசன் முன்னே வந்து உட்கார்ந்துகொண்டு சிறிய கைவீணையொன்றை மீட்டி, இனிமையான அரபிப் பாஷையில் காலத்துக்கேற்றதோர் கீதத்தைப் பாடத் துவக்கினான்.

பாட்டு ஓய்ந்துங்கூட இன்னும் சிறிது நேரம் பாட்டு எல்லாருடைய காதிலும் தொனிப்பது போலவே இருந்தது. படகும் மற்றொரு தீவின்பக்கத்தில் நெருங்கிற்று. அம்மரங்கள் அமர்ந்த காற்றில் 'உஸ்' என்று சப்தம் செய்வது, இரவுதான் இப்படிப்பட்ட கீதம் நாளும் கேட்கக் கொடுத்துவைக்கவில்லையே என்று பெருமூச்சுவிடுவதுபோல் இருந்தது. பாக்ஷா "நன்று! நன்று! தாதாகான்; அச்சா பலே, பேஷ்! உம்முடைய கீதத்தின் சிறப்பும், கைவீணையின் நாதமும், உமது குரலின் வேகமும், அப்பப்பா, என்ன நயமாய் இருக்கின்றன! நீர் நமது வெற்றியைப் பற்றிப் பாடிய பிரபந்தத்தில், நேற்று நம்மவர் எல்லாரும் கேட்டுக் களித்த 'மூலஸ்தான் வெற்றியை'ச் சிறப்பித்துச் சொல்லும் பாகத்தை மறுபடி ஒரு முறை பாடும்; கேட்போம். அவ்வீர ரசம் பொருந்திய பாடல்களை எல்லோரும் மறுபடி கேட்கப் பிரியப்படுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை." என்று சொல்லிக்கொண்டே மந்திரி முதலாயினோர் முகத்தைப் பார்த்தான். அரசன் பிரியப்படும் விஷயத்தில் பரிவாரங்கள் பிரியப்படாமல் இருப்பதும் எங்கேயாவது உண்டா?

உடனே தாதாகான் வீணையை மீட்டிக்கொண்டு "மூலஸ்தான வெற்றி" (Conquest of Multan) என்னும் பாகத்தைப் பாடலுற்றான். பாடல்களைக் கேட்ட பாக்ஷாவும் அவனுடன் சென்றவரும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை, "மானிடராய்ப் பிறந்தோர் எவரேனும் என்போல் சந்தோஷப்படக் கொடுத்து வைத்திருப்பாரா? என் பாக்கியமே பாக்கியம்; தாதாகான்! உன் கானத்துக்குத் தக்க வெகுமதி நான் என்ன கொடுக்கப் போகிறேன்!" என்று அளவில்லாப் பேரானந்தத்தோடு ஆர்த்தான்.

"அரபிப் பாஷையைக் கேட்டு ஆனந்தப்பட்டோம் இதுகாறும்: நமது விசித்திரவீரியருடைய சம்ஸ்கிருத கீதங்களையும் கொஞ்சம் கேட்டு ஆனந்தப்படுவோம்! பாடும் ஐயா தயவுசெய்து" என்று சொல்லுமுன் விசித்திரவீரியர் பாக்ஷா முன்னிலையில்வந் துட்கார்ந்துகொண்டு தம்முடைய தம்பூரைச் சுருதிசேர்த்துச் சம்ஸ்கிருத பாஷையில் ஒரு சுலோகம் பாடினார். அப்பொழுது கேட்போருடைய தலையசைப்பும், கால் ஆட்டமும், கைத்தட்டும் என்னவென்று சொல்வது!

அரசன் மந்திரியை நோக்கி "நமது ஆனந்தத்தை என்னவென்று சொல்வது! தாதாகானும் விசித்ரவீரியரும் நமது சபைக்கு இரண்டு இரத்தினங்கள் என்று சொல்லவேண்டுமே யொழிய வேறில்லை. நமக்குச் சம்ஸ்கிருதம் சற்றுப் பொருள்பட்டதேதவிர நன்றாய் விவரமாகவில்லை; என்றாலும், பாட்டுமிக நேர்த்தியாய் இருந்தது. ஹிந்தி பாஷையில் ஒரு கீதம் பாடுவீராகில் எமக்கு நன்கு விளங்கும்; மேலும் பொருள்படும் பாட்டைக் கேட்பது விசேஷமல்லவா?" என்றான்.

விசித்திரவீரியர் தம்பூரை மீட்டிக்கொண்டு "லலிதா—ஹிருதயவசீகரி" என்று ஒரு பாட்டைப் பாடினார். மனதை வசீகரம் பண்ணத்தக்க இராகமும், அதன் பொருளும், கேட்ட வேளையும், சந்திரனது நிலவொளியும், பாக்ஷாவை மயக்கிவிட்டன. "உயிரைக் கோரும் கூற்றன்ன அப்பேரழகு வாய்ந்த லலிதை என்பவள் எவள்? என் மனது ஏன் இங்ஙனம் பதைக்கின்றது?" என்று தன்னையே வினவுவான் ஆயினான். இளமைப் பருவத்தில் எவர்தான் இத்தகைய கானமும், காலமும், பொருளும் ஒன்று சேரும்போது மன்மதன் பாணத்துக்கு இலக்காகி அவஸ்தைப்படாமல் தப்புவார்கள்! விதியும் அங்ஙனம் சமயங்களையும் விஷயங்களையும் கொண்டுவந்து

சேர்க்கின்றது! வார்த்தைகள் வீணில் செலவழிப்பதில் பயன் என்ன! சுருங்கச் சொல்லுமிடத்து இந்த லலிதை என்பவள் எவளாய் இருப்பினும் அப்பெண்ணின் அழகில் பாக்ஷா அப்பொழுதுமுதல் ஈடுபட்டான்.

பாட்டு முடிந்து விட்டது. பாக்ஷா பேசவில்லை. மற்றவர்கள்ஒருவரும் பலமாய் மூச்சுக்கூட விடவில்லை. லலிதா! லலிதா!! நீ இப்பொழுது யாதொரு தொந்தரவும் இன்றித் தூங்கிக்கொண்டிருக்கிறாயே! உன் எழிலைப் பற்றி இத்தனைபேர் ஒருங்கே நினைக்கின்றார்கள் என்பதை நீ எண்ணவாவது கூடுமோ?

அரை நாழிகையாயிற்று. இன்னமும் ஒருவரும் பேசவில்லை. இதற்குள் படகுகள் பல தீவுகளைத் தாண்டி வெகு தூரம் போய்விட்டன. ஒரே சமயத்தில் படகில் உள்ளவர் எல்லாரும் சிலையாய்ப் போய்விட்டனர் போன்றிருந்தது. ஏரியில் போகும் படகு செய்யும் 'சலசல' வென்ற சப்தமும், மெதுவாய் ஜலத்தில் பாயும் துடுப்பின் மெத்தென்ற சப்தமும் மட்டுமே காதிற் பட்டன.

கொஞ்ச நேரங்கழித்துச் சுல்தான் ஆமத் தூங்கி எழுந்தவன் போன்று "ஐயா, விசித்திரவீரியரே, எப்பொழுதும் இன்பத்தை விளைவிக்கக்கூடிய உமது பாட்டு இன்று ஏன் நமக்கு வருத்தத்தைத் தருகின்றது? நீர் சொல்லும் இப்பெண்ணரசி எவ்விடத்தவள்? எக்காலத்தவள்? எந்த மதியற்ற பாதகன் அவள் புருஷனாயிருக்கிறான் தற்காலத்தில்? சொல்லும் கேட்போம்" என்று கோபத்தோடும் ஆத்திரத்தோடும் வினவ, விசித்ரவீரியர் மனத்துள் "ஐயோ மதிகெட்டுப் போனேனே! பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்ததே! இவ்வியற்கை யழகில் ஈடுபட்டு மதிமயங்கி, காலம், இடம், செய்வினையின் மூலம், விளைவு; இவற்றை ஆலோசனை பண்ணாது எதையோ உளறிவிட்டேனே! இப்பிடிவாதக்கார பாக்ஷா என்ன விபரீதம் செய்யக் காத்திருக்கின்றானோ? என் மனம் ஏன் இப்படித் தாறுமாறாய்ப் போயிற்று" என்று தன்னையே நொந்துகொண்டு இருப்பதற்குள் அரசன் கோபத்தோடு "ஐயா! நான் பேசுவது காதில் விழவில்லையா? என்ன, பதிலைக்காணோம்" எனவே, ஒன்றும் சொல்லத் தோன்றாதவராய் "அரசே இப்பெண்மணி பிரதாபசிங்கு என்னும் இராஜபுத்திர அரசன் மகள்; இக்காலத்தவள்தான்" என்றார் அப்பாடகர்.

"யார்? உதயபுரியரசன் பிரதாபசிங்கா? ஓஹோ! அவன் புத்திரியா? அவளை மணந்தவன் யார்?"

விசித்ரவீரியர் நடுக்கத்துடன் "எனக்குத் தெரி—" என்பதற்குள் பக்கத்தில் உள்ளவரில் சிலர் "இன்னும் கல்யாணமில்லை யென்று தோன்றுகிறது" என்றனர்.

அரசன் "அப்படியா? ஆ! அப்படியா? ஐயா! நீர் சொன்னபடி அவள் அவ்வளவு அழகுவாய்ந்தவளாய் இருப்பின் அவள் எனது அந்தப்புரத்துக்கு வரவேண்டியதுதான். வேறு பேச்சில்லை. என்ன கஷ்டப்பட வேண்டியதானாலும் பட்டு அம்மாது சிரோன்மணியை மணப்பதே என் விரதம். நீர் சொன்னபடி அவள் மட்டும் அங்ஙனம் அழகு வாய்ந்தவள் இல்லாவிட்டால் உமது தலையை வாங்கி விடுவேன்" எனக் கண்களில் தீப்பறக்கச் சொன்னான். அருகில் உள்ளவர்கள் நடுங்கினர். ஹிந்து ஜனங்கள் "நமது பாக்ஷா என்ன நல்ல குணமுடையவராயினும் இயற்கையாய் உள்ள ஜாதிக்குணம் போகுமா? வேம்புக்குப் பிறந்தபின் வேறுகுணம் ஏது!" என்று ஏங்கினர்.

"படகை அரண்மனை நோக்கிச் செலுத்துக" என்று பாக்ஷா சொல்லி மறுபடியும் ஆழ்ந்த யோசனையிலேயே இருந்துவிட்டான்.

படகு கரையோரமாய் வந்து நின்றது. எல்லோரும் படகினின்று இறங்கினர். பாக்ஷாவும் இறங்கினான். நேரம் நிசிப்பொழுதுக்கு மேல் ஆய்விட்டது. ஏரிக்கரையில் படிகளெல்லாம் சலவைக் கற்களால் அமைத்து இருத்தல்பற்றி அவற்றின்மேல் பனித்துளிகள் நிரம்பியிருந்தன. படியின் இருபுறமும் வைத்துள்ள சிலைப் பாவைகள் அவ்வாறே பனித்துளியால் நனைந்து முகமெல்லாம் நீர் வழிவதைப் பார்த்தால், தம்மாலான லலிதைக்கு இக்கொடிய பாக்ஷா என்னதீங்குஇழைப்பானோ வென்று இரங்கிக் கண்ணீர் விடுவதால் உடல் முழுதும் நனைந்து முகம் வியர்த்ததுபோல் தோன்றிற்று. படியேறி எல்லாரும் நிலவுதுய்க்கும் மண்டபம் வந்து சேர்ந்தனர். அவ்விடத்திலுள்ள செடிகளும் இலை

ஆங்காலம் எல்லாம் அவசாரி ஆடிச் சாங்காலம் சங்கரா சங்கரா என்கிறாள்.

மூடித் தலைதொங்கிட்டிருப்பதைப் பார்த்தால் தம்போன்ற லலிதைக்கு நேரும் ஆபத்தைச் சகியாது உடல்வாடித் தலை தொங்கவிட்டு வருந்தி நிற்பனபோல் காணப்பட்டன. பேச்சு வார்த்தை யில்லாமல் நடந்துவரும் இக்கூட்டத்தைக் கண்ட, அவ்விடங் காக்கும் சேவகர்கள், தாங்களும் சந்தடி செய்யாமல் தம்மிடத்தில் நின்றே வணங்கினர்.

அரசனும் பரிவாரங்களும் ஆஸ்தான மண்டப வாயிலில் வந்து சேர்ந்தனர். இழைத்த முதிர்ந்த கருங்கல்லால் சமைக்கப்பட்ட, பல வளைவுகளையுடைய அம்மண்டப வாயிலில் குற்றமற்ற நீர்போல் நிறமற்ற பளிங்குக் கல்லால் செய்த விளக்குக் கூண்டில் ஓர் தூங்கா விளக்குப் பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தது. அதனருகிலும் இரண்டு வீரர்கள் உருவின கத்தியுடன் எதிர் எதிராக உலாவிக்கொண்டிருந்தனர். அவ்வாயிலின் ஓர் புறத்தில் நாழிகையளக்கும் நீர்க்கருவி வைத்திருந்தது: ஒருபுறத்தில் மணல் கருவி நாட்டப்பட்டிருந்தது. வாயிலின் நேர் முன்னே தொங்குவது நாழிகை யறையும் முரசம். இக்கூட்டம் அரண்மனை வாயிலை நெருங்கும்போதே ஒரு வீரன் பெருத்த கோலை எடுத்துப் பேரிகையின்பேரில் ஒரு அடி உரக்க அடித்தான். அதனால் இரவில் 15 நாழிகைக்குமேல் ஒரு நாழிகை, அதாவது 16 நாழிகை ஆய்விட்டதென்று எல்லாரும் அறிந்தனர். பாக்ஷா உடனே தூங்கி விழித்தவன் போன்று சுற்றிலும் பார்த்து "சபையோர்காள்! உங்கள் இருப்பிடம் போகலாம்! நம் மந்திரிகள் இருவரும் நம்முடன் வந்தால் போதும்" எனவே, எல்லாரும் வணக்கத்துடன் விடைபெற்றுக்கொண்டு திரும்பினர். அரசனும் மந்திரிமார்களும் அரண்மனையுட் புக்கனர். அரண்மனைக் கதவு உடனே சாத்திக்கொண்டது.

நமது சிறு கதை

OUR SHORT STORY

நன்னெறி

(62-பக்கத் தொடர்ச்சி.)

ஒரு மைல்தூரங்கூட நடந்து வந்திருக்க மாட்டான். கொஞ்சம் ச்ரமமாயிருந்தது. சற்று இளைப்பாறிப் போகலாம் என்றெண்ணி ரஸ்தா வோரத்திலுள்ள ஒரு பெரிய ஆலமரத்தினடியில் உட்கார்ந்து சிற்றுண்டியை யெடுத்துப் புஜிக்க வாரம்பித்தான். திடீரென்று இவன் முன்னால் ஒரு மனிதன் வந்து நின்று, "நீ யாரப்பா? இவ்வளவு காலையில் இங்கு என்ன செய்கிறாய்? உன் மூட்டையைப் பார்த்தால் எங்கோ ப்ரயாணம் போவது போல் காண்கிறது. அதி பால்யமான நீ எக்கார்யத்தை யுத்தேசித்துப் போகிறாய்?" என்று கேள்விகளாகஅடுக்கிவிட்டார். பையன் நிமிர்ந்து பார்த்தான். கம்பீரமான தோற்றமும், அகன்ற நேத்ரங்களும், மந்தஹாஸமும், சாந்தமே தவழும் முகமும் கொண்ட வோர் புருஷன் நிற்பதைக் கண்டான். சற்று வயதானவரே; அருக்குவயது 55 இருக்கலாம். நெற்றியின்நடுவில் திலகம்போன்ற ஒரு தழும்பும் காணப்பட்டது. அரைநொடியில் இவையெல்லாம் கவனித்துக்கொண்ட பையனும் வணக்கத்துடன் "ஐயா, நான் சிறு குழந்தையா யிருக்கும்பொழுது, என் பெற்றோருக்கும் எனக்கும் மிகுந்த வுபகாரம் புரிந்த புண்ய புருஷரைத் தேடிச் செல்லுகிறேன்" என்னலும், அம்மனிதனும், "அது நான் தான். என் நெற்றியிலிருக்கும் தழும்பை அடையாளமாகச் சொல்லி யனுப்பினாரல்லவா உன் பிதா?" என்றார். தூக்கிப்போட்டது பையனுக்கு. "நாம் ஒன்றும் விபரம் சொல்லாமலே நம் கதையைச் சொன்னோமாயினும், இவர் எப்படி யெல்லா மறிந்தவராகப் பேசுகிறார், ஏதோ தெய்வசக்தி வாய்ந்தவர் போலும்! இவர்தான் நான் நாடிப்போகும் புருஷனாக விருக்கவேண்டும். பிதா சொன்ன அடையாளங்களும் பொருந்தி யிருக்கின்றன. அவரும் தான்தான் உதவி புரிந்தது என்று சொல்லுகிறார். இத்தகையவர் பொய் சொல்லுவாரா" என்று சிந்தித்து, அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்து, "ஐய, நிரம்பவும் ஸந்தோஷமே. 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது' என்பது என்

ஆசை ஆவள்மேலே, ஆதரவு பாய்மேலே.

விஷயத்தில் ப்ரத்யக்ஷ மாய்விட்டது. நீங்கள் செய்த வுபகாரத்திற்குக் கைம்மாறு செய்வதற்கு எங்களா லியலாதாயினும், நன்றியுள்ள மனம் கைம்மாறாயின், பூர்ணமாக என்னால் செய்யமுடியும். தங்களைக் காணவேண்டுமென்றே புறப்பட்டு வந்தேன். நிற்க, தாங்கள் வஸிப்பதெங்கே? இப்பக்கம் எங்கே புறப்பட்டீர்கள்? உங்கள் வீட்டிற்கே போவதாயிருந்தால் என்னையு மழைத்துப்போகலாமா? அல்லது ஒருக்கால் எங்களைப் பார்ப்பதற்கே போவதா யிருந்தால் இரட்டிப்பு ஸந்தோஷம். என்னுடன் கூடவரலாமோ?" என்றனன். பையன் பேசும் விநயத்தையுஞ் சாதுர்யத்தையுங் கண்டு மெச்சின அந்த மனிதனும் "அப்பா, குழந்தாய் நான் இப்பொழுது உங்கள் வீட்டிற்குவர ஸாவகாசமில்லை. அவஸரமான காரியமாக வீட்டிலிருந்து வருகிறேனாகையால், திரும்பி உன்னையழைத்துப் போகவும் ஸாவகாசமில்லை. ஆகையால், நீ யொன்று செய். நேராய் என் வீடு போயிரு. நான் ஸாயந்திரம் வந்துவிடுவேன்" என்றார்.

"தங்களுடைய க்ருஹம் எங்கிருக்கிறது என்பதை நானறியேனே?"

"ஆம் ஞாபகமில்லை. இப்படியே கிழக்கே நூறடி தூரம் போனதும் ஒருபெரிய் காட்டின் ஆரம்பம் தெரியும். பயமில்லாமல் அக்காட்டிற்குள் போனால் ஒரு பெரிய மாந்தோப்பும், நடுவில் ஒரு தாமரைக்குளமுங் காண்பாய். அத்தாமரைத் தடாகத்தண்டை உட்கார்ந்து இளைப்பாறிக்கொள். அங்குஉன்னைச்சுற்றிலும் என்ன நடக்கிற தென்பதைமட்டும் நன்றாகக் கவனி. பிறகு அக்குளத்தின் வடகரையிலிருக்கும் பெரிய மாளிகைக்குப் போ. அதுதான் என் வீடு. நீ அங்குபோய்ச் சேருவதற்குள்; அநேகமாக நானும் வந்தாலும் வரலாம்" என்று பணித்துவிட்டுச் சென்றார். அவர் மறையும்வரை கவனித்திருந்துவிட்டுப் பிறகு நடந்து,அவர்சொன்னபாதையையேபின்பற்றி அம்மாந்தோப்பை யடைந்தான். அக்குளத்தில் இறங்கி, முகம், கை, கால் கழுவிக்கொண்டு, கரையில் உட்கார்ந்து, மூட்டையையவிழ்த்து, தன் தாயார் கொடுத்திருக்கும் உண்டியைத்தின்று குளத்திலிருந்து குளிர்ந்த ஜலபானம் பண்ணிவிட்டு உட்கார்ந்து யோசித்துக்கொண்டே யிருக்கையில், அவனையுமறியாமல் தூக்கம் கண்ணைச் சுழற்றவே, மேல் வஸ்த்ரத்தை விரித்துச் 'சற்றுக் களைப்பாறலாம்' என்றெண்ணிப் படுத்தயர்ந்தான்.

அங்கு படுத்து அவ்வாறு எவ்வளவு நேரங் கண்ணயர்ந் திருப்பானென்று தெரியாது. திடீரென்று விழித்துக் கொண்டான். ஏதோ ஒரு காட்டுமிருகம் உறுமின சப்தங் காதில் கேட்டதாகத் தோன்றிற்று. அச்சப்தம் எங்கிருந்து வருகிறது, எதனால் செய்யப்பட்டதென்பதை யறிவதற்காக நாற்புறமுங் கண்ணைப் பரப்பிப் பார்த்தான். அவனுக்கு மேற்கே ஸுமார் 20 அடி தூரத்தில் மிக விசித்ரமான காட்சியொன்று அவன் கண்ணைக் கவர்ந்து ஆச்சர்யத்தை விளைவித்தது. அங்கிருக்கும் ஓர் இலந்தை மரக்கிளையினின்று, ஒரு பருமனுள்ள இரும்பு குண்டானது, சங்கிலியால் தொங்கவிடப்பட்டிருந்தது. அக்குண்டின் கீழ், ஒரு சிறு அகன்ற தொட்டி யிருந்ததைக் கவனித்ததோடு, அதில் நிறைய தேன் பெய்துவைத் திருப்பதையுங் கவனித்தான். இதெல்லாம் எதற்காக விருக்கலாம் என்று வியப்புடன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போதே, வெகு ஸமீபத்தில் ஒரு பெரிய பெண் கரடியும், பெரிதும் சிறிதுமான நான்கு கரடிக் குட்டிகளும் வந்து அத்தொட்டியண்டை நிற்பதைப் பார்த்தான். தன்னைத் தூக்கத்தினின்றும் எழுப்பிய சப்தம் அக்கரடிகளாலுண்டாயதேயென்று அனுமானித்துக்கொண்டான். பையனுக்கு எங்கே கரடிகள் தன்னைப் பார்த்துவந்து பிடித்துக்கொள்ளுமோ வென்ற பயம் கைகால்கள் 'வெடவெட' வென்று நடுங்கத் தொடங்கியது. என்ன விருந்தாலும் சிறுவன்தானே! அதுவும் தனியாயிருப்பவன்; ஸமீபத்தில்,கரடிகளைக் காண்பதானால், யாருக்குத்தான் பயமிராது? இந்தப்பயத்தோடு கூடவே, அக்கரடிகள் என்ன செய்யப் போகின்றன என்பதையும், அவ்விரும்புகுண்டும், தேன் தொட்டியும் அங்கு வைக்கப்பட்டதின் நோக்கத்தையுமறிய ஆவலும் பையனைத் தூண்டவே, அருகிலிருந்த மாமரத்திலேறி, கிளையிலைகளில் பதுங்கிக்கொண்டு நடப்பதைக் கவனிக்க லாயினன்.

அப்பெண்கரடி தொட்டியண்டை வந்ததும், சைகைகாட்டித் தன் குட்டிகளையு மழைத்து

"நம் அதிர்ஷ்டம்! நல்ல சுத்தமான தேனை யாரோ இங்கு வைத்து மறந்து விட்டார்கள். காற்றுள்ளபோது தூற்றிக்கொள்வதே மேதாவிகட்கு அடையாளம். ஆகவே, ஒருவரும் வராமுன்னம் அதைப் பருகிவிடுவோம். வாருங்கள்" என்றழைக்கும் அக்கரடியின் வாத்ஸல்யத்தை வியந்து கொண்டிருந்தான் மாமரத்தி லொளிந்திருந்த சிறுவன். கரடியுங் குட்டிகளும் அத்தேனைப்பருக வாரம்பிக்கவே, நேராகக் கட்டப்பட்டிருந்த அவ்விரும்பு குண்டு தடைசெய்தது. அதை யறிந்த தாய்க் கரடியும்,மெள்ளத்தன்தலையால் அக்குண்டை ஒதுக்கிற்று. கொஞ்சதூரம் தள்ளப்பட்டுக் குண்டு திரும்பும்பொழுது, ஒரு குட்டியின் தலையில் படீரென் றடிக்கவே, 'வீச் வீச்' என்று கத்திக்கொண் டோடியது. அதைக் கண்ட கரடி, மறுபடியும் அக்குண்டைக் கையால் பிடித்து வீசி யெறிந்தது. சங்கிலியால் கட்டப்பட்டிருக்கும் குண்டு எங்குபோகும்? கொஞ்சதூர மாடிவிட்டுத் திரும்பும்பொழுது முன்னிலும் பலமாக ஒரு குட்டியின் தலையிலடிக்கவே, அக்குட்டி தக்ஷணம் மாண்டு விழுந்தது. இதைக் கண்டதும் அந்தத் தாய்க்கு வந்த வ்யஸனத்தையும் கோபத்தையும் நம்மால் அளவிட முடியுமோ? மிகுந்த சீத்காரத்தோடு யதாஸ்தானத்தில் வந்து நின்ற குண்டை மறுபடி பிடித்துத் தன் பலங் கொண்டமட்டில் தள்ளியது. அது எவ்வளவு பலங்கொடுத்துத் தள்ளுகிறதோ அதே பலத்தோடு திரும்புங்காலையில், இன்னொரு குட்டி யிறந்து வீழ்ந்தது. கிழக்கரடிக்கோ கோபம் தலைகால் தெரியாமல் வந்துவிட்டது. வரவே ஒரு காலால் அக்குண்டைத் தூக்கி, கவண்கல்வீசுவதுபோல், ப்ரமாதமான விசையோடு வீசியது. இரும்புப் பந்தும் ஊசலாடி வெகு தூரம், சங்கிலியின் நீளமிடங் கொடுத்தவரை போனது. ஆனால் அஸாத்யமான வேகத்தோடேயே திரும்பிவந்து, அக்கிழக்கரடியின் தலையிற்றாக்கவே, அவ்விடத்திலே ப்ராணனை யிழந்தது. மீதமிருந்த குட்டிகள் பயத்தால் கத்திக்கொண்டு காட்டிற்குள் ஓடிவிட்டன.

இவ்வளவையுங் கவனித்தான் மரத்தின்மேலிருந்த பையன். "அடே, என்ன ஆச்சர்யம்! கரடியின் தோலுக்காக ஆசைப்பட்ட யாரோ ஒருவனல்லவா, அதைக் கொல்லுவதற்கு இச்சுலபமான மார்க்கத்தை யேற்படுத்திப்போயிருக்கிறான். இருந்தாலும் பாபம். அறிவில்லாததால் அழிந்ததுஅக்கரடி. கட்டப்பட்டிருக்கும் வரை எவ்வளவு தள்ளினும் குண்டு திரும்பித் தன் மேலேயேதான் வரும் என்ற பகுத்தறிவில்லாததால்தானே முரட்டுத்தனமான கோபத்தால், குட்டிகளையுமிழந்து தன்னையுமாய்த்துக்கொண்டது. இதனால்தானே பகுத்தறிவுள்ள மனிதவர்க்கம், மற்றைய மிருகங்களினும் மிக்க மேம்பாடடைந்து விளங்குகிறது" என்றிப்படி எண்ணமிட்டு, தான் வந்த கார்யம் ஞாபகம்வர தடாகத்தின் அக்கரையை வெகு வேகமாகச் சென்றடைந்தான்.

அங்கே நின்றந்த மாளிகையைப் பார்த்தான். அத்யுந்நதமான அநேக ஜாதி மரங்களால் நிழற்றப்பட்டு விளங்கியதால் ஸூர்யரச்மியே உட்புகவிடமில்லாமல் குளிர்ச்சியாக விளங்கியது. வெளியினின்றும், மாளிகைக்குள் வருவதற்காக விசாலமான மூன்று ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டிருந்தன. ரஸ்தாக்களின் இரு பார்சுவங்களிலும், சித்ரமாகக் கத்தரிக்கப்பட்டு, ஒழுங்காக மருதஞ் செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன. அவைகளின் அடியோரமாகச் சுத்த ஸ்படிக வெண்மையான கற்கள் பதிக்கப்பட்டுச் சோபையைத் தந்தன. மாளிகையை நெருங்க நெருங்க, பலவகையான 'க்ரோடன்' செடிகளும், திவ்ய வாசனையளிக்கும் பலவித புஷ்பலதைகளும், அருமையாகப் போற்றி வளர்க்கப் பெற்றிருந்ததையுங் கவனித்தான். "ஸபாஷ்! வாஸஸ்தலமென்றால், இப்படியல்லவாவிருக்கவேண்டும்? மனோரம்யமான இப்பிரதேசத்திலே ஒருவன் வாழ்வானாகில்,துரெண்ணமவன் மனதிற் புகவிடமேது? ஆனால் இப்படிப்பட்ட மாளிகையை வைத்து அநுபவிப்பவர் எவ்வளவு தனவந்தராயிருக்க வேண்டும்?" என்றுஎண்ணமிட்டுக்கொண்டே வந்துவிட்டான் வாயிலண்டை. உள்ளே போக யாரை அநுமதிகேட்பது; யாரிருக்கிறார்கள் என்றறிவதற்காகத் தலையை நிமிர்ந்தான். என்ன வாச்சர்யம்! காலையில் எந்தப் புண்ய புருஷரைக் கண்டு, அவர் பணிவின்படியே, இங்கே வந்து சேர்ந்தனனோ, அப்புருஷரே, வாயிலில் நின்று, தான்படு மாச்சர்யத்தை அநுபவிப்பதைக் கண்டான். அவரும் இனிமையும்,கருணையும்விளங்கும்புன்னகையோடு

"வா; அப்பா வா. நான் இங்கிருப்ப துனக்கு ஆச்சர்யத்தை விளைத்ததுபோலும்! நீ அங்கு போய்ச் சேருவதற்குள், நானும், அநேகமாக வந்துவிடலாம் என்று சொன்னதை மறந்தாயோ?" என்றார்.

"இல்லை, மறக்கவில்லை, என்றாலும் கார்யமாக வெளியிற் செல்லுவதாகச் சொல்லிச் சென்றமையால், அதற்குள் திரும்பியிருப்பீர்கள் என்று நான் எண்ணவில்லை."

"ஸரி, உள்ளேவா, போகலாம்" என்று பையனை அழைத்துக்கொண்டுபோய் உண்டு ச்ரம பரிகாரம் பண்ணியதும் "ஏனப்பா, ச்ரமமா யிருக்கிறதா? மாளிகையைப் பார்க்க உனக்காசையிருக்கிறதா?" என்றவர்கேட்டார்.

"ச்ரமமென்ன, ஒன்றரைமைல்தானே நடந்திருக்கிறேன். அதிலும் வழியில் மாந்தோப்பில் படுத்து வேறே தூங்கிவிட்டேன். ஆகவே, தங்களுக்கு ஆயாஸமாயிராவிட்டால் இவ்வரண்மனையின் காட்சிகளைக் காண மிகுந்த அவாவுறுகின்றது என் மனம்."

"நிரம்பஸரி, வா" என்று வியக்கத்தக்கதான அம்மாளிகையின், கூடங்களையும், சிறு அறைகளையும், உபயோகத்திற்கும், அலங்காரத்திற்குமாக நியமிக்கப்பட்டிருக்கும் பலவரிய பொருள்களையுங் காண்பித்தார். பையனும் "இந்த்ரலோக மிப்படித்தான் இருக்கும் போலும்" என்று ப்ரமையடைந்தாலும், புத்திசாலியாகையால் 'இவ்வளவையுங் காட்டியவர் தென்னந்தோப்புப் பக்கமுள்ள பெரியகூடத்தைமட்டுங் காட்டாததென்ன' வென்று ஸந்தேஹித்து "அந்தக்கூடத்தில் என்ன விசேஷம்?" என்றுங் கேட்டுவிட்டான்.

அதனருகாமையில் யழைத்துப்போய் பையனை "இந்தக்கூடத்தைக் கவனித்தாயா? கதவு பூட்டவில்லை. இந்தப் பித்தளைக் கொக்கித்தாழ் தான்போட்டிருக்கிறது. ஆகையால், இஷ்டமானால் ஸுலபமாய்த் திறந்து விடலாம். ஆனால், நான் சொல்வதை யலக்ஷ்யஞ்செய்யாதே. இக்கதவைமட்டுந் திறக்க யத்நம்பண்ணாதே. நீ கொஞ்சகாலம் இங்கேயே ஸௌக்யமாய் வாழலாம். எள் என்னுமுன், எண்ணேயாக, ஸகல கார்யங்களும் உனக்கு நடக்கும். ஆனால், இந்தக் கதவண்டைமட்டும் போய் ஒன்றும் சேஷ்டை செய்யாதே. அப்புறமுன்னிஷ்டம். ஆவலால் தூண்டப்பட்டுக் கதவைத்திறந்தாயோ, நீ மாந்தோப்பில் கண்டதை ஞாபகஞ் செய்துகொள்" என்று விடுகதைபோல் எச்சரித்துவிட்டுப் பையன் ஸுகவாஸத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் பலவும் முடித்து எங்கோ சென்று விட்டனர்.

'வாய்த்தது, வாய்த்தது' என்று சிறுவனும் மிக்க செல்வத்தோடு அங்கேயேவாழ்ந்து வந்தான். சுற்றியிருக்கும் நந்தவனங்களிற் சென்றுலாவுவதும், நீலத் தகட்டில் வைரக்கற்கள் பதித்ததென்ன விளங்கும் நக்ஷத்திரங்கள் பூத்து விளங்கும், பகவத்ச்ருஷ்டியில் மனதை யிழந்தும், அவர் திருவடியிற் புத்தியைப்பதித்தும் காலத்தைக் கழித்துவந்தான். ஸகலவிதமான புஸ்தகங்களும் நிறைந்த ஒரு ஸரஸ்வதி ஆலயம் வீட்டிலிருந்ததால் படித்து அறிவை விருத்திபண்ணுவதில் ஸ்வபாவமாகவே கருத்துள்ள பையனும், அநேகம் புஸ்தகங்களைப் படித்துக் களித்தான்.

இப்படி 30 வருஷங்கள் சென்றுவிட்டன. பையனாயிருந்தவன் கிட்டத்தட்ட யவ்வனம் முடிந்துபோகும் ப்ராயமடைந்திருந்தான். ஒரு நாள் மேன்மாடியிலிருந்து இறங்கி, தென்னந்தோப்புக்குப்போய்க் காற்று வாங்கி வரலாமென்று செல்லுகையில், ஒரு நாளு மதுவரை திறக்கப்படாத அந்தக் கூடத்தைப்பார்த்ததும், அவனுக்கு அதன் ரகஸ்யத்தை யுணரவேண்டுமென்றவொரு தீவிரமான அவா ஒரு நாளுமில்லாதபடி யுண்டாயிற்று. ஒருக்ஷணநேரம் யோசித்தான். "இங்கோ நாம் ராஜ வைபவமாக 30 வருஷங் கழித்துவிட்டோம். இங்கு நமக்கு வேண்டியவர்கள் ஒருவருமே யில்லை. ஆகையால், நாம் மரண மடைந்தாலுங்கூட வ்யஸநப்படுபவர் கிடையாது. அப்படியிருக்க இந்தக் கூடத்தின் ரகஸ்யத்தை யறிய நமக்கென்ன பயம்? தலைக்குமிஞ்சி என்ன போய்விடும்? ப்ராணன் போனால் போகிறது. எவ்வளவு நான் வாழ்ந்தாலும் ஒரு நாளிறக்கவே வேண்டுமன்றோ" என்று மனதை ஸமாதானப் படுத்திக் கொண்டான். இஷ்டமான கார்யங்களில் ப்ரவர்த்திக்க ஸமயத்துக்குத் தக்கபடி ஸமாதானம் மனதில் தோன்றுவது இயற்கையல்லவா?

'திக், திக்' என்று அடித்துக்கொள்ளும் நெஞ்சுடன் மெள்ளக் கதவின் தாழைத்திறந்து உள்ளே நுழைந்தான். முதலில் ஒன்றும்

விசேஷமாக அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. அம்மாளிகையிலுள்ள மற்றைய அறைகளைவிட மிகவும் பெரிதாக விருந்ததுமன்றி, எந்தப் பக்கம் பார்த்தாலும், பட்டாலும் சரிகையாலுமே சித்திரிக்கப்பட்டிருந்தது. நடுவில் ஆதாரத்திற்குத் தூண்களேயில்லாமல் மிகவும் கம்பீரமா யமைக்கப்பட்டு விளங்கியது அந்தக்கூடம். மனதுக்கு அமைதி கொடுக்கக்கூடிய ஒருவித பயங்கரமான சாந்தத்தோடு விளங்கியது. ஆனால் அவ்வளவு அழகும் கம்பீரமும் பொருந்திய அந்த அறையில் ஒரு ஸாமானாவது கண்டானில்லை. அதுதான் அவனுக்கு அத்யாச்சர்யத்தை விளைத்தது.

கவனிக்கக்கவனிக்க அம்மங்கலான வெளிச்சத்தில் பழக்கத்தால் நன்றாய்ப் பார்க்கக்கூடியபடியானதும், அவ்வறையின் நடுவில் ஏதோவொரு வஸ்து விருப்பதாகத் தோன்றவே, நாலடி நடந்து கவனித்தான், ஆம் வாஸ்தவமே. அப்பெரிய கூடத்தின் மத்தியில் ஒரு உந்நதமான ஸிம்ஹாஸனம் போடப்பட்டிருந்தது. உட்காரும் ஆஸநமும், அதைத் தாங்கிய ஸிம்ஹ விக்ரஹமும் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாலாகியது என்று அறிய வெகு நேரம் பிடிக்கவில்லை. புறவோரங்களி லெல்லாம் விலையுயர்ந்த தங்கஜரிகை 'துய்யா' வைத்துத் தைக்கப்பெற்றிருந்தது. கீழிருந்த ஸிம்ஹராஜன் விழிகள், உயர்ந்த சிவப்பு ரத்நங்கள் பதிக்கப்பெற்று, கோடங்காட்டி நின்றன. பார்த்து ப்ரமித்தான். ப்ரமித்து நின்றான். "இதென்ன! ஆச்சர்யம் மேலுமேலும் விளைந்துகொண்டே யிருக்கிறது! இவ்வளவு ரகஸ்யமாகக் காப்பாற்றப்பட்ட அறையில் ஒரு ஸிம்ஹாஸநந்தானே காணப்படுகிறது. இவ்வாஸநத்தின் விபரந்தா னென்னே?" என்று சிந்தித்துவிட்டு, "ஸரி எதற்கும், தைர்யமே ப்ரதானம். வெல்வெட், ஜரிகைகளால் ஸுகமும் அலங்காரமும் பெற்று விளங்கும் இந்த ஸிம்ஹாஸநத்தில் நாம் அமர்ந்து, கொஞ்ச நாழிகை யதன் ஸுகத்தை யநுபவிக்கலாம்" என்றுன்னி, படிகளின் வழியேயேறி அதிலமர்ந்தான். அமர்ந்ததும், கையில் ஏதோ வொன்று 'தட்டு'ப்படவே அதை யென்னவென் றெடுத்துப் பார்த்து, பொன்னாலாகி, நவரத்நங்களும் வைத்திழைத்தவோர் செங்கோல் எனத் தெளிந்தான். தெளிதலும், அரை நிமிஷந்தானாயினும், நாமும் ஒரு சக்ரவர்த்தியாகத்தான் விளங்குவோமே என்று அச்செங்கோலையுங் கையிலேந்தினான். ஏந்தினதுதான் தாமஸம். அவனிருந்த அறையின் நான்கு சுவர்களும் அவன் கட்புலனுக்குத் தென்படாமற் போயின. வியப்பும், திகிலும் மேலிட்டது நம் கதாநாயகனுக்கு. "இதென்ன அத்புதம்" என்று நாற்புறமும் நோக்கவே, உலக முழுமையும், அதில் அவ்வவ்விடத்தில் நடப்பவையும் ஸ்பஷ்டமாக தனக்குத் தெரிந்ததைக் கண்டாநந்தங்கொண்டான். முன்பக்க நிமிர்ந்து நோக்கினான். உலகின்கண்ணுள்ள பெருங்கடற்களும், அவைகளிற் செல்லும், மரக்கல வகைகளையுங் கண்டான். வலதுபக்கமாக த்ருஷ்டியைச் செலுத்தினான். மத வைராக்யத்தால் ப்ராணபிமானங்கூட மறந்து போர்செய்யும் பல புதுமனித ஜாதி ஜனங்களைக் கண்டு வியப்பெய்தினான். இடது பக்கந் திரும்பினான். தன்னுடைய வீடு உள்பட, தானிருந்த செல்லுகுடியும், நின்றவூருந் தெரிவதைப் பார்த்துக் களித்தான்.

உடனே, வீட்டைப்பற்றிய நினைவு பலமாயெழ, தன் ஸொந்த க்ருஹத்தில் என்ன நடக்கிற தென்றறிய ஆவல்கொண்டவனாய், தன் தகப்பனார் வழக்கமாய் வேலை செய்யும் வளமுள்ள நெல்வயல்களைக் கவனித்தான். அப்பொழுது இரவு இரண்டுமணியிருக்குமென்று அவனுக்குத் தோன்றியது. அவ்விருட்டிலும், நக்ஷத்திர வெளிச்சத்தில், அவ்வயலில், தழைத்துச் செழித்து, பருத்த நெற்றான்யத்தின் சுமையைத் தாங்கமுடியாமல் தலைசாய்ந்த கதிர்களை மும்முரமாக அறுக்குமோர் உருவம் அவன் கண்ணிற் தெரிந்தது. முதலில் தன் தகப்பனே, வேலையின் மிகுதியையெண்ணி, இவ்வளவு அகாலத்தில் கதிரறுக்கிறார் என்றெண்ணினான். கொஞ்சங் கூர்ந்து பார்க்கவே, அது தன் தகப்பனல்லவென்றும், கதிற்கொள்ளையிடுவதில் பிரஸித்திபெற்ற கரிவீரனென்றும், நிதானித்தான். உடனே தன்னையு மறந்து வந்தகோபத்தால் "அப்பா, கீழண்டைக் குண்டு நெல்லெல்லாம், கரிவீரன் கொள்ளை கொள்கிறான்" என்று உறக்கக் கத்தினான். அது தூங்கிக்கொண்டிருந்த தகப்பன் காதில் விழுந்ததாகவும், அவர் எழுந்து ஸகாயத்திற்குச் சிலரை யழைத்து வயல்சென்று

வீரனைக் கையுங்கட்டுமாகப் பிடித்துக்கொண்டதாகவும், அவனுக்குப் புலப்பட்டது.

தன் தாய் என்ன ஸ்திதியிலிருக்கிறாள் என்பதை யறியவேண்டும் என்னும் ஆவலாற்றூண்டப்பட்டு, தன் வீட்டிற்குள் த்ருஷ்டியைச் செலுத்திக் கவனித்தான். தன் தாயார் நித்ராவஸ்தையி லிருப்பதையும்,வீட்டில் ஒருதிருடன் புகுந்து, அவள் வைத்திருக்கும் இரண்டொரு நகைகள் வைத்த பெட்டியைக் களவாட யத்தனிப்பதையுங் கண்டு, மனம் பதறும்போதே தன் தாயார் மெள்ள விழிப்பதைக் கண்டான். அவளும் விழித்து 'ஐயோ திருடன்' என்று கூக்குர லிட்டாள். அந்தத் திருடனுமதனால் கடுஞ்சின மூண்டு, தன் கையிலிருக்கும் அரிவாளை யோங்கி யவளை வெட்டி வீழ்த்தப் போனான். அதைப் பார்த்த புத்ரனுக்கு மனம் பொறாமல், தன்னையு மறந்து, தன் கையிலிருந்த செங்கோலைச் சுழற்றி அத்திருடன்மேலெறிந்தான். அதுவும் சுழன்று சென்று திருடன் பொட்டில் சட்டெனத் தாக்கவே, பட்டென்று போயது அப்பாவியின் உயிர்.

அத்திருடன் கீழே விழுந்ததுதான் தாமஸம். இக்காட்சிகளனைத்தும் அவன் கண்ணின்றும் மறைந்தன. மறுபடியும், நாற்புறமும் சுவர்களோடுகூட, அப்பெரிய கூடம் மட்டுமேதான் த்ருஷ்டிகோசர மாயது. திடீரென்று சாத்தியிருந்த கதவு திறக்கப்பட்டது. இவ்வளவு நாளும் எங்கோ சென்று மறைந்திருந்த மாளிகையின் ஸ்வான்தார் வந்து நின்றார் எதிரில். வந்ததும், ஸிம்ஹாஸநத்தண்டை சென்று, தன் அபிமான புத்ரனைக் கைலாகு கொடுத்துக் கீழேயிறக்கி,

"நீ என் உத்தரவை யச்ரத்தை செய்துவிட்டாய். கதவைத் திறந்ததே முதலில் பிசகு. இச்சிம்ஹாஸநத்தில் ஏறினது அதனிலும் தவறு. ஏறி நீ செய்த கார்யங்கள் உலகில் ஏற்கனவே மலிந்து கிடக்கும் தீச்செயல்களை விருத்தியாக்கிவிட்டன. இன்னும் ஒரு நாழிகை நீ செங்கோலோச்சியிருந்தால், உலகமே பாதி நசித்திருக்கும்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் அவனை அவ்வாஸநத்தில் ஏற்றிச் செங்கோலைத் தன் கையிற் கொண்டார். உடனே மறுபடியும், உலகமனைத்தும், நிகழும் ஸம்பவங்களும் புலப்பட்டன. அப்புண்ய புருஷரும் பேசவாரம்பித்தார்.

"பார் அப்பா, உன்னுடைய கார்யங்களின் பலனை. உன் தகப்பனார் நெற்கதிர்களைக் கள்ளவீரன் கொண்டு போகாமற் காப்பாற்றினதாக வெண்ணிக் களித்தாயே! இப்பொழுது பார். அத்திருட்டிற்காக ஜெயிலிலடைபட்டு உன் தகப்பனார்மேல் ஜந்ம வைரங்கொண்ட வீரன், விடுதலையாய் வந்து என்னசெய்கிறான் பார்" என்றார். வீரன் கையிற்கொளுத்திய ஒரு நெருப்புப் பந்தத்தால், தன் தகப்பன் வீட்டிற்கும் கொல்லையிலுள்ள வைக்கோற் போருக்கும் தீவைப்பதையும், அவை கொழுந்து விட்டெரிந்து அக்நிக்கிரையாவதையும் பார்த்துப் பதறவே, அதை மறைத்துவிட்டார் திடீரென்று. மறுபடியும் வாய்திறந்து, "திருடன் வாளுக்கிரையாகாமல் நீ காப்பாற்றிய உன்தாய் இப்பொழுதிருக்கும் ஸ்திதியைப் பார்" என்றார். மிகுந்த கொடுமையான காசரோகத்தால் பீடிக்கப்பட்டு வருந்துவதையும் "ஐயோ, இரண்டு வருஷத்துக்கு முன்னாலேயே, கையையோங்கின திருடன், கொன்று போயிருக்க லாகாதா; இவ்வளவு கஷ்டமும் அடியோடு இல்லாமற் போயிருக்குமே" என்று அங்கலாப்பதைக் கண்டு மனம் புண்ணாய் வருந்தினான். திடீரென்று அதையும் மறைத்தார் அப்புண்ய புருஷர். "மறுபடியும் பார்" என்னலும், ஒரு சிறைச்சாலையும், அதன்வாயிலில் தன்னால் கொல்லப்பட்ட திருடன் உருவமுமிருக்கக் கண்டான். "பார்த்தாயா? அத்திருடன் அநேக கொலைகளும் திருட்டுகளும் புரிந்தவன். அப்பாபங்களுக்கெல்லாம் அவனே உத்தரவாதியாக வேண்டியவன். ஆனால் நீ அவனைக் கொன்று போட்டதனால்,அவன்பாபங்களை நீயே யேற்றுக்கொண்டாய். நீ என் கட்டளையை யவமதித்ததாலடைந்த பயன் இதுதான். காட்டில் நீ கண்டகாட்சி ஞாபகமிருக்கிறதா? தாய்க் கரடி, இரும்பு குண்டை ஒருதரம் அசைத்தது, ஒருகுட்டிக்குப் பலமான காயம். மறுபடியு மசைத்து ஒரு குட்டியைக் கொன்றது. மூன்று முறையு மப்படியே செய்து மற்றொரு குட்டி யிறக்கக் காரணமாயிற்று. கடைசிமுறை யதையே திரும்பியுஞ் செய்ததின் பலனாகத் தன்னுயிரையே யிழந்தது. அன்றென்னென்னவோ, புராணம் படித்தாயே, இப்பொழுது அக்கரடியை விட மேன்மையாக, பகுத்தறிவின் லக்ஷணம்

ஆசை பெருக அலைச்சலும் பெருகும்.

விளங்க நீ நடந்து கொண்டாயோ" என்றார்.

நாணத்தாலும், துக்கத்தாலும் குனிந்த தலை நிமிரவேயில்லை அபிமான புத்ரன்?

"ஸரி போகட்டும், போனதைப்பற்றி யோசிப்பது பேதமை. ஆகவேண்டிய கார்யத்தைக் கவனிப்பதே விவேகிகளுக் கழகு. ஆகவே நான் சொல்வதைக்கேள்.நீ செய்த பாபத்திற்கு ப்ராயச்சித்தம் செய்து முடிக்கவேண்டும் தெரியுமா? இன்னும் 30 வருஷங்கள் உனக்குத் தவணை கொடுக்கிறேன். அதற்குள் ப்ராயச்சித்தமானது முடிவடைய வேண்டும்" என்றார்.

"ப்ராயச்சித்தத்திற்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லையே எனக்கு."

உன்னால் எவ்வளவு தீமை யுலகில் விளைந்ததோ, அவ்வளவு தீமையை யகற்றினாயானால், உன் பாபம் நீங்கிவிடும்."

"தீமையை யகற்றுவ தெப்படி யென்பதை நானறியேனே."

"ஸரி, கவனி. ஸூர்யோதயத்துக்குப் புறப்பட்டு நேரே கிழக்கு நோக்கி நட. கொஞ்ச தூரஞ் சென்றதும்,ஒரு பயிரானிறைந்த வயல் குறுக்கிடும். அதில் நடப்பதைக் கவனித்துக் கொள். உன்னால் முடிந்த வுபகாரத்தைச் செய். பிறகு உன் வழியே போ; நடப்பதையெல்லாம் மட்டும் நன்றாய்க் கவனி. நாலாவது தினத்தன்று மறுபடியும் ஒரு மாந்தோப்பைக் காண்பாய். அதனடுவில், ஒரு பர்னசாலையில், ஒரு ஸந்யாஸி வஸிக்கிறார். அவரை நமஸ்கரித்து, ஸகல விபரங்களையுந் தெரிவி ; ப்ராயச்சித்த மார்க்கத்தை யவர் உனக்கருள்வார்" என்று சொன்னதோடு, கையைப் பிடித்து கிழக்கு முகமாக ப்ரயாணமும் பண்ணிவைத்து விட்டார். (தொடரும்.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

"பொய் சொன்ன வாய்க்குப் போஜனங் கிடையாது"

ஸிந்து தேசத்தில் ஸூகலாபன் என்ற தனிகன் ஒருவன் இருந்தான். அவன் பாட்டனார், தகப்பனார் முதலியவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுச் செல்வம் சேர்த்தனர். ஸூகலாபன் தன் பெயருக்கு ஏற்றபடி ஸூகமாகவே லாபமடைய விரும்பினான்.பணம் முழுவதையும் நிலங்கள் வாங்குவதிலேயே செலவழித்தான். ஆனால் அவைகளைப் பயிர்செய்ய ஏற்பாடு செய்யவில்லை. வெகு சீக்கிரத்தில் நிலங்கள் எல்லாம் பயிருக்குப் பிரயோஜனமற்றுப் போயின. அவனுடைய வேலைக்காரர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட அவனிடம் பணமில்லை. நிலங்களையும் அவனுடைய கடன்காரர்கள் அபகரித்தனர். கடைசியாக அவன் தன் வயிற்றுப் பிழைப்பிற்காக வீட்டையும் விற்றுவிட்டான். பிறகு என்ன செய்கிறது? சோற்றிற்காக அவன் கூலி வேலைக்குப் போக வேண்டியதாயிற்று.

ஆனால் அவன் கர்வமும் அகம்பாவமும் போய்விட்டது என்பீர்களோ? இல்லை. கூலி வேலை செய்யும்போதும், சோம்பலும் கர்வமும் இருந்தன. என்ன நடந்தது என்று கவனிப்போம்.

பயிர் அறுவடைகாலத்தில், வேலையாளாக ஸூகலாபன் அமர்ந்தான். பயிர்களை அறுத்ததும், தாள் தாளாகக் கீழேவைத்துக் கட்டிக் களத்திற்குக்கொண்டுபோகவேண்டியதுவேலை செய்பவர்களின் வேலை. ஸூகலாபன் நின்ற இடத்திலிருந்தே நெற்கதிர்களை அறுத்து, தன்னுடன் வேலைசெய்யும் ஒருவனைக் கூப்பிட்டு "அடே, இந்தத் தாள்களைக் கட்டிக்கொண்டு போ" என்று உத்தரவிட்டான்.

அந்த வேலையாள் முதலில் காதிற் படாமலிருந்தாலும் ஸூகலாபன், அடிக்கடி சொல்லவே "ஓய்! உம் வேலையைப் பாரும்! என் வேலை எனக்குத் தெரியும்" என்றான். ஸூகலாபன் கோபமடைந்து, அவனை அடிக்க, அது முதலாளிக்குத் தெரியவே, கூலியில் பாதி கொடுத்து, ஸூகலாபனை அந்த வேலையிலிருந்தும் நீக்கிவிட்டான்.

இப்படிக் கஷ்டப்படும்போது, ஒரு நாள் மாந்தோப்பில் ஸூகலாபனுக்கு வேலை கிடைத்தது. அவனுடன் 50, 60 பேர் வேலைசெய்து கொண்டிருந்தனர். ஸூகலாபனுக்குப் பசியாயிருந்தது. மாம்பழங்களைப் பொறுக்கிக்

ஆசை வெட்கம் அறியாது :: ஆலசப்பட்டது ஊசிப்போயிற்று.

கூடையிற் போட்டுக்கொண்டிருந்தான். பழங்களைப் பார்த்தபோதே தின்னவேண்டுமென்று ஆசையுண்டாயிற்று. ஆசையை அடக்க முடியவில்லை. அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தான். தன்னை ஒருவரும் பார்க்கவில்லையென்று நினைத்து, நல்ல பழமொன்றைத் தின்றான். இவன் செய்ததைப் பார்த்த ஒருவன் தோட்டக்காரனிடம் சொல்ல, அவன் அதை நம்பவில்லை. மிகவும் பணக்காரனாயிருந்த ஸுகலாபன் இம்மாதிரி செய்வானென்று தோட்டக்காரன் நம்பவில்லை. அடுத்த நாளும் அப்படியே நடந்தது. தோட்டக்காரன் ஸுகலாபனை விசாரித்தான்.

"பழமா? நான் தின்னவேயில்லையே: யார் சொன்னது?" என்று ஒன்றுமறியாதவன் போல் சொன்னான் ஸுகலாபன்.

ஸுகலாபன் பழந்தின்றதைக் கண்ட வேலையாள், தான் கண்டதாகச் சொல்லவும் ஸுகலாபன், கோபங்கொண்டு "நான் பணக்காரனாயிருந்தபோது என்னிடம் வராத இவன் இப்பொழுது என்னை அவமானம் செய்ய இம்மாதிரிச் சொல்கிறான். நான் பழந்தின்றதில்லையா?" என்றுபடபடவென்று சொல்லவே தோட்டக்காரன் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டான்.

மூன்றாம் நாள், ஸுகலாபன் பழங்களைப் பொறுக்கும்போது, தோட்டக்காரனும் ஸுகலாபன்மீது குற்றஞ்சாட்டிய வேலைக்காரனும் ஓர் மறைவில் பதுங்கிப்பார்த்துக்கொண்டிருந்தனர். ஸுகலாபன் வேலைசெய்ய ஆரம்பித்த சற்று நேரத்திற்கெல்லாம், அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தான். ஒருவரும் கண்ணிற்குப் புலப்படாமலிருக்கவே, நல்ல பழமொன்றைப் பொறுக்கி எடுத்துத் தின்றான்.

தோட்டக்காரன் சற்றுநேரத்திற்கெல்லாம் அவ்விடம் வந்தான். "ஸுகலாபரே! உம்முடைய செல்வாக்குப் போய்விட்டாலும் ஸத்யமாவது நிற்கக்கூடாதா? இன்று நீர் பழந்தின்றீரா?" என்றான்.

"நான் தின்னவேயில்லை" என்றான் ஸுகலாபன்.

"நீர் தின்றிருந்ததை நான் பார்த்தேனே!"

"நான் பழத்தை ஸத்தியமாய்த் தின்னவில்லையே."

"நீர் தின்றிருந்தால், உம்மை என்ன செய்கிறது?"

"ஸ்வாமி சாக்ஷியாகச் சொல்லுகிறேன். நான் தின்னவில்லை. அப்படி நான் தின்றிருந்தால் நான் கல்லாய்ப் போவேன்" என்றான் ஸுகலாபன் தைர்யமாய்.

"நான் பார்த்தே—'என்று சொல்வதற்குள்—"ஐயோ! கால் தூக்கமுடியவில்லையே!" என்றலறினான் ஸுகலாபன். அவன் உரக்கக் கத்துவதைக் கேட்டுத் தோட்டக்காரனும் அவனுடைய வேலையாட்களும் அவனிடம் ஓடிவந்தனர். ஸுகலாபனால் நடக்கமுடியவில்லை. அவன்கால்கள் கறுத்துச் சிலை போல நின்றன. தொடை கனக்கிறதே என்று சொல்லும் போதேஸுகலாபன் தொடை கல்லாக மாறியது. "நான்தான் பழம்" என்று முடிப்பதற்குள் மார்வரைக்கும் கல்லாகியது. வந்தவர்கள் எல்லாரும் திகைத்து நின்றனர். இரண்டு நிமிஷத்திற்குள் ஸுகலாபன் கற்சிலையாக மாறினான். "நான்தான் பழத்தைத்தின்—' என்பதற்குள் உதடுகள் கல்லாய் மாறின. வார்த்தை சொன்னபடியே, வாய்திறந்து நின்றது.

ஸுகலாபன் பொய் சொன்னதால் கற்சிலையானான். அவன் முதலில் பணக்காரனாயிருந்தென்ன? ஒரு மாம்பழத்திற்காகப் பொய் சொல்லி வாழ்க்கையை ஒழித்தான்.

தன்னைத் தானடக்கல்

வெகு காலத்திற்குமுன்னே ஐரோப்பாவிலுள்ள ரோம் நகரத்தார் மிகவும் பராக்கிரமசாலிகளாயிருந்தனர். அதனால் அவர்கள் ராஜ்யம் மிகப் பெரியதாயிருந்தது. ரோமநகரத்துச் சக்ரவர்த்தியின் அதிகாரம் வெகுதூரம் சென்றிருந்தது.

அந்த ரோம் ராஜ்யத்தில் வெனிஸ் என்னும் நகரத்தில் ரஸ்டிக்ஸ் என்று ஒருவன் குடியிருந்தான். ஒருநாள் அவன் ப்ரஸங்கம் கேட்கப் போயிருந்தபோது அரசனுடைய ஆள் ஒருவன் அரசனிடமிருந்து ஓர் கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். அரசனுடைய கடிதமாகையால், என்ன விஷயமோ என்று அனைவரும் ரஸ்டிகஸை உற்று நோக்கினர். உபந்யாஸகரும் தம் உபந்யாஸத்தை நிறுத்தினர். ஆனால் ரஸ்டிகஸ் அவரை நோக்கி, "உமது ப்ரஸங்கத்தை நிறுத்த

ஆடமாட்டாத தேவடியாள் கூடம்போதாது என்றாள்

வேண்டாம்" என்று சொல்லி, அரசனிடமிருந்துவந்த கடிதமாயிருந்தபோதிலும், அப்பொழுதே பார்க்கவில்லை.

ஏன்? கடிதம் அரசனிடமிருந்து வந்தபோதிலும் அதனால் ப்ரஸங்கத்தை நிறுத்த வேண்டுமென்று ரஸ்டிகஸ் ஆசைப்படவில்லை. கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறதோ என்று அறிய அவனுக்கு மிகுந்த ஆவலிருந்தபோதிலும், அதை அவன் அடக்கிக்கொண்டான்—அதனால் ப்ரஸங்கம் தடைபடவில்லை.

உன்னால் அப்படிச் செய்யமுடியுமா? உன் பாடங்களைப் படிக்கும்போது, நடுவில் ஒரு கடிதம், உன் தகப்பனாரிடமிருந்தாவது, தமயனாரிடமிருந்தாவது வந்தால், ரஸ்டிகஸைப் போலிருக்க முடியுமா? யோசித்துப்பார். மனதில் உண்டாகும் ஆசையை இஷ்டப்படி விட்டுவிடலாகாது. அம்மாதிரி விட்டுவிட்டால், ஒரு கார்யமும் முழுவதும் செய்யமுடியாது. நிமிஷத்திற்கு நிமிஷம் மனம் மாறிக்கொண்டே இருக்கும். ஒரு வேலையில் நுழைந்தால் அதை முடிக்கும் வரைக்கும், அதன் மீதே கவனத்தைச் செலுத்தவேண்டும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி : 18-வரம்

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல் நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி.

அப்பொழுது நடுப்பகல் வேளை. நடுக்காட்டில் தேர் வாயுவேக மனோவேகமாக ஓடிக்கொண்டிருந்தது. நளன் தேர்விடும் வேகத்தைக்கண்டு, சூரியனும் பிரமித்து முகம் வெளுத்து, தன் ஒற்றைக்கால் தேரைவிடுவதை யொழிந்து, ஆகாயவீதியில். உயரக் கிளம்பிப் பார்த்துக்கொண் டிருந்தான். காற்றும் அத்தேரின் வேகத்தை யெதிர்க்க முடியாது அடங்கிப் பின்புறமாக மந்தஸ்வரத்தில் தனக்குள் தானே நளனது குதிரையோட்டுந் திறத்தை வியந்து, மெல்லிய குரலில் வெளியிட்டுக்கொண் டிருந்தான். அத்தேரோடும் சப்தத்தைக் கவனித்து பக்கத்திருந்த மலைகள் அவ்விதமே தாமும் பிரதித்வனித்துத் தஞ் செயலில் வரவர ஆற்றலழிந்து மழுங்கி விளங்கின. எனினும், அவ்வோட்டத்தின் கதியைத் தாங்கமுடியாது அம்மலைகள் குலுங்கியதன்றி, அருகிலிருந்த மரங்களெல்லாம் கம்பனமுற்று நடுங்கின; ஓடைகள் நீர்வட்டம் கலைந்து குழம்பி அளவற்ற அலைகளெரித்து நிலைகுலைந்தன; ஊர்வனவும் பறப்பனவும் இடிவிழுந்ததெனத் திடுக்கிட் டலறின. என்றாலும் நளனது சாரத்யம் சிறிதும் குன்றாது சிறந்து விளங்கியது; தேரும் சிறிதும் இடருறாது அதிவேகமாக இறக்கை கட்டிக் கொண்டு பறந்ததெனச் சொல்லும்படி ஓடிக்கொண்டிருந்தது. அவ்வோட்டத்தின் விசையில் பக்கத்திலிருந்த மரங்களும் மலைகளும் அழகிய காட்சிகளும் கண் புலத்துள் படு முன்னமே மறைந்துகொண் டிருந்தன. அவ்வளவு வேகமாகத் தேரோடியது. அவ்வாறதை ஓட்டிய வாஹுகனது கெட்டிக்காரத்தனத்தை ருதுபர்ணன் கண்டதிசயித்தனன்; மேலும்,

'கூந்தன் மாவுளம் அறிதலில்
சாலிகோத் திரனோ
வாய்ந்த கேள்வியின் மாதலி
யோவன்றி நளனும்
ஏந்தல் வேற்றுரு எடுத்தன
னோ' எனவெண்ணி
வேந்தர் வேந்தனும் மணிமுடி
துளக்கினன் வியந்தான்.

வார்ஷ்ணேயனும் வாஹுகனது தேர்விடும் திறத்தைக் காணக்காண வெகு கவனத்தோடு அவனையே உற்று நோக்கிவந்தனன். அவன், கடிவாளங்களை அதிலாகவமாகப்பற்றி, சமயத்திற்குகந்த விதம் ஈர்ப்பதும், விடுவதும், கவர்வதுமாகச் சாவதானமாக, எனினும் சற்றும் அடங்கா ஆவலுடன், குதிரைகளைத் தன் மொழிகளாலேயே வழிப்படுத்தித் தேரை நடத்துவதைப் பார்க்கப்பார்க்க வார்ஷ்ணேயனுக்குத் தன் தலைவனது ஞாபகந் தெரியாமலே உண்டாக, "இவர் தேவஸாரதியான மாதலியோ? அவரிட மிருக்கக்கூடிய குறிகள் இவரிடம் நான் காண்கிறேன். அல்லது ஒரு

ஆடிக்கரு அழிந்தால் மழை குறைந்துபோம்.

வேளை குதிரைகளைப்பற்றிய ஸர்வ விஷயங்களையுமுற்றுங் கண்டறிந்தசாலிஹோத்தரரோ இவர்! ஆனால் இவர் மனித உடலில் விளங்குகின்றனரே! ஒருவேளை என் தலைவரே இந்த மாதிரி உருவங்கொண்டு விளங்குகின்றனரோ? அவராக இருக்கலாமோ? பகைவரிடத்தைப் பொடிப்பொடியாக்கும் அவரல்லாமல் யார் இப்படி ஓட்டமுடியும்? அச்சகடுகள் அவர் ஓட்டும் கைலாகவத்தையே காட்டுகின்றன. என்றாலும் உருவமாத்திரம் வேறாக இருக்கின்றதே! என்னவோ! அம்மன்னவர் தான் இத்தேரை நடத்துவதாக யான் நிச்சயமாக நம்புகிறேன். அது உண்மையில்லாமல் எப்படியிருக்கமுடியும்? அப்படியில்லாவிட்டால் நளமன்னவருக்குத் தெரிந்த வித்தை முழுதும் இந்த வாஹநகரும் அறிந்திருக்கவேண்டும். அப்படியேல் இவர் மஹாத்மாத்தான். உருவை மறைத்துக்கொண்டு மஹாத்மாக்கள் உலகத்தில் ஸஞ்சரிப்பதாக நாம் கேள்விப்பட்டதுண்டு. அத்தகையர் தானோ இவர்? அல்லது காலக் கொடுமையால் உருமாறி விளங்குகின்றனரோ? அந்தோ! உருமாறியிருப்பதாக யான் எண்ணுவதே என் மனமாறாட்டமோ? இருந்தாலும் இருக்கலாம். நளமன்னவருக்கும் இவருக்கும் ஒரே வயதுதான் இருக்கலாம். உருவந்தான் வேறு, மற்றைய விதங்களிலெல்லாம் இருவரு மொப்பர். ஸரியான சாட்சியம் ஏற்படாமையாலன்றி, யான் இவ்வாஹநகரே நளமன்னவர் என்று ஏன் சொல்லக்கூடாது? அகோ! தெய்வமே' என் தலைவரை, நளமன்னவரை, யான் காணும் பாக்யம் என்று பெறுவனோ? உத்தம குணங்களுக் கெல்லாம் உறைவிடமான அப்புருஷச்ரேஷ்டனைக் காணு நாள் எந்நாளோ?—ஏன் எனக்குத் தெரியாமல் மனத்தில் இக்கிளர்ச்சியுண்டாகிறது? உண்மையாக யான் வெகு சீக்ரத்தில் யாவர்க்கும் அன்பரான அவரைக் கண்டு விடுவேன். இவ்வாஹநகரேதான் அவரோ! யாருக்குத் தெரியும்? இந்தச் சந்தேஹத்தை எப்படி நிவர்த்திப்பது?" எனப் பல்வேறு சிந்தைக்கு ஆளாயினன்.

அவன் சிந்தையினும் வேகமாகத் தேர் ஓடிக்கொண்டிருந்தது. ஒரே மனத்துடன் நளமன்னவர் அக்குதிரைகளை வெகு லாகவமாகவும் அதி உத்ஸாகத்துடனும் ஓட்டிக்கொண்டிருந்தனர். அவ்வேடிக்கையை வார்ஷ்ணேயனும் ருதுபர்ணனும் கண் கொட்டாமல் கருத்தூன்றிக் கவனித்துப் பார்த்துக்கொண்டேயிருந்தனர். அவ்வளவு சிரமமில்லாமலும், உயர்ந்த பான்மையாகவும், பார்த்தார் ப்ரமிக்கும்படியாகவும், குதிரைகளின் உள்ளத்தை நன்கு உணர்ந்து, தான் ஓட்டுவதால் அவைகளும் களித்து வழிபடுமாறு, நளனல்லாமல் இவ்வகன்ற பூமண்டலத்தில் வேறு யார் குதிரைகளைப்பழக்கி யோட்டக்கூடுபவர்? அதுதான் வார்ஷ்ணேயனது ஸந்தேஹம்.

'புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்' எவ்வளவு சீக்ரமாக ஒரு காதால் வாங்கியதும் மறுகாதால் போய்விடுகிறதோ, அவ்வளவு சீக்ர கதியில் தேர் ஓடிக்கொண்டிருந்தது. பறவை போலது ஆகாயத்தி லெழும்பிமலைமேடுவனம் வனாந்தரங்கள், ஏரிகள் ஆறுகள், கிராமங்கள் பட்டணங்கள், சிறுநாடுகள் பெருந்தேசங்கள் இவற்றையெல்லாம் கடந்து, க்ஷணநேரத்திலிருந்தகாட்சி அடுத்த க்ஷணத்தில் கண்ணெதிர்விளங்காதபடி வெகு விரைவாகப் பறந்துகொண்டிருந்தது. அத்தேர் காற்றைக் கிழித்துப் பாய்ந்துசெல்லும் வேகத்தில், அக்காற்று ஓலமிட்டுப் பின்வாங்கி நெடுந்தூரம் வீசி, வாஹநனது கர சமத்காரத்தை வெளியிட்டது. இவ்வாறு அகோர விசையுடன் குதிரைகள் காற்றாய்ப் பறக்கும்போது கண்விண்டு மெய்ம்மறந்து கிடந்த ருதுபர்ணன், தனது மேல் வஸ்திரத்தை நெகிழவிடவே, அது காற்றிற் பறந்து சென்றது. அதைக் கண்ட ருதுபர்ணன் வெகு பரபரப்புடன் நளமன்னவனைப் பார்த்து "சற்று நிறுத்தும்; சற்று நிறுத்தும், ஐயா வாஹநகரே! உமக்குத்தான் சொல்லுகிறேன். அதோ விழுந்த வஸ்திரத்தை எடுத்து வரும்வரையில், வெகு வேகமாக ஓடும் இக்குதிரைகளைச் சற்றே இழுத்துப் பிடித்திரும். வார்ஷ்ணேயர் அதை எடுத்துவருவார். சற்று நில்லும்" என்றான்.

"அது முடியாத காரியம், தங்கள் வஸ்திரம் விழுந்த இடத்திலிருந்து நாம் நெடுந்தூரம் வந்துவிட்டோம். ஒரு யோஜனைக்கு மேலிருக்கும் அதற்கும் நமக்கும் இடையே இப்பொழுதுள்ள தூரம். ஆகையால் நீங்கள் அதைப் போய் எடுத்துவரச் செய்வது அசாத்யமான காரியம்" என நளன் சொன்னான்.

ஆடாது எல்லாம் ஆடி அவரைக்காயும் அறுத்தாச்சுது.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

சென்னைப் பென்ஸில் தொழிற் சாலை

சென்னையில் கவர்ன்மெண்டாரால் நடத்திவரப்பட்ட பென்ஸில் தொழிற்சாலையை அவர்கள்விற்றுவிட யோசித்துக்கொண்டிருக்கின்றனர். 1917-௵ செப்டம்பர்௴ 1௳ முதல் 1918 ௵ மார்ச்சு ௴ 31௳ முடிய இந்தத்தொழில் சாலைக்கு 5871 ரூ. லாபம்கிடைத்ததென்று தெரிகின்றது. இந்த லாபம் மூலதனத்தில் நூற்றுக்கு இருபது வீதமென மதிப்பிடப்படுகிறது. இதே கால வளவில் அங்கு செய்யப்பட்ட பென்ஸில் ஸங்கியை 7599 குரோஸ் ஆகும். (1 குரோஸ் -144 உருப்படி). பென்ஸில் செய்யும் தொழிலில் நல்லலாபம் இருப்பதைக் காட்டுவதற்காகவே கவர்ன்மெண்டார் இந்தச் சாலையை ஸ்தாபித்து நடத்தினர். இதை வாங்குவோருக்கு நல்ல தசை யென்பதை நாம் சொல்வோம். மூலதனத்தை இன்னும் அதிகமாக்கி, ஜாக்கிரதையுடன் வேலை செய்தால் மேலேகாட்டிய லாபத்தைக் காட்டிலும் அதிகமான லாபத்தை அடையலாம். தேசக்ஷேமத்தைக் கருதும் செல்வவான்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களில் இது ஒன்று.

* * *

சிறிய நிலச் சுவான்தாரருடைய மசோதா.

நமது நாட்டில், பூஸ்திதியை சிறு சிறு துண்டுகளாக்குவதினால் [illegible]ரிடும் துர்த்தசைகள் பலவென்ப[illegible]மானிகள் அறிவார்கள். இ[illegible]ப்படுவதில் கிருஷித்தொ[illegible]ப்பெரிதும் இடையூறு உண்[illegible]கின்றது. ஜனவிருத்தியும் நமது ஜனஸமூகத்தில் நடைபெறும் வார்ஸாக் கிரமமும் இப்படி பூஸ்திதியைப் பகுக்கும் காரணங்களாக விருக்கின்றன. என்றாலும், இதனால் உண்டாகும் சீர்கேடுகளை எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். பிறநாடுகளில் இப்படி நிலத்தைப் பிரிக்கும் வழக்கத்தைத் தடுப்பதற்கான சட்டங்கள் ஏற்பட்டு, ஜனங்களுக்கு [illegible] கொடுத்துவருகின்றன. பகுக்கப்பட்ட[illegible] கட்டாயமாய் ஒன்றாக்குவதும் அப்படி ஒ[illegible]கின நிலத்தை மறுபடி எக்காரணத்தைக் கொண்டும் திரும்பப் பகுக்கக்கூடாதென்பதும் அச்சட்டங்களின்முக்கிய அம்சங்களாம். இதேமாதிரியான சட்டமொன்றை உண்டாக்குவதற்காகப் பம்பாய் கவர்ன்மெண்டார்ஒருமசோதாகொண்டுவந்திருக்கின்றனர். ஆனால் நிலச்சுவான்தார்கள் இஷ்டப்பட்டால்தான் அவர்கள் விஷயத்தில் இச்சட்டம் செலாவணியாகும். இதன்படி பயனடைய விரும்புபவன், ஜில்லா கலெக்டருக்கு மனுச்செய்துகொண்டு அவருடைய புஸ்தகங்களில் தன் பெயரையும், தான் கைப்பற்றியிருக்கும் நிலத்தையும் தாக்கல் செய்துகொள்ளும்படி கேட்கவேண்டும். ஒருதரம் அப்படி தாக்கலான நிலத்தை மறுபடியும் பகுக்கக்கூடாது. ஆனால் முழுவதையும் விற்கலாம். அடைமானம், ஒற்றி முதலியன வைக்கலாம், வார்ஸாக்கிரமமாக வருவதில் ஒரே ஒரு மகன்பேரில் மட்டுமே தாக்கலாகும். அதாவது மூத்த மகன் மட்டுமே சுவான்தாரனாவான்.

இப்படிப்பட்ட சட்டமொன்று நமது இராஜதானிக்கும் வேண்டுமென்று நாம் சொல்வோம். ஜனங்களுடைய பொது அபிப்பிராயம் இதற்கு மாறாகத்தானிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் எல்லோரும் பல்லக்குத் தூக்குபவர்களாக இருப்பதைக்காட்டிலும் அவர்களில் சிலராவது பல்லக்கில் ஏறுபவர்களாக இருப்பது வெகு சிலாக்யம் என்பதை நம்மவர்கள் ஒப்புவார்கள்.

* * *

சென்னையில் டிராம் வண்டியின் நிறுத்தம்.

நமது நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் விலைவாசிகளின் ஏற்றம் காரணமாக, குறைந்த சம்பளம் பெற்றுக் காலக்ஷேபம் செய்வோர் அனைவரும் மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கிறதென்பதை அபிமானிகள் அறிவார்கள். இந்தச் சிரமத்துக்கு உள்ளான சென்னை டிராம் வண்டி உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குச் சம்பளம் ஜாஸ்தி வேண்டுமென்று கேட்டனர், டிராம்வே கம்பெனியார் இவ்விஷயமாக உடனே யாதொரு ஏற்பாடும் செய்யாமலிருந்தபடியால், வேலைக்காரர்கள் அனைவரும் வேலைக்கு வாராமல் நின்றுவிட்டனர். அதனால் ஜனங்களுக்கு நேர்ந்த துர்த்தசைகளுக்கு அளவேயில்லை. ஜட்கா வண்டிக்காரர்களும் 'ரிக்ஷா' வண்டிக்காரர்களும் அதீதமான கூலி கேட்கத் தொடங்கினர். ஜனங்களுடைய சவுகரியத்துக்காக, டிராம்வே கம்பெனியார் சில வண்டிகளை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். என்றாலும், நூறுவண்டிகள் ஓடினகாலத்திலேயே வண்டிகளில் ஜனக்கூட்டம் அதிகமாகவே யிருந்தது. வண்டிகள் குறைந்ததனால் ஜனங்களுக்குத் துன்பம் வெகுமடங்கு அதிகமாயிற்று. டிராம்வே மானேஜர்—அவர் மகாராஜனாக விருக்கட்டும்,—வேலைக்காரர்களுடைய குறைபாடுகளை அனுதாபத்துடன் கவனிப்பதாகவும், இங்கிலாந்திலுள்ள கம்பெனி முதலாளிகளுக்குச் சங்கதியைத் தெரிவித்து, சம்பளம் ஜாஸ்திவாங்கிக் கொடுப்பதாகவும் சொல்லி, அவர்கள் அனைவரையும் வேலைக்குத் திருப்பிக் கொணர்ந்தனர். அப்பால், அவர் தாம் சொல்லிய பிரகாரமே செய்திருப்பதாகவும் தெரிகின்றது. வேலைக்காரர்களும் பொதுவாகத் திருப்தி யடைந்திருக்கின்றனர் எனவும் வெளியாகிறது. இதேசமயத்தில் லண்டன் நகரத்திலும் டிராம்வே வேலைக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தது கவனிக்கற் பாலது. சென்னை டி வேலைக்காரர்களுக்கு அதிகச் சம்பளம் கொடு

ஆடு கடிக்கிறதென்று இடையன் உறியேறிப் பதுங்குகிறான்.

தற்கு, லண்டன் டிராம் வேலைக்காரர்களுடைய வேலை நிறுத்தம் ஒரு காரணமாக விருக்கலாம். என்றாலும், பொதுஜன சவுகரியத்துக்காக ஏற்பட்டிருக்கும் வசதிகளில் ஒருபோதும் சீர் கேடு வாராமல் பாதுகாத்து முன் ஜாக்கிரதை செய்து கொள்ள வேண்டியது அத்தியாவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்

*   *

சென்னையில் கொள்ளை.

அகவிலை அதிகப்பட்டது காரணமாகக் கல்கத்தாவில் சிற்சில விடங்களில் கடைகளும் சந்தைகளும் கொள்ளையிடப்பட்டன வென்றும், அப்படிப்பட்ட துர்த்தசை நமது மாகாணத்தில் நேரவில்லையென்றும் நாம் முன்பொரு சஞ்சிகையில் சொன்னோம். ஒப்பால் நாளது மாதத்தில் நமது மாகாணத் தலைநகரான சென்னையிலேயே இரண்டு நாள் தொடர்ச்சியாகத் தானியக் கடைகள் கொள்ளையிடப்பட்டன. செப்டம்பர்மீ 8, 9உகளில் சென்னை நகரில்'கொள்ளை, கொள்ளை'என்ற குரலே பலமாகக் கேட்டு வந்தது. 'சூளை, புரசைவாக்கம் கொத்தவால் சாவடி, பெரியமெட்டு, மூர் மார்க்கெட், திருவல்லிக்கேணி, ராயப்பேட்டை, மயிலாப்பூர் ஆகிப இடங்களில், கொள்ளைக்காரர்கள் புகுந்து வெகு அக்கிரமங்களைச் செய்துவிட்டனர். யானையானது தின்று அழிப்பதைக் காட்டிலும் காலால் மிதித்து அழிப்பதே ஜாஸ்தியாக இருக்குமென்பதைப்போல இந்தக் கொள்ளைக்காரர்கள் தானியங்களைக்கொள்ளையிட்டுக்கொண்டுபோனதைக் காட்டிலும் தெருக்களில் வாரியிறைத்து வீணாக்கியதே அதிகமாக விருந்தது. வெகு சீக்கிரத்தில் போலீஸார்களும் சிப்பாய்களும் ஓடிவந்துகலகத்தையும் கொள்ளையையும் அடக்கி, நகரத்தில் சமாதானத்தைத் திரும்பவும் நிலைக்கச் செய்துவிட்டனர். கொள்ளைக்காரர்களில் பலர் பிடிபட்டு, விசாரணை செய்யப்படுகின்றனர்.

அகவிலை அதிகமானதால் நேர்ந்த இந்த துர்த்தசையை ஒருவாறு நீக்கவேண்டி, சில பிரமுகர்கள் லாபமின்றிக் கொள்முதலுக்கே ஏழை ஜனங்களுக்கு அரிசியை விற்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். துணி விஷயமாகவும் இப்படிப்பட்ட ஏற்பாடு ஆகப்போகிறது. மாகாண முழுவதிலிருந்தும் ஆங்காங்கு கொள்ளைகள் நடக்கும் சமாசாரங்கள் நமக்கு எட்டிக் கொண்டிருக்கின்றன. அதிகலாபமடைய வேண்டித் தானியங்களையும் வஸ்திரங்களையும் விலைக்குக் கொடாமல் பூட்டி வைத்திருக்கும் வியாபாரிகளுடைய பேராசையே இந்தத் துர்த்தசைக்கு முதற் காரணமாகவுள்ளது. என்றாலும், அரிசி விஷயமாகவும், வஸ்திர விஷயமாகவும் கவர்ன்மெண்டார் செய்துவரும் ஏற்பாட்டுப்படிக் கூடிய சீக்கிரத்தில் அகவிலை நேர்பட்டுவிடுமென எதிர்பார்க்க இடமுண்டு.

ஸர் ரதன்டாடாவின் மரணம்

பம்பாய்க் கோடீசுவரர்களில் ஒருவரும், சிறந்த தார்மிகரும், தேசாபிமானிகளில் உத்தமருமாகிய ஸர் ரதன் டாடா காலஞ் சென்றுவிட்ட சமாசாரத்தை அபிமானிகளுக்குத் தெரிவிக்க வேண்டி வந்ததற்குப் பெரிதும் வருந்துகிறோம். இங்கிலாந்துக்குச் சென்ற இடத்தில் இந்த ஸ்ரீமானுக்கு மரணம் நேர்ந்துவிட்டது. தமது பிதாவைப்போலவே இவரும் பெரிய பெரிய காரியங்களைத் தொடங்கிச் செய்வதில் அபிலாஷைகொண்டவர். இந்தியாவின் முன்னேற்றத்துக்கான காரியம் எதுவானாலும் சரி, அதில், இவருடைய உதவியை நிச்சயமாகப் பெறலாம். தமது ஸ்வஜாதியாரான பார்ஸிகளுக்கென்று இவர் செய்திருக்கும் தானதர்மம் அளவு படுவதன்று. மற்றையோர் விஷயத்திலும் உதாரணத்தில் பின் வாங்கியவரல்லர். க்ஷயரோகத்தைத் தடுக்கவேண்டிய உபாயத்தைத் தேடுவதற்கு $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாவும், "ஸால்வேஷன் ஆர்மி", எனப்படும் கிறிஸ்தவ ஸமாஜத்துக்கு ஒரு லக்ஷம் ரூபாவும், தென்னாப்பிரிக்காவில் இந்தியரின் உதவிக்காக 25,000 ரூபாவும், அகமதாபாத் வெள்ளச்சேத நிவாரண மூலதனத்துக்கு 17,000 ரூபாவும், கூர்சரத்தில் நிகழ்ந்த பஞ்சநிவாரணத்துக்கென்று 10,000 ரூபாவும், இன்னும் பல வகைப்பட்ட விஷயங்களுக்கு இவர் கொடுத்திருக்கும் பணமும், இவரது உதார குணத்தைக் காட்டுகின்றன. வங்காளத்தில் ஸாச்சி என்னுமிடத்தில் ஸ்தாபித்திருக்கும் இரும்புத் தொழிற்சாலையில் இவர் போட்டிருக்கும் பணம் கோடிக்கணக்கில் தான் அடங்கும். "ஆர்கியாலஜி" இலாகாவுக்கு ஏராளமான பணமுதவிப் பூமியில் ஆழ்ந்திருந்த புராதன நகரமான பாடலீபுரத்தை வெளிக்குக் கொணர்ந்த புண்ய சீலர் இவரே. இன்னும் இவர் கொஞ்சகாலம் ஜீவந்தராக இருந்திருப்பரேல்இந்தியாவுக்கும் தமது ஸ்வஜாதியர் இருக்கும் தேசமாகிய பாரஸீகத்துக்கும் இடைப்பட்ட வழியில் அனேகம் கிளைக் கம்பெனிகளை வைக்கவெண்ணியிருந்த அபிப்பிராயத்தை நிறைவேற்றி இருப்பார். கடைசியாக இவரது முயற்சியால் நிறைவேறிய காரியம் ஐதராபாத்தில் ஏற்பட்ட பாங்கு (நாணய சாலை) ஆகும். இவ்வளவு மகோபகாரம் செய்யும் குணத்தைப்பெற்ற ஸ்ரீமானை நாம் இழந்தது நம்முடைய துர்ப்பாக்கியமே.

சந்தா நேயர்களுக்கு.

சென்றமீ 24உ எமது அருமைத் தாயவர்கள் அநாயாஸமாக இவ்வுலகைநீத்த விஷயத்தில் நமது நேயர்கள் காட்டிய அநுதாபத்திற்கு யாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம் மேடி ஸம்பவத்தினால் இப்பத்திரிகை வெளிவரச் சற்றே தாமதமானதை நேயர்கள் மன்னிக்குமாறு வேண்டுகின்றனம். —ப-ர்

ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கவேண்டும், பாடிக்கறக்கிற மாட்டை பாடிக் கறக்கவேண்டும்.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

16.2025.

தொகுதி XI} காளயுக்திஞூ புரட்டாசிமீ :: 1918-ஞூ அக்டோபர்மீ {பகுதி 4

கார்காலம்

THE WINTER

பய்யணைப் பஃறப் பாந்த ளேந்திய
மொய்நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொன்றிரி
மய்யெடுத் தொத்தது மழைத்த வானமே.

நண்ணுத லருங்கட னஞ்ச துங்கிய
கண்ணுதல் கண்டத்தின் காட்சி காணலாய்
விண்ணக மிருண்டது வெயிமுன் வெங்கதிர்
தண்ணிய மெலிந்தென தழைத்த மேகமே.

நஞ்சினி னளிர்நெங் கடலி னெங்கையர்
அஞ்சன நயனத்தி னவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செல்கையின்
நெஞ்சினி னிருண்டது நீல வானமே.

நீனிறப் பொருங்கரி நிறைத்த நீர்த்தெனச்
சூனிற முகிர்குலந் துவன்றிச் சூழ்திரை
மானிற நெடுங்கடல் வாரி மூரிவான்
மேனிலைத் துளைதென முழக்க மிக்கதே.

அரிப்பெரும் பெயரவன் முதலி னோரணி
விரிப்பவு மொத்தன வெற்பு மீதுதீ
எரிப்பவு மொத்தன வேசி லாசைகள்
சிரிப்பவு மொத்தன தெரிந்த மின்னெலாம்.

மாதிரக் கருமகன் மாரிக் கார்மழை
யாதினு மிருண்டவிண் ணிருந்தைக் குப்பையின்
கூதிர்வெங் காலொடுந் துருத்திக் சோளமைத்
தூதுவெங் கனலுமி மூலையு மொத்ததே.

பிரிந்துறை மகளிறும் பிலத்த டாந்தளும்
எரிந்துயிர் நடுங்கிட விரவி யின்கதிர்
அரிந்தன வாமென வசனி நாவென
விரிந்தன திசைதொறு மிசையின் மின்னெலாம்.

ஆர்த்தெழு துகள்விசும் படைத்த லானுமின்
கூர்த்தெழு வாளெனப் பிறழுங் கோட்பினும்
தார்ப்பெரும் பணையின்விண் டழங்கு தாவினும்
போர்ப்பெருங் களமெனப் பொலிந்த தம்பரே.

கல்லிடைப் படுந்துளித் துவலை காரிடு
வில்லிடைச் சரமென விசையின் வீழ்ந்தன
செல்லிடைப் பிறந்தசெங் கனலிற் சிந்தின
எல்லிடை மணிசிதர்ந் தழலியற் றல்மேல்.

மள்ளர்கண் மறுபடை மான யானைமேல்
வெள்ளிவே லெறிவன போன்ற மேகங்கள்
தள்ளருந் துளிபடத் தகர்ந்து சாய்கிரி
புள்ளிவெங் கடகரி புரள்வ போன்றவே.

பொருடரப் போயினர்ப் பிரிந்த பொய்யுடற்
குருடரு தேர்மிசை யுயிர்கொண் டேய்தலான்
மருடரு பிரிவினோய் மாசு ணங்கெடக்
கருடனைப் பொருவின கால மாரியே.

முழங்கின முறை முறை மூரி மேகநீர்
வழங்கின மிடைவன மான யானைகள்
தழங்கின பொழிமதத் திவலை தாழ்தரப்
புழுங்கின வெதிரெதிர் பொருவ போன்றவே.

விசைகொடு மாருத மதித்து வீசலால்
அசைவுறு சிறுதுளி யப்பு மாரியின்
இசைவுற வெய்வன வியைவ வாயிருந்
திசையொடு திசைசெருச் செய்த செய்தவே.

நாணிறச் சுரும்பும் வண்டு நன்மணி யணியுஞ்சாரற்
றேனுகமலர்ந்து சாய்ந்தசேயிதழ்க் காந்தட் செம்பூ
வேனிலை வென்ற தம்மா காரென வியந்து நோக்கி
மாநிலக்கிழத்திகைகண் மறித்தன போன்ற மன்னோ

ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது.

விவேக போதினி

தொ.11] காளயுக்தி௵ புரட்டாசிமீ [ப.4

பால லீலை

PRANKS OF CHILDHOOD

பெருமா உரலில் பிணிப்புண் டிருந்து, அங்
கிருமா மருதம் இருத்த இப்பிள்ளை
குருமா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார் பிருந்தவா காணீரே!
சேயிழையீர் வந்து காணீரே!

பகலில் எழும் சூரியன், இப்பூவலயத்தையும் வானுலகத்தையும் ஒருங்கே சேர்த்து மயங்கச் செய்வதை நாம் காணும்போதெல்லாம் தெய்வ மானுஷ ஸம்பந்தம் தாமாகவே மனத்திலுதிக்கலாம். அப்போது ஜடமாகிய இவ்வுலகில் அப்பெருஞ்சுடர் எவ்வாறு உதித்ததென நாம் சிந்திக்கவும் கூடும். உலகில் அது உண்மையில் உதிப்பதில்லை என்பது அறிந்தவர்க்கே தெரியும். ஆனால் அப்பெருஞ்சுடர் இவ்வுலகிற்குக் கேளாமலே செய்யும் உதவி சொல்லுந் திறத்ததன்று. அதுபோலவே காலங்கடந்த பொருள், லோக ரக்ஷணார்த்தமாகச் சிறு குழந்தை யுருக்கொண்டு தன்னிடம் கொஞ்சுவதை யறியாத யசோதை, அதைத் தன் வயிற்றுப் பிறந்த இளங்குழந்தை என எண்ணி, அதன் அளவற்ற விளையாடல்களில் ஈடுபட்டு விளங்கினள். ஆனால் மாயையால் [illegible]ப்பட்ட ஆத்மா தன் இயற்கையை யுணரமாட்டாது. அக்குழந்தையின் உண்மைப் பிரபாவத்தை அறியமாட்டாது அவள் அன்பென்னுந் திரையில் ஆழ்ந்துகிடந்தாள். எனினும் அக்குழந்தையின் பொருட்டு அவள் கொண்ட அன்பு, கடவுளிடத்துப் பரமபக்தன் கொள்ளும் அன்பே என்பதிழுக்காகாது. அக்குழந்தை எவ்விதக் குறும்பு செய்யினும் வெறுப்புக் கொள்ளாது, மலர்ந்த முகத்துடன் அதனிடம் அவள் விளங்கியது, தம்மைப் பரீட்சிக்கும் கடவுளிடம் திடச் சித்தத்துடன் பக்தி செலுத்தும் பக்தரது நிலைமையையே விளக்கும். அவ்வானந்தத் தாயின் வைபவத்திலீடுபடும் பெண்கள், மருந்துக்கும் இக்காலத்துக் கிடைப்பது அரிது என்பது பொய்யாமை யல்லவென மறுக்க எவரும் முன்வரத் தயங்குவர். தாயன்பிற்கு யசோதை லக்ஷணமாகி விளங்குபவள். அவளது லக்ஷணத்தைக் கைக்கொண்ட இந்தியப் பெண்மணிகளே ஆரியரது பெரும் புகழ்க்கெல்லாம் ஆதாரமாகி இருப்பவர். தன் மறுப்பு, கஷ்டத்தைக் கவனியாது கடமையைச் செய்தல், சீலங்கெடாது ஸமயோசிதமாக நடத்தல், வீண் டம்பங்களில் பாய்ந்து சிக்கன மழிந்து, பெற்ற குழந்தைகளைச் சதா வைதும் திட்டியும், வெருட்டியும், அவரது சொல்லமுடியா எண்ணங்களை அறியாது, தமதுடல் மேல் அளவிடமுடியா அபிமானம் கொண்டு அவற்றைச் சிறிதுங் கவனியாது புடைத்துத் துயருறுத்தும் இக்காலத்து மாதரது நாகரீகத்தைப்பற்றி விரிக்க இது இடம் அன்று. எனினும் யசோதையைத் தெய்வமாகக் கொண்டாடுபவர் எண்ணத்திற்கும் செயலிற்குமுள்ள பேதத்தை ஒருவாறு இங்கு குறித்தது தவறாகாது.

நிற்க. மனிதராகப் பிறந்தவர், தெய்வத்தின் நிலைமையை உணரத்தக்க காலங்கள் நேர்ந்தாலும் அவற்றைக் கவனியாது விளங்குவது உலகப் பிரஸித்தம். இவ்விஷயங்களிலெல்லாம் மதப்பற்று அஸ்திவாரமாக இருந்தாலன்றி மேற்கட்டும் பாரமார்த்திக மண்டபம் அழகற்று விளங்கும். அதிசயச் சம்பவங்கள் முற்காலத்தில் நடந்தன, இக்காலத்தில் நடக்கக் கண்டவரில்லை என்பது தற்காலத்துப் பொது அபிப்பிராயமெனினும், காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப, மதஸ்தாபனாசாரியர்கள் தமது மதங்களை ஸ்தாபித்த காலங்களிலெல்லாம் விசேஷமான ஸம்பவங்களை நடக்கும்படி செய்துள்ளனர் என்பதை எம்மதத்தினரும் மறுக்கார். சரித்திரமே இதற்குச் சான்றாக இருத்தல் கவனிக்கத் தக்கது. அத்தகைய ஸம்பவங்கள் நடந்தன வென்பதை நாம் ஏன் நம்பவேண்டும்? இக்கேள்விக்கு ஏட்டுச் சுரைக்காய் சிறிதும் உதவாது. அனுபவ

ஞானமே அதற்கிசைய பதிலளிக்கும். அவர்களது ஆணைக்கிணங்க அவற்றில் நம்பிக்கை அத்யாவசியகம். இல்லாவிடில், மோக்ஷ மார்க்கத்தில் தடையேற்பட்டுத் தத்தளிக்கவரும்.

எனவே, குழந்தையாக வளர்ந்த கண்ணன் தனது தெய்வீகத்தைப் பன்முறை விளக்கிக் காட்டினும், மானுஷாவஸ்தையில் கிடந்த யசோதை, அதை யுணரமுடியாது விளங்கியது அதிசயமாகாது. ஆயினும், இடையிடையே அவள் தன் குழந்தையின் அதிசய வைபவத்தையும் அற்புதச் செயலையும் கண்டு சிற்சில ஸமயங்களில் பிரமித்தனளாயினும், எம்பெருமான் தமது லீலையை வெளியிடவென்றே, அவளது அன்பின் பெருக்கை முழக்கவென அவளைத் தன் ஆடல்களில் மயக்கித் தன்வயப்படுத்திவந்தனர்.

ஒரு நாள் யசோதை தன் குழந்தையின் திருவிளையாடல்களைச் சேர்த்துப் பாடலாகப் பாடிக்கொண்டு உடம்பு முழுதும் முத்துமுத்தாக வியர்வை சொரிய, குழந்தையிடத்து அன்பாற் பால் பெருக, அணிந்திருந்த அணிஆடை எல்லாம் நெகிழத் தயிர்கடைந்துகொண்டிருந்தாள். பாலருந்தவெனக் கண்ணன் அவளருகு வெகு ஆவலுடன் வர, அவள் தன் சிரமத்தையெல்லாம் மறந்து, குழந்தையை வாரியணைத்து முத்த மிட்டுப் பாலூட்டினாள். ஆனால் எதிரில் அடுப்பின்மீது இருந்த பால் பொங்கவே, வயிறு நிரம்பாததனால் திருப்தியடையாத குழந்தையைச் சற்றே கீழ்விட்டுவிட்டு அவள் பாலைக் கவனிக்கச் சென்றாள். வெறிகொண்ட குழந்தை சீறி, உதட்டைக் கடித்துக்கொண்டு பக்கத்திலிருந்த கல்லொன்றை வீசி எறிய, அது மேல்பட தயிர்ப்பானை உடைந்தது. அதிலிருந்து வெளிவந்த வெண்ணையை எடுத்துக்கொண்டு, ஓடிப்போய் ஒரு மூலையில் உட்கார்ந்து, தனது இருகண்களையும் கெட்டியாக மூடிக்கொண்டு தலையை யசைத்து யசைத்து அவ்வெண்ணையை வாயிலிட்டு அக்குழந்தை தன் சிறு விரல்களையுந் திணித்து சுவைத்துக்கொண்டிருந்தது. யசோதை வந்ததும் தயிர்ப்பானை யுடைந்திருக்கக் கண்டாளேனும், குழந்தையை யங்கு காணவில்லை.

யசோதைக்குக் கோபமூண்டது. குழந்தையைக் கண்டு பிடித்தாள்; மர உரலின்மேல் அது உட்கார்ந்துகொண்டு வெண்ணெயுண்பதைப் பார்த்தாள்; சிறு கழியொன்றை எடுத்துக்கொண்டு அதை வெருட்டவென வந்தினள். யோகியர்களாலும் காணமுடியா அக்குழந்தை நடுநடுங்கியதுபோல அபிநயித்து அவ்விடத்தைவிட்டோடத் தலைப்பட்டது. யசோதையும் அதைத் துறத்திக்கொண்டு சென்றாள். கன்னக் குறவன்போல மிரள மிரள விழிக்கும் அக்குழந்தையை அவள் வெருட்டினாள்; அதன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதட்டினாள்; ஆனால் அதை அடக்க அவள் மனம் ஒப்பவில்லை; எனினும் அவள் கோபமுந் தணியவில்லை, எனவே அவள் அதைக் கயிறுகொண்டு அவ்வுரலில் கட்ட எண்ணிக் கயிற்றைத் தேடினாள்; அவ்வளவிடமுடியாப் பரம்பொருளை இலேசாகக் கயிற்றால் கட்ட எண்ணங்கொண்டு அவள் கொண்டுவந்த கயிறு, இரண்டங்குலம் குறைவாகக் காணப்பட்டது. அதனுடன் வேறு கயிற்றை முடிந்தபோதும், அதுவும் இரண்டங்குலம் குறைந்தது. எவ்வளவு கயிற்றை மேல்மேல் சேர்த்தாலும், அக்குழந்தையைக் கட்டயத்தனித்தால் இரண்டங்குலம் குறைந்துகொண்டேயிருந்தது. அவள் ஆச்சரியமும், அச்சமும், கவலையும் கொண்டாள். பரம்பொருளைச் சிறு கயிற்றால் கட்டிவிடுவது எளிதா? எனினும், தன் தாயின் கஷ்டத்திலீடுபட்ட அக்குழந்தை அவளிடம் கருணைகொண்டு தன்னுருவைச் சிறிதாக்கிக்கொள்ள, ஸாதாரணக் குழந்தையைக் கட்டுவதுபோல் ஒரு கனமான உரலில் கட்டிவிட்டுத் தனது வேலையைப் பார்க்க யசோதை சென்றாள்.

கட்டுண்டிருந்த குழந்தையும், வெறுப்புக்கொண்டதுபோலப் பாசாங்கு செய்துகொண்டிருந்தது. தானே கட்டுண்டு தவிக்கும் அக்குழந்தையின்செயலை என்னெனச்சொல்வது? தம்மைப் புகழ்ந்து வழிபடுவாரிடம் பந்தப்பட்டு விளங்குவது போலவே அவர் அவ்வுரலில் பிணியுண்டு கிடந்தார். எனினும் தம்மை ஒருவரும் கவனியாத ஸமயம் பார்த்து மெதுவாக அவ்வுரலை யிழுத்துக்கொண்டு பக்கத்திலிருந்த இரு மரங்களுக்கும் இடையில் அக்குழந்தை சென்றது. அம்மரங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு வளர்ந்திருந்தன. அவற்றின் இடையிலிருந்த சந்தொன்றில்

அவ்வுரல் சிக்கிக்கொள்ள, வெகுமுறட்டுத்தனமாக அக்குழந்தை அதையிழுத்தது. அவ்விசையைத் தாங்காது, அம்மரங்கள் முறிந்து படீரென விழுந்தன. இடிமுழக்கம்போன்ற ஒலியுடன் அம்மரங்கள் விழுந்த சப்தம் கோகுலம் முழுதையுங் கவிந்தது. யசோதை நடுநடுங்கினள்; குழந்தையை வந்து பார்த்தனள். கட்டியவிடத்தில் அது இருக்கவில்லை. அவள் என் செய்வாள்?

மரங்கள் விழுந்த சப்தத்தைக் கேட்டு ஓடிவந்த நந்தன் முதலியோர், அங்கு யாமளார்ஜுனமென்னும் அவ்விரண்டு மரங்கள் வேரற்று வீழ்ந்து கிடப்பதைக் கண்டனர்; அவை அடியற்று விழக் காரணமென்னவெனக் கவலைகொண்டனர்; பக்கத்திருந்த ஆயச்சிறுவரைக் கேட்டனர். நிற்க, அங்குவந்த யசோதை குழந்தையைக் காணாது மரத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டதோ எனச் சிந்தை நொந்தனள்; உள்ளம் நடுங்கினள். ஆயச்சிறுவர் "அக்குழந்தை உரலை யிழுத்துக்கொண்டு வந்தது; அம்மரங்களின் இடையே அது குறுக்கிட, அதை என்ன முறட்டுத்தனமாக அது இழுத்தது! இழுத்த வேகத்தில் இம்மரங்கள் கிடுகிடுத்து, அலைபாய்ந்து, அடிமுறிந்து கீழ் வீழ்ந்தன. இது அதிசயத்தில் அதிசயம்" என்றார். ஆனால் நந்தனாதியர் அதை நம்பவில்லை. மரத்தை ஒரு குழந்தை வேரோடு கிளப்புவதாவதெனஅவர் ஸந்தேஹங்கொண்டனர். மேலும் அச்சிறுவர் "இம்மரங்கள் விழுந்ததும், அவற்றுள்ளிருந்து புருஷர் இருவர் தோன்றி நல்ல பாடல்களைப் பாடிக்கொண்டே மறைந்தனர்" எனவும் சொல்ல அவரது மொழிகளை யாரும் நம்பமுடியவில்லை. இதுவே மனித லக்ஷணம் போலும்!

ஆனால் அச்சமயம் சற்றுத் திரும்பிப் பார்த்ததும், நந்தன் தன் குழந்தை உரலில் கட்டிய விதமே அம்மரத்திடைத் தவழ்வதைக் கண்டான்; களிப்புண்டான்; அதன் கட்டை அவிழ்த்துக் குழந்தையை எடுத்து மார்போடணைத்து மாறிமாறி முத்த மரும்பினான். அத்தெய்வக் குழந்தையும் அதற்கிணையத் தனது இனிய ஸ்வரத்தில் மழலை யரும்பி, குழலிசையென்ன அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. அதுவரையுங் கண்டு ஒன்றுந் தோன்றாது நின்ற யசோதை, மயக்கமொழிந்து தன் குழந்தையை எடுத்து வாரியணைத்து வெளியிட முடியாத அன்பிற்காளாகி, தன் கண்களில் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கினள்; உள்ளம் நெக்குநெக் குருகினள். யாதவர்களோ இம்மர விஷயமும் கம்ஸனது மாயையால் ஏற்பட்ட கோளென எண்ணி, கடவுட் குழந்தைக்குக் கெடுதியுண்டாகாதபடி ரக்ஷாபந்தனங்கள் செய்தனர்.

நிற்க, அவ்வாயச் சிறுவர் சொன்னது உண்மையன்றோ? அம்மரங்கள் முறிந்ததும் ஏன் இரண்டு புருஷர் தோன்றினர்? புருஷர் மரமாக ஏன் இருக்கவேண்டும்? அதற்கு ஒன்றுதான் பதில்; அது செல்வச் செருக்கு. குபேரனது குமாரர்களாகிய, நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் இருவரும், கைலாஸகிரிச் சார்பிலிருந்த உய்யானத்தில், மனைவியருடன் கங்கையாற்றில் ஜலக்ரீடை செய்யும் ஸமயம், அங்கு நாரதர் வரக்கண்டதும், மனைவியர் வெட்கித் தமது உடையை அணிய, நளகூபரனும், மணிக்ரீவனும் தமது குடிகாம வெறியால் மயங்கி நக்கினமாகவே கிடந்தனர். மானமற்று, சிற்றின்பத்தில் மூழ்கி, தெய்வநிலைமாறிய அவ்விருவரும், நற்கதியடையவெண்ணி, இம்மரங்களாகும்படி அவர் சபித்தனர். அதற்குள் தமது நிலையை அடைந்த அவ்விருவரும் முனிவரை வணங்கினர்; வாழ்த்தினர்; தம்மைக் காக்கும்படி வேண்டினர். அவரிடத்து இரக்கங்கொண்ட நாரதர், குழந்தைக் கிருஷ்ணனால் நற்கதியடையும்படி அனுக்ரஹித்துச் சென்றனர். அது முதல் அவர் கோகுலத்தில் யாமளார்ஜுனமென்னு மரங்களாகக் கண்ணனது வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர்.

உரலை யிழுத்து, தமது தாவர நிலையை முறித்து, கருணையாண்ட அக்குழந்தையை அவர் வாழ்த்தியதும் உண்மையே; ஆயச் சிறுவர் கூறியதும் உண்மைதான். மனிதனது குறுகிய திருஷ்டியே ஸந்தேஹத்திற் கிடந்தது. ஆனால் பக்தபராதீனனாகிய எம்பெருமான் பக்தர்களுடைய வாக்கிடைக் கொண்ட அன்பினால் நாரதரது மொழியைக் கௌரவிக்கவெனவே மருதிடைத் தவழ்ந்தது என்பதை யாவரும் உணரத்தக்கது. அதுவே தெய்வமானுஷபேதம். தன்னைக் கணிசியாது,

தன்னை உண்மையுடன் நேசித்தடைந்தவரைக் காப்பதே கடவுளின் விரதம். அடைந்தாரது நிலையைக் கணிசியாது, தன் நலத்தையே கருதுவது மானுஷவியற்கை யன்றோ?

"ஹே! கண்ணா! முகுந்தா! போகமுடையாய்! பரமபுருஷன் நீயன்றே! ஆக்கி, அளித்து அழிக்கும் பொருள் நீயல்லவா!

> மேவரு ஞானா நந்த வெள்ளமாய் விதித்தோனாகி
> மூவரு மாகி யந்த மூவர்க்குள் முதல்வனாகி
> யாவரும்யாவுமாகி யிறைஞ்சுவாரிறைஞ்சப்பட்டல்
> தேவரு மாகி

நின்றதும் நீயே யன்றோ? பிரகிருதியைக் கடந்த பொருளே! யாம் உம் அடைக்கலம். அநந்த குணங்களுக்கு மிருப்பிடம் நீயென்றால், யாம் எவ்வாறும்மை யறிவது? உடலற்ற பொருளே எனினும், ஸர்வ பூதத்துள்ளும் உறவுகலந்துவிளங்கும் உமக்கு நாமெவ்வளவு? அப்பரம முனிவரது அனுக்ரஹத்தினாலன்றே யாம் மூலமுதற்பொருளைக் காணும் பாக்கியமடைந்தோம்" என்று அக்குபேர குமாரர்கள் வாயாரத் துதித்ததற் கிணங்கப் பெரியாரும்

> வாயவனை யல்லது வாழ்த்தாது; கை யுலகம்
> தாயவனை யல்லது தான்தொழா—பேய்முலைநஞ்
> சூணாக உண்டான் உருவொரு பேரல்லால்
> காணாகண் கேளா செவி

என முறையிட்டதைக் கவனிப்பதே அறிவின் பெருமைக் கியல்பாகு மல்லாது, கேவலம் பௌதிகங்களில் பாய்ந்து, நாகரீகமென்னும் பேய்வாயிடம் வீழ்ந்து மயங்கி, தன்னிலையுணராது, செல்வக்கள்ளின் பித்திற் சுழன்று, கண்மயங்கி, உண்மை நிலையை உணரமாட்டாது, பின் துக்கமடைந்து ஏங்கி விழிப்பது அன்றெனில் மறுப்பார் எவரோ?

செட்டிபணியம் வீரவல்லி அரங்காசாரியர், ஸி. ஐ. ஈ.

C. V. RANGA ACHARLU, C. I. E.

> "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று உணர்வூட்டிய பெரியோர், எக்காரியத்தில் தலையிட்டாலும், அதிலுள்ள குணதோஷங்களை ஆராய்ந்தறிந்து, உண்மையையே கண்டு, அதை மேலேற்று, அவ்விஷயமாகத் தம்மைப் பிறர் நகைமொழி அல்லது வசைமொழியால் என்ன பேசுவரென வெண்ணாது நடப்பதே அறிவின் லக்ஷணம். அத்தகைய அறிவாளிகள் பொது ஜனங்களுக்கு வாழ்க்கை வழியைக் காட்டி விளக்குபவராவர். அத்தகையாரது மனோதிடம் முதலியவற்றை அறிதல் ஒருநாளும் வீண்போகாது. கற்றலிற் கேட்டலே நன்றெனப் பெரியாருங் கூறியுள்ளதை நாம் கவனிப்பது தவறாகாது.

மேற்சொன்னவழியை யனுஸரித்த செட்டிபணியம் வீரவல்லி அரங்காசாரியர் செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சிறு கிராமத்தில் 1831-ல் பிறந்தவர். இவர் தந்தை செட்டிபணியம் இராகவாசாரியாரவர்கள், செங்கற்பட்டு ஜில்லா கச்சேரியில் குமாஸ்தாவாக இருந்தவர். அரங்காசாரியர் சிறு குழந்தையாயிருந்தபோது தாயுடன் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அப்போது வண்டி குடை கவிழ்ந்து முறிவதற்குள் தெய்வாதீனமாகக் குழந்தை தாய் மடியிலிருந்து எடுக்கப்பெற்றுப் பிழைத்தது. அவர் பிறந்தகாலத்து அரிஷ்ட ஜாதகமாக ஜோஸியர்கள் கவலை கொண்டதற்கு ஒருவாறு ஸமாதானம் காட்டும் போலும்! அல்ப வரும்படியுடன், தம் பிள்ளைக்கு உயர்தரமான ஆங்கிலப் படிப்பைக் கொடுக்க வேண்டுமென்ற ஆவல்கொண்டு, வெகு சிக்கனமாகப் பிழைத்துவந்தபோதிலும், தம்மால் அவ்வாறு செய்ய முடியாமையை இராகவாசாரியர் எண்ணி வருந்தியகாலத்து, தெய்வாதீனமாக அரங்காசாரியரது சிற்றப்பன்மார்களுள் ஒருவர் அப்போது இருந்தாற்போல விருந்து இறந்தகாலத்து, ஆசாரியரது படிப்பு விஷயமாக ரூ. 800 ஆஸ்தி எழுதிவைத்துப் போக, அதைக்கொண்டு தம் மகனுக்கு படிப்பை விருத்திசெய்யவேண்டி, சிறுவனைப் பள்ளி சேரச் சென்னைக்கு அனுப்பினார். மனச்சமாதானம் இல்லாமல், ஒருவாறு பிள்ளையின் நன்மையை உத்தேசித்து அநேக கஷ்டங்களுக்குட்பட்டுப் பட்டணம் அனுப்பியபோதிலும்,

அப்போது சென்னையில் முதல் இந்திய மாஜிஸ்ட்ரேட்பதவியை வகித்திருந்த வெம்பாக்கம் இராகவாசாரியாரவர்கள் அச்சிறுவனது வித்யா விஷயமாகச் சிரமத்தை ஏற்று, தந்தையின் கவலையை ஒருவாறு குறைத்தனர்.

பள்ளிக்கூடத்தில் அரங்காசாரியர் வெகு புத்திசாலியாக விளங்கினர். மேலும், அச் சின்னிலேயே அவர்க்கு அதி சூக்ஷமமான விஷயங்களில் கவனம் சென்றது பாராட்டத்தக்கது. வயதிலும் யுக்தியிலும் சிறந்த தமது வயது முதிர்ந்த உறவினர்கள் சதுரங்கம் விளையாடும் காலத்தில், அருகிலிருந்து யோசனைமிகுந்த அவ்வாட்டத்தைக் கண். கொட்டாமல் அவர் பார்த்துக்கொண்டிருப்பார். ஆடுபவர்கள் ஆட்ட நடுவில் ஆடத்தெரியாது மயங்கும் காலங்களில் பக்கத்திலிருக்கும் சிறுவனை என்ன செய்யலாமென யோசனை கேட்பது வழக்கம். அதற்கிணங்க, ஆசாரியரும் சரியான வழியைச் சொல்லி அவர்களை உத்ஸாகப்படுத்துவர். ஆசாரியர், புஸ்தகங்களில் அதிகமாகப் புத்திசெலுத்தியவர் அல்லர். பள்ளியில் படித்தபோது ஆட்டத்திலேயே அவருக்குக் கவனம். என்றாலும், படிப்பை அலக்ஷயம் செய்தவரல்லர்; வகுப்பில் மற்றெல்லோரைக் காட்டிலும் மேதாவியாக விளங்கியவர். அவரது புத்திசாலித்தனத்தைக் கண்டு அன்புகொண்ட பிரியஞான முதலியாரிடத்து நம்மவர் கடைசிநாள் வரையும் அன்பு பாராட்டி, பல ஸமயங்களில் பண உதவியும் செய்து, அவரிடம் தாம்கொண்ட மரியாதையை வெளியிட்டதல்லாமல், சென்னை, மைசூர் முதலிய இடங்களில் அவரை லக்ஷண குருவாகப் புகழ்ந்திருக்கிறார்.

சில நாளானதும், பச்சையப்பன் கல்லூரியிலிருந்து அவர் தற்காலம் ராஜாங்கக் கலாசாலையாக விளங்கும் அக்காலத்துச் சென்னை ஹைஸ்கூலில் சேர, அவரது புத்திமதி யூகங்களைக்கண்ட தென்இந்திய வித்யாபிமானியான **பேடன் பௌவல்** துரையவர்கள் மாதவாரி ரூ. 14 உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனர். அப்பள்ளிக்கூடத்தில் **ப்ரோபிஷியன்ட்** பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறி 1849ஹு அதிலிருந்து வெளி ஏறினர்.

பள்ளியில் அவர்க்குண்டான மதிப்பும் அவரது புத்திகூர்மையைப்பற்றிய பெருமையும், சென்னைஜில்லா கச்சேரித்தலைவரான **எல்லிஸ்** துரையை அக்கச்சேரியில் ஒரு குமாஸ்தாவாக அவரை உடனே நியமிக்கும்படி செய்தன. ஆனால் அக்கச்சேரியில் காயமான வேலையில் அமர்த்தப்படும் முன்னரே, செங்கற்பட்டு ஜில்லா கச்சேரியில் பக்கா குமாஸ்தாவாக அவர் ஏற்படுத்தப்பட்டனர். அங்கிருந்து ஹெட் குமாஸ்தாவாகச் சேலத்திற்கு மாற்றப்பெற்ற பொழுது அவர் "ரிவினியூ இலாகாவில் லஞ்சமும் துஷ்ட விருத்தியும்", "செங்கற்பட்டு, தஞ்சாவூர் ஜில்லா மிராசி சுதந்தரங்கள்" என்னும் இரண்டு துண்டு புஸ்தகங்களை எழுதி வெளியிட்டனர். இதற்குப் பிறகு சைதாப்பேட்டை தாசில்தாராக இரண்டு வருஷமிருந்து, நெல்லூர் ஹுஸூர் சிரஸ்தேதாராக மாற்றப்பெற்று, ஹெட் சிரஸ்தேதார் பதவிக்குச் சீக்கிரத்தில் உயர்த்தப் பெற்றனர். 1898-ம் ஹு சென்னைக்சென்று புதிதாக ஏற்படுத்தப்பெற்ற இனும் கமிஷனின் அக்கிராசனாதிபதியாகிய **ஜி. என். டேய்லர்** துரையவர்களது அந்தரங்க உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டு, தமது ஒழுக்கத்தாலும், கெட்டிக்காரத்தனத்தாலும் அக்கிராசனாதிபதியின் அன்பிற்குப் பாத்திரரானார்.

இனும் கமிஷன் வேலை முடிந்ததும், டெய்லர் துரையவர்களைச் சென்னை கவர்ன்மெண்டார், இந்திய ரயில்வேக்களின் நடவடிக்கைகளைப்பற்றி விசாரித்து 'ரிபோர்ட்' செய்யும்படியாக நியமித்தகாலத்து, அரங்காசாரியரையே இவ்விஷயத்திலும் தமக்கு உதவிபுரியும்படியாக அவர் பெற்றுக்கொண்டனர். தம்மைப் பற்றிப் பேரன்புகொண்டு மதித்து ஏற்ற துரையின் விருப்பத்துக்குச் சிறிதும் மாறாது ஆசாரியர் அவர்க்கு இணங்கி, கடல் மார்க்கமாக அவருடன் கல்கத்தாவிற்கு, தம் உறவினருள் சிலர் செய்த தடையையும் கவனியாது சென்றனர்; மேலும் உத்தியோக முறைமையில் டெய்லர் துரையவர்கள் சென்றவிடமெல்லாம் அவருடன் சென்று தமது சமத்காரத்தையும், அபார புத்தியையும், தளரா வாய்மை ஒழுங்கையும் அடிக்கடி புது புது வழிகளில் வெளியிட்டு, தமது மேலதிகாரியின் அளவற்ற அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரரானார். இவ்வேலை முடிந்ததும் அரங்காசாரியர் சென்னைக்குத் திரும்பினர்.

நிற்க, ஆசாரியரது குணவிசேஷத்தை டெய்லர் துரையவர்கள் காலாகாலங்களில் புகழ்வதோடு நில்லாமல், தாம் இந்திய ராஜப் பிரதிநிதிச் சபையின் சென்னை அங்கத்தினராக இருந்தகாலத்து, ஆசாரியரது அபிப்பிராயங்களை அடிக்கடி கேட்டு அவற்றைச் சபையில் சவிஸ்தாரமாகச் சொல்லி ஏற்கும்படி செய்தனரென்றால், அது அரங்காசாரியரது பெருமைக்கு இழுக்காகாது.

இதற்குள், ஆசாரியர் மதராஸ் ரயில்வே கம்பெனியின் கமிஷனராக நியமிக்கப்பட்டு, 1864-ம்ஹு கவர்ன்மெண்டில் நாணய இலாகா ஏற்படுத்தப்பட்டபோது, கள்ளிக்கோட்டை கஜானா டிப்டி கலெக்டராக அமர்த்தப்பட்டார்.

நிற்க, மைசூர் சமஸ்தானத் தலைமையைப் பற்றிப் பிரசாரங்கள் நடந்து, அரசுரிமையிலிருந்து நீக்கப்பெற்ற கிருஷ்ணராஜ உடையாரது ஸ்வீகாரபுத்திரன், மஹாராஜாவாகும்படி பிரிடிஷ் ராஜாங்கத்தாரால் ஏற்கப்பெற்று, அம்மஹாராஜா யுக்த வயதாகிய பதினெட்டைக் கடந்ததும் அவரிடம் அரசுரிமையை ஒப்பிக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. மேலும் இம்மாதிரியான விஷயங்களில் அடிக்கடி ராஜாங்கத்தார் அநாவசியமாக நுழையாதிருக்கும்பொருட்டு ஷ இளவரசர் ஆங்கிலக் கல்வியின் பயனையும், அரசுரிமையைஏற்கத்தக்க பயிற்சியையும் பெறவேண்டுமென்றும் தீர்மானித்திருந்தனர். ஐம்பது லக்ஷம் ஜனங்களை ஆளத்தகுந்த அரசர்க்கு முறையான பயிற்சியைத் தரக்கூடிய மஹானைப் பொறுக்கியெடுக்கும்படியாக, அக்காலத்து, பிரிடிஷ் ராஜாங்கத்திற்காக மைசூர் ராஜாங்கத்தை நிர்வகித்துவந்த **பௌரிங்** துரையவர்கள், சென்னை கவர்ன்மெண்டில் அதிக மதிப்புடன் பாராட்டப்பட்ட எல்லிஸ்துரையவர்களுக்கு எழுதியிருந்தனர்; மைசூர் அரண்மனையைப் பொறுத்து ஆளத்தக்க நம்பிக்கையுள்ள சென்னைவாசி ஒருவரைத் தந்துதவும்படி வேண்டினர். இப்பதவிக்கு அரங்காசாரியரை அவர் சிபார்சுசெய்ததற்கிணங்க, ஆசாரியரும் 1868ஹு மைசூர் தேச ஸேவையை ஏற்று, தமது வேலையுடன் இராணுவ உத்தியோகஸ்தராகிய மேஜர் எலியட் துரையவர்களுக்கு அவ்வரண்மனையிலுள்ள ஸாமான்கள், விலையுயர்ந்த ஆபரணங்கள் இவை முதலியவற்றின் விவரணப்பட்டியும், அவற்றின் மதிப்பும், அவற்றை ஜாக்கிரதையாக சேமித்துவைக்கத் தகுந்த ஏற்பாடுகளைப்பற்றியும் உதவிசெய்தனர்.

இதன் பிறகு ஆசாரியர் அரண்மனை விஷயங்களில் ஏற்பட்ட குழப்பங்களை மாற்ற கவனங்கொண்டு அரண்மனைக்குள் நடந்துவந்த துர்வழக்கங்களைத் தடுத்து, வீணே அவ்விடத்துத் தங்கி அரண்மனைச் சொத்தை நாசஞ்செய்துவந்த வீணர்களை அப்புறப்படுத்தி, அக்காலத்து இளவரசர்க்குப் பராமரிப்புக்காரரும் உபாத்தியாயருமாக விளங்கிவந்த **கர்நல் மாலிஸன்** என்பவரது விசுவாஸத்திற்கு ஆளாயினர்.

நிற்க, ஆசாரியர் தமது பதவியிலிருந்து ஏற்பட்ட ஞானத்தை வீண்செய்யாது, 1874-ம் வருஷத்தில் "பிரிடிஷாரது மைசூர் ஆட்சி" என்னும் நூலை லண்டன்மா நகரத்தில் வெளியிட்டனர். ஆனால் அதன் முன்னுரையில் அவர் சொல்லியவண்ணம் 'வருங்கால ஆட்சி'யைப்பற்றிய நூல் வெளிவராமைக்கு, அம்முறைமையைத் தாமே ஆளும்படியாக நேர்ந்ததே. காரணம் போலும்! மேற் சொன்ன நூலை வெளியிட்டதும், ஆசாரியர் ஸாமான்யரல்லர் என மைசூர் நிர்வாகத்தினரால் மதிக்கப்பட்டு, அப்போது மைசூர் பிரதான கமிஷனராக விருந்த கார்டன் துரையவர்கள், அவரைத் தமது ரிவினியூ காரியதரிசியாக ஏற்று, பல சீர்திருத்தங்களை அவரது அபிப்பிராயத்துக்கு இணங்கிச் செய்தனர். அவை: (1) மூன்று ஐரோப்பிய கமிஷனர்களது பதவியை எடுத்துவிட்டு அவர்கள் செய்து வந்த அதே வேலைக்கு, இந்திய காரியதரிசியும், ரிவினியூ கமிஷனருமான ஒருவரை நியமித்தது; (2) டிப்டி கமிஷனர் சம்பளம் ரூ. 1,000 - 1,666 த்திலிருந்து ரூ. 700-1,000-க்குக் குறைக்கப்பட்டது; (3) இருபத்தேழு உதவி கமிஷனர் பதவிகளில், எட்டை எடுத்துவிட்டுப் பத்தொன்பது பதவிகளிலும் பெருந்தொகைச் சம்பளம் வாங்கி வந்த ஐரோப்பியர்களுக்குப் பதிலாகச் சாதாரண சம்பளத்தையுடைய இந்தியர்களை ஏற்படுத்தியது; (4) டிப்டி கமிஷனருள் நால்வர் தவிர

மற்று எல்லோருக்கும் பதிலாகத் திறமைவாய்ந்த இந்தியர்களை நியமித்தது; (5) இவ்விதமே மற்றெல்லா இலாகாக்களிலும் முக்கியமாக வித்தியா, காடு, பொதுவேலை இலாகாக்களில், அதிகமான சம்பளங்கள் பெற்றுவந்த ஐரோப்பியருக்குப் பதிலாக நிர்வாகத் திறமை வாய்ந்த இந்தியர்களை ஏற்படுத்தியது. இவ்வாறு அநாவசியமான அதிகச்செலவைக்குறைத்து நியாயமான செலவை ஏற்படுத்தி அரசுரிமையின் நன்மையை உத்தேசித்துச் செய்த ஆசாரியரது சீர்திருத்தங்களினால், அம்முதல் வருஷத்திலேயே செலவு திட்டத்தில் குறைவு இரண்டரைலக்ஷம் அவர் காட்டியதற்குக் கார்டன் துரையவர்களது கூட்டுறவும், மேற்பார்வையும் காரணமாகும். இவ்விஷயமாக ஆசாரியர் எடுத்துக்கொண்டுழைத்த சிரமத்தை மஹாராணியார் மதித்து 1880-ம் ௵ அவர்க்கு ஸி. ஐ. ஈ. (இந்திய ஸம்ராடநேசன் என்னும் பட்டம் அளித்தனர்.

ஆனால் ஆசாரியரது அபார, புத்தியிடம் அசூயை கொண்ட மைசூரார் சிலர், வெளிப்பிரசுரங்களில் 1872-1873 வருஷங்களில் அரண்மனையிலிருந்து விலையுயர்ந்த ஆபரணங்கள் பிறரறியாது அபகரிக்கப்பட்டனவென்று முதல் முதல் 1880-ல் வெளியிட்டு, அக்களவாடலுக்கு அக்காலத்து அரண்மனை உத்தியோகஸ்தராகவிருந்த ஆசாரியரே உத்தரவாதமாயிருக்கவேண்டுமென்றும் புகாரிட்டனர். இப்புகார் உண்மையற்றதாயிருந்தபோதிலும் அச்சமயம் மிக்க கலக்கத்தையுண்டாக்கக்கூடிய விஷயமாகவே கவனிக்கப்பட்டது. தமது முகாந்திரமாக ஆசாரியர் மைசூர் ராஜ ஸேவைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதால், தாம் இவ்விஷயமாக மைசூர் பொது ஜனங்களுக்கு ஸமாதானம் சொல்லவேண்டியது தமது கடமையென்றெண்ணி, தமது உத்தியோக முறைமையில் எழுதிய கடிதமொன்றில், ஆசாரியரைத் தருவித்ததற்குத் தாம் காரண பூதராயிருந்த போதிலும், திவான் பதவியில் அவரை நியமித்ததற்குத் தாம் உத்தரவாதமல்லவென்று எல்லிஸ் துரையவர்கள் தமது பொறுப்பை வெளியிட்டனர். இதனால் அவர் ஆசாரியரிடம் வெறுப்புக் கொண்டனரென்று எண்ணலாகாது. இதற்கு ஆசாரியர் காலகதியடைந்தபோது மேற்படி துரையவர்கள் வெளியிட்ட அளவு கடந்த துக்க விளக்கமே சான்றாகும். நிற்க, மேற்சொன்ன பிரமாதப்படுத்தப்பட்டகளவு, கணக்கெழுதுவதில் ஏற்பட்ட அற்பப் பிழையினால் உண்டான விபரீதமென அவ்விஷயத்தை விசாரிக்கும்படி நியமிக்கப்பெற்ற வில்ஸன் துரை முதலியோர் வெளியிட்டதல்லாமல், நெருப்பிற்பட்ட தங்கமென ஆசாரியர் உத்தம குணம் வாய்ந்தவர் எனவும் வெளியிட்டனர். எதிர்பாராமல் வரும் கெடுதி, நன்மையே பயக்கும் என்றவாறு, அவ்விசாரணை முடிந்ததும் 1881-௵ மார்ச்மீ 25-உ ஆசாரியர் மைசூர் திவானாக மரியாதை செய்யப்பட்டனர்.

மைசூர் நிர்வாகத்தை அரங்காசாரியர் சீர்படுத்திய விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டுமானால், அவ்வரசுரிமைஉடையார் வம்சத்தாருக்கு அளிக்கப்படுவதன்முன் அப்பிராந்தியம், வருமான, விவசாய, தொழில்வகையாக்களில் எம்மாதிரி விளங்கிற்றென நாம் கவனிப்பது இன்றியமையாததாகும். அக்காலத்தில் எல்லா இலாகாக்களிலும்மட்டுமிஞ்சிய செலவும், அளவு கடந்த சிப்பந்திகளும், இராஜாங்கத்தின் வருமானங்களை முற்றும் கவர்ந்ததல்லாமல், தாது (1877-)வருஷத்திய பெரும் பஞ்சம் இந்தியாவில் எந்தப் பாகத்தைக் காட்டிலும் அங்கு மிகக் கடுமையாக வாட்டியதால் கஜானாவில் பணப்பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. மற்று, லக்ஷக்கணக்கான ஜனங்கள் பஞ்சக் கொடுமையைத்தாங்கமுடியாமல்இறந்ததல்லாமல், அவ்வாறு இறந்தவருள் தம் கைத்தொழிலாலேயே நாடோறும் பிழைத்துவந்தவரே ஆனபடியாலும் மேற்படி பஞ்சம் அந்நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தியைப் பல வருஷங்கள் வரை தலையெடுக்கவொட்டாமல் செய்துவிட்டது. உணவுப்பொருள்களுக்காக ஜனங்களுக்கேற்பட்ட கஷ்டத்தை நிவர்த்தி செய்ய, இராஜாங்கத்திலிருந்து 150-லக்ஷம் செலவிடவேண்டியிருந்தது. அரங்காசாரியர் தாமேற்படுத்திய சீர்திருத்தங்களால் கிடைத்த செலவுக் குறைவும், இக்காரணத்தால் தலையெடுத்துக்காட்ட முடியாமற் போய்விட்டது. எனினும் தேச க்ஷேமத்தை உத்தேசித்து, செலவைக் கவனியாது சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டி வந்தன. இராஜாங்கத்தால் உடை

யார் வம்சத்தார் மீண்டும் அரசாட்சியைக் கைக்கொள்ளச் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி இந்திய இராஜாங்கத்தாருக்குக் கொடுக்கவேண்டிய கடன் எண்பது லக்ஷத்திற்கு வருஷாவருஷம் நான்கு லக்ஷம் வட்டி கட்டவேண்டி வந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் திவானாக விளங்க அடங்கா உத்ஸாகங்கொண்ட எவனும் நடுங்குவனென்பது நிச்சயம். எனினும், அச்சமயங்களில் ஆசாரியருக்குத் திவான் வேலையில் உதவி செய்தது, சிறுவராக இருப்பினும் புத்திகூர்மைகொண்டு விளங்கிய மஹாராஜாவினது ஆழ்ந்துணரும் சக்தியும் கூட்டுறவுமே யாகும்.

இரண்டு வருஷங்களுக்கு முன்னர், சபைகூடி மைசூர் கமிஷனால் தீர்மானிக்கப்பட்ட சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவர, முதல் முதல் ஆசாரியர் பிரயத்தனப்பட்டனர். ஹாஸன் சித்திரதுர்க்கம் ஜில்லாக்கள் ஸிவில், கிரிமினல் நிர்வாகங்களுக்கு ஒன்றாக்கப்பட்டன. ஒன்பது தாலூக்காக்கள் உப அமீல்தார் ஸ்தானங்களாக மாற்றப்பெற்றன. நான்கு முனிசீப் கோர்ட்டுகளும், மூன்று ஸப் கோர்ட்டுகளும் ஜில்லா ஜெயில்களில் எட்டில் ஐந்தும், எடுபட்டுப் போயின. முஸாபரி பங்களாக்களின் சிப்பந்திகள் ஒழிக்கப்பட்டன. இவ்வாறு நியாய இலாகாவில் செய்த திருத்தங்களன்றி, காட்டு இலாகாவிலும் சில துஷ்கிருத்தியங்களையும், அநாதரணையையும் கவனித்து, தொன்று தொட்டுச் சந்தனக் காடுகளிலிருந்து கிடைத்த சந்தனக் கட்டைகளை அரண்மனைக்குள்ளேயே சேமித்து வீண் செய்யும் வழக்கத்தைக் கண்டித்து, அளவுக்கு மிஞ்சி மிகுந்தவற்றை விற்பனைக்குக் கொண்டு வரும்படியான ஏற்பாடுகளைச் செய்தனர். மைசூர் வாசனைத் திரவ்யங்கள் அப்பிராந்தியத்திலிருந்து வெளிப்பிராந்தியங்களுக்கு உதவ ஆசாரியரே பொறுப்பேற்றனரெனச் சொல்லலாம். அதனால் சமஸ்தானத்திற்கு அளவுகடந்த லாபத்துக்கு இடமேற்பட்டது.

இவ்வெல்லாச் சீர்திருத்தங்களைக் காட்டிலும், பொது ஜனங்களுக்காக அவர் செய்த பேருதவி, அநேக நாளாக அச்சமஸ்தானத்தில் போடவேண்டுமென்று பேசிவந்த ரயில் பாதையை இராஜாங்க உதவியினால் முன்பணம் கொடுத்துப் போட்டுவைத்ததே யாகும். இதனால் மூலைக்கு மூலை போக்கு வரத்து ஏற்பட்டு, வியாபாரம் செழித்து, விவசாயத்திற்கும் ஸ்தலத் தொழில்களுக்கும் உத்வேகம் உண்டாகியது. எனினும், மைசூரார் விவசாய விஷயத்தில் கவனமற்று விளங்குவதைக் கண்டு அந்நிலைமையைப் போக்க, பல முயற்சிகள் செய்தனர். இவ்வாறு பல சீர்திருத்தங்களை அவர் செய்தனரேனும், அச்சீர்திருத்தங்களிற்கு வேண்டிய வருமானத்தைப் பெறும் பொருட்டு விதித்த வரியை ஜனங்கள் தலைச்சுமையாக எண்ணாமல் ஸந்தோஷத்துடன் கொடுக்கும்படியாக விதித்தது யாவரும் பாராட்டத்தக்கது.

மேலும் சமஸ்தானத்து ஏழ்மையான ஸ்திதியை உத்தேசித்து, அதன் வருமானத்திலிருந்து எவ்வாறு உடன்படிக்கைப்படி இந்திய இராஜாங்கத்தாரிடம் ஒப்புக்கொண்ட எண்பது லக்ஷ ரூபாய் கடனைத் தீர்ப்பதென அவர் கவலை கொண்டனர். வட்டியே வருஷத்துக்கு நான்கு லக்ஷம் கொடுக்க வேண்டியிருந்தது. வருமானத்திலிருந்து வட்டியைக் கொடுத்துச் சமாளிப்பதே சமஸ்தானத்துக்குக் கஷ்டத்தைத் தருமென்றெண்ணி, பிரிடிஷ் இராஜாங்கத்தாருடன் கடிதப்போக்குவரத்தினால் சமஸ்தான நிலைமையை விவரித்துக் காட்டி வட்டி விகிதம் 100-க்கு ஐந்திலிருந்து நான்காகக் குறைக்கும்படிச் செய்தனர். இவ்வேற்பாட்டினால், கட்டவேண்டிய வட்டியில் சுமார் லக்ஷரூபாய் குறைந்தது.

இவ்வாறு மேல் இராஜாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய வட்டி, முதல் விஷயமாக ஏற்பட்ட கவலை சிறிது தணிய, ஆசாரியர் இருபது லக்ஷம் கடனெழுப்பி, சமஸ்தானம் முழுதும் ரயில் பாதைகள் பல இடங்களிலும் நிர்மாணித்து, பொது ஜனங்களின் பேரன்பிற்கு இடங்கொடுத்தனர். இதைக்காட்டிலும் அத்யத்புதமான வேலை அவர் செய்தது "மைசூர் பிரதிநிதிச் சபை" யேயாகும். இதனால் ஜனங்களது சுகதுக்கங்களை உணர்ந்து நிர்வாககர்களது நிர்வாகத்தைப்பற்றி ஜனங்களது அபிப்பிராயத்தை உணர்ந்து நடந்துகொள்ளுமாறும் அவர் செய்தனர். "இம்மாதிரியானசபை, ஆள்பவரையும் ஆளப்படுபவரையும் ஒருங்குசேர்ப்பது, இராஜாங்கத்தாரது நோக்கம், செயல்களிவற்றைப்பற்றி ஜனங்கள் மனதிற்கொண்ட தவறான எண்ணங்களைப் போக்கி இராஜாங்கத்தாரது அபிப்பிராயங்களும் ஜனங்களது எண்ணங்களும் ஒன்றாகவே விளங்குமெனச் சித்தாந்தப்படுத்துவதற்கும் உபயோகமாகும்" என ஆசாரியர் வெளியிட்டதை இராஜதந்திர நிபுணரெவரும் கொண்டாடுவரென்பது திண்ணம்.

இயற்கையிலேயே தெய்வபக்தியி லீடுபட்டு விளங்கிய ஆசாரியர் தமது திவான் கால அளவையானதும், சென்னை வந்து பாரமார்த்திக வழியில் விளங்க எண்ணியவர், தாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்றபடி, இருந்தாற்போலவிருந்து தேக அஸௌக்யமடைந்து, மாற்றத்திற்காகச் சென்னைக்குக் கொணரப்பட்டு, 1882-ம௵ சில மாதம் படுக்கையில் கிடக்க, ஊக்கமொடு விளங்கிய அவரது வாழ்க்கைக்கும் யமன் முடிவை ஏற்படுத்திவிட்டான்.

ஏதோ ஒரு சென்னைவாசி, தம் நாட்டுக் காரியங்களில் தலையிட்டுச் சமஸ்தானத்தை அதோகதியில் ஆழ்த்தி விடுவனென்ற நம்பிக்கையி லாழ்ந்துவிளங்கி, அவதூறு கிளப்பி வெளியாக்கிவிடுவதென வெறுப்புக்கொண்டு விளங்கிய மைசூர் வாசிகள் தாம் நடந்துகொண்ட இழிவான ஒழுக்கத்தைப்பற்றி நாம் பேசவேண்டியதில்லை.

அரங்காசாரியர் ஸாமன்ய மனிதர் அல்லர். அவர் எப்பொழுதும் பொது ஜனங்களின் நன்மையையே கவனித்து நடந்தவர்; கோபம் தாபம் என்னும் வழிகள் இன்னவென அறியாத ஆசார சீலர். அவரது நஷ்டத்தை எண்ணி எண்ணி மைசூர் நாடே கதறியது. முன் தம் இனத்தோர் வீணே பழிசுமத்திச் சிறுமை பாராட்டியதற்குப் பிராயச்சித்தமென, மைசூரார் யாவரும் கூடி அவரது ஞாபகத்தைக் கொண்டாடவேண்டியஏற்பாடுகள் செய்தனர். ஆனால் ஆசாரியர் அவரது நகைமொழியையாவது வசைமொழியையாவது கவனித்து நடந்தவரல்லர்; தருமத்தையே தலைப்பொறுப்பாய் நடத்தியவர். உத்தமருள் அவர் உத்தமராவரென்றால் மறுத்தலும் ஆமோ?

இந்தியரின் வீரத்தன்மை

INDIAN HEROISM

இப்போது எங்கு பார்த்தாலும் ஐரோப்பாவில் நடக்கும் பெரிய யுத்தத்தைப்பற்றித்தான் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் நமது ஜன்ம பூமியான இந்தியாவானது யுத்தத்தில் எவ்வளவு தூரம் சம்பந்தப்பட்டு, ஒத்தாசை செய்திருக்கிறது என்று பார்ப்பதிலேயே கவனமாயிருக்கிறார்கள். இந்த யுத்த விஷயமாகத் தன்னாலியன்ற மட்டும் இந்தியாவானது திரவிய சகாயம் செய்திருக்கிறது என்பதைப்பற்றி ஒருவித ஆக்ஷேபணையு மில்லை. யுத்த நிதிக்கும் யுத்தக் கடனுக்கும் நம்மவர்கள் பணங்கொடுத்துதவ எங்காவது சற்றேனும் பின் வாங்கியதுண்டா? முதல் யுத்தக்கடனில் சுமார் 45 கோடி ரூபாய்க்கு மேலேயே வசூலாயிற்று. இப்போது வசூலிக்கப்படும் இரண்டாவது யுத்தக்கடனாக $51\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேல் உதவ நம்மவர் முன் வந்திருக்கிறார்கள். அதாவது இவ்விரண்டு யுத்தக்கடனில் மாத்திரமே $96\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேல் வசூலாயிருக்கிறது. இந்தியாவோ பரம ஏழையான தேசமென எல்லோரும் அறிந்ததே. அதன் ஜனத்தொகை 30 கோடியாயினும், பெரும்பாலோர் வெகு ஏழை. சராசரியில், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் உள்ள மாத வரும்படி சுமார் மூன்று ரூபாய்தான் என்று கவர்ன்மெண்டாருக்கே தெரியும். இப்படியிருக்கும்பொழுது, இவ்வேழை ஜனங்கள் சுமார் நூறு கோடி ரூபாய் வரையில் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியமே. இந்தியர்கள் தம்மாலியன்றமட்டும், தாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சரி, இந்த யுத்தத்தால் உண்டாகும் கஷ்ட நிஷ்டூரங்களை இங்கிலாந்தோடு சரி ஸமானமாய் நின்று அனுபவிக்க வேண்டுமென்ற ஆவலும், மனோதைரியமும், திடசித்தமும் ஆகிய இவற்றை இவ்விஷயம் வெளிப்படுத்த வில்லையா?

அப்படியிருக்குங்கால், இந்தியாவிலிருந்து சண்டைக்காக, எவ்வளவு பேர் யுத்தத்துக்குப் போயிருக்கிறார்கள் என்று கணக்குப் பார்த்தால், அது நமக்கு அவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும்படியாயில்லை. பஞ்சாபிலுள்ள இராணுவ வீரர்களும், மஹாராஷ்டிர தேசத்திலுள்ள வீரர்களும், இன்னும் சிலரும் யுத்தத்துக்குப்போய் அழியாப் புகழ் அடைந்திருந்தாலும், மொத்தத்தில் பார்க்கும்போது, 30 கோடி ஜனத்தொகையுள்ள நமது ஜனன பூமியிலிருந்து இன்னும் பலபேரும் சண்டைக்குப் போயிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

ஆதலின், இந்தியர்களுக்குச் சண்டையில் தம்மாலியன்றவரையில் ஒத்தாசை செய்ய மனமிருந்தும், இராணுவ வீரர்களை ஜாஸ்தியாக அனுப்பமுடியவில்லை என்பது வெளிப்படையாய்த் தெரியவருகிறது. இதன் காரணமென்னவென்று சற்று ஆராய்ந்தறிந்தால் பல அபூர்வமான விஷயங்கள் நமக்குப் புலப்படும். 'இந்தியர்களுக்குச் சண்டை செய்யும் திறனே எப்பொழுதும் இல்லை' என்பார் ஒரு சாரார். 'முன்னாளில், அதாவது இராமாயணம், பாகவதம் முதலிய இதிஹாஸ புராணங்கள் எழுதப்பட்ட நாட்களில், அதாவது 3000 அல்லது 4000 வருஷங்களுக்கு முன்னே, இந்தியர்கள் சண்டைசெய்யும் வலிமை உடைத்தாயிருக்கலாம். ஆயினும் சரித்திர வாயிலாக நமது தேசத்தைப்பற்றி நமக்குத் தெரிந்தவரையில், அவர்களுக்கு இராணுவத்தன்மை என்பது இல்லவேயில்லை' என்பார் ஒரு சாரார். 'பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஆயுதச் சட்டத்தை ஏற்படுத்தி, லைசென்ஸ் வாங்காமல் ஒருவராவது துப்பாக்கி முதலான ஆயுதங்களை எங்கேயும் வைத்துக்கொள்ளக் கூடாது என்னும் நிபந்தனையை ஏற்படுத்திய தன் பிறகே இந்தியர்களுக்கு இராணுவத்தன்மை குறைந்து போய்விட்டது. அதற்கு முன், அவர்கள் மஹா வீரம்பொருந்திய பராக்கிரமசாலிகளே' என்று சாதிக்கிறார்கள் ஒரு சாரார். இம்மூவர்களுள் யார்சொல்வது சரி என்பதைச் சற்றே கவனிப்போம்.

இந்தியர்களுக்குச் சண்டைசெய்யும் திறன் எப்போதுமேயில்லை என்பது அசம்பாவிதம். நமது காவியங்கள் பலவற்றிலும் சண்டை, யுத்தம் முதலியவைகளைப்பற்றி அதிக அழகான வர்ணனைகள் இருக்கின்றன. இராமாயணத்திலிருக்கும் இராம இராவண யுத்தத்தின் வர்ணனையும், பாரதத்தில் பாண்டவ கௌரவர்களுடைய யுத்தத்தின் வர்ணனையும்; ஒழுங்கும், கிரேக்க கவியாகிய ஹோமருடைய யுத்த வர்ணனையைப் பார்க்கிலும் சிறப்புற்றனவேயன்றிச் சற்றும் தாழ்ந்தனவல்ல என்பார் அறிவுடையோர். மற்றும், இந்தியர்களுக்குச் சற்றும் சண்டைசெய்யும் வலிமையேயில்லையென்றால், அவர்கள் பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்ததெப்படி? அசோகன், விக்ரமாதித்தியன், சந்திரகுப்தன், இவர்களெல்லாரும் இப்போது பிரிட்டிஷ் இந்தியா எவ்வளவு பெரிதாயிருக்கின்றதோ அவ்வளவு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபனஞ் செய்து, சரிவர நிர்வாகம் செய்து வந்தார்கள் என்பது சரித்திரப்பிரஸித்தமல்லவா? இராணுவத் தன்மை கொஞ்சமும் இல்லையெனின் இவையெல்லாம் சாத்தியமா?

தவிரவும், அலெக்ஸாண்டர் இந்தியாமீது படையெடுத்து வந்தபோது, அவன் போரஸின்மேல் வெற்றியை யடைந்தாலும், தன் எதிரியை வெகு மரியாதையோடு நடத்தியதாகத் தெரியவருகிறது. கொஞ்சமும் இராணுவத்தன்மை இல்லாவிடில், மகா வீரனாகிய அலெக்ஸாண்டரோடு போரஸ் சண்டை செய்யத் துணிவனா? அப்படித் துணிந்தாலும், அவனை அலெக்ஸாண்டர் மதித்து மரியாதை செய்வனா? ஸமீப காலத்தில், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில், மஹமத் கோரி என்னும் மஹமதிய அரசன் இந்தியர்களோடு

தனேச்வரம் என்ற இடத்தில் சண்டை போட்டுத் தோற்கடிக்கப்பட்டான் என்றால், அக்காலம் ஆப்கானிஸ்தானத்திலுள்ள பட்டாணியர்களைவிடச் சிற்சில ஸமயம் ஹிந்துக்களுக்கு இராணுவத்தன்மை அதிகமாயிருந்த தென்ப தேற்படு மன்றோ? மேலும் மொகலாய ராஜ்யம் செழித்திருந்த அக்பர் காலத்தில், அவருடைய தளகர்த்தர்களுள் பலரும் மிகப் பெயர்பெற்ற ஹிந்து வீரர்களன்றோ! ராஜா டோடர் மால், ராஜா மான் சிங் முதலியவர்களை வைத்துக்கொண்டே அக்பர் தனது ராஜ்யத்தின் மகிமையையும் விஸ்தீரணத்தையும் அதிகரித்தானென்பது சரித்திர வெளிப்படை. அக்பர் கி. பி. 1555-ஆ முதல் 1605-ஆ வரையில் அரசாண்டிருப்பதால், பதினாறுவது நூற்றாண்டிலும் இந்தியர்களின் இராணுவத்தன்மை சாமான்யமானதல்ல என்பது நன்கு புலப்படும்.

இதற்குப்பின் அவுரங்கசீப் காலத்தில் (1658-1707), மஹாராஷ்டிரர்கள் கொஞ்சங் கொஞ்சம் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். வரவர, பதினெட்டாம் நூற்றாண்டில் மொகலாய ராஜ்யம் க்ஷீணித்துக்கொண்டும் மஹாராஷ்டிர ராஜ்யம் செழித்துக்கொண்டுமிருந்தது. பிரிட்டிஷ்காரர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவில் ராஜ்ய பாரம் ஆரம்பித்தபோது, அவர்கள் மஹாராஷ்டிரர்களோடு சண்டை செய்யவேண்டியதாய் இருந்ததே ஒழிய மொகலாயரோடு சண்டைபோடத் தருணமே இல்லாமலிருந்தது. இவ்விஷயங்களெல்லாவற்றையும், பம்பாயில் ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்து, சமீபத்தில் காலஞ்சென்ற மஹாதேவ கோவிந்த ரானடே அவர்கள் தமது அரிய புஸ்தகத்தில் எழுதியுள்ளார். மஹாராஷ்டிரர்களைக் கடைசியில் போரில் வென்றது 1818-ம் வருஷத்தில் தான். அதாவது இற்றைக்குச் சரியாய் நூறு வருஷத்துக்கு முன் என்று தெரியவருகிறது.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள சீக்கியர்கள் 1840-50 வருஷங்கள் வரையில் சுயேச்சையாயிருந்து அதற்குப்பின்தான் யுத்தத்தில் தோற்றுப்போனார்கள். தென்னிந்தியாவிலோ விஜயநகர சரித்திரத்தினின்றும், மைஸூர் சரித்திரத்தினின்றும் இன்னும் பல அபூர்வமான மேற்கோள்களினின்றும் பத்தொன்பதாவது நூற்றாண்டு வரையில் இந்தியர்கள் நல்ல இராணுவ வீரர்களாயிருந்தார்கள் என்று நன்கு புலப்படுகிறது.

இன்னும் இவ்விஷயத்தில் சந்தேகம் இருந்தால், ஓர் உதாரணத்தைக் கூறலாம் என்று நினைக்கிறேன். 1818-ம் வருஷத்தில் இங்கிலீஷ்காரர்கள் நேபாள தேசத்தின்மீது படையெடுக்க எண்ணி, அக்டோபர் மாதக் கடைசியில், தமது சேனைகளெல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து, வரிசை வரிசையாய் நேபாளத்தின்மீது கொண்டுபோனார்கள். இப்படிச் செய்வதில் அவர்கள் உத்தேசம் என்னவென்றால் இவரது சேனையைப் பார்த்தவுடனேயே நேபாள தேசத்தவர்கள், தங்களுடன் சண்டைபோட முடியாது, தாங்கள் சொன்னபடி கேட்கவிரும்பி உடன்படிக்கைக்கு வருவார்கள் என்பதே. ஆனால் அவர்களோ இதை வெகு அலக்ஷியமாய்ப் பாராட்டிவிட்டார்கள். ஆதலின் மேஜர் ஜெனரல் ஜில்லெஸ்பி என்பவர் மற்ற மூன்று தளகர்த்தர்களோடு நேபாளத்துக்குள்ளேயே பிரவேசிக்க ஆரம்பித்தார்கள். அக்டோபர்மாதம் 24-ம் தேதியில் கர்னல் மௌபி என்பவர் தம் சேனையோடு டெஹராடேன் (Dehra Dun) என்ற இடத்துக்கு வந்து சேர்ந்திருந்தார். டெஹராடேனுக்கு மூன்றரைமைலுக் கப்பாலிருக்கும் 'நளபாணி' என்ற மலையோரத்தில், 'குலுங்கா' என்னும் சிறு கோட்டையில் நேபாளதேசத்துச் சிற்றரசனை பலபத்திரசிங் தனது சிறு சேனையாகிய 300 ஆட்களோடு இருந்தான். இதைக் கண்டவுடன் கர்னல் மௌபிக்குக் கோபாவேசம் மூண்டு விட்டது. "கேவலம் 300 ஆட்களுக்குட்பட்ட சேனையை வைத்துக் கொண்டு நம்முடன் இவன் எதிர்த்து வரத் துணிகிறதா" என்று நினைத்து, பலபத்திர சிங்கை உடனே உடன்படிக்கைக்கு வரும்படி ஒரு கடிதம் எழுதி அனுப்பினான். ஆனால் நமது பலபத்திரசிங்கோ அதைக் கொஞ்சங்கூடப் பாராட்டாமல், "நாம் சண்டைபோடத் தயாராயிருக்கிறோம்" என்ற மறுமொழியை அனுப்பினான்.

ஆகவே, அடுத்த நாட்காலையில் கர்னல் மௌபி தன் சேனையோடு 'நளபாணி' மலையோரத்துக்கு வந்து, பீரங்கிகளைச் சரியான இடத்தில் ஸ்தாபித்தான். இப்படிச் செய்தும்

எதிரி உடன்படிக்கைக்கு வராததைக் கண்டு ஆச்சரியப்பட்டு மேஜர் ஜெனரல், ஜில்லெஸ்பிக்கு எழுதி, அவரையும் வரவழைத்தான். அடுத்த நாளே அவரும் வந்துசேர்ந்தார். வந்தவுடனே அச்சிறு கோட்டையை முற்றுகை போடப் பிரயத்தனம் செய்து, கர்னல் கார்பெண்டர், காப்டின் பாஸ்ட் (Faust), மேஜர் கெல்லி, காப்டின் காம்பல் என்ற நால்வரையும் நான்கு பக்கங்களிலிருந்து எதிர்க்கும்படி உத்தரவளித்தார். மேஜர் லட்லோ என்பவர் தமது சேனையைத் தனியே வைத்துக் கொண்டு அபாய சமயங்களில் உதவிசெய்யச் சித்தமாயிருந்தார்.

முற்றுகை யாரம்பித்தது. இங்கிலீஷ்காரர்கள் துப்பாக்கியால் சுடும்போதெல்லாம், எதிரிகளும் சற்றும் அஞ்சாமலே இவர்களைப் பார்த்துச் சுட்டுக் கொண்டே யிருந்தார்கள். எதிரிகள் முன்னூற்றுவரே யாயினும், கொஞ்சமும் பின் வாங்கவில்லை. இதைக் கண்டவுடன் இங்கிலீஷ்காரர்களுக்கு ஆச்சரியம் ஒரு பக்கத்திலும், விசனம் ஒரு பக்கத்திலும் ஜாஸ்தியாகி, "இனி சுடுவதில் பிரயோஜனமில்லை, சுவர்களின் மேலேறிக் குதித்தால்தான் ஏதாவது நன்மையுண்டாகும்" என்று நினைத்து, மேஜர் ஜெனரல் ஜில்லெஸ்பியும், லெப்டினென்ட் எல்லிஸும் சுவர் ஏற ஆரம்பித்தார்கள். இதைப் பார்த்தவுடனே நேபாலியர்கள் இவர்களின் மேல் குறிவைத்துச் சுட்டுவிட்டார்கள்.

ஆதலின், கர்னல் மௌபி 'இவர்களோடு சண்டை போட, நம்மா லாகாது' என்று நினைத்துச் சேனையோடு பின்வாங்கினான். இதற்குப்பின் டில்லிக்கு எழுதி மற்றும் சேனையை வரவழைத்தான். அவர்கள் வந்து சேருவதற்கு ஒரு மாதமாயிற்று. புதுச்சேனை வந்தவுடனே மற்றொருதரம் எதிர்த்துப் பார்த்தார்கள். அதுவும் சாத்தியப்படவில்லை. ஆகையால் மறுபடியும் இங்கிலீஷ்காரர்கள் பின்வாங்க நேரிட்டது.

கோட்டையிலோ முதலிருந்த மூந்நூற்றுவரில் சண்டையில் விழுந்தவர்கள் போக மிஞ்சியது எழுபதின்மரே. அவர்களுக்கும் குடிக்கத்தண்ணீர் அற்றுப்போய்விட்டது. அக்கோட்டையிலிருப்பவர்களுக்குக் குடிக்கும்ஜலம் 'நளபாணி' மலையோரத்தில் ஓடும் ஒரு சிறு ஆற்றிலிருந்தே வரவேண்டும். பலநாளாய் முற்றுகை நடந்துகொண்டிருப்பதால் கோட்டைக்குள்ளிருப்பவர்கள் வெளியே வர இடமில்லாமல் போய்விட்டது. ஆகையால் தாக வரட்சி வரவரக் கொடியதாய் விட்டது. இவ்வளவு கஷ்டத்திலும் அவர்கள் 'நம்மால் இனிச்சண்டைபோட முடியாது' என்று ஒருவார்த்தை சொல்லிவிட்டால் இங்கிலீஷ்காரர்கள் அவரது வீரத்தனத்தை மெச்சி, அவர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்திருப்பார்கள். ஆயினும் அவ்வாறு செய்வது பெரிய அவமானம் என்று அவர் அடங்காவீரம் தூண்டியதுபோலும்!

ஆதலால் நவம்பர் மாதம் 30-ம் தேதியில் இரு கட்சியாரும் புங்கானு புங்கமாய்த் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் திடீரெனச் சுடுவதை நிறுத்தி நேபாலியர்கள் தமது தலைவராகிய பலபத்திர சிங்கோடு கூட, கோட்டையின் வாயிற்கதவுகளைச் சட்டெனத் திறந்துபோட்டு, இங்கிலீஷ்காரர்கள் என்ன நடக்கிறது என்று உற்றுப்பார்ப்பதற்குள்ளாக, தமது துப்பாக்கி, கத்தி, கேடயம் முதலியவைகளோடு கூட, சற்றும் மனஞ்சலியாமலும், ஒருவரும் காயப்படாமலும் வெளிவந்து, வயிறாரத் தண்ணீரருந்திப் பிறகு ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து போய்விட்டார்கள்! என்னே இவர்கள் தைரியம்! என்னே இவர்களது இராணுவத்தன்மை!

இங்கிலீஷ்காரர்கள், கிரிமியா தேசத்தில் 1854-ம் வருஷத்தில் சண்டை செய்துகொண்டிருந்தபோது 'லைட்பிரிகெட்' (Light Brigade) என்ற 600 பேர் இராணுவ வீரர்கள் மஹா தைரியமாய்ச் சண்டை செய்த பல பராக்கிரமத்தைக் கொண்டாட அநேக பாடல்களும் ஏற்பட்டிருக்கின்றன. பிரான்ஸ் தேசத்திலுள்ள ஒற்றை வீரனை 'லாதூர் டவர்ன்' என்பவன் பெயர் அழியாப் புகழ் படைத்தது. நமது நேபாள தேசத்திலுள்ள பலபத்திர சிங்கும், அவன் ஆட்கள் முந்நூற்றுவரின் ஆற்றலும் வீரமும் புகழும் இவர்களதைப் பார்க்கிலும் மேன்மையுடைத்தெனச் சொல்வது தவறாமோ?

இன்னும் பலபத்திர சிங்கைப்போன்ற ஆண் சிங்கங்கள் நம் இந்தியருள் பலர்

இருக்கிறார்களென்றால், இந்தியர்களா இராணுவத்தன்மையில் குறைந்தவர்கள்? இந்தியர்களுக்கா வீரத்தன்மை இல்லை? இப்போது சுமார் நாற்பது, அல்லது ஐம்பது வருஷ காலமாய்ச் சண்டை செய்யாமலிருந்தும், சண்டையைப் பாராமலிருந்தும் நமது வீரர்கள் மெஸொபொடோமியா, பாலஸ்தீன், பிரான்ஸ் முதலிய தேசங்களில் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது தீரத்தைப் புகழ்ந்து நமது கவர்ன்மெண்டார் "விக்டோரியா கிராஸ்" முதலான ஒப்புயர்வற்ற பரிசுகளை யெல்லாம் அவர்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

ஆதலின் இந்தியாவிற்குக் கடமைப்பட்டோரெல்லாரும் இவ்விஷயத்தைச் செவ்வனே யறிந்து, தமது வாழ்க்கையைப் பிறர் பழிகூறாதபடி நடந்துகொள்வாராக என்பதே நமது பிரார்த்தனை.

சென்னையின் வரலாறு

THE STORY OF MADRAS

ஆதிகாலந் தொடங்கி இந்திய வியாபாரம் லாபகரமானது. இந்தியாவில் விளையும் நெல் மிளகு, சுக்கு, ஏலக்காய், ஜாதிக்காய் முதலான வாஸனைப் பண்டங்களும், முத்து, வைரம், சரிகை தினுசுகளும், இந்தியாவில் நெய்யப்பட்ட பருத்தி, பட்டு வஸ்திரங்களும் உலகப் பிரசித்திபெற்றவை. இப்பண்டங்கள் ஐரோப்பாவில் கிடைப்பதில்லை. எனவே, ஐரோப்பியர் இவைகளை யடைய அதிக ஆசைப்பட்டனர்.

மேற்சொல்லிய இந்தியச்சரக்குகள் தொன்று தொட்டு ஐரோப்பாவுக்கு வெனிஸ் நகரத்து வணிகர்களால் செங்கடல் மார்க்கமாக கொண்டுபோகப்பட்டு வெகு கிராக்கியாக விற்கப்பட்டன. வெனிஸ் வணிகர்கள் அதிக லாபமடைந்தார்கள். இதைப் பார்த்ததும், ஐரோப்பாவில் மேற்றிசை நாடுகளிலுள்ளவர்களுக்கு எப்படியாவது இந்தியாவோடு வியாபாரஞ் செய்யவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று.

நாம் இப்போது 20-வது நூற்றாண்டில் வசிக்கிறோம். 16-வது நூற்றாண்டில் (அதாவது 400 வருஷங்களுக்கு முன்) ஐரோப்பாவில் மேற்கிலுள்ள போர்ச்சுகல் என்ற தேசம் முதன்முதலில் இந்தியாவுக்கு ஆப்ரிக்காவைச் சுற்றிக் கடல் மார்க்கமாக ஒரு வழி கண்டு பிடித்து, இந்தியாவோடு தான் மட்டும் வியாபாரம் செய்ய ஆரம்பித்தது.

போர்ச்சுகேசியர் 16-வது நூற்றாண்டு முழுமையும் இந்தியாவில் தாங்களே வியாபாரஞ் செய்து அதிக லாபத்தையும் செல்வாக்கையும் அடைந்தார்கள். ஆகவே, இவர்கள், வியாபாரம் செய்வதோடிராமல் தேசத்தையும் ஆள யத்தனித்தார்கள்; இந்துக்களையும் மகமதியர்களையும் கிறுஸ்துவர்களாகும்படி கட்டாயப்படுத்திக் கொடூரமாக நடத்தினார்கள். இவர்களுடைய கர்வத்தையும், கெட்ட நடவடிக்கைகளையும் சொல்ல முடியாது. இக்காரணங்களால் இவர்கள் அதிகாரம் 16-வது நூற்றாண்டினிறுதியில் சீர்குலைந்தது.

இவர்களுக்குப் பிறகு, டச்சுக்காரர் வியாபாரம் பலம் அடைந்தது. 17-வது நூற்றாண்டு முழுமையும் இந்தியாவில் டச்சுக்காரர்களுக்கு வியாபாரத்தால் நல்ல லாபம். இதைப் பார்த்ததும் இங்கிலீஷ்காரர்களுக்கும் இந்தியாவோடு எப்படியாவது வியாபாரம் செய்யவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. 1599-ம் வருஷத்தில் லண்டன் நகரத்தில் ஒரு வியாபாரச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அக்காலத்தில் அரசுபுரிந்த எலிஜபத் மகாராணியிடம் இச்சங்கம் இந்தியாவோடு வியாபாரஞ் செய்ய உத்தரவு பெற்றது. இச்சங்கத்திற்கு ஈஸ்ட் இந்திய கம்பெனி என்றுபெயர். 1601-ம் வருஷத்தில் இக்கம்பெனியின் கப்பல்கள் முதல் முதல் கீழ்இந்தியத் தீவுகளுக்குப் பாய்விரித்தோடின. இத்தீவுகளோடு டச்சுக்காரர்கள் ஏற்கெனவே வியாபாரஞ் செய்துகொண் டிருந்தபடியால், இவர்களுக்கும் இங்கலீஷ்காரர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் உண்டாயின. ஒரு சமயத்தில் யாதொரு காரணமுமில்லாமல் பத்து இங்கிலீஷ்காரர்கள், டச்சுக்காரர்களால் கொல்லப்

பட்டார்கள். டச்சுக்காரர்கள் பலமாக விருந்தபடியால், இங்கிலீஷ்காரர்கள் இத்தீவுகளை விட்டுவிட்டு, இந்தியாவோடு மட்டும் வியாபாரஞ்செய்ய ஆரம்பித்தார்கள்.

இங்கிலீஷ்காரர்களுக்கு இந்தியாவில் சோழ மண்டலக்கரையில் முதல் வியாபார ஸ்தலம் மசுலிபட்டணம். பிறகு இவர்களுக்கு நெல்லூர் ஜில்லாவிலுள்ள ஆர்மகான் கிடைத்தது நல்லதென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் மூன்று வருஷங்கள் கழித்து மசூலிப்பட்டணம் கவர்னர் இவர்களைத் தொந்திரவு செய்தபடியால் அதை விட்டு இவர்கள் ஆறுமகானுக்கு வரவேண்டியிருந்தது. ஆர்மகான் வியாபாரத்திற்கு தகுந்த இடமல்ல. ஆகையால் இங்கிருந்த வியாபாரிகளுக்கும், இங்கிலாந்திலுள்ள கம்பெனி டைரெக்டர்களுக்கும் சோழ மண்டலக்கரையில் வியாபாரத்திற்குத் தகுந்த இடம் ஒன்று எப்படியாவது சம்பாதிக்க வேண்டுமென்ற வெண்ணம் உண்டாயிற்று. போர்த்துகேசிய வியாபாரஸ்தலமாகிய ஸென்ட்தோமுக்கு (மயிலாப்பூருக்கு) ச்சமீபத்திலுள்ள பிரதேசம் வியாபாரத்திற்குத் தகுதியா வென்று பரீக்ஷித்துப் பார்க்க மசூலிபட்டணம் சங்கத்துக்கு அங்கத்தினராகிய பிரான்ஸிஸ் டே என்பவர் அனுப்பப்பட்டார். அலைகள் பலமாக அடித்தபோதிலும், ஸென்தோமுக்குத் தெற்கிலுள்ள விடம் வியாபாரத்திற்கு ஏற்றவிட மென்று கண்டு, இதை அக்காலத்துச் சந்திரகிரி இராஜாவாகிய ஸ்ரீரங்க ராயரிடமிருந்து 1639-வருஷத்தில் வாங்கி, அதில் ஒரு கோட்டை கட்டவும் உத்தரவு பெற்றார். இந்த ஸ்தலம் கடற்கரை நெடுகே ஐந்துமைல் நீளமும், கடற்கரையிலிருந்து உள்நாட்டில் ஒருமைல் அகலமு முடையது. இதுதான் "மெட்ராஸ்" என்று சொல்லப்பட்ட சென்னபட்டணம். இதில் டே என்பவரால் கட்டப்பட்ட கோட்டை இப்போதிருக்கும் ஸென்ட் ஜார்ஜு கோட்டையே. ஸென்ட் ஜார்ஜ் என்பது இங்கிலாந்து தேசத்தின் ரக்ஷக தேவதையின் பெயர்.

முதலில் கட்டிய கோட்டை மிகவும் சிறியது. இப்போதிருக்கும் கோட்டையில் பாதி கூடயில்லை. இதற்கு **வெள்ளையர் பட்டண**மென்று பெயர். கோட்டைக்கு வடக்கில் ஒரு அகலமான கடைத்தெரு வுண்டு. இத்தெருவுக்கு அப்பால் ஓர் இந்திய பட்டண முண்டாயிற்று. இதில் இந்துக்கள் குடியிருந்ததால் இதற்கு **கறுப்பர் பட்டண**மென்று பெயருண்டாயிற்று. இதற்கு வடக்கிலிருந்தது **முத்தியாலுபேட்டை**. இப்போது ஸௌகார்பேட்டை என்று வழங்கப்படும் பாகத்தில் தோட்டங்களும் சில பங்களாக்களுமுண்டு. அதற்கப்புறமுள்ளது பெத்து நாய்க்கன்பேட்டை. கறுப்பர் பட்டணத்திற்கு மேற்கில், ஓர் ஆறு ஓடிற்று. அது இப்போதில்லை. கோட்டைக்கு எதிர்ப்பக்கத்திலுள்ள தீவு இப்போதிருக்கிற மாதிரி அப்பவும் திறந்த வெளியாகவே யிருந்தது. பிரிடிஷ் அதிகாரத்திற்குத் தெற்கெல்லை திருவல்லிக்கேணி. எழும்பூர், புரசைபாக்கம், தண்டையார்பேட்டை பதினேழாவது நூற்றாண்டினிறுதியில் **நவாப் அசட்கானால்** கவர்னர் **ஹிக்கின்ஸனு**க்குக் கொடுக்கப்பட்டன.

நுங்கம்பாக்கமும் இன்னும் நான்கு கிராமங்களும் கவர்னர் பிட்டுக்கு 1708-ஞூத்தில் **டாட்கானால்** கொடுக்கப்பட்டன. வெப்பேரியும் பெரம்பூரும் 1742-ஞூத்தில் கிடைத்தன.

இதுவரையில் சென்னபட்டணம் எவ்விதமுண்டாயிற்று என்பதைச் சுருக்கிச் சொன்னோம். காலம் செல்லச் செல்ல ஜனநெருக்கத்தாலும், இங்கிலீஷ் பிரஞ்சுக்காரர்களுக் குண்டான சண்டைகளாலும் சென்னையில் அனேக மாறுதல்களுண்டாயின. அவற்றில் சிலவற்றைச் சொல்லுவோம், கோட்டை கட்டி நூறு வருஷங்களான பிறகு, அதை அடுத்திருந்த இந்திய பட்டணம் அழிக்கப்பட்டது. அதிலுள்ள ஜனங்கள் முத்தியாலு பேட்டையிலும், பெத்து நாயக்கன் பேட்டையிலும் போய் குடியேறினார்கள். இப்பேட்டைகளும் கறுப்பர் பட்டணமென்று பெயரிடப்பட்டன. 1906-ஞூத்தில் நமது சக்ரவர்த்தியாராகிய ஐந்தாம் ஜார்ஜ் இளவரசாகச் சென்னையில் விஜயஞ்செய்தபோது, அவருடைய ஞாபகார்த்தமாக, கறுப்பர் பட்டணமென்பது ஜார்ஜ் டௌன் என்று பெயர் மாறியது.

பழைய பிரிடிஷ்மயானத்திலுள்ள கோரிகளிலும் கல்லறைகளிலும் சமாதிகளிலும் இங்கிலீஷ்காரர்கள் சத்துருக்களாகிய பிரெஞ்சுக்காரர்கள் ஒளிந்திருந்து சென்னையைத்தாக்கியதால், மயானமிருந்தவிடம் தெரியாமல் அதி

னுள்ள கட்டடங்களை இங்கிலீஷ்காரர்கள் அடியோடு அழிக்க வேண்டியிருந்தது. தற்காலத்தில் லா காலேஜிக்கு அஸ்திவாரம்போட்டபொழுது, அந்தவிடந்தான் பழைய பிரிடிஷ் மயானமென்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதிலுள்ள கோரித் தலைப்புறக் கல்கள் கோட்டையிலுள்ள ஸென்ட் மேரி மாதா கோவிலில் பத்திரப்படுத்தப்பட்டன. நாளைக்கும் அக்கோவிலில் அவைகளை நீங்கள் பார்க்கலாம். (இது அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

கல்விக் குறிப்புகள்

Educational Notes

குடித்தனச் செட்டு

இங்கிலாந்தில், பாடசாலைகளில் படிக்கும் பெண்பிள்ளைகளுக்குக் குடித்தன விஷயமான பாடங்களையும் கற்பிக்கப்படவேண்டியதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றனவென்பதைக் கேட்க நமக்கு ஆனந்த முண்டாகின்றது. இதற்குப் பிரதம மந்திரியான ஸ்ரீமான் லாய்ட் ஜியார்ஜின் மனைவியே பிரதானமாக விருந்து காரியங்களைச் செய்தனராம். சமையல் வேலை, கடைக்குப்போய்ச் சாமான் வாங்குதல் முதலிய குடித்தனக்காரிக்கு இன்றியமையாதனவான வேலைகளை யெல்லாம் அப்பள்ளிக்கூடங்களில் கற்றுக் கொள்வதற்குச் சவுகரியங்கள் செய்து கொடுக்கப்படுமாம். அம்மாதிரி இந்தியாவிலும் ஏற்பட்டால் மிகுந்த நலமாக விருக்குமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அங்கு பெண்பிள்ளைகளுக்குச் சிற்சில இடங்களில் உபயோகமான தொழில்களைச் சொல்லிக் கொடுக்கின்றனர். என்றாலும், அத்தொழில்களை ஒழுங்குபடுத்தி, சீர்திருத்தி, பிற்காலத்தில் உபயோகப்படும்படி செய்வது நமது வித்யா இலாகா அதிகாரிகளும், வித்யா விஷயத்தில் சிரத்தை பாராட்டுபவர்களும் கவனிக்கவேண்டிய காரியமாம்.

* * *

இங்கிலாந்தில் கல்விச் சட்டம்.

இங்கிலாந்தில் கல்வி மந்திரியான ஸ்ரீமான் பிஷர் (Fisher) பார்லிமெண்டில் ஒரு மசோதா கொணர்ந்திருந்தாரென்று முன்பொரு சஞ்சிகையில் விஸ்தாரமாகச்சொன்னது ஞாபக மிருக்கலாம். இப்போது சட்டமாக இங்கிலாந்திலும் வேல்ஸிலும் செலாவணியாக அமுலுக்கு வந்துள்ளது. இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :—

(1) ஐந்து வயதுக்கு மேலும், பதினன்கு வயதுக்கு உட்பட்டுமுள்ள பிள்ளைகள் கட்டாயமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படவேண்டும். (2) பிரதேச அதிகாரிகள் சந்தர்ப்பானுசாரமாக, இந்தக் கட்டாய வயது வரையறையைப் பதினைந்தாக்கலாம். (3) 16 வயது வரைக்கும், சிற்சில வேளைகளில் 18 வயது வரைக்கும், சிறுவர்களுக்கு "தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்கள்" ஸ்தாபிக்கப்படவேண்டும். (4) இந்தத் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் வருஷமொன்றுக்குப் பிரதமத்தில் 280 மணி நேரமும், ஏழு வருஷங்களுக்கு மேல் 320 மணி நேரமும் பிள்ளைகள் படிக்க வரவேண்டும். (5) 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை யாதொரு தொழிலிலும் அமர்த்தக்கூடாது. (6) 12 வயதுக்கு மேற்பட்டு 14 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை யாதொரு ஞாயிற்றுக் கிழமையிலும் இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாக வேலையில் அமர்த்தக்கூடாது. (7) பிரதேச அதிகாரிகள் பிள்ளைகளின் தேகாரோக்கியத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் ஏற்ற சவுகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும். (8) ஸகிண்டரிப் பள்ளிக்கூடங்களிலும் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களிலும் சிறுவர்களுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (9) இரண்டு வயதுக்கு மேற்பட்டு ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு "நாற்றங்கால்" பள்ளிக்கூடங்களைப் பிரதேச அதிகாரிகள் ஸ்தாபிக்கலாம். (10) சரீர வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்குப் பிரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. (11) பிரதமப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் வசூலிக்கவே கூடாது.

ஓரக்கப் போனாலும், சிறக்கப் போகவேண்டும்.

வஸந்த மந்திரம்

(89-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தாம் அதிகாரம்

சுல்தான் படும்பாடு

விடியற்கால மாயிற்று. குயில்கள் கூவுகின்றன. உன்னதமான மரங்களிலிருந்தும் பாறைகளிலிருந்தும் கருடன்களும் கழுகுகளும் வெளிப்புறப்படுமுன் ஒன்றையொன்று துணைக்கு அழைக்கின்றன. காக்கையும் சப்தம் செய்கின்றது. செடிகளில் குருவிகள் 'கீச்சு கீச்'சென்று கத்துகின்றன. மைனக் குருவிகள்பேசுகின்றன. காற்றென்பதே சிறிதுமில்லை. வஸந்தமாகிய அக்காலத்தில் துளிர் விட்டு நிற்கும் மரங்களில் ஒரு இலையேனும் அசையவில்லை. பக்ஷிகள் சில சிலவாய் வெளிப்புறப்படுகின்றன. இன்னமும் ஏன் நன்றாய் வெளிச்சமாக வில்லை? கீழ்ப்புறம் மேகம் அடர்ந்திருக்கின்றது. இன்றுசூரியன் கண்ணுக்குத் தெரியமாட்டான்போல் இருக்கின்றதே! சுல்தான் ஆமத் செய்யப்போகிற காரியத்தை எப்படிப் பார்ப்பது என்று மறைந்து நிற்கின்றானோ?

சுல்தானுடைய அரண்மனையில் இன்னும் ஒருவரும் தூங்கி விழிக்கவில்லை. சேவகர்கள் கண்ணை மூடிமூடித் திறந்துகொண்டும், கொட்டாவி விட்டுக்கொண்டும், படுக்கையில் புரண்டு கொண்டிருக்கின்றனர். பாக்ஷா மட்டும் தூங்கவில்லை. நிசி முதல் 'எப்பொழுது விடியும், எப்பொழுது விடியும்' என்று ஜன்னல் வழியாய்ப் பார்த்த வண்ணமாய் இருக்கிறான். கிழக்கு வெளுத்ததுமுதல், படுக்கையை விட்டெழுந்து கைகளைக் கட்டிக்கொண்டு, மேலும் கீழும் உலாவ ஆரம்பித்தான். சிறிது நேரம் உலாவிவிட்டு ஜன்னலில் தலையை நீட்டி வெளியே பார்ப்பான். மறுபடியும் உலாவுவான். நேரம் கழியவில்லையே என்று பெருமூச்சு விடுவான்; "எந்நேரம் இத்தொலையாத இரவு" என்று ஆர்ப்பான்; மறுபடியும் உலாவுவான்; இவ்விளக்குக்குப் பயந்து சூரிய வெளிச்சம் உள்ளே வரவில்லையோ? இவ்விளக்கே என் தொந்தரவுக்குக் காரணம்" என்று விளக்கை நிந்தித்து அதை அணைப்பான். என்ன செய்துதான் என்ன? மனப்புழுக்கம் பொறுக்க முடியவில்லை. சேவகன் ஒருவனைக் கூப்பிடும்பொருட்டுக் கைகளை உரக்கத் தட்டினான். ஒரு சேவகனாவது வரவில்லை. மறுபடியும் தட்டினான்; அப்பொழுதும் ஒருவரும் வரவில்லை. பக்கத்தில் நாற்காலிமேல் நின்ற ஒரு சிறு மணியை எடுத்து வெகு பலமாய் அடிக்கத் தொடங்கினான். உடனே மாயவித்தை செய்ததுபோல் அரண்மனை முழுவதும் 'ஹும்' என்று சப்தமுண்டாயிற்று. சரசர வென்று படுக்கைகளைச் சுற்றினார்கள் சிலர். ஒருவன் மட்டும் படுவேகமாய் வீங்கக் கண்ணுடனும், ஊத்தைப் பல்லோடும், கோடுவழிந்த வாயோடும், அரசன் முன்வந்துநின்று தலை நிமிராமல் வணங்கினான். அரசன் "ஏடா! இவ்வளவு தூக்கம் அரண்மனையில்இன்று? நான்இரண்டு தரம் கூவியும் ஒருவரும் வராமலிருப்பது என்ன காரணம் பற்றி?" என அதட்டினான்.

சேவகன் மௌனமாக மனத்துள் "இன்றல்லவா இவர் இவ்வளவு சீக்கிரம் தூங்கி எழுந்தது! தனக்குத் தூக்கம் தெளிந்தால் எல்லாரும் அப்பொழுதே தூக்கம் தெளியவேணுமா என்ன!" என்று எண்ணினான்.

அரசன் "ஏடா, பேச்சில்லை! நல்ல திருக்கட்டும்; பிள்ளாய், நீ இப்பொழுதே ஓடிப்போய் அரை நொடியில் அனந்தபட்டரை அழைத்துவா" என்றான். சேவகன் 'இம்மட்டில் விட்டாரே', என்றெண்ணி உடனே வெளியே புறப்பட்டான்.

"அனந்தபட்டர் சொல்வதைக் கேட்போம். அவர் மிகுந்த புத்திசாலி; மேலும் பல தேசங்களில் சஞ்சாரம் செய்தவர்; அவரைக் கேட்போம்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே மறுபடியும் அறையில் அரசன் மேலும் கீழும் உலாவிக்கொண் டிருந்தான்.

ஆகாயத்தில் மேகங்கள் சற்றே விலகின. சூரியனும் நன்றாய்ப் பிரகாசித்தான். நாழிகையும் ஐந்து ஆயிற்று. தன் அருகிலுள்ள கட்டிலில் உட்காருகிறான் சுல்தான் ஆமத்; மறுபடியும் எழுந்து உலாவுகிறான்; மறுபடியும் ஜன்னலில் எட்டிப்பார்க்கிறான். ஒரு நாழிகை கழித்துக் கதவு ஓசைப்பட்டது. திறந்து பார்த்தான் ஆமத் பாக்ஷா; நிற்கின்றார் வெளியே அனந்த பட்டர். வணக்கமாய் நின்ற அனந்த பட்டரை வாருமென்று உள்ளழைத்துக் கொண்டான் சுல்தான் ஆமத்.

ஆண்டியும் ஆண்டியும் கட்டிக்கொண்டால், சாம்பலும் சாம்பலும் ஒட்டிக்கொள்ளும்.

அனந்தபட்டர் நுழைந்த அறை பாக்ஷாவின் பள்ளியறை. 30 அடி நீளமும் 15 அடி அகலமும் இருக்கலாம். வடபுறத்துச் சுவரின் ஓரமாய் ஒரு கட்டில் அமைத்து இருந்தது. அதன்மேல் உட்கார்ந்தபடியே ஜன்னலின் வழியாய் வடக்கே இருந்த ஸுவர்ண ஸரஸைப் பார்க்கலாம். தென்புறத்து ஜன்னல்களின் வழியாய்த் தூரத்தில் உள்ள ஊர் தென்படும். இவ்வழியாய்த்தான் அரசன் இன்று காலையில் அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தான். கட்டிலின் கீழ்ப்புறத்து ஓரமாய் எச்சில் துப்ப ஒரு வெள்ளிக் கிண்ணம் வைத்திருக்கின்றது. சுவர்களிலெல்லாம் நன்றாய்ச் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இடை இடையே பெயர் பெற்ற நிபுணர் சாயந்தீட்டி வரைந்து கொடுத்த படங்கள் மாட்டியிருந்தன.

அறையினுட் சென்றதும், பாக்ஷா தன் கட்டிலின் மீது உட்கார்ந்துகொண்டு அனந்தபட்டருக்கு ஒரு ஆஸனம் காட்டினான். அந்தப் பிராமணனும் ஆஸனத்தில் அமரவே, சுல்தான் "ஐயா! நீர் நேற்று இரவு நிலவு காய்வதற்கு நமது ஏரிமீது ஓடத்தில் வரவில்லையே என்று வருந்துகிறேன். அங்கே நிகழ்ந்தவற்றையாவது விசாரித்தீரா? இல்லை போலும்! இவ்வளவு சீக்கிரம் நீர் எவ்வாறு வெளியே போய் இருக்கக்கூடும்? நேற்று வெகு உல்லாசமாய் இருந்தது. தாதாவின் பாட்டும், விசித்ரவீரியரின்—ஹா! ஹா! என்னவென்று சொல்வது!—இருக்கட்டும்! நீர் உதயபுரி—" என்று சொல்லிக்கொண்டே அப்பொழுதுதான் ஞாபகம் வந்தவன்போல் நடித்து "உதயபுரியைப்பற்றிக் கேள்விப் பட்டதுண்டோ?" எனக் கேட்டான்.

அனந்தபட்டர் ஒன்றும் புலப்படாமல், உதயபுரியைப்பற்றி யென்ன விபத்து வந்தது என்று எண்ணி, "ஆம் கேள்விப்பட்டதுண்டு அரசே" என்றார்.

"அரசரது பெயர்?"

"பிரதாபசிங்கர்."

"அவருக்கு லலிதை என்று ஒருமகள் உண்டோ?"

அனந்தபட்டர், சற்று ஆச்சரியத்துடன் "விசேஷமென்ன? லலிதையைப் பற்றி ஏன் விசாரிக்கின்றீர்கள்?" என வினவினர்.

"அவளது ரூப லாவண்ணியங்களைப்பற்றி விசித்ரவீரியர் நேற்று இராத்திரி மிகவும் சிறப்பித்துச் சொன்னாரே! அது உண்மைதானோ?" என உதடு துடிக்க வாய்பதறப் பாக்ஷா கேட்கும்போதே அனந்தபட்டர் "விசித்ரவீரியர் குடியைக் கெடுத்தாரே; நானும் முதலில் ஏமாந்து என்னவோ பதில் சொல்லிக்கொண்டு வந்துவிட்டேனே! இதில் ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது" என்று எண்ணியவராய்ப் பலமாகப் பாக்ஷாவுக்கு "அதில் சந்தேகப்படுவானேன்? எந்த இராஜ புத்திரிதான் அழகின்றி யிருப்பவள்; லலிதையை விசேஷமாகச் சிலாகிக்கவேண்டிய அவசியத்தைக் காணோமே" என்றார்.

பாக்ஷா கோபத்துடன் "ஐயா! கேட்டதற்குப் பதில் சொல்லாமல் என்னவென்னவோ பேசுகிறீரே! எனக்கு அவையெல்லாம் ஒன்றும் தேவையில்லை. லலிதை விசித்ரவீரியர் சொன்னபடி அவ்வளவு அழகும் இளமையும் வாய்ந்தவளாயின், அவள் தப்பாமல் நமது அந்தப்புரத்துக்கு வரவேண்டியதுதான். வேறு பேச்சில்லை. நாம் லலிதா தேவியை நம் அருமை இராணியாகக் கொள்ள இஷ்டப்படுகிறோம் என்பதை நீர் போய் உதயபுரி யரசனுக்குத் தெரிவிப்பதுடன், இக்காரியம் கூடிய சீக்கிரம் நிறைவேறுவதற்குத் தக்க ஏற்பாடும் செய்து வருவீராக! நீர் இன்றே புறப்பட்டுப் போய்ப் பத்துத் தினங்களில் பதில் கொண்டுவரவேண்டும். இவ்விஷயத்தில் நீர் ஒன்றும் தட்டிப் பேசவேண்டிய அவசியமில்லை. நமது மந்திரிகளாகிய மகபத், சுமாலி இருவரையும் கூட இன்னும் தீர விசாரிக்கவில்லை, நீர் புறப்பட்டுப் போகலாம். வேண்டியபடி சேவகர்கள் பரிவாரங்கள் இவற்றை அழைத்துச் செல்லலாம். இப்பொழுதே அரண்மனை உத்தியோகஸ்தருக்கு உத்தரவு கொடுக்கின்றேன்" என்றான்.

என்ன செய்வார் அனந்தபட்டர்? வாயெடுத்தார் பேசுவதற்கு; நாவெழவில்லை. சுல்தான் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். பிடிவாதமும், கோபமும், காமமும், அதில் குடிகொண்டிருந்தன. சமயம் அறிந்தல்லவோ பேசவேண்டும்! "நான சிக்கிக்கொண்டேன் இவ்வேலைக்கு!" என்று எண்ணி ஒன்றும் பேசாமல் வெளியே புறப்பட்டார். வெளியே வந்ததும் அப்படி

ஆண்டு மாறின காரும், அன்று அறுத்த சம்பாவும், ஆளன் கண்ணுக்கு அரிது.

யே தூண்போல் நின்றுவிட்டார். "இது என்ன விசித்திரம்! நமது சிநேகிதரும் இப்படிப் பிசகு செய்வாரோ? இவ்வரசன் புத்திதான் ஏன் இப்படிக் கெட்டுப்போகவேண்டும்! பிரதாபசிங்கர் மஹா தருமசிந்தையுடையவர்; வீராதிவீரர்; இப்பொழுது மூப்படைந்து விட்டார், ஆயினுமென்ன? சிரேஷ்டமான க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர். தன் குமாரத்தியை அன்னிய ஜாதியில் மணம் செய்து கொடுப்பாரா? இவ்வரசனுக்கு அவரா இணங்கப்பட்டவர்? நானும் எனக்கிட்ட வேலையைச் செய்து தீரவேண்டியதுதானே! கொடுமை! கொடுமை!" என்று துக்கித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டே தமது இல்லம் போய்ச்சேர்ந்தார்.

ஆறுவது அதிகாரம்

அந்தப்புர ஆரவாரம்

"ஆகவே, அனந்தபட்டர் உதயபுரி போகிறார்!—போய்விட்டாரோ? ஆ?—அப்படித்தானா! என்னடா, நடந்த விஷயம் ஒன்றும் சொல்லாமல் ஊமைபோல் நிற்கிறாய், மல்லப்பா?"

"போவார் போலத்தான் இருக்கு அம்மா!—"

"இருக்கு! என்னடா இருக்கு? போயித்தான் போயிட்டாராமே; போயி லலிதா தேவியைக் கைப்பிடியாய்ப் பிடித்துவந்து இங்கு அடைத்து விடவேண்டியது தானாமே; அப்படி உத்தரவாம். நீ என்னவோ தெரியாதவன்போல் மொணகறயே—"

"போயிருக்கலாம் போலத்தான் இருக்குதுங்கோ; ஆனால் நம்புளுக்கு உத்தரவு ஒண்ணும்—"

"அடே, திருடா, நீ முதலில் போவார் போலிருக்கு, எங்கிறாய்; இப்பொழுது போயிருக்கலாம் போலத் தோணுகிறது எங்கிறாய்? ஏதடா, சுத்தப் பேச்சுமாறியாய் இருக்கிறாய்? உண்மை பேசமாட்டையா?"

"என்ன, அம்மா, எல்லாரும் இப்படியே கேக்காங்களே; எனக்கு தெரிஞ்சாலல்லவா சொல்வேன்; என்னப் பாதகமாயிருக்குது!"

"நீ மறுபடியும் திருட்டுத்தனம் பண்றாய். நாளைக்குச் சோற்றுக்கு மண்ணைப் போடறேன்; வா! வா!! இத்தனை கொழுப்பா உனக்கு? நீதான் நடந்த சங்கதியெல்லாம் கதவுங்கீழே இருந்து கேட்டிருந்தையாமே!"

"ஐயையோ! ஆண்டவனே! இது என்ன மோசமாய் வந்துடிச்சே! நான்—" என மல்லப்பன் பேசி முடிவதற்குள் 'கணீர் கணீர்' என்று மணி சப்தம் கேட்கவே ஓரே ஓட்டமாய் ஓடிவிட்டான்.

மல்லப்பன் அந்தப்புரச் சேவகன். அவனுடன் பேசிய பெண்மணிக்கு வயது இருபத்தைந்துக்குள் இருக்கலாம். அழகு வாய்ந்தவள் என்றே சொல்லவேண்டும். விலையுயர்ந்த ஒரு சிவப்புப் பட்டாடை தரித்துக்கொண்டிருக்கிறாள். அச்சீலையின் ஒருதலைப்பால் தன் தலையின் பின்பாகத்தைச் சற்றே மூடிக்கொண்டிருக்கிறாள். தலையின் முன்புறம் மட்டும் தெரிகின்றது. அவ்விடத்தில் சூரியனைப்போலும் சந்திரனைப்போலும், செய்த இரண்டு மதிப்பில்லாக் கல்லிழைத்த ஆபரணம் அணிந்துகொண்டிருக்கிறாள். முகம் சற்றே வாட்டமுற்றிருந்தது. மூக்கிலும் காதிலும் தொங்கும் வைர ஆபரணங்கள் அவளது அழகைக் கொஞ்சம் குறைத்து விட்டதென்னலாம். முகம், பாதம், இவை தவிர மற்றைய பாகங்களை நன்றாய் மூடிக்கொண்டிருக்கிறாள். பாதத்தில் மெல்லியதோர் பாதரக்ஷையும் அணிந்திருக்கிறாள். இவள் "அடே பாவிகாள்!" என்று சொல்லிச் சேவகன் சென்ற திசையை நோக்கிக் கையை நெரித்துக் கோபத்துடன் திரும்பினாள்.

இதுகாறும் இவள் நின்ற விடம் அந்தப்புரத்தின் முன்புறம். உள்ளே நுழையும் கதவுக்கு முன்னால் பலவர்ணங்கள் தீட்டியுள்ள ஒரு கனத்ததிரை தொங்கிக்கொண்டிருந்தது. அதே மாதிரி அவ்வந்தப்புரத்தில் ஒவ்வொரு மனைவாயிலிலும் திரைகள் தொங்கின. ஒவ்வொரு மனையும் தனிவீடு; ஒவ்வொரு வீட்டிலிருந்தும் தனித்தனியாய் இராஜமாளிகைக்குப் போக வழியுண்டு. இப்பெண்மணி ஓர் மனையுள் நுழைகின்றாள். நாமும் கூடச் செல்வோம். வேறு ஒருவரும் போகக்கூடாவிட்டாலும் நாம் போவதற்கு என்ன தடை? காற்று, ஈ, எறும்பு, இவற்றைத் தடை செய்தாலொழிய நம்மைத் தடை செய்ய முடியாது!

உள் கூடத்தில் ஒரு தூங்கு மஞ்சத்தில் பஞ்சணை மெத்தையில் சாய்ந்து மெதுவாய்

ஆண் பிள்ளைகள் ஆயிரம் ஒத்திருந்தாலும், அக்காள் தங்கச்சி ஒத்திரார்கள்.

ஆடிக்கொண்டிருக்கிறாள் ஒரு தேவி : அவளிடம் நமது சினேகிதை போய் உட்கார்ந்தாள். உட்கார்ந்து கோபாவேசத்தோடு கண்களில் நீர் ததும்ப "பானுமதீ! கேட்டாயா நீ இக்கொடுமையை! மனம் பதைக்கின்றது; நாம் போதாதென்று, உதயபுரியரசன் மகள் லலிதா தேவியையும் நம்மைப்போல் இந்நகரத்துக்குக் கொண்டுவரப் போகிறார்களாம்! நேற்று யாரோ அனந்தபட்டராம்! அவரை அனுப்பியாயிற்றாம்; இந்த அயல் ஜாதியாருக்குப் பயந்து நமது ராஜபுத்ர சகோதரர்களும் பெற்றோர்களும் என்ன அநியாயங்கள் எல்லாம் செய்கிறார்கள்! நம்முடைய வழக்கம் சுயம்வரம் அன்றோ! அதுதான் இல்லாவிட்டாலும் நமக்கு வெறுப்பில்லாத இடத்திலாவது மணம் செய்து கொடுக்கக் கூடாதா? இராஜபுத்திரர் இப்படி மானமழிந்து, வீரமிழந்து, போவாரோ! இந்த அந்தப்புரத்தில் மட்டும் மூன்று இராஜ குமாரிகள் இருக்கிறோமே! லலிதாதேவியோடு நான்குபேர் ஆய்விடுமல்லவா?" என்றாள்.

"என்ன செய்வது இந்திரே? நீ வருந்துவதில் பயனில்லை. நீ சிறியவள்; ஆலோசியாது பேசுகிறாய். தங்கள் குடிகளின் க்ஷேமத்தைக் கருதியும், கொடும் பாவிகளான கூலிப்படைக்குப் பயந்தும், நமது பெற்றோர்களும் சகோத்ரர்களும் இவ்வாறு செய்கின்றார்களே யன்றி வேறில்லை. வேண்டுமென்றே செய்வார்களா? தாங்கள் ஜயித்துத் தம் பலத்தை நிலை நாட்டிக் கொள்ளக் கூடுமானால் உன்னையும் என்னையும் இப்படி அவதிப்பட விடுவார்களா? கல் நெஞ்சர் என்று எண்ணினாயோ அவர்களை?"

"ஏன் பானுமதி இப்படி வேதாந்தம் பேசுகிறாய்? குடிகளின் க்ஷேமத்தைக் கருதினவர்கள் நம்மை இஷ்டமில்லாத இடத்தில் அடைக்கவேண்டுமா? நமது சௌக்கியத்தையும் சந்தோஷத்தையும் கருதவேண்டிய தவசியம் இல்லையோ? இப்பொழுது இங்கிருக்கும் இராஜ புத்திரிகளின் தகப்பன்மார்களும் சகோதரர்களும் ஒன்றுசேரின், தம் தேசத்தையும் குடிகளையும் காப்பாற்றிக் கொள்ள முடியாதா? எதிர்க்கும் எதிரிகளை ஒருங்கு சேர்ந்து சின்னாபின்னப்படுத்தலாமே! அப்படித்தான் தோற்று விட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். இராஜபுத்திரர் ஏன் போர்க்களத்தில் மாளக்கூடாது? இராஜஸ்திரீகள் நம் முன்னோர் வழக்கப்படி தீயில் குதித்து, ஏன் சிவபதம் சேரக்கூடாது? இது என்ன மானம் கெட்ட பிழைப்பு!"

"இந்திரே, நீ மிகவும் மனம் நொந்து பேசுகிறாய்; விஷயத்தை ஆழ்ந்து ஆலோசனை செய்வதில்லை. நான் சொல்வது சரியான மார்க்கமென்று கோபத்தால் உனக்குத் தோற்றவில்லை. நீ சொல்வது எல்லாம் சரியே: உன் யோசனைப்படி செய்யின் எவ்வளவு உயிர்கள் சேதமாகும்? அப்படி நாசமடைவதைவிட நாம் ஒருவர் இங்கே கஷ்டப்படலாகாதா? நான் இவ்விடம் இருப்பதால் பகவந்தபுரமே முழுவதும் இக்கொடிய சேனையால் கொள்ளையடிக்கப் படாமல் சௌக்கியமாய் இருக்கின்றதே! இதைவிட ஜீவகாருண்யமான காரியம் நான் என்ன செய்யப்போகிறேன். இதை நினைத்தே நான் என்னுடைய கஷ்டத்தைப் பாராட்டுகிறதில்லை. நமது தலைவிதி இவ்விதமிருக்க நீ வீணில் வருந்துவதில் பயன் என்ன?" என்று பானுமதி அவளைத் தேற்றினாள்.

"நேற்று மஹேச்வரி சொன்ன வார்த்தைகள் ஞாபகம் இருக்கின்றனவா? பத்மினி மஹாராணி அக்நிப் பிரவேசம் செய்யும் போது, காளிகாதேவியே அவள் மூலமாய்ப் பேசவில்லையா? அப்பொழுது பத்மினி 'இன்னும் சிலநாளில் இக்கொடிய மகமதியர் வலியிழந்து அரசிழந்து விடுவார்கள்; அப்பொழுது மேற்கே வருணதிக்கிலிருந்து வருணன் உதவியால் கடலெல்லாம் தமது ஆக்கினைக்கு உட்கொள்ளும் வேறு ஜாதியர் நமது தேசத்துக்கு வருவார்; மகமதியரை வென்று நாடாள்வார். அவர் காலத்தில் நமது நாடு மறுபடியும் செழித்தோங்கும். ஜனங்கள் திருப்தியுடன் இருப்பார்கள். நம் பெண்டிர் கற்புக்குத் தடையில்லாமையால் நாடு செழிக்கும். பெண் கல்வி மேம்படும். நமது பழைய நாகரீகத்தையும், கொள்கைகளையும், தத்துவங்களையும், உலகமே புகழும். தருமம் சிறக்க, மழைவளமும் கோவளமும் குன்றாது, நமது ஆசார முறைமைகள் சீர்பெற்று இடையூறின்றி நிலைபெறும்; அக்காலத்தில் அவர்களின் உதவியால் நம் நாடும் உலகத்துப் பல

ஆமுடையான் அடித்ததற்கு அழவில்லை, சக்களத்தி சிரிப்பாளென்று அழுகிறேன்.

தேசங்களுள் முக்கியமானதொரு தேசமென எண்ணப்படும்; எக்காலத்தும் காணா விசித்திர அநுபவங்கள் எல்லாம் அக்காலத்தில் தோன்றும்; வருணன் கருணையால் வரும் இக்குளிர்ந்த மனிதர்களுடைய உதவியால் நம்நாடு மேம்படும் மேம்படும்!' என்று சொன்னாளாமே. அக்காலத்தில் பிறக்கக்கூடாதா பாவிகளான நாம்!" என்று இந்திராதேவி வருந்தினாள்.

"உண்மைதான்; அக்காலத்தில் நமது பெண்டிர் யாதொரு தொந்திரவுமின்றிச் சுகமாய் இல்லறம் நடத்தும்படி கடவுள் அருள் புரியட்டும். யார் கஷ்டப்பட விதியிருக்கின்றதோ அவர்கள் கஷ்டப்பட வேண்டியதே; லலிதாவுக்கு இக்கிரஹவாஸம் ஏற்படவேண்டுமானால் ஏற்பட்டே தீரும்; நீயும் நானும் வருந்துவதால் நிற்காது. நீ சொல்லும் அந்த நல்ல காலத்தில் நாமெல்லாம் மறுபிறப்புப் பிறப்போம். சந்தேகமில்லை. இப்பொழுது நாம்படும் கஷ்டமெல்லாம் கதையாக விளங்கும்! உன் மனம் தளர்ந்திருக்கின்றது. உன் கோபம் ஆறவில்லை; நந்தவனத்தில் சற்றுப் போய் உலாவுவோம் வா; அங்கே குளிர்ந்த காற்றுப்பட, உன் முகம் சற்றே மலரும்; போவோம் வா" என்று இந்திரையைக் கைப்பிடித்து அழைத்துப் பானுமதி சென்றாள்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

நன்னெறி. III.

காலைநேரம். இரவு பெய்துகொண்டிருந்த பனி, இன்னும் சுத்தமாக நிற்கவில்லை. பனித்துளிகள் புல்லுகளின் நுனியிலும், இலைகளின் நுனியிலும், முத்துப்போல் ப்ரகாசித்துக் கொண்டு, சூர்ய ரச்மி படும்பொழுது நானாவித வர்ணங்களமைந்த ரஸகுண்டுகளைப் போல் சோபித்தன. அப்பொழுதுதான் அலர்ந்த புஷ்பங்களின் காட்சி அதிமனோஹரமாயிருந்தது. காற்றுக் குளிர்ந்து வீசி, மனிதனுக்கு ஊக்கத்தை யளிக்கத்தக்கதா யிருந்தது.

ஸுமார் இரண்டு மைல் வந்திருப்பான் நமது கதாநாயகன். விருக்ஷங்களடர்ந்த ப்ரதேசமெல்லாந் தாண்டி, இருபுறமும் பயிரிடப்பட்ட வயல்களையுள்ள வெளி ப்ரதேசத்தை யடைந்தான். போகும்போதே, தீர்க்கமான யோசனையிலாழ்ந் திருந்தது அவன் மனம்: "ப்ராயச்சித்தமாவது செய்வதாவது, தீமையை யகற்றுவதாவது! தீமையை யகற்றுவதென்றால், தீயவர்களைச் சிறையிலிட்டோ, அல்லது கொன்றோ தண்டித்தாலொழிய, தீமை யெங்ஙனம் ஒழியும்? ஆனால், அவ்வாறு செய்தாலோ, மேலுந்தீமையே விளைகிறது என்பதற்கு, கரிவீரன், திருடன் இவர்கள் விஷயம் ஸாக்ஷி. பின் எவ்விதந்தான் தீமையை யொழித்து ப்ராயச்சித்தஞ் செய்துமுடிக்கிறோம்" என்று ஆலோசித்துக்கொண்டு, தன்னையே மறந்து செல்பவன் காதில் "பிடி, பிடி, விடாதே, இதுதான் ஸமயம், அடாடா, இப்படித் துரத்து, இப்படி, அடசனியனே" என்று பெருமிரைச்சலொன்று காதில் விழுந்தது. உடனே தலையை யசைத்து, புத்தியை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு, இவ்வளவு கூச்சலும் எதற்கென்று நிதானித்தான். அங்கே, ஒரு கழனியில் தான்யம் நன்றாய் முற்றி, அறுப்புக்குத் தயாராய்க் கதிர்கள் சாய்ந்திருப்பதைக் கண்டான். அக்கதிர்களினிடையே ஒரு சிறு பசுங்கன்று துள்ளியோடிக்கொண்டிருப்பதையும், அதைப் பிடிப்பதற்கு ஆறு அல்லது ஏழு மனிதர்கள் ப்ரயத்னப்படுவதையுங் கவனித்தான். அநேக திக்குகளிலிருந்தும் அநேகர் கைகளைத் தட்டியும் பெருங்கூச்சலிட்டும், யேககாலத்தில் அதை விரட்டுவதால், அக்கன்று திக்ப்ரமையடைந்து, பயத்தால், இங்குமங்கும் ஓடி, தான்யத்தை மிதித்து வீணாக்குவதை யறிந்து பரிதபித்தான். கன்று ஒருபக்கம் ஓடி அநேகமாக வெளியில் வந்துவிடும் ஸந்தர்ப்பமாயிருக்கும். அப்பக்கம் நிற்கும் யாராவது ஒருவன் அதைப் பிடிக்க யத்தனிப்பான். அது பயந்து மறுபடியும் கழனிக்குள்ளேயே சென்றுவிடும். இவர்கள் ஸ்திதி யிப்படியிருக்க, ரஸ்தாவோரத்தில் நின்றிருக்கும் ஒரு கிழவி "அதன்காலையொடித்து விடுவீர்கள் போலிருக்கிறதே, இக்கட்டையில் போவார்கள்!" என்று ஆசீர்வாதஞ் செய்துகொண்டிருந்தாள்.

ஆதாயமில்லாத செட்டி, ஆற்றைக்கட்டி இறைப்பானா?

அவர்கள் மௌட்டியத்திற்கு இரக்கப்பட்டு, "ஏய், எதற்கப்பா இவ்வளவு அநர்த்தம் விளைக்கிறீர்கள். அக்கன்றை விட்டுவிட்டு வெளியே வாருங்கள்" என்றான் நமது சிறுவன். எல்லோரும் அவ்விதமே செய்ய, "பாட்டி, உன் பசுங்கன்றைக் கூப்பிடு" என்றான் அச்சிறுவன். "லக்ஷ்மி, அம்மா, வாடியம்மா, வா" என்றழைத்த குரலைக் கேட்டவுடன் காதுகளை உயர நிமிர்த்திக்கொண்டும், வாலை முறுக்கிக்கொண்டும், ஒரு பாய்ச்சலாக வந்து நின்றுவிட்டது கன்று கிழவியினருகில்.

குடியானவர்களின் அமிதமான வந்தனங்களைப் பெற்றுக்கொண்டு, அவன் தன்வழியே மறுபடியுஞ்செல்ல வாரம்பித்தான். அப்போது அவன் மனம் மறுபடியும் யோசனையிலழுந்தியது. "இதனால் என்ன அறிந்தேன். தீமையினால் தீமையை யோட்ட முடியாது. தீமையை யெவ்வளவிற் கெவ்வளவு பலாத்காரமாக ஒழிக்க முயலுகிறார்களோ, அவ்வளவிற் கவ்வளவு அது வேரூன்றி விடுகிறது. பக்ஷமாகக் கிழவி, கூப்பிட்டவுடன் ஓடிவிட்டதல்லவா அக்கன்று. ஆனால் அவள் கூப்பிட்டதும் போகாதிருந்தால், அப்பொழுதென்ன வாகும்? இதென்னவோ நமக்கு விளங்கவில்லை. எதற்கும் இன்னும் மூன்று நாட் பிரயாணந்தானே" என்று ஸித்தாந்தப்படுத்தியதற்கும், ஒரு கிராமத்தை யடைந்ததற்கும் ஸரியாயிருந்தது. அங்கு தங்கி, வெயில்தாழப் போகலாமென் றெண்ணி ஒரு வீட்டில் அநுமதிகேட்டு, அவன் சற்றுத்தங்கினான். அவ்வீட்டில் ஒருவன், கண்ணாடியொன்றைத் துடைப்பதைக் கருத்தாய்ப் பார்த்தான். கரிநிறைந்த அந்தத்துணியால் கண்ணாடியைத் துடைக்கும் போதெல்லாம், ஒரு புறமிருக்கும் அழுக்குக் கொஞ்சம்போகும், மற்றொருபுறம் 'பட்டையாக' கரிக்கோடுகள் விழும். இப்படி பல முறை அவன் செய்து கொண்டிருந்தான்.

"என்னப்பா செய்கிறாய்?"

"ஏன், தெரியவில்லையோ? இந்தப் பாழுங் கண்ணாடியைச் சுத்தமாகத் துடைக்கப் பார்க்கிறேன். கைவலிக்கிறதே யொழிய, அது சுத்தமான பாட்டைக் காணோம்."

"உன்னிடம் வேறு துணி யிருக்கிறதா?"

"இல்லையே."

"ஆனால், இந்தத் துணியைத்தான், கரி போக நன்றாகக் கசக்கி யுலர்த்திக்கொண்டு வா" என்றதும், அப்படியே செய்து வந்தனன் வீட்டுக்காரன்.

"இப்பொழுது துடைத்துப் பார்."

"ஆமய்யா, இப்போது சுத்தமாக விருக்கிறதய்யா. இந்த யுக்தி எனக்குத் தோன்றவில்லையே."

'ஸரி' யென்று அங்கிருந்து புறப்பட்டு, நடந்து நடந்து காலையில் மற்றொரு கிராமத்தை யடைந்தான். அங்கேயொருவீட்டில், தகப்பனும் பிள்ளையுமாக உட்கார்ந்து, கையில் ஒரு இழைப்புளியைக்கொண்டு முன்னாலிருக்கும் ஒரு சிறு ஆஸனப்பலகையை இழைக்க முயன்றுகொண் டிருந்தார்கள். ஆனால், அப்பலகை கெட்டியாகப் பிடிக்கப் படாததால், இழைப்புளியை வைத்து நகர்த்தும்போது, பலகையும் நகர்ந்து விடும். இப்படிப் பன்முறையும் பலகை நகர்ந்துபோகவே, என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

"ஏனய்யா, என்ன செய்யவேண்டும்? ஏன் விழிக்கிறீர்கள்?"

"ஐயா, இந்தப் பலகையை யிழைக்கப் பாடுபடுகிறோம். இப்பாழும் பலகை இழைக்க வரமாட்டே னென்கிறது."

"இங்கே கொண்டுவாரும் அந்தஆயுதத்தை."

"இதோ" என அதை வாங்கிப் பலகையைக் காலால் கெட்டியாக அமுக்கி இழைக்கவே, ஐந்து நிமிஷத்தில் பலகை 'வழவழ' வென்றாய் விட்டது. அவர்களுக்குண்டான ஸந்தோஷத்திற் கெல்லையில்லை. மிகுந்த கட்டாயத்தின் மேல், அங்கேயே பகல் போஜனஞ்செய்துவிட்டு ஸாயங்காலம் அடுத்த க்ராமத்தை யடைந்து ஒரு வீட்டில் தங்கினான்.

அவ்வீட்டுக்காரன் தாரமிழந்தவன். எனவே அவன் தன் கையால் சமையல் செய்து சாப்பிடும்படி நேர்ந்துவிட்டது. இரவு சமையலுக்கு அடுப்பு மூட்டவாரம்பித்தான். சிராய்த் தூள்களை நிறைய அடுப்பிலிட்டு நெருப்பு மூட்டினான். மந்தமாக எறிய வாரம்பித்தவுடன் பக்கத்திலிருந்து நான்கு விறகுகட்டைகளை மேலிட்டான். அக்கட்டைகள் ஈரமுலராதவை யாதலால், அடுப்பில் வைத்ததும், 'சிரா'யிலிருந்த ஜ்வாலையுமணைந்தது. மறுபடியும் ஒருதீக்குச்சி கிழித்தான்; மறுபடியும் விறகுகட்டைகளை மே

ஆமுடையானுக்குப் பொய்சொன்னாலும், அடுப்புக்குப் பொய் சொல்லலாமா?

லிட்டதும், ஜ்வாலை யடங்கிவிட்டது. இப்படியே தீப்பெட்டி பாதிக்கு மேலாய் விட்டதே யொழிய நெருப்புப் பிடித்து அடுப்பெரிந்து சமையலாகும் வழியைக் காணோம். நெருப்பவிந்தவுட னுண்டாகும் புகை கண்களிலிருந்தும், மூக்கிலிருந்தும் ஜலம் தாரையாய்க் கொட்டும்படி மேலும் செய்துவிட்டது.

"சீ, சனியனே, என்ன இழவைப் பண்ணித் தொலைக்கிறது? நல்லத்துக்கா அவள் செத்தாள். நலமோ, பொல்லாங்கோ, பசித்தவேளையில் இவ்வளவு பொங்கிப்போட்டு வந்தாளே. அவளைக் கொண்டுபோய் என்னைச் சோதிக்கணுமா இந்தப்பாழும் தெய்வம். க்ருஹசாரம்" என்று மறுபடியுமாரம்பித்தான். நம் கதாநாயகனும் பரிதாப மேலீட்டால், உள் நுழைந்து 'அப்பா' கொஞ்சம் விலகியிரு. நான் அடுப்பு மூட்டித் தருகிறேன்" என்று சிராயில் நன்றாகத் தீப்பிடிக்கும் வரை காத்திருந்து, பிறகு ஒவ்வொன்றாய், விறகை வைக்கவும், 'சடசட' வென்ற சப்தத்தோடு மெள்ளப் பற்றிக்கொண்டு, சில நிமிஷத்திற் கெல்லாம் அடுப்புச் சிரிக்கவுந் தலைப்பட்டுவிட்டது. அன்று அவ்வீட்டுக்காரனுடைய விருந்தாளியாக விருந்து, காலையில் நடந்த இளைப்பாறிவிட்டு, ஸாயந்தரம் ஒரு மாந்தோப்பண்டை வந்து சேர்ந்தான்.

தான் புறப்பட்டு நான்காவது நாள் ஸாயங்காலமாதலால், தன்னுத்தேசயமான மாந்தோப்பு இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று ஸித்தாந்தப்படுத்திக்கொண்டு, பர்ணசாலையிருக்குமிடந் தேடிச்சென்றான். அதைக் கண்டுபிடிக்க வெகு நாழிகையாகவில்லை. பதினைந்து நிமிஷத்தில் தோப்பு நடுவில் ஒரு சிறு பர்ணசாலையிருந்தது. ஆனால் மறப்பட்டைகளாலான ஒருவிதக் கதவால் மூடப்பட்டிருந்ததால், அதனருகிற்சென்று மெள்ளக் கதவைத் தட்டினான்.

"யாரங்கே?" என்றொரு சப்தம் புறப்பட்டது.

"உங்களுடைய ஒத்தாசையைக் கோரிய வோர் தீனன். ஸ்வயமாகப் பாபத்தைச் செய்த துஷ்டன். பிறன் செய்த பாபத்தையும் தன் தலைமேற்கொண்ட வோர் ஏழை. பாபங்களின் ப்ராயச்சித்த மார்க்கத்தை யறிந்து கொள்ள வந்தவன்" என்று விஸ்தாரமான பதிலளித்தான். உடனே கதவு திறக்கப்பட்டது.

உள்ளே நுழைந்ததும், ஸந்யாஸியின் தோற்றத்தைக்கவனித்தான். வயது ஸுமார் தொண்ணூறு இருக்கலாம். தேகமெங்கும் சுருக்கங் கண்டு, "பழுத்தபழ' மாயிருந்தார். பல்லென்பதே மருந்துக்குங் கிடையாது. கூனிக் குறுகியிருந்ததால் இயற்கையுயரத்தில் பாதியுயரமேயிருப்பதாகப் பார்ப்பவருக்குத் தோன்றும். ஆனால் அவரது பருத்து முற்றிய தலையும், அகன்று பின்னோடிய நெற்றியும், நீண்டு வளைந்த நாசியும், இவ்வளவு வார்த்தக்யத்திலும் ப்ரகாசஞ் சிறிது காட்டுங்கண்களும், அவரது அபாரமான புத்தி வைபவத்தைப் பறையறைவித்தன. உலகரகஸ்யத்தைக் கண்டறிந்தவர்போல், முகத்தில் சாந்தமும், பரிதாபமும், கருணையுமே தவழ்ந்தன. விசேஷமாக நடக்க சக்தியில்லாவிடினும், அப்பர்ன சாலையில் உலாவிவர வேண்டியதற்குப் போதுமான பலமிருந்தது. கையில் ஒரு ஊன்றுகோல் இருந்ததை நாம் சொல்லவேண்டியது அனாவசியம்.

இவை யனைத்தையும் ஒருக்ஷணத்தில் கவனித்துக்கொண்டு, அவர்பாதத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவரால் ஆசீர்வதிக்கப் பெற்றான்.

"ஏனப்பா, நீயார்? என்ன பாபத்திற்கு ப்ராயச்சித்தந் தேட இங்குவந்தாய்? பிறன் பாபத்தையும் நீ ஏற்றுக்கொள்ள எப்படி நேர்ந்தது?" என்று ஆணியடித்ததுபோல் மூன்று கேள்விகளைக் கேட்டார்.

உடனே தன் கதையை ஜநநகால முதல் ஆரம்பித்து, ஒன்றும் விடாமல் சொல்லி "இவைகளினின்றும், தீமையைத் தீமையால் பலாத்கரித்து அகற்ற முடியாதென்று மட்டும் அறிந்தேனே தவிர, எங்ஙனம் செய்வது என்பதை யின்னமறிந்தேனில்லை. அதை மட்டும் அநுக்ரஹிக்கவேண்டும்" என்று முடித்தான்.

ஒரு நிமிஷம் யோசனையி லாழ்ந்தார் வ்ருத்தர். பிறகு அப்பர்னசாலையின் வடமேற்கு மூலையாகக் கையைக் காட்டி "அங்கே ஒரு கைக்கோடரி யிருக்கும் பார். அதை யெடுத்து என் பின்வா' என்றார். அப்படியே, பழையதும், ஜாஸ்தி கூர்மையில்லாததுமான வோர் கோடரியை யெடுத்துக்கொண்டு பர்னசாலை

ஆமுடையாள் பலம் இருந்தால், குப்பை ஏறிச் சண்டை செய்யலாம்.

யைவிட்டு வெளியில் ஸந்யாஸியுடன் வந்து சேர்ந்தான். ஒரு மாதுளைமரத்தண்டை வந்து நின்றார் கிழவர். "இதோ, இந்தக் கிளையை வெட்டு" என்றார். வெட்டியாயிற்று. "அதை மூன்று பாகஞ்செய்" என்றார். அப்படியே செய்தான். "உள்ளேபோய் அடுப்பிலிருந்து ஒரு கொள்ளிக்கட்டை யெடுத்துவா" என்றார். அதுவும் வந்து சேர்ந்தது. "நெருப்பு மூட்டு" என்றார். ஆயிற்று. "இம்மூன்று துண்டுக்கட்டையையும், ஈரஞ் சுண்டும்படி எரி" என்னலும், அவை யப்படியே எரிக்கப்பட்டன. "மண்ணைத் தோண்டி அவைகளை நடு." நட்டான். "அதோ தெரிகிறதே அந்த நதியிலிருந்து உன் வாயில் ஜலங்கொண்டுவந்து இவைகளுக்கு ஊற்றி வளர். முதலாவது கட்டைக்கு, கண்ணாடி துடைப்பதற்கு நீ சொன்ன புத்தியை யுபயோகித்து ஜலமிட்டு வளர், இரண்டாங் கட்டைக்கு, தகப்பன் பிள்ளைக்குப் புத்திசொன்னதுபோல் வளர்ப்பாயாக. மூன்றாவது கட்டைக்கோ வென்றால் தாரமிழந்தவனுக்குச் சொன்ன புத்திமதியைப் போல் ஜலமிட்டு ரக்ஷி. இவ்வண்ணம் பயிரிட்டு, இம்மரக் கட்டைகள் துளிர்ந்து, எக்காலத்தில் மாதுளைச் செடிகள் மூன்றும் முளைக்கின்றனவோ, அன்றுதெரியும், தீமையை யகற்றுவதெப்படி யென்று. உன் ப்ராயச்சித்தமும் அன்றோடு முடிவுறும்" என்று சொல்லிவிட்டுப் பர்ன சாலைக்குட் போய்விட்டார்.

தன்னாலியன்றவரை யோசித்துப் பார்த்தான் கிழவர் சொன்னதின் அர்த்தம் என்னவாயிருக்கலாமென்று. அவனுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோ லிருந்தது. "ஸரி, என்ன தாத்பர்யமானாலென்ன, சொன்னபடி செய்வதே நமது கடமை" என்று தீர்மானித்து அவ்வாற்றுக்குச் சென்று தன் வாயாலேயே ஜலம் எடுத்து வந்து மரக்கட்டைகளுக்கு ஊற்றினான். வாயில் எவ்வளவு ஜலங் கொண்டுவரமுடியும்? மூன்று கட்டைகளுக்கும் போதுமான வளவு ஜலங் கொண்டுவர, பாதிராத்திரிக்கு மேலாயிற்று. நிரம்பவும் ச்ரமமாயிருந்தது. மேலும், அவன் மத்யாஹ்நந்தான் போஜனஞ்செய்தவன். ஆகப் பசியாயுமிருக்கவே, பர்னசாலைக்குப் போய்க் கிழவரைக்கேட்டு உண்பதற்கு ஏதாவது பெறலாம் என்ற யோசனையோடு உள்ளே நுழைந்தான். கீழேயிருந்த வொரு மான் தோல் விரிப்பில் படுத்திருந்தார் கிழவர். கிட்டப்போய் எழுப்புவதற்கு உத்தேசமாய் அவரைப் பன்முறை கூப்பிட்டான். சலனமேயில்லை. மனந்திடுக்கிட்டது. கையைப்பிடித்து நாடிகளைப் பரீக்ஷித்தான். நாசியருகிலும் மார்பிலும் காதுகளை வைத்துக் கவனித்தான். ஒன்றிலுமே உபயோகமில்லை யென்று கண்டுகொண்டான். கிழ ஸந்யாஸி பரலோகமடைந்து விட்டார்.

உடனே தனக்கிருந்த பசியை யெல்லாங் கூட மறந்து, அச்சந்யாஸியை யடக்கஞ் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி யோசித்தான். ஆச்ரமம் வாங்கினவர்களின் ப்ரேதத்தை, தகனஞ்செய்வது வழக்க மில்லையல்லவா ஹிந்துக்களுள்? ஆகவே, அவரைப் புதைக்கவோர் குழிதோண்ட வாரம்பித்தான் மறுநாட் காலை. அப்பர்னசாலையில் மீந்திருந்த சில தின்பண்டங்களை யருந்தி, படுத்துறங்கிய நேரம்போக, பாக்கி நேரத்தில் ஒரு குழிவெட்டியும், இரவில் நெடுநேரம் வாயில் ஜலங் கொண்டுவந்து, மாதுளங் கட்டைகளுக்கு வார்த்தும், அன்றைப்பொழுதைக் கழித்தான். மறுநாள் வெள்ளிக்கிழமை யாதலால், கிழச் சந்யாஸியின் ப்ரேதத்தை யெடுத்து அடக்கஞ் செய்யலாமென்றிருக்கும்போது, அருகிலுள்ள நகரத்திலிருந்து அநேக ஜனங்கள் வழக்கப்படி ஸந்யாஸியைப் பார்ப்பதற்காக வந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் கையில் கிடைத்ததைக் கிழவருக்கென்று கொண்டு வந்திருந்தார்கள். இங்கே வந்ததும், கிழவர் இறந்து போனதையும், தன் சிஷ்யனாக இவனைப் பாவித்ததையும் அவர்கள் அறியச்சொன்னான். அவர்களும் வேண்டிய உதவியைச் செய்துவிட்டு, கையிற் கொண்டுவந்த உண்டி, பழவர்க்கங்கள் முதலிய ஸகல ஸாமான்களையும், ஸந்யாஸி ஸ்தானத்தையடைந்த சிஷ்யனுக்குக் கொடுத்து, மறுபடியும் வந்து பார்ப்பதாகவுஞ் சொல்லிவிட்டுப் போயினர்.

வெளிநாட்டுச் சந்தா நேயர்களுக்கு

நம் நேயர்களில் பலர், சந்தா பாக்கியை அனுப்பாது மௌனம் சாதிப்பது எமக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கிற தென்பதை மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். —மானேஜர்.

ஆயக்காரன் அஞ்சு பணம் கேட்பான், அதாவெட்டுக்காரன் ஐம்பது பணம் கேட்பான்.

பனி மழை
DEW AND RAIN

உஷ்ணமானது பொருட்களை விரியச்செய்யும் தன்மை உடையது. ஜலத்தின்மேல் எவ்வித உஷ்ணமாவது பட்டால், அது கொஞ்சங் கொஞ்சமாய் ஆவியாக விரிந்து, மேலே எழும்பிப்போம். திருஷ்டாந்தமாக, ஒரு சட்டியில் கொஞ்சம் ஜலத்தை வார்த்து வெய்யிலில் வைத்தால், சூரிய உஷ்ணத்தினால் அந்த ஜலத்தினின்று ஆவி எழும்ப, அது படிப்படியாய் அளவில் குறைந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் போய்விடும். அல்லது, ஒரு பானையில் ஜலம் வார்த்து அடுப்பின்மேல் வைத்தால், நெருப்பின் உஷ்ணத்தால் பானையிலுள்ள ஜலம் ஆவியாக எழும்ப, அது வரவரக் குறைந்து, கடைசியில் ஒன்றுமில்லாமல் சுண்டிப்போம்.

இவ்வாறே பூமியின் மேற்புறத்திலுள்ள பற்பல சமுத்திரங்கள், கடல்கள், ஏரிகள், ஆறுகள் முதலியவற்றிலுள்ள ஜலமானது சூரிய உஷ்ணத்தால் இடைவிடாது நீராவியாக மாறுகின்றது. இப்படியுண்டாகும் நீராவி, ஆகாயத்தைப் பார்க்கிலும் இலேசானபடியால், அது மேலே எழும்புகின்றது. உயரப் போகப் போக அதிகக் குளிர்ச்சியுள்ளதா யிருக்குமாகையால், அக்குளிர்ச்சியினால் நீராவியின் அணுக்கள் நெருங்கிச் சேருகின்றன. இப்படி நெருங்கிச் சேருகிற நீராவிதான் மேகங்களாகின்றன.

நீராவியின் அணுக்கள் மிகவும் நுட்பமானவைகளாதலால், அவை சிதறியிருக்கையில், நமது கண்ணுக்குத் தெரிகிறதில்லை; ஆனால் அவை நெருங்கும்போது, புகைபோலும் மேகம்போலும் தோன்றும். உஷ்ணமானது பொருட்களை விரியச் செய்கிறதுபோல, குளிர்ச்சியானது, அவற்றைச் சுருங்க அல்லது நெருங்கச் செய்கின்றது. ஆகையால் நீராவியின் அணுக்கள்மேல் எவ்வித குளிர்ச்சியாவது பட்டால், அவைகள் நெருங்கச் சேர்ந்து, கடைசியில் நீர்த்துளிகளாக மாறிக் கீழே விழும். திருஷ்டாந்தமாக, உலைப்பானையின் வாயை ஒரு சட்டியைக்கொண்டு மூடிவைத்தால், பானைக்குள்ளிருந்து எழும்பும் நீராவியானது மேல்சட்டியில்போய் நிறையும். பின்பு அச்சட்டியை எடுத்துக் காற்று முகமாய்ச் சாய்த்தால் அதிலடைந்திருக்கும் ஆவியானது காற்றின் குளிர்ச்சியால் நெருங்கிச் சேர்ந்து நீர்த்துளிகளாகிக் கீழே விழுவதைக் காணலாம். சூரிய வெப்பத்தினால் சமுத்திரம் முதலியவற்றி னின்று ஆவியாக எழும்பிப் பின்பு மேகங்களாகிற நீராவிக்கும் இப்படியே சம்பவிக்கிறது.

மின்சாரத்தினாலாவது, அல்லது வேறு காரணத்தினாலாவது, மேகங்கள் சஞ்சரிக்குமிடத்திலுள்ள ஆகாயத்தில் சடுதியாய்க் குளிர்ச்சியுண்டாகும்பொழுது, மேகங்களி லடங்கிய நீராவியின் அணுக்கள் அதிக நெருக்கமாய்ச் சேர்ந்து நீர்த்துளிகளாகின்றன. இந் நீர்த்துளிகள் ஆகாயத்தைப் பார்க்கிலும் அதிக கனமுள்ளவைகளானபடியால், அவை மேகமண்டலத்தினின்று விசையாய் வந்து, பூமியின்மேல் விழுந்து, அதைச் செழுப்பிக்கின்றன. இதையே நாம் மழையென்று சொல்லுகிறோம். மழையுண்டாகும் விதம் இதுதான்.

உலகத்தின்கண்ணுள்ள மனிதன் முதலிய ஜீவகோடிகளனைத்திற்கும் ஆதாரமான புல் பூண்டு விருக்ஷங்கள் செழிப்பாய் வளர்ந்தோங்கித் தத்தம் பலனைக் கொடுத்துவரும்பொருட்டுப் பூமியாகிய விஸ்தாரமான தோட்டத்திற்குக் கடவுள் நீர்பாய்ச்சி, அதைப் பரிபாலனம் பண்ணும் விதம் மஹா விநோதமும் அதிசயமுமானது. எப்படியெனில், சமுத்திரத்தினின்று சூரிய உஷ்ணத்தினால் நீராவி எழும்பி மேகங்களாகின்றது. இம்மேகங்கள் சமுத்திரத்திற்கு மேலேயே நிற்காதபடிக்குக் காற்றுகள் அவற்றைப் பூமிக்குமேலே தள்ளிக்கொண்டு போகின்றன. பின்பு மேகமண்டலத்தில் மின்தாதுவினால் சில குழப்பங்கள் நேரிட்டு அதிகக் குளிர்ச்சியுண்டாக, மேகங்களிலுள்ள நீராவி மழைத் துளிகளாகி, பூமியின்மேல் விழுந்து பூண்டுகளைச் செழிக்கப் பண்ணிவிட்டுக் கடைசியில் ஆறுகள் வழியாகச் சமுத்திரம்போய்ச் சேருகிறது.

பனியுண்டாகும் விதத்தை நாம் கிரகித்துக் கொள்ளும்பொருட்டு, உஷ்ணத்தைப்பற்றிச் சில பிரமாணங்களை முதலில் கவனிக்க வேண்டும்.

ஒரு இரும்பு குண்டைப் பழுக்கக் காய்ச்சி ஓரிடத்தில் வைத்தால் அதிலுள்ள உஷ்ணம்

படிப்படியாய் அதை விட்டு நீங்க, அது முன்னிருந்த பிரகாரமே குளிர்ந்துபோம். இப்படி உஷ்ணம் அக்குண்டை விட்டு நீங்கும் விதம் யாதெனில்: (1) உஷ்ணமாக்கப்பட்ட அவ்விரும்பு குண்டைத் தொட்டுக்கொண்டிருக்கும் பொருள்களுக்குள் அதன் உஷ்ணம் கொஞ்சம் கொஞ்சமாகச் செல்லும். இதனால்தான் அப்பொருட்களுக்கு முன்னில்லாத உஷ்ண முண்டாகிறது. (2) ஒளியுள்ள வஸ்துக்களினின்று வெளிச்சத்தின் கதிர்கள் எத்திசையிலும் பறந்து போவதுபோல உஷ்ணமாக்கப்பட்ட அவ்விரும்பு குண்டினின்று உஷ்ணத்தின் கதிர்கள் எத்திசையிலும் பறந்து செல்கின்றன.

இதனால்தான் நாம் அவ்விரும்பு குண்டைத் தொடாது சற்றுத் தூரத்திலே நின்றாலும் அதிலுள்ள உஷ்ணம் நம்மேல் வந்து தாக்குகின்றது. மேலேகாட்டிய இவ்விரண்டு வகைகளால்தான் உஷ்ண மாக்கப்பட்ட பொருள்களெல்லாம் வரவரத் தம்மிடமுள்ள உஷ்ணத்தை இழந்து சுற்றிலுமுள்ள பொருட்களுக்குச் சமமாய்க் குளிர்ந்துபோகின்றன.

உஷ்ணமாக்கப்பட்ட பொருள்களினின்று உஷ்ணத்தின் கதிர்கள் வெளியே பறந்துபோய் அவைகள் குளிர்ந்து போகின்றனவென்று சொன்னோம். ஆனால் சிலவகைப் பொருள்களிலிருந்து உஷ்ணம் விரைவாயும் அதிகமாயும் வெளியே செல்லுகின்றது. வேறு வகைப் பொருட்களினின்றோ உஷ்ணம் வெகு தாமசமாயும் மிதமாயும் வெளிப்படும். திருஷ்டாந்தமாக, கல் மண் முதலிய பொருட்களைப் பார்க்கிலும் புல் பூண்டு விருக்ஷங்களி லிருந்தும், வெள்ளை நிறமுள்ள வஸ்துக்களைப் பார்க்கிலும் கறுப்பு நிறமுள்ள வஸ்துக்களி லிருந்தும், பளபளப்பும் நுணுக்கமுமான பொருட்களைப் பார்க்கிலும் மங்கலும் கரடுமுறடுமான பொருட்களிலிருந்தும், உஷ்ணமானது அதிகமாயும் விரைவாயும் வெளிப்பட, அவ்வஸ்துக்கள் வெகு சீக்கிரத்தில் குளிர்ந்துபோம்.

சூரிய கதிர்களாலும், வேறு காரணங்களினாலும், பூமியானது உஷ்ணமாக்கப்படுகிறது. இப்படிப் பூமிக்கு உண்டாகும் உஷ்ணம் பூமியினின்று இரவும் பகலும்இடைவிடாது வெளிப்பட்டு ஆகாய வழியாய்ப் பறந்து போகின்றது.

ஆனால் பகல் காலத்தில் உஷ்ணத்தின் கதிர்கள் பூமியினின்று புறப்பட்டு ஆகாயமார்க்கமாகச் செல்லச்செல்ல, சூரியனிடத்தினின்று உஷ்ணத்தின் கதிர்கள் பூமியின்மேல் விழுந்து அதற்குள் பிரவேசிக்கின்றன. ஆகையால், பகலில் பூமியினின்று வெளிப்படுகிற உஷ்ணமும் ஏறக்குறைய ஸமமாகின்றது. இரவிலோ, இப்படியல்ல. அப்பொழுது சூரியனுடைய கதிர்கள் பூமியின்மேல் படாதிருக்க, பூமியினின்றுமாத்திரம் உஷ்ணம் பகலில்போலவே வெளிப்பட்டுக்கொண் டிருக்கு மாகையால் பூமி வரவரக் குளிர்ந்து தன்னைச் சுற்றியிருக்கும் ஆகாயத்தைப் பார்க்கிலும் அதிகக் குளிர்ச்சியுள்ள தாகின்றது. பூமி அதிகக் குளிர்ச்சியுள்ளதாகவே, அதை ஒட்டிக்கொண் டிருக்கும் ஆகாயத்தின் அடிப் பாகமும் குளிர்ந்து, அதி லடங்கியிருக்கும் நீராவியானது குளிர்ச்சியினால் நெருங்கி, கனங்கொண்டு பனியுருவம் தரித்துப் பூமியின்மேல் விழுகிறது. உஷ்ணத்தினால் பூமியிலிருந்து எழும்பும் நீராவியானது மேகங்களாகிறதுந் தவிர, அதில் ஒரு பாகம் ஆகாயத்தில் நன்றாய்க் கலந்திருக்கும். எவ்வேளையிலும் எவ்விடத்திலும் ஆகாயத்தில் கொஞ்சமேனும் நீராவி கலந்திருக்குமேயல்லது வேறல்ல. ஆகையால், பூமியின் மேற்புறம் அதிகமாய்க் குளிர்ந்த உடனே அதோடு ஒட்டியிருக்கும் ஆகாயத்தின் அடிப் பாகத்திலுள்ள நீராவியானது குளிர்ச்சியினால் நெருங்கிப் பனியாகப் பெய்கிறது. இதுவே பனியுண்டாகும் விதம்.

பகலில் வெய்யில் காய்ந்து, இரவில் காற்றும் மேகங்களும் இல்லாமலிருந்தால், அவ்விரவில் பனி அதிகமா யுண்டாகும். இதற்கு முகாந்திர மென்னவெனில், பகலில் அதிகமாய் வெய்யில் காயுமானால், சூரிய உஷ்ணத்தால் பூமியினின்று அதிக நீராவி எழும்பி ஆகாயத்திற் சேரும். ஆகாயத்தில், அதிக நீராவி அடங்கியிருந்தால் பூமி குளிரும்போது அதிகமான பனி யுண்டாவதற்கு இடமுண்டாகும். இரவில் பூமிக்கு மேலே மேகங்கள் முதலிய தடைகள் ஒன்றுமில்லாதிருக்கும்போது, பூமியினின்று உஷ்ணத்தின் கதிர்கள் வெகு தாராளமாய் எழும்பிப்போக இடமிருக்கும். அதனால் பூமி விரைவாய்க் குளிர்ந்துவிடும். இக்குளிர்ச்சியினால் ஆகாயத்திலிருந்திருக்கும் நீராவி குளிர்ந்து நெருங்கி மிகுந்த பனி பெய்யும். மேகங்கள் இருக்குமானால், பூமியினின்று எழும்பும் உஷ்ணத்தின் கதிர்கள் மேகங்களை எட்டின உடனே அவற்றால்தடைபட்டுத்திரும்பிப் பூமியினிடத்திற்கே வரும். இதனால் பூமி தகுந்த அளவு குளிர இடமிராது. ஆகையினால் ஆகாயத்திலுள்ள நீராவி குளிர்ந்து பனியாக மாற ஏதுவு மில்லாமல்போம். மேலும், பூமிக்கு மேல் சற்று உயரத்தில் ஒரு மரப் பலகையாவது அல்லது வேறெந்த மறைவையாவது வைத்திருந்தால் பலகைக்குக் கீழுள்ள பூமியினின்றும் எழும்பும் உஷ்ணத்தின் கதிர்கள் பலகையால் தடைபட்டுத் திரும்பிப் பூமிக்கே வருமாகையால், அப்பூமி தகுந்த அளவு குளிராமல் அதை அடுத்திருக்கும் ஆகாயத்திலுள்ள நீராவி பனியாக மாற இடமிராது. இதனால் அப்பூமின்மேல் பனி படிந்திராது. ஆனால் அப்பலகையின் மேல்பக்கத்திலிருந்து எழும்பும் உஷ்ணத்தின் கதிர்கள் தடையின்றி ஆகாய மார்க்கமாய்ச் செல்ல, அது சீக்கிரத்தில் குளிர்ந்து அதை யடுத்திருக்கும் ஆகாயத்திலுள்ள நீராவி பனியாகி, அதன்மேல் படிந்திருக்கும் காற்று வீசிக்கொண் டிருக்கும்போது பூமியை அடுத்தாற்போலிருக்கும் ஆகாயம் நிலைமாறிக்கொண் டிருக்குமாகையால், அதில் அடங்கிய நீராவியானது போதுமான அளவு குளிர்ந்து பனியாக மாற இடமிராது. இதனால் காற்றுள்ள சமயத்தில் பனியிராது.

சிலவகை வஸ்துக்களினின்று உஷ்ணம் அதி விரைவாய் நீங்க, அவைகள் அதி சீக்கிரத்தில் குளிர்ந்துபோகின்றனவென்று முன் சொன்னோம். அப்படிப்பட்ட பொருள்களை அடுத்திருக்கும் ஆகாயத்தில் அடங்கியிருக்கும் நீராவி அதி சீக்கிரத்தில் குளிர்ந்து, பனியாகி அவற்றின்மேல் படிந்திருக்கும். இதனால்தான் கல் மண் முதலியவற்றைப் பார்க்கிலும் புல் பூண்டு விருக்ஷங்கள்மேலும், வெள்ளைநிறமுள்ள வஸ்துக்களைப் பார்க்கிலும், கறுப்பு நிறமுள்ள வஸ்துக்களின்மேலும் பளபளப்பும் நுணுக்கமுமான வஸ்துக்களைப் பார்க்கிலும் மங்கலும் கரடு முறடுமான வஸ்துக்களின்மேலும், பனி அதிகமாய்ப் படிந்திருப்பதைக் காண்கிறோம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

குழந்தையை வளர்த்த பெண் ஓநாய்

காட்டில் வாழும் மிருகங்களுக்கு அன்பு முதலிய நற்குணங்கள் இருக்கின்றனவா? ஆம், இருக்கின்றன. மனிதர்கள் தம் குழந்தைகளை எவ்வளவு அன்புடன் வளர்க்கின்றார்களோ, அவ்வளவு அன்புடன் பட்சிகளும், மிருகங்களும், தத்தம் குஞ்சுகளையும் குட்டிகளையும் வளர்க்கின்றன. பூனையையாவது நரியையாவது கண்டபோது கோழி தன்குஞ்சுகளை அழைப்பதும், தன்னிடமிருக்கும் கன்றைப் பிரிக்க ஒருவன் வந்தால் அவனைக் கொம்புகளால் முட்டிப் பாயவரும் பசுவையும், நாம் அடிக்கடி காண்கிறோம். ஸாதாரணமாய், ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தையாவது, அல்லது அதன் குட்டியையாவது அன்புடன் உறவு கொண்டாடுவ தில்லை. ஆனால், பின்வரும் கதையினால் காட்டு மிருகங்களும் அன்பு ஜீவகாருண்யம் முதலிய குணங்களை உடையனவாயிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஓநாய்களும், சிறுத்தைகளும் நிறைந்த காட்டின் அருகே ஒரு கிராமம் இருந்தது. அவ்வூரிலிருந்த குடியானவள் ஒருத்தி, தன் இளங் குழந்தையுடன் சுள்ளி பொறுக்குவதற்காக அக்காட்டிற்குள் சென்றாள். அவளது கணவன் கூலி வேலைசெய்து அன்றாடம் பிழைத்து வருபவன். அவர்களுக்கு வெகு நாள் கழித்து, பல கோயில்களில் பூஜை செய்த பிறகு, ஒரு பெரியவரின் ஆசீர்வாதத்தால் அக்குழந்தை பிறந்தது. குழந்தை பெரிய ஸ்திதிக்கு வருவான் என்று அப்பெரியவர் கூறியிருந்தமையால், பெற்றவர்கள் மிகவும் ஆசையுடன் குழந்தையை வளர்த்து வந்தார்கள்.

சுள்ளிபொறுக்கப்போன ஸ்திரீ, குழந்தையை மரத்தடியில் விட்டுவிட்டு, பக்கத்தில் சுள்ளி

பொறுக்கிக்கொண்டிருந்தாள். திடீரென உறுமுதல் கேட்டது. அவள் திரும்பிப்பார்த்தாள். ஆ! பருத்த கோர முகமும், வெறித்து நோக்கும் கண்களும், பயங்கரமான பற்களுமுள்ள ஓநாயொன்று புதரொன்றிலிருந்து இவளைப்பார்த்து உறுமிற்று. பார்த்தாள். அந்த ஸ்திரீ பயத்தால் நடுநடுங்கி, பொறுக்கின சுள்ளிகளைக் கீழே எறிந்துவிட்டு, தன் குழந்தையின் ஞாபகமின்றி, அலறிக்கொண்டே ஓடினாள்.

அவள் ஊருக்குச் சென்ற பிறகே தன் குழந்தையின் நினைவு அவளுக்கு வந்தது. "ஐயோ! என் குழந்தையை விட்டுவிட்டு வந்தேனே.—பாவி" என்று அலற, அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவளழுகையைக் கேட்டு நடந்தவைகள் அனைத்தையும் அறிந்தனர். உடனே புருஷர்கள் இருபது பேர் கையில் தடிகளும், கத்திகளும் எடுத்துக்கொண்டு அந்த ஸ்திரீயுடன் அவள் சுள்ளிபொறுக்கின இடம்சென்றனர். அங்கு குழந்தையைக் காணேம். ஐயோ குழந்தையைக் கைவிட்ட துரோகியானேனே!" என்று அழுது, புலம்பிக் கொண்டிருந்தாள் அக்குழந்தையின் தாய்.

முன்னே குழந்தை பிறப்பதற்குமுன் ஆசீர்வாதம் செய்த பெரியவர் வர, அவரைக் குடியானவனும் அவன் மனைவியும் கண்டு முறையிட்டனர். பெரியவர் அவர்களைப் பயப்படாதிருக்கும்படி சொல்லி, அவர்கள் குமாரன் இறக்கவில்லை யென்றும், இன்னம் சில வருஷங்கள் கழித்து, திரும்பிவருவானென்றும் கூறிச் சென்றனர். இதைக்கேட்டு மனப்பால் குடித்துக் காலங் கழித்து வந்தனர் கணவனும் மனைவியும்.

பத்து வருஷங்களுக்குப் பிறகு, அக் குடியானவன் மனைவி அந்தக்காட்டினருகே போயிருந்தாள். அவளுடன் சில ஸ்திரீகளும், புருஷர்களும் வந்திருந்தனர். சுள்ளி பொறுக்கிக்கொண்டு ஸ்திரீகளும், மரத்தை வெட்டிக்கொண்டு புருஷர்களுமிருக்கும்போது, ஓநாய்க்கூட்ட மொன்று இவர்களிருக்கும் வழியாக ஓடி, பல மனிதர்கள் இருப்பதைக்கண்டு, ஓட்டம் பிடித்தது. அக்கூட்டத்தோடு சிறுவனொருவனும் ஓடிவந்தான். ஓநாய்கள் ஓடிவிட்ட போதிலும், இவன் ஓடாமல், வேலை செய்துகொண்டிருந்தவர்களைக்கண்டு வியப்புற்று நின்றான். குடியானவர்கள் அவனைக் கூப்பிட்டு ஓநாய்களிடம் அவனிருக்கக் காரணம் என்னவென்று கேட்டார்கள். அவன் தனக்குப் புத்தி தெரிந்ததுமுதல் ஓநாய்களிடமே வளர்ந்துவந்ததாகவும், பெரிய பெண் ஓநாய் ஒன்று தனக்கு உணவு வெகு நாள் கொண்டுவந்துகொடுத்ததாகவும், பிறகுதானே கிழங்கு கனி முதலியவைகளைத் தின்று பிழைத்துவருவதாகவும் சொன்னான். இவன் சொன்ன கதையும், தோற்றமும், தன் குழந்தையை யிழந்தவளுக்கு, காணமற் போன குழந்தை இவன்தானோ என்ற ஸந்தேஹத்தை உண்டாக்கிற்று. பையனை அழைத்து அவனுடம்பிலுள்ள மச்சம் முதலிய அடையாளங்களைக் கண்டதும், தன் குழந்தைதானென்று நன்றாய் அறிந்தாள் அந்த ஸ்திரீ. அவள்மனம் பூரித்தது. தன் மகனைக் கட்டித்தழுவி, ஊருக்கழைத்துக்கொண்டுபோய்த் தன் பந்துக்களுக்கெல்லாம் விருந்துசெய்வித்தாள். பிள்ளை பெற்றெடுத்துப் பிறகு பிரிந்த தாயாருக்குத் தன் குழந்தையைக் கண்டபோது எவ்வளவு ஸந்தோஷமுண்டாயிருக்கும் என்பதை நீங்களே அறிந்துகொள்ளலாம்.

சில வருஷங்கள் கழிந்தன. ஓநாயால் வளர்க்கப்பட்டுவந்தசிறுவன், பெரியவனாகித் தேகபலமும் திடகாத்ரமும் பொருந்தியவனான். அவன் பெற்றவர்களும் ஏழ்மைநீங்கி ஸுகமாக இருந்தனர். அருணாசலம் என்று பேர்கொண்ட இவன் ஊருக்குப் பெரியவனாகி, தன்னூரிலேயே பெரியமனிதன் ஒருவனுடைய மகளையும் விவாகம் செய்துகொண்டான். அன்பு, ஆதரவு, ஜீவஜந்துக்களிடம் தயை முதலிய குணங்கள் நிறைந்தவனாய் இருந்தான்.

காட்டிலிருந்த கொடிய விலங்குகளால் ஊருக்குக் கெடுதி அதிகம்உண்டாயிற்று. பசுக்களும் மாடுகளும், கோழிகளும் ஓநாய் சிறுத்தை முதலியவைகளால் மிகவும் கஷ்டப்பட்டன. இதைத் தீர்க்கவேண்டுமென்று ஊரார் தீர்மானித்து, தடி முதலிய ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு காட்டைச் சுற்றிக்கொண்டனர். அன்றைய தினம் கொல்லப்பட்ட கொடிய விலங்குகள் அநேகம்.

காட்டின் மத்தியில் வேட்டையாடுபவர்கள் வந்தனர். அருணாசலமும் அங்கே நின்றுகொண்டிருந்தான். 'ஓநாய், ஓநாய்!' என்ற கூச்சல் உண்டாயிற்று. அனைவரும் தம் கையிலிருந்த தடிகளைக் கெட்டியாய்ப் பிடித்தனர். உடம்பெல்லாம் ஒடுங்கி, எலும்புதெரிய, கோரமான பற்களையுடைய கிழ ஓநாய் ஒன்று புதரினின்று ஓடிவந்தது. அது சுற்றியிருக்கும் தடிபிடித்த கூட்டத்தைக் கண்டு சற்றுத்திகைத்தது; மனிதக் கூட்டத்தைச் சுற்றிப்பார்த்தது. பிறகு ஒரே பாய்ச்சலில் அருணாசலமருகே வந்து, அவனடையாளம் பார்ப்பதுபோல முகத்தைச் சற்றுநோக்கி, தன் முகத்தை அவனருகே வைத்தது.

அருணாசலம் அதைக் கண்டதும் ஸந்தோஷமடைந்தான். "அம்மா, நீயா, இத்தனை நாளாய் எப்படியிருந்தாய்! உன்னை ஒருவரும் கொல்ல மாட்டார்கள். என்னுடன் வா" என்றான்; தன்னை வளர்த்த ஓநாய் அதுதானென்று சுற்றியிருப்பவர்களிடம் கூறினான். அனைவரும் ஆச்சரியமடைந்தனர். தன்னுடனேயே அந்தக் கிழ ஓநாயை அழைத்துக்கொண்டுபோய், தன் வீட்டில் அதற்கு உணவுவைத்து, "அம்மா, தினந்தோறும் நீ இங்கே வந்து விட்டுப்போ. உன்னைக் காப்பாற்றுவது என் கடமை" என்று சொல்லி அதை அனுப்பினான்.

இறக்கும்வரை அது அவன் வீட்டிற்குத் தினந்தோறும் வந்துகொண்டிருந்தது. குழந்தைகளையாவது, ஜந்துக்களையாவது அது ஒன்றும் செய்வதில்லை. அவ்வூராரும் அதை அன்புடன் நடத்தினர்.

இதுவன்றோ உண்மை அன்பு! பச்சைப் பாலகனை அந்த ஓநாய் வளர்த்தது அக்குழந்தையின் சிறுவயதில். ஓநாயின் கிழதிசையில் அதன் ஸ்வீகாரப்பிள்ளை அதை வளர்த்தான். ஜாதியென்ன பேதமென்ன அன்பில்!

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி: 18-வரம்

இதற்குள் தேர் வெகுதூரஞ் சென்றுவிட்டது. அவ்வாறு செல்லும்போதெதிரில் கண்ட தான்றி மரத்தைச் சுட்டிக்காட்டி, "வல்லமை மிக்க வாஹுகரே! எனக்கு எண்ணுவதில் உள்ள சாமர்த்தியத்தை உமக்குக் காட்ட விரும்புகிறேன். 'எல்லார்க்கும் ஒவ்வொன் றெளி'தல்லவா? வித்தைகள் எல்லாவற்றையும் முழுதும் உணர யாவர்க்கும் முடியாது. அவ்வாறு இருந்தால் கடவுளுக்கும் அவருக்கும் பேதமெப்படி ஏற்படும்? ஆகவே கடவுள் எல்லாப் படிப்பையும் ஒருவனுக்கே தந்திரார்; அதோ அங்கு தெரியும் தான்றி மரத்தில் இத்தனை காய்கள், இத்தனை இலைகள், இத்தனை பூக்கள், இத்தனை கிளைகள் இருக்கின்றனவென்று என்னால் சொல்லக்கூடும். அதோ கீழ் வீழ்ந்திருக்கும் கிளையில் இருக்கும் இலைகள் நூறல்ல; அதற்குமேல் ஒன்று. அதிலிருக்கும் பழத்தின் தொகையு மவ்வளவே. இதோ நம்புறமாக விழுந்துகிடக்கும் தான்றிக் காய்களின் தொகை ஒன்றுடன் சேர்ந்த ஆயிரமாகும். நம் கண்ணெதிரே இருக்கும் இரண்டு கிளைகளிலும் உள்ளன ஐந்து கோடி இலைகள்; மேலொன்றுங் கிடையாது. நம் வலப் பக்கமாகச் சாய்ந்து கிடக்கும் பெருங்கிளையில், அதன் சிறுகிளைகளுள்பட உள்ள பழங்கள் இருபது நூற்றுக்குநூறுடன் ஐந்து குறைவு" எனவெகு உத்ஸாகத்துடன் சொல்லிக்கொண்டிருந்தான்.

இம்மொழிகளை வாஹுகனால் நம்ப முடியவில்லை. அவற்றைப் பரீக்ஷித்து உண்மையறிய வேண்டுமென அவனுக்கு அவா எழும்பியது. உடனே அவன் தேரை நிறுத்தி, ருதுபர்ணனைப் பார்த்து "அரசரேறே! நீங்கள் சொல்லுவதை அத்தாக்ஷியில்லாது என்மனம் ஒப்ப இடந்தரவில்லை. கோபித்துக் கொள்ளக் கூடாது. இத்தான்றிமரத்தை வெட்டி நீங்கள் சொல்லிய கணக்கைப் பரிசோதிப்பேன். அதன்பின் தாங்கள் எது சொல்லினும் நம்புவேன். பிரத்யக்ஷ அனுபவத்தாலன்றோ ஐயம் அறவேண்டும்? அதுவரையில் தயவு செய்யும். இதோ ஒரு க்ஷணிக நேரத்திற்குள் அவ்வாறு உம்மெதிரிலேயே செய்து வருகிறேன். அதுவரை வார்ஷ்ணேயன் குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்துக் கொள்ளட்டும்" என் வெகு ஆவலுடன் சொன்னான்.

"இவ்வாறு தாமஸஞ் செய்ய இதுவல்ல ஸமயம். இதை நீயே அறிவையன்றோ?" என்றான் ருதுபர்ணன்.

"அப்படி யொன்றும் உமக்குக் காலதாமஸம் ஏற்படாது. ஒரு விநாடிப் பொழுதுதான் யான் வேண்டுவது. அதுவரை உமக்குத் தாமஸிக்க முடியாத அவஸரமானால் ஒன்று செய்யும். இதோ நேரே போகும் வழிதான் விதர்ப்பத்திற்கு வழி. வார்ஷ்ணேயன் என்னைப்போலவே தேரை வெகு விரைவாக ஓட்டுவான். அவனைக்கொண்டு நீங்கள் உடனே விதர்ப்பையடையும். நான் இதற்குள் இத்தான்றிக் கிளைகளில் இருக்கும் இலைகளையும் பழங்களையும் எண்ணி உமது, கணித ஸாமர்த்தியத்தை யறிந்து மகிழ்வேன். தயவு செய்யும், சீக்கிரம்! சீக்கிரம்!" என்று சொல்லிக்கொண்டு தேரைவிட்டு நளன் குதிக்க யத்தனித்தான்.

இதைக் கண்ட அயோத்திக் கரசன் "இது ஏது கிணறுவெட்டப் பூதம் புறப்படுவதுபோலாயிற்றே! பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல நமது மொழிகள் எதிர்பாராதபடி கார்யத்தை விளைத்துவிட்டதே" என நினைத்து, வாஹுகனை நோக்கி "ஐயா வாஹுகரே! முன் வைத்தகாலைப் பின்வைப்பது தங்களுக்கு நீதமா? உம்மிலும் ஸாரத்யத்தில் வல்லவர் உலகத்தில் இல்லை. உம்மாலே யல்லவா விதர்ப்பம் அடைய யான் விருப்பமுற்றது? படித்தறிந்த பெரியோர்கள் சரணடைந்தவரைத் தள்ளுவ துண்டோ? நீங்கள் இருக்க எனக்கென்ன குறை? ஸாயங்காலத்திற்குள் நாம் விதர்ப்பம் போய்ச்சேரவேண்டும். அது தவறாதிருக்க வேண்டியது. இவ்விஷயத்துக்குத் தடை ஏற்படாமல் நீங்கள் எது செய்தாலும் எனக்கு இஷ்டந்தான்; எது செய்யச் சொன்னாலுஞ் செய்கிறேன்" என்று சொன்னான்.

"யான் இந்தத் தான்றிக் கிளையிலுள்ள இலைகாய்களை எண்ணித்தான் தேரை விடுவேன். அதுவரை எனக்குச் செலவு தரவேண்டும். அதனால் ஒருவித இடையூறும் உமக்குண்டாகாது பார்த்துக்கொள்வ தென் கவலை. சற்றே பெரிய மனங்கொண் டெனக்கு உத்தரவளிக்க விரும்புகிறேன்" என வாஹுகன் கேட்க, ருதுபர்ணனும் அதற்கிணங்கினான். "வாஹுகரே! ஒரு பானைச் சோற்றுக்குப் பதம்பார்ப்பது, பருக்கை ஒன்றையே யல்லவா? அம்மாதிரியே அக்கிளையில் யான் குறிப்பிட்டுச் சொன்ன சிறு கிளையைமாத்திரம் எண்ணிப் பாரும். அதிலிருந்து, யான் சொல்வதின் உண்மை முழுதும் விளங்கும். அதனாலேயே உமது மனத்துக்குச் சமாதான மேற்படும்" என்று மேலுங் கூறினான். உடனே வெகு ஸந்தோஷத்துடன் வாஹுகன் தேர்விட் டிழிந்து, தான்றிக்கிளையை யடைந்து, அதிலிருந்த இலை, காய், பழங்களை எண்ணி, அரசன் சொல்லியவாறேயிருக்கக்கண்டு, ஆச்சரியமுற்று, அளவிலானந்தத்தில் ஆழ்ந்து, "அரசச் சிங்கமே! உமது கணக்கிடும் வல்லமை புகழ்தற்குரியது. அது அதி அத்புத சக்தி. அதை யான் இன்று காணப் பேரானந்த மடைகிறேன். எவ்வழியே இவ்வித்தையைக் கற்றீரோ அதை யறிய விரும்புகிறேன். எனது அவாவைப் பூர்த்தி செய்வீரென நம்புகிறேன்" என ருதுபர்ணனைக் கேட்டனன்.

பாடத் தெரிந்தவனைப் 'பாடு'என்று கேட்டால் மயங்குவதுபோல, ருதுபர்ணன் சற்றே யோசித்துப் பேசாது மௌனமாயிருந்தான். ஆனால் அவனுக்குத் தன் காரிய மாகவேண்டிய தொருபாலிருக்க, வாஹுகனிடமிருந்து அசுவவித்தையைக் கற்கவேண்டுமென்ற அவாவுமிருந்தது. எனவே அவன் அதற்கிணங்குமுன், வாஹுகன் "அரசே! என்னிடமிருந்து குதிரைச் சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளும். எனக்கு உமது கணித சாஸ்திரத்தைச் சொல்லிக்கொடும். உமக்கென்ன வித்தைகள் தெரியும்? தயவுசெய்யலாமன்றோ?" என்றான். "எனக்குச் சொக்கட்டானாடும் வித்தையும், கணக்கிடும் சாஸ்திரமும் நன்குதெரியும். உமக்கவற்றைச் சொல்லித்தருகிறேன்; பெற்றுக்கொள்ளும்" எனச்சொல்லி ருதுபர்ணன் அவ்விரண்டு நூல்களையும் வாஹுகனுக்கு உபதேசித்தான்; மேலும் விதர்ப்பத்தை அடையும் ஆத்திரத்தில் "எனக்கு நீங்கள் தரவேண்டிய குதிரைச் சாஸ்திரத்தை உம்மிடமே வைத்திரும். நான் பின் கற்றுக்கொள்கிறேன்" எனவும் சொன்னான்.

வாஹுகன் சொக்கட்டான் கல்வியைப் பயின்றதும், நளனுடைய உடம்பில் தங்க முடியாது கலி தத்தளித்தான். கார்க்கோடகனுடைய விஷத்தின் கொடுமையால் தபித்துக் கொண்டிருந்த கலிக்கு நளனுடையதேகத்தில் இதன்மேல் இருப்பது பெருங் கஷ்டமாயிற்று. எனவே அவன் வாஹுகனது தேக

த்தைவிட்டு வெளிவந்து, நளன்முன் நிற்கப் பயந்தவன்போல ஓடலானான். அதே சமயம் நளனைப்பற்றியிருந்த கலியின் கொடுஞ்சாபத்தீ அவிந்து செயலற்றது. அச்சமயம் பந்தத்திலிருந்து விடுபட்டவர் திகைத்துவிளங்குவதுபோல நளமன்னவர் மயங்கிக் கிடந்தனர்.

இதற்குள், நளனது உடலைவிட்டு வெளிவந்த கலி, கார்க்கோடகனது விஷத்தைக் கக்கிக்கொண்டு தன்னுருவ மடைந்தான். கலியைக் கண்டதும் நளனுக்குவந்த கோபத்திற்கு அளவே யில்லை. கலியைச் சபிக்கவே அவன் எண்ணங் கொண்டான். நளமன்னவரது உள்ளக் கருத்தை யுணர்ந்த கலியன் நடுநடுங்கிப் பயந்து, தன்னிருகரங்களையுங் குவித்து வெகு வணக்கத்துடன் மேல் வருமாறு வேண்டினான்:—

"ராஜசிங்கமே! கோபம் சண்டாளம்: அதை அடக்கலே பெரியோர்க்கு அழகு. செத்தபாம்பை யடிப்பதால் என்ன பிரயோஜனம்? நீர் உமது மனைவியைப்பிரிந்ததுமே என்னை அவள் சபித்துவிட்டாள். அச்சாபத்தின் வேகத்தைத் தாங்கமுடியாது பட்டபாடு சொல்லவும் பெறுமோ? போதாக்குறைக்கு, பட்டகாலிலே படும் என்றபடி, உம்மைக் கடித்த கார்க்கோடகனது விஷம் என்னையே கொளுத்தி வந்தது. ஸத்யம் தருமம் தயை முதலிய நற்குணங்கள் தவறாத உம்மிடம் அவ்விஷத்தின் வேகம் தலைகாட்டமுடியவில்லை. பொறுமையால் உமக்குக் கெடுதியே நாடிய யான் உம்மிடம் குடிகொண்டிருந்தபோது, அது என்னை என்ன பாடுபடுத்தியது! நீரோ மகான்; தர்மசிரேஷ்டர்; உத்தமவீரர்; தயையே யுருவெடுத்தவர். யானோ கலியன். என் பேரைக் கேட்டாலே எவரும் நடுங்குவர். பிறர்க்குக் கெடுதி செய்வதே என் வழி. எனினும் உம்மையே சரணடைகின்றேன்.

தீர்வருமின்னல் தம்மைச்செய்யினுஞ்செய்யசிந்தை
பேரருளாளர் தத்தஞ்செய்கையிற்பிழைப்பதுண்டோ
கார்வரை தன்னைநிறுத்திக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய அமிழ்துபண் டளித்த தன்றே!

ஆகையால் நீங்கள் என்னிடம் கோபிக்கமாட்டீர் என்பது என் திடமான நம்பிக்கை. உம்மிடம் எனக்கு ஆத்திர மிருந்தது உண்மைதான். எனினும் உம்மிடம் பகை என்பதுகிடையாது. உத்தம குணங்களுடையவரை எப்படிப் பகை யணுகும்? குணக்குன்றேறி நின்றார்க்கு எதனால் கெடுதியுண்டாக்க முடியும்? உமது புகழினும், உமது மனைவியின் கற்புயர்வுடைத்து. உமது குணகணங்களுக்கியைந்த மனைவி அவளே யாவள். யான் செய்த தவறை மன்னித்து என்னைக் காப்பாற்றும். உமக்கு நன்மையே யான் இனிச் செய்வேன்; உமக்கு இழைத்த தீங்கனைத்தையு மொழிப்பேன்; உமக்கோர் வரமுந்தருவேன்;

இழைத்த தீவினை தணந்தனன்; இன்றுதொட்டுன்
வழுத்தினாரையு மருவலன் மன்ன!

[பேர்பக்தியுடன் உம்மைத் துதிக்குமவன், எவனாயினுஞ் சரி, அவனுக்கு என்னால் ஒருவித பயமும் ஏற்படாது. உமது நாமஸ்மரணையே யான் செய்யும் வினையைத் தீர்க்கும் மருந்தாயிருக்க யான் உமக்கு வரமளித்திருக்கிறேன். நீர் நெடுநாள் வாழ்வீராக! உமக்கும் உமது உத்தம மனைவிக்கும் என்றும் நன்மையே யுண்டாக!"

இம்மொழிகளைக் கேட்ட நளமன்னவன் கோபந்தணிந்து உள்ளங் குளிர்ந்தான்; தன் பழி நீங்கித் தன்னுணர் வடைந்தான்; ஆவேசத்திலிருந்து உணர்ச்சி பெற்றவன் போலக் களைத்துவிளங்கினான். எனவே அவன்தனக்கு வந்த வித்தையைப் பரீட்சிப்பதுபோல மீண்டும் அத்தான்றிக்கிளையி லிருந்த இலை முதலியவைகளை எண்ணிச்சந்தோஷமடைந்தான்.

கலியும் அதிவேகத்துடன் ஓடி அத்தான்றி மரத்தினுள் ஒளித்துக்கொண்டான். அக்காரணத்தினாலன்றோ, தான்றிமரம் ஜனங்களால் என்றும் அகற்றப்பட்டது! சனியன் பிடித்த பொருளை நாடுபவர் எவரோ?

புத்திமயக்க மொழிந்த நளமன்னவன் ஆனந்தமிகையினால் மெய்மயங்கிக் களித்து, தேரின்மேல் ஏறித் தன் மனைவி மக்களைக் காணவேண்டுமென்ற ஆசை மூந்த, அதிவேகமாகக் குதிரைகளை ஓட்டினான். அவை பறவைகளெனப் பறந்தோடின. அதன் வேகத்தின் முன் காற்றின் கதியும், ஒளியின் விரைவும், மனத்தின் விசையும் எதிர்நிற்க நாணுமன்றே!

பஞ்சரத்தினம்.—சீதை, ருக்குமிணி, தமயந்தி, சகுந்தலை, சாவித்திரி இவ்வுத்தமிகளின் சரித்திரம் கொண்டது. புதிய பதிப்பு: அழகிய ஆப்டோன் படங்களுடன் விலை அணா 12. சந்தாதார்க்கு அணா 10.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

பிரிடிஷ் ஸாம்ராஜ்யம்

துருக்கி ராஜ்யத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த பாலஸ்டைன் மாகாணம், ஐரோப்பிய யுத்தம் காரணமாக ஆங்கிலேயர் வசம் வந்துள்ளதென்பதை அபிமானிகள் தெரிந்துகொண்டிருக்கலாம். அங்கு ராஜ்யாதிகார விஷயமான சாசுவத ஸ்தானங்கள் ஏற்படுகின்றனவென்பதைக் கேட்கச் சந்தோஷிக்கிறோம். ஸிவில் நியாயஸ்தலங்கள், அப்பீல் நியாயஸ்தலங்கள் முதலியன ஏற்பாடு ஆகின்றன. ஜெரூஸலத்தில் அப்பீல் கோர்ட்டும் மற்றைய விடங்களில் பிரதமக் கோர்ட்டுகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கிரிமினல் கோர்ட்டுகள் இங்கிலாந்தில் உள்ளவற்றைப்போல 'ஸர்கியூட்' கோர்ட்டுகளாக இருக்கும். நியாயவிசாரணையில் அனுபவமும், அரபிப்பாஷை ஞானமும் உள்ள ஆங்கிலேய உத்யோகஸ்தர்களுடன் துருக்கிய உத்யோகஸ்தர்கள் இந்தக் கோர்ட்டுகளில் நியமனம் பெறுவார்கள். சில்லரைச் சிப்பந்திகள் அனைவரும் சுதேசிகளாகவே இருப்பார்கள். பொதுவாக தேசத்தில் நடைபெறும் சட்டமேதான் இந்தக் கோர்ட்டுக்களில் செலாவணியாகும்.

* * *

இந்தியர்களுக்கு ராணுவத்தில் உத்தியோகங்கள்

இந்தியர்களில் அனேகர், ராணுவத்தில் மேலான உத்தியோகங்களை வகிக்கக்கூடியவர்களென்றும் அவர்களுக்கு அப்படிப்பட்ட பதவிகளைக் கொடுக்கவேண்டுமென்றும் காங்கிரஸ் மஹா நாட்டார் வருஷா வருஷம் கேட்டுவந்ததை அபிமானிகள் அறிவார்கள். இந்த வேண்டுகோளுக்கு இராஜாங்கத்தார் இணங்கும் காலமும் வந்திருக்கிறது. இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் நம்மவர்களில் பலர், வெகு லாகவமாய்ச் சண்டை செய்த திறத்தைக்கண்டு வியந்த இராஜாங்கத்தார் நம்மவர்களில் சிலருக்கு இராணுவத்தில் உயர்ந்த உத்யோகங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். வருஷாவருஷம் சில இந்தியர்களைப் பொறுக்கி யெடுத்து, இராணுவ விஷயமான பயிற்சி கொடுத்துப், பின் உத்யோகம் கொடுக்கவேண்டுமென அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். இதன்றியும் இந்த யுத்தம் நிகழும் காலம்வரையில் தாற்காலிகமான ராணுவ உத்யோகங்களில் சிலவற்றையும் இந்தியர்களுக்குக் கொடுக்கப் போகின்றனர். இப்படிப்பட்டவர்கள் ஸிவில், மிலிடரி என்ற இரண்டு இலாகாவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அவர்களுடைய வயது 19க்குக் குறையாமலும், 25 க்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென்பது விதி. ஸிவில் இலாகாவிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் இராஜப்பிரதிநிதியால் நியமனம் பெறுவார்கள். இந்த ஏற்பாட்டின்படி 'இந்தூர் ட்ரெயினிங் ஸ்கூலில்' சேரவேண்டியதற்காகப் பஞ்சாப் மாகாணத்திலிருந்து 18 பேரும், ஐக்கிய மாகாணங்களிலிருந்து 4 பேரும், பர்மா, பம்பாய், சென்னை, குடகு மாகாணங்களிலிருந்து இரண்டு இரண்டுபேரும், சுதேச ராஜ்யங்களிலிருந்து ஏழுபேரும், வடமேற்கு எல்லை மாகாணத்திலிருந்து மூவரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் நாளது மாதம் ஷைபள்ளிக்கூடத்தில் ஆஜராகியிருக்கவேண்டுமென்று உத்திரவாகியிருக்கிறது. சென்னையிலிருந்து 2 பேர்மட்டுந்தான் தெரிந்தெடுக்கப்பட்டது, நமக்குச் சற்று வருத்தத்தையே கொடுக்கிறது.

* * *

சென்னையில் கபவாதஜுரம்

இன்புளுவென்ஸா என்னும் மாயப் பெயருடன் விளங்கும் இப் பாழும் ஜுரம், சென்னையில் கடந்த சில வாரங்களாக நாள்தோறும் பலநூறு பேர்களைத் தனக்குணவாகக் கொலை செய்து வருவதைக் கண்ட கவர்ன்மெண்டார் மனமிரங்கி, பலவித ஏற்பாடுகளைச் செய்துள்ளது பாராட்டத்தக்கது. ஆனால் இந்த ஜுரத்தின் லக்ஷணங்களைக் கவனித்துச் சர்ச்சைசெய்வதிலும், அஜ்ஜுரம் தற்காலம் விளங்குவதற்குக் காரணங்களைக்கண்டு அவற்றைத் தடுக்க முயற்சிப்பதே இராஜாங்கத்தின் உரிமையாகும். தற்காலம் விளங்கும் க்ஷாமமும், உணவுப்பொருள் பஞ்சமும், இந்நிலைமைக்கு உரமாகி யிருப்பதைக் கண்டு அவற்றை நிவர்த்திசெய்ய அவர் முந்துவரென நம்புகிறோம்.

ஆயிரத்திலே பிறந்து ஐந்நூற்றிலே கால் நீட்டினதுபோல.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."--திருவள்ளுவர்.

11 JAN 1919

தொகு XI | காளயுக்திஞ ஐப்பசிமீ :: 1918-ஞ நவம்பர்மீ | பகுதி 5

வஸந்த காலம்

THE SPRING SEASON

கலக்கமுற விளவேனிற் கலகமெழுந்
திடும்பசுந்தண் காவு தோறுஞ்
சிலைக்கணின் நாண்முறுக்குவபோல் தென்றலின்பின்
சுழல்அளிகள் சேர ஓட
உலைக்கனலில் கருங்கொல்லன் சிறுகுறட்டால்
தகடுபுரிந் தொதுக்கி மாரன்
கொலைக்கணைகள் சமைப்பனபோல் குயில்அலகால்
பல்லவங்கள் கோது மாலோ.

செங்காவி செங்கமலம் சேதாம்பல்
தடந்தொறுமுத் திக ளாகப்
பைங்காவின் நெடுஞ்சினைக்கைம் மலர்நறுந்தே
னுகுதிகள் பலவும் வீழ்க்க
உங்கார மதுகரங்கள் ஓங்காரச்
சுருதியெடுத் தோத வேள்வி
வெங்காமன் இரதியுடன் புரிந்துதன
தென்றலந்தேர் மேற்கொண் டானே.

கொண்டலெழ மின்னுடங்கக் கொடுஞ்சாபம்
வளைவுறச்செங் கோபந் தோன்ற
வண்டளவு நறுங்குமிழும் வண்டணிகாந்
தளுமலர மலைகள் தோறும்
தண்டரள அருவிவிழத் தையலார்
வடிவுதொறும் சாயல் தோகை
கண்டுநமக் கிளவேனில் கார்க்கால
மானதெனக் களிக்கு மாலோ.

பாராமல் நகையாமல் பாடாமல்
ஆடாமல் பாதம் செங்கை
சேராமல் முகராகம் வழங்காமல்
இகழாமல் செவ்வா யூறல்
நேரமல நிழலதனை நிகழ்த்தாமல்
மலர்ந்தழகு நிறைந்த நீழல்
ஆராமம் தொறும் தங்கள் அவயம்போல்
வனகொய்தார் அணங்கு போல்வார்.

மாற்றுத பனிநீரான் மான்மதகுங்
குமமலைய வாசச் சந்தின்
சேற்றுலச் சோலைஎலாம் செங்கழுநீர்த்
தடம் போன்ற சிந்தைத் தாபம்
ஆற்றுத காதலருக் கமுதான
இளநீரால் அடர்ந்த பூகத்
தாற்றுலம் மரகதச்செந் துகிராலப்
பொழில்போன்ற தடங்க ளெல்லாம்.

நெடுவேனில் புகுதரமேல் இளவேனில்
அகன்றதற்பின் நிகரில் கஞ்சப்
படுவேய்வெள் வளையமுந்தண் பட்டால
வட்டமுஞ்செம் படீரச் சேறு
முடுவேய்நித் திலத்தொடையும் ஊடுறுமண்
டபத்தடமும் ஒழுகி நீண்ட
வடுவேய்கண் மடந்தையர்க்கு மகிழ்நருக்கும்
அமைந்தனவான் மனைகள் எல்லாம்.

மாரவசந் தனையகன்று வயங்குறுவெங்
கோடையினன் மறுகி யாற்று
தாரமணி மதுமலரில் ஆரவடங்
களிற்பனிநீர் ஆரச் சேற்றில்
ஈரநெடுங் குழலிசையில் இயங்கியசா
மரக்காற்றில் இளநி லாவில்
போரழலும் புகுந்ததெனப் பிணங்கினர்
தங்கேள்வர்ப் பிரிந்த மாதர்.

கோடைவெயில் சுடச்சுடமெய் கொளுந்தியிறந்
தனப்போலக் கொண்டல் கோடை
வாடைசிறு தென்றலெனும் மாருதங்கள்
எம்மருங்கும் வழக்க மின்றி
ஆடையில்வெண் சாமரத்தில் ஆலவட்டத்
தினில் உயிர்ப்பில் அழகார் நெற்றி
ஓடைமுக மதகயத்தின் தழைமசவியில்
பல்லிறகில் ஒளித்த மாதோ.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணலாமா?

விவேக போதினி

தொ.11] காளயுக்திஸு ஐப்பசிமீ [ப. 5

பாம்பின் வாய் பிழைப்பு

OUT OF THE DRAGON'S MOUTH

புன்புயங்க வாயறியாப்போந்தசிறுர் துன்பறுப்பான்
அன்புமுந்த பாய்ந்தங் களவில்வளர்ந்-தன்றவுணன்
மோடிரிய நீண்டான் முளரிபதச் செந்தவக்
காடுரியக் கண்டார் கழல்.

ஸர்வ லோகங்களின் வெளிப்பிரபாவமான இயற்கையின் பொலிவையே ஸ்ரீ கிருஷ்ணரது பாலபருவம் வெளிக்காட்டுமென்பது தவருகாது. அவ்வியற்கையின் உள்ளூறத் தோன்றி விளங்கும் அற்புத சக்தியே அவரது திவ்யத் திருவிளையாடல்களும்என்பது அதிசயமாகாது எவ்வாறு ஆண்மையானது எத்தகைய நிலத்திலும் உரங்கொண்டு செழித்தோங்கி வளருமோ, அவ்வாறே கண்ணனும், தமதுயிர்க்குப் பல தடைகள் வரினும், அவற்றிலும் தனக்கேற்ற பெருமையையே நாடி வளர்ந்தனர். காலங் கடப்பினும் கதிரவன் கதி பேதப்படாததுபோல, அவர் தமது சிற்றுருவி லிருந்து தெய்விக தேஜஸானது என்றும் எங்கும் பரவும்படி நடந்துவந்தனர். ஆனால் அந்தத் தேஜஸை ஊனக்கண்ணர் கவனிப்பது அஸாத்தியமாயினும்,ஞானக்கண் படைத்தவர் காணுதிருக்கவில்லை. மாயையால் மயங்கியவர்க்குக் கண்ணனது செயல்கள் எவ்வாறு பயத்தையே விருத்திசெய்தவனோ, அவ்வாறே அறிவாளிகளின் ஹ்ருதயத்துள் அந்தச்செயல்கள் அளவு கடந்த அன்பைக்குடிகொள்ளுமாறு செய்தன. அவ்வன்பானது வரம்புகடந்து ததும்பி வழிந்திற்றென்பது திண்ணம். பூதனையின் வதம், வண்டிக்கால் அஸுரன் மடிந்தது, திருணுசுரன் கதி, மரங்களின் முறிவு—இவற்றையெல்லாம் எண்ணிய ஜனங்கள்,கண்ணனிடம் ஒருவித அன்புகொண்டன ரென்பது வெளிப்படை. யமன் வாயிலிருந்து பலமுறையும் வெளிப்படுவதல்லாமல், தன்னை எதிர்த்து வரும் பெரும்பகையெல்லாம் பூண்டோடு அழியும்படியாகச் செய்யும் அந்தக் குழந்தையிடம், அவர் ஏதோ தெய்விகம் விளங்கியதாகவே நினைத்தனர். ஆகவே, ஞானிகளும் பாமரரும் அக்குழந்தையிடம் ஓர்விதப் பிரியமும், மனத்தைவிட்டு நீங்காத அளவு கடந்த பக்ஷமும் கொண்டனர். அதனால் அதுவரையும் கோகுலத்தில் நடந்த ஸம்பவங்களை எண்ணஎண்ண அவர்க்குக் கோகுலத்திலிருப்பது தகாதெனப்பட்டது.குழந்தைகளின் நன்மையை உத்தேசித்த அவர்கள் கோகுலத்திற்கருகாமையிலுள்ள பிருந்தாவனத்திற்குப் போக எண்ணினர்; "கோகுலத்தின் நன்மையை விரும்பிய நாம் யாவரும்,இவ்விடத்தைவிட்டுப் போதலே உசிதம். குழந்தைகளைக் கொல்லவென எத்தனை இடையூறுகளிங்குநடந்தன? இச்சிறு குழந்தை பூதனை விஷத்திலிருந்து தப்பியது ; ஹரியின் அருளால் அவ்வண்டி அதன்மேல் விழாது முறிந்தது; இங்குதான் அப்பாழான அஸுரன் சுழல்காற் றுருக்கொண்டு ஆகாயத்தில் எழும்பிக் குழந்தையைச் சுழற்றியது; அப்படு பாவி கல்மேல் விழுந்ததும் தெய்வாதீனமாய்க் குழந்தை பிழைத்தது. இவ்விடத்திலிருப்பது அதன் உயிர்க்கே ஹானியாக விருக்கும். மருதிடைத் தவழ்ந்து இக்குழந்தை பிழைத்ததும் அதிசயம். இனி வேறு இடையூறு ஏற்படுமுன் இவ்விடத்தை விட்டுப் பிருந்தாவனம் அடைவதே தகுதி"என அவர் நிச்சயித்தனர்.

கோபாலர்கள் யாவரும் கோகுலந் துறந்து பிருந்தாவனம் அடைந்தனர். அது கோவர்த்தன மலையி னருகாமையில் யமுனையாற்றோரம் உள்ளது. அவ்விடம் வஸிக்கத் தக்க இடத்தை யவர் செவ்வனே ஏற்படுத்திக் கொண்டு, ராமகிருஷ்ணர்களது திருவிளையாடல்களை நினைந்து நினைந்து மனம் பூரிப்பர். அவ்விருவரும் வாவர வளரவே, அவரது இனிய மழலைச்சொல்லும், பிள்ளைக் குறும்பும் அவ்வூர்க்கே உவகை தந்தன. வயது வளர, அவ்விருவரும் இடைப்பிள்ளைகள்போல மாடுகளையும் கன்றுகளையும் மேய்க்கத் தலைப்பட்டனர். அநேக விளையாட்டுச் சாமான்களுடன் காட்டில் இடைச்சிறுவரோடவர் விளையாடுவர்; கற்பந்து எறிந்து குதிப்பர்; மூங்கிலையொடித்துப் பொள்ளலிட்டுப் புல்லாங்குழலூதுவர்; கிண்கிணி அணிந்த கால்கள் கலீர் கலீர் என்னும்படி சிலவேளை கூத்தாடுவர்; சில ஸமயம் மாடுகள் போலவும் கன்றுகள் போலவும் உருக்கொண்டு அவற்றைப் போல் அபிநயித்து விளையாடுவர், போராடுவர்; அக்காட்டின் அழகிய காட்சியில் ஈடுபட்டவர் போலக் காட்டிக்கொண்டு மயங்குவர்; ஸாதாரணப் பிள்ளைகள்போல வனமுழுதும் ஸஞ்சரிப்பர்.

நிற்க, கோகுலத்தை நந்தன் ஆதியர் விட்டதைக் கேட்ட கம்ஸன் சும்மாவிருக்கவில்லை, அத்தெய்விகக் குழைந்தையை யல்லாமல் வேறெதன்மேல் அவன் எண்ணஞ் செல்லும்? இயற்கையில் இனம் இனத்தோடு சேருமெனச் சொல்வதுண்டானாலும், பழக்கத்தில் வேருகவே விளங்கும். காந்தத்தின் மாறுத்ருவங்களே சேர்கின்றன; மின்சாரத்திலும் அப்படியே; மோஹமெழும்புவது மவ்விதந்தான். ஆகவே கம்ஸன் தனக்கெதிரியாக வரக்கூடிய சிறுவனிடமே கவலையாயிருந்தால், அது பிராணபிமானத்தாலேயே யல்ல; மற்று மனத்தின் அமைப்பினுலேயு மாகும். எனவே அவன் வேவுகாரர்களால் பிருந்தாவனத்தில் கோபாலர் வஸித்து வருவதைக் கேட்டதும், அப்பாழுங் குழந்தையை ஒழிக்க ஏற்பாடு செய்ய ஒரு அஸுரனை அங்கு விடுத்தான்.

அவ்வஸுரன் கிருஷ்ண பலராமர்கள் யமுனைக்கரையில்மாடுமேய்ப்பதைக்கண்டு, கன்றுபோல உருவங்கொண்டு அம்மாட்டு மந்தையுள் மயங்கிக் கிடந்தான். அதைக் கண்ட கிருஷ்ணர் அக்கன்றைச் சுட்டிப் பலராமருக்குக் காட்டினர்; ஒன்றும் அறியாதவர்போல அதன் அருகுசென்று, அதன் பின்கால்களையும் வாலையும் கொண்டு அதைப்பற்றி,அசைத்துக் குலுக்கிக்குலுக்கி ஆட்டி, வழியேயிருந்த விளாமரத்தின்மேல் தூக்கி எறிந்தார். அந்தத் தாக்கலைத் தாங்கமுடியாது, அம்மரம் அக்கன்றின்மேலேயே முறிந்துவிழ, அவ்விராக்ஷஸன் உயிர்நீங்கிப் பொத்தெனக் கீழே விழுந்தான். அதைக் கண்ட ஆயச்சிறுவர் "நன்று, நன்று" எனக் கைகொட்டி யார்த்தனர். அவர் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. வேலெறிந்து மலை பிளந்த குமரன்போலவே, கன்றெறிந்து மரம்பிளந்தானெனக் கண்ணனை யாவரும் கொண்டாடினர்; தேவரும் துதித்துப் பூமாரி பெய்தனர்.

ஆனால் கம்ஸனது ஊக்கம் குறையவே இல்லை. அவனது அன்பனான பகாஸுரன் கொக்கு உருவங்கொண்டு, ஒரு நாள் மாடுகளை மேய்க்கவரும் ராம கிருஷ்ண கோபாலர்களைக் கொல்லக் குளக்கரையில் காத்திருந்தான். கண்ணன் அங்கு வந்ததும் சட்டென அவரை அவ்வஸுரன் விழுங்கிவிட்டான். கோபாலர்கள் இடிவிழ மயங்கினவர்போல மயங்கிக் கிடந்தனர்; பலராமரும் மூர்ச்சித்து விட்டனர். எனினும் அக்கொக்கின் வாய்க்குள் இருந்த அந்தத் தெய்விகச் சிறுவன் பெரும் அக்கிகோளம் போல அதன் தொண்டையுள்ளிருந்து,அதை வெகு உக்ரமாகச் சுட,அதைத் தாங்க முடியாத அவன், வாயுள் இருந்த சிறுவனை வெளியே கக்கி உமிழ்ந்தான். சிறிதும் ஊறு அடையாமல் கண்ணன் முன்னிலும்அதிகப் பிரகாசத்துடன் விளங்குவதை அவன் கண்டான்; மனங்கொதித்தான். எனவே, அவன் கிருஷ்ணபகவானைத் தனது அலகினால் கொத்திக்கொத்திக் கொல்ல யத்தனிக்க நெருங்கினான். விளையாட்டாகவே, அந்தப் பகாஸுரனுடைய மூக்கைக் கிருஷ்ணர் வெகு லாகவமாகப் பிளக்கக் கோபாலர்கள் அவரை வாயார வாழ்த்தி வணங்கினர். அக்கால், துந்துபி முழக்கித் தேவரும் களித்தனர்.

இச்செய்திகள் பிருந்தாவனத்தில் பரவவே, கோபாலர்கள் ஆண்பெண் அடங்கலும் கண்ணனிடம் அளவுகடந்த அன்புகொண்டனர்; "இச்சிறுவன் உயிரைக் கவர எத்தனை ஸம்பவங்கள் நடந்தன. எனினும் அவற்றை இவன் கடந்து விளங்குகின்றனன். அவனைக் கொல்லவரும் கொடியவர் எவரும், நெருப்பிற்பட்ட ஈயைப் போலப் பொரிந்து விடுகின்றனர். அகோ! தம்மைத்தாமறிந்தபெரியோர்சொன்ன மொழிகள் என்றும் பொய்த்திலது! அன்று கார்க்யர் சொல்லிய வாக்கும் பலித்ததன்றே!" என்று அவர், மனங்களித்து கண்ணனுக்குத் தீங்கு இழைக்க எவனாலும் முடியாதென்ற முடிந்த அப்பிராயத்திற்காளாய் விளங்கினர்.

ஊடும்பு போனாலும் போகிறது கையைவிட்டால் போதும்.

உடைமையும் வறுமையும் ஒருவழி யில்லா.

ஆனால் கம்ஸன் அப்படி விளங்கவில்லை. கண்ணனைக் கொல்வதாகக் கங்கணங் கட்டி உழைத்து வந்தான். பின் தனக்குப் பகையாக வரக்கூடியதை முளையிலேயே நசுக்க அவன் முயற்சித்து வந்தான். அவன் ஏன் அவ்வாறு கண்ணனைத் தன் பகையாகப் பாராமலே பாராட்டவேண்டும்? யாவர்க்கும் இனிய கண்ணன் அவனிடம் அன்புகொள்ளாரா? இக்கேள்விகள் ஸரியானவை யல்லவா?—என்பன சில ஸமயங்களில் நமது மனத்தை வாட்டலாம். இவற்றிற் கெல்லாம், வீண் தார்க்கிக வாதமிட்டுப் பதில்தருவது பொருந்துமா? அனுபவ ஞானமே பற்றுக் கோடாயிருந்து பயன் தரும் அன்றோ? வைரம் பாய்ந்த மரத்தை வளைக்க ஏன் யத்தனிக்கக் கூடாதெனக் கேட்டால், வளைக்கச் செய்யலாம் என வாதித்தாலும், அது அனுபவத்தில் முடியாதென்பது திண்ணம். பலநாளாய் உரங்கொண்டு தழைத்து, அவன் மனத்துள் ஆழமாக வேர்விட்டு வளர்ந்து வைரம்பாய்ந்த கொடுமை விருக்ஷத்தை, வளைத்து மேலெழும்பாது அடக்கி வைப்பது முடியா தென்பதை எவரும் ஒப்புவர். அவ்வாறு யத்தனித்தாலும் அம்மரம் வேறொரு பாகத்தில் செழித்து மேற் கிளம்பலாம். அல்லது, அதைக் கட்டுப்படுத்திய தடை நீங்கியதும், நிமிர்ந்து ஓங்கிவளரலாம். எனவே, கம்ஸனை நல்வழிக்குக் கொண்டு வருவதென்றால், அவனது பல நாள் பெரும் வினை இடந்தராது. அதனைக் கிருஷ்ணர் நன்குணர்வர். அவ்வாறு அவர் உணரவில்லையெனில், அவர் அறிவுக்கே குறையன்றோ? வீண்பிரயாசையில் தாம் தலையிடுவது தகாதென்வே அவர் விடுத்தனர்போலும்!

மற்றுத் தமது அன்பின் பெருக்கினால் தன்னையே அவன் நினைக்குமாறு அவர் செய்து வந்தார். அவன் அனுப்பிய அஸுரரை எல்லாம் அவர் கொன்றுவருவதைக் கண்ட அவன் ஏன் அக்குழந்தையின் பெருமையில் ஈடுபடக் கூடாது? அவனது பழைய கருமத்தொகுதியோ அல்லது மயக்கவழியின் நிலையோ, எதுவாயினும், அவன் மனத்தில் நல்லெண்ணங்கள் தோன்றி விளங்க அது இடந்தரவில்லை. கடவுள் பரிபூர்ண கிருபையே உருவெடுத்தவ ராயினும், ஒவ்வொருவரும் தாம்தாம் செய்யும்செயல்களுக்குத்தாமே உத்தரவாதமாக இருக்கவேண்டிவரும். அக்கருமசேஷமே ஒருவேளை கம்ஸனது மனதைக்கலக்காது, மேலும் மேலும் கண்ணனிடம் பகை பாராட்டி அவரை யழிக்கப் புதுப் புது வழிகளைத் தேடத் தூண்டியது போலும்! அவன் மனம் வேலைசெய்து கொண்டே இருந்தது.

ஒரு ஸமயம், கோபாலர்களுடன் காட்டிற்குச் சென்று, காலையில் அங்கு வனபோஜனஞ் செய்துவேடிக்கையாகஇருக்கவேண்டுமென்ற எண்ணம் கண்ணனுக்கு உதித்தது. எனவே, அவர் தமது கையிலிருந்த புல்லாங்குழலை இனிக்க ஒலித்துத் தம் நேயர்களை எழுப்பிக் கன்றுகளுடன் வெளிக்கிளம்பினார். அவரிடம் அன்புகொண்ட கணக்கில்லாக் கோபாலச் சிறுவர்கள் அநேகாயிரம் கன்றுகளை யோட்டிக்கொண்டு கூடவந்தனர். தாம்பும், கொம்பும், குழலுங்கொண்ட அவர், வழியிலிருந்த புஷ்பங்களைப் பறித்துத் தமக்குத் தம் தாய்மார் செய்திருந்த அழகிற்கு அழகு செய்து, வேடிக்கையும் விநோதமுமாகப் பேசிய வண்ணமாகவே, விளையாடிக்குதித்து மாடுகளை மேய்த்துக்கொண்டு நடந்தனர். அவரதுபிள்ளை விளையாடல்களுக்கு அளவே யில்லை. ஒருவரது தாம்பைப் பிரித்து எறிந்து குறும்பு செய்தல்; ஒருவரை மற்றொருவர் மீது தாக்கிக் குதித்தல்; பின்னால் குறும்பு செய்து முன் வந்து ஒன்றும் தெரியாதவர்போலப் பாசாங்கு செய்தல்; பிள்ளை மொழிகளால் ஒருவரையொருவர் ஏசல்; சிறிதும் விரோதபாவமின்றிக் கட்சி கொண்டு குறும்பு செய்தல்;—இவை முதலிய கணக்கிலாப் பிள்ளை விளையாட்டுகளுடன் அக்காட்டின் பேரழகை யனுபவித்து "நான் முன்", "நான் முன்" என்றுகொண்டு அடர்ந்தக் காட்டுள் அவர் முந்தி நடந்தனர். அப்போது சிலர், தாரையூதி அக்காட்டில் நாதம் எழுப்புவர்; சிலர் குழலூதிக் கன்றுகளைக் குதிக்கச் செய்வர்; சிலர் பக்கத்திலிருந்து எழும்பும் கோகில ஸ்வரத்துடன் மயங்கப் பாடுவர்; சிலர் தேனீக்களின் ரீங்காரத்துடன் ச்ருதி கூட்டிக் களிப்பர். சேஷ்டையில் ஆவல் கொண்ட சிறுவர், பட்சிகளைத் துரத்தியும், அன்னங்களைப் பற்றியும், மரத்தில் தாவிக்கிளைகளிலிருக்கும் குரங்குகளின் தொங்கும் வால்களைப் பற்றி யீர்த்தும் களித்துக் கூத்தாடுவர். சிலர் மரமேறிக் குதிப்பர்; சிலர்

ஒருவரையொருவர்அழகுகாட்டிஆர்ப்பரிப்பர். சிலர் நீரருகுவந்து தவளைமீது கற்கள் எறிவர்; சிலர்தவளைகளைப்பிடிப்பர்; அவற்றைப்போலக் கத்துவர். சிலர் தமது சாயையைப் பார்த்துச் சிரிக்க, சிலர் அங்கு எதிர்பேசும் பிரதித்வனியைக் கவனிப்பர். இவ்வநந்த வைபவத்தில் கண்ணபிரான் தமது நேயர்களுடன் விளங்குவதை எவரும் கவனித்திலர் போலும்! கவனித்திருப்பின் அடைதற்கரிய அப்பரம் பொருள், தமது திருவடி நிலந்தோய நடந்து தமக்குக் காட்ட வந்த பேரானந்தக் காட்சியைக் கண்டு களித்திருப்பர் அல்லவா?

அவ்வாறு காணினும், கண்ணிருந்தும் காணாதவரும் உண்டென்பதும் இருக்கும்; அல்லவா? மயக்கத்துடன் விளங்குபவர்க்கு அத்தெய்விகக் காட்சி இன்பம் தருமோ? தராது; அது நிச்சயம். ஆகவே, கம்ஸனது ஏவலால் அங்கு நடப்பனவற்றை எல்லாம் கண்டுகொண் டிருந்த அகாஸுரன் மனத்தில் வெறுப்பே உதித்தது. இவன், பூதனை பகன் இவரது தம்பி. தன் உடன் பிறந்தவரைக் கொன்றது சிறு குழந்தையானாலும், அதனிடம் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று அவன் உள்ளம் கொதித்தது; அதில் கோபம் கொழுந்து விட்டெரிந்தது. எனவே அவன் ஒரு பெரிய பாம்பின் உருவங் கொண்டு, உருவில் பெருத்து, ஆகாயமும் பூமியும் தாக்கும்படி தனது வாயைப்பிளந்து திறந்துகொண்டு கண்ணனைக் கோபாலருடன் உட்கொண்டுவிடக் காத்திருந்தான். பூமியின் மட்டத்தில் மயங்கியிருந்த அவ்வாயை ஒரு குஹை என்றெண்ணிக் கோபாலர்கள் அதனுள் விளையாடிக் கொண்டே நுழைந்தனர். ஆனால் அப்பாம்பு, வாயை மூடாது தனது முன்னோரைக் கொன்ற ஞாபகத்தோடு கண்ணனது வரவை எதிர்பார்த்திருந்தது. நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்த கண்ணன், தமது பரிவாரங்களைக் காணாது, எதிரிலிருந்த பாம்பின் பேழை வாயுள் விளங்குவதைக் கண்டதும், அன்பரது துயரத்தைத் தீர்க்கவெனத் தாமும் அவ்வாயுள் வீழ்ந்தனர். உடனே அப்பாம்பு வாயை மூடிக் கொண்டது. அப்பாம்பின் ஜாடராக்கினியில் இட்ட சமித்தெனப் புகையாது, தழைக்க உள்ளங் கொண்ட அத்தெய்விகக் கண்ணன், தமது பிரபாவத்தினால் தமது உருவிலும் அளவிலும் வளரவாரம்பித்தனர்; மனங் குன்றிய தேவரது கூக்குரலையும், கம்ஸனாதியரது களிப்பையும் ஒழிக்க அவர் வரவரப் பெருத்து வளர ஆரம்பித்தனர்; அப்பாம்பின் வயிற்றுள் ஒரு வருஷ காலம் தமது நண்பருடன் அவர் விளையாடி வளர்ந்து வந்தனர்.

கண்ணனது அளவு பாம்பின் பரிமாணத்தைக் கடக்க வாரம்பித்ததும், அதன் கண்விழிகள் வெளிபிதுங்கின; மூச்சுத் திணறியது; தலை சுழன்றது; வயிறுவெடித்தது. தெய்விகக் கண்ணனும் தமது அருள்பிரபாவத்தினால், மெலிந்த கோபாலர்களைக் கிளைக்கச் செய்து வெளிவர, அப்பாம்புருவாயிருந்த அஸுரனது ஆத்மாவானது, பத்துத்திசைகளிலும்சோபை விளக்கிவளர்ந்த அப்பரந்தாமனுடலுள் மயங்கியது. ஆனால் அவ்வகாஸுரனது உலர்ந்த தோல் நெடுநாள் அப்பிருந்தாவனத்தருகு பிள்ளைகளின் விளையாட்டுக் குகையாகவே விளங்கி வந்தது.

நிற்க.பாம்பின் வாயுள் ஒரு வருஷம் கோபாலர் பதுங்கிக் கிடக்கப் பிருந்தாவனத்தில் சிறிதும் கவலை ஏற்படாது விளங்கியதும் அற்புதம் போலும்! கவிவாக்கிற் கிணங்க:

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற லரிது.

சிவஞான சுவாமிகள்

SIVAJNANA SWAMIGAL

சிவஞான சுவாமிகள் என்பவர் திருநெல்வேலி ஜில்லாவிலே பாவநாசமென்னும் திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே சைவ வேளாளர் குலத்திலே பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் ஆநந்தக் கூத்தர்; தாயார் பெயர் மயிலம்மையார். இவருக்கு இளமையிலிட்ட இயற்பெயர் முக்களாலிங்கர் என்பர். இவர் பாடசாலையிற் கல்வி கற்கும் இளமைப் பருவத்திலேயே குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்தவராய்ப் பாடுந்திறமும் அமையப்பெற்றி

ருந்தனராதலின், அப்போது அவ்விக்கிரமசிங்கபுரத்துக்குச் சென்ற திருவாவடுதுறைத்தம்பிரான்கள் சிலரைக் கண்டு, துறவின்மேல் இச்சைகொண்டு, அவருடன் திருவாவடுதுறை சென்று, அங்கே ஞானதேசிகராய் வீற்றிருந்த பின்வேலப்ப தேசிகர் என்பவரிடம் சிவதீக்ஷை முதலியன பெற்றுத் துறவியாயினர் இவர் திருவாவடுதுறையில் இருந்துகொண்டு தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், சமய நூல்களையும், வடமொழியையும், அதிலுள்ள சமய சாஸ்திரங்களையும், தருக்க நூல்களையும் நன்கு கற்றுப் புலமை நிரம்பப் பெற்றனர். சைவசித்தாந்த நூல்களை அங்கேயே தமது ஞானாசிரியராகிய பின்வேலப்பதேசிகரிடத்தில் சாங்கோபாங்கமாகக் கற்றுக்கொண்டனர்.

பின்னர் இவர் திருவாவடுதுறையை விட்டு வெளிப்போந்து சென்னைக்குச் சென்று, சென்னையிலும், அதன் அயலூர்களிலும் காஞ்சிபுரத்திலும் பலநாள் வசித்தனர். இங்கு வசிக்கும்போதே இவர் காஞ்சிப் புராணம் முதலிய நூல்களைச் செய்தனர். இவர் கோயம்புத்தூர்க் கருகிலுள்ள பேரூரிலும் சிலநாள் வசித்தார் என்பர்.

இவர் பிற்காலத்துப் புலவர்களுள் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்குபவர்; தமிழ் இலக்கண அறிவிலும், சைவசித்தாந்த நூலுணர்ச்சியிலும் மிகச் சிறந்தவர்; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளும் பாடுந்திறமும், மொழிபெயர்க்குந் திறமும், சுருக்கியும் விரித்தும் உரையெழுதுந் திறமும், பிறரது மதத்தைக் களைதலும் தமது மதத்தை நிறுத்தலும் பிறர் நூற்குற்றங் காட்டலும்மைய எதிர்நூல் செய்யும் திறமும் வாய்ந்த பெரும் புலமையாளர்.

இவர் இயற்றிய நூல்களுள் முக்கியமானவை:—காஞ்சிப்புராணம் முதற்காண்டம், சோமேசர் முதுமொழி வெண்பா, தர்க்க சங்கிரக உரை, சிந்தாந்தப் பிரகாசிகை, சிவஞானபோத மாபாஷியம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியாருரை முதலியன.

இவருக்குத் தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனிவர் முதலிய பன்னிருவர் மாணுக்கர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த புலவராய் விளங்கினர்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த இப்பெரும் புலவர் எப்போது பிறந்தார் என்பதாவது எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தாரென்பதாவது ஒன்றும் தெரியவில்லை. திருவாவடுதுறை ஆதீனத்தில் வழங்கிவரும் ஒரு கவியால், இவர் கி. பி. 1785-க்குச் சரியான விசுவாவசு வருஷம், சித்திரை மாதம் ஞாயிற்றுக்கிழமை, ஆயிலிய நக்ஷத்திரத்தில் திருவாவடுதுறையில் தேகவியோகமாயினர் எனத் தெரிகின்றது. அக்கவி வருமாறு:—

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
உன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னும்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்.

இதனால் இவர் இருந்தது இற்றைக்கு நூற்று முப்பத்து மூன்று வருடங்களுக்கு முன் என்பது பெறப்படும்.

நிலக்காற்றும் கடற்காற்றும்

LAND AND SEA BREEZE

காலையிலும் பகலிலும் நிலத்திலிருந்து சமுத்திரத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்கு நிலக்காற்று என்று பெயர். மாலையில் சமுத்திரத்திலிருந்து நிலத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்குக் கடற்காற்று என்று பெயர். இவ்விருவகைக்காற்றும் ஒவ்வொரு தினமும்மாறி மாறி யடிக்கும். கடற்காற்று தேகதுக்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரத்தக்கது, பகலில் சூரிய உஷ்ண மிகுதியினால் வாடித் துன்பப்படும் உயிர்வர்க்கங்கள், மழையை எதிர்பார்த்து நிற்கும் பசும் புல் முதலிய பயிர்போல, கடற்காற்றை எதிர்பார்த்து நிற்கின்றன. நிலக்காற்று அவ்வளவாகத் தேகத்துக்கு ஆரோக்கியமான தல்ல. மாறிமாறி வீசும் இவ்விருவகைக் காற்றுகள் உண்டாவதற்குக் காரணங்களைச் சற்று கவனிப்போம்.

பகலில், சூரியோதய காலமுதல் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள்யாவும் சூரியவெப்பத்தில் காய்ந்துவெகு சீக்கிரத்தில் கொதிப் படைகின்றன. அப்படிக கொதிப்பேறியபொருள்களுக்குச்சமீபமாயுள்ள அசையாத காற்றும் உஷ்ணமேற வெப்பம்

அடைகின்றது. அவ்வாறு வெப்பமடைந்த காற்று, கனத்தில் குளிர்ந்த காற்றைக் காட்டிலும் குறைவதனால் மேலெழும்பி வெளிப்பரப்பில் போய்விடுகின்றது. அதே காலத்தில் சமுத்திரத்திலுள்ள நீரும் சூரிய உஷ்ணத்தினால் வெப்பம் அடைந்துகொண்டு வருகிறது. ஆனால் கல், மண் முதலிய கனத்த பொருள்கள் உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரத்தில் கிரஹித்துக்கொண்டு வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரத்தில் சமுத்திரத்திலுள்ள தண்ணீர் உஷ்ணத்தைக் கிரஹிக்கிறதில்லை. ஆகையால் அவற்றைப்போல அவ்வளவு சீக்கிரத்தில் வெப்பமாகிறதில்லை. திருஷ்டாந்தமாக, கொஞ்சம் மணலையாவது சில கற்களையாவது ஒரு புறத்திலும், தண்ணீரை ஓர் பாத்திரத்தில் மற்றொரு புறத்திலும் வெய்யிலில் ஒரு மணி நேரம் வைத்துப் பார்ப்போமானால், அந்தக் கற்களுக்கும் மணலுக்கும் உண்டாயிருக்கும் உஷ்ணக் கொதிப்பு எவ்வளவோ, அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட, அந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீருக்கு உண்டாகாமலிருப்பதை நாம் நன்றாக நேரில் அறியலாம். அந்த ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே, மேற்படி தண்ணீரின் உஷ்ணத்தையும் அது வார்க்கப்பட்டிருக்கின்ற பாத்திரத்தின் உஷ்ணத்தையும் தொட்டு ஒத்திட்டுப் பார்க்கையில், தண்ணீரைவிட கனத்த பொருளாகிய அந்தப் பாத்திரம் அதிக வெப்பமாயிருப்பதை நாம் பிரத்தியக்ஷமாய் அறியலாம். ஆகையால் சமுத்திரத்திலுள்ள ஜலத்தைவிட நிலத்திலுள்ள கல், மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் சீக்கிரம் வெப்பமாய் விடுகின்றன. அப்படி வெப்பமாய்ப் போகும் நிலத்திலிருந்து மேலெழும்பிச் செல்லும் நிச்சலவாயு இருந்த இடத்தை நிரப்பும்படி சமுத்திர ஜலத்தின் மேற்புறமாயுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு நிலத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கிறது. இந்தப்படிச் சமுத்திரத்திலுள்ள நிச்சலவாயு நிலத்தை நோக்கி மோதும்போதுதான் அதைக் கடற்காற்று என்று நாம் அழைக்கிறோம். அது கடலினிடத்திலிருந்து பூமியின் பக்கமாக அடிப்பதால்தான் அதை நாம் அப்படி அழைப்பது என்பது அப்பெயரிலிருந்தே தெரியுமல்லவா?

உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரமாய் நிலத்திலுள்ள கல், மண் முதலிய திண்ணிய பொருள்கள் கிரஹித்து வெப்பமாகின்றனவோ, அவ்வளவு சீக்கிரமாய் அவை உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்ந்துபோய் விடுகின்றன. அந்தப்படி அவைகள் சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பே குளிர ஆரம்பிக்கிறபடியால், வெகு சீக்கிரத்தில் அவைகள் குளிர்ந்து சில்லிட்டு விடுகின்றன. சமுத்திரத்திலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தை எவ்வளவு மெதுவாய்க் கிரஹிக்கின்றதோ, அவ்வளவு மெதுவாகவே அந்த உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்கிறது. ஆகையால் சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு மறுநாள் சூரியோதயம் வரையில் நிலத்திலுள்ள மண் கல் முதலிய திண்ணிய பொருள்கள் யாவும் குளிர்ந்து போயிருக்குங் காலத்தில், சமுதிரத்திலுள்ள ஜலம் உஷ்ணமாகவே இருக்கின்றது. இரவிலும், பிராதக் காலத்திலும் சமுத்திரத்திலாவது தடாகங்களிலாவது ஸ்நானஞ்செய்ய இறங்கும்போது தண்ணீர் உஷ்ணமாயிருப்பதை நாம் அனுபவசித்தமாய்க் காணலாம். உஷ்ணமாயிருக்கும் பகற்காலத்தில் சீதளமா யிருக்கும்படியாகவும், சீதளமாயிருக்கும் இராக்காலத்திலும் பிராதக் காலத்திலும் உஷ்ணமாயிருக்கும் படியாகவும் தண்ணீருக்கு லக்ஷணத்தை அமைத்து வைத்த ஜகதீசனின் கருணையே கருணை!

இவ்விதம் கடவுள் அமைத்துவைக்கா விட்டால் உஷ்ணகாலமாகிய பகற் பொழுதில் வேறு சீதள ஸ்தானம் இல்லாமையாலும், சீதளகாலமாகிய இராக்காலத்திலும், பிராதக் காலத்திலும் வேறு உஷ்ண ஸ்தானம் இராமையாலும் உயிர்வர்க்கங்கள்என்னபாடுபடும்!

நிற்க. இராக்காலத்திலும், பிராதக்காலத்திலும் நிலத்திலுள்ள கல், மண் முதலிய யாவும் குளிர்ந்து போயிருக்கும்போது சமுத்திரஜலம் உஷ்ணமாகவே யிருக்கிறபடியால் அங்குள்ள உஷ்ணமான நிச்சலவாயு முன்னே நிலத்திலிருந்து மேலெழும்பிப்போகிறதென்றுசொன்னதுபோல மேலேகிளம்பிப் போய்விடுகின்றது. அந்த இடத்தை நிரப்புவதற்காக அப்போது நிலத்தின் மேற்புறமாயுள்ள சீதளமான நிச்சலவாயு சமுத்திரத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கிறது. இந்தப்படி நிலத்திலுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு சமுத்திரத்தை நோக்கி மோதுவதால், அதை நிலக்காற்றென நாம் வழங்குகிறோம்.

இவ்விரண்டு காற்றும் ஒன்றன் பின்ஞென்ருக அடித்து உலகத்திலுள்ள உஷ்ண சீதளத்தைச் சமமாக்கிக்கொண்டு, தன்னிடம் அன்புகொள்ளாத மனிதற்குங்கூட உதவியாக விளங்குகின்றது. அவ்வாறு, கைம்மாறு கருதாது செய்யும் உபகாரத்தைக் கண்டும் நாமும் அவ்வாறே உழைக்க வேண்டுமென்பதை அக்காற்று நம்மனத்துள் பதியும்படி வீசுகின்றதல்லவா? அதைக் கற்று நாம் ஒழுகுவதற்கு நம்மனம் இடந்தராவிடில் கண்ணிருந்தும் நாம் பெற்ற பயன் யாதோ?

குழந்தைகளும், பாலுணவும்

CHILDREN & MILK DIET

குழந்தைக்குத் தாய்ப்பாலே சிறந்த உணவு. இது இயற்கையாலமைந்தது. தாய்க்குப் பாலில்லாத காலத்து வேறு பால் உணவு தேடுவது அவசியமாகும். கழுதைப் பால், அமைப்பில் முலைப்பாலுக்கு ஸமானமான அமைப்புள்ளது. அதனுல்தான் குழந்தைகள் பிறந்ததும் இப்பாலைத்தேடி அவற்றிற்குப் புகட்டுவது. அதில் கொழுப்பும், ஜீரணமாகமுடியாத மாமிஸ ஸத்தும் இல்லாமல் சிறிதே உப்பு முலைப்பாலைக் காட்டிலும் அதிகமாய் இருக்கும். ஆனுல் நகர வாஸங்களில் கழுதைப்பால் கிடைப்பது பிரயாஸை. ஆட்டின்பால் தாய்ப்பாலுக்கு ஸமானமா யிருப்பதுமல்லாமல், குழந்தைகளுக்குப் பலவித வியாதிகளைத் தடுக்கும். குழந்தைகளை நேராக ஆடுகளை ஊட்டச்செய்யலாம். அது, தாயிடம் பாலூட்டுவதுபோலவே அப்போது உண்ணும். ஸாதாரணமாக நாம்பசுவின் பாலையே குழந்தைகளுக்குப்புகட்டி வளர்த்தல் வழக்கம். இப்பாலில் மாமிஸ ஸத்தும், தித்துப்பும், நீரும் முலைப்பாலைக்காட்டிலும் குறைவா யிருப்பதால் அதில்ஒரு சொட்டுச்சர்க்கரையும், சிறிது நீரும் கலந்து கொடுத்தல் நல்லது. நீரை அதிகமாகச் சேர்ப்பது தவறு. சுத்தமான பசுவின்பால் இரண்டு பங்கில் கொதித்து மிதமாகக் குளிர்ந்த வெந்நீர் ஒரு பங்கு கலந்து அதில் ஒரு சிறிது சீனுக் கற்கண்டுப் பொடி போட்டு குழந்தைகளுக்கு உபயோகிப்பது சிலாக்கியமானது. கூடிய வரை, ஒரே பசுவின் பாலை எப்போதும் உபயோகிப்பது உசிதமாகும். பல பசுக்களின் பாலை உபயோகித்தலால், பாலின் அமைப்பின் வேறுபாட்டால் குழந்தையின் தேகத்திற்கு ஒத்துக் கொள்ளாமலு மிருக்கலாம். நகர வாஸங்களில் பசுவின் போஷணையை ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். நோய் பிடித்த பசுவின் பால் குழந்தைக்கும் அவ்வியாதியை உண்டாக்கலாம். பசு அதிகமாகப் பால் கறக்கவேண்டுமென்று மணிலாக்கொட்டை, எள்முதலிய புண்ணுக்குகளை உணவாகக்கொடுக்கப்பெறும் பசுக்களின் பாலில் கொழுப்பு அதிகமாயிருப்பதால், அவற்றின் உபயோகம் குழந்தைகளுக்கு மந்தம் முதலிய வியாதிகளைப் பயக்கும். இக்காலத்தில், பாலை புட்டியில்வைத்து குழந்தைகளுக்கு ஊட்டும் வழக்கமும் ஏற்பட்டிருப்பதால், அப்புட்டியில் விடும்பாலில் ஒரு சிறிது சுண்ணும்புத்தேட்டை சேர்ப்பது நலம். அது புட்டியிலிருக்கும் பாலில் புளிப்பு ஏருமல் காக்கும். குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் விஷயத்தில் இவற்றைக் கவனிப்பது நன்மை பயக்கும்.

பாலை மிச்ரப் படுத்தல் இப்பட்டணத்தில் ஸர்வ ஸாதாரணமாக இருக்கிறது. இவ்விஷயத்தில் நாம் ஜாக்ரதையா யிருக்கவேண்டியதும் அவசியம். ஏனெனில் பாலிற்கலக்கப்படும் பொருள்கள் சில ஸமயங்களில் அளவு கடந்த தொந்தரையைக் குழந்தைகளுக்கு உண்டாக்கும். பாலைப் பாதுகாப்பதிலும் ஜாக்ரதை வேண்டும். அசுத்தமான பாத்திரங்களில் வைப்பதால் பால் கெட்டுவிடும். பாத்திரங்களைப் புளியிட்டதும் அதில் பால் வைப்பது தவறு. அப்பாத்திரத்தை நன்கு கழுவி அதிலுள்ள அழுக்கு நீரைப் போக்கித் துடைத்த பாத்திரங்களிலேயே பாலைவைப்பது உத்தமம். அப்படி வைத்தாலும் அதன்மேல் வேறு ஏதாவது தட்டினுலோ அதுபோன்ற வேறு பாத்திரத்தாலோ மூடிவைக்கவேண்டும். இல்லாவிடில், பாலில் ஈ, எறும்பு முதலியன விழுந்து அதை அசுத்தமாக்கிவிடும். இவ்விஷயங்களையும் நம்மவர் கவனிப்பது நலந்தரும்.

உண்ணுமல் ஊர் எல்லாம் திரியலாம், உடுக்காமல் ஒரு வீட்டுக்கும் போகலாகாது.

இந்திய வீரத்தாய்மார்

INDIAN HEROINES

முன்னுட்களில் மற்றதேசங்களைவிட நமது இந்தியாவானது நாகரிகத்திலும், கல்வியிலும், தன தான்ய ஐசுவரியத்திலும் சற்றும் குறைந்த தில்லை என்று சரித்திர அறிஞர்களும், மாணவர்களும் பற்பல ஆராய்ச்சி செய்து கூறியிருக்கிருர்கள். இந்தியாவில் வீரத்தனமும் சிறிதும் குறைவாயில்லை என்று சாதித்து இதற்கு முன்னே ஒரு வியாசம் எழுதி யிருந்தோம். எந்நாட்டிலும் வீரத்தன்மையானது செவ்வனே வேர் ஊன்றிச் செழித்து ஓங்குவதற்கு அந்நாட்டின் ஆண்பாலரீரன்றிப் பெண்பாலாரும் வீரச்சுவையை அறிந்து, அதற்குத் தகுந்தபடியே தாம் தம் குழந்தைகளுக்குக் கொடுக்கும் உணவுப்பாலுடன் வீரப்பாலென்ன, தியாகப்பாலென்ன இவைகளையும் ஊட்டவேண்டும் என்பது எளிதிற் புலப்படும். எத்தேசத்தின் முன்னேற்றத்துக்கும் அத்தேசத்தின் பெண்களின் மாட்சிமையே காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆதலின் நமது தமிழ்நாட்டுப் பெண்கள் நாகரிகம் உள்ளவர்களா என்றும், வீரக்குணம் பொருந்தினவர்களா என்றும் சற்றே கவனிப்போம்.

இவ்விஷயத்தைப்பற்றிச் சரிவர ஆராய்ச்சி செய்வதற்குக் கடைச்சங்கக்காலத்து நூல்களில் சிறந்தபுறநானூறு' என்ற நூலினின்று நாம் சில மேற்கோள்களை எடுத்துக் காட்டுவோம். பெண்கவிகளில் 'பொன்முடியார்' என்பவர், 'குழந்தையை ஈன்ற மாத்திரத்திலேயே தாயின் கடமை முடிந்தது; அவனைக் கல்விகேள்விகளில் சான்ருேனுக்குவது தகப்பன் கடமை; அவன் யுத்தத்தில் உபயோகிக்கும்படியான வேலாயுதத்தை அடித்துக்கொடுத்தல் கொல்லனுடைய கடமை; அவன் நல்வழியிலேயே நடக்கும்படி பார்த்துக்கொள்ளுதல் வேந்தன் கடமை; போர்முகத்துக்குச் சென்று எதிரிகளைக் கொல்லுதல்தான் தன் மகனின் கடமை' என்று பொருள்படும்படியாய்,

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே,
சான்ருே னுக்குதல் தந்தைக்குக் கடனே,
வேல்வடித் துக் கொடுத்தல் கொல்லற்குக்கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாளருஞ் சமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்று பாடியுள்ளார். என்னே இவரது கவித்திறமை! என்னே இவரது வீரத்தன்மை! 'பெற்றவளுக்குப் பிள்ளை என்று இருந்தால் போதும்; அவன் எப்படி யிருந்தாலும் சரி' என்றுகருதும் தற்காலத்துப் பெண்களுக்கும், 'செருமுகத்துச் சென்று சத்துருவை வெல்வதற்காகவே நாம் பிள்ளைகளைப் பெற வேண்டும்' என்று கருதிய இப் 'பொன்முடியார்' போன்ற அக்காலத்துப் பெண்களுக்கும் எவ்வளவு வேறுபாடுள்ளது?

போர்த்தலத்தில் மாண்டவர்க்கு வீரச்சுவர்க்கம் என்பது உண்டு என்று மஹாபாரதத்திலும், இராமாயணத்திலுமுள்ள பலபாடல்களிலிருந்து அறியலாம். ஐரோப்பாவில் நடக்கும் இப்பெரும் யுத்தத்தில் போர் முனையில் இறந்த வீரர்களின் தீரத்தை மெச்சி, அவர்கள் இறந்துபட்ட இடத்தில் கற்றூண்களை நாட்டி, அவைகளின் மேல் அவ்வீரர்களின் ஊர், பெயர் முதலியவைகளைச் செதுக்கி வைப்பது போல நம் நாட்டிலும் பண்டைக்கால முதல் இவ்வழக்கம் உள்ள தென்பது 'தொல்காப்பியம்' முதலிய நூல்களிலிருந்து தெரிய வரும். இன்னும் வீரக் களத்தில் ஓர் வீரன் விழுந்து உயிர் துறந்தால் அது சந்தோஷத்தைத் தரத்தக்க விஷயமென்றே பாவித்தார்கள். அதற்கறிகுறியாகப் 'பூங்கணுத்திரையார்' என்னும் பெண்கவிஞர், ஓர் வீரத்தாயைப்பற்றி வருணிக்கையில், "கொக்கின் இறகைப் பார்க்கிலும் வெண்ணிறமுடைய (அதாவது மிகவும் நரைத்த) தலைமயிரையுடைய இக்கிழவியானவள் தன்மகன் போர்க்களத்தில் சத்துருவின் யானையைக் கொன்று தானும் அடிபட்டிறந்தானென்ற செய்தியைக் கேட்டதும், தான் அவனைப் பெற்றபோது எவ்வளவு சந்தோஷப் பட்டாளோ அதை விட அதிகமான சந்தோஷத்தையடைந்தாள்" என்று அருத்தம் பெற,

'மீனுண் கொக்கின் றூவி யன்ன,
வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்,
களிறெறிந்து பட்டன னென்று முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே"

என்று பாடி யிருக்கிருர். தற்காலத்துப் பெண்டிரும் இவ்வீரத்தாய்மாரின் செய்கை

யறிந்து அவ்விதமே நடந்துகொள்வாராக!

தற்காலத்தில் நமது பெண்டிர்க்கு இராஜீய ஜனசமூகவிஷயங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்கிறார்கள். மற்றும் சிலர் 'பெண்களுக்குச் சட்டி சுரண்டுவதுதான் வேலையே யொழிய இவ்விஷயங்களெல்லாம் என்னத்துக்கு?' என்று கேட்கிறார்கள். ஆனால் முற்காலத்திலோ நமது பெண்டிர்கள் இராஜரீக விஷயங்கள் பலவற்றையும் ஊக்கத்துடன் கவனித்து வந்ததாகத் தெரிகிறது. தன்னாட்டை அன்ய அரசர்கள் பிரவேசிக்காமல் பாதுகாப்பது வெகு மேன்மையான குணமென்றும், அப்படிப் பாதுகாப்பதில் ஒருவன் உயிர் துறந்தால் பல தான தருமங்களைச் செய்தால் உண்டாகும் புண்ணியத்தைக் காட்டிலும் உயர்ந்த புண்ணியத்தை அவன் அடைகிறான் என்றும் ஓர் வீரத்தாய் கூறியுள்ளார்.

"தருமமு மீதேயாம், தானமு மீதாம்,
கருமமுங்காணுங்காலீதேயாம்—செருமுனையின்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப வென்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்"

ஆதலின் நமது பெண்களுக்கு இராஜீய ஜனசமூக விஷயங்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை என்னும் விஷயம், இப்பொழுது உண்மையாயின், நாம் அவர்களுக்கு அவ்விஷயங்களைப்பற்றிப் போதிக்காமலிருப்பதின் பயனே தவிர, அவர் குற்றமன்றென்பது சட்டென விளங்கும்.

இனிப்போரில் வீரர்தங் கடமை யென்னவென்று விசாரிப்போம். நம்மவர்களுக்கு யுத்தத்தில் சத்துருவைக் கொன்று ஜய பேரிகை முழக்குவதே சந்தோஷத்தை யுண்டாக்கும். தன்னைப் பார்க்கிலும் சத்துரு பலிஷ்டனானால் அவனுடன் உயிருள்ள வரையில் பொருது யுத்தகளத்தில் இறப்பதே மேன்மை என்று கருதுவார்களே யொழியப் புறங்காட்டி ஓடமாட்டார்கள். அப்படிப் புறங்காட்டி ஓடுவதைக்காட்டிலும் அவமானமான காரியம் ஒன்றுமில்லை என்பதை எல்லோரு மறிவர். இது அக்காலத்துப் பெண்களுக்கும் தெரியாதன்று. உதாரணமாக, காக்கைபாடினியார் * என்பவர் அரிதான ஒரு சரித்திரத்தைக் கூறியிருக்கிறார். தன் நரம்பெல்லாம் நாராய்த் தெரியும் படியாயும், மேற் சதையெல்லாம் சுருங்கிச் சருகு போன்றதாயும் உள்ள படுகிழவி யொருத்தி, தன் சிறுவன் போரில் மாண்டான் என்ற செய்தியைப் பலர் கூறக் கேட்டு 'அவன் புறங்காட்டி ஓடி, முதுகில் அடிபட்டு, இறந்திருப்பானாயின் குழந்தையா யிருக்கும்போது அவன் பால் பருகிய என் ஸ்தனத்தைச் சிதைத்துவிடுவேன்' என்று சினந்து, சபதஞ் செய்து, போர்க்களத்தில் தனக்கு வாள் அகப்படுமோ இல்லையோ என்று சந்தேகித்துக் கூரியதோர் வாளைக் கைக்கொண்டு, அவன் விழுந்து இறந்த இடத்துக்குச் சென்று, அங்கிருக்கும் பிணங்கள் எல்லாவற்றையும் துளாவி, குறிப்பால் தன் மகன் பிணத்தை எடுத்து, அவனது உடல் வேறு, சிரம் வேறாயிருத்தல் கண்டு மனமகிழ்ந்து, "என் சிறுவன் புறங்காட்டி ஓடவில்லை," "எதிரியோடு நேர் நின்று பொருதே இறந்தனன்," என்று நினைத்து, அப்பிணக் குவியலின் மத்தியிலேயே ஆனந்தக் கூத்தாடினள் என்று சொல்லியிருக்கிறார்.

"நரம்பெழுந் துலரிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர்கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
தனமறுத் திடுவன் யானெனச் சினை இ
கொண்ட வாளொடும் படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!"

இவ்வீரத்தாயின் மனவலிமை வியக்கத் தக்கதன்றோ! பிள்ளையிறந்தான் என்று கேட்டு சாதாரணமாய்த் தாய்கள் மூர்ச்சித்து விசனக் கடலில் மூழ்கியிருப்ப, இவள் குதூகலித்துக் கூத்தாடினளே! இவள் ஆண்மையன்றோ ஆண்மை!

இப்பொழுது இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களில் ஒவ்வொரு பெண்ணும் 'என் குடும்பத்திலிருந்து பதின்மர் போர்க்குச் சென்றிருக்கின்றனர்,' 'என் குடும்பத்தினின்று இருபது பேர் சேனையில் சேர்ந்திருக்கிறார்கள்', என்று சொல்லிச் சந்தோஷிப்பது போல, நமது பெண்களும் தம் குடும்பத்திலிருந்து எவ்வளவு பெயர் சண்டைக்குச் செல்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு தமக்குக் கௌரவம் அதிகம் என்று நினைத்தார்கள். இதை 'ஒக்கூர் மாசாத்தியார்'* என்பவருடைய பாடல்களிலிருந்து நன்கு விளக்கலாம். 'ஒரு பெண்ணின் தந்தை முன்னாளில் நடந்த யுத்தத்தில் ஒரு யானையால் எதிர்க்கப்பட்டு இறந்தனன். நேற்று நடந்த போரில் அவள் கொழுநன் மாண்டான் அப்படியாயினும் மறுபடி இன்றைக்குப் போர் முரசம்கேட்டவுடனே போருக்குத் தன் குடும்பத்திலிருந்து எஞ்சிய பெயரையும் அனுப்ப வேண்டுமென்ற விருப்பத்தால் மயங்கி, விருத்தாப்பிய தசையில் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ள தன் ஒரே மகனை அருகில் அழைத்து, வேலாயுதத்தை அவன் கையில் கொடுத்து, அவனுக்கு வெள்ளை வஸ்திரத்தை யுடுத்தி, தலைமயிரை நன்றாய் எண்ணெய் தடவிச் சீவி, மனமாற ஆசீர்வதித்துப் போர்க்களத்துக்குச் செல்க என்று அனுப்பினாளே, இவள் துணிவே துணிவு! இவள் சிந்தை எவ்வளவு கடுமையானது! இவளே வீரக்குடியில் பிறந்த பெண்ணாவாள்!' என்று வியப்புறுகிறார்.

* காக்கை கரைந்ததைப் பற்றி இவர் பாடியிருப்பதால் இவருக்குக்'காக்கை பாடினியார்' என்ற பெயர் வழங்கிற்று. முற்காலத் துப் பெயர்கள் பலவும் காரணப் பெயராயிருத்தல் காண்க.

இராவுத்தனைத் தள்ளினதும் அல்லாமல் குழியும் பறித்ததாம் குதிரை.

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்றுமயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇ
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒரு மகனல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

இன்னும் தன் மகனைப் போர்க்கு அனுப்ப வேண்டும் என்ற ஆசை, பெண்கள் மனதில் எப்போதும குடிகொண்டிருந்தது என்பது பின் வரும் பாட்டால் நமக்குத் தெரிவரும்:—

"வந்தபடை நோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃகம் பிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு."

* ஒக்கூர் என்ற ஊரில் இவர் இருந்ததால் இவருக்கு இப்பெயர் வழங்கிற்று.

அதாவது படைக்கு ஆள்வேண்டும் என்பது தெரிந்தவுடனே, தன் மகனும் சேனையிற் சேரவேண்டுமென்ற ஆத்திரத்தால், தன் ஸ்தனத்தில் பால் குடித்துக்கொண் டிருக்கும் குழந்தையைக் கீழே தள்ளிவிட்டு, முன் சண்டையில் வளைந்துபோன வேலாயுதத்தை அடுப்பில் போட்டுக் காய்ச்சி, நிமிர்த்தி, தன் மூதாதையோர்கள் போரில்சண்டை செய்து இறந்ததற்காக நாட்டப்பட்ட வீரக்கற்களைத் தன் மகனுக்குக் காட்டி, அவனைப் போர்க்குச் செல்க என்று சொல்லியனுப்பினாள். எவ்விஷயத்தைக் காட்டிலும் குழந்தை பால்பருகுவதே முக்கியம் என்று கருதும் பெண்டிர், அதையும் கவனிக்காமல் போர்க்குத் தன் மகனை யனுப்புவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள் என்றும், நாட்டைக் காப்பதற்கு வீரர்களைப் பெண்டிரே தேர்ச்சி செய்துகொண்டு வந்தார்கள் என்றும் இதனால் நன்கு விளங்குகின்றனவல்லவா?

மற்றோரிடத்தில் ஒரு பெண் 'எங்கே உன் பிள்ளையைக் காணோம்?' என்று கேட்டதற்கு 'அவன் போருக்குப் போயிருப்பான்' என்று மறுமொழி கொடுத்ததுந் தவிர, தன் வயிற்றைப்பார்த்து, 'இது புலிகிடந்த குகையன்றோ' என்று சொல்லி மகிழ்ந்தாள். இதனால் அக்காலத்துத் தாய்கள் வீரமுள்ள பிள்ளைகளைப் பெறுதலே தம்மை மேன்மையுண்டாக்கும்' என்று கருதியிருந்தார்கள் என்பது புலப்படவில்லையா?

நாட்டுக்காகப் போர் முனையிற் சாவதே உத்தமமான சாவென்றும் மற்றெல்லாம் இழிவானதே என்றும் அப்பெண்களின் கொள்கை. 'மணிமேகலை'யில் இதற்கு நல்லதோர் சான்றுள்ளது. ஒரு அரசன் புத்திரனாகிய உதய குமாரன் என்பவன் துறவிப்பெண்ணாகிய மணிமேகலையோடு சேரவேண்டும் என்ற அவாவால், மதியிழந்து, அவளைப் பலாத்காரம் செய்யப் பிரயத்தனப்பட்ட போது, ஒரு கந்தருவனால் மாண்டான், என்ற செய்தி கேட்டு, அவன்தாய் விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கையில் தோழியாகிய வாசந்தவை யென்பாள் அருகே வந்து, சமாசாரத்தை யறிந்து, அவளைத் தேற்றுமாறு,

"தன் மண் காத்தன்று, பிறர்மண் கொண்டன்று
என்னெனப்படுமோ நின் மகன் மடிந்தது"

இருந்தவன் எழுந்திருக்கிறதற்குள்ளே நின்றவன் ஒரு காதம் போவான்.

என்று சொல்லுகிருள். அதாவது உன் மகன் தன் நாட்டைச் சத்துரு வசம் ஒப்பிக்காமல் சண்டைபோடுவதில் மாண்டானல்லன்; மற்ற நாட்டைக் கவரும்போதும் இறந்தானல்லன்; அவன் சாவும் ஒரு சாவா? ஈனமான காரியத்தைச் செய்ய ஆரம்பித்து இறந்தனனுதலின், நீ அவனைப்பற்றி துக்கப்படவேண்டாம்' என்ருள்.

இவைகளைத் தவிர நமது இதிஹாஸ புராணங்களிலும் வீரச்சுவை பொலிந்து விளங்கும் பாக்கள் பலவுள. ஆயினும் நாம் மேற்கோளாய்க் காட்டியுள்ள இவற்றிலிருந்தே நமது முன்னேர்களுக்குச் சண்டை செய்யும் திறன் நிரம்ப இருந்ததென்றும், அவர்களுக்குப் போர் முனையில் இறப்பது வெகு சந்தோஷகரமானதென்றும், வீரத்தன்மை ஆண்பாலார்க்கன்றிப்பெண்பாலார்க்கும்மிகுதியாயிருந்ததென்றும், அக்காலத்துப் பெண்கள் தமது ஆண்மக்களோடு சரிசமமான தைரியம் பொருந்தியவர்களென்றும், அவர்கள் சமய விஷயங்களிலும், இராஜீய விஷயங்களிலும், ஜன சமூக விஷயங்களிலும், மிக்க ஊக்கத்தை உடைத்தா யிருந்தார்கள் என்றும், கவித்திறமையிலும், கல்வித் திறனிலும் ஆண்பாலரை விடச் சற்றும் குறைந்தவரில்லை யென்றும், ஜனன தேசத்தின் அன்பு அவர் தம் மனதில் நின்று குடிகொண்டிருந்த தென்றும் நாம் அறிகிருே மல்லவா? இப்பேற்பட்ட வீரத் தாய்மாரின் வயிற்றுதித்த இக்காலத்துப் பெண்டிரும் அவர் தம் தூய்மை, வீரம், ஒழுக்கம் முதலிய குணங்களைப் பெற்று அவர்கள் எப்படித் தம் பிள்ளைகளை நாட்டின் பாதுகாப்புக்காகப் போர்முனைக்கு அனுப்பி, அழியாப் புகழடைந்தனரோ, அவ்வழியே இவர்களும் தம் மக்களை இந்தியகாப்புச் சேனையிற் சேரும்படிசெய்து (Indian Defence Force) நமது ஜனன பூமியின் முன்னேற்றத்துக்கு எவ்விதத்திலும் உழைப்பாராக!

சென்னையின் வரலாறு

THE STORY OF MADRAS

கோட்டையும் அதன் கட்டடங்களும்

உள் கோட்டை நான்கு கொத்தளங்களோடு கூடிய 100 கஜ சதுரமுள்ளது. வெளிப் பக்கத்தில் தேன்கூடுபோல் அதிக சொற சொறப்பான இரும்பு வர்ணமுள்ள இரும்பு கற்களென்று சொல்லப்பட்ட கடினகற்களால் கட்டப்பட்டது. கவர்னர் அரண்மனை, கோட்டைக்கு மத்தியிலுள்ளது. இதில் கம்பெனி வேலைக்காரர்களுக்கும் அறைகளுண்டு. இது அழகான உயர்ந்த சதுரக்கல் கட்டடம். வெளிக் கோட்டை வெள்ளையர் பட்டணத்திற்கு மத்தியிலுள்ளது. இது தீர்க்க சதுரமானது. இதன் நீளம் கால் மைல். அகலம் இதில் பாதி கூட இல்லை. இப்போது அக்கவுண்டெண்டு ஆபீஸ் என்று வழங்கப்படும் கட்டடம் முன் அட்மிராலெட்டி ஹவுஸ் என்று வழங்கப்பட்டது. இதில் ராபர்ட் க்ளைவ் குடி இருந்தார். ஸெண்ட் மேரி மாதா கோவில் 1678-ஞ அஸ்திவாரம் போடப்பட்டு 1680 ஞ கட்டி முடிக்கப்பட்டது. கோட்டையிலுள்ள இங்கிலீஷ்காரர்களே தங்களுக்குள் வரிவசூலித்து இதைக் கட்டினுர்கள். இது சென்னை இங்கிலீஷ் வீரசொர்க்க மென்று கருதப்படுகிறது. தென்னிந்தியாவின் சரித்திரத்தை யுண்டு பண்ணின மனிதர்களின் ஞாபகக்குறிகள் இதில் பாதுகாக்கப்பட் டிருக்கின்றன.

கம்பெனி உத்தியோகஸ்தர்கள்

கம்பெனி உத்தியோகஸ்தர்கள்மொத்தத்தில் இருபத்து நான்கு பேர். முதலாவது உத்தியோகஸ்தர் ஆலோசனை சபைக்கு முதல் அங்கத்தினராகிய கவர்னர். இவருக்குச் சம்பளம் வருஷத்திற்கு 300 பவுன். இவருக்கு அடுத்தபடி கம்பெனி கணக்குப்பிள்ளை. இவர் இரண்டாவது அங்கத்தினர். இவர் சம்பளம் வருஷம் 100 பவுன். மூன்ருவது மெம்பர் பண்டகசாலைகாப்பவர். இவர் சம்பளம் வருஷத்திற்கு 70 பவுன். நான்காவது மெம்பர் சாமான் வாங்குபவர். இவர் சுதேசிகளிட மிருந்து சாமான்கள் வாங்குவதன்னியில் கம்பெனிக்குச் சேரவேண்டிய வாடகைகளையும் வரிகளையும் வசூலிப்பதுண்டு. ஒழிந்த வேளைகளில் இவர் ஒரு நியாயாதிபதி. இவ்வித வேலைகளுக்காக இவருக்

குப் பெரியசம்பளம் வருஷத்திற்கு 50பவுன். இது மாதிரி ஐந்தாறு அங்கத்தினர்களிருந்தார்கள். இவர்களுக்கு ஒருவருக்காவது வருஷச் சம்பளம் 100 பவுனுக்கதிகமில்லை. ஆனுல் எல்லோரும் சொந்த வியாபாரம் செய்து அதிகப் பணம் சம்பாதிப்பது வழக்கம். இதைப்பற்றி இங்கிலாந்திலுள்ள கம்பெனியின் டைரெக்டர்கள் கண்டித்தும் கம்பெனி வேலைக்காரர்களின் சொந்த வியாபாரம் பலமடைந்ததேதவிர, கொஞ்சங்கூடக் குறையவில்லை. ஆலோசனைசபை அங்கத்தினர்கள் "வியாபாரிகளென்றும்", "பெரிய வியாபாரிகளென்றும்"



வழங்கப்பட்டனர். "பெரிய வியாபாரிகள்" என்ற பட்டம்பெறக் கம்பெனி வேலைக்காரர்களெல்லோரும் ஆசைப்படுவதுண்டு. இங்கிலாந்திலிருந்து சிறுவர்கள், சில சமயங்களில் "குமாஸ்தாக்களாகவும்" சில சமயங்களில் "வேலை கற்றுக் கொள்பவராகவும்" வருவதுண்டு. "வேலைகற்றுக் கொள்பவர்கள்" மேல் அந்தஸ்திற்கு மாற்றப்படுமுன் ஏழுவருஷம் வேலை செய்யவேண்டும். முதல் ஐந்து வருஷங்களில் உடுப்புக்காக வருஷத்திற்கு இவர்களுக்குச் சம்பளம் ஐந்து பவுன். அடுத்த இரண்டு வருஷங்களில் இவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 10 பவுன் சம்பளம். இதற்குப் பிறகு இவர்கள் "குமாஸ்தாக்கள்" என்று வழங்கப்பட்டு, ஒரு வருஷம் சென்றதும் "காரியஸ்தன்" என்று கூப்பிடப்பட்டு, பிறகு "வியாபாரிகளும்" சபையின் அங்கத்தினராகவுமாவது வழக்கம். மேற் சொல்லியவர்களைத் தவிர, வேறு இரண்டு உத்தியோகஸ்தர்களுண்டு. இவர்களில் ஒருவர் மாதாகோவில் குருக்கள். இவருக்குச் சம்பளம் வருஷத்திற்கு 100 பவுன். மற்றவர் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர், இவர் சம்பளம் வருஷத்திற்கு 50 பவுன். இவர் எல்லாக் குழந்தைகளுக்கும் மதபேதம் பாராட்டாமல் படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் கற்றுக்கொடுப்பவர்.

பழைய கோட்டையில் ஒருநாள்

அதிகாலையில் குண்டு சப்தம் கேட்கும், எல்லோரும் படுக்கைவிட்டு எழுந்திருப்பார்கள். ஐரோப்பியச் சிப்பாயின் அளந்து நடக்கிற நடையும், இடுப்பில் தோல் பெல்ட்டும் கத்தியும் தரித்த சிறிய கம்பீரமான சேவகனும், வஸ்திரம் தரியாமல் கூலிகள் ஹோவென்று சப்தம் செய்துகொண்டு ஓடி வருகிறதும், வேலை கற்றுக் கொள்பவர்களும், குமாஸ்தாக்

களும், காரியஸ்தர்களும், வியாபாரிகளும் இந்
துக்கள்போல் பாதி உடைதரித்துக் கொள்வ
தும், காலைப்பிரார்த்தனைக்காக மாதா கோவி
லில் கூடும் கூட்டமும், பண்டகசாலைகள்
திறக்கப்பட்டு வியாபாரிகள் சப்தம் போட்டுக்
கொண்டு வருவதும், விற்பனைக்காக ஐரோப்
பிய சாமான்கள் பரப்பியிருப்பதும், ஏற்றுமதி
க்காகச் சாமான்கள் மூட்டைகளாகக் கட்டப்
படுவதும், சிறிய பள்ளிக்கூடமும், அதிலுள்ள
நாநாவித வர்ணமுள்ள சிறுவர்களும் சிறுமிக
ளும் வேலை கற்றுக்கொள்பவர்கள் முதல், கவர்
னர்வரையில் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து
சாப்பிடும் மத்தியானச் சாப்பாடும், மறுபடியும்
இவர்கள் வேலைக்குப் போவதும், வேலைவிட்டு
சாயந்திரம் வீட்டுக்குத் திரும்புவதும் வெகு
விநோதமா யிருக்கும். ஞாயிற்றுக் கிழமைக
ளில் வேலை இல்லை. அப்போது எல்லோரும்
ஐரோப்பிய உடைதரித்து மாதாகோவிலுக்குப்
போவது வழக்கம். மாதாகோவிலில் குருக்கள்
ஒரு மணிநேரம் கவர்னரைவிடப் பெரிய
மனிதனாக விருப்பார்.

கோட்டைக்கு வெளியில் தோட்டங்க
ளுண்டு. இவைகளில் கம்பெனி குமாஸ்தாக்க
ளும், காரியஸ்தர்களும் போய் உலாவுவ
துண்டு. சில சமயங்களில் குடித்துவிட்டு
அக்காலத்தில் பாடப்படும் வேடிக்கைப்பாட்டு
கள் பாடுவார்கள். கோட்டை விட்டு மூன்று
மைலுக்கப்பால், கவர்னர் உத்திரவன்னியில்
ஒருவரும் போகக்கூடாது. கம்பெனி வேலைக்
காரார்களுக்குள் குடி, சண்டை, சூதாட்டம்
அதிகம். ஆகிலும் ராஜபக்தியும், மதாபிமான
மும் இவர்களிடமுண்டு. இவர்களுடைய
கெட்ட குணங்களை அடக்கக் கவர்னர்கள்
அநேக சட்டங்கள் செய்தும் பிரயோசனப்
படவில்லை. குடிகாரர்கள் தண்டிக்கப்படுவ
துண்டு. மிதமிஞ்சிக் குடிப்பர்களைக் காவலில்
வைத்து பிறகு, இங்கிலாந்திற்கு அனுப்பிவிடு
வார்கள். பொய் சொல்லுகிறவர்களுக்கும் காலை
மாலைபிரார்த்தனைக்காகக்கோவிலுக்குப்போகா
தவர்களுக்கும் நான்கணா அபராதம். இரவு 8
மணிக்குமேல் கோட்டையைவிட்டு வெளியில்
போகிறவர்கள் தண்டிக்கப்படுவதுண்டு. எக்
காரணத்தைக் கொண்டாவது கோட்டைச்
சுவர் ஏறிக்குதிப்பவர்கள் விலங்கு போடப்பட்
டுக் கப்பல்கள் வந்தவுடன், இங்கிலாந்திற்கு
அனுப்பப்பட்டு, கடுந்தண்டனை விதிக்கப்பட்
டார்கள். சண்டைபோடுகிறவர்களுக்கு இர
ண்டுமாசம் காவல், கம்பெனி சிப்பாய்களுக்குத்
தண்டனை கடுமை. குற்றஞ்செய்தவர்களைக்
கட்டிவைத்துச் சவுக்கால் அடிப்பதுண்டு. இவ்
வளவுதண்டனைகள்ஏற்பட்டிருந்தும்கம்பெனி
வேலைக்காரர்களுக்குள் எப்போதும் சண்டை
சச்சரவுகள் அதிகம். லார்ட் பிகெட் என்று
ஒரு கவர்னர் இருந்தார். அவருடைய ஆலோ
சனை சபை அங்கத்தினர்கள் எல்லோரும் கர்
னல் ஸ்டுவர்ட்டைத் தஞ்சாவூருக்குத் தளகர்த்
தனாக அனுப்பும்படி சொன்னார்கள். பிகெட்
மாட்டேனென்று சொல்லிவிட்டார். கவர்னர்
தகவலன்னியில் அங்கத்தினர்க ளெல்லோ
ரும் ஸ்டுவர்ட்டைத் தளகர்த்தனாக நியமித்து
விட்டார்கள். இதைக் கேட்டதும் பிகெட்
கோபித்து அங்கத்தினர்களை ராஜதுரோகிக
ளென்று குற்றஞ் சாட்டினார். இவர்கள் பிகெட்
டை எப்படியாவது ஸ்டுவர்ட்டால்கைதியாக்க
வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஒருநாள்
இராத்திரி $8\frac{1}{2}$ மணிக்குக்கர்னல் ஸ்டுவர்ட்டைப்
பிகெட் தன்னுடைய வீட்டுக்கு இராச்சாப்
பாட்டிற்காக அழைத்துக்கொண்டு போகும்
போது, தீவில் மன்ரோ பிம்பத்திற்குச் சமீபத்
தில் ஸ்டுவர்ட்டு லார்ட் பிகெட்டைக் கைதியா
கப் பிடித்து, பரங்கிமலைக்குக் கொண்டுபோய்
மேஜர் ஹார்ண் வீட்டில் சிறைவைத்தனர்.
அச்சிறையிலேயே 1777-ம் வருஷம் மேமீ 11உ
பிகெட் இறந்தார். பிகெட் யாதொரு கல்
வெட்டுமில்லாமல் ஸெண்ட் மேரி மாதாகோ
விலில் புதைக்கப்பட்டார்.

மத்ராஸ் பாங்கி

இது 1683 வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்
டது. முதலில் லட்சம் பவுன்வரையில் வருஷம்
ஒன்றுக்கு நூற்றுக்கு 6வீதம் கடன் வாங்குவ
தாகவும், பணம்போடுகிறவர்கள்எந்தத்தொகை
யும் ஆறு மாசத்திற்குக் குறையாமல் போட
வேண்டுமென்றும், அப்படிப் போட்டபணத்
திற்கு வருஷம்-க்கு நூற்றுக்கு 6வட்டியென்றும்,
இவ்விதம் பணம் போடுகிறவர்களுக்குக் கம்
பெனி முத்திரையுடன் ரசீது கொடுக்கப்படு
மென்றும் தம்பட்டம் அடிக்கச்செய்து ஜனங்
களுக்குக் கவர்னரும் அவர் ஆலோசனைசபை
அங்கத்தினர்களும் பகிரங்கப்படுத்தினார்கள்.

நியாய ஸ்தலம்

முதலில் மாதாகோவில் நியாய ஸ்தலமாகவு
மிருந்தது. நியாயதிபதி கவர்னரே. பன்னிரண்டு
ஜூரிகளின் அபிப்பிராயத்தைக் கலந்து கவர்
னர் நியாய பரிபாலனஞ் செய்வதுண்டு. இப்
படிச்செய்தும் கவர்னர் நியாயபரிபாலனம் சரி
வரச் செய்யவில்லை என்று அனேக புகார்கள்
ஏற்பட்டதால், இங்கிலாந்திலுள்ள கம்பெனி
டைரெக்டர்கள் இங்கிலிஷ் அரசர் உத்திர
வின் பேரில் தாங்கள் அவ்விடமிருந்து ஒரு
நியாயாதிபதி அனுப்புவதாகக் கடிதம் எழுதி,
அவ்விதமே ஒருநியாயாதிபதியை அனுப்பினார்
கள். இவர் சென்னை வந்து சேர்ந்ததும், "அட்
மிராலிடி கோர்ட்டு" என்று சொல்லப்பட்ட
புது நியாயஸ்தலம் ஒன்று ஏற்படுத்தப்பட்
டது.

மதராஸ் கார்போரேஷன்

தற்கால மதராஸ் கார்போரேஷன் ஆபீஸ்
பெரியமெட்டிலிருக்கும் "ரிப்பன் பில்டிங்ஸ்"
என்று சொல்லப்பட்ட பெரிய கட்டடம்,
1913 வருஷத்தில் கட்டிமுடிக்கப்பட்டு, அப்
போது ராஜப் பிரதிநிதியாகிய லார்ட் ஹார்
டிஞ்சு பிரபுவால் திறக்கப்பட்டது. மதராஸ்கார்
பொரேஷன், முதல் முதல் 1688 வருஷத்தில்
மிஸ்டர் ஜோஸய்யா சைல்டு என்பவரின் ஏற்
பாட்டின்படி, மிஸ்டர் யேலுகு ஏல்என்பவர்மத
ராஸ் கவர்னராகவிருக்கும் காலத்தில் ஸ்தாபிக்
கப்பட்டது. இப்போது "கார்பொரேஷன் பிர
ஸிடெண்டு" என்று சொல்லப்பட்ட உத்தியோ
கஸ்தர் அக்காலத்தில் "மேயர்" என்று அழை
க்கப்பட்டனர், கார்பொரேஷன் கமிஷனர்
களுக்கு "ஆல்டர்மென்" "நகரத்தார்" என்று
பெயர். பலஜாதிகளின் நாட்டாமைக்காரர்கள்
ஆல்டர்மென்னாகவும் நகரத்தாராகவும் நேமிக்
கப்பட்டார்கள். இவர்கள் தங்களுக்குள் ஒரு
வரை மேயராகப் பொறுக்கி எடுத்துக் கொள்
ளலாம். மேயரைத் தவிர, ஆல்டர்மென் பன்
னிரண்டு பேர். இவர்கள் மெல்லிய சிகப்புப்பட்
டாடை தரிக்கவேண்டும். நகரத்தார் வெண்
மையான சீனா பட்டாடை தரிக்கவேண்டும்.
இவர்கள் 60 முதல் 100 பேர்வரையிலிருந்தார்
கள். இவர்களுடைய வேலைக்காரர்கள் இவர்
களுக்கு முன்னால் வெள்ளித்தடிகள்பிடித்துப்
போவதுண்டு. கார்பொரேஷன் உத்தியோகஸ்
தர்கள் கவர்னரவர்கள் சம்மதத்தின்பேரில்
மேயராலும் ஆல்டர்மென்னாலும் நியமிக்கப்
படவேண்டும். மேயரும் ஆல்டர்மென்னும்
நியாயாதிபதிகளாகவிருந்து அவர்களுக்கு
முன் கொண்டுவரப்படும் வியாச்சியங்களை
விசாரித்துத் தீர்ப்பு செய்வதுண்டு. 12 ஷில்
லிங்குக்கு மேல் அபராதம் விதிக்கப்பட்டவர்
"அட்மிராலிடி கோர்ட்டிற்கு" அப்பீல்
செய்யலாம். எல்லாச் சிவில் வியாச்சியங்களி
லும், கவர்னருக்கும் அவர் ஆலோசனை சபை
யாருக்கும் அப்பீல் செய்து கொள்ளலாம்.
அபராதம் விதிக்கப்பட்ட தொகையில், பாதி
கம்பெனியாருக்கும், பாதி கார்பொரேஷனுக்
கும் பாத்தியம். இங்கிலிஷ்காரர்கள் குற்றஞ்
செய்தால் அவர்களை விசாரிக்க இவர்களுக்கு
அதிகாரமில்லை. மூன்று வராகனுக்குள்பட்ட
சிவில் கேசுகளில் இங்கிலிஷ்காரர்கள் சம்பந்
தப்பட்டிருந்தால் அப்போது அவர்களை மேய
ரும் ஆல்டர்மென்னும் விசாரிக்கலாம்.
மேயர் ஆல்டர்மென் பதின்மூன்று பேரில்,
மூன்று பேர் கம்பெனி வேலைக்காரர்களாகிய
இங்கிலிஷ்காரர்கள்; மூன்றுபேர் போர்ச்சுகேசி
யர்; பாக்கி ஏழுபேர் மகமதியர்களும் இந்துக்
களும். கட்டடங்கள் கட்டவும், இனும் பள்
ளிக் கூடங்கள் ஏற்படுத்தவும், கவர்னர் சம்ம
தத்தின் பேரில் ஜனங்களிடத்தில் வரி வசூ
லிக்கவும் கார்பொரேஷனுக்குஅதிகாரமுண்டு.
மேயர் ஆல்டர்மென் நகரத்தார்கள் தங்கள்
தங்கள் வேலையை ஒப்புக்கொள்வதற்கு முன்
இங்கிலிஷ் ராஜாவுக்கும், கம்பெனிக்கும், தற்
கால கவர்னருக்கும் தாங்கள் உண்மையாக
வும் நம்பிக்கை யுள்ளவர்களாகவு மிருப்போ
மென்று பிரமாணஞ் செய்யவேண்டியது.

பஞ்சரத்தினம்

(5 அழகிய ஆப்டோன் படங்களுடன்.)

சீதை, சகுந்தலை, உருக்குமணி, தமயந்தி,
சாவித்திரி இவ்வுத்தமிகளின் சரிதங்கள்
இனிய நடையில் எழுதப் பெற்றது. கனம் ஹை
கோர்ட் ஜட்ஜ் ம-ா-ா-ஸ்ரீ, திவான் பஹதூர்
வி. வி. குமாரஸ்வாமி சாஸ்திரியாரவர்கள்முன்
னுரையுடன் கூடியது. இரண்டாம் பதிப்பு.
விலை அணா 12. சந்தாதார்க்கு மாத்திரமே
அணா **10.**

கல்விக் குறிப்புகள்

EDUCATIONAL NOTES

பம்பாயில் கல்விவிஷயமானதர்ம ஸ்தாபனம்

பம்பாய் மாகாணத்தில் வித்யா விஷயமாக கனம் ஸர் விடல்தாஸ் தாமோதர தாகர்ஸே அவர்கள் ஏற்படுத்தியதர்ம ஸ்தாபனத்தை அபிமானிகள் அறிவர். ஏழைப் பிள்ளைகள் மேற்கல்வி கற்கச் சவுகரியம் செய்யவேண்டி அவர் இப்போது ரூ. 5 லக்ஷம் மதிப்புள்ளவோர் தர்ம ஸ்தாபனம் செய்திருக்கின்றனர். பம்பாய் சர்வ கலாசாலையில் படிக்கும் ஏழைகளுக்குமட்டுமே இவ்வுதவி ஏற்பட்டதாகும். இதிலிருந்து அப்படிப்பட்ட ஏழைப்பிள்ளைகளுக்குக் கடன் கொடுக்கப்படும். பரீக்ஷை தேறி உத்யோகத்திலமர்ந்தபின், அவர்கள் இக்கடனைச் சவுகரியப்படி தவணையாகத் திருப்ப வேண்டியதென்பது ஒரு நிபந்தனை. இதனால் இம்மூலதனம் குறையாது, வருஷந்தோறும் வரும் ஏழைப்பிள்ளைகளின் உதவிக்குச் சித்தமாக இருக்கவேண்டுமென்பதே கனம் ஸ்ரீமானவர்களின் நோக்கம். பணச் சவுகரியமில்லாது நம்முள் அநேகர் அரைப்படிப்போடு காலக்ஷேபம் செய்ய வேண்டி வரும் பெரும் ஸங்கடத்தை நாம் தனித்துச் சொல்லவேண்டியதில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு மேற்கூறிய பணவுதவி பெரும்பயனைத் தருமென்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீமான் தாகர்ஸே செய்திருப்பதைப்போல இன்னும் பலவிடங்களில் அநேகர் செய்ய முன் வருவார்களென்று எதிர் பார்க்கிறோம். இச் சந்தர்ப்பத்தில் கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜில் இப்படிப்பட்ட "ஏழைப் பிள்ளைகளின் மூலதனம்" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததை அபிமானிகளுக்குத் தெரிவிக்கிறோம். அது, அங்கு தலைமை வகித்த ஸ்ரீமான் நாகோஜி ராயரவர்களால் ஏற்பட்டது. அதினின்றும் கடன்வாங்கிச் சம்பளம் கொடுத்து, பரீக்ஷையில் தேறி, முன்னுக்கு வந்தவர்களில் சிலரை நாம் அறிவோம். அம் மூலதனம் இப்போது, "கும்பகோணம் காலேஜ் பழைய பிள்ளைகளின் சங்கத்தார் வசம் இருந்து வருவதாயும், அதினின்றும் ஏழைப்பிள்ளைகளுக்கு வித்யா விர்த்திகள் கொடுக்கப்படுவதாயும் தெரியவருகிறது. வித்யாவிர்த்தி கொடுப்பதிலும் மேற்கூறியபடி கடன் கொடுத்து உதவுதல் நன்மை பயக்குமன்றோ?

* * *

இந்தியா கவர்ன்மெண்டும் பிரதமக் கல்வியும்.

சென்ற வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார், மாகாணக்கவர்ன்மெண்டார் அனைவருக்கும் வித்யா விஷயமாக ஒரு ஓட்டு உத்தரவை அனுப்பியிருந்தனர். அதன்படி, அடுத்த பத்து வருஷங்களுக்குள், பிரதமக் கல்வியைக் கற்கும் மாணுக்கர்களின் ஸங்கியை இப்போதைவிட இருமடங்கதிகரிக்க வேண்டுமென்பதும், அதற்கேற்படும் செலவை, தாமும், பிரதேச கவர்ன்மெண்டாரும் லோகல் போர்டாரும் சமமாகக் கொள்ளவேண்டுமென்பதும், நோக்கமெனக் காட்டினர். ஆனால், தம் இந்திய ராஜாங்கரீதி சீர்திருத்தங்கள் காரணமாக ஷை வித்யா விஷய புரோவிருத்தியைக் கவனிக்க இடமில்லாம லிருந்தது. இச்சீர்திருத்தங்கள் அமுலுக்கு வரும்போது, பிரதேச கவர்ன்மெண்டாருக்குப் பணச்செலவு விஷயத்தில் சில அம்சங்களில் சுயேச்சை ஏற்படுதலால் வித்யா விஷயமாக அவர்களே சகல காரியங்களையும் செய்யவேண்டிவரும். ஷை இரண்டு விஷயங்களையும் இந்தியாகவர்ன்மெண்டார்சுட்டிக் காட்டிப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு மீண்டும் ஒரு கடிதம் அனுப்பி, பிரதம கல்வி விஷயமாகப் பிரதேச கவர்ன்மெண்டார் சிரத்தை பாராட்டி அச்சிரத்தை மூலமாக அவ்வப் பிரதேசங்களில் கல்வி யபிவிருத்தி வரவர முதிரவேண்டுமென்று தாங்கள் கொண்டிருக்கும் கோரிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். வித்யாவிஷயமாகப் பிரதேச கவர்ன்மெண்டாரது கடமையைக் குறிப்பிட்டுக் காட்டிய இவ்வுத்தரவு கல்வியபிவிருத்தியில் அபிமானம் கொண்டிருப்பவர் அனைவருக்கும் சந்தோஷத்தையே தரும்.

* * *

இயற்கை அற்புதங்கள்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

காலஞ்சென்ற ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ராவ் பஹதூர் மிஸ்டர் எல். வி. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் முகவுரையுடன் கூடியது. சித்திரப் படங்கள் கொண்டது. விலை அணா 8.

வஸந்த மந்திரம்

(121-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழாம் அதிகாரம்

ஜோதிபுரியிலிருந்து கல்யாண சமாசாரம்

உதயபுரியில் பிரதாபசிங்கர் அரண்மனை; பூந்தோட்டத்திலே நடுமத்தியில் கட்டியிருக்கும் சிறிய மண்டபம். நாற்புறமும் மண்டபத்து ஜன்னல்கள் திறந்துவிட்டிருக்கின்றன. அப்படியும் காற்றே கிடையாது. பொழுது விடிந்து 7, 8, நாழிகை இருக்கலாம்; என்றாலும் வெயிலின் உக்ரம் சொல்லி முடியாது. மண்டபத்தின் நடுவில் உயர்ந்த ஆஸனங்களில் உட்கார்ந்துகொண்டு சம்பாஷிக்கும் அரசனுக்கும் மந்திரிக்கும் இருவர் பலமாக விசிறுகின்றனர். சுற்றிலும் இன்னும் பல நாற்காலிகள் இருக்கின்றன.

அரசன்.—"அதெல்லாம் இருக்கட்டும்; இன்று புதன்கிழமை யல்லவா? இன்னும் ஏன் ஜோதிபுரியிலிருந்து ஒருவரும் வரவில்லை! ஒருவேளை ஜயபாலன் நம்முடன் சம்பந்தம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லையோ! அவனது மந்திரி ஏதாவது தடை சொன்னானோ! அவ்வூராருடைய அபிப்பிராயம் வித்தியாசமாக விருக்கலாமோ! எனக்கு இக்கல்யாண விஷயம் ஒன்றுதான் மனத்தைச் சதா வருத்துகின்றது: பழையநாட்களே நாட்கள்; எனது முன்னோர், என் அருமை லலிதைபோன்ற பெண் இருந்தால் அவளுடைய விவாகத்திற்கு இவ்வளவு கஷ்டப்படுவார்களா? சுவயம்வரம் ஏற்படுத்தும்போது அரசர்கள் 'நான், நீ' என்று மேல்விழுந்து வருவார்களே—"

மந்திரி (சுமதி).—"என்செய்யலாம் அரசே! காலம் மாறிவிட்டது. அக்காலத்திலும் சில தொந்தரவுகள் இருந்தே இருந்தன. ஒரே விதமான பழைய வழக்கங்கள் நீண்டகாலம் நடைபெறமாட்டா. கடவுளின் ஆணைப்படி பழையன கழிதலும், காலத்துக்கேற்பப் புதியவழக்கங்கள் புகுதலும் நேரானதே. தாம் கவலைப்படக் கூடாது. ஜயபாலர் நம்மை ஏமாற்றமாட்டார். ஜனங்களுடைய சம்மதமும், மந்திரிகளின் உடன்பாடும், கிடைக்குமென்ற தைரியம் இல்லாவிட்டால் அவ்வளவு நிச்சயமாய் என்னிடம் வாக்களித்திருக்கவே மாட்டார். அவர் பேசிய வார்த்தைகளிலிருந்தும், முகக் குறிப்புகளிலிருந்தும் எனக்கு ஒருவித நம்பிக்கை உண்டாயிற்று. நான் புறப்பட்டு வந்து 16 நாட்கள் தானே ஆயின. இன்னும் கெடுவு இருக்கின்றதே சமாசாரம் வருவதற்கு—"

அரசன்.—"சுமதியாரே! நீர் சொல்வது சரியே; நீர் இவ்விடம் வந்து 15,16 நாட்கள் ஆய்விட்டதல்லவா? ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு வருஷமாகத் தோன்றுகின்றது எனக்கு! ஒவ்வொரு நாளும் எத்தனை தடவை நான் நாட்களை எண்ணி எண்ணி ஏக்கப்படுவேன்! என் பெண்மணி லலிதாம்பிகையின் மேனி தினேதினே விருத்தியடைய என் மனம் அதே அளவில் உற்சாகம் குறைகின்றது! ஈசா இது என்ன சோதனை!—" (யோசிக்கின்றான் அரசன்; மந்திரியும் மௌனம்.)

தூரத்தில் இராணி காந்திமதி வருகின்றாள். அவளைக்கண்ணுற்றதும் இருவரும் அவளெதிரில் விசனிக்கக்கூடாதென்று விசாரத்தை வெளிக்காட்டாமல் சிரமத்துடன் முகத்தை மலரவைத்துக்கொண்டு, அவள் உள்ளேநுழையும் வரையில் ஒன்றும் பேசவில்லை. அம்மையும் வந்தாள். மந்திரி "வந்தனம்! அம்மா!" என்று சொல்லித் தன்னிடத்தில் உட்கார்ந்தான். "என் அன்பே! என்னிடம் உட்காராய்" என்று ஓர் நாற்காலியைக் காட்டினான் அரசன். இராணி உட்கார்ந்தவுடன், "ஏது இன்று காலையில் இப்பொழுதிலேயே நமது சுமதியார் அரண்மனைக்கு வந்துவிட்டது?" என்று புன்சிரிப்புடன் கேட்டாள். மந்திரி ஒன்றும் பதில் சொல்லவில்லை. கல்யாண விஷயமாய் ஏதாவது சமாசாரம் வந்திருக்கலாம், இல்லையேல் வரக்கூடும், என்று சந்தேகித்து, மந்திரி இன்று காலையில் அரண்மனைக்கு வந்தது. அதைச் சொல்ல இஷ்டப்படாதவனாய் அரசியின் முகத்தை உற்றுப்பார்த்தான். தான் ஜோதிபுரியிலிருந்து திரும்பி வந்தபொழுது, இதற்கு முன்தடவை இராணியைப்பார்த்தது. இன்னும்ஒருவாரம்கூட முழுவதும் கழியவில்லை. அதற்குள்ளேயே அவளது அழகியவதனத்தில் எவ்வளவோமாறுபாடுகள் நன்றாய்விளங்கின. கண்களைச் சுற்றிலும் சற்றே குழிந்துபோய் இருக்கின்றது: கன்னத்தின் எலும்புகள் கொஞ்சம் வெளிக்கிளம்பி நிற்கின்றன. புருவங்களிடையில் மடிப்புகள் தோன்

றின ; புன்சிரிப்புச் சிரித்தபோதிலும் அச்சிரிப்பினுள்ளே ஆற்ருக் கவலையால் ஏற்பட்ட மன வாட்டம் நிலைபெற்று விளங்கிற்று. இவையெல்லாம் சுமதி ஒரு நொடியில் கண்டுகொண்டான். அந்தப்புரத்திலிருந்து தோட்டத்திற்கு வந்த நடையே அவளுக்கு அதிகச் சிரமமாகவிருந்தது. களைப்பால் உண்டான பெருமூச்சு இன்னமும் அடங்கவில்லை.

இவ்வாறு தோன்றும் இராணியை உற்றுப் பார்த்துவிட்டு, உடனே தலைகுனிந்து ஒன்றும் பேசாமலிருக்கும் மந்திரியைப் பார்த்து இராணி மறுபடியும் "வெயில் சற்று உக்ரமாய்த்தான் அடிக்கின்றது, இவ்வருஷம்! மேஷமாதத்திலேயே எவ்வளவு உக்ரம்! நாளைக்கா சூரியன் விருஷபத்தில் வந்து 9 நாள் ஆகிறது? இன்னும் 10 நாழிகை கூடஆகவில்லையே? அதற்குள் இந்தப் பாடா?" என்ருள். பேசுவதற்கு ஏதாவது விஷயம் வேண்டுமல்லவா? அதற்காக வெயிலும், உக்ரமும், மாதமும் கிடைத்தன! அவ்வளவுதான். வேறு காரியமாய்ப் பேசினது ஒன்றுமில்லை "இவ்வுக்ரத்துக்குத் தக்கபடி மஹாபலமாய் மழை மிதுன மாதத்தில் பெய்யுமென்று சொல்லுகிருர்கள் பெரியோர்; கோடைமழையைக்கூடக் காணேம் இதுவரையில்; போன வருஷம்போல் வருணபகவான் ஏமாற்ருமல் இவ்வருஷம் வேண்டுமளவு மழை கிருபை செய்தாராஞல் க்ஷேமம்தான்" என்ருன் மந்திரியும்.

"இதோ ஜன்னல் வழியாய்ப் பாரும் இக்கொடிகளை! வெயிலில் வாடிப்போய்த் தலை தொங்குவதைப் பார்த்தால் மிலேச்ச சேனை செய்யும் தீங்குக்கு ஆளாகி, மனமழிந்து, நிலை தடுமாறி நிற்கும் இராஜபுத்திரிகள் போல் இருக்கின்றன" என்ருள் இராணி.

அரசன் "என்னருமை மனைவி! நீ என்னென்னவோ உவமையெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிட்டாயே——"என்பதற்குள், ஒரு சேவகன் தூரத்தில் ஓடிவர அவனை மூவரும் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

விசிறிகளின் சப்தம் நன்ருய்க் கேட்கின்றதே தவிர வேறு சப்தமே கிடையாது. அம்மண்டபத்தில் மூச்சுக்கூட,பலமாய்விடவில்லை இராஜா இராணி மந்திரிமூவரும்! வந்த சேவகன் ஒரே அடியாய்க் கிழே விழுந்து, தண்டனிட்டு, எழுந்து, தலைகுனிந்து "ஜோதிபுரியிலிருந்து ஒரு பிராமண உத்தமரும் சில சேவகர்களும் வந்திருக்கின்றனர். உள்ளே வர உத்தரவாகவேண்டுமாம்" என்ருன்.

அரசன்.—"என்ன! என்னப்பா சொன்னுய்! பலமாய்ச் சொல்லேன்! என்னடா மொண மொணவென்று! உனக்குக்கூடக் கேளாதே உன் வார்த்தை! ஜோதிபுரியா? பிராமணேத்தமர் வந்திருக்கின்ருரா? என்னடா அப்பா சொல்லு?"

சேவகன்.—"ஆம்!சுவாமி!உத்தரவாகவேண்டுமாம் உள்ளே——"

அரசன் "கூட்டிக்கொண்டுவா, நேராய் இவ்விடத்திற்கு! ஓடு! போ!" என்று அவனை அனுப்பி,"மந்திரி!என்னவாய் இருக்கும்இந்தப் பிராமணர் வந்த காரியம்?" என்று கேட்டான்.

இராணி "என்ன! கேட்பானேன்! கல்யாணம் தான்; பின்னையென்ன?" என்ருள். மந்திரி "இருக்கலாம்; பார்ப்போம். இதோ வந்துவிட்டார். அழைத்துக்கொண்டு வருகிறேன் அவரை" என்று எதிர்சென்ருன்.

மந்திரி எதிர்கொண்டு அழைத்து வந்தபிராமணர் அரசனை வணங்கி, அவர் உத்தரவின் மேல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, மறுபடி எழுந்து, வெகு ஜாக்கிரதையாய்த் தமது மேல் வேஷ்டியில் சுற்றிவைத்துக்கொண்டிருந்த ஒரு கடிதத்தை அரசனிடம் நீட்டினர்.

மறுபடி எல்லோரும் மௌனம். கடிதத்தைவாங்கி,முத்திரையை உடைத்து, உள்ளே பார்ப்பது இமைப்பொழுதில் ஆய் விட்டது. படிக்கின்ருன் கடிதத்தை அரசன். எல்லோரும் அரசன் முகத்தைப்பார்த்த வண்ணமாய் இருக்கின்றனர். படித்து முடிந்தது. அரசன் 'சுமதீ! உமக்கு சுமதியென்ற பெயர் தகும். நீர் சொன்னபடியேதான் என் மருமகன் ஜயபாலனும் எழுதியிருக்கிருன். மந்திரிகளும் பெரியோர்களும் கல்யாணம் நடப்பதற்குத் தடையில்லை என்கிருர்களாம்" என்ருன். அரசன் வாய்மூடுவதற்குள் 'பளா, பளா' வென்று கௌளி சொல்லிற்று. எல்லோரும் அத்திசையில் திரும்பிப் பார்த்தனர்

அரசன் அதைக் கவனியாதவன் போன்று "என்ன ஐயா? ஜோதிபுரியில் எல்லோரும் சௌக்கியமா? என் மருமகன் ஜயபாலன் அரசாக்ஷி சரியாய் நடந்து வருகிறதா? மழைமாரி

எப்படி இருக்கின்றது?ஜனங்கள் எல்லோரும் திருப்தியாய் இருக்கிருர்களா?" என்று இவ்வாறு பல கேள்விகளைக் கேட்க, பிராமணர் "சமூகத்து ஆசீர்வாதத்திஞல் எல்லாம் சரிவர நடந்து வருகின்றனவென்று சொல்லும்படி கேட்டுக்கொண்டார்" என்ருர்.

அரசன்.—"அப்படியா! சந்தோஷம்—(தன் மனத்துள்) என்ன வணக்கம், என்ன பெருமை, என்ன புத்தி! (வெளிப்படையாய்) எனக்கு ஒன்றுவிட்ட தமக்கையும் உம் அரசருக்குத் தாயுமான அகிலாண்ட நாயகியார் சுகமோ?"

பிராமணர்.—"ஆம்! சுகமே! அவர்கள் சமூகத்துக்கு ஆசீர்வாத மனுப்பினுர்கள்."

அரசன் "சந்தோஷம்! மிகவும் சந்தோஷம்! இவ்வளவு இன்பமான சமாசாரம் நீர் கொண்டுவந்ததுபற்றி எங்கள் எல்லோருக்கும் மிகவும் திருப்தி; ஜகதீசனுடைய திருவருளை முன்னிட்டு இக்காரியம் நிர்விக்னமாய்க் கைகூடவேண்டும்; அவ்வளவே யான் வேண்டுவது!" என்று தன் கையைக் கூப்பிக் கொண்டு, தன் முன் சுவற்றில் மாட்டியிருக்கும் விசுவேசுவரனுடைய படத்தைப் பார்க்கின்ருன்.

மந்திரி.—"அரசே! அதற்கென்ன ஆக்ஷேபணை? இனிக் காரியம் கைகூடினது போலவேதான். நமது அரண்மனை ஜோஸ்யரைக் கொண்டு ஒரு முகூர்த்தம் பார்த்துத் தெரியப் படுத்திவிட்டால் சரி. முகூர்த்தவிஷயமய் ஏதாவது சௌகரியங்கள் சொல்லியிருக்கின்றனவோ கடிதத்தில்—சரி எல்லாம் பிறகு யோசிப்போம்."

அரசன்.—"ஆம்! ஆம்! பிறகு யோசிப்போம்! ஐயா உமது பேர்—"

பிராமணர்.—"இராமேசன்."

அரசன்.—"ஐயா இராமேசரே! நீர் நிரம்ப தூரம் நடந்து வந்து களைத்துப்போயிருக்கிறீர். நாழிகை 10க்குமேல் ஆகின்றது. ஸ்நாநம், போஜனம், இவை முடித்துத் தமக்கென்று விட்டிருக்கும் அறையில் சுற்றுச் சிரமபரிகாரம் செய்துகொள்ளுங்கள். இரவில் மறுபடி கூடிப் பேசுவோம்.— சுமதீ! நீரும் இவருடன் கூடச்சென்று, இவருக்கும் கூடவந்தவர்க்கும் தக்க இடம் அமைத்துக் கொடும்" என்று சொல்ல, சுமதி இராமேசரைத் தன்னுடன் அழைத்துச் சென்ருன். அரசனும் அரசியும் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டனர்.

எட்டாம் அதிகாரம்.—வைதிகர் குதூகலம்

"ஏன் ஐயா! ஆதித்யநாதரே! போதாகவில்லையா? நதிக்குப் போகலாம் வாருமே!"

"போகலாம், ஆக்ஷேபணையில்லை; இந்நேரத்து வெயில் என்ன பொறுக்கவே முடியவில்லையே!கிட்டத்தட்ட இரண்டு மூன்று நாட்களாய் இப்படியேதான் அடிக்கிறது. இருந்தபோதிலும், இன்னிக்கு ரொம்ப அதிகம்தான் என்று தோன்றது. என்ன சொல்நீர்"

"சொல்லறதென்ன! அதுதான் மண்டையைப் பொளக்கிறதே; கொஞ்சம் மத்தியானம் மோடம் கட்டித்து; என்னமோ மழையைக் காணேம்."

ஆதித்யர் "மழையாவதுமழை! வெயில் பலமாய் அடிச்சால் மழைவரும் என்கிருர்கள்; ஆஞல் ஒன்றுமில்லையே; நேத்திக்குந்தான் இருந்தது மத்தியானம் அதிக மேகம்: சாயங்காலம் அசாத்திய மாய்க்காத்தும் அடிச்சுது; அஸ்தமிக்கிறபோது கால்வரிசை மேகம்கூட இல்லை. சந்தியாவந்தனம் பண்ணிவிட்டுத் திரும்பிவரும்போது ஆகாசம் அப்பு அழுக்குக் கிடையாது."

"தெரியாதா சுவாமி உங்களுக்கு மத்தியானம் மேகசஞ்சாரம்; இராத்திரி நிர்மலம் ஆகாசம்; இது துர்பிக்ஷ லக்ஷணம் என்னு?"

"ஐயா ஸோமஸ்கந்தரே! துர்பிக்ஷமோ சுபிக்ஷமோ; வரத்தைப் பொறுக்கத்தானே வேணும்: என்ன சொல்நீர்?"

"சொல்லறது என்னையா! சும்மாத் தொன்னு தொன்னு என்னுகிண்டு! கூப்பட க்கூப்பிட என்னவோ பேசிண்டே இருக்கிரே! பூணப்பட்டையை எறிந்துவிட்டு வாரும் ஐயாபோலாம்; இந்த லாபத்தை ராஜாவீட்டுக் கல்யாணத்துலே எடுத்துடலாம் காத்தியாயனரிடம் சொல்லி உம்மை வேதிகையிலேயே உட்காரவைக்கிறேன் வாரும் ஐயா."

காத்தியாயனர் பிரதாபசிங்கா வீட்டுப்புரோகிதர்; மஹாவித்துவான்; மூன்று வேதம் அத்தியயனம் செய்தவர். குணமோ தங்கந்தான். தன்போன்ற வைதீகர்கள்மேல் பிரியம் உண்டென்பது சொல்ல வேண்டுவதில்லை; அது வைதீகர்களுக்கே இயற்கையான குணம். அரசன் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு விசே

ஷத்துக்கும் தன் இனத்தாரை முறையே
அழைத்துச்சென்று எல்லோருக்கும் ஏற்றத்
தாழ்வின்றிப் பிரயோஜனம் செய்துவைப்பார்.
ஆகையால் அவரைத் தூஷிக்கும் வைதீகனே
கிடையாது உதயபுரியில்.

அரண்மனையிலும் அவருக்கு அதிக மரியா
தை. அவருடைய அற்புதமான கல்வியையும்,
கூரிய புத்தியையும், அமைதியான குணத்
தையும் பார்த்துப் பிரதாபசிங்க ராஜனுக்கு
அவரிடத்தில் அதிகபக்தியும் மரியாதையும்
உண்டு. அவரது தூயமனத்தையும் அடக்கத்
தையும் பார்த்து இராணிக்கும் அந்தப்புரத்து
ஸ்திரீகளுக்கும் அவரிடத்தில் அதிக அன்பு.
அவருடைய ஸமயோசித புத்தியைப் பார்த்து
மந்திரி சுமதிக்கு மிகவும் சந்தோஷம். இப்படி
எல்லாரிடத்தில் "எள் என்பதற்குமுன் எண்
ணெய்" என்று ஒருவருக்கும் முகம் கோணா
மல் நடந்து கொள்ளும் திறமையுடையவர்
நமது காத்தியாயனர்.

காத்தியாயனர் என்ற பெயரும் கல்
யாணம் என்ற வார்த்தையும் ஆதித்யநாதர்
காதில் விழுந்ததுதான் தாமதம். உடனே
பூணூல் பட்டையை எறிந்துவிட்டு "அடீ!
இதை எடுத்துவை" என்று உட்புறம் திரும்
பிச் சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாய் வந்தார்
நடுத்தெருவுக்கு. வந்து ஸோமஸ்கந்தரண்டை
போய்"என்ன ஐயா சமாசாரம்?என்ன கல்யா
ணம்?யாருக்குக் கல்யாணம்?சொல்லும் ஐயா!"
எனக்கேட்டார். ஸோமஸ்கந்தர் "என்னவேடி
க்கை சுவாமி!இதுகூடத்தெரியாதா?வெறுமனே
எட்டுக்கால் பூச்சிபோலே மூலையில் உட்கார்
ந்து பூணூல் நூத்தால் ஆய்விட்டதா எல்லாக்
காரியமும்? லலிதாதேவிக்குக் கல்யாணம்
என்று உமக்கு இன்னும் தெரியவில்லையா?
என்னங்காணும் கர்த்தாலே ஜாமப்போதுக்கே
ஜோதிபுரியிலிருந்து ஜயபாலராஜாவுடைய அர
மனே சர்வாதிகாரியாகிய இராமேசர் கடுதாசி
கொண்டுவந்து விட்டாராமே; கல்யாணம் நிச்
சயம் ஆய்விட்டது! நம்ம ஜோஸியர் முகூர்த்
தம் வைக்கப் போயிருக்கிறார். அடுத்த மாத
மாவது இந்த மாதக் கடைசியிலாவது முகூர்த்
தம் நடக்கலாம்" என்று இவ்விதமாய்ப்
பேசிக்கொண்டே வடக்குநோக்கி நதிக்குச்
செல்லும் பிராமண உத்தமர்களைக் கண்டதும்,
"ஸோமு! ஸோமு!" என்று உரத்த கட்
டைக்குரலுடன் ஒரு பிராமணர் கூப்பிட்டுக்
கொண்டு ஒரு வீட்டிலிருந்து ஓடிவந்தார். வந்த
வாமதேவ தீக்ஷிதர் "எத்தனைதரம் அப்பா!
கூப்படரது; கூப்படர கூப்பாட்டிலே கட
வீதியே அதிர்றது. உங்களுக்குக் காதுகேட்க
வில்லையே! என்ன அவ்வளவு பலமான
ஹாட்டை? பாட்டுக்கச்சேரிக்குப் போவதாக
உத்தேசமா? சரி; அதுதான்காதுகேட்கல்லே;
என்னமோன்னு பாத்தேன் நானும்; சிறு
பிள்ளேளோன்னே! நான் கிழவன் கூப்பிட்
டால் காது கேட்குமா?" என்றார்.

ஆதித்யநாதர் —"என்ன ஐயா சொல்றீரு!
இப்பொழுதுதான் ஸோமர் கல்யாணம் நடக்
கின்றது என்றார். நீர் பாட்டுக்கச்சேரி என்
றீர். என்ன சுவாமி உங்களுக்குப் பல சங்
கதி எப்படியோ தெரியரதே! எனக்கு ஒன்
றும் தெரியரதில்லே; என்ன சொல்றீர்!"

வாமதேவர். —"சொல்றது என்ன சுவாமீ!
உள்ளேயே இருந்தால் என்ன தெரியும்?
வெளியே போகணும், பத்துப் பேரை விசா
ரிக்கணும். அப்பென்ன தெரியப்போறது!"

ஸோமஸ்கந்தர்.—"அதிருக்கட்டும் தீக்ஷிதர்
வாள்; பாட்டுக்கச்சேரி என்னேளே; எங்கே,
எப்போ; விபரம் சொல்லும் சுவாமி".

வாமதேவர்.— "என்ன அப்பா! எல்
லாம் கல்யாண தடபுடல்தான் சொல்
லணுமா என்ன; போலாம் வாங்கோ;
நதியிலே போய் ஸந்தியாவந்தனம் பண்ணி
விட்டு நேராய் அரமனை மந்திராலேசனை மண்
டபம் போக வேண்டியதுதான்; இன்னிக்குக்
கோவிலுக்குக்கூடப் போகவேண்டாம். தர்ம
கர்த்தாவே பாட்டுக் கேட்க வந்திடுவர்; திரா
விட சீமையிலிருந்து சரபன் என்று ஒரு
வித்துவான் வந்து இருக்கிறாராம். அவர்
வீணைவாசித்தால் கல்லே உருகுமாம். தவிர,
திராவிட சீமையில் சில சமையாசாரிகள் பாடி
யிருக்கிற பக்திப் பாட்டுகள் பாடுவதில் சாமர்த்
தியசாலியாம்; அப்பாட்டுகளைப் பாடும்போது
உண்டாகும் மன உருக்கம் இவ்வளவு அவ்
வளவு என்று சொல்லி முடியாதாம். இதோ
பாருங்கள் ஜனங்கள் நாலுபக்கத்திலிருந்தும்
போய்க்கொண்டிருக்கிறார்கள்.ஒரே ஓட்டமாய்
ப்போய் ஸந்தியாவந்தனம் முடிப்போம்; அப்
படியே குறுக்குவழியாக ஓடவேண்டியதுதான்
ஊராதேயுங்கள்; நடவுங்கள் விசையாய்."

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

நன்னெறி: IV.

இது ஒரு விசாரமற்ற வாழ்க்கையாக
அமைந்தது. அப்பர்ணசாலையில் வஸிப்பதும்,
பிரதி வெள்ளிக் கிழமையும், வரும் ஜனங்க
ளுக்கு ஹிதோபதேசஞ் செய்வதும், அவர்கள்
கொண்டுவந்து உதவும் பதார்த்தங்களைப் புஜித்
துப்பசியாறுவதுமாகக் காலத்தை அவன் கழித்
தான். நடப்பட்ட மூன்று மாதுளங் கட்டை
களுக்குநீரிட்டு வளர்க்கமறந்தவனல்ல வென்று
நாம் சொல்லுவது அநாவசியம்.

இப்படியாக ஒரு வருஷம் சென்றது. மாந்
தோப்புப் பங்களாவில் வஸித்தபொழுதுஸரஸ்
வதி ஆலயத்திலிருந்த புஸ்தகங்கள் முழுவதும்
படித்தான் என்றோ மல்லவா? அதனால்,
அங்குவந்து கூடும் மனிதர்களுக்கு உபதேசம்
செய்யும் விஷயங்களிலும், அவைகளை யெடுத்
துச் சொல்லும் மாதிரியிலும், நல்ல சக்தி பெற்
றிருந்ததால், இவன் செய்யும் உபந்யாஸங்க
ளின் பெருமை வெகுதூரம் பரவியது. தூர
தேசங்களிலிருந்துகூட இவனைப் பார்ப்பதற்கு
வந்தவர் அநேகர். மிகுந்த பக்திமானென்றும்,
காயஸித்தியுள்ளவ னென்றும் பெயருண்டா
யிற்று. தன் ஆத்மாவின் அபிவிர்த்திக்காக
ஏதோவொரு ஸூக்ஷ்மமான வழி கண்டுபி
டித்து அதற்காக, தன்வாயால் ஜலங்கொண்டு
வந்து ஏதோ செடிவளர்க்கிறானென ஓர்வதந்தி
யுண்டாயிற்று. எதற்காக அவ்வாறு செய்கிறார்
என்று ஒருவருக்கும் தெரியவில்லை. தங்க
ளுக்குப் புரியாதவிஷயத்தில் ப்ரமையும், கௌ
ரவ புத்தியும் மனிதர்க் குண்டாவது ஸகஜந்
தானே? ஆகவே, கீர்த்தி பரவப்பரவ எங்கி
ருந்தெல்லாமோ, பலவித காணிக்கையுட
னும், ஜனங்கள் வந்து இவனைத் தரிசித்துப்
போவார்கள். தனக்கு ஜீவநத்துக்குஅத்யாவச்
யகமானதை மட்டும் கிரஹித்துக்கொண்டுமற்
றவைகளை அவன் புறக்கணித்து விடுவான்.
அவனுக்கே வரவர 'இப்படிவாழும் வாழ்வு
தான், பாபத்திற்கு ப்ராயச்சித்தம் போலும்
எனத்தோன்றியது.

இரண்டு வருஷங்கள் கடந்தன.ஒரு இரவா
வது தவறாமல் ஜலம் விட்டுவந்தபோதிலும்,
ஒரு கட்டை யாவது, ஒரு சிறு தளிர்கூட விட
வில்லை. இதுமட்டும் கொஞ்சங் கவலையை
விளைத்தது. செடிகள் துளிர்த்த வுடனல்லவா
ப்ராயச்சித்தமுடிவு என்று சொன்னார் ஸந்
யாஸி? ஏதோ பார்க்கலாம் என்று பொறு
மையோடு காலங் கழித்துவந்தான்.

ஒருநாள் பர்ணசாலைக்கு வெளியில் நின்று
ஸுகமாகக் காற்று வாங்குகையில், தன்னெ
திரே, நல்ல ஜாதி அச்வ மொன்றில் ஆரோக
ணித்து, கையில் பிடித்த ஒரு பிச்சுவா வுட
னும், அரையிற் கட்டிய வோர் கத்தியுடனும்
இளமையும், நல்ல வஜ்ர சரீரமும் பெற்ற
வொரு வாலிபன் செல்வதைக் கண்டான்.
அவனைக் கூப்பிட்டு "நீ யாரப்பா? இங்கெங்கு
செல்கிறாய்? என்ன கார்யார்த்தமாக இங்கு
வந்திருக்கிறாய்?" என்று உசாவினான்.

"நானா? நான் கைதேர்ந்த ஓர்வழிப்பறிக்
கொள்ளைக்காரன். ஒரு நகரத்திலிருந்து மற்
றொன்றிற்குச் செல்லும் ப்ரயாணிகளின் பொ
ருளை யபகரிப்பதே என் தொழில்; குலதர்
மம். ஆக்ஷேபிக்கும் ப்ரயாணிகளை இக்கட்
கத்தால் ஒரே போடாய்ப் போட்டுவிடுவதில்
எனக்கு மிகுந்த திருப்தி" என்றான் அவன்.

பார்த்தான் பர்ணசாலை சிஷ்யன். "என்ன
அக்ரமம்! இக்கொடுஞ்செயல்களைச் செய்வது
மல்லாமல், அதையொரு பெருமையாகவு மல்
லவா பேசுகிறான்? இவ்வித துஷ்டனை நல்
வழிக்குக் கொண்டுவருவ தெப்படி? இவன்
தீய எண்ணங்களை யகற்று வதெவ்விதம்?"
என்று இவன் எண்ணமிடுகையில் திடீ
ரென்று வேறொரு யோசனை தோன்றிப் பயத்
தை விளைத்தது. "ஒருக்கால் இக்கொள்ளைக்
காரன், இப்பிரதேசங்களிலேயே வாஸஞ்
செய்யவாரம்பித்து,வெள்ளிக்கிழமைதோறும்,
காணிக்கையோடு என்னைக் காணவரும் ஜனங்
களை யடித்துப் பறித்தால், அவர்கள் பயந்து
இங்கு வருவதை யொழித்துவிட நேரிடும்.
என்னுடைய தர்மோபதேசமு மவர்களுக்கு
இல்லாமற்போய்விடும். அவர்களால் எனக்குக்
கிடைக்கும் உதவியும் போய்விடுமே! பின்பு
நான் ஜீவனத்திற்கு என்ன செய்வேன்?"
என்ற திகிலுண்டாயிற்று. திருடன் பக்கந்
திரும்பினான். "அப்பா, நீ செய்யுங் கார்யம்
மிகுந்த பாபஹேதுவானது. அதனால் நரகப்
பிராப்தி தான் கிடைக்கும். இவ்வழியைவிட்டு,

ஈர வெங்காயத்திற்கு இருபத்தெட்டுப் புரை,

நன்னெறியைக் கைப்பிடித்துக் கடவுளை வழிபட்டொழுகு. நிச்சயம் உன்னைப் பகவான் ரக்ஷிப்பார். இல்லாமல், நீ உன் மனம்போன போக்கேபோய், பாபமூட்டையை ஸம்பாதித்துக்கொள்ள இஷ்டமானால், வேறிடத்திலாவது சென்று உன் வ்யாபாரங்களை வைத்துக்கொள். இங்கு என்னிடம் உபதேசம்பெற வருபவர்களையெல்லாம் அந்யாயமாய்ப் பயமுறுத்தி விரட்டாதே. உன் ஒருவனால் ஏன் அவ்வளவு ஜீவன்கள் கஷ்டத்திற்கு உள்ளாகவேண்டும்?” என்று மொழிந்தான்.

இதைப் பொறுமையுடன் கேட்ட அவ்வழிப்பறிக்காரனும் ‘இடி இடி’ யென்று சிரித்துவிட்டு, “ஏய், உன்னையுந் தெரியும், உன் கடவுளையுந் தெரியுமெனக்கு. நீ எனக்கொன்றுமே சொல்லத்தேவையில்லை. உன்னிடம் உபதேசத்திற்குவரும் கிழவிகளுக்கு வைத்துக்கொள்ளு இந்தக் கதையையெல்லாம். ஒவ்வொருவனுக்கும் வெவ்வேறுவழிஜீவநோபாயத்திற்கு. னக்கு உன் உபதேசத்தினால் பிழைப்பு; எனக்குவழிப்பறியினால் பிழைப்பு அவ்வளவுதான். இதில் கடவுளென்ன, மண்ணென்ன? நான் இதுவரைசெய்த கொலை களவுகளுக்கு உன் கடவுள் என்ன செய்துவிட்டார் என்னை? இவ்வளவு பக்தனான உன்னையாவது ரக்ஷிக்கிறாரா பார்க்கலாமா? உன்னை இந்தப் பிச்சுவாவால் கொஞ்சம் கீறிவிடவா? போனால் போகிறது. முதல் தடவை மன்னித்தேன். இனிமேல் என் வழியில் குறுக்கிடாதே. வந்தாலும் இந்தமாதிரி தாறுமாறாய் உளராதே. பத்ரம்” என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டான். பிறகு கண்ணில் படவேயில்லை. முன்போலவே சிஷ்யனும் ச்வஸ்தமாகப் பர்ணசாலையில் வஸித்துவந்தான்

மேலும் எட்டு வருஷங்கள் சென்றன. ஒரு வெள்ளிக்கிழமை, எப்பொழுதும்போல் மாதுளஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துவிட்டு, பர்ணசாலையில் வந்துட்கார்ந்து யாராவது வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான். அன்று ஊரில் திருவிழா. அம்மன் ‘தபஸ்’ செய்யப் புறப்படுவது வெகு அழகாயிருக்குமாகையால், ஸகல ஜனங்களும் அங்கு சென்றுவிட்டார்கள். இங்கே ஒருவரும் வரவேயில்லை. அதனால் மனதில் அதிருப்தியும், துக்கமுமுண்டாயிற்று: மனம் எங்கெங்கோ கவலை பாய்ந்தது. நடுவில் எட்டு வருஷங்களுக்குமுன் ‘உனக்கு உன் உபதேசத்தால்பிழைப்பு’ என்றுவழிப்பறிக்காரன் சொன்னது ஞாபகத்துக்கு வர, அவன் யோசிக்கவாரம்பித்தான். “நமது குருஸந்யாஸியின் கருத்தின் ப்ரகாரம் நான் வாழ்வதாகத் தோன்றவில்லை. இக்காட்டில் ப்ராயச்சித்தமாகத் தனியே யிருந்து கையிற் கிடைக்கும் காய் கனிகளைப் புஜிப்பது அவர் நோக்கமாயிருக்க, நான், உபதேசமூலமாய்எல்லாவித ஸாமக்ரியைகளும் வரும் ஒரு நல்ல வழியைத் தேடி, ஸுகஜீவனம்பண்ணிவருகின்றேனே! என்னுடைய படிப்பையும் வாக்தாட்டியையும் பிறர் ஸ்தோத்தரிப்பதில் திருப்தியுண்டாகிக் களிக்கிறேனே. அடடா, எவ்வளவு அகங்காரத்திற்கு இடங்கொடுத்துவிட்டேன்! இன்று ஒருவரும் வராததால் என்ன நஷ்டம் வந்துவிட்டது? ஏன், இவ்வளவு அதிருப்தி யேற்படவேண்டும்? ஆகவே, இப்பர்ணசாலையை விட்டுவிட்டு, மனிதர்கள் நம்மைக் கண்டுபிடிக்க முடியாத ஒருஸ்தலத்தில் ஏகாந்தமாக இருந்து கந்தமூலபலாதிகளைப் புஜித்துக் காலத்தைக் கழிப்பதே ப்ராயச்சித்தத்திற்கு வழியாகும்” என்ற முடிவிற்கு வந்ததும், அங்கிருந்த ஸாமான்களை யெடுத்துக்கொண்டு, அத்தோப்பின் இறுதியிலுள்ள காட்டில் நுழைந்தான். எட்டு வருஷங்களுக்கு முன்கண்ட வழிப்பறியோன் அங்கு அவன் எதிரே தோன்றினான்.

“ஏ ஸந்யாஸி, ஸாமான்களை யெல்லாந் தூக்கிக் கொண்டு எங்கு போகிறாய்? வேறு ஏதாவது இடம் போய்விட உத்தேசமா என்ன?” என்று அவன் கேட்டான்.

“எட்டு வருஷங்களுக்குமுன் நீ சொன்ன சொல்என்மனதில்பட இவ்வளவு நாளாயிற்று. இப்பொழுதாவது பட்டதே யென்று ஸந்தோஷம்.”

“இதென்ன விசித்ரம்! நான் என்ன சொன்னேன்? அதனால் நீ இப்பர்ணசாலையை விட்டுப் போவானேன்?”

“உனக்கு உபதேசத்தால் பிழைப்பு என்று நீ சொல்லவில்லையா? அதுதான் காரணம். காட்டில் தனியேயிருந்து காயக்லேசாதிகள் செய்ய வேண்டியிருக்க, ஸுகஜீவனத்திற்கு வேண்டிய வழியைத் தேடிக்கொண்டது தவறல்லவா?”

“அதனால்?”

யுகமுடிய மழைபெய்தாலும், ஓட்டாங் கிளிஞ்சில் பயிர் ஆகுமா?

“அதனால், மனுஷ்ய ஸஞ்சார மில்லாத இடமாகத் தேடி அங்கு காலத்தைக் கழிக்க உத்தேசித்துப் போகிறேன்.”

“இங்குதான் உன் தரிசனத்திற்காக வருஞ் ஜனங்கள் வேண்டுவன கொண்டுவந்துதவினார்கள். நிர்மானுஷ்யமான இடத்தில், உனக்கு உணவு கிடைப்பதெப்படி?”

“எதற்கும் பகவானல்லவா இருக்கிறார்? அவரைவிடப் புல்லறிவாளரான நமக்கென்ன தெரியும்? ‘கல்லினுட்டேரைக்குங்கருப்பையண்டத் துயிர்க்கும்’ உணவளித்து ரக்ஷிக்குங் கருணாநிதியின் ஆஜ்ஞை யெப்படியோ, அப்படி நடக்கட்டும். நாம் நெடுந்தூரந்தா னினைந்து நெஞ்சம் புண்ணாவானேன்?”

இதைக்கேட்டதும் ஆச்சர்யத்துடன் அத்திருடன், ஒருதடவை, கூர்ந்து நோக்கிவிட்டுயோசனையில் அழுந்தியவனாய் ஒன்றும் பேசாது ஏதோ பலமான அவ்விடத்தைவிட்டகன்றான்.

அவன்மறைந்த பிறகு சிஷ்யனுக்குக் கொஞ்சம் பச்சாத்தாப முண்டாயிற்று “அடாடா, அவனுக்கு நல்லபுத்தியாக இரண்டுவார்த்தையேனுஞ் சொல்லாது ஏன் செல்லவிடுத்தோம்? முன்னம் இருந்ததைவிட இன்று கொஞ்சம் சாந்தமாகத் தோன்றினானே. இன்று சொல்லியிருந்தால், அவன் மனதில் பட்டாலும் பட்டிருக்கும்” என்று தோன்றவே, பத்தடி திருடன் போன திசையில் ஓடினான். யோசனையால் அடிமேல் அடிவைத்துச் செல்லும் அத்திருடனைக் கண்டு, அங்கு நின்றபடியே “அப்பா, இப்பொழுதாவது நான் சொல்வதைக் கேள். உன் தீய வொழுக்கங்களை விட்டொழி. கடவுளின் கருணை, கரையற்ற கடல். உனக்கு நல்ல கதியுண்டாகும்” என உரக்கக் கத்தினான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் திரும்பிப் பதிலொன்றும் பேசாது, கையிலிருந்த பிச்சுவாவை உயரத்தூக்கியசைத்து “ஏஸந்யாஸி இம்முறையும் மன்னித்தேன் இனிமேல்என்வழிக்குவந்தாயேல், நீ இதற்கு இரை யென்பது ஸித்தம்” என்று ஸங்கேதமாகக் காண்பித்தான்.

இதிலொன்றும் பயனில்லை என்று கண்டு தெளிந்த சிஷ்யனும் வ்யஸநத்தோடு திரும்பிப் புதுவிடமொன்று அமர்த்திக் கொண்டான். மறுநாட்காலையி லெழுந்து மாதுளங்கட்டைகளுக்கு ஜலம் வார்க்கப் பர்ணசாலையண்டை போவானேன்! என்ன வாச்சர்யம்! ஒருகட்டையானது வெகு மனோரம்யமாகத் துளிர்கள் பல விட்டிருப்பதைக் கண்டான். ஏதாவது மனப்பிராந்தியோ என்று கண்ணைத் துடைத்துக் கொண்டான். இல்லை வாஸ்தவமாகவேதான் துளிர்விட்டிருந்தது. ஆநந்தப் பெருக்கால், அவன் கூத்தாடினான்; கடவுளை மனதார ஸ்தோத்தரித்தான்; தனது பாபமொழியுங் காலம் நெருங்கி விட்டது என்று எண்ணியெண்ணிக் களித்தான்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஆஸிம், அல்லது கடவுளும், அவர் சிருஷ்டியும்.

டாரிஸ் மலையின் உன்னதமான சிகரங்களில் தூரப் பார்வைக்கும் தென்பட்ட பல பெரிய பாறைகளும் அருவிகளும் உண்டு. அருவிகளின் சுத்தமான தண்ணீர் அசைந்தபடியே இருந்ததனால், அவைகளின் கீழிருந்த பாறைகளும் ஆடிக்கொண்டே காணப்பட்டன. மலைச் சிகரங்கள் புற்பூண்டுகளு மில்லாமல் பனியினால் வெண்பட்டுப் போர்த்தாற்போல் தோன்றின. அப்பயங்கரமான சிகரங்களொன்றில் மனிதர்களை வெறுத்து மானுஷ்ய சஞ்சாரத்தைவிட்டு ஆஸிம் என்பவன் வசித்து வந்தான்.

ஆஸிம் இளைஞனா யிருந்த காலத்தில் மனிதர் மத்தியில் இருந்து அவர்களோடு களித்துக் கூத்தாடிச் சந்தோஷமா யிருந்தான். தன் சொத்தை யெல்லாம் ஏழைகளுக்கு அளித்து, பெருந் தருமம் புரிந்து, மேன்மையானான். பல்லைப் பரக்கக் காட்டிக் கெஞ்சியவனும், நடக்க முடியாத பிரயாணியும், அவன் வீட்டிற் புகுந்து வயிறு நிரம்ப உண்டு சந்தோஷமாக வெளிச் செல்வார்கள். செல்வம் சென்றுவிடுமாகையால், ஆஸிமின் சொத்துச் சில நாட்களிற் கெல்லாம் மிகவும் குறைந்து, கடைசியாக ஒன்றுமில்லாமல் போய்விட்டது. அவ

உடம்பு முழுதும் நனைந்தவருக்குக் கூதல் என்ன?

னுடைய நற்செய்கைகளுக்கும் முடிவுவந்தது.

தான் மற்றவர்கட்குஉதவிபுரிந்ததுபோலவே தன் க்ஷீண காலத்தில் தனக்கு அவர்கள் அவ்வாறே செய்வார்களென்று, அவன் எதிர்பார்த்திருந்தான். தான் நினைத்தவாறு ஒன்றும் நடக்காதது கண்டு, தான் காப்பாற்றிய சிலரைப் பணத்திற்காகப் போய்ப்பார்த்தான். நன்றியறி வில்லாத அம்மனிதர்கள் ஆஸிமின் ஏழ்மைத்தனத்தைக் கண்டு அவனை அலட்சியம் செய்தனர். மற்றும் சிலர் அவன் ஸ்திதியைக் கண்டு முதலில் பரிதாபப்பட்டாலும் நாளடைவில் அவ் விரக்கம் மாறுபட அவனை இகழ ஆரம்பித்தார்கள். ஆஸிம் உலகத்தோரின் உண்மையான குணத்தைக் கண்டு உலக வாழ்வை வெறுக்க லானான். தான் இதன்முன் நினைத்தறியாத பல பாவங்களைக் கண்டான்; நன்றிமறந்தவரும், கள்ளங்கபடுடையவரும், பொய்ஞரும், துன்மார்க்கரும் எங்கும் நிறைந்திருந்தார்கள்.

தான் வெறுத்த உலகம், தன்னை இழிவதைச் சகிக்க முடியாமல்,தனக்கு அதுவரைக்கும் குற்றமே செய்யவில்லை யென்று நிச்சயமாய்த் தெரிந்த உள்ளமாகிய தன்மனதுடனே மேற் சொல்லிய பயங்கரமான டாரிஸ் மலையின் உச்சிக்குச் சென்று அங்கு வசிக்கலானான்.

வெயில், மழை, பனி, காற்றுகளினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஓர் குகையைத் தவிர வேறில்லை. கஷ்டப்பட்டுத் தோண்டியெடுத்த புற்பூண்டுகளே அவன் ஆகாரம். குடிக்கவோ செங்குத்தான பாறைகளின் மேல் ஓடின அருவிகளிலிருந்து, தான் கொண்டுவந்த தண்ணீரைத் தவிர வேறு யாது மில்லை. இவ்விதமாக, ஆஸிம் மனிதரைவிட்டுத் தனியாக வசித்துக்கொண்டு,தன் காலத்தை வீண்போக்காமல் கடவுளைத் துதித்துவந்தான். சமயங்களில் தன் இழிவான வர்க்கத்தாரை யகன்று, அவர்கள் உதவியில்லாமல் வசித்துவந்ததைக் குறித்துச் சந்தோஷப்படுவான்.

மலையடிவாரத்தில் விசாலமான ஏரி ஒன்று மேலிருந்த பயங்கரமான மலையைப் பிரதிபிம்பித்துக் காட்டிக்கொண் டிருந்தது.* ஆஸிம் சில சமயங்களில் பாறைகளின்மேல் நின்று தன்முன் தோன்றிய விசாலமான கண்ணாடி போன்ற ஏரியை ஆவலோடு பார்ப்பான். ஒரு நாள் அவ்வாறு பார்த்துக்கொண் டிருக்கிற பொழுது, பின்வருமாறு தனக்குள் தான் பேசிக்கொண்டான். "இவ்வியற்கைப்பொருள் எவ்வளவு அழகுட னிருக்கின்றது! என் கீழிருக்கும் இந்தச் சமமான ஏரி, மேகக் கூட்டங்களின் இடையில் மறைந்துள்ள சிகரங்களைப்போல் சற்றாவது அமைந்திருக்கின்றதா? இல்லையே. ஆயினும் யாரையும் பயப்படச் செய்கின்ற அம்மலைக்கு அழகா இல்லை? மனிதனைத் தவிர எல்லாச் சிருஷ்டிப் பொருள்களும் மனதிற்கு எவ்வளவு சந்தோஷத்தை யுண்டாக்குகின்றன? ஆனால் நான் அழகைக் குறித்தே யோசித்தேனன்றி உபயோகத்தைச் சற்றும் கவனித்தே னில்லை. தாங்கள் செல்லும் இடங்களுக் கெல்லாம் சௌகரியத்தைக் கொடுக்கும் பல ஆறுகள் இம்மலையிலிருந்துதானேஉற்பத்தியாகின்றன. இவ்வுலகின் ஒவ்வொரு பாகத்திலும் அழகு, அறிவு, நியாயம் எல்லாம் குடிகொண் டிருக்க மனிதன்—அற்பமனிதன்-இயற்கையின்பிழையாகவும், சிருஷ்டிப் பொருள்களில் ஓர் அரக்கனாகவு மிருக்கின்றானே! சூறைக் காற்றுங் கூடப் பிரயோஜனப்படுகின்றது. மனிதனே சற்றும் நன்றியறியாதவனாய்; தான் மற்றவர்கட்கு நன்றி செய்யாதபோதிலும் தனக்கு அப்படிச் செய்தவர்களையும் மறந்து, அதோடு நிற்காமல் அவனைத் தூஷிக்கவும் துணிகிறான். என்னை ஏனோ கடவுள் இப்பாழும் ஜன்மமெடுக்கச்செய்தார்? அவர் சிருஷ்டித்த இம் மானிட ஜன்மமே அவர் அறிவைத் தாழ்த்தும் போலும்! இம்மானிடர் மாத்திரம் தங்கள் துர்நடத்தையை விட்டால், இவ்வுலகத்தின் ஸ்திதியையும் சொல்லவேண்டுமோ! எங்கும், ஒற்றுமையும், அன்பும், சந்தோஷமும் குடிகொள்ளுமன்றோ? ஆ கடவுளே! இது உன் உலகமாயின் இது ஏன் இந்த ஸ்திதியிலிருக்க வேண்டும்? எதற்காக, நான் சஞ்சலத்திலும், ஏக்கத்திலும் ஆழ்ந்திருப்பதைப் பார்த்துக் கொண் டிருக்கிறீர்?"

சஞ்சலமும் ஏக்கமுங்கொண்டு, தன் சஞ்சலத்தை நிவர்த்திக்க ஆஸிம் தீர்மானித்து, தான் நின்றிருந்த பாறையின் கீழிருந்த ஏரிக்குள் தாவ ஆயத்தப்பட்டான். அப்பொழுது ஏரியின்மேல் தரையில் நடப்பதுபோல

நடந்து தன்னை நோக்கி ஓர் உருவம் வருவதைக் கண்டான். தான் சற்றும் எதிர்பாராத காட்சியைக் கண்டதும், குதிக்கப் போனவன் ஸ்தம்பம்போல நின்றான். அவ்வுருவம் வெகு கம்பீரமாக இருந்தாலும், பார்ப்பவரைப் பயப்படச் செய்ததாலும் ஆஸிம் வாய்திறவாமல் நின்றான்.

"ஏ மானிடனே! நீ செய்யப் புகுந்த காரியத்தை நிறுத்து. கடவுள் உன் மேன்மைக் குணத்தைக் கண்டு மெச்சி உன்னுடைய சந்தேகங்களை யெல்லாம் நிவர்த்திக்க என்னை இங்கு அனுப்பியுள்ளார். நான் உன்னைக் காப்பாற்றிக் கரையேற்ற ஆயத்தமாயிருக்கின்றேன். உன்னை அழைத்துப்போகும் இடங்கட் கெல்லாம் பயப்படாமல், நீ என்னைப் பின்பற்றி வருவாயாக. நான் யார் என்று அறிய மிக்க ஆவலாயிருப்பாயாதலால், என்னைச் சஞ்சல ஸம்ஹாரி என்று அறிந்துகொள். சரியான வழியை அறியாமல் திண்டாடுபவரையும், ஏக்கங் கொண்டவரையும் நான் கரையேற்ற வல்லவன்" என்று அவ்வுருவம் ஆஸிமைப் பார்த்துச் சொல்லிற்று.

உருவம் முன்னும், ஆஸிம் பின்னுமாக ஏரியின் மத்தியம் வரைக்கும் நடந்து சென்றார்கள். அங்கு வரவும், அதுகாறும் தண்ணீர்மேல் நடந்துவந்த இருவரும், மூழ்க ஆரம்பித்தார்கள். வெகு தூரம் தண்ணீருக்குள் செல்லவே, ஆஸிமுக்குச் சுவாசம் விடமுடியாமல், தன் கடைசி காலம் கிட்டிவிட்டதோ என்று நினைக்கலானான். அச்சமயத்தில் தன் பாதம் தரைதட்டியதைக்கண்டு சந்தோஷமடைந்தான்; மூடியிருந்த கண்ணைத் திறந்து பார்க்கவும், பல விநோத காட்சிகளைக் கண்டான். இப்பூவுலகத்திற்கு மேலே, எப்படி ஆகாயம் விளங்குகின்றதோ, அதே மாதிரி அவன் தலைக்குமேல் தோன்றியது.ஆனால் அவ்வானம் தண்ணீரினா லுண்டாக்கப்பட்டிருந்ததனால், சிறு அலைகள் பல தென்பட்டன. அதைப் பார்த்த பிறகு ஆஸிமும் சஞ்சல ஸம்ஹாரியும் நடந்து சற்றுத் தூரம் சென்றனர். அவர்களெதிரில் ஒரு செங்குத்தான பாறையிருந்ததால், சஞ்சல ஸம்ஹாரி அதில் தெரிந்த ஒரு துவாரத்தில் தானும் ஆஸிமுமாக நுழைந்து மற்றப் பக்கத்தில் போய்ச் சேர்ந்தார்கள்.

தான் சற்று முன் விட்டுவந்த உலகத்தில் தினந்தோறும் கிழக்கில் உதித்த சூரியனோ வென்றும், தான் ஒரு விநாடிமுன் நின்றிருந்த உன்னதமான பாறையையும் உயரத்தில் சென்ற கரிய மேகங்கள் சஞ்சரித்த விசாலமான வானமோவென்றும் ஆஸிம் ஐயமுறும்படி ஒரு பிரகாசமான சூரியனும் விசாலமான வானமும் அங்கு இருந்தன. இதை யெல்லாம் அவன் கண்டு ஆச்சரியப் படுவதைப் பார்த்த சஞ்சல ஸம்ஹாரன், பின்வருமாறு சொன்னான் :—

"நீ ஆச்சரியப்படுவதன் காரணத்தை நான் நன்கு அறிகிறேன். இருந்தபோதிலும் சற்று வாளா யிரு. இவ்வுலகம் கடவுள் பக்தனொருவர் வேண்டுகோளால் உண்டாக்கப்பட்டது. அப்பக்தனும் உன்னைப் போலப் பல சமாசாரங்க ளறிய வெகு ஆவல்கொண் டிருந்தார். இவ்வுலகத்தில் அவர் சில நாட்களிருந்து தானறியவந்த சங்கதிக ளெல்லாவற்றையும் தெரிந்துகொண்டபின் சென்றார். இவ்வுலகத்தவர் நீ வெகுவாய் விரும்பின நற்குணங்கள் பொருந்தியுள்ளார். அவர்களிடத்தில் யாதொரு துர்க்குணமும் கிடையாது. உனக்கு இங்கேயே வசிக்க ஆவலதிகமானால், யான் அதை மறுத்துக் கூறமாட்டேன். உன் மிகுந்த வாழ்நாட்களை இவ்விடத்திலேயே கழிக்கலாம். ஆனாலும் யோசனைசெய்து தீர்மானித்தலே நலம். பதறின காரியம் சிதறு மாகையால், இங்குள்ள மனிதர்களின் குணாதிசயங்களை முற்றும் அறிந்த பிறகு உன் மனதிற்கு எவ்வாழ்வு மேலானதென்று தென்படுகிறதோ அதன்படி செய். அதற்காக இங்கிருப்பவர் சிலரை நாம் போய்ப் பார்ப்போம். உனக்கு ஏதாவது விநோதமாகவோ அல்லது புத்தியில் படாததாகவோ தோன்றுமேயானால் என்னைக் கேட்டு அச்சங்கதிகளைத் தெரிந்துகொள்.",

ஆஸிம்.—துஷ்கிருத்ய மில்லாத உலகம்! துன்மார்க்க மறியாத மனிதர்! ஈதும் ஓர் புதுமையே. சர்வேச்வரனுடைய வல்லமையையும் சொல்லி முடியுமா? அல்லது இந்நிமிடம் யான் ஆழ்ந்திருக்கும் ஆனந்தத்தின் அளவையும் குறிப்பிடக் கூடுமோ! இனி நான் சற்றும் இவ்வுயிரை இகழேன். நன்றியறிதல், நியாயம், பொய்யின்றி மெய்யே பேசுதல், தன் கடமையைச் சரிவர நிகழ்த்தல், இன்னும் பல புண்ணியச் செயல்களையே கைப்பிடித்த மானி

டரோடு கூடி வாழ்வதைக் காட்டிலும் இன்பமுண்டோ?

உருவம்.—இம்மாதிரிப் பிதற்றுதலைவிட்டு, உன்னைச் சுற்றி நடந்தேறும் செய்கைகளின் காரணங்களையும் உட்கருத்தையும் அறிய முயற்சிசெய். நீ எங்கு செல்லப் பிரியங்கொண்டாலும் உன்னை அங்கு அழைத்துப் போக யான் இருக்கிறேன். உனக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றி என்னைக் கேட்டால், நான் அவைகளை விளங்க உனக்குச்சொல்லுகிறேன்.

ஆஸிமும் உருவமும் பேசாமல் சற்றுத் தூரம் சென்றார்கள். ஆஸிமுக்கு அடங்காச் சந்தோஷமே மேலிட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் தான் சற்றுமுன் இருந்த உலகமோ என்று அவனைப் பிரமிக்கச் செய்யத்தக்க பல காட்சிகள் அவன் முன் தோன்றின. ஆனால் அடர்ந்த காடுகளும், உழவுகோலின் உதவியே இல்லாத பல விசாலமான இடங்களும் அவனிருந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டுச் சில காலமே ஆயிற்றென்று நன்றாய்க் காட்டின.

ஆஸிம்.—இங்கிருக்கும் மிருகங்களிற் சிலவற்றுள், தங்களைக் காட்டிலும் பலமில்லாத மற்ற ஜந்துக்களைக்கொன்று தின்பதுபோலவேதான் மேலுலகத்திலும் இருக்கக் கண்டேன். இது எனக்குச் கொஞ்சமேனுஞ் சரியாகத் தோன்றவில்லை. நான் இவ்வுலகு சிருஷ்டிக்கப்படுங் காலத்தில் கடவுளருகில் இருந்திருப்பேனானால், ஒன்றை யொன்று புசித்து ஜீவிக்கும் மாமிஸ பக்ஷிணிகளை உண்டாக்க வேண்டாமென்று கேட்டிருப்பேன். அவை இருப்பதால், கடவுள் சிருஷ்டி நாளுக்குநாள் குறைந்து கடைசியாக நிர்மூலமாய்விடும்.

சஞ்சல ஸம்ஹாரி.—கேவலமான இச்சிறிய பிராணிகளிடத்தில்,உனக்கு இருக்கும் பிரியத்தைப் பார்த்தால், எனக்கு அதிக ஆச்சரியமாயிருக்கிறது. அவ்வுலகத்தில் எவ்வாறு சிறிய ஜந்துக்கள் பெரிய மிருகங்களுக்கு உணவாகின்றனவோ அவ்வாறே இங்கு இருந்தாலும், பல காரணங்களைக்கொண்டு உன் மனதை நிம்மதியாக்க எனக்குச் சக்தியுண்டு. தாவரங்களையே உண்டுஜீவிக்கஎல்லா மிருகங்களும் நினைத்தால் இப்பூவுலகம் நிலைபெறுமா?மிருகங்கள் பெருகி தாவரங்கள் குறைந்து, மானிடரெல்லாம் கஷ்டப்பட நேரிடுமன்றோ? முன் காலத்து அரக்கர்களைத் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்செய்பவரான சாக்ஷாத்கடவுள் அழித்ததுபோல், மிருகங்களையும் அவரே வந்தாலன்றி அழிக்கக்கூடாமல் போகலாம். ஆதலினால் இப்பொழுது இருப்பதுபோல் இருந்தால்தான் எல்லோருக்கும் சௌகரியம். ஆனால் நாம் இவ்விஷயத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால், வேறொன்றும் பார்க்க முடியாது. இங்கு வசிக்கும் மானிடரின் குணாதிசயங்களை நாம் சீக்கிரமாய் அறியவு முடியாது. ஆகையால் விரைந்து செல்வோம்.

ஆஸிம் வேகமாக நடந்தான். இருவரும் அவர்கள் இருந்த காட்டைக் கடந்து, பாவமறியாத மனிதர் வசித்த இடத்தை நெருங்கினார்கள். ஆஸிம், தான் புண்ணியமே உருவெடுத்துவந்து வசித்த நாட்டிற்குள் இருந்ததை நினைத்து நினைத்து மனம் பூரித்தான். அவ்வாறாக இருவரும் காட்டைக் கடந்து, ஊருக்குள் நுழைந்த காலத்தில், ஓர் விநோதக் காட்சி அவர்முன் தோன்றியது. பல அணில்கள் துரத்த கூக்குரலிட்டுக்கொண்டு ஓர் மனிதன் ஓடிக்கொண்டிருந்தான்.

“ஆ! கடவுளே! ஈதென்ன ஆச்சரியம்! அவன் ஓடுவது அதிசயமாக வன்றோ இருக்கின்றது? இச்சிறு பிராணியாகிய அணிலுக்கு அவன் பயப்படுவது வேடிக்கையன்றோ?” என்று ஆஸிம் சொல்லி முடிக்குமுன்னர், பலமுள்ள மனிதனொருவன், சிறு நாய்க்குட்டிகள் துரத்தப் பதறிக்கொண்டு இவர்களை நோக்கி வந்தான். அவன் ஓடினது, ஆட்டுக்குட்டி ஓநாயைக் கண்டு ஓடுவதுபோன்றிருந்தது. “கோழைகளாக வன்றோ இம்மனிதர் காணப்படுகின்றனர். நாயையும் அணிலையும் கண்டு பயப்படுபவர்களை நான் இதுகாறும் கண்டதே இல்லை. எனக்கு யாதும் தெரிய வில்லை” என்று ஆஸிம் சொன்னதைக் கேட்ட சஞ்சல ஸம்ஹாரி மேல்வருமாறு சொன்னான்.—

“இந்நாட்டில் ஒவ்வொரு பிராணியும் சில காலமாக, மிக வல்லமை அடைந்துவிட்டது. ஆரம்பத்திலிருந்தே இந்நாட்டார் பிராணிகளை வருத்துவதும் கொல்லுவதும் கிடையாது. அதினின்றும் எல்லா ஜந்துக்களும் பெருகி, மனிதருக்குப் பயப்படாமல், சிற்சில சமயங்களில் அவரையும் எதிர்க்கின்றன. மனிதர் ஜீவஜந்துக்களை ஹிம்சிக்காமலிருக்கும் பொழுதே, இவ்வளவு துன்பம் அவருக்கு நேரிடுமே

உண்மை சொல்லிக் கெட்டாரும் பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.

யானால், அவை ஒன்றை யொன்று கொன்று ஜீவிக்காமலிருந்துவிட்டால், பிறகு என்னதான் நேரிடாது? இதிலிருந்து நீ உடனே ஜந்துக்களை ஹிம்சிக்காமலிருந்தால் கேடுவரும் என்று நினைத்துவிடாதே. சமயாசமயம் அறிந்து, எக்காரியத்தையும் செய்தல் வேண்டும்.”

ஆஸிம்.—நீ இவ்வாறு சொல்லிவிட்டால் நான் ஏமாறுவேனென்று எண்ணுகிறாய் போலும்! கடவுள் மனிதரையே முதன்மையாகச் சிருஷ்டித்தபடியால்,அவர்கள் தங்கள் அறிவைக் கொண்டு தங்களுக்கு ஆபத்துச்சற்றும் வாராமலிருக்கும்படி செய்துகொள்ளுதல் அவருடைய கடமையே ஆகும். ஜீவஜந்துக்களை முற்றும் அழிப்பதே நியாயமானால், அவர் அவ்வாறு உடனே செய்யவேண்டும்.

சஞ்சல ஸம்ஹாரி.—எனக்கு அடங்காச் சிரிப்பு வருகின்றது. நீ சற்றுமுன் சொல்லியதை மறந்தாய்போலும்! மாமிசத்தைப்புசிக்கும் மிருகங்களைக் கடவுள் உண்டாக்கியதால், அந்த அத்தாக்ஷி அவரின்புத்தியீனத்தைமெய்ப்பித்ததாக நீ சொன்னாய்.சற்று முன் ஜீவகாருண்யம் மேலிட்டிருந்த நீ, அதற்குள் எல்லா ஜீவன்களையும் அழிக்க வழிதேடுகிறாயே! இது ஓர் அபூர்வமே!

ஆஸிம்.—என் புத்தி தடுமாற்ற மடைகின்றது. அதற்குக் காரணம் இங்கு யான் காணும் காட்சிகளைத் தவிர வேறில்லை. நான் இப்பொழுது சொன்னதைப் பிசகென்று ஒப்புக் கொள்ளுகிறேன். நாம் பாவத்தைச் சிறிதும் கொள்ளக்கூடா தாகையாலும், ஜீவஹிம்ஸை அப்பாவத்தொழில்களில் முதன்மையானதாதலாலும், இப்பிராணிகளினால் நமக்கு உண்டாகும் தொந்தரவைக் கவனிக்காமல் நாம் இருத்தலே நலம். இது நிற்க, 'மனிதர்கள் இந்நாட்டில் எம்மாதிரி ஒருவர் மற்றொருவரோடு நடந்து கொள்ளுகின்றார்களென்று யான் பார்க்க ஆசைப்படுகின்றேன்.

அப்போது அவ்வுருவம் அவனைச் சற்று தூரம் அழைத்துச் சென்று, “நாம் இந்நாட்டார் வசிக்குமிடத்திற்கு வெகு சமீபமாகவே இருக்கிறோம்” என்றது. ஆஸிம் சற்றும் அதை நம்பவில்லை. அவன் கண்களுக்கு எங்கு தேடியும் மனிதர் வசிக்க வீடுகளாவது, கோபுரங்கள், கோவில் குளங்கள், மாடமாளிகைகள் முதலியனவாவது தட்டுப்படவில்லை.

சஞ்சல ஸம்ஹாரி, ஆஸிமின் எண்ணங்களை யூகித்து, அவ்வூரார், பகட்டிற்காக வீடுகள் கட்டாமல், குடியிருக்கப் போதுமான குடிசைகளில் வசிப்பதாகச் சொன்னான். மேலும் அவர் தங்கள் வீடுகளை அழகாகவும், பெரியனவாயும் கட்டினால், பார்ப்பவர்கள் பொறாமைப் படக்கூடுமென்றும், தாங்களும் கர்வமடையக் காரணமாகுமென்றும் நினைத்தார்கள். ஆதலினால், அவர் ஆடம்பரத்திற்கல்லாமல் வசிக்கவேகுடிசைகள்கட்டினர் என்றான். இவற்றையெல்லாம் ஆஸிம் கேட்டு, “அப்படியானால் இந்நாட்டில் சிற்பிகளும், சித்திரக்காரரும், கொத்து வேலைக்காரரும் கிடையாது போலும்! ஆனாலும், அவ்வேலைகள் அவ்வளவு நல்லவையென்று தோன்றவில்லை. அவ்வேலைகளினால் சோம்பேறிகளே பிழைக்கிறார்கள். ஆதலால் சிற்பிகளும், சித்திரக்காரரும், கொத்து வேலைக்காரரும், இல்லாததுபற்றி சந்தோஷமே. இது நிற்க, தாங்கள் என்னை இவ்வளவு நல்ல நாட்டாரிடத்தில் சேர்ப்பித்ததற்காக, யான் எந்நாளும் தங்களை மறவேன். என் பிரிய வந்தனங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லா விஷயங்களைக் காட்டிலும் கல்வியறிவும் நற்குணமுமுடைய மானிடரோடு சம்பாஷிப்பதே மேல். அச்சந்தோஷத்தை யான் தங்கள் மூலமாகவே பெற்றிருக்கின்றேன்” என்று சொல்லும் பொழுதே, சஞ்சல ஸம்ஹாரி, “அறிவும் விவேகமும், கல்வியும் ஈங்கெங்கு வந்துள்ளது? விவேகமோ அல்லது அறிவோ என்னவானாலும் அவ்வார்த்தையை இங்கு சொல்லாதே. இந்நாட்டாரெல்லோரும், கல்வியறிவு பெற்றவரல்லர். ஏனெனில், அவர்களுக்கு அது அனாவசியம். உண்மையான அறிவு என்னவென்றால், நாம் செய்ய வேண்டிய கடமையையும், மற்றவர் நமக்கு செய்ய வேண்டியதையும் தெரிந்து கொள்வதே. ஒவ்வொருவனும் இயற்கையாகவே இச்சங்கதிகளை அறிந்திருக்க, விவேகம் இங்கு எதற்காக வரவேண்டும்? அப்படியல்லாமல், அறிவு என்பதற்கு, பிரயோஜனமற்ற சமாசாரங்களைத் தெரிந்து கொள்வதென்றும், வீண் சிந்தனை யென்றும் நீ அர்த்தம் கொண்டிருந்தாய்; இந்நாட்டார் இக்குணங்கள்,

உதட்டுக்கு மிஞ்சின பல்லும் திருட்டுக்கு மிஞ்சின கையும் ஆகாது.

பொருளாசை, இச்சை, காமம், அகங்காரம், முதலியனவற்றினின்றும் உற்பத்தியாகின்றன என்று நன்கறிந்துள்ளார். ஆகையால் அடியோடு அவ்வழக்கங்களை மறந்து விட்டார்கள்.

ஆஸிம்.—ஈதெல்லாம் நியாய மென்றாலும், இந்நாட்டார் ஒற்று வாழாமல் தனித்தனியாக வசிக்கின்றனரே. ஒவ்வொரு குடும்பமும் இவ்வாறிருக்கக் காரணமேன்?

சஞ்சல ஸம்ஹாரி—எல்லோரும் ஒருங்கு கூடி வாழ இங்கு சங்கங்கள் ஏற்படுத்தப் படவில்லை. எல்லா சங்கங்களும் பயத்தாலாவது நேசத்தினாலாவது உண்டாகின்றன. இங்கிருப்பவரோ ஒருவரோடொருவர் சண்டைசெய்யாமலும், ஒருவருக்கொருவர் பயப்படாமலும் இருப்பவர்கள். மேலும் இரகஸிய ஸிநேகத்திற்கும் முகாந்திரங்களில்லை. ஏனெனில் யாவரும் பகிரங்க நேயர்களே. அதுபற்றியே எல்லோரும் தனித் தனியாக வாசம் செய்து கொண்டு தங்கள் வீடுவாசல்களை விட்டு அகலாமல் இருக்கின்றனர்.

ஆஸிம்.—சரி என் வாழ் நாட்களை இங்கேயே கழிக்க எனக்குச் சம்மதந்தான். நண்பர்; கல்வியறிவுள்ளவர், சித்திரவேலைக்காரர் முதலிய எல்லோரும் இங்கு இல்லாத படியால் எனக்கு மாத்திரம் பேசிக்கொண்டிருக்க ஓர் மனிதனைத் தந்தால், நான் வெகு சந்தோஷப்படுவேன்; என்றும் உமக்கு நன்றியறிவுள்ளவனாவேன்.

சஞ்சல ஸம்ஹாரி.—இப்படி இருவரும் பேசிக்கொண்டிருப்பதின் பயன் எனக்குத்தெரியவில்லையே. சம்பாஷணையில் முகஸ்துதி உண்டானாலும் உண்டாகலாம். அதைத் தடுக்க, இங்குள்ளவர், அதிகமாய்ப் பேசுவதே கிடையாது.

ஆஸிம் "என்ன எவ்வாறாயிருந்தாலும் கூட, எனக்கு இந்நாட்டாரையே பிடித்திருக்கிறது. இவர்களிடத்தில், பல குணங்களில்லாவிட்டாலும், அது நியாயமாக இருக்கின்றது. பல நற்குணங்களையே இவர்கள் கொண்டிருப்பதால், வருத்தமென்பதை இவர்கள் அறிந்திருக்க மாட்டாரென்று யான் நினைக்கிறேன். அது ஒன்றே, மற்ற எக்குறையையும் நீக்கும். மேலும் ஒவ்வொருவனும் தனக்கிருப்பதை வைத்துக்கொண்டு, சந்தோஷமாகவாழ்கிறான், மற்றவர் சொத்தின்மேல் ஆசையே கிடையாது. மானிடருக்கு, பொதுவாகவே, அவகாசம் அதிகம் உண்டு. ஆனால் அந்நேரத்தில் மற்றவரைக் கண்டு பொறாமைப்படுவதிலும் அளவுக்குமிஞ்சிச் சொத்தைச் சேகரிப்பதிலும் கழிப்பதனால், 'சூரியன் மிகவும் வேகமாய்ப் பிரயாணமாகிறான்' 'பொழுதுபோவதே தெரிகிறதில்லை', 'கலியுகம் கிட்டக்கிட்ட நாள் குறைகிறது' என்று பலவாறாகப் பிதற்றுகின்றனர். ஆனால் இவ்வுலகத்திலோ அவ்வாறில்லை. ஆகையால்இங்குள்ளவர், கஷ்டப்படுபவர்களைக் காப்பாற்ற சௌகரியமும், சாவகாசமும் கொண்டுள்ளார்" என்று சொல்லி வாய் மூடு முன்னர், அதி தீனக் குரலொன்று அவன் காதிற் பட்டது.

அக்குரல், ஓர் நிர்ப்பந்தன் பாதையோரத்தில் உட்கார்ந்துகொண்டு உண்டாக்கியது. தன் கடைசி காலத்தைப் பாதையோரத்திலேயே கழிக்க எண்ணி அங்கு உட்கார்ந்திருந்த அம்மனிதனை ஆஸிம் கண்டு, மனம் வெந்து, விரைவாய் ஓடி அவன் அருகில் நின்றான். அம்மனிதனோ க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டு வருந்தினான்.

ஆஸிம்.—இது எனக்கு வியப்பையும் வெறுப்பையுமன்றோ தருகின்றது? பாவத்தையே கண்டிராத மானிடன், ஒத்தாசையின்றி வழியில் அனாதையைப்போல் இறப்பதுதான் நியாயமா?

நிர்ப்பந்தன்.—ஈதென்ன ஓர் ஆச்சரியமாகுமோ? தங்களுக்கு வேண்டிய அளவு உணவே வைத்திருக்கும் மானிடர், என்னைத் திருப்தி செய்வதற்காக, தங்கள் வயிற்றைப் பட்டினி போட்டால் அது கொடிய பாவமன்றோ? மேலும் அந்த உணவைக் கொடுக்கவும் மனம்தான் சம்மதிக்குமோ?

ஆஸிம்.—ஏன் அவர்கட்கு உணவுப் பொருள்கள் ஜாஸ்தி கொடுக்கக் கூடாது? ஆயினும் சற்று முன்தான் வேறு ஏதோ எண்ணங் கொண்டிருந்தேன். இங்கு எதுவும் சந்தேகத்தையும் மனக் கலக்கத்தையுமன்றோ உண்டாக்குகின்றது? இங்கு, நன்றியறிதல் என்னும் புண்ணியச் செயலே கிடையாது. ஒருவரிடத்தில் நன்மை பெற்ற பிறகன்றோ நன்மையை நாம் திரும்பச்செய்தல், அதற்கு இங்கு சாத்தியமில்லை. அதுதான் போகட்டும் என்றாலும், சுதேசாபிமானம் எங்கு செல்லும்? தன் தேசத்தை மேன்மைப்படுத்தவாவது தன் தேயத்தார்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டாமோ?

சஞ்சல ஸம்ஹாரி.—ஆஸிம், கொஞ்சம் நிதானமாயிருந்து நான் சொல்வதை நன்றாய்க் கேள். நீ சொன்னது முழுதும் அறிவு கொண்டன்றோ உண்டாகும். தற்ஸிநேகமுள்ள முகாந்தரங்களன்றோ தன் தேசத்தை மற்றத்தேசங்களைக் காட்டிலும் மேன்மையாகக் கொள்ளச் செய்யும். தேசாபிமானமும் தன்னயமாகுமன்றோ? தன்னயர்கள் கூடின பூமி புண்ணியபூமியாகாதே! தற்புகழுள்ளவர்களெல்லாம், பாவிகளாதலால், இந்நாட்டார் தம் தேசத்தை மற்ற தேசங்களைக் காட்டினும் மேலாக எண்ணுவதில்லை. அவ்வாறு செய்யப் பிரயத்தனப்படுவதுமில்லை. ஆகையால்தான் இம்மனிதன் தன் கடைசிகாலத்தை அனாதையாயும், சந்தோஷங்கொண்டவனாயும் கழிக்கிறான்.

ஆஸிம்.—ஈதென்ன அநியாயம்! இதையும் ஓர் உலகமாக யான் கொண்டது தப்பன்றோ? இங்கு ஓர் புண்ணியச் செயலையும் நான் காண்கிலேனே. எல்லோரும் மிருகங்களைக் காட்டிலும் மேலானவரென்று காண்பிவிக்க ஓர் வித்யாசத்தையும் காணேன். இங்குள்ளவர் தன்னடக்க மொன்றையே புண்ணியமாகக் கொண்டிருக்கின்றனர். ஒருவிதக் கொண்டாட்டமும் இங்கில்லை. வீரத்தன்மை, ஸிநேகம், அறிவு, தருமம், தயை, தேசாபிமானம் முதலிய மேலான குணங்களில் ஒன்றையும் காணோம். இவர்கள், பாவமென்பது யாதென்று அறியாதவர்களென்பது நியாயமே யென்றாலும், புண்ணியத்தையும் தெரிந்து கொண்டவரல்லர் என்பதற்குக் காரணத்தைக் காண்கிலேன். பாவம் அறியாவிட்டால், புண்ணியமே செய்யவேண்டுவதில்லைபோலும். இனி, யான் இங்கு ஒரு விநாடியேனும் தங்கமாட்டேன். நான் முன்னிருந்த உலகிற்கே செல்ல மிக ஆவலுள்ளவனாயிருக்கிறேன். அப்பூவுலகமே இவ்வுலகத்தைக் காட்டிலும் சிறந்தது. கடவுளின் அறிவை யான் இகழ்ந்தது என் மூடத்தன்மை யென்று இப்பொழுது எனக்கு நன்றாய்த் தெரிகின்றது. நன்றியறியாமை, ஏளனம், பகை எல்லாவற்றையும் இனி யான் பொறுப்பேன். பொல்லாங்குனின்றும் யான் அகன்று வாழவும், பாவத்தை மற்றவரிடத்தில் கண்டால் பரிதபிக்கவும், என்னைக் கடவுள் அநுக்கிரஹிப்பாராக."

ஆஸிம் சொல்லிமுடித்த நிமிஷமே, தன் முன் நின்ற சஞ்சல ஸம்ஹாரனென்ற அம்மாய உருவம், சந்தோஷமுகத்தைக்கொண்டு, சூறைக்காற்றில் மறைந்துவிட்டது.

ஆஸிம் பயமும் திகிலுங்கொண்டு, சுற்றிப் பார்த்தபொழுது, தான் இருந்த மாய உலகத்தையே காணோம்; அவ்வுருவமும் தென்படவில்லை. தான் எப்பொழுதும் வழக்கமாய்நின்றுகொண்டிருப்பதுபோல் இருந்தான். தான் சற்றுமுன் ஓர் பாறையில் நின்றுகொண்டு, நம்பிக்கையை விட்டுத் துயரம் கொண்டு தன் உயிரை மாய்க்க எண்ணினனன்றோ? அதே பாறைமேல், வலதுகாலை அப்பாறைக் கப்பாலும், இடது காலைப் பாறைமேல் ஊன்றியவாறும் இருந்தர்ன். சிங்கமானது, ஓர் மானைக் கண்டவுடன் எவ்வாறு பாய நினைத்துப் படுக்குமோ அதுபோல் ஆஸிம் தோன்றினான். தன் நிலைமையைக் கண்டவுடன் சட்டென்று காலை இழுத்துக்கொண்டு, கடவுளின்வல்லமையைப்பற்றி யோசித்தான். ஆஹா! கடவுளின் வல்லமையை யாரால் அறியக்கூடும்! என்ன ஆச்சரியம்! கடவுள் அவன் மனதில், அவ்வளவு அரிய புத்திமதிகள் தோன்றும்படி, அந்த ஓர் விநாடிக்குள் செய்தார்!

ஆஸிம் அம்மலைச் சிகரத்தினின்றும், தன் ஊர்போய்ச் சேர்ந்தான். தன் வீடு போனவுடனே, வர்த்தகத் தொழில்கொண்டு, சுறுசுறுப்பாய் வேலைசெய்து அளவிலாத் திரவியம் சம்பாதித்தான். தனக்குக் கடவுளால் போதிக்கப்பட்ட புத்திமதிகளைக்கொண்டு, சந்தோஷமாக வசித்துவந்தான்.

ஐரோப்பிய மஹாயுத்தம்

256-பக்கங்கள் :: 58-ஆப்டோன் படங்கள்

ஐரோப்பிய மஹா யுத்தத்திற்குக் காரணங்கள், ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்கள், யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்தாயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள், சித்திரப்படங்களுடன் தெளிவாயும் கதைப் போக்காயும் ஸாமான்ய ஜனங்களகூட எளிதில் படித்தறிந்து கொள்ளும்படி எழுதப் பெற்றிருக்கிறது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

போதினிச் சந்தாதார்க்கு மாத்திரமே ... ரூ. 1.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADLES' PAGES

கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி அரசன் அருகாகப் - போத
விளையாட விட்டவன்றன் மேற்செயல் நாடென்றாள்
விளையாடுங் கையாள் மதித்து.

கிழக்கே யுதிக்கும் சூரியன் லோக வியவஹாரங்களைக் கண்டு களித்து, பிரிவுற்ற காதலர் சேரத் தான் தடையாயிருப்பதை எண்ணி மேல்திசை நாடி அப்பொழுது நடந்துகொண்டிருந்தான். எனினும் தனது கிரணங்களின் வெப்பங் குறையாமல் கம்பீரமாகவே வான வீதியில் தனது ஒற்றைக்கால் தேரை யோட்டிக் கொண்டிருந்தான். அது வேகமாக நடப்பினும், அதைக்காட்டிலும் வேகமாகவே நளன் ருதுபர்ணனது தேரைச் செலுத்திக்கொண்டிருந்தான். அதன் வேகத்தின் முன் உலகமே இடம்விட்டுப் பெயர்ந்து அதிசீக்ர கதியில் ஓடுவதாக ருதுபர்ண மஹாராஜனுக்குப் பட்டது. காற்று, அவ்வடங்காக்குதிரைகளால் ஊடுருவப்பட்டு "விஜ்ஸ்" என்று குழலினுமினித்த குரலில் நளனது குதிரை யோட்டும் பெருமையையே பாடிக்கொண்டிருந்தது. அதன் வேகத்தோடே அக்காற்றும் எழும்பி எழும்பிப் பாடுவதைக் கேட்ட, பக்கத்திலிருக்கும் மலையுங் காடும், அருவியும் ஆறும் பிரதித்வனி தந்து ச்ருதி கூட்டும். கண்ணுக்குங் காதுக்கும் ஆநந்த மூட்டும் அவ்வினிய காட்சியைக் கண்ட ருதுபர்ணன் எண்ணாதவெல்லாம் எண்ணி மனப்பால் குடித்து மயங்கிக் கிடந்தான்.

சூரிய வெப்பத்தில் காய்ந்த மேகங்கள் பொற்கொல்லன் களத்திட்ட பொன்போல் அப்போது ஜ்வலித்துக்கொண்டிருந்தது. வாடியிருந்த மனம் உத்ஸாகம்கொள்ளும்படி, சூரியனது தீட்சணியமும் வரவரக் குறைய, வானம்பாடிகள் முதலிய பறவைகள் கூட்டங் கூடி தமது மகிழ்ச்சியை இனிய குரலில் வெளியிட்டுக்கொண்டிருந்தன. தேனீக்கள் தமது செய லொழிந்து தாமரைப் பள்ளியில் சேர்ந்து குலாவின. ஸாயங்காலத்தில் மலரும் நறிய மலர்கள் தமது வாஸனை தென்றற்காற்றின்மேல் தாவிச் செல்ல இணங்கி விளங்கின. பட்சிக் கூட்டங்கள் தமது ஆசைக்குரியவற்றை நாடிப் பஞ்சரமடைந்தன. இனிய மந்த மாருதம் எங்கும் எழும்பி இனிமை குலாவ வீசியது. படர்ந்தெரியும் அக்னிமலையின் வாயைப்போலச் சூரியன் பூமியைத் தாவி, கருமேகங்களின் தலையிலிட்ட மணியாக விளங்கினான். தன்னைக் கட்டிப் பிணித்த அம்மேகங்களைப் பொருது, இடையிடையே அவற்றைக்காய்ச்சி அவன் தன் கரங்களைக் கண்டவர் கண்மயங்கும்படி வெளிவிட்டுக் கொண்டிருந்தான். தன்னைச் சரணடைந்த தாமரைத் தலைவன், அக்னி குண்டத்தில் வீழ்ந்து அவியாதபடி அந்தர்ப்புவனத்தில் அவனை மறைக்க எண்ணங்கொண்டு விளங்கினள் போலும். அந்த உக்ரசூரியனை மறைத்த பூமாதேவி அப்போது பாற்கடல்வந்த திங்கள் மன்னவனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் ருதுபர்ணனுடைய தேர் விதர்ப்பபுரத்துள் பிரவேசஞ்செய்தது. அப்போது அந்நாட்டுக் கொடி, அதனுள் வருவாரை உள் வாவென அழைப்பதுபோலப் பறந்து கொண்டிருந்தது. அத்தேரோடும் ஓசையைக் கேட்ட தமயந்தி, 'அது என் நாதன் தேரோட்டும் ஒலியில்லாவிட்டால், வேறென்னவா யிருக்கக் கூடும் ? அப்படி யில்லாவிட்டால், என்னையே நான் நம்பமுடியாது !' என்று வியந்துகொண்டிருந்தாள்; அப்போதவள் இடது தோள்கள் துடித்தன.

நிற்க, ருதுபர்ணன் மனங்குன்றிக் கிடந்தான். தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரமெனத் தான் கேள்விப்பட்டது உண்மையோ யில்லையோ என அவன் கவலைகொண்டான். "அவளுக்கு இரண்டாம் சுயம்வரமென்றால், இவ்வூர் ஏன் அலங்கரிக்கப்படவில்லை ? ஏன் இப்படி இந்த ஊர் நிச்சப்தமாகக் கவலை கொண்ட வீடுபோல விளங்கவேண்டும்? ஜனங்கள் ஏன் சிறிதும் உத்ஸாகமில்லாமல் இருக்க வேண்டும் ? வரக்கூடிய பெருங் கொண்டாட்டத்தை ஆவலோடு அவர் எதிர்பார்ப்பதுபோல் தோன்றவில்லையே" என அவன் சிந்தையிலாழ்ந்திருந்தபோது, தேர் குண்டினபுரத்து அகநகருள் பிரவேசிக்க, காவலாளர்கள் ருதுபர்ணரது வரவை வீமராஜனுக்குத் தெரிவித்தனர். அவரது உத்தரவை ஏற்று, தேரை உள்புகும்படி அவர் விட்டனர். உடனே நள மன்னவர் வெகு லாகவமாக அத்தேரை அக்

குண்டினபுரத்து ராஜவீதியில் செலுத்தி, வீமராஜனது ஸபாமண்டபவாயிலில் நிறுத்தினர்.

அத்தேர் அவ்வீதிவழி ஓடியபோது செய்த அழகிய இனிய சப்தம் அவ்வூர் முழுதையுங் கவிந்து கொண்டது. அவ்வொலி காதில் பட்டதும், தமயந்தி "என் தலைவரது கைலாகவத்தையே அந்தச் சப்தம் வெளியிடும். இல்லாவிடில் யான் அவரை அறிந்தும் அறியாதவள் ஆவேன். என் கணவர் இங்கு வந்துவிட்டாரெனவே யான் இனி நிச்சயித்துவிடலாம்; நிச்சயித்துவிட்டேன். மழைக்காலத்தில் அதி கம்பீரமாக ஒலிக்கும் மேக முழக்கம்போல விளங்கும் அச்சப்தம் என் நாதர் குதிரையோட்டும் வேகத்தின் முன்னுரை யல்லாவிட்டால், மற்றெதுவா யிருக்கலாம்? அது என்னவாயிருந்தாலென்ன? என் தலைவனது ஞாபகத்தையூட்டி நல்லெண்ணத்தை யுண்டாக்கிய அந்த நாதம் என் மனத்தைக் கவர்ந்து கிளைக்குமாறு செய்கிறது. அவ்வாறு என் உள்ளங் குளிரும்படி நாதஞ்செய்யும் இந்தத் தேரை ஓட்டுபவர் என் நாதனே ; மற்றெவரு மிருக்கமுடியாது. என் உயிர்க்குயிராக விளங்கும் என் ஐயனை இன்று யான் காணாவிட்டால் நான் பிழைத்திரேன் என்பது நிச்சயம். வீரருள் பெரியவரும், அதோ எதிரில் விளங்கும் சந்திரனைக் காட்டிலும் நிஷ்களங்கமான மனத்தைக் கொண்டவரும், புகழையே பெருஞ் சுமையாகக் கொண்டவரும், தவறில் படாத நெறியினருமான என் உயிர் நண்பரை இன்று நான் காணேனானால், கெடுவேன் என்பது சொல்லவும் வேண்டுமோ? அவர் மெல்லிய கைகளில் பதுங்கி, அவர் முகத்தினழகை யான் இன்று கண்டு களிக்கேனானால், இனிப் பிழைத்தலரிது. இக்கண்கள் அவரை நேரில் காணும் பாக்கியத்தைப் பெறாவிடில், இவ்வுடல் பொன்போல் ஒளிரும் நெருப்பிற்கிரையாகும்; இது ஸத்யம். ஆர்ய புத்ரா! புகழே வடிவெடுத்தோய் ! மத்த கஜங்களை யடக்கியாளும் மன்னவரேறே ! நரச் சிரேஷ்டரே ! உமது திருமேனி தீண்டப் பெற்றும் பெற்றிலேனான யான் உம்மை இந்நாள் காணேனானால், ஸந்தேகமில்லாமல் பிராயோபவேசஞ் செய்வேன் என்பதை நம்பும். தாங்கள் என்றாவது பொய் பேசியதுண்டோ? அன்றி எவர்க்காவது பொல்லாங்கு செய்ததுண்டோ? விளையாட்டிற் கென்றாவது தகாத வார்த்தைகள் சொல்லியதுண்டோ? நீர் எப்பொழுதும் பெருந்தன்மை யுள்ளவர் ; பொறுமை கொண்டவர்; வல்லமையுடையவர்; உத்தம சீலமுள்ளவர் ; மறைவிலும் பழியான காரியம் ஒரு நாளுஞ் செய்யாதவர் ; யாரிலும் அதிகமாகக் கொடை யளிப்பவர் ; மனநிலை கோணா நடுநிலைமை வாய்ந்தவர்; உத்தமருள் உத்தமர்; குணமாகிய கவசத்தைப் பூண்டவர். நெடுந்தோளாய்! உம்மைக் காணவேண்டுமெனப் பேராவல் கொண்ட இக்கண்களோ பூத்துப் போயின. எனினும், உமது உத்தம குணங்களைச் சரிவர வர்ணிக்கமுடியாது, என் மனம் மயங்குகிறது. அவை அளவு கடந்தவன்றே! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாவதைத் தவிர்த்து என்னை ஆள இன்று நீர்வராவிடில், நான் பிழைப்பேன் என்று எனக்குத் தோன்றவில்லை. துக்கத்தின் மிகுதியால் என் உள்ளம் பிளந்துவிடும். உம்மையல்லாமல் மற்றுயாரை இச்சமயம் யான் சரண் புகுவது? எல்லா உலகமும், ஸுகமும் உம்மிடமன்றோ எனக்குள்ளன? யான் வாழ விரும்புமிடம் அதுவன்றோ? அதை யான் பெறாவிடில் அந்தர பாதளத்துள் வீழ்ந்து அவிவதேயாகு மல்லவோ? ஆயினும் எனக்கும் தெரியாமல் நீர் வந்தெனைக் காப்பீர் என்ற பூர்ண நம்பிக்கை என்னுள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது. அது எப்படி முடியுமோ யான் அறியேன்" என மொழிந்துகொண்டு, பித்தம் பிடித்தவள்போல மேல்மாடி மீதேறித் தேருள் இருந்தவரை ஆவலோடு நோக்கினாள். தேரிலிருந்து வார்ஷ்ணேயனும் வாகுகனும் முதலில் இறங்கப் பின் ருதுபர்ணன் இறங்குவதைத் தமயந்தி கண்டாள். சிப்பந்திகள் ருதுபர்ணனை வரவேற்று ராஜசபைக் கழைத்துச் சென்றனர். வாகுகனும் வார்ஷ்ணேயனும் குதிரைகளை அவிழ்த்துவிட்டுத் தேரை ஒரு பக்கமாக நிறுத்தி ருதுபர்ணரது வரவை எதிர்பார்த்திருந்தனர்.

ஸ்ரீராமாயண ஸாரம்:—எளிய நடையில் மிக இனிமையாக எழுதப் பட்டுள்ளது. கல்லூரி மாணாக்கர்களுக்கும் பிறருக்கும் இது பெரிதும் பயன்படுமென்பது எமது உறுதியாதலின் இதனை அவரெல்லாம் வாங்கி வாசித்தற்குரியர்.—தேசபக்தன்
விலை ரூபா, 1. சந்தாதார்க்கு மாத்திரம் அணா. 12.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

யுத்த முடிவும் ஸமாதானச் சபையும்.

இம்மஹா யுத்த இருள் ஒழிந்து சமாதானச் சூரியன் எப்பொழுது கிளம்பும் என ஆவல் கொண்ட இவ்வுலகம் மன அமைதி அடையும்படி அக்கொடுமையே உருவெடுத்த கெய்ஸர் தனது அரசுரிமையைத் துறந்து எங்கும் குதூஹலம் குலவ ஜர்மானியர் நேசப்படையினரைச் சரணடையும்படி செய்த கடவுளின் கிருபைக்கு யாம் என்றும் கடமைப் பட்டவராவோம். நல்லது விதைத்தால் நல்லது விளையும், அல்லது விதைத்தால் அல்லதே விளையும் என்பதற்கு இப்பேராசைப்பேயாலாட்டப்பட்ட கெய்ஸரின் பிழைப்பே படிப்பினையாகும். நிற்க, இந்த யுத்தம் நமது அதிமாட்சிமை தங்கிய அரசர் தொடங்கும்பொழுதே, தர்மயுத்தமென நாம் கூறியதை மீண்டும் வற்புறுத்துவது தவறாகாது. அது எளிய ஜனங்களின் உரிமைகளைப் பாராட்டி வலிய அரசரும் கவனிக்கவென்றே செய்யப்பட்டது; அவ்வித முடிந்த நிலையை நிலை நிறுத்தவே முடிந்தது. இவ்வாறு நம்மரசர் வெற்றியுடன் வருவதற்கு இந்திய நாடு செய்த உதவி அளவிடத் தகுந்த தல்லவென கனம் மந்திரியாரே கூறியிருக்கின்றனர். பல நிர்ப்பந்தங்களுக்குள்பட்டும் தமது உடல் பொருள் ஆவி யாவையும் தந்துதவியது நம்மவரது கடமை எனினும், அவ்வாறு உதவியவர்களுடைய பல துன்பங்களையும் போக்கி, லோகத்தாரோடு ஸம உரிமையுடன் அவர் விளங்குமாறு செய்வது பிரிட்டிஷ் மக்களது நன்றியறியும் தருமமாத்திரமன்று; கடமையுமாகும். அவ்வாறு செய்யாவிடில், தர்ம ஸ்தாபனத்திற்கென்றே யவர்போரிட முந்தினரென்ற புகழுக்குக் களங்க மேற்பட்டுவிடுமல்லவா? இனி வரும் ஸமாதானச் சபையில் பாராட்டிக் கவனிக்கப்படும் ஸுயநிர்ணய மென்னும் உரிமையை, ஆங்கிலநாட்டின் ஜீவரத்தினமாகி விளங்கும் இந்நாட்டிற்கும் பொருந்துமாறு செய்வரென நம்புகின்றனம். ஸமாதானக் கான்பரன்ஸில் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பெற்ற இந்தியப் பிரதிநிதிகளாய்ச் சென்றிருக்கும் கனம் ஸர். எஸ். பி. ஸின்ஹாவும், பிகானிர் மஹாராஜாவும் இந்நாட்டு லக்ஷயங்களைச் சிறிதும் அடங்காத்தீரத்தோடும் தாராளமான மனத்துடனும், தமது விருப்புவெறுப்புக்களைக் கவனியாது அங்கு வெளியிட்டு வாதிப்பர் என்ற நமது நம்பிக்கையை அவர் மெய்ப்பிப்பாராக!

*　　*　　*

இங்கிலாந்தில் இந்திய பத்ரிகாசிரியர்கள்.

மாட்சிமை தங்கிய அரசர் பெருமானது அழைப்புக்கிணங்கி, சேனை விஷயங்களைக் கவனிக்கச் சென்ற நமது பத்ரிகாசிரியர்கள் இங்கிலாந்தில் பல விதத்தில் மரியாதை செய்யப்பட்டதன்றி அரசராலும் பேட்டி கொடுக்கப்பெற்றனரென்பதைக் கேட்கக்கேட்க நமக்கு இனி மேலும் மேலும் நல்லகாலம் ஏற்படுமென்ற குதூஹல முண்டாகின்றது. இப்பத்திராதிபர்கள் பல விடத்திலும், இந்திய நாட்டாரால் நடத்தப்படும் பத்திரிகைகளுக்கும் அச்சுச்சாலைகளுக்கும் உள்ளவெறுக்கத்தக்க நிபந்தனைகளை ஒழிக்கும்படி பிரிட்டிஷ் பத்திரிகாசிரியர்களையும் பொது ஜனங்களையும் தமக்கு உதவிசெய்வது அளவு கடந்த நன்மை கொடுப்பதன்றி நியாயமான உரிமையை நிலைநாட்ட வழிதேடுவதுமே யாகுமெனக் கூறியது கவனிக்கத்தக்கதே யன்றோ? விரும்பினால் அவர் என்ன உதவி செய்வரென்பது நாம் அளவிட முடியுமா?

*　　*　　*

ஆகாய விமானப் பிரயாணம்.

யுத்தத்தினாலும் சில நன்மைகள் ஏற்படும் என்பதற்கு ஆகாய விமானங்கள் மூலமாக இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் போக்குவரத்து ஏற்படுத்தச் செய்யும் பிரயத்தினமொரு சான்று. இதனால் கடல் வழிப்போவதால் ஏற்படும் மூன்று வாரப் பிரயாணம் ஒரு வாரத்துக்குள் ஆய்விடுமெனத் தெரிகிறது. ஆகாய விமானங்களை இறக்கத் தக்க இடங்களை ஏற்படுத்த, இப்போது பரிசோதனைகள் இந்தியாவிலும் பர்மாவிலும் நடந்து வருகின்றன. முதல் முதல் இப்பிரயாணம் கடிதப் போக்கு வரத்துக்கே உபயோகப்படுத்தப் படுமாயினும் காலக்ரமத்தில் பிரயாணிகளுக்கும் உதவியாகும் என நாம் நம்புகிறோம்.

5-FEB 1919

விவேக போதினி

வருஷச் சந்தா	
உள்நாடு	ரூ. 4
வெளிநாடு	,, 5
தனிப்பிரதி	அ. 6

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

விளம்பர விகிதம்.	
முழுப்பக்கம்	ரூ. 8
அரைப்பக்கம்	,, 5
கால்பக்கம்	,, 3

தொகு XI } காளயுக்தி௵ கார்த்திகை௴ :: 1918-௵ டிசம்பர்௴ { பகுதி 6

பேரகத்தியனார்

AGASTHYA THE GREAT

பண்டவுணர் மூழ்கினர் படார்களென வானோர்
எண்டவ வெமக்கருள் கெனக்குறையி ரந்தார்
கண்டொருகை வாரினன் முகந்துகட லெல்லாம்
உண்டவர்கள் பின்னுமிழ்க வென்றலுமு மிழ்ந்தான்.

தூயகட னீரடிசி லுண்டது துரந்தான்
ஆயவத லாலமரு மெய்யுடைய வன்னான்
மாயவினை வாளவுணன் மாயவவன் வன்மைக்
காயமினி துண்டுலகி னரிடர்க ளைந்தான்.

யோகமுறு பேருயிர்க டாமுலைவு றாமல்
ஏகுநெறி யாதெனமி தித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தையெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான்.

மூசரவு சூடுமுத லோனுரையின் மூவா
மாசிறவ வேகெனவ டாதுதிசை மேனாள்
நீசமுற வானினெடு மாமலய நோரா
ஈசனிக ராயுலகு சீர்பெறவி ருந்தான்.

உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னாடி
நிழற்பொலிக ணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்.

விண்ணினி னிலத்தினில்வி கற்பவுல கிற்பேர்
எண்ணினி லிருக்கினிலி ருக்குமென யாரும்
உண்ணினை கருத்தினையு றப்பெறவெ னாலென்
கண்ணினி லெனக்கொடுக ளிப்புறும னத்தான்.

இரைத்தமறை நான்கினொ டியைந்தபிற யாவும்
நிரைத்தநெடு ஞானநிமிர் கல்வியொடு நாளிட்
டுரைத்துமய னாலுமறி யாதவொரு ணோர்கின்
றுரைக்குதவு மாலெனுமு ணர்ச்சியினு வப்பான்.

உய்ந்தன ரிமைப்பிலரு யிர்த்தனர்த வத்தோர்
அந்தண ரறத்தினெறி னின்றனர்க ளானா
வெந்திற லரக்கர்விட வேர்முத லறுப்பான்
வந்தனன் மருத்துவ னெனத்தனி வலிப்பான்.

எனையுயி ராமுதல யாவுமிடை வேவித்
தானுகர ரக்குரு மைச்சுடுசி னத்தின்
ஆனவன லைக்கடித வித்துலக ளிப்பான்
வானமழை வந்ததென முந்துறும னத்தான்.

*　　*　　*　　*

*　　*　　*　　*

என்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக்
குணடுகையினிற் பொருவில் காவிரி கொணர்ந்தான்.

—கம்பராமாயணம்.

விவேக போதினி

தொ.11] காளயுக்திஸூ கார்த்திகைமீ [ப. 6

பலவற்றி லொற்றுமை

UNITY IN DIVERSITY

அயன்கரக்கு மாயர்சிரை யத்தனையுந் தானு
நயன்கறந் தாயருள நட்டான்—வியனுருவைக்
கௌவங் கருத்தடக்கிக் கண்டார் பெரும்பிறவிப்
பௌவங் கடக்கும் புணை.

பரம்பொருளின் சேஷ்டிதங்களையே கண்ணன் இதுவரைக் காட்டி வந்ததை யாம் கவனித்து வந்தனம். அவர் தமது இளம் வயதில், ஸாதாரணக் குழந்தைகள் போலல்லாது அற்புதமான செயல்களையே செய்து வந்தனர் என்பது யாமறிந்ததே. வாயைத் திறந்து வையமெல்லாங் காட்டி, யசோதையை அவர் களிப்பித்தனராயினும், தமது மாயாவிலாஸத்தால் அது அவளுக்குத் தோன்றாது விளங்கவே செய்தனர். எனவே எவரும் "இது அதிசயக் குழந்தை" யென்றே எண்ணும்படி செய்து வந்தனர். அச்செயல்களிலெல்லாம் அவரது வரம்புகடந்த பராக்ரமத்தின் பெருமையே வெளித் தோன்றின. ஆனால் ஜனங்கள் அக்குழந்தையிடம் அன்பும் மரியாதையும் கொண்டு விளங்கினர்; கம்ஸனும் வெறுப்பும் பகையும் பாராட்டி அதைக் கொல்ல வழிதேடி வந்தனன். ஆனால் எம்பெருமான் தமது ஸர்வாந்தர்யாமித் தன்மையை இதுவரை வெளியிட இடம் ஏற்படவில்லை. அச்சமயங்கள் என்று கிடைக்கும் என ஆவலோடு விளங்கினவர்களும் உளர்.

தமது ஆயச் சிறுவருடன் அகாஸுரனது வாயிலிருந்து வெளிவந்ததும், ஆற்றங்கரையில் முன் போலவே மாடுகளையும் கன்றுகளையும் மேயவிட்டுவிட்டு, அவர் சிற்றுண்டிகளைத் தின்று விளையாடி வந்தனர். அதே ஸமயம் அவர் தமது இடையிற் செருகிவைத்திருந்த புல்லாங் குழலைக் கையில் வைத்த வண்ணமாகவே, தம்மைச் சுற்றிவிளங்கிய கோபாலர்கள் பரிந்து பரிந்து ஊட்டிய உணவை இளங் குழந்தைபோல ஏற்றுக் குதூஹலத்துடன் விளங்கினர். அக்காட்சியைக் கண்ட தேவரும் அளவு கடந்த ஆநந்தமடைந்தனர்.

நிற்க, இருந்தாற்போல விருந்து தமது முன்னிருந்த மாடுகளும் கன்றுகளும் இல்லாது போக, ஆயச்சிறுவர் கவலை கொண்டனர்; தமது உணவையுங் கொள்ள மனங் கொள்ளாது தயங்கினர்; நெஞ்சம் அழிந்தனர். அவரது துயரத்தில் ஈடுபட்ட எம்பெருமான் அவரைத் தேற்றிக் கன்றுகளையும் மாடுகளையும் தேடக் கையிலிருந்த உண்டியுடன் காட்டிற்குள் சென்றனர். அவற்றைக் காணாது திரும்பிய அவர், தமதிடம் வந்து நோக்க, அங்கு ஆயச் சிறுவர்களும் இல்லாது விளங்க, அவரும் கன்றுகளும் மறையக் காரணம் யாதெனச் சற்றே யோசித்தனர்; அது பிரஹ்மாவின் வேலையென எண்ணினர்; தமது வைபவத்தை வெளியிட நிச்சயித்தனர்.

குழந்தைகளும் மாடுகளும் கன்றுகளும் இல்லாது அவர் வீடு திரும்பில் எவ்வளவு துயரத்திற்குப் பிருந்தாவனம் உட்படும்? பசுக்கள் இல்லாது ஆயர் என் செய்வர்? சிறார்களைக் காணாது தாய் தந்தையர் என்ன துயரம் அடைவார்கள்? "கண்ணா! குழந்தை எங்கடா?" என்று கேட்டவர்க்குப் பதில் என்ன சொல்வது? பிரஹ்மாவின் செயலை எப்படிச் செயலறச் செய்வது? எவ்வுயிர்க்கும் உயிராகும் எம்பெருமானுக்கு இவை யனைத்தையும் ஒருங்கே கவனிக்க உள்ளம் அன்பு மடைபாய்ந்து அவாவுடன் விளங்கியது. அவனன்றி ஓர் அணுவு மசையாதன்றே! ஆகவே அவர் தமது தெய்வீகப் பிரபாவத்தின் பெருக்கினால், தம்முடன் வந்த சிறுவர் கன்றுகள் மாடுகள் இவற்றின் உருக்கொண்டு, அவ்வவரின் உரிமையாளரது துயரத்தைப் போக்கினர்; ஒவ்வொரு வீட்டிலும் கன்றும் மாடும் சிறுவனுமாகத் தாமே விளங்கினர்; தாம் சிருஷ்டித்த உருவுடன் தாமே குலாவி விளையாடி ஆயமக்களது அன்பிற்குப் பாத்திரராயினர்; அதன் பெருமையைத் தன்னுருவில் மயங்கும் தபோதனர் அன்றி யார் அறிய முடியும்?

மற்றுக் கண்ணனது தெய்விகத்தைக் காணவென்று, பிரஹ்மதேவர் மலைக்குகையில் மறைத்துவைத்த ஆயரும் மாடு கன்றுகளும், தமது ஜீவனாகிய கண்ணனைப் பிரிந்து, சவமென அங்கு விளங்கினர். அவரது பிராணாதாரமான எம்பெருமான் தமது யோகப் பெருக்கால் அவரது சுவாஸங்களைத் தம்முள் ஏற்றுச் சற்றும் அவர் துன்பமறியாது விளங்கச்செய்த அருள் பிரபாவத்தை அளக்க வல்லார் யார்? அதனாலன்றே அவர்க்கு அடியார்க்கடியன் என்னும் நாமமும் உண்டாயிற்று! அவ்வருள் பிரபாவத்தை அறிய, தக்க மனோநிலைவேண்டு மென்பதற்கும் பலபத்திரனே ஆதாரம். அவர் தமது கண்ணனிடம் கொண்ட அன்பிற்கு இணை என்பது கிடையாது. எனினும், புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்ட கன்று மாடுகளிடமும் இடைச்சிறுவர்களிடமும் தமக்கு அன்பு வரவர விருத்தியாகி, அவற்றிடம் தமக்குக் கண்ணனிடமிருக்கும் அன்பிற்கீடான அன்பாகக் காரணம், கண்ணபிரானது பெருமையே என அவர் கண்டனர்; "இப்பசுக்கள் ஸாதாரணமானவை யல்ல; அளவுகடந்து பால் தருகின்றன; சாந்தமே குடிகொண் டிருக்கின்றன. அவற்றிடம் கோபாலர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அன்பு முன்பிருந்தாற்போல இல்லை; அபாரமாக விளங்குகிறது. இச்சிறுவரிடம் அவர் தாய் தந்தையரேயன்றி யானும் அளவுகடந்த அன்பு கொண்டு விட்டேன்; அது கண்ணனிடத்ததேபோலிருக்கிறதே! இது என்ன?" என அவர் எண்ணினர்; தமது மூல உருவில் நிலைத்துச் சற்றே ஆழ்ந்து நோக்கினர்; "அஹோ! இது மாயை! அவ்வுருவங்கள் முற்றும் கண்ணனது வெளித்தோற்றம். இவற்றை இந்தக் கோபாலர்கள் சிறிதும் உணராது விளங்குகின்றனரே! என்ன அதிசயம். அது கண்ணபிரானது கரந்துறையும் தன்மையின் விசேஷத்தையே வெளியிடும். பரமதயாளுவாகிய எம்பெருமான் ஏன் இவ்வுருக்கொண்டு இக்கோபாலர்களை மயக்கவேண்டும்?" என எண்ணி ஆனந்தபரவச மடைந்தனர்; கண்ணபிரானது பெருமையைத் துதித்து விளங்கினர்.

இவ்வாறு கண்ணபிரான் தம்முருவைக் கரந்து ஆயர் வீட்டில் விளங்கிய பெருமை அதிசயமானது. அவ்வவர் வீட்டுச் சிறுவனும் செய்யும் காரியங்கள் யாவும் அவ்வவர் செய்யுமாறே செய்வர்; அவர் தமது தாய் தந்தையரிடம் விளங்கும் மாதிரியாகவே விளங்குவர்; அவர் விளையாடிய விதமே விளையாடுவர்; அவர் செய்த குறும்புகளையே செய்து, தாய் தந்தையரைக் களிப்பிப்பர்; அம்மாயச் சிறுவருடன் தாமுங் கலந்து விளையாடிக் காட்டிற்குச் சென்று மாடுகளை மேய்த்துத் தமது குழலை ஊதிக்கொண்டு வீட்டிற்குத் திரும்புவர். அப்போது ஊரிலுள்ளார் எல்லோரும் தமது குழந்தைகளே வந்ததென அன்பு பெருகி அவற்றை ஆதரிப்பர். அக்குழந்தைகளை மடியில் வைத்துப் பாலூட்டி உச்சி முகந்து ஆனந்தமடைந்த அத்தாய் தந்தையரின் களிப்பில் கண்ணனும் ஈடுபட்டு விளங்கினர் என்றால் அவர் புகழ்க்கு வரம்பாமோ? அத்புத காரியங்களையும் செயல்களையும் செய்யு மஹாத்மாக்கள் தமது தன்மை அவற்றுள் தோன்றாது முழுதும் தோன்றச்செய்யுமாறே கண்ணபிரான் தமது உருவை அம்மாயச் சிறாரிடம் கரந்தும் கரவாது விளங்கினர். அதைக் கண்டு உளம் நெக்கிடவென்றல்லவா பிரஹ்மாவும் கன்றுகளையும் மாடுகளையும் குழந்தைகளையும் குகையில் அடைத்து வைத்தது?

நிற்க, பிரஹ்மதேவர் தம்மால் அடைக்கப்பட்ட சிறுவர் முதலியவர்கள் கிடக்க, எம்பெருமான் தமதுருவின் பெருமையால் தாமே கோபாலர்களாகவும், கன்றுகளாகவும் மாடுகளாகவும் தவழ்ந்து பிருந்தாவனத்துள் ஆனந்தம் விளங்கச் செய்ததைக் கண்டனர்; தமது செயல் சிறிதும் பயன்படாதுபோனதை யுணர்ந்தனர்; சிந்தை யழிந்து சற்றே கண்மூடி மௌனியாய் விளங்கினர்; அந்நிலையி லிருக்கும்போது அவர் கண்ட தெய்வக் காட்சியைக் கருத்திலெண்ணினர். அவர்முன் அப்போது அந்தபிருந்தாவனம் இணையற்ற உலகமாகப் பட்டது. அங்கு ஸர்வப் பிராணிகளும் பகையின்றி உள்ளன்போடு விளங்க, பக்த பராதீனனாகிய கண்ணன் தமது நண்பரைத் தாம் கையில் கொண்ட அன்ன கபளத்துடன் தேடுவதாக அவர் கண்டனர். அளவுகடந்த அன்புடன் அவர் தமது ஆசைக்கு உகந்தவரைத்

5-FEB 1919

தேடுவதைநோக்க, அவரது லீலாவைபவத்தைக் காணவென்ச் செய்த செயலை எண்ணி எண்ணி நெஞ்சமழிந்து தமது கண்ணைத் திறந்து பார்த்தனர்; பக்தர்களை ரக்ஷிக்கவெனக் கங்கணங்கொண்ட அப்பரமேஷ்டியாகிய பரம்பொருள் கையிற்கொண்ட அர்த்த அன்னகபளத்துடன் அங்கு எதிரில் வெகு கவலையுடன் ஆயச்சிறுவரைத் தேடிவருவதைக் கண்டனர்; கைகளைக் குவித்திறைஞ்சி மனம் வாக்குக் காயம் எனும் திரிகரணங்களும் மலமற்று விளங்கத் துதிப்பாராயினர்:

“அத்தனே! உலக நிறைகின்ற பொருள் தாங்களே அன்றே! உமது அன்பின் பெருக்கை அளவிடவல்லார் யார்வர்? ஒன்று மறியாத இளஞ் சிறுவன்போலே இப்பாதைகளில் தமது திருவடி தோய நடப்பதற்கு இப்பூமிதேவி செய்த பெரும் புண்ணிய மிருந்தவாறு என்னே! கொண்டல் வண்ணா! முண்டகம் ஒத்த கண்ணா! மின்னலொத்த வடிவா! மயிர்ப்பிச்சங்களை முடித்த இறைவா! வனமாலை தரித்து அன்பர் உளமே தரித்த தலைவா! வெண்ணெயுண்ட வாயா! வேயூதும் நெடுமாலா! வித்தக பாலா! ஆயர்தம் தலைவா! அருமறையின் முதல்வா! உமது உண்மையுருவை உள்ளம் துறந்தபெரியோர் அன்றேஅறிவர்! இச்சைபால் பட்டுழலும் எம்போல்வார் காண்பதற்கு ஆகுமோ? சிந்தையை யடக்கிச்சும்மாவிளங்கு மிடத்தைவிட்டு, மந்தையை யடக்கிக் குழலைத் தரித்த கையா! பலவற்றுள் ஒன்றாயும், ஒன்றில் பலவாயும் விளங்கும் உமது அந்தர்யாமிநிலையைக் காண்பது அரிதன்றே! குறையற்று, பற்றொழிந்த, பரமயோகிகள் ஸதா கண்டு களிக்கும் உமது உருவை யான் அறிவேனோ? முதலும் முடிவுமற்றவனே! அந்தோ! என்மடமை வெறுக்கத்தக்கதன்றே! எங்கு நிறைகின்ற பொருளாகிய தம்மைக்காணும் சக்திவாய்ந்திருந்தும், எனதுமாயையை, எல்லா மாயைக்கும் இருப்பிடமாகிய தங்களிடமே காட்டினனல்லவா! அவ்வாறு செய்தது தவறே! எனினும், தமது பெருமைப் பெருக்கின் பிரபாவத்தைக் கண்டு களிக்கவென்றே செய்தனன். என்னை மன்னிப்பீரென்பது நிச்சயம். அண்ட புவனங்கள் எவற்றிற்கும் காரணமாகிய தாங்கள், என்னிடம் கோபிக்க மாட்டீர். தாங்களே நாராயணன். தங்களிடமிருந்தே யான் தோன்றினேன். தமது வயிற்று அடக்கிய புவனங்களை வெளிப்புறத்தே தோற்றிவைத்துத் தாங்களும் அதனுள் தனித்து விளங்கும் பெருமையைக் காண்பது தவறாகாது. அதற்காயிரங் கண்க ளிருப்பினும் போதா. உள்ளன்பிலாவிடின் அக்காட்சி மறைந்திடுமன்றோ? ஆகையால் யான் உன் அடைக்கலம். கொடியாரை மடுத்து அடியாரை அடுத்து ஆளும் அன்பனே! அன்பினிடை யூறும் ஆனந்த வெள்ளமே! அவ்வெள்ளத்தில் ஆழ்ந்து குளிக்க யாவரே விரும்பார்? மனமொழி மெய்களால் பாசமற்று அப்பெருக்கில் மூழ்குவார்க் கல்லவா, ஜடமொழிந்து மோக்ஷம் ஏற்படும்?”

இவ்வாறு துதி செய்த பிரஹ்மா, கண்ணனது பாதங்களில் வீழ்ந்து படிந்து மறைந்தனர். அதே ஸமயம், காட்டில் மீண்டும் கொண்டுவிடப்பட்ட சிறார்கள் தாம் நெடுநாள் குகையுள் மறைந்துகிடந்த விஷய மின்னதென்றறியாது, தூக்கத்திலிருந்து எழுந்தவர் போலக் ‘கண்ணா! கடல் வண்ணா! எங்கள் அண்ணா! எங்கு போய் விட்டாய்? உண்ணாமல் நாங்கள் காத்திருக்கிறோம். நீ யில்லாது உணவு எங்களுக்கு எப்படிப் பிடிக்கும்? மாடுகளைத் தேடிச் சென்றனையே! நீ எங்கு போய் விட்டனை? எத்தனை நாழியாயிற்றே! இக்கரடு முரடான இடத்தில் கன்றுகளையும் மாடுகளையும் தேட உன்னை விட்டு விட்டு, என்ன மூடத்தனம்! நாங்கள் இங்கே இருந்து விட்டோம். உனது இனிய மழலையும், குழலின் இனிய ஒலியையும் கேளாது நாங்கள் வருந்துகிறோம். எங்கள் ஐயனே! எங்கு போய் விட்டாய்? சோறுண்ண உமக்காகக் காத்திருக்கிறோம்! கிருஷ்ணா! எங்கிருக்கிறாய்! பதில் கூடவில்லையே!” என்று யாவரும் “கிருஷ்ணா! கிருஷ்ணா!” எனக் கூவினர்.

எண்ணுவார் எண்ணத்துள் எண்ணியபடி தோன்றும் அவ்வெம்பெருமான் அச்சமயம் கன்றுகளும்மாடுகளும் தம்மைச் சூழத் தமது இனிய புல்லாங்குழலை வாயிலிட்டு, அந்தக் கவலைகொண்ட சிறுவர்களது மனதில் சாந்தி குடிகொள்ளுமாறு ஊதினர். அதன் இன்பம் பயக்கும் நாதத்தைக் கேட்டு அவரைக் கண்டு களித்த ஸர்வஜீவராசிகளும் ஆனந்தம் அடைந்தன. கண்ணனது வரவைக் கண்டதும் குதித்துக் குதித்துக் கூத்தாடி அச்சிறுவர் ஓடி எதிர்கொண்டனர். தமக்காகக் கண்ணன் செய்த பெருமையை அவரெப்படி யறிவர்? தாம் எங்கிருந்தனர் என்பதையாவது, எவ்வளவு நாள் அங்கிருந்தனர் என்பதையாவது அவருள் உணர்ந்தவர் எவர்?

உள்ளனும் கள்ளனும் கூடினால் விடிகிறமட்டும் திருடலாம்.

கண்ணன் தமது பரிவாரத்துடன் வீடு திரும்பும்போது வழியேயிருந்த அகாஸுரனுடைய தோலைக் காட்டிக் களிப்பித்தனர். வீட்டையடைந்த ஆயச் சிறுவர் தம்மைக் கண்ணன் அன்று பாம்பின் வாயிலிருந்து வெளியிட்டுக் காப்பாற்றியதாகச் சொல்லிக்கொண்டாடினர். அப்போது கோபாலர்கள் அதிசயப்படக் காரணம் யாதோ?

மஹாராஜா ஸர் ராமவர்மா, ஜி. ஸி. எஸ். ஐ.

MAHARAJA SIR RAMAVARMA, G. C. S. I.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம், அச்செல்
செல்வத்துள் எல்லாந் தலை [வம்

என வள்ளுவனார் கூறிய தெய்வமொழியையே உறுதிமொழியாக நடப்பது, என்றும், எவர்க்கும் எவ்விடத்தும் நலம் பயக்கும். இதன் பெருமை யாராலும் மறுக்கமுடியாது. ஆகவே அதைத் தனவந்தர்கள் “உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் * * * கற்றல் நன்றே” என்பது தவறாகாது. ஆனால் செல்வமும் கல்வியும் ஒன்றிவிளங்கா என்பது பொதுமொழியாயினும், காலஞ்சென்ற திருவனந்தபுரம் மஹாராஜா ஸர் ராமவர்மா அவர்களிடம் இவ்வசைமொழி தொடர இடமில்லாதாயிற்று.

இவர் 1837-ம் ௵ மே௴ 19௳ பிறந்தவர். இவர் தந்தை, திருவள்ளம் கோயில் தம்புரான்களின் வம்சாவளியில் தோன்றியவர்; வடமொழியிற் பூர்ண பாண்டித்திய மடைந்தவர்; ஆங்கிலத்திலும் சற்றேறக்குறைய நல்லஞானம் பெற்றவர். மஹாராஜா அவர்களது தாய், வடமொழியில் எளிய நடையில் கவிபாடும் திறம் வாய்ந்தவள். மஹாராஜாவுடன் உடன் பிறந்தவர் அறுவர். மூவர், அவர் பிறப்பதற்குச் சற்று முன்னே நமனுக் கிரையாயினர். மற்றிருவர் பித்தர்களென விளங்கினர். எனவே, தன் கடைசி மகனாகிய ராமவர்மன் பிறந்ததும் அவள் அடைந்த மனோ வியாகூலத்திற்கு அளவே கிடையாது. அதனாலேயே ஒருவேளை குழந்தை பிறந்த இரண்டு மாதத்திற் குள்ளாகவே அவள் காலகதி யடைந்தனள் போலும். ஆகவே, குழந்தை சின்னாளிலிருந்தே தேகதிடமில்லாமல் விளங்கியது. அப்போது அதைக் கவனிக்கும் பெரும் பாரம் அவரது பெரிய தாயாரின் பொறுப்பாயிற்று.

தெய்வ ஸங்கல்பத்தினால் குழந்தை வளர்ந்து வர, ஐந்தாவது வருஷத்தில் மலையாளத்திலும் வடமொழியிலும் அக்ஷராப்யாஸம் செய்யப்பெற்று, ஒன்பதாம் வயதில் ராமவர்மன் அக்காலம் ஆங்கிலம் கற்பிப்பதில் புகழ்பெற்ற மாஜி திவானாகிய இங்கிலீஷ் சுப்பராயரிடம் ஆங்கிலம் கற்றனர். படிப்பிற்கு இடையிடை தேக அசௌக்கியம் தடையாயிருப்பினும், அவர் அதைப் பாராட்டாது தனக்கிட்ட வேலையை ஒழுங்குபெறச் செய்வதிலேயே கண்ணா யிருந்தனர். தொட்டதை அரைகுறையாக விடுவது அவர் சுபாவமல்ல; அவர் தந்தையின் கண்டிப்பான மேற்பார்வையால் முடியவும் முடியாது. எனவே, இளம் பருவத்திலேயே மஹாராஜா அவர்களுக்கு மனோவன்மையும், எடுத்தவற்றைச் சரிபெறச் செய்யும் பேரவாவும் ஏற்பட்டன வாயினும், அவர் நியாயமான அதிகாரத்துக் குட்பட்டுத் தமது உரிமையைக் கடந்து அதிகாரமிருக்கும் எவற்றையும் வெகு கண்டிப்பாகத் தாக்கும் தன்மை பெற்றனர். 1849-௵ க்ஷய வியாதி சற்றே அவரைத் தொந்தரை செய்ததாயினும், அவர் உடம்பு இளைத்ததேயல்லாமல் திடங்கொண்ட அவர் மனம் சற்றும் தளரவில்லை.

இதே சமயம், பிறகு திவானாக விளங்கிய தஞ்சாவூர் மாதவராயர் அவர்கள், மஹாராஜா அவர்களுக்குப் பாடங் கற்பிக்கும் தலைவராக ஏற்படுத்தப் பெற்றனர். அவர் நான்கு வருஷங்களே பாடம் கற்பித்தனராயினும், அப்படிப்பு, புத்தகங்கள் மூலமாகப் படிக்கும் படிப்பைப்

உள்ளவன் பிள்ளை உப்போடு உண்ணும், இல்லாதவன் பிள்ளை சர்க்கரையோடு உண்ணும்.

போன்ற நல்லவாயினும், அபாரமான ஞானத்தையும், தாராளமான எண்ணங்களையும், உத்தமகுணங்களையும் வளர்ப்பிக்கத் தக்கதாயும் இருந்தது. இயற்கையிலேயே படிப்பில் ஆவல் கொண்ட மஹாராஜா அவர்களுக்கு இத்தகைய கல்வி, பல துறைகளில் தோய்ந்து, லக்ஷண சாஸ்திர தத்வ ஞானங்களை விருத்திசெய்ய இடம்தந்தது. இவ்வாறு கல்வியினாலும் கேள்வியினாலும் ராயரவர்கள் மஹாராஜாவினது மனத்தை விசாலிக்க, அவரது தந்தையின் ஒற்றுமையும் காரணமென்பது கவனிக்கத் தக்கது. அவரது ஆழ்ந்தறியும் படிப்பைத் தமக்குப் பின் அவர் வைத்திருந்த அளவு கடந்த புத்தகசாலையின் ஒவ்வொரு நூலும் வெளியிடும். அவர் வியாசம் எழுதுவதில் நிபுணர். அவ்வாறு எழுதுவது அவருக்குப் பேரவா. சிறு நாளில் கிரிமியன் யுத்தகாலத்து 1850-ல் அவர் எழுதிய "யுத்தத்தின் கொடுமையும், சமாதானத்தின் பெருமையும்" என்ற வியாஸத்தை அக்காலம் திருவாங்கூர் சமஸ்தானத்துப் பிரிடிஷ் ஸ்தானாதிபதியாக விருந்த ஜனரல் கலன் மிகக் கொண்டாடினர்; இளம் வயதில் சமவயது கொண்ட சிறுவன் எவனாலும் எழுதமுடியாப் பெருமை வாய்ந்ததெனப் பாராட்டினர்.

கலன் அவர்களது மொழிகளால் உத்ஸாக மூட்டப்பட்ட மஹாராஜா அவர்கள், அக்காலம் சென்னையில் பிரக்கியாதியுடன் அம் மஹான் ஜான் ப்ரூஸ் நார்ட்டன் அவர்களால் நடத்தப் பெற்றுவந்த "எதீனியம்" என்னும் சிறந்த ஆங்கில பத்திரிகைக்கு அவர் அடிக்கடி விஷயதானம் செய்து வந்தனர். அவர் முதலில் எழுதிய "திருவனந்தபுர இராஜாங்கச் சருக்கம்" என்னும் வியாஸம் அப்பத்திரிகாசிரியரால் பெருமை வாய்ந்ததாகப் பாராட்டப்பட்டதே மஹாராஜா அவர்களின் புத்தி விசாலத்திற்கு அறிகுறியாகும். இதுமுதல், பத்திரிகைகளுக்கு எழுதுவது மஹாராஜா அவர்களுக்கு, பெரும் வழக்கமாயிற்று. எனினும், அவர் சாஸ்திர ஞானத்தை விருத்தி செய்யக் கொண்ட அவா, அளவுகடந்து ஓங்கி வந்தது. பரிசோதனா முறைகளைக் காண அவர் உள்ளம் த்வித்தது. வான சாஸ்திரம், பூதத்வ சாஸ்திர பரிசோதனை, வஸ்து தத்வ சாஸ்திர விசாரணை, இவை முதலானவற்றை அவர் பேரவாவோடு கற்க முயன்றனர். காலம் செல்லச் செல்ல இயற்கை நூல்களையும், செயற்கை நூல்களையும் தாவரங்களின் வளர்க்கை ஒழுங்கு இவற்றையும் அவர் அறிய உழைத்தனர்.

நிற்க, 1853-௵ அவரைத் தாயினும் சிறப்போடு வளர்த்த பெரிய தாயார் தேகவியோக மடைந்தனர். 1857-ல், அவருடைய ஒரே ஸகோதரி காலஞ்சென்ற திருவனந்தபுரம் மஹாராஜா அவர்களைப் பிரஸவித்த சில நாட்களுக்குள்ளேயே காலமாயினள். மற்றும் 1858-ல் தமது சீலம், ஒழுக்கம், கல்வி, குணம் யாவற்றுக்கும் ஊன்றுகோலாயிருந்து உதவிய உத்தமத் தந்தையை இழக்க நேர்ந்தது அவருக்கு பெருந்துன்ப மாயிற்று. இக்கஷ்டங்களையெல்லாம் கடந்ததும், தமது இருபத்திரண்டாம் வயதில் அவர் தனக்கேற்ற மனைவியைத் தானே வரித்து, மணஞ்செய்து கொண்டனர்.

இதற்குள் திருவனந்தபுரம் சமஸ்தானத்து அரசியலில் விசேஷ மாறுபாடுகள் உண்டாயின. 1857-௵ முடிவில் சமஸ்தானத்துத் திவானாகிய கிருஷ்ணராயர் இறந்தனர்; அவர்க்குப் பதிலாக பிரக்யாதிபெற்ற தஞ்சாவூர் மாதவ ராயரவர்கள் திவானாக நியமனம் பெற்றனர். சமஸ்தானத்துப் பிரிடிஷ் ஸ்தானாதிபதியாகிய ஜனரல் கலன் தமது பதவியைவிட்டு விலகினர்; அவர் ஸ்தானத்தை மிஸ்டர் பிரான்ஸிஸ் மால்ட்பி என்பவர் ஏற்றனர். அவரை ஸ்தானிகராக திருவனந்தபுரம் பெற்றது பெரும் அதிருஷ்டம் என்றே சொல்லலாம். ஏற்கெனவே, சமஸ்தானத்தில் அத்தியாவசியகமாகச் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பல இருந்தன. இவைகளை ஏற்படுத்த மால்ட்பி, மாதவராயர் இவர்களைக் காட்டிலும் சிறந்த சீர்திருத்த நிபுணர்களை இன்னமும் அந்தச் சமஸ்தானம் பெறவில்லையென்றே சொல்லலாம். எனவே, ஊக்கம் குன்றா அவ்விருவரும் தமது தர்மத்தை நடத்தப் பேரவாக் கொண்டனர், அதற்கேற்ப உழைத்தனர். சுவரின்றிச் சித்திர மெழுதுவது போலல்லாது, அவ்விருவரது உழைப்பும் வீணாகாது ஓங்கி விளங்க, இராஜா ராமவர்மா அவர்கள் சமயத்திற்கேற்றவாறு விளங்கியது புகழத் தக்கது. நமது மஹாராஜா அவர்கள் சிறுநாள் முதல், பழகிவந்த விஷயதான வைபவம் அவர்க்கு இச்சம

யம் உதவியதுபோல் யார்க்குதவும்? சென்னையில் அந்நாள் ஜான் புரூஸ் நார்டன் அவர்களால் நடாத்துப்பட்டுவந்த 'இண்டியன் ஸ்டேட்ஸ்மென்' (இந்திய ராஜதந்திரி) என்னும் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியிலும் ப்ருடஸ் என்னும் புனைபெயருடன் "மால்ட்பி யவர்களுக்கேற்ற சில குறிப்புகள்" என்னும் தலைப் பின்கீழ் அந்நாள் யாவர் மனத்தையும் கவரும்படி தமது அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தனர். மால்ட்பி அவர்களும் அக்குறிப்புகளை வெகு ஆவலுடன் கவனித்து வந்தனர். இம்மாதிரி மஹாராஜா அவர்கள் தாம் இன்னாரெனத் தெரியாது வெளியிட்ட அபிப்பிராயங்கள் இராஜாங்கத்தை அநாவசியமான வியவகாரங்களில் தலையிடாதிருக்கக் காப்பாற்றிவந்தன. இதற்குத் தென் திருவநந்தபுரத்தில் தலைதெரியாமல் பாதிரிமார்கள் அக்காலம் நடந்துவந்த சிறு கலகமே சான்றாகும். மற்று, ஸர் ஜார்ஜ் கிளார்க் என்பவருக்கு அதே சமயம் கல்வி விஷயங்களில் மத விஷயப் பற்றில்லாது விளங்குவதே அரசியலின் தருமமாகுமென்று அவர் வாதித்தெழுதிய சிறுநூலை இற்றைக்கும் படிப்பது வீணாகாது. அதேமாதிரி அவர் வடமொழியின் கல்வியேற்றத்தைப்பற்றி நார்ட்டன் துரையவர்களுக்குச் சமர்ப்பித்த துண்டுப் பத்திரிகையும் கவனிக்கத் தக்கது.

1861-ம் வருஷமுடிவில் ராமவர்மா அவர்கள் சென்னை இராஜதானியின் தலைநகரைக் காண விஜயம் செய்தனர். திருவநந்தபுரம் இராஜவம்சத்தினருள் இவரே முதன் முதல் இந்திய இராஜதானியின் ஆங்கில நிர்வாகத் தலைவரை அவரது இராஜாங்கத் தலைநகரிலேயே கண்டவர். வர்மா அவர்களுக்குப் பேட்டி கொடுத்த அக்காலத்துக் கவர்னராகிய ஸர் வில்லியம் டெனிஸன், அவரது பெருமையைக் கவனித்து "இதுவரை கண்ட இந்நாட்டினருள் அவரே சிறந்த புத்திமான். மேலும் அவர் போலவே அவர் உடன் பிறந்தவராகிய சமஸ்தானத்து மஹாராஜா அவர்களும் இருப்பாராகில், திருவனந்தபுரத்து அபிவிருத்திக்கு விசேஷ அறிகுறிகள் இருக்கின்றன வென்றே சொல்லலாம்" என, மால்ட்பி அவர்களுக்கு எழுதினர்; இப்பெருமையைப் பாராட்டி ராமவர்மா அவர்களைச் சென்னை ஸர்வ கலாசங்கத்து அங்கத்தினருள் ஒருவராக உடனே நியமித்தனர். இத்தகைய பெரும் சிறப்பு அந்நாளில் இந்நாட்டில் பிறந்தார்க்கு ஏற்படுவது அபூர்வம். இச்சமயம் ராமவர்மா அவர்களின் நேச கோஷ்டி மிகப் பெரிதாய் விளங்கியது. அதனுள் சென்னை கவர்னரும், அவரது ஆலோசனை அங்கத்தினரும் அடங்குவர். இவர்களுடன் வர்மா அவர்கள் இடைவிடாக் கடிதப் போக்குடன் விளங்கினர்.

ராம வர்மா அவர்களுக்கு யாத்திரையில் வெகுப் பிரியம். தமது சமஸ்தானத்துள் மலை, அருவி, ஆறு, கடல் முதலிய எல்லா மூலை முடுக்குகளும் அவர் கண்டு களித்தனர். அவர் கண்ணில் படாதது ஒன்று மில்லை. இடிந்த கோபுரம், மழுங்கிய சாஸனம், கிலமான கோட்டை இவைபோன்ற காலகதியின் குறிப்புக் குறிகள் அவர் கண்ணில் படாதிருந்த தொன்றுமில்லை: 'வைசாகம் திருநாள் வழிபடாப்பொருள் ஏது?' எனவே, ஒவ்வொரு கிராமத்து மக்களும் இந்நாளும் கூறுவது வழக்கம். சமஸ்தானத்து ராமவர்மா அவர்களை வைசாகம் திருநாளென்றே இன்றும் அழைக்கப்படுவது இங்கு குறிப்பது தவறாகாது. இவ்வாறு செய்த ஒவ்வொரு யாத்திரையிலும் அவர் தமது கல்வியையும் கேள்வியையும் விருத்திசெய்ய முயற்சித்தனரென்பது, அவர் அவ்வச் சமயங்களில் தம்மூருக்குத் திரும்பும்போது கொண்டுவந்த செடிகள், விதைகள், காட்டுக் கிளைகள், கல் மணிகள், தட்டாரப்பூச்சிகள், அடைக்கப்பட்ட பறவைகள், பலவித ஊரும் பிராணிகள் இவைகளும், தாம் கண்ட காட்சியின் அதிசய வர்ண படங்கள், தம் நாட்டில் உண்டாகும் மூலிகைகளின் சித்திரங்கள், இவைமுதலானவைகளும் நன்கு வெளியிடும். இவ்வாறு தாவரங்கள், பிராணிகள் இவற்றின் அளவு கடந்த தொகுதியிலிருந்து சிலவற்றை அயல்நாட்டு இயற்கை நூல் தத்வஞானிகளிடம் வேறு சிலவற்றிற்காக மாற்றிக் கொள்வதும் அவரது வழக்கமாக இருந்தது. அக்காலத்து பிரக்யாதி பெற்றிருந்த ஸர் ஜோஸப் ஹூக்கர், டாக்டர் ஆண்டர்ஸன், டாக்டர் கிங், டாக்டர் பென்னட், கர்னல் பக்கின், டாக்டர் த்வைட் என்னும் பல நாட்டு இயற்கை நூல் ஆசிரியருடன் அவர்

தமது அபிப்பிராயங்களை இடைவிடாது வெளியிட்டுக் கொண்டு விளங்கினர் என்பது அவர்க்குக் கல்வியிடத்திருந்த பேரவாவைப் புலப்படுத்தும்.

மேலும், அவருக்கு இயற்கை சாஸ்திரத்திலிருந்த பரிசயம், அதை அனுபவ வழியில் உபயோகப்படுத்த ஆசையற்று விளங்கவில்லை. தாவர நூலில் அளவு கடந்த அவாக்கொண்ட அவர் விவசாயத்திலும் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தனர். அவர், தாமே தமது முயற்சியால் நிர்மாணித்த திருவனந்தபுரத்து இளைய அரசரது அரண்மனையாகிய வடக்கக் கொட்டாரத்தைக் கண்டவரெவரும் அதனுள் பரிசோதனைக்கென்று அவர் தனியாக ஏற்படுத்திய வியவசாயப் பண்ணையும் அதில் நிறைந்து விள்ங்கிய பலவிதமான, அவர் தமது கைப்பட தாமே நிர்மாணித்த சிறந்தகருவிகளையும் ஒருநாளும் மறவாரென்பது திண்ணம். திருவனந்தபுர சமஸ்தானத்துள் டாபியோகா என்னும் (Tapioca) பயிரை முதன் முதல் நடச்செய்து அதை அந்நாடு முழுவதும் செழித்து விளங்கச்செய்ததற்கு அவரே காரணம் அதற்கு அந்நாடு அவர்க்கு என்றும் கடமைப்பட்டுள்ளது. இக்கிழங்கின் உபயோகத்தையும் அதன் பலவித சிறந்த குணங்களையும் முற்றுமுணர்ந்தே அவர் அதைத் தம்நாட்டில் செழித்தோங்க உழைத்தனர். மழையற்று, நீரற்று விளங்கும் காலத்து நெஞ்சுலர்ந்து தவிக்கும் ஏழைகளுக்கு இக்கிழங்கு உதவுவது போல் அந்நாட்டில் எதுவும் உபயோகப்படாதது கண்டு அவ்விளவரசர் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் அம்மூலத்தின் சிறப்பையும், அதைப்பயிரிடுவதால் க்ஷாமகாலங்களில் ஜனங்களுக் கேற்படும் சௌகர்யத்தையும் வற்புறுத்திவந்தனர். நிற்க, வர்மா அவர்கள் வேறு பல வெளி நாட்டுப் பயிர்களையும் தம் நாட்டில் செழித்து விளங்கப் பரிசோதனைகள் நடத்தி வந்தனர். அவைகள் அவர்மாட்டுத் திருப்திகரமாக விளங்கியபோதிலும், அவற்றை ஜனங்கள் பொதுப் பயிராக ஏற்கவில்லை.

இத்தகைய பரிசீலனங்களினால் மனம் விசாலித்து விளங்கிய இராமவர்மர் வேறு பல துறைகளிலும் தமது ஞானத்தைச் செலுத்த ஆவல் கொண்டனர். எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம் இவைகளைக்கொண்டு சித்திரமெழுதல், தந்தவேலை, மரவேலை, இழைப்பு வேலை, துணிகளில் அச்சிடல் முதலானவை அவர் மனதைக் கவர்ந்த வற்றுள் சிலவாகும். முக்கியமாகச் சித்திரம் எழுதுவதில் சிறுநாள் முதல் அவர்க்கு வழக்கமாகி, வர வர, அதில் அவர்க்குத் தீர்ந்த கைப்பழக்கம் உண்டாயிற்று. ஆனால் படித்தலும், எழுதலும் அவர் காலத்தை ஸதா கொள்ளைகொண்டபடியால் இத்துறையில் அவர் தம் மனதை முழுதும் செலவிடமுடியா தாயிற்று. அவர் கல்வி சொல்லும் தரத்தன்று; அல்ப விஷயம் முதல், யாவர் மனதையும் கவரும் பெருங் கேள்விகள்வரை, அவை பரவி விளங்கின. அவர் பேசும்போது பெரியோரது வாக்கைப்பற்றி வெளியிட்ட சிறுசிறு மொழியும், குன்றிலிட்ட விளக்குபோல் யாவற்கும் விளக்கம் காட்டும். அவர் எழுதும் நடை நாள் ஏற ஏற எளிமையும், நயமும் அளவுகடந்த பொருளும் இயற்கையிற் பொதிந்து விளங்கின. டென்னிஸன், ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் என்னும் ஆங்கில நூலாசிரியர்களிடம் அவருக்கு அளவற்ற அன்பு. பொதுப்படிப்பை விருத்திசெய்ய வேண்டுமென்று இந்தியாவுக்கு உழைத்த, அந்த ஆங்கில பாஷையின் இன்ப நடையை தனக்கென்றே சுமந்து பெருமையுடன் விளங்கிய மேகாலே பிரபு அவர்களிடம் அவர்க்கு அளவற்றமதிப்பு; அவரது நடையையேதாமும் பின்பற்றினரென்பதும் அவரது முதன்முதல் ரசனைகள் வெளியிடும். ஆனால் அவ்விதமான பார நடையில் எழுதுவதில் சலிப்புண்டாகி இயற்கையாக யாவரும் உணரும்படி செம்பாகான நடையில் எழுதுவதே தமக்குத் தகுந்ததென அவர் வரவரத் தெரிந்துகொண்டனர். "மானிட ஜன்மத்தின் சிறப்பு" "இயற்கைச் செயற்கை உறவு" "நமது ஒழுக்கம்" "நமது தொழில் நிலை" இவை முதலாகிய உபந்நியாஸங்களும், துலாபாரம், ஹிரண்ய கர்ப்பம், முறை ஜபம் முதலிய சடங்குகளைப் பற்றிய சிறு புத்தகங்களும் அவரது பிற்கால நடையின் பெருமையையும், அவர் மனோபாவத்தின் வன்மையையும் வெளியிடும்.

(அடுத்த சஞ்சிகையில் முடிவு பெறும்.)

தேகப்பயிற்சியும் ரக்த விருத்தியும்

PHYSICAL EXERCISE & BLOOD CIRCULATION

நீங்கள் உங்கள் சரீரத்தின் உட்புறத்தைப் பார்த்து அங்கே நடந்தேறிவருகிற செயல்களைக் காணும்படியா யிருக்குமானால் இங்குமங்கும் அசைவதனால் நமக்கு நன்மை உண்டாகுமோ என்று நினைப்பீர்கள்.

ஹிருதயமானது இரத்தத்தை வெளியிடுவதையும், சுவாஸாசயங்கள் ஊதுவதையும், இரத்தம் வேகமாய்ப் பாய்ந்து ஓடுவதையும், நரம்புகள் இழுப்பதையும், வழி யடைக்கும் ஜவ்வானது திறந்து மூடிக்கொள்வதையும், மாமிசங்களும் கொழுப்புக்களும் உப்புவதையும் சுருங்குவதையும் கண்டால், நீங்கள் பயந்து "இனி நாம் இருந்த விடத்தைவிட்டு அசையக்கூடாது, ஓரேயிடத்தில் நிலையாயிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் நமது தேகத்துள் ஏதாவதொன்று உடைந்துபோம், அல்லது ஏதாவது அசையாமல் நின்றுபோம்" என எண்ணுவீர்கள். மேலும் ஒரு கடிகார யந்திரத்தை அசைப்பதனாலும் உருட்டுவதனாலும் அதற்கு என்ன குணம் உண்டாகுமோ, அதே குணந்தான் நாம் ஓடுவதனாலும் குதிப்பதனாலும் நமக்குண்டாகுமென்றும் நினைப்பீர்கள். அது அப்படியே யிருந்து நாம் நம் ஆயுள் முழுதும் ஓரிடத்திலேயே நிலையாய் நிற்கவேண்டுமென்றிருந்தால் நமக்கு எவ்வளவு துக்ககரமாயிராது.

நாம் அப்படியிருப்பதற்காகப் படைக்கப்படவில்லை. எப்போதும் சுறுசுறுப்பாய் உழைத்துத் தனக்குப் பணிவிடை செய்வதற்காகவே நம்மைக்கடவுள் உண்டாக்கியிருக்கிறார். ஆதலால் மனித தேகங்களாகிய யந்திரங்கள் மனிதர்கள் செய்யக்கூடிய மற்ற யந்திரங்களைவிட மிகவும் சிறந்ததாயும் நுட்பமாயும் இருந்தாலும், அதை அலட்டுவதே அதற்கு எவ்வித நன்மையையும் உண்டாக்குகின்றது; அதனால் நமது காரியங்களுக்கு மிகவும் ஒத்ததாயிருக்கின்றது.

சிறுபிள்ளைகள் குதித்து விளையாடுவதையும், பந்தயம் ஓடுவதையும், குண்டாங்கரணம் போடுவதையும், இன்னும் அநேகவிதமாய்ப் பயிற்சிசெய்வதையும் காண்கிறோம்; இவ்வகை விளையாட்டுகளிலெல்லாம் தேகம் எவ்வளவு அலண்டுபோகின்றது! ஆயினும் அதிநுட்பமான ஹிருதயம் யாதொரு கெடுதியுமில்லாமலிருப்பதுமன்றி, முன்னிலும் அதிகச் சீர்மையாய்த் தன்வழக்கப்படி அடித்துக் கொள்கின்றது. சுவாஸாசயம்முதலியமற்றஉறுப்புக்களும் அதனால் எவ்விதமான தீங்குமின்றித் தத்தம் வேலையை நன்றாய் நடத்தும். மேலும் அப்படி அலட்டினதால் அந்த யந்திரங்களெல்லாம் கொஞ்சம் வேகமாய் ஓடத்தலைப்படுமானால் அது நமக்கு நன்மை செய்யுமேயன்றிச் சிறிதும் தீங்கு செய்யாது. நாம் நமது அவயவங்களை அலட்டுவது ஹிருதய முதலிய உறுப்புகளைத் துரிதமாய் வேலைசெய்யும்படி செய்வதனாலேதான் நமக்கு அவ்வளவு நன்மையாகின்றது. அப்படிப்பட்ட தேகப் பயிற்சிகள் வெளிப்புறங்களில் செய்தால் மிகவும்உத்தமம்.

எப்போதும் உள்ளேயே யிருந்து அதிலும் அசையாமல் உட்கார்ந்திருப்பவர்கள் வியாதியால் வெகுவாய் வருந்துவார்கள். வெளிப்புறங்களில் நடந்து உலாத்துகிறவர்களுக்கு அது ஒரு போதும் உண்டாகாது.

வெளியிலேயே போகாமல் சிலர் எப்போதும் உள்ளேயே உட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள்; அதனால் அவர்களுக்குப் பலவிதமான கெடுதிகளுண்டாகின்றன. ரக்தம் ஓடுகிற வேகம் மட்டிட்டுப் போகின்றது. அதனால் ஜீவாதாரமானவைகளும் தத்தம் வேலையில் மந்தப்படுகின்றன. ஆகாரம் ஜீரணமாகாமல் பசி மந்திக்கின்றது. இராக்காலங்களில் அமைதியாய்த் தூக்கம் வருவதில்லை. அதனால் பகலிலும் உடம்பு சுறுசுறுப்பா யிராமல் மந்தமாகவே யிருக்கும். அவர்களுக்கு அடிக்கடி குளிர்வரும். கீலுக்குக்கீல் ரக்தம் கட்டிக்கொண்டு பிடிப்பு உண்டாகும். சிலர் அதற்காக வைத்தியன் வீட்டிற்கு ஓடி மருந்து வாங்கித் தின்பார்கள். அதுவும் தேகத்திற்குப் பலவீனம் செய்யுமேயன்றி நன்மை செய்யமாட்டாது. அந்த நோயை நிவர்த்தி செய்யத்தக்க மருந்து தேகப்பயிற்சியேயன்றி வேறொன்றுமல்ல. சில எளிய ஜனங்கள் எப்போதும் வெளியிலேயே வேலை செய்துகொண் டிருக்கிறார்களே, அவர்கள் எவ்வளவு வலிமையும் சுறுசுறுப்புமுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களுக்கு நோயென்பது ஒருபோதும் உண்டாகிறதில்லை.

ரக்தம் வேகமாய் ஓடுவதற்குத் தேகப்பயிற்சி எப்படிக் காரணமாகின்றது என்கிறீர்களோ?

நமது தேகமும், அவயவங்களும் அசைந்தால் தேகத்திலுள்ள மாமிசங்கள் தமக்குள்ளேயிருக்கிற ரக்த நாடிகளை அமுக்குகின்றன. அதனால், தோலினாற் செய்த தண்ணீர்க்குழாயை அமுக்கினால் தண்ணீர் எப்படி வேகமாய் ஓடுமோ அப்படியே ரக்தமும் வேகமாய்த் தேகமுழுதும் பரவத் தலைப்படுகின்றது. ஹிரதயத்தைவிட்டு வெளியேபோன ரக்தம் மறுபடி திரும்பி ஒருபோதும் ஹிருதயம் வந்து சேராது. ஆதலால் நாம் அசைந்தாலும் நடந்தாலும் ரக்தமானது எதிர்முகமாய் ஓடும்படி ரக்தநாடிகள் நசுங்குகின்றன.

ரக்தம் வேகமாய் ஓட ஓட, மற்ற யந்திரங்களும் வேகமாய் உழைக்கத் தலைப்படுகின்றன; ஹிருதயம் தீவிரமாய் அடிக்கும். தன்னிடத்தில் ரக்தம் வந்து சேரும்போதெல்லாம், அந்தச் சுத்திசெய்ய போதுமான காற்றைத் துரிதமாய்ச் சுவாஸாசயம் ஏற்றுக்கொள்ளும். சுத்தமான ரக்தம் துரிதமாய்த் தேகமெங்கும் பரவிக்கெட்டுப்போயிருக்கிறவஸ்துக்களையெல்லாம் சுத்தி செய்து, தான் பிரவேசிக்குமிடத்தையெல்லாம் துரிதமாய்ப் பலப்படுத்தும். இவ்வாறு ரக்தம் வேகமாய் ஓடுவதனால் தேகத்தின் ஒவ்வொரு அவயவத்துக்கும் பலமும் உற்சாகமும் உண்டாகின்றது. ஆகாரம் துரிதமாய் ஜீரணமாகும். குடல்கள் அன்னப்பாகினின்றும் அன்னசாரத்தை நன்றாய் வேறாகப் பிரிக்கும். நன்றாய் வேர்வையுண்டாகும். அதனால் பசிதீபனமும் நன்றாய் உண்டாகும். இதனாலேதான் சௌக்கியமாய் வீட்டில் உட்கார்ந்திருப்பவர்களைவிடப்பகற்பொழுதெல்லாம் வெளியில் உழைப்பவர்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாய் எடுக்கின்றன. ஏனெனில், அவர்களுக்குத் துரிதமாய்ச் சுவாஸமுண்டாகி வேர்வையும் அதிகமாய் உண்டாகிறபடியால் உண்ட உணவு சீக்கிரத்தில் ஜீரணமாய் விடுகின்றது.

இவ்வகையானசரீரப்பயிற்சியைவீட்டுக்குள் செய்வதைவிட, வெளிப்புறங்களில் செய்வது மிகவும் ஆரோக்கியமானது. எப்படியெனில், சுத்தமான வெளிக்காற்றிலுள்ள சுவாஸவாயு ரக்தத்தில்அதிகமாய்வந்து கலக்குமாகையால், ரக்தத்திற்கு உயிர்ப்பிக்கிற சக்தி அதிகமாயுண்டாகும்.

வருந்தியுழைப்பதும் பயிற்சி செய்வதும் தேகத்திற்குப் பலம். தேகத்தில் எந்தப் பாகம் வேலை செய்கிறதோ, அவ்விடத்தில் புதிதாய் ரக்தம்போய்ச் சேர்ந்து அதைப் பலப்படுத்துகின்றது. கருமானுடைய கைகளைப் பாருங்கள். எவ்வளவு உரப்பாயும் நீண்டுமிருக்கின்றன? தேசசஞ்சாரம் செய்கிறவர்கள் எவ்வளவு பலசாலிகளாயிருக்கிறார்கள்? எப்போதும் அசையாமல் வீட்டிலியே உட்கார்ந்திருப்பவர்கள் ஒரு அடி கூட எடுத்துவைக்க மாட்டாமல் எவ்வளவு பலவீனப்பட்டிருகிறார்கள்? ஆதலால் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் நன்றாய்ப் பிரயாசப்படும்படி செய்வதைவிடத் தேகத்திற்கு ஆரோக்கியமானது வேறொன்றுமில்லை.

நமக்கெல்லாம் நமது தேகசௌக்யத்திற்குத் தகுந்ததான நல்லவியாபாரங்கள் கிடைப்பது அரிது. நமக்கு இயற்கையான வியாபாரங்களை நன்றாய் நடத்திவரவேண்டும். அதிகமாய் வெளியில் திரிவதே தொழிலாகக் கொண்டவர்களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. ஓரிடத்திலேயே உட்கார்ந்தபடி வேலை செய்கிறவர்கள் அநேகரிருக்கிறார்களல்லவா? அவர்கள் அதிகமாய் ஒன்றும் செய்யாவிட்டாலும், ஒழிந்த வேளைகளில் கொஞ்சதூரமாவது உலாத்திவர வேண்டும். அவகாசமிருக்குமானால், இராக்காலத்தைவிடப் பகற்பொழுதில் பயிற்சி செய்வதே நல்லது. வயிறு நிம்பப் புசித்தவுடன் ஒருவரும் உடம்பை அதிகமாய் அலட்டக்கூடாது.

பஞ்சரத்தினத்தைப்பற்றி இந்து நேசன் எழுதுவது.—இவ்வினிய புத்தகம் ஸ்திரீ ரத்னங்கள் ஐவரின் சரித்திரத்தை அழகாக எடுத்துரைக்கின்றது. இவர்களுடைய சரித்திரங்களினால் ஸத்தியப் பிரவர்த்தி, தர்மசிந்தனை, கற்பு முதலிய அரியகுணங்கள் போதிக்கப் படுகின்றமையால், இவைகளை நமது சிறுவர்களுக்கு இளம்பிராயத்திலேயே கற்பிப்பது பெரு நன்மை விளைக்கும். சிறுவர்களுக்கு உத்ஸாகம் அதிகப்படும்பொருட்டு இந்தப் புத்தகத்தில் அழகிய உருவப்படங்கள் ஐந்து, சந்தர்ப்பங்களுக்குத்தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனைத் துரைத்தனத்தாரும் பள்ளிக்கூடங்களுக் கேற்றதென்று அங்கீகரித்திருக்கிறார்கள். நல்ல காகிதத்தில் சிறப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. விலை அணா **12**.

உறவுக்கு ஒன்பது படி, ஊருக்குப் பத்துப்படி.

மதம்

RELIGION

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியி னதித்திரள்போல் வயங்கிற் றம்மா"

—தாயுமானவர்.

"தலைபலவாய்ப் பெயர்பலவா நதிக ளெல்லாஞ்
சாகரத்தி னொரு நீராந் தன்மை போலப்,
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டவொரு பொருளினையாம் பணிதல் செய்வாம்"

—அஞ்ஞவதைப்பரணி.

தள்ளாடித் தத்தளிக்கும் மனதிற்கு ஆறுதலையளிப்பது மதமே. இப்பிரபஞ்ச வியல்பையும், அமைப்பையும், உற்பத்தியையும் சாமான்யர்களும் அறியும்படிக்கு, எளிதிற் தெரியப்படுத்துவது மதமே. துஷ்டர் சுகிப்பதும், சீரியர் துக்கிப்பதுமான விபரீத விஷயங்களைப்பற்றி நினைக்கும்பொழுது மனதில் உண்டாகும் சஞ்சலத்தையும், ஐயத்தையும், இங்கு இப்பொழுது ரமித்திருக்கும் துச்சர்கள் பின் வருந்துவார்களெனவும், அநியாயமாய் அவதிப்படும் மேலோர்கள் பின் தக்க கைமாறு பெற்றுச் சுகித்திருப்பார்களெனவும் உறுதிமொழி கூறி நிவர்த்திப்பது மதமே. கடவுளில்லையெனவும், ஆத்மா அநித்யமெனவும், சரீரம் அழிந்தபின் ஜீவன், தன் மேன்மை குணத்தை இழந்து, நம்மைச் சுற்றி அளவளாவி வியாபித்து நிற்கும் வெளியிற் கலந்து மறைந்து போகிறதெனவும், கொலைஞன், சன்மார்க்கன், மூடன், ஞானி, இவர்கள் முடிவில் ஓரே கதியை அடைவார்களெனவும், இன்னும் இத்தகைய அநேக வீண் கோட்பாடுகளையும், வார்த்தைகளையும் உண்டுபண்ணிச் சாதித்துவரும் சிற்றறிவாளரின் வாயைக் கட்டி மெய்ப்பொருளைக் கற்பிப்பது மதமே. ஜயாபஜயம், லாப நஷ்டம், இடுக்கண் இடையூறுகள் முதலியவைகளாற் தாக்கப்பட்டு மனச்சோர்வடைந்து மூர்ச்சித்து வீழா நிற்கும் துர்ப்பாக்கியர்கள்முன் விசுவாசமென்ற நக்ஷத்திரத்தை வைத்து, அத்துக்கங்களை நீக்குவது மதமே. நீதிநூற்களையும், நெறிகளையும், சுகாதார விஷயங்களையும் சாமான்யரும் சுலபமாய் அறியச் செய்வது மதமே. தள்ளாடும் விருத்தாப்பியர்களுக்கு ஊன்றுகோல் துணையாக நின்று உதவுவதுபோல், வியாதிகளினாலும் ஆசாபங்கங்களினாலும் உண்டாகும் வியாகூலங்களை அப்புறப்படுத்தி மனவமைதியை உண்டுபண்ணுவது மதமே. ஒருவன் தன்னாற் கூடியவரையிலும் பிறர்க்கு உதவி புரிந்துகொண்டும், வாணாளை வீணாளாகக் கழிக்காது கல்விகற்று ஞானம்பெற்றும், தர்மவிதிகளை அறிந்து அவற்றை பரவச்செய்துகொண்டும், மனத்தை வீணெண்ணம், வீணாசைகளிற் செலுத்தாது ஊக்கத்தினால் தன் நியமங்களைத் தெரிந்து, ஊக்கத்துடன் அவைகளைச் செய்துகொண்டும் இருந்துவந்தால், இகபரசுக இன்பங்களை அனுபவிக்கலாமெனக் கூறித் தைரியப்படுத்துவது மதமே.

ராஜ்யங்கள் அழியலாம்; நாகரீகம் மாறிக்கொண்டு வரலாம்; ஆனால், மதம் ஒரு பொழுதும் அழிவது மில்லை, மாறுவது மில்லை. கடவுளை மறந்து, அதர்மங்களைச் செய்து வரும் புன்மாக்களை நல்வழிப் படுத்தும்பொருட்டுச் சில புத்திமான்கள் தோன்றி நன்மை பரவச்செய்து வருவதை நாம் நன்கு அறிவோம். இத்தகையர்கள் கடவுளின் அவதாரங்களென அழைக்கப்பட்டு வருபவர்கள். காலம் இடம் மனிதர்களின் பகுத்தறிவுகளுக்கு இயைந்தவாறு அறநெறிகளைப் புகட்டிச் சீர்படுத்தி வருவதால் பற்பல மதங்கள் இருப்பதுபோலத் தோன்றுகின்றது. ஆனால் உண்மையில், மதம் ஒன்றே; அதாவது, மத விஷயங்கள், பற்பல விதங்களில் தெரிவிக்கப்பட்டபோதிலும், செம்மையாக ஆராய்ந்து பார்த்தால், ஒன்றேயாகும். மனிதன் மதப்பிராணி யாதலால், அவன் இங்கு இருந்து உலாவும் வரையிலும், மதமும் நின்று நிலவுமென்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. மனிதனால் உண்டுபண்ணப்பட்ட நடை, உடை, பாவனைகளும், நாகரிகமும் மாறிக்கொண்டிருப்பது உண்மையே. ஆனால், அவைகளை உற்பவிக்கும் இயற்கைச் சுவபாவம் வேறடைவதில்லை. இதுபோலவே, மதத்தின் தோற்றங்கள் வெவ்வேறாகக் காணப்பட்டபோதிலும், அதிலுள்ள உண்மை வஸ்து மாறுவது மில்லை; தேய்ந்து அழிவதுமில்லை. எங்ஙனம் சுகஜீவ சிந்தனைகள், அல்லது போக இச்சைகள்

உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?

விருத்தியாவதால், நடை, உடை, பாவனைகளும், இன்ப சுகங்களும் வளர்ந்து பெருகி வருகின்றனவோ, அங்ஙனமே மனிதனுடைய ஞானமும் அறமும் நாட்குநாள் மேலோங்கி வளர்வதால், அவ்வளர்ச்சிக்குத் தக்கபடி அவனுடைய மதக்கொள்கைகள், அல்லது அபிப்பிராயங்களும் மாறி வருகின்றன. அபிமானமும், அகந்தையும், அனுத்ம விஷயங்களில் சங்கற்ப விகற்பங்களும் அற்றிருப்பவரும், ஜீவகாருண்ணியம், பாசவைராக்கியம், ஈசுவரபக்தி, பிரமஞானமென்னுங் குணங்களை நிரம்பப்பெற்றவருமான ஜீவன்முத்தர், அல்லது தத்வஞானிகள் மதத்தைத் தூஷித்துத் தள்ளிவரலாம். ஆனால், அக்குணங்களை உடைத்தாயிராத சாமான்யர்களுக்கு, மதம் இன்றியமையாததாகும். மதம் எங்ஙனம் இன்றியமையாததென்பதைப் பின் எழுதுவோம். இவ்வுலகிலுள்ளோ ரனைவரும் மெய்யறிவினோர்களானால், மதம் ஒருக்கால் மறையலாம். இத்தகையதை எதிர்பார்ப்பது, விதையை விதைத்தவுடன் கனியைப் பெறவேண்டுமென விரும்புவதைப் போலாகும்.

மனிதனுடைய ஐம்பொறிகளுக் கெட்டாததும், அவனுடைய எண்ணம், விருப்பம், காரியங்களுக்கு எதிராகவாவது, அல்லது அலக்ஷியத்துடனாவது நடக்காததும், அறத்தை ஸ்தாபித்து, இவ்வுலகினரைச் சுகித்திருக்கச் செய்வதற்கு வேண்டிய நற்குண நன்னடத்தைகளை உடையதுமான ஒரு அல்லது பல ஜீவவஸ்துக்களின் மீதுள்ள விசுவாசமே மதத்தின் இலக்கணமாகும். மனிதன் முன்பின் பார்த்துத் தீவிரமாய் ஆலோசித்தறியும் சக்திபொருந்தியவனாதலால், தன்னைச் சுற்றிலுமிருப்பவைகள், சதாகாலமும் மாறி மாறி வருவதையும், தன் சாமான்ய அறிவினால் தெரியப்படாத இடங்களிலிருந்து மழை, மின்னல், இடி, இன்னு மிவைபோன்ற இதர விசித்திர சம்பவங்களையும் பார்த்து, இவைகளைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறான். இவ்விநோத காட்சிகளும், தன்னுடைய அந்தக்கரணமும், இவ்வுலகத்திற்கப்பால் ஒரு ஜீவ வஸ்து இருக்கிறதெனவும், அவைகள் இஜ்ஜீவ வஸ்துவின் செயற்களெனவும் அறிவிக்கின்றன. மேலும், ஞான வளப்பத்தினாலும், பரந்த பயிர்ச்சியினாலும் தன்னைச் சுற்றிச் சம்பவிப்பவைகளை உற்றுணர்ந்து நன்கு அறிகையில், அவைகள் இறுதியில் நன்மையையே பயப்பன வெனவும், வெவ்வேறாகவும், விபரீதமுமாகவும் தோன்றுபவைகள், உண்மையில், இணக்கம் பொருத்தம், அல்லது ஒழுங்கு பொருந்தியவை யெனவும், அந்நாளில் நியமிக்கப்பட்ட விதிகளினுதவியினால் ஒவ்வொன்றும், நிலை குலையாது, அதனதன் நியமங்களைச் சரியாகவும், பூரணமாகவும், ஒற்றுமையுடனும் செய்து வருகின்றனவெனவும் இவ்விணக்கம், அல்லது ஒழுங்கில்லாவிடின், மரங்களும் மலைகளும், பொடிபட்டுச் சந்திர சூரியர்கள் கதி தடுமாறி, பூமியும் வானமும் மேல் கீழாகி ஜீவப்பிராணிகள் யாவும் உள்ளங் கலங்கி மெய்நடுங்கி ஒன்றுந் தோன்றாது அலமந்து வாடி, ஞானம் அறம் என்பவைகளில்லாது, இப்பிரபஞ்சம் பாழாகி விடுமெனவும் அறிகிறான். அறிந்தபின், முற்கூறியவைகள் அல்லோலக் கல்லோல நிலையை யடையாது பாதுகாத்து வருபவன் யார்? இவ்வுலகாதிகளைப் படைத்தவன் ஒருவன் உண்டென்பதற்குப் பிரமாணமென்ன? அவன் எத்தகைய இலக்கணம் வாய்ந்தவன்? என்ன லக்ஷணங்கள் பொருந்தியவன்? என்ற வினாக்கள் அவனுடைய மனதி லுதிக்கின்றன. இவைகளைப் பற்றித் தீவிரமாய் அறியும் பொருட்டு, தத்வஞான புத்தகங்களை விரித்துப் பார்க்கின்றான். பார்க்கையில், பின்வரும் வாக்கியங்களைப் படிக்கின்றான்.

“அக்கடவுள் அசேதன உருவமாகக் காணப்படுபவனல்லன். இந்த ஸ்தூல வுலகம் போல் தோற்றப்படுபவ னல்லன். காண்பதற்கெல்லாம் அப்பாலாய், கேட்பதற்கெல்லாம் அதீதமாய் நிற்பது அவனுடைய உண்மை நிலை. அறிவினுள் அறிவாய், ஆன்மாவினுள் அந்தரான்மாவாய் முடிவிடம் அறியப்படாத வியாபக முடையதாய், சர்வசக்தி நிறைந்து ஆநந்தம் நிரம்பிய சாகரமாய் விளங்கும் அம்முழுமுதற் கடவுளை உற்றுணர்ந்து அறிவதற்கு அவன் வல்லபமின்றி எவரால் முடியும்?

நித்தியமாய்நின்மலமா நிட்களமாய்நிராமயமாய்
நிறைவாய் நீங்கா
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய
சுடரா யெல்லாம் நிறைச்]

உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்.

வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெரு
சிந்தை செய்வாம்.” வெளியைச்]

இவைகளைப்படித்துக் கிரஹிக்க முடியாது வருந்துகிறான். இவைகள் தீர்ந்த ஞானிகளின் கொள்கைகளாதலால், இவைகளைச் சாமானியன் தெளிவாக அறிதல் சுலபமல்ல. ஆதலினாற்றான், சிற்சில கல்விமான்கள், அறிவும் அறமும் நிறைந்ததும், மானிடவுருவத்தை யொத்ததுமான ஒன்று அல்லது பல விக்கிரஹங்களைப் பிரதிஷ்டித்து, இவைகளை அவன் முன்னிருத்தி, இவைகளை அக்கடவுளின் அம்சங்களெனக் கூறி, இவைகளையே மனிதன் வழிபட்டு வந்தால் இம்மை மறுமைப் போகங்களை அனுபவிக்கலாமெனச் சாதித்து அவன் மயக்கத்தைத் தெளிவிக்கின்றனர்.

தன்னம்பிக்கை, தன்னடக்கம், நன்மை பயத்தல், பிறனில் விழையாமை, வெஃகல், புறங்கூறல், அழுக்காறின்மை, விருந்தோம்பல், இனியுவை கூறல், பொறுமை, செய்ந்நன்றிமறவாமை முதலிய அறவிஷயங்களை, “தெய்வந்தொழு; சத்தியம் பேசு; தர்மஞ்செய்; சூதாடற்க; கட்குடியற்க” என, சாமான்யர்கள் எளிதில் அறிந்து, சரியாக அநுட்டித்து வரும்படி சிறு வாக்கியங்களில், ஆஞ்ஞை ரூபமாக வெளிப்படுத்தி வருகிறார்கள் மதஸ்தாபனஞ் செய்வோர்.

மனிதனே இதர ஜீவ ஜந்துக்களைவிட எவ்விதத்தினும் சிறந்தவனாகக் காணப்படுகிறான். இதரப் பிராணிகளிடமில்லாத அரிய பெரிய வஸ்து ஒன்று மனிதனிடமிருக்கின்றது. இவ்வஸ்துவினாற்றான் முன்பின் சிந்தித்துப் பார்க்கவும், சாதாரண அறிவுக்கும், பொறிகளுக்கும் புலப்படாதவைகளைப்பற்றிச் சிந்திக்கவும், தான் கண்டவை, கேட்டவை, கற்றவைகளையெல்லாம் ஒருங்குதிரட்டி, அவைகளிலிருந்து உண்மையை ஆராய்ந்தறிவதற்கும் வேண்டிய சக்தியைப் பெறுகிறான். எங்ஙனம் ஜீவனின் தோற்றத்தினால் ஜடப்பொருள்கள் மேன்மை யடைகின்றதோ, அங்ஙனமே இவ்வரியதும் பெரியதுமான பரமார்த்தவஸ்து, ஜீவாத்மா, அல்லது பிரமசைதன்னிய மென்பதனால் ஜீவன் உன்னத நிலையை யடைகின்றது. ஜீவனுடைய வளர்ச்சியினால் ஜடப்பொருள்களின் உருவம் முதலியவைகள் மாறி, அவைகள் மேலடைவதைப்போல், இப்பரமார்த்த வஸ்துவின் தோற்றத்தினாலும், வளர்ச்சியினாலும் ஜீவன்ஒப்புயர்வற்ற தன்மையைப்பெற்று மோக்ஷமடைகின்றது. ஜீவனில்லாது இப்பரமார்த்த வஸ்து உதிப்பதில்லை; இப்பரமார்த்த வஸ்து தோன்றிவளராது; ஜீவன் பிரகாசித்து மேம்பதவியை யடைவதுமில்லை. பிரகிருதி சாத்திரப் பயிர்ச்சியினால் நாம் இம்மைப் போகங்களைப் பெற்று அநுபவிப்பதைப்போல், தத்வஞானத்தினால் ஜீவாத்மாவை அறிந்து வீடுபேற்றை யடையலாம். துர்நடத்தைகளாலும், அலக்ஷியத்தினாலும் எங்ஙனம் உறுப்புக்கள் சக்தியற்று, உபயோகமற்றதாய் விடுகின்றனவோ, அங்ஙனமே தீய வெண்ணங்களினாலும், பேராசையினாலும் மனம் பாழடைந்து அப்பரமார்த்த வஸ்துவைப்பற்றிய எண்ணமும் சீர்கெடுகின்றது. சரீரத்திலுள்ள அவயவங்கள் கெடாதிருப்பதற்குத் தேகப் பயிற்சி முக்கியமாயிருப்பதைப்போல், அப்பரமார்த்த வஸ்துபாழாகாமலிருப்பதற்கு நற்சிந்தனை, நற்சொல், நற்செயற்களைநினைத்துக்கூறிச்செய்தல் இன்றியமையாதது. இவைகளே மனதைத் தெளிவித்து, இருதயத்தைச்சுத்திசெய்து, ஜீவனையும்பரமார்த்த வஸ்துவையும் பிரகாசிக்கச் செய்துமுக்திபெற உதவுவன. இங்ஙனஞ் செய்பவர்கள், அவர்கள் புத்தியினால் அங்கீகரிக்கப்பட்ட இன்ப சுகங்களடங்கிய சுவர்க்கமொன்றை உண்டுபண்ணி, அதற்குச்சென்று சுகித்திருப்பார்களெனவும், அவைகளுக்கு மறுதலையாக நடப்பவர்கள், வாதனைகளும் கொடூர தண்டனைகளும் நிரம்பிய நரகமென்ப தொன்றைப் பிரதிட்டிப்பித்து, அங்கு சென்று வருந்துவார்களெனவுங் கூறிச் சகலரையும் சன்மார்க்கராகச் செய்ய முயல்வது மதமே.

மேலும், இயற்கை உலகை உற்றுப் பார்த்துத் தீர ஆலோசனை செய்தால் எங்ஙனம் விவேகம் மேலடைந்து ஜீவன் ரமித்திருக்கிறதோ, அங்ஙனமே இவ்வுலகப் பற்றுக்களிலிருந்து மனத்தை அகற்றி ஜகத்காரணனை கருணாகரக் கடவுளை, தினந்தோறும் குறித்த நேரங்களில் தியானித்து வந்தால், அப்பரமார்த்த வஸ்து மேலடைந்து, சிற்றறிவினால் அறியக்கூடாததை அறிந்து, பெறக்கூடாதவைகளைப் பெற்று இனித்திருக்கலாமெனக் கூறி,

உற்றார் தின்றால் புற்றாய் விளையும், ஊரார் தின்றால் பேராய் விளையும்.

மனச் சாந்தியையும், களிப்பையும் உண்டு பண்ணுவது மதமே.

மேலும், விசுவாசமே மெய்ஞ்ஞானத்தின் இலக்கணமும், இலட்சியமுமாகும். இகபர சுகங்களை அளிப்பது விசுவாசமே. வாணாளைச் சலனமில்லாது கழிப்பதற்கு விசுவாசமே இன்றியமையாதது. பெருங்காரியங்களைச் செய்வதற்குரிய தைரியத்தையும், உற்சாகத்தையும், சக்தியையுங் கொடுத்து உதவுவது விசுவாசமே. விசுவாசமில்லாது உலகம் மேலோங்கி வளர்வதில்லை. நற்பொருள்கள் தோன்றிப் பரவுவதுமில்லை. விசுவாசமென்ற அக்னியில்லாது இப்புவி பெரும் அந்தகாரம் கவிந்து விளங்கும். ஔவியம், லோபம், அருளின்மை, ஆசா பிசாசம், வெவ்வியகுணம் முதலானவைகளை ஞானசஞ்சீவி போக்கடிப்பதுபோல், ஆறாத்துயரம், பொறாமிடி, போக்குவரவு முதலியவைகளால் வருந்தும் மாந்தர்களை விசுவாசமென்ற தெவிட்டாத அமுது தெளிவிக்கின்றது. வாழ்வென்னும் வீரன் விசுவாசமென்ற அசுவத்தின்மேலேறி வேண்டிய திசைகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். வீரர்கள் போர் புரிவதும், வர்த்தகர்கள் திரைகடலோடி வியாபாரஞ்செய்து பொருளீட்டுவதும், சிறுவன் சிறுமியர் பள்ளிகளுக்குச் சென்று கற்பதும் எக்காரணம்பற்றி? இறுதியில் நன்மை உண்டாகுமென்ற எண்ணத்தினால் அல்ல; விசுவாசத்தினால்தான். புத்தி வளப்பத்தினாலும் மனோதிடத்தினாலும்,விசுவாசப்பெருக்கினாலும் குருடனைப் பார்க்கச் செய்யலாம்; செவிடனைக் கேட்கச் செய்யலாம்; உன்மத்தனைத் தெளிவிக்கலாம்; தீராப்பிணிகளைப் போக்கலாம்; ஆழியையமர்த்தலாம்; மலைகளைப் பிளக்கலாம்; சுருக்கத்தில், சகலரும் சுகித்து வாழலாம். கல்வியினால் அறிவு முதிர்கின்றது; அறிவு முதிர்ச்சியினால் மனம் உறுதிப் படுகின்றது; மனவுறுதியினால் விசுவாசம் அதிகரிக்கின்றது. இவ்வளவு மேன்மைபொருந்திய விசுவாசத்தைப் புன்மாக்கள் முன்வைத்து நற்கதியடையச்செய்வது மதத்தின் இயல்பாகும்.

மதம் கருமத்தின் மேன்மையை வற்புறுத்துவது. ஞானம் விசாரணையின் பயனை வலியுறுத்துவது. கருமமின்றி ஞானத்தையடைதலு முடியாது. நிட்காமிய கருமம் சித்தசுத்தியைத் தந்து ஞானமடைய சாதனமாயிருப்பதால், அதை சாஸ்திரங்கள் கூறியவாறு செய்பவர் அத்துவித ஞானத்தைத் தவறாதடைவர். இதன் பொருட்டே நற்பலனை அடைவதற்கு, பேதத்தோடுகூடிய கருமத்தைப்போதித்து,அதனால்,பாபத்தையும் பயனிலிச்சையையு மொழித்து, பிர்ம தத்வத்தை உணர்த்தி, அது கைவல்லியமாகும் வண்ணஞ் சகுணோபாசனையைக் கூறி அப்பேதத்தையொழிக்க நிற்குணோபாசனையைப் பின்காட்டி, அதற்குமேல் அத்துவிதத்தைக் கூறி, இதுவே மேம்பட்டதெனவும், மற்றவை யனைத்துஞ் சோபான மெனவும் வேதம் விளக்கியது.

உயிராகிய பூமியில் கல்வி விதையை விதைத்து, முயற்சி, விசுவாசமென்ற துளிகளால் நிரம்பிய நீரைப் பாய்ச்சி, உண்மை, உழைப்பு, லோகோபகாரம், தன்னடக்கம் என்ற இளந்தளிர்களையுடைய ஓர் செடி மேல் வளர்ந்து, மதம் என்ற அரும்பு தோன்றி, தத்வ ஞானம் என்ற மலர் புஷ்பித்துக் கடைசியில் மோக்ஷம் என்ற இனிய பழம் பழுக்கும். அதன் இனியதேனையுண்டு களிக்கும் பெரியார் அன்றே மதத்திற்கு மூலாதாரமாக விளங்கி அருள்புரிபவர்! அவரது வழியைக் கடைப்பிடிப்பதே மாந்தரது முதற்றொழிலென்பது தவறாகாதென்பதை யார் தடுக்க வல்லார்?

மாமரம் பயிர்செய்தல்

MANGO CULTIVATION

நாம் மாமரத்தை, இமயமலைச் சாரலைத் தவிர இந்தியாவில் எவ்விடத்திலும் காணலாம். ஆனால் மரங்கள் அதிகமாயிருந்தாலுங்கூட நல்ல பழங்கள் அகப்படுவது கஷ்டமாயிருக்கின்றது. அதற்குக் காரணம் என்னவென்றால், மாமரத்தைப் பயிர்செய்யும் முறை ஜனங்களுக்குத் தெரியாததால்தான் போலும். மேலும், ஆரம்பத்தில் நாம் கொஞ்சம் சிரத்தை

யெடுத்துக்கொண்டு நல்ல ஜாதி மாமரங்களை வைத்து விருத்திசெய்தால், பின்னால் நாம் அதிக லாபம் அடையலாம்.

நல்ல மணமுள்ளதும், ருசியுள்ளதுமான பழங்களிலிருந்து கொட்டைகளைச் சேதப்படாமல் எடுத்து, சிறு மண்தொட்டிகளில் நல்ல உரமுள்ள மண் அல்லது களிமண் போட்டு, அவைகளில் நடவேண்டும். அக்கொட்டைகளில் பூச்சி புழு முதலானவை இருத்தலாகாது. அக்கொட்டைகளுக்குத் தினந்தோறும் ஜலம் விடவேண்டும். சிறு செடிகள் முளைத்தபின்பு அவைகள் அதிக மழையினாலாவது காற்றினாலாவது கெட்டுப்போகாமல் பாதுகாத்தல் அவசியம்.

மேலும்,இச்செடிகளைவைத்து விருத்தி செய்வதற்கான இடம் அதிக மணற்பாங்குள்ளதாயிருத்தல் கூடாது. ஏனென்றால் மணல் பூமியும் சரள்பூமியும் தண்ணீர் கொள்ளாதாகையால் மாமரம் இவ்விடங்களில் நன்றாய் வளராது. அதற்கு ஈரம் அதிகம் உள்ள தரையே தேவை. மண்ணும், சுண்ணாம்பும், கொஞ்சம் மணலும் கலந்த பூமியானது மாமரத்தின் ஆழமான வேர்களையும், அவ்வளவு பெரிய மரத்தையும் தாங்கச் சக்தியுள்ளது. ஆகையால் இத்தரையிலேயே மாமரம் நன்றாய் வளரும். மேற்சொன்ன பூமி யகப்படாவிடின், மணலையோ அல்லது களிமண்ணையோ தரையோடு கலந்து, நல்ல பூமியாக உபயோகப்படுத்தலாம். அத்தரையானது பூமி மட்டத்திற்குச் சற்று உயர்ந்தே யிருக்கவேண்டும். அவ்விடத்திற்குக் கிழக்கேயும் தெற்கேயும் யாதொரு அடைப்பும் இருக்கக்கூடாது. அவ்வாறிருப்பின் கீழ்காற்றும் தென்றலும் மரத்தில்படாது. மேலும், பெரிய ஊர்கட்கு அருகாமையில் மாந்தோப்புகள் உண்டாக்குவது பெரும் பேதமையே. ஏனெனில், பட்டணங்களிலுள்ள தூசி இலைகளின்மேல் படிவதால், அம்மரத்திற்கு வேண்டிய காற்றையும் சூரிய வெளிச்சத்தையும் உட்கொள்ள அவ்விலைகளுக்குச் சக்தியில்லாமல் போகின்றது. ஆகையால் மரங்கள் நல்ல வளர்ச்சியில்லாமல் க்ஷீணமடைகின்றன. நிலத்தில் உரமில்லாவிடின், எரு, குப்பை, எலும்புத்தூள் முதலியவைகளை உபயோகப்படுத்தலாம்.

இவ்வாறு பூமியைச் சீர்திருத்திய பிறகு, மாங்கன்றுகளை நடுமுன், நிலத்தை உழவேண்டும். பிறகு, மூன்றடி நீளம், மூன்றடி அகலம், மூன்றடி ஆழமான குழிகளை சுமார் நூறடிக்கு ஒன்றாக வெட்டி இரண்டு மாதம் வரையில் அவைகளை மூடாமல் வைத்திருக்கவேண்டும். மரங்களை அதிக நெருக்கமாக நட்டால், மழைகாலத்தில் பூச்சிகள் உண்டாவதுடன், அவை அதிக உயரமாய் வளர்ந்து கிளைகள் இல்லாமல் போகின்றன. குழிகளிலிருந்து வெளியே எடுத்துப்போட்ட மண்ணுடன் ஒரு கூடை எருக்குப்பை, கொஞ்சம் எலும்புத்தூள் இவைகளைக் கலந்து, குழிகளை அம்மண்ணால் நிரப்பி, செடிகள் நடுவதற்காகச் சிறு துவாரங்கள் செய்யவும். மழைகாலத்திலாவது அல்லது நன்றாய்த் தண்ணீர் சிலநாட்களாகப் பாய்ச்சின பிறகாவது கன்றுகளைத் துவாரங்களில் நடவேண்டும். தொட்டிகளிலிருக்கும் கன்றுகளைச் சாக்கிரதையாக எடுக்க வேண்டும். தொட்டிகளை உடைத்து, கன்றின் வேரைச் சுற்றியிருக்கும் மண், சேதப்படாமல் எடுத்துப் புதைக்கவும். கன்று காற்றினால் அடிபட்டுக் கீழே விழாமலிருப்பதற்காக, பலமான குச்சி யொன்றை நேராக நட்டு, அதோடு கன்றைக் கட்டுவது நல்லது. தினந்தோறும் தண்ணீர் விடுவதை நிறுத்தக் கூடாது. ஆனால், நல்லமழை பெய்த நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குத் தண்ணீர் விடவேண்டாம்.

ஒவ்வொரு செடியைச் சுற்றியும் பாத்திகட்டிக் கோடைகாலத்தில் செடியைச்சுற்றியுள்ள மண்பிளவுபடாமலும் ஈரம் உலராமலும் இருப்பதற்காகப் பாத்தியில்சுமார்இரண்டுஅங்குல கனத்திற்குக் காய்ந்த இலைகளை போட்டு வைக்கலாம். இவ்வாறு செய்துகொண்டும், தண்ணீர் சரியாய் ஊற்றிக்கொண்டும் வந்தால், சுமார் இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் மரம் பெரிதாகிப் பூக்கும். இப்பூக்களை நாம் பிடுங்காமல் விட்டுவிட்டால் அவை காயாகிப் பிறகு பழுத்துவிடும். ஆனால் அப்பழங்கள் பெரியனவாயும்ருசியுள்ளனவாயும்இருக்கமாட்டா; மரமும் பிறகு நல்ல பழங்களைக் கொடுக்காது. ஆகையால் முதல் வருஷப் பூக்களைப் பிடுங்குவதே மேல்; இன்னும் இரண்டு

வருஷங்களுக்கு அப்படியே செய்தால் பிறகு பெரும் லாபம் அடையலாம்.

ஐந்தாவது வருஷம் வந்ததும், மரம் காய்க்குமாதலால் அதற்கு நல்லுணவு தேவை. அதற்கு, மரத்தின்கிளைகள் சிலவற்றையாவது, சிறு வேர்களையாவது வெட்டவும். ஆனால் மாமரத்தின் வேர்களை வெட்டுவதுதான் சிலாக்கியம். அதற்கு மரத்தைச் சுற்றி ஆழமாய்த் தோண்டி, அடிவேர்களிலிருந்து உண்டாயிருக்கும் சிறு சிம்புவேர்களை மாத்திரம் வெட்டி, எலும்புத்தாள் ஐந்தாறு ராத்தலும், எருவும், குப்பையும், கொஞ்சம் உப்பையும் அந்த மண்ணுடன் நன்றாய்க் கலந்து தோண்டியகுழியை அதால் மூடிவிடவேண்டும். மரம் பெரிதாக வளர்ந்து விட்டதே என்று நாம் தண்ணீர் விடாமல் இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் மரத்திற்கு வேண்டிய தண்ணீர் விட வேண்டும். அப்படிச் செய்தால்தான், அடியில் போடப்பட்ட உரம் கரைந்து ஆகாரமாய் வேர்களால் உட்கொள்ளப்படுகிறது. உப்புப் போடுவதால் மரத்தை அழிக்கும் புழு பூச்சிகள் அழிந்துபோகும்.

சிலநாட்களுக்குப் பிறகு மரம் பூத்துக் காய்கள் உண்டாகின்றன. காய்களைப் பறிக்காவிடில் அவை பழுக்கும். ஆனால் சிலர் காய்களைப் பறித்துப் பழுக்கவிடுகின்றனர். அப்படிப் பழுத்த பழங்கள் ருசியாயிருப்பதில்லை. ஆகையால் மரத்திலேயே பழுக்கவேண்டும். காய்கள் பழுக்கும்பொழுது நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது என்னவென்றால், மரத்திற்கு வேண்டிய தண்ணீர் ஊற்றப்படுகிறதா என்பதே. தண்ணீரில்லாவிட்டால் பழங்கள் காற்றினாலும் வெயிலினாலும் கெட்டு, சரியாகப் பழுக்காமல் கீழே விழுந்துவிடுகின்றன. ஆனால் புரட்டாசியிலிருந்து மார்கழி மாதம் வரைக்கும், அதாவது ஸெப்டம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் வரைக்கும் மரத்திற்குத் தண்ணீர்விடுவதைநாம்நிறுத்திவிடவேண்டும். தண்ணீர் விடுவதனால் கெடுதியில்லை யென்றாலும், அது வீண் சிரமமே. ஏனெனில் அம்மாதங்களில், போஷணம்மரத்திக்குவேண்டிய அளவுக்குமேல் இருப்பதாலும், காய்கள் புதிதாக உண்டாகாமல் இலைகளே உண்டாகின்றனவாதலாலும், தண்ணீர்விட்டும் ஜாஸ்திக் காய்கள் இருப்பதில்லை, இலைகளே அதிகமாகின்றன. ஆதலின் நாம் வீண் சிரமம் எடுத்துக்கொள்வானேன் ?

மேலே சொல்லியவாறு, ஐந்துவருஷ காலம் பொறுத்து, பிறகுசற்றுக்கஷ்டப்பட்டுப் பழங்கள் உண்டாக்கினால் ஏராளமான லாபம் அடையலாமென்பதற்குத் தடையில்லை. பழங்களோ, அதிக ருசியும் மணமும் கொண்டிருக்கும்.

ஆனால், இவ்வாறு பயிர்செய்தும் சிலர் நஷ்டமடைகின்றனர். மாமரங்களுக்கு ஒரு விதமான பூச்சிகள் வருவதுண்டு. அப்பூச்சிகளைத் தேன்பூச்சியென்று சொல்லுவார்கள். அப்பூச்சிகள், சொந்தக்காரனுக்கு வெகு நஷ்டம் விளைவிக்கின்றன. ஆனால் இரண்டு வருஷங்கட்கு முன்னால், சேலம், சித்தூர் ஜில்லாக்களில் சில பரீக்ஷைகள்நடந்தன. மண்எண்ணெய் சோப்பும் (Crude oil emulsion), மீன் எண்ணெய் சோப்பும் (Fish oil Soap,) தேன்பூச்சிகளின்மேல் பிரயோகப்படுத்தப்பட்டன. அதனால் சிறு பூச்சிகள் எல்லாம் உடனேயும், பெரிய பூச்சிகள் சற்றுத் தாமதித்தும் இறக்க நேர்ந்தது. இவ்விரண்டு மருந்துகளில், மீன் எண்ணெய் சோப்பே, விலை சகாயமானதாயும் நல்ல மருந்தாயும் இருக்கின்றது. ஆகையால் மாந்தோப்பு வைத்துப் பயிராக்குகிறவர்கள் தேன்பூச்சிகளைக் கொல்லாமலே மேற்சொல்லிய மருந்தை உபயோகப்படுத்தலாம். அதை உபயோகப்படுத்தும் முறையைப்பற்றி இங்கு சொல்ல இடம் போதாததால், பயிர் செய்பவர்கள் பிங்கள வருஷத்திய சென்னை விவசாய பஞ்சாங்கத்தை' (Agricultuaral Calendar 1917-18) ப்பார்த்து நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம்.

ஐரோப்பிய மஹாயுத்தம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

ஐரோப்பிய மஹா யுத்தத்திற்குக் காரணங்கள், ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்கள், இந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்தாயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள், சித்திரப் படங்களுடன் தெளிவாயும் கதைப்போக்காயும் ஸாமான்ய ஜனங்கள்கூட எளிதில் படித்தறிந்து கொள்ளும்படி எழுதப் பெற்றிருக்கிறது.

256-பக்கங்கள் : : 58-ஆப்டோன் படங்கள்.

போதினிச் சந்தாதாரர்க்கு மாத்திரம் ரு. 1

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

நன்னெறி : IV.

(156 பக்கத் தொடர்ச்சி.)

திரும்பித் தன் புதுக்குடிசைக்குப் போய், கையில் மீதியிருந்ததைப்புசித்து அன்று பொழுதைக் கழித்தான். மறுநாட்காலை ஆகாரத்திற்கு ஒன்று மில்லாததால், ஏதாவது காய் கனி கிழங்குகள் சம்பாதித்து வரலாம் என்றெண்ணிக் குடிசையைவிட்டு வெளியேறினான். பத்து அடி போகு முன், ஒரு மரக்கிளையில் ஏதோவொரு துணிமூட்டை தொங்குவதைக் கண்டு, அத்யாச்சர்யமடைந்து, அதை யெடுத்து அவிழ்த்துச சோதிக்க, அதில் ஒரு மனிதனுக்கு ஒரு வாரம் போஜநத்திற்கு வேண்டிய 'ஸம்பாரம்' முழுவதும் ஒழுங்காக முடியப்பட்டிருப்பதை அறிந்தான். "என்னே கடவுளின் க்ருபையிருந்தவாறு!" என்று கடவுளின் பெருமையை வியந்து பெரிதுங் கொண்டாடி, அம்மூட்டையைக் கொண்டுபோய், உணவாக்கித் தின்று வந்தான். ஒரு வாரங்கழித்து அம்மூட்டை காலியானதும், 'கனிவர்க்கங்கள் கொஞ்சம் சேகரிக்கலாம்' என்ற நோக்கத்தோடு வெளியேற, முன்மாதிரி அதே மரக்கிளையில் அதேயளவுள்ள மூட்டையொன்று கட்டப்பட்டிருந்தது. பரமாச்சர்ய மடைந்து அதையுங்கொண்டுபோய் ஒருவாரங்கழித்தான். இப்படியே, பிரதி வாரமும், ஒரு மூட்டை அகப்பட நிர்விசாரமாகக் காலங்கழித்துவந்தான். அவனுக்கிருந்த பயமெல்லாம் வழிப்பறியோனிடந்தான். "இறப்பது ஒன்றும் ப்ரமாதமில்லை. என்றாலும், நமது ப்ராயச்சித்தமுடிந்து பாபமொழிந்த பின்பு இறந்தாலல்லவா நமக்கு நற்கதி கிடைக்கும்? அதற்குள் நம்மைக் கொன்றுவிட்டால் என்செய்வது?" என்ற ஒரு பெருங்கவலை இவனுக்குள்ளே இருந்துகொண்டிருந்தது.

இப்படியே பத்து வருஷங்கள் கழிந்தன. மூன்று கட்டைகளில் ஒன்று துளிர்த்ததென்று சொன்னோமல்லவா? மற்றைய விரண்டும் அப்படியேதானிருந்தன; துளிர்ப்பதாகக் காணோம். ஒரு நாட்காலை, கட்டைகளுக்குத் தண்ணீர் வார்த்துவிட்டுச் சிரமபரிகாரமாக உட்கார்ந்து மனம்போன கதியிலேயே யோசிக்கலாயினன். "என் மனம் இன்னும் பக்குவமடையவில்லை யல்லவா? 'எல்லாமவன் செயல்.' ப்ராயச்சித்தமோ எதுவோ, அவன் ஆஞ்ஞைப்படி நடக்குமே யொழிய, நம்மால் என்ன இருக்கிறது? அப்படியிருக்க, 'நாமிறந்து விடுவோமோ' என்ற பயம் நமக்கெதற்கு? ஒருகால், நாம் இறப்பதேதான் பாபங்களுக்குப் பரிகாரமோ என்னவோ? கடவுளின் சித்தத்தை யறிந்ததார்? ஆகவே கடவுளைத் தவிர வேறொருவரிடமும் நாம் பயப்படுவது பிசகு. இவ்வழிப்பறிக்காரனிடம் நாம் நடுங்குவது மடமை" என்று ஸித்தாந்தப்படுத்திக்கொண்டேயிருக்க நான்கடி தூரத்தில் அக்கொள்ளைக்காரன் வருவதைக் கண்டான். ஆனால் அவன் மட்டும் தனியாய் வரவில்லை. பின்னால் இளம் பிராயத்தனான ஒரு மனிதனைப் பின்கட்டாகக் கட்டிக் குதிரையின் பின்பாகத்தில் பிணைத்திருப்பதையும், அவ்வாலிபன் 'குய்யோ' 'முறையோ' என்றலறி "ப்ரமாணமாகச் சொல்லுகிறேன். எனக்குத் தெரியாது. தெரிந்தால் சொல்லி உயிரைக் காப்பாற்றிக் கொள்ளேனா? தான் சாக யாராவது மருந்துண்ணுவானா?" என்று புலம்புவதையும், "சீ பணத்தாசை பிடித்த லோபி; வாயை மூடு. மயிலே மயிலே இறகுபோடென்றால் போடுமா? காலால் மிதித்துப் பிடுங்கினால்தானே யுண்டு. வா, வா, உனக்குச் சொல்லுகிறேன் வழி" என்று திருடனளிக்கும் பயங்கரமான பதிலையுங் கவனித்தான். சரேலென்று எழுந்து திருடன் முன் வந்து நின்றுகொண்டு, "இது யார்? இவனை நீயேன் இப்படி ஹிம்ஸிக்கிறாய்?" எனக் கேட்டான்.

"அடுத்தவூர், கோபால்செட்டி மகன். இவன் பிதா நகைப்பெட்டி ஒளித்துவைத்திருக்கும் இடத்தைச் சொன்னால், விட்டுவிடுகிறேன், என்று நியாயமாகச் சொன்னால், 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று சாதிக்கிறான். இவனைக் கொண்டுபோய், மரத்தில் கட்டி, சுண்ணக் குறியிட்டு, வெள்ளூரியா யுரித்தால் அப்பொழுது சொல்வானல்லவா?"

"அது தர்ம மல்ல அப்பா, அநியாயமாக நீ ஏன் இவனை—"

“ஏ ஸந்யாஸி! உனக்கென்ன கேடுகாலம்? வழியைவிட்டு விலகு,” என்று குதிரையை நடத்தினான் அவ்வழிப்பறிக்காரன். சற்றும் மனங்கலங்காது அத்திருடனது குதிரையின் கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்து நிறுத்திக்கொண்டு, “நான் உன்னை விடப்போகிறதில்லை. இந்த அக்ரமத்தைச் செய்வது தவிர்த்து இவ்வாலிபனைக் கட்டவிழ்த்து விடுவதாக நீ வாக்களித்தாலொழிய, நான் குதிரையின் கடிவாளத்தை விடுவதில்லை” என்று ஸர்யசி தீர்மானமாக மொழிந்தனன்.

“சரி, உனக்கு ஆயுட் ப்ரமாணம் முடிந்துவிட்டது. நீ யென்ன செய்வாய்? இன்னமொருமுறை சொல்லுகிறேன். வழியைவிட்டு விலகு” என்று கையிற் பிடித்திருந்த பிச்சுவாவை ஓங்கினான்.

அதற்குச் சிறுதுமஞ்சாது அந்த ஸந்யாசி, “அடே துஷ்டா! ஒருவன் உயிரை எடுக்கவும் வைக்கவும் நீ யார்? எதுவும் ஈசுவர ஸம்மதமில்லாமல் நடவாது என்றறியாது, நீ என்னைக் கொல்வே னென்றாய். ஆத்மா அழிவில்லாதது. இந்தப் பாழும் சடலத்தை வேண்டுமென்றால் உன்னாலொழிக்கமுடியும்; அதுவும் கடவுள் சம்மத மிருந்தால்தான் ஆகும். ஆனால் நான் உன் பயமுறுத்தலுக்குப் பின்னடைவே னென்று எண்ணாதே” என்று பின்னும் போராடினான். ஒரு நிமிஷம் திருடன் முகத்தில் அகங்காரமும், கோபமும் ஜ்வலித்தன. ஸந்யாசியைக் குத்தி வீழ்த்துவதற்காக, வலது கையிலிருந்த ஆயுதத்தை யோங்கினான். ஆனால் மறு நிமிஷம் ஓங்கின கை தாழ்ந்தது. அந்த ஸமயம் அவன் மனதில் என்ன தோன்றிய தென்பதையும், திடீரென்று தான் செய்ய நினைத்த கொடுஞ்செயலைச் செய்யாதொழியும்படி அவன் மனம் மாறினதையும், அவனைப் படைத்த கடவுளையன்றி மற்று யாரே அறியவல்லார்? கையைத் தாழ்த்தியதும், சற்றுக் கடுகடுப்பான முகத்தோடு ஏதேதோ முணுமுணுத்துக்கொண்டே குதிரையினின்றும் மிழிந்து, அதிற் பிணிக்கப்பட்டிருந்த வாலிபனைக் கட்டவிழ்த்து விட்டு, வேறு ஒரு வார்த்தையும் பேசாது, குனிந்த தலையோடு அவ்விடம் விட்டகன்றனன். வாலிபனும்ஸந்யாசியின் காலில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து “என் உயிர்ப்பிச்சை யளித்த புண்யனே! நீயே எங்கள் குலதெய்வம். தயவு செய்து அடுத்த நகரத்திலிருக்கும் எங்கள் வீட்டிற்கெழுந்தருளி, என் பெற்றோருடைய மனமார்ந்த வந்தனங்களையும் பெற்றுச் செல்ல வேண்டும்” என்று பிரார்த்தித்தான். ஸந்யாசியும் “அப்பா, நான் புகழுக் குரியவனேயல்ல; என்னாலென்ன நடந்தது? அத்திருடன் மனதிற் புகுந்து அவனுக்கு நல்லெண்ணத்தை யூட்டிய கடவுளன்றோ ஸ்தோத்திரத்துக்குப் பாத்ரம். நான் காட்டிலேயே வஸிப்பதென்றும், நகரங்களுட் செல்லுவதில்லையென்று முள்ள ஸங்கல்பத்தோடு இங்கு வந்திருக்கிறேனாகையால், உன்வார்த்தையின்படி உங்கள் க்ருஹத்துக்கு வரவியலாது. ஆகவே, உன்னை உன் பெற்றோர்கள் தேடுமுன், வீடு போய்ச் சேர்” என்றுத்தரவளிக்க அவ்வாலிபனும் வீடு சென்றனன்.

இது நடந்த மறுநாட்காலை வழக்கம்போல் துளிர்த்திருக்கும் ஒருசெடிக்கும், துளிர்க்காத விருகட்டைகட்கும் ஜலம் வார்க்கப் போகும் போது அவன் மனம் திடுக்கிட்டது. என்ன விசேஷம்? மற்றொன்றுமில்லை; இரண்டாவது கட்டை துளிர்விட்டிருந்ததுதான். பரமாநந்த பரிதனாய், ஸந்தோஷமும் திருப்தியும் கண்களில் ஜ்வலித்தன. கைகளை யஞ்சலி செய்து, தன் பாபம் நீங்கி நல்லகாலம் பிறக்கும்படி செய்த கடவுளின் கருணைத் திறத்தைக் கொண்டாடினான். துக்கம் நேர்ந்தவிடத்து “ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா!” என்று துதிப்பது எல்லோருக்கும் வழக்கமே; ஸுலபமுந்தான். ஸந்தோஷமுற்ற சமயங்களில் மனதைக் கடவுள்பால் செலுத்துவதன்றோ அருமை? அதுவன்றோ நிஜமான பக்தியின் அடையாளம்!

கார்யங்கள் முன் போலவே நடந்துவந்தன. பிறந்தோரிறப்பதும், இறந்தோர் பிறப்பதுமாக உலகமியங்கி வந்தது. சூர்ய சந்திர நக்ஷத்ராதிகள் தங்கள் தங்கள் கதியில் ஒரு சிறிதும் மாறுபாடின்றிக் கடவுளின் ஆஞ்ஞையைச் செய்துகொண்டிருந்தன. நமது கதாநாயகனும் கவலையொன்றுமின்றியிருந்துவந்தான். எதைப் பற்றியுங் கவலையே யில்லாமல் எல்லாமீசன் செயல் என்று கேவலம் வாசா ஞானத்தோடு நில்லாமல், நிஜமாகவே நம்பி நடந்து வந்தானாகையால், மனது சஞ்சலமே யில்லாமல், ஸதா

சாந்தியே குடிகொண்டிருந்தது. ஆசையும் பொறாமையுங் கவலையும் மனதிற் குடிகொண்டிருக்கும் வரையிற்றானே வீண் கஷ்டமெல்லாம்? இப்படியே பத்துவருஷங்கள்சென்றன.

ஒரு நாட்காலை யுண்டியருந்தி மரநிழலிலுட்கார்ந்து சிருஷ்டியின் ப்ரபாவத்தை வியந்து கொண்டும், அதற்கெல்லாம் ஆதிகாரணமாகிய அரும் பெருங்கடவுளை வழிபடாமலே யொருவன் எப்படி வாழக் கூடுமென்று யோசித்துக்கொண்டு மிருந்தான். “ஆகா, என்ன கருணை கடவுளுக்கு. தன் சிருஷ்டியிலுயர்ந்த மனிதர்கள் ஸௌகர்யமாக வாழவேண்டி எவ்வளவு விசித்திரமான ஏற்பாடுகள் செய்து முடித்திருக்கிறார். கடவுள் ஸம்மதப்படி, வீண் சச்சரவில்லாமலும், காமக்குரோதாதி குரும்புகளை யகற்றியுமட்டும் வாழ்வானேல், மனிதனிலும் பாக்யசாலி யார்? இதை யறியாமலல்லவா மதிமோசம்போய்ப் பெருங்கேடுற்று மடிகிறது மனிதவர்க்கம்?” என்று இப்படிப் போய்க்கொண்டிருந்த மனம் திடீரென்று வேறுகதியில் திரும்பியது. “கூடியமட்டில் ஆசைகளும், கவலையுமின்றி வாழ்கிறோமென்பது மெய்யே. ஆனால் என்னால் பிறருக்கு என்ன உதவி கிடைக்கிறது? நம் ஸகோதரரான ஜீவர்களுக்கு நம்மாலானவோர்வித கைங்கர்யமும் புரியாமல் வாழ்வது சிறந்த வாழ்வாகுமா? கேவலம் ஸ்வய நலங்கருதிய புல்லிய மார்க்கமாக வல்லவோ ஆய்விடும்? ஆகவே, இப்படிக் காலங்கழிப்பதை விட்டு, ஜநநிபிடிதமான நகரங்களிற் சென்று ஜநங்களுக்கு ஹிதோபதேசஞ்செய்து, கூடியவரை, பாசபந்தங்களினின்றும் தங்களை விடுவித்துக்கொள்ளநன்மார்க்கத்தை யவர்களுக்கு உபதேசிப்பது பரோபகாரமாகு மல்லவா? ஆகவே அதுவே ஸரி. சீக்ரமே நாம் புறப்படவேண்டும்” என்ற முடிவிற்கு வந்தான். வந்தது தான் தாமஸம், அச்வாரூடனாய் வரும் திருடன் கண்ணெதிர்ப்பட்டான். அவன் ஏதோ பலமான யோசனையிலாழ்ந்து தன்னையும் மறந்து, குதிரையின் கடிவாளத்தை நழுவவிட்டுக் குதிரை சென்றபடி விட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும்; “நாம் எவ்வளவு சொன்னாலும் அவன்மனம் நல்வழியில் திரும்பப் போவதில்லை. வீண் கண்டக்ஷேபந்தான்” என்று முதலில் எண்ணினான் நம் கதாநாயகனாகிய ஸந்யாசி. ஆயினும் அடுத்த நிமிஷம் அவனுக்கு இயற்கையாயுள்ள கருணை மேலிட்டது. எதோ நம்மாலானதைச் செய்து பார்க்கலாம். அநியாயமாய் ஒருவன் பாபக் குழியில் விழுவதைப் பார்த்தும் சும்மாவிருப்பது பாபஹேது” என்று அவன் திருடனிடம் போனான். போய் “அப்பா, நான்சொல்வதைநன்றாய்க் கவனி. பிறகு உன்னிஷ்டம்போல நட. மனிதனுக்கு ஸ்வபாவமாகவே மிருகப்ராயமான குணங்களேதா னமைந்திருக்கின்றன. அவைகளுக்கு இடங்கொடுத்தால், மனிதன் அதோகதியடையவேண்டியதுதான். மிருகத்தினின்றும் மனித வர்க்கத்தை விசேஷித்துப் பிரிக்கும், பகுத்தறிவைக்கொண்டு, கீழ்மைத் தன்மை பொருந்திய குணங்களை யெல்லாமடக்கி, மேற்குணங்களை ப்ரகாசிக்க விளங்குபவனே, மனிதன் என்னும் பெயருக்கு உரித்தானவன். அவனே கடவுளின் கட்டளையை நிறைவேற்றுபவன். மற்றப்படி துன்மார்க்கத்தையே அவலம்பிப்பவர்களெல்லாம் பூபாரந்தான். கடவுளை மட்டும் திடமாய் நம்பி, துர் எண்ணங்கள் மனதிற் புகாமலிருக்க முயல்வோமாகில், முதலில் சிறிது வருத்தமா யிருப்பினும், முடிவில் கார்யஸித்திபெறுவது நிச்சயம்! கடவுளின் க்ருபைக்குஎல்லையில்லையல்லவா? உன்னுடையஆத்மாவோ நித்யமான வஸ்து; பாபபுண்ய ஸம்பந்தமில்லாதது; நல்வழியிலேயே உன்னைச் செலுத்தப்பார்க்கும். அதையும் நிக்ரஹித்து ஏன் வீணாக, கண்ணைத் திறந்துகொண்டே கிணற்றில் விழுபவனைப்போல், நரகவாதனையைத் தேடிக்கொள்ளுகிறாய்?” என்றான்.

இவ்வளவையும் பொறுமையுடன் கேட்ட திருடன் பதிலொன்று மளியாது, ஒரு கையால் எதிரில் நின்ற அச்சந்யாசியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தன் வழியே போக எத்தனித்தான். ஆனால் ஸந்யாசிக்கு வந்த துக்கத்துக்கு அளவில்லை. “ஐயோ! எவ்வளவு எடுத்துச்சொல்லியுங் கேளாது கெட்ட வழியிலேயே உழல்கிறதே யொரு ஜீவன்” என்று அன்பினால் கனிந்துருகினான். இவ்வாறு நல்ல சிந்தையே யில்லாமல் கடவுள் ஒருவனை ஏன் சோதிக்கவேண்டும் என்று அனலிலிட்ட மெழுகெனத் தபித்தான். பரிசுத்தமான மனது பரிதாபத்தாலும், ஸகோதர வாஞ்சையாலும், நிறைந்தது. கண்ணீராறாகப் பெருக, தலைமேல்

கூப்பிய கரத்தோடு, பக்தியால் நெக்குவிட்டிருக்கும் மனத்தோடும், "ஹே, தயாநிதே, 'மணிமந்த்ர மாதியால் வேண்டு ஸித்திகள் உலக மார்க்கத்தில் வைக்கவில்லையோ, பாழான வென்மனங் குவிய வொரு தந்திரம் பண்ணுவதுனக்கருமையோ' என்று கூறிய அருள் வாக்கையெடுத்து அண்டாண்டங்களையும், சராசரங்களனைத்தையும், லீலாவினோதமாகப் படைத்து, ரக்ஷித்து, ஸம்ஹரிக்கும், ஸர்வ வல்லமையுள்ள உனக்கு, இப்பாபியான திருடன் நல்வழிப்படும்படி திருவுளமிரங்கவில்லையோ?" என்று மிகுந்த ஆராமையோடு பிரார்த்தித்தான்.

இதையும் செவியுற்று வந்த திருடன் திடீரென அச்வத்தை விட்டிழிந்து ஸந்யாசியின் பாதங்களில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து, அவன் பாதத் தூளியைச் சிரமேற்கொண்டு, "ஹேபுண்யனே, உன் பக்திக்கும், ஆராமைக்கும், அன்பிற்கும் இளகாத மனமுமிருக்க முடியுமோ? எவ்வளவோ வருஷங்களாக நானுமிதே தொழிலையே பின்பற்றி யிருந்தும், என் மனதிற் சிறிதேனும் பச்சாத்தாபமென்பதுண்டாகவேயில்லை. நீயும் சுமார் 20 வருஷங்களுக்கு மேலாகவே, எனக்கு ஹிதோபதேசஞ்செய்து வந்தாய். ஆயினும் முதன்முதலில் உன்னிடம் கோபமும் த்வேஷமுமே உதித்ததெனக்கு. நீ முன்னிருந்த பர்ணசாலையைவிட்டுப் பெயர்ந்த பொழுதுதான், கீர்த்திக்கும் பொருளுக்கு மாசைப்படாதவன் நீயென்பது நிஸ்ஸந்தேகமாகத் தெரிந்தது. அதுமுதல் தான் உன் வார்த்தையில் கவனமும் கௌரவபுத்தியு முண்டாயின. அதனால் நானேதான், உனக்கு உணவுப்பொருள் தட்டாமலிருக்க வேண்டி, வாரந்தோறும் 'ஸம்பார' மூட்டையொன்று கட்டிவந்தேன்" என்று சொல்லும்போதே, திடீரென்று, கரித்துணியால் கண்ணாடியைச் சுத்தம்பண்ணினவன் ஞாபகம் வந்தது ஸந்யாசிக்கு. அதன் தாத்பர்யமும் செவ்வனே விளங்கிற்று.

'துணியிலிருக்கும் கரி நீங்கும்வரை, கண்ணாடி சுத்தப்படவில்லையல்லவா? கரிநீங்கிச் சுத்தமான பின்புதானே, புறவஸ்துவாகிய கண்ணாடியின் அழுக்கை யெடுக்க சக்தியுள்ளதாயிற்று? அதுபோலவே தன் புகழையும், ஜீவனோபாயத்தைப் பற்றியுங் கவலைப்படுவதை யொழித்து, மனது நிராசையால் தூய்மைப்பட்டபின்தான், திருடன் மனதையுஞ் சுத்தமாக்கச் சக்தி வாய்ந்ததென்றும், அதனாலே தான் மாதுளங் கட்டையொன்று மறுநாள் துளிர்த்ததென்றும், அறிந்துகொண்டான். இவன் இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கையில், திருடன் மறுபடியும் ஆரம்பித்தான்.

"இருந்தாலும் என் மனம் திரும்பவில்லை. பின்பு வெகுகாலங்கழித்து, கோபால் செட்டி மகனை நான் பிடித்தபொழுது, அவனை விடுவிக்கவேண்டுமென்று, மன்றாடியபொழுது நீ உயிரைத் திரணமாகவெண்ணியதையும் கடவுளிடம் அசைக்கமுடியாத முழு நம்பிக்கை வைத்திருப்பதையுங் கண்ட பின்புதான் என் மனம் நல்வழியில் திரும்பத்தொடங்கியது."

மறுபடியும் இங்கே ஸந்யாசிக்கு மனம் கவலை பாய்ந்து, ஆஸநப்பலகை யிழைத்த தகப்பனும் பிள்ளையும், ஞாபகத்துக்கு வரவே, அதன் பொருளும் ஸ்வல்பமாக விளங்கிவிட்டது. "பல்கை கெட்டியாகப் பிடிக்கப்படாத வரை, இழைப்பது ச்ரமமாயிருந்தது. அதேபோல், ஸ்திரமான நம்பிக்கை யொன்றிலுமில்லாமல், மனம் பயத்தால் ஊசலாடும் வரை தூய்மைப்படவும், பிறரை நல்வழிப்படுத்தவுமியலாது, மரணத்துக்கும் அஞ்சாது, எதற்குங் கடவுளிருக்கிறார் என்று மனதைப் பகவானிடம் அசையாமல் நிலைக்கவைத்த பின்புதான் மனம் சுத்தியடைந்து, திருடன் மனதையும் இளகச்செய்யுந் திறமை பெற்றதென்றறிந்தான்.

மறுபடியுந்திருடன் தன் கதையைச் சொல்லிக்கொண்டே யிருந்தான். "ஆனாலும், என் மனம் முற்றிலுங் கனியவில்லை. யோசனையாகவே யிருந்தது. இன்று என்னுடைய பிடிவாதத்திற்கும், கெட்ட செயல்களுக்குமாகப் பரிதபித்து, நல்ல புத்தியருளும்படி, அன்பும் ஆராமையும் பொங்க நீ தபித்தபொழுதுதான் என்மனம் பூராவும் உன்னால் கட்டுண்டது. இனி யென்னை உன் சிஷ்யனாகக்கொண்டு நன்னெறியை உபதேசித்து என்னை யீடேற்ற வேண்டும்" என்று ப்ரார்த்தித்து நின்றான்.

உடனே ஸந்யாசிக்கு, தாரமிழந்தவன் அடுப்புமூட்டிய விஷயமும், அதனுட்பொருளும் தெற்றென விளங்கிற்று. சிராத்தூள் நன்றாகப்பற்றியெறிந்தபின் விறகிட்டதால்தானே,

உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?

விறகிலும் நெருப்புப் பிடித்தது. அதுபோலவே, பிறனுடைய ஏழ்மையும் பரிதபிக்கத் தகுந்ததுமான ஸ்திதியைக் கண்டு, மனக்கசிவினால் தவிக்கும் ஒருவனுக்குத்தான், பிறன் மனதிலும், நல்லெண்ணமாகிய தழலை மூட்ட முடியும். நான் இத்திருடன் கதிக் கிரங்கியதால்தான் அவன் மனம் பரிசுத்தப் பட்டது" என்று ஸந்தேகம் தெளிந்ததும் கடவுளின் அருளைப் பாராட்டி, அத்திருடனோடு பர்ணசாலை சென்று பார்த்த காலையில், மூன்றாவது கட்டையுந் துளிர்விட் டிருப்பதைக் கண்டு ஸந்தோஷித்துத் தன் குடிசை வந்து திருட சிஷ்யனோடு வெகுநேரம்வரை தத்வவிசாரம் செய்துவிட்டுப் படுத்துறங்கினான்.

காலையில் எழுந்து பார்க்கையில் ஸந்யாசி இறந்து கிடந்தார். அவருடைய கார்யம் முடிவடைந்தது. பாபத்திற்கு ப்ராயச்சித்தமு முடிந்தது. இயன்ற மட்டும் ஆசையை விலக்கி ஸகலமும் கடவுள் செயல் என்ற த்ருட நம்பிக்கையையே ஊன்றுகோலாகக்கொண்டு, பிறர் துன்பத்தையும் தன் துன்பம்போலவே யெண்ணியிரங்கியவர்களுக் குதவுவதே, உலகில் தீமையை யகற்றி நன்மைபுரியும் வழி என்பதைத் தெரிந்துகொண்டான். அதை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டு, அதற்கிணங்க நடப்பதன் நிமித்தம் இக்கதை இங்கு ஈசனருளால் வரையப்பட்டது. சுபம். சுபம். சுபம்.

ஓம் தத் ஸத்.

வஸந்த மந்திரம்

(152-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒன்பதாம் அதிகாரம்.

பாட்டுக் கச்சேரி

அஸ்தமித்து ஒரு நாழிகையிருக்கும். மந்திராலோசனை மண்டபம் சொலிக்கின்றது; மேற்குப்புறம் ஸிம்மாஸனம் அமைத்திருக்கின்றது. அதற்கு நேரே கீழ்க்கோடிவரையில் 100 அடி நீளம்; இரண்டு நேர்த்தியானகாச்மீர ரத்ன கம்பளங்கள் விரித்திருக்கின்றன. அதில் இன்னும் ஜனங்கள் நிரம்ப உட்காரவில்லை. அரசபரிவாரங்களும், மந்திரி பிரதானி இவர்களும் இன்னும் வரவில்லை. சிறப்புற்ற பிரபுக்களிற் சிலர் வந்துவிட்டனர். இன்னும் சிலர் வரவேண்டும். இது முக்கிய மண்டபம். இதன் இருபுறத்திலும் இரண்டு தாழ்வாரங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 100 அடி நீளம், 25 அடி அகலம். இவைகளுக்கும் முக்கிய மண்டபத்துக்கும் நடுவில் கல்லால் இழைத்த வளைவுகள் பல. அவ்வளைவுகளின் ஒவ்வொரு தூணின் பக்கத்திலும் ஒவ்வொரு வீரன் உருவின கத்தியுடன் அசையாமல் சித்திரப் பதுமைபோல் நிற்கின்றான். தென்புறத்துத் தாழ்வாரத்தில் மேல்பாதி, இராணுவ வீரர்களுக்கு; அவர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டனர். கீழ்ப்பாதி வர்த்தகர்களுக்கும் ஏனையோர்க்கும்; அதுவேபோல் வடபுறத்துத் தாழ்வாரத்தில் சாதாரணக் குடிகள்; இத்தாழ்வாரமும் நிரம்பிவிட்டது.

நான்கு புறத்திலும் கதவுகளும் ஜன்னல்களும் நன்றாய்த் திறந்திருக்கின்றன. கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் நடுவே உள்ள இடங்களில் பலவகையான விசேஷ சித்திரங்கள் வரைந்திருக்கின்றன. ஒருபுறம் இராமாயணம் முழுவதும் காட்டப்பட்டிருக்கின்றது. அதற்குச் சேர்ந்ததுபோல் நளசரித்திரம்; அடுத்தது துருவனுடைய திவ்ய சரித்திரம்; அடுத்தபடி கண்ணனுடைய திருவிளையாடல்; ஸிம்மாஸனத்துக் கெதிரில் மார்க்கண்டேயர் சரித்திரத்தில் முக்கிய பாகமாகிய 'யம ஸம்ஹாரம்'. 'தம் எல்லை மீறி நடப்போரை இப்படித்தான் தண்டிப்பேன்' என்று அரசர்களுக்குக் காட்டுகிறார் போலும் எம்பெருமான்! நூறு அடி தூரத்தில் இருந்து பார்க்கும்போது சித்திரத்தில் வரைந்திருப்பதுபோல் தோற்றாது, எம்பெருமான் உண்மையாகவே லிங்கத்தைப் பிளந்துகொண்டு கூற்றத்தைச் சாய்ப்பதுபோல் காண்கின்றது. அக்கூற்றுவன் எருமையோ ஈசன் உக்ரத்தைக் கூடக் கவனியாது மேல் எழுந்து எதிர்த்துச் செல்லுகின்றது. ஆ! ஆ! சிற்பீ! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம்! எத்தனை பேரை நீ இன்று ஒருங்கே சந்தோஷமும் ஆச்சரியமும் அடையும்படி செய்கின்றாய்!

நடுமண்டபத்தின் உயரம் 40 அடி இருக்கும். மேற்றளத்தின் நடுவிலிருந்து, இரண்டு

உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி.

அடிக்கு ஓர் விளக்காய்ப் பல விளக்குகள் தொங்குகின்றன. இவைகள் எல்லாம் உச்சினிமா நகரில் செய்யப்பட்ட பளிங்கு விளக்குகள். முகுந்தன் என்னும் ரஸாயன சாஸ்திரியால் அமைக்கப்பட்ட ஒரு யந்திரத்தின் உதவியால் எரிவதுபற்றி அவை வெளிச்சம் ஏராளமாய்க் கொடுத்தன. மேற்றளத்தின் இருபுறத்து வளைவிலும் நான்கு அடிக்கு ஒரு ஜன்னல் இருக்கின்றது. அவற்றின் வழியாய்க் கீழ் நடக்கும் விநோதங்களை மேலிருந்து இராஜபத்னிகளும் அரண்மனை ஸ்திரீகளும் பார்ப்பது வழக்கம். அவ்விடத்திலும் இன்னும் சரியாய்க் கூட்டம் சேரவில்லை. மேலும், கீழும், எல்லாவிடத்தும், மூலை முடுக்குகளிலும், விளக்குகள் கணக்கில்லாமல் ஏற்றியிருக்கிறார்கள்.

'டும்,' டும்,' 'ஞொய், ஞொய்,' என்று திராவிடர் சுருதி கூட்டுகிறார்கள். பாட்டுக் கச்சேரி ஆரம்பித்துவிட்டது. சரபனும் வந்துவிட்டான். எல்லோரும் சப்தம் செய்யாமல் இருக்கும்படி, உயிர் கொடுக்கப்பெற்ற பாவைகள் போல், தூண்களின் பக்கத்தில் நிற்கும் வீரர்கள் தாழ்வாரத்தில்கூடியிருக்கும் ஜனங்களைத் திரும்பிப் பார்க்கின்றனர். எல்லோரும் மௌனம்! ஆரம்பித்தான் சரபன். தோடி எடுத்து ஆலாபனம்பண்ணுகிறான். ஆரிய ஜனங்களின் தலை ஆடுகின்றது. பேஷ்! பேஷ்! என்கின்றார்கள் சுற்றிலும்!

ஆலாபனம் முடிந்து, பல்லவி ஆரம்பிக்க வேண்டும். அரசன் வருவதற்கு அறிகுறியாக ஜயபேரிகையின் சப்தமும் கட்டியங் கூறுவோர் குரலும் கேட்டன. சற்று நேரத்துக்கெல்லாம் பரிவாரங்களும், மந்திரி பிரதானியரும் புடைசூழ, அரசன் நுழைந்தான். எல்லோரும் எழுந்து நின்றனர். இருபுறமும் கட்டியக்காரர் கட்டியம் கூறவும், வேதியர் ஆசீர்வதிக்கவும், அரசன் சிம்மாஸனத்தின் படியேறி, பீடத்தில் உட்கார்ந்தான். பிறகு கையை அமர்த்தவே, அனைவரும் தத்தமிடத்தில் அமர்ந்தனர்.

சரபன் பல்லவி பிடித்தான். அந்த விமர்சையை நாம் இங்கு வர்ணிக்க முடியுமா? அரசன் முதல், சேவகன் வரையில் இன்பம் அடையாதவர்கள் கிடையாது. பொழுதாகவாக, கூட்டம் பெருகிவிட்டது.

இவ்வாறு எல்லோரும் கானரஸம் நுகரும்போது சற்றே நாம் மேல்மாடிக்குப் போவோம். பல்லவி எடுத்துச் சிறிது நேரத்துக்கெல்லாம், இராணியாரும் லலிதையும் மேல்மாடி வந்து சேர்ந்தனர். இருவரும் ஜன்னலின் புறமாய் நின்றுகொண்டு சரபன் பொழியும் அமிர்தத்தைக் காதின் வழியாய் உட்கொள்ளுகின்றனர்.

தோடி இராகம் முடிந்தது; அரசன் "சரப! நன்று! நன்று! மெச்சினோம் உன் திறமையை; சைவ சமயாசாரியர்களின் ஸ்தோத்திரங்களில் சிலவற்றைப் பாடக் கூடுமானால் தயவு செய்வாய்" என, சரபனும், "அப்பநீ அம்மைநீ அன்புடைய மாமனும் மாமியுநீ ...." என்னும் தேவாரத்தைத் துவக்கினான். பொருள் படவில்லை பலருக்கு; என்றாலும் நெஞ்சம் உருகுகின்றது; நிலையில்லா ஆனந்தக் கடலில் மூழ்கினர். 'இவர் நாரதரோ' என்றாள் ஒருமாது சிரோமணி! 'இவர் வரப்பிரஸாதியாம்' என்றாள் ஒரு நங்கை! 'கானரஸத்தினும் சிறந்தது மற்றொன்றுண்டோ' என்றாள் அரசி! 'உண்மையாகவே என் மனம் உருகுகின்றது; இல்லையா அம்மா!' என்றாள் லலிதாம்பிகை. "ஆம் குழந்தாய்! உன் திருக்கல்யாணம் வரையில் இவ்வித்துவானை நிறுத்திக்கொள்வார் போலும் உன் தந்தை" என, லலிதை முகம் சிவந்து தலை குனிந்தாள்.

சரபன், அத்தேவாரத்தை முடித்து "எத்தாயார் எத்தந்தை, எச்சுற்றத்தார்......"என்பதை எடுத்துச் சரமாரியாய்ப் பொழிகின்றான்! ஜனங்களின் தலையாட்டமும், கையசைப்பும், துடைத்தட்டும் சொல்லிமுடியா. இவ்வாறு ஸ்திரீகளும் புருஷர்களும் சரபன் வீசிய கானவலையில் அகப்பட்டுக்கொண்டு வேறு எண்ணமே யில்லாமல், அவன் ஆட்டியபடியெல்லாம் ஆடிக்கொண்டு இன்பக்கடலில் மூழ்கியிருக்க, காமன்வலையில் அகப்பட்டுக்கொண்ட லலிதை ஜயபாலராஜன்மேல் தியானமாய் அவ்விடம் விட்டு ஒருவருக்கும் தெரியாமல் மெள்ள நகர்ந்துவிட்டாள்.

பத்தாம் அதிகாரம்.

முத்திரை யிட்ட கடிதம்

மண்டபத்துள் பாட்டுக் கச்சேரி நடக்கும்போதே வெளியில் நிற்கும் இரண்டு காவலா

ளிகளும், தங்கள் காதில் அரைகுறையாய் வந்து விழும் கான அலைகளைமட்டும் பெற்று அவைகளே தங்களுக்குப் போதுமென்று திருப்தியுடன் சில சமயங்களில் கவனித்துக் கேட்டுக்கொண்டும், சில சமயங்களில் மேல் வரும் கல்யாணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டும், பக்கத்துக்கு ஒருவராய் நிற்கின்றனர்.

"ஏமாங்கா! நாளக்கிப் பாட்டுக் கச்சேரியானு, நம்ம காவல் முறையில்லியே; நாம் பொ மொதல்லே உட்புற மண்டபத்துக்குப் போயிருக்கணும்; இப்படி அரைகுறையாக் கேட்டா தீரப்போவுது! கேக்கணும் மொதலிலிருந்து கடைசிவரைக்கும்; அப்படித்தான் செய்யப்போகிறேன் நீயும் வரயல்ல" என்றான் சித்திரக்கிரீவன் என்பவன்.

"நீ என்ன! பே சங்கீதம் சங்கீதம் ஏங்கிறை; எனக்கு ஒண்ணும் தெரியரதில்லே. அடிக்கிறானே மத்தளம் அதுதான் எனக்குத் தெரியுது; பாட்டு நிறுத்திப்போட்டு இப்போ அடிக்கிறான் பார்! தீர்மானம். பேஷ் பேஷையா! இதுதான் நமக்கு ஸரி; நீ போனால் அதுக்கென்ன நானும் வரேன்."

"போவுது; நமது அம்மணிக்குக் கல்யாணம் நிச்சயமாச்சே, அதுவே போதும். ராசாவுக்கு ரொம்ப வருத்தம்; அம்மம்மா! ஏங்கிவிட்டார் பாவம்!"

"அதுதான் நமக்கும் சந்தோஸம்; ஏதோ கல்யாணத்தில் சரியாய் நடந்து நல்லபேர் வாங்கிக்கிட்டோமானுக்கா அப்புறம் தேவலை; என்னுங்கிறே சித்திரா."

"அது சரி; நல்ல பேரும் வாங்கணும்; அவுங்களுக்குத் தக்க மரியாதையும் பண்ணணும்; வேடிக்கையும் பாக்கணும்; நல்ல மஹாராஜா நம்ம அரசனைப்போல் உண்டா சொல்லப்பா பாக்கலாம்! அடடே உள்ளே எல்லாரும் கைகொட்டராங்கோ!"

"பாட்டு நன்னா இருக்குது என்னு கொட்டறாப்போலிருக்கு;—நமது ராணியும் சரி; அம்மணியும் சரிதான்; எல்லாரும் தங்கமான மனுஷர்; அன்னிக்கு அம்மணி கோயிலுக்குப் போய்வந்துதே, அன்னிக்கு அரமனை வாசலில் சேவகம் பண்ணிக்கிட்டு இருந்தேன். 'என்னடா ஏமாங்கதா சௌக்கியமாய் இருக்கையா' என்னிச்சு; நமக்கு வெகு சந்தோஷமாய்ப் போச்சு—."

"சந்தேகமென்ன; அம்மணி சாதாரணம் என்னு எண்ணிக்கிட்டையா? நம்ம குல தைவமடா! மஹராசி! அவளை நினைத்துக்கிட்டால் அல்லவா நமக்குச் சோறு கிடைக்கும்?—"

இதற்குள் மெத்தைப் படியின் வழியாய் யாரோ நடக்கும் சப்தம் கேட்டது. ஏமாங்கதன் வாசற்படியை விட்டு உள்ளே தென்புறமாய் மெத்தைப்படிக்கு ஓடினான். ஏனெனில், ஆடவர் எவராவது மேலே மெத்தையேறிப் போகிறார்களோ, பெண்டிர் இருக்கும் இடமாயிற்றே என்று அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவன் போகும் சமயத்தில் ஓர் பெண்ணுரு சட்டென்று லதாக்கிருஹத்தில் மறைவது மட்டுந்தான் தென்பட்டது. யாரோ இராஜ ஸ்த்ரீ அரண்மனையுட் போயினள் என்று எண்ணித் திரும்பி விட்டான் ஏமாங்கதன்.

சித்திரக்கிரீவன் "என்னடா தம்பீ அங்கே, என்ன—" என்று கேட்டான்.

"யாரோ அம்மா அரமனை போவுது தோட்டத்து வழியா—"

"இவ்வளவுதானா! இதுக்கா இந்த ஓட்டம் ஓடினே."

"யாராச்சி ஆம்பளே மேலே போரானோ என்னவோ என்னு ஓடினே."

உண்மையாகவே போனவள் லலிதை. மேற்சொன்னபடி எல்லாரும் கானரஸம் அருந்தும்போது மெதுவாய் நழுவிவிட்டாள் அல்லவா? அவள்தான் அரண்மனைக்குப் போனவள். ஏமாங்கதன் வந்து படியண்டை பார்ப்பதற்குள் லலிதை லதாக்கிருஹத்தில் நுழைந்துவிட்டபடியால் அவள் இன்னாளென்று ஏமாங்கதன் அறிந்துகொள்ள முடியவில்லை.

இவ்வாறு இவ்விரண்டு சேவகர்களும் பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் சுற்று வளைப்புக்கு வெளியே விளக்கு வெளிச்சத்தில் மூன்று குதிரைகள் வருவதைக் கண்டனர். முதலில் வந்தவர் இருவரும் மகமதியச் சிப்பாய்கள். இவர்களுக்குச் சற்றுப் பின்னே வந்தவர் ஒரு பிராமணோத்தமர். அவருக்குப் பின்னால் மூன்று சேவகர்கள் தங்கள் குதிரைகளின்மேல் வளைப்புக்கு வெளியே நின்றுவிட்டனர். உள்ளே நுழைந்த மூவரும் மண்டபத்தின் முன்னே குதிரைகளை விட்டிறங்கினர். பெரிய சிப்பாய் தன் குதிரையையும்,

பிராமண எஜமானன் குதிரையையும் இளம் சிப்பாயிடம் ஒப்புவித்துவிட்டு, பிராமணரை அழைத்துச் தலைவாயிலுக்குச் சென்றான். மண்டப வாயிலில் வரவும், ஏமாங்கதன் "சுவாமி! தாங்கள் யார் இப்பொழுதில் இங்ஙனம் வந்தது!" என்று கேட்டான்.

துருக்கச் சிப்பாய் "யாரா? யாரென்று தெரியவில்லை உனக்கு! விந்துபாக்ஷா ஆமத் சுல்தான் பகதூர் சேவகன் நான்! எங்கள் பார்ப்பார மந்திரி இவர் தெரியாது உனக்கு!" என்று இந்துஸ்தானியில் சொன்னான்.

ஏமாங்கதன் "நீ சொல்வது ஒன்றும் தெரியவில்லையே!" என்றான்.

பிராமணோத்தமர் "பிள்ளாய் விந்துபாக்ஷா ஆமத் சுல்தானிடமிருந்து, அவர் பிரதானி ஒருவர் அனந்தபட்டர் அவசரகாரியமாய் வந்திருப்பதாகச் சொல்லு; உடனே சொல்லிவா!" என்றார்.

ஏமாங்கதன் "சுவாமீ! உள்ளே பாட்டுக்கச்சேரி நடக்குதுங்கோ; இப்பொழுது போகவேண்டுமென்று உத்தரவானால் உடனே போகிறேன். தங்கள் சித்தம் எப்படியோ?" என்று சற்றே தயங்கினான்.

சிப்பாய், ஏமாங்கதன் சொல்வதை அரைகுறையாய் அர்த்தம் பண்ணிக்கொண்டு "போவென்றால் உனக்கு என்ன வோய்! என்னவோ பேசுகிறாய் யோசியாமல்! நாங்கள் யார் என்று நினைத்தாய்? செலவுக்கு வேண்டுமா ஏதாவது? உஷார்! மகனே! உஷார்!—" என்றான்.

அனந்தபட்டர் "சிபாய்! நீ ஏன் கோபிக்கின்றாய்? சேவகன் சொல்வது சரியே! அரசன் பாட்டுக்கச்சேரியில் இருக்கும்போது சேவகன் போய் அவரைத் தொந்தரவுசெய்வது நன்றாய் இராது என்ற அபிப்பிராயத்துடன் அவ்வாறு சொல்லுகின்றான்—(மறுபடி ஏமாங்கதனைப் பார்த்து) "நல்லது பிள்ளாய்! என் காரியம் மிக அவசரம்; நான் மறுபடி நாளைகாலையில் இவ்விடமிருந்து காரியம் முடித்து விட்டுப் புறப்படவேண்டும். ஆகையால் என் வரவை உடனே தெரியப்படுத்த வேண்டியது அவசியம்; போய்வா—" என, ஏமாங்கதன் சிறிது யோசனைசெய்து "சித்திரா! உள்ளேபோய் மந்திரியார் பக்கத்தில் குமாஸ்தா நிற்கின்றனர் அவரிடம்சொல்லி அரசனுக்குச் சங்கதி தெரிவித்து வா" என்றான்.

சித்திரக்கிரீவன் உள்ளே போக, ஏமாங்கதன் தன்முன்னே இருபுறமும் வளர்த்திருக்கும் பூஞ்செடிகளையும் அவற்றின் நடுவில் அலங்காரமயப் போட்டிருக்கும் கல்லாற் செய்த ஆஸனங்களையும் காண்பித்து, "ஐயா தாங்கள் உட்கார்ந்து சற்று இளைப்பாறவேண்டும்" என்று சொல்லுமுன்னரே, வெகுதூரம் குதிரை சவாரி செய்துவந்து களைத்துப்போன அனந்தபட்டர் செடிகளுள் நுழைந்து ஒரு ஆஸனத்தில் உட்கார்ந்தார். கீழே நிலத்தில் உட்கார்ந்துகொண்டான் சிப்பாய். உட்கார்ந்தவுடன் அனந்தபட்டர் சிப்பாயைப் பார்த்து, "மல்லீக், உன்வாலை இங்கே வீசாதே, நறுக்கிவிடுவார்கள். ஜாக்கிரதை" என்றார்.

நமது பழைய சிநேகிதனை மல்லீக் "என்ன சாமி நான் செய்கிறேன்; நம்மை அவமரியாதை செய்தால்—"

"சரி! சரி!! சும்மாவிரு, பார்ப்போம்"

அனந்தபட்டர் என்ன காரியத்துக்காக உதயபுரிக்கு வந்திருக்கின்றார் என்பது நமக்குத் தெரியும். ஆனால் பிரதாபசிங்குக்காவது அவர் சேவகர்களுக்காவது அவர் வந்த காரியம் எப்படித் தெரியும்? அனந்தபட்டருக்கோ, இக்காரியத்தில் தான் சிக்கிக்கொண்டதற்கு மிகவும் வருத்தம். தன்னுடன் வந்த 'மொரட்டுச் சிப்பாய்' செய்யும் வேலைகளைப் பொறுக்கமாட்டாமல் ஒருபுறம் துக்கம்; ஏனெனில், வழியில் வரும்போது ஒவ்வொருவருடனும் சண்டை பிடிப்பதுதான் அச்சிப்பாய்க்கு வேலை! இவ்விசாரங்களோடு, அரசன் பிரதாபசிங்கனைக் காணவும் சமயம் ஏற்படாதோ, என்று ஒருபுறம் ஏக்கம்! "அவர் எதிரே போனால் என்ன சொல்வது? எவ்விதம் சம்பாஷிப்பது? கடிதத்தை முதலில் காட்டுகிறதா? அவரே பிற்பாடு பார்த்துக் கொள்ளலாமென்றாலும் நன்றாய் இருக்குமே" என்று எண்ணுகிறார். "எவ்வளவோ பேர் கூடியிருக்கும் சபையில் 'பூஜை சமயத்தில் கரடி விட்டதுபோல்' நான் எவ்வாறு செல்வேன், சிவனே! சிவனே!!" என்று தன் புத்தி நுட்பம் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் உபயோகித்து ஆலோசனையில் ஆழ்ந்து கிடந்தார்.

"ஏண்டா என்ன சொன்னார், உங்கள் ராஜா?" என்று சிப்பாய் கத்தியது, ஏமாங்கதன் மண்டபத்திலிருந்து திரும்பிவந்து விட்டான் என்று அனந்தபட்டருக்குக் காட்டியது. அனந்தபட்டரும் ஏமாங்கதன் முகத்தைப் பார்க்க, அவன் "சுவாமீ, உங்களை உடனே உள்ளே அழைத்து வரும்படி உத்தரவாய் இருக்கின்றது. தங்களை வெளியே இதுகாறும் நிறுத்திவைச்சதே எங்கள்மேல் பிசகு; மன்னிக்கவேண்டும். எழுந்திருக்கலாம்" என, அனந்தபட்டர் "சிப்பாய், நீ இவ்விடமே இரு! இங்கிருந்து எங்கேயாவது போய் ஒருவருடனும் சண்டையிடாதே—சேவகா! அதோ நிற்கின்றானே, கவுஸ், அவன் மிக நல்லவன். அவனுக்குத் தக்க இடம் காட்டு. குதிரையைக் கட்டிவிட்டு வரட்டும். இடம் காட்டாவிட்டால் நாளை வரை ஆனாலும் சரி, அங்கேயே நிற்பான்" எனச்சொல்லி மறுபடியும் கவுஸ் இருக்கு மிடத்தை நோக்கி "கவுஸ்! குதிரையைக் கட்டிவிட்டு நீயும் மல்லீக் இருக்குமிடம் வந்து சேர்" என, சிப்பாய் "மஹாராஜ்! நானும் தங்களுடன் மெய்க்காப்பாளனாஉள்ளே வருகிறேன், மஹாராஜ்!" என, அனந்தபட்டர் "மெய்க்காப்பாளனும் ஆச்சு பொய்க் காப்பாளனுமாச்சு, போவோய் இரு இங்கே சுகமாக" என்று சொல்லிவிட்டுச் சித்திரக்கிரீவனுடன் உள்ளே நுழைந்தார்.

ஏமாங்கதன் சித்திரக்கிரீவன் பக்கத்தில் சென்று காதோடு "அண்ணே! நீ போய்ச் சாமியாரை உள்ளே விட்டுவா; அப்படியே நீ ஆசைப்படுவதால் கொஞ்சம் பாட்டுக் கேட்டுவா" என்று சொல்லி நகைத்தான்.

உள்ளே சென்ற அனந்தபட்டர் மண்டப மத்தியில் சிம்மாசனத்துக் கெதிரே விட்டிருந்த வழியூடேசென்று, சபா மண்டபத்தின் பக்கத்தில் வந்து சேர்ந்தார். உடனே அனந்தபட்டர் வணங்க, அரசன் தலையை அசைத்து, வரவேண்டுமென்று சொல்லித் தன் பக்கத்தில் ஓர் ஆஸனத்தில் அமரும்படி சொன்னார். அவரும் அப்படியே செய்ய அரசன் மெதுவாய் "எல்லோருங் க்ஷேமமா?" என அனந்தபட்டர் "ஆம்" என்று தலை குனிந்தார்.

அரசன் "நல்ல சமயத்தில் வந்தீர், நிரம்ப சந்தோஷம்" என, அனந்தபட்டர் "இராஜாதிராஜனே, நான் வந்த வேலை வெகு அவசரம். உங்களிடமிருந்து இக்கடிதத்துக்கு உடனே பதில் பெற்றுவரும்படி என் அரசனுடைய உத்தரவு. ஆனால், நானே இக்காரியத்துக்கு வரவேண்டியதாயிற்றே என்றுதான் எனக்கு மனவருத்தம். ஆனாலும் தீரவில்லை" என, அரசனுக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டாயிற்று. ஏன் இப்படிப் பேசுகிறார் என்று அவர் முகத்தை உற்றுப் பார்த்தான். அவர் தலை குனிந்துகொண்டார். என்ன விஷயமோ, ஏதோ, என்றறிய அரசனுக்கு ஆவல் தூண்டியபோதிலும், மேலுக்குமட்டும் புன்சிரிப்போடு "என்ன காரியம், ஐயா" என்றான்.

அனந்தபட்டர் "அரசே, நான் சொல்வதைவிடத் தாமே இக்கடிதத்தைப் படித்தால் விஷயம் தெரியவரும்" என்று முத்திரையிட்ட கடிதம் ஒன்றை அரசன் கையில் கொடுத்தார். அதைக் கையில் வாங்கிக்கொண்டு தன் வலது புறத்தில் உட்கார்ந்திருந்த மந்திரி சுமதியின் முகத்தைப் பார்க்க, அவன் எழுந்து வந்து, கடிதத்தைத் தான் வாங்கி உடைத்து அரசன் கையில் கொடுத்தான். அரசன் படிக்கத் தொடங்கவே, ஒரு நிமிஷத்தில் அரசன் முகம் வாட்டம் கொடுத்தது. கடுத்த முகத்துடன் கடிதத்தை உற்றுப்பார்ப்பானாயினான். நெற்றி வியர்த்தது. உதட்டைக்கடித்துக் கொண்டான். முகம் கறுத்தது. சபை நடுங்குகின்றது. ஒருவன் முகத்தை ஒருவன் பார்க்கின்றான். எல்லோரும் அனந்தபட்டரைப் பார்க்கிறார்கள். "யமனோ இந்த வேஷத்துடன் இராஜசபையில் புகுந்தான்!" என்று எண்ணினர் சிலர். "சனி பகவானோ!" என்று ஏங்கினர் பலர். ஆனால் அவரோ ஒருவரையும் பார்க்கவில்லை; குனிந்த தலை நிமிரவேயில்லை. மூச்சுக்கூடப் பலமாய் விடவில்லை ஒருவரும். ஒவ்வொருவனுக்கும் தன் மார்பு அடிக்கும் சப்தம் கேட்கின்றது. சரபனுடைய வீணை தானே நின்றுவிட்டது. விழிக்கிறான் சரபனும். நிற்கின்றார் சுமதி மந்திரியார் ஸதம்பம் போல் பக்கத்தில்! அரை நாழிகையாயிற்று. அது சபையோர்க்கு ஒரு யுகம்போல் தோன்றிற்று. அரசன் கடிதத்தை மடக்கிக்கொண்டு தலை நிமிரும்போதுதான், கீதம் நின்று விட்டதென்பதையும், எல்லோரும் தன்னை பார்க்கின்றனர் என்பதையும் அறிந்தான்.

எப்படியும் பிரதாபசிங்க ராஜன் க்ஷத்திரியன் அல்லவா? இராஜாதிராஜர் வம்சத்தில்பிறந்

உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடலாமா?

உல்லாச நடை மெலுக்குக் கேடு, மினுக்கு எண்ணெய் தலைக்குக் கேடு.

தவன். தன்மனவலிமைகுறைந்ததென்பதைப் பிறர் அறியும்படி செய்துகொண்டதற்காகச் சற்றே தன்னை நொந்தவராய், முகத்தை மலர வைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். நெஞ்சிலிருந்து வார்த்தை வரவில்லை. ஒருதரம் கனைத்துவிட்டுக் கொஞ்சம் உரப்பாய் "சரப! அரசன் கேட்பதற்கு மட்டும்தான் ஏற்றதோ உன் வீணை! எல்லோரும் உன் பாட்டையும் வீணாகானத்தையும் கேட்க ஆவலாயிருக்க, இங்ஙனம் ஏன் அப்பா நிறுத்திவிட்டாய்? நான் கடிதம் படித்தால், நீ வீணை வாசிப்பதில் என்ன தடை," என்று சொல்ல? சரபனும் தலை குனிந்து "என்ன மாயமோ—ஏதோ—" என்று நீலாம்புரியில் மறுபடியும் பாடத் தொடங்கினான்.

பாட்டு ஆரம்பித்ததும், பிரதாபசிங்கன் அனந்தபட்டரைப் பார்த்து, "உம்மரசன் கொடுத்த கடிதமோ இது?" என, அனந்தபட்டர் குனிந்தபடியே "ஆம்" என்றார்.

அரசன் மௌனமாய்ப் பாட்டுக் கேட்பது போல் பாசாங்கு செய்தான். ஆனாலும் "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முக"மாதலால் எல்லாருக்கும் அரசன் விசாரப்படுகிறார் என்பது தெரிந்துவிட்டது. ஆகையால் பாட்டுக் கேட்பதில் அநேகர் பிரியப்படவில்லை. அதேசமயத்தில் 'திப் திப்' என்ற சப்தம் வாசற்புறமிருந்து கேட்கவே, அதன் பக்கத்தில் இருந்த சிலர், வீதியில் ஓடினர். அவர்களைப் பார்த்துப் பலர், விஷயம் என்னவென்று தெரியாமலே தாங்களும் ஓடினர். இதுதான் நல்ல சமயம் என்று எண்ணி அரசனும் சபை கலையலாம் என்று உத்தரவு கொடுத்து அந்தப்புரம் நோக்கிப் புறப்பட்டார். சரபனும் மங்களம் பாடிவிட்டான். மந்திரியும் அரசனுடன் சென்றான். போகும் அவசரத்தில், பிரதாபன் அனந்தபட்டருக்கு உபசாரம் கூடச் சொல்ல மறந்துவிட்டான். இதைப்பார்த்து நின்ற வீரேசன் என்ற இரண்டாவது மந்திரி அனந்தபட்டரிடம் நெருங்கி "ஐயா! உமக்கு வீடு தயார்செய்து இருக்கிறது. அவ்விடம் தங்களை அழைத்துப் போகும்படி அரசன் உத்தரவு; போவோம் வாரும் இப்புறமாய்" என்று வீதிப் புறத்து வாயிலின் வழியாய் அவரை அழைத்துச் சென்றான். உண்மையாய் அரசன் யாதொன்றும் சொல்லவில்லை. என்றாலும் மந்திரிமார்கள், சொல்லாமலே அறிந்து செய்யவேண்டிய காரியமன்றோ இது!

வீரேசனும் அனந்தபட்டரும் வீதிவழியாய்ப் போகப் பிரயத்தனப் பட்டபோது அங்கே நிகழ்ந்த அலங்கோலத்தை மேல் அத்தியாயத்தில் பார்ப்போம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

பூனையால் வந்த பெருங்கேடு

நான்கு பேர்களாகச் சேர்ந்து கூட்டாகப் பஞ்சு வர்த்தகம் பண்ணினார்கள். அவர்கள் நல்ல புத்திசாலிகள்; அதிலும் முன்யோசனையுள்ளவர்கள். ஆகவே, எலிகளால் பஞ்சு மூட்டைகளுக்குக் கெடுதி நேரிடாது பாதுகாக்க, ஒரு பூனையை வளர்த்துவந்தார்கள்; எலிகளை மென்றுதின்று பஞ்சுமூட்டையைக் காக்கும் அந்தப் பூனையினால் தமக்கு வரக்கூடிய நன்மையை உத்தேசித்து, அதனிடம் தாம்கொண்ட அன்பைக்காட்ட அதன் கால்களுக்கு நல்ல ஆபரணங்களை அணிவிக்க எண்ணங்கொண்டார்கள். ஆகவே அவர் ஆளுக்கொரு காலாகப் பங்காசாரங்கொண்டு அதன் கால்களைத் தண்டை கொலுசு முதலான நகைகளால் அலங்கரித்தார்கள். பாலைக் கண்டால் பதுங்கித் திருடுவது பூனைக்கு ஸஹஜம். அதன் தர்ம விருத்தியைச் செய்யும்போது, அப்பூனையின் காலொன்றில்காயம்பட்டது. அவ்விரணத்தைஆற்ற அக்காலிற்குச்சுதந்தரக்காரன் அதற்குஎண்ணெய்ச்சீலை ஒன்றைச் சுற்றிவைத்தான். ஆனால் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தரியும் பாடும்' என்பது போல, அவ்வர்த்தகர்களிடம் வளர்ந்த அப்பூனைக்குத் தனது தர்மவிருத்தியை விட மனம் வரவில்லை. அப்படியிருந்ததால் அது அடுப்பங்கரையைத் தேடினால் ஆச்சரியம் என்ன இருக்கிறது? பால் குடிக்கப்போய் நா சுடிக் கொள்வதற்குப் பதிலாக அப்பூனை தன்காலில் சுற்றிய எண்ணெய்ச் சீலை தீப்பற்றும்படி வைத்துக்கொண்டது. அதைக் கண்ட பூனை

வெருண்டு என்ன செய்வதென்று அறியாமல் பஞ்சு மூட்டைகளின்மேல் விழுந்தடித்துக் கொண்டோடியது. அதனால் அம்மூட்டைகள் அக்நிபகவானுடைய ஸம்பூர்ண அநுக்ரஹத்திற்குப் பாத்திரமாயின.

இவ்விஷயங்களை யறிந்த மற்ற மூன்று கூட்டாளிகளும், பூனைக்காலிற்கு எண்ணெய்ச்சீலை கட்டிய கூட்டாளியைத் தமது நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினர். ஆனால் எதிர்பாராமல் நேர்ந்த நஷ்டத்திற்குத் தான் ஆளாக முடியாதென அவன் வாதித்தான். அதற்கு உடன்படாத அம்மூன்று பேர்களும் நியாயாதிபதியாய் விளங்கின மரியாதைராமனிடம் தமது வியவஹாரத்தைச் சொல்லி விசாரணை செய்யக் கேட்டுக் கொண்டார்கள்.

அந்த நியாயாதிபதி பிரதிவாதியை யழைப்பித்து, நடந்தவற்றை விசாரித்தான்; வாதிகளின் பேச்சையும் கவனித்தான்; மறுநாள் தீர்ப்புச் சொல்வதாகச் சொன்னான்.

இந்த வியவஹாரம் வெகு விநோதமாக இருந்ததால், மரியாதைராமன் எப்படித் தீர்ப்புச் செய்கிறானோ என்பதைக் கவனிக்க வாதிப்பிரதிவாதிகள் தவிர்த்து, அநேக ஜனங்களும் வந்திருந்தார்கள். மரியாதைராமன் ஆசனத்தில் வந்துட்கார்ந்ததும், எங்கும் பெரும் ஆரவாரம் உண்டானது. சற்றுநேரத்திற்குள் அது அடங்கிவிட்டது. அப்போது எல்லோரும் மரியாதைராமன் என்ன சொல்லப்போகிறான் என்று வெகு ஆவலோடு கண் கொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் செய்த தீர்ப்பு, வெகு அதிசயமானது. அவரது புத்திசாலித்தனத்தை நன்கு விளக்கிய அத்தீர்ப்பு வருமாறு:—

"இந்த விஷயம் அதிசயமானது. பிரதிவாதிகள் சட்டவிருத்தமாக நடக்கப் பிரியப் படாதவர் என்பதை அவர் கொடுத்த அர்ஜியே வெளிப்படுத்தும். அவர் சொல்வதாவது: 'நாமும் பிரதிவாதியும் உடன்படிக்கைப்படி செய்துவந்த வியாபாரப் பொருள்களாகிய பஞ்சு மூட்டைகள் எலிகளுக் கிரையாகாதிருக்கும்படி ஒரு பூனை வளர்த்துவந்தோம். அப்பூனையிடம் நாங்கள் கொண்ட சுதந்தரத்தைப்பாராட்ட அதன்கால்களை ஆளுக்கொன்று சொந்தம் பாராட்டி, அவரவர்களுக்குச் சொந்தமான காலை ஆபரணங்களால் அலங்கரித்தோம். ஒருநாள் அந்தப் பூனையின் காலொன்றில் காயம்பட்டது. அந்தக் கால் பிரதிவாதிக்குச் சுதந்தரமானது. ஆகவே அவன் அதன் காலுக்கு ஒரு எண்ணெய்ச்சீலை கட்டியிருந்தான். அந்தப் பூனை நெருப்பருகு போகவே, காலிற் சுற்றியிருந்த எண்ணெய்ச்சீலையில் நெருப்புப் பற்றிக்கொண்டது. வெருண்ட பூனை பஞ்சு மூட்டைகளின் மேல் ஓடவே, பஞ்சு மூட்டைகள் வெந்து சாம்பராயின. பிரதிவாதி பூனைக் காலில் எண்ணெய்ச்சீலை கட்டியிராவிட்டால், இந்த விபரீதம் நடந்திருக்காதாகையால், அவன் எங்களது நஷ்டத்திற்கு உத்தரவாதமாயிருக்கவேண்டும்.' வாதிகள் சொல்வதில் கடைசி வாக்கியம் தவிர்த்து மற்றெல்லாவற்றையும் பிரதிவாதி ஒப்புக் கொள்வதால், அவ்விஷயங்கள் உண்மையா இல்லையா என்பதை நாம் கவனிக்கவேண்டியதில்லை. நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுதான். அதாவது, பஞ்சு மூட்டைகள் வெந்து நீறானதற்கு யார் உத்தரவாதம் என்பதே. "பூனைக்குக் கால் பதினேழே" என்று காளமேகப் புலவர் பாடியிருக்கிறார். அது சட்ட ஸம்மதப்படாமையால் நாம் கவனிக்கத் தகுந்ததன்று. பூனைக்குக் கால் நான்குதான் என்பது சிறு குழந்தைக்கும் தெரியும். அந்த நான்கு கால்களை, ஆளுக்கொருவராக வாதிப்ரதிவாதிகள் சுதந்தரம் பாராட்டி வந்தனரென்பது இருவராலும் ஒப்பப்பட்ட விஷயம். காலில் எண்ணெய்த்துணி கட்டியபோது அந்தப்பூனை ஓடினதற்கு யார் உத்தரவாதம்? அது ஓடாதிருக்கும் பக்ஷத்தில், துணியும் பற்றியிராது; பஞ்சு மூட்டையும் வெந்திராது. மேலும் அப்பூனை ஓடுவதற்குப் பிரதிவாதிக்கு உரிமையானதும் அப்பூனைக்குச் சொந்தமானதும் ஆன எண்ணெய்த்துணி சுற்றிய கால் காயமடைந்திருந்தபடியால், நடக்கமுடியாது. ஆகவே, நெருப்பண்டை அதுபோக வாதிகளுக்குச் சொந்தமான கால்களே காரணமாகும். அக்கால்கள் நடவாதிருந்திருந்தால், பூனை நெருப்பண்டை போயுமிராது; பஞ்சு மூட்டைகளும் வெந்துபோயிராது என்பன நன்கு விளங்கும். ஆகவே, யாராவது நஷ்டமடைந்திருந்தால், அது பிரதிவாதியே யல்லாமல் வாதிகள் அல்ல; யாராவது நஷ்டத்திற்கு ஈடு பெறவேண்டுமானால், அதுவும் பிரதிவாதியே

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி :—19 துப்பு

நிற்க, வீமமன்னவன் வெகு மரியாதையுடன் ருதுபர்ண மஹாராஜனை எதிர்கொண்டழைத்து உபசரித்தார். தன் பெண்மேல் ஆசைகொண்டு அங்கு அவன் வந்ததை உணராத அவ்வீமராஜன் "அரசரேறே! உமக்கு நன்மையே உண்டாகட்டும்! உமது வரவு நன்மையே பயக்குமாக!" என முகமனியம்பி, ருதுபர்ணரை நோக்கி "தாங்கள் இங்குவர நான் தன்யனானேன். உங்கள் நாடு செழித்து வருகின்றதென நம்புகிறேன். நீங்கள் இருக்குமிடம் மநுநீதி தவறாதென்பது வெளிப்படை. வியவஹாரமில்லாமல் நீங்கள் இவ்வளவு தூரம் வந்திருக்கமுடியாது. தங்கள் விருப்பம் எதுவோ, அதைச் சொன்னால் அதற்கிணங்க நானும் நடப்பேன். இரகசியமில்லாவிட்டால் இங்கேயே சொல்லலாம் என நினைக்கிறேன்" என வினவினர்.

இம்மொழிகளைக் கேட்ட ருதுபர்ணன் சற்றே சிந்திக்கலானான். முன்னமேயே ஸந்தேஹங்கொண்ட அவன், "ஸ்வயம்வரம் என்ற பேச்சு வீணேச்சு. இங்கு வீமன் மகனுமில்லை; மகளுமில்லை. பிராஹ்மணர்கள் ஒருவரையாவது காணமுடியவில்லை. நாம் வீணே மதிமோசம் போனோம். ஆனால் இதில் ஏதாவது சூழ்ச்சியிருக்குமென்று நம்பமுடியவில்லை. அந்தப் பிராஹ்மணரும் பொய் சொல்லார்; வீமமன்னவரும் தம் பெண்ணுக்கு இரண்டாவது ஸ்வயம்வரம் செய்வதாயிருந்தால் இம்மாதிரியாகப் பேசார். இது விசித்திரமாக இருக்கின்றது" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். பேசாது மௌனமாயிருந்த ருதுபர்ணனை நோக்கி "ருதுபர்ணரே! இவ்வளவு நாடு கடந்து நெடுந்தூரத்திலிருந்து என்னைக் காண வந்த காரணமெதுவோ?" என வீமமன்னவர் விநயத்தோடு கேட்டார்.

"தங்களைக் கண்டு என் நன்றியறிதலைக் காட்டவென்றே இங்கு வந்தேன். மற்று விசேஷமொன்றுமில்லை. பெரியோரைத் தரிசிப்பது பெரும் புண்யமல்லவா?"

"நீங்கள் சொல்லுவதை நம்புவது அஸாத்யம்! அவ்வளவு நாடுகளைக் கடந்து வந்ததற்கு இந்த அற்ப ஸமாசாரம் காரணமாயிருக்கக் கூடுமோ? அது எனக்குக் கொஞ்சம் ஸந்தேஹந்தான். ஆனால் தாங்கள் நேரே சொல்லும்போது அதைப்பற்றிப் பேசுவது தவறு. அது போகட்டும். நீங்கள் வெகு சிரமப்பட்டு இங்கு வந்திருப்பதால், முதலில் இளைப்பாறும். பின் எல்லாம் ஸாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்" எனச் சொல்லி ருதுபர்ணருக்குத் தனி விடுதி ஒன்றுவிட வீமராஜன் ஏற்பாடு செய்தான். அன்புடன் உபசாரஞ்செய்த வீமரிடம் செலவு பெற்றுக்கொண்டு தனக்காக விடப்பட்ட தனி விடுதியை யடைந்து, அவன் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். வார்ஷ்ணேயனும், வாகுகனும் ருதுபர்ணனைத் தனி விடுதியில் விட்டதும், தேரை அதை விடும் சாலையில் விட்டு, குதிரைகளை அவிழ்த்து விட்டனர். கடுவேகத்துடன் ஓடியிளைத்திருந்த அக்குதிரைகளை வாகுகன் தட்டிக் கொடுத்து, உபசாரங்கள் செய்தானதும், அத்தேர்த்தட்டின் மீது ஏறி உட்கார்ந்தான்.

வாகுகனையும் வார்ஷ்ணேயனையும் ருதுபர்ணனையும் அம்மாடி மீதிருந்து கண்ட தமயந்தி, தன் கணவனைக் காணாது சிந்தைக்காளானாள். "என்ன மாயமிது! என் காதே எனக்குப் பொய்த்துவிடுமோ என்னவோ தெரியவில்லை. அப்பொழுது கேட்ட சப்தம் நளமன்னவர் தேரோட்டும் ஒலியல்லவென்று என்னால் நம்ப முடியவில்லை. அப்படி யில்லாவிட்டால் அத்தேரோசை யாரால் கிளம்பியிருக்கும்? என் முன்னோ, நளமன்னவரைக் காணமுடியவில்லையே. அப்படியிருக்க, அது ருதுபர்ணரிடம் வேலை செய்வதற்கமர்ந்த வார்ஷ்ணேயன் தேர்செலுத்தும் ஒலியா? நெடுநாள் பழகித் தன் தலைவருடைய தேரோட்டும் வித்தையைக் கற்றுவிட்டனனோ? ஒருவேளை யதனால்தான் அத்தேரொலி அப்படி யிருந்ததுவோ? அல்லது, ருதுபர்ணர்கூட நளமன்னவரைப் போலவே தேர்விடுவதில் சமர்த்தரா? அதனால்தான் அந்தச் சப்தம் நளரோட்டும்போது ஏற்படும் நாதத்தையே யுண்டாக்கியது போலிருக்கிறதோ? என்னவோ! யாருக்குத் தெரியும்?"—இவ்வாறு அவள் சிந்தித்தாளானாலும், அவள் மனத்துள், அன்று நிச்சயமாகத் தான் தன் தலைவனைக் காணமுடியும் என்ற நம்பிக்கை உள்ளூற வேலைசெய்துகொண்டே யிருந்தது.

எனவே, அவள் தன் தோழியாகிய கேசினியைத் தருவித்துச் சொல்லலுற்றாள்:— "அடி கேசினி! அதோ தேர்மேல் விகார உருவத்துடனும் சூம்பிய கையுடனும் இருக்கிறாரே, அவரை யாரென அறிய என் மனம் விரும்புகிறது. அவர் நளராகவே இருப்பரோ என்று எனக்குப் பெரும் ஸந்தேஹம். அவரைப் பார்க்கப் பார்க்கப் பெரிதும் என் மனம் களிப்படைகிறது; என் உள்ளம் கவலையற்று விளங்குகிறது. அவரிடம் உன் இயற்கை சாதுர்யத்துடன் பேசி, அவர் இன்னார் என, நீ அறிந்து வரவேண்டும். அது மாத்திரமல்ல. பேச்சுமுடியும்போது முன் பர்ணாதர் சொல்லிய மொழிகளையே சொல்லு. அப்பொழுது சொல்லும் மறுமொழியைச் சொல்லிய தெப்படியோ அப்படியே இங்குவந்து கூறுவாயாக!" இம்மொழிகளைக்கேட்ட கேசினி உடனே தன் தலைவியின் விருப்பத்திற்கிணங்கி, வாகுகர் இருக்குமிட மடைந்தாள்.

"மனிதருள் பெரியவரே! நீர் வாழ்வீராக! உமது வரவு எங்கும் நன்மையே பயக்கும் என்பது என் நம்பிக்கை. பெண்ணொருத்தி உம்மிடம் வந்து பேசுவதை மன்னித்தெமக்கு மறுமொழி யளிக்கவேண்டும். எங்கள் அரசர் மகள் தமயந்தி, உம்மைச் சில விஷயங்கள் கேட்டுவரச்சொன்னதால் நானிங்கு வந்தேன். அந்த அம்மாள் சொல்லியனுப்பிய ஸமாசாரமுண்டு சில. அவற்றைக் கேட்டுத் தகுந்த மறுமொழி கூறுவீர் என நம்புகிறேன். தமயந்தி யவற்றைக் கேட்க வெகு ஆவலா யிருக்கிறாள்—" என்று சொல்லிக் கொண்டிருந்தாள் கேசினி.

"எமதரசர் ருதுபர்ணர்; அயோத்திக்கு அரசர்; அவர் தமயந்திக்கு நாளை இரண்டாம் ஸ்வயம்வரம் நடப்பதாகக் கேள்விப்பட்டு, தமது உத்தம புரவிகளை நம்பி இன்று காலை புறப்பட்டு இப்போதிங்கு வந்தடைந்தார்—' என்றான் வாகுகன்.

"நீங்கள் இங்குவந்தவர் மூவருள் இரண்டு பேர்களே இங்கிருக்கிறீர்கள். இன்னொருவர் எங்கே? நீங்கள் யார்? அதோ இருக்கிறாரே அவர் யார்?"

"அங்கிருப்பவர் வார்ஷ்ணேயர்; ருதுபர்ணருடைய ஸாரதி. ருதுபர்ணர் தம் விடுதிக்குச் சென்றிருக்கிறார். நானும் குதிரைகளை ஓட்ட வல்லவன்; அத்தொழிலில் நல்ல அனுபவமுண்டென்று நான் சொல்வது தவறாகாது. ருதுபர்ணரிடம் நானாகவே இவ்வேலையில் அமர்ந்து அவரது அன்பிற்குப் பாத்திரனாக இருக்கிறேன்."

"பெரியவரே! நீங்கள் சொல்வது ஸரிதான். இவ்வார்ஷ்ணேயர் முன், நள மன்னவரது ஸாரதியாக இருந்தவரென எமக்குக் கேள்வி. அது உண்மைதான் என்று நம்புகிறேன்."

"ஆம்."

"அப்படியானால் நளமன்னவரை நன்கு அறிவர். ஆகையால் அவரைப் பற்றி எப்பொழுதாவது பேசியிருப்பார் அல்லவா?"

"காலக் கொடுமையால் வறுமையடைந்த நளமன்னவர் குழந்தைகளை இங்கு விட்டு மனைவியுடன் காட்டிற்குப் போனதாகத்தான் அவர்க்குத் தெரியும். ஆனால் தமயந்தி இங்கிருப்பதாக நேற்று ஒரு பிராமணன்சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. நளரைப்பற்றி வார்ஷ்ணேயன் சொல்லியதாக எனக்கு ஒன்றும் ஞாபகமில்லை."

"ஆனால் நளமன்னவரைப்பற்றி உமக்கு ஒன்றுமே தெரியாதென நான் நம்புகிறேன்."

"நளமன்னவர் மாறுவேஷத்தோடு விளங்குவதாக வதந்தி. அது யார்க்குத் தெரியும்? அவரோடு வாழும் ஆத்மாதான் அவரை அறிய முடியும். வேறு ஆத்மா அவரைக் கண்டு கொள்ளமுடியுமோ முடியாதோ நான் அறியேன். அவரைக் காணும்படி அவர் தமது அங்க அடையாளங்களை வெளியிட்டிருந்தால் அது முடியு மல்லவா?"

"அது போகட்டும். யாரோ ஓர் அந்தணர் ருதுபர்ணர் சபையில் ஏதோ சில மொழிகள் சொன்னாராமே அப்போது தாங்கள் அங்கு தான் இருந்தீரல்லவா?"

யாகும். ஆனபடியால், வாதிகள் பிரதிவாதிக்கேற்பட்ட நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டியது தர்ம ஸம்மதமானபடியால் அப்படியே தீர்ப்புச் செய்திருக்கிறேன்."

இத்தீர்ப்பைக் கேட்டதும், ஜனங்கள் விக்கி விக்கிச் சிரித்து வயிறு புண்ணானார்கள்.

உழவுமாட்டானால். ஊருக்குள்ளே விலைப்படாதா?

உழுகிற நாளில் ஊருக்குப் போய், அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டுவந்தாற்போல

"ஆம்; இருந்தேன். அவர் ஏதோ லோகாபிரமமாகச் சில மொழிகள் கூறினார். அதற்கு யான்கூட ஏதோ மறுமொழி கூறினேனென்ன எனக்கு ஞாபகம்."

"இருக்கும். அம்மொழிகளைச் சற்றே ஞாபகப்படுத்திச் சொல்லலாம் அல்லவா? அவைகளைக் கேட்கத் தமயந்தி ஆவல்கொள்கிறாள். தயவுசெய்து அவ்வாவலைப் பூர்த்திசெய்வீரென நம்புகிறேன்."

இம்மொழிகளைக் கேட்ட நளன் அடக்கமுடியாத் துக்கத்திற்காளாகி உள்ளம் அழிந்தான். ஆயினும், அதை வெளிக்காட்டாது, நீர்கசிந்த தன் கண்களைத் தடவிக்கொண்டு "அதற்கொரு தடையுமில்லை. நான் சொன்னது இதுதான். நற்குலத்துதித்த மாதர் தம்மைத் தாமே காப்பவர்; தம்மைவிட்டுக் கணவர் ஒருவேளை பிரிந்தாலும், அவரிடம் அஸூயை கொள்ளார். ஏதோ காலக் கொடுமையால் மயங்கிய கணவன், ஸுகத்தை யொழித்து, சிந்தை யழிந்து, மனைவியைத் தனியே விட்டோடிவிட்டால், அவன்மேல் கோபிப்பது ஸரியா? பறவைகள், கட்டியிருந்த வஸ்திரத்தையும் கவர, சிந்தைநொந்து புத்திமயங்கிய அவன்மேல் அவள் கோபித்தால் என்ன பயனுண்டு? சீலையானால் என்ன, இல்லாவிட்டால் தான் என்ன! பதியை யிழந்து, ஸுகத்தைத் துறந்து, சிந்தை மயங்கி, பசியால் இளைத்து, தன்னுணர்வு கடந்து ஓடியவன்மேல் அவ்வழகி கோபிப்பது சிறிதும் அடாதெனச் சொல்லியதாகவே என் ஞாபகம். இவையல்லாது வேறு ஏதாவது உமக்குத் தெரியவேண்டுமானால் கேட்கலாம்" என்று நளமன்னவர் சொல்லும்போதே அவர் கண்களில் ததும்பிய நீர் அவரது பொறுமைக் கட்டுக்குள் நிலைக்கமுடியாது தத்தளித்து ஆறாய்ப் பெருகிற்று.

அதைக் கவனிக்காதது போலவே கேசினி அவ்விடம் விட்டுப் பெயர்ந்து தமயந்தியிடம் அடைந்தாள். நளமன்னவர் சொன்னதை எல்லாம் அப்படியே சொன்னாள். அம்மொழிகளைக்கேட்ட தமயந்தி துக்கத்துள் ஆழ்ந்தாள்; வாகுகன் நளமன்னனாகத்தான் இருக்கவேண்டுமென ஸந்தேகங் கொண்டாள்; கேசினியை மீண்டும் வாகுகன் இருக்குமிடம் போய் அவன் நடவடிக்கைகளையும் பூர்வோத்திரங்களையுங் குறிப்பாய்க் கண்டுவரும்படி ஏவினாள்; மேலும் "அவர் இவ்வூர்க்குப் புதிது. உன்னைப் பல பொருள் உதவும்படி கேட்பார் என எண்ணுகிறேன். அவர்க்கு நெருப்பும் நீரையுந் தவிர்த்த பொருளெவற்றை யானாலும் கொடு. அவ்விரண்டை மாத்திரம் அவர் என்ன கெஞ்சிக் கேட்டாலும் கொடுக்காதே" என்று எச்சரித்து அனுப்பினாள்; "அடி கேசினி! அவர் செய்வதைக் கண்ணைத் திறந்து பார்த்துவா. ஜாக்ரதை! அவரிடம் என்ன விசேஷமானவற்றைப் பார்க்கிறாயோ அவற்றையெல்லாம் மறக்கா திங்குவந்து சொல்லு. அமானுஷீகமான செயல்கள் அவரிடத் தேதாவதிருந்தால் அதையுங் கவனித்துவா. ஜாக்ரதை!" எனப் பின்னும் வற்புறுத்திச் சொன்னாள்.

அப்படியே காணச்சென்ற கேசினி மீண்டும் தமயந்தியை யடைந்து "அம்மணீ! அவ்வாகுகர் வெகு ஆசாரசீலர். அவர் எவ்வாசற்குள் புகுந்தாலும் குனிந்து நுழைவதாகத் தெரியவில்லை. என்ன அதிசயம்! அவ்வாசல்கள் தாமே வளர்ந்து; அவர் நுழைந்ததும், தமது இயற்கையளவை யடைகின்றன. ருதுபர்ணருக்குவிருந்துசெய்யப் பலவிதப்பொருள்கள் நமதரசரால் அனுப்பட்டன. என்ன! அந்தக் காட்சி நான் எங்கும் கண்டதுமில்லை; கண்டதாகக் கேட்டது மில்லை. அவர் சமையல் செய்யும் திறத்தை எப்படிச் சொல்வது?

ஆதி மறை நூ லனைத்தும் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புகக மனை.

குடங்களில் நீர் நிரப்பாமலே, அவை தாமே நிரம்பின. அவ்வாறு அவை நிரம்ப அவர் பார்த்த பார்வைதான் காரணம். மற்று அடுப்பில் அவர் எப்படி அனலிட்டாரென்பதைக் கேட்டால் அதிசயப்படா தெவருமிரார். கைப்பிடி வைக்கோலை எடுத்துத் தனக்கெதிரே பிடித்தார். அது தானே தீப்பற்ற அதைக் கொண்டு அவர் அடுப்பில் நெருப்பு மூட்டினார். இவ்வதிசயத்தைக்கண்டதும் யான் உம்மிடம் ஓடோடியும் வந்தேன்" என்றாள்; "அம்மணீ! ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். அது இவைகளைக் காட்டிலும் அத்புதம். அவர் ஸாதாரணமாக அக்நியை வெறுங்கையாலெடுத்து உபயோகப்படுத்துகிறார். அது அவரைக் கொளுத்தாதிருப்பது ஆச்சரியம்! அவரது செயல்கள் எல்லாம் விசித்திரமாகவே தோன்றும். அவர் புஷ்பங்களைத் தமது கையாலெடுத்து எவ்வளவுக் கெவ்வளவு மெதுவாகக் கசக்குகிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவை வாஸனை பெறுவதோடு, மேலும் மேலும் புதுமலர்போல வாடாமல் வதங்காமல் விளங்குகின்றன. இவற்றைக் கண்டதும் உம்மிடம் வந்து சொல்லும் வரைக்கும் என் மனந்துடித்தது" என மேலுங் கூறினாள்.

இதைக்கேட்ட தமயந்தி, வாகுகன் தன் நாதனாகவே யிருக்கவேண்டுமென நிச்சயித்துக் கொண்டாள். ஆனாலும் தன்னெண்ணம் நிச்சயமோ என முற்றும் பரீட்சிக்க எண்ணங்கொண்டு அவள், "அடி கேசினீ! எனக்கெப்பொழுதும் நீ நன்மையே செய்பவள் என்பது நான் சொல்ல வேண்டியதில்லை. நீ மீண்டும் அங்கு ஒருமுறை சென்று அவ்வாகுகர் சமைத்து வைத்துள்ள இறைச்சித்துண்டொன்றை எடுத்து வருவாயானால், அதை நான் பரீட்சிக்க விரும்புகிறேன்" என்றாள். அவ்வேண்டுகோளுக்கிணங்கி, கேசினியும் அப்படியே செய்தாள். அவள் கொண்டுவந்த இறைச்சியைச் சுவைத்துப் பார்த்தவுடன், தன் நாதனே அதைப்பக்குவப்படுத்தியிருக்க வேண்டுமென அவள் திட்டமாக நிச்சயித்து விட்டாள்; வாகுகனே தன் நாதன் எனவும் தீர்மானஞ் செய்து விட்டாள். ஆகவே அவள் தன்னிரு குழந்தைகளையும் அவன் முன் அழைத்துப்போய் நடப்பதை வந்துரைக்கும்படி கேசினியை அனுப்பினாள். அக்குழந்தைகள் தன் முன் வரக் கண்டதும்,

மக்களை முன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—'மக்காள் நீர்
என் மக்கள் போல்கின்றீர்; யார்மக்கள்?' என்றுரைத்
வன்மக் களியானை மன். தான்]

இச்சொற்களைச் சொல்லும்போது அவனுக்குத் தெரியாமல் கண்ணீர் வழிந்தோடின. அவன் மனம் கலக்கமடைந்தது. எனினும், அக்குழந்தைகளை வாரியணைந்து, உச்சிமுகந்து, முத்தமரும்பிப் பரவசனானான். அப்போதவன் தன்முன் கேசினி யிருப்பதைக் கவனிக்கவேயில்லை. அவளும் கவனிக்காதுபோலிருந்தாள். ஆனால் அக்குழந்தைகள் அவனைப் பார்த்து, "பெரியவரே! நாங்கள் யாரெனக் கேட்டீரல்லவா? கேளும்.

மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட் டவனேகா—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவர்
ஆள்கின்றார் என்றார்" அழுது.

இம்மொழிகள் வாகுகனது மனதைப் புண்ணி விட்ட வேல்போல் துளைத்தன. எனவே, அவன் ஒன்றுந் தோன்றாது தூண்போல் மயங்கி உயிரற்றவன்போல விளங்கினான். அப்போது அவன், உடல் குன்றி விளங்க, கண்களிலிருந்து வழிந்தநீர், பூமியைச் சேறு செய்ய, கற்சிலைபோற் கிடந்தான். ஆனால் அவன் மனம் உள்ளூற வேலை செய்துகொண்டுதா னிருந்தது. அவன் எண்ணாத எல்லாம் எண்ணினான். ஆனால் துக்கம் வரவர விருத்தியடைய அவன் விம்மி விம்மி, கண்ணீர் உகுத்தான்; வாய்விட்டழுதான்; கதறினான். அதைக் கண்ட கேசினி அவனை ஏறெடுக்கப் பார்த்தாள். அதை யுணர்ந்த வாகுகன் தன் பொறுமையின்மையை எண்ணித் தன்னைத்தானேபழித்துக்கொண்டான்; என்ன காரியம் செய்துவிட்டோமென ஏங்கினான். ஆயினும் அதைப் பாராட்டாதவன் போலத் தன் மடிமீதிருந்த குழந்தைகளைச் சட்டெனக் கீழிறக்கிக் கேசினியை நோக்கி "அம்மணீ! இக்குழந்தைகள் என் குழந்தைகள் போல ஒரே அச்சாயிருப்பதால், இவர்களைக் கண்டதும், காணாத என் குழந்தைகளின் ஞாபகம் என் மனத்தை வாட்ட, ஆடவர்க்கு அடாதவிதம் கண்ணீர்விட்டுக் கதறினேன். வேறொன்றுமில்லை. நீங்களோ இளம்பிராய முடையவரா யிருக்கிறீர்கள். நாங்களோ வெளி நாட்டார்; உம்மைச் சிறிதும் அறியாதவர். இப்படி அடிக்கடி இங்கு வந்தால் ஊரார் பலவிதம் பேசுவார்கள். ஊர் வாயை மூட, உலைமூடி கிடையாதென்பது உங்களுக்குத் தெரியாததல்ல. ஆகவே இங்கு தங்குவதும் தகாது; வருவதும் அடாது. சுகமே உமதரசர்மகளிட மடையுங்கள். குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொண்டு போய் வாருங்கள்" என விநயமாயினும் கண்டிதமாகச் சொன்னான். அவள், குழந்தைகளுடன் தமயந்தியிடம் போனாள்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

டெலி போனால் செவிடு.

பெரியபட்டணங்களில் வெவ்வேறு இடங்களில் இருப்பவர் இருந்த விடத்திலிருந்தே ஒருவரோடொருவர் பேசவென்று, மின்சார உதவியினால்ஏற்படுத்தப்பட்டிருக்கும் டெலிபோன் என்பதை யாவரும் அறிவர். இந்த டெலிபோன் குழலை காதில் வைத்துக்கொள்ளும்போது மின்சாரத் தாக்கினால் காதிலுள்ள சப்தநாளங்கள் அதிர்ச்சியடைந்து காதின் கேட்கும் சக்தி மாறி விடுவதை நாம் அனுபவித்திருக்கலாம். இவ்வாறு ஏற்படும் செவிடு சிறிதுகாலமே விளங்கும்; பலநாளும் இருக்கலாம். இவ்விதமான கஷ்டம் ஏற்படக் காதோடு டெலிபோன் குழலை ஒட்டிவைத்துக் கொள்வதுதான் காரணம். அப்படிக்கில்லாமல் குழலுக்கும் காதுக்கும் காற்றுநடமாட இடை வெளிவிட்டுச் சப்தக்ரஹணஞ்செய்தால்டெலிபோனால் இந்த விபரீத மேற்படாதென்பது வைத்திய நிபுணரின் அபிப்பிராயம்.

***

தீக்குச்சித் தொழில்.

இவ்விஷயமாக மைசூரில் ஒரு கனவான் தனியான வழிகள் கண்டு பிடித்திருக்கிறதாகவும், அதைப் போதுமானபடி ஜனங்களுக்கு வேண்டிய அளவு உபயோகப் படுத்த முடியுமெனவும், இந்நாட்டிலேயே இத் தொழிலை முற்றும் ஏற்படுத்த முடியுமெனவும்நாம் கேள்விப்படுகிறோம். அவர்க்குச் சமஸ்தானத்தார் ரூபாய் ஐயாயிரம் கடனளித்திருப்பதாகவும், காட்டில் ஷை தொழிலுக்கு வேண்டிய மரங்களைக் கண்டுகொள்ளச் சௌகர்யங்கள் கொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது. இவையெல்லாம் இன்னும் பரிசோதனை முறைமையிலேயேயிருப்பதால் எப்படி முடியுமெனச் சொல்ல முடியாது. எனினும், இராஜாங்கத்தாரே உதவ முன் வந்திருப்பது கொண்டாடத் தக்கது. இம்மாதிரி நமது கவர்ன்மெண்டாரும் தொழிலபிவிருத்திக்காக உதவுவது மிக்க நலந்தரும் என்பதை நாம் சொல்லவேண்டுவ தில்லை.

***

சக்கரைத் தொழில்.

'கவர்ன்மெண்டார் வெளியிட்ட தொழிற் சாலைக் கணக்குகளைப் பரிசோதிக்கும்போது, நமக்குப் பல விதமான எண்ணங்கள் தோன்றும். இந்நாட்டுச் சர்க்கரைத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஆவலுடன் எதிர்பார்ப்பவர் அதைக் காண மனம் வாடுவரென்பது திண்ணம். இந்தியாவில், சர்க்கரை ஆலைகள் மிகவும் குறைவாயிருப்பதையும் தொழிலாளிகள் ஷை ஆலைகளை விருத்திசெய்யக் கொள்ளும் ஆவலின்மையையும் காண்பது பரிதாபமேயாகும்.' சர்க்கரையை இந்நாட்டு முதற் தொழிலாகச் செய்து இத்தேசத்துக்கு வேண்டிய அளவு அப்பொருளை உதவுவதன்றி வெளிநாட்டாருக்கும் உதவப் பேரவாக்கொண்ட இந்நாளில் ஷை தொழிலை விருத்திசெய்யத் தனவந்தர்களும் புத்திமான்களும் முன்வந்து உழைத்தல் அத்தியாவசியகம். இராஜாங்க உதவியும் இவ்விஷயங்களில் ஊன்றுகோல்போல உதவும் என்பதும் கவனிக்கதக்கது.

***

கடல் யாத்திரை.

போர்னியோ த்வீபத்தின் கீழ்ப்பாகங்களில் கிடைத்த சில சாஸனங்களிலிருந்து நம்மவர் முன்னாளில் கடல் யாத்திரை செய்தனரென்பது வெளியாவதாக ஒருவர்மாடர்ன்ரிவியூ பத்திரிகைக்கு எழுதுகிறார். அச் சாஸனங்கள், ஆர்யநாட்டுக்குப்த அரசர்களும், தென்னிந்திய பல்லவச்சோழர்களும், மற்றும் அநேக வைதிக முறையாண்ட பெரியோர்களும் கடலைக் கடப்பது பெருந்தவறாக எண்ணவில்லை யென்பதைக்காட்டுகின்றன. அவற்றுள் மிகப்பழைய சாஸனத்தின் காலம் கி. பி. 200. மற்றொரு வடமொழி சாஸனம் கி. பி. நான்காவது நூற்றாண்டில்பத்ரவர்மதர்மராஜன்செய்த யாகத்தைப்பற்றி விஸ்தரிக்கிறது. ஆகவே பிராமணர்களது நாகரீகமும், கொள்கையும் அப்பழைய நாட்களிலும் அயல் நாடுகளில் பரவி வந்தனவென்பது வெளிவரும்.

பஞ்சாத்தினம்.—புதிய பதிப்பு. ஐந்து அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. அணா. **12.** விவேக போதினிச சந்தாதார்க்கு மாத்திரமே விலை அணா. **10**

மஹா கனம் பொருந்திய ராஜபுரம், லார்ட் ஸின்ஹா.

விவேக போதினி

வருஷச் சந்தா	
உள்நாடுகளுக்கு	ரூ. 4
வெளிநாடுகளுக்கு	ரூ. 5
தனிப்பிரதி -	அ. 6

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

விளம்பர விகிதம்	
முழுப்பக்கம்	ரூ. 8
அரைப்பக்கம்	ரூ. 5
கால்பக்கம்	ரூ. 3

தொகு XI | காளயுக்திஸு மார்கழிமீ :: 1919-ஸு ஜனவரிமீ | பகுதி 7

முருகன் துதி

ON GOD MURUGA

வையிற் கதிர்வடி வேலோனை
  வாழ்த்தி வறிஞர்க்கென்று
நொய்யிற் பிளவள வேனும்
  பகிர்மின்க ணுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா
  வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது
  காணுங் கடைவழிக்கே!

கோழிக் கொடிய னடிபணி
  யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலிகா
  ளுங்கள் வல்வினைநோ
யூழிப் பெருவலி யுண்ணவொட்
  டாதுங்க ளத்தமெல்லா
மாழப் புதைத்துவைத் தால் வரு
  மோநும் மடிப்பிறகே?

வேலே விளங்குகை யான்செய்ய
  தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல்
  லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா
  யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளை
  யெவ்வாறு புகல்வதுவே?

பாலென் பதுமொழி பஞ்சென்
  பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற
  நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற் றமயூர
  மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங
  னேமுத்தி காண்பதுவே?

முடியாப் பிறவிக் கடலிற்
  புகார்முழு துங்கெடுக்கு
மிடியார் படியில் விதனப்
  படார்வெற்றி வேற்பெருமா
னடியார்க்கு நல்ல பெருமா
  ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாடிரு
  நாமம் புகல்பவரே.

நாளென் செயும்வினை தானென்
  செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
  செயுங்கும ரேசிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
  தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்கு முன்
  னேவந்து தோன்றிடினே?

சேல்பட் டழிந்தது செந்தூர்
  வயற்பொழி றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி
  யார்மன மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ்
  சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை
  மேலயன் கையெழுத்தே.

புத்தியை வாங்கிநின் பாதாம்
  புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க வறிகின்றி
  லேன்முது சீர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ
  குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை
  யேற்கென் குறித்தனையே.

ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம்.

விவேக போதினி

தொ. 11] காளயுக்தி௵ மார்கழி௴ [ப. 7

பணாமிசை பாதம்

THE DANCE ON THE DEVIL HOOD

"காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு
நீள்முடி யைந்திலும் நின்று நடஞ்செய்து
மீளவ வனுக்கருள் செய்த வித்தகன்
தோள்வலி வீரமே பாடிப்பற!
தூமணி வண்ணனைப் பாடிப்பற!"

கடவுளின் வைபவத்தை வெளியிட வரும் எவரும் அன்பின் உருவங்களாகவே விளங்க வேண்டுமென்பதை யாவரு மறுக்கமுடியாது. ஸமதிருஷ்டியும், கீழோர் மேலோர் எனப் பாராது யாவர்க்கும் உதவி செய்வதும் அன்பேயுருக்கொண்டு விளங்கும் அவதார மூர்த்தங்களுக் கன்றி மற்றவர்க்குச் சற்றுமியலாது. பேத ரஹிதரான அவரது மனத்துள் மயக்கமான எண்ணங்களெவையும்தோன்றா. மனிதர் மிருகம் எனவெண்ணாது, தம்மை நினைத்துப் பெரிதும் வருந்தும் எவ்வுயிர்க்கும் உயிரையுங் கொடுக்கும் தன்மை தெய்விகப்பிரபாவத்தின் வெளித் தோற்றமே யாகும். யாவரது துயரத்தையும் தனதெனக்கொண்டு, அத்துயரையொழிக்க மனமொப்பி அன்போடு விளங்கும் தன்மை எல்லாற்கும இருப்பின் தெய்விககுணம் சொல்லாமலே தழைக்கு மல்லவா? அன்பே கடவுளது உருவம். அவ்வன்பே விரிந்து படர்ந்து யாவர்க்கும் அருளாய்ப்பரந்து உலகையே காப்பது. அதனாலன்றே,

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வாகும் பிரானவன்
அன்பினுள் ளாகி யமரு மரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே

எனப் பெரியோரும் பாராட்டி யுள்ளார். பஞ்ச பூதங்களையுங் கடந்து கடவுளிடம் மயங்கும் மனோ நிலை கொண்டு வாழ்பவரது இன்ப துன்பங்களைத் தனதாக ஏற்று, அதற்கிணங்க நடக்கக் கடவுளே கடமைபட்டுள்ளாரென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. அப்படியிருப்பதனால்தான், தன்னைப் போற்றுவாரது பதவி, வர்ணம், தொழில் முதலியவற்றைக் கவனியாது, 'ஏழை, ஏதலன், கீழ்மகன் என்னாது' விளங்குவது எம்பெருமானுக்கே உரித்தாயிற்று.

இப்பெரும் தெய்விக லக்ஷணத்தையே கண்ணபிரானும் தமது சிறுவயதில் பன்முறையும் வெளியிட்டுள்ளனர். இன்றேல் அகாஸுரன் வாயில் அவர் ஏன் முந்திவிழ வேண்டும்? கையிற்கொண்ட அர்த்த அன்ன கபளத்தை உட்கொள்ள மனங்கொள்ளாது, மறைந்த ஆனிரையைஅவர்ஏன் தேடி யலையவேண்டும்? அவரது அன்பென்னும் பெரு வெள்ளம் திரண்டுபுரண்டு சிறிதும்தடையென்பதற்றுமடைபாய்ந்து விளங்குந் தன்மையை முற்றுமுணர்ந்தவரே, அவர் இளமைப் பருவப் பெருமைக் கடலில் குளிப்பவராவர்.

இளமைப் பருவமே இணையற்றது; குற்றமற்று விளங்கிக் குறையின்றி வளர்வது; கவலையின்றி, பிறரது நன்மையிலேயே உழல்வது. அவ்விளைமையின் தெய்விகத்தைக் காட்டித் தமது அன்பைத் திரட்டி யாவர்க்கும் பகுத்தளித்த கண்ணனது திவ்ய ஆடல்களில் யார்க்குத்தான் அன்பு செழிக்காது? தன்னினச் சிறாருடன் அவர் ஏன் அவ்வாறு பரிந்து விளையாடி அவரது கூட்டத்துத் தலைவனாக விளங்கவேண்டும்? அவரோடு உண்டும் சுகித்தும் உறவு கொண்டாடி, கண் மூடி விளையாடி, ஒருவரை யொருவர் தேடிக் கூத்தாடி ஏன் அவர் குதிக்க வேண்டும்? மான் போலும் மயில் போலும் அவர் ஏன் கவலையற்றுக் கூச்சலிட்டு அவரைக் களிப்பிக்க வேண்டும்? அவ்வாறு அவர் மனத்தை ஏன் அவர் கொள்ளை கொள்ள வேண்டும்! தம்மைக காப்பதை யுணராதுஅவர் விளங்கும்படிகண்ணன்ஏன் மாயம் செய்யவேண்டும்? அன்றுதான் தம்மைக் கண்ணன் காத்ததாகச் சொலலிய சிறுவரிடம் கோபாலர்க்கேன் வியப்புத தோன்ற வேண்டும்?

ஊரார் உடைமைக்குப் பேயாப் பறக்கிறான்.

யாவற்றிற்கும் அன்பே அன்றோ ஆதாரமாவது? அப்பாம்புத் தோலைக் காட்டில் ஆயப் பெரியோர் நெடுநாளாகப் பார்த்திருக்க, அன்று தான் தமது சிறுவர் வந்து தம்மைக் கண்ணன் அரவினிடமிருந்து காத்ததாகச் சொன்னால் அவர்க்கேன் அதிசயமிராது? பசுவும் கன்றும் குழந்தையுமாக அவர் அக்கோபாலரது இல்லந்தோறும் இனிது உலாவிவிளங்கினால், அம்மாயா விலாசத்தைச் சற்றே யுணர்ந்த கோபாலர் வியப்படைவதில் என்ன தவறுண்டு? எனவே, அவர் கண்ணனிடம் நீடித்த அன்பு கொண்டனரென்பது தவறாகாது.

தமது ஆறாவது வயதில் பலபத்ரனும் தானுமாக அப்பிருந்தாவனத்துள், கோபாலச் சிறுவர் தம்மைச் சுற்றிக் கூடி விளையாட, தமது இனிய குழலை ஊதி, அப்பசுக் கூட்டங்களைப் பக்ஷத்தோடு மேய்த்து வந்த அவரது அன்பைக் கண்ட உணர்வற்ற பொருளும் உவகையோடிருந்ததென்பது பொய்யாகாது. அச்சிறுவருடன் அப்பிருந்தாவனத்தில் அவராடிய குற்றமற்ற ஆடலை அனுபவிக்கத் தெய்விகம் வாய்ந்தவர் யாரிருந்தனர்? அவரது திவ்ய மங்கள விக்ரஹம் அக்காட்டில் மந்தஹாஸத்துடன் ஒய்யார நடையில் அசைந்தசைந்து நடந்தபோது, எதிரிலிருந்த காட்சியாவும் அவரது இணையற்ற நடையில் பிரிவற்று விளங்கின. மானும், பசுவும், மரகத கவசம் பூண்ட மரங்கள் யாவும் அவரையே கவனித்தன. அப்போதவர் மதுவுண்டு தலைதெரியாது ரீங்காரஞ் செய்யும் தேனீக்கள் போல நாதமிடுவர்; பக்ஷிகளது குரல்களைப்போலத் தானு மொலிப்பர். சிறுகுரலும் பெருகுரலும் மயங்கப் பேசுங் கிளிபோலப் பிதற்றுவர்; இனிய இசையுடன் விளங்கும் குயிலென இசைப்பர்; அன்னப் பட்சிபோல் இரைச்சலிடுவர்; தாம் செய்வதைப் போல் தமது நேயர்களும் செய்யக் களித்துக் குதித்துக் கூத்தாடுவர்; மேகம் போலக் கர்ஜித்துப் பசுக்களையெல்லாம் பெயரிட்டழைப்பர்; சகோதரம், கிரௌஞ்சம், சக்ரவாகம், பரத்வாஜம் இப்பக்ஷிகளைப்போலச் சத்தமிடுவர்; சிங்கம் கர்ஜிக்கத் துயருற்றுப் பயத்தோடு அறற்றும் எளிய மிருங்களொப்பச் சிலவேளை ஓலமிடுவர்; அவரது இனிய நாதத்தைக் கேட்ட பக்ஷிகளும் மிருகங்களும் மற்றைய உயிர்களும் அப்போது உண்டாகிய நாத பிருஹ்மத்தின் மூலப் பொருளைக் காண அசைவற்று யாவும் அங்குத் தோன்றிக் குரோதமற்று விளங்கும். ஸத்வகுணம் மேலிட்டு விளங்கும் அவ்வியற்கைக் காட்சியைக் காணும் பாக்கியம் யார்க்குக் கிடைக்கும்?

இவ்வாறே ஒவ்வொரு நாளும் ராமகிருஷ்ணர் கோபாலர்கள் வனத்துள் சஞ்சரித்து வந்தபொழுது, தேனுகனென்னும் அசுரனைப் பலபத்திரன் கொன்று, தமது நேயரது விருப்பத்தைப் பூர்த்திசெய்து, அப்பாபி கவர்ந்திருந்த, பச்சைப் பசும்புல் தவழ்ந்து, தெங்கினம் நிறைந்து விளங்கிய அவ்வனத்தைப் பல்லோர்க்கும் பயன்படுமாறு செய்தனன். அவ்விஷயத்தை உணர்ந்து தம்மை எதிர்த்துவந்த பெரும் அஸுரப்படையையும் ராமகிருஷ்ணரிருவரும் தமது தோள் வலியால் தொலைத்துக் கோபாலரது துயரை ஒழித்தனர்; சிறார் துதிக்க ஊரடைந்து தமது தந்தை தாயரது ஆசீர்வாதத்திற்கும் அன்பிற்கும் பாத்திராயினர். மேலும், அவர் மடியிலிருந்து அன்போடவர் தந்த தின்பண்டங்களை யுண்டு அளவற்ற ஆநந்தக் கடலில் ஆழ்ந்து விளங்குவர். அதுவன்றே யவரது மாயை!

நிற்க, கொடுமையை யழித்து, நேர்மையை நாட்டி, உலகைக் காக்கக் கங்கணக்கட்டிய அப்பரம் பொருள், ஆயர்பாடியில் தமது திருவடி தோய விளையாடுவதிலேயே கவலையாக இருந்தனரென்பது சற்றும்பொருத்தமுடையதன்று. தமது தர்மத்தை ஓர்போழ்தும் அவர் மறந்தனரில்லை. அவரது படர்ந்த அன்பு அத்தகைய நிலைக்கு ஒருநாளும் இடந்தரா தென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பிறர்க்குத் தீங்கு செய்யும் பித்தரை ஒழிக்கவெனக் கங்கணங் கட்டிய அவர், எப்படிச் சும்மா இருக்கமுடியும்?

ஒருநாள் கண்ணபிரான் கோபாலர்கள் சூழக் காளிந்தி நதிக்கரைவழியே வரும்போது, சூரியவெப்பந் தாங்க முடியாது, அக்கோபாலர் தமது பசுக்களை யோட்டிவந்து அருகிலிருந்த காளிந்திமடுவில் நீர்காட்டித் தமது தாகசாந்தி செய்துகொள்ளத் தாமும் அந்நீரைக் குடித்தனர்; ஆனால் அந்நீரைப் பருகியதும் பசுக்கள் உள்பட, அந்நீரிலிருந்த விஷம் தலைக்கேற மயங்கிக்கீழே உயிரற்றுச்சாய்ந்தனர். இக்காட்சியைக் கண்ட அடியார் துயரத்தை ஆளும் அவ்வெம்பெருமான் அவர்களைக் காக்கும் எண்

ஊரிலே கல்யாணம் மார்பிலே சந்தணம்.

ணத்துடன் பெருஞ் செயல் செய்ய நிச்சயம் செய்தனர்; உத்தரக்ஷணத்தில் கோபாலர்கள் பசுக்களுடன் உயிர்பெற்றுத் திகைக்கச் செய்தனர்; கருடனுக்கு அபராதஞ்செய்து, அவனிடம் வெருண்டு அங்கு ஒளிந்து, அந்நீரை விஷமாக்கி யாவர்க்கும் துன்பமூட்டி வரும் காளியனென்னும் ஐந்துதலை நாகனை அடக்க எண்ணங் கொண்டனர்; பக்கத்திருந்த கடம்ப மரத்தின்மீது ஏறி மார்பையுந் தோளையுந் தட்டிக்கொண்டு அம்மடுவினுள் குதித்தனர்; அந்நீரைக் கலக்கிக் குழப்பினர்; விஷங்கொண்ட அந்நீர் நுரைத்துக் கொதித்து அலையெரித்து மோதும்படி அதனுள் நீந்தினர்; தமது கால்களையும் கைகளையும் படபடப்புடன் அந்நீர்ப் பரப்பின்மேல் அடித்து அம்மடுவை நிலைகலக்கித் தத்தளிக்கச் செய்தனர். அவர் குதித்த விசையையும், கைகால்களால் தாக்கும் விசையையும் தாங்கமுடியாத அம்மடு ஆங்காங்கு நீர்ச்சுழி யிட்டுக் குமிழிகள் கிளப்பி அலைபாய்ந்து அவதி யுற்றது; அக்கருநாகக் காளியனது விஷம் பாய்ந்து, கறுத்துக்கிடந்த அந்நீர் பேரொலியிட்டுக் கதறக் கேட்ட சுற்றுப் புறத்திருந்த மலையும் மரனும் அக்கூக்குரலுக்குப் பதிலளித்தனவேனும், சற்றும் உதவிசெய்ய வகையற்றே விளங்கின. அவற்றால் என்ன செய்ய முடியும்?

மடுவிற் கிளம்பும் நீர்ச்சுழலையும், மேலெழும்பும் அடங்கா அலைகளையும், உடனுக்குடனே தோன்றித் தோன்றி யழியும் அளவற்ற நீர்க்குமிழிகளையும் கண்ட காளியன், தன்னைக் கணிசியாது தன் இடத்தைக் கவர்ந்த அவ்விளம் குழந்தை, நீரில் தவழ்ந்து படால் படால் எனக் கையையும் காலையும் இடைவிடாது வீசிவீசி நீந்துவதை அவன் கண்டதும், கடுங் கோபங் கொண்டனன். பாலிட்டு வார்த்தவர்க்கே பகைமை காட்டும் இனத்தைச் சார்ந்த அவன், தனக்கே உரியதெனத் தான் எண்ணிய இடத்தில் மற்றொருவன் வரக் காண்பது முடியுமா? பொறாமையும், கொடுமையும், கோபமும், இயற்கைவிஷமும், இவற்றுடன் அளவற்ற பலமும் கொண்ட அப்பாம்பு என்செய்யாது? ஏன் அகந்தை கொள்ளாது? கண்ணனது மர்மஸ்தானங்களி லெல்லாம் தன் விஷப் பல்லால் தீண்டிற்றெனினும், அத்தெய்விகச்சிறுவனது முகத்தில் விளங்கிய புன்சிரிப்புச் சற்றும் மங்காது, அம்முகம் மிக்க சோபையுடன் விளங்கிற்று. எனினும் மடுவோரம் நின்ற சிறார், கண்ணன் இறந்தானென்றே நிச்சயித்து விட்டனர். தனது இருப்பிடத்தைத் துவம்ஸம் செய்யக் கண்ட காளியன் கண்ணனைக் கொன்று விடுவனென்றே அவர் பயந்தனர்; நடுநடுங்கினர்; துடிதுடித்தனர்; கண்களில் நீர் ஆறாகப் பெருக்கினர்; அப்பாம்பினால் கண்ணன் பிணிக்கப்படுவதைக் காணக்காணக் கதிகலங்கினர்; மயங்கினர்; மூர்ச்சையாக அத்தரைமீது வீழ்ந்தனர். தமது பெற்றோர், உற்றோர், அனைவரையும் கருதாது கண்ணனையே உறவுகொண்டு வந்த கோபாலர் மூர்ச்சிக்கக் கண்ட பசுக் கூட்டங்கள் உரத்த குரலில் சத்தமிட்டன; பயமடைந்து மடுவிலிருந்த கண்ணனைப் பார்த்தவண்ணமாகத் தமது கண்களிலிருந்து மாலைமாலையாக நீரைவடித்து அசைவற்று நின்று விட்டன. சேதனமற்ற அவற்றால் மற்றென்ன செய்ய முடியும்?

எனினும் அப்பாம்பின் கட்டில் பட்ட கண்ணன் தமது கைகால்களைச் சிக்க விடாது கடும் விசையுடன் நீந்தி நீந்தி அம்மடுவைக் கலக்கிப் பாழடித்துக்கொண் டிருந்தனர்; விளையாட்டாகவே வினைசெய்து வந்தனர். அதைக் கண்ட தேவர்களெல்லாம் ஒன்றுந்தோன்றாது ஆகாய வீதியில் சூரியவெப்பத் திருந்தவரைக் காக்கும் குடைபோல் கவிந்துகிடந்தனர். காற்றும் அசைவற்று விளங்கியது. சூர்யன் களங்கமற்று உச்சமடைந்து கிடந்தான்; தனது வெயிலைத் தீட்சண்யமாக அப்போது பரப்பிவந்தான். அம்மடுவில் மறுகிய நீரும் கொதித்துப் பொங்கிக்கொண் டிருந்தது. எனினும் அம்பாம்பின் கட்டில்பட்ட அத்தெய்வச்சிறுவன் அம்மடுவுள் ஓயாது நீந்திநீந்திச் சுற்றிக்கொண் டிருந்தான். அவ்வேகத்தைத் தாங்க மாட்டாது, பூமி அக்கால் கிடுகிடுத்தது. மற்று விரஜைநாட்டில் அப்போதெங்கு பார்த்தாலும் பூகம்பங்களுண்டாயின; விண்மீன்கள் அளவற்று ஆகாய வீதியிலிருந் துதிர்ந்தன; ஜனங்களது தேகம்கம்பித்து அசைவுற்றது; இவைபோலும் அசுப சூசகங்கள் எங்குந் தோன்றின. எனவே அப்போது எங்குபார்த்தாலும் ஏதோ பெருங்கேடு வருவதாகவே வதந்து உலாவியது. எனினும் கண்ணன் மாத்திரம் அம்மடுவின் நீரில் அப்பாம்

800.009

பின் பிணியிலிருந்துகொண்டே அம்மடுவில் உலாவி வந்தனர்.

துச்சகுனங்களைக் கண்ட ஆயரெவரும் கலங்கினர்; கண்ணன் தனியே பலபத்ரனது துணையின்றிக் கோபாலருடன் சென்றானென அறிந்த அவர் நடுநடுங்கினர்; அவர்க்கேதோ பேராபத்து விளைந்திட்டதெனக் கவலைகொண்டனர்; துன்பக்கடலிற் பாய்ந்து துயருற்றுக் கிடந்தனர்; ஆண், பெண் சிறியர் பெரியர் என்பதில்லாமல் யாவரும் கண்ணனைக் காண ஆவலுற்றனர்; பாசம் அவித்த பரமயோகிகள், பிரம ஞானவழியே தேடும் பரம்பொருளைத் தேடிக் காண அக்கோகுலமே அப்போது புறப்பட்டது. பிரிவாலும், துயராலும், காணாத ஏக்கத்தாலும் பரபரப்புக்கொண்ட அவர், தமது துயரத்தைச் சிறிதும் எண்ண இடமின்றி, அன்பு மூந்தத் தமது மனத்திற் பதிந்து தவழ்ந்து விளங்கிய மங்கள விக்ரஹத்தைக் காண அவரது பாதச் சுவட்டைத் தொடர்ந்து பதசாரியராகி அக்கரடுமுரடான காட்டுவழியேநடந்து நெடுந் தூரத்திருந்து, அவரைக் காளிந்தி மடுவிற் கண்டனர். அப்போதும் அம்மாயக் கண்ணன் அப்பாம்பின் கட்டில் பட்டு, மேலும் பரபரப்புடன் அம்மடுவில் சுற்றிச்சுற்றி நீந்திக்கொண் டிருந்தனன். எனினும் அவர் முகமண்டலத்து ஒளி சிறிதும் நீங்கிற்றில்லை; வாயிற் பூத்துவிளங்கிய புன்சிரிப்பும் மறைந்ததில்லை; அம்மடுவுள் அவர் நீந்தும் தொழிலும் ஒழிந்திற்றில்லை.

கண்ணன் மடுவில் பாம்பின் கட்டில் பட்டலைவதையும், சுற்றிலும் பசுவோடு கோபாலர்கள் அசைவற்றுநிற்பதையும், மாடுகளும்கன்றுகளும் உரக்கச் சத்தமிட்டு அலறுவதையும், அவர் நோக்க நோக்கத் தமது நினைவொழிந்து விளங்கினர். தமது மனத்திற் கினிக்கப் பேசி விளையாடும் கண்ணன், காளியன் கையிற் படுவதைக் கண்ட கோபிகள் துன்பமடைந்தனர்; கத்திக் கதறினர்; அவரின்றேல் தமக்கு வேறுலகே இன்றென அலறினர்; யசோதையின் துக்கத்தைப் பங்குகொண்டு அவளைத் தேற்றினர்; கண்ணனது அத்புதச் செயல்களைச் சொல்லிச் சொல்லி அழுது கண்ணீர் வடித்தனர்; தாம் அனைவரும் அம்மடுவில் விழுந்து உயிர்துறக்க நிச்சயித்ததைத் தெரிவித்தனர். அவர் கண்ணனிடம் கொண்ட அன்பை எற்றெனச் சொல்வது?

“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு”

என்னும் பெரியார் வாக்கிற்கு, இவரையல்லால் வேறு யார் பெருமைதர முடியும்? அந்நாள் கண்ணனது குறும்புகளை யெல்லாம் பன்னிப்பன்னி அவரது தாயிடம் சொல்லிக் கடுகடுத்து விளங்கிய இவர், அவரது பிரிவைத் தாங்க முடியாது மடுவில் வீழ்ந்து உயிர்விட நிச்சயித்தது அதிசயமன்றே! அன்பினால் வரும் பேறும் இதுவன்றோ? எனினும் கண்ணனது உண்மை நிலையை முற்றுமுணர்ந்த பலராமர் அவரது கருத்தை யுணர்ந்ததும் அவ்வாறுசெய்வதைத் தடுத்தனர்; தமது மூல உருவை நினைத்துக் கண்ணனைத் துதித்தனர்.

கோகுல முழுதும் படைசாய்ந்து, தாமன்றி வேறு திக்கின்றி, தமக்கு எதிரில் நின்று வருந்துவதைக் கண்ட கண்ணபிரான் அவரிடம் பேரன்பு கொண்டனர்; பாம்பின் கட்டுக்குளிருந்தபடியே அளவின்றி வளர ஆரம்பித்தனர். அதனால் தனக்குண்டான வலியைப் பொறுக்க முடியாது அக்காளியன் விஷத்தைக் கக்கிக் கக்கிக் கண்ணனைத் தீண்டிக்கொண்டேயிருந்தான். கண்ணனும் தம்முருவைப் பெரிதாக்கிக்கொண்டு, அவனுக்கு அளவுகடந்த துன்பமூட்டிக்கொண் டிருந்தனர். எனவே அவனுடையகட்டுக்கள் வரவரத் தளர்ந்து நெகிழ்ந்தன. பாற்கடலில் பாம்பணைமீது படுத்துப் பக்தகோடிகள் வாழ்த்த யோக நித்திரை செய்யு மாயன், மடு விடததே, நாகபந்தத்திருந்து, கோகுலமே காண விளங்கிய காட்சியும் சொல்லுந் திறத்தவன்று. எனினும், குழந்தைக் கிருஷ்ணனும் பந்தமற்ற பரம்பொருளென அப்போது அந்நிலையில விளங்கினர்.

நஞ்சுப் பற்களிலிருந்து விஷங்கக்கிக்கொண்டு அக்காளியன் உடல் முழுதும் எம்பெருமானைப் பிணித்ததனால் ஏற்பட்ட நோய் தாங்க முடியாது, நீரில் சுற்றியடித்த விசையால் துண்டமுண்டாடிக் கக்கிய ரத்தஞ் சிந்த, கண்கள் சிவந்து தீப்பொறி எரிக்க, கடுங்கோபங் கொண்டு, மனம் புகைந்து, நெடுமூச்சு வெளிவாங்கக் கண்ணனையே உறுத்துஉறுத்து நோக்கிக்கொண்டிருந்தனன். இவன் உறுட்டுக்கும் மிரட்டுக்கும் கண்ணன் கலங்குவன் போலும்! அதைக் கண்ட அம்மாயச் சிறுவன் அப்பாம்பைச் சுற்றிச்சுற்றிச் சுழன்றிடக் காளியனும்

கடிக்கத்தக்க நல்ல ஸமயத்தை எதிர்பார்த்து, தன் காக்குகளைத் தீட்டி சொண்டு கனவேகமாகச் சுழன்றுகொண்டிருந்தான் நெடுநேரம் அவ்வாறே அவன் அந்நீருள் சுழன்றான். எனினும் கண்ணன் தாம் முன்னிலும் பன்மடங்கு ஆத்திரமும் விசையும்கொண்டு கைகளையும் கால்களையும் வீசிக்கொண்டு அம்மடுவை நாசஞ்செய்துகொண்டிருந்தனர். களைப்புற்ற காளியனால் அது முடியாதுபோகச் சற்றே மயங்கிக் கிடந்தான். கோபர்களும் கண்கொட்டாது அப்போது அங்கேயே நோக்கிக்கொண்டிருக்க, ஆதிப்பொருளே தானென்ற அறிவோடு அந்தத் தெய்வச்சிறுவன் அப்பாம்பின் தலையை நிமிர்த்து, படங்கொண்ட அதன் முடிமேல் தேவரு முணராத் தமது தெய்விகத் திருவடியை யிருத்தி, அதன்மேல் இவர்ந்து நின்று கூத்தாடி நடிக்க நினைத்தனர்.

இளந்தளிரொத்த தமது இரு கைகளையும் அகல இருத்தி வளைத்து, ஒரு காலை சற்றே தூக்கி, மறுகாலின் பாதமணி நாகமணியொளியில் பாயக் குணித்து, இளம் முறுவல் பூத்து, கண்களைச் சிமிட்டி, புருவத்தை வளைத்து நிமிர்த்துச் சுருக்கித்துடிக்க விடுத்து, நெற்றியைக் கவிந்த இளமயிர்த் தொகுதி வளைந்து குதிக்க, வெகு லாகவமாகக் கண்டாரெவரும் கண்விண்டு கிடக்க வைரக்கல்லில் நின்று ஒளி நெளிந்து அசைந்து மனதைக் கவர்ந்து மயக்குவதுபோல, அந்நாகனது பணமுடிமேல் தகதக்க வெனத் தாள வொலிகள் ததும்பிக் கிளம்பிப் பத்துத் திசையும் பரந்து ஒலிக்க நடித்தனர்; புன்னகை பொலிந்து பரதநாத விதிப்படி தாரக நாடகம் படித்தனர். அப்போதங்கு காத்திருந்த ஸித்த சாரண கந்தர்வர் முழவு ஒலித்து தாண்டவம் பயின்று யாழிசைகூட்டி, உள்ளங் களித்தனர். தேவமாதர்கள் அக்கூத்தைக் கண்டு களிததுத் தாமும் நடித்தனர். எம்பெருமானும் சற்றுங் கதி தவறாது, அச்சிறு உடலை நெளித்து நெளித்து, பலமற்றும் அகந்தை யொழியாது ஆடும் அந்நாகனது படத்தின் மீது வலமு மிடமுமாகப் பாய்ந்து பாய்ந்து பரதம் பயின்றனர்; மூக்கிலும் வாயிலும் அப்பாம்பு ரத்தங்கொட்டும்படி நடித்தனர்; தமது ஆத்மநிலையில் வெட்டவெளியிலாடும் இறைவன்னன ஆடினர். அக்கால சுற்றுப் புறத்திலிருந்த கோபிகோபர்கள் கண்டு மனம் நெக்குநெக்குருகித் தாமும் அவ்வாறே உவகை மிகுதியால் துடித்து நடித்தனர். அப்பசுக் கூட்டங்களும் குதித்து விளங்கின. பக்கத்திருந்த மரங்களும் அத்தெய்விகப் பிரபாவத்திலீடுபட்டு அசைந்தசைந்தாடின. அம்மடுவிலிருந்த நீரும் குதித்துக் குதித்து எழும்பிக் கூத்தாடிற்று. மற்றுச் சுற்றிலிருந்த ஸர்வஜீவராசிகளும் ஆடியவிதமே அவ்வானந்தத்தைக் கண்டுகளித்தன. அவரது நடன வைபவத்தால் பூமியும் வளைந்து வளைந்தாடியது. மலைகளும் தலைகளை யசைத்தசைத்து ஆடின. நீரருவிகளும் அலைகளை யெறித்து நடமிட்டு நடந்தவந்தன. காற்றும் அவரோடு மயங்கி அவர்க்கிணங்க நடித்தது. உண்மையில் லோகநாதன் சிறுகுழந்தை யுருவுக்கொண்டு அப்படுவிஷங்கொண்ட பாம்பின் தலைமேல் ஞானக்கூத்தாடியபோது, உலகமே கூத்தாடியது. ஆடுபவனும் ஆட்டுவிப்பவனும் அவனேயன்றோ?

கண்ணனது பரதம் பெருகப்பெருகச் சுற்றிலிருந்த யாவரும் தமது நினைவற்று மயங்கினர். பிரக்ருதியின் அமைப்பனைத்தும் அப்படியே விளங்கின. அப்பாரதவேகத்தைத் தாங்கமுடியா அக்காளியனும் அளவு கடந்த ரக்தத்தை வெளியிட்டுச் செயலற்று உணர்வற்றுக் கிடந்தான்.

ஞானக்கூத்தில் அறியாமை எப்படி நிலைககும்? அகந்தை எவ்வாறு ஒளிரும்? அக்கூத்தின் பெருமையை அளவிட யாரே வல்லார்? கீழ்மையும் தாழ்மையும் பாழ்க்கப் பாம்பின் தலையில் பதிந்து நடமிட்டு,

ஆனததி யாடிபபின் வைக்கூத் தாடிக்
கானததி யாடிக கருமத்தற் றரித்தாடி
மோனச் சுழுனையு ளாடி முடிவில்லா
ஞானத்து ளாடி முடித்தானென் நாதனே.

அவ்வைபவத்தைக் காணப் பெற்றாரன்றோ கண்ணுற் பெரும் பயன் பெறுவர்? மற்றோர் கண்ணிருந்தும் புண்ணுடையர் அன்றோ

விஷ்ணுவும்சிவனும் வேறென்பர் சிலர். அது தவறு. அவரிருவரும் ஒரே மூர்த்தம்;கொண்டாடுபவர் மனததிலதான் பேதம். ஒருவர் விச்வேசா. மற்றொருவர் ஜகந்நாதா. ஒருவா நடராஜர்; மற்றொருவர் அரங்கநாதா. ஒருவர் பேய்முலை விஷமுண்டவர்; மற்றவர் கடல் நஞ்சுண்டவர். உண்மையில கண்ணன் முககண்ணனன்றோ?

மஹாராஜா ஸர் ராமவர்மா, ஜி. ஸி. எஸ். ஐ.

MAHARAJA SIR RAMAVARMA, G.C.S.I.

(172-ம் பக்கத்தொடர்ச்சி)

மாஜி திவானாகிய ஸர் மாதவராயரிடம் அவர்கொண்ட உண்மை நட்பிற்கும், அடங்கா அன்பிற்கும் அளவே இல்லை. மற்று, திவான் ராமய்யங்கார் அவர்களும் அவரது பால்யகாலத்து நேயர்களில் ஒருவர். இவரன்றி சமஸ்தானத்துக்கு வெளியில் ராமவர்மரது நேயர்கள் அநேகரிருந்தனர். அவருள் ஐரோப்பியரும் பலருண்டு. மைசூர் நாடு அதன் இணையற்ற பெருமைவாய்ந்த முதன் முதல் திவானாகிய ரங்காசார்லு அவர்களை அடையும் பாக்கியம் ராஜா ராமவர்மா அவர்களின் சமயோசிதத் தொண்டினாலே யாகும். அவரே, ஆசார்யரைப்பற்றி, தமது பழைய நண்பரும், மைசூர் சமஸ்தானத்துப் பிரதான கமிஷனருமான பௌரிங் துரையவர்களுக்குச் சிபார்சு செய்து அவரைத் திவானாக நியமிக்கும்படி வற்புறுத்தினர்.

நிற்க, 1880-ம் வரு ஜூன் மீ 17உ ராஜா ராமவர்மா அவர்கள் திருவனந்தபுர சமஸ்தானத்துப் பீடாதிபதியாகத் தமது பரம்பரையாரது ஸிம்மாஸனத்தில் அமர்த்தப் பெற்றனர். அது சமஸ்தானத்துக்கே பெரும் திருவிழாவாக இருந்தது. பொது ஜனங்களது சுகதுக்கங்களைத் தமதாகவே பாராட்டி அவரது நிலைமையைக் கவனித்து, உயர்த்தவேண்டுமென்ற உண்மைப் பேரவாக்கொண்ட ராமவர்மர் அப்பதவியை அடைந்தால் அவர் களிப்படைவது என்ன அதிசயம்? அச்சமயம் பிரிட்டிஷ் ஸ்தானாதிபதியாரும், ராமவர்மரைப் போல் ஜனங்களது நன்மைக்கு உழைக்கத்தக்க மனோவன்மையோடு அவ்வாறுழைததுப பெரும்புக ழடையக்கூடிய சந்தாப்பத்துடன் ஸிம்மாஸன மேறினவருள் சிலரே உளரென்றும், அவ்வாறு உழைப்பதிலும் ராமவர்மர் தமது சமஸ்தானத்துககேயன்றி இந்திய நாடு முழுதுக்குமே பேரவாவுடன் உழைப்பரெனக் கொண்டாடியது உயர்வு நவிர்ச்சியலல. தென் இந்தியா முழுவதும் அக்காலம அதே அபிப்ராயங்கொண்டு விளங்கியதல்லாமல், அவரது ஆட்சியிலிருந்து தம் நாடு பெரும் லாபத்தை அடையக்கூடுமெனவும் எதிர்பார்த்திருந்தது.

ராமவர்மர் பட்டம் அடைந்ததும், முதன்முதல் தமது பழைய நாளைய நண்பரும், ராஜதந்திர நிபுணருமாகிய வெம்பாக்கம் ராமய்யங்காரவர்களைத் தமது திவானாக நியமித்தனர். இதற்கு அவர் இருவருக்குமிருந்த மன ஒற்றுமையே காரணம் போலும். மஹாராஜா அவர்கள் ஆட்சி முறையில் என்றும் மூர்த்திவிளங்கியன சீர்திருத்தங்களே. ராஜாங்கத்தின் ஒவ்வொரு இலாகாவும் தனித்தனியே கவனிக்கப்பட்டு வந்தது. அவ்வாறு செய்தது,நிர்வாக சுதந்தரம் பெற்று, குறுகிய நோக்கம் கொண்ட எவர்க்கும் பிடிக்கவில்லை. எனவே, சீர்திருத்தங்களுக்கு எப்போதும் நிர்வாககர்கள் செய்யும் தடைகளையெல்லாம் செய்து வந்தனர். எனினும், மனோ வன்மையும் பொது ஜனங்களின் நன்மையில் ஊக்கமுங்கொண்ட மஹாராஜா அவர்கள், அவரது கூக்குரலைச் சற்றும் கவனியாது, தாமும் தமது அமைச்சருமாக குறைகூறுவாரது கண்டனங்களை யெல்லாம் துண்டித்து,சமஸ்தானத்திற்கு அநேக நன்மைகளைச்செய்தனர். வாழ்க்கை அநித்தியம் என்ற நம்பிகை கொண்ட அவர், அன்றன்றைக்குச் செய்யக்கூடிய எல்லாக் காரியங்களையும் காலதாமதம் செய்யாமல் உடனுக்குடனே செய்துவந்தனர். எனினும், அவர் செய்த சீர்திருத்த முறைகள் தவறான முறையிற்செல்லாது, கன்மேல் எழுத்துப்போல் நிலைநின்று, உதவி பயத்ததை இக்காலத்தவர் எவரும் அறிவர். இம்மாதிரிச் சீர்திருத்தங்களே யல்லாமல், வேறு சில புதிய ஏற்பாடுகளையும் தமது ஆட்சியில் அவர் ஏற்படுத்தினர். முக்கியமாக, பூமிகளை அளவிட்டு, ரிவினியூ ஏற்பாடுகள் செய்ததே கவனிக்கத்தக்கது. அதுவரையும் அந்நாட்டில் செய்துவந்த எல்லா அரசாங்க ஏற்பாடுகளைக் காட்டிலும், மதியூகத்திலும் பொதுஜனங்களின் சௌக்யத்தை நிலைநிறுத்துவதிலும் ராஜாங்க வருமானத்தை ஒன்றுசேர்ப்பதிலும் அவ்வேற்பாடு சிறந்து விளங்கியது. திருவனந்தபுர சமஸ்தானம் சிறிது சிறிது பாகங்களாகவே ஜனங்களால் கொள்ளப்பட்டிருந்ததால், அதன் வருமானக் கணக்கைப்பற்றிய வியவஹாரங்கள் தலைமுறை தலைமுறையாகச் சரியாகக் கவனிக்கப்படாதிருந்

தது. இவற்றைச் சீர்திருத்தும் எண்ணம் பல அரசர்களுக் கிருந்திருந்தபோதிலும், அவ்வெண்ணத்தைப பூர்த்திசெய்யத் தைர்யமும் உண்மை ஊக்கமுங்கொண்டவர் இதுவரை எவரும் இருந்திலர். அக்கணக்குகளின் நுணுக்கங்களிடம் கொண்ட பயம் அவரை ராஜாங்க வருமானத்துக்கு நஷ்டம் வராதவரைப் பாதுகாத்து ஜனங்களது கஷ்டங்களைக் கவனிக்காம லிருக்கும்படியாகச் செய்து விட்டது. எனவே, புதிய மஹாராஜா 'சுபஸ்ய சீக்ரம்' என்ற மொழியையே தமது நோக்கமாகக்கொண்டு, மேற்படி கணக்குகளைச் சரிப்படுத்தி ஜனங்களது கஷ்டங்களைப் போக்கப் பேராவல் கொண்டு இரவும் பகலும் உழைத்து யாவரும் புகழ நடந்ததல்லாமல், நெடுநாளாகத் திருவனந்தபுரத்திற்கும், கொச்சி சமஸ்தானத்திற்கும் ஏற்பட்டிருந்த எல்லைச் சண்டையைப் பஞ்சாயத்து மூலமாக ஒழித்து, அயலிலிருந்த சமஸ்தானங்களுடன் நேசபாவத்தோடும் விளங்கினர்.

சீர்திருத்தங்களே யல்லாமல், மஹாராஜா அவர்களது உழைப்பும், அதனால் ராஜாங்க உத்தியோகஸ்தர்களுடைய மனத்தில் அவர் ஏற்படுத்திய ஒருவித மதிப்பும் கவனிக்கத்தக்கன. அவர் பட்டமடைந்த அந்நாளே வனங்களிலிருந்த வேடர்களுங்கூட நிர்வாக உத்தியோகஸ்தர்களால் தமக்கேற்பட்ட கஷ்டத்திற்கு முடிவு வந்துவிட்டதெனவே எண்ணினர். எவ்வெவ்விடத்தில் அதிகாரம் நிலைத்திருக்கிறதோ அவ்வவ்விடங்களில் முதலில் தெரியாமலும், பின்னர் தெரிந்தும் அதிக்கிரமிக்கும் ஆசை ஊன்றிவிடுவது அதிசயமாகாது. காணமுடியாது மறைந்து விளங்கும் பரிதான முதலிய துர்விநியோகங்களின் மஹிமையால் தமது ஒழுங்கைத் தவறி நிர்வாகர்கள் செய்த தவறையே முதன்முதல் கவனிக்க அவர் கங்கணம் கட்டிக்கொண்டனர். தவறினவர்களை யடக்கும் கோபத்தின் வேகத்திற் கேற்றபடியே, எங்கெந்த இடத்தில் பெருமை விளங்கியதோ, அதை மதித்துப் பாராட்ட அவர் ஊக்கங்கொண்டனர். இராஜதர்மத்தை நிலைநாட்ட அவர்போல் உழைத்தவர், இக்காலத்தில் இருக்கமுடியாதென்றே சொல்லலாம். ஊரில் எல்லாவிளக்குகளும் அவிந்த பின்னரே; தமது விளக்கை அவர் அவித்துப் படுக்க எண்ணங்கொள்வர்; மற்று ஊரில் எங்கும் சிறு வெளிச்சம் எழும்பும் முன்னரே எழுந்து அவர் தமது விளக்கைக் கொளுத்தி, உத்யோகமுறையில் தமது பார்வைக்கு வரும் சமஸ்தானத்துக்காகிதங்களையெல்லாம் கவனித்துவருவர். திவான் ராமய்யங்காரவர்கள்வெகு ஜாக்கிரதையாகப் பார்த்த இராஜாங்க விஷயமான பத்திரங்கள் யாவும் நாடோறும் மாலை ஏழு மணிக்குக் காலம் தவறாது வருவதுபோலவே, மறுநாள் கச்சேரி திறக்குமுன்னரே, அரசரவர்களால் முழுதும் அவை கவனிக்கப்பட்டு, தவறின்றி ஹஜூருக்குப் பலவித சமயோசிதத் திருத்தங்களுடன் அனுப்பப்படும். இதனுடனேயே இந்நாட்டினரல்லாமல், பல வெளிநாட்டாருடனும் அவர் கொண்ட கடிதப் போக்குவரத்தினால் அவர் நாள்தோறும் எழுதும் கடிதங்கள் பத்துத் திசையிலும் பறந்து செல்லும். சூரியன் தான் எழும்பி ஆகாய வீதியில் நடப்பதன்முன், அவர், துரகாரூடராய் வெளிக் கிளம்புவர்; ஊர்ப்புறத்தே சுற்றிப் பலவித தாவரங்களைக் கவனித்து, அவற்றின் அமைப்பு, போஷணை முதலிய வியவஹாரங்களை மேற்பார்வை யிடுவர். மீண்டதும், சந்தி ஜபம் செய்து, தர்ப்பணங்கள் முதலியன இயற்றி, தமது மூதாதையர் கூறிய ஒவ்வொரு சிறு மொழியிலும் மரியாதை பாராட்டி, அதற்கேற்ப நடந்து, தமது தேக அசௌகர்யத்தையும் கருதாது பதினொரு மணிக்கு ராஜ்ய வியவகாரங்களைக் கவனிக்க மீண்டும் ஸித்தமாயிருப்பர். தமது அரண்மனைகோவில் வியவகாரங்களையும் அவற்றின் சிப்பந்திகளைப்பற்றிய ஏற்பாடுகளையும் எள்ளளவும் விடாது கவனித்து, அவர் இடையில் மாலை இரண்டு மணிக்குத் தாகசாந்தி செய்து சற்றே இளைப்பாறுமுன், உத்தியோகமுறையில் வரும் ரிபோர்ட்டுகளும், தம்மைப் பார்க்க வருவார்களும் அவரது எஞ்சிய பகற்பொழுதைக் கொண்டுவிடும். அஸ்தமித்ததும், நித்தியகர்மானுஷ்டானங்கள் அவரது பொழுதைப் பங்குகொள்ளும். இம்மாதிரியே அவர் சற்றும் ஒழிவில்லாமல் நாள் தோறும் தவறாது நடந்துவர, அவரது மெல்லிய சரீரம் எவ்வாறு உடன்பட்டதென்பது ஆச்சர்யமே. மனமிருந்த வழியே யாவும் நடக்கு மென்பற்கு இது ஒரு சான்று போலும். நிற்க, கோயிற் திருவிழாக்களும்,

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி.

பொது சந்தர்ப்பணைகளும், கவர்னரது பேட்டியும் ஆகிய விசேஷ வியவகாரங்களைக் கவனிக்க அவருக்கு ஏற்பட்ட ஒழிவுநேரங்களே இடந் தரும்.

இவ்வாறு இவர் நாள்தோறும் உழைத்துச் செய்த காரியங்களின் அம்சங்களையும், அவற்றைப்பற்றிய தமது அபிப்பிராயங்களையும் நாள்தோறும் விடாமல் அவர் எழுதிவந்தது கவனிக்கத் தக்கது. இம்மட்டோ டிராமல் அவர் தமது வழக்கப்படி படிப்பையும், சாஸ்திர விசாரத்தையும், விஷயதானம் செய்வதையும், விடாமல் விளங்கியது பாராட்டத் தக்கது. தமது அளவற்ற இராஜாங்கத் தொழில்களிடையே, புதிது புதிதாக வந்த புத்தகங்களைப்பற்றி யாவரும் அதை அறியுமுன்னரே, தமது அபிப்பிராயத்தை வெளியிட்டு யாவர்க்கும் களிப்பூட்டுவர். மலையாளத்தில் பலவித நூல்கள் எழுதவும் அவருக்கு எப்படியோ காலம் கிடைத்துக்கொண்டேயிருந்தது. பல உத்தமர்களது வாழ்க்கையைப் பற்றி அவர் அடிக்கடி எழுதியுள்ளனர். 'வித்தியா விலாஸினி' என்னும் ஒரு மலையாளப் பத்திரிகையைத் தம் ஆதரவின்கீழ் நடப்பித்து அதில் வானசாஸ்திரத்தைப்பற்றி அவர் எழுதிவந்தனர். ஆங்கிலத்திலும் அவரது சுறுசுறுப்பு, குறையாமலே விளங்கிவந்தது.

யாத்திரையிலும் அவருக்கிருந்த ஆவல் குறையவில்லை. 1882-ம் ௵ அவர் வடநாட்டிற்குப் பிரயாணம் சென்று அநேகம் பெரும் பட்டணங்களிலெல்லாம் விஜயஞ் செய்து, அவ்வவ்விடத்து ஜனங்களால் மதிப்புடன் ஏற்கப் பெற்றனர். கும்பகோணத்திற்கு வந்த போது அவர் உயர்தரக் கல்வி விஷயத்தில் கவர்ன்மெண்டாரது உதவியின் ஆவசியகத்தைப்பற்றிப் பெரியதோர் உபந்நியாஸம் செய்தது கவனிக்கத்தக்கது. அடுத்த வருஷம், சென்னை மூலமாக வைதிக முறைப்படி காசிக்குச் சென்று, ராமேச்வர யாத்திரை செய்தனர். ராமஸேதுவைத் தரிசித்ததும் அவர்கொண்ட அளவு கடந்த பக்தியும், பேரானந்தமும் அவர் காப்டன் ஹெளலட் என்பவருக்குத் "தெய்விகம் பொருந்திய ராமஸேதுவை இன்று யான் கண்டேன். அது இயற்கையோ, தெய்விகமோ எப்படியிருந்தால் என்ன? அக்காட்சி தெய்விகக் காட்சியே" என்று எழுதியதே வெளியிடும். சுபாவத்தில், மஹாராஜா அவர்கள் ஜனங்களுடன் கலந்து விளங்கும் தன்மை வாய்ந்தவர்.

நிற்க, அவர் தம் நாட்டுச் சித்திரம், தொழில் இவைகளிடம் கொண்ட அன்பு என்னவாயிற்றென நமக்கு ஓர் எண்ணம் உண்டாகலாம். அவர் சும்மா விருக்கவில்லை. அவற்றை ஆதரிக்க அவர் வேண்டிய சிரத்தை எடுத்துக்கொண்டன ரென்பது கவனிக்கத்தக்கது. தமது பதவியிலிருந்து சமஸ்தானத்து மூலை முடுக்குகளிலிருந்த சிறப்பு வாய்ந்த இடங்கள் ஒவ்வொன்றையும் அவர் தமது தினசரிக் குறிப்புகளில் பதிந்து வந்ததல்லாமல், அக்காட்சிகளை வர்ணத்தில் சித்தரிக்கும்படி பலரையும் நியமித்திருந்தனர். தம் நாட்டுத் தொழில்கள் நாசமடையாது விளங்குமாறு நல்ல தொழிற்சாலை ஒன்றை அவர் ஏற்படுத்தினர். கொல்லம் நகரத்தில் அவர் பஞ்சாலை ஒன்றை ஏற்படுத்தி, அதைத் தக்கவாறு நடத்திவர அவர் நேர்பட ஆதரித்தது பாராட்டத்தக்கது. புனலூர் என்னும் கிராமத்தில் காகிதத் தொழில் நிலைபட்டு இன்னும் செழித்து விளங்கக் காரணம் அவரது ஆதரவே யாகும்.

ரஸாயன பௌதிக சாஸ்திரங்களில் அவர் கொண்ட பேரன்பும், அவற்றினால் தாம் அடைந்த பிரத்தியக்ஷ லாபங்களும் தூண்ட, திருவனந்தபுரக் காலேஜில் ரஸாயன, பௌதிகத்தைக் கற்பிக்கும்படி அவர் தக்க ஏற்பாடுகள் செய்தனர். அனுபவ, பௌதிக சாஸ்திரங்களில், அவர் தாம் கொண்ட பெரும் சந்தோஷத்தைப்பிறரும் அனுபவிக்குமாறு அவர் விளங்கி வந்தனர். பொழுது புலர்ந்ததும், ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களைக் கவனிப்பதில் அவர்க்கு வெகுப் பிரியம். அதிசயமான காட்சிகளை யாரும் அங்கு கவனிப்பதன் முன், அவர் கவனித்து வெளியிடுவர். இவ் விஷயங்களில் அவர் அடிக்கடி சென்னை நக்ஷத்திர ஆபீஸ் தலைவருக்குத் தந்தி, கடிதம் மூலமாக அனுப்பிய சமாசாரங்கள் வெளியிடும்.

> யாதானும் நாடாம லூராமா லென்னொருவன்
> சாந்துணையும் கல்லாதவாறு

என்று வள்ளுவனார் வெளியிட்ட மொழியைத்தலைமேற்கொண்டு நடந்த அவரது பெரு

ஊர் கூடி செக்குத் தள்ளினாற்போல.

மையையும் புத்தி நுட்பத்தையும் சாஸ்திர பரிசயத்தையும் வெளிநாட்டார் கவனிக்க நெடுநாளாக வில்லை. முதலிலேயே சென்னை ஸர்வ கலாசங்கத்தார் அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவ ராக்கினர். பிறகு, தாவர விஷயங்களில் உழைத்த அவரது ஞானத்தை மதித்து லண்டன் நகரத்துப் புராதன லின்னியன் சங்கத்தார் அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவராக்கினர். திருவாங்கூர் சமஸ்தானம் முழுதும் பற்பல விடங்களில் காடு, மேடு, மலை வனாந்தரம் முதலியவற்றைச் சுற்றித் திரிந்து அவ்வவ்விடங்களின் சிறப்பைப் பற்றி அவர் வெளியிட்ட அனுபவத்தைப் பாராட்டி அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவராக ராயல் பூகோள சங்கத்தார் ஏற்றுக் கொண்டனர்.

கிரேட் பிரிட்டன் அயர்லாந்து சமஸ்தானத்து 'ராயல் ஏஷியாடிக் சங்கத்தார்' மஹாராஜா அவர்கள் சம்ஸ்கிருதத்தில் கொண்ட அபூர்வ ஞானத்தையும், அவர் பழைய இந்திய ரண சிகிச்சையைப்பற்றிச் செய்த சர்ச்சைகளையும், மற்ற பல புராதன பாவங்களைப் பரிசீலம் செய்தலையும் கவனித்து, தமது அங்கத்தினருள் ஒருவராக்கினர். லண்டன் மாநகரத்து 'ஸ்டாடிஸ்டிகல்'(கணக்குப் பரிசோதனை) சங்கத்தார் தமது நோக்கப்படி மஹாராஜா அவர்கள் செய்த சில விஷயங்களைக் கவனித்து அவரைத் தமது அங்கத்தினருள் ஒருவராக்கினர். பிரஞ்சு கவர்ன்மெண்டாரும் அவரைத் தமது பொதுக்கல்வி ஆசிரியர் ஒழுங்கில்முதல் ஏற்று, பின் பாரிஸ் நகரத்துக் கடல் நாட்டு அயல் வியாபார சங்கத்தாரது அங்கத்தினராக்கினர். இவற்றிற்கெல்லாம் முந்தியதாகவே, காலஞ்சென்ற அதிமாட்சிமைதங்கிய விக்டோரியா மஹாராணியார் அவரது உண்மைஞானத்தையும், ஒழுக்கத்தின் பெருமையையும் கவனித்து 1882 ம் வருஷம் ஜீ.ஸி எஸ் ஐ. என்னும் பட்டத்தை அன்போடு அளித்தனர். அக்கால் சென்னை கவர்னராக விளங்கிய கிராண்ட் டப் பிரபு அவர்கள் வெகு சாதுர்யமாக "உமக்காகவும் உமது பட்டத்துக்காகவும் நான் களிப்படைகிறேன்" என்றனுப்பிய தந்தியைப்பற்றி இங்கு குறித்தல் தவறாகாது.

மதியூகமும், சிறந்த ஞானமும், அனுபவ சக்தியும், உத்தம குணமும் ததும்பிவிளங்கிய மஹாராஜா அவர்கள் தமது நாட்டாரது மனதுள் குடிகொண்டு விளங்கிய வைதிகக் கொள்கைகளைச் சிறிதும் புறக்கணிக்காது, தமது அறுபதாம் ஆண்டில் துலா புருஷதானம் செய்தனர். மேலும், இராஜாங்க வைதிகச் சடங்கின்படி பத்மகர்பபம் என்னும் முறைப்படிநடந்து கிரீடாதிபதி என்னும் சமஸ்தானத்துப் பட்டத்தையடைய பேரவாக்கொண்டு விளங்கிய அவரது விருப்பத்தை நடக்கவொட்டாது, விஞ்சையர் உலகத்துப் பெரியோர்கள் அவரது கல்வியும் குணமும் கலந்த பெருமையைத் தமதாக்கித் தம் நாட்டு மகுடாதிபதியாக்க 1884-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 5உ அவரது உயிரைக்கவர்ந்து ஜடமாகிய இவ்வுலகில் அவரது பௌதிக சரீரத்தையே விட்டுச் சென்றனர்.

வானத்தில் பதிந்த ஒப்பு உயர்வற்ற பேரொளி, தனது கதியே ஓடி, மேற்பால் விழுந்து அந்தகாரத்தில் உலகையே புதைப்பது போல அக்கால் இந்நாடு அலமந்து விளங்கிற்று. எனினும், அவரது வாழ்க்கை வழியைப் பின்பற்றுவது என்னும் ஞானோதயம் கொண்ட ஹிருதயம் ஒருநாளும் அந்தகார இருளில் ஆழ்ந்து கிடக்க வேண்டியதில்லை என்பதற்கு மஹாராஜா அவர்களது வாழ்க்கையே வழிகாட்டும். இது ஸத்யம்.

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE

நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களின் கூட்டத்தைப் 'பிரகிருதி மண்டலம்' என்று நாம் சொல்வதுண்டு. இதையே இங்கிலீஷ் பாஷையில் 'நேச்சர்' (Nature), 'மெடீரியல் வொர்ல்ட்' (Material World), 'பிஸிகல் யூனிவர்ஸ்' (physical universe) என்று விவகரித்து வருகிறார்கள். நமது புலன்களாலுணரக்கூடிய வஸ்துவுக்குப் பதார்த்தம் என்று பெயர். ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களின் அமைப்பு, குணம், நிலைமை இவைபோன்ற வெளித்தோற்றம் வெவ்வேறா யிருப்பதையும், அவைகளின் தன்மை அடிக்கடி மாறிக் காணப்படு

வதையும் நாம் நாடோறும் பார்க்கிறோம். இவ்விஷயங்களை யெல்லாம் குறித்துச் சொல்லும் தாவர ஜங்கம நூலுக்கு விரிவாய் 'நாச்சுரல் ஸயன்ஸ்' (Natural Science) என்னும் பெயர் ஆங்கிலேய பாஷையில் வழங்குகிறது. இதில் அநேக உட்பிரிவுகள் உண்டு.

(1) 'பயாலஜி' (Biology) அல்லது உயிர் நூல்:—விருக்ஷ வர்க்கம், பிராணி வர்க்கம் இவைகளின் உற்பத்தி, வளர்ச்சி, குணம், தொழில் முதலியவற்றை விவரித்துச் சொல்லும் சாஸ்திரமாம்.

(2) 'அஸ்ட்ரானமி' (Astronomy) அல்லது வானசாஸ்திரம், சூரியன், சந்திரன் நக்ஷத்திரங்கள், பிளானெட்ஸ் (Planets) என்று சொல்லப்படும் கிரகங்கள், வால் நக்ஷத்திரங்கள் முதலிய ஆகாயத்திலுள்ள மஹத்தான வஸ்துக்களின் சலனம், ஒளி, இன்னும் மற்ற விஷயங்களை விவரிக்கும் நூலாம்.

(3) கெமிஸ்ட்ரி (Chemistry) அல்லது ரஸவாதம் உலகத்திலுள்ள வஸ்துக்களின் அம்சபேதமும், அவைகள் ஒன்றோடொன்று கலந்து வெவ்வேறு வஸ்துக்களாய்ப் பரிணமிப்பதும், இவ்வித மாறுதலுக்குக் காரணமாயுள்ள வஸ்து ஸம்யோகம் என்னும் சக்தி விசேஷமும், இவைபோன்ற மற்றவிஷயங்களையும் குறித்துப்பேசும் நூலாம்.

(4) பிஸிக்ஸ் (Physics) அல்லது வஸ்து தத்வ சாஸ்திரம்,ஒவ்வொருபதார்த்தமும்ரூபம் அல்லது அம்சம் மாறாமலே, தன் குணம், பருமன், காந்தி, நிலைமை முதலிய வெளித்தோற்ற விஷயங்களில், பற்பல காரணங்களால் பலவிதமாய் வேறுபடலாம் என்பதையும், நம்மைச் சுற்றிலுமுள்ள ஜடபதார்த்தங்களின் வகுப்புகளும், அவற்றின் இயற்கைப் பண்பும் சிறப்பான குணங்களும அவைகளுடைய வெளிப்படையான மாறுதல்கள் என்றும், அம்மாறுதல்களுக்குக் காரணமாயுள்ள இயற்கையான சக்தி விசேஷங்கள் (Physical forces), இவைகளை ஆதாரமாய்க்கொண்டு அமைக்கப்படும் விதவிதமான யந்திரங்கள், சூழ்ச்சிகள், போக்குவரத்துக்குரிய ஸாதனங்கள், இவைபோன்ற பற்பல சமாசாரங்களைப்பற்றி எடுத்துச் சொல்லும் சாஸ்திரமாம்.

மேற்சொல்லிய நூல்கள், அதனதன் உட்பிரிவுகள், இவைகளால் போதிக்கப்படும் விஷயங்களின் பேதத்தை வரையறுத்து இன்னின்ன ஞானம், இந்தச் சாஸ்திரத்தைச் சேர்ந்தது, இன்னும் மற்றது வேறுநூல் சம்பந்தப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்ல எல்லா விஷயங்களிலும் சாத்தியமில்லாவிட்டாலும், அநேகமாய் ஒவ்வொரு நூலின் கோசரம் இன்னதென்று வித்வான்களின் மனோனுஸாரமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சாஸ்திரங்களுள்ஒன்றுக்கொன்று ஒருவாறு சம்பந்தம் உளதாயினும், பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி இவ்விரண்டுக்குமுள்ள சார்பு மிகவும் நெருங்கியது. ஆயினும் இவ்விரண்டு நூல்களுக்குள்ள பேதத்தின் முக்கிய அம்சங்களைச் சற்றுக் கவனித்தல் அவசியம். பிஸிக்ஸ் சாஸ்திர ஞானத்தின் உபயோகமும், இச்சாஸ்திரத்தில் சாமான்யமாய் ஜனங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களின் விவரணமும், கிரமமாய்ப் பின்னர் சொல்லப்படும்.

வஸ்துக்களைப்பற்றிய ஞான நூலுக்குப் பொதுவாய் ஸயன்ஸ் (Science) என்றும், அதில் தேர்ந்தவர்களுக்கு ஸயன்டிஸ்ட்ஸ் (Scientists) என்றும் இங்கிலீஷ் பாஷையில் சொல்வது வழக்கம். மேற்சொன்ன சாஸ்திரங்களுள் ஒவ்வொன்றிலும் விசேஷப் பயிற்சியுள்ளவர்களுக்கு, அவரவர் கல்வி விஷயத்தையனுஸரித்து விசேஷப் பெயர்களுமுண்டு. உலகத்திலுள்ள பதார்த்தங்களைப்பற்றித்தெரிய வேண்டிய விஷயங்களை முக்கியமாய் அடியிற்கண்டபடி இரண்டு வகுப்புக்களாக அடக்கிப் பேசலாம்.

1. ஒவ்வொரு வஸ்துவின் உள்ளமைப்பு அல்லது முக்கிய அம்சம் எவ்விதமானது ?

2. அதன் வெளித்தோற்றம் அல்லது நிலைமை எவ்வாறானது ?

இவற்றுள் முதலாவது அம்சமாகிய வஸ்துக்களின் அமைப்பு அல்லது மூல தத்துவத்தைக் கெமிஸ்ட்ரியும (Chemistry), இரண்டாவது பாகமாகிய வெளித்தோற்ற விஷயமான ஞானத்தைப் பிஸிக்ஸும்எடுத்துச்சொல்லும்.

வஸ்துவின் அம்ச அமைப்பு இங்கிலீஷில் பாடி (body), ஸப்ஸ்டன்ஸ் (Substance), மாட்டர் (Matter) என்று சொல்லப்படும்.

ஒவ்வொரு வஸ்து அல்லது பதார்த்தமும் வேறொன்றும் கலப்பில்லாத மூலவஸ்துவாயாவது, இரண்டு அல்லது மேற்பட்ட மூலவஸ்துக்கள் சேர்ந்துண்டான கலப்புத் திரவ்யமாயாவது இருக்கவேண்டு மென்பது ஸயன்டிஸ்ட்களின் கொள்கை. இதர அம்சங்கள் சேர்ந்துண்டாகாமலும், இரண்டு அல்லது அதிகக் கணக்குள்ள அம்சங்களாய்ப் பிரிக்கவொண்ணாதபடியும் உண்டாயிருக்கும் இரும்பு, வெள்ளி, பொன், கந்தகம், கரி, பிராணவாயு, பாதரஸம் இவைபோன்ற தனிமையான மூல வஸ்துவுக்கு எலிமெண்ட் (element) என்றும், அப்படிக்கல்லாமல் இரண்டல்லது மேற்பட்ட அம்சங்கள் சேர்ந்து உண்டாயுள்ளதும், அவ்வித அம்சங்களாக மறுபடியும்பிரிக்கக்கூடியகலப்புத்திரவியத்திற்குக் காம்பௌண்ட் (compound) என்றும் பெயர். உதாரணம்:— அரிசி, உப்பு, ஜலம், கண்ணாடி, காகிதம், வஸ்திரம், கரிவாயு, மரக்கட்டை முதலியன. கலப்புப் பதார்த்தத்தின் அம்சங்கள் அல்லது மூலதத்வங்கள், இங்க்ரீடியெண்ட்ஸ் அல்லது கான்ஸ்டிடூயேன்ட்ஸ் (Ingredients or Constituents) என்று சொல்லப்படும். இப்போது ஸயன்ஸ் வித்வான்களுக்குத் தெரிந்தமட்டில் உலகத்தில் சுமார் 80 எலிமெண்ட்ஸ் இருப்பதாயும், நாம் பார்க்கும் லக்ஷக்கணக்கான பதார்த்தங்களெல்லாம் மேற்சொன்ன எலிமெண்ட்ஸ் இரண்டு அல்லது அதிகக் கணக்குள்ளவைகளாய் ஒன்றோடொன்று பற்பல அளவாகச்சேர்ந்து கலப்புத் திரவ்யங்களாய்ப் பரிணமித்துண்டானவையென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். மேற்சொன்ன மூல வஸ்துக்கள் ஒவ்வொன்றுக்கும் இயற்கையான குணம், சக்தி, தோற்றம், இவைகள் வெவ்வேறா யிருக்கும். இவ்வஸ்துக்கள் ஒன்று சேர்ந்து கலப்புப்பதார்த்தமாகும்பொழுது இவற்றின் குணங்கள் அழிந்து, புதிய குணம், ரூபம் முதலியவை உண்டாகின்றன. இவ்விதமே கலப்புப் பதார்த்தங்கள் ஒன்றோடொன்றும், மூல வஸ்துக்களுடனும் சேர்ந்து புதிது புதிதான பதார்த்தங்களாய்ப் பரிணமிக்கும்போது நூதன குணங்கள் உற்பவிக்கின்றன. இவ்வித வஸ்து ரூப மாறுதலுக்குக் கெமிகல் சேஞ்ச் (Chemical change) என்று பெயர். வஸ்துக்கள் இவ்விதம் ஒன்றோடொன்று கலந்து இதர பதார்த்தங்களாய் மாறுவதற்குக் காரணம்வஸ்துக்களின் இயற்கையாயுள்ள சக்தியின் பலாபலத்தினால்தான். இவ்விதச் சக்தி விசேஷங்களுக்கே கேமிகல் அபினிடீஸ் (chemical affinities) என்று பெயர். இம்மாதிரி வஸ்துக்கள் ஸ்வரூபம் மாறி, நூதன பதார்த்தங்களாய்ப்பரிணமிக்கும்பொழுது, அவற்றின் நிறம், காந்தி முதலிய வெளித் தோற்ற மாறுதல் உண்டானாலும் உண்டாகா விடினும், வஸ்து ஸ்வரூபம் வேறு பட்டால் இவ்வித வேறுபாடு, கெமிகல் சேஞ்ச் என்றே சொல்லப்படும். இவ்வித மாறுதல்களை யெல்லாம் பற்றி விவரிக்கும் கெமிஸ்ட்ரி என்னும் சாஸ்திரத்தின் முக்கிய தத்வம் ஒன்றுண்டு. இது பற்பல பரிசோதனைகள் மூலமாய் ஆராய்ந்து ஸித்தாந்தமாக ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. அதாவது, ப்ரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்கள், க்ஷணே க்ஷணே மாறிமாறி நூதன வஸ்துக்களாய்ப் பரிணமித்துக்கொண் டிருந்தாலும், அவைகளின் மொத்த நிறை அளவு எப்போதும் ஏற்றக் குறைச்சலில்லாமல் ஒரே மாதிரியா யிருக்கும் என்பதே. ஒரு ஸமயமுள்ள வஸ்துக்கள் மற்றொரு காலத்தில் வேறு வஸ்துக்கள் ரூபமாயிருக்க கூடியதாயினும், முன்னிருந்த வஸ்து ஸமூகத்தின் நிறையும் மற்றொரு காலத்திலுள்ள பதார்த்தக் கூட்டத்தின் நிறையும், ஒன்றாகவே யிருக்கும். வஸ்துக்கள் ஸ்வரூபம் மாறும்போது அவைகள் சிருஷ்டிக்கப்படுகின்றன வென்றாவது நாசமடைகின்றன வென்றாவது சொல்ல வொண்ணாது. இவ்விதம் ப்ரபஞ்ச பதார்த்தங்கள் நிலைமாறினும், நிறைமாறாத் தன்மையை இங்கிலீஷ் பாஷையில் கான்ஸர்வேஷன் ஆப் மாட்டர் அல்லது மாஸ் (Conservation of matter or mass) என்று சொல்லுவார்கள்.

ஐரோப்பிய மஹா யுத்தம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)
பத்திரிகைகளால் புகழப்பெற்றது
256-பக்கங்கள் : : 58 படங்கள்
விலை ரூ ஒன்று

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

தர்மம் (கடமை)

DUTY

பிறர் உனக்கு என்னென்ன செய்யக்கூடாது என்றுகருதுகிறாயோ அவை யொன்றையும் பிறருக்கு நீ செய்யாதே. இதராது நிலையில் நீயும், உன் பதவியில் அவர்களும் இருக்க நேர்ந்தால், அவர்களால், நீ அடைய விரும்பும் நன்மை யாவற்றையும் எப்போதும் பிறர்பாற் புரிவாயாக. ஸ்வயநல மறந்து, பிற உயிர்களின் பொருட்டே ஸர்வ கார்யங்களையும் புரியக்கருதுவாயானால், வெவ்வேறு போல் தோன்றி விளங்கும் ஸர்வத்திலும் உள்ள உண்மைப் பொருள் ஒன்றே என்று அறி. முணுமுணுக்காமல் முழுமனத்துடன் பலனைக் கோராது புரியும் தொழிலால் பிறக்கும் களிப்புக்கு ஓர் அளவேயில்லை. அத்தகைய உழைப்பில் அமர்கையில் மனப்பேயின் கொட்டம் முற்றிலும் அடங்கும். நடந்துபோன விஷயங்களைப் பற்றி வருந்தாமலும், இனிவரும் கஷ்டஸங்கங்களைப்பற்றி யோசிப்பதிலேயே வீண்காலம் போக்காமலும், தன்னயங் கோருவதை யொழித்து, எவ்விதத்திலும் மிகவும் தாழ்வடைந்திருக்கும் இழிகுல மக்களை உய்வித்துயர்த்துதற்குரிய வழிகளைத் தேடி யியற்றுவதில் முழுப்ராணனையும் செலுத்தி ஆயுளைச் செலவிடுவதே கடமையாகக் கொண்டாலன்றி மனவமைதியும் மோக்ஷ ஸாம்ப்ராஜ்யமும் கைகூடுமா? அல்ப ஆயுள் வாய்ந்த பேதை மானிடனே! எண்ணிறந்த விதவைப் பெண்கள் ரக்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கியும், தந்தை தாயரை யிழந்து ஆதரிப்போரின்றித் தவிக்கும் ஆயிரக் கணக்கான குழந்தைகள் கல்லு மிரும்பும் உருகும்படி கூக்குரலிட்டழுதும், லக்ஷக்கணக்கான மாந்தர், பசியாதியாம் பிணிகளால் வாடி வதங்கி உயிர்துறந்தும் வருகையில், நீ மாத்திரம் வயிறு வெடிக்க விலாப்புடைக்கத் தின்று கொழுத்துச் சிற்றின்பமே பேரின்பமாகக் கருதி, பரோபகாரசிந்தனை மறந்து, உன்னை யணுகும் மெலிந்தோர் இரந்தோர்களை மிரட்டியும் அதட்டியும் வருவதோ ஆத்மஞானம் அடையும் மார்க்கம்? கோவில்களில் கொந்தளிப்புடன் நீ காணக் கருதும் ஸச்சிதானந்த மூர்த்தியானவர் ஸர்வாந்தர்யாமியாய் ஸர்வ தேஹங்களிலுமிருப்பதாய் அறியும் நீ, தெருக்கள் தோறும் அலையும் (பரமாத்ம ப்ரதிபிம்ப) ஜீவர்களைப் பசியாதி கொடுமைகளினின்றும் காக்க நினைப்பதாவதுண்டா? குருவிக்குத் தக்க ராமேச்வரம் என்பதுபோல், உன்னால் இயன்ற உபகாரமாவது உன்னினும் ஏழையாயுள்ளோர்க்குத்தினந்தோறும் செய்து வருகின்றனையா? கார்யத்தில் சூன்யமாயிருந்து வாய் வேதாந்தம் பேசுவதால் ஏது பயன்? உன்னினும் வேறுபோல் காட்டி, உள்ளும் புறமுமாக எங்குமிருந்து, உன்னை இயக்கிவரும் பரந்தாமனை அறிய விரும்புவையேல், உனது என்ற வஸ்துக்கள் அனைத்தையும் விற்றுப் பெற்ற பணத்தை அரைவயிறு, கால் வயிறு, மூன்று நாளுக் கொருவேளை உணவு ஆகக் கிடைத்தால் அதுவே ஸ்வர்க்கம் எனக் கருதிக் கிடக்கும் கோடிக்கணக்கான ஏழைகளின் உதர மனோ போஷணார்த்தம் கொடுத்துவிடு. அயலார் சிசுக்களையும் தனதாகப் பாவித்துக் காக்கும் பாரத மாதாவின் வயிற்றில் உதித்தும் கூட, கொடும் பசியால் இறந்தும் உழன்றும் வரும் இஜ்ஜீவ கோடிகளது தேஹத்தில் ஓடும் ரக்தமும் சதையும் உன்னுடையதே யல்லவா! ஊர் ஊராய் வீடு வீடாய்ப் போய் பிச்சை யெடுப்பதால் சேரும் பொன், வெள்ளி, தாமிரம், தான்யம் ஆதிகளைப் பெருக்கி, பசியின் கொடுமையால் ப்ராணனை யிழக்கும் ஜீவர்களை ஆங்காங்கு ரக்ஷிப்பது தேசாபிமானியின் கடமையல்லவா! அநாதிகளான அபலைகள் வசிக்க விடுகளும், கூன் குருடு செவிடு முடம் ஆதியாம் பிறவிக்குறையாளர் குடியிருக்க இல்லங்களும் ஊர்கள் தோறும் அமைப்பதுடன், அவர்களுடைய உதரபோஷணம் கல்வி, கலாப்பயிற்சிகளின் பொருட்டு, பொது ஜனங்களிடமிருந்து பொருள், சேர்ப்பதால், ஏழை மாந்தர் யாவரையும்கோவில்மடாதிகளில் கூட்டி அவர்களுக்குப் பணச் செலவின்றியே தேஹ மனோ புத்தியாதிகளின் வளர்ச்சியை ஓங்கச்செய்யும் கல்வி புகட்டுதல் வேண்டும். தேசபக்தி பாராட்டுவது ஒருபோதும் குற்றமாகக் கருதக்கூடாது. ஜயபக்தியை ஒரு போதும் இழக்கக்கூடாது. தேச நன்மையின் பொருட்டு உடல் பொருள் ஆவியையும் இழக்கச் சித்தமாயிருக்க வேண்டும். பசியால நொந்து பரிதபிக்கும் ஏழையைக் காண்கையில் அவனுக்குக் கொ

டாமல் உன் வயிற்றை நிரப்பாதே. பகவானைக் காண எண்ணங் கொண்டமையால் ஸர்வத்தையும் துறந்த ஸன்யாஸிகள், ஞானிகளை அத்யந்த பக்தியுடன் ஆதரி. தமது ப்ராரப்த கர்மத்தின் குரூரத்தாலோ அல்லது பொது ஜனங்களின் இரக்கமற்ற கவனமின்மையாலோ, ஆற்றொணாப் பசியின் கொடுமையை நீடித்து அனுபவிக்கும் கணக்கற்ற இந்தியர்களின் பரிதாபநிலைமையை ஸதாகாலமும் நினைவுறுத்தும் பொருட்டு, கடைசி கவளம் மாத்திரம் உனக்கு வைத்துக்கொண்டு மற்ற உணவு முழுவதையும் ஏழைகளுக்கு அளித்து விடு. நாலுநாள் பட்டினி கிடந்த பிறகு கிடைத்த சிற்றுணவை, பசியின் கொடுமையால் தனக்களிக்கும்படி கேட்டவோர் பரதேசிக்குக் கொடுத்து அவன் திருப்தி அடையாமல் மறுபடி கேட்க, அன்புடன் தமது பாகங்களையும் ஈந்து பட்டினியாய் உயிர்துறந்த மனைவி மக்களுடன் இதர தேஹ போஷண நிமித்தமாய்த் தன் ப்ராணனையும் விட்ட (மகாபாரதத்தில் கூறியுள்ள) ப்ராஹ்மணனை ஒருபோதும் மறவாதே.

தேசத்தின் ஒற்றுமை, க்ஷேமம் இவற்றிற்கு விரோதமாக உழைத்துவரும் அறிவிலிகளான இருகால் விலங்குகளால் விபரீதம் யாதும் விளையாவண்ணம் மன்னனும் மன்னுயிர்களும் ஒன்று சேர்ந்து காப்பாராக. அரசன் மாத்திரமேயன்றி, அமைச்சர் ப்ரதானிகள், பொதுஜன நன்மைக்காக உழைக்கும் சங்கத்தினர் ஆகிய அனைவருமே இறந்தபின், தாம் உயிர்த்திருந்தபோது செய்த குற்றங்கள், (செய்யக் கடமைப்பட்டிருந்தும்) செய்யாதொழிந்த நன்மைகள் இவற்றிற்காகக் கடவுளுக்கு ஜவாப் சொல்ல வேண்டியிருப்பதால், தேசத்தில் நிறைந்துள்ள அந்யாயங்கள், ஏழ்மை, பொறுக்க முடியாத பலவித கஷ்டங்கள் அனைத்தையும் பகவானது ப்ரதிநிதியாய் இம்மண்ணுலகில் வீற்றிருக்கும் வேந்தனிடம் முன்னமே தெரிவித்து, பல்லுயிர்களின் துயர்களைப் போக்குவதற்குரிய வழிகளைத் தேடியியற்றும்படி காவலனைத் தூண்டுவது ப்ரஜைகளின் கடமையேயாகும். தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரராய் அவதரித்த (ஸகல லோக ரக்ஷகரும் ஸர்வ ஜீவதயாபரருமாகிய) ஸ்ரீராம சந்திர மூர்த்தியானவர், ராஜ்ய விஷயங்களுடன் எவ்வித ஸம்பந்தமும் இல்லாத வண்ணான் சொல்லைக் கேட்டதும், தமதுயிர்க்குயிரான சீதாபிராட்டியைக் காட்டுக்கனுப்பியதை அறிந்த நாம், நமது கஷ்டங்களை இறைவனிடம் முறையிட்டுக் கொள்வதற்கும் வழியற்று விழிப்பது பூர்வ விதியின் பயனேயோ? விதியை ஆக்குவதும் போக்குவதும் மதியேயென்றறியும் யாம், ஸ்ரீ கிருஷ்ண பகவான் கட்டளையிட்டபடி கர்மபலனைக் கோராமலும் சோம்பேறியாயிராமலும் நமது கடமைகளைப் பூர்ண அன்புடன் இயற்றி வருவோமாயின் ஈசன் அருள் அடைவது திண்ணம்.

செடிகளின் உயிர் வாழ்க்கை

PLANT GROWTH

ஒரு செடியானது ஜீவனுள்ள வஸ்துவென்றும், அது உணவு அருந்துகிறதென்றும், சுவாசிக்கிறதென்றும், வளர்கிறதென்றும், அதன் காலம் முடியும்போது செத்துப் போகிறதென்றும் நமக்குத் தெரியும். ஆனால் சரீர ஆரோக்கியமுள்ள எந்தச் செடியும் தன்னைப் போன்ற புதுச்செடிகளை யுண்டாக்குவதற்கு, அதாவது தன் இனத்தைப் பல்கிப் பெருகச் செய்வதற்கு, வேண்டிய காரியங்களைச் செய்து முடிக்குமுன் சாவதில்லை. அநேகமாகச் செடிகள் வளர்ந்தபின், பூத்துக் காய்த்து விதைகளையுண்டாக்குகின்றன. இவ்விதைகளில் ஒரு சிறு இளஞ்செடியின் பயிர் முளையும், அதற்குக் கொஞ்ச நாளைக்கு வேண்டிய ஆகாரமும் அடங்கியிருக்கிறது. தாவரவர்க்கங்கள் தங்கள் ஜீவகாலத்தில் நடத்தும் சகல தொழில்களின் நோக்கமும் தன் இனத்தைப் பல்கிப் பெருகச் செய்வதற்கு அவசியமான விதைகளையுண்டாக்கி அவைகள் முளைத்துப் பயிராகி மறுபடியும் விதைகளையுண்டாக்க ஏதுவாயிருக்கும்படி மண்ணில் சிதறுண்டு விழுந்தவுடனே செடிகள் அநேகமாய்ப் பட்டுப்போகின்றன.

ஊழிக்காய்ச்சல் அதிகமானால் சூனியக்காரன் கொள்ளை.

ஆகையால் நமது உபயோகத்துக்காகச் செடிகளைப் பயிராக்கவேண்டுமானால், அநேகமாய் விதை விதைத்தே பயிராக்குகிறோம். ஆனால் இப்படிச் செய்வதில் அதிக ஜாக்கிரதை அவசியம். விதையை எடுத்து நிலத்தில் ஊன்றிவிட்டால் அதில் நல்ல பயிர் உண்டாகிவிடுமென்று நினைப்பது பிசகு. ஒரு வயலிலுள்ள செடிகளில், சில பருத்துத் திடமாய் வளர்ந்திருப்பதையும், சில பலமில்லாமல் நோய்ந்து மெலிந்திருப்பதையும் எல்லோரும் காணலாம். ஒரு செடிக்கு ஒத்துக்கொள்ளாத நிலத்தில் அதை நட்டால், அது மெலிந்து நோய்ந்து போகிறது. பலமில்லாமல் மெலிந்து நோய்ந்திருக்கும் ஒரு செடியின் விதையை எடுத்து விதைத்தால், அதினின்று உண்டாகும் செடியும் இப்படியேதான் நோய்ந்து மெலிந்து போகும். ஒரு குடியானவன் நல்ல பயிரை உண்டாக்க விரும்பினால், அவன் அதிகமான விளைச்சலைக் கொடுத்த நோயற்ற திடமான செடிகளிலிருந்து விதைகளைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

ஆனால் வித்திலிருந்துண்டாக்கப்பட்ட செடிகளுக்கு அவைகளின் தாய்ச் செடிக்குள்ள குணங்களே அமையுமென்று எண்ணக் கூடாது. நார், புளிப்பு இல்லாத ருசியுள்ள மேன்மையான பழங்களைத் தரும் ஒரு மாமரத்தின் விதைகளை எடுத்து விதைத்து மரமுண்டாக்கினால் அம்மரத்தில் பழுக்கும் பழங்கள் சில சமயங்களில் நாரும், புளிப்புமுள்ளவைகளாயிருக்கின்றன.

வேறு விதங்களிலும் செடிகளைப் பயிராக்கலாம். கருணை, சேனை முதலிய கிழங்கு வகைகளைப் பாருங்கள். இவைகள் வளர்ந்து கிழங்கு பருத்தவுடன் செடிகள் பட்டுப்போகின்றன. ஏனென்றால் அவைகளின் வேலை முடிந்துவிட்டது. கொஞ்சநாட்கள் கழித்தால் அந்தக் கிழங்குகளிலிருக்கும் முளைக்கண்களிலிருந்து புதுச்செடிகள் முளைத்து வளரும். அவைகளை அப்படியே விட்டுவிட்டால் மிகவும் நெருக்கமடைந்துபோவதால் செழித்து வளரமாட்டா. ஆகையால், அந்தக் கிழங்கைத் தோண்டி எடுத்து, முளைக்கண்கள் இருக்கும் பாகங்களைத் துண்டித்து நடுகிறோம். இப்படி நட்ட ஒவ்வொரு துண்டிலிருந்தும் ஒவ்வொரு தனிச்செடி யுண்டாகிறது. இவைகளைச் சற்று இடைவிட்டு ஒவ்வொன்றாக நடுகிறோம். அப்படிச் செய்வதால் அவைகளில் ஒவ்வொன்றுக்கும் வேண்டிய ஆகாரமும் காற்றோட்டமும் சரியானபடி கிடைக்க ஏதுவாகும்.

அருகம் புல்லானது, நிலத்தின்மேல் படர்ந்து கொஞ்சதூரம் சென்றவுடன் அதன் மெல்லிய தண்டிலிருந்து இளங் குருத்துகள் உண்டாகின்றன. அப்படிக் குருத்துண்டான விடத்தில் வேர்விழுந்து மண்ணுக்குட்செல்லுகின்றது அவ்விடத்தில் ஒரு தனிப் புல் செடியுண்டாகிறது. தாய்ச் செடியிலிருந்து சற்றுதூரத்தில் இது வேர்விட்டு வளர்வதால் அதன் சமீபத்தில் நெருங்கியிருந்தால் கிடைக்கக் கூடியதைவிட அதிக ஆகாரம் இதற்குக் கிடைக்க ஏதுவுண்டாகிறது.

சில செடிகளில் மண்ணுக்குள் புதைந்து வேர்விட்டிருக்கும் தங்கள் கிளைகளிலிருந்து நூதனமான கன்றுகளை உற்பத்தி செய்கின்றன. காலம் வரும்போது, முன்னுண்டாயிருந்த செடிக்கும் நூதனமாயுண்டான கன்றுக்கும் மத்தியிலுள்ள கிளை அழுகிக் கெட்டுப் போகிறது. அதன்பின் நூதனமாய் உண்டான செடி தனியாய் ஜீவித்து வளரக்கூடியதாகின்றது. திருஷ்டாந்தமாக வாழை மரத்தைப் பாருங்கள். அதன் அடித் தூரிலிருந்தே கன்றுகளை உற்பத்திசெய்யும் மார்க்கம் அதற்கிருப்பதால் அது விதைகளையுண்டாக்குவதில்லை.

இஞ்சிச் செடி யொன்றைத் தோண்டிப் பார்த்தால் அதன் தூர்க்கிழங்கில் அநேக முளைகள் உண்டாகியிருப்பது தெரியும். இம்முளைகள் அதன்பின் மேற்கிளம்பிவளர்ந்து பெரிதாகும். ஒரு முளையுடனிருக்கும் இஞ்சுத் துண்டை வேறாக நறுக்கி அதை நட்டால், அதிலிருந்து பழைய இஞ்சித் தூரிலிருந்து உண்டாவது போலவே புதுச்செடி யுண்டாகும். சில செடிகளில், தண்டு அல்லது கிளைகளிலிருந்து முளைக் கண்களுள்ள துண்டுகளை வெட்டி மண்ணில் புதைத்து நூதனப் பயிர் உண்டாக்குகிறார்கள். இந்தத் துண்டுகளின் கணுக்களிலிருந்து முளைகள் கிளம்பிச் சீக்கிரத்தில் வேர்விட்டு வளர, பயிர் உண்டாகின்றது.

ஊன்றக் கொடுத்த தடி உச்சியை உடைக்கிறது.

இவ்விதமாகத்தான் கரும்பு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு முதலான செடிகள் பயிர்செய்யப்படுகின்றன. இதுவும் ஒரு நல்ல வழிதான். ஏனெனில், இப்படிக் கணுத் துண்டுகளிலிருந்து பயிர் செய்யப்பட்ட செடிகளுக்கு அதன் தாய்ச் செடிக்குள்ள குண விசேஷங்கள் முழுவதுமிருக்கும்.

இப்படிக் கணுத்துண்டுகளை வெட்டி வைக்காமல் தாய்ச்செடியின் தூரிலிருந்துண்டாகும் இளநாற்றுகளைப் பெயர்த்து வேறிடத்தில் நட்டாலும் புதுப்பயிர் உண்டாக்கலாம். இந்தச் செடிகளில் அநேகமாய் விதைகள் உண்டாவதில்லை. கரும்பு, கதிர் வாங்கிப் புஷ்பிக்கும். ஆனால் அந்தக் கதிரிலுள்ள விதைகளை எடுத்து விதைத்தால் நூற்றுக்கு ஒன்றிரண்டு கூட முளைத்துப் பயிராவது பிரயாசம். அவைகள் கணுத்துண்டுகளின் மூலமாகப் பல்கி தம் இனத்தை வளர்ப்பதால் அவற்றில் பலிதமுள்ள விதைகள் உண்டாக வேண்டிய அவசியமில்லை.

கணுத்துண்டுகளை வெட்டி மண்ணில் நடுவதைப் போலவே, வேருடன் வளர்ந்து கொண்டிருக்கும் மற்றொரு செடியின் கொம்புகள் அல்லது கிளைகளில் பொருந்தி வளரும்படி செய்யலாம். இப்படிப் பொருந்தி வளரச் செய்வதில் கிளைப்பொருத்தம், முளைப்பொருத்தம் இவ்விரண்டு வகைகளிலும் செய்யலாம். கிளையை வெட்டி மண்ணில் நட்டால், எளிதில் முளைத்து வளராத அநேகம் செடிகளில் கிளைப்பொருத்தம் அல்லது முளைப்பொருத்தம் செய்தால் எளிதில் பயிராகும். மேலும் இப்படிப் பொருந்த வளர்த்த ஒட்டுக்கண்கள் விதையிலிருந்து உண்டான மரங்களைவிட சீக்கிரத்தில் காய்க்கத் தொடங்குவதன்றி, தாய்ச்செடியின் பழங்களுக்கு என்ன விசேஷ குணங்களுண்டோ அந்தக் குணங்களெல்லாம் அதற்கும் இருக்குமென்ற நிச்சயமுண்டு. இவ்விதத்தில், நமக்கு மிகவும் பிரியமானபழவர்க்கங்களை அதிமாக விருத்திசெய்து கொள்ளலாம். இப்படிச் செய்யாமல், விதை போட்டு உண்டாக்கினால் அந்தக் கன்றுகளில் ஒட்டுக கண்களின் பழங்களைப்போல விசேஷ குணருசியுள்ள பழங்கள் திட்டமாய்க் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

முளைப்பொருத்தம் என்பது குருத்து முளையொன்றை ஒரு நல்ல ஜாதி மரத்திலிருந்து வெளித்தோலுடன் அறுத்தெடுத்து, விதையிலிருந்துண்டான ஒரு செடியின் வெளித்தோலைக் கொஞ்சங் கீறிப் பிளந்து அதில் முன் நல்ல ஜாதிமரத்தில் அறுத்தெடுத்த குருத்து முளையைப் பொருத்தி தோலிணைகளில் கொஞ்சம் மெழுகைத் தடவி, ஒரு நூல் கயிறு கொண்டு முளைக் குறுத்து விழுந்துவிடாமற் கட்டிவைப்பதுதான். கிளைப்பொருத்தமாவது, வேர்விட்டு வளர்ந்திருக்கும் ஒரு செடியின் கிளையில் கத்தியால் பட்டையுடன் கொஞ்சம் வெட்டியெடுத்துவிட்டு அதில் பொருந்தும்படியான விதமாய் நல்ல ஜாதிக் கிளையொன்றை அறுத்து சீவி, முன் வெட்டியிருக்கும் கிளையிற் பொருத்திக் கயிற்றால் கட்டி, பட்டை இடைகளில் மெழுகு தடவி, களிமண்ணைப் பொருந்திய பாகம் முழுவதிலும் தடவிவைத்தல்.

பக்தி செய்வதற்கு நம்பிக்கையே முக்கிய காரணம் 'தெய்வத்தைப் பிரார்த்தித்தால் அது நம்மைக் காப்பாற்று மென்னும் நம்பிக்கை ஒவ்வொரு பக்தனுக்கு மிருக்கவேண்டும். அவ்வித நம்பிக்கை யில்லாமல் பக்தி செய்கிறவன், ஒருநாளும் கடைத்தேற மாட்டான். மங்கோ என்னும் ஓர் வெள்ளைக்காரன் சில வருஷங்களுக்கு முன் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஓர் பாலைவனத்திற் செல்லுகையில் பகல் பதினைந்து நாழிகை யாயிற்று. சூரியோஷ்ணம் பொறுக்க முடியவில்லை. தாகத்தின் கொடுமையும் அதிகமாயிருந்தது. தான் புறப்பட்ட விடத்துக்குத் திரும்பிப் போவதுஞ் சாத்தியமாயில்லை. நாவரண்டு நெஞ்சுலர்ந்து நடந்து சலித்துக் களைத்து தரையில் விழுந்து விட்டான். இனி என்ன செய்கிறதென்றெண்ணமிட்டுக் கொண்டிருக்கும் மங்கோ, தன்னருகில் பச்சென்றிருந்த ஓர் செடியைக்கண்டு அதிசயித்து இந்தப் பாலைவனத்தில் பசுமை நிறம்வாய்ந்த இந்தச் செடியை உண்டாக்கிப் பரிபாலிக்கும் கடவுள் தாம் சிருஷ்டித்த மனித ரூபமாகிய என்னைத் தானா கைவிடுவார்? கட்டாயமாக என்னைக் காப்பாற்றுவார் என்று தைரியத்துடன் ஈசுவரனை ஸ்தோத்திரஞ் செய்து நடந்துபோனான். சிறிதூரம் போவதற்குள் அவ்வழியாய் வந்த வர்த்தகர்கள், அவனைக் கண்டு ஆகாரங்கொடுத்து உபசரித்துத் தங்களுடன் அழைத்துக்கொண்டு போனார்கள். எந்த ஜாதியானாயினும், எந்த மதஸ்தனாயினுங் கடவுள் காபாற்றுவாரென்னும் உண்மையான நம்பிக்கை கொண்டால் சகல ஆபத்துகளினின்றுந் தப்பித்துக்கொள்வான். அவ்வித நம்பிகையில்லையேல் பக்தி யுண்டாகாது. பரமபதமுங் கிடைக்காது.

நமது சிறு கதை

OUR SHORT STORY

மாங்கல்ய ரக்ஷணம்

ஆதம்ஸன் கம்பெனி "துபாஷ்" ஸ்ரீமான் சிவசிதம்பர முதலியார், தம் பங்களாவின் முன் பக்கத்தில் "சீக்கு" நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, மார்க்கெட்டு விலை விவரணமடங்கிய பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது பத்னியாகிய ஸ்ரீமதி அறம் வளர்த்த அம்மாள் வெள்ளிக் கோப்பைகளில் முதலியாருக்குக் "காப்பி" கொணர்ந்து வைத்தாள். பத்திரிகையைப் பார்த்துக் கொண்டவண்ணமாகவே, முதலியார் காப்பியை உறிஞ்சிக் குடித்து விட்டு, "ஸுகமில்லை; இன்றைக்கு டிகாக்ஷன் குறைச்சல்," என்று சொல்லிக் கோப்பையைக் கீழே வைத்தார்.

வாஸ்தவத்தில் முதலியார் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவராக விருந்தார். தம் நினைவு அவருக்கு இருந்திருக்குமானால், அவர் அறம் வளர்த்த அம்மாள் தயார் செய்து கொணர்ந்த காப்பிக்குக் குறை சொல்லியிருக்க மாட்டார். ஏனெனில், மலையாளிகள் சொல்வதுபோல "ஒண்ணாந் தரமாகக்" காப்பி தயாரிப்பதில் அறம் வளர்த்த அம்மாளுக்கு இணையாகச் சொல்லக் கூடியவர் ஒருவருமேயில்லை. ஏதாவது வியாபாரத்துக்கு இடைஞ்சலான விஷயங்கள் பத்திரிகைகளில் ஒருவேளை இருந்தனவோ என்னவோ அறியோம்.

முதலியார் இரண்டொரு நிமிஷம் கழித்துப் பத்திரிகையைப் பிரித்தபடியே கீழே போட்டுவிட்டு, நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டு, கையைநீட்டிச் சோம்பல் முறித்தபடியே, தம் முன்னர் நிற்கும் மனைவியைப் பார்த்து, "அவதல ஏமி?" என்றார்.

முதலியாருக்கு மட்டும் இரண்டொரு வார்த்தை தெலுங்கு பேசத்தெரியும். ஆனால் அவருடைய பத்னிக்குத் தெலுங்கே தெரியாது. என்றாலும், முதலியாருக்குச் சிற்சில வேளைகளில் 'குஷால்' பிறந்தால், அவர் ஏதாவது தெலுங்கிலோ, இங்கிலீஷிலோ, ஹிந்துஸ்தானியிலோ இரண்டொரு வார்த்தை பேசுவாரென்பது, அறம்வளர்த்த அம்மாளுக்குத் தெரியுமானபடியால், அதற்கேற்ப, அவள் பதில் சொல்வாள். இப்போது "அவதல ஏமி?" என்று முதலியார் கேட்டதும், "ஒன்றுமில்லை; இன்றைக்கு நாயிற்றுக்கிழமை தானே. வெளியில் போகவேண்டிய காரியம் ஒன்றுமில்லையே!" என்று அம்மாள் கேட்டாள்.

"ஏன் கேட்கிறாய்?"

"ஒன்று மில்லை. சாயந்தரமாகச் சைதாப்பேட்டைக்குப் போய் வருவதற்கு வண்டி வேண்டும். அதற்குத்தான் கேட்கிறேன்."

"சரிதான்! நீ அடிக்கடி ராமசாமி முதலியார் வீட்டுக்குப் போவது நன்றாயில்லை, அதை இனிமேல் நிறுத்திவிடவேண்டும்" என்று முதலியார் சற்றுச் சினந்தவர் போலச் சொன்னார்.

"என்னுடைய சிற்றப்பன் மகன் வீட்டுக்கு நான் போகக் கூடாதென்று சொல்வதைக் கேட்க எனக்கு வியப்புண்டாகிறது. நம்மைக் காட்டிலும் ஒருவிதத்திலும் குறைந்தவரல்லர். அவருக்கு மாதம் ஐந்நூறு, அறுநூறு வருவதாகச் சொல்கிறார்கள். அவருக்குப் புதிதாகப் பிறந்த குழந்தையைப் பார்த்து விட்டு வரவேண்டாமா? நீங்கள் போகவேண்டாமென்றால், நின்று விடுகிறேன். இருந்தாலும் உங்கள் அபிப்பிராயத்துக்குக் காரணம் எதுவாகவிருக்கலாம் என்று கேட்க விரும்புகிறேன்" என்று அறம்வளர்த்த அம்மாள் சற்று வாடிய முகத்துடன் கேட்டாள்.

"அவருக்கு ஐந்நூறும் வரவில்லை, அறுநூறும் வரவில்லை. கூடிய சீக்கிரத்தில் அவர் மஞ்சள் கடுதாசியுடன் இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குப் போவார்; இல்லாவிட்டால் தற்கொலை புரிந்துகொள்வார். அதனால்தான் நீ அவர் வீட்டுக்குப் போகக் கூடாதென்கிறேன்."

"இந்தச் சமாசாரத்தைக் கேட்க எனக்கு மிக்க வருத்தமாக விருக்கிறது. என்றாலும் இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? அன்னியர் வார்த்தையைக் கேட்டு இந்த அபிப்பிராயங்கொண்டிருக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்."

"அன்னியர் ஒருவரிடமுமிருந்து நான் இதைக் கேட்கவில்லை. அவரேதான் என்னிடம் வந்து, முந்தாநாள் இரண்டாயிரம் ரூபாய் கைபதிலாகக்கேட்டார். என்னிடம் அப்போது பணமில்லா திருந்தபடியால் உடனே கொடுக்க முடியவில்லை. நீ சொல்லுகிறபடி

மாதம் ஐந்நூறு அறுநூறு சம்பாதிக்கிறவர்களுக்குப் பாங்கில் மூலதனம் இல்லாமலிருக்குமா? நீயே யோசித்துப் பார்."

" அது அவருடைய துரதிருஷ்டந்தான். பாங்கில் இருந்த பணத்துக்கு மேலாகவும் வேண்டியிருந்ததனுல் உங்களைக் கேட்டிருக்கக்கூடாதா? இதனுல் அவரை அவ்வாறு ஏளனமாக மதிப்பிடலாமா?"

" நீ எல்லாம் தெரிந்தவள் போலப் பேசுகிருயே; சங்கதி யென்ன?"

" ஒன்றுமில்லை. நீங்கள் பணம் இல்லையென்று சொன்னதைக் கேட்டு, வாடிய முகத்துடன் அவர் இங்கு வந்து சமாசாரங்களைச் சொன்னுர். அப்போதுதான் என் தம்பி எனக்குக் கொடுக்கவேண்டிய இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டு வந்தான். அதை அப்படியே அவரிடம் கொடுத்துவிட்டேன்."

" கொடுத்துவிட்டாயா? கொடுத்துவிட்டாயா?" என்று முதலியார் சற்று அவசரத்துடனும் ஆத்திரத்துடனும் கேட்டார்.

" ஆமாம், கொடுத்துவிட்டேன். இரண்டு மாதத்துக்குள் கொடுப்பதாகச் சொல்லிப் போயிருக்கிருர்."

" ஹூம்! பெண்புத்தி பின்புத்தி. அது உன்னுடைய பணந்தான். அதை நீ என்ன வேண்டுமானுலும் செய்யலாம். அப்படித்தான் உன் தகப்பனுர் உயில் எழுதிவைத்திருக்கிருர். என்றுலும், என்னை ஒரு வார்த்தை நீ கேட்டிருக்கலாம். போகட்டும். என்ன ஆதாரத்தின்மேல் கொடுத்தாய்?"

" ஒரு ஆதாரமுமில்லை. அவர் வார்த்தையை நம்பித்தான் கொடுத்தேன்."

" பேஷ்! பணம் திரும்பி வந்தாற்போலத்தான்! ஹூம்! நடுச் சமுத்திரத்தில் போட்ட பொருள்."

" என்னவோ அவர் என்னை மோசம் பண்ணமாட்டார் என்ற நம்பிக்கை எனக்குப் பூர்ணமாக விருக்கிறது. நீங்கள்தான் அதைரியப்படுகிறீர்கள்."

" சரி! எல்லாம் பின்னுல் தானே தெரியும."

* * *

அடுதத ஜனவரி மாதத்தில் வெளியான கௌரவப் பட்டங்களில் நமது சிவசிதம்பர முதலியாருக்கு " ராவ் ஸாஹிப் " என்ற பட்டம் கிடைத்தது. கம்பெனியின் முதல் பங்காளியான ஸர். டி. ஆதம்ஸன் இதற்கு வெகுவாகச் சிபார்சுசெய்ததாகக் கேள்வி. முதலியாருக்கு இப்படிக் கௌரவம் வந்தாலும், அதற்கேற்ற பொருள் வரும்படி குறைந்தது. ஆதம்ஸன் கம்பெனிக்குக் கடன்கள் அதிகரித்தன. வியாபாரம், அவ்வளவு மும்முரமாக நடக்கவில்லை. அதனுல் முதலியாருக்கு ஏற்பட்ட கமிஷன் தொகை வரவர மட்டுப்பட்டது. இவ்விஷயமெல்லாம் கம்பெனியில் முக்கியமான சில உத்தியோகஸ்தர்களுக்குமட்டுந்தான் தெரிந்திருந்தது. ஆதம்ஸன் ஏதோ காரணத்தால் சீமைக்குப் போய்விட்டார். முதலியார் ஆபீசுக்குப் போவதும் அருமையாயிற்று. இதனிடையில் முதலியாருக்குப் பாங்கில் இருந்த பணமெல்லாம் போய்விட்டது. ஆர்பத்னட் கம்பெனி, இவரை மட்டுமோ, இந்த ராஜதானியில் பல்லாயிரம் பேரையு மல்லவா சீர்குலைத்து ஓட்டாண்டியாக்கிவிட்டது? காலக்ஷேபம் செய்வதற்காக, முதலியார் வட்டக்கடை சுப்பையன் செட்டியாரிடம் தவணை வட்டிக்காக ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். அவருடைய கை நொடித்ததைக் கேட்ட செட்டியார் உடனே கோர்ட்டில் "பிரியாது" செய்து தீர்ப்புப் பெற்றுவிட்டார். டிக்ரியை நிறைவேற்றுவதற்கு, முதலியாரை வாரண்டில் பிடிக்கப்போவதாயும் ஒரு வதந்தியுலாவிற்று. அப்போது முதலியாருடைய மன நிலைமையை நாம் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. தன்னுடைய மனைவியின் பணம் இருந்தால் இந்த ஆபத்துக்குத் தப்பிக் கொள்ளலாமே யென்று நினைத்து, அவளிடம் அவ்வாறு இருமுறை வெளியிட்டதுமுண்டு. ஆனுல் அவர், விஷயம் முழுவதையும் தம் மனைவியிடம் சொல்லவில்லை யாதலால், அவளுக்கு முதலியாருடைய துர்த்தசை தெரியக் காரணமில்லா திருந்தது.

ஒரு நாள் காலையில் பத்து மணிக்கு, முதலியார் தமது பங்களாவில் தாம் வழக்கமாக உட்கார்ந்து எழுதும் அறைக்கதவைச் சார்த்திவிட்டு, சுமார் ஒரு மணி நேரம் ஏதோ எழுதினுர். எழுதியதை ஒரு லகோடாவில் அடக்கம் செய்து முத்திரைபோட்டு, மேஜைச் சொருகுபெட்டியில் வைத்துப் பூட்டினுர். பிறகு ஒருவரும் அறைக்குள் இல்லை யென்பதைத் தெரிந்துகொண்டு, தமது கைத்துப்பாக்கியை யெடுத்து, ரவை போடப்பட்டுச் சரியாக விருக்கிறதா என்று பார்த்து, தன் மார்புக்கு நேரே குறிவைத்துச் சுட்டுக் கொள்ளக் கையை நீட்டினுர். அதே நிமிஷத்தில், "உள்ளே வரலாமா?" என்ற குரல் கதவண்டைகேட்டது. முதலியார் துப்பாக்கியைக் கடிதங்களின் கீழே மறைத்துவிட்டு, "வாருங்கள்' என்றுர்.

ராமஸாமி முதலியார் உள்ளே வந்தார். சிவசிதம்பர முதலியாரின் மார்பு படபடவென்றடித்துக்கொண் டிருந்தது. அவருடைய முகம் ஒருவித விகாரத்தையடைந் திருந்தது. இவைகளை யெல்லாம் கவனித்த ராமஸாமி முதலியார், "என்ன சமாசாரம்? ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறீர்களே!" என்று கேட்டார்.

"மாதிரி என்ன? உம்மிடம் சொல்லக் கூடாதது ஒன்றுமில்லை, நாட்டுக்கோட்டையான் வாரண்டு பிறப்பித் திருக்கிருனும். அதைத் தீர்க்கப் பணம் இல்லை. இனிமேல் கடன்காரர்கள் ஒவ்வொருவராய்க் கிளம்புவார்கள், என் கதி இப்படியாயிற்று' என்று சிவசிதம்பர முதலியார் சொல்லிவிட்டு, குழந்தை போல அழுதார்.

"முதலியாரே! அதைரியப் படவேண்டாம். உமது சங்கதிகள், எல்லாம் எனக்குத் தெரியும். நாட்டுக்கோட்டையான் டிக்ரியை நான் மேடோவர்வாங்கிக்கொண் டிருக்கிறேன். அது தீர்ந்துவிட்டதாக எழுதித் தருகிறேன். இப்போது ஐயாயிரம் ரூபாவுக்கு ஒரு உண்டியல் தருகிறேன். நெருக்கடியான கடன்களை யடைத்துவிடும். பிற்பாடு பார்த்துக் கொள்வோம்."

"உம்முடைய பெருந்தன்மையும் பக்ஷமும் அளவுகடந்தனவாக இருக்கின்றன. இந்தத் தொகைக்கு ஈடாகக் கொடுக்கக்கூடிய பொருள் என்னிடம் ஒன்றுமில்லையே!"

"ஒன்றும் வேண்டாம். உம்முடைய நட்பு மட்டும் இருந்தால் போதுமானது. எனக்கு இப்போது சாவகாசமில்லை. சாயங்காலம் வருகிறேன்" என்று சொல்லி, முன்கூறியபடி டிக்ரி தீர்ந்து போனதாக எழுதி, ஐயாயிரம் ரூபாவுக்கு ஒரு உண்டியலையும் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் ராமஸாமி முதலியார். வெளியில் போகும்போது, "நல்ல சமயத்தில் போனேன். இன்னும் ஒருக்ஷணம் தாமதித்திருப்பேனுகில் சௌபாக்கியவதி அறம் வளர்த்த அம்மாளின் நிலைமை வெகுபரிதாபகரமாய்ப் போயிருக்கும்" என்று நினைத்துக் கொண்டு ராமஸாமி முதலியார் சந்தோஷப்பட்டார். எழுந்திருந்து வரும்போது, சிவசிதம்பர முதலியாரின் மேஜையில் கடிதாசுக்குக் கீழேயிருந்த துப்பாக்கியை அவர் பார்த்துவிட்டார். ஆதலால், அவருடைய தற்கொலையைத் தவிர்க்கும்படி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு ஈசுவரனை மனமாற ஸ்துதித்து வீட்டுக்குப் போனுர். பராவரியாய், சிவசிதம்பர முதலியாருடைய துர்த்தசையைக் கேட்டது முதல், ராமஸாமி முதலியாரின் மனம் துடித்தது. தன்னுலான உபகாரத்தைச் செய்யவேண்டுமென்று நினைத்தே அவர் அப்போது சிவசிதம்பர முதலியாருடைய வீட்டுக்கு வந்தார். தனக்கு நல்ல சமயத்தில் பண உதவிபுரிந்த அறம் வளர்த்தம்மாளுக்கு, அவளுக்குத் தெரியாமலேயே, பிரதியுபகாரம் செய்ய நேர்ந்ததற்குப் பெரிதும் சந்தோஷ சித்தரானுர்.

* * *

மற்றும்நாட் காலையில் ராமஸாமி முதலியார், அறம்வளர்த்த அம்மாளுக்கு மூவாயிரம் ரூபா அனுப்பினுர். அதை அவள் எடுத்துக் கொண்டுபோய். தனது கணவரிடம் காட்டி, "பார்த்தீர்களா! சமுத்திரத்தில் போட்ட பணம் வட்டியுடன் திரும்பி வந்துவிட்டது" என்று வேடிக்கையாகச் சொன்னுள்.

"ராமஸாமி முதலியார் விஷயமாக நான் நன்றுய்த் தீர விசாரியாமல் சொன்னதைச் சுட்டிக் காட்டி என்னை நீ பரிகாசம் செய்கிருய் என்பதைத் தெரிந்து கொண்டேன். உனக்கு அவர் பணத்தைத் திருப்பிக் கொடுத்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. வாங்கின பணத்தைத் திரும்பக் கொடுப்பது நியாயந்தான். ஆனுல் பணத்தினுல் பெறமுடியாத தான பொருளை உனக்கு அவர் கொடுத்திருக்கிருரே, தெரியுமா?"

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே. இன்னும் அவர்மீது உங்களுக்கு ஏதாவது கோபமோ துவேஷமோ இருக்கிறது போலத் தோன்றுகிறதே."

“ஆ! ஆ! அப்படிச் சொல்லாதே. நான் பணம் கொடுக்க மறுத்ததை அவர் நினைக்காமல் நல்ல சமயத்தில் எனக்கு அவர் செய்த நன்றியையும், அதன்மூலமாக உனக்குச்செய்த மகோபகாரத்தையும் அறிந்து நாம் அத்தியந்த சந்தோஷமடைந்து அவரைக் குலதெய்வமாகக் கொண்டாடவேண்டும்.”

“தாங்கள் இன்னும் என்னோடு வேடிக்கையாகப் பேசுகிறீர்கள் போலத்தான் தோன்றுகிறது. வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுத்ததில் விசேஷம் ஒன்றுமில்லையென்று சொல்லிவிட்டீர்கள். இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குப் போகக்கூடியவரால் உங்களுக்கு என்ன உபகாரம் செய்திருக்கமுடியும்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.”

“ஸ்பஷ்டமாகச் சொல்லவேண்டுமோ? உனது கழுத்தில் உள்ள மாங்கல்யம் இப்போது அங்கேயே இன்னும் நிலைத்திருப்பதற்குக் காரணம் ராமஸாமி முதலியாருடைய கிருபைதான். அதிகம் சொல்ல நா எழவில்லை. எனது மேஜைச் செருகு பெட்டியில் உள்ள முத்திரை போட்ட பைக்குள்ளிருக்கும் கடிதம், இவ்விஷயத்தை உனக்கு இன்னும் நன்றாக விவரிக்கும். போய் எடுத்துப் படி.”

வஸந்த மந்திரம்

(190-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினோராம் அதிகாரம்
சிப்பாயின் பிரதாபம்

அனந்தபட்டர் உள்ளே நுழைந்ததுதான் தாமதம்; சிப்பாய் மல்லீக் மகமத் அவிழ்த்துவிட்டான் தன் மூட்டையை. கவுஸ் மற்ற குதிரை வீரர்களுடன் அரண்மனைக்குப் பின்புறமாய் இருக்கும் லாயத்துக்குச் சென்றுவிட்டான். வாயிலில் காவல் காத்து நிற்கும் ஏமாங்கதனைச் சும்மா விட்டுவிட இஷ்டப்படவில்லை, மல்லீக் மகமத். ஆகையால் தன்னிடமிருந்து எழுந்துவந்து “ஏடா பயலே! உங்களுக்கெல்லாம் வெகு திமிரு பிடிச்சு இருக்குதா; யாருனு தெரியாது கண்டபடி பேசமே! முழியேப் பிடிங்கிடுவே! தெரியுமா? சாமியார் வந்தா உள்ளே விடுறதா, கண்டபடி பேச்சுப் பேசறதா? பத்ரம்; உஷார்” என்றான் தன் பாஷையில்.

ஏமாங்கதன் கொஞ்சம் அர்த்தம் பண்ணிக்கொண்டு “என்ன சிப்பாய், என்ன செய்துட்டேன்: இப்போ என்ன ஐயா முழிகிப் போச்சு? யாராவது வந்தால் எஜமாங்களைக் கேட்டுத்தானே விடவேணும்? இதில் என்ன தப்பு?—”

“அடே! உங்கள் மதத்தை அடக்கக் காலம் வந்துடிச்சு. கலயாணம் மட்டும் ஆகட்டும்; உங்களைக் கருவறுக்கிறேன்; பகதூர்” என்று மல்லீக் மீசையை முறுக்கினான்.

ஏதோ கல்யாணம் நடக்கப் போகிறதென்றும், அதன்பொருட்டு அனந்தபட்டர் வருகிறாரென்றும், தன்னையும் மற்ற பரிவாரங்களையும் சுல்தான் அவருக்குத் துணையாக அனுப்பியிருக்கிறானென்றும் ஜாடையாய் சிப்பாய்க்குத் தெரியும்; அம்மட்டே ஒழிய வேறில்லை. ஆனால் யாருக்குக் கல்யாணம், யார் பெண்ணைக் கொடுக்கப் போகிறார்கள், என்பது ஒன்றும் விசேஷமாய் அவனுக்குத் தெரியாது. ஆனாலும் சண்டைக்கு ஏதாவது காரணம் வேண்டுமல்லவா? எதையோ பிதற்றிக்கொண்டு வந்துவிட்டான் ஏமாங்கதனிடம். வெறும் வாய் மெல்லுகின்றவனுக்கு அவல் கிடைத்துவிட்டால் விடுவானா?

ஏமாங்கதன், “ஏ சிப்பாய்! குடிவெறியா என்ன? கல்யாணமாவது ஒன்றாவது! உனக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்? என்னவே உளறுகிறாய்! போய் இரு அப்படி, பூந்தோட்டத்துக்குள்! உங்கள் எஜமான் சொல்லிப் போனபடி அப்படி எட்டிப்போய் உட்காரு” என்றான்.

சிப்பாய் “நீ ஏடா, என்னைச் சொல்வது? உன் தலைமேலையா நிற்கிறேன். உங்க ராஜா வாசல்லேகூட நிற்கக் கூடாதா? என்னவோ மஹா அதிகாரம் பேசுகிறாயே! போகிறதில்லை நான். என்ன பண்ணுவே! யார்தான் என்ன செய்யராளோ பார்க்கலாம் ஒரு கை—” என்று வாதித்தான்.

ஏமாங்கதன் இது என்ன சனியாய் இருக்கிறது, என்று மனதில் நினைத்து “அப்பா சிப்பாய் கோபியாதே. சும்மா நிற்பவனை ஏன் சண்டைக்கு இழுக்கிறாய்! போயேன் அப்புறம்! சத்தம் போட்டால் உள்ளே இருக்கிறவர்கள் கோபிப்பார்கள். இதைக் கொஞ்சம் கவனிக்கணும் அப்பா—” என்றான்.

சிப்பாய் “பாட்டு! என்ன பாட்டு! நான் கேட்டு இருக்கிறேன் போடா. பாட்டெல்லாம் தெரியுது பார் இன்னும் கொஞ்ச நாளையிலே! ‘துலுக்கப் பெசாசு’ என்னு கேட்டிருக்கையல்ல! அடுத்த சண்டையிலே சொல்றேன் பார். உம்மண்டயெ மொதல்லே உடைக்கிறேன்—”

ஏமாங்கதன் “இது என்ன விந்தை! இந்தச் சதைக்குவியல் என்னவோ பிதற்றுகின்றது. கல்யாணமாம்! இல்லாவிட்டால் சண்டையாம்! என்னடா இது, விபரீதம்!—ஈசா நம் தேசத்தையும், அரசனையும், காப்பாற்றுவாயாக!” என்று மனதில் எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

ஏமாங்கதன் சற்றுப் பேசாமல் நிற்கவே அவன் தன்னிடம் பயந்துவிட்டான் என்று சிப்பாய் எண்ணிக்கொண்டு “அடே பொம்பளே! என்னடா தலை குனிந்துகிட்டு நடுங்குறே—வரட்டும் வரட்டும்! சொல்றேன். இதைப் பார்க்கப் பத்துப்பங்கு நடுங்கணும் கத்தியெடுத்துத் தலைசீவும்போது!—” என்னுமுன் ஏமாங்கதனுக்குக் கோபம் மூண்டது. “அடே நான் சொல்லச் சொல்ல மரியாதையாய் அப்பால் போகாமல் மறுபடி மறுபடி பேசறையா! தள்ளுவேன் கழுத்தைப் பிச்சுடி. தெரியுமா என் சங்கதி! கத்தாதே கத்தாதே என்றால் உளறல் பலமாகின்றது!” என்றான்.

சிப்பாய் “என்னடா! பிச்சைக்காரப் பயலே! தாறுமாறாய்ப் பேசறாய்! தள்ளிடுவாயா, ஒடிச்சுடுவேனடா ஒன் கையை!” என்று சரசர வென்று பக்கத்தில் நெருங்கினான்.

புல்லறிவாளர்க்குச் சண்டை செய்யக் காரணமா அகப்படாது? சாதாரணமாய்ப் பொறுமையுடையவன் என்றே சொல்லவேண்டிய ஏமாங்கதனுக்கும் இவ்வற்பனுடைய வார்த்தை கர்ணகடூரமாய இருந்தது. ஆகையால் மேல் நெருங்கும் சிப்பாயைப் பார்த்து ஏமாங்கதன் “நில் ஐயா நில்! வீண் சண்டைக்கு வந்தால், பின் விசனப்பட வேண்டியிருக்கும்! இனி வந்தால் கால்கைகளைக் கட்டிப் போட்டிடுவேன்” என்றான்.

சிப்பாய் “உனக்கு அவ்வளவு பலமா?” என்று சொல்லிக்கொண்டே ஏமாங்கதன் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தான். ஏமாங்கதன் தன் கைத்தடியை எடுத்து அவன் தோளைப் பார்த்து ஒரு அடி அடித்தான். அவ்வடி எங்கே உரைக்கப் போகின்றது அச்சதை மலைக்கு! இருவரும் கை கலந்துவிட்டனர். எப்படியிருப்பினும் சிப்பாய் மிகவும் பலவான். தேகம் சற்றுப் பருத்திருந்தபடியால் இலாகவம் மிகக் குறைவாய் இருந்தது. ஏமாங்கதனுக்கோ அப்படியில்லை. தேக லாகவம் அதிகம்; பலம் சற்றுக் குறைவுதான். ஆகையால் முதலில் சிப்பாயைக் கட்டிக் கீழே தள்ளி அவன் கைகால்களை ஆட்ட முடியாமல் செய்து விட்டபோதிலும், அவ்வம்பனை ஒரு தீங்கும் செய்யக் கூடாதபடி கைகளைக் கட்டிவிடலாமென்ற எண்ணத்துடன், ஒரு கையால் அவனை அழுத்திக்கொண்டு, மற்றொரு கையால் தான் இடுப்பில் கட்டிக்கொண்டிருந்த தோல்பட்டையை அவிழ்க்கப்போனான். அதுதான் நல்ல சமயம் என்று சிப்பாய் திமிறிக்கொண்டு எழுந்து ஏமாங்கதனைக் கீழேதள்ளி அவன்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு தன் இடுப்பில் செருகியிருந்த சிறு கத்தியால் ஏமாங்கதனை மார்பில் குத்தினான்.

நல்ல வேளை! கத்தி இன்னும் மார்பில் பாயவில்லை; துணிகளைத் துளைத்துக்கொண்டு போய்ச் சற்றே காயம் செய்துவிட்டது! அதற்குள் சிப்பாயின் கை அசையமுடியாமல் நின்றுவிட்டது! மண்டப வாயிலிலிருந்து ஓடிவருகிறான் சித்திரக்கிரீவன்! சிப்பாய் அடக்க முடியாக் கோபத்தோடு தன் கை தடைபட்டதற்குக் காரணம் என்னவென்று திரும்பிப் பார்க்கவே, கவுஸ் தன் கையைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கக் கண்டான்.

சிப்பாய் “கவுஸ்! நான் என்ன செய்கிறேன் என்பதைப் பார்க்காமல் என் கையைப் பிடித்துக்கொண்டு தொந்தரவு செய்கின்றாய்! விடு! இந்தப் பயலை ஓரே குத்தாய்க் குத்திக் கொல்கிறேன்” என்று சொல்லியும், கவுஸ இன்னும் பலமாகக் கையைப் பிடித்துக்கொள்ள, சிப்பாய் “அடே செவுடா விடு கையை” என்று கத்துவதற்குள், விஷயம் இன்னதென்று

அறிந்துகொண்ட சித்திரக்கிரீவன், சிப்பாயின் தோளைப் பற்றி ஒரே தூக்காய்த் தூக்கி அப்பால் எறிந்தான்; கவுஸும் அவ்வாறு செய்வதற்கு மனப்பூர்த்தியாய் உதவிசெய்தான். இருவரும் சிப்பாயைத் தூக்கி எறிந்த பின்னர், ஏமாங்கதனைக் கைகொடுத்து எழுப்பினார்கள்.

சித்திரக்கிரீவன் "தம்பி இது என்ன விந்தை! ஒரு நொடியில் நான் வருவதற்குள் என்ன வேலை செய்துட்டே! இவனை சரிபண்ணியா நீ சண்டை போட்றது?"—என்றதும், சிப்பாயைப்பார்த்து "என்ன ஐயா வந்தஇடத்திலே வாலைச் சுருட்டிக்கிண்டு சும்மா இருக்கமாட்டாமல் கத்தி யெடுத்துக்கொண்டானும் குத்தினானும்! இது என்ன கண்மூடிக் கபோதி ராஜ்ஜியம் என்னு எண்ணினையா?" என்றான்.

சிப்பாய் மல்லீக் "அடடே இந்தப் பயலும் வந்தானா! இரண்டு பேரும் வாங்கோ! ஒருகை அச்சா! ஒரு கை இரண்டு பேரும்! ஓ குத்! வா இரண்டுபேர்!—" என்று மீசையை முறுக்கிக்கொண்டு மறுபடி சித்திரக்கிரீவன் மேல் சென்றான். இதற்குள் கவுஸ் மல்லீக் மகமத் சிப்பாயைப் பிடித்து இழுத்துத் தங்கள் சொந்த பாஷையில் சில வார்த்தைகள் பேச, சிப்பாய் அவனை நோக்கி "இது என்ன அநியாயம், நீயும் இந்தக் கழுதைகளோடு சேர்ந்துகிண்டு அவர் பக்கம் பேசராய்" என்று பதறினான். அவனைப் போகவிடாமல் கையைப்பிடித்துக்கொண்டு ஏமாங்கதன் சித்திரக்கிரீவன் இருவருக்கும் ஜாடை காட்டி அப்புறம் போகச் சொல்வதற்குள் சபை கலைந்து எல்லோரும் வெளியே வந்துவிட்டனர்.

அரை நொடியில் வீரேசனும் அனந்தபட்டரும் வெளியே வரவே, ஏமாங்கதன் நிற்கும் நிலையும், அவன்மேல் படிந்துள்ள மண்ணும், மேல்துணியில் இரத்தமும், தலை விரிந்திருக்கும் கோலமும், இடுப்புப் பட்டை அவிழ்ந்து கீழே கிடப்பதும், சித்திரக்கிரீவன் அவனைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டிருப்பதும், எதிரே படு மூர்க்கமாய், வேட்டை நாய் மான்மேல் பாயப் போவதுபோல, சிப்பாய் சீறுவதும், கையில் பிடித்துள்ள சிறு கத்தியும், கவுஸ் அவனை அழைத்துச் செல்லப் பிரயத்தனப் படுவதும்,—விஷயம் இன்னதென்று நன்கு விளக்கின. மொத்தத்தில் அனந்தபட்டர் நன்றாய்த் தெரிந்துகொண்டார் என்பதில் சந்தேகமில்லை.

அனந்தபட்டர் வீரேசனைப் பார்த்து "ஐயா எனது க்ரஹசாரம் இந்தப் பெரும்புலியைக் கூட அழைத்து வந்தேன். இவனுடன் போராட என்றால் ஆவதேயில்லை. இன்று காலை முதல், இது பத்தாவதோ பன்னிரண்டாவதோ நடக்கும் சண்டை: போன பக்கமெல்லாம் சண்டை, சண்டைதான் வேறொன்றுமில்லை" என்றதும் சிப்பாயைப்பார்த்து "அரே! சிப்பாய்! நீ அமைதியாய் இருக்கமாட்டாய் போலும். உடனே உனக்காக ஊரைவிட்டு ஓடிவிடலாம் போலிருக்கின்றது! இனி உன்னுடன் காலந்தள்ள என்றால் முடியாது! ஒரு நாழிகையாவது சும்மா விருக்கமாட்டாய்போல் இருக்கின்றதே!" என்றார்.

சிப்பாய் அடிபட்ட நாய் தன் வாலைப் பின்னங்கால்களுக்கு இடையில் நுழைத்துக் கொள்வது போல் கத்தியை மறைவாய்ச் செருகிக்கொண்டு "பின்னை என்ன மஹராஜ்! தாறுமாறாய்ப் பேசித் திட்டறான் ஹசரத்! அந்தத் திருட்டுப்பயல்—" என்றான்.

அனந்தபட்டர் "நியாயம்! நியாயம்! நீ வெகு யோக்கியன்; அவன் தான் திருட்டுப் பயல்! நியாயம் அப்பா! சரி சரி! போ பேசாமல். போவென்றால் உடனே நகர் இருந்த இடத்தை விட்டு—" என்று கடிந்து சொல்ல, சிப்பாய் அப்பால் போய்க் கொண்டே "எஜமான் வந்தாங்களோ பிழைத்தாங்களோ! இல்லாட்டா இரண்டுபேரையும் பொளந்து இருப்பேன். என்ன கவுஸ்! நீ என்ன சொல்லறே!" என்றான்.

கவுஸ் ஒன்றும் சொல்லவில்லை. 'உன்னைப் போன்ற முட்டாள்களுடன் வந்தால் வருகிறவனுக்கு சீக்கிரம் காரியம் சித்தியாகும்!' என்று மனதில் எண்ணிக்கொண்டான். இருவரும் லாயம் இருக்கும் இடத்தை நோக்கிச் செலலவே, வீரேசன் தன்ஜனங்களையும் ஹத்தும்றிச் சண்டைசெய்ததற்குக் கோபித்து, அவர்களை இனிமேல் உஷாராய் இருக்கும்படி சொல்லிவிட்டு அனந்தபட்டரை அவருடைய விடுதிக்கு அழைத்துச் சென்றான்.

வழி முழுவதும் சிப்பாய் கோபம் தணியாமல் சரமாரியாய்த்திட்டிக்கொண்டே வந்தான். கவுஸ்மட்டும் பேசவில்லை. கடைசியாய் மல்லீக் "ஏ கவுஸ்! நான் ஒரே அடியாய் அவனைக் கொல்லவில்லையே என்று வருந்துகிறேன். நாளைக்காகட்டும்; எப்படியாவது ஒருகைபார்க்கிறேன். அந்தப் பெரியவன் இருக்கானே—" என்றான்.

ஊதுகிற சங்கு ஊதினால் விடிகிறபோது விடிகிறது.

கவுஸ் "சரி சரி ஹசரத்! எல்லாம் உன் மனதில் வைத்துக்கொள். நீ எந்த இடத்தில் இருக்கிறாய் என்பதை மறந்து விடுகிறாய் போலிருக்கிறது. இது உதய புரியாக்கும்; பத்ரம். நாலு சேவகர்கள் சேர்ந்தால் நம்மிருவரையும் சிறையில் போட்டு விடுவார்கள். ஏதோ விட்டார்களே என்று சந்தோஷப்படு; நட விரைவாய்" — எனச் சிப்பாய் சற்றே திகைத்தான். சிறைச்சாலை என்ற பிறகுதான் சிப்பாய்க்கு உறைத்தது. சிறைச்சாலையில் போட்டுவிட்டால் தன் இஷ்டப்படி சென்று கண்டவர்களுடன் எல்லாம் சண்டை போட வழியில்லாமல் போகுமே என்று வருந்தினான்.

பன்னிரண்டாம் அதிகாரம்

கனவு

பாட்டுக் கச்சேரியிலிருந்து எழுந்து போன லலிதாதேவி நேரே தன் அறைக்குப்போய் நடுவறையில் தொங்கும் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடவாரம்பித்தாள். அதுவும் அவள் மனதிற்குப் பிடிக்கவில்லை. அவள் மனம் ஜயபால மஹாராஜாவிடம் ஈடுபட்டு, அவனைத்தவிர வேறு ஒரு விஷயத்தையும் உட்கொள்ள இஷ்டப்படவில்லை. இப்பொழுது யாராவது ஜயபாலனுடைய வீரச்செயல்களை ஒவ்வொன்றாய் வர்ணிக்க ஏற்றுக்கொண்டால் நம் லலிதை இரவுமுழுவதும் கேட்டுக்கொண்டிருக்கப்பின்வாங்கமாட்டாள். அங்ஙனம் யார் செய்யப் போகின்றனர்?

"என் அருமைநாதனை என்று காண்பேன்! என்று காண்பேன்!" என அவள் மனம் ஏங்கிற்று. சபாமண்டபத்தில் பாடும் பாட்டுக்களோ இவ்வெண்ணத்தை மறக்கச்செய்வதற்குப் பதிலாய்ப் பதின்மடங்கு அதிகமாய் ஞாபகத்துக்குக் கொண்டுவந்தன. ஆகையால் அங்கிருக்க இஷ்டப்படாமல் தன் அறையில் தனியாய் வந்து ஊஞ்சல் ஆடவே, அவள் மனவருத்தம் முன்னிலும் நூறு பங்கு அதிகமாயிற்று. சுற்றிலும் கட்டித்தொங்கும் படங்களையெல்லாம் பார்த்தாள்; எல்லாம் வருந்துகின்றன போலவே தோன்றின; ஓர் மூலையில் சகுந்தலை தன் நாயகனுக்கு நிருபம் எழுதும் படம் மாட்டியிருந்தது. அப்படமே இன்று லலிதைக்கு மிக நேர்த்தியானதுபோல் தோன்றிற்று. 'சகுந்தலையும் என்போல் கவலைப்பட்டாளோ! அவளுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டு; அவள் தன் நாதனை ஒரு முறையாவது பார்த்தவள்; யான் பாராத பாவி. இனி, சகுந்தலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் என்ன பயன்!' என்று மனம் புழுங்கித் தன் தகப்பனாருடைய அறையில் புகுந்தாள்.

லலிதையின் அறைக்கு அடுத்தாற்போல் இருப்பது அரசனுடைய அறை. செல்வக்குழந்தையாகையால் லலிதை எங்கே வேண்டுமானாலும் போவாள். தாயாராவது தகப்பனாராவது தடைசொல்லவே மாட்டார்கள். தகப்பனாருடைய அறையில் மேற்குப் பக்கத்து ஜன்னலின் வழியாய்க் கொஞ்சம் குளிர்ந்த காற்று அடிக்கின்றது; நடுவறையில் ஒரு சிறிய விளக்கு ஏற்றிவைத்து இருக்கிறார்கள். மற்ற விளக்குகளை இன்னும் ஏற்றவில்லை. நேரே ஜன்னலுக்குச் சென்று, குளிர்ந்த காற்று முகமேல் அடிக்க, ஜன்னலில் சாய்ந்துகொண்டு வெளியே பார்த்தாள். இருள் மூண்டதுபற்றித் தோட்டமெல்லாம் ஒளியற்று இருந்தன. பனை உயரத்துக்குமேல் சுக்ரன் பிரகாசிக்கின்றான். தூரத்தில் கோட்டை விளக்குகள் 'மினுக்கு மினுக்கு' என்று காண்கின்றன. வானமெல்லாம் நக்ஷத்திரம் பூத்து இருக்கின்றது. மரங்களின் பாகங்கள் செவ்வையாய்த் தெரியாவிடினும் இலைகள் சற்றே அசைந்து ஆடுவதால் உண்டான மென்மைக்குரல் தூரத்திலிருந்து வரும் கடலோசை போன்றிருந்தது. வெகுதூரத்துக்கப்பால் உள்ள மலைகளும் வானமும் வித்தியாசமில்லாமல் ஒரே கறுப்பாய்த் தோன்றின.

"இம்மலைகளைத்தாண்டித்தான் என் நாதன் வரவேண்டுமோ? இவை ஆகாயம் வரையில் எட்டி இருப்பனபோலவும், கடந்து செல்ல வழியே இராதுபோலவும் காண்கின்றனவே!—இக்கஷ்டமான வழிகளைக் கடந்துதானே அற்ப ஸ்திரீயாகிய என்னை இலக்ஷியம்பண்ணி என் நாதன் வருவார்" என்று அவள் ஏங்குவாள். மறுபடியும் "இதுஎன்ன என்மனம்இப்படிச் சலிக்கின்றது? ஒரு நாளும் இப்படி யான்

ஊத்தை போகக் குளித்தவனும் இல்லை; பசிபோகத் தின்றவனும் இல்லை.

வருந்தியதில்லை. ஒரு நாளும் இல்லாத பரபரப்பும், மனத்தளர்வும் ஒருங்கே உண்டாகவேண்டுவது என்ன காரணம்பற்றி?" என்பாள். மறுபடி அவள் மனம் எங்கேயோ போகும். இப்படிப்பலவாருய் நிலைதப்பி மயங்குகிருள் லலிதா தேவி. தன் மனப்போக்கு, தன் தந்தை தாய்க்குக்கூடத் தெரியக்கூடாதென்று பிரயாசைப் படுகிருள். "அவர்களுக்கு என் நிலைமை தெரியாமலிருப்பது கஷ்டம். நான் பைத்தியக்காரிபோல் மேலும்கீழும் திரியும்போது கட்டாயம் என் மனவருத்தத்தை அவர்கள் கண்டு கொள்வார்கள்" என்று வெட்கப்படுவாள் சில வேளைகளில்.

"ஏ, லலிதா, நீ வருத்தப்பட வேண்டாம் மற்றவர்கள் உன்னைக் குறை சொல்வார்கள் என்று. உன்னைப்போல் எத்தனையோ பேர் சமயம்வந்த காலத்தில் வருந்தியிருக்கின்றனர். இன்னும் வருந்துகின்றனர். இனி வருந்தவும் போகின்றனர்! அவ்வித வேதனைப் படாதவர்களும் காதலென்பதே இத்தன்மைத்தென்று அறியாதவர்களும் என்ன வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளட்டும். நீ வருந்துவது இயல்புதான்!" என்று மனது தேற்றுகின்றது.

இவ்வாருய்க் கொஞ்ச நேரம் கழித்த பின்னர், சன்னலில் சாய்ந்து இருப்பதையும் வெறுத்து, உட்புறம் திரும்பிச் சுற்றிலும் பார்த்தாள். உள்நடுவே ஒரு பெரிய நாற்காலி போட்டிருக்கின்றது. அதன்மேல் பல கடிதங்கள் வைத்து இருக்கின்றன. கணக்குப் புத்தகங்கள் வரிசை வரிசையாய் அடுக்கிக் கிடக்கின்றன. அரசனுக்குப் பல ஒற்றர்களிடமிருந்தும் வேற்றரசர்களிடமிருந்தும் வந்த கடிதங்களுள் சில பிரித்தும் சில பிரிக்கப்படாமலும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் அவ்வவ் வரசனுடைய விருதும், கொடியும், அடையாளமாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் நடுவே ஒரு கடிதம் விரித்துக் கிடக்கின்றது. அதன் மேல் போட்டுள்ள முத்திரை மிக அகலம். பாதியை உடைத்துக் கடித்தத்தைப் பிரித்து இருக்கின்ருர்கள். பாதி இன்னுமும் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. அக்கடிதத்தைப் பார்த்ததும் பக்கத்தில் சென்ருள் லலிதை. அம்முத்திரையில் பதித்து இருந்தது ஓர் யாளி. வயிற்றுக்குக் கீழ்ப்பாகம் சிதைந்து போய் இருந்தது. இது யாருடைய அடையாளமோ என்று உள்ளே பார்த்தாள். தலைப்பில் "ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்" என்ற வாக்கியம் பதிப்பிக்கப் பட்டிருந்தது. அதன் கீழுள்ள ஜோதிபுரி என்னும் வார்த்தையைப் படிப்பதற்குள் அம்மணிக்குத் தேகமெல்லாம் பரவசமாயிற்று; உடல் வியர்த்தது; மார்பு படபடத்துத் திடீர் திடீர் என்று அடிப்பது போல் தோன்றிற்று; கண்கள் துடிக்கின்றன; கை கால்கள் பதறுகின்றன. "மனமே, ஏன் பதறுகிருய்? ஜோதிபுரியிலிருந்து நேற்றுக் கடிதம் வந்ததுதான் தெரியுமே. இன்னும் ஏன் உனக்கு இத்தனை பரபரப்பு! சற்றே நிதானிப்பாய்! என்ன எழுதியிருக்கின்றதோ அதை நானே பார்க்கின்றேன். ஐயோ! எனக்கு நிற்கவும் தாளவில்லையே" என்று கொண்டு தன் தகப்பனருடைய ஆசனத்துக்கருகில் போட்டுள்ள சிறு நாற்காலியில் அமர்ந்தனள்.

இதற்குமுன் எத்தனை தடவை இதே நாற்காலியிலுட்கார்ந்து தன் தகப்பனுடன் கொஞ்சிக் குலாவி வார்த்தையாடி இருக்கிருள் குழந்தையாய் இருக்கும்போது நம் லலிதை! அக்காலத்தில் இந்நாள் போல் எந்நாளாயினும் மனம் புழுங்கினளோ? தன் அருமைமகளுக்கென்றே பிரதாபசிங்கர் தனியாய்ச் செய்து வைத்தது அவ்வாஸனம். லலிதை குழந்தையாய் இருக்கும்போது அடிக்கடி தகப்பனருடைய அறைக்கு வருவதுண்டு; செல்வக்குழந்தைகள் அவ்வாறு செய்வது அருமையா? அச்சமயத்தில் எல்லாம், குழந்தையை இவ்வாஸனத்தில் உட்காரவைத்துவிட்டுத் தமது இராஜாங்க வேலை பார்ப்பார் பிரதாபசிங்கர். குழந்தை பழங்களையும், கற்கண்டையும், மரப்பாச்சிகளையும் வைத்துக்கொண்டு விளையாடின காலமும் உண்டு. பிறகு தன் குரு கற்பித்த பாடங்களையும் பாட்டுகளையும் பாராமல் சொல்லிக்கொண்டும் பாடிக்கொண்டும் பிரதாபசிங்கர் மனதைச் சந்தோஷப்படுத்திய நாட்கள் சில; இலேகினிகொண்டு சித்திரம் வரைந்து தன் தகப்பனருக்குக் காட்டிய காலம் சில; தன் தகப்பன் காலடியில் உட்கார்ந்து அவர் தன் வேலையைப் பார்க்க, அவரைத் தொந்தரவு செய்யாமல் புராணங்களையும் கதைகளையும் தன் மனத்துள்ளே அமைதியாய்ப் படித்துக் கொண்டு பொழுதுபோக்கிய காலமும் உண்டு.

ஊமை ஊரைக் கெடுக்கும் பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.

இம்மாதிரியாய்ப் பதினறு வருஷங்களாகப் பல தொழில்கள் செய்துகொண்டு அமர்ந்திருந்த ஆஸனம் அன்ருே அது! இரண்டு வருஷமாய் லலிதை அதிகமாகத் தன் தகப்பன் அறைக்குள் வருவதில்லை. வயதுவந்த பெண்ணாய் இருப்பதால் தன் தகப்பனருடன் யாராவது ஆடவர் இருப்பின், அங்கே போதல் தகாது என்பதொரு காரணம்; தான் அடிக்கடி அவ்வறைக்குட்போய் அவருடைய இராஜ காரியத்துக்கு இடையூறு செய்யக் கூடாதென்பதே மற்ருெரு முக்கிய காரணம்.

கடிதம் படித்தாய்விட்டது; மறுபடி திருப்பிப் படித்தாள். முத்திரையை உற்றுப் பார்த்தாள். "ஸத்யமேவ ஜயதே" என்று மனனம் பண்ணினள். மற்ருெரு முறை கடிதத்தைப் படித்தாள்; அதை முத்தமிட்டுக் கொண்டாள். கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டு "என் அன்பைப் பூர்த்தி செய்யவேண்டும், ஈசா" என்ருள். மறுபடி கடிதத்தைப் பார்த்து, இதையேன் நான் என் அறைக்குக் கொண்டுபோய்ச் சாவகாசமாய்ப் படித்துவிட்டு மறுபடி கொண்டுவந்து வைக்கக்கூடாது?" என்று அதை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அச்சமயத்தில் தூரத்திலிருந்து வரும் மணியோசை காதில் பட்டது. உற்றுக்கேட்டாள். "ஹா ஹா! மறந்தேனே! பேதை நான்! என்ன சஞ்சலம்! என்ன மறதி! என் அன்பு ஈடேறவேண்டுமென்ற வருத்தத்தில் என் அம்மை இராஜராஜேச்வரியையும் மறந்தேனே! ஆச்சரியம்! என் அம்மையும் சபாமண்டபத்தில் இருக்கின்ருள். யான் சென்று பூலோக நாதரையும் இராஜராஜேச்வரியையும் வேண்டி வருகிறேன். அவர்களே என் மனதைக் குளிரச் செய்யவேண்டும். 'ஆலயம் தொழுவது சாலவு நன்று' என்று குழந்தையாய் இருக்கும்போதே குருநாதர் எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லையா?" என வெகு வேகமாய் ஓடி ஒரு சேடியை அழைப்பித்து, புஷ்பம், சந்தனம், வெற்றிலை, பாக்கு, கனிவகைகள் இவற்றுடன் கோயிலுக்குப் புறப்பட்டாள்.

கோயில், அரண்மனைக்குச் சற்று அப்பால் இருக்கின்றது. முக்கியமாய் இக் கோயிலுக்கு அரண்மனை ஜனங்களே வருவது வழக்கம். பட்டணத்துக்குள் பல கோயில்கள் இருந்தனவென்று சொல்ல வேண்டுவதில்லை. ஆகையால் சாதாரண நாட்களில் கூட இக்கோவிலில் அதிகக் கூட்டம் இருப்பதில்லை. அதிலும் இன்று பாட்டுக் கச்சேரி விமர்சையில் ஒருவருமே வரவில்லை எனலாம். வந்த சிலரும் சாயங்கால பூஜை முடித்துக்கொண்டு புறப்பட்டுப் போய் விட்டனர். லலிதை சப்தம் செய்யாமல் உட்சென்று பூலோக நாதர் கோவிலில் அர்ச்சனை செய்யும் பிராமணேத்தமர் பக்கத்தில் போய் நின்ருள். அவர் அர்ச்சனை செய்து கொண்டு கடவுள்மீது தியானமாய் இருந்தபடியால் கவனிக்கவில்லை. மெதுவாய் ஆண்டவனுக்குத் தண்டனிட்டு, கருணைக்கடலை ஸ்தோத்திரம் செய்யத் தொடங்கினள்.

அர்ச்சனை முடிந்ததும் பிராமணர் திரும்பிப் பார்க்கவே வியப்படைந்தார். என்ன ஆச்சரியம்! அடுத்த அறையிலிருந்து இராஜராஜேச்வரிதான் இங்குவந்து யான் செய்யும் பூஜையைச் சோதனை செய்கிருளோ, என்று மலைத்தார். லலிதை அவரை அதிக நேரம் மலைக்க இடங்கொடுக்காமல் "சுவாமி, பூஜை செய்து கொண்டுபோக வந்திருக்கிருேம்" என, அவர் அவளை யார் என அறிந்து, சேடி கையிலிருந்த தட்டைவாங்கிக்கொண்டு கிரமப்படி பூஜைமுடித்து என்னம்மை கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போனர்.

இராஜராஜேச்வரிக்கு அன்று செய்திருந்த அலங்காரம் என்னவென்று சொல்வது! லலிதை உடல் பூரித்து நாக்குழற, மனம் தடுமாற மஹா உருக்கத்துடன் தேவியைப் புகழ ஆரம்பித்தாள். ஸ்தோத்திரம் முடிந்ததும் தேவியைப் பார்த்து "என் தாயே! புத்திக்கு எட்டா ஆதி சக்தியே! பிரம்மாதி தேவர்தெரிந்தறியமாட்டாதவளே! என் மனேபீஷ்டம் கைகூட அருள்புரிய வேண்டிய தயை உன்னிடமின்றி வேறு யாரிடம் இருக்கின்றது!" என்று இவ்வாறு வேண்டி மறுபடி லோக மாதாவை வணங்கி நின்ருள். அப்பொழுது அம்மையின் மேல் அர்ச்சனை செய்திருந்த புஷ்பங்கள் 'பலபல' வென்று உதிர்ந்தன. அதைக் கண்ட சேடி "லலிதாம்பிகே! பெண்ணரசீ! உன் விருதம் கைகூடும்; நீ அஞ்சேல்" என்று சொல்லித் தேற்ற இருவரும் அரண்மனைக்குத் திரும்பினர்.

இவர்கள் அரண்மனை சேரும்பொழுது

ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும்.

தான் சபாமண்டபத்திலிருந்து பலரும் வந்துகொண்டிருக்கின்றனர். பாட்டுக் கச்சேரி இவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிடக் காரணம் யாதோவென்று லலிதை வியந்தாள். ஆயினும் அதைப்பற்றி அதிகமாய்ச் சிந்திக்கவும் கூடவில்லை. அன்றிரவில் லலிதை தன் தாயுடனும் மற்ற ஸ்திரீகளுடனும் கூடி நேரம் சென்று போஜனம் செய்ய இஷ்டப்படவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. பாபம்! லலிதைக்கு ஜனக்கூட்டமே வெறுப்பாய் இருந்தது. ஆகையால் தனக்குப் பசி அதிகம் என்று சாக்குச் சொல்லிவிட்டு ஒரு சேடியின் உதவியால் சாப்பாடு முடித்துக்கொண்டு ஒருவர் கண்ணிலும் படாமல் தன் அறையில் புகுந்து தனியே யிருந்தாள்.

ஆண் பெண் இரு பாலர்களுக்கும் இத்தகைய காலம் ஒன்று வருகிறதென்பது திண்ணம். எவர்தான் மன்மதன் பாணத்துக்குத் தப்பி நின்றவர்? திரிலோகேசுவரனான பரமசிவனும் காமன் வலையில் அகப்பட்டு விழித்தான் என்றால் ஏழை ஜனங்கள் அவன் முன் எம்மாத்திரம்! லோகத்தின் ஆரம்பம் முதல், லோகம் இனிமுடியும் வரையில், மற்ற எந்தக் காரியம் எவ்வழி நடப்பினும்—காதலரின் அன்பின் போக்குமட்டும் ஒரேமாதிரிதான். தத்துவ சாஸ்திரிகள் என்ன சொன்னாலும் சொல்லட்டும்; வேதாந்திகள் துச்சம் துச்சம் என்று தூஷிக்கட்டும்; இந்த அன்பு என்பது ஒன்று இல்லையேல்உலகம் அன்றே நாசந்தான். உணர்ச்சிக்கெல்லாம் அதுசிறந்தஉணர்ச்சி; ஆனந்தத்துக்கெல்லாம்மேலான ஆனந்தம். ஆண் பெண் இரண்டு பேர்களுக்குள் ஏற்படும் இவ்வன்பே மேனாளில் முதிர்ந்து வீட்டின் அளவாய்ப் பெருகி, அப்பாலும் ததும்பி, பிரபஞ்சத்தையெல்லாம் தன் மயமாய் எண்ணும் ஞானமாகின்றது. 'ஏகம் ஸத்' என்று உணரும் கடைசி உணர்ச்சிக்குப்படிப்படியாய்வழிகாட்டுவது அன்பே. உலகின்கண் இவ்வுணர்ச்சியே இல்லையென்போன் கள்வன். அன்பென்பதே இல்லையென்றும், அவ்வுணர்ச்சிபொய்யுணர்ச்சியென்றும் நாஸ்திகவாதம் செய்யும் மனிதரும் சிலர் உண்டு. அவர்கள் தான் உலகத்தை நாசமாக்குவோர்; அன்பு ஒன்றே லகத்தைப் பரிசுத்தப்படுத்தும் கருவி. காதலரன்பைச் சரியாய் உணர்ந்தவன், மற்ற ஸ்திரீகளைத் தன் சகோதரிகள்போல் எண்ணுவான். அன்புகாட்டுவதுபோல் பாசாங்கு செய்து கடைசியில் குடியைக் கெடுக்கும் பாவிகளும், சிலர் உண்டு; அவர்களை நாம் கவனிப்போம் அல்லோம். தற்சமயத்தில் நம் லலிதையின் உண்மை அன்பின் போக்கைப் பார்த்து அவளுடன் நாம் அநுதாபப்படாமல் இருத்தலும் கூடுமோ?

நம்போலியர்களுக்கு நச்சுப் பிடித்துப் போவது போல் தோன்றினும், மறுபடி ஒரு முறை ஜயபாலன் எழுதிய கடிதத்தைப் படித்தாள். லலிதை அதைத் தன் மார்பின்மேல் வைதுக்கொண்டு படுக்கையில் சயனித்தவாறே மனோராஜ்யம் செய்யவாரம்பித்தாள். தூக்கம் பிடிக்காவிட்டாலும் மனம் வெவ்வேறு வழியாய்ப்போய்ப் பலவித அநுபோகங்களையும்ஒன்று சேர்த்தது. அன்றுநடந்த விருத்தாந்தங்களும், முன் நடந்த விருத்தாந்தங்களும் ஒவ்வொன்றாய் நினைவுக்கு வந்தன. இவ்வித நினைப்புக்களில் ஆழ்ந்தபடியே மயக்கமாய் நித்திரை செய்துவிட்டாள்.

ஆயினும் அயர்ந்த நித்திரை யில்லை. கனவில் கண்ட பலவிதக் காட்சிகளுள் அன்று நடந்ததுபோல் ஒரு சங்கீத சபை அவள் கனவில் தோன்றிற்று. தானும் அங்கேபோய் இருக்கின்றனள். எல்லோரும் பாட்டுக் கேட்கும்போதே ஒரு சுந்தர புருஷன் அங்கே வருகின்றான். உடனே அவள் தாய் "லலிதா ஏன் சும்மா நிற்கின்றாய்? இன்று உன் மணநாள் அல்லவா? நினைவில்லையா?" என்கின்றாள். அதைக் கேட்டதும் தான் தலை குனிந்துகொள்வதாக எண்ணுகிறாள். இதற்குள் அந்தத் திவ்யபுருஷன் இவர்கள் இருக்கும் இடத்திற்கு நெருங்கிவிட்டான். "இவன்தான் எனது தமக்கை மகன் ஜயபாலன்; குழந்தாய், உனது நாதனை நிமிர்ந்துபார்" என்கின்றார் அவளது தகப்பனார். கடைக் கண்ணால் அவ்வழகிய வடிவைக் கண்டு ஆனந்திக்கின்றாள். இன்னொரு முறை நிமிர்ந்து நன்றாய்ப் பார்ப்போம் என்று எண்ணுவதற்குள், ஒரு விகாரமான மிருகமோ மனிதனோ என்னவோ அவள் எதிரில் வருகின்றது. தன் தாயையும் காணோம்; தந்தையையும் காணோம்; வருகிற உருவம் இன்னதென்று விளங்கவில்லை. பேசவும் நாவெழவில்லை. பக்கத்தில் அவ்வுரு நெருங்கி விட்டது. ஒரு பெருங்காற்றும் வீசிற்று; தன்னை

அவ்வுரு பிடித்துக்கொள்ளுமோ என்ற பயத்தால் பின் நகருவதற்குள் கீழே விழுந்துவிட்டாள். "தூங்கும் குழந்தைக்குத் தூக்கி வாரிப்போட்டது." விழித்துக் கண்களைத் தேய்த்துக்கொண்டு எழுந்துபார்த்தாள். காற்றும் இல்லை. உருவமும் இல்லை. தீபம் பிரகாசிக்கின்றது. சேடி வாசற்படியண்டை நித்திரை போகிறாள். ஜன்னலிலிருந்து மெதுவாய்க் காற்று அடிக்கின்றது. பட்டணம் சப்தமற்றிருக்கின்றது. வெகு தூரத்தில் நாய் குலைக்கும் சப்தம் கேட்கின்றது. இவையெல்லாம் கனவு; உண்மையன்று. ஆனால் உடலின் பதட்டமும், நெற்றியில் வியர்வையும் சற்று முன் கண்ட கனவின் காரியமாய் நின்றன.

உள்ளே மேலும் கீழும் உலாவினாள். படுக்கையின்மேல் ஜயபாலனுடைய கடிதம் கிடக்கின்றது. அதுவும் கனவல்ல. தன் தகப்பனாருடைய அறையில் பேச்சுக்குரல் கேட்கின்றது. சற்று கவனித்துக் கேட்கிறாள், ஒன்றும் புலப்படவில்லை. தன் தாயும் அவ்வறையில் இருக்கின்றாள் என்பதற்கு அவளுடைய தாழ்ந்த குரலும் காதில் பட்டது. எவ்விஷயத்தைப்பற்றி இந்நேரத்தில் யோசிக்கின்றார்கள் என்று ஆச்சரியப்பட்டாள். ஆனால் இரண்டொரு மாதமாய் இவ்வண்ணம் தன் தாய்தந்தையர் இரவில் வெகு நேரம் பேசிக்கொண்டிருப்பது வழக்கமென்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. கட்டிலில் உட்கார்ந்தாள். பக்கத்தில் இருக்கின்றது கடிதம். அன்பின் ஆக்கமும் மெல்ல மெல்ல விருத்தியடைந்தது. "என் கனவுதான் என்ன கனவு. ஈசா என் கவலை தீர்த்தருள்வாய்—" என்று தன் மனத்துள் பாடிக்கொண்டு மறுபடியும் படுத்துக்கொண்டாள்.

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மஹாமஹோபாத்யாய பிரஹ்ம ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்.— ** நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும். சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்தற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில மிக எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. சிறுவர்களும் பெண்பாலாரும் இதனால் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

எனக்கு வேண்டியதில்லை

சில வருஷங்களுக்கு முன்னே பாலாற்றில் வெள்ளம் மிகவும் பெரியதாய் வந்தது. அந்த வெள்ளம் ஊர் ஊராயும், கிராமம் கிராமமாயும் அடித்துக்கொண்டு போயிற்று. வாணியம்பாடி முழுகிப் போயிற்றென்றுகூட ஜனங்கள் அப்போது சொல்லிக்கொண்டார்கள்.

அந்த வெள்ளம் வெகு வேகமாய் வந்துகொண்டிருக்கும் போது, பல பிணங்கள் மிதந்துகொண்டே போயின. வேலூரில், ஆற்றின்மீது பாலம் போட்டிருந்ததால், அவ்வூரார் பலர், வாராவதியின் மீது நின்றுகொண்டு வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகும் பிணங்களையும், சாமான்களையும் பார்த்துக்கொண்டு நின்றனர். அப்பொழுது வெள்ளத்தில் பெரிய வைக்கற்போர் ஒன்று அடித்துக்கொண்டு வந்தது. அதன் மீது, கிழவன் ஒருவனும், சிறு பெண் ஒருத்தியும் உட்கார்ந்திருந்தனர். வாராவதியண்டை வரும் போது வைக்கற்போர் புரளும்போலிருந்தது. கண்டவர்கள் எல்லோரும் 'ஐயோ' வென்று அலறினர். வேலூரிலுள்ள கோவிந்த செட்டியார் என்பவர்அங்குவந்திருந்தார். கிழவனும் பெண்ணும் இருக்கும் நிலைமையைக் கண்டு 'வெள்ளத்தில் வரும்இருவரையும் கரைசேர்ப்பவனுக்கு 500ரூபாய் இனாம் தருகிறேன்' என்றார். ஒருவரும் நகரவில்லை. "1000 ரூபாய்"!— ஒருவர் இருவர் அடி வைத்தார்கள்—ஆனால் வெள்ளத்தின் வேகத்தைக் கண்டு, பின் வாங்கினர்; '2000' என்று கத்தினார் கோவிந்த செட்டியார். வைக்கற் போர் வாராவதிக்கு அருகே வந்துவிட்டது.

கூட்டத்தில் சப்த முண்டாகிறது; சிலர் திரும்பிப் பார்க்க சிறுவன் ஒருவன் ஓடி வருகிறான். கிழவனும் பெண்ணும் இருக்கும் நிலைமையைப் பார்த்து இடுப்பில் அவன் துணி ஒன்றைக் கயிறுபோல் கட்டிக்கொண்டு, பாலத்தின்மே லிருப்பவர்களை 'இன்னும் நீளமாக கட்டிப் பிடித்துக்கொள்ளுங்கள்' என்று கூறி ஜலத்தில் குதிக்கிறான். வெள்ளம் பயங்கரமாய் இரைச்சலிட்டுக்கொண்டு ஓடுகிறது; வைக்கற்போரும் புரள முயலுகிறது.

அப்பப்ப! என்ன கஷ்டம்! என்ன தைர்யம்! சிறுவன் வைக்கற் போரின்மேல் ஏறி, கிழவரை ஒரு கையாலும், பெண்ணை மற்றொரு கையாலும் கட்டிக்கொண்டு மறுபடியும் குதிக்கிறான்—ஐயோ!—வைக்கற்போர் கவிழ்கிறது. அது இருந்த இடத்தில் பெருஞ்சுழல் உண்டாகிறது. தைர்யமாய் ஜலத்தில் குதித்த பையனெங்கே!

பாலத்தின் மீதுள்ள ஜனங்கள் கண் கொட்டாது பார்த்து நிற்கின்றனர்—ஆ! அதோ பையன் தலை தெரிகிறது. தைர்யமாய் நீந்துகிறான். கரையிலுள்ளவர்கள் துணிக்கயிற்றால் அம்மூவரையும் இழுத்துக் கரை சேர்க்கின்றனர். மூவரும் மரணத்தினின்றும் தப்பினர்.

கோவிந்த செட்டியார் 2000 ரூபாய் எடுத்துச் சிறுவனை அழைத்து, "அப்பா, நீ சிறியவனாயிருந்த போதிலும், மிகுந்த தைர்யமுள்ளவனாயிருக்கிறாய். உன்னைப்போல் தைர்யசாலிகளை நான் இதுவரையிலும் கண்டதில்லை. இதை நீ எடுத்துக்கொள் என்று நீட்டினார். சிறுவன் 'ஐயா, தங்களுக்கு அநேக நமஸ்காரம். உம்முடைய பணம் எனக்கு வேண்டியதில்லை. வீட்டையும் பொருளையும் இழந்த பெரியவருக்குக் கொடும். அவருக்கு அந்தப் பணம் மிகவும் உபயோகமாயிருக்கும்" என்று சொல்லிவிட்டு கூட்டத்துள் நுழைந்து ஓடிப் போய்விட்டான்.

இந்த விஷயத்தைப்பற்றிச் சற்று யோசிப்போம். தன் உயிருக்கு அபாயம் உண்டான போதிலும் தைர்யமாய் வெள்ளத்தில் குதித்த சிறுவன், கோவிந்த செட்டியார் கொடுத்த வெகுமதியை வாங்கிக் கொள்ளக்கூடாதா?

வாங்கிக்கொள்ளலாம்.

அப்படியானால் அவன் ஏன் வாங்கிக் கொள்ளவில்லை?

தன்னைவிட வீடு முதலியவற்றை இழந்த கிழவருக்கும் அவர் பெண்ணுக்கும் அந்தப் பணம் மிகவும் உபயோகப்படும் என்ற எண்ணத்தினால், அவன் தன் ஸுகத்தைக் கவனியாது, மற்றவர்களுடைய ஸுகத்தையே கவனித்தான்.

அவனல்லவா உண்மைச் சிறுவன்?

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி : 20-ம் காட்சி

நளனென் னிறைவ னலதிந்த நாயேன்
உளனென் னறைபுகுந்த துண்டேல்—ஒளியாது
காற்றே கதிரே கழறென்ன வின்றின்றென்
கூற்றே கதித்தவெங்குங் கூடி.

கேசினி கூறிய மொழிகளைக் கேட்கக் கேட்கத் தமயந்தியின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் அரும்பி, ஒன்றாய், இரண்டாய், பலவாய், அளவு கடந்த வெள்ளமாய்ப் பெருகலாயின. அச்சமயம் அவள் மனத்து அச்சமும் அன்பும் ஆத்திரத்துடன் மயங்கிவிளங்கின. அதுவரைக் காணாதிருந்த தனது தலைவரைக் காண அவள் உள்ளம் துடித்தது. "அவர் வாகுகரே! எனினும் எனது உத்தமத் தலைவரேயாகும். அவரே என் தலைவர்; எனது நளமன்னவர்; என் னுயிர்க்கு ஒளியாய் இருப்பவர். அவரை என்னால் இனிச் சற்றுங் காணாதிருக்க இக்கண்கள் கருதா; என் மனமும் இடந் தரா. அந்தோ! தமயந்தீ! இன்றே உன் எண்ணம் பலித்தது. இனியுன் கவலையொழி. உன் தலைவரைக் கண்டாய், துயரத்தை எல்லாம் விண்டாய். கால தாமதம் செய்யாது அவரைக் கண்டு, அவரது, சூம்பியதாயினும், நிலை தவறா உத்தம வடிவைக் கண்களிற்கு விருந்தாக்கு. சீக்ரம்! சீக்ரம்! பிரிந்தவர் கூடினால் பேசல் தகாது. உடனே புறப்படு" என அவள் தன்னோடு தானே பேசினாள்.

அப்போது அவள் முகம் துயரமென்னும் மேகத்திலிருந்து வெளி வந்த சந்திரனைப் போல வளப்பத்துடன் விளங்கியது. நெடு நாளாக மாசுகொண்டு விளங்கிய அம்முகம், அப்போது களங்கத்துடன் விளங்கும் சந்திரனுக்குச் சரிசமானமாக விருக்குமெனலாம். ஆயினும் அவ்வழுக்கைக் கீறிக்கொண்டு விளங்கிய அவளது பேரெழில் அவளுக் கப்போது ஓர் புதிய உயிரையே தந்தது. தனது சந்தேகமுற்றுந் துறந்த அவள், கேசினியைப் பார்த்து, 'கேசினீ! நீ என் உயிர்க்குயிரானவள்; என் உண்மைத் தோழி; எனக்கு உயிரையே யளித்த உத்தமி. இன்னமும் யாதுதான் எனக்கு நீ செய்யமாட்டாய்? என் தாயிடம் சென்று

ஊரைப் பிடித்த சனி, பிள்ளையாரையும் பிடித்தது.

யான் பலவிதமும் வாகுகரிடம் ஸந்தேகங் கொண்டு பரீட்சித்ததை அவரிடம் கூறு. வாகுகரே என் கணவரென நான் நிச்சயத்திருப்பதையும் சொல்லு. உருவம் வேறு என்பதொன்றே ஸந்தேகம். இருந்தாலென்ன? நேரிற்கண்டால் அது என்னவெனத் தானே எனக்கு விளங்கும். ஆகவே அவ்வாகுகரைக் காண என் மனம் பேராவல் கொள்கிறது. ஒன்று அவரையாவது இங்கு தருவித்தல் வேண்டும்; அல்லது நானே அவரைக் காண வேண்டும். ஆகவே என் தந்தைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, எது தகுமோ அந்த விதம், அவரை நான் காணும்படி ஸம்மதம் பெற்றுவா. நான் சொல்வது தெரிந்ததா? சீக்ரம்! விடைபெற்றுவா. ஆலஸ்யம் வேண்டாம்" என்று சொல்லித் தனது தாயிடம் அனுப்பினாள்.

தனியே நின்ற தமயந்தி தனக்கும் தெரியாமல் துக்கமடைந்தாள்; விம்மிவிம்மி யழுதாள். என் செய்வாள்? "யாது காரணம் பற்றி அவர் உருவம் அவ்வாறு குன்றியதோ? எந்தக் கஷ்டத்தினால் அவர்க்கு அத்துயரம் ஏற்பட்டிருக்கும்? ஒருவர்க்குந் துன்பம்செய்யாத என் அன்பற்கு, இவ்வாறு கெடுதி யார் புரிவர்? அத்தனே! உம்மைக் காணாது நான் நித்தம் நித்தம் பட்ட துயரம் உமக்குத் தெரியுமா? உத்தமனே! உம்மைக் கண்டும் காணாதிருக்கின்றனனே. உம்மையல்லால் எனக்கு உலகமேது? உமது வடிவத்தைப்பற்றி எண்ணவும் என் மனம் பதறுகிறதே! பெரியவரே! உம்மைக் கண்டால் யான் எப்படிச் சகிப்பேன். பாவியேன் இருந்தும் உமக்கு இவ்வாறு வர நேர்ந்ததே! அந்தோ——"என இவ்வாறு அவள் எண்ணி எண்ணி நெடு மூச்சுவிட்டுக் கொண்டு சுற்றுப்புறத்திலிருப்பவை இவையென்றறியாது உணர்வற்றுக் கிடந்தாள். தரைமேற் படிந்து, மனம் நொந்து மயங்கி விளங்கிய அவளிடம் கேசினி விரைவில் ஓடோடியும் வந்தாள். எனினும் அவ்வல்ப நேரமும் தமயந்திக்குப் பெரும் யுகம்போலவே யிருந்தது.

"யான்போய் உமது விஷய முழுதையும் சொன்னேன்; உமது அபிப்பிராயத்தையும் வெளியிட்டேன். அப்படியே செய்ய உமது பெற்றோர் இருவரும் விடை யளித்தனர்" என்று கேசினி சொல்லி முடிப்பதற்குள், தமயந்தி தனது அரையுள் நளரைத் தருவிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்தனள்; அவரது வரவை ஆவலோடு எதிர்பார்த்தனள்.

நளமன்னவர் அவ்வரையுள் புகும்பொழுதே அவர் மனத்தில் நெடுநாளாகப் பொதிந்துகிடந்த பெருந்துயரம் கண்ணில் நீருருவாகத் ததும்பி வெளி வந்தது. தமயந்தியைக் கண்டதும் அச்சமும் துக்கமும் ஏக்கமும் அவர் மனத்தைக் கவர்ந்தன. கண்களிலிருந்து கசிந்த கண்ணீர் அவர் பார்வையை மறைத்ததெனினும், அடக்க முடியா ஆத்திரத்தோடு 'ஆ!' என்றலறிக் கொண்டு அவள் தன்காலில் வீழ்ந்ததை அவர் கண்டார். அன்று கட்டியிருந்த பாதித்துணியோடு மாசுபடிந்து, மயிரைச் சடையாக்கிக் காதற்றவங்கொண்டு விளங்கிய அவளது துன்பத்திலும் இன்பங்கொண்டு விளங்கிய மெல்லிய உருவையும் தமது நீர் கசியுங் கண்களாலேயே அவர் கண்டார். அவர் செய்த தவறே அவரது தொண்டையை அப்போது பேசவிடாது அடைத்துக் கொண்டது போலும்! பின் ஏன் அவர் பேச நா எழாது அப்படிக் கண்ணீர் பெருக்கிக் கம்பம்போல நிற்க வேண்டும்!' தமயந்தி என்செய்வள்? அவளது ஆத்திரமும் அன்பும் முந்திமுந்தித் தூண்டப் பின வருமாறு வாகுகரை நோக்கி மொழியலுற்றாள் :

"ஐயா! பெரியவரே! யான் ஏதோ கேட்கிறேன் என்று கோபியாது தயவுசெய்து மறுமொழி அளிக்கவேண்டும். தாங்கள் எல்லாமுணர்ந்தவரென யான் கேள்விப்பட்டது தவறாகாதென்பது உம்மைக் கண்டவரெவரும் நம்புவர். தருமங்கள் எல்லாவற்றையும் உணர்ந்த எவராவது தமது மனைவியை நடுக்காட்டில், அவள் தூங்கும் சமயத்தில் தனியே விட்டுவிட்டு ஓடியதைத் தாங்கள் எங்காவது கண்டதுண்டா? அந்தோ! அவ்வாறு யார் செய்ய முடியும்?

[கொள்வாள்,

குறைவில் அன்பினள், பிழையிலள், கண்படை
இறையுமே நீபபரும மனைவியை இருள்படு கானில்
அறனி முக்குறு நளனல தியாவரே யகல்வார்?

அவ்வாறு அவர் என்னைக் காட்டில் தனியே விட்டுப்போக யான் என்ன தவறுசெய்தேனோ

ஊரை வளைத்தாலும் உற்ற துணை இல்லை, நாட்டை வளைத்தாலும் நல்ல துணை இல்லை.

அறியேன். தேவர்களைச் சிறிதும் பாராட்டாது அவரையே எனது கடவுளாக அன்று யான் வரித்ததை அவர் மறந்தனரா? அவரையே பின்பற்றித் தொடர்ந்து அழியா அன்போடு அவரிடம் யான் விளங்க என்னை அவர் ஏன் வெறுக்க வேண்டும்? அவர்க்கு அப்படிச் செய்ய எப்படி மனம் இடந் தந்தது? தேவர்கள் முன்பு அக்நி சாக்ஷியாக என்னை மணந்தபொழுது செய்த உறுதிமொழியைக் கடந்து அவர் எப்படி நடக்கலாம்? அப்படி நடக்க நான் என்ன தவறுசெய்துவிட்டேன்? தன்னை நம்பி யடைந்தவரை நடுக்காட்டில் விடுவது தரும நெறியில் நடக்கும் க்ஷத்திரியர்க்கு எப்படிப் பொருந்தும்?—"

இவ்வாறு அவள் பேசும்போது அவளது மொழியை, அவளது கண்களிலிருந்து வழிந்து விழுந்த கண்ணீர்த் துளிகள் இடைஇடையே தடுத்தவாயினும், அவள் பலநாளாய்த் தனது மனத்துள் வைத்திருந்த விஷயங்களை வெகு சமத்காரமாக வெளியிட்டனள். கண்ணீர் வெள்ளத்தில் ஆடிப் புனிதமாகி விளங்கிய தமயந்தியின் முகத்தாமரை மலர வந்த நளமன்னவன், அவளைக் கண்டதும், துன்பமேலீட்டால் அசைவற்று மயங்கிக் கிடந்தான். அப்போதவன் தன்னைத் தமயந்தி இன்னானென அறிந்து விட்டனளென நிச்சயித்தான்; அவள் உண்மையில் தன்னை நாடிக் காணச் செய்த உபாயந்தன்னையும் ஒருவாறு உணர்ந்தான். எனினும் மானத்தின் கயிற்றால் பிணிக்கப்பட்ட அவன், பின் வருமாறு பேசினான்:—

"பெருமைக் கிருப்பிடமானவளே! பயத்தால் நடுங்கி மானத்தினால் ஒடுங்கித் தலைவனைக் காண ஆவல் கொண்ட குணமுடையவளே! நளன் தானாகவே உன்னைக் காட்டில் விட்டுச் செல்லவே யில்லை. அவன் கவறாடியதும் அவனது சொந்த புத்தியாலல்ல; உன்னைப் பிரிந்ததும் சித்த ஸ்வாதீனத்துடனன்று. அந்தக் கலியின் வேகத்தால்தான் நான் உன்னைத் தனியே விட்டுத் தவிக்கநேர்ந்தது. நீ யிட்ட கடும் சாபம் அவனை இதுகாறும் தொந்தரை செய்யா நிற்கின்றது. அச்சாபத்தீ கொளுத்த, அவன் எனது உடலில் மயங்கிக் கிடந்தான். எனினும் அவனை நான் எனது நடையாலும் நெறியாலும் வென்றேன்; துக்கக் கடலைக் கடந்து, ஆநந்த ஸாகரத்தின் எல்லையை யணுகினேன். அக்கலியொழிந்ததால்தான் நானுமிங்குவந்தது. நளன் உன்னை என்றும் பிரிந்து சுகித்திலன்; அல்லும் பகலு மவன் சிந்தைக் காளாகித் தமயந்தியின் கனவையே கண்டு மனத்துயருள் ஆழ்ந்து கிடந்தான். அவனைப்பற்றித் தவறாக எண்ணற்க. அவன் ஒழுக்கம் தவறினன் அல்லன்; தவறவு மாட்டான். அதனாலே இப்போதும் உன்னை நேரிற் காணும் பாக்கியம் பெற்றான்; துன்ப முற்றும் அற்றான். அவன் உன்னைக் காணவென்றே இங்கு வந்தனன்; தனது உண்மைக் காதலியின் நிலையைக் காணவெனவே வந்தனன். அதைத் தவிர்த்து அவனுக்கிங்கு வரக் காரண மியாது? நற்குண முடையவளே! பொறுமைக்கு அடைக்கலமே! ஆயினும்;

'தூய கற்பினார் காதலர் துறப்பினும், மற்றோர்
நாய கற்பெற நினைவர்கொல்?'

கொண்ட கணவனை விட்டு மற்றொருவனை மணக்க உத்தமி எவளுக்கு மனம்வரும்? தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் நடக்கப் போவதாக உன் தந்தையாரது கட்டளைப்படி தூதர் அநேகர் சொல்லிக்கொண்டலைகிறார்களே! அதைக் கேட்க எனக்குப் பெருஞ் சுகம் எப்படி ஏற்படும்? உனக்கேற்ற புருஷனை நீ தேடி, மீண்டும் மணக்க விருப்பதை நாடி யல்லவா ருதுபர்ணரும் இங்கு வந்தனர்? அகோ! உத்தமியான உனக்கு என்னைப்பற்றிய சிந்தை முற்றும் ஒழிந்தது போலும்! என் செய்வது! எல்லாம் கலியால் ஏற்பட்டது. காட்டிலுன்னைத் தனியே விட்டுச் சென்றவனிடம் அன்பு எப்படி நீடித்திருக்க முடியும்? யான் செய்த வினையே இத்தகைய முடிவை ஏற்படுத்தி யுள்ளது. வருவன தாமே வரும். அல்லவா?"

இவ்வாறு நளமன்னவன் தன் மனத்துள் துன்ப மூட்டிய ஸந்தேஹத்தை ஒருவாறு வெளியிட்டுக் கண்களில் நீர் சிந்த வாளா நின்றான். அவன் உடம்பு அப்போது அசைவற்றுக் கிடந்தது. துன்பத்துள் பாய்ந்து விளங்கிய அவனது நிலையை அப்போது காண்பது பெரிதும் பரிதாபம். ஒருவேளை தமயந்தி உண்மையாகவே வெறுத்து விட்டனளோ என அவன் கவலை கொண்டதுமுண்டு. ஆகவே

ஊரோடு ஒக்க ஓடு நாடோடு நடு ஓடு.

அவன் துயருழந்து கிடந்தான். அந்நிலையைக் கண்ட தமயந்தி தன் முன் நிற்பது நளனே என உணர்ந்து அஞ்சினாள்; நடுங்கினாள்; கண்ணீர் பெருக்கினாள்; அடியற்ற மரம்போல் கீழே விழுந்தாள்; சற்றே தெளிந்து எழுந்தாள்; தனது கணவனது பாதத்தில் வீழ்ந்து பணிந்தாள்; கண்ணினின்று கசிந்த நீர், மாலை மாலையாக விழ அடங்கிய குரலில் மொழிந்தனள்:—

"என்றும் என் மனத்தைக் கொள்ளை கொண்ட பெரியவரே! நற்குணங்களெல்லாம் நிரம்பியவரே! என்னிடம் தாங்கள் கொள்ளும் ஸந்தேகம் சிறிதும் காரணமற்றது. தேவர்களையும் தள்ளி உம்மையே வரித்த யான் எப்படி உம்மை யன்றி மற்றொருவரை எண்ணமுடியும்? உம்மைக் காணவென்றே யான் இப்போது செய்ததிச் சூழ்ச்சியெல்லாம். உம்மை யறிந்து கொணரப் பத்துத் திசைகளினும் யான் பிராஹ்மணர்களை அனுப்பினேன். பர்ணாதர் என்பவர் நான் சொல்லி யனுப்பிய மொழிகளுக்கு ருதுபர்ண ஸபையில் யாரும் பதில் சொல்லாதிருக்க, தாங்கள் சொல்லிய பதிலை வந்துரைத்தனர். இவ்விரண்டாவது சுயம்வரம் என்ற பேச்சு, நான் தங்களைக் காணும் அவாவினால் செய்த ஓர் உபாயமே யல்லாது வேறல்ல. உம்மையல்லால் யார் நூறு யோசனை தூரம் ஒரே நாளில் குதிரைகளை ஓட்டவல்லவர்? சுயம்வரம் என்ற பேச்சு முழுதும் பொய். மேலும் அப்பேச்சை ருதுபர்ணர் ஒருவரே அறிவர். பிரிவடைந்து துயர்படிந்த யான் அவ்வாறு செய்தது ஒரு வேளை பேதைமையாய் இருந்தாலும் இருக்கலாம். எனினும் குற்றமற்ற எண்ணத்துடன் செய்ததை மன்னிக்க விரும்புகிறேன். தயாளகுணம் நிறைந்தவரே! இதோ உம்மை வணங்கிச் சொல்கிறேன். இது உறுதிமொழி. யான் ஒருநாளும் உம்மையன்றி எவரையும் சிந்தையாலும் நினைத்திலேன் என்பது நிச்சயம். அதை இவ்வுலகமுழுதும் அலைந்து, எல்லாவுயிர்க்கும் பிராணனாகி விளங்கும் இவ்வாயு பகவனே அறிவர். யான் தவறாய் நடந்திருப்பது உண்மையானால் எனது உயிராகிய பிராணனை அவரே கொள்ளட்டும். மேலும், எவற்றிற்கும் மேலாக ஆதிச்சுடராக ஆகாயவீதியில் நடக்கும் ஆதித்யமூர்த்தி யான் பாப சிந்தை கொண்டிருப்பனேல் என் உயிரையே கவரட்டும். எல்லார் மனத்துள்ளும் தவழ்ந்து ஆநந்தமூட்டும் அச்சந்திரக் கடவுள் யான் உண்மை நெறி கடந்திருப்பின் என்னை நாசம் செய்யட்டும்."

இவ்வாறு மொழிந்து கொண்டிருக்கும் போதே தமயந்தியின் குரல் வரவர இனிமையும் உறுதியும் வாய்ந்து விளங்கின. அவளது முகம் அப்போதவளுடைய உள்ளத்து உண்மை நிலையை வெளியிட்டதென்பது தவறாகாது. எனவே அவள் மேலும் "அவர் மூவரே ஸதா உலகை ஆள்பவர்; எவரையும் பாதுகாக்கும்கடவுளர்; எவற்றிற்கும் ஜீவசாட்சியாய் இருப்பவர். அவரே எனது உண்மை நிலையை அறியக்கூடியவர். யான் என் ஐயனை, நிடதநாட்டு மன்னனை, கடவுளரையுங் கணிசியாது மாலையிட்ட நளர் என்னு மன்னவனை யன்றி வேறு யாரையும் திரிகரணங்களாலும் நினைத்திலன் என்பது, உண்மையேல், அதை அவரே வெளியிடட்டும்; இன்றேல் என்னைக் கைவிடட்டும்" என வெகு ஆத்திரத்துடன் நெஞ்சமுலர, துயர மீதூர, கண்களிலிருந்து நீர் பெருகியோடத் துயரமும் இனிமையும் குலவ மொழிந்தாள்.

'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்
கல்லால், மனக்கவலை மாற்ற லரிது'

என்ற அநுபவமொழி பொய்த்திலதென்பது தமயந்தியிடத்தே விளங்கியதென்பதற்கு அங்கு அப்பொழுதெழுந்த அசரீரியே காட்டும். "அரசே! இவள் உத்தமி; கற்பிற் கிருப்பிடம்; உன்னைக் காணவென்றே இவ்வுபாயம் செய்தனள். அன்பி லீடுபட்டவள் செய்ததில் தவறெப்படி யிருக்க முடியும்? உன்னையல்லால் ஒரே நாளில் நூறு யோசனை தூரம் யாரேதேரை நடத்தமுடியும்? உமது பொருளை நீர் அடைந்து விட்டீர். தமயந்தியை நாங்களே இம்மூன்று வருஷமும் காத்து வந்தனம். எனவே, கவலையுறேல்; அவளிடம் சிறிது ஐயுறேல். தமயந்தி தானே உன்னைக் கண்டு அடைந்திட்டாள். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?" என்ற ஆகாய வாணியைக் கேட்ட மன்னன் அளவுகடந்த ஆனந்தங் கொண்டான்; களித்தான்; உடல் புளகித்துன்பமொழிந்தான்; ஆசைக்கண்ணீர்வடித்து அசைவற்றுக் கிடந்தான்; ஸந்தேஹம் ஒழிந்த

ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

லார்ட் ஸின்ஹா இந்திய உபமந்திரி.

இங்கிலாந்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்லிமெண்ட் பிரதிநிதிகளால் ஏற்பட்ட ராஜசபையில் கனம் மாண்டேகு அவர்களை இந்தியா மந்திரியாகவும், ஸர். எஸ். பி. ஸின்ஹா அவர்களை இந்திய உப மந்திரியாகவும், நியமிக்கப்பட்டது இந்நாடு முழுவதும் களிப்பிற் கிடந்தரும். கனம் ஸின்ஹா அவர்கள் பிரபுக்கள் ஸபையில் உத்தியோக முறையில் இடை இடையே தோன்றிப் பிரதி நிதிகளின் கூற்றுக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பைக் கவனித்து, அவரை ஆங்கிலப் பிரபு பட்டதாரிகளின் கோஷ்டியில் ஒருவராக நியமித்த ஆங்கிலப் பிரதானியாகிய கனம் லாயிட் ஜார்ஜ் அவர்களது பெருந்தன்மையும், மதியூகமும் ராஜதந்திர தாராளத்தன்மையும் கொண்டாடத்தக்கன. லார்ட் ஸின்ஹா அவர்களே உப மந்திரி பதவியையும், லார்ட் என்னும் பட்டத்தையும் முதன்முதல் பெறும் பாக்கியம் பெற்ற இந்தியர் ஆவர். ஆனால் இடை இடையே பட்டங்கள் போன்ற சிற்றுண்டிகளால், ஆங்கில ஆட்சியின்கீழ் இந்திய நிர்வாகத்தைத் தாமே பொறுப்பேற்க விரும்பும் இந்தியரது அவா பூர்த்தியடையமுடியாது. இதுவே லார்ட் ஸின்ஹாவின் அபிப்பிராயமும் எனக் கேட்க யாவர்க்கும் சந்தோஷம் விளைக்கா திருக்காது.

***

ஸினிமோடோகிராப்

சென்னையில் ஸினிமோடோகிராப்களால் எளியவர்க்கு இந்தக்ஷாமநாட்களில் ஏற்படும் தொல்லைகளை நாம் கவனிப்பது தவறாகாது. நாடோறும் காலைமுதல், மாலை வரை உழைத்து, வந்த பணத்தை வீணே கூட்டங்கூடும் இவ்விடங்களில் செலவுசெய்து, பெண்டு பிள்ளைகளைத் தவிக்கவிடும் தொழிலைத் தடுப்பது நியாயமன்றென எப்படிச் சொல்லலாம். பண வருவாய் மிக்க வுடையோர், இக்காட்சிகளுக்குச் செல்வது தவறாகாது. ஏழை எளியர்கள் தமது பணத்தை வியர்த்தம் செய்வதல்லாமல் பலவிதத் துன்பங்களுக்கு ஆளாவதைத் தடுப்பது பொதுஜனங்களுடையவும் நிர்வாகஸ்தர்களுடையவும் பொறுப்பாகும். மேலும், இக்காட்சிகளில் காட்டப் பெறும் விநோதங்கள் கருத்திற்கிசைந்தவல்லவென்று இராஜாங்க ரிபோர்ட்களிலேயே தெரியவரும். கொலை, களவு, காமம் இவை போன்ற துஷ்ட லக்ஷணங்களின் விருத்தியை நன்கு காட்டி மனத்திலூன்றும்படி செய்யும் இக்காட்சிகளை ஒழுங்குபடுத்தும் கடமை யாரைச் சேர்ந்தது ?

***

இலவசக் கல்வி

சண்டையில் இறந்த இந்தியச் சிப்பாய்களின் மக்களுக்கு இலவசப் பிரதமக் கல்வி பயிற்றுவதற்காகத் தக்க ஏற்பாடுகள் உத்தியோகமுறையில் செய்யப்படுவது யாவர்க்கும் சந்தோஷ மூட்டும். இத்தகைய குழந்தைகளுக்கு, பள்ளியில் படிக்கும்வரை வருஷத்திற்கு ரூபாய் ஆறுக்கு மேற்படாத தொகை, இவ்விஷயமாக ஏற்படும் மற்றைச் செலவுகளுக்கும் கொடுக்கப்படும். யுத்தத்தில் உயிர்துறந்த வீரர்களின் ஞாபகார்த்தமாகச் செய்யப்படும் இவ்வுதவி கொண்டாடத்தக்கதே. இலவசக் கல்வியை முற்றும் பரவச்செய்தல் இதனினும் பெருமைதரும் அன்றோ?

***

ராஜகுமார கலாசாலை

இக்கலாசாலையைப் பொதுஜன சம்மதமின்றியே ஸ்தாபிக்க அரசாங்கத்தார் மனங்கொண்டது வியக்கத்தக்க தேனும், அவ்விடத்துத் தக்க இந்தியர்களையே போதகர்களாக நியமித்து, அங்கு படிக்கவரும் ஜமீந்தார்களின் மக்களுக்கு இந்தியாவைப்பற்றிய உண்மை ஞானத்தை ஊட்ட கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடுகள் செய்வாரென நம்புகிறோம். இதுவே பல ஜமீன்தார்களின் அபிப்பிராயம்.

அவன் கார்க்கோடகன் தந்த ஆடையை அணிந்து தன் முன்னுருவை அடைந்ததும், தமயந்தி அன்போடு அவனை இறுக அணைந்து, கண்களைக் கெட்டியாக மூடி, இருவர் உள்ளமும் ஒத்து ஒலிக்க, இவ்வுலகப் பிரஞ்ஞையற்று விளங்கினாள். அவ்விஷயமுணர்ந்ததும்,

மண்களித்தது ; மாதிரங் களித்தன ; மலர்மேல்
பெண்களித்தனள் ; பேறங்க களித்தன ; கண்டோர்
கண்களித்தன ; களித்தன கலைவலோர் நெஞ்சம் ;
விண்களித்தன ; களித்தது வீமன்மா நகரம்.

ஊர் ஓரத்திற் கொல்லை, உழுதவனுக்குப் பயிர் இல்லை.

15 APR 1919

விவேகபோதினி

வருஷச் சந்தா		
உள்நாடுகளுக்கு	ரூ.	4
வெளிநாடுகளுக்கு	ரூ.	5
தனிப்பிரதி -	அ.	6

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

விளம்பர விகிதம்		
முழுப்பக்கம்	ரூ.	8
அரைப்பக்கம்	ரூ.	5
கால்பக்கம்	ரூ.	3

தொகு XI | காளயுக்திஸு தைமீ :: 1919-ஸு பிப்ரவரிமீ | பகுதி 8

முருகன் துதி

ON GOD MURUGA

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

ஆங்கா ரமுமடங் காரொடுங்
கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு
மறார் தினைப் போதளவு
மோங்காரத் துள்ளொளிக் குள்ளே
முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய்
வார்யம தூதருக்கே.

சிந்திக்கிலே னின்று சேவிக்கிலேன்
றண்டைச் சிற்றடியை
வந்திக்கிலே னொன்றும் வாழ்த்துகி
லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி
லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக்
கிலேசமும் போக்குதற்கே.

பட்டிக் கடாவில் வருமந்த
காவனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது
விடேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு
மாடிரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி
வாளென்றன் கையதுவே.

நீர்க்குமி ழிக்கு நிகரென்பர்
யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு
மென்பர் பசித்துவந்தே
யேற்கு மவர்க்கிட வென்னினெங்
கேனு மெழுந்திருப்பார்
வேற்குமரற்கன் பிலாதவர்
ஞான மிகவுநன்றே.

பெறுதற் கரிய பிறவியைப்
பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்றி
லேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம
சயில சரசவல்லி
யிறுகத் தழுவுங் கடகா
சலபன் னிருபுயனே.

விழிக்குத் துணை திரு மென்மலர்ப்
பாதங்கண் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

வேடிச்சி கொங்கை விரும்புங்
குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே
கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற்
கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை
வீணுக்கு மாய்ப்பவரே.

" எண்ணித் துணிக கருமம் எண்ணியபின் எண்ணுவ மென்பது இழுக்கு "

விவேக போதினி

தொ. 11] காளயுக்திஸு தைமீ [ப. 8

அன்பினிறை

THE LORD OF LOVE

துன்ப வளமாங் துராசார மத்தனையும்
அன்புவெள் ளத்தே யடித்தறுத்தான்-வன் புலனைக்
காய்ந்துலகைக் காத்தருள் கண்டான் கருத்தினிலே
வாய்ந்துளமே வாழும் வகை.

அன்பாய் விரிந்து, அருளாய்ப் பரந்து, யாவரையுங் காத்துவரவேன்றே வந்த கடவுள் மூர்த்தங்களின் தன்மையை ஆராய்வது அவற்றில் குற்றங்காணவேண்டுமென்ற எண்ணத்துடனன்று. சிற்சில ஸமயங்களில், அன்பின் வேர்களை ஓடவிடாதவழியில் தடைசெய்யும் உலகக் கட்டுப்பாடு என்னும் பாறைகளை அவ்வேர்த் துகைகள் நயமாக அறுத்து உள்ளே ஓடிச்செழிக்கும் ஸமயத்து, அவ்வேர்களின் போக்கை உணராது, சிற்றறிவைக் கொண்டு அதைப்பழிக்குந் தன்மையைத் தவறெனக் காட்டவேயாம். அன்பெனப்படுவது யாது? யாவர்க்கும் இனிய செயல் அல்லவா அது? ஆகவே அதுஸமயாஸமயங்களில்லௌகீகக்கட்டுகளைக் கடந்து, தன்னைப்பற்றிப் பிறர் எண்ணக்கூடிய விஷயங்களையும் கவனியாது, நன்மை செய்வதிலேயே பாய்ந்து விளங்கும். அல்லௌகீகக் கட்டுக்களைக் கடப்பது உலகத்தில் சற்றே தவறென மதிக்கப்படும். எனினும் யாவர்க்கும் நன்மை செய்யவெனப் பேரவாவுடன் வளர்ந்த அவ்வன்பின் உண்மைப் பெருக்கைக் கண்டால், இத்தகைய தவறான எண்ணங்கள் யாவும் சூரியன்முன் பனிபோல் இருந்தவிடம் தெரியாது மறைந்து விடும். நெருப்பிற்கெங்கேனும் பழுதென்பது இருக்க முடியுமா? நெருப்பிற்கும் ஜீவபூதமாக விருக்கும் கண்ணபிரானிடம் குற்றமெப்படி யிருக்க முடியும்? ஆனால் அவரைச் சிற்சில ஸமயங்களில் அவரது உண்மைப்பெருமையை உணராதவர் குறைகூறலாம். அது அவரது தவறெப்படியாகும்?

காளியன் முடிமேல் நடனஞ் செய்துவந்த எம்பெருமான், அவனது மனைவிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி அவனைக் கொல்லாது விட்டனர்; அவனை ரமணகத் தீவில் வாஸஞ்செய்யும்படி ஆணையிட்டனர்; அங்கு அவனுக்குக் கருடனால் ஒருவிதத் தீங்கும் நடவாதென உறுதிமொழி கூறினர். அவனும் அவ்வாறே செய்ய, ஸ்ரீ கிருஷ்ணர் தமது பரிவாரங்களுடன் வீட்டுக்குத் திரும்பும் வழியில் அவர்களைக் காட்டு நெருப்புக் கவிந்து கொண்டது. அதைக் கண்டதும், நடுநடுங்கிய கோபாலர்கள், கண்ணன் காலில் வீழ்ந்து தம்மைக் காக்கும்படி வேண்டினர்; "யாம் உமது உறவினர்; உண்மை பக்தர்கள்; நீங்களல்லாது எமக்குக் கதி யார்? உமது பாதாரவிந்த மல்லது வேறு புகலிடம் எமக்கேது?" என அவர் இறைஞ்சினர். அவரது விருப்பத்திற்கிணங்கிய எம்பெருமான் தமது மாயாவிலாஸத்தால் அப் பெருநெருப்பை இருக்குமிடம் தெரியாது விளங்கத் தம்முள் அடக்கிவிட்டனர். விஷத்தாலும் நெருப்பாலும் அவிக்கமுடியாத பொருளல்லவோ, அப்போது ஆயருடன் கூடி விளையாடி வந்தது?

இவ்வாறே,ஊரை யடைந்ததும், இராமகிருஷ்ணர்கள் இடைப்பிள்ளைகள்போல வளர்ந்து வந்தனர். இதற்குள் வஸந்தகாலம் வந்துவிடவே, நாடு முழுதும் புதிய சோபையுண்டாக, ஜனங்கள் மனத்தில் பேருவகை எழுந்தது. பச்சைப் பசும்புல் எங்கும் பாய்ந்து விளங்கிய நிலத்தைக் காண அவர்க்குப் பேரானந்தம் மனத்தில் குடிகொண்டது. தேனீக்கள் செய்த ரீங்காரம் அவரது மனத்தில் உத்ஸாக மூட்டியது. வஸந்த காலத்துச் செழுமையெல்லாம் அவரைக் குதூகலத்தில் ஆழ்த்தியது. அரவிந்த மலரும், தெளிவான ஓடையும், அழகிய பொழிலும் அவர்க்கினிய காட்சி கொடுத்தன. அவற்றில் மயங்கிய கோபாலச் சிறுவர், கூடி விளையாட எண்ணங் கொண்டனர். உச்ச சூரியனாலும் குளிர்ச்சியைக்

எங்கே புகை உண்டோ அங்கே நெருப்பு உண்டு.

கொள்ள முடியாத அந்தக் காலத்துக் கோபாலர்கள் எல்லாரும் கூட்டமாகப் பக்கத்திருந்த அழகிய வனத்திற்குத் தம் இஷ்டப்படி களிப்போடுஆடப்புறப்பட்டனர்.அவ்விடம் அடைந்ததும் சிறுவர்கள் கூடிப் பலவிதமான விளையாடல்கள் ஆடினர். மயிற்பீலிகளாலும், மலர்ச் செண்டுகளாலும் தம்மைப் பொலியும்படி செய்துகொண்டு அவர் பரதமாடுவர்; பாடுவர்; கரதாளம் போடுவர். சில ஸமயம் ஒருவரோடொருவர் மல்லயுத்தம் செய்வர்; சிலர் கொம்பூதுவர்; சிலர் குழலூதப் பலரும் ஆனந்தத்துடன் களிப்பர்; 'பலே! பலே!' எனக் கொண்டாடுவர். சிலர் நெல்லிப் பழங்களைக் கோலிகளாக ஆடுவர். சிலர் வில்வப் பழங்களைப் பந்தாகக்கொண்டு அடிப்பர்; சிலர் போட்டியுடன் ஓடுவர்; சிலர் கோடிட்டுத் தாண்டுவர்; சிலர் உயரக் குதிப்பர்; சிலர் இருசாராகப் பிரிந்து தமது வலியைப் பரீட்சிப்பர்; சிலர் கண்ணுமூச்சியாடுவர்; சிலர் கிளிக்குந்தம் ஆடி, தவளைகளைப் போலத் தத்தித் தத்தி நடப்பர்; ஒருவரை ஒருவர் ஏசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் குதிப்பர்; சிலர் இராஜா மந்திரி என வேஷங்கொண்டு அரசாங்க வியவஹாரங்களை விஸ்தரிப்பர்; சில சமயம் குடும்ப வியவஹாரங்களைக் கவனித்தவர் போல நடிப்பர்; பாலபருவப் பெருமையி லீடுபட்டு விளங்குவர். கவலையற்று அவர் ஆடியவிளையாடலுள் எங்கும்பொலிந்து அதனுள் தாமும் ஒருவராகக் கண்ணனும் விளங்கினர். ஆற்றிலும் மடுவிலும் அப்பிருந்தாவனத்து மலையிலும் விளையாடி அச்சிறுவருடன் அவரும் கலந்து பழைய நண்பர்போல் விளையாடிவந்தனர். அவ் விளையாட்டில் அவர்க்கென்ன விருப்பம்?

தனது குழந்தையின் விளையாடலைக் கண்ட தாய் ஏன் ஆனந்தமடைய வேண்டும்? தான் எழுதிய நூலைப் படித்துப்படித்துக் கவியேன் குதூஹலிக்கவேண்டும்? அதுவே கண்ணனுக்கும் பொருந்தும். எனினும் அவர் செயல் அவ்வளவோடிருக்கவில்லை. தன்னையே எல்லாவுலகுமாக நம்பி விளையாடிய அச்சிறுவர்களுக்குத் துன்பம் ஏற்படாது காக்கவென்றே அவர் அங்கு இருந்தனர். உள்குவாருள்ளத்துள் அவர் எண்ணியபடி விளங்குவது கடவுளின் பெருமையல்லவா? இவ்விளையாடல்களை அவரும் ஆடினர் என்பது நமக்கும் பெருமையல்லவா? அவர் ஆடிய ஆடலை ஆடும்போது அவரைப்பற்றிய எண்ணம் நமக்கு எப்பொழுதும் உதிக்கச்செய்து, நமது தேகத்தையும் மனத்தையும் விருத்தி செய்யுமன்றோ? அதற்காகவன்றே அவர் அவதாரமெடுத்தது? எனவே அவர் சிறுவருடன் விளங்கி, அவருடன் பழகி விளையாடி, அவரது நடை நொடி பாவனைகளை எல்லாவிதத்திலும் உயர்த்த விளங்கினரென்பது கடவுட் கேன் பொருந்தாது? இளமையில் வளைத்தால் அல்லது முதுமையில் எப்படி வளைக்க முடியும்? இதற்கு மாத்திரம் கண்ணன் அங்கு விளங்கவில்லை. அவர்க்கு அங்கு ஏற்படக்கூடிய கெடுதியையும் போக்கவுமே யங்கிருந்தனர்.

இவ்வாறு சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் ஸமயங்கண்டு கோபால உருவங்கொண்டு பிரலம்பனென்னும் அஸுரன் அவருடன் விளையாட வந்ததைக் கண்ணன் கவனித்தனர். எல்லாவித விளையாடல்களிலும் வல்ல அவர், தமது நேயர்களை நோக்கி "நாம் இருகட்சிகளாகப் பிரிந்து விளையாடுவோம். அப்போது எந்தக் கட்சி தோல்வியடைகிறதோ, அதிலிருப்போர் ஜயங்கொண்டவர்களை முதுகின்மேல் ஏற்றித் தவழ்ந்து நடக்க வேண்டும். அவ்வாடல் ஸுகமாகவிருக்கும்" எனத் தூண்டினர். அதற்குடன்பட்ட கோபாலர்கள் பலராமரையும் கிருஷ்ணரையும் இருகட்சியின் தலைவராக ஏற்படுத்திக்கொண்டு அப்படியே விளையாடினர். இவ்வாடலில் கண்ணன் தோல்வியடையவே, அவர் கட்சியிலிருந்த பிரலம்பன் பலராமரைத் தனது முதுகின் மேலேற்றித் தவழ வேண்டியதாயிற்று. அப்போது அவ்வஸுரனுக்குக் கண்ணனைக் காண வெறுப்பு உண்டாயிற்று. எனவே அவன் பலராமரை முதுகில் தூக்கிக்கொண்டு நெடுந்தூரம் போய்த் தனது மெய்யுருவைக் காட்டினான். முதலில் பலராமர் சற்றே மயங்கினரெனினும், அமைதி கொண்ட அவர் அவனைத் தலையில்மோதினார். இரத்தத்தைக் கக்கிக்கொண்டு அவன் மயங்கி உயிரற்றுக் கீழே விழுந்தான். அதைக்கண்ட கோபாலர்கள் "நன்று! நன்று!" என இராமரைக் கொண்டாடினர்.

தாம் செய்ய வேண்டிய காவல் தொழிலில்

எச்சில் இரக்கடிக்கும், பற்றுப் பறக்க அடிக்கும்.

கண்ணன் எப்போதாவது தவறியதுண்டோ? அதனாலன்றோ அவர் கோகுலத்துக் காப்புக் கடவுளானது? நிற்க. தாம் மேய்த்துவந்த பசுக்கள் புல்லடர்ந்த காட்டுள் மறைந்துவிடக் கண்ட கோபாலர், கவலை கொண்டனர். அதைக் கண்ட பரந்தாமன் தமது குரலால் அப்பசுக்களை அழைத்தனர். அந்த இனிய குரலைக் கேட்ட பசுக்கள், அடர்ந்த நாணற் புதரிலிருந்து பதில் கொடுத்துக் கனைத்தன. அதே ஸமயம் அப்பசுக்களைச் சுற்றிப்படர்ந்த காட்டுத்தீயைக் கண்ட கோபாலர் மருண்டு மயங்கிக் கலங்கினர்; பசுக்களும் நடுங்கி ஓலமிட்டன. கண்ணனைப் பார்த்துக் கோபாலர்கள் "நீ யல்லால் எமக்குக் கதி கிடையாது" எனக் கதறினர். அவரது துயரைக் கண்ட கண்ணன் "பயப்படவேண்டாம்; கண்ணை மூடிக் கொள்ளுங்கள். எல்லாம் ஸரியாய் விடும்" என்று சொல்ல, கோபாலர்கள் எல்லாம் அதற்கிணங்கிக் கண்ணை மூடித்திறந்ததும் அங்கிருந்த நெருப்பு எங்குப் போய்விட்டது? கண்ணனே யல்லவா நெருப்பை யுண்டு தேக்கி விளங்குபவர்?

காக்குந் தொழிலையே தமது தருமமாகக் கொண்ட கண்ணபிரான் அதை இடைவிடாது விளங்குவதைக் கண்ட கோபாலர் எவரும், அவரைத் தமது குல தெய்வமாகப் பாவித்தன ரென்பது ஆச்சரியமல்ல. விஷந் தப்பி வாழ்ந்ததும், மரம் வீழப் பிழைத்ததும், ஆகாயத்திலிருந்து வீழ்ந்தும் ஊறடையாதிருந்ததும், நெருப்பிற் குளித்து அதை உண்டதும் அவரது செயல்க ளல்லவா? அச்செயல்களை எம்மனிதன் செய்யக்கூடும்? அவற்றைச் செய்பவன் மனித உத்தம னென்றாலென்ன? அதற்கு மேல்பட்டவ னென்றாலென்ன? எனவே கோபாலர்கள் அவரைத் தாம் நேரிற் காணப்பெறும் பாக்கியத்தோடு கூடிய கடவுளாகவே பாவித்தனர்.

நிற்க. இதற்குள் கார்காலம் தோன்றிச் செய்த இயற்கை மாறுபாட்டங்களில் ஈடுபட்ட கோபிகள் தமது மனத்துள் கண்ணனையே மணக்கவேண்டுமென்ற பேராவல் கொண்டு விளங்கினர். பால பருவம் கடந்து, சற்றே உடல் திரண்டு, பும்ஸாமோஹனமாக விளங்கிய அவரது அழகிய திருமேனியிலுஞ் சிறந்த உத்தம குணங்களை நினைந்து நினைந்து அவரையே தமது உயிர்த்தலைவனாகக் கொள்ளக் கோபியரெவரும் கனவு கண்டுகொண் டிருந்தனர். அவர் கூட்டங்கூடி அவரைப்பற்றியே பேசுவர்; அவரை எவ்வாறு அடைய முடியும் எனவே எண்ணுவர்; "அகோ! அந்தக் குழல் அவர் கையிலிருக்க என்ன பாக்கியம் பெற்றதோ? பதுமம் போன்ற அதரங்களில் பதிந்து அவரதுநாதப்ரும்ஹத்தைக் கொள்ளை கொள்ளும் அதன் அதிருஷ்டம் நமக்கில்லாமற் போயிற்றன்றே! அது எவ்வாறு நமக்குக் கிடைக்கும்? எப்போது கிடைக்கும்?—' இந்த யோசனையே கோபியர்களது மனத்திற்பெருங் கவலையாக் கிடந்தது. எம்பெருமானைத் தமது மனக்கோயிலி லிருத்திய அவர், அவரை நேரில் பெற நோற்ற நோன்புக ளனந்தம்; செய்த பூசைகள் அளவற்றன; கொண்டாடிய விருதங்கள் கணக்கிலடங்கா. கண்ணன் தம்மேல் எப்போது கிருபைகொண்டு கடைக்கண் சாய்த்துக் காப்பாரென அவர் காத்திருந்தனர். இந்நிலைமையில் கண்ணனை அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் மார்கழி மாதத்தில் காத்யாயனி விருதமிருந்து வந்தனர். அவ்வாறு தேவியைப் பூஜித்து, நெய் பால் தயிர் வெண்ணெய் முதலிய பொருள்களால் திருப்திசெய்து, "அம்மணீ! காத்யாயனீ! இயற்கை இறைவி! மாயையின் தலைவி! எங்களது மனோரதம் ஈடேறும்படி செய்யும்! கல்யாணீ! எங்ஙனகம் ஸர்வமங்களங்களுக்கும் உறை விடமாக விருக்கும், அந்நந்த கோபாலரது குமாரர்க்கே உரிமை பெறும்படி செய்வாயாக! உலகிற்கெல்லாம் ஆதாரமாகியவளே! அவரே எமக்குத் தலைவராகும்படி அனுக்ரஹிப்பாய்; அதுவே எமதபீஷ்டம்" எனத்துதிப்பர்; வணங்கி வழிபடுவர். இவ்வாறு தமது மனத்தைக் கண்ணனுக்கே ஸமர்ப்பணஞ்செய்த கோபியர் நித்தமும் காலையில் வந்து யமுனையில் குளித்துத் தேவியைப் பூஜை செய்து தமது கோரிக்கையை ஈடேற்றும்படி இறைஞ்சுவர்.

நிற்க. கண்ணபிரான் அவதாரஞ் செய்தது, துஷ்டர்களை யடக்கிச் சிஷ்டர்களைக் காப்பதற்கு மாத்திரமன்று. மற்று விதிகடந்த செயல் எவற்றையுந் தடுத்து, சீர்கெட்ட வழிகளைச் சரிப்படுத்தவுமா மென்பதை இங்குக் குறித்தல் தவறாகாது. அவ்வாறு அவர் நடத்

தும் போது அவர் தமக்கு அவதூறு ஏற்படக்கூடும் என்று உணர்ந்தும், லோகத்திலிருந்த துர்வழக்கங்களைப் போக்க, அதைக் கணிசியாது உழைத்தது பெரிதும் பாராட்டத் தக்கது. அவ்வாறு உழைக்க அவரது மனமன்றி, மற்றவர்களது கூச்சம் அச்சம் என்னும் கோழை எல்லைக்குள்பட்ட எந்த மனமும் இடந்தராதென்பது திண்ணம். அக்காலம் நாகரிகமென்னு நிலைமை பெண்களைப் பேய்போல் பிடித்தாட்டிய தென்பது பொய்யாகாது. அப்பேய்வாய் விழுந்த அவர், அளவு கடந்த மனோபவங்களுக்கு உட்பட்டுத் தலை தெரியாமல் கூத்தாடி விளங்கினர். ஸாகானுபவம் என்னும் பெயருள்பட்ட எல்லா நிலைமைக்கும் ஆளாகி விளங்கிய அவர், தமது மனம் போனபடி யெல்லாம் மானமற்றும் விளங்கின ரென்பது தவறாகாது. உலகத்தில் காலா காலத்தில் ஏற்படக்கூடிய வழக்கங்கள் தவறாக விருந்தாலும், பலராலும் அனுஸரிக்கப் படுவதால் கவனிக்கப்படாது விளங்குதல் இயற்கைக்கு மாறாகாது. மேலும் அப்பழக்கங்களைக் கண்டிக்க யார் முன்வரமுடியும்? அவ்வாறு செய்ய முந்துபவரை உலகே பழிக்க முன்வந்துவிடு மல்லவா? அத்தகைய நிலைமையில் எவன் உழைக்க முன்வருவன்? அதற்குத் தக்க மனோபவம் எவனுக்கிருக்க முடியும்? அவனைத் தடுக்காது விளங்க அவனிடம் உலகெப்படிப் பக்திகொள்ள முடியும்? அத்தகைய நிலைமையில் உழைப்பதற்குக் கண்ணன் ஒருவரால்தான் முடியு மல்லவா? அவரிடம் யாவரும் கடவுளினும் அதிகமாக அன்பு கொண்டு விளங்கினரென்பது உலகே அறியும். ஆகவே அவர் தமது உன்னத பதவியிலிருந்து, லௌகீக வழியில் ஏற்பட்ட சில கோளாறுகளை ஒழிக்க முந்தியது எப்படித் தவறாகமுடியும்?

கோபியர்கள் நாள்தோறும் யமுனைக்கரையில் வந்து, தமது ஆடைகளை முழுதும் களைந்து வைத்து, நிர்வாணமாக ஸ்நாநம் செய்வது வழக்கம். அவ்வாறே அவர் நிதமும் செய்து காத்யாயனியைக் கொண்டாடிவந்தனர். அது அக்கால் ஸர்வஸஹஜமாக விருந்தபடியால், மனதில் களங்கமற்ற கோபியர்களிடம் விளங்கிய அத்துர்வழக்கத்தை மாற்ற கண்ணன் எண்ணங் கொண்டது, மற்ற யாவரது மனத்திலும் உதிக்காது என்பது திண்ணம். எனவே ஒருநாள் கோபியர்கள் கரையில் தமது ஆடைகளை வைத்திட்டு யமுனையில் கழுத்துவரை நீரில் ஆழ்ந்து கிடக்கும் போது, கண்ணபிரான், அந்த ஆடைகளை எல்லாம் கவர்ந்து, பக்கத்திருந்த புன்னைமரக் கிளைகளில் கட்டிவிட்டு, தமது நேயர் பரிகாஸம் செய்ய, அம்மரத்தின் மீது உட்கார்ந்துகொண்டு, கோபியர்களிடம் உண்மை நட்புக்கொண்ட அவர், அக்கோபிகள் உள்ளத்தில் படும்படி இவ்வாறு இடித்துக் கூறலானார்:—

"மடந்தையர்களே! இதோ இங்கு வாரும்; இவ்வஸ்திரங்களை எடுத்துக்கொள்ளும். நான்பரிஹாஸம் செய்வதற்காகச்சொல்லவில்லை. நீங்கள் மேற்கொண்டொழுகும் விரதத்தினால் மேனியிளைத்துத் திரணமாய் விளங்குவதெனக்குத் தெரியும் நான் பொய் சொல்லியறியேன்; சொல்லவுமாட்டேன். இதோ இருக்கும் கோபாலர்களே எனக்கு ஸாட்சி. உங்களிடம் குறும்புசெய்ய எனக்கு விருப்பமில்லை. ஆகையினால் இவ்வஸ்திரங்களை என்னிடமிருந்து நேரில் பெற்றுக்கொள்ளும். ஒவ்வொருவராகவாவது, எல்லாருமாகவாவது பெற்றுக்கொள்ளும்."

இம்மொழிகளைக் கேட்ட கோபிகள் தமது மனக்கோயிலிலிருக்கும் கண்ணன் செய்த குறும்பிடம் கோபங்கொள்ள வில்லையேனும், நாணத்தால் தலைகவிழ்ந்து, தமக்குள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவண்ணமாக மயங்கிக் கிடந்தனர்; அக்குளிரில் கழுத்துவரையும் நீரில் பதிந்து இரங்கிய முகத்துடன் கண்ணனைக் கடைக்கண்ணால் நோக்கியவண்ணமாகப் புன் சிரிப்புடன் தம்மேல் அனுக்ரஹிக்குமாறு அவரை வேண்டினர்; தம்மைப் பரீட்சை செய்யாத வண்ணம் கெஞ்சினர்; "எங்கள் செல்வமே! இம்மாதிரி நீங்கள் மானக்கேடான காரியம் செய்வதடாது! நந்தகோபாலன் மகனல்லவா தாங்கள்! எங்கள் 'உள்ளங்கவர் கள்வன்' தாங்களே என்பதை நாங்கள் சொன்னால் எமக்கென்னகுறை! நாங்கள் பெண்கள்! மானமென்னுங் கட்டுக்குள்பட்டவர். உமக்கே எம்முடலை அர்ப்பணஞ்செய்ய விரும்பினோமானாலும், இவ்வாறு தாங்கள் செய்வ தடாது. நாங்கள் குளிரால் வருந்துவது, ஹே கோவிந்

தா! உமக்குத் தெரியவில்லையா? எங்களைக் கஷ்டப்படுத்த உமக்கு இம்மியும் இஷ்டமிராதென்பது வெளிப்படை. யாம் உமது ஊழியர்கள்; நீங்கள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்வோம். எனினும் இப்போது எங்களைக் காப்பாற்றும்; எமது ஆடையைத் திருப்பிக் கொடுத்து எம்மைக் காப்பாற்றும். நீர் விடர் அல்லவே! வெகுநல்லவராச்சுதே! எங்களைக் காப்பதே விரதமாகக் கொண்டவரல்லவா? ஹே நீலமேகவண்ணா! எம் உள்ளத்துறை கண்ணா! கடல் வண்ணா! எங்கள் ஆடையைத் திருப்பும். இல்லாவிட்டால் அரசனிடம் சொல்லி உம்மைச் சிக்ஷிக்கும்படி செய்வோம்'' என்றுகூறித் தமது ஆடைகளை மீண்டும் அடைய மன்றாடினர்.

அவ்வாறு பெண்கள் கூடிக் கேட்டுக் கொள்ளக் கண்ணன் ஏன் சற்றும் மனமிளகாதிருந்தனர்? அவர்க்கென்ன அவ்வளவு கடின சித்தமா? பெண்ணென்றால் பேயுமிரங்குமே. அப்படியிருக்கக் கண்ணன் ஏன் அப்படி அம்மொழிகளைக் கேட்டு இரக்கங் கொள்ளாதிருக்க வேண்டும்? அவர் பேயினும் கொடியவரா? இல்லை. மற்று அவர்க்கு நிர்வாணமான ஸ்த்ரீகளைக்காணும் அவாவோ? அதுவுமில்லை என்றால் அவர் ஏன் அக்கோபிகள் கூற்றைக் காதில் வாங்காததுபோல இருக்க வேண்டும்? புலன்களின் வியாபாரங் கடந்த அவர்க்குக் காமமென்பது எப்படி இருக்கும்? காமத்தினால் அவர் கோபியர்களைக் காண விரும்பியிருந்தால், அவர் இவ்வளவு தூரம் செய்ய வேண்டியதேது? அவர் வாயில் ஒரு மொழி வருவதன் முன் அவரது கருத்துக்கிணங்கி நடக்கக் கோபியர்கள் ஸித்தமாயிருந்தனரல்லவா? நெருப்பிற் ஈரமெப்படியிருக்க முடியும்? ஆது அதன் தன்மைக்கே மாறல்லவா? கண்ணனிடம் காமமெப்படி இருக்க முடியும்? அது அன்பாகிய மரத்தை வளரவிடாது அழிக்கும் வேர்ப்புழுவன்றா? மற்று எந்த நோக்கத்தால் அவர் அவ்வாறு செய்ய எண்ணங்கொள்ள வேண்டும்? உலக வழக்கத்திற்குச் சற்றும் பொருந்தாதபடி அவர் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? பெண்மக்களிடம் அக்காலத்து நாகரிக மரபினால் ஏற்பட்ட பல ஆபாஸங்களை அகற்றவென்றே அல்லவா?

அதனாலே அவர் சற்றும் தமது நிலைமையிலிருந்து அடங்காது "நீங்கள் என்னிஷ்டப்படி நடக்கும் ஊழியர்கள் என்றீர்கள். அப்படியானால் நான் சொல்லும்படி இங்கு வந்து உமது ஆடையை எடுத்துக் கொள்ளுங்கள். நான் கொண்டு வந்து தரமாட்டேன். மன்னனிடம் சொன்னால், அவர் கோபங்கொண்டால், என்னை என்ன செய்ய முடியும்?'' என்று மேலும் கண்டிப்பாய்க் கூறினார். தன்னை நாடியவர்களை நாடுவதே வழக்கமாகக் கொண்டவர் மற்றெப்படிப் பேசமுடியும்? தன் மேல் கோபியர்கள் கொண்ட அன்பை ஏற்காது அவரெப்படி அவரிடம் அன்பு கொள்ள முடியும்?

குளிரைத் தாங்க முடியாத கோபிகள், தமது உயிர்க்கே தலைவராகிய அவர் முன் மானமென்னும் எல்லைக்குள்பட்டு விளங்குவது அடாது என ஒருவாறு உணர்ந்தனரேனும், நாணமென்னும் விலங்குள்பட்டவராய், நீரிலிருந்து வெளிவந்து தலைகுனிந்து மர்மபாகங்களைக் கைகளால் மூடி அவர் குளிரில் உடல் உதற நடுங்குவதைக்கண்ட பரந்தாமன் அவரிடம் பேரன்புகொண்டு "நீங்கள் எல்லோரும் பட்டினியிருந்தும் நோன்பிருந்தும் என்ன பயன்? நிர்வாணமாக இவ்வாற்றில் குளித்துப் பெரும்பாவம் ஸம்பாதித்து விட்டீர்கள். அதற்குப் பிராயச்சித்தமாகத் தலைமேல் கைகூப்பி வணங்கினால், உமது ஆடைகளை நானே தருவேன்'' என்று சொல்லி அவ்வாடைகளை எல்லாம் தன் தோள்மேலிருத்திச் சிரித்த முகத்துடன் கூறினர். அம்மொழிகளைக் கேட்ட கோபிகள், தாங்கள் நிர்வாணமாக ஸ்நானஞ் செய்தது தவறென அறிந்ததும், ஸர்வகர்மங்களும் அடையுமிடமாகிய கண்ணபிரானை வணங்கியதும், அவர் அவரது நிலைமையில் அனுதாபங் கொண்டு அவரதுஆடையைத்தந்து களிக்கச்செய்தனர். ஆடையை யணிந்ததும் கோபிகள் தம்மிடம் சிறிதும் அருவருப் பின்றி அன்போடு விளங்குவதைக் கண்ட கண்ணன், தம்மை அடைய நோற்றுவந்த அப்பெண்களைப் பார்த்து இனிய மொழியில் மேல்வருமாறு கூறினார்:

"மானமென்னுங் கட்டில் நின்று, கற்பின் காவலிலிருந்தவர்களே! என்னைச் சந்தோஷப்படுத்திக் கொண்டாட வேண்டுமென்பதே

உமது எண்ணம் என்பதை நான் நன்கு அறிவேன். உமது அன்பை யான் உகந்தேன்; அதை ஏற்றேன்; அதற்கிணங்க நடப்பேன். என்னிடம் மனதை நிறுத்திய எவரும் மீண்டும் பஞ்சபூத ஸம்பந்தமானதும், விஷய வாஸனைகளில் உழல்வதுமான ஸம்ஸாரச் சுழலுள் வீழார். அனலிற் பொரிந்த நெல் மீண்டு முளைவிடும் ஆற்றல் உடையதல்லவென்பதை யாவரும் அறிவர். அழகுடையீர்! உமது விருப்பம் ஈடேறிற்று. நீங்கள் இனி உமது ஊரை அடையும். யானும் உம்மை விடாதிருப்பேன். உம்மை யான் இன்றே வந்தடைவேன். அதற்கல்லவா நீங்கள் பட்டினியிருந்து கௌரிபூஜைசெய்ததெல்லாம்? உமது அபீஷ்டத்தை யான் பூர்த்திசெய்வேன். உண்மை அன்புடன் ஸமர்ப்பிக்கப்படும் மனத்தைக்காட்டிலும் சிறந்தபொருள் எனக்குப் பிடித்தது வேறு எது உண்டு?''

இம்மொழிகளைக் கேட்ட கோபிகளும் தமது ஊரைநாடி நடந்தனர். கண்ணனும் தமது ஆயக் கூட்டத்துடன் அகன்றனர்.

தன்னைப்பற்றிப் பிறர் செய்யும் பரிகாஸத்தையும் கவனியாது, கண்ணன் செய்தவண்ணம் யார்செய்யமுடியும்? மாயவழியில்பட்ட பெண்களை ஸரியானவழியில் நிறுத்த அவர் செய்த இந்தப் பெருஞ்செயலைத் தவறாக எண்ணுபவர், ஸந்தேஹக்குடியில் விளங்கி, பிராந்தி என்னும் மயக்க ஒளியில் வாழ்பவரே ஆவர். அவரால் கண்ணனது நிஜஸ்வரூபத்தை உணரமுடியாது. அபக்குவமாகிய மனம் விசாரிப்பது எப்படி முடியும்? குறுகிய நோக்கினர் எவ்வாறு தூரத்ருஷ்டி கொள்ளமுடியும்? பெண்களது களங்க நிலைமையை உயர்த்தத் தமதுபெயர் சற்றே தவறாக எண்ணப்படும் என்னும் சிறுமையையும் கவனியாது, அவர் அக்காலத்து மான வரம்புகடந்து விளங்கிய பெண்களுக்கு ஊட்டிய படிப்பினையினாலல்லவா, இந்திய ஸ்த்ரீகளின் மனோபவம் உலகிலேயே சிறந்து விளங்குவது! என்றும் சிறந்து விளங்கப்போவது! பெண்களது கற்பை வளர்க்க நன்னெறி என்னும் உரமிட்ட அவரது செயலை எப்படித் தவறாய் எண்ணமுடியும்? அவ்வாறு எண்ணுபவர் பெண்மக்களை பெற்றிராரென்றே சொல்லலாம் அல்லவா?

கன்-ப்-யூஷஸ்

CONFUCIUS

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.'' [குறள்

பிறப்பும், வளர்ப்பும்:—கி. மு. 551-ம் வருடத்தில், சியோ-இ என்னுமொரு சிறு பட்டணத்தில், யாநன் என்ற குடும்பத்தில், தகப்பனாரது முதிய வயதில், நமது கன்ப்-யூஷஸ் ஜனித்தார். இவர் தேசத்தினரால் கங்-பூ-ட்சி எனவும், ஐரோப்பியர்களால் கன்-ப்-யூஷஸ் எனவும் வழங்கப்பட்டு வருகின்றார். இவர் சைனா தேசத்தின் ஆதிகாலமுதல் கீர்த்தி பெற்ற ஒரு பெருங் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய பிதாவின் பெயர் ஷு-லிங்-ஹை. இவர் பிரசித்திபெற்ற யுத்தவீரர். புஜபலம், மனோதிடம், தைரியம், அன்பு, இரக்கம் முதலியவைகளை உடையவராதலால் நன்கு மதிக்கப்பட்டு, இக்காரணங்களையிட்டே சௌ-வி என்ற நகரத்தின் பிரதான நியாயாதிபதியாக அத்தேசத்தரசனால் நியமிக்கப்பட்டார். இவருடைய மனைவி ஒன்பது பெண் குழந்தைகளை வைத்துக் காலகதி யடைந்தனள். மைந்தனில்லாது குடும்பம் பின் நீடித்து நின்று விளங்காதென்ற எண்ணத்தினால் கவலையுற்றுப் புத்திரப்பேறு பெறும்பொருட்டு மீண்டும் மணம் புரிந்துகொள்ள விரும்பி, யென் என்ற குடும்பத்தின் தலைவரிடஞ் சென்று தன் கருத்தை வெளியிட்டார். இக்குடும்பத்தினர்க்கு விவாகமாகக் கூடிய பெண்கள் மூவரிருந்தனர். ஆதலால், இத்தலைவர் தன் பெண்களை யணுகி, ஷு-லிங்-ஹையின் நற்குண நன்னடத்தைகளையும், இவருடைய குடும்பத்தின் மேன்மையையும் விரித்துக் கூறி அம்மங்கையர்களி லொருவர் ஷு-லிங்-ஹையை அவசியம் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென வற்புறுத்திக் கூறியபொழுது, மூத்தவர்களிருவரும் சம்மதிக்கவில்லை. ஆனால், யென்-சிங்ஸாய் என்ற இளைய புத்

திரி நமது ஆசிரியரின் தகப்பனாரை மணம் புரிந்துகொள்ள உடன்பட்டாள். விவாகம் முடிந்தபின், யென்-சிங்ஸாய் தன் புருஷனுடன் இல்லறம் நடாத்திக்கொண்டிருக்கையில், இவர்களுடைய நாட்டிற்குச் சமீபத்திலுள்ள லீ என்ற மலையிலுள்ள கிராம தேவதையைத் தரிசித்து, ஞானமும், சௌந்தரியமும் பொருந்திய புத்திரன் ஒருவனைப் பெறும்பொருட்டுப் பிரார்த்தித்து வரும்படி தன் நாயகனால் சொல்லப்பட்டதின் பேரில், அம்மாது சிரோமணி முற்கூறிய மலைக்குச் சென்று, தேவதையைத் தரிசித்துத் தன் மனோபீஷ்டத்தை வெளியிட்டு வேண்டித் திரும்பினாள். சின்னாட் சென்றபின் கர்ப்பந் தரித்தனள். ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைதான் நமது கன்-ப்-யூஷஸ்.

குழந்தையின் மூன்றாவது வயதில், ஷு-லிங்-ஹை மரணமடைந்ததால், பிள்ளையைக் கவனிக்க வேண்டிய கடமை விதவையைச் சார்ந்தது. கன்-ப்-யூஷஸின் அன்னையாகிய யென்-சிங்ஸாய் மனோதிடமுடையவள்; கற்பு நிலைதவறாதவள்; பயம், பக்தி, விவேகம், பொறுமை முதலானவைகளையே அணிகலமாகக் கொண்டவள். ஆகையால், முரட்டு விளையாட்டுக்களிலும், சண்டை சச்சரவுகளிலும் பிரவேசியாதபடி தன் மைந்தனைப் பாதுகாத்து வந்தாள். இளம் பிராயமுதற்கொண்டே பெரியோர் முன் வணக்கவொழுக்கத்துடன் நமது கன்-ப்-யூஷஸ் பழகி வந்தனராம். சீனர்களால் மிகவும் அதிகமாகக் கொண்டாடப்பட்ட சடங்குகளையும், நியமங்களையும் அனுசரித்து விளையாடுவதில் அதிகப் பிரியமுடையவராம்.

தக்க பருவத்தில், கல்வி கற்பதற்காக, அவ்வூர் நியாயாதிபதியான பிங்-சங் என்பவனால் வைக்கப்பட்ட பள்ளிக்குப் போகத் தொடங்கினார். ஊகமும், ஊக்கமுமுடையவராதலால் பாடங்களைச் செம்மையாகச் சீக்கிரத்தில் கற்று வந்து தன் ஆசிரியரால் அதிக அன்புடன் ஆதரிக்கப்பட்டும், அடக்கமும், ஒழுக்கமும் வாய்ந்தவராதலால் தன் சிநேகிதர்களால் அதிகமாகச் சிலாகிக்கப்பட்டுமிருந்தார்.

இஃதிவ்வாறாக, லூ நாட்டிறைவன் உயிர் துறந்தான். பிங்-சங் என்பவன் ராஜாங்க உத்தியோகஸ்தனாதலால், காலங்கடந்த அரசனுக்குரிய அந்தியக் கிரியைகளில் தானும் சேர்வதற்காகப் போயினன். இவர் திரும்பி வருவதற்கு அதிக நாளாயிற்று. குரு சென்று விட்டாலும், வீணாகக் காலத்தைக் கழிக்காது சுயபுத்தியினுதவியினால் பிங்-சங் கற்பிக்கக்கூடியவைகளையெல்லாம் கன்-ப்-யூஷஸ்தானே கற்று முடித்தார். பின் வேறு பள்ளிக்கூடத்திற்குச் சென்று படித்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. பதினைந்தாவது பிராயமுதல் கல்விகற்று ஞானத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற விருப்பம் ஒன்றே இவரிடங் குடிகொண்டதாம்.

ஷு-லிங்-ஹை மரித்து விட்டபடியால், தாயும் பிள்ளையும் ஜீவனம் செய்வதற்கு வேண்டிய பொருளில்லாது அதிக கஷ்டமடைந்தனராம். யாவரையும் சதாகாலமும் வருத்தும் பசியைத் தீர்ப்பதற்காக வேட்டையாடியும், மீன் பிடித்தும், பிள்ளையும் தாயும் ஜீவனம் நடாத்தி வந்தனர். இவ்வெளிய தசையினின்று மேலெழும்பும் பொருட்டுச் சொந்த நாட்டிலேயே வேலை யொன்றுக்குப் பிரயத்தனஞ் செய்யும்படி மாதாவினால் தான் கேட்டுக்கொள்ளப் பட்டபடியால், கன்-ப்-யூஷஸ் தக்க முயற்சி செய்ததின் பேரில், அந்நாட்டின் பிரதான தீர்வைக்காரராக நியமிக்கப்பட்டார்.

பிரஜைகள் களித்துச் சுகித்திருத்தலே பிரதானமெனக் கொண்டவராதலால், தினந்தோறும் வைகறையாமத்தி லெழுந்து மிகக் கவனத்துடன் தன் உத்தியோகத்திற்குரிய காரியங்களை ஆராய்ந்தறிந்து செய்துவந்ததால், சகலரும் இனித்திருந்தனராம்.

வேலையிலமர்ந்திருந்த போதிலும், ஒழிவு நேரங்களில் பற்பல சரிதங்களையும், இதர இலக்கியங்களையும் படித்து வந்தார்.

இவ்வேலையினின்று தக்க சம்பளம் கிடைத்து வந்தபடியால், பத்தொன்பதாவது வயதில், கீ-க்வான்-ட்சீ என்ற பெண்மணியை மணந்தார். வருடக் கடைசியில் ஓர் ஆண் மகவு பிறந்தது.

இவருடைய இருபத்தோராவது வயதில், சொந்த நாட்டிலேயே வேறொரு உயர்ந்த உத்தியோகங் கிடைத்தது. சின்னாட் சென்றபின், லூ நாட்டதிபதி நமது கன்-ப்-யூஷஸின் நுட்ப புத்தியைக் கண்டு மகிழ்ந்து தன்

தேசத்தின் தான்யக் களஞ்சியங்களுக்கு அதிபதியாக நியமித்தான். சிற்சில வருடங்களில் கிடைக்கப்பட்ட அதிக தான்யங்களை அக்களஞ்சியங்களில் சேமித்து வைத்துப் பஞ்சகாலங்களில் அவைகளைச் சரச விலைக்கு எளியவர்களுக்கும், இதரர்களுக்கும் விற்பது வழக்கம். இவ்வேலையையும் அதிக ஊக்கத்துடனும், சிரத்தையுடனும், சாமர்த்தியத்துடனும் செய்துவந்தார்.

இவருடைய இருபத்து நான்காவது வயதில், யென்-சிஸ்ஸாய் விண்ணுலகமடைந்தனள். இவருடைய முன்னோர்கள் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்திலேயே இவளையும் அடக்கஞ் செய்து, வழக்கப்படி மூன்று வருடகாலம் துக்கங் காத்தபின், துக்க உடுப்புக்களைக் கழற்றித் தன் தாயாரின் கல்லறையின்மேல் வைத்துத் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பினார்.

போதகர் அல்லது ஆசிரியர் வேலையை இருபத்தேழாவது வயதில் மேற்கொண்டார். இச்சமயத்திற்றான் தன் மனைவியிடமிருந்து பிரிந்தார். கீ-க்வான்-ட்சீ என்பவள் சுகுணஸ்திரீயாயிருந்தபோதிலும், இப்பிரிவிற்குக் காரணம் புலப்படவில்லை. இல்லற விஷயங்களில் பிரியமில்லாததனா லிருக்கலாம்.

கணித சாஸ்திரங் கற்றார். தனுசாஸ்திரத்திலும், சாரத்தியத்திலும், போர்க்குரிய ஆயுதங்களை உபயோகிப்பதிலும் மிகத் தேர்ந்தவரானார். சங்கீதத்தில் அதிகப் பிரியமுள்ளவர். தன் தேசச் சரித்திரங்களையும், காவியங்களையும் படித்துக் கலைஞரானார். காலஞ் செல்லச் செல்ல, ஆழ்ந்த கல்விப் பெருக்கினாலும், மதியூகத்தினாலும், பரந்த பயிற்சியினாலும் சந்தேகங்களுங் கவலைகளும் நீங்கிப் போதநிலையை யடைந்தார். தன் சித்தாந்தங்களையும், கருத்துக்களையும் பிரசங்கஞ்செய்து வந்தமையால், இவருடைய பெயர் எங்கும் பரவி, அநேகர் இவரிடங் கல்விகற்கக் கூட்டங் கூட்டமாக வரஆரம்பித்தனர். இங்ஙனம் வந்த சிஷ்யர்களை நமது கன்-ப்-யூஷஸ் மிக்க அன்புடன் ஆதரித்து வந்தார்.

இவர் காலத்திலிருந்த அரசர்களும், ஜனங்களும் அறநெறிகளை வழுவி நடந்து வந்தமையால், அவர்களை நல்வழிப்படுத்தும் பொருட்டு ஏந்நாட்டிலாவது நல்ல உத்தியோகம் ஒன்றைப் பெறப் பிரயத்தனஞ் செய்தார். தன் சொந்த நாட்டிறைவன் துர்பல புத்தியுடையனாதலால், கீழ் உத்தியோகஸ்தர்களின் சொற்களைக் கேட்டு இவரை மதியாதிருந்ததாலும், நமது கன்-ப்-யூஷஸும் அவனுடைய குணம், நடத்தைகளை அறிந்தவராதலால், வேலை கிடைப்பினும் அது நிலைத்திருக்காதெனவும் தம் எண்ணங்களை அவன் கீழிருந்து நிறைவேற்ற முடியாதெனவும் எண்ணிச் சொந்த நாட்டில் எவ்வேலைக்கும் யத்தனிக்கவில்லை. ஆகிலும், ட்சீ என்ற பக்க நாட்டின் அதிபதி இவரைப்பற்றிக் கேள்வியுற்றிருந்தமையால், இவருடைய விவேகத்தையும், கல்வி வளப்பத்தையும் பரீக்ஷித்து அறியும் பொருட்டுத் தன் நாட்டில் அடிக்கடி கலகமெழுப்பும் கப்பக்காரர்களை அடக்குவதற்குரிய உபாயங்களைத் தெரிந்து வரும்படி தன் அமைச்சர்களி லொருவரை இவரிடம் அனுப்பினான். அவன் கன்-ப்-யூஷஸை நெருங்கிக் கேட்டபொழுது, அவனுக்கு நேரான உத்திரவளிக்காது, "அந்நாட்டின் புராதன சரிதங்களைச் செம்மையாகப் படித்தால் வேண்டிய உபாயங்கள் இயல்பாகவே நன்கு தோன்றும்" எனக்கூறி யனுப்பினார். அவன் தன் யஜமானனிடஞ்சென்று அங்ஙனம் உரைக்கவே, அவ்விறைவன் எவ்விதத்திலாவது கன்-ப்-யூஷஸைத் தன் நாட்டிற்கு வரவழைத்துத் தன் மனோபீஷ்டங்களைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டுமெனக் கருதி, இவரை அழைத்து வரும்படி தக்க பரிசுகளுடன் சில தூதர்களை இவரிடம் அனுப்பினான். அத்தூதர்கள் இவரை யணுகி ட்சீ நாட்டிற்கு வரும்படி வேண்டியபொழுது, இவரும் அவ் வேண்டுகோளுக் கிணங்கித் தம் சிஷ்யர்களுடன் புறப்பட்டுப் போகும் பொழுது, வழியில் ஓர் புதரினின்று மானிடக்குரல் கிளம்புவதைச் செவியுற்றதனால் கன்-ப்-யூஷஸ் தான் ஏறிச் செல்லும் இரதத்திலிருந்து இறங்கி அப்புதர்க்குச் சென்று பார்க்கையில், தற்கொலை செய்து மரிக்க யத்தனிக்கும் துர்ப்பாக்கியன் ஒருவனைக் கண்ணுற்றார். அவனை நெருங்கி, அக்கொடிய செயலுக்கு முகாந்தரம் யாதென வினவிய பொழுது, அப்பேதை "நான் சிறு வயதில், கல்வி கற்கவேண்டி என் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து வெகுநாள் வரையிலும்

நாடு நாடாய்த் திரிந்துகொண் டிருந்தேன். கற்றபின், தக்க உத்தியோகத்திற்காகப் பிரயத்தனஞ் செய்தபொழுது, ஒரு வேலையுங் கிடைக்காததனால் வருத்தமுற்று என் தாயகத்திற்குச் சென்றேன். சென்றபொழுது, என் பெற்றோர்கள் பன்னெடுநாள் முன் இறந்துவிட்டதாகக் கேள்வியுற்றேன். இறந்தோர்க்குரிய கிரியைகளைச் செய்யாததனால் உண்டாகும் வியாகூலத்தினாற் கவரப்பட்டபடியாலும், எனது ஓரே புத்திரன் என்னை நிராகரித்து விட்டபடியாலும், இனி காலதாமஸமின்றி உயிரை விட்டுவிடுதலே தகுதியென நிச்சயித்து இக்காரியஞ் செய்யலானேன்" என விடை யளித்தனன். இவ்வாறு தளர்ந்து புலம்பிக்கொண்டும், அடிக்கடி மூர்ச்சித்துக் கொண்டு மிருந்த அம்மனிதனுக்குப் புத்திமானாகிய கன்-ப்-யூஷஸ் சிறந்த பொருளடங்கிய அடியில் வரும் மொழிகளைச் சொன்னார்:— "ஆயுளுள்ள வரையிலும், எக்காரியமுஞ் சித்தியாகும். ஊகத்தினாலும், ஊக்கத்தினாலும் தரித்திர தசையினின்று உன்னதநிலையை யடைதல் சாத்தியமாகும். இளம் பிராயத்தில் சிற்சில பிழைகளிழைத்திருந்தாலும் இயற்கை அறிவினாலும், கல்வியினாலும், ஊக்கத்தினாலும் தக்க நற்காரியங்களைச் செய்து, முன் செய்த தீயவைகளின் பலனை ஒழித்துவிடலாம். ஆகையால், நீ இத்தருணமே யெழுந்து உன் வீட்டிற்குப் போய் மரித்தோர்க்குரிய சடங்குகளை முன் செய்வாய். பின், உன்னாலியன்ற வரையிலும் உன் சுற்றத்தார்க்கும், இனத்தார்க்கும் நன்மை செய்வாயாக.'' இம்மொழிகளைக் கேட்டு அவன் எழுந்து சென்றனனாம்.

பின் ட்சீ நாட்டிற்குப் போனபொழுது, அவ்வதிபதியால் மிக்க மரியாதையுடனும், அன்புடனும், ஆதிரிக்கப்பட்டு வந்தார். ஒருநாள் ட்சீயரசன் கன்-ப்-யூஷஸைத் தன் அரண்மனைக்கு வரவழைத்து, யாவராலும் புகழப்பட்ட இவருடைய விவேகத்தை அறியும்பொருட்டுச் "சிறந்த அரசின் குணாதிசயங்கள் யாவை?" என வினவினான். "மனிதரின் இயற்கைச் சம்பந்தத்தையும், ஒற்றுமையையும் பாதுகாத்தும், வளரச் செய்தும், ஸ்தாபித்தும் வரும் அரசே சிறந்த அரசு. அரசனின் மாட்சிமை தங்கிய குணம் நடத்தைகளுடன், பிரஜைகளின் ராஜபக்தியும், பெற்றோர்களின் ஒழுக்கமும், பிள்ளைகளின் வணக்கமும், உத்தியோகத்தினரின் அன்பும், விசுவாசமும், நேர்மையும், வாய்மையுங் கூடிப் பொருந்தியிருக்கும் அரசே நல்லரசு" எனப் பதிலுரைத்தார். கல்பனா சக்தியும், நியாயமும் பொருந்திய இவ்விடையை அம்வரசன் மிகவும் புகழ்ந்து தன் நாட்டிலேயே இவருக்கு ஓர் உத்தியோகம் அளிக்க எண்ணினான். ஆனால், இதர வேலைக்காரர்கள் பொறாமையினால் எவ்வித வேலையும் இவருக்குக் கொடுக்கக் கூடாதென ஆக்ஷேபித்தார்கள். ஆகிலும், அவ்விறைவன் அவ்வார்த்தைகளைக் கவனிக்காது, ஒரு மிகச் சிறிய பட்டணத்தின் அதிபதியாக நியமிக்கவெண்ணி, இக்கருத்தைக் கன்-ப்-யூஷஸரிடம் வெளியிட்டான். ஆனால், கன்-ப்-யூஷஸ் அச்சாமான்ய வேலையை யங்கீகரிப்பது மிகத் தாழ்வென எண்ணி, அங்ஙனங் கூறாமல், தான் இதுகாறும் அத்தகைய ஊழியம் பெறும் பொருட்டுப் பெருங்காரிய மொன்றும் அவ்வரசனுக்குச் செய்திராததனால் அவ்வேண்டுகோளுக்கு இணங்குவது நியாய மல்லவெனக் கூறி மறுத்துவிட்டார்.

பின் இவ்விடத்தி லிராயல் லீயை என்ற ஒரு பெரிய நாட்டிற்குச் சென்றார். இங்கு சர்க்கார் உத்தியோகஸ்தனும், கவிஞனுமான சாங்-ஹங் என்பவன் வீட்டில் தங்கினார். இவ்விடத்திலுள்ள அரசனும், இதரர்களும் இவரைக் கவனிக்காவிடினும், சாங்-ஹங் என்பவன் மாத்திரம் இவரை அன்புடனும், மரியாதையுடனும் பராமரித்து வந்தான். தன் அதிதியின் உயர்ந்த ஞானத்தைப்பற்றியும், சிறந்த குணங்களைப் பற்றியும், இனிய ஒழுக்கங்களைப் பற்றியும் சதாகாலமும் பிறரிடம் கூறி மகிழ்வுறுவான். ஒரு சமயத்தில், வேறொரு சீமானுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், கன்-ப்-யூஷஸைப்பற்றிப் பின்வருமாறு கூறினனாம்:—'தோற்றப் பொலிவிலும், விவேகத்திலும் இவர்க்கு இணையாக நிற்கக் கூடியவர் இக்காலத்தி லொருவருமில்லை. ஆஜானுபாகுவாய், அகன்ற மார்பும், உருண்ட தோள்களும், திடகாத்திரமுமுடையவர்; நெடியர். ஞான வளப்பத்தினால் பிரகாசிக்கும் நேத்திரங்களை யுடையவர். வார்த்தை யாடுகையில், புராதன ஞானிகளின் சிறப்பையும், கொள்கைகளையும் அடிக்கடி நினைவூட்டுகிறவர்; நல்லெண்ணங்களையே யெழுப்பக் கூடியவைகளைப்பற்றிப் பேசுகின்றவர்; அடக்கமும், நல்லொழுக்கமும் பொருந்தியவர்; கர்வமில்லாதவர்; பின் வருவோர்க்கு ஓர் மேல்வரிச் சட்டமாக நின்று விளங்கக் கூடியவர்; பல வாண்டுகளுக்குப் பின்னும் யாவராலும் இவர் புகழப்படுவார்.'' இதைக் கன்-ப்-யூஷஸ் கேட்டபொழுது, "இப்புகழ்ச்சிக்குச் சிறிதேனும் உரித்தானவன் யானல்ல. 'கொஞ்சம் சங்கீதந் தெரிந்தவனும், ஞானத்தை வளர்க்கவேண்டுமென்ற விருப்பமுடையவனும் தூய நியமங்களையறிந்து முறைப்படியே அவைகளைச்செய்யவேண்டுமென்ற அவாவுடையவனும்' என உரைத்திருப்பனாகில், சிறிது உண்மையாயிருந்திருக்கும்" எனப் பகர்ந்தனராம். சின்னாட் சென்றபின், இவ்விடத்திலு மொன்றுங் கைகூடி வராததனால், பிரசித்திபெற்ற லா-ஓட்சி என்ற தத்வ ஞானியைத் தரிசித்து வார்த்தையாடி வேறிடஞ் சென்றனர்.

(தொடரும்.)

எட்டி எட்டிப் பார்த்துக் குட்டிச் சுவரிலே முட்டிக்கொள்ளலாமா?

வனங்களின் உபயோகம்

THE UTILITY OF FORESTS

பூர்வத்தில் இத்தேசத்திலுள்ள மலைகளில் வனங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தனவென்பது யாவர்க்கும் தெரிந்ததே. ஆரியர் வடக்கேயிருந்து வந்து, இங்குக் குடியேறுமுன் மலையரசரும், குறும்பர், படகர் முதலான காட்டு மனிதர்களுந்தான் இவ்வனங்களில் வசித்து வந்தனர். தற்காலத்திலும் அவர்கள் அங்கங்கே மலைகளில் சஞ்சரிப்பதைக் காணலாம். அவர்களால் வனங்களுக்கும், அவைகளிலுள்ள மரங்களுக்கும் யாதொரு சேதமுமுண்டானதில்லை. அவர்கள் உண்பது கந்த மூல பதார்த்தங்கள்தான். கிழங்குகள் அன்றி, மூங்கில் அரிசியும் தேனும் அவர்களுக்கு வளமான ஆகாரம். இவைகளைத் தவிர மரங்களை வெட்டி நிலத்தைப் பண்படுத்தித் தானியங்களைப் பயிரிட்டு அவர்கள் ஜீவிப்பதில்லை. ஆகையால் மரங்கள் இருந்தபடியே இருந்து செழிப்பாய் வளர்ந்து வந்தன. ஆரிர்யகள் வந்த பின்னர் வீடுகள் கட்டுவதற்காகவும், மற்ற வேலைகளுக்காகவும் சோலைகளை வெட்டி யழித்து விட்டார்கள். சாகுபடி விஸ்தீரணத்தை அதிகப்படுத்துவதற்காக வனங்களில் தீயிட்டு எரித்துத் தானியங்களைப் பயிர்செய்து வந்தார்கள். இதனாலும் காடுகள் அழிந்துபோயின. ஜனத்தொகை அதிகமாகவே மலைப் பிரதேசங்களில் மட்டுமல்லாமல் சாதாரண சமபூமிகளில் உண்டாயிருக்கும் காடுகளையும் வெட்டியழித்துச் சாகுபடிக்குக் கொண்டு வந்தார்கள். மலைகளிலுள்ள மரங்களைக் கணக்கில்லாமல் வெட்டி, வனம் என்பதே யில்லாமல் செய்துவிட்டார்கள். ஆடுமாடுகளை மலைகளில் மேயவிட்டு நூதனமாய் உண்டாகும் மரக்கன்றுகளின் இளந்தளிர்களையும் மேயச்செய்ததால் முதலில் வெட்டிய காட்டில் மறுபடி மரங்கள் உண்டாவது மட்டுப்பட்டது. இப்படி மனிதர் வனங்களை நாசப்படுத்தியது ஒரு வழியில் அல்ல. இவ்வனங்களின் அருமை பெருமை அவர்களுக்கு முன்னமே தெரிந்திருந்தால் அப்படிச் செய்திருக்கமாட்டார்கள்.

வனங்களினால் உண்டாகும் நன்மைகள் அநேகம். இராஜாங்கத்தாருக்கு அது ஒரு விலைமதிப்பில்லாச் சொத்து. வருஷா வருஷம் அதிலிருந்து அவர்களுக்குத் தக்க வரும்படியுண்டாவதுடன் ஒரு இலாகாவிலுள்ள அநேக வேலையாட்களுக்கு அது ஜீவனம் கொடுக்கிறது.

வனங்களிலுள்ள விளைபொருள்களைக் கவனித்தல் முக்கியமானது. அங்கிருந்து வெட்டும் காட்டு மரங்கள் வீடுகள் கட்டவும், கப்பல்கள் செய்யவும், இயந்திரங்கள் உண்டாக்கவும், கைத்தொழில்கள் தட்டு முட்டுச் சாமான்கள் முதலிய பல வேலைகளுக்கும் உபயோகப்படுகின்றன. விறகுக்கும் காட்டுக் கட்டைகள் உபயோகமாகின்றன. காகிதம் செய்யும் கைத்தொழிலில் செலவாகும் மரத்தின் அளவை கவனித்தால் ஆச்சரிய முண்டாகிறது. இவைகளைத் தவிர, தோல் பதனிடுவதற்கும், சாயம் ஏற்றுவதற்கும், கற்பூரத் தைலம்,

எட்டு வருஷத்து எருமைக் கடா ஏரிக்குப்போக வழி தேடுகின்றது.

கோந்து, பழங்கள், கொட்டைகள், நார்கள், புல்வகைகள், தேன், மெழுகு இவை முதலான பல விளைபொருட்களும் வனங்களிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன.

சீதோஷ்ணம்.—பூர்வகாலந் தொடங்கியே, வனங்களினால் ஒரு தேசத்தின் சீதோஷ்ணமும், மழையளவும், தேச சௌக்கியமும் ஒழுங்குபடுத்தப்படுகிற தென்று அநேகரின் அபிப்பிராயம். வனங்களில் விருக்ஷங்களின் நிழலிலும், வெளியான இடத்திலும், சீதோஷ்ணம் அளக்கும் கருவிகளை ஸ்தாபித்துக் கவனித்து வந்ததில், வனங்களினால் உஷ்ணமானது மிகவும் தணிவாகிற தென்றும், வெய்யில் காலத்தில் இந்தச் சீதோஷ்ண பேதமானது மிகவும் அதிகமாயிருக்கிற தென்றும், மாரிகாலத்தில் அவ்வளவு அதிக வித்தியாசம் காணப்படவில்லை யென்றும், இராக்காலங்களில் வனங்களில் வெளியான இடங்களை விட உஷ்ணம் அதிகமாயிருப்பதாகவும், பகற்காலங்களில் வனங்களில் உஷ்ணம் குறைவாயிருப்பதாகவும் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

நிலத்தின் சீதோஷ்ணம்.—இது ஆகாயத்தின் சீதோஷ்ண ஸ்திதியை அனுசரித்தே யிருப்பது சகஜம். கோடை காலத்தில், வெளியான இடங்களில் நிலத்துக்குள் ஒன்று முதல் நான்கு அடி ஆழம் வரையிலும் இருக்கும் சீதோஷ்ண ஸ்திதியையும், வனங்களில் அதே ஆழத்திலிருக்கும் சீதோஷ்ண ஸ்திதியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், வனங்களில் நிலம் மிகவும் குளிர்ந்தே யிருப்பதாகத் தெரிகிறது. மழைகாலத்தில் வித்தியாசம் அவ்வளவு அதிகமாய்த் தெரிகிறதில்லை. அடிக்கடி மரம் வெட்டப்படுகிற காடுகளைப் பார்க்கிலும், எப்போதும் வெட்டப்படாத வனங்களில் குளிர்ச்சி அதிகமாயிருக்கும். ஆகையால் வனங்கள் அடர்ந்திருக்கும் பிரதேசங்களில் சீதோஷ்ணமானது நிதானமா யிருக்குமென்பது வெளியாகிறது. உஷ்ணப் பிரதேசங்களில் வனங்களை யுண்டாக்குவதால் உஷ்ணம் மிகவும் சாந்தமடையும். வெளியாயிருக்கும் பிரதேசங்களில் சாகுபடியாகும் பயிர்களைவிட மலைப் பிரதேசங்களில் விளையும் பயிர்களுக்குத் தண்ணீர்த்தட்டு அடிக்கடி உண்டாகாது.

ஆகாயத்திலுள்ள ஈரம்.—சாஸ்திரரீதியாய்ப் பார்க்கும்போது, ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்டுள்ள அளவு நீராவிதான் கலந்திருக்கக்கூடும். இந்நீராவியின் அளவானது ஆகாயத்தின் சீதோஷ்ணத்துக்குத் தக்கதாக அதிகப்பட்டும் குறைவடைந்தும் இருக்கும். குறிப்பிட்ட அளவுக்கு அதிகமான நீராவியானது ஆகாயத்தில் கலந்தால், அது உடனே நீர்த் துளிகளாக மாறிவிடும். நிலத்தில் தங்கியிருக்கும் ஏராளமான தண்ணீரின் அளவானது ஆகாயத்தின் ஈரப் பதத்தை அனுசரித்தே யிருக்கிறது. நாம் முற்சொன்னபடி, ஆகாயத்தின் சீதோஷ்ணத்தை மரமடர்ந்த வனங்கள் ஒழுங்கு படுத்துகின்றன. வனங்களால் ஆகாயத்தின் உஷ்ணமானது மிகவும் குறைக்கப் படுகின்றது. வெளியாயிருக்கும் பிரதேசங்களைப்பார்க்கிலும் வனங்களடர்ந்த பிரதேசங்களில் ஆகாயத்தில் ஈரப்பதம் அதிகமாயிருக்கிறதென்று தெரிய வருகிறது. வரட்டுக் காற்று ஓரிடத்திலிருந்து மரங்களடர்ந்த வனங்களின் வழியாய் மற்றோரிடத்திற்கு வீசிச் சென்றால், வனங்களில் புகுந்து போகும்போது அந்த வரட்டுக் காற்று அங்குள்ள நீராவியை அதிகமாய்க் குடித்துத் தாங்கிச் செல்லும். அப்படிப் போகும்போது, குளிர்ந்த காற்று அத்துடன் தாக்கினால் நீராவியானது உடனே நுட்பமான நீர்த்துளிகளாக மாறி, மழையாகவும்,பனியாகவும்,சாரல் மழையாகவும் பெய்கிறது.

மழை.—வெளியாயிருக்கும் பிரதேசங்களை விட,காட்டுப் பிரதேசங்களில் ஆகாயம் குளிர்ச்சியாயிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. மேலும், காற்றோட்டமானது உன்னதமான வனங்களால் தடை செய்யப்படுகிறது. காற்று தாங்கிச் சுமந்து செல்லும் நீராவியானது 'இப்படிக் காற்றோட்டம் தடைபட்டவுடனே குளிர்ச்சியானகாற்று தாக்குவதால் மழையாகக் கீழே இறங்குகிறது.

இதைத் தவிர மழையை ஒழுங்குபடுத்தும் வேறொரு காரணமும் உண்டு. சமுத்திரமட்டத்துக்குமேல் எவ்வளக்கெவ்வளவு உயரமான இடங்களுக்கு நாம் போகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமானமழை அவ்விடங்களில் பெய்யும். நீலகிரிமலையில் போகும்போது மலையடிவாரத்தி லிருக்கும் மேட்டுப்பாளயத்தைவிட 300 அடி உயரத்திலிருக்கும் குன்னூரில் அதிக மழை பெய்கிறது. அதிலிருந்து 1500 அடி உயரத்திலிருக்கும் உதகமண்டலத்தில் இன்னும் அதிகமான மழை பெய்கிறது. இப்படியே ஒவ்வொரு மலையிலும் காணலாம்.

ஊற்று மூலங்களை விருத்திசெய்தல்.—பருத்திக் கரிசல் பூமிகளில் அறுத்தோடிகள் ஆழமாய்ப் போயிருப்பது நன்றாய்த் தெரியும். ஒரு மழை பெய்தவுடனே அந்தத் தண்ணீர் மண்ணுக் குள்ளிறங்கி, ஆழத்தில் புகுந்து செல்லாமல் நிலத்தில் மேலேயே கட்டி நின்று வழிந்தோடிப் போகிறது. அப்படிப் போகும்போது நிலத்தின் மேல்மட்டத்திலுள்ள பண்படைந்து நுண்ணிய மண்ணைக் கரைத்து எடுத்துக் கொண்டுபோய் விடுகிறது இப்படி நிலத்துக்குள் புகுந்து இறங்காமல் மேலே நின்று எளிதில் வழிந்தோடும் தண்ணீர் கால்வாய்களிலும் ஆறுகளிலும் போய், விழுந்து வெள்ளமுண்டாக்கி நஷ்டம் சம்பவிக்க ஏதுவுண்டாக்குகிறது. மலைகளின்மேல் மரங்கள் அடர்ந்த வனங்களில்லையானால் அங்கும் இப்படித்தான் சம்பவிக்கும். சரிவான பூமியா யிருப்பதால் மழைத் தண்ணீர் நிமிஷநேரத்துக்கு ஓரிடத்தில் தங்கி நிற்க வழியில்லாமல் சரேலென்று வடிந்தோடி ஆறுகளில் விழுந்து விடுகின்றது. ஆனால் மரங்கள் அடர்ந்த வனபூமியில் பெய்யும் மழையானது இப்படிச் சரேலென்று வழிந்தோடிப் போகாது. ஏனெனில் காற்பங்கு மழையை இலைகள் தாங்குகின்றன. அங்கிருந்து அம்மழை சொட்டுச் சொட்டாய் வடிந்து மண்ணில் இறங்கும். மேலும் மண்ணின் மேற்பரப்பில் இலைகளும் சருகுகளும் மட்கிச் சேர்ந்திருப்பதால் அது கடற்பஞ்சு போல் மழைத்தண்ணீரை ஏற்றுக்கொண்டு, கொஞ்சங் கொஞ்சமாய் மண்ணுக்குள் புகுந்து செல்லவிடுகின்றது. மரங்களின் வேர்கள் தண்ணீரை ஓடி வடிந்து போகாமல் சற்றுத் தடைசெய்து நிலத்துக்குள் புகுந்து செல்ல ஏதுவாயிருக்கின்றன. இதனால்ஊற்றுக் கால்கள் விருத்தியடைந்து அநேக நாட்களுக்கு வற்றி வரண்டு போகாமல் நீர்க்கசிவு உண்டாக்கிக்கொண்டே யிருக்கும். அப்போதுதான், அது காட்டாறாக எண்ணப்படாமல் ஜீவநதிகளில் ஒன்றாக மதிக்கப்படும். ஒவ்வொரு நதிக்கும் உற்பத்தி ஸ்தானமாகிய மலைகளில், வனங்கள் அடர்ந்திருக்கவேண்டும். அப்போதுதான் ஊற்றுக்கால்கள் செழிப்பாய் எப்போதும் கசிந்து, நதியில் தண்ணீர் எக்காலத்தும் ஓடிக் கொண்டிருக்கும். இல்லையானால் வைகை நதியைப்போல் கரை புரண்டவெள்ளம் சிலநாட்களுக்கு ஓடுவதும், அப்பால் ஆற்று மணல் தெரியும்படி நீரற்றுப் போவதுமாய் முடியும்.

மேலும் மலைகளிலுள்ள மண்ணானது அங்கங்கே ஸ்திரமாய் இருப்பதற்கு இவ்வனங்களும் விருக்ஷங்களும் உபயோகமாகின்றன. அவைகள் இல்லையானால் மலைச்சரிவுகளில் ஓடிப்பாயும் தண்ணீர், மண்ணைக் கரைத்துக் கொண்டு போய்விட, வெறும் பாறைகள் மட்டும் வெளியே தெரிய நேரிடும். மண்கண்டமில்லாத மொட்டைப் பாறை மலைகளால் யாது பிரயோசனம்? அவைகளில் மரங்கள் உண்டாகவும் மார்க்கமிராது. தண்ணீர் தங்கி, ஊற்றுக்கால்களைப் போஷிக்க இடமுண்டோ? மலைகளைப்போலவே சமதளப் பரப்புகளிலும் தண்ணீரை அவம் போகாமல் மண்ணில் இறங்கி ஊற்றுக்கண்களைப் போஷிக்க மரங்களும் தோப்புகளும் புல் தரைகளும் உபயோகமாகின்றன. சுழிக்காற்றும், புசற்காற்றும் அடிக்கும்போது அநேக அபாயங்கள் மனிதருக்கும் ஜீவஜந்துக்களுக்கும் நேரிடும். உன்னதமான மரச்சோலைகளிருந்தால் அவை அந்தக் காற்றின் விசையைத் தாங்கி அதன் கேடுகளைக் குறைக்கக்கூடும்.

மிருகங்களும் பக்ஷி ஜாதிகளும் காடுகளில் வர்க்கவிருத்தி யடைந்து வருகின்றன. மனிதருக்கு மிகவும் உபயோகமுள்ள யானைகள், காட்டுமாடுகள், காட்டு எருமைகள் முதலிய மிருகங்கள் வசிக்கவும், பல்கிப் பெருகவும், காடுகள் முக்கிய சாதனங்களா யிருக்கின்றன. தற்காலத்தில் பட்டணங்களின் அருகேயுள்ள மைதானங்களில் பக்ஷிகளைப் பச்சாத்தாபமின்றிச் சுட்டுக் கொன்றுவிடுகிறார்கள். அப்படி யிருப்பதால், மலைப்பிரதேசங்கள் இல்லையானால் பக்ஷி ஜந்துக்கள் நிர்மூலமாகிவிடும். அப்படிப் போகாமல் காப்பது நமது காடுகளே.

மேற்சொன்ன பலகாரணங்களால், வனங்கள் நமக்கு எவ்வளவு உபயோகமுள்ளவை என்பது வெளியாகும். ஆகையால் காடுகளை வெட்டி யழிப்பதும், அவைகளின் விஸ்தீர்ணத்தை எந்தக் காரணத்தையிட்டும் குறைப்பதும் கூடவே கூடாது.

உலக கவி திலகரான மகா பண்டித
ஸ்ரீ ரவீந்த்ர நாத் தகூர்க்குக் கூறிய
வரவேற்பு வாழ்த்துரை *



பூவேந்து நான் முகனார் ஆக்கிய இவ்
உலகிலெல்லாம் பொலிவுற் றோங்கிப்
பாவேந்தி ரியஞ்செயித்தோன், பாவேந்தர்
பாவேய்ந்து பரவப் பெற்றோன்,
மாவேந்தர் போற்றிசைப்ப மன்னுயிர்கள்
மகிழவரு மகரி ஷீச
தேவேந்த்ர நாத் தக்கோர் மாதவத்துச்
செழுமுளையாத் திகழும் மேலோய்! (க)
[பாவேந்திரியம்=பாப இந்திரியம்]

காரிருளைக் கடிந்தோட்டும் இரவி யென
மன இருளைக் கடிந்து, யாண்டும்
சீரிய இந் திரனேபோல் மிளிர்ந்து, செந்நாத்
தக்கோ னாத் திகழ்த லாலே,
சேரிய "ரவீந்திரநாத் தக்கோர்" என்
றொருநாமம் நிலவப் பெற்றோய்!
ஆரிய! நின் வரவெமக்கு நல்வரவா
குக! நீபல் லாண்டு வாழி! (உ)
[செந்நாத்தக்கோன்=சிறந்த நாவுடைய அறிஞன்]

புவீந்திரராய்ப் பல்லுயிரும் தம்முயிர்போற்
பயனெய்தப் புரப்போர், ஞான
கவீந்திரராய் இருமை நலம் எவருமுறப்
புரிந்திதயம் களிப்போர், ஆன
துவீந்திரரும் "உலககவி திலகன்" எனும்
துதியணியும் தூய சீல
ரவீந்திரநாத் தக்கோய்! நின் புலமையினால்
யாவரையும் ரமிக்கச் செய்வோய்! (ங)
[துவீந்திரர்=புவீந்திரரும், கவீந்திரரும் (துவி=இரண்டு). "உலக கவி திலகன்"=World - Poet.

* இக்கவிகள் மதுரைத் தமிழ்ப் பண்டிதர் கூட்டத்தாரது வரவேற்பு வாழ்த்துக் கவிகளாகத் "தக்கோர்" முன்னிலையில் பண்டித ஸ்ரீ ம. கோ. பாலகிருஷ்ண ஐயர் அவர்களால் வாசிக்கப்பட்டவை.

எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின் புத்தியே!

* "மின் இரவி ஒளிபெற்றான்! நறிய கொம்புத்
தேன் இனிமை விளங்கப் பெற்ற (து)!
என்! இமையோர் இமையாமை இறவாமை
எய்தினர்!" என் றெவர் வியப்பார்?
மன்னருமா சறக்கற்ற மதிவலரும்
ஒருங்குபுகழ் மகிமை யார்ந்த
தன்னிகரில் நீ, "நோபில் பரிசு" பெறின்
வியப்பென்னே? சாற்று வாயே. (ச)

[நோபில் பரிசு=உலக கவி திலகர் ஒருவர்க்கு 'நோபில்' என்பவர் பெயரால் கொடுபடும் லட்சத்திருபதினாயிரம் ரூபாய் (8,000 பவுன்)]

அன்னியர்கள்,—சொற் செறிவு பொருட்பொலிவு
வாய்ந்தொளிரும் அரிய பேறு
மன்னியநம் கவிப்பெருமை மதப்பெருமை
அறியாதார்,—"மாக வீசன்"
என்ன, ரவீந் திரநாத்தக் கோய்! நின்னைப்
போற்றுவரேல், இசைமிக் கார்ந்த
முன்னைய நம் பாரதமன் னவர் இருப்பின்
நின்பெருமை மொழியற் பாற்றோ? (ரு)

[மாகவீசன்=மகா கவீசுவரன்.]

ஞானமிகு நின்பிரசங் கங்கேட்கக்
கானடியர் நயந்து நின்னைத் [க்கி
தானழைத்தும், அவர்கள் தம்போர்ப் பொருள் விள
நமரைச்சோ தரர்என் றெண்ணா (து)
ஈனரெனக் கருதியதால் அவர் உறையும்
இடம் செல்ல இசைந்தி டாத
மானவன் நீ. ஆதலினால் உன்னில் ஒரு
தேசாபி மானி உண்டோ? (சு)

[பெயர்ப்பொருள்: கானடியர் (கால்+நடியர்)= காற்பங்கு பெருமையே யுடையவர். கானடாவுக்குச் செல்லும் இந்தியர் விஷயமாகக் கானடியர் செய்த அடாத முறைகேடான ஏற்பாடுகளைத் 'தக்கோர்' வெறுத்து, அதனால் அங்குச் செல்லாமையே இங்குக் குறித்த தாகும்.]

தக்க திரு வள்ளுவனார் "திருவேறு தெள்ளியரா
தலும் வே(று)" என்ன
ஒக்க உரைத் துளமொழிக்கோர் புறனடையா
ஒளிர்வோனை உன்பாற் கண்டேம்.
தொக்க கலா மதியுடன் சேர்ந் தொளிரும் ரவீந்
திரன் உன்னிற் றோன் றக் கண்டேம்.
இக்கலிகா லத் தியல்பிற் காணாத
காட்சி யெலாம் யாங்கண் டேமால். (எ)

[புறனடை=விலக்கு விதி; தொக்க கலாமதி=மிகுந்த கல்வியறிவு; 16 கலை களுடனும் கூடிய பூர்ண சந்திரன்.]

'இயல்இசைநா டகம்' இவைகள் முத்தமிழே.
'தமிழ்' என்ப 'இனிமை' ஆகும்.
செயிரற நீ இனிமையுற இவை மூன்றும்
இனிதிசைத்துச் சீர்த்தி வாய்ந்து
பெயல் புரைய உலகமெலாம் குளிர் வித்தோய்
ஆதலினால், பெரியோய்! நீ எம்
அயல் அல்லை, முத்தமிழன். தமிழ் மொழியும்
தேர்வைபுகழ் அணிந்து வாழி! (அ)

[இனிய மொழியில் இயல் இசை நாடக நூல்கள் இயற்றிப் புகழுற்றமையைவிளக்கக் கூறியது இது பெயல் புரைய=மேகம் போன்று.]

பூவலயஞ் செய்துமே துத்தமபா
ரதவருஷப் புகழை நாட்டு
பாவலனும் பக்தி மிளிர் பண்ணவனும்
நாடகவிற் பனனும் ஆகி
மேவலரும் ஆவலொடுன் பிரசங்கம்
கேட்டுவக்க விழையும் மேன்மை
நாவல! நின் 'பிறைமதி' 'கீதாஞ்சலி' யா
திய யாவும் நாளும் வாழி! (கூ)

[பூவலயம்=தேச சஞ்சாரம்; பண்ணவன்=சங்கீத வித்வான், ஆசிரியன்; பிறைமதி=Crescent ஆதிய=Grardener etc.]

மாந்தரெலாம் ஏய்ந்த அறி வொழுக்கம் இரு
மைப்பயனால் வயங்கு மாறு
வாய்ந்தபதி யுடையாய்! நீ நின்னுயிரே
போற்பேணும் வண்மை சான்ற
"சாந்திநிகே தனம்" வாழி! தகவுற நின்
தந்தையின் சீர் தழைத்து வாழி!
ஏந்துபுகழ் ஸி. எவ். ஆண்ட் ரூஸ் நச்சி
னார்க்கினியன் இனிது வாழி! (க0)

[சாந்தி நிகேதனம்=இகத்திற்கும் பரத்திற்கும் இன்றியமையாதன பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடம்; ஸி. எவ். ஆண்ட்ரூஸ்=Rev. C. F Andrews. இவர் தம் பாதிரித் தொழிலை நீத்துத் தக்கோரின் பணிவுள்ள மாணாக்கராகி அவர் செல்லு மிடந்தோறும் உடன் செல்வோர்.]

* மகா மகோ பாத்தியாயப் பட்டம் ஸ்ரீ: வே. சாமிநாதையர்க்குக் கிடைத்த காலை, ஸ்ரீ: ஸி. சுப்பிரமணிய பாரதி கூறிய செய்யுட்களின் கருத்தே இவை.

எண்ணிய எண்ணம் எல்லாம் பொய்; எழுதிய எழுத்து மெய்.

செடிகளின் உயிர் வாழ்க்கை

THE PLANT LIFE

செடிகளுக்கு ஜீவனுண்டு. அவைகள் வளர்கின்றன. இதற்காக அவைகள் உணவு உண்கின்றன. மனிதரைப்போல் சுவாசிக்காவிட்டாலும் ஒருவகையில் மூச்சுவிடுகின்றன. ஜீவஜந்துக்களைப்போல் அவைகளுக்குச் சரியான உணர்ச்சியில்லை. என்றாலும், ஒருவகையான உணர்ச்சி அவற்றிற்கும் இருப்பதாகத் தெரிகிறது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அவைகள் போகமுடியாது. அவைகள் நிலத்தில் வேரூன்றி ஒரே இடத்தில் நிலையாய் நிற்கும்.

செடிகள் தங்கள் வேர்களின் மூலமாயும் இலைகளின் வழியாகவும் ஆகாரத்தை உண்கின்றன. இலைகளுக்கு ஆகாரம் ஆகாயத்திலிருந்து கிடைக்கிறது. வேர்களுக்கு வேறுவிதமான ஆகாரங்கள் மண்ணிலிருந்து கிடைக்கின்றன. ஆனால் மண்முழுவதுமே செடிகளுக்கு உணவாகிறதென்று எண்ணக்கூடாது.

செடிகள் மண்கட்டிகளை அப்படியே தின்னமுடியாது. அவற்றின் ஆகாரம் வேர்களில் புகுந்துபோகும். தண்ணீரில் கரைந்துதான் உட்செல்லவேண்டும். ஆகையால் செடிகள் ஆகாரம் தின்னக்கூடும் என்று சொல்லாமல் கிரகிக்கக்கூடும் அல்லது குடிக்கக்கூடும் என்றும் சொல்லலாம்.

செடிகள் தங்கள் இலைகளின் வழியாய் உணவு உட்கொள்ளவும் சுவாசிக்கவும் செய்கின்றன; அதாவது ஒருவகையான வாயுவை உட்கொண்டு, வேறு ஒருவகையான வாயுவை வெளியே விடுகின்றன. ஒரு ஜீவஜந்துவானது தனக்கு அவசியமான வாயுவைச் சுவாசிக்காவிட்டாலும், தனக்கு ஏற்ற ஆகாரத்தைப் சாப்பிடாவிட்டாலும் செத்துப் போகின்றது. அதைப் போலவேதான் செடிகளும்.

அழகான புஷ்பங்களுக்காகவும், அல்லது பழங்களுக்காகவும் நாம் அநேக செடிகளை வைத்து வளர்க்கின்றோம். ஆனால் பாசியும் பெர்ன் (Fern) என்னும் ஓர்வகை மலைநாட்டுச் செடிகள் பூக்கிறதில்லை.

புஷ்பிக்கும் செடிகளுக்கெல்லாம் வேர், தண்டு, இலைகள், பூக்கள், காய்கள் உண்டு. செடிகள் காய்கள் காய்ப்பதற்காகத்தான் ஜீவிக்கின்றன. ஏனென்றால் அவைகளைப்போன்ற புதுச்செடிகளை உண்டாக்கக்கூடிய விதைகள் அந்தக் காய்களில் உண்டாகின்றன. ஒரு செடியின் தண்டானது நிலத்திலிருந்து மேல் நோக்கியாவது அல்லது நிலத்தின்மேல் படர்ந்தாவது வளரும். அப்படியிருக்க வேர்களோ அநேகமாக வெளியே தெரியாமல் மண்ணுக்குள் புகுந்து வளர்கின்றன. ஆனால் சில வேர்கள் மண்ணுக்குள் செல்லாமல் செடிகளின் கிளைகளைப் பிடித்துக்கொண்டும் அல்லது செடியினின்று அந்தரத்தில் தொங்கிக்கொண்டும் ஆகாய வேர்களாயிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

பூவாத மரம் காய்க்காதாதலால் விதைகளும் உண்டாகாது. ஏனெனில் விதைகள் புஷ்பங்களிலேதான் உண்டாகின்றன. அப்படியானால் பூவாத செடிகளிலிருந்து அவைகளைப் போன்ற கன்றுகள் எப்படி உண்டாகின்றன?

இதை அறிவதற்கு நாம் பெர்ன் என்னும் மலைநாட்டுப் பூண்டின் இலையை எடுத்துப் பார்க்கவேண்டும். அதன் அடிப்பக்கத்தில் மங்கல் நிறமான அநேகம் சிறு புள்ளிகள் போன்ற மணிகள் காணப்படும். அவைகளுக்குள் தூசுபோன்ற அநேகம் கரு அணுக்கள் அடங்கியிருக்கும். இந்தக் கரு அணுக்களிருந்து புதுக்கன்றுகள் உண்டாகும். இவ்வுலகத்தில் செடிகள் இல்லையானால் ஜீவஜந்துக்கள் இருக்காது. ஏனென்றால் அவைகளுக்கு ஆகாரம் கிடையாது. ஜீவஜந்துக்களுக்குச் செடிகள் ஆகாரம் தருகின்றன வென்பதும் உங்களுக்குத் தெரியும். நமக்கு வேண்டிய உண்டி, உடை, உறைவிடத்தின் மேற்கோப்பு இவைகள் அநேகமாகச் செடிகளிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. மேலும் செடிகளிலிருந்துதான் நமது வண்டிகள், படகுகள் கப்பல்கள் செய்ய மரமும், அடுப்புக்கு விறகும், சாயம் ஏற்ற வர்ணங்களும் வியாதி தீர்க்க மருந்தும் நாம் அடைகிறோம்.

= பஞ்சரத்தினம் =

அழகிய ஆப்டோன் படங்களுடன், சீதை, உருக்குமிணி, சாவத்திரி, சகுந்தலை, தமயந்தி, இவர்களின் சரித்திரங்கள் கொண்டது. விலை அணா 10. சந்தாதார்க்கு அணா 12.

அமுத சுரபி

AMUTA SURABHI

அறவணன் : : மயிலை

ஒரு நாள் அந்திமாலையில் மூத்து முதிர்ந்த அறவணனும், அவன் மனைவி மயிலையும், தமது சிறு குடிலின் முற்றத்திலிருந்து சூரியாஸ்தமனத்தில் தோற்றும் செவ்வானத்தை நோக்கி வியந்து, தமது தோட்டத்தையும் ஆடு மாடுகளையும் பயிர்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது சிறுவர்களின் கூவிளியும் நாய்களின் சினத்த குரைப்பும் மிக்கு அவர்களுள் ஒருவர் பேசுவது ஒருவருக்குக் கேட்காதபடி செய்தன.

அறவணன்.—ஏ! மயிலி, நமது அயலிலே யாரோ பிச்சைக்காரர்கள் பிச்சைக்கு வந்தார்கள் போலும். அயலவர்கள், வழக்கம்போலே, அவர்களுக்குப் பிச்சையும் இடாது, அவர்கள் மேல் நாய்களையும் ஏவி விட்டிருக்கிறார்கள், பார்த்தையா?

மயிலை.—என்ன அநியாயம்! ஏழை எளியவர்கள்மீது நமது அயலவர்களின் மனம் சிறிதேனும் இரங்காதா? குழந்தைகளைத் துடுக்கடக்கி நல்ல பழக்கம் பழக்காமல், பிச்சைக்காரர்மேல் அவர்கள் கல்லு விட்டெறியும் போது முதுகைத் தட்டிக் கொடுக்கிறார்களே! இது என்னவாய் முடியும்!

அ.—தீமையாய்த்தான் முடியும். ஒருகாலும் அவர்கள் நன்மை அடையப்போவதில்லை. உண்மையாய்ச் சொல்லுகிறேன்; கேள். இந்தத் தீத்தொழில்களை விட்டுவிடாது போவார்களானால், இந்த அயலிலுள்ளவர்களுக்குப் பெருங்கேடு சம்பவிக்கும் என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை. நீ மாத்திரம், பசிக்கிறது என்று வந்து கேட்பவர்களுக்கு இல்லை என்னாமல், நம்மாலியன்றது, கூழானாலும் சரி, கொடுத்துதவு.

ம.—நீங்கள் சொல்வது சரி. நான் எப்போதும் அப்படியே செய்வேன்.

அ.—இந்த மாதிரி நாய்குலைக்க நான் ஒரு நாளும் கேட்டதில்லை!

ம.—இந்த மாதிரிக் குழந்தைகள் கூவினதும் இல்லை!

(சிறிது தூரத்திலே வழிச்செல்வோர் இருவர் சிறுவர்கள் பின்னே நின்று கூவவும் நாய்கள் குரைத்துத் தூரத்தவும் வருகிறார்கள்.)

அ.—அதோ பார், மயிலி! இரண்டுபேர் வருகிறார்கள். வா, நாமிருவரும் போய், அவர்களை எதிர் கொள்வோம். அயலிலே நடந்ததைக் கண்ட பிறகு, அவர்களுக்கு இந்த மேடேறி நமது வீட்டுக்குவர மனம் எழாது; இது நிச்சயம்.

ம.—நீர் போய் எதிர்கொள்ளும். நான் உள்ளேபோய் அவர்களுக்குச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன். கொஞ்சக் கூழும் மோரும் இருந்தாலும் போதும் அவர்கள் பசியைத் தீர்ப்பதற்கு.

(பார்வதியும் பரமசிவனும் வருகிறார்கள்.)

அ.—வருபவர்களை எதிர்கொண்டு சென்று, வாருங்கள்! வாருங்கள்! ஏது! வெகு தூரமிருந்து வருகிறீர்கள்போலும்? மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள்.

பரமசிவன்.—ஆம், ஆம். நமஸ்காரம். தங்களைப் போலில்லையே இந்த ஊரில் மற்றவர்கள். ஐயா, நீங்களேன் இந்தக் கொடிய ஊரில் இருக்கிறீர்கள்?

அறவ.—அதுவும் கடவுள் செயல்தான். இந்த ஊரவர்களின் கொடுமையை ஒருவாறு தணிப்பதற்காக ஈசன் என்னை இங்கே வைத்திருக்கிறார்.

பரம.—நன்றாய்ச் சொன்னீர், ஐயா, நன்றாய்ச் சொன்னீர்! அவர்கள் எங்களை என்ன செய்தார்கள் பார்த்தீர்களா? எங்கள்மேல் இந்த நாய்களை ஏவிவிட்டார்கள். ஒரு நாய் எனது வேட்டியை—(வேட்டியைக் கையிற் பிடித்து) முன்னமே அது பழங்கந்தை-கடித்துக் கிழித்துவிட்டது. ஆனால் நான் அதைச் சும்மா விடவில்லை. இந்தத் தடியாலே (தடியைச் சுழற்றி) ஒன்று அதன் தலைமேலே கொடுத்தேன். அது 'வாஅள்' என்று கத்தினது இங்கே உங்களுக்கும் கேட்டிருக்குமே. இந்தச் சிறுவர்கள் குறும்புத்தனமாய், எங்கள் மேல் கல்லும் மண்ணும் விட்டெறிந்தார்கள்.

அறவ.—(தடியை உற்றுநோக்கி) இதுஎன்ன தடி ஐயா? சூலம்போலக் கவையுடையதாயிருக்கிறதே. சிறுவர்கள் குதிரை ஏறி விளையாடுவதற்கு ஏற்றதா யிருக்கின்றது.

பரம.—ஆம்! ஆம்! இது ஒரு விந்தையான தடி. வெகு வேலைகள் செய்யும், ஐயா. வழி நடப்பதற்கு உற்ற துணை, கையில் ஒரு தடி போல், வேறு ஒன்றும் இல்லை.

அறவ.—இதுதான் எனது குடிசை (ஓராசனத்தை எடுத்து இட்டு) இதோ இந்த ஆசனத்தின்மேல் இருங்கள். எனது மனைவி மயிலி உங்களுக்குச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது என்று பார்க்க உள்ளே போயிருக்கிருள். நாங்கள் ஏழைகள்; ஆனாலும், எங்கள் குடிசையில் இருக்கிறதெல்லாம் உங்களதே.

பார்வதி.—இப்போது (கையால் சுட்டிக் காட்டி) இந்தக் குடிசைகளிருக்கிற இடம் ஆதியில் ஒரு குளமா யிருக்கவில்லையா?

அறவ.—என் காலத்தில் இல்லை, தாயே; நானும் தொண்டு கிழவனாய்விட்டேன். இப்போதுள்ளதுபோலவே இது எப்போதும் தூரவும் தோட்டமும் வயல் வெளியுமாயிருந்தது. அதோ, அங்கே, ஆகாயத்தை அளாவி உயர்ந்து வளர்ந்திருக்கிற மரங்கள் இன்று போலவே அன்று மிருந்தன. இந்த வயல்களுக்கு நடுவே ஓடுகின்ற சிற்றாறும் அப்படியே அன்றுமுத லோடுகின்றது. நான் அறிந்தவரையில் எனது தகப்பனார் காலத்திலாவது, அதற்குமுன் எனது பாட்டனார் காலத்திலாவது, இது வேறு விதமாகயிருக்கவில்லை. நான் கிழவன் செத்து மாண்ட பிற்பாடும் இது இப்படியே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பார்வதி.—அப்படி நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. இந்த உலகத்திலே மேடு பள்ளமாவதும் பள்ளம் மேடாவதும் சகஜம். ஏழை எளியவர்கள்மேல் இரக்கமென்பது சிறிதும் இல்லாத இந்த ஊரில் உள்ளவர்களுக்கு இது முன்போலவே குளமாகி, இந்த வீடுகளெல்லாம் நீரில் முழுகிப்போவது தக்க தண்டனையாகும்.

(மயிலை கூழும் பாலும் கொண்டுவருகிருள்.)

மயிலை.—ஒருவர் வீட்டிற்கு விருந்தினராக வந்தவர்கள் சாப்பிடாது போகக்கூடாது. ஆதலால் நீங்கள் வருவது தெரிந்திருந்தால், நாங்கள் சாப்பிடாமல் இருந்திருப்போம். மாலையாகி விடவே, நீங்கள் வருவதற்கு முன்பே நாங்கள் சாப்பிட்டு விட்டோம். அதனால் மோர்கூட இல்லை. கூழ்தான் கொஞ்சம் இருக்கிறது. இந்தக் கூழையும் சாப்பிட்டு, பாலும் கொஞ்சம் கொண்டுவந்தேன்; அதையும் குடியுங்கள். இன்னுஞ் சற்றுப் பொறுத்து வந்திருப்பீர்களானால் பால்கூட இராது. உறைகுத்தி யிருப்பேன். என் செய்வேன்! எங்களால் முடிந்தது இதுதான். நான் எங்கள் வறுமையைப்பற்றி நொந்து கொள்வது, யாராவது வழிப்போக்கர்கள் விருந்தாக எங்கள் குடிசைக்கு வந்தபோதுதான்.

பார்வதி.—அம்மணீ, இது போதும் எங்களுக்கு. நீ வருத்தப்பட வேண்டாம். தயவாக, இன் சொல்லோடு கொடுக்கும் உணவு, எதுவாயினும், தேவாமிர்தத்துக்குச் சரி.

மயிலை.—இன்சொல்லுக்குக் குறைவில்லை. ஆனால் அதனால் வயிறு நிறைந்து விடுமோ? (அறவணன் ஒரு சீப்பு வாழைப்பழம் கொண்டு வந்து கொடுக்கிருன்) நல்லது. இதோ கொஞ்ச வாழைப்பழமு மிருக்கிறது.

பரம.—(சிரித்துக்கொண்டு) அம்மணீ, இது ராஜ போசனம். இல்லை, இல்லை; தேவருணவென்றே சொல்லலாம். நீ பார், நான் எவ்வளவு ஆவலோடு சாப்பிடப்போகிறேன் என்று. இதைக் கண்டவுடனே எனக்கு என்ன பசி தோன்றுகிறது; தெரியுமா?

மயிலை.—(அறவணனுக்கு மறைவாக) என்னபாவம்! இவருக்கு அவ்வளவு பசியானால், நான் கொண்டு வந்தது இவர்களுக்கு அரை வயிற்றுக்குத்தானும் போதாதே.

(மயிலைசொன்னமாதிரி பசித்துவந்த இருவருக்கு அவள் கொண்டுவந்த உணவு போதாது. ஒரு சிறு சட்டி கூழும் கொஞ்சத் துவையலும் ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தன. ஒரு சீப்பு வாழைப்பழமும் பக்கத்தில் இருந்தது. ஒரு சாடியில் அரை வாசிக்குப் பாலும் இருந்தது. அந்தப் பாலை மயிலை இரண்டு லோட்டாக்களில வார்த்து அவர்களுக்கு முன் வைத்தாள். பின்பு அடிச் சாடியிலே கொஞ்சப் பால்தான் மிகுந்திருந்தது.)

பரம.—(ஒரு லோட்டாபாலை எடுத்துக்குடித்து விட்டு) அம்மணீ, இன்னும் கொஞ்சம் பால் வாருங்கள். இன்று வெயிலதிகம்; அதனால் எனக்கு மிகவும் தாகமா யிருக்கின்றது.

மயிலை.—ஐயா, எனக்கு மிகவும் துக்கமாயும் வெட்கமாயும் இருக்கின்றது. ஏனெனில் சாடிக்குள்ளே கொஞ்சம் பால் கூட இல்லை. (அறவணனை நோக்கி) நாங்களேன் இன்று சீக்கிரமாகச் சாப்பிட்டோம்!

பரம.—நீர் ஏதோ மறதியாகச் சொல்லுகிறாப் போலிருக்கிறது, அம்மணி. சாடிக்

குள்ளே பாலில்லாமல் இல்லை; வேண்டிய பாலிருக்கின்றது.

மயிலை.—(சாடியை எடுத்துப் பாலை வார்த்து விட்டு மறைவாக) எனக்கு வயதாய் விட்டது; அதனால் மறதி அதிகம். நான் தவறுதத்தான் பால் இல்லை என்று சொல்லி விட்டேன் என்று எண்ணுகிறேன். எப்படியிருந்தாலும் சரி. இரண்டு தரம் லோட்டாநிறைய வார்த்ததன் பின், இனி எங்கே யிருந்து பால் வரப் போகின்றது?

பரம.—ஆ! என்ன இனிமையான பால்! என் தாயே என்னைக் கோபியாதே. எனக்கு இன்னும் கொஞ்சம் பால் வார்.

(மயிலை வெறு விதாயிருந்த சாடியை எடுத்து, மிகுந்த அதிசயத்தோடு வார்க்கிருள். பால லோட்டா நிரம்பி வழிகின்றது.)

பரம.—அம்மணி, இன்னும் கொஞ்சம் கூழும் கொஞ்சத் துவையலும் கொடு.

மயிலை.—(அறவணனுக்கு மறைவாக) இது மாதிரி நீர் கேட்டதுண்டா?

அறவ.—இல்லை;நான் ஒரு போதும் கேட்டதில்லை. நீ நித்திரைத் தூக்கத்திலே உளறுகின்றாய் என்று எண்ணுகிறேன். நான் பால் வார்த்திருந்தேனேயானால், பால் மிஞ்சி இருக்கிறதா, இல்லையா, என்று பார்த்திருப்பேன். நீ லோட்டாக்களில் வார்த்த பிற்பாடும் சாடிக்குள்ளே பால் கொஞ்சம் மிஞ்சியிருந்தது. அதுதான் உள்ள காரியம்.

மயிலை.—என்ன! (சிரித்து) நீர் என்னவென்றாலும் சொல்லும். இவர்கள் சாதாரணமான மனிதர்கள் அல்ல.

அறவ.—ஆம், ஆம். அப்படி இருக்கலாம். அவர்கள் முன் நல்ல நிலைமையில் இருந்தவர்களென்றே தோன்றுகின்றது. அவர்கள் அவ்வாறு பரிவுடன் உண்பதைப் பார்க்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது.

பரம.—என்ன இனிமையான பழம்! தாயே, இது எவ்விடத்துப் பழம், அம்மா?

அறவ.—எங்கள் தோட்டத்துப் பழம். அதோ வாழை, அந்த வேலிக்கப்புறத்தே தெரிகிறது; பாரும். ஆனால் நாங்கள் இந்தப் பழத்தை அவ்வளவு நல்லது என்று எண்ணவில்லை.

பரம.—நான் இதைப்போல் இனிமையான பழம் ஒருபோதும் சாப்பிட்டதில்லை. இந்த இனிய பாலிலே இன்னுமொரு லோட்டா வாரும். அப்போது நான் ராசாவைப்போல் திருத்தியாகச் சாப்பிட்டவனாவேன்.

(அறவணன் பார்த்தபோது வெறு விதா யிருந்த சாடி கையில் எடுக்கும்போது பால் ஊறி நிரம்புகின்றது).

அறவ.—இந்தப்பெரிய இந்திரஜாலம் செய்கின்ற நீங்கள் யாரையா?

பார்வதி.—உங்கள் விருந்தினர், ஐயா; உங்களுக்கு அன்பர்களுமாவோம். எனக்கும் ஒரு லோட்டா பால் வாரும். உமக்காவது, உமது மனைவிக்காவது, வழி நடந்திளைத்து உங்கள் உதவியை நாடி வரும் வழிப்போக்கர்களுக்காவது, உங்கள் ஜாடி என்றும் பால் குறையா திருப்பதாக!

அறவ.—(பரமசிவனைப் பார்த்து) இந்தப் பழஞ் சாடிக்குள்ளே எங்கிருந்தையா பால் அருவிபோல ஊறுகிறது.

பரம.—(தமது தண்டைக் காட்டி) இந்த மாயமெல்லாம் இதனுடைய செய்கை. உம்மால் அது எவ்வாறென்று உணர்ந்தறியக்கூடுமானால், எனக்கும் சொல்லும்; நான் கேட்கிறேன். இந்தத் தடியை என்னென்று சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. இந்த விதமான மாயங்கள் அது எப்போதும் செய்கின்றது. சிலவேளை எங்களுக்கு உணவு கிடைக்கப்பண்ணும்; சில வேளை உணவு கிடைப்பதைக் கெடுத்து விடும். பேய் பிடிப்பதென்று உலகத்தார் சொல்வது உண்மையானால், இதற்குப் பேய் பிடித்திருக்கின்றது என்று நான் சொல்லுவேன்.

(எல்லாரும் ஊரை நோக்கி நடக்கிருர்கள்.)

அறவ.—ஆ! என்ன அறியாமை! பசித்துக் களைத்து ஓரிரவு ஒதுங்க இடந்தேடி வரும் ஏதிலர்களுக்கு அன்னமிடுவது எவ்வளவு புண்ணியம் என்று அறிவார்களானால், நமது அயலவர்கள்தமது நாய்களை எல்லாம்கட்டி வைப்பதோடொழியாது தங்கள் சிறுவர்களை ஒரு கல்லுத்தானும் எறிய விடமாட்டார்களே!

மயிலி.—அவர்கள் இவ்வாறு நடப்பது அவர்களுக்குப் பெரியஇழிவாவதோடு பெரும் பாவமுமாகும். இது நிச்சயம். நான் இப்போது போய் அவர்கள் எவ்வளவு கொடியவர்களென்பதை அவர்களுக்குச் சொல்லப் போகிறேன்.

பரம —அவர்கள் ஒருவராவது உன் கண்ணில் அகப்பட மாட்டார்கள் என்று நான் அஞ்சுகிறேன்.

பார்வதி.—ஏழை எளியவர்களைத் தமது உடன் பிறந்தவர்கள் போல எண்ணி மனமிரங்காத மனிதர்கள், உலகத்தில் உயிரோடு வாழ்தற்குத் தக்கவர்களல்லர்.

பரம.—அஃதிருக்க. அன்பர்களே, நீங்கள் இப்போது சொல்லுகின்ற அந்த ஊர் எங்கே இருக்கிறது? எந்தப் பக்கத்திலே? என் கண்ணுக்குத் தெரியவில்லையே.

(அறவணனும் மயிலியும் அந்த ஊர் முழுவதும் நீர் மூடியிருக்கக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.)

மயிலி.—ஐயோ! நமது எளிய அயலவர்களுக்கு என்ன பெரிய விபத்து நேரிட்டுவிட்டது!

பார்வதி.—அவர்கள் இப்போது மனிதப் பிறவிகளாயில்லை. அவர்கள் மனிதர்களாய் இதுவரையும் இருந்ததனால் உலகத்துக்கு ஒரு பிரயோசனமுமில்லை.

பரம.—அந்த மூர்க்கர்கள் எல்லாரும் இப்போது மீன்களாகி விட்டார்கள். மனிதர்களாயிருந்தும் அவர்களுக்கு ஆறறிவிருக்கவில்லை. ஆதலால் மூவறிவுடைய மீன்களாக மாறினது அவர்க்குப் பெருந்தாழ்வன்று.

பார்வதி.—நீங்கள் புருஷனும் பெண்சாதியும் உங்களிடத்தில் உள்ளதை ஒன்றும் ஒளிக்காது வீடுவாசல் இல்லாத ஏழை எளியவர்களுக்கு மனமுவந்து கொடுத்துதவினீர்கள். அதனால் நீங்கள் அளித்த பால் அமுதமும், கொடுத்த கூழ் தேவாரணவும் போலாயின. இவ்வாறு பார்வதியும் பரமேச்வரனும் கைலைமலையில் உண்ணும் உணவையே நீங்களிங்கே கொடுக்கப் பெற்றுக்கொண்டார்கள். எமதன்பர்களே, நீங்கள் தக்கபடி ஒழுகியுள்ளீர்கள். உங்களுச்கு என்ன வரம் வேண்டும்? கேளுங்கள்; தருகிறோம்.

அறவ —நாங்கள் இவ்வுலகத்தில் உயிரோடிருக்கும் வரையும் ஒருவரை ஒருவர் பிரியாது ஒன்றாயிருக்கவும் உயிர்விட்டு நீங்கும்போதும் ஒருங்கே நீங்கவும் வேண்டுகின்றோம்.

பார்வதி —அப்படியே தந்தோம். இப்போது உங்கள் குடிசையைப் பாருங்கள்.

(அவர்கள் தங்கள் குடிசையிருந்த விடத்தில் வெண்சுதையாலான ஒரு பெருமாளிகை யிருக்கக் காண்கிறார்கள்.)

அறவணனும், மயிலையும்.—இது என்ன ஆச்சரியம்! ஒரு பெரு மாளிகையாயிருக்கின்றதே.

பார்வதி.—அதுதான் உங்களுடைய வீடு, அதிலிருந்து கொண்டு நேற்றிரவு உங்களுடைய எளிய குடிசையில் எவ்வாறு எங்களை மனமகிழ்ந்து வரவேற்று ஒப்புரவு செய்தீர்களோ அவ்வாறு ஒப்புரவு செய்துவாழுங்கள்.

வஸந்த மந்திரம்

(223-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதின்மூன்றுவது அத்தியாயம்

மூன்று கடிதங்கள்

பிரதாபசிங்கருடைய அறையில் உண்மையாகவே பேச்சுக்குரல் கேட்டது. சபையை விட்டு எழுந்தவுடனே பிரதாப சிங்கர் இராமேசருக்கு உத்தரவு கொடுத்துத் தம் அறைக்கு அனுப்பிவிட்டு, மந்திரி சுமதியைத் தன் அறைக்கு ஜாமத்துக்குமேல் போஜனம் முடித்துக்கொண்டு வரும்படிசொல்லி அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். அரண்மனை ஸர்வாதிகாரியை அழைப்பித்துத் தமது நாட்டின் சமாசாரம் ஒன்றும் அனந்தபட்டருக்காவது அவருடன் வந்திருக்கும் சேவகர்களுக்காவது தெரியக்கூடாதென்றும், தம்மவர் ஒருவரும் அவர்களுடன் எவ்விதமான சமாசாரங்களும் பேசக்கூடாதென்றும் ஒவ்வொருவருக்கும் உடனே தெரியப்படுத்தவேண்டும் என்றார். ஸர்வாதிகாரி பயபக்தியுடன், அங்ஙனமே முன்னர் வீரேசர் உத்தரவுசெய்திருக்கின்றார் எனவும், சாரணர் நாற்புறமும் ஓடிச் சமாசாரம் தெரிவித்துக்கொண் டிருப்பதாகவும் சொன்னான். "வீரேசன் அதிபுத்திசாலி; அரசன் குறிப்பறிந்து காரியம் நடத்துகிறான். சுமதியாருக்குத் தக்க சிஷ்யன்; நமது நல்லவேளைதான் இதுவும்" என்று அரசர் எண்

15 APR 1919

ணிக்கொண்டு ஸர்வாதிகாரியை அனுப்பிவிட்டார்.

அறையில் உட்கார்ந்துகொண்டு தன் மந்திரியையும் மனைவியையும் அரசர் எதிர்பார்க்கின்றார். நாழிகை எட்டுக்குமேல் ஆய்விட்டது. காந்திமதி தேவி தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு சற்று அவசரமாகவே வருகிறாள். அவளுக்கும், அரசன் மனதை அன்று சாயங்காலம் வருத்திய விஷயம் என்னவோ என்று அறிந்துகொள்ள ஆவல். "என்ன விஷயமோ, ஏதோ தெரியவில்லையே! எதிரிகள் படையெடுத்து வருகிறார்களோ? ஆப்கன் தேசத்தார் கொள்ளையடிக்க வருகிறார்களோ? ஹூணர்கள் தேசத்தை அழிக்கப் புறப்பட்டுவிட்டனரோ? அல்லது நமது இராஜ்யத்தில்தான் குழப்பமோ? ஒன்றும் விளங்கவிலலையே! என் கண்மணி லலிதாவின் விவாகம் முடிந்துவிட்டால் போதும். பிறகு என்ன வந்தாலும் பயமில்லை. 'வரும் விதி வழித்தங்குமா?' ஹே! தாக்ஷாயணீ! உன்னைக் குறித்து நோன்பு பூண்டு ஈசன் அருளால் அவதரித்தவள் அல்லவா இப்பெண்மணி? இவள் உனது அடைக்கலம். இவள் க்ஷேமத்தை நீ முக்கியமாய் நாடவேண்டியது. சாதாரண விஷயமானால் என் நாதன் இப்படிக் கலங்கமாட்டார். ஒன்றும் விளங்கவில்லையே! வந்த பிராமணருக்கும் முகம் வாடியிருந்தது; சரியாய்ப் பேசவில்லை. இவற்றையெல்லாம் யோசிப்பின், ஈசா! என் மனம் பதைபதைக்கின்றது" என்று இவ்வாறு எண்ணிக்கொண்டு மனம்நொந்து படிக்கு ஒரு நிமிஷமாய் மெத்தை மீதேறிவருகிறாள் காந்திமதி! அறையுள் அவள் நுழைந்தபின்தான், யாரோ வந்திருக்கின்றனர் என்பது அரசனுக்குத் தெரிந்தது.

அரசன் நிமிர்வதற்குள் அவனண்டைபோய் உட்கார்ந்துகொண்டாள் காந்திமதி. அதுவரையில் முகத்தின்மேல் கையை வைத்து உட்கார்ந்தவர் உட்கார்ந்தவரே. இப்புறம் அப்புறம் அசையவில்லை மன்னன். விழித்த கண் விழித்தபடியே, புருவங்கள் நெரித்து இருக்கின்றன. மூக்கின் நுனிமட்டும்விரிந்தும் குழிந்தும் அவர் விடும் சுவாசத்தின் உக்கிரத்தை வெளிக்காட்டுகின்றது. மற்றப்படி அவர் முகத்தினின்று உயிர் இருப்பதாக எண்ணுவதற்குக் குறிப்பொன்றுமே கிடையாது. யவனர் செய்த சலவைப்பிம்பம்போல் காண்போர் சந்தேகப்படும் வண்ணம் அசைவற்று உட்கார்ந்திருந்தான் அம்மன்னன். பஞ்சேந்திரியங்களையும் அடக்கி யோகத்திலிருப்பவர் எந்நிலையில் இருப்பார் என்பதைக் காட்டுவதுபோல் தோன்றிற்று அவனது நிலைமை! அவனது நரைத்த மயிரும் நரைத்து நீண்ட மீசையும் வாடின முகமும் மந்தமான அவ்வெளிச்சத்தில் உண்மையான அவரது வயதை இரட்டித்துக் காட்டின. நெற்றியில் காணப்பட்ட வரைகளுக்கோ கணக்கில்லை.

இங்ஙனம் இருந்த அரசர், தன் மனைவியை நிமிர்ந்து பார்த்தார். பக்கத்தில் உட்கார்ந்த இராணி, இருந்த விடத்தில் வேரூன்றிவிட்டாள். இருவரும் கொஞ்சநேரம் பேசவில்லை. கடைசியாய் இராணி "என் அரசே, இது என்ன மனக் கவலை? உங்கள் முகவாட்டத்தைக்கண்டு என்மனம்—" என்று கேட்பதற்குள், அரசன் "பெண்மணியே, இன்று மாலை முதல் இதுவரையில் சென்றுபோன நாழிகைகள் வருஷங்களாய் மாறித் தங்களுடைய அடையாளங்களை உன் முகத்திலும் கண்களிலும் நிலை நாட்டிவிட்டன போலும், நீ என்ன பெரிய கிழவிபோ லாய்விட்டாய்!" என்று மஹா வெறுப்புடன் பிரதியுத்தரம் திருப்ப, இராணி "பிராணநாதா, தங்கள் முகத்தைச் சபையில் கடைசியாய்ப் பார்த்தது முதல் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நமது நாட்டுக்கு ஏதோ பெருங்கேடு விளையுமோவென்று பயப்படுகிறேன். அக்கவலையால் முகம் ஒருக்கால் வாடியிருக்கலாம். அவ்விஷயத்தை அடியேன் அறியக்கூடுமானால்—" என்று வினவிக் கொண்டிருந்தாள்.

அரசன் "அதற்கென்ன ஆக்ஷேபனை? எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தூரம் தெரிந்துகொள். யாருக்குத் தெரிந்துதான் என்ன செய்யப் போகிறோம்? சுமதியும் வந்தால் பார்க்கட்டும். அன்று பிருதுவி ராஜா இட்டசாபம் ஒவ்வொரு இராஜபுத்ரக் கூட்டத்துக்கும் நன்றாய்ப் பலிக்கின்றது; பலிக்கட்டும். இதோ இக்கடிதத்தைப் பார்ப்பாய்!" என்று ஏதோ கனவில் பேசுகிறவன்போல் பேச, அவருடைய வார்த்தைகளும், குரலும், வெறுப்பும், இராணிக்குச் சொல்லவொண்ணா

அச்சத்தை விளைத்தன. கடிதத்தைப் பார், என்று சொல்லியும் அவள் கையை நீட்டுவதற்குப் பல நிமிஷங்கள் ஆய்விட்டன.

அரசன் இடது கைப்புறம் திரும்பித் தன் நாற்காலியைப் பார்க்கின்றான். இராணியும் அங்கிருந்தே கடிதத்தை எடுக்க எத்தனிக்கின்றாள். அந்த நாற்காலி முன்னிரவில் லலிதை பார்த்தபடியேதான் இருக்கின்றது. அதே காகிதங்களும், ஏடுகளும், புஸ்தகங்களும், அதே இடங்களில்தான் இருக்கின்றன. முன்னெரிந்த விளக்கேதான் இப்பொழுதும் எரிகின்றது. ஆனால் ஒரு வித்தியாசம்; நடுவில் இருந்த ஒரு காகிதத்துக்குப் பதிலாய் இப்பொழுது ஒரு சிறிய காகிதம் இருக்கின்றது. அக்காகிதத்துக்கு யாளிக்குறியல்லவா பதித்திருந்தது? இந்தக் காகிதத்துக்கு ஒரு பிறைச்சந்திரன் அடையாளமாக முத்திரை போட்டு இருக்கின்றது. அதைக் கையில் எடுத்தாள் இராணி. அரசன் முகத்தைக் கடுத்துக்கொண்டான்.

அதற்குள் மாடியில் காலடிச் சப்தம் கேட்டது. இன்னார் வருகிறார் என்பது இருவருக்கும் விளங்கிற்று. ஒரு நொடியில் அரசன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு முகத்தை மலரவைத்துக்கொண்டான். பக்கத்தில் இருந்த விசிறியை எடுத்துக்கொண்டு இராணி சற்றே விசிறிக்கொண்டாள். அறையில் வந்துசேர்ந்தவன் சுமதி. தன் மனக் குழப்பத்தைத் தன் மந்திரியிடம் கூடக்காட்டிக்கொள்ள அரசனுக்கு இஷ்டமில்லை, தன்னால் கூடியமட்டும் அமைதியாய் இருப்பதற்கு நடித்தபோதிலும் அவன் முகம் மட்டும் வெளுத்தே யிருந்தது. மந்திரி அறையில் நுழைந்ததும் அரசன் "சுமதியாரே, உமக்காகத்தான் காத்திருக்கின்றேன். எல்லாச்சமயங்களையும்விட இப்பொழுதுதான் உமது யுக்தியான ஆலோசனை எனக்கு வெகு அவசியமாய் வேண்டியிருக்கின்றது. இராஜபுத்திரர்கள் பிரம்மாவினுடைய தோள்களிலிருந்துண்டானதாக வேதங்கள் கூறுகின்றன. தோள்வலிமை மட்டும் எங்களிடத்தில் குறைவில்லாமால் இருக்கின்றது. எங்கள் குலங்களுக்குத் தெய்வம்போல் நின்று நல்வழி காட்டும் பிராமண உத்தமர்களான மந்திரிகள் அல்லவா எப்பொழுதும் எங்களை நேர்வழியில் நடத்தவேண்டும்? உம்மைப்போன்ற மந்திரிகள் தேசத்துக்கு மனம் போலேயாம். நாங்கள் எல்லாம் தேசத்துக்குத் தோள்கள், நீங்கள் ஆலோசனை செய்து சரியான மார்க்கத்தைக் காட்ட நாங்கள் காரியத்தை முடிக்கவேண்டும். அவ்வளவுதான். எப்படி விபரீதமாகின்றது காலத்தின் கோலம்? நாம் ஒன்று நினைக்கின்றோம்; 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும் அன்றியது வரினும்வந்தெய்தும்—ஒன்றை, நினையாது முன் வந்து நிற்பினும் நிற்கும்—எனையாளும் ஈசன் செயல்' அல்லவா? நிற்க, படியும் அக்கடிதத்தை" என்று அதைக் காட்ட, இராணி தன் கையில் வைத்திருந்த கடிதத்தை மந்திரியிடம் கொடுத்து "ஐயா சுமதியாரே! அரசர் தம் ஆவேசத்தில் உம்மை உட்காரக்கூடச் சொல்லவில்லையென்று வருந்தவேண்டாம். உட்காரும் இவ்வாஸனத்தில்" என்று ஒரு ஆஸனம் காட்ட, அதனருகில் நின்றுகொண்டே மந்திரி கடிதத்தைப் படித்தான். அரசன் "காந்திமதி! நீதான் இராஜபுத்திரி: மகிழ்ந்தேன் உனது புத்திக்கு. நன்று ஞாபகமூட்டினாய். என் அவசரத்தில் மந்திரியாரைக்கூட உட்காரச்சொல்லவில்லை. என்ன மறதி எனக்கு?" என்றான். மந்திரி இதைக் கவனியாமலே அச்சிறுவிளக்கில் கஷ்டத்துடன் படித்துக்கொண்டிருக்கவே, இராணி "சேடி! இங்கு ஒரு பெரிய கொத்து விளக்கை ஏற்றிவை. இன்று என்ன அரண்மனையில் எல்லாரும் தூங்குகிறார்கள் போலும்!" எனக் கடிந்தாள். உடனே ஒரு பெண் எகிப்து தேசத்து மாதிரியாய்ச் செய்யப்பெற்ற ஒரு பித்தளை விளக்கில் பிரகாசமான தீபத்தை ஏற்றி அவ்வறையில் கொண்டுவந்து வைத்து உடனே மறைந்தாள்.

அறையில் மௌனம்; அரை நாழிகையாயிற்று. அரசன் "சுமதியாரே, நீர் பலமாய்ப் படியும், நமது இராணியும் சேட்கட்டும்" என சுமதி படிக்கின்றான்.

"சர்வ வல்லவரான அல்லாவின் துணையை முன்னிட்டு, உதயபுரியரசர் பிரதாபசிங்கருக்குச் சுல்தான் ஆமத்பாக்ஷா சாகிப் பகதூர் சலாத்துடன் கொடுக்கும் உத்தரவு:—

நாம் உமது புத்திரி லலிதாதேவியின் அழகு குணம் வயது முதலிய எல்லாவற்றையும் கேட்டோம். அவள் அழகும் கம்பீரமும் சொல்ல முடியாது. அவளை நமது மஹாராணி

யாக்கிக் கொள்ளாமல் காலத்தை வீணில் கழிப்பதில் நாம் இஷ்டப்படாமல், கூடிய சீக்கிரத்தில் அம்மாது சிரோமணியை மணம் செய்துகொள்ள விரும்புகிறோம். இதைக் கேட்டு நீவிர் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்ளுதல் நல்லது; நமக்கும் அங்ஙனம் நடப்பதே கோரிக்கை. இல்லையேல் வீணில் இராஜபுத்திர இரத்தம் நிலத்தின்மேல் வழிந்தோடும். நாம் மட்டும் நினைத்த காரியத்தை முடிக்காமல் இருப்பது என்றுமில்லை. இதற்குமுன் நம்மவர் பலர் இம்மாதிரிச் சம்பந்தம் செய்தும் இருக்கின்றனர். ஞாபகப் படுத்தினோம். சம்மதித்தால் இரு திறத்தாருக்கும் க்ஷேமமுண்டு. இல்லையேல் கத்தியிருக்கின்றது; சேனையிருக்கின்றது. விரைவில் பதில் வரவேண்டுகிறோம்.

என் வசந்தமந்திரமும் ஸுவர்ணஸரஸும் லலிதையென்னும் கிளியில்லாமல் ஒளியற்று எமக்கு இன்பம் பயக்காமல் துன்பம் பயக்கின்றன.

—சுல்தான் ஆமத்பாக்ஷா"

படித்து முடிவதற்குள் இராணி மூர்ச்சையடைந்து அரசன்மேல் சாய்ந்து விட்டாள். இருவரும் விழிக்கின்றார்கள். மந்திரி பக்கத்திலுள்ள விசிறிகொண்டு சற்று விசிறினான்; அரசன் கண், மார்பு முதலியவற்றைச் சற்றே தடவிக்கொடுத்தான். தேற்றித் தெளிந்த இராணியைப் பார்த்து இராஜன் "காந்திமதி, நீ இராஜபுத்திரி என்பதை மறந்தாயோ? சுத்த வீரருடைய இரத்தம் இன்னும் உன் தேகத்தில் ஓடவில்லையா? ஏதோ ஒரு மிலேச்சன் தாறுமாறாய் எழுதிய கடிதத்தைப் படித்தால் இங்ஙனமா தைரியத்தைக் கைவிட்டு மூர்ச்சையடைவது?" என்று பலவாறாய்த் தன் மார்பின்மேல் அவளைத் தாங்கிக்கொண்டு, "சுமதியாரே! இக்கடிதம் போகும் மாதிரியைப் பார்த்தீர்களா? மேனாள் பரசுராமன் க்ஷத்திரியர்களைக் கருவறுத்துவிட, சயம்பு மலையில் அக்னி லிங்கத்தினின்றும் தவமகிமையால் இந்து தேசத்தைக் காப்பாற்றப் பிறந்த இராஜபுத்திரர் குலத்தில் நான் அவதரிக்கவில்லையா? இந்தப் பூனைக்கு நானா பயப்படுவேன்! உதயபுரியரசர்கள் எவர்தான் இதுவரையில் யுத்தத்துக்குப் பயந்து ஓடினவர்கள்? அதிலும் ஒரு மிலேச்சனுக்குப் பயந்து என் கண்மணியைக் கொண்டுபோய்த் துலுக்கனுக்குத் தானம் செய்வேனா? உயிர்ப்பிச்சை கேட்கும் பேடியோடு ஒருவனாய் என்னையும் எண்ணினானோ? பேதை! மதிகெட்டு உளறுகிறான்; என்னாவியுள்ள மட்டும், என்னுடன் ஒரு இராஜபுத்திரனாவது உயிருடன் இருக்கும் வரையிலும்; என்னாட்டினுள்ளே எந்த மிலேச்சன் நுழைவானோ, பார்க்கின்றேன்? இரத்த வெள்ளமாம்! இரத்த வெள்ளம்! நிலத்தின்மேல் வழிந்தோடுமாம்! இரத்த வெள்ளத்தைப் பார்த்துப் பயந்தவர்களோ எம் குலத்தோர்? சபாஷ்! நன்றாய் இருக்கின்றது! கத்தியும் சேனையும் உடையவனாம் இவன்! இவன் கத்தியின் கூர்மையும், சேனையின் வலிமையும் இக்கை முன்னர் தெரிகின்றது! எவ்வளவோ இடங்களில் இம்மிலேச்சர் வீரத்தைப்பற்றிக் கேட்டிருக்கின்றேன். தேசாபிமானம், கருணை, யோக்கியதை, எஜமான விசுவாசம் முதலான வீரர்களுக்குரிய குணங்கள் எல்லாவற்றையும் ஒழித்து, 'கூலிக்கு மாரடிக்கும்' சேனையின் திறமை எனக்குத் தெரியாது போலும்! கொள்ளையும் திருட்டுந்தானே கூலிப்படையின் நோக்கம்! சுமதியாரே! நமது சேனாபதி மங்களநாயகர் முன்னால் எந்தச் சேனைதான் முன்னிற்கும்! உடனே அந்தப் பிராமணரைக் கூப்பிட்டு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து விடியுமுன் ஊருக்கு வெளியே அனுப்பிவிடும்; வருவது வரட்டும். இதோ என் முத்திரையை எடுத்துக்கொள்ளும். இப்பொழுது முதல், சேனையைத் தயார் செய்கிறேன். அவ்வேலையை முடித்துவிட்டு நீர் என் முன்னிலையில் வந்தால் போதும்"—என்று முத்திரையைக் கொடுக்கின்றான். "நீர் திரும்பி வருமுன் மங்களநாயகரை வருவழைக்கின்றேன்—நான் கிழவனாய்ப் போய்விட்டபடியால் பயந்துவிடுவேன் என்று எண்ணினான் போலும் அக்கள்வன். எனக்கு மகனில்லை. ஆகையால் இவ்வழியாய் என் இராஜ்யத்தைக் கைப்பற்றலாம் என்ற நோக்கமே முக்கியமாய் இருக்கலாம்! ஆயினுமென்ன? என் மருமகன் ஜயபாலனில்லையா? அவனுமா இவ்வாபத்தில் கைவிட்டுவிடுவான்? மேலும் சுகுணபுரத்திலே எனது அத்தை மகன் வீரபத்தி

ரன் இல்லையா? இராஜராஜேசுவரி கிருபையால் நமது மாளவதேசம் மிலேச்சர் கையில் கிட்டாது. இது நிச்சயம்! அவன் மட்டும் நம்மீது படையெடுப்பானானால் நம் மலைகளும், நமது காடுகளும், நமது நதிகளும் அவன் சேனையைக் கொல்ல ஆலகால விஷத்தை யல்லவா உண்டுபண்ணும்.” என்று பலவிதமாய்ப் பேசி மஹா கோபத்தோடு அரசன் ஆர்த்தான். மந்திரி நின்ற விடமிருந்து அசையவில்லை. இராணி வாய் திறக்கவில்லை. இது காறும் அடங்கியிருந்த கோபம் ஒருவாறு வழி யேற்பட்டு வெளிப் புறப்பட்டதே என்று இருவரும் எண்ணினர். இல்லையேல் ஏக்கத்தை உண்டாக்கி உயிரையே கொன்றுவிடும் என்று பயப்பட்டனர்.

மந்திரி என் செய்வான்? சமயம் பார்த்தல்லவா பேசவேண்டும்? விஷயமோ மிகக் கஷ்டமானது; யோசனை அதிகம் வேண்டியிருக்கிறது. இராணியும் அசையவில்லை. தன் வார்த்தைகளுக்கு இருவரும் பதில் சொல்லாமல் தலைகுனிந்து நிற்கவே அரசன் சற்றுச் சும்மாவிருந்து, பிறகு “மந்திரீ, என்ன பேசவில்லை. என்னவோ ஆழ்ந்த யோசனையில் இருக்கிறீர். நான் சொல்லியபடி உடனே கடிதம் எழுதியனுப்புவதில் என்ன தப்பு? ஒரு கணம் தாமதிப்பதும் நமது இராஜ வம்சத்துக்குக் குறைவு. ஓரே வரிதான் எழுத வேண்டியது; ‘நீ சொன்னபடி நடக்க முடியாது; சண்டையில் உன்னைப் பிளப்போம்.’ அவ்வளவே போதும். நம் கன்னிகையை வேண்டி ஒரு மகமதியன் தூது விட்டான் என்பதைக் கேட்டாலே பலர் நகைக்க மாட்டார்களா? அதை எண்ணுங்கால் என் மனம் பதறுகின்றது. ஒரு நிமிஷமும் அந்தப் பிராமணர் இனி இங்குத் தங்கக்கூடாது. விடியுமுன் அவரை அனுப்பிவிட்டுத்தான் வேறு வேலை பார்க்கவேண்டும். நமது கையில் பிடித்திருப்பது வில்லும், இடுப்பில் தொங்குவது கத்தியுமா—அல்லது தட்டுக்குச்சியா? சொல்லும் ஐயா” என்று அரசன் மறுபடியும் கர்ஜிக்க, வேகம் சற்றுக் குறைந்தது கண்டு சுமதி “அரசே! நீர் சொல்வதில் ஒன்றும் தப்பில்லை. நாளை யனுப்பிவிடலாம் அப்பிராமணரை” என்றான்.

“என்னவென்று சொல்லியனுப்புவது? நான் இப்பொழுது சொன்னபடிதானே. ஆனால் உடனே எழுதும் ஒரு நிருபம். அதற்கு நம்முத்திரை வைத்துத் தயாராய்ச் செய்திருப்போம்.”

“எழுதுவதைப்பற்றித்தான் சற்று யோசிக்கவேண்டும்—”

“யோசனை என்னவய்யா? யோசனையா! இவ் விஷயத்தில்பெண்பிள்ளைகள்அல்லவா யோசிப்பார்கள்! நாம் வீரசிங்கங்கள்; நாம் யோசிக்க வேண்டிய தென்ன? ஒரே யோசனை தான்; எனது தீர்மானமே சரி யென்று தோன்றுகின்றது. இல்லையேல் உமது அபிப்பிராயத்தைச் சொல்லும் பார்ப்போம்.”

“இராஜாதி ராஜனே! தாங்கள் சொல்லுகிறபடி கடிதம் எழுதியனுப்பினால் சண்டை நடப்ப தென்னவோ நிச்சயம். ‘எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவதென் பதிழுக்கு.’ ஆகையால் நமது நிலையைத்தீர்க்காலோசனை செய்து பதில் அனுப்பவேண்டியது. பூபால, கவால, பாதபுரத்தாசர்கள் உமது எதிரிகள். அவர்கள் பலதடவை உமது நாட்டைக் கைக்கொள்ள முயற்சி செய்திருக்கின்றனர் என்பது உமக்குத் தெரியுமே. இப்பொழுது நாம் முரட்டுத்தனமாத் துருக்கருக்கு பதில் எழுதிவிட்டால் அவர் படையெடுத்து வரும்போது தீயை மலைக்காற்று வளர்ப்பது போல் தக்கபடி யெல்லாம் சூழ்ச்சி செய்து நம்மை மடக்குவர். கோடாலியுடன் காம்பு சேராமல் அல்லவா பார்த்துக்கொள்ள வேண்டும்? இப்பொழுது சுல்தான் ஆமத், நம் லலிதா தேவியைத் தனக்குக் கொடுக்கும்படி கடிதம் எழுதி விட்டதினால் என்ன கெட்டுப்போயிற்று? அந்தப் பிராமணர் வரவினாலும் குடி முழுகிப் போகவில்லை. யோசிப்போமாயின் இதில் செய்ய வேண்டிய காரியம் ஒன்றேதான். என் அற்ப புத்திக்கெட்டிய வரையில் சொல்லுகிறேன். நாம் எழுதும் கடிதம் அக்கொடியோன் மனதுக்கு இன்பமாய் இருக்கவேண்டியது; இது முதல் காரியம். இரண்டாவது அவன் இஷ்டப்படி நடத்த இப்பொழுது சமயம் இல்லை யென்று ஏதோ காரணங்காட்டிக் காலதாமதம் செய்யவேண்டியது. அதற்குள் முடியுமானால் ஜயபால ராஜனை வேண்டி லலிதையின் விவாகத்தை முடித்துவிட வேண்டியது. காலதாமதம் ஏற்படாவிடில் சீக்கிரத்தில் நமது கோட்டைகளும் சேனைகளும் தயார் ஆகமாட்டா. சேனைகளைப் பழக்கிச் சீர்படுத்துவது இலேசான காரியமா? பாதி சைன்னியம் தற்காலம் அரவல்லிமலையில் இருக்கின்றது. மற்றப் பாதி முஸ்தீபாய் இல்லை. இவற்றையெல்லாம் சமுகத்தில் ஆலோசனை பண்ண வேண்டும். சுல்தான் படையெடுக்கத் தாமதமானால்தான் உமது மருமகன் ஜயபாலனிடமிருந்தும் வீரபத்திரரிடமிருந்தும் உமக்கு உதவிவரச் சௌகரியம் ஏற்படும்—”

“சுமதியாரே! அதெப்படி? நாம் அக்கொடிய மஹமதியனுக்கு நம் குழந்தையை மணம் செய்துகொடுப்பதாய் வாக்களித்து, பின் நீ சொல்லும்படி செய்தால் தன்னை ஏமாற்றினதாக எண்ணமாட்டானோ? ஒரு இராஜபுத்திரனுக்கு இதைவிட என்ன குறை ஏற்படவேண்டும்? நாம் வாக்குத் தவறினால் அதுவே போதாதா? சுல்தான் ஒருவனே நம்மைச் சின்னபின்னப் படுத்தினாலும் நாம் செய்த நம்பிக்கை மோசத்துக்குத் தக்க தண்டனையே யாகும். நீர் சொல்வது—”

இதற்குள் மந்திரி சற்று உரப்பாய் “இராஜேசுவரா! தீயோரைத் தீய வழியில்தான் வெல்லவேண்டும். தர்மசாஸ்திரம் பார்ப்பது நல்லவர்களை எதிர்க்கும் போதல்லவா? இந்தச் சுல்தான் நம்முடன் தர்ம யுத்தமா செய்கின்றான்? சூழ்ச்சியால் வெல்வதே நன்று! இவ்விஷயத்தில்நேர்வழி போவதுதப்பு. துரோணாசாரியரைக் கொல்லத் தர்மபுத்திரர் ஒருவகையாய்ப் பொய் சொல்ல வில்லையா? அதுவேபோல் இப்புறமும் அப்புறமும் பிடிகொடாமல் நமது கடிதம் இருக்கவேண்டும்; வார்த்தைகளில் சிக்கிக்கொள்ளக்கூடாது. அவ் விஷயத்தில்தான் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். தக்கபடி கடிதம் எழுதி அனந்த பட்டரை விடியுமுன்னேயே அனுப்பிவிடுகிறேன். நாளை காலையில் ராமேசருடன் இரகசியமாய் எல்லாவற்றையும் விபரமாய்க் கலந்து பேசுவோம். அவர் மூலமாய் ஜயபாலருக்கு இவ்விஷயங்களை எடுத்துச் சொல்லி, அவருடைய உதவியையும் கோருவோம். கூடுமானால் கல்யாணத்தைச் சீக்கிரம் முடித்துவிடலாம். அதுவே செய்யவேண்டிய வேலைகளுக்குள் மிக முக்கியமானது. பின் நடப்பது நடக்கட்டும். பார்த்துக்கொள்ளலாம்” என்று சொன்னான்.

இராணி “பிராணநாதா! சுமதியார் சொல்வதே சரியென்று எனக்கும் தோன்றுகின்றது. நான் என் தந்தை வீட்டில் சிறுபெண்ணாய் இருந்தகாலத்தில் இக்கொடிய மகமதியப் படைகளின் கொலைத்தொழிலை அறிந்திருக்கிறேன். அனாவசியமாய் எதிரியை வீட்டுக்கு அழைப்பது நன்றன்று. மேலும், சாம தான பேத தண்டம் என்னும் நான்குவித உபாயங்களையும் தேடவேண்டியது அரசன் கடமை யல்லவா? அந்த மிலேச்சனை நாம் சொல்லும் வார்த்தைகளை நம்பும்படி செய்யவேண்டியது தான்; ஜயபாலருடைய சம்பந்தத்தை அடைய வேண்டியதுதான்—நாம் என்ன காலத்தில் பிறந்து இருக்கிறோம்? ஈசா! நம் குழந்தைகளின் க்ஷேமத்தை நாம் கண்ணாரக்காண்பது கஷ்டமாய் இருக்கின்றதே! என்று இக்கவலை தீரும்! என் கண்மணி லலிதை, பாவியான என் வயிற்றில் பிறந்த தோஷமோ, அவள் கல்யாணத்துக்கு இத்தனை இடையூறுகள்!” என்று கண்ணீர் வடித்தாள்.

“மங்கையர்க்கரசே! பேதைபோன்று நீ சிலநாளாய் உன் குலமேன்மையையும் மறந்து வீணில் கவலைப்படுகின்றாய். உன் மனதில் பயம் வரவேண்டிய காரணம் யாது? மனதைத் தேற்றிக்கொள்வாய்; மனதில் எண்ணவும் அயோக்கியமான ஒரு அற்ப சங்கதிக்கு—” என்று அரசன் அவளைத் தேற்றிக்கொண்டிருந்தான்.

“இறைவனே! என் மனம் கடல் அலைகளில் அகப்பட்ட மரத்துண்டுபோல் தத்தளிக்கின்றது” என்று துக்கம் ஆற்றாமல் கண்ணீர்விட்டாள் காந்திமதி. அரசனும் மந்திரியும் அவளைத்தேற்றினர். பிறகு அரசன் “சுமதியாரே! நீர் உடனே உட்கார்ந்து முறைமை கோணாமல் இரண்டு கடிதங்கள் எழுதும். ஒன்று, அம்மானிடப்பெயர் வைத்துக்கொண்டிருக்கும் இராக்ஷதனுக்கு; மற்றொன்று நமது ஜயபாலனுக்கு. இராமேசருடன் சங்கதி சொல்லி யனுப்புவதுடன், கடிதமும் போகட்டும்” என மந்திரி எழுதவாரம்பித்தார்; அப்பொழுது தன் மனையாளை நோக்கி “என்னருமைக் காதலி! நாழிகையாயிற்று. நிசியாயிருக்குமென்று எண்ணுகிறேன். நீ

படுக்கைக்குப் போ; இதைப்பற்றி இனிக் கவலைப்படுவது அனாவசியம். உன் விருப்பப்படியே கடிதம் எழுதியனுப்புகிறேன். நாளைமுதல் நமது சேனைகளையும் இரகசியமாய்த் தயார் செய்யப் பிரயத்தனம் செய்வோம்.—நம் குலதெய்வமான இராஜராஜேசுவரி நம்மைக் காப்பாற்றுவாள்" என்று இருவரும் ஒருமிக்கக் கைகூப்பி அம்மையைத் தியானம் செய்தனர்.

இதற்குச் சற்றுமுன்தான் லலிதாதேவி கனவுகண்டு, விழித்தெழுந்து, தன் தகப்பன் அறையில் பேசும் தாழ்ந்த குரலைக்கேட்டு விட்டு மறுபடி படுத்துத் தூங்கினாள். காந்திமதி தன் அறைக்குப் போகும் வழியில், சந்தடி செய்யாமல் தன் மகள் அறையில் நுழைந்து பார்த்தாள். விளக்கு வெளிச்சத்தில் சற்றே வெளுத்தமுகம் பூர்ணசந்திரன் உதயமானதுபோல் விளங்கிற்று. கொஞ்சம் நிதானித்து ஆனந்திக்கவே, குழந்தையின் முகம் தூக்கத்தில் புன்சிரிப்பினால் மலர்ந்தது.

"ஐயோ பாவம்! குழந்தை லலிதை தூக்கத்தில் சந்தோஷப்படுகிறாள். துக்கமென்பது இன்னதென்று அறியா இளங்குழந்தை, என் கண்மணி! என்ன நினைவோ, ஏதோ! என் உயிரே! நன்றாய்த் தூங்குவாயாக— இராஜராஜேசுவரீ! நீ என் மனதைக் குளிரச் செய்து ஒரு நிலையில் வைத்தால் உனக்கு நிலைமாலை சேர்த்துவைக்கின்றேன்! தாயே! உனது அருளால் என் கண்மணியைக் காப்பாயாக!" என்று வேண்டிக்குழந்தையைமுத்தமிட்டாள்.

இன்னமும் லலிதையின் முகம் வியர்வையால் நனைந்தேயிருந்தது. அதன் காரணம் காந்திமதிக்கு எங்ஙனம் தெரியும்! உஷ்ணமிகுதியால் இங்ஙனம் வியர்க்கின்றதென்று நாற்புறத்திலும் உள்ள ஜன்னல்களை நன்றாய்த் திறந்து வைத்தாள். நந்தவனத்தின் பக்கத்தில் உள்ள ஜன்னலண்டை போனதும் அங்கிருக்கும் பெரிய ஆலமரமும், தோப்பும், இருட்டில் பயங்கரமாய் விளங்கின. ஆலமரத்தைப் பார்த்ததும், முன்னை ஒருநாள் தன் கணவனும் தானும் மந்திரியோடுகூட நந்தவனத்தில் லலிதையின் கல்யாணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, மரத்தின் மேலிருந்து காக்கைகள் சண்டை பிடித்துக் கொண்டு விழுந்தது ஞாபகத்துக்கு வந்தது. எவ்வளவோ தடவைகளில் இவ்விஷயம் அவளுக்கு ஞாபகம் வந்து அவள் மனதைச் சஞ்சலப்படச் செய்தபோதிலும், இன்று அந்நினைவு புண்ணில் வேல்மாட்டி உருவுவதுபோல் தோன்றிற்று. "எல்லாம் எனையாளும் ஈசன் செயல்" என்று சொல்லிக்கொண்டே மறுபடி தன் அருமைக் குழந்தையைப் பார்த்து விட்டு, "கண்ணே! உன்னையல்லவா நம்பி நான் உயிரை வைத்திருக்கின்றேன். உன் கல்யாணத்துக்கும் க்ஷேமத்துக்கும் எவ்வளவு விக்னங்கள்! உனக்குத் தெரிந்தால் எவ்வாறு வருந்துவாய்! உன்பால் வைத்த அன்பால் உனக்கு முன்னே யான் பெற்று இழந்து போன ஜ்யோதிஸ்வரூபனையும் நினைக்காமல் இருக்கின்றேன். ஈசா! தீராயோ என் கவலை?" என்று ஆற்றாத் துக்கத்துடன் மனத்துள் பாடிக்கொண்டே தன் அறைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஒரு நிமிஷந்தான்!

"பையா! பரீக்ஷை நெருங்கி விட்டதே! படிக்க வேண்டாமா?" என்றார் சேஷாசலத்தின் தகப்பனார். "அப்பா, ஒரு நிமிஷந்தான்! வந்து விட்டேன்" என்று சொல்லிவிட்டுத் தன் நண்பனுடன் பேச உட்கார்ந்தான் சேஷாசலம். பேச்சு முடிய அரைமணியாயிற்று பள்ளிக்கூடத்தில் நடந்த சண்டையைப்பற்றி. பிறகு போனான் படிப்பதற்கு உள்ளே!

ஒரு நிமிஷந்தான்! அந்த நிமிஷத்தில் எவ்வளவு அடங்கி யிருக்கிறது தெரியுமா? உயிரும், உயிர் நீங்குதலும், தேறுவதும் தவறுவதும், சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதும், வார்த்தை தப்புவதும், நல்லதும் கெட்டதும் எல்லாம் அந்த ஒரு நிமிஷத்தில்தான்.

'டாமனும் பிதியஸ்ஸும்' என்ற கதையை நீங்கள் வாசித்திருப்பீர்களா? அந்தக் கதையின்படி குறித்தகாலந் தவறினால் பிதியஸ்ஸிற்

குப் பதிலாக டாமன் உயிர்கொடுக்கச் சித்தமாயிருப்பதாக வாக்களித்தானும். குறித்த காலம் நெருங்கவே டாமனைத் தூக்கிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தன் நண்பனுக்காகத் தன் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருக்கும் வீரனைக் காணப் பல்லாயிரம் ஜனங்கள் கூடினர். காலமும் நெருங்கிற்று. இரண்டு நிமிஷந்தானிருக்கிறது டாமன் கழுத்தில் உயிர்ச்சுறுக்குக் கயிறும் இடப்பட்டது. "பிதியஸ் வருவானா? இத்தனை நாளாய் வராத பிதியஸ் இன்று வரப்போகிறானா? நன்றி கெட்டவன்" என்று அனைவரும் பழித்தனர். ஒரு நிமிஷம் அக்கூட்டம் முழுவதிலும் சந்தடி என்பதேயில்லை. கொஞ்சம் பொறு! கொஞ்சம் பொறு! என்றசத்தம் இடையேகேட்டது. சத்தத்தைக் கேட்டஅரசன் வேலையாளர் முதலியவர் நின்றனர். அந்த நிமிஷத்தில் பிதியஸ் விரைக்க விரைக்க ஓடிவந்தான். டாமனும் தன் உயிர் மீளப்பெற்றான். அந்த ஒரு நிமிஷமல்லவோ அவனைக் காப்பாற்றிற்று!

ஒரு நிமிஷந்தானே! அந்த நிமிஷத்தின் அருமை தெரியுமா உங்களுக்கு? குறுக்கெழுத்துப் பரீக்ஷைக்கு நீங்கள் போயிருக்கிறீர்களா? அதில் உயர்தரப் பரீக்ஷைக்கு (Advanced Grade) நிமிஷத்திற்கு 120 வார்த்தைகள் வீதமாக ஒரு பரீக்ஷகர் வாசிக்கிறார். பரீக்ஷைக்கு வந்திருக்கும் மாணவர்கள் அவர் சொல்வதைக்கேட்டு உடனுக்குடனே புத்தகத்தில் எழுதி, பிறகு அதை ஸாதாரண எழுத்தில் (Long hand) எழுத வேண்டும். பரீக்ஷை 10 நிமிஷம் நடக்கிறது. பரீக்ஷையில் தேறுபவர், 100-க்கு 7 தப்பிதங்களுக்கு மேற்படாமல் எழுதவேண்டும்.

ஒரு நிமிஷநேரம் எழுதாமலோ, அல்லது எழுத முடியாமலோ அந்த மாணவர்களில் ஒருவனை இருக்கச் சொல்லுவாயா? அந்த ஒரு நிமிஷமே, அவன் தேறுவதையும் தவறுவதையும் தெரிவிக்கின்றது. அந்தப் பரீக்ஷையில் தேறுவதால் பலவித லாபங்களை யடைய இருக்கும் ஒருவன் ஒரு நிமிஷந்தானே என்று சும்மாயிருப்பானா?

நிமிஷ நேரங்களை ஸரிவரச் செலவழித்தல் எவ்வளவு முக்கியமானது தெரியுமா? எனக்குத் தெரிந்த நண்பன் ஒருவன் நிமிஷ நேரங்களை ஸரிவரச் செலவு செய்தே பல விஷயங்களை அறிந்தான். குறுக்கெழுத்துக் கற்றுக் கொள்ள என்நண்பனுக்கு ஆசையாயிருந்தது. அவன் மிகவும் ஏழையானதால் புத்தகம் வாங்கப் பணமில்லை. தன் ஸ்நேகிதன் ஒருவனுடைய புத்தகத்தை வாங்கித் தன் கையெழுத்துப் புத்தகத்தில் எழுதிக்கொண்டான். எங்கேயாவது போயிருக்கும்போது ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் மிகுந்திருந்தால் அவ்வேளையில் ஒரு எழுத்து இரண்டு எழுத்துக்களை எழுதிவந்தான். ஆறுமாதத்திற் கப்புறம், புத்தகமுள்ளவனும் இவனும் எவ்வளவு கற்றோமென்று ஒத்திட்டுப் பார்த்தனர். புத்தகம் உள்ளவன் பத்துப் பக்கம் ஸரியாய் படித்தவனில்லை. புத்தக மில்லாதவன், முழுவதையும் முடித்தாயிற்று. நிமிஷ நிமிஷமாய்ப் படித்ததன் பலனில்லையே! எல்லாம் ஒரு நிமிஷந்தானே!

சிறுவர்க்கான நீதிகள்.

1. அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும்.
2. காலை மாலை ஈசர்த்து செய்யவேண்டும்.
3. படிப்பதற்குக் காலத்தை யேற்படுத்திக் கொண்டு அக்காலத்தில் சோம்பலின்றிப் படிக்கவேண்டும்.
4. வகுப்பில் எல்லாப் பாடங்களையும் கருத்தாய் வாசிக்கவேண்டும். ஏதேனும் ஒரு பாடத்தில் குறைவானால் அவன் ஆயுள்முற்றும் இன்னபாடத்தில் முட்டாள் என அழைக்கப்படுவான்.
5. திருடு முதலிய தீய காரியங்களைச் செய்தல் கூடாது.
6. சுத்தமான நீரில் நாடோறும் ஸ்நானஞ் செய்தல்வேண்டும்.
7. அழுக்கற்ற சாதாரண வஸ்திரம் தரித்துக்கொள்ளவேண்டும். பட்டுச்சரிகை முதலிய விலை அதிகமுள்ள ஆடைகளைத் தரிக்கப்படாது. படிக்கும் பிள்ளைகள் வித்தையிலேயே புத்தியைச் செலுத்த வேண்டுமென்றி சொகுசான வஸ்திரம் தரித்து வேடிக்கையாய் உலாவப்படாது.
8. ஆபரணங்கள் தரித்துக்கொண்டு அதன் அழகைப்பார்ப்பதிலேயே புத்தியைச் செலுத்தும் பிள்ளைகட்குப் படிப்பு மட்டுப்படும்.
9. சத்துவகுணமான ஆகாரத்தைப் புசிக்க வேண்டும். புத்தியை விபரீதப்படுத்தும் தீய வுணவுகளைப் புசித்தால் சோம்பல் நித்திரை

மயக்க முதலியன வுண்டாகும். உண்டாமையின் கல்வியிற் பிரியம்மட்டுப்படும் பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளுக்கு வித்தை யில்லாமற் போதலுக் கிஃதே காரணமாம்.

10. துன்மார்க்கரோடும் கல்வியிற் பிரிய மற்றவரோடும் சிநேகிக்க லாகாது.

11. சிறுவர், கல்வி விஷயமாய் ஆங்காங்கு செய்யும் உபந்நியா சங்களுக்குச்சென்று அதை யுய்த்துக்கேட்டு அதைப்பற்றித் தம் மினத்தாரோடு பேசவேண்டும்

12. சிறுவர் பலரும் சேர்ந்து சங்கங்கள் கூடிக் கல்வி விஷயமான தர்க்கங்கள் செய்ய வேண்டும்.

13. வாசிக்கும் பிள்ளைகள் தேர் திருவிழாவுக்கும் கலியாணத்திற்கும், விருந்திற்கும், இன்னுமிவற்றை யொத்த விசேஷங்கட்கும் போகப்படாது. இப்படிப்பட்ட விசேஷங்களுக்குப் போவதில் வித்தைக்குக் கெடுதியுண்டாகின்றது. ஷை விசேஷங்கட்குப் பெரியோரே போதல்வேண்டும்.

14. பசி நன்றாயெடுத்தாலன்றிச் சாப்பிடப்படாது. சிற்றுண்டி தின்னக்கூடாது, இது நோயைத்தரும். படிக்கும் சிறுவர் அடிக்கடி நோயாளிகளாய் விடுவதனால் கல்விகுறையும். பரீக்ஷையில் தேறார். தம்மையொத்த சிறுவர் பரீக்ஷையில் தேற, தாம் அபஜயப்படுவரேல் அது அவமானம். பரீக்ஷையில் தேறாதது கொண்டு தற்கொலை புரிந்தவர் பலரென அப்போதைப்போது பத்திரிகைகளா லறியா நிற்கிறோம்.

15. இளமையிலேயே உண்மை, பொறுமை அன்பு, அடக்கம், இரக்கம், பயனில சொல்லாமை முதலிய சற்குணங்களில் பழகவேண்டும்.

16. தீயசொற்கள் பேசாமல் இருக்க, தம்மைத் தாம் எப்போதும் பாதுகாத்து வர வேண்டும். சில தாய் தந்தைகள் கெட்டசொற்கள் பேசுகின்றமையால் அவர்கள் மக்களும் அவ்வாறே பேசுகின்றார்கள். மாதா பிதாக்கள் கெட்ட சொற்கள் பேசாம லிருப்பார்களானால் அவர்கள் பிள்ளைகளுக்கும் அந்த வாசனையேறி, கெட்ட சொற்கள் பேசாமலிருப்பார்கள்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி: 20.—விடை கொடுத்தல்.

உன்னையா னென்று முணரா துரைத்தவெலாம்
பொன்னமருந் தாராய் பொறுக்கென்று-பின்னைத் [தன்
மேனீர்மை குன்றா வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீ ரயோத்தியார் மன்.

அப்பொழுது மந்த மாருதம் நன்கு வீசிக்கொண்டிருந்தது. அதில் ஒருவித மணமும் குணமும் கலந்து மயங்கி விளங்கின. அந்த இளங்காற்று, பஞ்சினும் மெதுவாகப் பட்டாரது தேகத்திற் படுமேனும், அதன் உணர்ச்சி உள்ளத்தை ஒருவித ஆனந்தத்தில் ஆழ்த்தும் என்பது வெளிப்படை. மழைபெய்ய மேலிருந்த மாசுநீங்கிப் பச்சைத் தழைகள் நடுவில் தோன்றும் வெயிலிற் பிரகாசிப்பதுபோல, துயரத்தில் பட்டுத் தவித்து மனமாசு நீங்கி விளங்கிய நள தமயந்தியர் இருவரும் அச்சமயம் அடைந்த ஆனந்தத்தில் பரவசராகிய தல்லாமல், புதிய சோபையுடன் விளங்கினர். பொற்கொல்லனது மட்குகையில் இட்ட தங்கம் உருகி மாசுநீங்கி இயற்கைப் பெருமையுடன் ஜ்வலிப்பதென, காட்டில் அலைந்து, இருவரும் பிரிந்து துய்ரடைந்து, இரவும் பகலும் கவலையிலாழ்ந்த அவரது துயரத்தீயில் வாடி வதங்கிய அவ்விருவரும் அப்போது தமது இயற்கைப் பரிசுத்தத்துடன் பேரன்பொடு பொலிந்து விளங்கினர். அந்த ஸமயம் அவர்க்குண்டாகிய மனத்தாக்கிற்கு ஒப்பிணை கூற முடியாது. உலகத்தில் கஷ்டமென்கிற அளவை யில்லாவிடில் மனிதனது அன்பின் ஆழத்தை அறியக்கூடிய விதமேது? எக்கஷ்டம் வரினும், உள்ளன்பு நீங்காது விளங்கும் பொழுதல்லவா உண்மை அன்பின் ஆழம் அளவிட முடியும்? இல்லற வழியிற் பட்ட மனைவியும் கணவனும் கஷ்டமென்னுங் கடலைக் கடைந்து அன்பெனும் அமுத கலசத்தை அடையவே முயற்சிப்பர் என்பதற்கு, அச்சமயம் நளனும் அவனது இல்லக்கிழத்தியாகிய தமயந்தியும், வாய் திறவாது, ஒருவர் மனத்துள் ஒருவர் கலந்து, இருவர் உணர்ச்சியையும் உணர்ந்தும், வெளிப் புலன்கள் போக்குவரவு அற்று விளங்கும்படி விளங்கியதே வெளியிடும்.

கனவிலன்றி நேரிற் காண முடியாது நெடுநாள் பிரிந்து விளங்கிய அவர்க்கு நேர்நேராகக் கண்டதும் கண்களிலிருந்து வழிந்த நீரே, அவர் மனத்துள் உதித்த அளவுகடந்த எண்ணங்களை வெளியிட்டன வெனலாம். நீர் கசிந்த கண்களே அவரை முதன் முதல் வரவு மேற்றன. ஆனால் தமயந்தி தனக்கும் தெரியாமல் தன்னை இறுகத் தழுவியதும் நளன் நடு நடுங்கினான். அவன் உள்ளம் துடித்தது. தான் அவளிடம் மயக்கத்தின் கொடுமையால் செய்த அபசாரமே, அவனை அப்போது அவ்வாறு நடுங்கச் செய்தது போலும்! அவ்வுணர்ச்சி அவனுக்கப்போது ஒருவேளை யிருப்பினும், அவன் தன்னை வெறுக்காது பேரன்புடன் தேடித் தினமும் காணவிரும்பி, அன்று கட்டிய சேலையன்றி மறுசேலை தரியாது விளங்கிய தமயந்தியின் உண்மை நிலையை மனத்தாலன்றித் தன் கண்முன்னே காண அவன் அசைவற்றுக் கிடந்தான்; பேசமுடியாது திகைத்தான்; தன்னை உடல் தெரியாது இறுகக் கட்டிய அம்மெல்லிய கரங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் எண்ணாதிருந்தான்; அப்படி எண்ணவும் எண்ணமற்றிருந்தான். அப்போதவன் இருந்த நிலைமை வாக்கினால் வர்ணிக்க முடியாதது. அதில் தன்னைப் பற்றிய நினைவே கிடையாதென்பது இம்மியும் பிசகாகாது. வேறு எண்ணங்களும் அதில் அப்போது குடிகொண் டிருக்கவில்லை. அந்நிலைமையை என்னென்று சொல்வது?

தமயந்திக்கோ, தான் தேடிய பொருள் கிடைத்ததென்னும் ஆனந்தம் அளவுகடந்து அவள் மனத்தில் ததும்பி வழிந்து கொண்டிருந்தது. அப்பெரும் வெள்ளத்தில் மூழ்கிய அவள், வெளிப்பார்வைக்கு உயிரற்றவளாகி விளங்கினாள். தனது உயிர்க்குயிராகிய நாதனைக் கண்டதும், அவனை இறுகக் கட்டிய கைகளை அவள் சிறிதும் நெகிழவிட மனங்கொள்ளவில்லை. தன் இதயமும், தனது தலைவனது இதயமும் ஒன்றி ஒலிக்க வல்லவா அவள் இவ்வளவு நாளும் பட்ட கஷ்டம்? தவமிருந்து கடவுளைக் காணும் பாக்கியம் பெற்றவரைப்போல அவள் அப்போது ஆனந்தமடைந்து, உள்ளம் கிளுகிளுத்தாள்.

அவர் இருவரும் ஒருவரை ஒருவர் நெடுநேரம் கண்திறந்து பாராமலே பரவசமாகிக் கிடந்தனர். இவ்வுலகமென்பதை அறியாமலே விளங்கினர்; அவருள் ஒருவரே மற்றொருவரது உலகும் அதில் வாழும் உயிருமாகத் திகழ்ந்தனர். நிலையற்ற இவ்வுலகில் மனிதன் பெறும் பேறுகள் எல்லாம் அச்சமயத்தி லவர் அடைந்த ஸுகத்தினும் பெருமையுடன் விளங்காதென்பது வெளிப்படை. அத்தகைய ஆனந்தத்திலிருந்த அவர் தத்தமது உணர்ச்சியை உணர நெடுநேரமாயிற் றென்பது அநாவசியம். அவர் சற்றே மனந்தெளிந்து தமது உணர்ச்சியை யுற்றதும், தமது விருத்தாந்தங்களை எல்லாம் இம்மியும் ஒளியாது மறவாது வெளியிட்டு விளங்கினர்; பிரிவில் தாம் அடைந்த துயரை விரிவாகச் சொல்லிச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்வர்; தெரியாது தாம் மனத்துள் எண்ணியவற்றை எண்ணமிட்டு அநுதாபப்படுவர். அவரது தன்மையை விவரித்துக் கூறுவது எளிதன்று. பிரிந்தவர் கூடினால் பேசலாகுமோ?

தன் கணவனை அடைந்த தமயந்தி மெல்ல மெல்ல இவ்வுலக உணர்ச்சியை அடைந்தாள்; உவாமதிகண்ட பெருங்கடலைப்போல உள்ளம் பூரித்தாள்; தான் அன்றுவரை அடைந்திருந்த துயரத்தைப் போக்கி இன்பக்கரையில் உலாவி வந்தனள்; தன் இஷ்டம் ஈடேறும்படி செய்த கடவுளிடம் பூர்ண நன்றியோடு விளங்கினாள். அவள் முகம் அப்போது களங்கமற்று விளங்கியது. அதில் உத்ஸாகமும் உள்ளன்பும் தாண்டவஞ் செய்யக் களிப்புக் குடிகொண்டிருந்தது. நளனும், சற்றே தனது செயலைப் பிறர் எவ்வாறு எண்ணுவரோ. என்ற ஏக்கத்தால் மயங்கி இருந்தானெனினும், தனது கஷ்டத்திற்கு முடிவுகாலம் வந்திட்டதென்னும் நம்பிக்கையில் ஆழ்ந்து உள்ளங்களித்து விளங்கினான்.

இவ்வாறு இவர் விளங்கும் நிலைமையைப்பற்றிக் கேள்வியுற்ற வீமமன்னவர் பெருங்களிப்புற்றனர்; நளமன்னவரைக் காணப் பேராவல் கொண்டிருந்தனர். நளமன்னவரும், அவர் குறிப்பிட்ட காலத்தில் தமயந்தியுடன் தமது

உண்மை வடிவோடு வீமரைக் கண்டார்; அவரை வணங்கி வணக்கத்துடனிருந்தனர். வீம மன்னவரும், தமது மருமகனை ஆசீர்வதித்து, தன்னை வணங்கிய மகளையும் ஆசீர்வதித்து, அவரிருவரும் பிரிவற்று எதிரிலிருக்கக் காண அளவுகடந்த ஸந்தோஷத்திற்கு ஆளாயினர்; பின் நளமன்னவரைத் தழுவி அணைந்து பேரன்புகொண்டு அவரை மரியாதை செய்தனர். தன் முன்னின்ற தம்பதிகளின் கண்களிலிருந்து வழிந்த நீர்பெருக்கைக் கண்ட அவர், அவரிருவரையும் ஸமாதானப்படுத்திக் கடந்தவற்றைப்பற்றி எண்ணுதிருக்கும்படி இங்கிதம் கூறினர். பெரியவராகித் தனக்குத் தேற்றறிவு கூறி மரியாதை செய்த வீமமன்னவரது இஷ்டப்படி நடக்கச் சித்தமாயிருப்பதாக நளர் அப்போது சொன்னார்; அவ்வாறு செய்வதே தமது தருமமும் இஷ்டமும் என்று விடுத்தும் கூறினார். நயமும் விநயமும் இனிமையும் மயங்க விளங்கிய அம்மொழிகளைக் கேட்டதும் வீமர் ஆநந்த ஸாகரத்தில் ஆழ்ந்து விளங்கினர்; தனது மருமகனது பெருமைகளைப் பலவாறும் துதித்தனர்; அவர்க்கேற்பட்ட ஸங்கடங்களுக்கெல்லாம் முடிவுகாலம் வந்ததாகச் சொல்லி அவரை வாழ்த்தினர்; தமது மகனாக அவரைப் பாராட்டித் தமது வீட்டிலேயே இருக்கும்படி வேண்டினர்.

இதற்குள் நளரது வரவு ஊர்முழுதும் பரவிற்று. அந்தச் சந்தோஷ ஸமாசாரத்தைக் கேட்ட ஜனங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. சிலர் ஊர்முழுதும் தோரணங்கட்டி ஆங்காங்கு கொடிகளை எழுப்பினர்; சிலர் வீதிகளை எல்லாம் அலங்கரித்தனர்; சிலர் பூரண கும்பங்கள் முன்றில்களில் வைத்துத் தமது ஸந்தோஷத்தை வெளியிட்டனர்; தெருவெல்லாம் நீர்தெளித்துச் சுத்தஞ்செய்து சிலர் கோலமிட்டனர்; ஆங்காங்கும் கமுகும் வாழையும் நட்டுப் பந்தரிட்டு அதனைப் பலவிதமும் அலங்கரித்துச் சிலர் களித்தனர்; சிலர் பூக்களை வாரியிறைத்து எங்கும் மலர் மழை பெய்தனர்; மற்றுஞ் சிலர் வாஸனைத் திரவியங்களை வாரியிறைத்து, நல்ல மணம் ஊர் முழுதும் பரவும்படி செய்தனர். இம்மாதிரியாக ஊரை ஜனங்கள் அலங்கரிப்பதைக் கண்ட ருதுபர்ணன் ஒருவேளை தமயந்தியின் இரண்டாவது ஸ்வயம்வரம் நடப்பதன் முதற் குறிகளோவெனச் சற்றே ஸந்தேஹம் அடைந்தான். வாயில்கள்தோறும் மாவிலையும் மகரதோரணமும் கட்டிய வீட்டின் வரிசைகளைக்கண்ட அவன், "ஒருவேளை இன்று தமயந்தி நான் எண்ணிய விதம் ஸ்வயம்வரம் நடத்துவள் என எனக்குப் படுகிறது. எத்தனை நாள் அவள் தனியே அவதிப்படுவது?" என்று எண்ணமிட்டுக்கொண்டே நடந்து வந்து, தன் விடுதியிடம் வந்தான்; அங்கு வாகுகனைக் காணாது சற்றே சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது பக்கத்திருந்த ஆலயத்தில் இருந்தாற்போல இருந்து பெரும் பூஜை நடக்கக் கண்ட அவன், அதனுள் சென்று கவனித்தான்.

நளனைக் கண்டதால் அடைந்த மகிழ்ச்சியையும் தம்மிடம் நளனைச் சேர்ப்பித்த கடவுளரிடம் தாம் கொண்ட பெரு நன்றியைக் காட்டுவதற்கெனவும்வீமமன்னவர்ஊரிலுள்ள கோவில்களில் எல்லாம் பெரும் பூசைகள் நடக்கும்படி ஆணையிட்டிருந்தனர். இவ்வாணையால் நடந்த பூஜையொன்றையே ருதுபர்ணன் கவனித்தது. வாகுகன் தெரியாமற் போனதையும், கோயிலிற் பூசைசெய்வதையும்ஜனங்கள்பேசும் மொழிகளையும் உற்றுணர்ந்த ருதுபர்ணன் ஒருவாறு ஸமாசாரத்தையுணர்ந்தனன்; தன்னிடம் அஞ்ஞாத வாஸஞ்செய்த வாகுகன் நளமன்னவனென எண்ண அவனுக்குப் பெருமாச்சரியமுண்டாயிற்று. எனினும், நளன் தமயந்தியை அடைந்தான் என்று கேட்டதும், அவன் ஆனந்தமுற்று விளங்கும் ஸமயத்திலேயே, நளனும் அவனைத் தம்மிடம் வரும்படி ஆள் அனுப்பினன். ருதுபர்ணனும் அவனிடம் சென்றான்;

"அரச! நின்னையான் அறிந்திடாதியற்றிய அனைத்தும் திருவுளங்கொளாதருள்" எனச்சேவடி தொழுதான்;

வெகு விநயமாகத் தன்னைப்பற்றித் தவறான எண்ணங் கொள்ளாதிருக்கும்படி வேண்டினான். அம்மொழிகளைக் கேட்ட நளமன்னவன் சற்றும் தயங்காது, "அரசே! தாங்கள் பெரியவர்; உண்மையே உருவெடுத்தவர்; உதார குணம் உடையவர்; எனக்கு மறந்தும் தவறு இயற்றாதவர். உம்மிடம் குறை எப்படி இருக்க முடியும்? தாங்கள் சிறு தவறும் எனக்குச் செய்ததில்லை. அப்படிச் செய்ததாகவே தாங்கள் வைத்துக்கொண்டாலும், உண்மை நேசன்போல் பாவித்து என்னைக் காப்பாற்றிய உங்களிடம் நான் ஒருநாளும் கோபங்கொள்ளேன். நீர் எனது பிராண நேசருள் ஒருவராக இருக்கிறீர்; அப்படியே என்றும் விளங்கும்படி விரும்புகிறேன். உம்மிடம் யான் அடைந்த ஸுகத்தை எப்படி விரித்துரைக்க முடியும். தமது அரச மாளிகையில் நான் அடைந்த ஸுகங்களை என் அரண்மனையில்கூட அடைவது கஷ்டம். உம்மாலேயே இனியும் நான் ஸுகமடைவேன் என்பது என் உண்மை அபிப்பிராயம். மேலும், கணன ஸூக்ஷ்மத்தைக் கற்பித்த உமக்கு நான் இன்னமும் மாவுளத்தை உணரும்வழியை உபதேசஞ் செய்யவில்லை. ஆகவே தயவுசெய்து அதனை இப்போழ்தே பெற்றுக் கொள்ளும். அதை உமக்களிக்க, நான் ஸித்தமாக விருக்கிறேன். விதிப்படி பெற்றுக் கொள்ளும். தயவு செய்யவேண்டும். வித்தியாஸமாக எதுவும் எண்ணவேண்டாம்" என்றான்.

இவ்வாறு நளன் சொல்லியதும், ருதுபர்ணன் தான் நெடுநாளாகக் கற்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்த, குதிரைகளது உள்ளத்தை அறியச் செய்து, அவற்றை ஆள்வதில் பெரும் வல்லபம் தரக்கூடிய அந்த அச்வசாஸ்திரத்தை விதிப்படி நளனிடமிருந்து கற்றுக் கொண்டான். மேலும் தனக்குத் தெரிந்த சொக்கட்டான் வித்தையை நளமன்னவருக்களித்துத் தான் செலவு பெற்றுக்கொண்டான்; அவ்வூரில் மற்றோர் தேர்ப்பாகனை நியமித்துக் கொண்டு அச்வநூல் கற்றுக் கொண்டதைப் பற்றி உள்ளங்களித்து விளங்க, அவன் தேரேறி அயோத்திக்குப் புறப்பட்டான். அவன் மனம் எவ்வளவு வேகமாகப் பல விஷயங்களைச் சிந்தித்தவண்ணமாக விருந்ததுவோ, அவ்விதமே தேரும் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

நளமன்னவரது மனதும் அப்போது வெகு தீவிரமாக யோசனையிலாழ்ந்து கிடந்தது. சிலந்திப்பூச்சி தன் வாயிலிருந்து நூலை நூற்று, வலையிட்டு, சிறு பூச்சிகளைக் கொள்ள வழி தேடுவதுபோல், எப்படிப் புஷ்கரனைத் துலைத்து, நிடதத்தைப் பெற்று, தமது பெருமையை நாட்டுவதென, பல்வேறு யோசனைகளில் பாய்ந்து அவர் மனம் பற்பல வழிகளை எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. அச்சிந்தனையின் நுண்மை எத்தகைத்தெனச் சொல்லவும் வேண்டுமோ? பெரும் புருஷப் பிரயத்தினங்களுக்கெல்லாம் ஊன்றுகோலாயிருந்து உதவி செய்வது சிந்தனையேயல்லவா? ஆய்ந்தோய்ந்து பாராதவன் வாழ்க்கை அம்பலப் பிழைப்பாய் விடுமன்றோ?

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

இந்தியாவில் நார்த் தொழில்

இந்தியாவில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட செலவுகளை மட்டுப்படுத்துவதற்காகப் பலவித தொழில்களைச் சீர்படுத்தி விருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கம் இப்பொழுது எல்லோர் மனத்திலும் குடிகொண்டிருக்கிறது. இவற்றுள் நார்த்தொழில் ஒன்று. சணல் நார் வங்காளத்தில் வெகு ஜாஸ்தியாக உபயோகப்பட்டு வருகிறது. எனவே அவ்விடத்துச் சணல் ஆலைகளில் உண்டாக்கப்படும் நாரை, தற்காலம் உபயோகப்படுத்தப்படும் விஷயங்களுக்கல்லாமல் பல புதியவழிகளிலும் கையாளப்படுவதற்காகப் பரீக்ஷைகள் செய்ய வேண்டுமெனச் சர்க்காரார் ஒரு நிபுணரை இந்தியா முழுவதும் உள்ள நார்த்தொழில்களைக் கவனிக்க ஏற்படுத்தியிருக்கின்றனர். அவரது ஆராய்ச்சிகள் இந்நாடு முழுவதும் இடம்பெறுமேனும் சிபார்சுகள் செய்யத்தான் அவர்க்கு உரிமையுண்டு. டாகா நகரத்தில் காரியஸ்தலம் கொண்ட அவர் முதன் முதல் சணல் நார்ப் பயிரைப்பற்றி ஆராய்ச்சி செய்வாரெனத் தெரிகிறது. இத்தென்னிந்தியாவில், வாழை முதலிய நார்களைப்பற்றிப் பலவிதத்திலும் புதிய ஏற்பாடுகளைச் செய்ய அவர் கவனித்தால் இந்தியர்க்கு நல்ல பயனளிப்பதல்லாமல் சர்க்காருக்கும் நல்ல லாபத்தைக் கொடுக்கும். நார் மடிகள், கித்தான்கள் கயிறுகள் இவைகள்தான் தற்காலம் நார்களி

விருந்து செய்யப்படுகின்றன. சில மரத்தின் நார்கள் பல அருமையான விஷயங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டனவென நூல்களில் அறிகிறோம். அவற்றை யெல்லாம் ஆய்ந்தறிவது இவ்வுத்தியோகஸ்தருக்கே பொருந்துமல்லவா? ஆகவே இவ்விஷயங்களில் நமது நாட்டின் பழக்கவழக்கங்களை அறிந்தவர் தலையிடுவதே மிகவும் பொருத்தமாயிருக்கும் அல்லவா?

* * *

எல்லா இந்திய ஆயூர்வேத மஹாநாடு

இம் மஹா நாடு, டில்லி மாநகரில் கூடிய போது காசிநகரத்துப்பண்டித உமாரத்ன கவிரத்னர் அக்கிராஸனம் வகித்தனர். அக்கால், கனம் பண்டித மதன் மோஹன் மாளவியர், இந்தியா முழுவதும் ஆயூர்வேத கலாசாலைகள் நிறைந்து விளங்க வேண்டு மென்றும், ஆயூர்வேத விதிகள், மேனாட்டாரது சாஸ்திரவித்தையாகக் கொள்ளப்படும் விதிகளினும் சாஸ்திரமுறை கொண்டன வென்றும், ஆயூர்வேத முறையே இந்திய ஜனங்களுக்கு ஏற்றதென்றும் நெடுநேரம் பேசியதல்லாமல், கல்கத்தா நகரத்தில் தமது மார்வாரி நண்பரொருவர் அளித்த லக்ஷ ரூபாய் நன்கொடையை ஸ்ரீகாசி ஸர்வகலா சங்கத்தின் ஆதரணையின் கீழ் ஒரு ஆயூர்வேத கலாசாலையையும், ஆயூர்வேத வைத்தியத் தோட்டத்தையும் ஸ்தாபிக்க, தாம் கையாளப் போவதாகச் சொல்லியதைக் கேட்க யாவர்க்கும் சந்தோஷம் விளைக்கு மல்லவா? இம்மஹா நாட்டின் இதர தீர்மானங்களுள், ஆயூர்வேத முறையை ராஜாங்கத்தார் மதிக்கவேண்டு மென்பதன் நியாயத்தைப்பற்றி நாம் இங்கு விஸ்தரித்தில் அநாவசியம்.

* * *

நெசவு சாலை

திருவாங்கூர் சமஸ்தானத்தில் புலையர்களின் உபயோகத்திற் கெனத் தனியாக ஒருநெசவுசாலை ஏற்படுத்தப். பெற்றது சிலாகிக்கத் தகுந்தது. நார், நூல் இத்தொழில்களுக்காகவென முன்னமேயே இரண்டு பள்ளிக்கூடங்கள் தர்பாரால் ஸ்தாபிக்கப்பட்டன வென்பது யாவரும் அறிவர். இத்தகைய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தித் தொழிலாளிகளின் அறிவின்மையைப் போக்கிப் பயனடையுமாறு செய்வதே, நல்லரசின் பெருமையாகும். இம்மாதிரிப் பள்ளிக்கூடங்களை நமது கவர்ன்மெண்டார் ஏன் ஏற்படுத்த லாகாது?

* * *

வியவசாய நிதிகள்

"இந்தியா - இன்-டிரான்ஸிஷன்" என்னும் நூலில் கனம் அகாகான் அவர்கள் இந்தியாவில் இனி ஏற்படும் அரசாங்க புதிய அமைப்பில் ஊழியம் செய்பவர் இவ்விஷயமாகக் கொள்ளவேண்டிய பொறுப்பை நன்குவிளக்கியிருக்கின்றனர். புதிய ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள், நிலவரி வருமானங்கள், ஸர்வே ஸெட்டில்மெண்ட் தீர்ப்புகள் இவற்றைக் கவனிக்கும் வழக்க நடவடிக்கைகளைக் கவனிப்பதைக் காட்டிலும், பூமியைப் பதப்படுத்திப் பயன்தரும்படி குடியானவர்களுக்கு அவ்வச் சமயம் வறுமையினால் ஏற்படும் கஷ்டங்களை நீக்கவென வியவசாய நிதிகளை ஏராளமாகக் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தி பொது ஜனங்களிடம் அரசாங்கத்தார் ஏற்கும் இராஜாங்கக் கடன்கள், வரிகள் இவற்றிற்கொப்பத் தாராள மனத்துடனும், அனுதாபத்துடனும், சிறு சிறு தொகையாக, சந்தா வகையாக மீண்டும் தமக்குத் திருப்பும்படியான உடன்படிக்கையோடு முதல் கொடுத்து, அவர்கள் அத்தொகையைச் சாகுபடிக் குபயோகப் படுத்தும்படி அன்போடு மேற்பார்வையிட்டு, சமயா சமயங்களில் நல்ல புத்திமதிகள் கூறி அவர்களது காரியங்களை ஒழுங்குபெறச் செய்ய உத்ஸாகப்படுத்துவதே அவ்வுத்தியோகஸ்தர்களுக்கு மிக முக்கிய தொழிலாகும் என அவர் வரைந்த மொழிகள் கவனிக்கத் தகுந்தன. ஜில்லாக்கள்தோறும் முக்கிய நிதிகளை ஏற்படுத்திக் கிராமங்களி லெல்லாம் கிளைப் பிரிவுகள் உண்டாக்கி அதன் உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்குச் சென்று ரயித்துக்களின் தேவைகளைக் கவனிப்பதை முறையாக்கவேண்டுமென அவர் வற்புறுத்துவதைக் கவர்ன்மெண்டார் கவனிக்கலாம்.

24 MAY 1919

பாரிஸ் நகரில் நடக்கும் சமாதான கான்பரென்ஸுக்கு
இந்தியப் பிரதிநிதியாய்ச் சென்றிருக்கும்
பிகானீர் மஹாராஜா அவர்கள்.

விவேக போதினி

வருஷச் சந்தா	
உள்நாடுகளுக்கு	ரூ. 4
வெளிநாடுகளுக்கு	ரூ. 5
தனிப்பிரதி -	அ. 6

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

விளம்பர விகிதம்	
முழுப்பக்கம்	ரூ. 8
அரைப்பக்கம்	ரூ. 5
கால்பக்கம்	ரூ. 3

தொகுதி XI | காளயுக்திஹூ மாசிமீ :: 1919-ஹூ மார்ச்மீ | பகுதி 9

லக்ஷ்ய பேதம்

CONFLICT OF IDEALS

எற்றை நாளினு முளனெனு மிறைவனு மயனும்
கற்றை யஞ்சடைக் கடவுளுங் காத்தளித் தழிக்கும்
ஒற்றை யண்டத்தி னளவினோ விதன்புறத் துலவா
மற்றை யண்டமுந் தன்பெய ரேசொல வாழ்ந்தான்.

தாம ரைத்தடங் கண்ணினன் பேரவை தவிர
நாமந் தன்னதே யுலகங்கள் யாவையு நவிலத்
தூம வெங்கன லந்தணர் முதலினர் சொரிந்த
ஓம வேள்வியி னிறையவர் பேறெலா முண்ணும்.

மருக்கொ டாமரை நான்முக னைம்முகன் முதலோர்
குருக்க ளோடுகற் றோதுவ வன்பெருங் கொற்றம்
சுருக்கநான்முறைதொன் றுதொட்டுரைதொறுந்தோ
திருக்குந் தெய்வமு மிரணியனேநமவென்னும்.[ன்று

ஆய வன்றனக் கருமக னறிஞரி னறிஞன்
தூய ரென்பவர் யாரினு மறையினுந் தூயன்
நாய கன்றனி ஞானநல் லறத்துக்கு நாதன்
தாயின் மன்னுயிர்க் கன்பின னுளனொரு தக்கோன்.

என்றொ ரந்தண னெல்லையி லறிஞனை யேவி
நன்று நீயிவற் குதவுதி மறையென நவின்றான்
சென்று மற்றவன் றன்னொடு மொருசிறைசேர்ந்தான்
அன்று நான்மறை முதலிய வோதுவானமைந்தான்.

ஓதப் புக்கவ னுந்தைபே ருரையென லோடும்
போதத் தன்செவித் தொளையிருகைகளாற் பொத்தி
மூதக் கோயிது நற்றவ மன்றென மொழியா [தான்.
வேதத் துச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித்

ஓநமோ நாராய ணாயவென் றுரைத்துள முருகித்
தான மைந்திரு தடக்கையுந் தலையின்மேற் றூக்கிப்
பூநி றக்கண்கள் புனலுக மயிர்புறம் பொடிப்ப
ஞான நாயக னிருந்தன னந்தண னடுங்கி.

கெடுத்தொ ழிந்தனை யென்னையு முன்னையுங் கெடு
படுத்தொழிந்தனை பாவியத் தேவரும் பகர்தற்[வாய்
கடுத்த தன்றியே யயலொன்று பகர்கின் னறிவின்
எடுத்ததென்னி துவென்செய்த வண்ணனீயென்றான்.

என்னை யுய்வித்தே னெந்தையை யுய்வித்தே னினைய
உன்னை யுய்வித்திவ் வுலகையு முய்விப்பா னமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர்மொழிவதுமொழிந்
என்னைகுற்றநானியம்பிய தியம்புதியென்றான்.[தேன்

மாற்றம்யாதொன் றுமுரைத்திலன்மறையவன்மறுகி
ஏற்ற வென்னெனக் கிறுதிவந் தெய்திய தென்னா
ஊற்ற மில்லவ னோடினன் கனகனை யுற்றான் [னான்.
தோற்ற வந்ததோர் கனவுகண் டனனெனச் சொன்

எந்தை கேளெனக் கிம்மைக்கு மறுமைக்கு மியம்பச்
சிந்தை யாலிறை நினைத்தற்கு மடாதெனச் செப்பி
முந்தை யேநினைந் தென்பொருண்
முற்றுமென் றுரைத்தான்
ல்மைந்தனேதிலன் வேதமென் றுரைத்தனன்வணங்கி.

கொணர்கென் மைந்தனை வல்லிரைந்
தென்றன் கொடியோன்
உணர்வி னெஞ்சின னேவலாற் கடிதினி னோடிக்
கணணி னெய்தினர் பணியெனத்
தாளையைக் கண்டான் [தான்.
தூணையிலான்றனைத் துணையென வுடையவன் றொழு

தொழுதமைந்தனைச் சுடர்மணி மார்பிடைச் சுண்
எழுத வன்பினோ டிறுகுறத்தழுவிமா டிருத்தி[ணம்
முழுது நோக்கிநீ வேதியன் கேட்கலின் முனியப்
பழுது சொன்னசொ லென்னது பகருதி யென்றான்.

காமம் யாவையுந் தருவது மப்பதங் கடந்தாற்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேணமோ நாராய ணாய.

உன்னு யிர்க்குமென் னுயிர்க்குமிவ் வுலகத்தி னுள்ள
மன்னு யிர்க்குமீ துறுதியென் றுணர்வுற மதித்துச்
சொன்ன விப்பெய ரென்றன னறிஞரிற் றூயான்
மின்னு யிர்க்கும்வே லிரணியன் றழலெழ விழித்தான்.

எளியாரை வலியார் அடித்தால், வலியாரைத் தெய்வம் அடிக்கும்.

விவேக போதினி

தொ. 11] காளயுக்தி௵ மாசிமீ [ப. 9

தெய்விகத் தோற்றம்

THE MANIFESTATION OF DIVINITY

சேர்ப்பிணையா ராயச் சிறுஅர்க் ககங்கனிந்தப்
பார்ப்பிணியா ருட்டப் பசியவித்தான்—ஏராற்
கடுமமலை தானேற் றடுமைமழை காக்கக்
கொடுமமலை கொண்டான் குடை.

எவ்வுலகும் அநீதி இருள் வாய்விழுந்து கவிந்து மூழ்கும்போது, அவ்விருட்டைப் போக்கக் கடவுள் தாமே உருவு கொண்டு எழுந்தருள்வதாக எல்லா மதமும் வாய்விட்டலறுகின்றன. ஆனால் அத்தெய்விகம் தோன்றும்போது எவ்வாறு இருக்கும்? அது எவ்வாறு பிறரால் காணப்படும்? யாரால் கவனிக்கப்படும்? மற்றத் தடைகளையெல்லாம் கணிசியாது அதனுள்ளேயே மயங்கியிருந்து அது எவ்வாறு விருத்தியடையும்? அதன் வெளித்தோற்றங்கள் எவ்வாறு முதன் முதல் கட்புலனுக் கெட்டும்? இவை போன்றன கேள்விகள் எத்துணையோ ஏற்படும். எனினும், அனுபவத்தின் வழியாக அறிந்தவர்க் கிவையெல்லாம் ஸாதாரணமாகவே இருக்கும் என்பது தவறாகாது. சிறையிற் பிறந்து, கோகுலத்தில் தவழ்ந்து, நந்தன் மகனாகவே கருதப்பட்டு, கஞ்சனால் ஏவப்பட்ட பல துஷ்டர்களிடமிருந்து தப்பி விளங்கிய கண்ணன், இதுவரையும் மாயக்குழந்தையாகக் கவனிக்கப்பட்டனரென்பது நாம் சொல்லவேண்டியதில்லை. மற்ற இதர ஸாமான்யக் குழந்தைகளைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்தவரெனவே அவரைச் சேர்ந்தோர்களால் அவர் மதிக்கப்பட்டாரெனினும், தெய்வமே உருவெடுத்து வந்ததாகக் கருதும்படியாக அவர் சற்றே நடந்து கொண்டனரேனும், சிறு குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடியே அவர் திரிந்துவந்தனர்; தமது குறும்பு, ஸமயோசிதப் பேச்சு, செயல் இவற்றால், ஆயருள் ஆடவரை மாத்திரமல்லாது மகளிரையும் மயக்கி வந்தனர். எனவே, அவரை, ஆண் மக்கள் தமக்குத் தக்க தலைவனாவரென நம்பினர் ; பெண்மக்களும் அப்படியே ; சிறு குழந்தைகளும் சிறுவர்களும் அவரைத் தமக்கேற்ற தோழனாகக் கருதி அவரிடம் நண்பு கொண்டிருந்தனர். அத்தகைய நிலைமையில் விளங்கிய கண்ணன். சில அற்புதமான செயல்கள் செய்வதைக் காணக்காண, அவரைச் சேர்ந்தோர், அவரை ஓர் புருஷச் சிரேஷ்டனாகக் கொண்டாடுவதில் ஒரு பெருமையுமிருக்க முடியாது. ஆனால், இடையிடையே பாம்பின் வாயில் இருந்து வெளிவந்தது, பாம்பின்மேலாடியது, இவைபோன்ற செயல்கள் அவரது தெய்விகத்தை வெளியிட்டனவேனும், அவரது கடவுளுருவம் கோபாலர்கள் அல்லது மற்றோர்களால் அறியும்படி பிரகாசமடையவில்லை. இடையிடையே அவரைத் தேவர்கள் துதித்தனரேனும், அவரது தன்மையைக் கோபாலர்கள் அல்லது வேறு யார் அறிந்துளார் ?

காலம் செல்லச் செல்லத் தமது தெய்விகத்தை வெளியிடவென எம்பெருமான் தமது அளவிடமுடியாப் பெருமையை யாவரும் அறியக் காட்ட நிச்சயித்தனர். அச்சமயம் கேவலம் அநீதியே எங்கும் குடி கொண்டிருந்தது. அரசர்கள் தமது வரம்பு கடந்து நடந்தனர் ; குடிகள் தமது நிலை மாறிக் கலங்கினர்; பிராஹ்மணர்கள் மறைபடித்து இறுமாந்திருந்தனரே அன்றி, அம்மறையுள் பொதிந்து எள்ளும் எண்ணெயும்போல் திகழும் மூல முதலை உணரும் ஆற்றல் அற்றுக் கிடந்தனர் ; கிளிப்பிள்ளைகளென அனுபவவாராய்ச்சியற்று மயங்கி விளங்கினர் ; மனத்துள் நினைப்பில் எழும்பும் நிர்விகாரப் பொருளை நிலைத்துக் காணும் பாக்கியமற்று, பாமரர்களினும் கடை கெட்டு, வெறும் வேள்விச் சடங்குகளில் உழன்று வந்தனர். வர்ண சங்கிரமம் என்பது எங்கும் இயல்பாயிருந்தது. குடிமை, பண்பு முதலிய குணமற்ற விவசாயிகள் பொருளைச் சேமித்துத் தமது வயிற்றைக் காத்து, ஊரைத் துயருள் உருட்டி வந்தனர். ஊராரது துயரை உணர்வதைப்பற்றி எண்ணாது அக் கஞ்சன் காமக்கடலில், அகந்தைக் கப்பலேறி, வெறிக்காற்றில், மனப்பாயை விரித்து, அத் தோணியை நடத்திக்கொண்டிருந்தான். வைசியர்கள் நிலையோ, எப்பொழுதும் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது. ஆகவே அவரது செயலைப்பற்றி விஸ்தரிக்கவும் வேண்டுமோ? மொத்தத்தில் எவரும் தமதிஷ்டப்படி நடந்தன ரென்பது தவறாகாது. கடவுளென்பது ஒன்றிருப்பதாகவே அவர் எண்ணவில்லை; எண்ணினும் அதனால் என்ன செய்யக்கூடும் எனவே எண்ணியிருந்தனர். அகந்தையும் லோகாயத மயக்கமுங் கவிந்து உலகு இருண்டுகிடந்த இத்தகைய சமயமே தமது தெய்விகத்தை வெளியிடத் தக்கசமயமெனக் கண்ணபிரான் திருவுளங் கொண்டனர்.

கோபியர்களது துயிலைக்கொடுத்ததும், சிறுவருடன் சென்றஅவர், வழியில் அவர்களைப் பார்த்து "அகோ! இம்மரங்கள் நம்மினும் சிறந்தவை. அவை காற்றாலும் மழையாலும் வெயிலாலும் பனியாலும் துயரடைந்தாலும், தம்மை அண்டினாரை ஆதரிக்காதென்றேனும் இருந்ததுண்டோ? பரோபகாரமே அவற்றின் பிழைப்பு. அதற்குத் தமது வேர், கிளை, கிழங்கு, தண்டு, பட்டை, சருகு, இலை, பூ, காய், கனி முதலிய எல்லா அங்கங்களையுமே உதவுகின்றன. அவற்றின் பிழைப்பைப் படிப்பினையாகக் கொண்டு வாழ்வதே நமக்குப் பெருமை" என அடிக்கடி இவைபோன்ற நன்மொழிகளைக் கூறிக்கொண்டு அக்காட்டின் அழகை அநுபவித்துக்கொண்டே நடந்து வந்தனர். அவ்வழியே சிறுவர்கள் நெடுநேரம் நடந்ததனால், தமக்குப் பசியாயிருப்பதாகவும், அதைத் தீர்க்காவிடில் தம்மால் நடக்க முடியாதெனவும் கதறினர். அவரது பசியை எப்படித் தீர்ப்பது? தமது விருப்பத்திற்கு அதை எவ்வாறு உடந்தையாக்குவது ?

இச்சமயமே கண்ணபிரான் தமது எண்ணத்தை வெளியிட மனங்கொண்டது. தமது தெய்விகத்தைக் கோகுலத்துக் கோபாலரன்றி வேத விதியிலுழலும் அந்தணர்களும் அறியும்படி செய்யத் திருவுளங் கொண்டனர். அச்சமயம் பக்கச் சார்பிலிருந்த முனிவர்கள் ஸ்வர்க்கம் அடையும் ஆசையோடு ஒப்பற்ற பெரும் யாகம் ஒன்று நடத்திக்கொண்டிருந்தனர். அந்த யாகத்தின் மூலமாக அவ்வேதியர் வணங்கும் பொருளே தாமென அவர் உணருமாறு செய்வதே தமது தருமமென நினைத்த கண்ணபிரான், பசியால் வருந்தும் கோபாலரைப்பார்த்து "நேயர்களே! எதிரிலிருப்பது முனிவரர்கள் இருப்பிடம். அவ்விடம் அவர் செய்யும் யாகத்திடை சென்று, பலராம கிருஷ்ணர்கள் கேட்டதாகச் சொல்லி அன்னம் கேட்டு வாங்கி உண்பீர்களாக! கேட்டால் கிடைக்கா திருக்குமா ?" எனக் கூறி அவரை அங்குச் செல்லும்படி விட்டுவிட்டு, தாமும் தமது முன்னவனும் மாத்திரம் தனியே இருந்தனர்.

இவ்வாறு கண்ணன் ஏன் செய்ய வேண்டும் ? வைத்தியன் வரும்போதே ஹ்ருதயத்தை ஏன் கவனிக்கவேண்டும் ? நாடியை ஏன் பரீக்ஷிக்கவேண்டும் ? மூளையை ஏன் கவலையோடு பார்க்கவேண்டும் ? எல்லாம் ஒன்றன் பொருட்டே. எவ்விடத்தில் வேலை செய்தால், அது உடனே பயன் தருமோ, அதையே கையாள வேண்டுமென்பதே அல்லவா? அகந்தையில் படிந்து, படிப்பு ஒழுக்கம் என்னும் வரம்புகளிடை பதிந்து நடக்கும் பிராஹ்மணப் பேராறும், உள்ளங் களித்துத் தான் சேரச் செல்லும் கடவுட் கடலை நேரே கண்டதாகக் காிகூறுமானால், அதைக் காட்டிலும் தமக்கேற்ற சிறந்தவழி மற்றொன்று முண்டோ? ஆனால் அவ்வகந்தை மதிக்குமோ ? மதிக்கச் செய்ய முடியுமோ?

"ஹா ! கிருஷ்ணா ! உமது மொழியைக் கேட்டல்லவோ மோசம் போனோம். உங்கள் பெயரைச் சொல்லி அன்னம் கேட்டோம். முனிவர்கள் வாயே திறக்க வில்லை, எங்கள் பசியோ பறக்கவில்லை. என்ன செய்வோம்" ? என வந்து மனம் நொந்து கூறிய அக் கோபாலர்களைப்பார்த்ததும், கண்ணபிரான் "அவர் கொடுக்காவிட்டால் என்ன ? யாகசாலைக்குப் பக்கத்திலிருக்கும் முனிவர் பத்னிகளை நாங்கள் கேட்டதாக அன்னம் யாசியும். உமக்குக் கிடைக்கும் ; தயங்காது செல்லும்" என மேலும் தூண்டினர்.

வணக்கமும், இணக்கமும், உண்மை நிலையைக் கைக்கொள்ளும் திறனும் உள்ள இடத்திலன்றித் தெய்விகத்தின் பெருமை

எள்ளுக்கு ஏழ உழவு, கொள்ளுக்கு ஓர் உழவு.

எள்ளுத்தான் எண்ணெய்க்கு உலறுகிறது, எலிப்பிழுக்கை என்னத்துக்கு உலறுகிறது ?

வெளிவருவது எளிதல்ல. உள்ளத்துள்ளே கலந்து விளங்கும் பொருளை ஊடுருவிப் பார்த்தாலன்றிப் பார்ப்பாராகாதவர் எப்படிப் பார்க்க முடியும்? கருத்தினால் தமது கணவரையே கடவுளாகக் கருதி, அவர் வழியே மோக்ஷ நிலையை அடைய நிற்கும் நல்லொழுக்கினராய் வரும் அன்பினர்க்குக் கடவுளென்பது காண்பதற் கெளிதோ? எனவே, தமது நன்னிலையின் அனுபவப் பெருக்கால் கண்ணனது தெய்விக அமைப்பைத் தமது கண்முன் உருவெளியாகக்கண்ட அம்முனிப் பெண்கள், உணவிற் சிறந்தவற்றைச் சேகரித்து, அச்சிறுவர் வந்து சொல்வதற்குள், மோக்ஷ ஸாகரத்தில் கலக்க ஓடும் ஆனந்த வெள்ளம் போல இல்லறக்கரை கடந்து அவர்பின் நடந்து, யாகத்தின் பயனாகி விளங்கும் அவ்விராம கிருஷ்ணர்களை வணங்கி வழிபட்டு,

"மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னூட்டிடைக் கண்டுகொண் டேமே!

கரும்புந் தேனும் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய வானந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே"

என்று வாயாற வாழ்த்தினர்; "உணவு எடுத்துச் செல்வதனின்று தடுத்த எமது கணவரிடம் செல்லோம்; அவரது மொழிக்குக் குறுக்காகி நடந்த எம்மை அவர் ஏற்கார்" என்றனர்.

அம்மொழிகளைக் கேட்ட கண்ணபிரான் "அவ்வவர்க்கும் உள்ளமே உறவாவது. அதுவே ஆத்மா. அதை உணர யாரே விரும்பார்? எல்லார்க்குள்ளும் விளங்கும் ஆன்மா ஒன்றே. நானல்லால் மற்று அது யாது? எனவே என்னைக் காண நீங்கள் வந்ததற்கு, உள்ளத்துணர்வைக் கொள்ளை கொள்ளும் முனிவரர்கள் கோபம் எப்படிக் கொள்ள முடியும்?

தானே திசையொடு தேவரு மாய் நிற்கும்
தானே வடவரை யாதியு மாய் நிற்கும்
தானே யுடலுயிர் தத்துவ மாய் நிற்கும்
தானே யுலகிற் றலைவனு மாமே

என்னும் அவ்வாத்மானுபவத்தை இப்போது, உமது வரவால் அடைந்த அம்முனிவரர் உங்களை ஆவலோடு ஏற்பர். பயப்படாது செல்லுங்கள்" எனத் தேற்றி அனுப்பினர்.

இறைவன் மொழிக்கிணங்கிய அம்மங்கையர், தமது ஆச்ரமங்களை அடைந்தனர். கண்ணபிரானது உண்மை நிலைமையைத் தமது தியானத்துள் தெளிந்து விளங்கக் கண்ட முனிவர்கள் அவர்களைக் கோபியாது, அவர்களுடைய உள்ளன்பிற்கும் எழுச்சிக்கும் மகிழ்ந்து விளங்கினர்; தாம்செய்த யாகத்தின் முழுப்பயனாகி விளங்கும் மூர்த்தியை நேரிற்கண்டு ஹவிர்ப்பாகங் கொடுக்கக்கூடிய நிலைமையிலிருந்து, தமது அகந்தையாலும், ஒழுக்கச் சிறப்பில் விளங்கும் இறுமாப்பாலும் ஏமாந்துவிழித்தனர்; மனம் விண்டனர்; ஆரா அமுதனைக் கோகுலத்திலே நேரில் காணச் செல்வதென நிச்சயித்தனர். இத்தகைய நினைப்பை மூட்ட வல்லவா கண்ணன் ரிஷிபத்னிகளுடன் அன்ன மிரக்கும்படி கோபாலரைத் தூண்டியது? விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? என்றாலும் கஞ்சனுடைய ஆணை என்னும் விலங்குள் பட்டுத் தவித்த அவர், அதை முறித்தெறிந்துவிட்டுக் கோகுலஞ் செல்ல மனங் கொள்ளாது சிந்தைமயங்கிக் கலங்கி விளங்கினர். அநீத ஆட்சியுள் வேறெப்படி விளங்கமுடியும்? பந்தத் தளைகளைத் தெறிக்க அவர் வழிதேட வல்லவோ கண்ணன் தமது உண்மை உருவத்தை அவர் மனத்துள் பதியச் செய்தனர்? அப்பதிவு ஊற ஊற உண்மைப் பிடிப்பை அவர்பற்றி, தமது நிலையை உயர்த்துவரென்பது எப்படித் தவறும்?

இவ்வாறு பார்ப்பார் மனத்துள் தமது ஞான உருவை விதைத்ததும், அது வேர்கொண்டு உண்மை ஞானம் எங்கும் பரவக் காலத்திற் கிடங்கொடுத்த கண்ணபிரான், நந்த கோபனது ஊர்க்குள் விளங்கிய சில பழக்க வழக்கங்களைக் கண்டித்துச் சீர்திருத்த வெண்ணி, அவன் இந்திரனுக்கென விழாவெடுக்கச் செய்த ஏற்பாடுகளைக்கண்டு பின் வருமாறு வினவினர்:—

"எந்தாய்! இவ்வேற்பாடுகள் எல்லாம் எதற்காக? எக்கடவுளை ஆராதிக்க இவ்விழா வெடுக்கின்றனை; இச்சடங்குகளைச் செய்கின்றனை? இந்த யாகத்தைப் பற்றி அறிய எனக்குப் பெரும் அவா. முற்று முணர்ந்தவர் செய்யும் காரியங்கள் முழுதும் பயன்தரும்; கற்றுணராதவர் செய்வன அவ்வா றிராது. இப்போது தாங்கள் செய்யும் இந்த யஞ்ஞம் சாத்திரத்தால் ஒப்பப்பட்டதா, அல்லது வழக்கத்தினால் ஏற்பட்டதா? தயவுசெய்து எனக்குச் சொல்லும்; காரணங்களைக் கூறும். எனக்கு அவற்றைக் கேட்க வெகு ஆவல்."

இம் மொழிகளைக் கேட்ட நந்தன் "அப்பா! குழந்தாய்! பர்ஜன்ய மேகத்தை இந்திரனே என்லாம். கனமேகமே அவனது விருப்ப உருவம். மழையின்றி மானிலத்தார்க் கில்லை. எனவே மேகங்களின் தலைவனைத் திருப்திபடுத்த, அவன் கொடுத்த நீரில் நாம் தண்டுலத்தை அட்டுச் செய்யும் இந்த ஆராதனத்தின் சேஷமே திரிவர்க்கத்தையும் தருவதாகும். மாந்தரது முயற்சியைப் பலித மாக்குவது பர்ஜன்ய மேகங்களே யாகும். ஆகவே இந்த ஆராதனத்தைக் கைதுறந்தவர், நற்குலத்தில் பிறந்தும், கீழ்த்தசையில் வீழ்ந்து மீளாத் துயருக் காளாவர்" எனச் சொல்லக்கேட்ட கண்ணபிரான் "கரும சேஷத்தால் பிறவி பெறும் பல்லுயிர்களும், அவ்விசேஷத்தாலேயே அழிவடைகின்றன. இன்பதுன்பத் தோற்றங்களுக் கெல்லாம் வினையே கருவியாகும். கருமத்தின் பலனைத் தர எந்தத் தெய்வம் முன் வரும்? அப்படிவரும் தெய்வம் கரும வசமாவதன்றிக் கருமத்தைக் கடந்தெப்படி விளங்கமுடியும்? தமது கருமத்தின் பலனை அனுபவிக்கும் உயிர்களுக்கு இந்திரன் என்ன உதவி செய்ய முடியும்? அவனை எதற்காக ஆராதிப்பது? மனம் போனவழியே மாந்தர் சென்று மயக்கத்தில் வீழ்வ தியற்கை. வினைத்தொகைக் கேற்ப, பிறவி வேறுபடும். அவற்றுள் தேவப் பிறவி ஒன்று. அத்தகைய பிறவியரை வணங்க லெப்படி நியாயமாகும்? மற்றுத் தருமமே வினையைப் போக்கிப் பிறவியை மாற்றிப் பேரின்பந் தரக்கூடியது. ஆகவே, நூல்களுள் கண்டவாறு, பெரியோரிட்ட வழிபடி நடந்து, தத்தம் தருமத்தை நடத்துவதே ஞானிகட் கழகு. எவர்க்கும் தருமமே ஆராதனைக் கேற்றது. கடவுளின் உருவமாவதும் அதுவே. எனவே தத்தம் தருமத்தைப் போற்றல் வேண்டும்; அவரவரது ஜாதியாசாரத்தைப் பற்றி ஒழுங்குற நடத்தலே கடமை. அதுவே ஒருவன் செய்யவேண்டிய பகவதாராதனம். வேறேதேனும் வேண்டுமானால், உயிரைக் காப்பாற்ற அவசியமும் உபயோகமுமானவற்றைக் கடவுளின் ரூபாந்தரங்களாக மதித்து ஆராதனை செய்வதே தகும். நாமோ காட்டில் வசிப்பவர். பசுக்களும் பிராமணர்களுமே நமக்காதாரமும் துணையும் ஸஹாயமுமாவர். இதோ பக்கத்திருக்கும் கோவர்த்தன மலையே நமக்கு வேண்டியவற்றை யெல்லாம் அளிப்பது. ஆகவே, நம் கண்ணெதிரே விளங்கும் இம்மலையையும், பசுக்களையும், விப்ரர்களையும் தாங்கள் சேகரித்த பொருளால் ஆராதனம் செய்வதே நமக்கேற்றது. அதுவே யுக்திக்கும் புத்திக்கும் பொருந்தும். தோன்றாத தேவதையைப் பூஜை செய்வது எனக்குச் சரியாகப்படவில்லை; சற்றும் பிடிக்கவுமில்லை" என வெகு நயமான மொழிகளால் விநயமாகச் சொன்னார். இம் மொழிகளுக் கிணங்கிய நந்தன் கோவர்த்தன மலையைப் பூஜை செய்ய ஒப்புக்கொண்டு அவ்வாறே நடத்தினான்.

அச்சமயம், அருளே உருக்கொண்ட எம் பெருமான் தாமே முன்னின்று இயற்கையைப் பூஜை செய்ய நந்தனை வேண்டினர்; பிராமணர்களுக்குத் தகுந்த மரியாதை செய்யச் செய்தனர்; ஏழை எளியர், நடை கெட்டுப்போனவர், சண்டாளர் இவர்களிடம் அனுதாபங்கொண்டு ஏற்றவிதம் உதவி செய்யத் தூண்டினர். மேலும் நந்தனை நோக்கி அவர் "அப்பா! இந்த மலை, பசுக்கூட்டம், விப்ரர்த் தொகுதி, ஹோமகுண்டம் இவற்றைச் சிரத்தையுடன் வலம் வந்து செய்யும் ஆராதனமே மிகச் சிறந்ததென என் அபிப்பிராயம். இத்தகைய ஆராதனமே அன்பை வளர்ப்பது; அருளை விரிப்பது; எனவே எவற்றினும் ஏற்றது; இப் பசுக்களுக்கும் பிராஹ்மணர்களுக்கும் இவ்வழகிய மலைக்கும் இனிமைதருவது; எனக்கும் பிடித்தது" எனத் தமது எண்ணத்தை வெளியிட்டனர். அவ்வாராதனையைத் தானும் வழிபட்டு, தம்மவருடன் தமதிருப்பிட மடைந்தனர்.

இவ்வாறு கண்ணபிரான் கூறியது அதமாராதனைகளைக் கண்டித்தற்கு மாத்திரமன்று; வழக்கத்தால் அவ்வாராதனையை ஏற்றுவந்த மேற்பதவியி லிருப்பவர்க்குத் தமது நிலையைக் காட்டவும் ஆகும்; உலகத்தில் தமது தெய்வநிலையை வெளியிடக் கொண்ட

எற்கிறது முயலுக்குப் படுகிறது பற்றைக்கு.

என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்? உன் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்?

கருவியும் எனலாம்; தமது அபார தெய்விகத்தைக் கண்டேனும் அகந்தையிற் கிடப்பவர் இரக்கமுற்றுப் பச்சாத்தாபத்தால் மனத்தூய்மையும் பெருமையும் அடைய இடந்தரவுமெனலாம். ஆனால் பழுதையைப் பாம்பாக மதித்தவன் உண்மையை, யார் கூறில் உணர்ந்து நம்புவன்? வர்ணக் கண்ணாடியில் பார்ப்பதால் மாறபடும் பொருளின் வர்ணத்தை யாவரே மாற்ற முடியும்? உண்மை ஞானானுபவமல்லால் வேறுவழி ஏது அதற்கு? கற்றறிமோழைகள் அதை எப்படிக் காண்பர்? அத்தகையார்க்குக் அவரது கோழை நெஞ்சம் உண்டாக்கு மயக்கத்தை எது தீர்க்கும்? தீவ்ர ஞானத்தை அங்கு ஜ்வலிக்கச் செய்ய எதனால் முடியும்? கண்ணிருந்தாலென்ன? கதிர் எழுந்தால்தானே காணமுடியும்? கண்ணைக்கொடுக்கக் கடவுளன்றி யாரால் முடியும்?

நிற்க, தனக்கெனச் செய்த ஆராதனத்தைத் தடுத்து, மலைக்கும், பசுவிற்கும், பார்ப்பானுக்குஞ் செய்யும்படி தூண்டிய கண்ணனிடம் கோபங்கொண்ட இந்திரன், பிரளயகால மேகங்களைப் பிருந்தாவனத்தில் விடாமழை பெய்ய உத்தரவிட்டான். தேனுக்கு அதிகாரம் கொடுத்தால் நொடிக்கு நூறு தடவை கொட்டுமென்ப ரல்லவா?

கல்லும் மண்ணும் கலக்கப் பெருங்காற்றெடுத்து மோதிய அம்மேகங்கள் பெய்த மழையால் துயரடைந்த கோபாலர்கள், கண்ணனைச் சரணடைந்து தம்மைக் காக்கவேண்டினர். புறஞ் செல்லா மனத்துடன் வழிபடும் பக்தர்களின் ஸுகதுக்கத்தைப் பார்த்துக்கொள்ளப் பொறுப்பேற்ற அவ்வெம்பெருமான், இந்திரனது ஸந்தாபத்திலிருந்து அவரைக் காக்க எண்ணங்கொண்டு, பக்கத்திலிருந்த கோவர்த்தன மலையை வேரோடு பிடுங்கித் தமது சிறு விரல் நுனிமேல் அதைக் குடைபோல் நிலைக்கச் செய்தனர்; கோபாலர்களை எல்லாம் அதன்கீழ்ப் பசுக் கூட்டங்களுடன் ஸுகமாக இருக்கும்படி கூறினர். அவர்கள் எல்லோரும் அப்படியே அம்மலையின்கீழ்த் தத்தம் பசுக்களுடன் ஒதுங்கிக் கஷ்டமின்றி இருந்தனர்.

ஏழுநாள் விடாமழை பெய்தது; இடியுமின்னலும் ஆலங்கட்டியும் இடிப்பதும், மின்னுவதும், விழுவதுமாகவே இருந்தன. கடல்போல் புரண்டு, புது வெள்ளம் அம்மலைமேல் குதித்துக் குதித்து நடந்துகொண்டேயிருந்தது. எனினும் கண்ணன் சிறு விரல்மேல் பதிந்திருந்த அம்மலை சற்று மசைந்திலது. ஏழு நாளாக அன்ன ஆஹாரமின்றியும் அச்சிறுவிரல் சற்றும் சலித்ததில்லை; அம்மலையின் ஆணிவேர்போல் அசைவற்றிருந்தது. மலையைப் பெயர்த்தெடுத்து, சிறு விரலிற் பதித்து, அக்கோபாலரது பெருந் துயரத்தைத் தொலைத்து விளங்கிய அவ்வுருவத்தை யாரே வர்ணிப்பது? ஸப்தமேகங்களும் தாரைதாரையாகப் பெய்யும் ஆரவாரம் அக்கோபாலர்காதில் அப்போது சற்றும் விழவில்லை. அம்மலையின்கீழ் அந்தகாரம் இருப்பதாக அவர் காணவில்லை. பசியென்பது அவர்க்கு அப்பொழுது எங்குப்பறந்ததோ! இன்ப துன்பங்களைப்பற்றிய எண்ணங்களெல்லாம் எங்குச் சென்றனவோ! தமது தலைப் பொறுப்பாய் அம்மலையைக் குடையாகக்கொண்ட அக் கண்ணபிரானது அசைவற்ற நிலையில் அவர் எவ்வாறு நிலைத்திருந்தனர்! அச்சமயம் அங்கிருந்த ஸர்வ ஜீவராசிகளும் தமது ஐம்புல வியாபாரங்களற்றுச் செயலற்றுக் கிடந்தன. இடி, மழை, காற்று, வெள்ளப் பெருக்கு, முழக்கம்—இத்தகைய சண்டமாருதச் சுழலுள் அவ்விராசிகள் சாந்தியே குடிகொண்டு அசைவற்றுக் கிடந்தன. அகந்தையின் ஆட்களாக அம்மேகங்கள் அதிக்ரமித்துச் செய்த செயல்கள் என்ன பயனுற்றன? தமது உரிமையை அறியாமல் பிறர் செய்த நியாய விருத்தமான பூஜையை ஏற்றுக் கொண்டால், அவர்க்கு அவரது உரிமைகளை எடுத்து கூறி அவர் கடமையிற் கட்டுப்படாத அப்பூஜையை ஒழிக்கும்படி ஒருவன் கூறினால், அவனிடம் வழக்கமாகப் பூஜையை ஏற்றவனுக்கு ஏன் ஆத்திரம் ஏற்படாது? ஏற்படுவது இயற்கையே அல்லவா? எனினும் ஸர்வ ஸ்வதந்தரத்தையுமறிந்து எவரும் உணர்ந்து, உள்ளுணர்ச்சியால் ஒழுகும்படி பாமர பண்டிதரெவர்க்கும் போதம் புகட்டல் அறிவாளிகளின் கடமை. அக்கடமைக்குப் பயப்படல் மனோதிடமில்லா அறிவின்மையே யாகும். ஆகவே, இந்திரன் மழைபெய்ததும் கண்ணன்கிரிக்குடைபிடித்ததும் இயற்கையில் ஜீவராசிகளினிடையே ஏற்படும் ஸ்வாதந்திரானுபவ வழக்கேயாகுமன்றோ?

கன்-ப்-யூஷஸ்

CONFUCIUS

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆதிகாலமுதல் சைனா தேசத்தில் மான்ய முறை அநுசரிக்கப்பட்டு வந்தது. வூ-வாங் என்ற அரசன் இம்மான்ய முறை எந்நாளும் நீடித்திருக்கும்படி பின்வருமாறு பலப்படுத்தினான். சைனாதேசத்தைப் பற்பல கப்ப நாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு நாட்டிலும் தான் சிங்காதனமேறியதற்கு உதவினவர்களை அதிபதிகளாக அமர்த்தினான். அக்காலத்தில் இவ்வரசாட்சி ஓர் பெருங் குடும்பக் கூட்டுபோல் விளங்கிற்றாம். நாள் செல்லச் செல்லப் பிரதான பட்டணத்திற்கும் கீழ்நாடுகளுக்குமுள்ள சம்பந்தமும், ஒற்றுமையும் வேறுபட்டு ஒருவரோடொருவர் போர்புரிய வாரம்பித்தார்கள். இன்னமும், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள செல்வர்கள் மேற்கிளம்பி இதரர்களுடன் சண்டைசெய்வதுடன் நில்லாது, தங்கள் நாட்டுத் தலைவர்களுடனும் போராடி அவர்களைத் துரத்தினார்கள்; ஏழைகளைக் குரூரமாய் நடத்திவந்தார்கள். நாளடைவில், தேசமுழுதும், கலகமும், கொலையும், அநியாயமும் மேலடைந்தன. இன்னோரன்ன காலத்தில், இன்னோரன்ன நாடுகளொன்றில், கன்-ப்-யூஷஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். சீரழிந்த லூ நாட்டைப் பின்வருமாறு இவர் சரிப்படுத்தினார்.

பூமியின் குணம், பலன் இவைகளுக்குத் தக்கபடி ஐந்து விதங்களாகப் பிரித்து, நிலங்களைச் செம்மையாகச் சாகுபடி செய்யும் பொருட்டு அநேக சட்டங்களை ஏற்படுத்தினார். விவசாயிகளின் திறமைக்குத் தக்கபடியும், பூமியின் செழிப்பிற்குத் தக்கபடியும் இறை விதித்தார். இச்செயல்கள் சகலருக்கும் நன்மை விளைத்ததனால் யாவரும் சந்தோஷமடைந்து இவரைத் துதித்தார்களாம்.

இதற்குத் தக்க கைம்மாறு புரியவேண்டிப் பிரஜைகளுக்கு அதிக நன்மை புரிய இடங்கொடுப்பதும், இவருடைய செல்வாக்கை அதிகரிப்பதுமான உத்தியோக மொன்றை இவர்க்கு லூ நாட்டிறைவன் அளித்தான். நற்குண நற்செய்கைகளால் அவ்வரசனைத் தன்வசப்படுத்திப் பற்பல ஹிதோபதேசங்கள் செய்து கொண்டும், ஜனங்களின் இன்பத்தையும், சுகத்தையுமே பெருகச் செய்வதான வழிகளைத் தேடிக்கொண்டுமிருந்தார்.

இச்சமயத்தில், துர் நடத்தைகளும், துர்க்குணங்களும் பொருந்திய ஒருசீமானின் பெயர் வெளிவந்தது. இனியாவரும் கிரமப்படி நடக்க வேண்டுமெனவும், அக்குரூரனுக்குத் தக்க தண்டனை விதிக்கவேண்டுமெனவும் எண்ணி, அச்சீமானை நியாயஸ்தலத்திற்கு வரவழைத்துப் பூரணமாக விசாரித்ததன்பேரில், அக்கொடியன் பொறுக்கக் கூடாததும், மன்னிப்பதற் கியலாததுமான குற்றங்களைச் செய்திருந்ததாகக் கண்டு, மரண தண்டனை விதித்தார். ஒரு வாரத்திற்குப் பின், அவன் தூக்கிடப்பட்டிறந்தான். லூ நாட்டினர் இதைக் கேள்வியுற்றுப் பயந்து ஒழுங்குடன் நடந்தார்களாம். பின், குற்றவாளிகளுக்குரிய சட்டங்களைச் சீர்திருத்தினார். இராணுவங்களைச் செம்மைப்படுத்தினார். அந்நாட்களில் ஜனங்கள் சுகித்திருந்தார்களாம்.

ட்சீ நாட்டுத் தலைவன் முற்கூறியவைகளை அறிந்தபொழுது பயம் மேலிட்டுப் பின்வரும் உபாயங்களைச் செய்தான்.

லூ நாட்டின் ஒரு பாகத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றினான். லூ நாட்டிறைவன் இதை அறிந்து அப்பாகத்தை உடனே திருப்பிக் கொடுக்கும்படிக்கும், இல்லாவிடில் சண்டையிட்டு அப்பாகத்தை மீட்டுக்கொள்வதாகவும் ட்சீ நாட்டதிபதிக்கு நிருபமெழுதினான். ட்சீ யரசன் அக் கடிதத்தைப் பார்த்து, போர் புரிவதைவிட இருவரசர்களும் அவரவர் மந்த்ரிகளுடன் மாத்திரம் ஓரிடத்தில் சந்தித்து முற்கூறியதைப்பற்றித் தீர ஆலோசித்து, ஓர் சரியான முடிவுக்கு வருதலே நலமெனத் தந்திரத்துடன் ஓர் பதிலனுப்பினான். இதற்காக லூ நாட்டின் எல்லையிலுள்ள மலையில் இருதிறத்தாருஞ் சந்திக்க வேண்டுமென நிச்சயிக்கப்பட்டது. இஃதிவ்வாறாக, ட்சீயரசன் குறித்த விடத்திற் கருகில் இரகஸ்யமாய்த் தன்சேனையின் ஒரு பாகத்தை மறைத்துவைத்து, லூவரசன்வரும்பொழுது, அவனைப் பிடித்துத் தன்வசப்படுத்தித் தனக்கனுகூலமான உடன்படிக்கை செய்து கொள்ளலாமென எண்ணி, வேண்டிய ஏற்

பாடுகளைச் செய்தான். கன்-ப்-யூஷஸ் இவனை விட மதியூகி யாதலால் முற்கூறிய வற்றை முன்னறிந்து, அவனுடைய கெட்ட எண்ணங்கள் கைகூடாதிருக்கும்படி தானும் பிரதி ஏற்பாடு செய்தார். குறித்த தினத்தில், குறித்த விடத்தில், இவர்கள் சந்தித்தார்கள். இதற்குள் ட்சீயரசன் கன்-ப்-யூஷஸின் பிரதி ஏற்பாட்டை அறிந்து, அகங்காரத்தினுற் கவரப்பட்டு, இவரை எவ்விதத்திலாவது மானபங்கஞ் செய்யவேண்டுமெனத் தீர்மானித்தான். ராஜ்யாலோசனை செய்யுமுன், வழக்கப்படி சங்கீதமும், நாட்டியமும் ஆரம்பிக்கப் பட்டன. மனதிற்கு ருசிக்காவண்ணம் அந்நாட்டியக்காரர்கள் நடனஞ் செய்தமையால், கன்-ப்யூஷஸ் வெகுண்டு, அவ் வேசையர்களை உடனே வெளியில் துரத்தினுர். வந்த காரியம் ஒருவாருய் முடிந்தபின் அவ்வரசர்கள் அவரவர் இருப்பிடத்திற்குச் சென்ருர்கள்.

ட்சீயரசன் கன்-ப் யூஷஸின்மேல் கோபங்கொண்டு, லூவரசனை இவரிடமிருந்து எவ்விதமாகவாவது பிரித்துவிடவேண்டு மெனச் சதியாலோசனை செய்தான். இதற்காக, இனிப்பும், வனப்பும் வாய்ந்த பொதுமகளிரிருவரை லூவரசனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். லூவரசன் இவர்களைக் கண்டு மயங்கி, இவர்கள் வசமானுன்; இராஜ்யகாரியங்களை மறந்தான்; கன்-ப்-யூஷஸின் நற்புத்திகளை அலக்ஷியஞ்செய்தான். ஆதலால், இவர் உத்தியோகத்தினின்று அகன்ருர்.

பின், ஒருவரும் இவரைக் கவனியாததனுல், நாடு நாடாய்த் தன் சிஷ்யர்களுடன் பிரயாணஞ்செய்ய வாரம்பித்தார். இங்ஙனம் தேச சஞ்சாரஞ் செய்துகொண் டிருக்கையில், ஒருநாள், அதிக தூரம் நடந்ததனுல் சோர்வடைந்து, களைப்பாறும் பொருட்டுத் தன் சிஷ்யர்களுடன் ஒரு பெரிய விருக்ஷத்தின் நிழலில் உட்கார்ந்தார். சற்று நேரத்திற்குப் பின், பக்க நாட்டரசனது ராணுவத் தலைவன், எக்காரணத்தை யிட்டோ, இவரைக் குத்திக் கொன்றுவிட நினைத்து உருவின வாளுடன் இவர்மேல் பாய்ந்தான். சிஷ்யர்கள் திகிலடைந்து நாலாபக்கத்திலும் ஓடிய போதிலும், கன்-ப்-யூஷஸ் அங்ஙனஞ் செய்யாது, தைரியத்துடன் எழுந்து நின்று, சரியாகத் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார். இராணுவத் தலைவன் வெட்கி, மேலொன்றுஞ்செய்யாது சென்ருன். பின், திரும்பிவந்த சிஷ்யர்களைப் பார்த்துக் கன்-ப்-யூஷஸ் "கடவுளின் கிருபையிருக்கும் வரையிலும், எவரும் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை" என்று கூறினுர். பசிவேளைகளில் சங்கீதம் பாடி ஆறுதலடைவராம். அநேக நாடுகளுக்குச் சென்றபொழுது, ஓரிடத்திலும் ஒருவராலும் கவனிக்கப்படவில்லை. ஆனுல், ஆங்காங்கு தன்னிடம் வந்தவர்களுக்கு நீதி நெறிகளைப் புகட்டி வந்தார். இங்ஙனம் பதின்மூன்று வருடகாலம் நாடோடியாய்க் காலத்தைக் கழித்தார்.

அறுபத்தாருவது வயதில் மனைவியை இழந்தார். பின், இவருடைய ஒரே புத்திரனும் இறந்தான்.

ட்சீ நாட்டரசன் கொலை செய்யப்பட்டு இறந்தானென்பதைக் கேட்டபொழுது, இதன் காரணத்தை அறியும் பொருட்டும், மேலாக வேண்டியவைகளைச் செய்து ஒழுங்குபடுத்தும் பொருட்டும், அத்தலைவனின் சுற்றத்தாரை நெருங்கியபொழுது, அவர்களால் அலக்ஷியஞ் செய்யப்பட்டதால், பின் அங்கு தங்காது வேறிடஞ் சென்றனர்.

பின், லூநாட்டதிபதியால் தக்க வெகுமதிகளுடன் அனுப்பப்பட்ட தூதர்களுடன் அறுபத்தொன்பதாவது வயதில், தாய் அகஞ் சென்ருர்.

மரணம்:—எழுபத்துமூன்ருவது வயதில், எத்தகைய வேதனைகளாலும் அவதிப்படாது, வழக்கம்போல் உறங்கிக்கொண் டிருக்கையிலேயே நித்திய நித்திரையி லாழ்ந்தார். வாணுள் முழுதும் இதரர்களால் அசட்டை செய்யப்பட்டபோதிலும், அவைகளைக் கவனியாது, ஞானவொளியால் அவைகளை அகற்றியும், பொறுத்தும், பிரதி பலனைச் சிறிதேனும் மனத்தில் வகியாது பிறர்க்கு நன்மை செய்தும் வந்த அவருடைய ஆயுள் முடிந்துவிட்டது.

பின் சிஷ்யர்கள் ஒருங்கு கூடி, அந்நாட்டின் உத்திரபாகத்தில், புதிய நிலமொன்றை வாங்கி, அங்கு மிக்க விமரிசையுடன் இவரை அடக்கஞ்செய்தார்கள். சிஷ்யர்கள், தங்கள் பெற்ரோர்களுக்கு மேலாக இவரை நினைத்து, இவருடன் அந்நியோந்நியமாய்ப் பழகியிருந்தபடியால், இப்பிரிவினுல் அதிக வருத்தமுற்று

வெகுநாள் வரையிலும் துக்கங் காத்தனர்களாம். கன்-ப்-யூஷஸின் பிரதான சிஷ்யனுன ட்சீகங் என்பவன் இவருடைய கல்லறையினருகில் ஓர் குடிசை யெழுப்புவித்து, அதில் ஆறு வருடகாலம் துக்கங் காத்தனனும்

லூநாட்டிறைவன் இவர் மரணத்தைக் கேட்டுத் துக்கித்தனனும். இவர் உயிருடனிருந்த வரையிலும் சரியாகக் கவனித்திராது, மரித்தபின் இவரைப்பற்றி நினைத்து, நொந்து, அலறுவதனுல் பயனென்ன? ஆயினும், இவருடைய ஜீவ்ய சரிதத்தையும், உபந்நியாசங்களையும் மிகச் சுருக்கமாக ஓர் விலையுயர்ந்த பலகையில் எழுதுவித்து, இதை இவருடைய கல்லறையின்மேல் வைத்து, ஓர் குறித்த தினத்தில், லூநாட்டரசன் தன் உத்தியோகஸ்தர்களுடன் இவ்விடத்திற்கு வந்து, கல்லறையின் முன்பாக வீழ்ந்து நமஸ்கரித்துத் துதித்தனனும். பின், பற்பல விடங்களில், அநேக கோயில்களை எழுப்புவித்து, கன்-ப்-யூஷஸின் சிலையை அங்கு வைத்துத் தொழுது வந்தார்களாம். இன்னமும் வருடந்தோறும் ஓர் குறித்த தினத்தில் இச் சிலாவிக்கிரஹத்தைத் தொழுது வருகிருர்களாம்.

கோள்கைகளும், நீதி போதனைகளும்:— கன்-ப்-யூஷஸ் இறந்தபின், இவர் தன் சிஷ்யர்களுக்கும், இதரர்களுக்கும் பற்பல சம்பாஷணைகளில் தெரிவித்தவைகளை ஒருங்கு திரட்டிச் சுருக்கமாகவும், தெளிவாகவும் இவருடைய மாணுக்கர்கள் வெளிப்படுத்தினுர்கள். அவைகளிற் சிலவற்றைப் பின் எழுதுவோம்.

போது:—உறவினர்கள் கூடியது ஒரு குடும்பம்; இக் குடும்பங்களின் சேர்க்கையே ஓர் இராஜ்யம் அல்லது அரசு. குடும்பத் தலைவர்களும், ராஜ்யாதிபதிகளும் கவ்னிக்கவேண்டிய விதிகளும், முறைகளும் அளவில் வேறுபடினும், தன்மையில் ஒன்றேயாகும். குடும்பத்தில் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய கடமைகளைப் பூரணமாக அறிந்து அவைகளை ஒழுங்குடன் செய்து வருவார்களானுல், அக் குடும்பம் மேன்மேல் வளர்ந்து பிரகாசிக்கும். இங்ஙனமே, பற்பல குடும்பத்தினரும் நடப்பார்களாயின், இவர்களின் திரட்சியாகிய ராஜ்யமும் விருத்தியடையும். தீயவைகளைப் போக்கி நல்லவைகளையே ஸ்தாபிப்பதற்குக் குடும்பத்தில் தகப்பனுரும், ராஜ்யத்தில் அரசனும் நியமிக்கப்பட் டிருக்கின்ருர்கள். இவர்கள் தங்கள் கையில் அதிகச் செல்வாக்குளதென எண்ணி மமதையினுல் கீழுள்ளோரை அவமதித்துக் கோலாகலத்துடன் காரியங்களைச் செய்யாதிருக்கும் வண்ணம், இவர்கள் கவனிக்கவேண்டிய முறைகளும், கடமைகளும் விதிக்கப்பட்டுள. குடும்பத்தின் தலைவனுகிய பிதா தன் குழந்தைகளின் க்ஷேமத்தையே பிரதானமாகக் கருதி, அவர்களைச் சரியாகப் படிப்பித்தும், நற்புத்திகளைப் புகட்டியும், ஹிதோபதேசங்களைச் செய்தும், அவர்களைத் தீயவழிகளிற் செல்லாது பாதுகாத்தும் வரவேண்டும். இங்ஙனமே, வேந்தனும் பிரஜைகளைத் தன் குழந்தைகளெனப் பாவித்துத் தக்க சமயங்களில் வேண்டிய உதவிகளைச் செய்து, சரிவரப் பரிபாலித்து வரவேண்டும். பிள்ளைகளும், குடிகளும் பெரியோர்களை நிந்தியாதும், அலக்ஷியஞ்செய்யாதும், பயம், பக்தி, வணக்க வொழுக்கங்களுடன் ஒழுகிவரவேண்டும். எங்ஙனம் சரீரத்தின் உறுப்புக்கள் ஒற்றுமையுடன் வேலை செய்து வருமாயின், சரீரம் சுகமடைந்து மேல் வளருமோ, அங்ஙனமே உறுப்புக்களாகிய குடும்பங்கள் தங்கள் நியமங்களைச் சரியாகச் செய்து வருமானுல், அரசாகிய சரீரம் சுகமடைந்து உன்னத நிலையை யடையும். இப்பெரியோர்கள் நற்குண நன்னடத்தை யுடையவர்களா யிருக்கவேண்டும். இல்லாவிடில், கீழோர்கள் அவர்களைச் சிறிதேனும் மதியார்கள்; கீழ்ப்படிந்து நடவார்கள்; தூற்ற வாரம்பிப்பார்கள்.

இன்னமும், அறம், அறத்தின்பொருட்டே செய்யப்படவேண்டும். அதாவது, முடிவு பலன்களைச் சிறிதேனும் மனத்தில் வகியாது நன்மை செய்தலே உண்மை அறத்தி னியல்பு.

பற்பல அங்கங்களின் சேர்க்கை சரீரம். இச்சரீரங்களின் சேர்க்கை மானிடராசி. சரீரத்தின்கணுள்ள அவையவங்கள் ஒத்து வேலைசெய்து வருமானுல், சரீரம் சுகமடைந்து மேல் வளர்வதுபோல், பற்பல மனிதர்களும் ஒருங்கு சேர்ந்து, காரியங்களைச் செய்து வருவார்களானுல், மானிடராசியும் இனித்து மேன்மேல் விருத்தியடையும். ஆனுல், சரீரத்தின் உறுப்புக்களி லேதேனுமொன்று மமதையினுலாவது, அல்லது பலஹீனத்தினுலாவது தனக்குரிய வேலையைச்

செய்யாது நின்றுவிடுமாயின் இதர அவயவங்களும் கேடடைந்து, இறுதியில் சரீரத்திற்கே நாசம் நேருவதுபோல், மானிட ராசியில் எவனாவதொருவன் செருக்கினாலாவது, அல்லது மதிக்குறைவினாலாவது தன் விதிகளைக் கைவிட்டு, அல்லது சுயலாபமே முக்கியமெனக் கொண்டு, பிறர் கஷ்டநஷ்டங்களைச் சிறிதேனுஞ் சிந்தியாது, தீயவைகளைச் செய்து வருவானாயின், நாளடைவில், அச்செய்கைகள் மானிட ராசியை நிலை குலையச் செய்து விடும். மனிதன் சேர்க்கைப் பிரியம் அதிக முடையவன்; மனோதிடமுள்ளவன்; முன் பின் ஆலோசித்துப் பார்த்துக் காரியங்களைச் செய்தற்குரிய சக்தி பொருந்தியவன். ஆதலால், ஒவ்வொருவனும் தனக்குரிய நியமங்களைத் தீர விசாரித்து அறிந்து செய்ய வேண்டும். இங்ஙன மில்லாது, "கோடிக் கணக்கான மாந்தர்களில் ஒருவன் யான். இப்பெருங் கூட்டத்தில் யான் ஒரு முக்கியனல்லன். ஆகையால், யான் எதைச் செய்தாலும் அவைகள் பிறரைத் தொடா, மாறுதலடையச் செய்யா" வென நினைத்து இருந்து வருபவனை உன்மத்தனெனக் கூறுதலே தகுதி. சரீரத்திலுள்ள ஆயிரக்கணக்கான நரம்புகள், தசைநார்கள், என்புகளிலேதேனுமொன்று தன்னால் உபயோகமொன்றுமில்லையென நினைத்துச் சும்மாவிருந்து விடுமாயின், சரீரங் கேடடைவதுபோல், எவனாவதொருவன் முற்கூறிய வீண் எண்ணங்களை மேற்கொண்டு விருதாவாகக் காலத்தைக் கழித்து வருவனானல், நாளடைவில், மானிட ராசிக்கே துன்பம் நேரிடும். ஆகையால், தன்னுடைய எண்ணங்களும், காரியங்களும் வியர்த்தமாக முடியாதெனவும், தானும் ஓர் பிரதான ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் எண்ணி, அவனவனுடைய நியமங்களைப் பூரணமாக அறிந்து, கூடிய வரையிலும் பிறர்க்கு நன்மை செய்து வருதலே உத்தமமென வற்புறுத்திக் கூறி வருகின்றனர் மெய்யறிவினோர். ஆராய்ந்தீர ஆலோசிக்குங் குணம், பொறுமை, விடா முயற்சி, ஆண்மை, அன்பு, அருள், கர்வமின்மை முதலியவைகளை யுடையவனாயிருக்க வேண்டும். அழுக்காறு, பக்ஷபாதம், அகங்காரம், மிடி முதலானவைகளை அப்புறப்படுத்தவேண்டும்.

இன்னமும், மதத்தினர்போல் மோக்ஷ நரகவுலகங்களை உற்பத்திசெய்து, குரூர தண்டனைகளை விதித்து, அறநெறிகளைத் தெரிவித்தவரும், இவ்வுலக விஷயங்களை மறந்து, காணவுங் கருதவுங் கூடாத அவ்வுலகத்தைப் பற்றியே எப்பொழுதும் நினைத்துச் சாமான்யரால் எளிதில் அறிந்து செய்யக் கூடாதவைகளையும் வெளிப்படுத்தியவரு மல்லர் நமது கன்-ப்-யூஷஸ். இவருடைய சிஷ்யர்களிலொருவன் "விண்ணவர்க்கு யாது பணிவிடை? எங்ஙனஞ் செய்வது?" என வினவிய பொழுது, "உன்னுடன் கூட இருந்து வருபவர்களுக்கு வேண்டியவற்றை அறிந்து அவைகளை முதலில் செய்வாயாக" எனவும், "இவ்வுலகினர்க்குச் செய்யவேண்டியவைகளை அறிந்து செய்யாதவன் அவ்வுலகினர்க்குரிய முறைகளை அறிந்து செய்வதெங்ஙனம்?" எனவும், வேறொருவன் "இறந்தபின் சம்பவிப்பது யாது?" எனக் கேட்டபொழுது, "உயிருட னிருக்கையில், இவ்வுலகில் சம்பவிப்பவைகளைப்பற்றி முதலில் நன்கு அறிவாயாக" எனவுங் கூறியிருப்பதிலிருந்து இவரைப் பிரமாணவாதி (Agnostic) எனக்கொள்ளுதலே தகுதி. இத்தருணத்தில் கண்முன் தோன்றுபவைகளைத்தள்ளி அறிதற் கியலாதவைகளைப்பற்றி யோசித்து வாணாளை வீணாகக் கழிப்பது உசிதமல்ல வென்னவும், சர்வவல்லமையும், சர்வஞானமும், சர்வ நன்மையும் பொருந்திய ஓர் ஜீவன் இப்பிரபஞ்சத்தையும், பிரபஞ்சாதிகளையும் பரிபாலித்து வருகிறதெனவும், சுயபுத்தியை உபயோகிப்பவனையும், ஞானத்தை அதிகரிக்கச்செய்து, அறத்தை ஸ்தாபிப்பவனையுமே அம்முழு முதற்பொருள் கைதூக்கி விடுமெனவும், இங்ஙனஞ் செய்யாது இருந்துவரும் மிடியர்களையும், துராத்மாக்களையும் அது துன்புறுத்துமெனவும் கொண்டவ ராதலால், மனிதனுடைய பொறியறிவுகளுக் கெட்டாதவைகளைப்பற்றிச் சிந்தித்து நூதன கோட்பாடுகளில் பிரவர்த்திக்காது, இவ்வுலகில், இவ்வாழ்வில் அநுஷ்டிக்க வேண்டிய மேலான அறநெறிகளைப் புகட்டி வந்ததால், சிற்சில பாமரர்கள் இவரை நாஸ்திகரெனத் தூற்றுகிறார்கள். இதன் உண்மையை இவருடைய போதனைகளைப் படிப்பவர்கள் நன்கு அறியலாம். கடவுளின் இருப்பு, குணம், ஆத்மா, முதலானவைகளைப் பற்றிச் சிந்தித்துத் தெரியப் படுத்தாததனால் கடவுள் நம்பிக்கை யுடையவரல்ல வெனவும், மதவிரோதி யெனவுஞ் சாதித்தல் மதிக்குறைவே. இப்புவியின்மீது வியாபித்து நிற்கும் தீயவைகளைப் போக்கி, நல்லவைகளையே ஸ்தாபித்துப் பரவச் செய்வதே பிரதான மென்ற கருத்துடையவ ராதலால், யாவரும் எளிதில் நன்கு அறிந்து பின்பற்றிச் செய்யக்கூடிய தர்ம வழிகளை மாத்திரம் ஊகித்தறிந்து பிரஸ்தாபித்தார். (இன்னும் வரும்)

என்ன மாயம் இடைச்சி மாயம், மோரோடு தண்ணீர் கலந்த மாயம்.

கடை யெழு வள்ளல்கள்

THE SEVEN LAST VALLALS

நமது நாட்டில் முன் காலத்தில் அரசு புரிந்த மன்னர்களுக்கு மூன்று குணங்கள் மிகவும் மேன்மையென்று கருதப்பட்டன. அவை வீரம், நீதி, கொடை அல்லது தியாகம் என்பவை. வீரத்திலும் நீதி நுட்பத்திலும் பேர் பெற்ற அரசர்களைப்பற்றிப் பல கதைகள் வழங்கி வருகின்றன. அப்படியே கேட்பவருக்கு இல்லை என்று சொல்லாமல் எதையும் கொடுக்கும் சிறந்த உதாரகுணம் விளங்கிய பல அரசர்களுடைய கதைகளும் வழங்குகின்றன.

கொடையில் பேர் பெற்றவருக்கு "வள்ளல்" என்று பெயர். ஆதியில் இருந்த 'சிபி' முதலான எழுவர் முதலெழு வள்ளல்கள். பின் இருந்த கர்ணன் முதலான எழுவர் நடுவெழு வள்ளல்கள். பிறகு கடை யெழு வள்ளல்கள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இவர்களுள் முதல், நடு வள்ளல்களுடைய விவரங்கள் இதிகாச புராணங்களில் காணலாம். கடை யெழுவள்ளல்களே சரித்திர காலத்தில் இருந்தவர்கள். ஆதலால் அவர்களைப்பற்றிய சில விவரங்கள் பழைய நூல்களில் காணக்கிடக்கிறது. இவர்கள் எல்லோரும் தமிழ்நாட்டில் சில இடங்களில் சுமார் 1800-௵ங்களுக்கு முன் அரசுபுரிந்த குறுநில மன்னர்கள். தமிழ்நாட்டு முடிவேந்தரான சேர, சோழ, பாண்டியர்களும் அக்காலத்தில் இருந்தனரானாலும், அவர்களுடைய ஆதிக்யம் அக்காலத்தில் விசேஷமாய்க் கடலோரத்திலுள்ள நாட்டிலேதான் பலமாக இருந்ததாய்த் தெரிகின்றது. மலை சேர்ந்த ஊர் நாட்டில் பல குறுநில மன்னர்கள் இருந்தார்கள். அவர்கள் தமிழ்ப் புலவரை நன்கு மதித்து வந்தார்கள் என்பது அவர்களைப் பற்றிப்பாடிய சங்கப் பாடல்களிலிருந்து தெரிகிறது. இவ்வெழுவர் பெயர் முதலிய சில விவரங்கள் புறநானூற்றில், குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடிய 158-வது பாடலில் கண்டிருக்கின்றன. அப்பாடலாவது:—

முரசுகடிப் பிருப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ணல் நெடுவரைக்
கறங்கு வெள்ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும், பிறங்கு மிசை
கொல்லி யாண்ட வல்வி லோரியும்,
காரியூர்ந்து பேரமர்க் கடந்த
மாரியீகை மறப்போர் மலையனும்,
ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்,
ஈர்ந்தண் சிலம்பி னிருடூங்கு நளிமுழை
யருந்திறற் கடவுள் காக்குமுயர் சிமையப்
பெருக னுடன்பேகனும், திருந்து மொழி
போசி பாடிய ஆயும், ஆர்வமுற்,
றுள்ளி வருந ருலைவு நனிதீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியும், எனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
யிரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவ
ணுள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
யாசினி கவினிய பலவி னார்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலை மந்தியைக் கையிடூஉம் பயிரு
மதிரா யாணர் முதிரத்துக் கிழவ
விவண் விளங்கு சிறப் பினியறோர்க் குமண
விசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுக நீ யேந்திய வேலே!

இப்பாடலில் முதல் 17 வரிகளுள் கடையெழு வள்ளல்களைப் பற்றிக் கூறப்பட் டிருக்கிறது. ஒவ்வொருவரைப்பற்றியும் கூறியிருப்பதைத் தனித்தனியாய் எடுத்துப்பொருள் ஆராய்வோம்.

என்னைப் போலக் குரலும் என் அக்காளைப்போல ஒயிலும் இல்லை யென்கிறதாம் கழுதை.

"முரசு கடிப்பு இருப்பவும் வால் வளை துவைப்பவும் அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்கறங்கு வெள்ளருவி கல்அலைத்து ஒழுகும் பறம்பிற் கோமான் பாரியும்"=நகாரவைச் சிறு தடி அறையவும் வெளுத்த சங்கங்கள் சப்திக்கவும் மூவேந்தருடன் போர்செய்த தலைவன். முழங்கும் பிரகாசமான அருவி நீர் கற்களை உருட்டியோடும் பறம்பு என்னும் மலைக்கு வேந்தனாகிய பாரியும்;

"பிறங்குமிசைக் கொல்லியாண்ட வல்வில் லோரியும்"=உயர்ந்த சிகரத்தைக்கொண்ட கொல்லி என்னும் மலையை ஆண்ட வல்விலோரியும்?

"காரி யூர்ந்து பேரமர்க்கடந்த மாரியீகை மறப்போர் மலையனும்=காரியென்ற பெயரையுடைய குதிரைமேல் ஏறிப் பெரிய யுத்தத்தில் வென்ற மழைபோன்ற கொடைத் திறமுள்ள மலையனும்;

"ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல் கூவிளங் கண்ணி கொடும்பூண் எழினியும்"=ஒருவரும் ஏறிச் செலுத்தாத குதிரையென்ற பெயருள்ள மலையையும் கூர்மையான வேலாயுதத்தையும் வில்வ மாலையையும் வளைந்த மாலையையும் உடைய எழினியும்,

"ஈர்ந்தண் சிலம்பி னிருள் தூங்குநளி முழை அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமயப் பெருபடகல் நாடன் பேகனும்" = மிகவும் குளிர்ச்சியான மலையில் இருள்செறிந்த பெரிய குகையையும், விசேஷ பலமுள்ள தெய்வம் காக்கும் உயர்ந்த சிகரங்களையும் உடைய பெரியமலை நாட்டையுடைய பேகனும்,

"திருந்து மொழி மோசி பாடிய ஆயும்"= திருத்தமான சொற்களையுடைய மோசி என்னும் புலவரால் பாடப்பட்ட ஆயும்;

"ஆர்வமுற்று உள்ளிவருநர் உலைவுநனிதீரத் தள்ளாது ஈயும் தகைசால் வண்மை கொள்ளார் ஓட்டிய நள்ளியும்" = ஆசையுடன் தன்னை எண்ணி வருபவருடைய வறுமைமிக நீங்கத் தவறாமல்கொடுக்கும் வண்மையையுடையவரும் பகைவரைத் துரத்தியவருமான நள்ளியும்.

இதில் பாரி, வல்விலோரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்ற எழுவரையும் சிறந்த வள்ளல்களாகச் சொல்லி யிருக்கிறது. இவர் எழுவரையே சிறுபாணாற்றுப்படையும் கூறுகிறது. இவர்களைப்பற்றிய சில செய்திகளை இனி எடுத்துரைப்போம்.

1. **பாரி**: இவர் கடையெழுவள்ளல்களில் முதலாவது ஸ்தானம் வகிப்பவர். பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் தலைவன். பறம்பு மலை யென்பது இப்போது இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள பிரான்மலை என்று கருதப்படுகிறது. தமிழ் நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர்கள் ஒருமித்து யுத்தம் செய்தும் பாரியைப் பராக்கிரமத்தால் வெல்ல முடியாமல் பிறகு வஞ்சித்துத் கொன்றார்கள். ஒரு சமயம் பாரி தேரில் ஏறிப்போகையில் வழியில் குறுக்கே தாழ்ந்திருந்த ஒரு முல்லைக் கொடியைக்கண்டு அது தன் தேரை இச்சித்து வழியில் படுத்திருப்பதாய் எண்ணித் தன் தேரை முல்லைக்குக் கொடுத்து விட்டார். இது அவருடைய கொடைத் திறத்தை மெச்சிச் சொல்லப்பட்ட செய்தி. இதைக் கண்டே இவரைப்பற்றிச் சிறுபாணாற்றுப்படையில்,

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரி"

என்று நத்தத்தனார் பாடியிருக்கிறார். பாரியினது கொடை விசேஷம் தமிழ்நாட்டில் பழமொழி வழக்காக வழங்கும். சுந்தரமூர்த்தி நாயனாரும் திருப்புகலூர் திருப்பதிகத்தில், "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங்கொடுப்பாரில்லை" என்று பாடியிருக்கிறார்.

2. **வல்விலோரி**: இவர் கொல்லி என்றமலைக்கும் அதையடுத்த நாட்டிற்கும் தலைவர். கொல்லிமலை என்பது கோயம்புத்தூர் ஜில்லாவில் இருக்கிற ஒரு மலை என்று சிலர் அபிப்பிராயபடுகிறார்கள். இவர்பெயர்ஓரியென்றுவழங்கும்.

3. **மலையன்**: இவர் பெயர் மலையமான் திருமுடிக்காரி என்றும் வழங்கும். இவரும் ஒரு மலையரசரே என்று விளங்குகிறது. இவரது குதிரையின் பெயர் "காரி". இவரும் வல்விலோரியும் சண்டை செய்ததைச் சுட்டிச் சிறுபாணாற்றுப்படையில் நத்தத்தனார்,

"காரிக் குதிரை காரியொடு மலைந்த
வோரிக் குதிரை ஓரி"

என்று பாடியிருக்கின்றனர்.

4. **எழினி**: இவர் பெயர் அதிகமான் என்றும் வழங்கும். இவரது மலையாகிய 'குதிரைமலை யென்பது தென் கன்னடத்தில் உள்ள

ஏண்டா தென்னமரத்தில் ஏறினையென்றால், கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்க என்றான்.

குதிரைமூக்கு மலையாக இருக்கலாம். இவர் ஒரு தெய்விகத்தன்மை பொருந்திய நெல்லிக் கனி பெற்றார். அதன் குணம் அதைப் புசித்தவர் பல நூறு வருஷங்கள் உயிருடன் இருக்கலாமாம். அவ்வளவு சிறப்புள்ள கனியைப் பெற்றும் அதைத் தான் உட்கொள்ளாது ஔவையார்க்குக் கொடுத்து விட்டார். இச்செய்தி சிறு பாணாற்றுப்படையில்,

கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச் சினங்கன லு மொளிதிகழ் நெடுவே
லரவக் கடற்றானை யதிகனும்

என்று கூறப்பட்டிருக்கிறது.

5. **பேகன்**: இவர் இப்போது பழனியென்று சொல்லப்படும் மலையையும் அதைச் சார்ந்த நாட்டையும் ஆண்டவர். முன்காலத்தில் பழனிக்கு ஆவிகுடி என்று பெயர். திருமுருகாற்றுப்படையிலும் பழனி "திரு ஆவி நன்குடி" என்றே சொல்லப்பட்டிருக்கிறது. பேகன் ஆண்ட நாடு பெரும் மலைநாடாக இருப்பதையும் "அருந்திறற் கடவுள் காக்கும்" உயர்ந்த மலை யுச்சியை யுடைத்தாயிருப்பதையும் நாம் இப்போதும் காண்கிறோம். பேகன் ஒரு சமயம் ஒரு மயில் ஆடுவதைப் பார்த்து அதற்குக் குளிர் நீங்குவதற்காகத் தான் வைத்திருந்த போர்வையை அம்மயிலுக்குக் கொடுத்து விட்டார். இதைக்குறித்துச் சிறு பாணாற்றுப்படையில்,

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன்பேகன்" (கலிங்கம்=போர்வை)

என்று கூறப்பட்டிருக்கிறது.

6. **ஆய்**: இவரும் ஒருசிறந்த கொடையாளி. இவரைப் பாடிய மோசி என்பவருடைய முழுப்பெயர் "உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்."

7. **நள்ளி**: இவர் எழுவரில் கடைசியாய்க் கூறப்பட்டாலும் மிகச்சிறந்த கொடையாளி. இதைக்குறித்தே மேலேகூறியபாடலில்,

"ஆர்வமுற்
றுள்ளி வருந ருலைவு நனிதீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளி"

என்று கவிபாடியிருக்கிறார். இதுபோலவே சிறுபாணாற்றுப் படையிலும் இவரைக்குறித்து.

"கரவாது நட்டோருவக்க நடைப்பரிகார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சுநெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளி"

என்று கூறப்பட்டிருக்கிறது. இவரும் ஒருமலை நாட்டரசரே. பிற்காலத்துப் புலவர்கள் செல்வான்களை அதிகமாய்ப்புகழ்ந்து பாடியிருக்கும் பாடல்களைப்போலல்லாமல் இவ்வேழு சிறந்த வள்ளல்களைக் குறித்துப் பாடிய சங்கப் பாடல்கள் உயர்வு நவிற்சியணியைப் பெரும்பாலும் தவிர்த்துத் தன்மை நவிற்சி யணியே சிறக்கக் கொண்டு விளங்குவதையும் இங்கே நோக்கத் தக்கது.

தமிழ்நாட்டுப் பழைய சரித்திரத்தில் ஆராய்ச்சி செய்து தெளிய வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கடையெழுவள்ளல்களைப்பற்றி இப்போது நாம் அறியும் செய்திகளைத் தவிர இன்னும் பல செய்திகளைத் தெரிந்து வெளியிடுவார்கள் என்று தமிழபிமானிகள் எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

மத்ஸ்ய மனிதர், மத்ஸ்ய ஸ்திரீகள்

MERMAN AND THE MERMAID

எல்லாம் வல்ல இறைவனாகிய முழுமுதற் கடவுள் படைத்த அநேக அண்ட கோடிகளுள் இந்நிலவுலகில், நிலத்தின் கண்ணும், நீரின் கண்ணும் வாழும் நால்வகை யோனி, எழுவகைத் தோற்றமாகிய எண்ணிறந்த உயிர்கள் படைப்புக் காலந் தொட்டே இருக்கின்றன வென்பது யாராலும் மறுக்க வொண்ணாததன்றோ? பூமியில்வாழும் உயிர்களுள் உடலாற் பெரியது யானையென்பதும், நீரில் வாழும் உயிர்களுள் உடலாற்பெரியவை திமிங்கிலம்முதலிய மீன்களென்பதும் பலருமறிந்ததே. நிலமும், நீரும் தவிர மற்றப் பூதங்களாகிய அக்கினி, வாயு, ஆகாசம் என்னும் மண்டலங்களிலும் இவைபோன்ற உயிர்கள் இருக்குமென்றும்

ஏண்டா பட்டப்பகலில் திருடுகிறாய்? என் அவசரம் உனக்குத் தெரியுமா?

சுருதி, யுக்தி, அநுபவ பூர்வமாக அறிந்துகொள்ளக் கிடக்கின்றது. ஆயினும் மேலே கண்ட அக்கினி, வாயு, ஆகாசம், என்னும் மண்டலங்களில்வசிக்கும் உயிர்கள், இன்ன இன்னவை, இத்தன்மையன, இன்ன உருவின, இவ்வளவின வென்று அறிந்துகொள்ள முடியாதனவாயிருக்கின்றன. நீர்மண்டலமாகிய சமுத்திரங்களில் வசிக்கும் உயிர்களுக்குள், நிலத்திலிருப்பனபோலவே மலைகளையும்,மரஞ்செடி கொடிகளையும், விலங்குகளையும், பறவைகளையும், ஊர்வனவாகிய உயிர்களையும், மனிதர்களையும், பெரும்பாலும் ஒத்திருக்கின்ற சராசர ஜந்துக்களுள்ளன வென்பது ஆழ்ந்து பார்க்கில் விளங்காமற் போகாது.

மேலும் சாஸ்திரங்களினின்றும், புராணங்களினின்றும், பகவான் ஸ்ரீமன் நாராயண மூர்த்தி, துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாக, இப்பூவுலகில் எடுத்த அவதாரங்களுள் தசாவதாரம் என்று வழங்கும் பத்து அவதாரங்கள் மிகவும் விசேஷமானவையென்றும், அப்பத்து அவதாரங்களுள் மத்ஸ்யாவதாரம் ஒன்றென்றும் நாம் படித்தும், கேட்டும் இருக்கிறோம். அம்மத்ஸ்யாவதாரத்தின் லக்ஷணம் இடுப்புக்குமேல்மனித உருவமும், இடுப்புக்குக் கீழ் மத்ஸ்ய உருவமும் என்றும் நமக்குத்தெரியும். இதுபோலவே உருக்கொண்டு தற்காலத்திலும் சமுத்திரங்களில் மத்ஸ்யமனிதன்,மத்ஸ்ய ஸ்திரீ (Merman and Mermaid) என்னும் ஜந்துக்கள் வாசம் செய்கின்றனவென்றால் கடவுளுடைய படைப்பின் அற்புதத்தையும், படைத்திருக்கின்றஉயிர்களில்அதியற்புதமான உயிர்களைப்பற்றி உண்டாகும் அற்புதத்தையும் விரிக்கின் அளவுக்கடங்கா. எனவே அது எவ்வளவு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதென்பது சொல்லாமலே விளங்கும். அவ்வித மத்ஸ்யஸ்திரீ .என்பவர் யார் என்றும், அவரைப்பற்றி நமக்கு என்ன தெரியும் என்பதையும் சற்றுக் கவனிப்போம்.

இந்த விநோதமான மனித மீன்களைப்பற்றி விசேஷமாய், இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து முதலிய தேசத்துப் பூர்வகதைகள் சொல்லுகின்றன. இச்சந்துக்கள் அநேகமாய் மனிதனையே ஒத்திருக்கின்றன. அவைகள் சமுத்திரத்திலேயே வாசம் செய்கின்றனவாயினும் தண்ணீரை விட்டுக் கரையிலும் வந்து ஜீவிக்கும். அவைகள் மனிதர்களை நேசித்து, அவர்களுடன் கூடிச் சிற்றின்பங்களை அனுபவிக்கக் கூடுமென்றும் சொல்லுவது அதிசயந் தருமல்லவா?

இந்த மத்ஸ்ய புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இடுப்பிற்குமேல் தலையும் உடலும் சாதாரணமான ஸ்திரீ புருஷர்களைப்போலவும், இடுப்பிற்குக் கீழ் மீன் வாலைப்போலவும் இருக்கும். அவ்வாலில் மீன்களுக்கிருப்பது போல் சிறிய சிதல்கள் நிறைந்திருக்கும். இம் மத்ஸ்ய ஸ்திரீகள் மிகவும் லக்ஷணம் பொருந்தியவர்கள். அவர்களின் தலைமயிர் மிகவும் நீளமாயும் அடர்த்தியாகவும், அழகாகவுமிருக்கும்.

இம்மத்ஸ்ய ஸ்திரீ புருஷர்களுக்கு அநேக விதமான அபூர்வ சக்திகளுண்டென்று சொல்லுகிறார்கள். அவர்கள் தாமாகவோ, அல்லது, நிர்ப்பந்தத்தின் பேரிலோ, எல்லா மனிதர்களுக்கும் இனி நடக்கக்கூடிய விஷயங்களைத் தெளிவாக எடுத்துரைக்கக் கூடுமென்றும், மனுஷ்யர்களுக்குத் தெய்வத் தன்மையையும், தெய்வங்களுக்குண்டான சக்திகளையும் உண்டாக்கக் கூடுமென்றும், அவைகள் மனிதர்களுக்கு வைத்தியம், மாந்திரீகம் முதலான சக்திகளைப் புகட்டக் கூடுமென்றும், மனித ஸ்திரீ புருஷர்களை யண்டி அவர்களுடன் சிலகாலம் சிற்றின்பங்களை யனுபவித்துவிட்டுப் பிறகு கடலிற் குள்ளிருக்கும் தங்கள் இருப்பிடத்திற்குப் போய் விடுகிறார்களென்றும், சொல்லுகிறார்கள்.

இம்மத்ஸ்ய ஸ்திரீ புருஷர்களுடன் மனித ஸ்திரீ புருஷர்கள் எவ்விதத்திலாகிலும் சம்சர்க்கம் வைத்துக்கொள்வது, அம்மனித ஸ்திரீ புருஷர்களுக்கு எப்பொழுதும் தீராக் கெடுதியையும் மிக்க துன்பங்களையும் விளைவிக்கின்றன வென்றும் சொல்லுகிறார்கள். மீன்வா லில்லாமலும் சில இருக்கின்றன வென்றும் சொல்லுகிறார்கள்.

இம்மனித மீன்கள் உண்மையாகவே இக்காலத்திலும் இருக்கலாம் என்ற நம்பிக்கைக்கு ஓர் ஆதாரமாக அவைகளைப் பற்றி அநேக கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. 1187-ம் வருஷத்தில் இங்கிலாந்தின் சமுத்திரக் கரையில் ஒருமீன் மனிதனைப் பிடித்தார்களென்று ஸ்டோவ் (Mr. Stowe) என்பவர் சொல்லியிருக்கிறார். சென்ற நூற்றாண்டில், 1811-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்கு மேற்கேயுள்ள மோனா அல்லது மான் (Isle of Man) என்ற தீவின் கடற்கரை யோரமாய் இரண்டு மீன் ஸ்திரீகள் வெயிலில் காய்ந்து கொண்டிருந்ததை மூன்று வழிப்போக்கர்கள் கண்டார்களென்றும், அவைகளில் ஒன்று இறந்துபோயிருக்க மற்றொன்று இறந்ததன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு கிரீச் என்றகுரலுடன் முறையிட்டுக்கொண்டிருந்ததாகவும். உயிருடனிருந்ததைக் கூட்டிலடைத்துக்கொண்டுபோய்ப் பரிக்ஷித்துப் பார்த்ததில், அது 4 அடி நீளமுள்ளதாயும், சுமார் 5 அங்குலம் வரை நீண்டிருந்த மயிர்களையுடையதாயும் இருந்ததென்றும், அதன் வாய் சிறியதாயும் பற்களில்லாமலிருந்த தென்றும் சொல்லியிருக்கிறார்கள். பதினேந்தாம் நூற்றாண்டில் ஒரு மீன் ஸ்திரீ ஹார்லம் (Haarlem) என்ற இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பதினாறு வருஷ காலம் ஜீவித்திருந்து, துணிகள் நெய்யவும், இயேசுவைத் தொழவும் கற்றுக் கொண்டு, ஜனங்களுக்கு மத்தியில் ஜீவித்து வந்ததாக ஜான் கர்பாண்டிஸ் (John Gerbandes) என்பவர் சொல்லியிருக்கிறார்.

ஏதென்று கேட்பாரும் இல்லை எடுத்துப் பார்ப்பாரும் இல்லை.

மேலும் சமீப காலத்திற்கூட அதாவது சென்ற நூற்றாண்டிலேயே சில ஆங்கிலேய கவிராயர்கள், இம்மத்ஸய ஸ்திரீகள், மனிதர்களைக் காதலித்து, அவர்களைக் கடலிற்குள் தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துப்போய் விடுவதாகவும், அல்லது, சில மத்ஸ்ய புருஷர்கள் சில ஸ்திரீகளைக் காதலித்து அவர்களுடன் சுகமனுபவித்து வருவதாகவும் எழுதியிருக்கிறார்கள். இவ்விதப் பாடல்களில் ஒன்று டென்னிஸன் (Tennyson) கவியவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. அவர் ஒரு மீன் ஸ்திரீயை, சமுத்திரக் கரையில் உட்கார்ந்து உல்லாசமாகப் பாடிக்கொண்டு ஓர் தலைவாரியினால், அதனது நீண்டு அடர்ந்த தலைமயிரை வாரிவிட்டுக்கொண் டிருப்பதுபோல் வர்ணித்து எழுதியிருக்கிறார். மற்றொன்று மாத்யு ஆர்னல்ட் (Mathew Arnold) என்பவரால் எழுதப்பட்ட "கைவிடப்பட்ட மீன் மனிதன்" (Forsaken Merman) என்பது தான். இக்கதை அதிக ஆச்சரியத்தையும், தாபத்தையும் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. ஒரு மீன் மனிதன் ஒரு மனித ஸ்திரீயைக் காதலித்து, சமுத்திரத்தில் தன்னுடைய இருப்பிடத்திற்கு அழைத்துப் போய் அவர்கள், அவர்களுக்குண்டான குழந்தைகளுடன் சில காலம் அவ்விடத்திலேயே சௌக்கியமாக இருந்தார்களென்றும், பிறகு சில காலத்திற்கெல்லாம் அம்மனித ஸ்திரீக்குத் தனது புருஷனாகிய அம்மீன் மனிதனுடன் அவ்விடத்திலிருக்க மனமில்லாமல் அவனிடம் வெளியேயுள்ள கோவிலுக்குப் போய் வருவதாகச் சொல்லி உத்திரவு வாங்கிக் கொண்டு போய், பிறகு திரும்பி வராமலிருந்துவிட்டாளென்றும், அவ்விதம் அவள் வாராததனால் தன் குழந்தைகள் தாயைக் காணாமல் வருந்துவதைக்கண்டு, அம்மீன் மனிதன் குழந்தைகளுடன் கடற்கரை யோரமாய் வந்து உட்கார்ந்துகொண்டு தனது மனைவியாயிருந்த அந்த ஸ்திரீயை மிகவும் பரிதாபத்துடன் கூப்பிட்டும் அவள் வராமையால் மிக்க ஏக்கத்துடன் திரும்பவும் தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டதாகவும் அதில் அவர் எழுதியிருக்கிறார்.

மேலும் இச்சந்துக்களைப்பற்றி ஆங்கிலேயர் முதலானோர்கள் எழுதியிருப்பதைத் தவிரவும், நமது சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் கூட இவ்விதம் மத்ஸ்ய உருக்கொண்ட மனிதர்களைப்பற்றிச் சொல்லியிருக்கின்றனர். மஹாபாரதத்தில் ஆதிபர்வத்தில் வேதவியாசருடைய ஜனனத்தைப் பற்றிச் சொல்லுங்கால்,எப்படிப் பிரம்மாவினுடைய சாபத்தினால் உருவம்மாறி மீனாகத் தண்ணீரில் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்த ஓர் தேவ கன்னிகையின் வயிற்றில், ஓர் மத்ஸ்ய குமாரனும், ஓர்மத்ஸ்ய குமாரியும் பிறந்தார்களென்றும், அம்மத்ஸ்ய குமாரியானவள் எப்படி யமுனாநதியில் படகோட்டிக்கொண் டிருக்கும் காலத்தில் ஓர் மஹாரிஷியின் வேண்டுகோளுக் கிணங்கித் தான் கர்ப்பவதியாய், ஸ்ரீ வேத வியாசரைப் பெற்றாளென்றும், சொல்லப்பட் டிருக்கிறது. இன்னும் மற்றொரு இடத்தில் இடுப்பிற்குக் கீழ், பாம்பின் உடலைப்போல் உருக்கொண்ட நாக கன்னிகை என்னும் ஓர் ஸ்திரீ, அர்ச்சுனனை மணந்து, அறவன் என்ற ஓர் குமாரனை ஈன்றாள் என்றும் சொல்லியுளது. ஆகையால் இவ்வித ஆச்சரியகரமான ஜந்துக்களைப்

ஏரி உடைகிறதற்கு முன்னே அணை போடவேண்டும்.

பற்றி அநேக தேசங்களில் அவ்வத்தேசங்களின் ஆதிக்கதைகளில் சொல்லப்பட்டிருக்க வேண்டுமென்றே புலப்படுகிறது.

ஆனதுபற்றி மேலே சொல்லப்பட்ட இம்மீன் மனிதர்களைப்போல உருக்கொண்டு ஸ்ரீ பகவான் அவதாரம் செய்தாரென்றும், மத்ஸ்ய கன்னிகை மத்ஸ்யகுமாரன் இவர்களுடைய விருத்தாந்தத்தைச் சொல்லி எப்படி இம்மத்ஸ்ய கன்னிகையிடம் வேதவியாசர் உற்பத்தி யானாரென்றும் நமது சாஸ்திர, புராண, இதிகாசங்களில் சொல்லியிருப்பதையும், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களில் சமுத்திரங்களில் இம்மீன் மனிதர்களைக் கண்டதாகவும், அவைகளைப் பிடித்துப் பரிசோதித்துப் பார்த்து அவைகளின் குணாகுணங்களைத் தெரிந்து சொல்லும் பல கதைகளையும் ஒருங்கு ஆலோசித்துப் பார்க்குமளவில் அவ்விதமான உருவத்துடன் கூடிய கடற் பிராணிகள் நிச்சயமாய் ஆதிகாலத்திலிருந்திருக்க வேண்டுமென்றும், பகவத் சிருஷ்டியில் அவைகளும் சேர்ந்தவைகளே என்றும், இக்காலத்திலும் கடல்களில் வெகு தூரத்துக்கப்பால் வசிக்கக் கூடுமென்றும் தோற்றுகிறது. ஆகையால் பகவான் இவ்வுலகத்தில் எடுத்துவந்த அவதாரங்களிலெல்லாம், அவராலேயே சிருஷ்டிக்கப்பட்ட அநேக கோடி ஜீவராசிகளில் ஏதாவதொரு ஜீவராசியின் உருவைக் கொண்டே அவதரித்திருக்கின்றார் என்பது திண்ணமாகிறது. அவ்வித ஜீவராசிகள் இக்காலத்தில் நமக்குத் தென்படாவிட்டாலும், அவைகள் அநேக நூற்றாண்டுகளுக்கு முன் வரையிலும் ஜீவித்திருந்திருக்க வேண்டுமென்பதும் திண்ணமாகிறது. கொஞ்சகால முன் வரையிலும் இம்மீன் மனிதர், மீன்ஸ்திரீகள் இவர்களைப்பற்றிச் சொல்லும் கதைகளை எவரும் கட்டுக்கதைகளென்றும், நம்பக்கூடாதவைகளென்றும் எண்ணியிருந்த ஆங்கிலேயர் முதலான தேசத்தினர்கள்கூட அவ்வித ஜந்துக்கள் ஒருக்கால் இருந்திருக்கக் கூடுமென்றும், அவைகளைப்பற்றிச் சொல்வனவெல்லாம், கற்றவித்வான்களால் எழுதிய கட்டுக்கதைகளல்லவென்றும் ஒருவாறு நம்பிக்கையை உட்கொண்டிருக்கிறார்கள். ஆயினும், இக்கதைகள் முழுமையும் உண்மையானவைகளென்று சொல்ல நம்மால் முடியாது. இவ்விதமான ஜந்துக்கள் ஒருக்கால் ஜீவித்திருந்திருக்கவேண்டுமென்பதற்கு மேலே சொல்லிய கதைகளும், கடவுளின் அவதாரமும், மத்ஸ்யகுமாரன், மத்ஸ்யகன்னிகை இவர்களின் சரித்திரமும், ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமர் இலங்கைக்குச்செல்ல சமுத்திரத்தில் அணைகட்டவேண்டி அச்சமுத்திர நாயகனாகிய வருணனை நோக்கித் தவங்கிடந்ததாகவும், அவ்வண்ணமே, அவர்வந்து அணைகட்டிக்கொள்ள உத்திர வளித்ததாகவும், அவ்வருணனுக்கு வாகனம் முதலையென்றும், அவனுருவம் மேலே சொல்லிய சமுத்திர மனிதர்களைப்போல் இடுப்பிற்குமேல் மனித உருவமாகவும், இடுப்பிற்குக் கீழ் மீன் உருவமாகவும் இருந்ததென்னும் குறிப்பை விளக்கும் ஐதீகப்படத்தைத் தற்காலத்திலும் சில விடங்களில் காண்பதாலும், சில நூல்களில் வருணலோகம் என்ற லோகம் சமுத்திரத்திலேயே யிருப்பதாகவும், பூமியிலிருப்பது போல அச்சமுத்திரத்திலும், அதில் வாசம் செய்யும் மனிதர்களுக்கு நாடுநகரங்களும், சுகபோகங்களை யனுபவிக்கவேண்டிய வசதிகளும் இருக்கின்றனவென்பதைச் சொல்லி யிருப்பதாலும், சில கதைகளில் ஒரு அரசகுமாரன் நாக கன்னிகை, தேவகன்னிகை, வருணலோக கன்னிகைகளை மணஞ்செய்து கொண்டான் என்றிருப்பதாலும், மேற்சொல்லியவை யாவும் ஒருவாறு உண்மையென்றே தெளிவாகின்றன. இன்னும் பல கதைகளும் இதற்கு அத்தாக்ஷி யாகின்றன. அவ்விதம் இம்மாதிரி ஜந்துக்கள் உண்மையாகவே தற்காலத்திலும் கடல்களில் வசிக்கக் கூடுமென்றால் அது எவ்வளவு வியப்பிற்குக் காரணம் என்பதை இதைப் படிப்போர்களே லகுவில் அறிந்துகொள்ளலாம்.

தமிழ்ப் புத்தகங்கள்.

இந்து பாக சாஸ்திரம்	...	2	4	0
ஸ்ரீராமாயண ஸாரம்	...	1	0	0
திருமூலர் திருமந்திரம்	...	1	8	0
ஷண்முக சுந்தரம்	...	1	0	0
இயற்கை அற்புதங்கள்	...	0	8	0
மரகதவல்லி	...	0	10	0
பஞ்சரத்தினம்	...	0	12	0

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

வஸந்த மந்திரம்

(223-ம் பக்கத் தொடர்ச்சி,)

பதினான்காம் அத்தியாயம் : காக்கவேண்டுமோ!

உதயபுரியிலிருந்து வஸந்தபுரிக்குப் போகும் வழி ; சாயங்காலம் அணுகிவருகின்றது. மலைப்புறமெல்லாம் சில இடங்கள் வெளிச்சமாயும், சில இடங்கள் இருட்டாயும் இருக்கின்றன. ஆகாயம் மோடமாய் இருப்பதால் இரவு வந்துவிட்டதுபோலவே தோன்றுகின்றது. மந்தமாய் வீசும் காற்றால் மரங்கள் முணுமுணுக்கின்றன. வயல் வெளிகளில் மேயப் போன மாடு கன்றுகள் மேய்ந்தபின் திரும்பி வருகின்றன. அவற்றுடன் வரும் கோபாலர்களைப் பாருங்கள் ; மாலைப் பொழுதெல்லாம் வெளியே இருந்துவிட்டு இப்பொழுதுதான் குதூஹலத்துடன் திரும்பிவருகிறார்கள். அவர்களது ஆட்டமும் பாட்டமும் எவ்வளவு இனிமையாய் இருக்கின்றன! ஒருவன் புல்லாங்குழல் ஊதுகிறான். "சற்றும் சாஸ்திரத்தை ஒத்ததில்லை, இவனுடைய சுவரங்கள்" என்று வித்துவான்கள் பழிகூறலாம். ஆயினும் அக்கோபாலர்களுக்குக் குழலின் குரலால் உண்டான இன்பத்திற் களவில்லை. அவர்கள் மேய்க்கும் மாடுகள்கூட ஆனந்தமடைகின்றன. ஏனெனில் இக்குரலைக்கேட்ட மாடுகள் பாட்டுக்குத் தாளம் போடுவதுபோல் அசைந்தசைந்து மெதுவாய் நடக்கின்றன. அதோ இரண்டு காளைமாடுகள் 'கும்மாளம்' போடுகின்றன. சந்தோஷத்தால் தலைதெரியாமல் குதிக்கின்றன போலும்! கும்மாளத்துக்கு அடுத்தபடி சண்டையே யல்லவா? நான்கு மாடுகள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு சண்டையிடுகின்றன. சண்டை பலக்கும்போல் தோன்றவே, புல்லாங்குழல் ஊதும் கோபாலன் தடியும் கையுமாய் ஓடுகின்றான். ஒருமாட்டிற்கு இரண்டு அடி கொடுத்ததும் சண்டை முடிந்து போயிற்று. இம்மாடுகளின் சச்சரவும், சந்தோஷமும், குதிப்பும், ஆட்டமும்—உலகத்தில் மனிதர்களுடைய செயலையே கண்ணாடியில் காட்டுவதுபோல் இருக்கின்றனவே ஒழிய வேறில்லை.

அந்திப் பொழுதையும், சுற்றிலும் நடக்கும் காரியங்களையும் கொஞ்சமேனும் கவனியாமல் தம் மனோராஜ்யமே பெரிதென்று எண்ணி, அவ்வழியே, சிறிது தூரம் பின்னால் வருகின்றார்கள் மூன்றுபேர்: குதிரைமீது சவாரிசெய்கிறார்கள். உடல் முழுவதும் தூசி படிந்திருப்பதால் வெகுதூரத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும். ஒருவனுக்காவது முகம் மலர்ந்திருக்கவில்லை. கண்ணெல்லாம் உள்ளே ஆழ்ந்து, உதடுகள் வரண்டு, உடல் சோர்ந்து குதிரைமேல் உட்கார்ந்து இருக்கின்றனர். ஆகையால் வெயிலில் அதிக தூரம் சவாரி செய்திருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமென்ன? குதிரைகளும் ஓய்ந்துபோய்க் களைத்திருக்கின்றன ; என்றாலும் பெருநடையிலேயே போகின்றன. சவாரி செய்வோரில் ஒருவனாவது அவற்றின் போக்கைக் கவனித்ததாகத் தோற்றவில்லை. ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு யோசனை எல்லோரும் ஒரே விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டு மௌனமாய் வருதலும் கூடுமா?

இதுதான் உலக இயற்கை. இம்மூவர் மட்டுமல்ல, இதோ இவர்களுக்கு எதிரில் செல்லும் இடையர்களைப் பாருங்கள். ஒருவனுடைய எண்ணம் பக்கத்தில் போகிறவனுக்குத் தெரியுமா? முன்னே போகும் மாடுகளும் அவ்வாறே யல்லவா? அவைகளுக்கும் யோசனை உண்டோ? தூரத்தில் தெரியும் வஸந்தபுரியிலும் அம்மாதிரியே. கடைவீதியில் செல்லும் ஜனங்களுள் எத்தனை பேருக்குப் பக்கத்தில் போகிறவனுடைய எண்ணங்கள் தெரிகின்றன? அரண்மனையில் வசிக்கின்றார்கள் என்றாலும் ஒருவருடைய மனம் மற்றொருவருக்குத் தெரிய வழி யென்னவிருக்கின்றது? வீணில் பேசிப் பயனென்ன? ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு இரகசியமான அறை என்னலாம். வேறு அறைகளுடன் சம்பந்தமில்லாமல் ஒவ்வொன்றும் வெவ்வேறாய் இருக்கின்றது.

தத்தம் மனோ ராஜ்யத்தில் மெய்ம்மறந்து குதிரைசெல்லும் வழியிலேயே முயற்சியின்றிச் செல்லும் மூவருள், முதலில் போகும் 'பெரும் பூதம்' போன்றவன், தன் முன்னே இடையர்களும் மாடுகளும் போவதைக் காணவே விழித்துக் கொண்டான். தான் குறும்பு செய்யத்தக்க வழி கிடைக்கவில்லையே என்றும், அதுவரையில் இன்னும் அன்றையதினம் சண்டைசெய்ய வழி கிடைக்கவில்லையே என்றும், ஆலோசனை செய்துகொண்டிருந்தானே

என்னவோ தெரியவில்லை! இல்லையேல் கோபாலர்களையும் மாடுகளையும் கண்டதும், இம்மனிதன் ஏதுகாரணம்பற்றித் தன் தேகத்தை அசைத்துக் கொடுத்து, நிமிர்ந்து உட்கார்ந்து, தூங்கிச்செல்லும் குதிரையைத்தட்டி விடுகிறான். குதிரை ஒரு ஓட்டம் பிடித்துப் பக்கத்தில் வந்த பிறகுதான் குழந்தை கோபாலர்களுக்குக் குதிரை வருகிற தென்பது தெரிந்தது. அவர்களுடைய மனம் அத்தனை ஊக்கமாய் விளையாட்டில் சென்றிருந்தது; அன்றியும் குதிரைகளை அவ்வழியே சாயுங்கால வேளையில் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. பக்கத்தில் குதிரை வரும் சப்தம் கேட்கவே, அவர்களுடைய விளையாட்டெல்லாம் பறந்து விட்டது. புல்லாங்குழல் ஓசையும் ஆட்டமும் அடங்கிவிட்டன. வழி விலகிப் பாதையின் இருபுறமும் தள்ளி நின்றனர். இவர்கள் நின்ற நொடியிலேயே, இவர்கள் மத்தியில் குதிரையும் நின்றுவிட்டது.

ஒரு கோபாலன் "ஏ! சிபாய்! உனக்குக் கண்ணு கிண்ணு—" என்பதற்குள், சிபாய் "ஏடா! செவிட்டு மொட்டைப்பசங்களா! குதிரைக்கு விலகவாண்டா; என்னடா கொழுப்பு, ஒங்களுக்கு—" என்று கத்திக்கொண்டு, பேசும் பையன்மேல் குதிரையை விடுவான் போல், அவன்புறம் மிருகத்தைத் திருப்பி விட்டான். அக்கோபாலன் மறுபடி "அடே சோற்றுமலையே! என்னான்னு நினச்சுக்கிட்டே. குதிரை இன்னொரு அடிவைச்சாத் தெரியும்; விலங்கவேணுமா, இவனுக்கு; அடே! உனக்கு விலங்கு போட்டுடு வாங்கோ பத்திரம்—" என்றான்.

சிபாய்:—"என்னடா எதுத்துப் பேசரே! யாருனு நினச்சுக்கிட்டே! பத்திரம் பயலே. இறங்கிவந்தா கொன்னு போடுவேன்—(பக்கத்தில் நின்ற இன்னொரு இடைப்பையனைப் பார்த்து) அடேபயலே! தள்ரா இவனை, பக்கத்துக் குளிதள்ளு சொல்றேன்—"

அந்தக் கோபாலன்:—"நீ சம்பளம் குடுத்து வைச்சு இருக்கையோ நீ சொன்னபடி செய்ய!! வெகு அளகு; அவனைத் தள்ளிவிட்டா நீ வரயா நாளக்கி ஆடுமேய்க்க! என்ன உருட்டரை இங்கவந்து!"

குதிரைவீரன்:—"ஏ! பையா! நீ அவனை விட போக்கிரி போலிருக்கு! நான் யாருன்னு எண்ணிக்கிட்டே? பாக்ஷாக்குப் பொய்க் காப்பாளன் தெரியுமா சேதி! முதுவைப் பொளக்கறேன் பார்" என்று தன் கைக் குரடாவினால் அவனை ஒரு அடி கொடுக்கக் கையோங்கினான். கோபாலன் சற்று விலகிப்போகவே, அடி குதிரையின்மேல் விழுந்தது. இதற்குள் பக்கத்தில் நின்ற மற்றப் பிள்ளைகள், கையில் கிடைத்த கல், சாணி, மண்ணாங்கட்டி, இவற்றைச் சரமாரியாய்ப் பொழிய ஆரம்பித்தனர்.

எப்புறம் திரும்புவான் சிப்பாய்! மாடுகளுக்கு முன்னே போய்க்கொண்டிருந்த இரண்டு பட்டி நாய்கள் குலைத்துக்கொண்டு வந்து குதிரையைக் கடிக்கத் தொடங்கின. நாய்களின் குலைப்பாலும் பிள்ளைகளின் ஆரவார்த்தாலும் பயந்த சில மாடுகள் தங்களது ஐக்கியமான குடும்பத்தில் ஏதோ அனர்த்தம் நேர்ந்து விட்டதென்று எண்ணியவை போன்று, நிமிர்ந்து பார்த்து, மூக்கை விரித்து விரித்து முகந்துகொண்டு, 'ஹம், ஹம்' என்று கத்திக்கொண்டு சச்சரவுக்குக் காரணமான குதிரை வீரனிடத்திற்குக் கொம்பை முன்னீட்டிக்கொண்டு ஓடிவந்து விட்டன. சிலமாடுகள் இந்த ஆரவாரத்துக்கு என்னகாரணமோ, நமது மற்ற சிநேகிதர்களான மாடுகள் ஓடுவது சரியோ என்று சந்தேகப்படுவனபோல் சுற்று முற்றும் பார்த்துத் திகைத்து நின்றன. சில பசுக்கள் 'துஷ்டனைக் கண்டால் தூரவிலகு' என்று சொல்லும் உண்மையை விவரமாய் அறிந்தவைபோன்று, ஒரு காலாவது நிலத்தில் பாவாமல் நாற்கால் பாய்ச்சலாய்ப் பறந்து ஓடின, அவ்விடமிருந்து மலைச்சாரலில். ஒரு நொடியில் எத்துணை குழப்பம் நிகழ்ந்து விட்டது பாருங்கள்! அமைதியாய்க் காரியங்கள் நடத்திவரும் ஐக்கிய குடும்பத்தில் மூர்க்கன் ஒருவன் நுழைந்துவிட்டால் இவ்வகைக் கொடுமைகள் விளைவது ஸகஜந்தானே.

கோபாலர்களுடன் சண்டையிட்டு அவர்களை இரண்டு தட்டுத் தட்டித் துரத்திவிட்டு மனதைத் திருப்தி செய்து கொள்ளலாமென்று எண்ணியிருந்த சிபாயின் கதி அலங்கோலமாயிற்று. குதிரை பலமான குரடா அடியை மேற்கொண்டதும் தவிர, நாய்கள் கடிக்க வரவும், மாடுகள் முட்டவரவும், சாணிமாரியும், கல்மாரியும் பொழியவும்,—அக்குதிரை—மருண்டு பாதையின்

கீழ்ப்புறம் இருந்த பள்ளத்தில் ஒரே ஓட்டமாய் ஓடத் தலைப்பட்டது. அங்குள்ள முட்செடிகள் எல்லாம் சிப்பாயின் தலைப்பாகையைப் பிடித்து இழுத்துக்கொண்டன. மேல் போட்டுக்கொண்டிருக்கும் சட்டைகளைப் பற்றிச் செடிகளும் மரங்களும் ஒருபுறம் இழுக்க, குதிரை மற்றொரு புறம் இழுத்துச்செல்ல, ஐம்பது, அறுபது அடிதூரம் போனதும் சிப்பாய் முட்செடிகளுக்கு நடுவில் 'தொப்பென்று' விழுந்து விட்டான்.

மற்ற இரண்டுபேர்களும் இன்னார் என்று நீங்கள் இதற்குள் அறிந்துகொண்டிருக்கலாம். அவர்கள் அனந்தபட்டர், கவுஸ்,— ஆகிய இருவருமே. அவர்களும் இடையப் பிள்ளைகளும் விரைவில் சிப்பாய் விழுந்தவிடத்தில் வந்து சேர்ந்தனர். கவுஸ், என்றும் சிரியாதவன், இன்று விழுந்து விழுந்து சிரித்தான். அனந்தபட்டருக்கு மனோராஜ்யம் தெளிந்து கோபம் மேலிட்டது. பல்லைக் கடித்துக்கொண்டு சிப்பாயையும் கோபாலர்களையும், கண்களில் தீப்பொறிபறக்க உற்று நோக்கினார். சிப்பாயைத் தவிர மற்றும் இரண்டு குதிரை வீரர்கள் வந்துவிட்டனர் என்பதும், அனந்தபட்டர் பார்த்த பார்வையும், கோபாலர்களுக்கு அளவில்லாப் பயத்தை விளைவித்தன. தடியும் கையுமாய் ஒவ்வொரு பிள்ளையும் அங்கே நின்று கொண்டு 'திருதிரு' வென்று விழித்தான். நாய்களும் மாடுகளும் ஓட்டம் பிடித்தன.

அனந்தபட்டர்: "இடைப்பிள்ளைகாள்! உங்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வீடு போவதைவிட்டு, இப்படியெல்லாம் நாயையும் மாட்டையும் ஏவிவிட்டுச் சண்டை செய்வதுதானா உங்களுக்கு வேலை? தண்டிக்கிறேன் உங்களை இப்பொழுதே!—"

கோபாலன்: "சுவாமீ! அப்படிக்கல்ல அவர்தான் முதலில்—"

அனந்தபட்டர் "முதலும் ஆச்சு, கடைசியும் ஆச்சு!— (மனத்துள்) சிப்பாயிக்குச் சொல்லவேண்டுமா, செய்திருப்பான் ஏதாவது— (பிள்ளைகளைப் பார்த்து) உங்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு, ஓட்டம் பிடியுங்கள் இவ்வழியாய்" என்று மேற்குப் புறமாய் ஒரு பாதையைக் காட்டினார்.

இதற்குள் கவுஸ் குதிரையை விட்டிறங்கி ஒரு கோபாலனிடம் ஏதோ பேசினான். இப்பேச்சிற்கும் அவனுடைய மனோராஜ்யத்துக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ? இருப்பினும் இருக்கலாம்; நடக்க நடக்கத் தெரிய வரும். அக்கோபாலப் பிள்ளை, "நாளைக்கா? வாரேங்களா? சொல்லறதா?" என்று கேட்டுக் கொண்டே ஓட்டம் பிடித்தான். கவுஸ், ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

கோபாலன் ஓடினதும், கவுஸ் விரைவாய் மல்லீக் மஹமத் விழுந்து கிடந்த இடத்திற்கு ஓடிப்போய், அவனை மெதுவாய் எழுப்பிவிட்டு அவனது குதிரையையும் பிடித்து வந்து, அவன் தலைப்பாகை முதலியவற்றை எடுத்துக் கொடுத்து, நடுப்பாதைக்குக் கூட்டிக்கொண்டு வந்தான். அனந்தபட்டர் அவனைப் பார்த்து "கவுஸ்! இவன் புத்தி எப்பொழுதும் இப்படித்தான்; சும்மா இருவென்றால் இரான்; இவனால் நமக்கு எவ்வளவு காலதாமதம் பார்த்தாயா? எத்தனை தூரம் போயிருக்கலாம் இந்நேரத்தில்?—இனித் தாமதிக்க முடியாது என்றால். நீ இருந்து இவனுடைய முட்களையெல்லாம் எடுத்துவிட்டு இருவருமாய்ப் புறப்பட்டு வாருங்கள்" என்று சொல்லிக் கொண்டே அவர்கள் பதில் சொல்வதையும் கவனியாமல் குதிரையைத் தட்டிவிட்டு வேகமாய் ஓட்டிக்கொண்டு போய்விட்டார். சிப்பாய் "சுவாமி! நான் என்ன செய்வேன். அந்தப் பசங்கள்—" என்பதற்குள் அனந்தபட்டர் புறப்பட்டுப் போய்விட்டார்.

கவுஸ்: "சுவாமியும் ஆச்சு! பூதமும் ஆச்சு! நீர் என்ன செய்வீர் ஐயா! சற்று அசையாமல் இரும் முள்ளைப் பிடுங்குகிறேன்—நீர் என்ன செய்வீர்! சண்டைதான்; பின்னே என்ன? அதுதான் உமக்குத் தெரியும்—"

சிப்பாய்: "கவுஸ்! அவர்களை வழிவிடச் சொல்லவந்தா, எஜமான் கோபம் பண்றாங்கோ—"

கவுஸ்: "எஜமானுக்கு இல்லாவிட்டால் வழியே கிடையாதுபோல் இருக்கிறது! ஐயோ பாவம்! மிகப் பிரயாசைப் பட்டீர்—இப்படித் திரும்பும், மேலே உள்ள முட்களை எடுப்போம்—"

சிப்பாய்: தக்கபடி திரும்பிக்கொண்டே, "சுவாமிக்கு வெகு அவசரம், கவுஸ், அந்தப்

பசங்கள் இல்லாட்டா நாமும் கூடப் போக லாம். நாமில்லாமல் பாக்ஷாவண்டை சாமி யார் போனுங்களோ நம்ம தலை போச்சு."

கவுஸ் : " ஏன் அப்படி ?"

சிப்பாய் : " சரி, சரி ; இது தெரியில்லையா? நாம் எங்கியோ அலஞ்சிகிட்டு இருக்கோம் என்னு நினைச்சுக்குவாங்க ; நமது அமுல் நடத்துவது விட்டுப் பின் தங்கலாமா ? பூட்டு ! பூட்டு ஜேணத்தை !"

கவுஸ் " பூட்டுமில்லை; திறவுகோலுமில்லை ; முள் எத்தனை பாரும் உமது தலைப்பாகையில். இப்படியும் போய் விழலாமா ?" என்று சொல்லிக்கொண்டே தலைப்பாகையை நன்றாய் உதறினான்.

சிப்பாய் : " அந்தப் பசங்கள் வரட்டும் நாளைக்கி சொல்றேன். சாமி அனுப்பிட் டாங்கோ ! இல்லாட்டா—"

கவுஸ்: " இல்லாவிட்டால் நீர் கீழேவிழுந்த போது உமது தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள் ! அவ்வளவு தான் —"

சிப்பாய் " அப்படியில்லை. அடித்திருப்பேன் ஒவ்வொருவனுக்கும் பூரா அடி; என்றான்னு பாத்தே; எனக்குக் கையில்லையா என்ன ? இன்னொரு நாள் பாத்துக்கிறேன்—இது என்ன வலிக்கிறது இங்கே" என்று தோளைப் பார்க்க அங்கே ஒரு மாக்கிளை கிழித்து இருக் கின்றது. இரத்தம் ஓடி வருகின்றது. காயத் தைக் கட்டிக் கொண்டு இருவரும் புறப்பட்டு வருவதற்குள் நாம் அனந்தபட்டரைத்தொடர் வோம்.

அனந்தபட்டர் அரண்மனை வாயிலுக்கு வரு முன்னேயே இரண்டு சேவகர்கள் அங்கே காத்துநின்றனர். ஏனெனில் இவர் வரவை முன்னேயே பாக்ஷா தன் மாளிகையின் மேற் புறத்துத் தாழ்வாரத்திலிருந்து கண்டு விட் டான், கண்டதும் இரண்டு ஆட்களைக் கூப் பிட்டு, ஒருவன் குதிரையைப் பிடித்துக்கொள் ளும்படியும், மற்றொருவன் அனந்த பட் டரை உள்ளே அழைத்துவரும்படியும் உத் தரவு செய்தான். அனந்தபட்டர் தலைவாயி லில் வந்து நின்றதும், ஒருவன் அவர் முன் வந்து கைகட்டித் தலைவணங்கினான். அவ னிடம் கடிவாள வாரை எறிந்துவிட்டுக் கீழே குதித்தார். மற்றவன் " உடனே தங்களை உள்ளே அழைத்துவர உத்தரவு" என்ன, அவர் பெருமூச்சுவிட்டார். " எல்லாம் அந்தக் கண்ணில்லாக் காமன் செயல்" என்று சொல் லிக்கொண்டே அச்சேவகனைப் பின் தொடர்ந் தார்.

பொழுது, அஸ்தமித்து இரண்டு நாழிகை இருக்கலாம். இரண்டு மூன்று பெரிய விளக் குகள் பிரகாசமாய் எரிகின்றன அவ்வறை யில். அறைநடுவே தந்தத்தால் அலங்கரித்த சிறிய ஆஸனத்தில் பாக்ஷா உட்கார்ந்திருக் கிறான். தங்கத்தினால் இழைத்த மயில்போல் அமைத்த ஹூக்காவும் பக்கத்தில் இருக்கின் றது. ஹூக்காவின் குழாயைப் பாக்ஷா நினை த்தபோது, கையில் கொடுக்க ஒரு அடிமை தயாராய் நிற்கின்றான். பின்னே மற்றொரு வன் விசிறிகொண்டு விசிறுகின்றான். சுல் தான் ஆமத் பாக்ஷா முன்னிலையில் ஒரு பல கையும் போட்டு வைத்திருக்கின்றது. பாக்ஷா தனது ஆஸனத்தில் சிறிதே சாய்ந்துகொண் டிருப்பதாகச் சொல்லலாம். உற்றுப் பார்த் தால் அவன் தேகத்திலும் சற்று வித்தியாசம் விளங்கும். கண்ணைச் சுற்றிலும் கரிய வட் டங்கள் காண்கின்றன. முகம், சோம்பல் வாய்ந்தவனுடையது போல், கொஞ்சம் ஒளி யற்றுச் சோர்ந்திருக்கின்றது. ஒரு கை கன் னத்தைத் தாங்கிக்கொண் டிருக்கின்றது; மற் றொன்று ஆஸனத்தின் பக்கத்தில் அமர்ந்திருக் கின்றது. இரண்டு பாதமும் இடது புறம் சாய்ந்து நீட்டப்பட் டிருக்கின்றன. வலது பாதம் மேலும் கீழும் குதிக்கின்றது. இம் மாதிரி உட்கார்ந்துகொண்டு தன் எண்ணம் போன வழியெல்லாம் போகவிட்டு ஒவ் வொரு நிமிஷமும் கதவையே பார்த்துக் கொண் டிருக்கும் பாக்ஷாவின் முன்னே, அனந்தபட்டர் வந்துநின்று வழக்கப்படி வந்தனம்செய்து, சுல்தானிடம் விடைபெற் றுப் பலகையில் அமர்ந்தார். ஒரு நிமிஷம் கழித்து, சுல்தான் ஆமத் " அனந்தபட் டரே, போன காரியம் என்னவாயிற்று ? பழமோ, காயோ ?" என்று கேட்டான்.

அனந்தபட்டர் கொஞ்சம் ஸ்தோத்திர மாக—மனிதர்களுக்கு ஸ்தோத்திரம் செய் தால் ப்ரியமே யல்லவா!-"தங்கள் காரியமாய்ப் போனால் பழமாவதில் தடையென்ன ? எல் லாம் அனுகூலமே" என்று பதிலுரைத்தார்.

ஆமத் " அப்படியா ? ஹா! அப்படியா சங்கதி ! எப்பொழுது அவர்களுக்குச் சௌ கரியமாம் பெண்ணை அனுப்ப? சீர் சிறப்புக்க ளுடன் நாளைய தினமே தூதர்களை அனுப்பு வோமா ? சேதிசொல்லும் விரைவாய் " என் றான்.

அனந்தபட்டர் : "தங்கள் இஷ்டப்படி நட ந்து கொள்ள பிரதாபசிங்கர் சம்மதிக்கின்றார். ஆனால்,சீக்கிரம் காரியம்நடப்பதற்கு ஏதோசில இடையூறுகள் இருக்கின்றனவாம். அதுபற் றிச் சிறிது பொறுத்துக் கொள்ள வேண்டு மென்கின்றார். கால தாமதத்துக்குக் காரணத் தை இக்கடிதத்தில் விவரமாய்ச் சொல்லி யிருக்கிறாராம். இதைப் படித்தால் தெரியவ ரும் (கடிதத்தைக் கொடுக்கின்றார் ஆமத் சுல்தானிடம்) நான் புறப்பட்டுப் பத்து நாள் ஆயிற்று. இந்நேரம் தன் தேசத்தில் எல்லாருக்கும் விஷயத்தைத் தெரியப்படுத்தி யிருப்பார். "

ஆமத்சுல்தான்:"இராஜாதிராஜனென என்கா ரியத்துக்கும் மிஞ்சி, சிலவேறு காரியங்கள் நடு வில்வந்து தடைசெய்யவும் கூடுமோ? அதைக் கவனிக்கவில்லை போலும் அப்பிரதாபசிங்கர்" என்று சொல்லிக்கொண்டே தன் கையை நீட் டிக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு—"ஆனால் இன்னும் எத்தனை நாள் தாமதிக்க வேண்டு மோ நாம்" என்று பேசிக்கொண்டே கடிதத் தின் முத்திரையை உடைத்தார்.

காமுகர்களின் மனம் இப்படித்தான் எக்கா லத்திலும் ! தங்கள் காரியமே பெரிது. மற் றவர் எப்படிப் போனால் என்ன ? நடக்கும் காரியங்கள், காரணங்கள், அவர்கள் புத்தியில் ஏறுவதும் உண்டோ ? இராவணன் சீதை யிடம் ஈடுபட்டு அவன் பட்ட பாட்டை நாம் அறியோமா ? கம்பர் வர்ணிப்பதைப் படித் தால் பரிதாபமும் சிரிப்பும் ஒருங்கே வருகின் றன. ஆமத் பாக்ஷா விஷயமும் அதுபோன் றதே! எல்லாம் தன் மனம் போலவே போக வேண்டுமென்றால் ஆமத் சுல்தானுடைய அதி காரம் எத்தனை நாள் நடக்கும் ? எப்படியும் தன் மனதுக்குவிரோதமாய் ஒருவரும் நடந்து கொள்ளக் கூடாதென்று எதிர்பார்த்தான்.

கடிதத்தைப் படிக்கின்றான் பாக்ஷா ; அனந்தபட்டர் அப்புறம் இப்புறம் திரும்பா மல் சுல்தான் முகத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றார். படித்து முடிந்ததும் பாக்ஷா " ஆகவே ஒரு மாதம் காக்க வேண் டுமோ ? நன்று ! இப்பாவி சொல்லும் காரணங் கள் உண்மைதான் என்று நம்ப இடம் உண் டோ? ஏமாற்றமாட்டான் என்று நினைக்கக் கூடுமோ ?" என்று கேட்டான்.

அனந்தபட்டர், "அப்படிச் செய்யமாட் டார் என்றுதான் தோன்றுகின்றது எனக்கு; உதயபுரியில் அரசாண்ட மஹாராஜக்கள் இது வரையில் பொய் சொன்னதே கிடையாது. 'தர்மமே ஜயம்' என்பது அவ்வரசர்களின் பிருதாவளி. மேலும் நான் புறப்பட்ட மறு தினமே தன் சபையில் பலரும் அறிய இச்செய் திகளை வெளிப்படுத்துவதாகச் சொன்னார். என்னையும் அதுவரையில் இருந்துதான் போகவேண்டுமென்றார். நான்தான் இரண்டு நாள் தாமதம்செய்ய இஷ்டமில்லாமல் ஸமு கத்துக்குச் சீக்கிரம் விஷயத்தைத் தெரிவிக் கும்படி உடனே புறப்பட்டு வந்துவிட்டேன்" என்றார்.

பாக்ஷா: " நீர் இருந்துவிட்டே வந்திருக்க லாம். ஆனாலும் குற்றமில்லை. நமக்காக நீர் அதிகச் சிரமம் எடுத்துக்கொண்டீர் ; உமக்கு மிகவும் வந்தனம்."

அனந்தபட்டர்: "அதற்கென்ன ! எனக்குச் சிரமம் என்ன ? இராஜ காரியம் நடக்கவேண் டியது தானே—"

பாக்ஷா "இன்னும் இரண்டுவாரம்—இல்லை மூன்றுவாரம் காக்கவேண்டுமா ? நீர் புறப் பட்டுப் பத்து நாள் ஆயிற்றல்லவா ? நான் நாள்களை மட்டுமன்றி நிமிஷங்களையுங்கூட எண்ணிக்கொண் டிருக்கின்றேன். ஒரு மாதமா, வரம்பு சொல்லியிருக்கிறான் அவ்வர சன்? எப்படிக் கழியுமையா இந்நாட்கள் ?— சரி நீர் வீட்டுக்குப் போய் வரலாம் ; பகலெல் லாம் மிகவும் வருத்தப்பட்டு வழி நடந்திருக் கின்றீர். போய் வரலாம்" என அனந்தபட் டர் எழுந்து தக்கபடி வந்தனம் செய்து வெளியே புறப்பட்டார்.

பதினைந்தாம் அதிகாரம் : பிராயச்சித்தம்

ஸூவர்ணஸரஸை முன்னமேயே ஒருவாறு பார்த்து இருக்கிறோம். ஸரஸின் தென்புறத் தில் பாக்ஷாவின் வஸந்தமண்டபமும், அதற் கப்பால்வஸந்தபுரியும் இருக்கின்றன. கிழக்கே இரண்டு மைல் தூரத்துக்கப்பால் விஜயஸ்தா

ணம் என்றொரு கிராமம். வடக்கு இருப்பன வலையர்களின் ஊரும் தோப்புகளும். மேற்புறம் 4,5, மைல் தூரத்துக்கப்பால் நீல நகரம் என்ற ஒரு சிறு பட்டணம். இப்பொழுது நாம் விஜயஸ்தானத்துக்குப் போவோம். கிராமம் விசேஷமாய்ப் பெரியதன்று சொற்ப காலத்துக்கு முன்தான் ஏற்பட்டது. அதற்குச் சாக்ஷி வேண்டுமானால் ஊரின் நடுவே நிற்கும் கோயிலைப்பாருங்கள். சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் (சுல்தான் ஆமத் காலத்துக்கு), மதுராபுரி அரசன் ஸிந்துதேசத்து இராஜப்பிரதிநிதியுடன் சண்டைசெய்து ஜயம் பெற்றதற் கடையாளமாய் விஜயஸ்தானம் என்ற பெயருடன் அங்கே ஓர் ஊர் ஸ்தாபித்துக் கோயிலும் கட்டியதாகச் சிலாசாஸனம் கூறுகின்றது. 40, 50 பிராமண வீடுகள் உள்ள ஒரு அக்கிரஹாரமும், சுற்றிலும் மற்ற ஜனங்களின் வீடுகளும் இருக்கின்றன. பிராமணர்களுக்கும் மற்றத்தொழிலாளிகளுக்கும் மானியம் விடப்பட்டிருக்கின்றது.

அஸ்தமித்துச் சுமார் 7, 8 நாழிகைதான் ஆயிருப்பினும் எல்லா வீடுகளிலும் கதவு சாத்தி யிருக்கின்றன. நடுவே ஒரு வீடு மட்டும் திறந்து இருக்கின்றது. நுழைவோம் உள்ளே. நடுக்கூடத்தில் சுவாமிகளும் படங்களும் வைத்திருக்கின்றன. அவற்றின் முன்னே உட்கார்ந்துகொண்டு ஒரு பிராமணர் பஜனை செய்கிறார்.

"மாதர்நாத: பரமனுசிதம் ய: கலானும் புரஸ்தாது | ஹஸ்தா சங்கம் ஜடரபிடரீ பூர்த தயோர்திதாவலீ || தத்க்ஷந்தவ்யம் ஸஹஜதரளே வத்ஸலே வாணிகுர்யாம்! ப்ராயஸ் சித்தம் குணகணநயா கோபவே ஷஸ்யவிஷ்ணோ : ||— ஆஹா என்ன தப்பிதம் செய்கின்றோம் தினமும்! தாயே! மன்னிப்பாய்!—ஆரடீ! ஸம்புடம் கொண்டுவா; பூஜையைக் கட்டுவோம் பொழுதாயிற்று.—நித்யம் ஸ்வோதர பூரணயஸர்வா னுத்திஶயவித்தாஶயா. வ்யர்த்தம்பர்யடனம் கரோமிபவத: பூஜாம் நஜானே விபோ—."

ஸம்புடம் கொண்டுவந்தவள் "இலை போடலாமா?" என்றுகேட்டாள். அதை அவர் கவனியாமல் "ஸ்ரீகிருஷ்ணா! துவாரகாபதே! என்னப்பனே! மஹாதேவா! என்னையேன் இப்படிப் பரிசோதித்தாய்! எனக்கு இப்பதினெட்டு நாளாய்த் தூக்கம் பிடிக்கவில்லையே! என்னப்பா! பிரபோ!—" என்று வாயாரவாழ்த்தியதுடன் நில்லாமல் 'என்ன என்ன நாவோ?' எனப் பாடுகிறார்.

பக்கத்தில் நிற்கும் மாது சிரோன்மணிக்கு வயது 30,35 இருக்கலாம். நிறம் சற்றுக் கறுப்பென்றே சொல்ல வேண்டும். நெற்றி விலாசமாய் நிமிர்ந்திருந்த போதிலும் அவ்விடத்திலுள்ள அளகங்கள் இருபுறமும் விரிந்து போய் ஒரு புருஷன் நெற்றிபோல் தோன்றிற்று. கண்களில் பேதைமையும் பயமும் விளங்குகின்றன. கீழ் உதடு சற்றுப் பருமன்; முகம் மொத்தத்தில் ஒரு தடவை பார்த்தவர் மறு தடவை பார்க்கவேண்டுமென்று ஆசைப்படும்படியாய் இருந்ததேயன்றி வெறுக்கும்படியாய் இல்லை.

"இலைபோடலாமா?" என்று கேட்கும் குரலே இவள் தன் புருஷனுடைய உத்தரவைக் கேளாமல் ஒன்றும் செய்வதில்லை என்று விளக்கிற்று. அவர் மௌனமாய் இருந்தும் இரண்டாந்தரம் கேட்கும்படி அவளுக்குத் துணிவு வரவில்லை. பாடி முடிந்தபின் பிராமணர் "என்ன சொன்னாய்? ஏ, சீதே!—அப்படியே செய்; உனக்கு இன்று பசிக்கிறது போல் தோன்றுகிறது—போடு இலையை, ஏதோ சாப்பிடவேண்டுமே! கணக்காகட்டும் நாள்கள்—இந்த வாய்க்குச் சாப்பாடும் வேண்டுமா?— " எனச் சீதை 'நான்தான் காலமறியாது கூப்பிட்டு விட்டேனோ' என்று சந்தேகப்பட்டாள். எல்லாக் குற்றங்களையும், காரணம் இருந்த போதிலும் இல்லாவிடினும், தன் பேரிலேயே சுமத்திக்கொண்டு மற்றவர் செய்வதெல்லாம் சரியென்று நினைக்கும் ஸ்பாவமுள்ள ஜீவாத்மாக்களுள் சீதை ஒருவள்! இம்மாதிரித் தன்பேரில் குற்றம் இருக்கின்றதோ என்று சீதையம்மாளுக்குச் சந்தேகம் வந்துவிட்டால், அவள் கைகால் பதறும்; கண்கள் மருண்ட மானின் விழியோல் சலிக்கும்; உதடுகள் இரண்டும் ஒன்றோடொன்று ஒட்டாது விலகி நிற்கும்; சிறு குழந்தைகள் அழப்பிரயத்தனம் செய்யும்போது எவ்வாறு தோன்றுமோ அவ்விதமே தோன்றும் சீதையின் முகமும். வயது 35 ஆயும் இந்நிலைமையில் சீதையின் முகத்தைப் பார்த்தால் குழந்தைத் தன்மையே முற்றிலும் தோன்றும்.

எல்லாரும் தடுக்கின்கீழ் நுழைந்தால், அவன் கோலத்தின்கீழ் நுழைவான்.

ஆகவே அவள் ஒன்றும் வாயெடுத்துப் பேசாமல், இலைபோட்டுப் பரிமாற ஆரம்பித்தாள். பிராமணரும் இலையில் உட்கார்ந்துகொண்டு "கதவைத் தாளிட்டுவா; இன்னதற்குப் பிறகு இன்னது செய்வதென்று தெரியாமல் மயங்குகின்றாயே; ஒருபே...ப் பலமாய்ப் பேசிவிட்டால் குடிகெட்டுப் போகின்றது!—(அவள் கதவைச் சாத்தப் போனதும்—) வயதோ 35 ஆச்சுது; என்ன பிரயோஜனம்? சாமர்த்தியம் என்பதே கிடையாது"—என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார். சீதாதேவியும் கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்து அன்னம் படைக்கத் தொடங்கினாள். சாப்பாடு முடிவதற்குள்ளேயே கதவைத் 'தடதட' வென்று யாரோ தட்டச் சீதையம்மாளும் புருஷன் முகத்தைப் பார்த்தாள்.

"யாராய் இருக்கப்போகிறது! அனந்தபட்டன் தான்; பின்னை யார்: திறந்து பார்" என்பதற்குள், மறுபடி ஒரு முறை வாத்திய கோஷம் போல் 'தடதட' வென்று சப்தம் கேட்டுவிட்டது. கதவைத் திறக்கவே அனந்தபட்டர் உள்ளே நுழைந்து "என்ன? விசித்திர வீரியரே? இப்பொழுதுதான் சாப்பாடு ஆகின்றதா?" என்றார்.

உண்மையாய் இவ்வீடு விசித்திர வீரியருடையதுதான். சுமார் ஒரு வருஷ காலமாகிறது அவர் விஜயஸ்தானம் வந்து; அங்கேயும் நிலையாய் இருப்பதில்லை; சங்கீதம்பாடிப் பணம் சம்பாதிப்பதற்காக வெளியே போன காலம் போக, மற்றச் சமயங்களில் விஜயஸ்தானம் வந்து சேருவார். ஆனால் ஆமத்சுல்தான் சபையில் அன்று லலிதையைப்பற்றிப் பாடிய விசித்திரவீரியரைப் பார்த்தவர் இவரைப் பார்த்தால், இருவரும் ஒருவரோ என்று கூடச் சந்தேகப்படுவர்! ஏனெனில் அன்று விசித்திர வீரியர் சொல்பம் தடித்து இருந்தார். இன்று அவர் இத்துணை இளைத்திருப்பதற்குக் காரணம் ஒரு நிமிஷத்தில் விளங்கும்.

விசித்திரவீரியர்: "அனந்தா, எப்பொழுது வந்தாய் அப்பா, உதயபுரியிலிருந்து?"

அனந்தர் "இன்று சாயங்காலந்தான் வந்தேன். சாப்பிட்ட கை உமது கூடத்தில்தான் உலருகின்றது! என்னவோ கதை சொல்வார்களே அப்படிப்போல் ஆச்சுது! பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்ததே! நீர் ஏதோ பாடப்போய் அனர்த்தமாய் முடிந்தது!" என விசித்திரவீரியர் பெருமூச்சுவிடுகிறார்.

"எல்லாம் காலவித்தியாஸம் அப்பா! எவ்வளவு பாட்டுக்கள் பாடலாம்: எல்லாவற்றுள்ளும் அப்பாட்டுத்தானா என்வாயில் வரவேண்டும்! என் புத்தியை என்னவென்று சொல்வது? இந்தப் பதினெட்டுநாளாய் நான் படும் கஷ்டம் என்மனதுக்கும் பரமாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணனுக்குந்தான் தெரியும்!—"

"ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்? எனக்கும் தெரியும். உம் கருத்தின் அடையாளத்தை உம்முடைய உடம்பு காட்டுகின்றதல்லவா? நான் உம்மிடம் கூடிப் பழகினதற்கு இவ்வளவு கூடத் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவனா?"

"நீ என்ன அப்பா, அதிபுத்திசாலி: இராஜசபையில் செல்வாக்குள்ளவன்! விஷயங்களின் போக்கை அறிந்துகொள்ளச் சக்தியுடையவன் என்பதைச் சந்தேகிக்கவும் வேண்டுமா? புத்திக் கூர்மையின்றி ராஜசேவை செய்தல் கஷ்டம்; அதுவும் — "

"நீர் அப்படிச் சொல்லக் கூடாது: நீர் பரமபக்தர். உம்முடைய புத்தியென்ன குறைந்ததா? ஏதோ அன்றைக்குத் தப்பிப் போய்விட்டீர்; என்ன செய்யலாம். நான் உமது பக்கத்தில் இருந்திருந்தால்.— "

விசித்திரவீரியர் "அப்பா, அனந்தா, இருந்திருந்தால் என்ன வாயிருக்குமோ ஈசனுக்குத்தான் தெரியும். இருந்தவர்களும் ஜாடை செய்யவில்லையே! செய்திருந்தால் அப்படியே வேறு பாட்டுக்குப் போயிருப்பேன். விதி வந்து இழுக்கின்றது; புத்தியை மயக்குகின்றது மாயை! போன விஷயம் என்னவாயிற்று, சொல்லு, பார்ப்போம்" என்று கையலம்பிக் கொண்டு வர இருவரும் ரேழித் திண்ணையில் வந்துட்கார்ந்தனர்.

அனந்தர் "போன காரியம் என்ன? பழம்தான்; நடக்கிறபடி நடக்கின்றது. நாட்டியக்காரன் ஒருவன் இருக்கும்போது நீர் ஏன் இவ்வாறுவருத்தப்பட்டு உடம்பைக்கெடுத்துக் கொள்ளவேண்டும்?" எனக் கேட்டார்.

விசித்திரவீரியர் "நீ இஸ்வஜதந்திரமாய்ப் பேசுகிறாயே! எனக்கு விஷயம் தெரியவேண்டிய தவசியம். இன்னும் இக்கொடியோனுடைய எண்ணம் நிறைவேறாமல் இருக்க

எழுத்து அறிந்த வண்ணான் குறித்து எறிந்தான் ஓலை.

வழியுண்டோ? அதை மட்டும் அறிய விரும்புகிறேன். இதைப்பற்றித்தான் தினமும் உன் வரவை எதிர்பார்த்திருந்தேன்'' என்றார்:

''அப்படியானால் நான் போய் வந்த காரியம் உமக்கு அநுகூலமாய் இருக்கவில்லை. உம்மிடம் பொய் சொல்லவோ என்மனம் துணியவில்லை. உண்மை இரண்டு நாளில் தெரிந்துவிட்டால் என்மீது ஆயாசப்படுவீர்கள்—ஆகையால் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். பிரதாபசிங்கரும் சம்மதித்து விட்டார். கல்யாணமும் நடக்கலாம்!''

"அப்படியா! அப்படியா! அப்படியா அது! அப்பா! உதயபுரி வம்சத்தார் மிலேச்சருடன் ஸம்பந்தம் செய்துகொள்வார்களா? அப்படி யிராது! அனந்தா! நீ ஒருக்கால் தப்பிச் சொல்லுகிறாயோ. என்னவோ—''

"நானும் முதலில் சம்மதிக்க மாட்டார் என்றுதான் எண்ணினேன். சுல்தான் கடிதத்தைப் படிக்கும்போதே அவர் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது—''

''அதிருக்கட்டும். நான் தைமாதத்தில் அங்கு போயிருக்கும்போது ஜோதிபுரி ஜயபால ராஜாவுக்கு லலிதையைக் கொடுப்பதாகப் பிரஸ்தாபம் இருந்ததே அதைப்பற்றி ஒன்றும் தெரியாதா உனக்கு?''

"அது சமாசாரம் எனக்குக் காதில் படவில்லை. விசாரிக்கத்தான் சாவகாசம் ஏது! ராத்திரி போனோம் காலையில் புறப்பட்டு விட்டோம். எப்படியோ சீக்கிரத்தில் யோசித்துச் சம்மதித்து விடையளித்து விட்டார் வெளிப்படையாய் இப்படிச் சொல்லிவிட்டு இரகசியமாய் ஏதாவது ஏற்பாடுகள் செய்வர்களா? அவ்வாறு செய்ய, பிரதாபசிங்கர் உடன்படுவாரா? 'ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்' என்பதல்லவா அவருடைய பிருதாவளி?—இவ்விஷயமாய் உதயபுரி போய்வர வேண்டியிருந்ததே என்று எனக்கும் மஹா ஸங்கடமாய்த்தான் இருந்தது; இப்பொழுதும் இருக்கின்றது. இருப்பினும் உரலில் தலையை இட்டுக் கொண்டபின் உலக்கைக்குப் பயப்படுவதில் பயன் என்ன? 'அதமம் ஸேவகா விருத்தி' என்றபடி சேவகத் தொழில்ஏற்பட்ட பின் சொல்லிப் பயனென்ன? நாய்வேஷம் போட்டபின் குலைத்துத் தீர்த்தேன்.''

''உனக்குத் தான் அப்படிச் செய்து தீரவேண்டும்: என்போன்றவர்களுக்கு என்ன கட்டாயம். என் வாயில் சனி இருந்தது! எல்லாம் என்பாவம்! இந்த வர்ண ஸங்கரத்துக்கு நானா காரண மானேன்! பாவம்! பாவம்!''

"ஐயா! என்ன செய்யலாம்? எல்லாம் ஈசன் செயல். நீர் இல்லாவிட்டால் இன்னொரு தேவதத்தன் காரணமாகிறான். எப்படியிருப்பினும் நடக்க வேண்டியது நடந்தே தீரும். நீரும் நானும் தடுக்கக்கூடுமானால் தடுத்திருக்கலாம். என் செய்வது?''

''அனந்தா, பெண்பாவம் பொல்லாது. மேலும் என் மனதை வதைக்கும் ஒரு இரகசியத்தைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. நான் போன தைமாதம் உதயபுரியில் இருந்த சமயத்தில் ஒரு நாட்காலையில் அந்தப் புரவாயிலில் லலிதையைக் கண்டேன். லக்ஷ்மி போன்று நின்ற லலிதையை ஒரு தேவதை என்று எண்ணிச் சற்றுப் பிரமித்தேன். என்னை யார் என்று அறிந்த லலிதை 'ஐயா பெரியவரே நான்தான் லலிதை: என் பிதா தான் இவ்வூர் அரசர்; பிரமித்து நிற்கவேண்டாம். உமது காரியத்தைச் சொல்லு'மென்றாள். உடனே அவளை வர்ணித்துச் சுலோகங்கள் செய்யவாரம்பித்தேன். அன்று சாயங்காலமே இராஜசபையில் அவற்றைப் பாடினேன். மெச்சாதவர்கள் கிடையாது. பிறகு பேச்சுக்குமேல் பேச்சுப்பெருகி மஹமதியர்களுடைய விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். மஹமதியர்களுடைய தன்மை முதலியவற்றைப் பேசிய பின்னர் அவர்களுடைய அந்தப்புரங்களையும், அவ்விடத்தில் இராஜஸ்திரீகள் சேர்வதையும் பலர் இகழ்ந்தனர். அங்கிருந்த பிரபு ஒருவர் என்னைச் சுட்டிக் காட்டி 'இத்தகைய பிராமணோத்தமர்கள், நமது ஸ்திரீகளை வர்ணித்துக்கொண்டு இராஜஸ்தானத்தில் மட்டும் யாத்திரை செய்தால் நமக்கு மஹமதியர்களால் யாதொரு பயமும் இராது. இவர் போன்றவர்கள் மஹமதியர் நடுவில் யாத்திரைசெய்தால் நமக்கு உடனே அனர்த்தம் விளைகின்றது' என்றான். அப்பொழுது பிரதாபசிங்கர் சில பாடகர்கள் அவ்வாறு செய்யலாம். விசித்திரவீரியரால் நமக்குக் கஷ்டம் ஏற்படுமென்று எண்ண இடமேயில்லை' என்றார். அதற்கு நான் கம்பீரமாய்ப் புலி பசித்தால் புல்லைத் தின்னுமா? மஹமதிய நாட்டில்

எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா?

சஞ்சாரம் செய்தால்தான் என்ன? எந்த இராஜனிடத்தில் எந்தப் பெண் இருக்கின்றதென்று முடிபோட்டுக் கொண்டுபோய் அக்கொடிய இராஜர்களுக்குச் சொல்லி சண்டை விளைவிப்பதைத் தவிர, வேறு தொழில் இல்லையோ எங்களுக்கு?' என்றேன். பிரதாபசிங்கர் என்னிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்! நம்பியவரைத் துரோகம் செய்த பாவியானேன்! இந்த ஒரு எண்ணமே என் மனதைச் சுடுகின்றது; என் ஆவியை வதைக்கின்றது. என்னால் விளைந்த காரியம் இதுவென்று அவர் அறிந்தால் என்னைச் சாபமிடமாட்டாரா? நான் உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்தேன்'' என்று சொல்லி விசனப்பட்டார்.

இம்மொழிகளைக் கேட்ட அனந்தபட்டர் "இப்பொழுது, என் வாமீ, முழுகிப் போயிற்று? என்ன காரியம் செய்துவிட்டீர் இம்மாதிரி விசனப்பட? லலிதை ஆமத் பாக்ஷாவை இஷ்டத்துடன் கல்யாணம் செய்துகொள்வதானால் நீர் என்ன காரணத்துக்காக விசனிக்கவேண்டும்?'' என்று தடுத்தார்.

விசித்திரவீரியர் "நீ சொல்லுகிறபடி நடக்காதென்று என் புத்தியில் படுகின்றது. ஆயினும் வர்ணஸங்கரம் உண்டாவது சாஸ்திர விரோதமல்லவா? அப்படிச் செய்ப நான் முதல் காரணமாய் இருத்தல் பாபமில்லையா? நீ என்னுடன் இத்தனை நாள் பழகியும் என் மனதை அறியவில்லை. இராஜசபையில் பழகிப் பழகி இராஜ தந்திரமாய்ப் பேசுகின்றாய்! உள்ளதையும் ஒருவாறு மறைக்கின்றாய். கல்யாணமே நிச்சயம் செய்யட்டும். லலிதையின் சம்மதத்தின் பேரில் நடக்குமென்று எண்ணுகிறாயா? சம்மதமின்றி அவளைக் கட்டாயப்படுத்தி, துருக்கரின் அந்தப்புரத்தில் தள்ளும்போது, அவள் மனம் கொஞ்சமாய்க் கொதிக்குமா?— இல்லாவிட்டால் பிரதாபசிங்கர் சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துகொண்டு சுல்தான் சொல்லியனுப்பியபடி பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுக்க மாட்டேன் என்றால்—அவர் அப்படிச் செய்தலும் கூடும். மஹாபுத்திசாலி. உதயபுரியரசர் எப்பொழுதாவது மிலேச்சருக்குக் கீழ்ப்படிந்தது உண்டா?—எவ்வளவு பலமாய்ச் சண்டை நடக்கும்! எத்தனைபேர் மாள்வர்! அந்தப் பாவங்களுக்குக் காரணமாயிருப்பது இந்த நா அல்லவா?—நாவை நோவதில் பயன் என்ன? என் வயிற்றைத்தான் பழிக்கவேண்டும். இதை நிரப்பவல்லவா நான் இவ்வாறு ஆடித் திரிகின்றேன். இனி இத்தொழிலை வேண்டேன். நான் காசியப குலத்தில் பிறந்தவன் அல்லவா? என் முன்னோர் காடுகளிலும் மலைகளிலும் சஞ்சரித்துத் தவம் செய்தகாலத்தில் எந்தப் பிரதாபசிங்கரையும், எந்த ஆமத் பாக்ஷாவையும் அநுசரித்துத் தவம் செய்தார்கள்? எனக்கு இந்தப் பதினைந்து நாளாய் இதே யோசனைதான், இரவும் பகலும். இனி உன்னைக் கண்டதும், உதயபுரியில் நடந்ததைக் கேட்டதும் தீர்மானித்து விட்டேன் ஒரே அடியாய்! இனி இவ்வுலகும் வேண்டேன்! இவ்வாழ்வும் வேண்டேன்! இப்பணமும் வேண்டேன்! காடும், வயலும், மரமும், நதியும், கொடுப்பவை எனக்குப் போதும். சீக்கிரத்தில் இப்பட்டணங்களை ஒழித்துவிட்டு வனவாசம் போய்விடுகிறேன். ஹரியையும் ஹரனையும் சேவை செய்யக் கொடுத்த நாவினால் கேவலம் மனிதர்களை ஸ்தோத்திரம் செய்து வயிறு வளர்த்தேன். போதும்! போதும்! இப்பிழைப்பு! இனி மனிதர்களைப் பாடுவதும் இல்லை. மனிதர்கள்முன் பாடுவதும் இல்லை! எம்பெருமானுக்கு இந்த நாவை யிரையாக்கி அவ்வழியாய் இப்பெரும் பாவத்துக்கு விமோசனம் தேடுவேன்'' என மேலுஞ் சொன்னார்.

அப்போது அனந்தபட்டர் "விசித்திரவீரியரே, ஏன் இப்படி உமது புத்தி மயங்கி விட்டது! என் மனம் பதைக்கின்றது! புத்தி மாறாட்டம் ஏற்படுமோ என்ன?'' என வினவினார்.

"ஒரே மாறாட்டந்தான். இந்தப் போக்கிரி உலகில் இனி நான் புகுந்து வழங்க அருகன் அல்லன். எம்பெருமான் என்னை யாட்கொள்ள விதித்த சோதனை போலும் இங்கே நிகழ்ந்த காரியங்கள்.''

அனந்தபட்டர் "நீர் என்ன வேண்டுமானாலும் செய்வீர்? உமது மனோதிடம் யாருக்கு வரும்? மனிதனுக்கு ஞானம் உதிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. மேலும் இவர் உலகத்தைத் துறப்பதற்குத் தடையோ

ஏறப்படாத மரத்திலே எண்ணப்படாக மாங்காய்

ஒன்று மேற்படாது. இவர் மனைவி ஒன்றும் அறியாத பிரஹ்ம ஸ்வரூபி! காடும் வீடும் சரியே அந்த அம்மாளுக்கு. என்னவோ இவர் தலைவிதிபோல் நடக்கிறது" என மனத்துள் எண்ணிக்கொண்டிருக்கும்போது விசித்திரவீரியர் "என்ன, அப்பனே, யோசிக்கின்றாய்? நான் சொல்வது உங்கள் இராஜதந்திரத்துக்குச் சற்று மாறாய் இருப்பது போல் தோன்றுகின்றதோ! தோன்றினும் குற்றமில்லை. தந்திரங்கள் இனிப் பறக்கவேண்டியதுதான். ஹாராவல்லி மலைச்சாரலில் புகவேண்டியது; தவம் செய்ய வேண்டியது; காட்டுமிருகங்களோடு சினேகம் பண்ண வேண்டியது. இனி என் உலக வாழ்க்கை முடிந்தது. புறப்படவேண்டியதுதான். சன்னியாசி பயணம், திண்ணையை விட்டுக் குதித்தால் ஆய்விட்டது. என்ன சொல்லுகின்றாய் அனந்தா?" என்று கேட்டார்.

அனந்தபட்டர் "சொல்ல வேண்டுமா? நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வீர்கள். சுவாமி! உம்மிடம் இன்று பேசவும் பயமாய் இருக்கின்றது. நான் என்னவோ நடந்த விஷயங்களைப்பற்றிப் பேசவந்தால் நீங்கள் பீஷ்மாசாரிபோல் ஆரம்பிக்கின்றீர்கள். உங்கள் வார்த்தைகள் ஆச்சரியத்தை விளைக்கின்றன. ஆயினும் உங்கள் இஷ்டப்படி நடக்கலாம். தடையில்லை, உங்களுக்குத் தெரியாத விஷயமில்லை. லௌகீகம் வைதீகம் இரண்டும் தெரிந்த பரமபக்தர். இனிமேல் நான் சொல்வதில் என்ன விருக்கின்றது?" என்றார்.

விசித்திரவீரியர் "என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள். என் மனதுக்கு நான் செய்தது தப்பென்று படுகின்றது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா என் மனதில் சாக்ஷியாய் நின்று இதை ஒப்பவில்லை என்கின்றார். நீயும் தீர்க்காலோசனை செய்தால் நான் செய்வது சரியென்று தோன்றும் உனக்கும். இனி, சித்தத்தைச் சிவன்பால் செலுத்தாவிட்டால் நான் மூடனே யன்றோ?—பொழுதாகின்றது. நீ இன்று பகலெல்லாம் வெகுதூரம் வழிநடந்து வந்திருக்கின்றாய், சிரமபரிகாரம்செய்துகொள் வீட்டுக்குப் போய். ஆயினும் நீ இதுவரையில் என்னை யாதரித்து உன்னுடைய சமநிலையில் இருக்கும் பிரபுக்களுக்கும், சுல்தானுக்கும், என்னைக் கொண்டுபோய்ச் சினேகம் செய்வித்து உதவி புரிந்ததற்கு மிகவும் வந்தனம். நான் பெரியவன், நீ சிறியவன் என்று யோசியாதே. நான் உனக்கு இப்பொழுது வந்தனம் செய்யவேண்டியது அவசியம்—நியாயம். நீ என்னைப் பரிபாலனம் செய்ததற்கும், என் குடும்பத்தை ஸம்ரக்ஷணை செய்ததற்கும் பதிலாய்ப் பகவான் உனக்கு அருள்புரிவாராக. உனக்கு இன்னும் இராஜாங்கத்தில் வேலை உயரவேண்டும். என் வழி இன்னதுதான் என்று தீர்மானம் ஆய்விட்டது. பகவானே காட்டுகின்றார் நேர் வழியை. கண்களை மூடிக்கொண்டு அலக்ஷியம் செய்ய முடியாது—மற்ற விஷயங்களை நாளை பேசிக்கொள்வோம்" என, அனந்தபட்டர் "எனக்கு உண்மையாகவே ஒன்றும் தோன்றவில்லை. போய்வருகிறேன்" என்றுகொண்டு போய்விட்டார்.

விசித்திரவீரியர் பாடுகிறார்:

"இருக்கலாமோ உலகில், இனியும்,
இருக்கலாமோ உலகில்—"

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உத்தம மாணவனும் ஏகலைவன்

குருபக்தி

சுமார் 2,500 வருஷங்களுக்கு முன் கௌரவர்கள் பாண்டவர்களாகிய நூற்றைவரும் ஹஸ்தினாபுரியில் (டில்லியில்) துரோணர் என்னும் நாமம் பூண்ட வேதியரிடம் அரசர்க்குரிய அஸ்திரசஸ்திரப் பயிற்சியைப்பெற்று வந்தனர். அவர்களனைவரினும் அர்ச்சுனன் சுக்கில பக்ஷத்துச் சந்திரனே போன்று தினே தினே பிரகாசித்துக் கொண்டு வந்தனன். அதனால் துரோணருக்கு அவனிடத்து அத்யந்த பிரீதியுண்டாகி, ஒருநாள் அவனைத் தனியே அழைத்து உனக்கு "இன்று ஒருவித்தை உபதேசிக்கிறேன். இது என் குருவான அக்கினி

ஏற்கவே மாமி பேய்க்கோலம் அதிலும் கொஞ்சம் மாக்கோலம்.

கோத்திரமுனிவருக்கும் எனக்குமே யல்லது மற்றவர்களறியாதது, அதாவது ஒரு பாணத்தை எடுத்துத் தூண்டினால் அது நாலாகி நாற்றிசைப்புறமும் சென்று பாய்வது" என்று சொல்லி அதை உபதேசித்தார்.

கௌரவர் அனைவரும் ஒருநாள் போஜனம் செய்யப்போயிருந்தபொழுது அவ்வூரில்வசித்து வந்த ஹிரண்யதனுஸ் என்னும் வேடராஜனுடைய குமாரனாகிய ஏகலைவன் என்பவன் துரோணரிடம் வந்து தனக்கு வில்வித்தை கற்பிக்கும்படி அஷ்டாங்க தண்டனிட்டு அவரை வேண்டிக் கொண்டான். இன்ன பதில் சொல்வதென்பது தோன்றாமல் அவர்கொஞ்சநேரம் மௌனமாயிருந்தார். அதன் காரணமென்னவெனின் குருவை நாடிவரும் சிஷ்யனை வறிதே அனுப்பிவிடுதல் கூடாது. அதுபோலவே அரசிளங் குமாருடன் வேடுவச் சிறுவனுக்கும் கலைபயிற்றல் ஒவ்வாது. எனவே, அவர் சிறிது நேரம் யோசித்து முடிவில் ஏகலைவனை நோக்கி "அப்பா! மன்னிளங் குமரர் பலர்க்கும் பலவகைத்தான கலைகளைப் பயிலுவித்து வருவதனால், நீ விரும்பியவண்ணம் வித்தை கற்பிக்க எனக்கு அவகாசமில்லை. ஆயினும், நீ வில்வித்தையில் கீர்த்தி பெறுவாய்" என்றருள்மொழி கூறினர்.

தனுர்வித்தை கற்பிக்கத் தமக்கு அவகாசமில்லையென்று துரோணர் கூறியும், அவரது அருளைப்பெரிதெனமதித்தஏகலைவன், சிறிதும் மனச்சோர்வு கொள்ளாது, சரேலென வீடு சென்று, துரோணரைப் போல் ஓர் சிலை அமைத்தான். அமைத்ததும் தன் வீட்டின் ஒருபுறத்தே நன்கு அலங்கரிக்கப்பட்ட ஓரிடத்தில் அச்சிலையை ஸ்தாபித்து, அச்சிலையை மெய்யான துரோணரென மதித்து, குருவினிடம் பணிவாய் இருப்பதுபோல், அதனிடம் நடந்துவந்தான்.

நாள்தோறும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்த பின்னர், அச்சிலை உருவத்திற்குத் தூபதீப நைவேத்தியங்கள் செய்து, தானே தனுர்வேதத்தைக் கற்று வந்தான். துரோணரது அருள்மொழியாலும், அவரிடத்துத் தான் கொண்டிருக்கும் பயபக்தி விநயத்தாலும் துரோண உருவமே குருவென மதித்துவந்த மேன்மையினாலும், நாளடைவில் ஏகலைவன் வில்வித்தையில் எவரும் நிகரில்லை என்னும்படி தேர்ச்சிபெற்றான்.

பாண்டவரும் கௌரவரும் ஒருநாள் தம் குருவினது உத்திரவுபெற்று வேட்டையாடக் காட்டிற்குச் சென்றனர். அர்ச்சுனனது அருமையான நாயும் அவர்களுடன் சென்றது. அந்நாயோ கானகத்தே இங்குமங்கு மலைந்து திரிந்து, கடைசியில் ஏகலைவனது சிலம்பக்கூடம் சேர்ந்து, அங்கிருந்த துரோண உருவத்தின்மீது சிறுநீர் விட்டது. அதைக் கண்ட ஏகலைவன் கோபமடைந்து ஒருபாணத்தைத் தொடுக்க, அது நான்கு திசையிலும் சென்று அந்நாயின்மேல் பாய்ந்தது. உடனே நாயானது ஓடி அலறிக்கொண்டே ஓலமிட்டது. அர்ச்சுனன் நாயைப் பார்த்து முகத்தில் நான்கு பாணங்கள் பட்டிருப்பதை அறிந்து "நம்மாசிரியர் 'இவ்விதமாக அம்புதொடுக்க எனக்கும் அக்கினிகோத்திர முனிவருக்கும் தெரியும். உனக்கு மாத்திரமே இவ்வரிய வித்தையை அறிவித்தேன்' என்று சொல்லி இருந்தனரே. இந்த நாயின்மேல் 'இவ்விதம் அம்பு தொடுத்தவர் எவர்? அவரைப் பார்க்க வேண்டும்" என்று நினைத்து அந்நாயுடனே போனான். நாய் ஏகலைவனுடைய சிலம்பக் கூடத்தினிடம்போய்நின்றது. உடனே ஏகலைவன் ஓடிவந்து, அர்ச்சுனனுக்கு நமஸ்காரம் பண்ணினான். அர்ச்சுனன் அவனை ஆதரித்து "இந்நாயின்பேரில் அம்பை எய்தவர் எவர்?" என்று கேட்டான். அதற்கு அவன் "இது என் குருவின் உருவம் வீற்றிருக்கும் மேடையின்மீது சிறுநீர் விட்டது. கோபமடைந்து அதன்மீது அம்பெய்தேன். தங்களுடையது என்பதை அறியேன்" என்று மிகவும் அமைதியாக உத்தரமளித்தான். அதன்மேல் அர்ச்சுனன், "உன்னுடைய குரு யார்?" என்று கேட்டான். ஏகலைவன் "துரோணர் எனக்கு வில்வித்தை கற்பிக்க ஒழிவில்லை என்றதனால், நான்அவரைப்போல் திருவுருவம் அமைத்து, அதன் முன்னிலையில் வில்வித்தை பயிற்சி செய்து வில்வித்தை கற்றேன்" என்று நடந்த செய்தியைச் சொன்னான்.

அர்ச்சுனன் அவனது சொற்களை நம்பவில்லை. "நமது குருவாகிய துரோணர்தான் இவனுக்கும் குருவா யிருக்கிறார். இவன் மறைத்துச் சொல்லுகிறான்" என்று நினைத்

ஐங்காதம் போனாலும் அகப்பை அரைக்காசு.

துக்கொண்டு மறுநாள் முதல் வித்தை பயின்று திரும்புகையில்சற்றுத்தூரத்தில்நின்றேவிடைபெற்றுவர ஆரம்பித்தனன். இதன் காரணம் சிலநாட்கள் வரையில் குருவுக்குத் தெரியவில்லை. பிறகு தெரிந்தவுடன், அவனுடைய சந்தேகத்தை நீக்கும்பொருட்டு ஒருநாள் அவனை அழைத்துக்கொண்டு ஏகலைவன் இருக்கும் குடிசையை நோக்கிப் புறப்பட்டனர். இவர்களது வருகையைக்கண்ட ஏகலைவன் உள்ளம் பூரித்து அஷ்டாங்க தண்டனிட்டு வணங்கி நின்று, அவர்கள் எழுந்தருளிய காரணங் கேட்டனன். துரோணர் அவனை ஆசீர்வதித்து "உன் வில்லாசிரியன் யார்? மிகவினோதமான வில்வித்தை செய்கின்றாயாம். அதைப் பார்ப்போமென்று வந்தோம்" என்று சொன்னார். ஏகலைவன் நடந்த செய்தியைச் சொல்லி, கிரமப்படி ஆசிரியவணக்கம் செய்து சில அரிய வில்வினோதங்களைக் காட்டினான்.

இவைகளைக் கண்ட அர்ச்சுனன் துரோணரைப் பார்த்து "சுவாமி, நான் தப்பாகக் கொண்ட எண்ணத்திற்கு மிகவும் வருந்துகிறேன். தாங்கள் என் குற்றங்களை மன்னித்து என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று நமஸ்கரித்துக் கேட்டுக் கொண்டான். பின்பு ஏகலைவன் துரோணரை நோக்கி "இத்தனை தூரம் எழுந்தருளி வந்தீர்கள். என் கல்வி யெல்லாம் தேவரீர் அருளால் கிடைத்ததே. ஆகையால் என்னால் ஏதேனும் குருதக்ஷிணை பெறவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அதற்குத் துரோணர் "நான் விரும்புவது வேறொன்றுமில்லை. உன் வலக்கைக் கட்டைவிரலே" என்றார். வில்லை நாணேற்றி அம்புதொடுப்பதற்கு வலக்கைக் கட்டைவிரலே அவசியமானது. வில்லாளிகட்கு அக்கட்டைவிரல் இல்லாது போயின், நகமும் பல்லும் இழந்த சிங்கம்போல் அவர்கள் ஆண்மையற்றுப் போவர். விற்பயிற்சியில் எவ்வளவு சிறந்து இருப்பினும், அவ்விரலின்றி ஒருசிறிதும் பயனில்லை. ஆனதுபற்றியே துரோணர் அவ்விரலை வேண்டியதும் விரும்பிக் கேட்டதும்.

இவ்வாறிருந்தும், ஏகலைவன் கொஞ்சமேனும் வருந்தாது, "ஆ! இம்மஹானுடைய பேரருளினாலன்றோ நான் தனுர் வேதத்தில் தேர்ச்சி பெற்றேன்! அங்ஙனமிருக்க, அவர் குருதக்ஷிணை விரும்பும்பொழுது, இக்கட்டைவிரலன்றி, உயிரை விரும்பினும், அவ்வண்ணம் அளிப்பதே சாலச்சிறந்தது. மேலும், வில்வேதத்திற் சிறந்த பரமகுருவாகிய துரோணருக்குக் குருதக்ஷிணை கொடுக்கும் பாக்கியமும் பெற்றேன்" என்று அகமும் முகமும் ஒருங்கே மலர்ச்சியுற்றான்.

பின்பு, ஒரு நிமிஷமும் தாமதியாமல் வாள் கொண்டு விரலை வெட்டி, ஆசிரியருக்கு ஈந்தான். அப்பொழுது அந்தரத்தினின்று 'குருபக்தியிற் சிறந்தவன் ஏகலைவனே" என அசரீரி உண்டாயிற்று.

ஆகையால் "சிறுவரும் சிறுமிகளும் தங்கள் ஆசிரியர்களிடம் மிக்க பக்தியோடிருக்க வேண்டும்" என்பது நன்கு விளங்குகின்றது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி :—வெற்றி

அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்-ஒப்பரிய
வன்றனை யோடு வளநாடும் வஞ்சனையான்
வென்றானை வென்றானவ் வேந்து.

அப்போது நளன் மனம் வெகு தீவ்ரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தது தனது முன் பதவியைப் பற்றியும், இப்போது ஒருமாத காலமாய் அவன்தனது மாமன்வீட்டில் காலங்கழித்துப்பொருளற்று நின்ற நிலையைப்பற்றியும் அது எண்ணிக்கொண்டேயிருந்தது. "அந்தோ! உன் பிழைப்பென்ன வாயிற்று? காலகதியின் வழியில் பாய்ந்து, இச்சைத் தோணியி லேறி, உணர்வற்று, புத்தியின் கரைகளைக் கடந்து, தரித்திரக் கடலில் மயங்கித் தவிக்கும்படியான உனது நிலைமையை நீ சற்றும் நினைக்கவில்லை போலும்! ஊரற்று, நாடற்று, வீரமும் செயலும் அற்று, மனிதனாக வாழ விரும்பும் இவ்வாழ் வெதற்கோ? தனது தாழ்மையைப் போக்கி மேலோங்க விரும்பாது ஏதோ தாக்ஷண்யக் கட்டுக்கு உட்பட்டு உதவிசெய்வாரது உதவியை ஏற்றுப் பிழைப்பதினும், பிறவாதிருப்பது நலம். அவ்வாறு பிழைத்திருப்பதினும், உயிரற்று விளங்குவதே பெருமையாகும். நடைப் பிணங்களாய், தமதுரிமையைத் துறந்து, பிறரது அனுக்ரஹத்தின் பந்தத்தில் தவழ்ந்து விளங்குவதைக் காட்டிலும், தற்கொலை புரிதல் தவறாகாது. முயற்சி யில்லாப் பிழைப்பு, இகழ்ச்சிக்கே வழிதரும்.

'முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.'

அல்லவா? கடவுளால் கொடுக்கப்பட்ட மூளை முதலியவற்றைக் கொண்டு தனது நிலைமையை உயர்த்திக் கொள்ளாத மனிதன் தன் தலைமேல் தானே மண்ணைவாரிப் போட்டுக் கொள்கிறவன் அன்றோ? நல்ல மொழிகளைக் கவனியாது, மதி மயங்கி, செய்வதின்னவென உணராது, தகாத ஆடல்களில் மனத்தைச் செலுத்துபவர் இக்கதியே அடைவார்.

' இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தைவழி
செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே.

எனப் பலமுறையுங் கற்றுங் கோழை மனத்தொடு விளங்குபவர்க்குக் கதியுமுண்டோ? கெட்ட மனத்தைச் சீர்திருத்த வழியில்லாமல் எப்படிப் போகும்? எவனும் கஷ்டத்திலேயே உழல வேண்டுமென்பது கடவுளிஷ்டமா? நாம் ஆநந்த ஸ்வரூபிகள் என்பதே நம்மவரது கொள்கை யல்லவா? அப்படியிருக்கக் கஷ்டப்பட எவனும் ஜன்மமெடுக்க முடியாது. ஒருவேளை கரும சேஷங்களால் இடையிடையே துன்பங்கள் ஏற்படலாமேனும், ஒருவன் கஷ்டத்திற்கே பிறக்கமுடியாது. ஸதாஆனந்தமயமாக விளங்கக் கூடிய ஜீவன், தனது நிலையை உணராமல், மயக்க எண்ணங்களில் பாய்ந்து கஷ்டப்படுவது இவ்வான்ம நிலையை அறியத் தக்க எவர்க்கும் பொருந்தாது. ஆகவே, எனது தருமத்தை யான் செய்வதையொழித்து வீண்கவலைகொள்வதடாது. க்ஷத்ரியனுக்குத் தனதுரிமையைப் பெறுவதே தருமமாகும். அந்தப் புஷ்கரனிடமிருந்து, நஷ்டமடைந்த என்பொருள்களை யான் அடையாமல் இருப்பது எனக்குச் சிறிதுந் தகாது; பெருமைக்கடாது; வீரங் கொடாது.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

எனவே, மானத்தைக் காத்தலே எனக்குக் கடமை. இனி நற்காலமே வருமென நினைக்கிறேன். தவறினவன் அத்தவறின வழியில் நடக்காது யோசனையுடன் நடப்பது ஸஹஜமே. மேலும், கலியும் உதவி செய்வதாக வாக்களித் திருப்பதும் கவனித்தற் கேற்றது. தமயந்தியின் பொருட்டாய் நம்மை மதித்து மரியாதை செய்யும் மாமன் வீட்டில் இத்துணைநாள் இருப்பது நமக்குங் குறைவு; அவளுக்கும் பேச்சுக் கிடந்தரும். ஆதலால் சும்மா இருத்தல் சுகமல்ல. நம்நாடு நகர மாதி எவற்றையும் கைப்பற்ற நல்லவழி தேடவேண்டும். இல்லாவிடில் இப்பூமிக்கே பாரமாய் விளங்குவதாகும். மீசை யிருந்தென்ன? தோள்வலியிருந்தென்ன? நற்குலத்து வந்தென்ன? படித்திருந்த நுட்ப மிருந்தென்ன? நளனென்ற ஒரு நடைப் பிணமொருவன் உளனென்றே யாரும் தூறேற்றுவர். அப்போது இம் முகத்தை எங்குவைத்துக் கணவனை யிழந்த காரிகை போல, தலைமேல் முக்காடிட்டுப் பதுங்குவது? மனமே! ஜாக்ரதை! கெட்டுப் போகாமல் நடப்பாயாக. உன்னாலேயல்லவோ உலகே செழிக்க வேண்டும்? பழிக்காளாகா வழி கொள்வாயாக!" என்று நெடுநேரம் நளன் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

முள்ளை முள்ளால் வாங்குவதும் வயிரத்தை வயிரத்தாலே வெட்டுவதும் வழக்கமல்லவா? வைத்தியனும் உஷ்ணத்தை உஷ்ணத்தாலேயே தணிக்கின்றான். அதேபோல, நளனும், சூதால் தன்னை வென்ற புஷ்கரனைச் சூதாலேயே வெல்ல எண்ணங்கொண்டான். அதைப்பற்றிச் சிந்தித்து, நிச்சயங்கொண்டதும், பீம மன்னவரிடமிருந்து, உதவிக்காகச் சில ஆட்களுடனும், அற்ப பரிவாரத்துடனும், தான் மாத்திரம் நிஷதநாட்டெல்லையை அடைந்தான். வெகு ஆத்திரத்துடனும் கோபத்துடனும் வந்த மன்னனது உள்ள நினைவை வெளியிடும்படி வெகு அதிர்ச்சியுடன் ஓடிவந்த அவனது தேர், நிஷ்களங்கமான அவனது முகமண்டலம்போலவே, அப்போது உட்புகுந்து அதிர்ச்சியற்று நின்றது. கீழிறங்கிய நளமன்னவன் சரேலெனப் புஷ்கரன்முன் தோன்றி, "மன்னவா!

எனையன்று வென்றமென் றிறுமாந் திரீஇய
வினையன்று வழிகொளா வீறிடு புட்கர!
பற்பொருள் கொளீஇ பொற்பொடு நிறீஇ
நிற்பொரக் கவற்றின் நின்றனன் வழங்குதி
எற்படு முன்னடும் பணய மெஃதுகொல்?
கற்பினாளெனினும் கழறுதி
கலங்கலன் பொருதி ; கடமை மற்றதுவே!

என்ன சொல்கிறாய் ? என்னிடம் உள்ள பொருள் யாவற்றையும் பணயமாக வைக்க நான் ஸித்தமாயிருக்கிறேன். என் அருமை தமயந்தியை வேண்டுமென்றாலும் பந்தயமாக வைக்கிறேன். அதில் யான் பின் வாங்க மாட்டேன். நீயோ அரசன்! கவறால் எனது நாட்டையே கவர்ந்தவன். ஆக அந்த நாட்டையே பந்தயமாக வைக்கவேண்டும். மேலும், சூதாடிநாட்டைத்தோற்றவன், மீண்டும் தனது நாட்டைப் பெறச் சூதாட விரும்பினால், ஆடித்தான் தீரவேண்டும். அதுவே தரும சாஸ்திர ஸம்மதமானது. ஆகவே நீ என்னோடு கட்டாயம் கவறாடத்தான் வேண்டும். மேலும் ஓரே ஆட்டம் போதும்; அதற்குமேல் வேண்டாம். அதுவே நமது வழக்கைத் தீர்க்கவேண்டும்; நமது உயிரையும் நிச்சயிக்கவேண்டும். தெரிகிறதா உனக்கு ? என்ன உனக்கு ஸம்மதமா? இல்லாவிடில், ஆண்மையுள்ளவனாயிருந்தால் நான் சொல்வதைக் கேள். நாமிருவரும், தேர்மேலேறி ஒருவரோடொருவர் சண்டை செய்வோம். ஒன்று அதில் நானாவது போக வேண்டும், அல்லது உன் உயிரையாவது குடிக்கவேண்டும் ; என் மானத்தைக் காக்க வேண்டும். உனது தோள்களில் வலிமையிருந்தால் ஒருகைபார்ப்போம் ; வா ; பயப்படவேண்டாம். என் கைக்குத் தினவு எடுக்கிறது. என்ன விழிக்கிறாய் ? நான் சொல்லியதிரண்டே. இவ் வரங்கத்தில் ஆடும் சதுரங்கம் ஒன்று. யுத்தரங்கத்தில் சதுரங்கஞ் சூழப் போர் புரிவது மற்றொன்று. வெற்றி யுமக்கே யிருக்கலாம், 'புறப்படும் ; கவலையுறேல். வட்டோ, வில்லோ, இரண்டிலெதுவோ அதை உடனே எடுத்து வா ! சீக்கிரம் ! சீக்கிரம் ! என் ஆத்திரம் வரம்புகடந்து பொங்குகிறது. ஆகட்டும். பௌருஷமிருந்தால் புறப்படு ; மானமிருந்தால் கிளம்பு '' என் அச்சபையிலிருந்தார் .அச்சமும் அதிசயமும் அடையும் படியாக ஆரவாரஞ் செய்தான்.

அம்மொழிகளைக் கேட்ட புஷ்கரன் சற்றே யோசித்தவன்போலத் தலையை அசைத்துக் கொண்டு இளஞ் சிரிப்புச் சிரித்தான். அவனுக்குச் சூதாட்டத்தில் தனக்குத் தோல்வி ஏற்படாதென்றே திட நம்பிக்கை. ஆகவே அவன் சிறிதும் கவலையற்று இவ்வாறு வெகு அலக்ஷ்யமாகப் பேசினான்:—

''ஐயா ! இதற்குமுன் இந்நாடு உமதாயிருந்ததை இந்தச்சபையோர் யாவரும் அறிவார்கள்; அதைத் தாங்கள் எவ்வாறு துறந்தீர் என்றும் அவர்க்குத் தெரியும். அது போகட்டும். தாங்கள் நிறையப் பொருள் ஸம்பாதித்து வந்ததைக் கேட்க எனக்கு அளவுகடந்த ஸந்தோஷம். ஆடு கொழுத்தால் கோநாய்க்குக் களிப்புத்தானே. பந்தயமாகத் தாங்கள் வைத்த தமயந்தியும் எனக்கிதோ கிடைத்து விட்டாள் என்று நினைக்க எனக்கு மேலும் ஸந்தோஷம். தாங்களும் தமயந்தியும் க்ஷேமமாக இருந்ததற்குக் கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறேன். இல்லாவிடில் தமயந்தி எனக் கெப்படிக் கிடைப்பாள் ? பந்தயப் பணத்திலிருந்து அவளுக்கு வேண்டிய ஆபரணங்களைப் பூட்டிச் சிங்காரித்துக் களிப்பேன். என்னை அவள் ஆவலுடன் நாடி நிற்பாள் என்பது நிச்சயம். அதைக் காண என் உள்ளம் இன்பக்கடலுள் குளித்துக் களிக்கும். உங்கள் வரவு எனக்கு நல்வரவாகட்டும். எனக் கெப்பொழுதும் சூதாடுவதென்றால் அதிக ஆசை. அதுவும் உறவினர்களோடு ஆடுவதானால் என் உள்ளம் குளிர்ந்து விடும்? குருடன் கண்ணைத்தானே விரும்புவன்? தமயந்தி, அந்தக் குற்றமற்ற கட்டழகி, எங்களை எல்லாம் விட்டு விட்டு உன்னையே மாலையிட்ட அப்பெண்ணரசி, இனி எனக்கே உரியவளாவள். அது நிச்சயம். என் மனத்தை முற்றுங் கவர்ந்தவள் அவளே. அவளைப் பெறுவதே என்பாக்கியம். அதுவே எனக்குப் பெருமையுமாகும். ஏன் சாவகாசம்? ஆடலாமே!''

காமப்பித்தில் கலங்கி நின்ற புஷ்கரனது மொழிகளைக்கேட்ட நளன் கோபங் கொண்டனன். பொறுமையைக் கடந்த அது கொழுந்து விட்டுப் படரப் பொறாத அந்த நளமன்னவன், அவனைத் தனது கத்திக் கிரையாக்கத் துணுக்கங் கொண்டானாலும், அவனது சாந்தநிலை அவனை அவ்வாறு செய்ய வொட்டாது தடுத்தது. எனவே அவன் தமது கோ

பத்தை வெளிக் காட்டாது, புன்னகை நகைத்து "எட்டிச் சுரைக்காய் ஏதுக் குதவும்? வீண்பேச்சு எதற்கு ?

'சொல்லுவது யார்க்கு மெளிது அறியதாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்'

என்பதைத் தாங்களே அறிவீர். ஆகவே பேச்சை இனிவிடும், காரியத்தைப் பாரும், ஆட்டத்தைத் தொடங்கும்" என உரத்துச் சொன்னான்.

பேச்சு நின்றுவிட்டது. சூதாடும் பலகையும் கருவிகளும் வந்தன. ஆட்டமும் ஆரம்பித்து விட்டது. அந்தோ! புஷ்கரன் மனம் முதலிலேயேஏன் அப்படிவெளுக்கவேண்டும்? உடம்பேன் அப்படி நடுங்கவேண்டும் ? முகம் ஏன்அவ்வளவு கவலையுடன்விளங்கவேண்டும்? ஏன் அவன் அவ்வாறு மயங்கவேண்டும் ? என்ன அப்போது குடிகெட்டுப் போய்விட்டது?

கவறாடும் காய்களைப் போட்டதும், முதலிலேயே நள மன்னவனுக்கு ஜயம் வருமென்று அவன் எப்படி நினைப்பான்? தன்னையே பூஜிப்பவன், பிறரை எப்படி மதிக்கமுடியும்? தாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கு மென்பது அவனுக்கே உண்டான பொது வாக்கெனச் சொன்னால், அப்போது யாரும் தடுத்திருக்கார் என்பது திண்ணம்.

புஷ்கரன் தோற்றான். நளன் ஜயித்தான். அப்போது ஸபை கலையாது பார்த்துக்கொண்டேயிருந்தது. அதிசயமும் அச்சமும் நிச்சப்தமுமே அப்போது அங்குத்தனி அரசாட்சி செய்தன.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

இந்தியா கவர்ன்மெண்டின் அறைசிறைக் கணக்கு.

1919-20-ம் வருஷத்திய வரவு செலவுக் கணக்கின் திட்டமடங்கிய ரிபோர்ட்டு நாளது மாதத் தொடக்கத்தில் இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட நிருபண சபையில் பொக்கிஷ மந்திரியான ஸர்ஜேம்ஸ் மெஸ்டன் ஸ்ரீமானால் வெளியிடப்பட்டது. திட்டமிட்ட வரும்படியில் பாதி ராணுவச் செலவுக்கும், சுமார் நாலிலொரு பாகம் ரயில்வேச் செலவுக்கும் விநியோகமாகுமாதலால், வித்யாவிஷயம் விவசாயம் முதலிய சில முக்கிய அம்சங்களுக்கு அதிகமாகப் பணவுதவி செய்வதற்கில்லை. இருந்தபோதிலும், ஜனங்களில் பெரும்பான்மையோர் சந்தோஷிக்கவேண்டிய அம்சம் யாதெனில், வருமான் வரி விதிக்கக்கூடிய தொகையை ரூ. 1,000த்திலிருந்து ரூ. 2,000த்துக்கு உயர்த்தியதுதான். இதனால் சுமார் 2,37,000 பேர்களுக்குச் சிறிது சவுகரியமுண்டாகிறது. என்றாலும் கவர்ன்மெண்டாருக்கு சுமார் 75 லக்ஷம் ரூபா நஷ்டமாகும். மொத்தச் செலவைக் கவனிக்கும்போது சுமார் $7\frac{1}{2}$ கோடி ரூபா அதிகச் செலவாகிறபடியால், அதற்கு ஈடு செய்வதற்காக, வியாபாரத்தினால் அதிக லாபம் அடைபவர்களிடமிருந்து, அடைந்த லாபத்துக்கேற்றபடி வரி விதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் 9 கோடி ரூபா வசூலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி வரவு செலவு திட்டமிட்டதில், வருஷக் கடைசியில் சுமார் ஒரு கோடியே முப்பதுலக்ஷம் கவர்ன்மெண்டார் கையிருப்பில் ஆதாயமாகுமெனத் தெரிகிறது. ராணுவச் செலவையும் ரயில்வே விஷயமாகச் செலவிட உத்தேசித்திருக்கும் தொகையையும் குறைத்து, அவைகளைச் சுகாதாரம், கல்வி, முதலிய ஜன சவுகரிய விஷயங்களில் செலவிட வேண்டுமென்பது நமது அபிப்பிராயம்.

* * *

கொச்சி திவான்ஜி

சென்ற ஐந்து வருஷங்களாகக் கொச்சி ஸமஸ்தானத்தில் திவான்ஜியாகவிருந்த ஸ்ரீமான்போரே அவர்கள், தமது வேலையை ராஜிவைத்து, திரும்பவும் பிரிடிஷ் ஸிவில் உத்தியோகஸ்தராக அமர்ந்தனர். விலைவாசிகள் அதிகப்பட்டதனால் ஜனங்கள் சிரமசாத்தியத்துடன் காலங்கழிக்க வேண்டியிருந்த சந்தர்ப்பத்தில், ஸ்ரீமான் போரே அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையோடும் மதியூகத்தோடும் தமது கடமையை நிறைவேற்றின சங்கதிக்கு நாம் அகமகிழ்கிறோம். இவர் ஸமஸ்

தான முழுவதிலும் புரோவிருத்திக்கு இடங்கொடுத்தாரென்றாலும், வித்தியா விஷயமாக மிகவும் தாராளமான பண உதவிசெய்த விஷயம் கவனிக்கற்பாலது. கைத்தொழில் விஷயமாயும் ராஜகீய விஷயமாயும் முன்னேற்றத்தைத் தரக்கூடிய காரியங்களை இவர் அதிகமாகச் செய்யாதிருந்தனர் என்று குறை கூறுவோர்க்கு இவர் தமக்குக்கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவ்விஷயங்களில் முயற்சி செய்ததைமட்டும் நாம் எடுத்துக்காட்டுவோம். மிகுந்த அனுதாபத்துடனும் விநயத்துடனும் ஐந்துவருஷகாலம் பழகிய ஸ்ரீமானையும் அவரது தர்மபத்னியையும் விட்டுப் பிரிந்ததற்குக் கொச்சிவாசிகள் மனம்வருந்தக் காரணமுண்டு. இவ்வளவு பொறுப்பு வாய்ந்த உத்யோகத்தை, அவர்க்குப்பின் வகிக்க முன்வந்திருப்பவர் ஸ்ரீமான் T. விஜயராகவாசரியர் M. A. என்பது நம்மாகாணத்தார் அனைவருக்கும் அத்தியந்த சந்தோஷத்தைக் கொடுக்கும். ஸ்ரீமான் ஆசாரியரவர்களுடைய அற்புத சாமர்த்தியத்தையும் வேலைத் திறனையும் கொண்டாடாதவர் இலர். பிரத்யேகமாக, நமக்கு இவரிடம் மிகுந்த விசுவாசமும் மரியாதையும் உண்டு. நமது போதினிக்கு விஷயதானம் செய்யும் ஸ்ரீமான்களில் ஒருவர். உயர்ந்த உத்யோகத்தைப் பெற்றதில் நமக்கு உண்மையிலேயே சந்தோஷ முண்டாகுமல்லவா? ஸ்ரீமான் ஆசாரியாரவர்களுக்குத் தீர்க்காயுளும் அரோக திடகாத்திரமும், மேன்மேலும் புகழும் உண்டாகவேண்டு மென்பது நமது முக்கிய பிரார்த்தனை

* * *

ஆப்கானிஸ்தான அமீர்

நமது நாட்டுக்கு வடமேற்கிலுள்ள முஸ்லீம் ராஜ்யமான ஆப்கானிஸ்தானத்தின் அரசரான ஹபிபுல்லா கான், காபூல் நகருக்குச் சமீபத்தில் தங்கியிருக்கையில், துப்பாக்கியினால் சுடப்பட்டு இறந்தனர். காரணம் இன்னதென நன்றாக விளங்கவில்லை. ஹபிபுல்லாகான் பிரிடிஷ் ஸார்வபௌமத்தினிடம் பூர்ண விசுவாசமும் அந்தரங்க நட்புங் கொண்டவர். ஐரோப்பிய யுத்தம் நடந்த காலத்தில் ஜர்மானியர் இவருடைய மனநிலையைக் கலைக்க வெண்ணிச் செய்த சூழ்ச்சிகளுக்கு இவர் உடன்படாமல், பிரிடிஷார் பக்கமே சேர்ந்து தம்மாலான உதவியைச் செய்த விஷயம் மறக்கற்பால தன்று. இவர் மேற்கூறியபடி, துர்மரண மடைந்ததும், இவரது சகோதரர் சில நாள் அமீராக விருந்து பின்னர், ஹபிபுல்லா கானுடைய குமாரர் வசமே ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டனர். அப்பால் யாதொரு துர்த்தசையும் நேரவில்லை யெனத் தெரிகின்றது. புதிய அமீராக வந்திருக்கும் அமானுல்லாகானும், தமது பிதாவையும் பிதாமகரையும் போலப் பிரிடிஷ் ஸார்வபௌமத்தில் என்றும் மாறாத நட்புடனிருந்து நெடுங்காலம் சுகஜீவியாக ஆட்சிபுரிவதற்குச் சர்வேசுவரன் கிருபை புரிவாராக.

* * *

சென்னைக் கவர்னர்.

சென்ற ஆறரை வருஷங்களாக நமது மாகாணத்தில் கவர்னர் ஸ்தானத்தை வகித்து வந்த கனம் பென்ட்லண்டு பட்டவர்த்தனர் இம்மாதக் கடைசியில் வேலையினின்றும் நீங்கித் தமது ஜன்மதேசம் சென்றனர். ராஜகீய விஷயங்களில் நாம் தலையிடுவதில்லையென்பது நமதுகொள்கைகளில் ஒன்றாதலால், பென்ட்லண்டு பட்டவர்த்தனருடைய ஆட்சியைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. இருந்தாலும், பொதுப்படக் கூறு மிடத்து அவரது ஆட்சித்திறமை ஜனங்களுடைய க்ஷேமலாபங்களைக் கருதியதாகவே இருந்துள்ளதென்பதை அபிமானிகளே தெரிந்து கொண்டிருப்பார்கள். சிநேக விஷயத்தில் பென்ட்லண்டு பட்டவர்த்தனர் ஒரு அபூர்வ ஸ்ரீமான் என்றே சொல்லவேண்டும். ஜனஸமூகவாழ்க்கையிலும் அப்படியே! ஆதலால் தமது சென்னை வாசிகளில் பெரும்பான்மையோர் பட்டவர்த்தனருடைய பிரிவுக்குப் பெரிதும் வருந்துவர். ஸ்ரீமான் பென்ட்லண்டு பிரபு, நமது ஜன்மதேசத்தில் ஆயுராரோக்கியத்துடன் காலங்கழிக்கையில், நமது மாகாணத்தின் க்ஷேமலாபத்தையும் அடிக்கடிக் கவனித்து வருவாரென்றே நாம் எதிர்பார்க்கிறோம். அவர் ஸ்தானத்தை வகிக்க வருபவர் பம்பாய்க் கவர்னராக விருந்த வில்லிங்டன் பட்டவர்த்தனராவார். அவர் ஏப்ரல் மாதத்தில்தான் வரக்கூடுமாதலால், இடையில் கவுன்ஸில் மெம்பரில் ஒருவரான கனம் கார்டியூ ஸ்ரீமான் தாற்காலிகக் கவர்னராக வேலை பார்ப்பார்.

ஐயர் வருகிறவரையில் அமாவாசியை நிற்குமா?

மஹாமஹோபாத்யாயர் பண்டித
ஸ்ரீமான் உ. வே. சுவாமிநாதையரவர்கள்.

விவேக போதினி

வருஷச் சந்தா		"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு." ---திருவள்ளுவர்.	விளம்பர விகிதம்	
உள்நாடுகளுக்கு	ரூ. 4		முழுப்பக்கம்	ரூ 10
வெளிநாடுகளுக்கு	ரூ. 5		அரைப்பக்கம்	ரூ. 6
தனிப்பிரதி -	அ. 6		கால்பக்கம்,	ரூ. 3

தொகுதி XI | காளயுக்திஹு பங்குனிமீ :: 1919-ஹு ஏப்ரல்மீ | பகுதி 10

லக்ஷ்ய பேதம்

CONFLICT OF IDEALS

உரையுள துணர்த்துவ துணர்ந்து கோடியேல்
விரையுள வலங்கலாய வேத வேள்வியின்
கரையுள தியாவருங் கற்குங் கல்வியின்
பிரையுள தென்பது மைந்தன் பேசினன்.

வித்தின்றி விளைவதொன் றில்லை வேந்தநின்
பித்தின்றி யுணர்தியே லளவைப் பெய்தனன்
உய்த்தொன்று மொழியின்றி யுணர்தற் பாற்றெனக்
கய்த்தொன்று நெல்லியின் கனியிற் காண்டியால்.

தன்னுளே யுலகங்க ளெவையுந் தந்தவை
தன்னுளே நின்றுதா னவற்றுட் டங்குவான்
பின்னிலன் முன்னில னொருவன் பேர்கிலன்
தொன்னிலை யொருவராற் றுணியற் பாலனோ.

ஓமெனு மோரெழுத் ததனி னுள்ளுயி
ராமவ னறிவினுக் கறிவு மாயினன்
தாமமு முலகமுந் தழுவிச் சார்தலால்
தூமமுங் கனலும்போற் றொடர்ந்த தோற்றத்தான்.

இன்னதோர் தன்மைய னிகழ்வுற் றெய்திய
நன்னெடுஞ் செல்வமு நாளு நாமற
மன்னுயி ரிழத்தியென் றுரைஞ்சி வாழ்த்தினேன்
சொன்னவ னுமமென் றுணரச்சொல்லினன்.

வேறுமென்னொடு தரும்பகை பிறிதினி
வேண்டலென் வினையத்தால்
ஊறி யென்னுளே யுதித்தது குறிப்பினி
யுணர்குவ துளதன்றால்
ஈறி லென்பெரும் பகைஞனுக்
கன்புசாலடி யென்யா னென்கின்றான்
கோறி றென்றன னென்றலும் பற்றினர்
கூற்றினுங் கொலைவல்லார்.

குன்று போன்மணி வாயிலின்
பெரும்புறத் துய்த்தனர் மழுக்கூர்வாள்
ஒன்று போல்வன வாயிர மீதெடுத்
தோச்சின ருயிரோடும்

தின்று தீர்குது மென்குந ருருமெனத்
தெழித்தனர் சினவேழக்
கன்று புல்லிய கோளரிக் குழுவெனக்
கனல்கின்ற தறுகண்ணர்.

எறிந்த வெய்தன வெற்றின குத்தின
வீர்த்தன படையாவும்
முறிந்த நுண்பொடி யாயின முடிந்தன
முனிவிலான் முழுமேனி
சொறிந்த தன்மையுஞ்செய்தில வாயன
தூயவன் றுணிவொன்று
அறிந்த நாயகன் சேவடி மறந்தில
னயர்த்தில னவனுமம்.

உள்ள வான்பெரும் படைக்கலம் யாவையு
முக்கன வுரவோய்நின்
பிள்ளை மேனிக்கோ ரானிவந் திலதினிச்
செயலென்கொல் பிறிதென்னக்
கள்ள வுள்ளத்தன் கட்டினன் கருவிகள்
கதுமெனக் கனல்பொத்தித்
தள்ளு மின்னென வுரைத்தனன்
வயவரு மத்தொழிற் றலைநின்றார்.

ழிகுயி லிந்தன மடுக்கினர் குன்றெனக் குடங்
தொறுங் கொணரெண்ணெய்
இழுது நெய்சொரிந் திட்டனர் நெருப்
பெழுந் திட்டது விசும்பெட்ட
அழுது நின்றவ ரயர்வுற வையனைப்
பெய்தன ரீஇயென்று
தொழுது நின்றன னாயகன் றுளிணை
குளிர்ந்தது சுடுதீயே.

அநந்த னேமுத லாகிய நாகங்க ளரு
ளென்கொலென வன்னன்
நினைந்த மாத்திரத் தெய்தின நொய்தினி
னெருப்புகு பகுவாயால்
வனைந்த தாமன னமேனியி னுன்றன் மேல்
வாளெயி றுறவூன்றிச்
சினந்த மீக்கொளக் கடித்தன துடித்
திலன் திருப்பெயர் மறவாதான்.

ளின்றவங்க பிடாரி ஊர்ப்பிடாரி வன கபோல.

விவேக போதினி

தொ. 11] காளயுக்திஸூ பங்குனிமீ [ப. 10

தெய்விகக் காட்சி

THE SCENE DIVINE

தந்தா னிருங்கழற்பூ தாழ்ந்தா ருளம்பாழ்க்கார்
வந்தா னிரையாயர்க் கன்றுற்றின்—முந்தியவர்
நானஞ் செயமனத்துள் நாடி யொளிப்படிவா
ஞானஞ் செழிக்க நயம்?

"தமது உருவம் சாந்தியே குடிகொண்டது; அறிவே செறிந்தது. தாங்கள் குணங்குறியற்ற இன்ப மூர்த்தி; சுத்த ஸத்வமே உருவெடுத்தவர்; மாயையைக் கடந்து விளங்கும் பரம்பொருள். அவித்தையின் செயலால் ஏற்படும் இச்சையின் பெருக்கே இவ்வுலக வாழ்க்கை யாகும். இந்த ஜடப்பொருள்களிடம் உமக்குப் பற்றெப்படி ஏற்படமுடியும்? எனினும், லோக நன்மையை நாடி, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்திற்காக மனிதருள் மனிதராக மயங்கித் தவறினவரைத் தண்டித்து எளியவரைக் காத்து வரும் பெருமை, மற்று யாரிடமிருக்க முடியும்? அகந்தையின் பெருக்கினால் தாமே யுலகிற் கெல்லாம் தலைவராக எண்ணி என்னைப்போலத் தருக்கித் தவறிக் கேவலம் தமது படை தோள் வலிகளை நம்பிக் குருட்டுத் தனமாகத் தலை தெரியாது வெறிகொண்டு செல்வக் கள் குடித்துக் குதிக்கும் குருடர்கள், தங்களைக் காணில் தமது வீண் செருக்கொழிந்து ஜெயக் தியுடன் விளங்குவ ரல்லவா? ஞான விசாலமற்ற குறுகிய நோக்கினாது அவித்யா ஸங்கலோசனங்களைப் போக்கி நன்னிலை யளிப்பது தமது பிரபாவமென யாறு புகழ்வது? முன்னறிவின்றி யான் செய்த இத்தகைய செயலை மீண்டுஞ் செய்யச் சிந்தைகொள்ளா திருக்கும்படி தாங்களே அனுக்கிரஹம் புரியவேண்டும் நெடியோய் வாழி! இப்பூபாரத்தை யகற்றவெனத் தாம் திருவுளம் கொண்டது பக்தர்களைக் காக்க வெனவே அன்றோ? தூய ஞானச் சுடரே!

மேவரு ஞானாநந்த வெள்ளமாய் விதித்தோ னாகி,
மூவரும் ஆகி, அந்த மூவர்க்குள் முதல்வன் ஆகி,
யாவரும் யாவு மாகி, இறைஞ்சுவார் இறைஞ்சப் [பற்பல

தேவருமாகி நின்றாய்! எனக்கெனச் செய்த ஆராதனத்தைத் தடுத்து ஏற்ற உம்மேல் க்ஷாத்ரங் கொண்ட அகந்தையேன், இந்நாட்டைக் கல்மழை பெய்து நாசமாக்கி விடுவதெனச் செய்த முயற்சி வீணாகச்செய்த உமது சக்தி எனது அகந்தையையும் ஒழித்திட்டது; என்னை உமது பாதத் தாமரைகளில் பதிந்து உமது திருவருளை ஏற்க என் மனத்தையும் கனியச் செய்தது; உம்மையே அடைக்கலமடையும்படி தூண்டியது. மூவா முதல்வா! எவ்வுயிர்க்கும் உயிராகி விளங்கும் என் ஐயனே! சரணம்! அடுத்துவந்தவர் தம்மைத் தள்ள லாகாது; காப்பாற்றும்."

இவ்வாறு தனது செயலழிந்த இந்திரன், காமதேனுவுடன் கண்ணபிரான் முன் தோன்றி, அவரை வாயார வாழ்த்தினன்; வணங்கினன். அதைக்கண்டு மனக்களிப்புற்ற எம்பெருமான் "ஹே! மகபதி! தேவரையாளும் கர்வத்தால் நீ மயங்கிக் கிடந்தனை. ஆட்சி அகந்தை அநர்த்தத்தையே விளைக்கும். எனவே, உன்னைச் சீர்திருத்த வென்றே எனக்கெனச் செய்த ஆராதனத்தைத் தடுத்து, நீ என்னை என்றும் மறவாது விளங்கச் செய்தேன். செல்வக்கள் குடித்தாடும் குருடர்கள் என்னை எப்படிக் காணமுடியும்? ஆகவே, எவனை ஆள எண்ணங் கொண்டாலும், என்னைக் காணவொட்டாது அவனது பார்வையைத் தடுக்கும் செல்வத் திரையை யொழிப்பதே என் முதல் வேலை. இந்திர! இனி நீ, விண்ணுலகடைவாய்; உனக்கு நன்மையே உண்டாகும். அங்கு எனது ஆணையைத் தவறாது ஆட்சி புரிவாயாக; அகந்தை யொழிந்து, நெறிவழுவாது உனது ஆட்சி அங்குச் செழிக்கச் செய்வாயாக!" என அனுக்ரஹித்தனர். அதற்கிணங்கிய இந்திரன் தன்னோடு அழைத்துவந்திருந்த காமதேனுவின் பாலாலும், தனது ஐராவதத்தினால் கொணரப்பட்ட ஆகாசகங்கைத் தீர்த்தத்தாலும் கண்ணபிரானுக்கு இந்திரபட்டாபிஷேகஞ்செய்து கோவிந்தன் என்னும் பெயரிட்டழைத்தான். அச்சமயம் உலகமுழுதும் களிகொண்டு விளங்கியது. ஸமஸ்த ஜீவராசிகளும் இருந்தவிடத்திருந்து ஆநந்தமடைந்தன. அக் கடுநெஞ்சக் கஞ்சன் மனமும் காரணமில்லாமலே அப்பொழுது கிளுகிளுத்தது.

ஒன்றான பிரபு உறங்கிக் கிடைக்கையில் பிச்சைக்கு வந்தவன் தத்தியோதனத்திற்கு அழுகிறானாம்.

செருக்கொழிந்த இந்திரன் செலவுபெற்றுச் சென்றதும், கோபாலர்கள் குய்யோமுறையோவென இறைச்ச லிட்டுக்கொண்டு கண்ணன் முன்வந்து "நந்தகோபர் காளிந்தியில் அனுஷ்டானத்திற் கிறங்கியதும் உள்ளேயே ஆழ்ந்துவிட்டனர்" எனக் கண்ணீர்விட்டுக் கதறினர். உண்மையை யுணர்ந்த கண்ணபிரான் "பயப்படவேண்டாம். என் தந்தை ஏகாதசி துவாதசி விருதங்களை முடித்ததும், இரவு அஸுர வேளையில் அனுஷ்டானத்திற் கிறங்கியதால், வருணஸேவகர் அவரைத் தமதரசர்முன் கொண்டு சென்றனர். இதில் என்ன தவறு? தவறு செய்பவர் தண்டனை யேற்க வேண்டியதே யல்லவா? எனினும், நான் வருணலோகஞ் சென்று அவரை அழைத்துவருகிறேன். கவலையை ஒழியும்; பயப்படாதிருங்கள்" எனத் தேற்றிவிட்டு வருணலோக மடைந்தனர்.

ஸர்வலோக நாயகன் தன்னைத் தேடிவரக் கண்ட வருணன், அவரை விதி முறைப்படி பூஜித்துக் களிப்புற்று "இன்றே எனது அகம் பெருமை பெற்றது! என் ஐயனே! தமது வரவால் யான் தன்யனானேன்! ஸர்வலோக சரண்ய! தமது பாதாரவிந்தங்களில் பதிந்தவர் பிறவாழி கடப்பரன்றே? மாயையைக் கடந்த மாதவ! அறியாமையால் தமது தந்தையை இங்குக் கொணர்ந்தான் என் சேவகருள் நல்லது கெட்ட தின்னதென அறியா முழுமூடனொருவன். அப்பிழையைப் பொருத்தருள வேண்டுகின்றேன். தமது அன்பிற்குகந்த தந்தையைத் தம்மோடு அழைத்துச் செல்லும்" எனச் சொன்னான். கண்ணனும் அவ்வாறே செய்து தனது கோபால நண்பர்கள் வயிற்றில் பாலைக் கறந்தனர்.

இளஞ்சிறுவனாகத் தமது வீட்டில் விளையாடி யலைந்த கண்ணனை வரவேற்று வருணன் செய்த மரியாதையைக் கண்ட நந்தன் ஆச்சர்ய மடைந்தான்; மதிமயங்கினான்; தனது குழந்தையெனத் தான் எண்ணிய அச் சிறு உருவம் ஸர்வலோகங்களையுங் கண்ட பொருளென ஒருவாறு நினைத்தான். அப்போது அவனுக்கு முன் கர்க்கியர் கூறிய மொழிகள் ஞாபகத்திற்கு வந்தன; இடை யிடையே, பிள்ளைமேற் கொண்ட அன்பினால் தோன்றிய ஸந்தேஹம் சற்றேறொழிந்து உண்மையில் கண்ணன் பரம்பொருளாகத்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவன் மனத்துள் ஊன்றி நிலைத்து வளரத்தலைப்பட்டது.

தம்மோடு வாழ்பவரிடம் தெய்விகம் விளங்குவதைக் காண்பது எவர்க்கு மியலாது. எச்சமயங்களிலும் பக்கத்திலேயே இருப்பதால் அத்தெய்விகத் தன்மையின் பிரபாவம் எளிதில் அவர் அறிய முடியாதாய் விடுவதியற்கை. மற்று பழக்கத்தினால் ஏற்படும் மயக்கத்தினால், ஊன்றிக் காணும் நுட்ப உணர்ச்சி மங்கி, அறிவுகுன்றி, குறுகிய திருஷ்டி ஏற்படுவதியற்கையின் வழி. சிறு நாள் முதல் கொண்ட அபிப்பிராயங்களின் சேர்க்கை, அதனால் மனத்துள் அசைக்க முடியாது தனித்து வளரும் திடமான நோக்கம் ஆகிய இவை, உணரும் ஆவலைச் சரியான வழியிற் செல்லவிடாது பின்பற்றி யிழுக்கும். இவற்றின் வலையை யறுத்து, அறிவைச் சரியான வழியிலோட்டச் சில வபூதமான காட்சிகள் அல்லது செயல்களாற்றான் முடியும்? கடவுளில்லையென வாதிக்கும் நாஸ்திகனுக்கு, தொன்று தொட்டு மனத்துள் நிலைத்த எண்ணத்தை அகற்ற, கேவலம் அவனது காரணகாரிய விவகார எல்லையைக் கடந்து விளங்கும் ஓர் அதிசயச் செயலே அவன் மனத்தைக் கலக்கிக் குழப்ப முடியுமல்லவா? அப்போதுதான் அவன் மனத்தில் ஆஸ்திகவேர் ஊன்ற இடமேற்படும்; காரணங் கடந்த ஒரு பொருளிருப்பதன் உண்மை புலப்படும். குழந்தையாகவே பாவித்து வளர்த்து வந்த நந்த கோபனுக்குக் கண்ணனிடம் விளங்கும் தெய்விகம் எப்படி வெளிப்படையாக முடியும்? எது செய்யினும், அது தனது குழந்தையின் திருவிளையாடல்களில் ஒன்றெனவே அவனது பெற்ற அன்பு பெரிதும் பாராட்டச் செய்தது. அவ்வன்பின் தளைகளை முறித்து அக்குழந்தையைச் சுற்றி விளங்கிய தெய்விகப் பேரொளியை அவன் எப்படிக்காண

ஒன்றால் ஒன்று குறை இல்லை, முன்னாலே கட்டத் துணி இல்லை.

முடியும்? ஊர்க் காசனுைலும் தாய்க்குத் தன் குழந்தைதானே என்பது பொய்யா? எனவே, அவனுக்கு வருணன் கண்ணனுக்குச் செய்த மரியாதையைக் கண்டதும், கண்ணனைப்பற்றி அவன் கொண்ட அபிப்பிராயம் மாற்ற மடைந்தது; மனோதிருஷ்டியும் விசாலித்துக் கண்ணனை கடவுளாயிருக்க வேண்டுமென எண்ணச் செய்தது.

இத்தகைய எண்ணம் அவன் மனத்துதிக்க வேண்டு மெனவே, கண்ணன் நந்தகோபனை அஸுரவேளையில் காளிந்தி நதியில் அனுஷ்டானஞ்செய்யும்படி தூண்டியது. தமது தெய்விகத்தை வெளிப் படுத்த மனங் கொண்டதும், அவ்வழிக்குத் தம்மைப் பெற்றுவளர்த்தார் தடையா யிராது ஆதரவாயிருக்க வெனவே செய்ததாகும். "வருணன் கண்ணனை வரவேற்பது எப்படி முடியும்? அப்படி வரவேற்றால் அதற்கு என்ன காரண மிருக்கும்? அவன் ஆராதனஞ் செய்யத்தக்க மஹிமை கண்ணனிட முண்டோ? மனிதரைக் காக்குந் தெய்வங்களே மதிக்கும் பொருள் நமது கண்ணன் என்றால், கண்ணனெங்கே, நாமெங்கே. அஹோ! இது குழந்தையல்ல, குலதெய்வமாகும்; சிறுவனல்ல, கடவுளே உருவெடுத்தவன்" என எண்ணும் பாமர ஞானமே நந்தகோபனது உள்ளத்தைக் கவர்ந்து வியக்கச் செய்து, கண்ணனைப்பற்றித் தான் கொண்ட எண்ணங்களை வெளியிட் அவனைத் தூண்டியதாகும். அவன் சொல்லக்கேட்ட கோபர்கள் கடவுளின் பரமஞான நிலையைக் காண ஆவல் கொள்வது, இச்சையின் போக்கே யல்லாது உண்மை ஆவலின் பெருக்காகவு மிருக்குமல்லவா?

வருணலோகத்தில் கண்ணனுக்கு நடந்த சிறப்பைப்பற்றி விஸ்தாரமாகக் கேட்டறிந்த கோபாலர், அவரது உண்மை ஸ்வரூபதர்சனங் காணக்கொண்ட பேராவலின் எழுச்சியின் ஆழத்தை உணர்ந்த கண்ணபிரான், அவரைத் திருப்திபடுத்த எண்ணங் கொண்டனர்; புலன்களின் செயல்கடந்து விளங்கும் பரமயோகிகளின் உள்ளத்துறங்கும் தமது தெய்விக வடிவை அவர்க்குக் காட்ட மனமிசைந்தனா: எனவே, தமது நோக்கத்தை வெளியிடாது கோபாலர்களை யமுனைக் கழைத்துச் சென்று, அங்குப் பிரமகிதை என்னும் மடுவில் அவரை முழுக்கிடும்படி செய்தனர்.

அவ்வாறு அவர் செய்யும்போது பிரகிருதியைக் கடந்த தமது தேஜோரூபத்தை எம்பெருமான் அவர் முன் பொலிந்து விளங்கச் செய்தனர். அப்பிரபாவத்தின் பெருக்கிலாழ்ந்த அவர், அவ் யமுனை நீருள் மூழ்கிக் கிடந்தனர்; போக்கு வரவற்று, செயலற்று, அந் நீருள் இந்திரிய வியாபாரங்களற்று, தம்மைப் பற்றிய எண்ணம் முழுதுமற்று, அவாவற்று,

அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறைப் பற்றே

என்னும் பெரியார் வாக்கிற்கு உருவகமாகி விளங்கினர். அப்போதவர்கண்ட காட்சி யிருந்தவாறென்னே! அறிவினூறும் ஆனந்த வெள்ளம் புரண்டு செழுஞ்சுடராய்த் திரண்டு பகலொளியைக் கடந்து அவரெதிரே விளங்கக் கண்ட அவர் இவ்வுலகவாஞ்சையற்றுக் கிடந்தனர். நீருள் இருந்தால் என்ன? வேறு எங்கிருந்தால் என்ன? உள்ளத்துணர்வை உள்ளன்போடு காண்பார்க்குப் பழுதெப்படி ஏற்படமுடியும்? மயக்கமெங்கு வரும்?

'ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
மாயப் பிரானையென் மாணிக்கச் சோதியைத்
தூய அமுதைப் பருகிப் பருகி யென்
மாயப் பிறவி மயர்வறுத் தேனே'

என அக்கோபாலருள் ஒவ்வொருவரும் அவ்வகண்டசோதிப் பெருக்கின் பெருமையைப் பாராட்டி விளங்கியதன் தன்மை ஞானானுபவச் செல்வரன்றி மற்று யார் அறியமுடியும்? தானே யாகிவந்து தடுத்தாட்கொள்ளும் கடவுட் பிரபாவத்தை வெளியிட யாரே வல்லார். அதனாலேயே அல்லவா,

'பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!'

என்று உள்ளம் நெக்குநெக்குருகிய பரம ஞானிகள் வாய்விட்டலறினர்?

அவர் பெருமை யாருக்குத்தான் தெரியும்?

ஒன்றைத் தொடினும் நன்றைத் தொடு.

ஸ்ரீ வான்மீகரும் தென்னாடும்

SRI VALMIKI AND SOUTH INDIA

"வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்
நீங்கவிசெவிக ளாரத் தேவரும் பருகச்செய்தான்."
[பான்

என்று மகாகவிகள் புகழும் ஸ்ரீ வால்மீகி முனிவர் தம் காலத்தில் விளங்கிய பரதகண்ட நிலையைத் தம் ஆதிகாவியத்தில் உரிய விடங்களிலெல்லாம் சூசிப்பித் தருளுவர். அம்முறைப்படி, தென்னாடும் அவர் வாக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. வான்மீகி முனி கூறிய தென்னாடென்பது, விந்திய மலையின் தென்பக்க முழுமையுமாம். கிஷ்கிந்தையில், * சுக்கிரீவ மகாராஜன், பிராட்டியைத் தேடி வரும்படி வானரவீரர்களை ஏவும்போது, தென்பக்கமாகச் செல்லுதற்குரியாரை நோக்கிச் சொல்லியதாக வால்மீகி முனிவர் கூறியவை அடியில் வருமாறு:—

"அப்பெரிய வானரசேனையை அனுப்பிவிட்டுக் குறிக்கப்பட்ட வானரர் சிலரைத் தென்றிசைக் கேவுவானாயினன். * * * பின்பு அவன் தென்றிசையில் போதற்கரிதாயிருக்குமென்பதைப்பற்றி அவர்களை நோக்கிச் சொல்லத் தொடங்கி 'பலவித மரங்களும் கொடிகளுஞ் செறிந்த ஆயிரஞ் சிகரங்களையுடைய விந்த மலையையும், பெரும் பாம்புகள் தங்குவதும் கடத்தற்கரியதுமாகிய நருமதா நதியையும், பெரும் பகுதிகளையுடைய வரதா நதியையும், மேகலை உத்கலை தசார்ண முதலிய நாடுகளையும், அசுவவந்தி அவந்தி முதலிய நகரங்களையும் நீங்கள் காண்பீர்கள்; விதர்ப்பம், ருஷிகம், மாகிஷகம், வங்கம், கலிங்கம், கௌசிகம், மலைகளும் நதிகளும் குகைகளுமுடைய தண்டகாரணியம், கோதாவரி நதி முதலியவற்றையும் காண்பீர்கள். அவ்வாறே, ஆந்திரம், புண்டரம், சோளம், கேரளத்தோடு கூடிய பாண்டிய நாடுகளையும் காண்பீர்; பின்பு, தாதுக்கள் நிறைந்ததும் விசித்திரமான சிகரங்களுடையதும் பல வர்ணமான பூக்கள்நிறைந்த சோலைகளையுடையதும் சந்தன வனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுகமலையைத் தேடுங்கள்; அதன்பின், தேவரம்பையர்வந்து நீராடுகின்ற திவ்யமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள்: அந்த மலய மலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனி சிரேஷ்டரான அகஸ்தியரைக் காண்பீர்கள். அம்மகரிஷியிடத்தில் ஆணைபெற்றுச் சென்று, முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபர்ணி நதியைத் தாண்டுங்கள். அந்நதி அழகிய சந்தனச் சோலைகளால் மூடப்பெற்ற திட்டுக்களையுடையதாய், கணவனிடத்தன்புள்ள யுவதியானவள் புக்ககம் புகுமாறுபோல, சமுத்திரத்திற்சென்று விழும். பிறகு பொன் நிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்தமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பாண்டியர்க்கு யோக்கியமாயுமுள்ள கவாடத்தையும் பார்க்கக் கடவீர்கள், அதன்பின் சமுத்திரத்தை யடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள்!"

வான்மீக பகவானது இவ்வாக்கியங்களில் விந்திய பர்வதத்துக்குத் தென்பக்கத்தே—நருமதை, கிருஷ்ணவேணி, கோதாவரி, காவிரி, தாமிரபர்ணி முதலிய நதிகளும், மேகல தேசம் (விந்தப்ரதேசம்), உத்கல தேசம் (கஞ்சம்), தசார்ணம் (சண்டாகிரியின் கிழக்கு), அசுவவந்தி, விதர்ப்பம் (பீரார்), ருஷிக தேசம் (பங்காளப் பகுதி) மாகிஷக தேசம் * கலிங்கம் (வடசர்க்கார்), கௌசிகம், ஆந்திரம் (தெலுங்காணம்), புண்டரம் (வங்க தேசப் பகுதி) சேர சோழபாண்டியம் முதலிய நாடுகளும், தண்டகாரணியம் என்ற பெரிய வனமும் குறிக்கப் பட்டுள்ளன. சுக்கிரீவன் வானர வீரர்களைத் தென்றிசைக்குச் செல்லும்படி விடுக்கு மிடத்து, இந்நாடு முதலியவை வருதலால், இவை ஆரிய மக்களால் தக்ஷிணப் பிரிவுகளாக முன்பு கருதப்பட் டிருந்தன வென்பது விளங்கும்.

இவற்றுள் தண்டகாரணியத்தினைப் பற்றிய

* கிஷ்கிந்தை என்பது, துங்கபத்திரா நதிக்குச் சமீபமானதும் பம்பாசரஸ் இருந்த இடமுமாகிய ஹம்பி நகரை அடுத்து, மதங்காசிரமத்தைப் பெற்றிருந்ததாகிய ரிசியமூக பர்வதம் "மான் மலை" என்பதன் தென்பாலும், நீலகிரி, குடகுமலைத் தொடர்களுக்கு வடபாலுமாக, மைசூர் மலைப் பிரதேசங்களையுள்ளடக்கிய மேற்குத் தொடர்ச்சி மலையாம்.

* இது விந்தப் பிரதேசத்தைச் சார்ந்த அநூப தேசத்தின் தலை நகர் என்று இரகு வம்சத்து 6-ம் சர்க்கம், 37, 43-ம் சுலோகங்களால் விளங்கும்.

ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு.

வரலாறுகள் சில வான்மீகத்தினின்று அதிகமாக அறியப் படுகின்றன. இவற்றை, யாழ்ப்பாணத்து ஸ்ரீமான்-முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் மேல் வருமாறு குறித்திருக்கின்றனர். "பகவான் அகஸ்திய முனிவர் ஸ்ரீராமனை நோக்கி, இத்தேசத்தினது வரலாற்றை உள்ளவாறு கூறுவேன் கேட்பாயாக: பார்க்கவ மகரிஷியினது சாபத்தால் தண்டகனு மழிந்து அவன் தேசமாகிய இதுவும் மக்களும் விலங்குகளும் வாழப் பெறாத தாயிற்று. விருக்ஷம் செடி கொடிகள் தவமுனிவர்கள் இல்லாததும், மிக்க பயங்கரமும் சகித்தற்கரிய வெம்மையு முடையதுமாகிய பாலை நிலமாயிற்று. விந்திய கிரியினது அடிவார முதல், தெற்கே ஆயிரம் யோஜனை தூரம் வரையும் மழை வீழ்தலும் சுகமான காற்று வீசுதலும் இல்லை. மிக்க பயங்கரமுடையதும் கொடியதும் கனற்புகை சூழ்ந்தது மாகிய காடாய்ப் பல்லாயிரம் வருஷம் நிர்மானுஷ்யமாய்க் கிடந்தது. பின்னர், வெள்ளி மயமாகிய இமயத்தினின்றும் இங்கு வந்தேன். பர்ஜன்னிய மென்னும் ஜல தேவதையோடு மேகங்களைக் கொணர்ந்தேன். இமயத்திலிருந்து நானுவகை ஓஷதிகளும் கொணர்ந்து வளர்க்கப்பட்டன. மீண்டும் அழகிய தாமரையோடைகளும் நதிகளும் குளங்களும் அமைக்கப்பட்டன. அவற்றால் செழித்தடர்ந்த திவ்ய வனங்களும் பலவகை தானியங்கள் விளைகின்ற விளையுள்களும் உண்டாயின. வனங்களெங்கும் இருடிகள் குடிகொண்டார்கள். மனதிற்குக் களிப்பைத் தருகின்ற காட்சியினையுடைய தேசமாயிற்று" எனக.

இச்செய்திகளால், இராமாயண சரித்திரம் நடந்தேறுதற்கு முன்னர், தண்டகாரணியத்துக்கு அகஸ்திய மஹரிஷி வந்தாரென்பதும், அவர்வருகைக்கு முன்பு இக்காடு வெறும் பாழ்வனமாயும் சில விடத்து அடர்ந்த பெருங்காடாயுமிருந்த தென்பதும், அம்முனிவர் இங்கு வரும்போது அநேக ரிஷிகளையும் அழைத்து வந்தாரென்பதும், அக்குறு முனிவரே இத்தேசத்தில் நல்லமழை நல்லநதி நன் மரங்கள் முதலியவற்றை உண்டாக்கினு ரென்பதும் புலப்படும்.

அகத்தியனுர் தெற்கே வருவதற்கு முன், இக்ஷவாகு மைந்தனுகிய தண்டகன் சுக்கிர சாபத்தினுல் மண்மாரி பெய்ய மடிந்தகாலத்து அவன் ராஜ்யமும் மடிந்ததென்பது இராமாயணம் உத்தரகாண்டத்துக் கண்டது. இக்ஷவாகுவின் மைந்தனுன தண்டகன் கொடியோனுய் விந்தத்துக்கும் சைவலத்துக்கும் இடைப்பட்ட நாட்டை ஆட்சி செய்து வருகையில், பார்க்கவ (சுக்ரன்) புத்திரியாகிய அரசை யென்பாளைக் காதலித்து அவளை வலிதிற் கலந்த காரணத்தால் அங்ஙனம் சுக்ரசாபம் பெற்றனன் என்பது கதை.

தண்டகாரண்ய மென்பது, முற்காலத்தில், சேரசோழபாண்டிய நாடுகளை அடுத்திருந்ததென்பது, அந்நாடுகட்கும் விந்தத்துக்குமிடையில் வேறு தேசங்களைக் குறியாது "விந்தத்தின் தெற்கே ஆயிரம் யோசனை யளவும் வெறுங் காடாய்க் கிடந்தது" என, வான்மீகி கூறுதலால் விளங்கும். ஸ்ரீராமபிரான் காலத்தில், அப்பெருவனுந்தரத்தில் அங்கங்கே ருஷிகள் அநேகர் குடியேறி வசித்து வந்தனரென்பதும், அப்பிரதேசம் ஜனஸ்தானம் எனப் பெயர்பெற்றதென்பதும் மேற்காட்டிய பிரமாணங்களே விளக்கும். "ஜனஸ்தானத்தில் போருண்டாகு மென்று சந்தேகித்தவனும் இலங்கைக்கரசனுமாகிய இராவணன், ஈசுவரனிடமிருந்து அடைதற்கரிய பிரமசிரமென்ற அஸ்திரத்தைப் பாண்டியன் பெற்றிருப்பது தெரிந்து, அம்மன்னனுடன் சந்தி செய்துகொண்டு இந்திரலோகத்தை வெல்லப் போனுன்" எனக் காளிதாசர் ரகுவமிசத்திற் கூறுவதால், அந்த ஜனஸ்தானமும் தமிழ்நாட்டுக்கு வெகு தூரமன்றென்பது பெறப்படும். இத்தண்டகாரண்யம், ஆரியமக்களால் மிகுதியுங் குடியேறப் பெற்ற பிற்காலத்திலும், அவ்வனத்தின் ஆதிப் பெயரே தன் பெயராய்த் தண்டகாரண்ய நாடென்றும் பெயர் பெறலாயிற்று. "பதிற்றுப் பத்"தின் ஆறுவதன் பதிகத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் செய்கைகளுள், "தண்டகாரண்யத்துக் கோட் பட்ட வருடையைத் தொண்டியுட் டந்து கொடுப்பித்து" எனவும், அதனுரையில் "தண்டாரணிய மென்றது ஆரிய நாட்டினுள்ளதோர் நாடு" எனவும் வருதலால், தமிழ்நாட்டை யடுத்து அஃதிருந்ததும் பிறவும் உணர்க.

இத்தண்டகாரணியத்துக்குப்பின், வான்மீக

முனிவர், ஆந்திர புண்டர சோழ கேரள பாண்டிய நாடுகளைக் குறித்துவிட்டு, பின்னர், மலைய பருவதத்தின் சிறப்பையும் அம் மலையினின்று காவிரி நதி பிரவகித்தலையும் குறிப்பிட்டுள்ளார். மலைய பர்வதம் என்பது, தென்கோடியிலுள்ள பொதியமலை மட்டுமின்றி, நீலகிரியும் குடகும் அடங்கிய "மேற்குத் தொடர்ச்சி மலை" ப்ரதேசமுமாம். இம்மலையினின்று தெய்வத்தன்மை வாய்ந்த காவிரி வெளியாவதையும் அம்மலையினுச்சியில் அகஸ்திய முனிவர் விளங்குவதையும் வான்மீகியார் கூறியுள்ளார். அகஸ்தியர் காவிரி யுற்பத்தியாகுமிடத்தில் வசிப்பதாக முனிவர் இங்கே கூறினும், ஆரணிய காண்டத்தில், கோதாவரிக் கரையிலுள்ள பஞ்சவடிக்கு (Nasik) இரண்டு யோசனை தூரத்தில் அகஸ்தியாசிரமமிருந்ததாகவும் அவர் கூறியிருக்கின்றுர். இதனுல் அக்குறு முனிவர், "மேற்குத் தொடர்ச்சி மலை" முழுமைக்கும் உரியவராய்த் தென்னுட்டைக் காத்தருளியவர் என்பது விளங்கும். இனி வானர வீரர்களை நோக்கிச் சுக்ரீவன் வழி கூறும்போது 'அம்மலையினுச்சியில் மிகவும் தேஜோவானுய், சூரிய ஸமானராய் ருஷி சிரேஷ்டராய் உள்ள அகஸ்திய முனிவரையும் பாருங்கள். பிறகு, நிர்மலசித்தமும் மிகவும் ஞானவானுமான அம்முனிவரது ஆணை பெற்றுக்கொண்டு தாமிரபரணியைத் தாண்டுங்கள்" எனக் குறித்தலான் தென்னுட்டிற் புகுவதற்கு அகஸ்திய முனிவரது அநுமதி பெறுதல் அக்காலத்தில் அநுகூலமாயிருந்ததென்பதும் விளங்கும். இதனை நோக்கும்போது "குறுமுனிவர் இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து அவனை ஆண்டு (தென்னுட்டுள்) வாராமை விலக்கிப் பொதியின்கண் இருந்தனர்" என்ற நச்சினுர்க்கினியர் கூற்று ஞாபகத்துக்கு வருகிறது. அக்காலத்து அரக்கராதியரால் தென்னுட்டு ஆரியர்க்கு நேரும் இடுக்கண் நீக்கி அநுகூலஞ் செய்தற்கு அகத்தியரே முன்னின் றுபகரித்தாராவ ரென்பதற்கு வடமொழி தென்மொழி பிரமாணங்கள் பல காட்டலாம். வான்மீகி பகவான், ஸ்ரீராமபிரான் லக்ஷ்மணரை நோக்கி அகஸ்தியாசிரமத்தைப் பற்றிக் கூறியதைக் குறிக்கும்போது, "அம்மகானுகிய அகஸ்தியர் தாம் இவ்வுலகத்துக்கு நன்மை செய்யும் பொருட்டு, இங்கிருந்த யமனுடைய உபத்திரவத்தை நீக்கி, இத்தென்றிசையையும் சுகமாக வசிக்கத்தக்க திசையாகத் தமது தவ வலிமையாற் செய்துவைத்தார்" எனவும், "எவரொருவருடைய மகிமையால், இன்றைக்கும் அசுரர்கள் இத்தென்றிசையைக் கண்ணெடுத்துப்பார்த்து உட்புக நடுங்குகின்றுர்களோ, அவருடைய ஆசிரமம் அது; மகாபுண்ணிய மூர்த்தியாகிய அவர் இத்திசைக்கு வந்தது முதல், இங்கே அரக்கர்கள் தம் பகைமை நீங்கிச் சாந்த முள்ளவராய் விட்டார்கள். அவர் பெயரைக்கொண்டே இத்தென்சிசையும் அகஸ்தியர் திசை என்று வெகு சாங்கமான் பெயர்பெற்று மூவுலகத்தும் பிரசித்தியடைந்து கொடியவர் அஞ்சும் திசையாக விளங்குகிறது" எனவும் ஆரணிய காண்டத்து 11-ம் சருக்கத்துக் கூறுதலால், மேற்கூறிய விஷயம் நன்கு வெளியாகும்.

இனி தமிழ் வரலாறுகளை நோக்குமிடத்து, முற்காலத்தே அரசர்களால் துன்ப நேர்ந்தபோது சோழனெருவன் "தூங்கெயிலெறிந்"தது, இக்குறு முனிவர் அருளினுலே ஆம் என்பது விளங்கும். இதனை,

> " உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
> பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
> ஓங்குயர் மலையத் தருந்தவ னுரைப்பத்
> தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்"

என்னும் மணிமேகலை யடிகளிற் (காதை-க) காண்க. காந்தமன்என்னும் மற்றெருசோழன் பரசுராமரது கொடுமையினின்று தப்ப இம்முனிவரது பேரருளை நாடிய வரலாறு "அமர முனிவனகத்தியன்றனுது, துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவுங் ககந்தன் காத்தல்" என அந்நூலானே (22, சிறை செய் காதை; அடி,—35-37)" அறியலாம். இக்காந்த மன்னவன் பொருட்டே, காவிரியைச் சோனுட்டிற் பிரவகிக்கும்படி அவ்வகத்தியனுர் செய்தாரென்பது,

> " செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
> கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
> அமர முனிவன் அகத்தியன் றனுது
> கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
> செங்குணக் கொழுகிய சம்பாபதி"

எனவரும் அந்நூற்பதிகத்தால் அறிக. (சம்பாபதி என்பது காவிரிப்பூம்பட்டினம்.) இதனுள், "அமர" முனிவனகத்தி யன்றனுது,

கரகங்கவிழ்த்த காவிரி என்பதனால், அகஸ்தியாசிரமமொன்று குடகுமலையில் இருந்தமை வலிபெறும். இவ்வாறே பாண்டியனுக்கும் அகத்தியனார் மிகவும் அருள் செய்தவரென்பது, "அகஸ்தியரால் பட்டாபிஷேகம் செய்யப்பட்ட பாண்டிய வமிசம்," "பாண்டிய வமிசத்துக்கு ஆதியில் ஆசாரிய ஸ்தானம் வகித்தவர் அகஸ்தியர்" என நூல்களிலும் சாஸனங்களிலும் காணப்படுவதால் அறியலாம். ஸ்ரீ காளிதாஸரும் "அகஸ்திய மாமுனிவர், இப்பாண்டியர் தமது அசுவமேத யாகத்தை முடித்து அவபிருத ஸ்நாநஞ் செய்தவுடன், வெகு அன்போடும் இம்மன்னரிடம் வந்து 'தங்களுடைய ஸ்நாநம் சரிவர முடிந்ததா?' என்று கேட்கிறார்" என்று இரகுவமிசத்துக் (சருக்கம்-6, சுலோகம் 61) கூறுதல், அகஸ்தியர் பாண்டியர்க்குள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும்.

மேற்கூறிய அகத்திய முனிவர் வரலாறுகளை யெல்லாம் கூட்டிப் பார்க்குமிடத்து, அம்முனிவர் மேற்கொண்ட முயற்சி முழுதும், முக்கியமாக, ஜனப்பெருக்கமின்றிப் பெருங்காடாய்க் கிடந்த விந்தத்தின் தென்பகுதியில் ஆரியமக்களைக் குடியேற்றி, அப்பகுதியை நிலவளம் நீர்வள முடையதாக்கி, அன்னோர்க்கு வேண்டிய சௌகரியஞ் செய்து, விருத்தி செய்ததே என்பது நன்கு விளங்கும். பூமியின் வடபாகம் ஜன நெருக்கத்தின் மிகுதியால் தாழ்ந்தும் தென்பாகம் அஃதின்றி உயர்ந்தும் இருந்தவற்றைச் சமநிலைப்படுத்த வேண்டித் தேவர்களால் அகத்தியர் தென்றிசைக்கு அனுப்பப்பட்டார் என்று புராணங்கள் கூறுவதில் உண்மையுளதேல், அது தென் பகுதியில் அம்முனிவர் மேற்கொண்ட குடியேற்ற முயற்சியே யன்றிப் பிறிதன்றாம். இதற்கேற்ப, தென்றிசைக்குப் போதுகின்ற அகத்தியர், "துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண், பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொடு போந்து காடு கெடுத்து நாடாக்கி"ச் செழிக்க வைத்தார் எனத் தொல்காப்பியப் பாயிர வுரையில் நச்சினார்க்கினியர் குறித்த பழைய செய்தியும் பொருந்துமாறு கண்டு கொள்க.

இனி, விந்தியத்தின் தென்பாலுள்ள நாடுகளைக் குறித்து வந்த வான்மீகி முனிவர், "சோளாங் பாண்டியாங் ஸகோளாங்"—(சோழ தேசத்தையும் கோளத்தோடு கூடிய பாண்டிய தேசத்தையும்) என்று கூறுகிறார். "ஒருவினையொடுச் சொல்லுயர் பின் வழித்தே" என்னுந் தமிழ்வழக்குப்படி, 'கோளத் தோடுகூடிய பாண்டியம்' என்பது கோளதேசம் உயர்ந்த தென்பதைக் குறிக்குமாயினும், வடமொழி வழக்கு இதற்கு நேரெதிராகும்; என்னை? "ஸஹயுக்தே அப்பிரதானே" என்பது அதனிலக்கண மாதலின். அஃதாவது, "ஒரு வினையொடுச்சொல் இழியின் வழித்தே" என்பதாம். இங்ஙனம் 'பாண்டியாங் ஸகோளாங்' என அப்பிரதானத்தில் கோளருக்கு 'ஒடு' கொடுத்திருத்தலால் வான்மீகி காலத்துப் பாண்டிய நாட்டுக் குள்ளடங்கிச் சேர நாடு இருந்தது போலும்!

இனி, மலயத்திலுள்ள அகத்திய முனிவர்பால் விடை பெற்ற பின்னர், தாமிரபர்ணி நதியைத் தாண்டும்படி கூறப்படுதலோடு, அந்நதி சமுத்திரத்துச் செல்லுமாறுஞ் சொல்லப்படுகிறது. அதன் பின்பு பாண்டியனது நகர விசேடம் வருகின்றது. இங்ஙனம், அந்நதி சமுத்திரஞ் சார்தலைக் கூறிப் பாண்டியன் நகர விசேடத்தை வான்மீகி குறித்தலால், அப்பட்டணம் தாமிரபர்ணியின் சங்கமத் தயலில் இருந்ததாகக் கருதத்தக்கது. "அதன் பின் சமுத்திரத்தை யடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள்" என முடிவில் மகருஷி கூறுதலாலும், இதுவே கருத்தாதல் காணலாம். இனி இப்பாண்டியனது நகர விசேடத்தைப் பற்றி வால்மீகி கூறும் சுலோகத்தின் பொருள் வருமாறு:— "பிறகு, பொன் நிறைந்ததாயும் அழகுடைத்தாயும், முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பாண்டியர்க்கு யோக்யமானதாயுமுள்ள கவாடத்தை வானர வீரர்காள்! பார்க்கக்கடவீர்" என்பது. இவ்வுரை, திலகர் தீர்த்தர் கோவிந்தராஜர் என்னும் இராமாயண வியாக்கியாதாக்களுள் பின்னவர் கூறியது. முன்னவ ரிருவரும் "பின்பு பொன்னிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்துமணி யிவற்றால் அணியப்பெற்றதாயும் நகரத்தரணோடு இணைக்கப்பெற்றதாயுமுள்ள பாண்டியர் வாயிற்கதவை வானரர்காள்! போய்க் காண்பீர்" என்னும் பொருள்படக் கூறினர். (தொடரும்.)

162025

கன்-ப்-யூஷஸ்

CONFUCIUS

(271-ம் பக்கத் தொடர்ச்சி)

மேன்மகனும், அறமும்.—செய்யக்கூடிய விஷயங்களைப்பற்றியே சிந்தித்து உரைப்பவனும், பேசுமுன் செய்பவனும், எவரிடத்தும் சமமாகப் பழகுபவனும், சுக தசையிலும், கஷ்ட நிலையிலும், நீதி நெறிகள் வழுவாது நடப்பவனும், நியமங்களை அறிந்து அபிமானம் அல்லது பக்ஷபாதம், துவேஷம் அல்லது விரோதம் முதலியவைகளாற் கவரப்படாது முறைப்படி காரியங்களைச் செய்து வருபவனுமே மேன்மகனெனவும், மெய்யறிவாளனெனவும் அழைக்கப்படுவன். வார்த்தையாடுவதில் மதியூகி மெதுவாயிருப்பினும், விதித்தவைகளைச் செய்வதில் துரிதமாகவே யிருப்பான். கபடமற்றவனாகவும், சத்தியமுடையவனாகவும், அகந்தை யில்லாதவனாகவும், அகத்திலும் புறத்திலும் ஒரே தன்மையுடன் நடப்பவனாகவும், டம்பம், பயம், வீண் பச்சாத்தாபம் முதலானவைகளில்லாதவனாகவுமிருப்பவனே சுசீல னெனப்படுபவன். தற்புகழ்ச்சி, ஆக்ரஹ வார்த்தை, பேராசை முதலியவைகளில்லாதும், சிரத்தை, ஊக்கம், பொறுமை, தன்னடக்கம், அன்பு, தூய்மை, வாய்மை அல்லது நேர்மை முதலியவைகளையே சிரோபூஷணமாகக்கொண்டு மிருப்பவனே மேலோன். இதரர்களின் தீக்குணத் தீச்செய்கைகளை ஒருபொழுதும் ஒருவனிடமும் உரையாது, அவர்களுடைய நற்குண நற்செய்கைகளை மாத்திரம் வெளியிடுவோன் பேரறிவினோன். பிறர் நன்மையே பெரிதெனக்கொண்டு பொருளீட்டி உழைத்து வருவான் பெருமகன். ஒவ்வொன்றையும் உற்றுப் பார்த்துத் தீர ஆலோசித்து அறிவதற்கும், ஸ்பஷ்டமாய்க் கேட்டறிவதற்கும் பேராவலுடையவனும், அன்பு நிறைந்த பார்வையும், கண்ணியம் நிறைந்த ஒழுக்கமு முடையவனும், உண்மையும் நன்மையும் பொருந்திய விஷயங்களைப் பற்றியே சம்பாஷிப்பவனும், காரியங்களை நிறைவேற்றுவதில் சிரத்தையும், ஊக்கமுமுடையவனும், சந்தேகங்கள் தோன்றும் பொழுது, மீண்டும் அவைகளைச் செம்மையாக ஆராய்ந்தறிந்து [illegible]சந்தேகங்களை விலக்கிய பின்னரே மேற்காரியங்களைச் செய்யுங் குணமுடையவனும், [illegible] 'எனது' [illegible] பற்றைத் துறந்தவனு[illegible]ரேன். மேன்மகன் ஒருபொ[illegible] வாதாடான். இங்ஙனஞ் செய்ய நேரிடுமாயின், விவேகத்தையும், உண்மையையும், நியாயத்தையும், பொறுமையையுங் கைவிடாது வார்த்தையாடி உண்மையை ஸ்தாபித்துத் தவறுபவர்களை நல்வழியிலிடுவதற்கே முயல்வான். இம்முயற்சியில் தோற்பனாயின், அவன் அதை ஒரு பொருட்டாக எண்ணமாட்டான். ஆங்காரம், ஆவேசம், பழிக்குப்பழி செய்யவேண்டுமென்ற எண்ணங்களால் மேற்கொள்ளப்படவுமாட்டான்.

நடுநிலையில் மனதை நிறுத்திக் காரியங்களைத் தீர ஓர்ந்தறிந்து செய்தலே உண்மை அறத்தின் குணநிசயம். ஒருவன் தன்னுடன் பிறர் எங்ஙனம் ஒழுகிவர வேண்டுமென விரும்புகின்றானோ, அங்ஙனமே தானும் இதரர்களுடன் நடக்க வேண்டுமென்பதே அறம்.

தர்மத்தைத் துறந்து ஜீவிப்பதைவிட உயிரை யிழப்பதே நலம். அறந்தங்கியவனே தன் புத்தி சாமர்த்தியத்தினாலும், கல்விவளப்பம், செருக்கின்மை, தன்னடக்கம், தன்னம்பிக்கை முதலியவைகளினாலும் பிறரைச் சன்மார்க்கத்திலிட்டுச் சுகிக்கச் செய்யும் சக்தியை யுடையவன். தவறுதல் இயற்கையானாலும், ஒரு முறை தவறினால், அதைத் திருத்தி மீண்டும் அப்பிழையிலாவது, அல்லது வேறு எப்பிழைகளிலாவது விழாதிருத்தலே உண்மை ஞானத்தின் இயல்பு. கூரையில்லா வீடு, வீடாகாதவாறுபோல், அறந்தங்காவுலகு உலகன்று. அறமே மிக்க மேலான செல்வம்.

இளமைப் பருவத்தில் துன்மார்க்கத்தில் மனதைச் செலுத்தல், மத்தியப் பிராயத்தில் வீண் சண்டைகளிற் பிரவேசித்தல், முதிய வயதில் பேராசையினாற் கவரப்படுதலாகிய இம்மூன்றும் தகாதவை.

நற்புத்திகளைக் கேட்டுத் தக்கபடி நடவாதவனும், வருபவைகளை முன்னறிந்து கிரமப்படி நடக்க ஆயத்தப்படாதவனும் மனிதனல்லன்.

மானமுடையவன் பிறரால்மதிக்கப்படுவான். பெருந்தன்மையும், உண்மையும் பொருந்திய

வன் நம்பப்படுவான்; விவேகமும், தயாள குணமும் உள்ளவன் பிறரைத் தன் வசப்படுத்தலாம்.

ஐயம் நிரம்பிய விஷயங்களைப்பற்றி நிச்சயித்தலும், அபாயமும், துன்பமும் நிறைந்த காரியங்களில் தலையிடுதலும் இழிவானவை. கடந்து போனவைகளைப் பற்றி ஆலோசிப்பதும், தர்க்கிப்பதும், திருத்தக் கூடாதவைகளைப் பற்றியும், அறியாதவைகளைப் பற்றியும் வழக்காடுதலும் இழிவான செய்கைகளாகும்.

உதாரகுணம் கர்வத்தை உண்டுபண்ணும்; உலோபகுணம் பிறரிடம் வெறுப்பை உண்டாக்கும். ஆதலால், இவைகளினின்று ஒவ்வொருவனும் தன்னைச் சரியாகப் பாதுகாத்து வரவேண்டும்.

தகாத காலத்தில் பேசுதல், சரியான சமயத்தில் (அதாவது பேச வேண்டியபொழுது) மௌனஞ் சாதித்தல், பிறர் நோக்கங்களைச் சிறிதேனும் பாராட்டாது இஷ்டப்படி வார்த்தையாடல், பெரியோரைத் தூற்றல், எளியாரைப் பழித்தல் ஆகியவைகளினின்று மேன்மகன் விலகுவான்.

அறமில்லாது (அதாவது நற்குண நற்செய்கைகளில்லாது) தைரியமாத்திர முடைய தனவான் நாட்டிற்கழகல்லன்; அறமில்லாது ஆண்மை மாத்திரம் பொருந்திய சாமான்யன் திருடனைவிடச் சிறந்தவனல்லன். தைரியமும், உண்மையும் பொருந்தியவர்போல் புறத்தில் நடித்து, அகத்தில் பயமும், பொய்யும் நிறைந்துள்ள மாந்தர்கள் இரவில் களவுசெய்யும் திருடர்களுக்கு ஒப்பானவர்கள்.

அநியாயமாய் அபகரிக்கப்பட்ட பொருளும், துஷ்கிருத்தியங்களாற் கிடைக்கப்பட்ட ஊழியமும் மேகத்திற் கொப்பாகும்.

கல்வியும், ஞானமும்.—கற்பதும், கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்றபின், அவைகளால் தெரிவிக்கப்பட்ட வழிகளில் நிற்பதுமே மெய்யறிவு. ஆழ்ந்த சிந்திப்பினால் வளராத கல்வி வீண்; கல்வியினால் ஒழுங்குபடுத்தப்படாத சிந்தனைகள் அபாயகரமானவை. கல்வி நிரம்பியவிடத்தில், ஜாதிபேதம், செருக்கு, அவமதிப்பு, பொறாமை முதலியவைக ளிரா.

உண்மை விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்ப மாத்திர மிருப்பதைவிடச் சடுதியில் அவைகளை அறிதலே மிகச் சிறந்தது; அறிந்துமாத்திர மிருப்பதைவிட அவைகளை அனுசரித்துப் பிறர்க்கும் நன்மை செய்தலே அதிலும் மேலானது.

தெரிந்தவைகளை அறிந்ததாகவும், அறியாதவற்றை அறியவில்லையெனவும் நிர்ணயித்தலே உண்மை ஞானத்தின் சிறப்பு.

ஸ்வயஞானம் பொருந்தியவர் மிகச் சிறந்தவர்; பின், ஸ்வயஞானமில்லாவிடினும், கல்வியினாலும், விடாமுயற்சியினாலும் அதைப் பெற்று வளர்ப்பவர் மேலாவார்; பின், மூடராயினும், கற்கவேண்டுமென அவாவி முயல்பவர் சிறந்தவ ராவார்; ஆனால், ஞானத்தைப் பெற ஆசை யில்லாதவர்களும், பெற்று விருத்தி செய்ய யத்தனியாதவர்களும் கடையராவார்.

பணிவு அல்லது தாழ்மையும், ஸ்திர புத்தியும், விடாமுயற்சியும், சித்தசுத்தியும் கற்பதற்கு இன்றியமையாதவை.

கல்வியினால் செம்மைப் படுத்தப் படாத உண்மை நேசம் (அதாவது, உண்மை விஷயங்களை அறிந்து நற்காரியங்களைச் செய்து வரவேண்டும், பிறரிடத்து நேர்மையுடன் பழகி வரவேண்டும், என்ற விருப்பம்) மூடமென்ற நிழலை (அதாவது களங்கம், அல்லது குற்றம்) உண்டாக்கும்; கற்க விருப்பமில்லாது ஞானியாகவேண்டு மென்ற விருப்பம் மாத்திரம் சஞ்சலமென்ற நிழலை உண்டுபண்ணுகின்றது; கல்வியினால் சீர்படுத்தப்படாத நிஷ்கபட (நேர்மை) நேசம் முரட்டுத்தனம் என்ற நிழலை விளைவிக்கின்றது; கல்வியினால் ஒழுங்கு படுத்தப்படாத வீரநேசம் கலகமென்ற நிழலைப் பரவச்செய்கின்றது.

தன்னடக்கமில்லாவிடில் மரியாதை கெடும்; தன்னம்பிக்கை யில்லாவிடில் அறிவு சீழடையும்; தைரியம் உபயோகப்படாது. அறம் சுருங்கும் (அதாவது, குறைந்து, மறைந்து போம்).

நட்பு.—நேர்மை, நியாயம், ஊகம், ஊக்கம் முதலியவைகளை உடையவர்களுடன் மாத்திரம் நட்புக்கொள்ளுதல் தகுதி. நம்மைவிட எவ்விதத்திலாவது சிறந்தவருடன் அல்லது எல்லாவற்றிலும் சமமானவர்களுடன் மாத்திரம் சிநேகஞ் செய்தல் நல்லது. நாம் இதரர்களுடன் பழகும்பொழுது, சீரியரின் குண நடத்தைகளை நன்கு அறிந்து, நாமும் அங்ஙனமிருக்க முயலவேண்டும்; கீழ்மக்களின் தீயவொழுக்கங்களையும், கெட்ட குணத்தையும் அறிந்து, அவைகள் நம்மை அண்டாது பாதுகாத்துக்கொள்ளவேண்டும். சான்றோர்களை நாம் பார்க்கும்பொழுது, குணம் நடத்தைகளில் அவர்களை மீறி மேற்செல்லப் பிரயத்தினஞ் செய்யவேண்டும்; பண்பிலாரைக்காண்கையில், நம்மிடமும் அத் தீயவைக ளிருக்கின்றனவாவென ஆராய்ந்தறிந்து, உளவாயின், அவைகளை விலக்கவேண்டும். அறமும், ஞானமுமுடையவன் அநேக நண்பர்களை யடைவான்.

ஒடிந்த கோல் ஆனாலும், ஊன்றுகோல் இருக்கவேண்டும்.

மணமும், இல்வாழ்க்கையும்.—இல்வாழ்க்கையே மிகச் சிறந்தது. மணம்புரிதல் இயற்கை நியாயம். இதே பற்பல சுகங்களை அநுபவிப்பதற்கும், அறத்தை மேலோங்கி வளரச் செய்தற்கும் மூலாதார மாகின்றது. புருடனும், மனைவியும் ஒத்த மனதுடன் கூடியிருந்து வருவார்களாயின், இதைவிடப் பெரும் பேறு வேறொன்றுமில்லை. பரஸ்பர அன்பும், விசுவாசமும், நேர்மையும், ஒருவரை மற்றவர் நன்கு அறிந்து ஒத்து நடக்குங் குணமும் பொருந்திய இல்லவனும் இல்லவளுமே இதரர்களாற் புகழப்படுவர். அவர்கள் எக்கஷ்டமுமில்லாது ஜீவித்து வரலாம்.

சிறுவயதில் பெண்கள் பெற்றோர்களுக்கு அடங்கி யிருக்கவேண்டும். விவாகமானபின் நாயகனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கணவன் மரித்தபின் பிள்ளைகளால் ஆதரிக்கப்பட்டு வரவேண்டும்.

விதவை மீண்டும் கலியாணஞ்செய்துகொள்ளல் நியாயமன்று. விதவை நிலைமையை யடைந்தபின் ஒருபொழுதும் வீட்டிற்கு வெளியிற் செல்லக்கூடாது; கற்புநிலை தவறி நடத்தல் தகாது.

குற்றவாளிகளும், தீராப் பிணியர்களும் மணம்புரிந்துகொள்ளக் கூடாது.

புருஷன் தன் மனைவியைக் குரூரமாக நடத்தக் கூடாது; தவறும்பொழுது, இனிய புத்திமதிகளை உரைத்து, அன்புடன் ஆதரித்து வரவேண்டும்.

புருஷனுடைய பெற்றோர்களிடம் சரியாக நடவாமல், மலடியாயும், துன்மார்க்கங்களில் மனதைச் செலுத்துகின்றவளாயும், குடும்ப ரஹஸ்யங்களை அயலாரிடம் வெளிப்படுத்துகின்றவளாயும், அருவருப்பை விளைவிக்கும் நோய்களால் வருந்துகின்றவளாயும், வீட்டுச் சாமான்களைத் தன் உறவினர் அறியாது விற்பவளாயுமுள்ள மனைவியை அவன் விலக்கலாம். ஆனால், கலியாணத்திற்குமுன் வறிஞனாயிருந்து பின் மனைவியின் அதிர்ஷ்டத்தினால் சீமானானபொழுதும் உறவினர்களை யிழந்து இருப்பதற்கு வேறோரிடமுமில்லாதிருக்கும் பொழுதும், புருஷனது இருமுதுகுரவர் மரித்து மூன்று வருடம் முடியாதிருக்குமுன்னும், எக்காரணத்தை யிட்டும் கணவன் தன் மனைவியைப் பிரித்தல் தகாது.

பெற்றோர்களும், பிள்ளைகளும்.—பெற்றோர் பிள்ளைகளை அன்புடன் ஆதரிக்கவேண்டும்; பிழையிழைக்கும்பொழுது மன்னித்து நற்புத்திகளைப் புகட்டி நல்வழிப்படுத்தவேண்டும்; கல்வி கற்கச் செய்யவேண்டும். பிதா விவேகமும், நற்குண நன்னடத்தைகளும் பொருந்தியவனா யிருக்கவேண்டும்; இல்லாவிடில், புத்திரர்களும், புத்திரிகளும் கீழ்ப்படிந்து நடவார்கள்.

சிறுவர் இதரர்களுடன் மரியாதையுடனும், அன்புடனும் பழகி வரவேண்டும். சுசீலரின் நட்பைப் பெறவேண்டும். ஞான விஷயங்களில் மனதைச் செலுத்தி உழைத்துவரவேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்க்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்; அவர்களுடன் வீணில் வாதாடக் கூடாது. இயன்றவரையிலும் பெற்றோர் இஷ்டத்தை அநுசரித்தே நடக்கவேண்டும்.

ராஜதர்மம்.—அறந்தங்கிய இறைவன் துருவ நக்ஷத்திரம்போல் விளங்குவான்.

பிரஜைகளை நல்வழிப்படுத்திச் சுகிக்கச் செய்வதற்கும், நீதிநெறிகளினின்று வழுவாதிருக்கச் செய்வதற்கும், அரசன் நீதிமானாகவும், மதிநுட்பமாகவும், பொறுமை, விவேகம், ஊக்கம், சிரத்தை முதலியவைகளை யுடையவனாகவு மிருக்கவேண்டும்.

அரசன் தான் செய்யவேண்டியவைகளைச் சரியான காலங்களில் செய்தும், தவறுபவர்களை இன்சொற்களால் சீர்திருத்தியும் இருந்துவருவானானால், பிரஜைகள் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள்; தர்மநூல்களை மீறி நடவாது இனிது வாழ்வார்கள்.

யோக்கியர்களைக் கவனித்துப் பரிபாலித்தும், துஷ்டர்களை யடக்கித் தண்டித்தும்

ஒட்டினால் தொட்டிலும் கொள்ளும், ஒட்டாவிட்டால் கட்டிலும் கொள்ளாது.

வருவனாயின், பிரஜைகள் திருப்தியடைந்து அமைதியா யிருப்பார்கள். ஆனால், அயோக்கியர்களை உபசரித்தும், சுசீலர்களை நிராகரித்தும் வருவனாயின், குடிகள் அதிருப்தியடைந்து கலகமெழுப்புவார்கள்.

அன்பு, அருள், தூய்மை, நேர்மை, வாய்மை, சீரியவொழுக்கம் முதலியவைகளையுடைய அரசனே தன்குடிகளால் கௌரவிக்கப்படுவான். உண்பதற்கு வேண்டியவற்றை அளித்தலும், நாட்டைச் சரியாகப் பாதுகாத்து வருதலும், குடிகளின் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வெல்வதற்குரிய மார்க்கங்களைத் தேடிப் பெறுதலுமே மாட்சிமைதங்கிய அரசனது லக்ஷணங்களாகும். இவனே செங்கோல் மன்னவனென அழைக்கப்படுபவன்.

ஜனங்கள் புல்லுக்கும், அரசன் காற்றிற்கும் ஒப்பாவார்கள். காற்றடிக்குந் திசையை நோக்கிப் புல் வளைவதுபோல், ஆள்பவனது குணம், நடத்தைகளின் பிரகாரம் பிரஜைகளும் நடப்பார்கள். "அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி."

அரசன் தன்கீழுள்ள உத்தியோகஸ்தர்களின் திறமையை அறிந்து, அவரவர்க்குத்தக்க வேலைகளைக்கொடுத்தும், அவர்கள் சிற்சில சமயங்களிற் செய்யும் சிறு குற்றங்களை மன்னித்தும், மதியூகிகளையும், முயற்சியுடையோர்களையும், பண்பினோர்களையும் நன்கு கவனித்து அன்புடன் பராமரித்தும் வரவேண்டும்.

செய்யக்கூடிய காரியங்களைப்பற்றியே சிந்திக்க வேண்டும். பிறர் அறியக்கூடிய விதத்தில் தன்னுடைய எண்ணங்களை வெளியிட வேண்டும். எண்ணங்களும், காரியங்களும் ஒத்திருக்கவேண்டும்; இல்லாவிடில் காரியங்கள் ஒழுங்குடன் செய்யப்படா; காரியக்குறைவினால் ராஜாங்கம் நன்ருக நடவாது; ராஜாங்கம் ஒழுங்காக நடவாவிடில், நேர்மையும் ஒற்றுமையுமிரா; நேர்மையும் ஒற்றுமையுமிராவிடில், நீதியும் நியாய சட்டங்களும் வியர்த்தமாக முடியும்; தர்மமில்லாத ராஜ்யத்தில், பயமும் கலகமும் அதிகரிக்கும்; கொலையும் களவும் விருத்தியாகும். அரசன் தாறுமாருய் வார்த்தையாடல் கூடாது; செய்தற் கியலாத காரியங்களை நினைக்கக் கூடாது; இன்பமும், சுகமும் உண்டுபண்ணுத காரியங்களைச் செய்யக்கூடாது.

தன்னடக்கமில்லாத வேந்தன் பிறரை ஆள்வது மிகக் கடினம். சுயலாபம், சுயநன்மைகளைப்பற்றிச் சிறிதேனும் மனதில் வகியாத அரசனே மிக்க மேலானவன்.

முறையிட வந்தவர்களையும், யாசகர்களையும் நேரில் கண்டு கேட்டு, அவர்கள் குறையைத் தீர்க்கவேண்டும்.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்—இவ்வாறு குற்றங்களால் கவரப்படாது அரசன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

தர்மம் நிலைத்திருக்கும் நாட்டில், வறுமையிராது; திருப்தியும், சந்தோஷமும், ஒற்றுமையுமுள்ள விடத்தில், கலகமிராது. இத்தகைய நாடுகளை வேறெவரும் எதிர்த்து வெல்வது முடியாது.

அரசர்கள் வீணில் போர் செய்யக் கூடாது. அங்ஙனஞ்செய்வார்களாயின், ஜயிப்பதற்கே முயலவேண்டும்.

செங்கோலரசின்கீழ் வறுமையும், துக்கமுமிரா: கொடுங்கோலரசின்கீழ் ஐசுவரியமும், பெருந்தகைமையும் தங்கா.

நாடெங்கும் கலாசாலைகளை ஸ்தாபிக்க வேண்டும். பிரஜைகளைக் கற்கச் செய்தலே அரசனுடைய முழுமுதற்கடமை. கல்வி நிரம்பிய விடத்தில், ஒற்றுமையும், நேர்மையும் தூய்மையும் வளர்ந்து வியாபிக்கும்.

தன்னைப்பற்றிக் கூறியவைகள்.—பதினைந்தாவது பருவத்தில், கல்விகற்க வேண்டுமென்ற ஆசை அதிகரித்தது. முப்பதாவது பிராயத்தில், திடமன முடையவனானேன். நாற்பதாவது வயதில், பிரமையினின்று நீங்கினேன். ஐம்பதாவது வருடத்தில், நூல்களைச் செம்மையாகக் கற்று முடித்தேன். அறுபதாவது ஆண்டில், உண்மையை அறிந்தேன். எழுபதாவது வயதில், போத நிலையையடைந்தேன்.

என் கொள்கைகளைக் கற்கப் பிரியமில்லாதவனுக்கு உபதேசிப்பதில்லை; சிந்திப்பவைகளையும், படிப்பவைகளையும் செம்மையாக வெளியிடச் சக்தி யில்லாதவனுக்கு நான் எத்தகைய உதவியும் புரிவதில்லை; விஷயத்தின் ஒரு பாகத்தைக் காண்பித்துப் புகட்டியபின், நுட்ப புத்தியினாலும், விடாமுயற்சியினாலும் மற்றபாகங்களையும் தானே அறிந்துகொள்ளத்

ஓதி பெருத்து என்ன, உபகாரம் இல்லாதவன் வாழ்ந்தென்ன ?

திறமையில்லாதவனுக்கு மீண்டும் நான் கற்பிப்பதில்லை.

சீமான் ஒருவன் கன்-ப்-யூஷஸைத் தன் கிரஹத்திற்கு வரும்படி வேண்டியபொழுது, இவர் அங்ஙனஞ்செய்ய உடன்பட்டார். அப்பொழுது, இவருடைய சிஷ்யர்களிலொருவன், "தீயோர் வீட்டில் புகுவதில்லையெனக் கூறியிருக்கின்றீரே. இச்சீமான் துராத்மாவென நீர் அறிந்தும், நீர் இப்பொழுது அவன் வீட்டிற்குப் போகச் சம்மதித்தது நியாயமோ ?" எனக் கேட்டபொழுது, கன்-ப்-யூஷஸ் "யான் அங்ஙனம் கூறியது மெய்யே. வெண்மையும், தூய்மையும் நிரம்பிய வஸ்துக்கள், அசுத்த பதார்த்தங்களுடன் சேர்க்கப்பட்டபோதிலும், தம் இயற்கை சுவபாவங்களை யிழக்கா திருப்பதில்லையா ? யான் சுவையைத் தணிக்கக்கூடாத கனிக்கு ஒப்பானவனு? திடமனமும், தூய ஹ்ருதயமும் பொருந்தியவர்கள் பிறர் கெட்ட குண நடத்தைகளுக்குக் கொஞ்சமேனும் அஞ்சவேண்டியதில்லை. அவனுடைய தீக்குணம் அவனிடமும், என்னுடைய நற்குணம் என்னிடமும் தங்கிவிடும்" என விடையளித்தார்.

வேறொரு சமயத்தில், கன்-ப்-யூஷஸின் சிஷ்யர்களி லொருவன், "தீமைக்குப் பிரதித் தீமை செய்தல் நியாயமா ?" என வினவிய பொழுது, "நன்மைக்குப் பிரதி நன்மையும், தீமைக்குப் பிரதி நன்மையும் செய்தால், நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாச மொன்றுமில்லையே. ஆதலால், நன்மைக்கு நன்மையும், தீமைக்குப் பிரதி தீமையும் செய்தலே உண்மையான நியாயம்" எனப் பதிலுரைத்தார்.

முடிவு.— ஞானக் கடலில் ஆழ மூழ்கி, நிகரற்ற முத்து மணிகளைக் கொணர்ந்து, ஓரிடத்தே குவித்து, எத்தேயத்தினரும், எக்காலத்தவரும் அக்குவியலையணுகி மகிழ்வுற்று, அதிலிருந்து அவரவர் திறமைக்குத் தக்கபடி விவேகமென்ற மணிகளை வாரி யெடுத்துச் சென்று, தமக்கும் பிறர்க்கும் நன்மை செய்யும் நிமித்தம் உதவின ஞானிகளில் ஒருவர் நமது கன்-ப்-யூஷஸ். ஞான நூற்களையும், தர்ம நெறிகளையும் செம்மையாகச் சகலருக்கும் புகட்டியவரும், புகட்டுபவருமான இவர் என்றும் சிதாகாயத்தில் ஓர் துல்லிய நக்ஷத்திரம் போல் விளங்குவர். ஆருத் துயரக் கடலில் ஆழ்ந்து அவதிப்பட்டு அலறும் பேதையர்களைக் கைதூக்கி நற்கரையிலிட்ட சீரியர்களில் ஒருவர் இவர். மிடி, பிணி, அழுக்காறு, அகந்தை கொலை, களவு, போர், மடி, மூடம் ஆகியவைகள் நிரம்பிய குழியில் வீழ்ந்து கூத்தாடும் பாமரர் பண்பிலார்களுக்கு முன், ஓர் ஒளிபோல் தோன்றி, அன்பு, அருள், சுகம், இன்பம், ஞானம் என்றவைகள் நிரம்பப்பெற்ற பெருங் கடலைச் சுட்டிக்காட்டி எப்பொழுதும் மறக்கக் கூடாத உதவியைச் செய்துவரும் பெரியோர்களில் ஒருவர் இவர். அஞ்ஞானமென்ற காரிருளாற் சூழப்பட்ட இப்புவியின்மீது ஞான விளக்கேந்திய கம்பத்தை நாட்டியவர்களிலொருவர் இவர். இப்பெரியோர்களின் எண்ணம், வாக்கு, காரியம் முதலியவைகள் ஒரு பொழுதும் அழியா. எந்நாட்டில், எக்காலத்தில் பிறந்திருந்தாலும் சீரியர் சீரியரே. சதுரங்க சேனைகளுடன் பற்பல ராஜ்யங்களின் மேற் படையெடுத்துப் போர்புரிந்து, அதர்மமாய் ஆயிரக்கணக்கான மாந்தர்களைக்கொன்று இன்றிருந்து நாளை யழியும் மாகாணங்களை ஸ்தாபிப்பதைவிட, விவேகத்தினாலும், விடாமுயற்சியினாலும், பொறுமையினாலும், மூடம் அவித்தை யென்ற அந்தகாரத்தினால், மூடப்பட்ட உலகின்மேற் படையெடுத்து, அவ்விருளை நீக்கி, எந்நாளும் நீடித்து நிலை நிற்கும் ஞான வொளியைப் பரவச்செய்த லல்லவா மிகச் சிறந்தது! இவர் ஆஜானு பாகு; கம்பீரத் தோற்றமுடையவர்; திடகாத்திர முடையவர்; இனிய தொனியும், அகன்ற நாசியும், மேன்மைக் குணத்தையும் ஸ்திரபுத்தியையும் தெரிவிக்கும் முகத்தையும், ஞான முதிர்ச்சியினால் பிரகாசிக்கும் நேத்திரங்களையு முடையவர்; தமது அந்தஸ்திற்குத் தக்க உடை தரிப்பவர்; மதுபானம் முதலியவற்றை மிதமாக உபயோகித்தவர்; ருசிகரமானதும், தேக புஷ்டியைத் தரத்தக்கதுமான பதார்த்தங்களையே உண்பவர். அன்பு, அருள், இரக்கம், ஈகை, நிஷ்கபடம், கர்வமின்மை முதலியவைகளைச் சிரோபூஷணமாகக் கொண்டவர். பிறருடன் மிக்க மரியாதையுடன் பழகி வந்தவர்; பிறரைத் தூஷித்தவரல்லர். தம் சிஷ்யர்களை அன்புடனும் ஆசையுடனும் ஆதரித்து வந்தவர். அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியாத சித்தாந்தங்களைப் புகட்டியவரல்லர். அவைகளைப்பற்றிச் சிந்தித்தவருமல்லர்.

ஓதிய மரம் தூணுமோ? ஒட்டாங்கிளிஞ்சில் காசாமோ?

தென் இந்தியாவில் தொழு எரு

FARM MANURE IN SOUTHERN INDIA

அநேகமாய் எந்தத் தேசத்திலும் குடியானவனுக்குத் தன்னுடைய ஆடுமாடுகளின் மூலமாய்க் கிடைக்கிற எருவே அவனுடைய நிலத்தை உரமிடுவதற்கு ஆதாரமாயிருக்கிறது. குடியானவன் தன் நிலத்தில் நன்றாக எருவிட்டு அதைச் செவ்வையாய் உழுதால்மட்டும் அதிலிருந்து நல்ல மாசூலை எதிர் பார்க்கக் கூடும்.

எருவிடுவதுவே அவன் அடையும் இலாபத்துக்குக் காரணமென்பது யாவருக்கும் அனுபவத்தில் தெரிந்த விஷயம். போதுமான எருவும் ஏராளமான தண்ணீரும் இருந்தால் இந்துதேசத்து நிலத்தின் விளைச்சலுக்கு வரையறை இல்லை. இந்த விஷயத்தில் எருவும் தண்ணீரும் ஒன்றிலொன்று சார்ந்திருக்கிறது. தண்ணீரோ பெய்கிற மழையினாலும், நதிகள், ஏரிகள் அல்லது கிணறுகளிலிருந்தும் கிடைக்கிறது: நாம் இப்பொழுது கவனிக்கவேண்டியது எரு உண்டாகும் விதத்தைப்பற்றியே. துர்ப்பாக்கியத்தால் சமுசாரியினுடைய கைவசத்தில் கிடைக்கிற எருவோ, வழக்கமாய் மிகவும் கொஞ்சம். அதுவும் அநேகமாய்த் தாழ்ந்த தரமுள்ளதே. கிடைக்கிற எரு விஷயமாய்ப் போதுமான கவனம் வைக்காமலும் சரியான விசாரணை இல்லாமலும் எருவின் சத்துக் குறைந்துவிடுகிறது.

எரி துரும்பு கிடைக்காத இடங்களிலும் பட்டணங்களுக்கு அருகிலும் மாட்டுச்சாணத்தின் அதிக பாகத்தை வறட்டியாகத் தட்டி விறகுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். குடியானவன் தன்னுடைய ஆடுமாடுகளின் சாணத்தை விறகுக்குப்பதில் கொளுத்திவிடும் பொழுது வெட்டவெளியில் அதாவது மழையில் நனைந்து வெயிலில் காயும்படி அதைக் கொட்டிவிடுகிறான். அப்படிச் செய்வதினாலே சாணத்தினிடத்துள்ளஉபயோகமுள்ள சத்துக்களெல்லாம் போய்விடுகிறது. ஆடுமாடுகளின் சாணத்தை எரிக்கிற வழக்கம் குடியானவனுக்கு அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். மாட்டுச்சாணத்தை வறட்டியாகத் தட்டி உபயோகிப்பதனால் சமுசாரிக்கு மிகவும் கொஞ்சம் இலாபந்தான் கிடைக்கும். சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் செய்கிறது போல், குடியானவர்கள் தங்கள் வயல்களைச் சுற்றிலும் மரங்களை நட்டும் வேலிகளை வளர்த்தும் அல்லது தமது வயல்களின் ஒரு சிறு பாகத்தில் விறகின் நிமித்தம் மரங்களை வளர்த்தும் தமது தேவைக்குப் போதுமான விறகைச் சுலபமாய் அடைந்து கொள்ளக்கூடும். இப்படிச் செய்தால் தொழு எருவை எரித்து நஷ்டம் உண்டுபண்ணக்கூடிய துர்வழக்கம் நீங்கிப்போகும். பெரிய பட்டணங்களுக்கு அருகில் விறகின் விலை அதிகமாய் இருப்பதினால் விறகு கொடுக்கக்கூடிய மரங்களை வைத்து வளர்ப்பது மிகவும் இலாபகரமான முயற்சியாயிருக்கும். பொதுவாகக் குடியானவர்கள் தங்களுடைய மாட்டுச் சாணத்தை வெட்டவெளியில் சிறு குவியலாகப் போட்டு வைப்பது வழக்கமாயிருக்கிறது. அப்படிச் செய்வதனால் சாணம் கற்கள்போல் கட்டியாய் உலர்ந்து ஏதாவது ஒரு மழை பெய்தால் அதனால் முழுவதும் கரைந்து போகிறது. இப்படிச் செய்வதனால் ஒவ்வொரு விதத்திலும் நஷ்டமடைந்து கடைசியாகக் கழனியில் கொண்டு போடுவதற்காக வண்டியில் எடுக்கும்பொழுது உபயோகமில்லாத சிறு செத்தைக் குவியலாக ஆகிவிடுகிறது. இந்தக் குவியலோடே வைக்கோலும் சில இலை தழைகளும் சேர்ந்திருக்கின்றன. அதில் சேர்ந்த ஒவ்வொரு பொருளும் சரியாய்ப் பாதுகாக்கப்படாமல் சாணம் அதன் குணத்தை இழந்தும், தாள்கள் வெயிலினால் சாராம்சங்கள் கிரகிக்கப்பட்டும் கெட்டியாய் விடுகின்றன. இந்தியாவில் ஆடுமாடுகளுக்குச் செத்தையினால் படுக்கை போடுகிறதில்லை. ஆடுமாடுகள் சொந்தக்காரர்களுடைய வீடுகளிலாவது தொழுவங்களிலாவது கட்டியிருக்கும் பொழுது அவைகளின் மூத்திரத்தைச் சேகரிப்பதற்கு யாதொரு முயற்சியும் செய்கிறதேயில்லை. மேற்கூறியபடி சாணம், செத்தை முதலிய கெட்டி உரங்கள், வெய்யில, மழை, காற்று முதலியவைகளில் அடிபடுவதனால் தற்காலத்தில் கையாடும் முறை, நஷ்டத்தை உண்டுபண்ணுவதாயிருக்கிறது. மேலும் மூத்திரம் முதலிய நெகிழ்ந்த உரம் சேகரிக்கப்படாமல் போவதுமல்லாமல் பூமி

ஒரு கட்டு வைக்கோலைத் தண்ணீரிற் போட்டு எட்டுஆள் கூடி இழுத்தாற்போல.

யில் ஆடுமாடுகளின் கால் குளம்பினால் உண்டாகும் பள்ளங்களுக்குள் சுவறிப் போகும்படி விடுவதினாலுண்டாகும் நஷ்டத்தோடு முன் கூறியதைப் பார்க்கிலும் அதிக நஷ்டமுண்டாவது மல்லாமல் கெடுதி விளைவிக்கக் கூடியதாயும் இருக்கிறது. ஏனென்றால் மாடுகள் நிற்கிற தரை, மூத்திரத்தினால் நிறைந்து வீடு அல்லது தொழுவத்திலுள்ள காற்று அசுத்தமாய் விடுகிறது. காலையில் இந்தத் தொழுவங்களில் ஒருவிதமான கெட்ட நாற்றம் உண்டாவது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதற்குக் காரணம் பூமிக்குள் போய் நஷ்டமாய்ப் போகிற மூத்திரத்திலடங்கிய அருமையான சத்துக்கள் ஆவியாய்ப் போவதுதான். சமுசாரிகளுக்கு அதன் அருமை இவ்வளவென்பது தெரியவில்லை. வாஸ்தவமாகவே மாட்டு மூத்திரத்தில் சாணத்திலிருப்பதைப் பார்க்கிலும் சடப் பொருள்களைச் செழிப்புண்டாக்குந் தன்மை அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட மூத்திரத்தை விருதாவாய்ப் போகும்படி செய்வது மிகுந்த நஷ்டமேயாம். இவ்விதமான நஷ்டத்தை இரண்டு வழியாய் நீக்கலாம்.

முதலாவது, மூத்திரத்தை இழுத்துக்கொள்ளும்படியான செத்தைப் படுக்கையை உபயோகிப்பதனால்; இரண்டாவது, செத்தை அகப்படாவிடின் காய்ந்த மண்ணைத் தொழுவத்தின் தரையில் பரப்புவதனால். இரண்டாவது சொன்ன முறையினால் மூத்திரத்தின் அநேக பாகத்தை, வீண்போகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். எப்படியெனில், உரத்துக்காக உபயோகப்படும் வரையிலும் தொழுவில் பரப்பின மண்ணைச் சேகரித்து வைக்கவேண்டும்; அல்லது மூத்திரத்தினால் மண் கலப்புண்டவுடனே அதை அவ்விடத்திலிருந்து நீக்கி பின் சொல்லுகிறபடி எருக்குழியில் ஜாக்கிரதையாகச் சேகரித்து வைக்கவேண்டும். வயல்களில் ஆடு மாடுகளைக் கிடைமறிக்கும்பொழுது தரையில் உறைந்துபோகும் மூத்திரம் வீண் போகவில்லை.

மாடுகளுக்கு ஏன் செத்தைப்படுக்கை உபயோகிக்கிறதில்லையென்று குடியானவனைக் கேட்டால் "அவைகளுக்குச் சரியானபடி தீவனம் போடுவதற்குப் போதுமான தீனி இல்லையே! இதில் படுக்கைக்கு உபயோகப்படுத்த வைக்கோலுக்கு எங்கே போகிறது?"என்றுமாமூலாய்ச் சொல்லுகிறான். எருக்குவியல்களில் கலந்து காணப்படுகிற ஏராளமான கழி கூளங்களே இது சரியான முகாந்தரமில்லையென்பதற்குப் பலமுறை சாட்சியமாகும். ஏனென்றால் இவைகளையும் கோரைப்புல்லையும், களைப்புல்லையும், தழைகளையும் இன்னும் சகலவிதமான குப்பை கூளங்களையும் செத்தைப் படுக்கையாக உபயோகப்படுத்தலாம். தொழுவின் தரைமேல், காய்ந்த மண் தூவப்பட்டால் படுக்கைச் செத்தை ஜாஸ்தியாக வேண்டியிருக்காது.

முன் சொல்லியிருக்கிறபடி, தொழு எருவின் அதிக அருமையான பாகம் மாட்டு மூத்திரமே. சரியானபடி சேகரிக்கப்பட்ட உரத்தில் பூராவாகச் சாணமும், மாட்டுப் படுக்கைக்காக உபயோகப் படுத்தப்படுகிற செத்தையும் அடங்கியிருக்கிறது. அது செத்தையினாலும், நிலத்தின் விளைவைச் சாப்பிடுகிற பிராணிகளின் மல மூத்திராதிகளினாலும் ஆக்கப்பட்டதால் அது தானே நிலத்தைக் கொழுக்கப்பண்ணுகிற பூரணமான செழிப்பாளியாயிருக்கிறது. நல்ல உரத்தை உண்டுபண்ணுவதில் அந்தப் பதார்த்தங்களெல்லாம் ஒன்றோடொன்று நன்றாகக் கலந்திருப்பதுவும், அவைகளைச் சேகர்த்ததன் பிற்பாடு ஜாக்கிரதையாகப் பாதுகாப்பதுவும் முக்கியமான விஷயம். இப்படிச் செய்வதனால் இவைகளெல்லாம் அழுந்திச் சாவதானமாய் நன்றாக மட்கிவிடுகின்றன. தொழு எருவின் அருமை, அதில் நிலத்தைச் செழிப்பிக்கும் பொருள்களிருப்பதனால் மாத்திரமல்ல; அதை உபயோகிக்கும் நிலத்தில் அது உண்டாக்கும் மாறுதல்களினாலும் தெரியவரும். அம்மாறுதல்கள் அநேகமாக நாம் உபயோகிக்கும் உரம் எவ்வளவு மட்கியிருக்கிறதோ அதைப் பொருத்திருக்கின்றன. குடிகள் இருக்கும் நிலைமைக்கு ஏற்பச் செவ்வையாய்த் தொழு எரு உண்டாக்கும் விதம் கீழே விவரித்திருக்கிறது. இந்த விதமாய்ச்செய்வதில் சாணம், மூத்திரம் இவைகளைச் சில மாதங்களுக்குப் பிறகுதான் எருவேண்டியிருக்கும்போது அப்புறப்படுத்துவார்கள். பெய்த மூத்திரம், போட்ட படுக்கையில் சுவறியிருக்கும்.

மாட்டுத்தொழுவின் அடித்தரையைச் சுற்றி

ஒரு காசு கொடாதவன் ஒரு வராகன் கொடுப்பானா?

யிருக்கும் மட்டத்திற்கு இரண்டு அல்லது மூன்று அடி தாழ்த்தித் தரைக்கும் பக்கங்களுக்கும் களிமண் பூசவேண்டும். பிறகு தரையின்மேல் எப்பொழுதும் உதவும்படி கொஞ்சம் சாம்பல் தூவி தினந்தோறும் செத்தை குப்பைகளை மாட்டிற்குப் படுக்கையாகப் போடவேண்டும். மாட்டுக்கும் ஆளுக்கும் வேலையில்லாது சும்மாவிருக்குங்காலத்தில் தழை, கோரை முதலியவற்றைப் படுக்கைக்கென்று சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். ஆடுமாடுகள் தின்று கழித்த வைக்கோல் முதலியவைகளையும், விளைந்து அறுத்துத் தள்ளும்படியான பயிர் செடியின் பாகங்களையும், மணி நீங்கிய கதிர்களையும் படுக்கையாகப் போடலாம். ஓரிணை மாட்டுக்குத் தொழு 10-அடி நீளமும் 6-அடி அகலமும் இருக்கலாம். தொழுவின் எல்லாப் பக்கத்திலும் நடந்து எரு மிதிபடும்படி மாட்டை விட்டுவிடவேண்டும். எரு அழுத்தப்படாவிட்டால் சீக்கிரம் அழுகிக் கொதிப்புண்டாகிக் கெட்ட நாற்றம் வீசும்; மாட்டுக்கும் சௌக்கியம் குறைவுபடும். தினந்தோறும் காலைநேரத்தில் முதல் நாள் இராத்திரிப் போட்ட சாணத்தைச் சமமாய்த் தொழுவில் பரப்பி அதன்மேல் கொஞ்சம் படுக்கைச் செத்தையைத் தூவவேண்டும், இவ்விதமாய் மூன்று மாதத்திற்குள் பள்ளம் நிரம்பி எருச் சேர்ந்துபோம். படுக்கைச் செத்தையை அதிகமாய்ப் போட்டால் எருவின் தரம் குறைவதுமன்றி அதி சீக்கிரமாய் மட்கியும் போகும். எரு அதிகமாகக் காய்ந்து மெள்ள மட்கமாட்டாதாகையால் அதன் யோக்கியதை குறைந்துபோம். குழியில் போட்டிருக்கும் எரு முழுவதிலும் எப்பொழுதும் ஈரம் இருந்து கொண்டேயிருக்கவேண்டும். அதனால் நிலத்தில் தண்ணீர் நில்லாமல் வறட்சியுண்டாகும். எருவை அப்புறப் படுத்தும்போது எருக் குவியலில் எந்த இடத்திலாவது சாம்பல் நிறம் உண்டாயிருந்தால், எரு அந்த இடத்தில் அதி தீவிரமாய் மட்கினதற்கு அடையாளம். இதற்கு ஈரம் போதாமல் அதிகக் கொதிப்புண்டாவதே காரணம். படுக்கைக்கு இட்ட வைக்கோல் முதலியவை நீளமாயும் கெட்டியாயும் இருந்தால், சரிவர எரு மட்காது. ஆகையால் படுக்கைச் செத்தையைத் துண்டித்துப் போடவேண்டும். எருச் செவ்வையாய் மட்கியிராவிட்டால், எருவின் குணம் மண்ணுக்குக் கிடைக்காமல் பயிருக்கு எரு பயன்படுகிறதில்லை. எரு செவ்வையாய் உண்டாக்கினால் அது நிறம் கறுத்தும், மிருதுவாயுமிருக்கும். ஒரு கத்தியினால் வெட்டக் கூடியதாக முழுவதும் மட்கியுமிருக்கும். தொழுவிலிருந்து எரு வாரிக்கொள்ளும்போது மேலேயிருக்கும் மட்காத பாகத்தை ஒரு பக்கமாய் ஒதுக்கிவைத்துச் செவ்வையாய் மட்கின எருவெல்லாம் எடுபட்ட பிறகு ஒதுக்கின செத்தையை அடியில் பரப்பி முன்போலவே மேலும் எருச் சேர்க்கலாம்.

மேலே காட்டிய விதமாய் எரு உண்டாக்கினால் வருஷம் ஒன்றுக்கு மாடு ஒன்றுக்கு 5-முதல் 7-டன் * நிறையுள்ள எரு சேரும். சாணத்தை வெட்டவெளியில் அடர்த்தியின்றிக் குவித்துவைத்தால் அரை டன் எருவிற்கதிகம் அகப்படாது. எருவும் நல்ல எருவாகாது. மேலே காட்டிய விதமாய்த் தொழு எரு உண்டாக்குவதற்கு இரண்டு ஆக்ஷேபம் சொல்லுகிறார்கள். அவை.—

(1) இப்பேர்ப்பட்ட மாடுகளுக்கு நோய் உண்டாகின்றது

(2) படுக்கைச் செத்தை வெகு அதிகமாய் வேண்டியிருக்கின்றது

என்றவைகள்தாம். இரண்டாம் ஆக்ஷேபத்திற்கு நாம் சொல்லவேண்டியது ஒன்று உண்டு. தென் கன்னடத்தில் சிலபாகங்களில் குடியானவர்கள் மாடுகளுக்குப் படுக்கைக்கென்று புல் தழை முதலியவைகளை வெகு சிரமப்பட்டுச் சேர்க்கின்றார்கள். சில நாட்களுக்கு ஒரு தடவை எருவை அப்புறப் படுத்திப் பதிவான ஓரிடத்தில் கொட்டுகிறார்கள். வண்டிகள் குறுக்கும் நெடுக்குமாய் அதன்மேல் ஓடுவதால் செத்தை அமுங்கிப்போம். முதல்காட்டிய ஆக்ஷேபம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்லவென்று அநுபவத்தால் தெரிகிறது.

எந்த நியாயங்களையிட்டாவது மேலே காட்டியபடி எரு சேர்க்கமுடியாதானால் பின்வருமாறு செய்யலாம். மாட்டுத்தொழுவின் அடித்தரையைச் சமமாகக் கெட்டித்து ஒரு பக்கம் வாட்டஞ் செய்து, வாட்டமான ஓரத்தில் ஒரு கால்வாய் உண்டாக்கிவிட்டால் மாடுபெய்யும் மூத்திரமெல்லாம் கால்வாய் வழியாய் வடிந்தோடி வெளியில் ஒருமூலையில்வைத்திருக்கும் ஒரு பானையில் போய்விழும். வெளியில் ஒரு குழி தோண்டி அதன் அடித்தரைக்கும் பக்கங்களுக்கும் களிமண் பூசி அதன்மேல் ஒரு தாழ்ந்த சிறு கூரைக் கொட்டம் போட்டு வைத்து இந்தக் குழியில் தினந்தோறும் தொழுவத்துச் சாணத்தைக் கொண்டுபோய்ப் போடவேண்டும். கழித்த புல், செத்தை எது கிடைக்குமோ அதைக் குழியில்போட்டுஅதன் மேல் தினந்தோறும் பானையில் சேர்ந்திருக்கும் மூத்திரத்தை ஊற்றவேண்டும். சாணி, மூத்திரம், செத்தை இவையெல்லாம் சரிவரக் கலந்து செவ்வையாய் மிதிபட்டால் அவை ஒரே அளவாய் மெள்ள மெள்ள மட்கும்.

முன் கூறப்பட்ட எருக்குழியின்மேல் ஒரு சிறு பந்தல் போட முடியாவிட்டால், எருக் குவியலை மண்ணினாலாவது மூடவேண்டும். எருக்குவியல்களை மண்ணினால் மூடுவது மிகப் பிரயோஜனமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்வது அதிலுள்ள சாராம்சமான செழிப்புண்டாக்கும் பொருள்களை வீணாய்ப்போகாதபடி தடுக்கிறது. இந்த வழக்கம் திருநெல்வேலி முதலான சில இடங்களில் அதிக அநுகூலத்தோடு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. எருக் குவியலின் மேற்பாகங்கள் வறண்டுபோவதாயிருந்தால் அதை ஈரம் படும்படி மேல்கீழாகக் குவியல்களைக் கலக்கவேண்டும். பொதுவாகக் குவியல் கெட்டியாகிறதாயிருந்தால் வறண்டு போகாதபடி கொஞ்சம் ஜலத்தைத் தெளிக்கவேண்டும். எருக்குவியல்களை மூடுவதினால் அதை அதிகமாய் உலர்ந்துபோகாதபடி செய்கிறது. முழுக் குவியலும் சாவதானமாய்ப் பூராவும் மட்கி உரத்திலுள்ள செழிப்புண்டாக்கும். பொருள்கள் வீண்போகாமல் பாதுகாக்கப்பட்டு உடனே அதிக உபயோகமாகும்படி எருக்குவியலை ஈர சம்பந்தமான நிலையில் பாதுகாப்பது முழு நோக்காக இருக்கவேண்டும்.

* டன் என்பது சுமார் இரண்டுவண்டி பாரம்.

கல்விக் குறிப்புகள்
Educational Notes

மஹாமஹோபாத்யாயர். உ. வே. சுவாமிநாதையரவர்கள் பென்ஷன் பெறுதல்

சென்ற 39 வருஷங்களாகக் கும்பகோணத்திலும் சென்னையிலும் கவர்ன்மெண்டு காலேஜ்களில் தமிழ்ப்பண்டிதராக விருந்த மஹாமஹோபாத்யாயர், பண்டித ஸ்ரீமான் உ. வே. சுவாமிநாதையரவர்கள், மார்ச்சு மாதக் கடைசியில் பென்ஷன் பெற்றுக்கொண்டார்கள். ஸ்ரீமான் ஐயரவர்கள் நமது தாய்ப் பாஷையாகிய தமிழுக்குச் செய்திருக்கும் உபகாரம் அளவுபடுவதன்று. பழைய சங்க நூல்களில் பலவற்றை மிகச் சிறந்த உரைகளுடன் பதிப்பித்து வெளியிட்ட புண்யம் ஐயரவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது. அவர்களுடைய தமிழ்ப் பாண்டித்யத்தைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்ததற்கு அறிகுறியாக [illegible]ர்களுக்கு 'மஹாமஹோபாத்யாயர்' என்ற [illegible]வப்பட்டமும், ஸன்மானமும் 1905-ம் [illegible]ல் அளித்தார்கள். ஐயரவர்க[illegible]ளம், காட்சிக்கெளிமை, வாக்குச் சாதுர்யம், மனத்தூய்மை முதலியவற்றைப் பற்றி நாம் விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் விஷயத்தில் ஐயரவர்கள் தமது உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் அர்ப்பணம் பண்ணிய விஷயமும் நாடெலாமறிந்ததே. இனி, அவர்கள் பென்ஷன் பெற்றுக்கொண்டு நெடுங்காலம் அரோக திடகாத்திரராகவிருந்து தமிழுலகத்தைப் பெரிதும் பெருமைப் படுத்துவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

* * *

உபாத்தியாயர்களின் ஸபையின் நடவடிக்கைகள்.

சென்னை உபாத்தியாயர்களின் ஸபையைச் சேர்ந்த ஓர் மஹாநாடு நாளது மாதம் 15,22-உகளில் பச்சையப்பன் காலேஜில் நடந்தேறியது. நமது கவர்னர் அவர்கள் அம் மஹாநாட்டை ஆரம்பம் பண்ணினார்கள். வித்யா விஷயத்தில் சிரத்தை யெடுத்துழைக்கும் பிரமுகர்களும் உபாத்தியாயர்களும் அங்கு விஜயம் செ[illegible]தனர். கல்வி விஷயமான வியாசங்[illegible]

ாப் அங்கே இப்பொ [illegible] வேண்டும்.

படிக்கப்பட்டன. ஸபையார்கள் கூடித் தீர்மானித்த சில விஷயங்களை அபிமானிகள் அறியவேண்டுகிறோம்:—போதனா கலாசாலைகளில் பழகும் மாணவர்களுக்கு இப்பொழுதுள்ளதைக் காட்டிலும் அதிகமான வித்யா விர்த்தி கொடுபடவேண்டும்; ஸபையார், சென்னைக் கார்பொரேஷனுக்கு ஒரு பிரதிநிதியைத்தேர்ந்தனுப்பும் சுதந்தரம்பெறவேண்டும்; சட்டநிரூபண ஸபையில் இனி வித்யா விஷயம் விசேஷமாகக் கவனிக்கப்படுமாதலால் வித்யா விஷயத்தில் சிரத்தை கொள்ளும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத சிலர் பிரதிநிதிகளாக நியமனம் பெறவேண்டும்; நடுத்தரக்கல்விக்கும் சர்வகலாசாலைக்கும்நெருங்கிய சம்பந்தமிருப்பதால், நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் உள்ள சில உபாத்தியாயர்கள் ஸர்வகலாசாலை யங்கத்தினராக நியமனம் பெறவேண்டும்; பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் வேலைபார்க்கும் நேரம் குறைக்கப்படவேண்டும்; உபகாரத் தொகை கொடுப்பதில், பிரதமக் கல்வி உபாத்தியாயர்களுக்கு வருஷமொன்றுக்கு ரூ. 48 வீதமும்,லோயர் எலிமெண்டரி வகுப்பு உபாத்தியாயர்களுக்கு ரூ. 60 வீதமும், உயர்தர எலிமெண்டரி வகுப்பாருக்கு ரூ. 120 வீதமும் கொடுபடவேண்டும். ஸெகிண்டரிப் பள்ளிக்கூடங்களில் மேல் வகுப்புக்களில் சுய பாஷையிலேயே கல்வி போதிக்கும் முறையை அதிகமாக அனுஷ்டிக்கவேண்டும், என்பனவாம்.

*   *   *

பம்பாயில் உபாத்தியாயர்களுக்குப் பஞ்சப்படி

பம்பாய் மாகாணத்தில் விலைவாசிகள் அதிகப் பட்டதன் காரணமாக, குறைந்தசம்பளம் வாங்கும் உபாத்தியாயர்களுடைய கஷ்டதசையைக் கொஞ்சம்நிவர்த்திக்கும் பொருட்டு அவர்களுக்குப்பஞ்சப்படி கொடுக்கும்படி கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கின்றனர். முனிஸிபாலிடியாரும் லோகல் போர்டுகளாலும் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களிலும் இப்படிப்பட்ட பஞ்சப்படி கொடுபட வேண்டுமென்று நியமனமாகியுள்ளது. இவர்கள், பணச் செலவு ...ஜத்தால் எங்கே பஞ்சப்படி கொடுக்கா... விடுவார்களோ என்று கருதிய ...ண்டார் இவ்விஷயமாக நேரக்கூடிய செலவைத் தாங்களே ஏற்றுக் கொள்வதாகவும் முன் வந்துள்ளனர். இவ்விஷயம் நமக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. மற்றைய உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும், உபாத்தியாயர்கள் வறுமையாலும் கவலையாலும் சஞ்சலப் படாதபடி பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். பம்பாய் மாகாணத்தில் நடைபெறும் அகவிலை யேற்றமும் கருப்பும் நமது மாகாணத்திலு முள்ளன. ஆகவே, இங்கும் அப்படிப்பட்ட பணவுதவி உபாத்தியாயர்களுக்குச் சீக்கிரத்தில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமென எதிர்பார்க்கிறோம்.

*   *   *

1912-1917 வருஷங்களில் இந்தியக் கல்வி யபிவிருத்தி

வித்யா விஷயமான புரோவிருத்தியைப் பற்றிக் கவர்ன்மெண்டார் ஐந்து வருஷங்களுக்கொருமுறை ஒரு 'ரிபோர்ட்டு' வெளியிடுவது வழக்கம். அவ்வாறான ரிபோர்ட்டில் ஏழாவது 1912-1917 வருஷங்களைப்பற்றியது இப்போது வெளிவந்துள்ளது. அதிலுள்ள சாராம்சங்களை அபிமானிகள் அறியவேண்டுமென்னும் நோக்கத்துடன் இங்குக் குறிக்கின்றோம். பிரதமக் கல்வி விஷயத்தில் நமது நாடு நாகரீகம் முதிர்ந்த நாடுகளைக் காட்டிலும் வெகுதூரம் பின்னடைந்திருக்கின்றது. ஜன ஸங்கியையில் நூற்றுக்கு எத்தனைபேர் பிரதமக் கல்வியைக் கற்கிறார்களென்பது பின்வரும் விஷயம் தெரிவிக்கும்:

ஐக்கிய மாகாணங்கள்	20
இங்கிலாந்து தேசம்	17
ஜர்மன் ராஜ்யம்	16
பிரான்ஸ்	14
ஜப்பான்	13
இலங்கை	9
ருஷியா	4
ப்ரஸீல்	3
இந்தியா	2

இப்படிப் பிரதமக் கல்வி விஷயத்தில் நாம் பின்னடைந்திருப்பினும், உயர்தரக் கல்வி சம்பந்தப்பட்டமட்டில் நாம் அவ்வளவு கேவ நிலைமையில் இல்லை. இந்த ரிபோர்ட்டை... திய ஸ்ரீமான்,கனம் K. ஷார்ப் "இந்திய... ஒவ்வொரு விஷயத்திலும் மிதமி... எனப்படுகிறது. இதன் உண்மை

கும் ஜனங்களின் கல்வி விஷயத்தினின்றும் வெளியாகும். மத்திம தசையிலுள்ளவர்கள் இலக்கிய ஞானத்தைக் கற்றுக் கொள்பவர்களாயும், ஏழைகளில் ஒரு சிலரே எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டவர்களாயும், ஸ்திரீ ஜாதிகளில் பெரும்பாலும் அனைவருமே எழுத்து வாசனை யற்றவர்களாயு மிருக்கின்றனர்" என்று கூறுகின்றனர்.

*   *   *

ஸ்ரீங்கேரிப் பள்ளிக்கூடம்

மைசூர் ராஜ்யத்தில் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் வீற்றிருக்கும் புண்ணிய ஸ்தலமாகிய ஸ்ரீங்கேரியில் ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூட மிருந்தது. பரம வைதிகர்களாயும் நிஷ்டையுள்ளவர்களாயுமிருக்கும் அவ்வூர் ஜனங்கள் அந்தப் பள்ளிக்கூடத்தில் 'தீண்டாதவர்' சேர்ந்து படிக்கக்கூடாதென்று வாதித்து, தங்களுக்கென்றே ஒரு பள்ளிக்கூடத்தைச் சொந்தச் செலவில் ஏற்படுத்திக் கொண்டனராம். இப்படிச் செய்தது புரோவிருத்திக்கு இடையூறாகுமென்றும் ஸர்க்கார் பள்ளிக்கூடங்களில் எல்லாச் சாதியாரும் சேர்ந்து வாசிக்கப் பாத்தியம் பெற்றவர்களென்றும் மைசூர் ராஜ்யாதிகாரிகள் சொல்வதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், உயர்ந்தஜாதியார் ஏற்படுத்திக்கொண்ட பள்ளிக்கூடத்துக்கு, வித்யா இலாகா அதிகாரியின் அனுமதியை முன்னதாகவே பெற்றிருக்க வேண்டுமென்றும், அப்படிப் பெறாத குற்றத்திற்காக அந்தப் பள்ளிக்கூடத்திற்கு, மற்றைய பள்ளிக்கூடங்களுக்குக் கொடுபடும் உபகாரத் தொகையைப்போன்ற தொகை கொடுக்கப்படமாட்டாதென்றும் உத்தரவு ஆகியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். புதிய பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படும் கல்வி, அதிகார விரோதமாயாவது ஸன்மார்க்கத்திற்கு ஏற்றதாகாதபடியாவது இருந்தால், மேற்கூறிய உத்தரவு பொருத்தமானதாக விருக்கும். அப்படி நாம் ஒன்றும் கேள்விப்படவில்லை யாதலால், அதிகாரிகள் செய்த உத்தரவு நியாயமானதென்று நாம் நினைக்கவில்லை. கூடிய சீக்கிரத்தில் இந்த உத்தரவு ரத்தாகி விடுமென எதிர்பார்க்கிறோம்.

வஸந்த மந்திரம்

(286-ம் பக்கத் தொடர்ச்சி.)

Part II.

இரண்டாம் பாகம்

சலிப்பும்—சஞ்சலமும்

முதல் அத்தியாயம்

பாலைவனம்

வைசாகமாதத்தில் விடியற்காலம்: சுக்கிரன் உதயமாய்ப் பனை உயரத்துக்கு வந்து விட்டான். விடிய இன்னும் 4, 5, நாழிகை இருக்கலாம். பக்ஷிகள் எல்லாம் கூடுகளிலிருந்து கத்துகின்றன; ஆனால் இன்னும் வெளிப்புறப்படவில்லை. கோழி கூவும் சப்தம் காதில் விழுவதால் பக்கத்தில் ஒரு கிராமம் இருக்கின்ற தென்பது நிச்சயமாகின்றது. தூரத்திலிருந்து கேட்பது நாயின் அழுகைக் குரல்; நரியும் தோட்டங்களில் ஊளையிடுகின்றன. 'கிச்! கிச்' என்று கத்திக்கொண்டு வெளவால்கள் வேகமாய்த் திரும்பி வருகின்றன. காற்றென்பதே கிடையாது. மரங்களின் இலைகள் ஆட்டமில்லாதிருப்பதைப் பார்த்தால் ஏதோ மாயையால் ஏற்பட்ட பொய் மரங்கள் போல் தோன்றுகின்றன. நடு வானத்தில் சந்திரன் நிற்கின்றான். சற்றே மெல்லிய மேகம் அவனை மறைத்துக்கொண்டு நிற்கின்றது. கிழக்கு வெளுத்துவிட்டது. வானத்து நக்ஷத்திரங்கள், ஒவ்வொன்றாய் ஓடி ஒளிகின்றன.

மேற்சொன்ன சப்தங்களைத் தவிர வேறு மனுஷ்ய சப்தமே கிடையாது. தூரத்துக் கிராமத்திலிருந்து மட்டும் மெல்லிய புல்லாங்குழல் ஓசை சிறிது பொழுதிற்கு ஒரு முறை காதில் விழுகின்றது. எச்சிறுவன் விடியற்காலையில் எழுந்து அப்பியாசம் செய்கிறானோ தெரியவில்லை. முன்னால் இருக்கும் தோப்பில் ஒரு சத்திரம் கட்டியிருக்கிறது. அங்கே என்ன நிகழ்கின்றதென்பதை நாம் இப்பொழுது முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்.

ஒருசாண் காட்டிலே ஒரு முழத்தடி வெட்டலாமா?

தோப்பின் உள்ளே நுழைந்ததும், வெளிப்புறத்தை விடச் சற்றுக் குளிர்மையாய் இருக்கின்றது. இருட்டோ வெளிப்புறத்தை விட வெகு அதிகம். 10, 15 அடி முன்னே சென்ருல் இரண்டு பாதைகள் பிரிகின்றன. ஒன்று, வலது பக்கமாய்க் குதிரை லாயத்துக்குப் போகின்றது. மற்ருென்று சத்திரத்து வாயிலுக்குப் போகும் வழி. இவ்வழிகளின் இருபுறமும் செடிகள் அடர்த்தியாய் வளர்ந்திருக்கின்றன. அவை என்ன செடிகள் என்று இருட்டில் சொல்ல முடியவில்லை. சிலவற்றில் புஷ்பம் மலர்ந்து மணம் வீசுகின்றது. அங்குமிங்கும் "ஞொய்" என்று சுவர்க்கோழிகள் கத்திக்கொண்டிருக்கின்றன. குதிரை லாயத்தில் அசுவங்கள் இருக்கின்றனவென்பதும் புலப்படுகின்றது. ஏனெனில் 'டப்', 'டப்' என்று குதிரைக் குளம்புகளைப் கீழே தட்டும் சப்தமும், புல் தின்னும் போதே அப்பிராணி உறுமும் சப்தமும், காதில் படுகின்றன. ஒரு அறையில் சற்றே வெளிச்சம் தோன்றித் தோன்றி மறைவதால் அங்கே செல்வோம்.

அவ்வறையில் ஒரு ஆள் உட்கார்ந்து கொண்டு அடுப்பூதுகின்ருன். மேல் ஒரு சட்டியில் கொள்ளு வேகின்றது. அவன் "என்னடா இது பெருத்த தொந்தரவா இருக்குது : சுருக்கனு ஆயித்தொலச்சாத் தேவலே. தேகம் முழுதும் உருகுது வேர்வை விட்டு! அவன் தூங்கரான் கொரட்டை விட்டு. நேக்கு வந்தது பிராணனுக்கு! போது விடிஞ்சு போச்சு. இன்னும் ஆகல்லியே இந்தப் பாழும் வேலெ" என்று முணுமுணுத்துக்கொண்டே பானையைத் திறந்து, கொள்ளு வெந்து போயிற்ருவென்று பார்க்கின்ருன். வெந்து போனதென்று தெரிந்தவுடன் "இன்னும் சித்தை இருக்கட்டும் அடுப்பின் மேலேயே ; போய் எழுப்பலாம் அவனை. அப்பாடா என்ன சுகமாய் இருக்கிறது" என்று ஈரத் துண்டினுல் உடம்பின் மேலுள்ள வேர்வையைத் துடைத்துக் கொண்டான். உடனே வெளியே சத்திரத்துக்கு ஓடிப்போய், சத்திரத்துத் திண்ணையில் குதிரையின் போர்வைத் துணியைக் கீழே விரித்துப் படுத்துத் தூங்கும் மனிதனிடம் நின்றுகொண்டு "அடே அண்ணு! சித்திரா!" என்று கூவவே, அவன் "ஹாம்" என்று உடனே எழுந்தான். எழுந்தவன் "ஏ! தம்பி ஆச்சா எல்லாம். பல்லு விளக்கிக்கிட்டு, பொறப்படலாமா? பொழுது கிளம்பப்போவது போலிருக்கே! அடடே! வெள்ளி மீன் உச்சிக்கு வந்திடிச்சே! என்ன? எல்லாம் ஆச்சா? பளிச்சென்னு சொல்லு தம்பீ" என்ருன்.

"அண்ணே! ஆகாட்டால் இப்போ வந்து எழுப்புவாங்களா தெரியில்லையா?"

"சரி தம்பீ! ஆனுல் எல்லாம் சுருட்டிக் கட்டு" என்று, இருவரும் துணிகளை எடுத்துக்கொண்டு, லாயத்தை நோக்கிப் புறப்பட்டனர். அங்கே சென்றதும், தூங்கியெழுந்தவன் திடுக்கிட்டு "எங்கடா என் குதிரை?" என்று சுற்று முற்றும் பார்க்க, மற்றவன் "அறுத்துக்கொண்டு போய் அதோ மேயறது. புடிச்சுக் கொண்டுவா" என்ருன். அவன்போய்க் குதிரையை ஓட்டிக் கொண்டு வருவதற்குள், கொள் முதலிய சாமான்களையும், துணி துண்டு மூட்டைகளையும் ஒழுங்காய்க் கட்டிப் பிரயாணத்துக்கு சித்தப்படுத்தினுன். காலதாமதம் செய்யாமல் இருவரும் குதிரை யேறிப் புறப்படவே, வழியில் "என்னடா தம்பி! ஏமாங்கா! இப்படியும் நமக்குத் தொந்தரவு வருமா? இந்தக் கோடை காலத்தில் தண்ணியில்லா மார்க்கத்தில் பரதேசிகள்போலப் போக வேண்டியிருக்கே! அதைச் சொல்லடா தம்பி!" என்ருன் சித்திரன்.

"அண்ணே சித்திரா! என்னத்தைச் சொல்லறது. ஆச்சு எல்லாம். இன்னிக்கு மத்தியானம் போயிட்டால் பரவாயில்லே யென்னல்லவா சொன்னுங்கோ. பாக்கலாம். புறப்பட்ட பின்னே போய்த்தானே தீரணும்! நீயோ பெரிய சிப்பாய் என்னல்லவா பேரு! அதுக்கே உன்னை அனுப்பினுங்கோ!"

"நம்ம ராஜா விஷயத்துலே வேலை செய்யப் பின் வாங்கிடுவேன் என்னு எண்ண வேண்டாம்! அதில்லே: அது எப்போதும் இல்லே. பின்னே என்னன்னுக், கால் வழி நடக்கக் கூடவில்லே. இன்னும் சூரியன் புறப்படவில்லே வேர்வை கொட்டரது. இலையாவது ஆட்ரதா பாரேன்."

"இப்பொழுது கஷ்டப்பட்டால் பின்னே சுகம் தானே. அது தெரியில்லையா? கல்யா

ஒருநாளும் சிரிக்காதவன் திருநாளிலே சிரித்தான், திருநாளும் வெறு நாளாயிற்று.

ணம் நிச்சயமாய் விட்டால் அப்புறம் உன் பாடு கேப்பானேன். பாட்டுக் கச்சேரி—"

"ஏன்தம்பி! மானத்தை வாங்ருய்! பாட்டுக் கச்சேரியாவது கீட்டுக் கச்சேரியாவது? ஒண்ணும் தலைகால் தெரியாமலிருக்குது: கலியாணமே நடக்குதோ இல்லையோ—"

"ஏன் அண்ணே அப்படிச் சொல்லருய்! நாம் போறதே அதுக்கில்லையா?"

"எதுக்குன்னு யாருக்குத் தெரியும் ஏமாங்கா? ஒருத்தரிடத்திருந்தும் நிச்சயம் தெரியவில்லே. நாமும் கடுதாசிகொண்டு போறமே தவிர சமாசாரம் இன்னதென்று தெரியாதே. ஊரில் பேசிக்கொள்வது நாலாவிதமாய் இருக்குது."

"ஆமாம்! அதுக்கென்ன தடை? நாம் புறப்படர அன்னிக்குக்கூட ஒரு பாப்பான் ஆத்தாங்கரையிலே 'கல்யாணம் நடந்தபோது பார்ப்போம்' என்னல்லே. ஜோதிபுரிக்குப் போனுல் தெரியுமே எல்லா விஷயமும்."

"அங்கதான் என்ன தெரியப்போறது. ஜயபாலராஜனே சம்மதப்படவில்லே என்னு சிலர் சொல்லரு ; நமக்கென்ன தெரியுது"—பாடுகின்ருன்.

இவர் இருவரும் இன்னுர் என்று படிப்போரும் கேட்போரும் அறிந்துகொண்டிருக்கலாம். என்ன விஷயமாய் ஜோதிபுரிக்குப் போகிருர்கள் என்பது அவர்களுக்குத்தெரியாவிடினும், நமக்குத் தெரியுமல்லவா! பிரதாபசிங்கன் தனது மந்திரியுடனும் இராணியுடனும் ஆலோசனை செய்தபின், அதன்படி ஜயபாலனுக்கு நடந்த விபரமெல்லாம் எடுத்துச் சொல்லி, அவனது துணையை வேண்டி தூதனுப்பி யிருக்கின்ருன். நமது பழைய சினேகிதரான ஏமாங்கதனும் சித்திரக்கிரீவனும் கடிதத்துடன் ஜோதிபுரிக்குச் செல்லுகின்றனர். இவ்விஷயம் தன் எண்ணப்படி நடக்கும் வரையில் ஒருவருக்கும் தெரியக்கூடாதென்று வெகு இரகசியமாய் வேலை செய்கின்ருன் பிரதாபசிங்கன். லலிதைக்குக்கூட நடந்த விஷயங்கள் முழுவதும் தெரியவராது. ஆனுல் இவ்விதமான இரகசியங்களுக்கு எப்படியாவது கால்முளைத்து விடுகின்றதல்லவா? விதம் விதமாயும் விசித்திரமாயும் விஷயத்தை மாற்றித் தமது மனோயுக்திக்குத் தக்கபடி 'சிட்டாக்கட்டி' வெளியில் அனுப்புவதற்கு எவ்வளவு கெட்டிக்காரர்கள் இல்லை. உலகத்தில் ஒரு காரியம் நிறைவேறுவதற்குள் பதினுயிரம் விதமாய்க் கிளைகளுடன், எதிர்பாராதபடி யெல்லாம் புறப்பட்டுவிடுகின்றது. கல்யாணம் என்ருல் 'பெண் கொஞ்சம் நொண்டி,'யென்று ஒரு அபவாதம் புறப்படுகின்றது. இரண்டொரு நாளில், அப்பெண்ணுக்கு அடிக்கடி மூர்ச்சை போட்டுவிடுகின்றது: ஒரு முறைநானே பக்கத்திலிருந்தேன்; மருந்துகூடக் கொடுத்தேன், என்று ஒரு மஹாப்பிரபு வீண்வார்த்தை கிளப்புகின்ருன்! பெண்ணுக்குப் பொய் ஜாதகம் எழுதி வைத்திருக்கிருர்கள், என்று சில சமயங்களில் சொல்லிக்கொள்ளுகிருர்கள்! பிள்ளைக்குக் கொஞ்சம் காது மத்தியமம் என்று யாரோ சொன்னதை, யாரோ கேள்விப்பட்டதாக, ஊரெங்கும் சமாசாரம் பரவுகின்றது. இப்படிப்பட்ட விசித்திரமான உலகில் வெறும் வாயை மெல்லுகின்றவர் ஒரு வாய் அவல் கிடைத்தால் விடுவார்களா? அதுவும் அரசன் அரண்மனையில் எத்தனை சேவகர்கள்! எத்தனை சேடிகள்! அவர்களுக்கு எத்தனை உறவினர்கள்! அவர்களுடன் அன்பு பாராட்டும் ஆண்பெண் பாலர்கள் எத்தனைபேர்! இப்படியிருக்க, ஊசியளவான விஷயம் படிப்படியாய்ப் பனையளவாகி வெளிப்புறப்படு மென்பதில் தடையென்ன! தர்பாரில் பாட்டுக்கச்சேரி நடந்ததும், கல்யாணத்துக்குப் பிரயத்தனம் செய்ததும், சிந்து பாக்ஷாவினிட மிருந்து தூது வந்ததும், அத்துருக்கச் சிப்பாய் உளறிக்கொட்டியதும், இப்பொழுது கல்யாண தடபுடல் சற்று நிதானமாய் நடப்பதும்,—இவற்றை ஒன்று கூட்டிப் பார்த்தால் எத்தனை விதமாய் ஊகிக்க வழியிருக்கின்றன! நமது வீரர்களான ஏமாங்கதன், விசித்திரவீரியன், இவர்கள் காதில் விழுந்தது ஒருவிதமான கதை அவ்வளவே: உண்மைமட்டும் தெரிந்தால், இந்த வெயிற் காலமில்லை, நெருப்பின் வழியே நுழைந்து போய்த் தேவலோகத்தை எட்டிவரவேண்டுமென்ருலும் பின்வாங்காமல் ராஜபக்தியுடன் ஒரு கை பார்த்தே வருவார்கள்.

விடிந்து 7, 8 நாழிகை ஆயிற்று. வெயிலின் கடுமை 15, 18 நாழிகை போலிருக்கின்றது. வழியில் ஒரு நீரோடையைக் காணவே

ஒருபானை சோற்றுக்கு ஒன்றே மாதிரி.

அவ்விடத்தில் இறங்கிக் குதிரைகளைக் கட்டிவிட்டு அவற்றிற்குக் கொள் முதலிய ஆகாரங்களைக்கொடுத்துவிட்டு, நீரண்டை உட்கார்ந்து சோற்று மூட்டையை அவிழ்த்தனர். ஜலத்தை வாயில் விடவே, உப்பு இவ்வளவென்று சொல்லி முடியாது; எப்படிக் குடிப்பது அந்தத் தண்ணீரை! ஏதோ வயிற்றுக்கு ஆகாரம் மட்டும் உட்கொண்டு மறுபடி புறப்பட்டனர்.

வெயில் அதிகரித்து விட்டபோதிலும் உச்சிப்பொழுதுக்குள் ஏதாவது ஒரு கிராமத்தில் போய்த் தங்கலாம் என்று எண்ணியிருந்தனர். ஆனால் வழி தப்பி வனாந்தரங்களின் உள்ளே நுழைந்து விட்டனர் என்ற சங்கதி அவர்களுக்குத் தெரியவில்லை. குதிரைகள் களைதீர்ந்து வேகமாய் ஓடுகின்றன. நாழிகை படிப்படியாய் ஏறுகின்றது. ஊரையும் காணோம்: குளத்தையும் காணோம்: வரவர மலைப்பாங்கான வழிகள் அதிகரிக்கின்றன. நிற்பதற்குக்கூட நிழல் கிடையாது. மரமென்ற பெயரே, சுற்றுப் புறங்களில் கிடையாது. வறண்டுபோன புற்களும் நாணல்களும் வழியை அடைக்கின்றன. குதிரைகள் போவதால் கலைக்கப்பட்டு நாணல் விதைகள் பறந்து வந்து கண், மூக்கு, வாயெல்லாம் புகுந்து கொள்ளுகின்றன. தாகத்தாலும், வெயிலின் கொடுமையாலும், இரண்டு வீரரும் களைத்துப் போய்விட்டனர். குதிரைகளைத் துரத்திக்கொண்டு வந்தபடியால் அவற்றின் வாயில் நுரை தள்ளுகின்றது. மயங்குகின்றனர் இருவரும்!

ஏமாங்கதன் "அண்ணா, இந்தக் காடுதான் நமக்குச் சுடுகாடு:.இன்னும் ஒரு நாழி இப்படி வழி நடந்தாக்கால் நாம் உயிரை விடறது நிச்சயம்—எனக்கு நா வறண்டுபோகிறது—இனி சாத்தியப்படாதப்பா—என்ன செய்வேன்."

சித்திரக்கிரீவன் "மயங்காதே தம்பீ! உயிரைச் சற்று பிடித்திரு: வழிதப்பிட்டோம் என்று தோண்றது. இதோ இருக்கிற குன்றின்பேரில் ஓரே தாவாய்த் தாவி சுற்றிலும் பார்க்கிறேன். ஏதாவது குடிசை தென்படாதா சுவாமீ!" என்று குதிரையைவிட்டுக் குதித்து, குன்றில் ஏறிச் சுற்றிலும் பார்த்தான். கிழக்கு, வடக்கு, மேற்கு, மூன்று திக்கிலும் ஒன்றும் புலப்படவில்லை. நாணல் காடுதான் கண்ணுக் கெட்டியவரையில். தெற்கே ஒரு பள்ளத்தாக்கு: அதன் நாற்புறமும் உயரமாய் இருக்கின்றன. நடுப்பாகம் தென்படவில்லை. அதன் மத்தியில் 4, 5 மரங்களும், சில செடிகளும் இருப்பதாகத் தோன்றியபடியால், அவற்றினடியே வெயிலைக் கழிக்கலாமென்று எண்ணிக் கீழேகுதித்து ஏமாங்கதனிடம் வந்து "தம்பீ! தைரியமாய் இரு: நாம் வழிதப்பிவிட்டோம் என்பதில் சந்தேகமில்லை. அங்கே ஒரு இடம் இருக்குது: அங்கே நிழலில் தங்குவோம். போவோம் வா அங்கே: அரை நாழியில் போயிடலாம். வெயில் தணிந்ததும் மேலே யோசிப்போம். விடு குதிரையை" என்று தானும் குதிரைமீதேறிப் புறப்பட்டான். மலையைச் சுற்றிக்கொண்டு தத்தளித்து, அரை நாழிகையில் அவ்விடம் சென்றனர்.

மலைகளின் நடுவேயிருந்த அந்தப் பள்ளத்தாக்கிலேயே நாற்புறத்து ஜலமும் ஓடிவரும். கிழக்குப் பக்கமும் உயரமாய் இருந்ததால் மழைநீர் தங்கி அப்பள்ளத்தாக்கு ஒரு பெரிய ஏரியாய்விடும். அப்படியினின்று அவ்விடம் தணிந்து தண்ணீர் ஓடிப்போக ஒரு வாய்க்கால்போலிருக்கின்றது. அவ்வழியாய் ஜலமெல்லாம் வடிந்துபோகின்றது. மழைக்காலத்தில் அவ்வாய்க்கால்வழியாய்ஜலம் ஓடிக்கொண்டிருக்கும். பக்கத்து வனாந்திரங்களில் உள்ள மிருகங்களெல்லாம் அவ்விடத்துக்கு வந்துதான் தண்ணீர் அருந்தும். அதுபற்றி அவ்வோடைக்கு "மிருகதீர்த்தம்" என்று பேர். இதன் நடுவே நன்றாய் முதிர்ந்த வாழைமரம் நாலைந்தும், பலாசமரம் நாலைந்தும், ஆகாயத்தை அளாவி வளர்ந்திருக்கின்றன. நடுவே சில விடங்களில் புதராய்ச் சில செடிகளும் கொடிகளும் முளைத்திருக்கின்றன. மரங்களின் வேர்களுக்கு நடுவே 'ஜிலு, ஜிலு' வென்று ஒரு சிறிய ஊற்று ஓடிவருகின்றது. அவ்வூற்று சுமார் 10, 15 அடி தூரம்தான் வெளியே தெரிகின்றது. அதற்குப் பின் தென்படுகிறதில்லை. பாறைகளின் கீழே ஓடும் ஜலம் இந்த இடத்தில் சற்று வெளிக்கிளம்பி 10,15 அடிதூரம் ஓடிய பின்னர் மறுபடி பாறைகளில் மறைந்துவிடுகின்றது. புதிதாய் வந்தவர்கள் சப்தத்தைக்கேட்டு ஊற்றைத் தேடவேண்டுமே

ஒருபிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு, நாலுபிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு.

யன்றி நேரில் கண்ணுக்குப் புலப்படுவதாய் இல்லை.

பள்ளத்தாக்கை நெருங்கினதும் குதிரைகள் கனைக்க வாரம்பித்தன. ஏமாங்கதன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு வருகின்றான். மரத்தடியில்வந்ததும் குதிரையினின்றும் இறங்கினான். அவ்வளவுதான். வெட்டித் தள்ளின மரம்போல் சாய்ந்து விட்டான். தேகத்தைச் சுடுகின்ற பாறையின்மேல் ஓரே அடியாய் நீண்டுவிட்டான். சித்திரக்கிரீவனும் உடனே குதித்து ஏமாங்கதனை வாரியெடுத்து மரத்தடியில் கொண்டுபோய்ப் படுக்க வைத்தான். ஜலத்தின் ஓசை காதில் பட்டது. ஓடினான் அவ்விடத்திற்கு! அங்கு ஓடும் ஜலத்தைக்கண்டதும் இரண்டு கைகளிலும் வாரிக்கொண்டு ஓரே ஓட்டமாய் ஓடி ஏமாங்கதன் முகத்தில் இறைத்தான். அவனும் சற்றுக் கண்விழிக்கவே, அவனை மெதுவாய் எடுத்து நிறுத்தி ஜலத்தண்டை அழைத்துச் சென்றான். இருவரும் திருப்தியாகும்வரையில் அவ்வமிருதத்தைப் பானம் பண்ணினார்கள்.

அமிர்தமல்லவா அவர்களுக்கு அந்த ஜலம்! அவர்களைப்போல் நாமும் கஷ்டம் அநுபவித்திருந்தால்தான் தெரியும், நமக்கும் ஜலத்தின் அருமை! ஜலத்தின் மகிமை எத்தனையோ பேர்களுக்குத் தெரிவதில்லை! என்ன விருந்தால் என்ன? ஜலமில்லையேல் ஒரு பொருளினாலும் நமக்குப் பிரயோசனமில்லை, எல்லாப் பிராணிகளுக்கும் ஜலம் அவசியம் வேண்டியிருக்கின்றதென்பதைக் காட்ட, இரண்டு குதிரைகளும் இவர்களைத் தொடர்ந்து ஜலத்தருகேவந்து குடிக்கத் தொடங்கின. அந்தப் பத்தடி தூரத்தில் எத்தனை பக்ஷிகளும், ஓணான்களும், ஜலம் குடிக்கின்றன!

தாகத்தின் கொடுமையை ஜனங்கள் கவனிப்பதில்லை. தாகம் தணிந்தபின்பே பயம் தோன்றுகின்றது. ஆகையால் மனிதர்கள் இருப்பினும் கவனியாது ஜலம் அருந்திப் பின் பயம் தூண்டப் பறந்துபோகின்றன அப்பறவைகள். சற்றுக் களைப்புத் தீரவே ஏமாங்கதன் எழுந்து நின்றான். பிறகு ஆடைகளைக் கழற்றிவிட்டு ஸ்படிகம்போல் நிறமின்றி,மந்தமான சப்தத்துடன் ஓடும் அந்நீரில் மண்டியிட்டு உட்கார்ந்து அந்நீரால் தன்தலை தேகம் எல்லாவற்றையும் நனைத்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினான். சித்திரக்கிரீவனும் ஸ்நானம் செய்தபின்னர், இருவரும் கொஞ்சம் உணவுண்டு மரத்தடியில் படுத்துத் தூங்கினர். குதிரைகள் மட்டும் அவ்விடத்திலேயே மேய்ந்துகொண்டிருந்தன.

இரண்டாம் அத்தியாயம்

மந்திராலோசனை

மேற்சொன்ன விஷயங்கள் நடந்து மூன்று நாள்கள் ஆய்விட்டன. ஜோதிபுரியில் ஸ்நானகட்டத்தில் இரண்டு பிராமணர்கள் வெகு விரைவாய் ஸ்நானமுடித்து, ஸந்தியாவந்தனம், சூர்ய நமஸ்காரம், இவை ஆனபின்னர் பேசிக்கொண்டிருக்கின்றனர். ஒருவர் "சுந்தரமூர்த்தி! ஏன் இன்னும் நமது வண்டி வரவில்லை? ஐந்து நாழிகைக்குள் மந்திராலோசனை சபைக்கு வரவேண்டுமென்று சிதானந்தர் நேற்று இராத்திரியே சொல்லி யனுப்பினாரே! உமக்கும் வந்ததல்லவா சமாசாரம்?" எனக் கேட்டார்.

சுந்தரமூர்த்தி "இல்லாவிட்டால் இத்தனை அவசரம் என்ன? எல்லாம் முடிந்துவிட்டதே. அதே சமாசாரந்தான் என் மனதிலும் இப்பொழுது தொந்தரவு செய்துகொண்டிருக்கின்றது. சிதானந்தர் நம்மை இதுவரையில் காலைவேளையில் அழைத்ததே கிடையாது. பிரதானிகளாகிய நமக்கு என்னவேலை இருக்கக் கூடும் காலை வேளையில்?" என்றார்.

"சமாசாரம் என்னவோ நிச்சயமாய் எனக்கு விளங்கவில்லை. நேற்று சாயுங்காலம் பிரதாபசிங்கரிடமிருந்து மறுபடி ஆள் வந்ததாகச் சமாசாரம். அவ்விஷயமாய் ஏதாவது தீர்மானம் செய்யவேண்டியிருக்குமோ என்னவோ தெரியவில்லை. கல்யாண சமாசாரத்தைப்பற்றியும் விவரம் ஒன்றும் தெரியவில்லை.—"

"விசுவநாதரே! நான் சொல்வதைக் கேளும்! காலத்தின் விபரீதம் சொல்லமுடியாது. ஏதோ துலுக்கருடைய இடையூறு வரும்போல் தோன்றுகின்றது. ஏன் ஒளித்துப் பேசவேண்டும்? துலுக்கன் என்னவோ கேட்கிறானாம்! பிரதாபசிங்கர் பெண்வேண்டுமாம் அவனுக்கு! என்னவோ சொல்லிக்கொள்ளுகிறார்கள் உலகத்தில்!-நாம் என்னத்தைக் கண்டோம் என்ன? எல்லாம் அப்படியப்படி இருக்கின்றது—!'

"இருக்கலாம்: இருக்கக்கூடும். அதன் பொருட்டே பிரதாபசிங்கரிடமிருந்து தூதர்கள் வந்திருப்பதும் நியாயமே! முன்

ஒரு புத்திரன் ஆனாலும் குருபுத்திரன் ஆவானா?

இராமேசர் வந்தபொழுது ஏதோ கல்யாணம் நடக்குமென்று சொன்னூரே ஒழிய; மற்ற விஷயங்களை இராஜாவும் மந்திரியும் இரகசியமாய் அடக்கிவிட்டார்கள்போல் தோன்றுகின்றது. முகூர்த்தம்கூடச் சீக்கிரம் வைக்க வேண்டுமென்று ஜோஸ்யரைக் கூப்பிட்டுப் பார்த்ததில் மிதுன மாதம் இரண்டாவது வாரத்தில்தான் முகூர்த்தம் இருக்கிறதென்றும், அதற்குமுன் இல்லை யென்றும் சிதானந்தர் அரசனுக்குத் தெரிவித்ததாகச் சமாசாரம் கேள்விப்பட்டேன்."

"ஆனாலும் பிரதாப சிங்கருடைய ஆள்கள் நேற்றுவருவதும், இராத்திரியே மந்திரி நமக்கெல்லாம் சபைக்குவரும்படி சொல்லியனுப்புவதும்,—"

"ஆம்! ஆம்! எனக்கும் சந்தேகமாய்த்தான் இருக்கின்றது—எல்லாம் சபைக்குப்போனால் தெரிகின்றது — இதோ வண்டி வந்துவிட்டது—எப்படியிருந்தாலும் இராமேசர் வந்து, சுமார் ஒரு வாரம் தானே ஆகின்றது. அதற்குள் மறுபடி உதயபுரியிலிருந்து சமாசாரம் வருவதென்றால்—என்னவோ அப்பா, ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம்! உமது வண்டி இன்னும் வரவில்லையே: ஏன் காக்கவேண்டும்? இவ்விடத்தில் ஏறும் வண்டியில்; உம்மை வீட்டில் இறக்கிவிட்டபின் நான் வீட்டுக்குப் போகிறேன்."

இருவரும் வண்டியில் ஏறுகின்றனர். விசுவநாதர் "அடே! வண்டியைக் கடைவீதி மேல் ஓட்டி, சுந்தரமூர்த்திகள் வீட்டிற்கு விடு! பிறகு வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு போகலாம்" என்றார். வண்டி புறப்பட்டது.

இவர் இருவரும் ஜயபாலனுடைய மந்திராலோசனை சபையைச் சேர்ந்தவர்; பிராமண உத்தமர்; வேதம் ஓதி, சாஸ்திரம் கற்று, இராஜ நீதி, இராஜ தந்திரம், மனுஸ்மிருதி முதலான சட்டங்களில் பயின்றவர். இம்மாதிரி கற்றும் கேட்டும், தேர்ச்சி பெற்றோர் பன்னிரண்டு பேர் இராஜசபையின் அங்கத்தவர். அவர்களைக் கேட்டே முதலில் அரசன் எவ்விஷயத்தையும் தீர்மானம் செய்வது: இப்பன்னிரண்டு பேர்களும் ஆமோதித்த பின்பே, விஷயத்தை, பிரபுக்கள், இராணுவத்தலைவர், பெரிய உத்தியோகஸ்தர்—இவர்களால் ஆக்கப்பட்ட ஆலோசனை சபையின் முன் கொண்டுபோவது வழக்கம். அதன் பிறகே, ஒவ்வொரு சங்கதியும் சாதாரண ஜனங்களுக்கும் வெளியூராருக்கும் தெரியவரும்.

சபையோர் பன்னிரண்டு பேர்களும் வந்து கூடிவிட்டனர். மந்திரி சிதானந்தரும் அரசனும் வருகின்றனர். எல்லாரும் எழுந்து மரியாதை செய்ய, முதலில் அரசன் உட்கார்ந்த பின் அனைவரும் தத்தம் ஆஸனத்திலமர்ந்தனர். அரசன் மந்திரியை அழைத்து "ஐயா சிதானந்தரே! பிரதாபசிங்கருடைய கடிதத்தைச் சபையோர்முன் படியும்! அனைவரும் கேட்கட்டும், என்ன செய்யவேண்டு மென்பதைப் பிறகு யோசிப்போம்" என்றான்.

சிதானந்தர் படிக்கின்றார்:—"இராஜாதிராஜனும் உலகம் புரக்கும், தன்னிகரில்லாச் சூரிய குலத்தில் உதித்த என் மருமகன் ஜயபால ராஜனுக்கு ஸர்வா பீஷ்டமும் பெருகுவதாக—...முன் இராமேசரிடம் சொல்லியனுப்பிய ஸங்கதிகளுக்கு நாளது வரையில் பதில் கிடைக்கவில்லை, விஷயம் முக்கியமானதென்பதைக் கருதி மறுபடியும் ஞாபகப்படுத்துகின்றேன். தினமும் எதிர்பார்க்கும் துருக்கருடைய தொந்தரவு இராஜஸ்தானத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் நாளடைவில் வரக்கூடியதே யல்லவா? வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டியது அவசியமென்று, உன்னைப்போன்ற புத்திசாலிகளுக்கு எடுத்துரைக்கத் தேவையில்லை. என் வலக்கை போன்று, என்றும் உதயபுரியைக் காக்க சித்தமாயிருக்கும் உன் உதவியைக் வேண்டாமல் இன்னும் வேறு யாருடைய உதவியை யான் எதிர்பார்ப்பது! கல்யாண விஷயத்——"

அரசன் "இனிப் படிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஐயன்மீர்! உங்களுக்கு சற்று விஷயத்தைத் தெளிவாய்த்தெரியபடுத்தவேண்டியதவசியம் முன்னால் நாம் பிரதாபசிங்கரின் புத்திரியின் விவாகத்தைக் குறித்து நமது அபிப்பிராயத்தை இராமேசர் மூலமாய் உதயபுரிக்குத் தெரிவித்தோமல்லவா? அதே சமயத்தில் சிந்து நாட்டுச் சுல்தான் ஆமத்பாக்ஷா, அதே கன்னிகையை மணக்க எண்ணம் கொண்டு தூதனுப்பினனும். அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்காவிடில், அவனை உதயபுரியின்மீது படையெடுத்துவர அழைப்பது போலாகுமென்று எண்ணி, தந்திரமாய் அவன் வேண்டுகோளுக்கு ஒப்புக்கொள்வது போல் சொல்லியனுப்பிவிட்டு, அவனுடைய தூதர்கள் போனவுடன், சேனைகளைச் சித்தம் செய்துகொண்டு, தப்பாமல் துருக்கர் படையெடுத்துவருவார்கள் என்றெண்ணி, நமது உதவியைக் கேட்கின்றார். கல்யாணம் சீக்கிரம் நடத்திவிடவேண்டுமென்கின்றார். கல்யாணம் நடந்துவிட்டால் அதன்பின் இருதிறத்தார் சேனையையும் ஒன்று கூட்டித் துருக்கப்படையை வென்று ஜயமாலை சூடவேண்டுமென்பது அவரது அபிப்பிராயம். இம்மாதிரியே முன்னர் இராமேசரிடமும் சொல்லியனுப்பினார்.

இனி நமது இராஜாங்கத்தில் நடந்தவற்றைச் சொல்லுவோம். விவாகத்துக்குத் தக்க முகூர்த்தம் பார்த்துச் சொல்லியனுப்பலாம் என்று நினைத்துச் சற்று தாமதம் செய்தோம். இந்தமாதத்தில் கலியாண முகூர்த்தம் கிடைக்கவில்லை. நமது தாமதத்தைப் பார்த்து, நமது தூதர்கள் புறப்படுவதற்குள்ளாகவே மறுபடியும் சங்கதி சொல்லியனுப்பிவிட்டார். நாம் இனி உதயபுரிக்கு உதவியனுப்புவதை உத்தேசித்து எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்பதைச் சபையோர் எடுத்துரைப்பாராக."

விசுவநாதர் "அரசே! ஜோதிபுரியரசர்கள் இதுவரையில் இளைத்தோருக்கு உதவிசெய்யப் பின்வாங்கினவர்களல்லர். இப்பொழுதோ பிரதாபசிங்கர் அநியாயமாய்ப் பிறரை எதிர்க்கவாவது, பிறர் நாடுகளைக் கவரவாவது, எண்ணினவர் அல்லர். நமது நாட்டிற்கும் மதத்திற்கும் காமக்கேட்டினால் புத்தி மயங்கி எதிரிகளாய் வந்து முளைத்திருக்கும் மிலேச்சர்களுடன் சண்டைசெய்யுங்கால் அவர் செய்வது தர்மயுத்தமே யல்லவா? அம்மஹமதியன் பிரதாபசிங்கிரின் புத்திரியை அடையவிரும்புவது பெரிய தப்பல்லவா? நமதரசனுக்கு லலிதாதேவியை விவாகம் செய்வது இப்பொழுதேநடப்பதாயினும் சரி, இனிச் சற்று தாமதம் ஆவதாயினும் சரி. உதயபுரிக்கு உதவிச் சேனையை அனுப்பவேண்டியதல்லவோ நமது கடமை. மற்றச் சபையோரும் அப்படியே அபிப்பிராயப்படுவார்கள் என்று எண்ணுகிறேன்" என்றார்.

சுந்தரமூர்த்தி "அரசே! பிரதாபசிங்கருக்கு உதவி செய்வதில் எனக்கும், என்போலியர்களுக்கும் ஆக்ஷேபம் இல்லையானாலும், நமது சேனையில் இப்பொழுது எத்தனைபேர் யுத்தம் செய்யத் தயாராய் இருக்கின்றார்கள் என்றும், எத்தனைபேர் நமது தேசத்தைக் காக்க அவசியமாய் வேண்டுமென்றும், சௌகரியமாய் நாம் எத்தனை வீரர்களை உதயபுரிக்கு அனுப்ப அநுகூலமாய் இருக்குமென்றும், தெரிந்தாலல்லாமல், நமது அபிப்பிராயத்தை வெளியிடமுடியாது. சேனைத்தலைவரை அழைத்து, அந்த விவரங்களை விசாரித்தபின்புதான் உதவியனுப்பவேண்டிய விஷயத்தைத் தீர்மானம் செய்யவேண்டும்" என்றான்.

சேனைத்தலைவரை அழைத்து விசாரித்ததில், மொத்தம் சேனைவீரர் 20,000 என்றும், 8,000 பேர் எல்லையைக் காத்துக்கொண்டும், 3,000 பேர் சுற்றுப்புறங்களில் வேலை செய்துகொண்டும், 1,000 பேர் வியாதியஸ்தர்களாய் யுத்தம் செய்யச் சக்தியில்லாமலும் இருப்பதாகவும், மற்றச் சேனைகள் நகரத்திலேயே தயாராய் இருப்பதாகவும் தெரியவந்தது. இருப்பவர்களுள் 3,000 பேர் வரையில் அக்காலம் உதயபுரிக்கு அனுப்பத் தடையில்லை யென்று சேனைத் தலைவர் அபிப்பிராயப்பட்டார்.

சிதானந்தர் "ஆனால் தற்காலம் 1,000 பேர்களை பிரதாபசிங்கரின் உதவிக்கு அனுப்பி, மிலேச்ச சேனை படையெடுத்து வருவதானால் மறுபடியும் 2,000 பேர்களையோ 3,000 பேர்களையோ அனுப்புவதாக விடையளிப்போம். சுல்தான் ஆமத், சில துருக்க அரசர்களைப் போன்று ஆலோசனை செய்யாமல் காரியத்தை மேற்கொள்பவன் அல்லன். சிறந்த புத்திசாலி யென்றும், முன்பின் வருபவற்றை யோசிக்கக் கூடியவன் என்றும் கேள்விப்பட்டிருக்கின்றேன். யோசனைசெய்து, ஓர் பெண் விஷயமாக, ஒரு தேசத்தை எதிர்த்துப் பல மனிதர்களின் உயிரைப் போக்குவது தகாத காரியம் என்றெண்ணி, படையெடுக்காமல் நின்றுவிடவும் கூடும். ஆகையால் முதலில் நாம் 3,000 பேர்களையும் அனுப்பவேண்டிய அவசியம் இல்லையென்று தோன்றுகின்றது" என்றான்.

சேனைத்தலைவன் "அதுவே எனது அபிப்பிராயமும். தளகர்த்தர் ஜயசிங்கரிடம் 1,000 வீரரை அனுப்பினால், அவர்கள் இரண்டாயிரம் வீரர்களுக்குச்சமானமாய் இருப்பார்கள். அவ்வளவு சமர்த்தர் ஜயசிங்கர். அவரைப் படைத்தலைவராய் அனுப்புவது நலம் —"

விசுவநாதர் "உதயபுரியிலிருந்து வந்த வீரர்கள் இன்னமும் இருக்கின்றார்களா, திரும்பிப் போய்விட்டார்களா?"

சிதானந்தர் "அவர்களை யனுப்பிவிட்டேன்; இன்று காலையில் இதுகாறும் செய்த தாமதத்துக்கே பிரதாபசிங்கர் வருந்துகிறபடியால் இனித் தாமதம் செய்யக்கூடாதென்று விரைவில் அவர்களிடம் தக்க மறுமொழி சொல்லி யனுப்பிவிட்டேன். ஆகையால் சபையில் தீர்மானம் ஆகின்றபடி சங்கதிகளை விவரமாய் எழுதி, சீக்கிரம் பிரதாபசிங்கருக்கு விடையனுப்பவேண்டும் சேனைத்தலைவர் கனுதிபர் சேனையில் 1,000 பேர்களைத் தேர்ந்தெடுத்து ஜயசிங்கருடன் அனுப்புவிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்—"

அரசன் "சபையோர்களே! இராஜஸ்தானம் ஒரேகுடும்பம் போன்றது. நமக்குள் சில சில விடங்களில் சச்சரவு இருக்கக்கூடும். அதனாலேயே அன்னியர் இராஜபுதனத்தில் புகுந்து நமது தேசத்தைக் கைக்கொள்ள என்ன உரிமை இருக்கின்றது? தவிரவும் நாம் தீர்க்காலோசனை செய்து தீர்மானித்திருக்கும் இவ்விவாகத்துக்கு இடையூறு செய்யும் பாதகனைத் தண்டிப்பது தர்மமே யல்லவா? பிரதாபசிங்கரும் நாமும் வேண்டுகிறபடி சீக்கிரம் நடை பெறாமல் இவ்விவாகம் தாமதப்படுவது நமது துர் அதிர்ஷ்டமே தவிர வேறன்று. தெய்வ ஸங்கல்பத்தாலும், பெரியோர் ஆசீர்வாதத்தாலும் நன்கு முடியவேண்டிய இந்த சுப காரியத்துக்குத் தடையொன்று வருகின்றதென்பதை நினைக்கவும் மனம் தளர்கின்றது. இராஜஸ்தானத்துக்கு மிலேச்சர்களால் கஷ்டம் ஏற்படாமல் இருக்கும்படி பாதுகாப்பதே இராஜபுத்திரர்களின் முக்கிய காரியமாகும். கனுதிபர் சொல்லியபடி முதலில் ஒரு சிறிய சேனையை உதயபுரிக்கு அனுப்பட்டும். மஹமதியர் எதிர்த்து வருவதானால் நாமே பாக்கியிருக்கும் சேனைகளை முன்னடத்திச் செல்லுவோம்" என்றான் மிகக் கோபாவேசத்துடன்.

பிறகு சபையோர் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். சேனையை எவ்வழியாய் அனுப்புவதென்பதையும், எத்தனை நாளில் புறப்படவேண்டு மென்பதையும், தீர்மானித்தபின், சபையில் நடந்த விஷயங்களைக் கூடியமட்டில் இரகசியமாய் வைத்துக் கொள்ளவேண்டுமென்று மந்திரி சபையோர்களை வேண்டிக்கொண்டான். சபை கலைந்தது.

அன்றிரவில் ஜயபாலராஜன் பட்டபாட்டை நாம் என்னவென்று சொல்வது! துக்கமும், கோபமும், ஏக்கமும், அவன் மனதைப் புண்படுத்தின. தான் எண்ணியபடி காரியம் நிறைவேறாமல் தடைப்படுகின்றதே என்று துக்கம்; இடையே நுழைந்து தடைசெய்கிறவன் மேல் கோபம்; யுத்தம் ஏற்பட்டுவிட்டால் எவ்விதம் முடிவாகுமோ, எவர் போவரோ, எவர் பிழைப்பரோவென்ற ஏக்கம். இவ்வகையாய் மனம் நொந்து நெருப்பில் விழுந்த புழுப்போல் துள்ளுவானாயினன்.

ஒருசமயத்தில் லலிதையை நினைத்துக் கொண்டு, அவள் அழகையும் குணத்தையும் எண்ணினவனாய், அம்மாதை யடையும் காலம் கிட்டுமோ என்று சோருவான். "ஐயோ! இது என்ன விந்தை! மாதுசிரோமணியான இந்த லலிதையை நான் குழந்தைப் பருவத்தில் பார்த்ததேயன்றி வயது வந்தபின் பார்த்தவ னல்லன். அவள் குணங்களைப் பற்றிக் கேள்வியே ஒழிய அறிந்தவனல்லன். அப்படியிருக்க, இரும்பைக் காந்த மிழுக்குமாறு என் மனதை அவள் கவரக் காரணமென்ன? இராஜாங்க விஷயத்திலும் கூட என் மனம் முன்போல் அவ்வளவு ஊக்கமாய்ச் செல்வதில்லை. வேட்டையாடப் போனாலும் வேட்டத்தில் கவனம் செல்வதில்லை. இன்றிரவு போன்று எத்தனை இரவுகள் தூக்க மின்றிக் கழித்திருக்கின்றேன்—காதல் என்பதும் ஓர் வியாதிதானோ! அப்படித்தான் இருக்கவேண்டும்? இல்லையேல் என்மனமும் தேகமும் இப்படித்தளர்வதற்குக் காரணமென்ன? லலிதை, லலிதை யென்று மனனம் செய்துகொண்டிருக்கின்றேன்! ஈசா! அவ்வளவோடு நின்றுவிடுமோ,என் அதிர்ஷ்டம்! இராமேசர் வரும் வரையில், நாள்கள் மட்டுந்தான் என் விவாகத்துக்குத் தடையாய் நிற்கின்றன வென்றும், வேறு மானிடர்களாலும், தேவர்களாலும், இடையூறுவராதென்றும் நிச்சயமாய் எண்ணி, மனத்தைத் தேற்றிக்கொண்டு, நாழிகைகளை எண்ணி, எண்ணி, என் அருமைக் காதலியைக் காணும் காலம்;கிட்டுகின்றதென்று, சபலப்பட்டுக் கொண்டிருந்தேன். மின்னாமல் இடித்

ஒருவனைக் கொன்றவன் உடனே சாவான், பலபேரைக் கொன்றவன் பட்டம் ஆளுவான்.

ததென, இக்கொடியோனால் பெருந்தடை எங்ஙனம் வந்து சேர்ந்தது!—யுத்தம் தான் செய்வோம்! நாமே ஜயிக்கின்றோம் என்று நிச்சயம். என்ன! கடவுளுக்கே இந்தக் கல்யாணம் சம்மதமில்லையோ! அப்படியாயின் என் மனம் ஏன் லலிதையின்பால் ஈடுபடவேண்டும்!

"ஆ! ஹா! இப்படியும் மனம் தளருவேனோ நான்! ஆரியகுலத்தில் உதித்து வீராதிவீரர்களை முன்னோராய் உடைய நானா இப்படி மனம் தளர்வது? யுத்தம் செய்தால் ஜயம்வருமோ என்று சந்தேகம் என் மனத்தில் உதிக்கலாமா! லலிதையை மணக்க விரும்பியதனாலேயே யுத்தத்தில் உயிர் இழக்க பயப்படுவேனோ! நேசித்தேன் லலிதையை! அவளுக்கும் அவள் குடும்பத்தாருக்கும் பேராபத்து வந்திருக்கின்றது போலும்! அதை நீக்கி அவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்க என்னாவி உள்ளளவும் முயலுவேன்; அம்முயற்சியில் என் பிராணன் போவதானாலும் லலிதை என்னை நேசிப்பாள் என்பதற்குச் சந்தேகமில்லை; பிறர் ஒருவரையும் அவள் வேண்டாள்: இதுவே எனக்குப் போதுமான கைம்மாறு. அன்பென்னும் உணர்ச்சியின்றிக் காயாத வாழைபோல் இறப்பதினும், அன்பின் உணர்ச்சி நுழைந்து என்மனம் விஸ்தாரமான பின்பு உயிர் விடுவது மேலானதன்றோ! நேசமறியா தாரினும், நேசித்து இறந்தவர் எத்துணை சிறந்தவர்! மனமே, இன்று முதல் வருந்தாதே! தர்மகாரியத்தை மேற்கொள். உன்னிடம் விளங்கும் அன்பு, தூய அன்பாகட்டும்! லலிதையின் காரணமாய்ச் செய்யப் போகும் இச்சண்டை, ஆலோசித்துப் பார்ப்பின் இராஜஸ்தானத்துக்கே பொதுவானதன்றோ! இன்று உதயபுரிக்கு ஏற்படும் ஆபத்து நாளை ஏன் இன்னொரு நாட்டுக்கு ஏற்படக் கூடாது? யுத்தமென்னவோ நடக்குமென்று தோன்றுகின்றது.—

ஆயினும் இந்த யுத்தம் நடக்குமுன் விவாகம் நிறைவேறிவிட்டால்,—ஈசா! அற்புத மலையில் உறையும் ஜோதி ஸ்வயம்புவே! உன் திருவுள்ளம் எப்படியோ! ஒருமுறை என் காதலியைக் கண்டு ஆனந்தப்பட்டாலும் போதும்! பிறகு யுத்தத்தில் உயிர்விடினும் பெரிதன்று! வீரசுவர்க்கம் புகுவேன்——"என்று பலவாறு எண்ணி யெண்ணி, தூய வெண் படுக்கை யெல்லாம் கலைந்து தாறுமாறாய்ப் போகும்படி திரும்பித் திரும்பிப் படுத்து,வெகு நேரம் தூக்கம் பிடியாமல், கடைசியாக நித்திரையில் மெய்ம்மறந்தான்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்.

CHILDREN'S & LADIES' PAGES

வரவுக் கேற்க வாழ்

தென்னாட்டில் ஓர் ஊரில் பாக்கிய மென்னும் ஒரு பெண் ஒரு நாள் கோயிலுக்குப் போய்வந்து சுபுத்தி என்று பேர்பெற்ற தன் தாயை நோக்கி, "அம்மா! அண்ணா என்னைக் கட்டைத் துடைப்பம்போல் வைத்திருக்கிறாரே; அரைக்கு நல்லதாய் ஒரு புடவைகூட இல்லையே! இன்றையதினம் நான் கோயிலில் பார்த்தேன்; ஒவ்வொரு பெண்ணும் என்னென்ன நகைகள் போட்டுக்கொண்டு வந்தது; அங்கே வந்தவர்க ளெல்லோரும் அண்டை வீட்டுச் சுந்தரிமேலேயே கண்ணா யிருந்தார்கள். அந்தப் பெண் அழகு செய்துகொண்டு வந்ததை நானென்னவென்று சொல்லுவேன்! அங்கே என்னைப்போல் தொள்ளைக் காதும் கரித்துணியுமாய் வந்தவள் ஒருத்தியையும் நான் பார்க்கவில்லை. அண்ணாவிடம் சொல்லி நல்லதாய் ஒரு புடவையாவது வாங்கித் தரச் சொல்" என்றாள். அதைக் கேட்டுத் தாயானவள் "குழந்தாய்! நீ சொல்லுவது எனக்குச் சரியாய்த் தோன்றவில்லை. உனக்குப் புடவை வாங்கிக்கொடுத்து இரண்டு மாதங்கூட ஆகவில்லையே! அதற்குள் இது அழுக்காய் விட்டது, வேறு சேலை வேண்டுமென்றால் எங்கிருந்து வரும்? இரண்டு மாதத்திற்குள் துணி அழுக்கடைந்து போய்விட்டதென்றால், அது உன் அஜாக்கிரதைதானே! உன் தகப்பனார் உனக்கு வஞ்சனை செய்கிறாரா? அவரால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு செய்துகொண்டு தானே வருகிறார். லக்ஷாதிகாரியைப்போல்

ஒருவனைப் பிறப்பது ஒரு பிறப்பாமா, ஒன்றி மரம் தோப்பாமா?

ஆசைப்பட்டால், எங்கிருந்து வரும்? ஏதோ சொல்ப வரும்படியைக்கொண்டு அவர் ஜீவனம் பண்ணி வருகிறாரென்பது உனக்குத் தெரியாதா?" என்றாள்.

பாக்கியம் இந்தத் தாய் சொல்லைக் கேளாமல் "நீ என்னென்னவோ சாக்குச் சொல்லுகிறாய்? அண்ணா அண்டை வீட்டுக்காரரவ்வளவு தனிகரல்லவோ? அவர் பெண்களெல்லாம் கோயிலுக்கு எப்படிச் சிங்காரித்துக்கொண்டு வந்தார்கள். கோயிலுக்கு வந்தவர்களெல்லாம் அப்பெண்களுடைய ஆடையாபரணங்களைப் பார்த்துப் பார்த்து ஒருவர்க்கொருவர் ஆச்சரியப்பட்டுக் கொண்டார்கள்" என்று சொல்ல, சுபுத்தி "அப்படி ஒரு வேளை பார்த்தால் பார்த்திருக்கலாம். அதிசயப்பட்டார்களென்கிறையே அது மாத்திரம் எனக்கு உண்மையாய்த் தோன்றவில்லை. நீயும் பெரியவளானால் இது உனக்கே நன்றாய்த் தெரியும். அண்டை வீட்டுத் தறிதலைகளைப் போலப் பிஞ்சிலே பழுத்த பெண்களைப் பெருந்தன்மையுள்ளவர்கள் ஒருவரும் மெச்ச மாட்டார்கள். இன்னொரு விஷயம் சொல்லுகிறேன் கேள். கோயிலுக்குக் கடவுளை வாழ்த்தப் போகிறதா? யார் யார் வந்திருக்கிறார்கள், யார் என்ன நகை போட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்னென்ன ஆடை யுடுத்திக்கொண் டிருக்கிறார்கள், யார் சொத்தை, யார் புழுத்தல் என்று ஊர்ப் பிரசங்கம் செய்யப்போகிறதா?" என்றாள்.

பாக்கியம் கேட்ட கேள்விக்கு இது ஒரு வகையான சமாதானந்தான்; ஆயினும் அவள் இதைச் சிறிதும் கருத்திற் கொள்ளாமல் "அதெல்லாம் சரிதான் அதைப்பற்றியென்ன? அங்கே வந்தவர்களெல்லாம், ஒருத்தியை ஒருத்தி பார்த்து வம்பளந்து கொண்டுதானிருந்தார்கள், பக்கத்துவீட்டுப் பெண்களைப் பார்த்துப் புகழ்ந்து பேசாதவர் ஒருவருமில்லை" என்று சொன்னதற்குச் சுபுத்தி: "பெரியோர் பேச்சைக் கேளாத அந்தப் பெண்கள் பேச்சை இனி என்னண்டை பேசவேண்டாம்; அதுகள் மூன்று மாதத்தில் முப்பது துணி கிழிக்குமே" என்று சொல்ல, பாக்கியம்: "கிழித்தால் கிழிக்கட்டும், அதற்குத் தக்கபடி நல்ல நல்ல புடவையாய் அவர்கள் வீட்டில் வாங்கிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்களா—இல்லையா? எனக்கும் அப்படி வாங்கிக் கொடுப்பதற்கென்ன?" என்று கேட்டாள். அதற்கு, "ஆமாம், அவர்கள் தந்தைக்கு வரும்படி அதிகமாய் வருகிறது, வாங்கிக் கொடுக்கிறார். உன் தகப்பனாரைப்போல் சொல்ப வரும்படியா யிருந்தால் அவர் அப்போதே காற்றிலே பறக்க வேண்டாமா? இருந்தால் வாங்கிக் கொடுக்க வஞ்சனையா? உன்னைவிட்டுப் பின் யார்க்குச் செய்யவேண்டும்" என்று தாய் சொன்னதைக்கேட்டு மகள், முன்னே இருந்ததைவிட விசனம் அதிகமாகி: "எப்போதும் நீ இப்படித்தான் பேசிக்கொண்டிருப்பாய்; நானும் இப்படியேதான் நிற்க வேண்டும். அண்டையகத்துப் பெண்களுக்கு இப்போது கலியாணம் நடக்கப்போகிறது. உடம்பு நிரம்ப நகை போடுகிறவனைப் பார்த்துக்கொடுத்து வண்மை வரிசைகளும் வேண்டியபடி செய்வார்கள். அப்போது அப்பெண்களுக்கு இன்னும் அதிகமான மாட்சிமை யுண்டாகும். என்னையோ நீங்கள் அரைத்துணிக்கு மல்லாடுகிற ஏழையாய்ப் பார்த்துக் காற்பணத்து நகை கூடக் கொடாமல் தாரை வார்க்கப்போகிறீர்கள். அதன் பிறகு அவனும் நானும் ஆயுள் முழுதும் அல்லாடவேண்டுவதுதான்" என்று சொன்னாள்.

அந்த வார்த்தையைக் கேட்டுச் சுபுத்தி, தன் வேலையிலேயே கண்ணா யிருந்துகொண்டு, "குழந்தாய்! வெகுவாய் அப்படித்தான் நடக்கும். உன் தகப்பனார்க்கு நானெப்படி வந்தேன் அறிவையா? என்னைப்போலவே நீயும் மிகுந்த சௌக்கியத்தோடு வாழலாம் சம்சாரத்தில் சௌக்கியமும் சந்தோஷமு முண்டாவது செல்வத்தினாலன்று. செல்வக் குடியிற் பிறந்தும் அநேகர் எப்போதும் எலியும் பூனையும்போற் போராடிக் கொண்டே காலங் கழிக்கிறார்கள். புருஷன் பெண்சாதியினிடத்தில் வரவர விசேஷமாக விருப்பங்கொண்டு அவளிடத்திலே பக்ஷமுள்ளவனாய் அவளுக்காக உழைக்கத் தலைப்பட்டு, பெண்சாதியும் அதற்கியைந்த நற்குண நற்செய்கைகளோடு அவர் படுகிற பிரயாசமெல்லாம் நமக்காகவே யல்லவாவென்று "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்கிறபடி கொழுநனையே மேலான தெய்வமாக எண்ணி இன் சொல்லும் தாழ் நடையு முடையவளாகி அவர்க்கு வந்தனை வழிபாடு செய்து வருபவர்களுக்

கல்லது வீட்டுக்கலங்காரமாய்க் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பவர்களுக்குச் சௌக்கியமும் சந்தோஷமும் ஒருபோது முண்டாகாது. ஏழையாயினும் வல்லவனைக் கலியாணஞ் செய்துகொள்ளுவதே மேலானது. இப்போது ஊர்ப் பெண்களுடைய கெட்ட சகவாசத்தால் நீ சொன்ன வார்த்தைகளன்றி உண்மையாய் உன் இருதயத்தினின்று முண்டாயிற்றென்று எனக்குத் தோன்றினால், இவ்வளவென்று வாயினால் சொல்லக்கூடாத துக்கம் எனக்கு உண்டாயிருக்கும்; ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. உள்ளூற உனக்கு அப்படிப் பட்ட கெட்ட எண்ணம் இருக்கமாட்டாது" என்றாள்.

இவ்வாறாகத் தான் சொன்னதைத் தாய் மறுத்துச் சொல்லவே, பாக்கியம் முகங்கலங்கி ஒன்றும் பேசாமல் ஒதுங்கி நின்றாள். சுபுத்தி அது தெரிந்து பின்னும் எதிர்த்துப் பேசாமல் புன்னகையுடன், "என் கண்ணே! இப்போது உனக்கு இருக்கிற புடவைகளைக் கட்டிக் கொண்டால் அதுவே உனக்கு மிக்க அழகாயிருக்குமே. என்னைப்போல் உன்னிடத்தில் மிகவும் அன்புள்ளவர்களுடைய கண்களுக்கு வெகு அற்புதமாய்த் தோன்றுவாய். இப்போது உன் தந்தைக்குக் கொஞ்சம் செலவுக்கு இழுப்பாயிருக்கிறபடியால், இன்னும் கொஞ்ச நாளைக்கு இந்த ஆடைகளையே உபயோகித்து வருவது உசிதம். அப்படியன்றி நல்லதாய் இன்னும் ஒரு சேலை வாங்கிவிட்டால், நாளது வைகாசி மாதத்தில் திருவிழாவுக்குப் போகிறவிடத்தில் கடைத்தெருவில் பல விநோதமான வஸ்துக்களைப் பார்த்து வாங்கிக் கொடுக்கும்படி கேட்பையே, அப்போது மிகவும் வருத்தமாயிருக்கும். இரண்டுக்கும் உதவுவதற்கு அவர் இப்போது சக்தியற்றிருக்கிறார். எது எப்படியிருந்தாலு மிருக்கட்டும்; இப்போது நீ கேட்ட அற்பவிஷயம் உனக்குக் கிடைக்காமற் போனதால், உன் தகப்பனார் சூரியோதயமுதல் சூரியாஸ்தமயம் வரையில் தன் தேக வருத்தத்தையும் பாராமல் எவ்வளவு வருத்தப்பட்டு நமக்காக உழைக்கிறாரென்பது, ஒருகாலும் உனக்கு மறந்துபோக மாட்டாது" என்று சொன்னதைக் கேட்டவுடனே, பாக்கியத்துக்கு மெய்தான் என்று மனதில் பச்சாத்தாபம் தோன்றி கொஞ்சநேரமாய் அவள் மனதில் இடங்கொண்டிருந்த துரகங்காரம் நீங்கிப்போயிற்று. தாய் கடைசியில் இதமாய்க்காரணத்துடன் சொன்ன வார்த்தை மகளுக்கு ஆனந்தக் கண்ணீருண்டாகும்படி செய்தது. உடனேபாக்கியமெழுந்து அன்னையை ஆலிங்கனஞ் செய்துகொண்டு பேச வாயெழும்பாமல் சரேலென்று உள்ளே நுழைந்தாள். அங்கேயிருந்த புடவைகளெல்லாம், முன் அண்டைவீட்டுச் சுந்தரியின் சேலையோடு ஒத்துப் பார்க்கும்போது அவள் கண்ணுக்கு எவ்வளவு அவலக்ஷணமாய்த் தோன்றின! இப்போது கெட்ட எண்ணங்களில்லாமல் விவேகத்தோடும் அநுதாபத்தோடும் அவைகளைப் பார்க்கும்போது, 'இந்தப் புடவை எவ்வளவு நன்றாயிருக்கின்றது! இதையா நான் முன் ஒன்றுக்கும் உதவாதென்று நினைத்தேன்' என்று ஆச்சரியப்பட்டாள். அதன் பிறகு அவளுக்கு நாளுக்கு நாள் தன் தந்தை தனக்காக வெகுவாய் உழைத்துப் பொருள் தேடுகிறாரென்று அவரிடத்தில் விசேஷமான கௌரவமும் விசுவாசமு முண்டாயிற்று. இப்படியிருக்கையில் தங்கள் அடுத்த ஊரில் வைசாகோற்சவம் சமீபித்தது. அதற்கு இவர்கள் அனைவரும் போயிருந்தார்கள். அங்கே நற்புத்தி பிறந்த பாக்கியமானவள் நல்லறிவும் தெய்வபக்தியுமுள்ள மேலோர்களுடைய கூட்டத்தில் சேர்ந்து பேரானந்தமடைந்திருந்தாள். தான் முன் செய்துவந்த அற்ப சகவாசத்தை அடியோடு மறந்துவிட்டாள்.

சில நாளில் சுபுத்தியானவள் மிக்க கல்வியும் திறமையும் விவேகமுமுள்ள ஒரு பிள்ளையைத் தேடித் தன் மகளுக்கு மணஞ் செய்வித்தாள். அம்மருமகன் மிகச் சமர்த்தனாயிருந்தமையால், தன் கல்வித்திறமை, பேசுந்திறமை, நடு நிலைமை முதலிய நற்குணங்களால் ராஜசமஸ்தானத்தில் சிறந்த உத்தியோகம்பெற்றுப் பேரும் பிரசித்தியுமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். பாக்கியமும் வரவுக்கேற்றபடி வாழவேண்டுமென்று முன் தனக்குத் தாய் சொல்லிய நற்புத்தியை மறவாமல் கணவனுள்ளத்திற் கியைந்தபடி இல்லறம் நடத்தி வந்தாள்.

இப்படி நாலைந்து வருஷம் கழிந்தது. பின் பொருதடவை பாக்கியம் மிகவும் பெருமை பெற்ற தன் புருஷனோடு பக்கத்து ஊர்த் திரு

நாளுக்கு வந்திருந்தாள். அவள் பிறந்த வீட்டிலிருந்து தாய்தந்தை முதலியவர்களும் அதன் அண்டைவீட்டு ஜனங்களும் புறப்பட்டுப் போனார்கள். சுபுத்தி தன் பிள்ளை, பெண்களோடு மகளும் மருமகனும் வந்திறங்கி யிருக்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்து மகளைப் பார்த்து ஓடிவந்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு ஆனந்தம் உள்ளடங்காமல், "என் கண்மணி! முன் நான் வல்லவனான புருஷனையே மணம்புரியவேண்டுமென்று எடுத்துச் சொன்னதைத் தடுத்துப் பேசினாயே; அதைப்பற்றி இப்போது என்ன நினைக்கிறாய்" என்று கேட்டதற்கு: பாக்கியம், "அம்மா! என்னைப்போல புத்தியீனமாயிருந்தவர் ஒருவருமில்லை; அதற்காக நீ இப்போது என்னை எவ்வளவு தண்டித்தாலும் தண்டிக்கலாம். செல்வச் செருக்காயிருக்க எனக்கு ஒருபோதும் இஷ்டமில்லை. முன் நீ போதித்த போதனையைக் கேளாமலிருந்தால் இப்போது நான் எப்படியிருப்பேனோ? அதிருக்கட்டும் அம்மா! இப்பட்டணத்து வேடிக்கையைச் சுற்றிப்பார்த்து வருவோம் வருகிறையா?" என்றாள்.

அப்படியே அன்றையதினம் மாலைவேளையில் தாயும் பெண்ணுமாய்ப் புறப்பட்டு ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு பற்பல விநோதக் காட்சிகளைக் கண்டுகளித்துத் திரும்பி வருகையில், சுபுத்தியானவள் ஒரு வீட்டு வாயிலண்டை வண்டியை நிறுத்தக் கட்டளையிட்டாள். பாக்கியம் அதுகண்டு "அம்மா! இங்கே ஏன் நிற்கவேண்டும்? அது யார் வீடு?" என்று கேட்டதற்கு, சுபுத்தி "இங்கே ஒரு மனிதனுக்காகக் கொஞ்சநேரம் காத்திருக்கவேண்டியிருக்கிறது, வண்டியை ஓரமாய் நிறுத்துவோம்" என்றாள்.

அங்கே வண்டி நிற்கையில் அந்த வீட்டிலிருந்து, தலைநரைத்துத் தாடையொட்டிக் கண் குழிந்து கால் தள்ளாட அரையிலொரு கந்தைத் துணியோடு ஒரு கிழவன் வெளியே வந்தான். அவனைப் பார்த்துச் சுபுத்தி "என் செல்வமே பாக்கியம்! இவர் யார், அடையாளந் தெரிகிறதா உனக்கு" என்றாள். பாக்கியம் அவரைக் கொஞ்சநேரம் நிதானித்துப்பார்த்து "இவர் நம்மண்டைவீட்டுப் பெரியவரல்லவா? அவர்க்கு இதற்குள் இவ்வளவு தள்ளாமை வந்துவிட்டதா? ஐந்தாறு வருஷத்திற்கு முன் நான் பார்த்தபோது நாற்பது வயதுக்குட்பட்டவராயிருந்தாரே" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்க, அதற்கு "ஆம், அவர்தான்; மூன்று வருஷத்திற்குமுன் இவர் எவ்வளவு செல்வமும் செல்வாக்குமுடையவராயிருந்தார்? இப்போது அவர்க்கு வந்திருக்கிற ஈனஸ்திதியைப் பார்த்தையா? அவர் வைத்திருந்த சாமான்கள் எல்லாம் விற்றாயிற்று. கடனோ கணக்கு வழக்கில்லாமல் ஏறிப்போயிற்று. அதை யடைக்க வகையில்லை. கொஞ்சகாலம் செவ்வையாய்ப் பிழைத்தவர் பாவம்! பெண்களுடைய பேராசையாலும் பேதைமைத்தனத்தாலும் இப்படியாய்விட்டார். இச்சமயத்தில் தலைவர்கள் யாராவது இவரைக் கைதூக்கி விட்டால் மிக்க நன்மையுண்டு" என்று தாய் சொல்லக் கேட்டு மகள் "அம்மா! இப்போது இவர் பெண்கள் எத்தன்மையா யிருக்கிறார்களோ?" என்று வினவினதற்கு, சுபுத்தி "சற்றுநேரம் பொறு, சொல்லுகிறேன்" என்றாள். இவர்கள் இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், அவர் பெண்கள் அதிக ஆடம்பரத்துடன் நல்ல ஆடையாபரணங்கள் அணிந்து கைகொட்டி நகைத்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார்கள். அதைப் பார்த்து பாக்கியம், "நான் கேட்டது இவர்கள்தானே அம்மா" என்றாள். அதற்குச் சுபுத்தி: "வேறு யார் இப்படி நடப்பார்கள்? இதை உனக்குக் காட்டவேண்டுமென்றே இங்கே கொஞ்சநேரம் நின்றேன். நேரமாயிற்று, வீட்டுக்குப் போவோமென்று சொல்லி வண்டியை யோட்டும்படி வண்டிக்காரனுக்குத் திட்டஞ்செய்தாள். வீட்டுக்குச் செல்லுகையில் தாய் பெண்ணைப் பார்த்து "என் கண்ணே! வரவுக்குத் தக்கபடி செலவு செய்வது நல்லதா, அதிகமாய்ச் செலவு செய்வது நல்லதா? இப்போது அதைப்பற்றி உனக்கு என்ன தோன்றுகின்றது?" என்று கேட்டாள். அதற்கு "முன் எனக்கிருந்த அறியாமையைப்பற்றி நீ என்ன செய்தாலும் நான் அதற்கு ஆளாக வேண்டியதுதான். இனி நான் அதை ஒருபோதும் மறக்கமாட்டேன். என்னைச் சேர்ந்தவர்களுக்கும் இதைப்போதிப்பேன். நல்லது இந்தப் பெண்களுக்கு இன்னும் அறிவுண்டாகவில்லையா? முன்னிருந்தது போலவே இப்போதும் இருக்கிறார்களே. நாளுக்கு நாள் நன்னடக்கையும் விவேகமு

முண்டாகாதா? என்று மகள் கேட்டதற்கு, தாய் "என் அருமை மகளே! அதெல்லாம் இளமையிலேயே உண்டாகவேண்டும். செடியில் வணங்காதது மரமாய் வணங்குமா? வாலிபத்தில் எவ்வழியில் மனமிறங்கி விடுகிறதோ அதே வழியாய்த்தான் ஆயுள்முழுதும் செல்லும். விளையும் பயிர் முளையிலேயே தெரியாதா? ஆதலால் உலகத்தில் தம்மை யடுத்தவர்களுக்கு இளமையிலேயே நல்ல புத்திமதிகளைப் போதித்து, அவர்களை நல்வழியில் திருப்புகின்றவர்களும், அப்படித் தங்களை நல்வழியில் நடத்தக்கருதிய பெரியோர் பேச்சைச் சிரமேற்கொண்டு அதன்படி நடக்கும் வாலிபர்களுமே இவ்வுலகில் சுகம் பெறுவார்கள்" என்றாள். இப்படியாகத் தாயும் மகளும் நல்வழியாய்ப் பேசிக்கொண்டு வீடுவந்து சேர்ந்து தினந்தோறும் கடவுளைத் தொழுதுகொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். சுபம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

சென்ற மாதத்தில் நாம் குறிப்பிட்டபடி

சென்னைப் புதியகவர்னர்

நாளது மாதம் 10-ம் தேதி யன்று நமது புதிய கவர்னரான வில்லிங்டன் பட்டவர்த்தனர் சென்னைக்கு வந்து வேலையை ஒப்புக்கொண்டனர். இன்னும் ஐந்து வருஷகாலம் நமது மாகாணத்தின் க்ஷேமலாபங்களைக் கருதிக் காரியங்களைச் செய்ய முன் வந்திருக்கும் ஸ்ரீமானுக்கு நாம் மனமார்ந்த நல்வரவு கூறுகிறோம். வில்லிங்டன் பட்டவர்த்தனர் சென்னைக் கவர்னராக நியமிக்கப்பட்டதில் அடங்கியுள்ள அம்சமொன்றை நமது அபிமானிகள் அறியவேண்டுகிறோம். சாதாரணமாக இந்தியாவில் ஒரு தரம் கவர்னர் உத்யோகத்தையோ, கவர்னர் ஜனரல் உத்யோகத்தையோ வகித்த ஒருவருக்கு மறுபடியும் அப்படிப்பட்ட உத்யோகத்தைக் கொடுப்பதில்லை. கால அளவை அதிகப்படுத்துவதும் துர்லபம். வில்லிங்டன் பட்டவர்த்தனர் விஷயத்தில் மேற்கூறிய இரண்டு அனுஷ்டானங்களும் மாறிப்போயின. இம்மாகாணத்துக்கு இவர் வருமுன்னர், பம்பாய் மாகாணத்தில் சாதாரணமாக ஏற்பட்ட கால அளவுக்கு மேற்பட்டுக் கவர்னராக இருந்தனர். ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒத்துழைக்க அதனால் இந்தியாவில் சுயராஜ்யம் சீக்கிரத்தில் கிட்டவேண்டுமென்னும் கொள்கை, தமது முக்கிய நோக்கங்களில் ஒன்றென்று இந்த ஸ்ரீமான் வெளியிட்டிருக்கின்றனர். இவரது மனோபீஷ்டப்படி காரியம் இனிது முடியுமாறு ஸர்வேசுவரன் கிருபை புரிவாராக.

பொதுவாக எங்கும், சிறப்பாகச் சென்னை நகரிலும், நல்ல பால் கிடைக்காத

பால் வசதி

துர்த்தசையை ஒருவாறு விலக்கவெண்ணிக் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் ஒரு ஏற்பாட்டை நமது அபிமானிகள் அறியவேண்டுகிறோம். பால் வியாபாரிகளின் சவுகரியத்துக்காக, இங்கிலாந்திலிருந்து நான்கு உயர்ந்த காளைமாடுகளை வரவழைத்து, அவைகளின் மூலமாக சொல்பச் செலவில் நல்ல ஜாதிக் கன்றுகளை நாட்டுப்பசுக்கள் ஈனுமாறு செய்வது; இப்படி ஈனும் கன்றுகளைக் கவர்ன்மெண்டாருக்கு நிஷ்கரிசையான ஒரே விலைக்குக் கொடுப்பது; இந்தக் கன்றுகளை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வளர்த்து, பாற்பசுக்களை உண்டாக்கும்படி செய்வது; பால்காரர்களுக்கென்று ஒரு ஐக்கிய சங்கம் ஏற்படுத்தி அதன் மூலமாக, வைக்கோல், முதலியவைகளை வாங்குவதும், பால், தயிர், வெண்ணெய், நெய் இவைகளை விற்பதும், கடன் கொடுத்து வாங்குவதும் ஆகிய காரியங்கள் செய்யப்படும். அங்குரார்ப்பணமாக, இங்கிலாந்திலிருந்து நான்கு உயர்ந்த காளைமாடுகள் நாளது நவம்பர் மாதத்தில் வரும். வருமுன்னால் அவைகளை நன்றாகப் பரிசோதித்து க்ஷயம், வெக்கை முதலிய நோய்களைத் தடுக்கும் இனுகுலேஷன் (அம்மை குத்தல்) செய்வார்கள். மொத்தத்தில் இந்த நான்கு காளைமாடுகளும் சென்னைக்கு வந்து சேர 45,000 ரூபாய் செலவாகும். நன்றாய் முடிவது எல்லாம் நன்றே.

* * *

தேவகோட்டையில் டிப்டி கலெக்டராக இருந்த வரும், எமது பத்திரிகையின் அந்த

ஸி. எஸ். அனந்தராமய்யரின் தேக வியோகம்.

ரங்க அபிமானிகளுள் ஒருவருமான ஸ்ரீமான் ஸி. எஸ். அனந்தராமய்யரவர்கள் நாளது மாதம் ஜுரத்தினால் திடீரென்று காலமானதைக் கேட்டுத் துக்கிக்கிறோம். ஸ்ரீமான் ஐயரவர்கள் புரொவின்ஷியல் ஸிவில் ஸர்விஸில் சேர்ந்து 17 வருஷங்களாகின்றன. இவரது அபூர்வசாமர்த்தியத்தை வியந்தகவர்ன்மெண்டார் இவரைச் சிலகாலம் கவர்ன்மெண்டு ஆபீஸில் கீழ்க்காரியதரிசியாக நியமித்திருந்தனர். ஸ்ரீமான் ஐயரவர்கள் உசிலம்பட்டியில் டிவிஷனல் ஆபீஸராக இருந்தகாலத்தில், அங்குள்ள கள்ளர்களை நல்வழிக்குக் கொணர்ந்த விஷயமும், அவர் தாலூகா போர்டு காரியங்களை நிர்வகித்த மாதிரியும் பெரிதும் பாராட்டற்பாலன. ஜன ரஞ்சகத்வம், சாமர்த்தியம், யோக்கியதை, மனோதிடம் முதலியவைகளில் ஐயரவர்களை எல்லா உத்தியோகஸ்தர்களும் பின்பற்றிச் செல்லலாம். நாற்பது வயதுக்குள்ளேயே ஸ்ரீமான் ஐயரவர்களுக்கு அகால மிருத்யு ஏற்பட்டுவிட்டது. ஐயரவர்களுக்கு ஒரு குமாரனும் ஒரு குமாரத்தியும் இருக்கின்றனர். அவர்களுக்கும் ஐயரவர்களின் தர்மபத்னிக்கும் அவரது பந்து ஜனங்களுக்கும் நாம் நமது அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

ஆயுதச் சட்டம்.

துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் தற்காப்புக்காக வைத்துக்கொள்ளும் விஷயத்தில் ஐரோப்பியர்களையும் இந்தியர்களையும் பிரத்தியேகப்படுத்தி, ஆயுதச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததைப்பற்றி நமது பிரமுகர்கள் அநேகமுறை கண்டித்துப் பேசியதுண்டு. வருஷாவருஷம் கூடும் காங்கிரஸ் மஹா ஸபையில் இப்படிப்பட்ட வித்யாசத்தை அகற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்வது பதிவு. இப்போது, இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விஷயமாக வெளியிட்டிருக்கும் உத்தரவு நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஜாதி வித்யாசம் பற்றிய விவாதம் இனி இருக்காது. தகுந்த அந்தஸ்தும் யோக்யதையும் உள்ளவர்களுக் கெல்லாம், ஆயுதம் வைத்துக்கொள்வதற்காக, முன் விசாரணையின்றி லைசென்ஸ் கொடுக்கப்படும். சாதாரணமாக, கவுரவ பட்டம் பெற்றவர்கள், சட்ட நிரூபண ஸபை யங்கத்தினர்கள், 1,000 ரூபாய்க்குக் குறையாத நிலவரி செலுத்துவோர்கள், மூன்று வருஷங்களுக்குக் குறையாமல் வருஷமொன்றுக்கு ரூ. 3,000க் குக்குறையாத வருமானத்தின்மீது வரி செலுத்துவோர்கள், ரூ 250க்குக் குறையாத சம்பளத்தையுடைய ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள், ராணுவ உத்யோகஸ்தர்கள், கடைசி இரண்டு வகையில் பென்ஷன் பெற்றவர்கள், ஆகிய இவர்களுக்கு அவ்வாறு லைசென்சு கொடுக்கப்படும். காட்டு மிருகங்களினால் பயிர்களுக்குக் கெடுதியுண்டாகாதபடி பாதுகாத்துக் கொள்ள, குடியானவர்களுக்கு அவசியமான போதெல்லாம் லைசென்சு கொடுக்கப்படும். இவையெல்லாம் நமக்குச் சம்மதந்தானென்றாலும், லைசென்சுக்காகச் செலுத்தவேண்டிய தொகையைப் பத்து ரூபாவாக உயர்த்தியது சற்று யோசிக்கவேண்டிய விஷயம் என்பதை நாம் எடுத்துச் சொல்வோம்.

* * *

நீதி இலாகா.

நமது மாகாணத்தில் நீதி இலாகாவின் உத்யோகஸ்தர்களுடைய ஸங்கியை கீழ்க்குறித்தபடி அதிகமாக்கப் பட்டிருக்கிறது. இப்படி ஸங்கியை அதிகமானதற்கு அவர்கள் சந்தோஷப்படுவார்களென்றாலும், சம்பள விகிதம் மட்டும் முன்போலவே இருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளார்கள். முன்ஸீபுகளின் கடைசி சம்பளத்தை ரூ. 250க்கு உயர்த்த வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் இருந்ததை நாம் அறிவோம். இதுவும் சீக்கிரத்தில் கைகூடுமென எதிர்பார்க்கிறோம்.

ஸப் ஜட்ஜிகள்.

பழையரீதி ஸங்கியை	சம்பளம் ரூ.	புதியரீதி ஸங்கியை	சம்பளம் ரூ.
4	800	6	800
5	650	8	650
9	500	15	500
18		29	

டிஸ்டிரிக்டு முன்ஸிபுகள்.

பழையரீதி ஸங்கியை	சம்பளம் ரூ.	புதியரீதி ஸங்கியை	சம்பளம் ரூ.
33	400	34	400
33	300	36	300
33	250	36	250
31	200	38	200
130		144	

ஒற்றியும் சீதனமும் பற்றி ஆளவேண்டும்.

தஞ்சையில் 2-வது மஜ்லிஸ் - உல் - உலமாவில்
அக்கிராசனம் வகித்த கனம்
ஸர் அப்துல் ரஹிம்

BY THE COURTESY OF
"SWADESAMITRAN"

விவேகபோதினி

வருஷச் சந்தா.	"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு." —திருவள்ளுவர்.	விளம்பர விகிதம்
உள்நாடுகளுக்கு ரூ. 4		முழுப்பக்கம் ரூ 10
வெளிநாடுகளுக்கு ரூ. 5		அரைப்பக்கம் ரூ. 6
தனிப்பிரதி - அ. 6		கால்பக்கம் ரூ. 3

தொகுதி XI | சித்தார்த்தி௵ சித்திரைமீ :: 1919-௵ மேமீ | பகுதி 11

லக்ஷ்ய பேதம்

CONFLICT OF IDEALS

சூழப் பற்றின சுற்று மெயிற்றின்
போழக் கிற்றில வென்று புகன்றார்
வாழித் திக்கின் மயக்கின் மதந்தாழ்
வேழத் துக்கிடு மின்னென விட்டான்.

கய்யிற் கால்களின் மார்பு கழுத்தில்
தெய்வப் பாச முறப்பிணி செய்தார்
மய்யற் காய்கரி முன்னுற வைத்தார்
பொய்யற் றூவமி தொன்று புகன்றான்.

எந்தாய் பண்டொ ரிடங்கர் விழுங்க
முந்தாய் நின்ற முதற்பொரு ளேயென்
றுந்தாய் தந்தை யினத்தவ னேத
வந்தா னென்றன் மனத்தினை னென்றான்.

என்னு முன்ன மிருங்க ளிறுந்தன்
பொன்னு ரோடை பொருந்த நிலத்தின்
அன்னு னைத்தொழு தஞ்சி யகன்ற
தொன்னு ரத்திற மெய்தி யுரைத்தார்.

தள்ளத் தக்கில் பெருஞ்சயி லத்தோ
டெள்ளக் கட்டி யெடுத்து விசித்துக்
கள்ளத் திங்கி வனைக்கரை காணு
வெள்ளத் துய்த்திடு வீரென விட்டான்.

நடுவொக் குந்தனி நாயக னுமம்
விடுகிற் கின்றில ஞகலின் வேலை
மடுவொத் தங்கதின் வங்கமு மன்றாய்க்
குடுபுத் தன்மைய தாயது குன்றம்.

மோதுற் றார்திரை வேலையின் மூழ்கான்
மீதுற் றார்சிலை மீது கிடந்தான்
ஆதிப் பண்ணவ னுயிர நாமம்
ஓதுற் றான்மறை யொல்லை யுணர்ந்தான்.

அத்தன் மையறிந் தவருந் திறலோன்
உய்த்துய்ம் மினென்முன் னெனவுய்த் தனரால்
பித்துண் டதுபேர் வுறுமா பெறுதும்
கைத்துங் கடுநஞ் சினெனக் கனலா.

ஊனே டுயிர்வே றுபடா வுபயம்
தானே யுடையன் றனிமா யையினல்
யானே யுயிருண் பலெனக் கனலா
வானே ழுகடுங் கிடவர் தனனுல்.

வந்தா னவணங் கியென்மன் னுயிர்தான்
எந்தாய் கொளவெண் ணினையே லிதுதான்
உந்தா ரியதன் றுலகியா வுமுடன்
தந்தார் கொளநின் றதுதா னெனலும்.

வேறு.

ஏவரே யுலகந் தந்தா ரென்பெய ரேத்தி வாழும்
மூவரே யல்லராகின் முனிவரே முழுதுந் தோற்ற
தேவரே பிறரே யாரே செப்புதி தெரிய வென்றான்
கோவ மூண்டெழுந்துங் கொல்லான் காட்டுமேற்
காட்சி கொள்வான்.

உலகுதந் தானும் பல்வே றுயிர்கடந் தானு முள்ளுற்
றுலைவிலா வுயிர்க டோறு மங்கங்கே யுறைகின் றானும்
மலரினில் வெறியு மெள்ளி லெண்ணெயு மற்றுங் கே
ளாய்
அலகிறெல் புகழும் பற்றி முற்றிய வரிகா ணத்தா.

கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.

விவேக போதினி

தொ.11] சித்தார்த்தி௵ சித்திரைமீ [ப. 11

ஊடலுவகை

THE ECSTASY OF LOVE

நாயகர்க்குள் நாயகனா நாமோய நங்கையற்கு
மாயவினை போக்கியின்ப மல்கினான் தூயமலர்ப்
பாதம் பணிந்து பரவுவார்க் கேதுகாண்
ஏதம் பிணிக்கு மிடர்?

ஸ்ரீகிருஷ்ணபகவானது பெருமையைப் பாராட்டுவோரும், அவரது உண்மை நோக்கங்களை யுணரமுடியாது கவிந்துகிடக்கும் வெறுப்புக் கடலுள் மூழ்கி, நல்வழிவரும் ஞானக்காற்றின்றி மூச்சுவிடத் தத்தளிக்கு மதாந்தரத்தினரும், ஒருங்கே கவனிப்பது அவ்வெம்பெருமான் கோபிகையர்களிடம் நடந்துகொண்ட நெறியே யாகும். கோபியரோ டவரூடியதாகக் காவியங்கள் கணக்கற விரிக்கும். அவை கவிகளின் மனத்தைக் களவியலிற் கடத்திப் பேரின்ப வழியில் செலுத்த இடந்தந்தன. அவ்வாறு அக்கவிகள் செய்வது தகுமா என்பதொரு கேள்வி. இதனைச் சற்றே ஆராய்வது தவறாகாது.

கோபாலர்களது மனதைச் சுத்தப்படுத்தி அவர்களுக்குத் தமது மூல முதற்றன்மையைக் காட்டியது முன் கவனித்த விஷயமேயாகும். எனவே கோபாலர்கள் கிருஷ்ணபிரானது ஒவ்வொரு செயல்களையும் பரமாத்புத வைபவங்களாகவே மதித்து வந்தனர். அவர்களைத் தமது வழிபடுத்திபதும், கோகுலத்துப் பெண்மக்களையும் தம்மிடம் அன்புகொள்ளுமாறு செய்யவேண்டுமென அவர் பேரன்பு கொண்டனர்.

அப்பொழுது நல்ல கார்காலம்; இரவில் பால்போல் எங்கும் நிலவு படர்ந்து விளங்கியது; இயற்கை பொலிவிற்கு வெள்ளிக் கவசமிட்டதுபோலத் திகழ்ந்து. அச்சமயம் பிருந்தாவனம் கண்டாரது கண்ணையும் கருத்தையுங் கவரும் காட்சி வாய்ந்திருந்தது; யாவர் மனமும் உவகையிற் பாய்ந்து கிடந்தது; எங்கும் பரமசாந்தியே குடிக்கொண் டிருந்தது. அம் மனோரம்மியமான ஸமயத்தில் கண்ணபிரான் தமது நாதப்ருஹ்ம லயமாகி விளங்கிய புல்லாங்குழலை, தம் அதரங்களின்மேல் பதித்து, அதன் ஸ்வரவழியே எவ்வுயிரிடத்தும் பேரன்போடுவிளங்கும் தமதுஉயிர்க்காற்றைச் செல்லவிடுத்து, யோகமாயை யெங்குங் குடிகொள்ளக் கானஞ் செய்தனர். உண்மை நெறியின் உன்னத நிலையிலிருந்து சற்றுஞ் சலியாது, அப்பிருந்தாவனத்தின் பூஞ்சோலையில் அவர் வாய்விட்டு வெளிவந்த கானாம்மிருதத்தைக் கேட்கக் கேட்க யாவர் மனதும் பேரன்பிடங்கொள்ளத் தலைப்பட்டது. காதலை எழுப்பும் அவ்வினிய இசையைக் காதாற் பருகிய கோபியர் உள்ளன்பு தூண்டக் கண்ணன்மேல் காதற் கொள்ளலாயினர்; அவ்வெழுச்சியின் மிகையால் அவர் பரபரப்புடன் ஓடிவரலாயினர். அன்னமிட்டுக் கொண்டிருந்தார் சிலர், அப்படியே அதைவிட்டு வந்தனர்; கணவனிடமிருந்தார் அவனைத் தனியே விட்டு வந்தனர் சிலர்; பாலூட்டும் குழந்தைகளை உதறிவிட்டு ஓடிவந்தவர் சிலர்; தாமுண்ணுஞ் சோற்றை எறிந்துவிட்டு வந்தவர் அநேகர்; தங்கள் மேனியை மினுக்கவெனப் பூச்சுச் சாந்தமு மிட்டுக்கொண்டிருந்தார் அவ்வேலையை விட்டுஓடிவந்தனர்பலர்; தமதுவேலைகளை இருந்தது இருந்தவாறாக விட்டுவிட்டு அக்கோகுலத்துப் பெண்கள் கண்ணனை அடையப் பேராவல் கொண்டனர்; ஒவ்வொருவரும் கண்ணன்மேல் காதல்கொண்டே வந்தனர்; எனினும் தம்முள் பிணக்கமற்று, வெறுப்பற்று, பெருங் கடலைச் சேரச் செல்லும் மஹா நதிபோல அவர் உள்ளம் எழும்பிக் குதிக்க, அந்தத் தேவகீதம் பொழியுமிடஞ் சேர நடந்தனர்.

அவர்க்கென்றும் கண்ணன்மேலே கண்ணென்பது தவறாகாது. கண்ணனே தமக்கேற்ற கணவனென்பது அவர் திடமான எண்ணம்; எப்பொழுதும் அவரைப்பற்றியே கனவு.

கடிக்க ஒரு எலும்பும் இல்லை, காதில் மினுக்க ஓலையும் இல்லை.

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தர்க்கீழ்க்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழிநான்'

எனவே அவர் தமது கனவின் திறத்தை வெளியிடுவர். அத்தகைய மனோவேகத்திருந்த அவர் அக்காதலிசையைக் கேட்கப் பரவசமாகிக் கண்ணனைக் காணவருவதில் என்ன அதிசயம்? காதல் வெள்ளம் கரைபுரண்டு பெருகினால், அது இல்லறக் கரைகளைக் கடக்காதிருக்குமோ? ஆகவே முற்றத் துறந்தவரது உள்ளம்போல அவருள்ளம் அப்போது கண்ணனைக் காணாது தவித்தது; பரதவித்தது. வரும் வழியெல்லாமவர் மரங்களுடனும், செடிகளுடனும் கண்ணனைக் காட்டுமாறே கேட்டு வந்தனர்.

தந்தையும் தாயமுற் றாரும் நிற்கத்
தனிவழியே போயினாளென்னும் சொல்லு
வந்த பின்னைப் பழிகாப் பரிது
மாயவன் வந்துருக் காட்டு கின்றான்
கொந்தள மாக்கிப் பரக்க கழித்துக்
குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற
நந்த கோபா லன்கடைத் தலைக்கே
நள்ளி ருட்க ணென்னை யுய்த்திடுமின்.

என, என்றும் ஆவலோடு விளங்குவர் அன்று மேலும் பரபரப்புடன் கண்ணனைத் தேடினர்; அம் மதுராநாதன் செய்த மதுர நாதம் பிரதித்துவனி செய்யுமிடத்தை அடைந்து, தமது உடம்பின்மேலிருந்த இச்சைமுற்று மற்றுக் கண்ணனே ஸர்வலோக சரண்யனாக எண்ணினர்; மனக்குறை யற்றனர்; கர்மவழியின் போக்கை யறுத்தனர்; ஸர்வலோக நாயகனாகிய அவரே தமக்கு நாயகனென எண்ணினர்; தமது காதல் முந்தக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

அக்கண்களிலிருந்து வெளிவந்த காதல் வெள்ளத்தைக் கண்ட கிருஷ்ண பரமாத்மா அவரை நோக்கி "நீங்கள் இந்நள்ளிரவில் இங்கு வர என்ன காரணம்? இரவு வேளை யாயிற்றே. இங்குவந்தால் உம்மை உமது உறவினர் தேடார்களா? இது அடுக்குமா? மேலும் இந் நிலவின் பெருக்கில் விளங்கு மிக்காட்சியைக் கண்டாயிற்றே! உமக்கினி இங்கு என்ன வேலை? என்னிடங் கொண்ட பேரன்பால் நீங்கள் இங்கு வந்தது ஸரியே. இனி உமது புருஷரை அடையுங்கள். நான் உங்களுக்கெல்லார்க்கும் வேண்டியவனானாலும் ஒரு புருஷனே யாவன். நீங்கள் அந்நிய புருஷனுடன் இரவில் தங்குவ கூடாது. ஆகையாற் போங்கள்; வீட்டைச் சேருங்கள். உள்ளத்தை உமது பக்தி ஓடையிலேற்றி என்னிடம் அனுப்பினால் அதுவே போதும். அதனாலேயே நான் பரமப்ரீதியையடைகிறேன். என்னுடனிருந்து என்னிடம் பக்தியற்று விளங்கமுடியாது. அதற்கென்ன செய்வது? என்னைவிட்டுப் பிரிந்திருந்தாலும், எனது லீலா விநோதங்களைக் கேட்டு, அவற்றில் ஈடுபட்டு, வழிபட்டு அசைவற்று நிலைப்பதே எனக்குப் பேரின்ப மளிக்கும். இனிச் சற்றும் இங்குத் தாமதியாது உங்கள் வீட்டை அடையுங்கள். தடைசெய்யாது போவீர்களாக!" எனப் புத்திமதி கூறினர். இவ்வாப்த மொழிகளை அவர் ஏன் கவனிக்கவில்லை?

"ஹே நாத! நாங்கள் அநாதைகளானோம்! தமது அதரத்தின் சுவையை உணரும் அப்புல்லாங்குழலின் அதிருஷ்டம் யாம் அடைந்தோமில்லை; தம்முடன் சேர்ந்து கோபாலர்கள் எல்லோரும் அனுபவிக்கும் பேற்றை அடைய யாம் கொடுத்துவைக்கவில்லை போலும்! தாங்கள் மூவுலகுக்கும் மூல நாயகன். மனைவியர்க்குக் கணவனே என்பது உலகநெறி: அவர் மூலமாக உம்மைக் காண்பதே மணத்தின் மருமம். உம்மை நேரிற் காணும் பாக்கியம் பெற்றோர்க்குக் கணவரால் பெறவேண்டிய பேறு பெற்றாகு மன்றோ? அவித்யா வாசனையைப் போக்கும் அவ்வினிய கானாம்ருதத்தைப் பானஞ்செய்தும், உம்மையல்லாத எவர்மேல் பற்றிருக்க முடியும்? அற்றது பற்றெனில் உற்றது வீடு அல்லவா? பெறாப் பேற்றையளிக்கும் பரம் பொருள் கண்ணெதிரேயிருக்க, கல்மேல் முட்டிக் கொள்ளுபவர் குருடரே யாவரன்றோ? உமது பாதபக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முத்தி பெறலா மல்லவா? எமதுள்ளத்தை முற்றுங் கவர்ந்த கள்வன் தாங்களே. உள்ளத்தைக்கவர்ந்தவாறு உடலையுங் கவர்ந்தெங்களைத் திருப்திபடுத்துவது தமது கடமை. தாங்கள் அடைந்தாரைக் காப்பாற்றி அவர் கோரிக்கையை ஈடேற்றுபவரல்லவா? இதோ வணங்குகிறோம். தயவுசெய் தெங்களை ஐம்புல வியாபாரங்களற ஆண்டு ஆசீர்வதியுங்கள்."

கடுஞ் செட்டுக் கண்ணைக் கெடுக்கும்.

இவ்வாறு கோபிகள் சொல்லக் கேட்ட கண்ணன் நடுநிலை கோணாது தமது மாயா விலாசத்தால் அவரைத் திருப்திபடுத்த எண்ணங் கொண்டனர்; அவ்விரவை அவரிஷ்டப்படி கழித்தனர்; கோபியர் ஒவ்வொருவருடன் அதே ஸமயம் தனித்தனிக் கண்ணனாக விருந்து அவரைத் திருப்தி படுத்தினர். தமக்கு நிகரில்லையென அப்பொழுது விளங்கிய கோபிகட்கு இணைவேறு இருக்கமுடியாது. எனவே அவர் அளவு கடந்த கர்வங் கொண்டு விளங்கினர். கர்வம் கொண்டவர்க்குச் சுகம் நிலைக்குமா?

கோபியர்களது மனவெழுச்சியையும், தம்மை யவர் அடைந்ததால் அடைந்த அளவு கடந்த இறுமாப்பையுங் கண்ட எம்பெருமான் அவரது வீண் செருக்கை யொழித்து அவரது உண்மை நிலையை உணர்ந்து தன்னையே நினைக்கும்படி செய்யத் தமது உருவு அவர்முன் தோன்றாதிருக்கும்படி தமதுமாயா விலாசத்தை வெளியிட்டனர். இருந்தாற்போலிருந்து கண்ணன் மறைந்ததைக் கண்ட கோபியர் நடுநடுங்கினர்; பயந்தனர்; துயர் அடைந்தனர்; ஒவ்வொருவரும் தம்மிடந்தான் கண்ணன் பேரன்பு கொண்டிருந்ததாக எண்ணியிருந்த எண்ணந் தூண்டத் தூண்டக் கண்ணனைக் காணவேண்டுமென்ற பேராவலோடு அவ்வன முழுதும் அலைந்தனர்.

"அணுங்க வென்னைப் பிரிவுசெய்
  தாயர் பாடி கவர்ந்துண்ணும்
குணுங்கு நாறிக் குட்டேற்றைக்
  கோவர்த்தனனைக் கண்டீரே?
மாலாய்ப் பிறந்த நம்பியை
  மாலே செய்யும் மணாளனை
ஏலா பொய்க ளுரைப்பானை
  யிங்கே போதக் கண்டீரே?
கார்த்தண் கமலக் கண்ணென்னும்
  நெடுங் கயிறு படுத்தியென்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்
  ஈசன் தன்னைக் கண்டீரே?"

என இவ்வாறவர் அக்காட்டு மரங்களையும் மலைகளையும் கண்ணிற் கெதிர் பட்டவைகளையுங் கேட்டுக் கேட்டுப் பித்துக்கொண்டு திரிந்து அக்கண்ணனைத் தேடினர். காட்டின் வழியே தோன்றும் அடிச் சுவடுகளைக் கண்டு கண்ணன் ஓர்கோபியுடன் தனியே சென்றதாக எண்ணி, அவர் பிரிவினால் ஏற்பட்ட துயர்க் கடலில் குளித்து மனம் விம்மி விம்மி நெடு மூச்சு விட்டு நிலைகலங்கினர்; "அஹோ! அக்கோபியைப்போல் யானும் அவருடன் ஏகாந்தமாக விருக்கப்பாக்கியம் பெற்றிலனன்றோ? வீண் செருக்கு வினையாய் முடிந்ததே. என்னிடந் தான் கண்ணன் மற்ற வரிடத்திற் காட்டிலும் பேரன்புடன் விளங்கியதாக எண்ணியிருந் தேனே. அவரை நேரிற் காணும் பாக்கியமற்றேனே! 'பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே பற்று நான் மற்றிலேன்!' 'யாரொடு நோகேன் என் துயர் 'யார்க் கெடுத்துரைக் கேன், ஆண்ட நீ அருளிலை யானால்?' எளியேனை காப்பாற்றுவது தமது பாரமாயிற்றே. ஸர்வ பந்தங்களையுமொழித்து, மூவாமுதல்வனெனத் தங்களைச் சரணடைந்த எம்மைச் சுகத்தே சற்றேயிருத்தி, இடையே இவ்வாறு நட்டாற்றில் போக்கிவிட்டால் நான் என் செய்கேன்?" என்றவர் ஒவ்வொருவரும் எண்ணும்போதே அவர் மனங்கிளுகிளுத்து

அத்தனாகி யன்னையாகி யாளுமெம்பிரானுமாய்
எத்தொவ்வாத பல்பிறப் பொழித்து நம்மையாட்
கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்தனால இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே

என்ற எண்ணங் கொண்டு சாந்தி பெற்றது.

அப்போதவர் அளவு கடந்த ஆநந்தமடைந்தனர். கண்ணனது திருவிளையாடல்களில் ஈடுபட்டுத் தாமே கண்ணனாக எண்ணி எண்ணி உளம் நெக்குநெக்குருகுவர்; கண்களில் ஆநந்த நீர் சிந்த அவ்வாடல்களை அபிநயித்தாடத் தலைப்பட்டனர். சிலர் கண்ணனாகவும் சிலர் பூதனை முதலியர் போலவும் பாவித்துக் கண்ணனது சிறுநாள் ஆடல்களையெல்லாம் நடித்தவண்ணமாய் அககாட்டுள் கண்ணனைத் தேடிக்கொண்டிருந்தனர்; முற் கண்ட அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்துகொண்டேயிருந்தனர். இடையே அக்கோபி கீழே கிடக்கக் கண்ட அவர் அவளைத் தேற்றினர்; அவ்வாறிருக்கக் காரணங் கேட்டனர்.

"அஹோ! நான் என்னெனக் கூறுவது! அவ்வினிய குழலோசை என் மனதைக் கொள்ளை கொண்டது. என்னை மாத்திரமன்று;

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
  செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிக்கக்
குறுவெயர் புருவங் கூடலிப்பக்
  கோவிந்தன் குழல்கொ டூதின போது
பறவையின் கணங்கள் கூடுதிறந்து
  வந்து சூழ்ந்து படுகாடுகிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
  கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே.

அவ்வத்புத நாதவொலியா லிழுக்கப்பட்ட என் உள்ளம், மற்றதை யெல்லாம் துறந்து, கண்ணனையே கண்டடைய அலைந்திங் கடைந்தது. என்னை இங்கு பூவா லலங்கரித்து, வாயாற் புகழ்ந்துரைத்து, அன்போடு பரிந்து, வெகு உல்லாஸமுடன்என்னோடு அவர்விளையாடிவந்தனர். அவரோடு ஸரியாக நடக்கமுடியா என்னையவர் தம் தோள்மேல் எடுத்துச் செல்லும்போது என்னினும் யார் பேறு பெற்றார் என எண்ணினேன். அடுத்த க்ஷணத்தில் அவரையிங்குக் காணேன்; திடீரென எங்கோ மறைந்துவிட்டனர். கருவத்தால், அந்தோ, நான் கெட்டுவிட்டேன். உள்ளந்துறந்து, அகந்தை ஒழிந்து விளங்குவார் உள்ளத்தி லல்லவா அவருலாவுவது?" எனத் தனது கதையை வெளியிடக் கேட்ட மற்ற கோபியரும் தாம் கொண்டிருந்த கருவமற்று அவரது பெருமையை விரித்துரைக்க வாரம்பித்தனர். தமது சிறுமையையும் பகவானது பெருமையையும் எண்ணியவர் கண்ண பிரானது அந்தராத்ம நிலையை நாடியறிய உள்ள முருகப் பாடிய அவரிடம் கண்ணன் எவ்வாறு விளங்கினர்?

எல்லா மவன்செயலே என்றிருக்கும் வல்லார்க்
கில்லைகா ணாகாத திறையே பராபரமே.

(தொடரும்.)

சூரியனுடைய சக்தி

SOLAR ENERGY

பிரபஞ்சமானது மூன்று நித்திய வஸ்துக்களால் நிறைந்துள்ளது என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். அதாவது (1) மூலப் பிரகிருதி, (2) ஜீவாத்மா, (3) பரமாத்மா. இந்த மூன்றும் நித்தியமாய் என்றென்றைக்கும்அழிவில்லாமலிருக்கும் பொருட்கள். பரமாத்மா என்பது கடவுள். அவர் இப்பிரபஞ்சத்தில் எல்லாப் பொருள்களிலும், எல்லா விடங்களிலும் அந்தர்யாமியாய்ப் பிரவேசித்து நிறைந்து பூரணமா யிருக்கிறார். மகத்துக்குள் மகத்தாயும், அணுக்குள் அணுவாயும், ஆத்மாவுக்குள் ஆத்மாவாகவும் இருக்கிறார். அவர் இல்லாத இடமே கிடையாது. ஸ்தூலப் பொருட்களைச் சூட்சுமப் பொருட்களாக்கி அவைகளைத் தம்முள் அடக்கிக்கொண்டு சிலகால மிருப்பர். அண்டபிண்ட சராசரங்கள் ஒன்றுமே யில்லாமல் கடவுள் தாமே தனித்து எங்கும் பரவி அரூபமாய் இருப்பர். அவர் உலகத்தை யுண்டாக்கி, பிரபஞ்சலீலை காணத் திருவுள்ளங்கொண்டால் தம்முள்ளடக்கியிருக்கும் ஸ்தூல ப்ரகிருதிப்பொருளைப் பஞ்சபூதங்களாக விகர்ப்பிக்கச் செய்வார். இப்படி அவர் திருவுள்ளம் பற்றும்போது முதல் முதல் இப்பிரபஞ்சமானது ஆகாயப் பரப்பில் வாயு ரூபமாகிச் சுழன்று அதில் அக்னியுண்டாகி, ஸ்தூலப்ரகிருதிப் பொருள்கள் யாவும் அக்னிமயமான ஆவியாகிச் சுழன்றுகொண்டிருந்தது. நாளடைவில் அந்த ஆவி உலோகப் பொருள்களை உலையில் ஊதி உருக்கி வார்த்ததுபோல் ஸ்தூலித்து வந்தது. இப்படிச் சுற்றிச் சுழன்றுகொண்டு வந்த உருகிய ஸ்தூலப் பொருளாகிய சூரியக் கிரஹமானது ஸ்தூலித்துக் கெட்டி யடைந்து வரும்போது சுற்றுச் சுழற்சியில் ஓரே மொத்தமாகச் சேர்த்துப் பிடித்திருக்கும் சக்தியின் வலிமை சற்றுக் குறைவடையவே அதிலிருந்து துண்டுகள் வேறுபட்டுச் சிதறுண்டு போயின. அவைகள் பூமண்டலமாகவும் சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, முதலான பல அண்டங்களாகவும் தோன்றி, மத்தியில் தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கும் மகத்தான அண்டமாகிய சூரியக் கிரஹத்தின் கவர்ச்சியினால் அவ்வவற்றின் நிலையினின்றும் தவறிவிடாமல் சூரியனைச்சுற்றி வரும் கதியை யடைந்து நின்றன. இப்படி வேறான அண்டங்களும் உருகிய உலோகப் பொருளாகவே யிருந்து, அதிலிருக்கும் சூடு தணியத்தணிய வெளிப்பக்கம் ஆறிக் கடினமடைந்து மேற்புறணி கிட்டமாகியும் உள்பக்கத்திலுள்ள சூடு தணியாமல் அங்குள்ள ஸ்தூலப்பொருள் உருகியே நின்று கொஞ்சங் கொஞ்

சமாய் ஆறி வருகிறது. இப்பூமண்டலத்தினுள்ள சில பாகங்களில் எரிமலைகள் வாய் திறந்து அவைகளிலிருந்து பர்வதாக்கினிப் பிரவாகம் வெளிப்பட்டு அநேக மைல் விஸ்தீர்ணத்துக்குப் பாய்ந்து அங்குள்ள நாடுகளையும் பட்டணங்களையும் பாழாக்கிவிடுகின்றது. இதனால் இவ்வண்டத்தினுட்பக்கம் இன்னமும் உருகியபடியே யிருக்கிறதென்றும், சூடாறி ஸ்தூல ஸ்திதியை யடையவில்லையென்றும் தெரியவரும். கடினமடைந்த மேற்புரணி யானது பாறைகளாய் அமைந்து பல யுகங்களாகச் சூரியன், வாயு, தண்ணீர் இவைகளின் சம்பந்தத்தால் உடைந்து தகர்ந்து அரைக்கப்பட்டுப் பாறைத் தூளாகின்றது. இப்படிப் பிராணன் என்னும் ஜீவாத்மாவின்பிரவேசம் இதுவரையிலும் ஏற்படாத கேவல ஸ்தூல வஸ்துவாகிய பாறைத் தூளினிடத்தில் பரமாத்மாவின் உத்தேசப்பிரகாரம் ஜீவாத்மா பிரதிபலித்து முதல்முதல் கண்ணுக்குத் தெரியாத தாவர ஜீவ அணுக்களாகக் விகர்ப்பித்துத் தோன்றுகின்றன. அவற்றின் வளர்ச்சியால் அணுத்தாவர ராசிகள் உண்டாகி வளர்ந்து மடிகின்றன. இப்படியே சில நூற்றுண்டுகளாக நடந்தேறிவர, தாவர வர்க்கப்பொருள் வரவரப் பாறைத்தூளுடன் அதிகமாகக்கலந்து சேர்ந்து அதிலிருந்து பூவாதே தம்மினத்தைப் பெருக்கும் தாழ்ந்த தாவர வர்க்கங்களும், அவற்றினின்று புஷ்பித்துக் காய்த்து விதையுண்டாக்கிப் பல்கிப் பெருகிவரும் மேலான தாவர ராசிகளும் உண்டாயின. இவற்றிலிருந்து அணுரூபமான ஜந்துக்கள் உற்பவித்துப் படிப்படியாய் ஊர்வன, நகர்வன, நீர்வாழ்வன, பறப்பன முதலான பலவகை ஜந்துவர்க்கங்களும் அவற்றினின்று வானரமும் அதனின்று மனிதரும் தோன்றினார்கள். இது பிரபஞ்ச உற்பத்திசாஸ்திர க்கொள்கை.

இப்படிப் பிரபஞ்ச உற்பத்திக்கு முதற்காரணரா யிருந்தது பரமாத்மாவான கடவுளாயிருந்தாலும், அவர் முன் கூட்டி ஏற்படுத்தியிருக்கும் இயற்கை விதிகளை யநுசரித்துப் பிரபஞ்சம் உண்டாகக்கடவது என்று திருவுளம் பற்றிய வுடனேயே சகல காரியங்களும் இயற்கையாய் நடந்தேறி வருகின்றன. அதன் பிரகாரம் மகத்தான சூரியக்கிரஹ அண்டமானது பிரபஞ்சத்தில ஆகாய மண்டலத்தன் நடுவே பம்பரம் சுழல்வதுபோலத் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு தன்னிலையாகிய உத்தராயண தக்ஷிணாயங்களுக் குள்பட்டு நிற்கவும், அந்த அண்டத்தால் கவரப்பட்டுச் சகலமான மற்ற அண்டங்களும் அதைச் சுற்றிச் சுழன்று வரவும் ஏற்பட்டது. பிரபஞ்சமானது நிலைநிற்பதும், அதன் சகலாண்டங்களிலுமுள்ள தாவர ஜீவ, ஜந்துஜீவ வர்க்கங்கள் உயிர்பெற்று உற்பத்தியாகி வளர்ந்து பல்கிப் பெருகுவதும் அவ்வவைகளுக்கு ஏற்பட்ட காலம் முடிந்தவுடன் அவை மாண்டு மடிந்துபோவதும் சூரிய பகவானுடைய மகத்தான சக்தியினுலேதான். சூரியப்பிரகாசம் இல்லையானல் பிரபஞ்சத்தில் ஒரு புல்லாவது பூண்டாவது செடியாவது கொடியாவது காயாவது கிழங்காவது பயிராவது பழமரமாவது பார்க்க முடியாது.

செடிகள் எப்படி உண்டாகின்றன? மண்ணில் ஒரு விதையை ஊன்றித் தண்ணீர் விட்டால் அதிலிருந்து ஒரு செடி உண்டாகிறது. ஆகவே விதைகளிலிருந்து செடிகள் பிறக்கின்றன என்றும், அப்படிச் செடிகள் பிறந்து வளர்வதற்கு விதைகளை மண்ணில் ஊன்றித் தண்ணீர் விடவேண்டும் என்றும் நமக்குத் தெரிகிறது. ஒரு விதை மிகவும் சிறிதாயிருக்கிறது. அதிலிருந்து பிறந்து வளரும் செடியானது மிகவும் பெரிதாயிருக்கிறது.

> " தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
> தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
> அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
> மன்னர்க் கிருக்க நிழலா குமமே"

என்று நீங்கள் வாசித்திருக்கிறீர்கள். " இப்படி ஒரு சிறிய வித்திலிருந்து பிறக்கும் சிறு முளையானது வர வரப் பெரிதாய் வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து உயிர்வாழ்வது எப்படி? வளர்ந்த ஒரு பெரிய செடியை வெயிலில் உலர்த்தி நிறுத்துப் பார்த்தால அதன் விதையைப் பார்க்கிலும் அது ஆயிரம் மடங்குக்கும் அதிகமாக இருக்குமல்லவா? விதையிலில்லாத இந்த அதிகமான வஸ்து அந்தச் செடிக்கு எப்படிக் கிடைத்தது? அந்த அதிக வஸ்து அந்தச் செடிக்குள் எப்படிச் சென்று தங்கிற்று?" என்னும் கேள்விகள் உடனே நமக்குத் தோன்றுகின்றன.

ஒரு குழந்தையின் தேகம் எப்படி வளர்

கடுக்காய்க்கு அகணி நஞ்சு, சுக்கிற்குப் புறணி நஞ்சு.

கின்றது? அது முதல் முதல் தாய்ப்பால் குடித்து வளர்கிறது. அதன்பின் பலவித ஆகாரங்களை உண்டு வளர்கிறது. அதைப்போலவே ஒரு செடியும் உணவை உண்டு ஜீவித்து வளர்கிறது என்று தீர்மானிக்க வேண்டும்.

அப்படியானல் செடிகள் என்ன ஆகாரத்தை அருந்துகின்றன? அவைகளுக்கு ஆகாரம் எங்கிருந்து கிடைக்கிறது? செடிகள் இங்குமங்கும் நடந்து திரிவதில்லை. அவைகள் முளைத்த இடத்திலேயேதான் நின்று வளர்கின்றன. நிலத்தில் செடிகள் முளைத்து வளர்கின்றன. அதற்குத் தண்ணீர் பாய்ச்சுகிறோம். செடிகளைச் சுற்றிலும் ஆகாயம் இருக்கிறது. இவ்விதமாகச் செடிகளுக்குச் சம்பந்தமுள்ளனவாக நிலமும், நீரும், ஆகாயமும் ஆகிய மூன்று வஸ்துக்கள்தான் இருக்கின்றன. செடிகள் உணவை அருந்துவது நிஜமானல் அவைகள் இம்மூன்று பொருட்களிடத்திலிருந்துதான் தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்க வேண்டும். வேறு வழிகளில் சம்பாதிக்க முடியாது; ஏனெனில் வேறு யாதொன்றும் செடிகளின் அருகில் இல்லை.

செடிகளைக் காயப்போட்டு எரித்தால் அதிகப் பாகம் புகையாகவும் ஆவியாகவும் போய்விடும். மீந்தது கொஞ்சம் சாம்பல். அதில் சில உலோக வஸ்துக்கள் இருக்கின்றன. புகைந்தும் ஆவியாகவும் போனது கரிப்பொருளும், பிராணவாயுவும், ஜலவாயுவும், நைட்ரோஜன் வாயுவுமே. சுமார் இரண்டு ஏக்கரா நிலத்திலிருந்து விளைவான பயிரைக் காயப்போட்டு நிறுத்துப் பார்த்ததில் 4500 இராத்தல் இருந்தது. அதை ரசாயனக் கூறுபாடு செய்து பார்த்ததில்

1690 இராத்தல் கரிப்பொருள்.
1340 இராத்தல் பிராண வாயு.
177 இராத்தல் ஜலவாயு.
74 இராத்தல் நைட்ரோஜன் வாயு.
270 இராத்தல் சாம்பல்

இருந்தன. செடிகளுக்குள் இவைகளைத்தவிரத் தண்ணீரும் அதிகமாயிருக்கிறது. புல்லிலும் உருளைக் கிழங்குகளிலு மிருக்கும் வஸ்துக்களின் நிறையில்முக்கால்பங்கு தண்ணீர்தான். தசைப் பற்றுள்ள காய்கறிச் செடிகளில் இன்னும் அதிகத் தண்ணீர் அடங்கியிருக்கிறது. முள்ளங்கியிலும் பீட்ரூட் என்னும் சர்க்கரை முள்ளங்கிக் கிழங்குச்செடியிலும் 100-க்கு 80 முதல் 90பாகம் தண்ணீர்தான். வைரமுள்ள விருக்ஷங்களிலும் 100-க்கு 30 முதல் 60 பாகம் தண்ணீர் நிறைந்திருக்கிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

மண்ணானது சிலிகன், அலுமினு, இரும்பு, கந்தகம், மகனிசியம், மரப்பு, பிரகாசிதம் முதலிய பல உலோக வஸ்துக்களும் வெடியுப்பு போன்ற சில உப்புக்களும் செடி கொடிகளின் இலைகளும், ஜீவஜெந்துக்களின் கழிவுப் பொருட்களும் கலந்த ஒரு ஸ்தூல வஸ்து. ஆகாயமானது நைட்ரோஜன் என்னும் நிர்ஜீவமூல வாயுவும், பிராணவாயுவும், கரியமிலவாயுவும் கலந்த ஒரு வஸ்து. தண்ணீரானது பிராணவாயு ஜலவாயு இவ்விரண்டு வாயுக்களும் கலந்துண்டான வஸ்து. ஆகையால் செடிகள் தங்களுக்கு வேண்டிய கரிப்பொருளை ஆகாயத்திலுள்ள கரியமல வாயுவிலிருந்து இலைகளின் வழியாய் உட்கொள்ளுகின்றன. பிராணவாயுவை ஆகாயத்திலிருந்து இலைகளின் வழியாயும் தண்ணீரிலிருந்து வேர்களின் மூலமாயும் எடுத்துக் கொள்ளுகின்றன. ஜலவாயுவைத் தண்ணீரிலிருந்தே வேர்கள்வழியாய்க் கிரஹிக்கின்றன. நைட்ரோஜன் சத்தை நிலத்திலுள்ள நைட்ரேட் என்னும் ஒருவகை உப்புத் தினுசுகளிலிருந்து செடிகள் தங்கள் வேர்களின் வழியாய் அருந்துகின்றன. செடிகளை எரிக்கும்போது சாம்பலாக நீறும் உலோகப் பொருள்கள் மண்ணிலிருந்து செடிகளுக்குக் கிடைக்கின்றன.

இவ்விதமாகச் செடிகள் அருந்தும் ஆகாரத்தில் மூன்றில் ஒரு பாகம் கரியமிலவாயுவாகவே இருக்கிறது. இந்த வாயுவானது கரிப்பொருளும் பிராண வாயுவும் கலந்துண்டானது. சூரியப்பிரகாசம் உள்ளபோது செடிகள் தங்கள் இலைகளிலும் பச்சைநிறமுள்ள மற்றப் பாகங்களிலுமுள்ள கணக்கற்ற நுட்பமான வாய்களின்வழியாய்க் கரியமில வாயுவை உள்ளே வாங்கி அதைப் பிரித்துக் கரிப்பொருளைத் தமக்குள்ளிருத்திக்கொண்டு பிராணவாயுவை மட்டும் வெளியே விடுகின்றன. சூரியப்பிரகாசமில்லாதபோது இந்த வேலையைச் செய்யக்கூடிய சக்தி செடிகளுக்கில்லை. சூரிய ஒளியுள்ளபோதுதான் கரியமிலவாயுவி லிருந்து செடிகள் கரிப்பொருளைப் பிரித்துக் கிரஹித்து

கடிதான பிள்ளை பெற்றோருக்கு உதவுமா ?

அதை மரப்பொருளாகவும் கட்டையாகவும் சர்க்கரையாகவும் தைலசத்தாகவும் செய்து கொண்டு வளர்கின்றன நாம் உண்ணும் உணவானது வயிற்றில் சீரணிக்கப்பட்டு இரத்தத்துடன் கலந்து பல உறுப்புகளுக்கும் சென்று அங்கங்கே எலும்பாகவும், தசையாகவும், கொழுப்பாகவும், தோலாகவும், உரோமமாகவும் நகங்களாகவும் எப்படி மாறுதலடைகின்றனவோ அதேவிதமாய்ச் செடிகள் அருந்தும் ஆகாரமும் அடிமரமாகவும், இலைகளாகவும், பூவாகவும், காயாகவும், கிழங்காகவும், சர்க்கரையாகவும் மற்றும் பலவித வஸ்துக்களாகவும் மாறுதலடைகிறது. இப்படி மாறுதலடைந்த பல பொருட்களிலும் ஒருவித சக்தியுள்ளடங்கியிருக்கிறது. தான்யங்களையும் காய் கனி கிழங்கு வகைகளையும் மனிதர் உண்கிறார்கள். இலை தழை முதலியவைகளை மிருகங்களுண்கின்றன. மனிதர் பசியினால் மெய் சோர்ந்து கைதளர்ந்து கால்மெலிந்து கண் பஞ்சடைந்து களைத்துப் போயிருக்கும்போது கொஞ்சம் ஆகாரம் சாப்பிட்டால் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் முன்போல் சரீரதிடம் பெற்று எப்போதும்செய்யும் வேலைச்யைசெய்யக்கூடிய சக்தி அவர்களுக்கு உண்டாகிறது. கால்நடைகளுக்கு ஆகாரம் கொடுக்கவில்லையானால் வண்டி, கலப்பை, கவலை முதலியவைகளை இழுக்கக்கூடிய சக்தி அவைகளுக்கில்லாமல் போகிறது. மறுபடி அவைகளுக்குச் சரியான ஆகாரம் கொடுத்தால் அவைகள் முன் செய்த வேலையைச் சிரமில்லாமல் செய்யக்கூடிய சக்தி அவைகளுக்குண்டாகிறது. இந்த சக்தியானது ஜந்து வர்க்கங்களுக்கு உண்டாவது அவைகள் உண்ணும் தாவர வர்க்கப் பொருள்களிலிருந்துதான். ஆகவே மனிதருக்கும் மற்ற ஜீவஜந்துக்களுக்கும் தேக போஷணையின் பொருட்டும் வேலை செய்ய வேண்டியதற்காகவும் அவசியமானசக்தியைத் தாவரவர்க்கங்கள் கொடுக்கின்றன. தாவர வர்க்கங்கள் இப்பிரபஞ்சத்தில் இல்லாமல் போனால் ஜந்து வர்க்கங்கள் சிறிதுமின்றி நசிக்குமென்பதில் சந்தேகமேயில்லை.

தாவரவர்க்கங்களிலிருந்து ஜந்துவர்க்கங்கள் சம்பாதித்த இந்தச் சக்தி என்ன கதியாகிறது? மனிதரும் மிருகாதிகளும் வேலைசெய்வதிலும் பட்சிகள் பறப்பதிலும் கொஞ்சம் சக்தி செலவாகிறது. ஜந்துவர்க்கங்கள் சுவாசிக்கும்போது ஆகாயத்திலுள்ள பிராண வாயுவானது சரீரத்திலுள்ள கரிப்பொருளைத் தாக்கிச்சுட்டெரித்து உடம்புக்குவேண்டிய உஷ்ணத்தை யுண்டாக்குவதில் செலவாகிறது. தாவரவர்க்கங்கள் சூரிய பகவானிடமிருந்து பெற்றுத் தம்முள் ளடக்கி வைத்திருந்த இந்தச் சக்தி இப்படிப் பலவகைகளில் செலவாய்ப்போவதுமல்லாமல் ஜந்து வர்க்கங்கள் மாண்டு மடியும்போதும் அவற்றின் ஸ்தூல சரீரங்கள் அழுகி அழிந்து பஞ்சபூதங்களும் வெவ்வேறாய்ப் பிரிந்து மூலப் பிரகிருதியுடன் கலந்து போகும்போதும் நாசத்தை யடைகிறது.

இவ்விதமாக அநேக நூற்றாண்டுகளுக்கு ஜந்து வர்க்கங்களுக்குத் தாவரவர்க்கங்கள் உதவும் சக்தியானது அவம்போய்க் கொண்டேயிருந்தால் பிரபஞ்சத்தில் உள்ள சக்தியானது மிகவும் குறைவடைந்து போகுமல்லவா? ஒவ்வொரு யந்திரத்தின் இயக்கத்துக்கும் எண்ணெயோ, கட்டையோ, நிலக்கரியோ எரிய வேண்டியது அவசியமாகின்றது. நிலக்கரியும் கட்டைகளும் இல்லையானால் புகைக்கப்பல்களும் புகைவண்டித் தொடர்களும் எப்படி ஓடக்கூடும்? உலகம் முழுவதிலும் எத்தனை கைத்தொழிற்சாலைகளில் நிலக்கரி எரிக்கப்படுகிறது! எத்தனை கோடிமைல்கள் தூரத்துக்கு ஒவ்வொருநாளும் புகைவண்டிகளும் புகைக் கப்பல்களும் ஓடிக்கொண்டிருக்கின்றன! இவைகள் வேலை செய்வதற்கு அவைகளில் எரிக்கப்படும் கட்டையிலும் நிலக்கரியிலும் தாவரங்கள் சேகரித்து வைத்திருந்த சக்தியல்லவா மூல காரணம்! அந்த ஏராளமான சக்தியைத் தினந்தோறும் எண்ணிறந்த ஜந்து வர்க்கங்கள் செலவழித்துக் கொண்டே யிருக்கின்றனவே. இப்படி எப்போதும் சக்தியானது அபரிமிதமாய்ச் செலவாகிக் கொண்டேவந்தால், பின் பிரபஞ்சத்தின் தொழில்களுக்கு வேண்டிய சக்திக்கு எங்கே போவது என்று யோசித்தால், பரமாத்மாவானவர் அதற்கொரு மார்க்கம் உண்டாக்கியிருக்கிறார். ஒரு வீட்டிலுள்ள ஒருவன் அங்குச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் தானியத்தை யெடுத்து வெளியில் சிதறிவிட்டுப் போக அவ்வீட்டிலுள்ள மற்றொருவன் அவசரமாக ஓடிவந்து அதிக ஜாக்கிரதையுடன்

சிதறுண்டு கிடக்கும் ஒவ்வொரு மணியாய்ப் பொறுக்கித் திரட்டி மறுபடியும் களஞ்சியத்தில் சேர்ப்பது போலவும், கடலில் கரைத்த காயத்தையும், ஆற்றில் கரைத்த உப்பையும் அனேகமாயிரம் ஜனங்கள் அதிக சிரமப்பட்டு வேலைசெய்து பிரித்தெடுத்து சேர்ப்பதுபோலவும், ஜந்து வர்க்கங்களால் செலவழிக்கப்பட்ட சக்தியை தாவர வர்க்கங்கள் மறுபடியும் சம்பாதித்துச் சேகரித்து வைப்பதற்கேற்ற மார்க்கத்தை கடவுள் உண்டாக்கியிருக்கிறார்.

கட்டையும் கரியும் எரியும்போதும், ஜந்து வர்க்கங்கள் சுவாசிக்கும்போதும், அவற்றின் சரீரங்கள் அழுகிக் கெடும்போதும் அங்கிருந்து கரியமிலவாயு கிளம்பி ஆகாயத்துடன் மறுபடியும் கலந்துபோகிறது. இப்படி நஷ்டமடைந்த கரிப்பொருளை சூரிய பகவானுடைய பிரகாசத்தின் மகிமையால் பச்சிலை போர்த்த பல தாவரங்களும் ஆங்காங்கு வேலைசெய்து மறுபடியும் சேகரித்து வைத்துக் கொள்ளும்படி இயற்கையிலேயே அமைத்திருக்கிறார். இவ்வேறுபாட்டினால் பிரபஞ்சத்திலுள்ள சக்திக்கு அழிவில்லாமல் அது மூலப்பிரகிருதியுடன் சம்பந்தப்பட்டு பல தொழில்களையும் இயற்றவும், ஜீவாத்மாவின் சரீர யாத்திரைக்கு அவசியமான சாதனமுண்டாகி யிருக்கிறது.

நம்மவர்கள் சூரியனே சக்தி; சூரியனே லோகோத்பத்திக்குக் காரணன்; சூரியனே பயிர்களுக்குத் தகப்பன்; சூரியனே ஜீவர்களுக்குப் பிராணதாரன்; சூரியனே மழையை உண்டாக்குகிற தாரகன்; சூரியனே காற்று வீசும்படி செய்கிற எஜமானன்: சூரியனே கடவுள் என்றிப்படி புகழ்வதற்குக் காரணம் இப்போது வெளியாகிறது. பிரபஞ்சத்திலுள்ள சக்தி முழுவதும் சூரியனால் உதவப்பட்டதேயன்றி வேறல்ல. சூரிய வொளியில்லையானால் பயிர்களில்லை. பயிர்களில்லையானால் சகல ஜீவராசிகளுமில்லை. பாழ்நிலங்களும் பொட்டலும் மரம் செடி கொடி புல் பூண்டுகள் ஒன்றுமில்லாத கல்மலைகளும் பாறைகளுமே எங்கும் நிறைந்திருக்கும். ஆகையால் பிரபஞ்சத்தின் செல்வம் சூரியன் தந்த பாக்கியம். சூரிய ஒளியின் மகிமையால் பிரபஞ்சத்திலுள்ள சக்தியானது சக்கரஞ் சுழல்வதுபோலச் சுழன்றுகொண்டே யிருக்கிறது.

வான்மீகரும், தென்னாடும்

SRI YALMIKI AND SOUTH INDIA

(300-ம்—பக்கத் தொடர்ச்சி.)

அஃதாவது—“கவாடம்—பாண்ட்யானாம் நகர த்வார கபாடம்” பாண்டியரது நகரவாயிற் கதவு, என்பது தீர்த்தீயம்; ‘யுக்தம் - புரப்ராகார கடிதம்” நகரத்தெயிலோடு இணைக்கப் பட்ட, என்பது திலகம். இங்ஙனம், வடநாட்டாராய் விளங்கிய உரையாசிரியர் கருத்திவையாயினும், தென்னாட்டாராய் வான்மீகத்துக் குரையிட்ட கோவிந்தராஜர் முழுக்கருத்தும் ஈண்டு ஆராயத்தக்கது. அவர் அடியில் வருமாறு எழுதுகிறார்:—

‘ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம் | யுக்தம் கவாடம் பாண்ட்யானாம் கதா த்ரக்ஷ்யத வானரா: ||’

இதன் பொருள் பாண்ட்யானாம்—பாண்டிய ராஜாக்களுடைய, யுக்தம்—யோக்யம், கவாடம்—இதனால் நகரம் குறிக்கப் படுகிறது; முக்தாமணி விபூஷிதம் — முத்துமயமான மணிகளால் அலங்காரமாகிய, என்றது அது பிறக்குமிட மாதலால் (அங்கே அது மிகுந்துள்ளது) என்பது கருத்து.

இவ்வரும் பதவுரையால், ஸ்ரீ கோவிந்தராஜர் “முத்துமயமான மணிகளால் அலங்காரமானதும் பாண்டியர்க்கு யோக்ய மானதுமான பாண்டியரது கவாடபுரம்” என்பதே பொருள் என்று கருதினாதல் காண்க. முற்கூறிய தீர்த்தீய திலக வியாக்கியானங்களினும், இவ்வியாக்கியானம் தமிழ் வழக்குகளைத் தழுவி மிகச் சிறந்து நிற்றல் தெளியப்படும்; என்னை? “கபாடபுரம்” என்பது பழங்காலத்

தே பாண்டிய ராஜதானியாய் இடைச்சங்கமிருந்து தமிழ் ஆராய்ச்சி செய்துவந்த நகரம் என்பதும், இக்கபாடபுரச் சங்கத்தில் தொல்காப்பியம் செய்யப்பட்ட தென்பதும், இச்சங்க மிருந்தார் ஐம்பத் தொன்பதின்மர் என்பதும் பிரசித்தமாதலால் என்க; இதனை, இறையனார் களவியற் பாயிரத்தில் "அவர் (இடைச்சங்கத்தார்) சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத் தென்ப" எனவும்; சிலப்பதிகாரம் உரைப் பாயிரத்தில் "இரண்டா மூழியதாகிய கபாடபுரத்தில் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திரீஇய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து" எனவும்;

"இவ்வகை யரசிற் கவியரங் கேறினர்
ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுர மென்ப"

எனவும் * வருவனவற்றால் காண்க. திலக முதலிய வியாக்கியானங்களின்படி, கவாடமென்பது பாண்டியரது வாயிற் கதவெனக் கொண்டு, அதற்கேற்ப 'யுக்தம்' என்னும் சொல்லோகரத்தரனோடு இணைக்கப்பட்ட என்னும் பொருள்படுத்திக் கவாடத்துடன் பொருத்தல் சிறவாமைகண்டு, அது பாண்டியரது நகரத்தையே குறித்ததாகல் வேண்டுமெனச் சுலோக வியல்பையறிந்து கோவிந்தராஜர் எழுதிய குறிப்புப் புகழத்தக்கதாம். கபாடமென்னும் பெயர்கொண்ட பாண்டிய நகரமொன்றிருக்கும்போது, கதவென்னல் வேண்டா என்பது எளிதில் விளங்கத்தக்கதன்றே? மேலும், நுணுக்கமான இடங்களிலெல்லாம் தேடிவரும்படி வானர வீரர்கள் ஏவப்பட்டிருக்க, ஈண்டுமட்டும், பாண்டியனது தங்கக் கதவைப் பார்த்துவிட்டு வரும்படி கூறப்பட்டதென்பது வான்மீகியின் கருத்தாகாதென்க. இனி, "முக்தாமணி விபூஷிதம்" என்னும் அடைக்கு, கோவிந்தராஜர், 'முத்தும் மணியு மிவற்றால் அலங்கரிக்கப்பட்ட, எனக் கதவுக்கேற்றிப் பொருள்கொள்ளாது, "முத்துமயுமான மணிகளால் அலங்காரமாயுள்ள என்றது, அது பிறக்குமிட மாதலால் (அந்நகரத்தில் அது மிகுந்துள்ளது) என்றது கருத்து" என்று நகரத்திற்கேற்பக் கூறியதும், அவரது தமிழ் வழக்கினை யறிந்தெழுதும் உரைச் சிறப்பைக் குறிக்கின்றது. என்னை? கபாடபுரம் தாமிரபர்ணியின் சங்கமத் தயலில் உள்ளதாதலாலும், அந்நதி கடலுடன் கலக்குமிடத்துப் பிறக்கும் முத்து ஆணித்தரமான தென நூல்கள் கூறலாலும் என்க. இதனை "தலங்காவலன் றஞ்சைவாணன் முந்நீர் பொருந் தண்பொருந்தத் திலங்கார் வலவடம்" * என்னும் பொய்யாமொழியார் வாக்காலும், ஸ்ரீ காளிதாசரும், "ரகுமகாராஜருக்கு அப்பாண்டியர், தாமிரபர்ணி சமுத்திரத்தில் விழுமிடத்திலிருந்து எடுத்த நன்முத்துக்களை, தாங்கள் அவ்வளவு நாளாகச் சேர்த்து வைத்திருந்த புகழைக் கொடுப்பதுபோலக் கொடுத்தார்கள்" என, இரகுவமிசத்து (ஸர்க்கம்-4, சுலோகம், 50) கூறுதலாலும் அறியலாகும். இதனால் ஆணி முத்துக்களின் வளத்தால் அலங்காரமாயுள்ளது கபாடபுர மென்பதாயிற்று.

இங்ஙனம் "விண்ணகம் பரவுமேதகு கீர்த்திக் கண்ணகன் பரப்பிற் கபாடபுர"த்தை, தெய்வப்புலமை வான்மீகி முனிவர் சிறப்பித்துக் கூறியிருத்தல் போலவே, அவரால் வேறு தமிழ்நாட்டு முக்கிய பட்டணமும் கூறப்பட்டதுண்டோ எனின்; உண்டு. வானர வீரரிற் சிலரை சுக்கிரீவன் மேல் நாடுகளில் தேட விடுக்கும்போது அடியிற்கண்ட சுலோகம் சொல்லப்பட்டுள்ளது.

முரசீபத்தநம் சைவ ரம்யம் சைவ
ஜடீபுரம் | அவந்தீமங்கலேபாஞ்ச ததா
சாலக்ஷிதம் வநம் ||

(கிஷ்கிந் காண்டம், 42-ம், அத். 12-ம் சுலோகம்)

இச்சுலோகத்துக் கண்ட நகர முதலியவைகளில், முதலிற் குறித்த முரசீபத்தனம் என்பது அம்மேல் கடற்கரையிலுள்ள முசிரி என்னும் பட்டினமேயாதல் வேண்டும். இது, முற்காலத்தே, சுள்ளியென்ற பேரியாறு கடலுடன் கலக்கும் இடத்து விளங்கிய பெருந்துறைமுகமாயும், சேரவரசர்க்கு முக்கிய பட்டணங்களில் ஒன்றாயும் இருந்ததென்றும், மேனாட்டு யவனரது மரக்கலங்கள் மிளகு முதலியன ஏற்றுதற்கு இதுவே அக்காலத்து ஏற்ற பட்டினமான தென்றும், மேற்றேயத்து யாத்திரைக் காரராகிய பிளினி, தாலமி முதலிய யவனாசிரியர் குறிப்புக்களால் விளங்குதலோடு, "சேரலர், சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்த வினைமாண் கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும், வளங்கெழு முசிரி" என்னும் அகநானூற்று 149-ம் பாட்டாலும் தெளிவாகின்றது. சேரர்க்குரிய இப்பட்டினத்தைப் பழங்காலத்துப் பாண்டியனொருவன் வளைந்துகொண்டு பெரும் போர் புரிந்து, இதன்க ணிருந்த சேரரது படிமமொன்றைக்கவர்ந்து சென்றனன் (அகம்.149) இத்தகைய பட்டினம், மிகுந்த பழைமையும் மேல் கடற் பக்கத்ததாயும் இருந்தமையால் இதனையே வான்மீகி முனிவர், "முரசீபத்தனம்" என்றன ராதல் வேண்டும். முசிரி என்பதை வான்மீகி, முரசீ என்று ஒருபடியாகத் திரித்து வழங்க, பின்னையோ ராகிய வராக மிகிரர் பிரகத் ஸம்ஹிதையில், இதனை மரீசி பத்தனம் என வழங்கினர். மரீசி—மிளகு; மிளகின் வள மிகுதியைக் கொண்டிருந்தமையால் அப்பட்டினம் அவ்வாறு பெயர் பெற்றிருக்கலா மென்பது வராகமிகிரர் கருத்துப் போலும்.

இனி வான்மீகியார் வாக்கில், சோணாட்டு விசேடங் குறிக்கப்பட்டதுண்டோ எனின், அதுவும் உண்டு. அம்முனிவர், சோணாட்டின் தலைநகரைச் சுட்டாமற் போயினும், அத்தலைமை நகரமாகிய காவிரிப் பூம்பட்டினத்தின் பக்கத்துள்ள ஒரு பல விசேஷத்தைக் கூறுதல் மிகவும் கவனிக்கத்தக்கது. ஸ்ரீராமபிரான் விட்ட பாணத்தால், கரன் பூமியில் மாண்டு விழுந்ததைக் கூறும்போது, வால்மீகியார் அடியில் வருமாறு கூறுகிறார்.

ஸ பபாத கரோ பூமௌ தஹ்யமாந:
ஶராக்நிநா | ருத்ரேணைவ விநிர்
தக்த: ஶ்வேதாரண்யே யதாந்தக: ||

இதன் பொருள் :—சுவேதாரண்யத்தில் ருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் வீழ்ந்தது போல, கரன் ஸ்ரீராமபிரானுடைய சராக்கினியால் தகிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான் —என்பது. இவ்விடத்துக்கு உரையிட்ட தீர்த்தர் என்னும் ஆசிரியர் "சுவேதாரணிய மென்பது காவேரிநதி கடலுடன் கலக்கும் இடத்துள்ளது" என்றார். அஃதாவது இப்போதுள்ள திருவெண்காடு என்னும் சிவஸ்தலமேயாம்; காவேரிக் கரையிலுள்ள சுவேதாரண்யத்தில் அந்தகாசுரன் என்பவனைச் சிவபிரான் எரித்தது புராணப் பிரசித்த மென்பர் தலகர். மற்றும் இவ்வுரைகாரரே, சுவேதாரண்யத்தில் சிவபிரான் மார்க்கண்டேயர் உயிர்காத்தற் பொருட்டு யமனைக் கொன்ற சரிதம் நிகழ்ந்ததாக அத்தலமான்மியத் துண்மையால், வான்மீகி அதனைக் குறித்தனராகக் கொள்ளுதலும் அமையு மென்றனர். யமனையுதைத்த சரிதம் திருவெண்காட்டுக் கடுத்த திருக்கடவூரில் நிகழ்ந்த தென்பது பிரசித்தமாயினும் அவ்விரு தலமும் சுவேதாரணியம் என்ற ஓரே பிரதேசத்தைச் சார்ந்தனவாக முன்பு கருதப்பட்டுச் சரித்திர வொற்றுமை பெற்றன வென்று கொள்ளுதல் குற்றமாகாது. திருக்கடவூர் போலவே, திருவெண்காட்டினும் யமனை யுதைத்தசெய்தி நிகழ்ந்த தென்பதற்கு, சம்பந்த மூர்த்திகள் தேவாரத்தில்,

[கீழ்
வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்
[றன்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே.

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினால்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்து மாணிக்காய்
ஆள்வித் தமரு லகமளிப்பா னூர்போலும்
வேள்விப் புகையால் வானி மிருள்கூர் வெண்காடே

என்ற பாசுரங்களில் அச்சரிதம் திருவெண்காட்டுக் குரியதாகவும் கூறப்படுதலே தக்க சான்றாகின்றது. இப்போதுள்ள புராணத்தில் இச்சரித்திரம் காணமற் போயினும் பழைய புராண மிவ்வாறிருந்த தென்பதே கொள்ளத்தக்கது. இவற்றால், வான்மீகிபகவான், தமிழகத்தே சோணாட்டின் முக்கிய விசேடமொன்றைக் குறிப்பிட்டு செல்லுதலும் காண்க.

* சிலப்பதிகார உரைப்பாயிரத்தில், மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள் காட்டியிருக்கும் பழைய அகவலொன்றைப் பார்க்க.

*"தஞ்சைவாணனைத்து கடலில் யெதிரும் தண்ணியபொருகை யார்ந்நகை பிறந்தொளிரும் முத்துக்கள் கோத்த வலிய வடம்" என்பது இதனுரை. (தஞ்சைவாணன் கோவை, பாட்டு - 54.)

இவற்றால், தமிழ் நாட்டுத் தலைமை நகரங்கள் பலவும் வான்மீகி முனிவரால் நன்கறியப் பட்டிருந்தன என்பது எளிதல் விளங்கத் தக்கது. நகரங்கள் மட்டுமல்ல; தமிழ் மக்களது வழக்க ஒழுக்கங்கள் சிலவும் அம்முனிவர்க்குத் தெரிந்திருந்தன வென்றே சொல்லலாம். அயோத்தியா காண்டம், 93-ம் ஸர்க்கத்தில் அம்முனிவர் பரதன் கூற்றாக அடியில் வருமாறு கூறுகிறார்.

கா௱வ்ருதி கா௱ஸ்டாவரோரு ஸிரவுஸா
ஸா௱ரஹீநீ| ஜேவவ்ராகாஜெஶ: ஊழு
ஜெகஊ்ராக்ஷிணாத்யா யமாநரா: ॥

இதன் பொருள்:—நம் யுத்த வீரர்கள் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன் தென்னாட்டாரைப்போல் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர் என்பது.

தமிழரசர் போர்க்குச் செல்லும்போது அதற்கென்று ஒருவகைப் பூவும், தங்குலத்திற்கென்று ஓர் அடையாளப் பூவுமாக இருவகைப் பூவுடையரென்பது பழைய தமிழ் நூல்களால் அறியப்படும். அன்றியும் நிரை கவர்தல் நிரைமீட்சி முதலாக நிகழும் போர்த் தொழில்களில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பூச்சூடிச் செல்லுதலும் மரபாம். இப்பூப் பற்றியே வெட்சி கரந்தை உழிஞை வஞ்சி என அப்போர்த் துறைகள் பெயர் பெறுதலுங் காண்க. இவ்வாறே அகப்பொருட் டுறைகளாகிய புணர்தல் பிரிதல் முதலியனவும் குறிஞ்சி பாலை என அவ்வந்நிலத்துக்கேற்ற பூப்பெயரானே வழங்கப்படும். இவற்றால் தென்னாட்டார் பூவணிவதிற் கொண்டுள்ள பெரு விருப்பம் வெளியாம். இதனையே, மஹரிஷி "நம் யுத்த வீரர், தென்னாட்டாரைப்போலத் தலைக் கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்" என்று கூறிச் சென்றனரெனக் கொள்க. தென்னாட்டாரைப்போல வேறெந்நாட்டாரும் பூவை மகிழ்ந்தணிதல் இன்றும் வேறெங்கும் காணக் கிடையாதெனபதும் அறியத்தக்கது.

இன்னும், தென்னாட்டு அரக்கர் செய்கைகளில் அவரிறந்தால் எரிக்கப்படாது புதைக்கப்படுதல் ஒன்றென்று தெரிகிறது; விராதன் என்ற அரக்கன் சாகுந்தருணத்தில் இராம லக்ஷ்மணர்களை நோக்கி "என்னைக் குழியில் அடக்கஞ் செய்துவிட்டு க்ஷேமமாகப் போங்கள்; இறந்துவிட்ட அரக்கரை அடக்கஞ் செய்தலே பழமையான தர்மம்" என்று கேட்டுக் கொண்டதாக ஆரணிய காண்டம் 4-ம் சருக்கத்தில் வான்மீகி கூறுகின்றார். இது பழந் தமிழர் கொண்ட முறைமை என்பது, மணிமேகலை, சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை முதலியவற்றை நோக்குவார்க்கு விளங்கும். இனி, வாதாபி இல்வலர் கதையை இராமபிரான் தம்மிளவலுக்கு எடுத்துரைக்குமிடத்தே, இல்வலன் பிராமண வேடந்தரித்துத் தம்மவர்க்குரிய தல்லாத ஸம்ஸ்கிருத பாஷையைப் பேசிக்கொண்டு வந்ததாகக் கூறுவதால், அரக்கர்க்கு வடமொழி அந்நியபாஷையாயிருந்தது என்பதும் விளங்கும். அன்றியும், ஆரணிய காண்டத்தில் மாரீசன் இராமனது பெருமையை இராவணனுக்கு எடுத்துரைக்கும்போது "இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால், ரகாரத்தில் தொடங்கும் 'ரத்னம்' 'ரதம்' என்ற பெயர்கள்கூட எனக்குப் பெரும் பயத்தை உண்டாக்குகின்றன" என்றதாக வான்மீகி கூறுகின்றார். இவ்விடத்தில் ரகாரத்துக்குச் சிறப்பாக விதிக்கப்பட்ட 'இப' ச்சாரியையிட்டு 'ரேபாதி நீ' எனக் கூறாது, 'ரகாராதி நீ' என முனிவர் கூறியிருத்தலை, தென்னாட்டானை மாரீசன் கூற்றுக்கேற்ப வைத்த தமிழ் வழக்கு—என்று கூறுவாரும் உண்டு. தமிழர் 'ரகாரம்' எனக் 'கார'ச்சாரியையிட்டே வழங்குவர்.

இனி, தலைச்சங்கத்தவரில் வான்மீகனாரெனப் பெயர்கொண்ட புலவரொருவருளரென்பது, தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியலில் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலால் தெரியவருகிறது. இவ்வான்மீகனார் பாட்டொன்று புறநானூற்றில் (358) வருவது அடியில் வருமாறு:-

"பரிதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒரு பகலெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கை விட்டனரே காதலா; அதனால்,
விட்டோரை விடாஅள் திருவே;
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே"

இப்பாட்டு, தவத்தின் பெருமையே மிக அழகாகச் சிறப்பித்து நிற்பது காண்க.

கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லுவார் பலர்.

இதனை நோக்கும்போது, "தபஸ்வாத்யாய நிரதம்" என்று தம்மிராமாயணத்தைத் தொடங்கிய மகருஷி வான்மீகி பகவான் தலைச்சங்கத்தை அறிந்திருந்தவர்தாமோ? என்ற ஐயம் உண்டாதல் இயல்பேயாம். இதற்கியைய, திரேதா யுகத்தில் வான்மீகியிருந்ததாகக் கூறும் கர்ணபரம்பரையும், இரண்டாமூழியிற் கபாடபுரமிருந்ததாகத் தமிழ் நூல்கள் கூறுவதும் ஒருவாறு ஒற்றுமையும் பெறறதாயிருக்கிறது, (இரண்டாம் ஊழி-திரேதா யுகம்) அன்றியும், வான்மீகி முனிவர், தம் ஆதி நிலையில் ஆரியரின் வேறாய வேடர் கூட்டத்துடன் சேர்ந்து கொடுந்தொழில் செய்து வந்து, பின் மகருஷியானதாகக் கூறப்படும் சரித்திரம், இவர் இத்தேசத்துப் பூர்வகுடிகளுடன் சம்பந்தமுடைய ராயிருந்ததைக் காட்டுமென்றும், தமிழ்மொழி அப்பூர்வகுடிகள் வழங்கிய பாஷைகளிற் சிறந்ததா யிருந்ததென்றும், வால்மீகியார் வசித்த-பிரதேசத்தில் தமிழ் முற்காலத்து வழங்கியிருந்ததென்பதற்கு இப்போதும் அநேக சான்றுகளுண்டென்றும், பிறவுஞ் சில ஏதுக்கள் கூறுவாருமுளர். இங்ஙனம் வால்மீகியார் தமிழருடன் சம்பந்தமுடையவராகக் கூறப்படுவதற்கு, வேறு நிச்சயமான ஆதாரங் காணப்படாமையால், அது முழவுபடுத்தத் தக்கதன்று.

யுத்தம் ஒழிய வழியுண்டா?

COULD WE AVOID WAR?

சற்றேறக்குறைய ஐந்து வருஷகாலமாய் ஐரோப்பா கண்டத்தில் நடந்துவந்த மகாயுத்தம் சில மாதங்களுக்குமுன் நிறுத்தப்பட்டது. இப்போரின் கொடுமைகளும், இதனாலுண்டான உயிர்ச் சேதமும் தனவிரயமும் கணக்கற்றவை. அநேக நகரங்கள் நாசமாக்கப்பட்டன. புராதனமான கட்டிடங்களெல்லாம் இடித்துத் தள்ளப்பட்டன. ஆயினும், சத்தியமே ஜயமென்ற பெரியோர் மொழிக்கிணங்க, ஜர்மனியின் ஏகாதிபதியாய் இருந்து வந்த கெய்ஸரின் குடிகள், பேராவலாலும் அஹங்காரத்தாலும் தூண்டப்பட்டுச் செய்த அதர்ம யுத்தத்தில் அவர்கள் ஆரம்பத்தில் வெற்றியடைந்தனராயினும், முடிவில் நேசப்படைகள், விடாமுயற்சியினாலும், தாங்கள் செய்வது தர்மகாரியமென்ற பூர்ண நம்பிக்கையினாலும் ஈசுவர கடாக்ஷத்தினாலும் ஜயமடைந்து தர்ம ஸம்ஸ்தாபனஞ் செய்தனர். இப்பொழுது பிரான்ஸ் தேசத்தில் வார்ஸேல்ஸ் என்னும் நகரில் சமாதான உடன்படிக்கைகளைத் தீர்மானிக்கும் பொருட்டு ஓராலோசனைச் சங்கம் கூடியிருக்கிறது. அதில் அமெரிக்கா நாட்டின் தலைவரான **வில்ஸன்** என்பவர் இனி இப்பூவுலகில் மன்னர்கட்குள் யுத்தம் நீங்கி எக்காலத்திலும், எவ்விடத்திலும் தீக்குண மொழிந்து, நற்குணமோங்கி தர்மம் நிலைநிற்கும் பொருட்டு "லீக் ஆப் நேஷன்ஸ்" அல்லது ஜாதீய மஹா சங்கம் என்ற ஓர் கூட்டுறவை ஏற்படுத்தி, அதனுதவியால் மன்னர்கட்குள் நீண்ட சமாதானத்தை யுண்டாக்க முயன்று வருகிறார். அவ்வேற்பாட்டின்படி இப்பொழுது முடிவுற்ற யுத்தத்திற்குப் பிறகு இவ்வுலகில் இனி யுத்தம் ஒழிந்துவிடுமென்பது அவரது திடமான நம்பிக்கை. ஆனதுபற்றியே அவர் இந்த யுத்தத்தை யுத்தமொழிக்கும் யுத்த மென்றார்.

இவ்வாறு யுத்தத்தை யொழிக்கக் கூடுமோ? இனி, எந்நாட்டிலும் எக்காலத்திலும் மன்னர்கள் பொறாமை, பேராவல் முதலிய கொடிய தீக்குணங்களை விட்டு சன்மார்க்கத்தையே வழிபட்டு ஒருவருக் கொருவர் நல்லுறவுடனிருப்பார்களா?

இக்கேள்விக்கு விடையளிக்குமுன் எக்காலத்திலேனும் யுத்தம் நடை பெறாமலிருந்திருக்கிறதா வென்றும், யுத்தத்திற்குக் காரணங்களெவை யென்றும் சற்று ஆராய்வோம். இவ்வாறு யுத்தமின்றி இருந்த காலம் மிக வரிது. அநேக காலங்களில ஏதாவதொரு நாட்டில் யுத்தம் நடைபெற்றே வந்தது. சிற்றரசர்கட்குள் சச்சரவினாலோ, அன்றி குடிகளின் கலகத்தாலோ, அல்லது அந்நிய மன்னன் படை யெடுத்தலாலோ, ஏதாவதொரு காரணத்தின் பொருட்டு யுத்தம் நடந்து வந்தது. ஆனதுபற்றி யுத்தமில்லாத நாள் கிடையா தென்பது திண்ணம். ஒவ்வொரு சமயத்திலும் யுத்தம் நடந்து சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு, திரும்பவும் யுத்தம் துவக்க

கட்டினவனுக்கு ஒரு வீடானால், கட்டாதவனுக்குப் பல வீடு.

மாகு முன் ஓரோய்வுண்டாக, அக்காலத்தில் சமாதான மிருந்ததேயன்றி நீடித்த வமைதி ஒரு பொழுது மிருந்ததில்லை.

இவ்வண்ணம் சண்டையிடுவது மன்னர்கள் மட்டுமல்ல; சாதாரண ஜனங்களுக்குள்ளும் அடிக்கடி சண்டைகளும் சச்சரவுகளுமுண்டாவதை நாம் தினந்தோறும் காண்கிறோம். நகமும் சதையும்போ லிணங்கி மனமொத்து வாழ்ந்து வரும் நண்பர்கள் ஒரு நொடியில் பிரிவது ஸகஜம். ஓரே வயிற்றில் பிறந்து மிக வாத்ஸல்யத்துடனிருந்து வந்த ஸஹோதரர்கள் சண்டை யிடுகின்றனர். பிள்ளை மனங் கல் பெற்றமனம் பித்தென்ற முதுமொழிக்கிணங்க, பெற்றோரை எதிர்த்து மனம் போன போக்கே சென்று தங்கள் ஜீவாதாரமாயிருக்கும் தாய்தகப்பன்மார் மனம் நோக நடக்கும் மக்க ளநேகர். நெருங்கிய உறவும் நீடித்த நேசமும் வெகு சீக்கிரம் பறந்து போகின்றன. இதற்கெல்லாம் காரணமென்ன?

கடவுளின் எண்ணிறந்த சிருஷ்டிகட்குள் மானிடப் பிறப்பே மிக்க மேம்பட்டதென்றும், அது ஜன்மாந்தரங்களில் செய்த புண்ய வசத்தால் கிடைக்குமேயன்றிச் சுலபமாய் கிட்டாதென்றும் அடிக்கடி பெரியோர் கூறக் கேட்டிருக்கிறோம். அன்றியும், நவீன தத்வசாஸ்திரிகள் சரீரவமைப்பையும் மனோநிலைமையையும் ஆராயுங்கால் மனிதனே மற்ற ஜீவன்களை விட மேலானவனெனச் சொல்லுகின்றனர். இவ்வாறு மனிதன் இவ்வளவு கௌரவம் படைத்தவனாயின், சர்வவல்லவராய், சர்வ சத்குண பரிபூரணரா யிருக்கும் சர்வேசுவரனின் நிகரற்ற சிருஷ்டியென்ற பெயர்மனிதனுக்குரியதேயாயின், அதற்குப் பாத்திரனாக அவன் காணப்படவில்லை. ஏனெனில், கடவுள் சச்சிதானந்த ஸ்வரூபியாய், கருணைக் கடலாய், சாந்தமூர்த்தியாய் இருக்கிறாரென்பது உண்மையாயின், அவரது உயர்ந்த சிருஷ்டிக்கும் அக்குணாதிசயங்களிற் சில கொஞ்சமேனும் பொருந்தியிருக்க வேண்டுமல்லவா? அவ்வாறின்றி மனிதர்களுக்கு, சாந்தம் தயை, பொறுமை முதலிய நற்குணங்கள் விசேஷமாயில்லாமல் ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டையிடுவானேன்?

இதற்குக் காரணமென்னவென்று ஆராயுங்கால், அது மனிதனின் மனோவமைப்பெனப் புலப்படும். சாதாரணமாக எல்லா மனிதர்களும், சாத்வீகம், ராஜஸம், தாமஸமென்ற முக்குணங்கள் பொருந்தியவர்கள். சாத்வீகமென்பது, சாந்தம், அமைதி, நல்லறிவு, விவேகம் முதலிய நற்குணங்களின் சேர்க்கையாம். அது சன்மார்க்கத்திலேயே பிரவிருத்திக்கும்படி தூண்டுமோர் குணாதிசயம். ராஜஸமோவெனில், துராக்கிரகம். அஹம்பாவம், குரூரம் முதலிய தீக்குணங்களின் சேர்க்கை. அது துர் நடத்தைக்கும் துரெண்ணத்திற்கும் காரணமாயுள்ளது. தாமஸமென்பது, அறிவின்மை, அவிவேகம், ஜடத்வம், மந்தபுத்தி முதலிய குணங்களின் கூட்டம். தாமஸிகனாயிருக்கும் ஒரு மனிதனிடத்தில் காமக்குரோத லோபமோக மதமாச்சரியமென்னும் துக்கத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கும் குணங்கள் குடிகொண்டிருக்கும். இவ்வகையான முக்குணங்களும் பொருந்தியிருப்பது மனிதனின் இயற்கை இத்தகைய மனிதனுக்குச் சண்டை யிடுந்தன்மை எப்பொழுது வருமெனில், சாத்வீக குணங் குறைந்து ராஜஸமதிகமாக, மோகாதி தீக்குணங்களின் வலையி லகப்பட்டு, கோபாவேசத்தில் தர்மாதர்ம விவேகமின்றி மூர்க்கத்தனமாய் நடக்குங்கால், அவனை எவரேனும் அக்கொடிய மார்க்கத்திலிருந்து திருப்ப எண்ணங்கொண்டு எதிர்ப்பாரானால், அக்காலத்தில் சண்டையுண்டாகும். இவ்வாறு சாத்வீகம் தழைந்து, ராஜஸமும் தாமஸமும் ஓங்குங்கால் விவேகமின்றி துர்மார்க்கத்தில் செல்லும் மனிதனையெதிர்த்தால், அவன் கோபங்கொண்டு சண்டையிடுவான்.

இதனுண்மை மானஸீக சாஸ்திரத்தை ஆராயுங்கால் நன்கு புலப்படும். அத்தத்வ சாஸ்திரிகள் சண்டை யிடுவதோர் இயற்கைக் குணமென்பர். இக்குணம் மனிதனுக்கும், அவனுக்குக் கீழ்வரிசையி லிருக்கும் ஜீவராசிகளுக்கும் பொதுவாகக் காணப்படுகிறது. இவ்வாறு சண்டையிடுவது தர்மம், அதர்மமென இருவகைப்பட்டது. அந்நியன் எதிர்க்குங்கால் ஆத்ம ரக்ஷணத்தின் பொருட்டுச் செய்யும் சண்டை தர்மமானது. வீணாகப் பொறாமையாலும், பேராவலாலும் தூண்டப்பட்டு மற்றொருவனை எதிர்த்துச் செய்யும் சண்

டையே அதர்மமானது. ஆத்ம ரக்ஷணத்திற்கு மட்டுமே சண்டையிடுந்தன்மை எல்லா ஜீவன்களுக்கு முள்ள இயற்கைக் குணம். ஆனால், இதற்கெதிராகக் கூறப்பட்ட அதர்மமாய் சண்டையிடுந் தன்மை சில ஜந்துக்களுக்கு மட்டுமே உரியது. இத்தன்மை முக்கியமாய் கொடிய விலங்குகளிடத்தில் காணப்படும். இதற்குக் காரணமென்னவெனில் இத்தன்மையுள்ள ஜந்துக்களுக்குப் பேராசையும், கண்டதைக் கைப்பற்ற ஓரவாவும் பெரும்பாலுமிருக்கும். பேராசையினால் தூண்டப்பட்டு, எதையும் கைப்பற்ற முயலுங்கால், அம்முயற்சிக்குச் சிறிதேனும் இடையூறேற்பட்டால், கோபமூண்டு ஆக்ரோஷத்துடன் சண்டையுண்டாகிறது. கண்டதைக் கைப்பற்ற வுண்டாகும் பேராசையும், அவ்வெண்ணம் நிறைவேறாவிடி லுண்டாகும் கோபாவேசமும், ராஜஸகுணத்தி னடையாளங்களாகையால், எங்கெங்கு சாத்வீகந் தழைந்து, ராஜஸம் ஓங்குகிறதோ அங்கெல்லாம் சண்டையுண்டாகுமென்பது திண்ணம். இத்தன்மை புலி கரடி முதலிய கொடிய விலங்குகளுக்கு மட்டும் உரியதல்ல. மனிதர்களில் பெரும்பான்மையோரிடத்திலும் இத்தன்மையைக் காணலாம். மிருகங்களைவிட மனிதனுக்கு விவேகமும், புத்தியுமதிகமானதால், தன் ஆத்ம திருப்திக்குச் சாதகமாயிருக்கும் விஷயங்களை நன்கறிந்து, அவ்விஷயங்களில் ஓரதிகமான ஆவலினால் அவை பிறருக் குரியவை யென்றாவது, அவைகளையடைய முயலுவது அதர்மம், அதனால் மற்றோர்க்கும், முடிவில் தனக்கும் தீங்கே விளையுமென்றாவது கொஞ்சமேனும் கவனியாமல் அவன் மூர்க்கத்தனத்துடன் சண்டையிடுவான்.

இத்தன்மை பிரதி மனிதர்கட்குமட்டுமன்றி, ஜன சமுதாயத்திற்கு முரியது. ஓர் ஜன சமுதாயத்திற்கு முக்குணங்களில் சாத்வீகம் அதிகமாயிருந்து, ராஜஸமும் தாமஸமும் குறைந்திருக்குமேயாயின், மோகம், பேராசை, மமதை முதலிய துர்க்குணங்களும், உரிமையின்றி அந்நிய நாட்டில் பிரவேசித்தல், படையெடுத்தலாகிய அடாத செய்கைகளும் காணப்பட மாட்டா. அவ்வாறின்றி ஒரு ராஜ்யத்தின் மன்னனுக்கும் அவன் ஆள்கைக்குட்பட்டுள்ள குடிகளுக்கும் ராஜஸ குண மதிகரித்தால், அவர்கள் பேராவலாலும், துராக்கிரகத்தாலும் தூண்டப்பட்டு, ஒரு பாவமுமறியாச் சிற்றரசர்களின்மேல், அவர்கள் யுத்த சந்நத்தர்களாய் இல்லாதிருக்குந் தருணத்தில், படையெடுத்து அவர்களை ஜயித்து, அவர்கள் நாட்டையும் கைப்பற்ற முயலுவர். இத்தகைய மன்னர்கள் கொடுங்கோல் செலுத்துவோர்களாயும், குரூர குணமுள்ளவர்களாயும் தர்ம விவேகமின்றி, அடாது செய்ய வஞ்சா நெஞ்சத்தினராயு மிருப்பர். இதற்கு உதாரணம் சின்னாட்களுக்கு முன் ஜர்மனி தேசத்து ஏகாதிபதியா யிருந்த கெய்ஸரே. இம்மன்னன் போலும், அவன் மனதையொத்த குடிகள் போலும் சிலர் இவ்வுலக லிருப்பரேயாயின், யுத்த மொழிய வழி தேடுவது குதிரைக்கொம்பை காணச்செல்வதையொக்கும்.

சாதாரணமாக மனிதர்களுக்கு எந்தெந்த சமயங்களில் கடமையும் இச்சையும் வேறுபட்டிருக்கின்றனவோ, அப்பொழுதெல்லாம் மனதிலோர் தாபமும், நிம்மதி யின்மையும் உண்டாகின்றன. எப்பொழுதும், நல்வழிபட்டு நற்குணங்களை மேற்கொண்டு சாத்வீகத் தன்மையோடிருப்பது மிகவும் கடினமானதாகையாலும், தீயவழியிற் சென்று, தீய தொழில்களைக் கைக் கொண்டுவருவது மிக்க எளிதாகையாலும், மனோதிடமில்லாத பேதை மனிதர்கள் பெரும்பாலும் செய்யவேண்டிய கருமத்தைக் கவனியாது தங்கள் விருப்பம்போல் நடக்க முயலுவர். அவ்வாறு நடக்குங்கால் எவரேனும் எதிர்த்து அவர்களை நல்வழிப்படுத்த முயன்றால், அவர்களது நல்லெண்ணத்தை மதியாமல், தங்களுக்கு அவர்கள் பகைவரெனக் கருதி, அவருடன் சண்டையிடத்தலைப்படுவர். உலகத்தில் நல்லானைப் பொல்லான் எதிர்த்தால், அவனுடன் சண்டையிடாது, அச்சமயத்தில் சாந்தத்துடனும், பொறுமையுடனும் கஷ்டங்களனைத்தையும் சஹித்து, முடிவில் தர்மம் தலைகாக்குமென நம்பியிருப்பது நல்லோரது வழக்கம். ஆனால் கொடியவர்களை நல் வழிப்படுத்தவெண்ணி, அவர்களத்தீயவழியிற் செல்லாவண்ணம் நெறியுடையோர் தடுப்பரே யாயின், அக்கொடியர் ஸர்ப்பம்போல் சீறி அடாது செய்து தங்களுக்

குப் புத்திமதி கூறவந்தோரைத் துன்புறுத்த வஞ்சார்.

இதுவே சாதாரண மனிதர்கட்குள் சண்டைக்குக் காரணம். இதுவே ஒரு ராஜ்யத்து மன்னனும், அவனது குடிகளும், அந்நிய நாட்டின்மேல் படையெடுத்துச் செல்வதற்கும் காரணம். மனிதர்களொருவருக்கொருவர் சண்டையிடுவதும், அரசர்களுக்குள் போர் மூளுவதும் ஒழியவேண்டுமே யாயின், தாமஸமும் ராஜஸமுமொழிந்து, சாத்விகம் மேலிட்டு மனிதர்களில் பெரும்பான்மையோர் நல்வழிப்பட்டா லொழிய அவ்வெண்ணம் வீணாகுமென்பது நிச்சயம். யுத்தமொழிய வேண்டுமாயின், ராஜஸ குணமொழியவேண்டும். மனிதர்களெல்லோரும் சாத்வீகர்களாக முற்றிலும் மாறவேண்டும். பிரபஞ்சத்திலுள்ள சிருஷ்டிகளனைத்தும் ஈச்வரத்தன்மையையும், குணசம்பத்தையும் மேன்மேலுமடைய முயலுவனவாயிருத்தலாலும், மனிதன், மற்ற பிராணிகளைவிட குணசம்பத்தை யதிகமாயுடையவனா யிருத்தலாலும் மனிதன் தனது சாத்வீகத்தன்மை யொழிந்து தாழ்வடைந்து தாமஸிகனாய் மாறுவது முடியாதாயினும், எல்லோரும் சாத்வீகர்களாய் மேம்பட்டு நல்வழிப்பட முயன்றாலன்றி யுத்தமொரு நாளும் ஒழியாது.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையென்ற மூன்று மின்றி, மனிதர்கள் ஒருவருக்கொருவர் பொறாமையும் லோபமுங் கொள்ளாமல் எல்லோரையும் சஹோதரர்களெனக் கருதுவதுமன்றி, எல்லா ஜீவராசிகளும் ஈசுவர ஸ்வரூபமென்றும், ஒரே ஆத்மா எல்லாவற்றிற்குள்ளும் குடிகொண் டிருக்கிறதென்றும் "தத்வமஸி" யென்ற மஹா வாக்யத்தின் பொருளாகிய ஜீவாத்ம பரமாத்ம ஐக்யத்தை நன்குணர்ந்து, பிறர்க்கு விளையுந் தீங்கு தனக்கெனக் கருதி, "அஹிம்ஸா பரமோதர்ம:" என்றபடி ஒருவருக் கொருவர் பொல்லாங்கு செய்யமனந் துணியாமல் மனிதர்களனைவரும் நல்வழிப் பட்டாலன்றி, இனி யுத்த மொழிந்து நீடித்த வமைதியுண்டாகுமென வெண்ணுவது வீணே. தற்காலத்தில் ஐரோப்பியர்களும், அமெரிக்கா தேசத்தார்களும் புகழ்ந்துகொள்ளும் நாகரீகத்தின் சிறப்பென்னவெனில் தேக சுகங்களைத் தேடி, பூவுலகப் பற்றை யதிகரித்து, கர்மவிலங்குகளில் மேன் மேலுமகப்பட்டு, மோகம், பேராவல், பொறாமை முதலிய, நீமுன், நான்முன் என்ற போட்டிக்களுகுணமாயுள்ள வியாபாரியின் லக்ஷணங்களில் தேர்ந்து சுகித்து வாழ்வதேயாம். இக்குணங்களில் ஒன்றேனும் சாத்விக மானதல்ல. ஐரோப்பிய தேசத்துக் குடிகளுக்கு இக்குணங்கள்பூரணமாய் நிறைந்திருந்து அவைகளில் அவர்களோர் பெருமை பாராட்டுங்கால், சஹோதர பாவமும் எல்லோரிடத்தும் அன்பும் தயையும் அவர்கட் குண்டாகமாட்டா. இத்தகைய மனிதர்களுக்கு, ஓர் கடும்போர் முடிந்தபிறகு, அதன் கொடுமைகளைத் தாங்காமல், இனி யுத்த மொழியமேண்டும், நீடித்த வமைதியைத்தேட வேண்டுமென்ற அவா சின்னாட்களுக் கிருக்கு மேயன்றி எக்காலத்திலும் அது நிலை நிற்பதில்லை. மறுபடியும் தாமஸ குணங்களும், ராஜஸ குணங்களும் அதிகரிக்க, சாத்வீகம் தழைந்து யுத்தம் துவக்கமாவது நிச்சயம். மன்னர் மஹா சபையாயினும், பூவுலகத்தை யெல்லாம் ஒரு குடைக்கீழாளும் ஏகசக்ரவர்த்தியாயினும், நற்குணங்களை ஒருவனுக்கு ஊட்டமுடியாது. ஜனங்களெல்லோரும் தாங்களே சன்மார்க்கத்தின் பெருமையையறிந்து, ஒருவரையொருவர் பகைப்பது தீதெனக்கண்டு சாத்வீகர்களாய் இருந்துவர முயன்றாலன்றி யுத்தம் ஒருநாளும் ஒழியாதென்பது திண்ணம்.

"செத்தபாம்பை யடிப்பது எளிது.'—உலகத்தில் பலர் ஒருவனை நிந்தித்தால் வலியற்ற பலஹீனனும் அவனை நிந்திக்கத்தொடங்குகிறான். நாலுபேர்கள் சேர்ந்து ஒரு திருடனைப் பிடித்தால் வழியேபோகிற ஒவ்வொருவனும் அவனையடிக்கத் துணிகிறான். ஆரம்பத்தில் திருடனைப் பிடித்து கட்டியுருட்டியவன் வீரனேயன்றி, பின்னர் ஒருவனை விளாசும் வீணர்கள் வீரர்களல்லர். அதுபோல் எந்தக் காரியத்தையும் புதிதாய் கண்டுபிடித்துச் செய்பவன் புத்திசாலியேயன்றி அவனைப் பின்பற்றும் மற்றவர்கள் புத்திசாலிகளாகார். ஆகிலும் கல்வி விஷயத்தில் பெரியோர்களைப் பின்பற்றுவது குற்றமாகாது. சிஷ்யனது பிரஸங்கத்தால் குருவின் பெருமை புலப்படுகின்றதன்றோ?

வஸந்த மந்திரம்

(319-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்றாவது அத்தியாயம்

இராஜ ஸபை

வழக்கம்போல் அரண்மனைக்குப் போக அனந்தபட்டர் பிரயத்தனம் செய்கின்றார். ஆனால் சில நாட்களாய் அவர் அரண்மனைக்குப் போகும்பொழுது மனப்பூர்த்தியாய்ச் சந்தோஷத்துடன் போவதாகத் தோற்றவில்லை. ஆயினும் போகாமல் விடுவதென்றால் அவரைப்போன்ற பெரிய உத்தியோகஸ்தர்களுக்குச் சாத்தியமா? வீதியில் குதிரை தயாராய் நிற்கின்றது. உத்தியோக லக்ஷணத்துக்குரிய பதக்கங்கள் முதலிய சின்னங்களை மேற்கொண்ட பின்னர், கையில் வெள்ளிப்பூணிட்ட தடியைத் தாங்கி, காலில் பாதரக்ஷை அணிந்து கொண்டார். அவ்வளவில் ஒரு பிராமணச் சிறுவன் பக்கத்தறையிலிருந்து வெளி வந்து விலையுயர்ந்த ஒரு காஸ்மீர் சால்வையை அவர்மேல் போர்த்தினான். இத்துணை அலங்காரங்களோடு அனந்தர் வெளியே வந்து குதிரைமேல் ஏறுவதற்காக ஜேணத்தைக் கைக்கொண்டார். வீதித் திண்ணையில் பல்லி நச்சுக் கொட்டிற்று. 'ஏறலாமா, வேண்டாமா' என்று ஒரு நொடி நேரம் யோசனை செய்தார். மனத்தைத் தேற்றிக்கொண்டு குதிரை யேறிச் செல்லவே, எதிரில் ஒரு வேடன் முயல்களைக் கொன்று ஒரு மூங்கிலில் தோரணமாய்க் கட்டிக்கொண்டு வந்தான்.

இதைக் கண்டதும் அனந்தபட்டருக்கு மனம் கலங்கி விட்டது. இன்று என்ன விபரீதம் விளையுமோ இராஜ ஸபையில் என்று நடுங்கினர். பின் வருவது நன்றென்று தோன்றவில்லை. அரண்மனையின் அருகில் வருவதற்குள்ளாகவே வாசலில் நின்ற சேவகன் உள்ளே ஓடிப்போய் ஆமத்பாக்ஷாவின் உத்தரவு பெற்று அவரண்டை வந்து நின்றான். அவர் குதிரையை விட்டிறங்கியதும் "சுவாமீ, உள்ளே தாங்கள் உடனே வரும்படி உத்தரவாய் இருக்கின்றது" என்றான். அனந்தபட்டர் மனத்துள் "உத்தரவில்லாமல் என்ன! நான் உதயபுரியிலிருந்து வந்தது முதல் தினமும் இப்படித்தான். ஐயோ! காமுகர் உலகத்தை மறந்து விடுகிறார்களே! இந்த சுல்தான் படும் அவசரத்திற்கு நான் இன்று எங்ஙனம் ஸமாதானம் சொல்லப் போகிறேன்!" என்று விசாரப்பட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

வழக்கம்போல் ஸபாமண்டபத்தில் சுல்தான் சிம்மாஸனத்தில் வீற்றிருக்கின்றான். இப்பொழுது ஆமத்பாக்ஷாவை அடையாளம் கண்டு பிடிப்பதுகூட, வருத்தமாய் இருக்கின்றது; அவ்வளவு தூரம் இளைத்துப்போய் விட்டான். பாபம்! சுற்றிலும் 4, 5 சபையோர் மட்டுமே உட்கார்ந் திருக்கின்றனர். அனந்தபட்டர் உள்ளே நுழைந்து அரசனை வழக்கம்போல் மரியாதை செய்தவுடன், சுல்தான் வாடின முகத்துடன், தாழ்ந்த குரலோடு "வாரும் ஐயா, இப்படி உட்காரும் ஆஸனத்தில்" என்று பக்கத்தில் ஒரு ஆஸனத்தைக் காட்டினான்.

சற்று நேரம் அனைவரும் மௌனம். பாக்ஷா "ஐயா! அனந்தபட்டரே! நீர் உதயபுரி போய் வந்து இன்று 15 நாள் வரையில் ஆய் விட்டனவே. இன்னும் முகூர்த்த சமாசாரம் ஒன்றையும் காணோமே! அந்த ராஜன் நம்மை ஏமாற்றி விடுவானோ ஒரு வேளை? அப்படிச் செய்யின் இதோ இப்புஷ்பத்தைக் கசக்குவதுபோல் அவன் தேசத்தைக் கசக்குவேன்" என்றான். பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு,

அனந்தபட்டர்: "இறைவனே! நான் இந்நாள் சொன்ன பதிலைவிட வித்தியாசமாய் இன்று என்ன சொல்லப் போகிறேன். நான் போயிருந்த காலத்தில் உதயபுரியில் இருந்த நிலைமைகளையும், நடவடிக்கைகளையும், அவ்வரசன் செயல்களையும், பார்த்தமட்டில் அவன் வார்த்தைகளைச் சந்தேகிக்க இடமில்லை யென்று—"

அரசன் "அப்படிச் சொல்லவேண்டாம், மலைச்சாரலில் வாழும் அவ்விராஜ புத்திரர்கள் நரியினும் மிகுந்தவர் சூழ்ச்சியில்! நம்பவும் கூடுமா அவர்களை! துண்டிக்கிறேன் சமயம் வரட்டும்" என்று ஆர்த்தான்.

"ஐயா! நாம் முன்னமேவா சண்டைக்குத் தயாராய் இருத்தலே நலம். நமது சேனை வேலையில்லாமல் ஏங்குகின்றது. 'மயிலே! மயிலே! இறகுகொடு' என்றால் கொடுக்குமா சாதாரணமாய்? இதைச் சமுகத்தில்

"யோசனை செய்யவேண்டாமா? என்னை முன்னமேயே ஆலோசனை கேட்டிருந்தால்—" என்று பேசத்தொடங்கினான் மீரான்சாகிப் பகதூர்.

இப்பிரபு சேனைகளின் விசாரணைக் கர்த்தா. யுத்தமென்றால் கோழிச்சண்டை, ஆட்டுச்சண்டை என்று எண்ணம் இவனுக்கு. ஜனங்கள் இறந்தவரையில் பூபாரம் குறைகின்றதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள் அல்லவா? அம்மாதிரி எண்ணுகின்ற மஹா புருஷர்களில் மீரான்சாகிப் முதன்மையானவன். யுத்தத்திற்குத் தானே முன்போய்ச் சண்டை செய்யக்கூடிய பலமும் தைரியமும் உடையவன் அல்லன். ஆனால் யுத்தத்தில் ஏன் இவனுக்கு இத்தனை பிரியம் என்றால் படையெடுத்துச் செல்லும் சேனைக்கு ஒவ்வொரு இடத்திலும் வேண்டிய சாமான்களைச் சேகரிக்க வழியேற்பட்டால் தனக்கு வேண்டுமளவு திரவியம் கிடைக்குமென்று நினைத்திருந்தான். பாவம்! இவ்விதமாய் இவன் இளம் பிராயத்தில் சேர்த்த சொத்திற்கு அளவில்லை. அரசனும் மற்றப் பிரபுக்களும் இவனைச் சிநேகம் செய்துகொண்டது இவனுடைய குணத்திற்காகவன்று. தன் பண வலிமையால் இராஜாங்க விஷயம் எதையும் தன் இஷ்டப்படி நடத்த முயலுவான். மனோதிடமுள்ள ஆமத் பாக்ஷா அப்பொழுதுக்கப்பொழுது கட்டில் வைத்திருப்பதால் இந்தப் பிரபு கலகங்கள் செய்யமுடியாமல் இருக்கின்றது. சாமர்த்திய மற்ற அரசன் இருந்திருப்பானேல் விபரீதம் விளைந்திருச்கும்! எல்லாப் பிரபுக்களுக்கும் இந்த விவரங்களெல்லாம் நன்றாய்த் தெரியும்.

மீரான் சாகிப் பகதூர் இவ்வாறு பேசவே, அனந்தபட்டர் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், அரசன் முகத்தைப் பார்த்தார்.

பாக்ஷா.—"சண்டைதான் இருந்தே யிருக்கின்றதே: என்றைக்கும் நமது சேனை சித்தமாய் இருக்கின்றதல்லவா? நமக்கு அவ்விஷயத்தில் விசாரமென்ன? ஆள் தேட வேண்டுமா? வருந்தி யழைக்கவேண்டுமா? .... இன்று என்னவோ என் மனம் அமைதியாய் இருக்கவில்லை. யாராகிலும் நமது தாதாகானை வரவழையுங்கள். அவருடைய பாட்டுக்களாவது எனது மனக் கொதிப்பைத் தணிக்குமோ பார்ப்போம்......"

மந்திரி மஹபத்கான்.—"விசித்திரவீரியரையும் அழை—"

அரசன்.—"விசித்திரவீரியரா?—ஹா! விசித்திரவீரியரா? அவருடைய பாட்டுக்கள்—"

அனந்தபட்டர்.—"விசித்திர வீரியரைப்பற்றித் தாங்கள் இத்தனை தூரம் யோசிக்க வேண்டியதில்லை. அவர் ஊரை விட்டுப் போய்விட்டார்."

பாக்ஷா.—"என்ன சொன்னீர் ஐயா? விசித்திரவீரியர் ஊரைவிட்டுப் போய் விட்டாரா? அப்படியா? எப்பொழுது? எப்பொழுது? என்னிடம் சம்மானத்துக்குக்கூட வரவில்லையே! ஏன் இத்தனை அவசரம் அவருக்கு? இப்படி ஒருதடவையும் சொல்லாமல் போனதில்லையே...எந்த ஊருக்குச் சென்றார்? சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுவார் போலும்."

அனந்தபட்டர்.—"மஹாராஜா! விசித்திரவீரியர் போனவிடமே தெரியவில்லை. பத்து நாளைக்குமுன் ஒருநாள் என்னிடம் ஊருக்குப் போக வேண்டுமென்று சொன்னார்; அவ்வளவுதான். இரண்டு தினம் கழித்து விசாரித்ததில் அவர் வீட்டில் ஒருவரும் இல்லையென்ற சங்கதி தெரியவந்தது. எவ்வளவு தூரம் விசாரித்தபோதிலும் அவர் போன திசைகூடத் தெரியவில்லை."

"அவர் புறப்பட்டுப் போனது நமது சபைக்கு ஒரு குறைவுதான். ஸிந்து நாட்டில் அவரை மிஞ்சின பாடகர்களும் உண்டோ? இதுவும் நமது துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். கடைசியாக அவரிடமிருந்து கேட்ட பாட்டு என் மனத்தைப் புண்படுத்தியதென்றாலும்—ஹா! ஹா! அந்தக் குரலும், பாட்டின் அமைப்பும் விஷயமும், என்னவென்று வர்ணிப்பது! பொருள் விளங்கவில்லையென்றாலும், முற்றிலும் விவரமாகாமல் இருக்கவில்லை. நானும், பாவி, கோபத்துடன் அவரைக் கடிந்தேன். இன்னொரு முறை அந்த லலிதையின் அழகையும், குணங்களையும், அவர் எடுத்துச் சொல்ல நான் கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே! என்ன கொடுமை! என்ன கொடுமை!" என்று சொல்லிக்கொண்டு அப்படியே சிம்மாஸனத்தில் சாய்ந்துவிட்டான் பாக்ஷா.

செய்கின்றார்கள் சைத்தியோபசாரம். விழித்தான் பாக்ஷா. தன் மனத்தளர்வைச்

சபையோர் முன்னிலையில் காட்டியதற்குச் சற்றே வெட்கமடைந்தான். பரபரப்புடன் "ஆகவே விசித்திரவீரியர் நமது நாட்டை விட்டு, அகன்றார். இனி அவரைக் காணும்போது பேசிக்கொள்வோம். தாதாகானை அழைத்து வாருங்கள்" என்றான். சொன்னதுதான் தாமதம். ஓட்டம் பிடித்தான் ஒரு சேவகன். ஓடியவன் மறுபடி திரும்பி வந்து "அரசர்க்கரசே! வெளியே ஓர் ஒற்றன் வந்து காத்திருக்கின்றான்" என்றான்.

சுமாலி.—"எங்கிருந்து வந்தவன்?"

சேவகன்.—"கிழக்கே அரவல்லி மலைச்சாரலில் நின்று வருகின்றானாம்."

அரசன்—"சரி! சரி! உடனே வரச்சொல் உள்ளே. பிறகு உன் வேலையை முடித்துக் கொண்டு சீக்கிரம் திரும்பிவா"

அடுத்த நிமிஷத்தில் சபையோர்முன் ஒரு ஒற்றன் வந்து நின்றான். அவன் தேகமெல்லாம் மாசு படிந்திருந்தது. தாடியெல்லாம் புழுதி நிரம்பிச் சென்னிறமடைந்து, வர்ணம் தீட்டியதுபோல் விளங்கிற்று. ஆடைகளும், குப்பாயமும், ஜலம் கண்டு வெகு நாளாயின. சலாம் செய்து தலை குனிந்து நின்ற ஒற்றனை மந்திரி மஹபத்கான் "ஹோ! ஒற்றா! நீ மாளவ தேசத்தில் வேலை செய்கின்றவனல்லவா?" என்று கேட்டான். ஒற்றன் தலை நிமிர்ந்து "ஆம்" என்றான்.

அப்பொழுது அவனுடைய குழிந்த கண்களும், வாடிய முகமும், வற்றிய கன்னங்களும், உட்குழிந்த நெஞ்சும், அவன் மிகவும் சிரமப்பட்டு வந்திருக்கின்றான் என்பதற்கு சாக்ஷியாய் நின்றன.

"சமாசாரம் என்ன?" என்று கேட்டான் பாக்ஷா.

ஒற்றன்.—(சபையாரைச் சுற்றிலும் பார்த்துவிட்டு) "அரசர்க்கரசே! தங்களிடத்தில் தனியாய்ச் சொல்ல—"

பாக்ஷா.—"யோசனை செய்யாதே! துரோகம் என்பதே ஆமத் முன்னிலையில் நில்லாது. என் சபையோர் யான் கேட்கக் கூடியதையெல்லாம், கேட்க யோக்கியதை யுடையவர்கள். சொல் சங்கதியை விரைவாய்."

ஒற்றன்.—(மற்றொருமுறை சபையோரைச் சுற்றிலும் பார்த்துவிட்டு) அனந்தபட்டரைச் சுட்டிக்காட்டி "எஜமான் உதயபுரிக்கு வந்த காலத்தில் நான் அவ்விடத்துக்கு 7 மைல் தூரத்துக்கு அப்பால் ஒரு கிராமத்தில் இருந்தேன். அவர் இவ்விடம் புறப்பட்டு வந்தது முதல் ஒருவாரத்துக்கு முன் வரையில் உதயபுரியிலும் சுற்றுப் புறங்களிலும் திரிந்துகொண்டிருந்தேன். இரண்டு நாளாவது சேர்ந்ததுபோல் ஒரு கிராமத்தில் நிற்காமல் சுற்றித் திரிந்தேன். விஷயங்களை நேராய் அறியச் சில சேவகர்களைச் சிநேகம் செய்தேன்—"

பாக்ஷா.—"நீசெய்த காரியமெல்லாம் சரியே. உன் பிரதாபம் எங்களுக்கு வேண்டாம், சொல்லடா தம்பி விஷயத்தை!"

ஒற்றன்.—"அரசே! அந்நாடு முழுவதும் கோட்டைகள், மதில்கள், அகழ்கள்—இவற்றைச் சீர்ப்படுத்துகிறார்கள். திறைகள் அதி சீக்கிரமாய் வசூலாகின்றன. தேர்ந்த சேனை, மலை நாடுகளினின்று கீழும், புதிய சேனை மலை நாடுகளில் வேலை பழகவும் செல்லுகின்றன. உதயபுரியிலும், மற்ற முக்கியப் பட்டணங்களிலும், ஆயுதசாலைகளில் கணக்கில்லாத விற்களும், அம்புகளும், வாட்களும், வேல்களும், சூலங்களும் தயாராகின்றன."

பாக்ஷா, மீசை துடிக்க, கைகால் பறக்க, சிம்மாஸனத்தின்மீது ஒரு அறை அறைந்து, "என்ன ஐயா சொல்லுகின்றீர் அனந்தபட்டரே? பார்த்தீரா, அந்தப் பயல் பிரதாபசிங்கன் செய்யும் காரியத்தை! என்னவோ சத்திய அரிச்சந்திரன் என்றீரே முன்னால்! இப்பொழுது உம்முடைய அபிப்பிராயமென்ன?" எனக் கேட்டான்.

அனந்தபட்டர்.—"அரசே! என் அபிப்பிராயமென்ன! நான் எனது அற்பப் புத்தியால் நடந்த விஷயங்களைத் தப்பாய் அர்த்தம்செய்துகொண்டு வந்திருக்கவும் கூடும். இந்த அறிவிற் சிறந்த ஒற்றன்போல் பலநாள் இருந்து விஷயங்களைப் பார்த்து வர எனக்குச் சாவகாசம் இல்லையென்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அங்கு நான் தங்கிய 30 நாழிகையும் என்னிடம் பிரதானி, இரண்டாவது, மூன்றாவது மந்திரி, அரண்மனை விசாரணைக் கர்த்தா முதலான உயர்ந்த உத்தியோகஸ்தர்களல்லாமல் வேறு ஒருவரும் நெருங்கவில்லை. கீழ் மக்கள்களிடமிருந்து நான் ஒரு சமாசாரமும் அறிந்து கொள்ளவில்லை. இவ்வொற்றன் சொல்லும் சமாசாரமும், தங்களுக்கு இத்

துணை கோபத்தை விளைவிக்கவேண்டிய அவசியமும் இல்லை. சக்ரவர்த்தியாகிய சுல்தான் ஆமத்பாக்ஷா தனக்கு மாப்பிள்ளையாக வரும்போது, பிரதாபசிங்கன் தன் மாப்பிள்ளையை இடிந்த கோட்டையிலும், வௌவால் குடியிருக்கும் அரண்மனையிலும், மாசு படிந்த கூடத்திலும், இறக்குவதற்குச் சம்மதிப்பானா? அப்படிச் செய்வான் என்று நான் எண்ணவில்லை. கல்யாணத்தை உத்தேசித்து நகரங்களைப் புதுப்பித்து, கோட்டைகளைப் பண்படுத்தி, வீடுகளையும் தெருக்களையும் சீராக்குவதும் தப்பிதமா?"

பாக்ஷா சற்றுக் கோபம் தணிந்து "நன்று சொன்னீர்! விரைவாய் ஆயுதங்கள் செய்கிறார்களே, அதற்கு என்ன ஸமாதானம் சொல்லப்போகிறீர்—" என்று கேட்டான்.

அனந்தபட்டர்.—"எந்த மூடனாவது கல்யாண காலத்தில் கையில் பணம் வைத்துக் கொள்ளாமல் வெறுங்கையனாய் நின்றுகொண்டு விழிப்பானா? விரைவாய்த் திறைவசூல் செய்வதினாலேயே யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்கின்றான் என்று சொல்லத் தகுமோ? ஆமத்பாக்ஷா தன் பின்னிடாச் சேனையுடன் லலிதாதேவியை மணக்க வரும்போது பிரதாபசிங்கன் சேனை, துருப்பிடித்த கத்தியுடனும், ஒடிந்த வில்லுடனும், கூர் மழுங்கிய அம்புகளுடனும், எதிர் கொண்டு வந்து, சுல்தான் சேனையுடன் கலந்து நிற்றல் மரியாதையாய் இருக்குமா? இவ்வொற்றன் சொன்ன விஷயங்களிலிருந்து மாத்திரம், பிரதாபசிங்கன் சண்டைக்கு எத்தனம் செய்கின்றான் என்று நான் எண்ணமுடியாது—"

மீரான்சாகிப்.—"உமக்கு என்ன ஐயா தெரியும்? பிரதாபசிங்கன் சண்டைக்கு வந்தால் உம்மை என்ன செய்யலாம்?"

அனந்தபட்டர்.—"என்னையா?—"

பாக்ஷா.—"மீரான் சாகிப்! நீர் ஏன் வீண் சண்டை போடுகிறீர்? நமது சபையில் ஒவ்வொருவரும் தங்கள் அபிப்பிராயத்தைப் பயமின்றி வெளியிட வேண்டுமென்றல்லவா நமது கோரிக்கை! அப்படியிருக்க நீர் அனந்தபட்டர் சொல்வதைத் தட்டி அவருடன் சண்டை செய்வது சரியன்று. ஏ! ஒற்றா! இன்னும் என்ன விசேஷம்?—"

ஒற்றன்.—"அரசர்க்கரசே! சேவகர்கள் ஜோதிபுரிக்கும், சுகுணபுரிக்கும் போய் வந்து கொண்டிருக்கின்றார்கள். இரகசியம் ஒன்றும் தெரியவில்லை. எவ்வளவு தூரம் பிரயத்தனம் செய்தும், சங்கதி அறிய முடியவில்லை... மங்கள நாயகர் என்ற சேனைத் தலைவர் உதயபுரியை விட்டுப்போனவர், நான் அங்கிருந்த வரையில் திரும்பிவந்து சேரவில்லை."

பாக்ஷா.—"அதன்பிறகு, இன்னும் என்ன?"

ஒற்றன்.—"இம்மட்டே, இவற்றைப் பார்த்து எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. உடனே சமுகத்துக்குத் தெரியப்படுத்த—"

பாக்ஷா "சரி, சரி, சமாசாரம் முடிந்தால் வெளியே போகலாம்" என ஒற்றன் சலாம் செய்து வெளியே புறப்பட்டான். அரசன் சபையோர்களைப் பார்த்து "கனவான்களே! அனந்தபட்டர் சொல்வதும் சரியென்றே தோன்றுகின்றது. ஆயினும் பிரதாபசிங்கரை முற்றிலும் நம்பவும் எனக்கு மனம் துணியவில்லை. ஒற்றன் சொல்லும் சமாசாரம் முழுவதும் உண்மையேயன்றிச் சந்தேகப்பட இடமில்லை. பிரதாபசிங்கர் உண்மையாகவே யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்யவில்லையானால் நாம் நமது சேனைகளுடன் அவரை எதிர்க்கச் செல்வது அவரை அவமானப்படுத்தியது போலாகும் அவர் யுத்தத்தை எண்ணி வேண்டிய முயற்சிகளெல்லாம் செய்வதானால் நாம் ஒற்றனுடைய வார்த்தையைக்கூட லக்ஷியம் செய்யாது ஏமாந்துபோனதாக எல்லாரும் நம்மை இகழ்வார்கள். சபையோர்களே! இவற்றை நீங்கள் நிதானமாய் யோசித்தல் அவசியம்" என்று சொன்னான்.

அரசனுடைய மனம் முற்றிலும் அனந்தபட்டர் காட்டிய வழியில் செல்லவில்லையென்பதை, மீரான்சாகிப் அறிந்ததும், வெகு வினயத்துடன் எழுந்து "அரசர்க்கரசே! எனது அபிப்பிராயத்தை முதலில வெளியிடுகிறேன், சற்று விடை கொடுத்தருளும். மகமதிய நாட்டின் க்ஷேமத்தைக் கோருவதில் நான் எவருக்குப் பின்னாக மாட்டேன் என்பதை நீங்கள் உண்மையாய் அறிவீர்களல்லவா? அனாவசியமாய் நாம் எப்பொழுதும் சண்டைக்குப் போவது தப்பே, சந்தேகமில்லை. அவசியமுண்டானால, சண்டை செய்யப் பின்வாங்குவ

கல்லையிலே முளைத்தாலும் பேய்ச்சுரை நல்லசுரை ஆமா?

தேன்? ஸாது ஜனங்களுக்கு நன்மையே செய்ய அவதரித்த மஹம்மத் பிரானும் அவசியம் கண்ட விடத்துச் சண்டைசெய்து நமக்கு நேர்வழியைக் காட்டியிருக்க நாம் பின்வாங்குவதென்னத்திற்கு! பிரதாபசிங்கன் செய்யும் பிரயத்தனங்கள் எல்லாம் யுத்தத்தை உத்தேசித்ததே! அனந்தபட்டர் சொல்லும் சமாதானம் என் மனதிற்குச் சிறிதும் சரியென்று தோன்றவில்லை. முற்றிலும் தப்பு என்பது தெளிவாய்த் தெரிகின்றது. பிரதாபன் செய்யும் முயற்சிகளைப் பார்த்தால் அவன் தேசத்தை மட்டுமின்றி ஜோதிபுரியையும், சுகுணபுரத்தையும் நமக்கு எதிராய்த் தனக்கு உதவிசெய்ய அழைப்பான்போல் தோன்றுகின்றது. இல்லையேல், இச்சமயத்தில் தூதர்கள் அவ்விரண்டு நகரங்களுக்கும் அடிக்கடி போய்வரக் காரணம் என்ன? சுகுணபுரத்தரசன் வீரபத்திரன் பிரதாபனுக்கு நேசன் என்பது உலகத்தார் எல்லாருக்கும் தெரிந்த விஷயமேயல்லவா? ஜயபாலனோ பிரதாப சிங்கனுக்கு உறவினனுமாயிற்று. கல்யாண சமயத்தில் நமது அரசனை எதிர்கொள்ள வேண்டுமானால் ஆயிரக்கணக்காய் ஆயுதங்கள் புதிப்பிக்கவேண்டிய அவசியம் இராதென்று புத்திசாலிகளான உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமோ? மேலும் இராணுவத் தலைவர் இடம் பெயர்ந்துபோய் நல்ல சேனைகளைத் தலை நகருக்கு அனுப்பவும், பயிற்சியற்ற புதிய சேனைகளை மலைநாட்டுக்கு வேலை பழக முடுக்கவும், ஏதாவது அவசியம் உண்டா?— இன்னமும், மகமதியர்களென்றால் அந்த இராஜபுத்திரர்களுக்கு ஜன்மப் பகை: மனதார வெறுக்கின்றனர். அப்படியிருக்க, நாம் யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்யாதிருப்பது புத்திசாலிகள் செய்யும் வேலையாய் இராது. பலத்த சேனை ஒன்றை யனுப்புவோம். அதை உதயபுரிக்கு எத்தனை பக்கத்தில் கொண்டு போக முடியுமோ, அத்தனை பக்கத்தில் கொண்டுபோய் வைத்துக் கொள்வோம். சண்டை ஏற்படும் பக்ஷத்தில், சேனை சமீபத்தில் இருப்பதாகட்டும். கல்லியாணம் ஆவதானால் அந்தச் சேனையே நமது அரசனுடன் செல்வதாகட்டும். நான் சொல்லுவதில் தப்பு என்ன இருக்கின்றது? அரசன் திருவுள்ளத்துக்கிசைந்தால் ஏற்றுக்கொள்ளலாம்" என்று சொல்லித் தன் ஆசனத்தில் உட்கார்ந்தான்.

அனந்தபட்டர்.—"அரசே! மீரான்சாகிப் பகதூர் சொன்ன விஷயங்களைத் தப்பென்று சொல்ல நான் எழுந்திருக்கவில்லை. அவைகள் முற்றிலும் உண்மையாய் இருக்கவும் கூடும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்கின்றதென்று யாருக்குத் தெரியும்! நாம் சேனைகளைத் தயார் செய்துகொண்டு உதய்புரியின் எல்லையில் வைத்துக்கொள்வது, நமக்கு அந்தஸ்தில் சரியான மண்டலேசுவரன் ஒருவனுடைய நேர்மையைச் சந்தேகித்ததாகும். அவ்வாறு செய்வதால் உட்பகை பலமாகும். சேனை வேண்டுமானால் புறப்படக்கூடிய நிலைமையில் இவ்வூரிலேயே வைத்துக் கொள்வோம். முகூர்த்தவிஷயத்தை நிச்சயம் செய்ய இன்னுமொருதடவை தூதனுப்புவோம். அந்தத் தூதருக்கும் திருப்திகரமாய் அவ்வரசன் பதில் அனுப்பவில்லையானால், நமது சேனை யுத்தத்துக்கு உடனே புறப்படுவதாகட்டும். வீணில் பெரிய சேனையை ஊரைவிட்டுக் கிளப்புவது பயனற்ற செலவுக்குக் காரணமாகும். பொக்கிஷத்தில் இருக்கும் பணத்தை வீண் செலவு செய்வதனால் யாருக்கு என்ன, உபயோகமாகப் போகிறது! யோசிக்குமிடத்து எல்லாம் சந்தேகத்தால் செய்யும் காரியமேயல்லவா? அரசனும் தீர்க்காலோசனை செய்யட்டும்."

மற்ற சபையோர்களும் பேசிய பின், பாக்ஷா கொஞ்சநேரம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்து பின் "பிரபுக்காள்! உங்கள் மனத்துள் இருப்பவற்றை வெளியிட்டீர்கள்! அதற்கு வந்தனம். துரிதமாய்ப் போய்வரத் தக்க தூதர்கள் நான்கு பேர்களைத் தயார் செய்வாய் மந்திரீ! அவர்களுடன் உதயபுரிக்கு முன் போயிருந்த சிப்பாய்களும் போய்வரட்டும். சிறந்த ஒற்றன் ஒருவனை உடனே உதயபுரிக்கு அனுப்பி அடுத்த வாரத்தில் வந்து சேரும்படி சொல்! சாகிப் பகதூர் மீரான் சாகிப் நமது சேனைக்கு வேண்டிய ஆகாரம் முதலிய சாமான்களைத் தயார் செய்யட்டும்— எப்படியிருப்பினும் பிரதாபசிங்கர், கல்யாண விஷயத்தில் இத்தனை அசட்டையாய் இருப்பது, பொறுக்கக்கூடிய தப்பிதமென்று தோன்றவில்லை. எவ்வளவுதான் திரும்பத்திரும்ப யோசனை செய்யினும், அவ்வரசன் தப்பு மன்

கசடருக்கு இல்லை கற்றோர் உறவு.

ணிக்கக்கூடியதாய் இல்லை. சிங்கத்தை ஆட்டுக்குட்டி ஏமாற்றுமா? ஆமத் பாக்ஷா மனதை நோகப்பண்ணியவர் யார்தான் இதுவரையில் உயிர் வாழ்கின்றனர்? இவனும் என்னை ஏமாற்றுவானாகில் தக்க தண்டனைப்படுவான் என்பதில் ஆக்ஷேபணையில்லை.—இனி என்ன விஷயம் பாக்கியிருக்கின்றது? சபை கலைவோமா? மந்திரீ, நீ என்னுடன் வா" என சிம்மாஸனத்தை விட்டெழுந்தான். சபையோர்களும் எழுந்து விடைபெற்று வெளியே சென்றனர்.

வெளியே சென்ற அனந்தபட்டருக்கு மனக் குழப்பம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. "பிரதாபன்வார்த்தை தவறுவானோ?பிரதாபன் செய்யும் பிரயத்தனங்களின் பொருள் என்ன! உண்மையாகவே சண்டை செய்ய யத்தனம் செய்வதானால் நான் சரியான புத்திமதி சொல்லுகிறேனா பாக்ஷாவுக்கு?நான் சொல்வது தப்பானால் சுல்தானுக்கு என் வார்த்தையில் எத்தனை நம்பிக்கையிருக்கப்போகிறது? இச்சங்கடத்தில் லலிதையின் பாடு என்னவாகும்?இதுவோ யான் இன்று வழியிற் கண்ட சகுனங்களின் பயன்? ஈசன் செயலை யார் தடுக்கலாகும்? நான் நியாயத்தை எடுத்துப் பேசினாலும் அந்த மீரான் சாகிப் என்னைப் பொய்யனென்று காட்டிக்கொடுப்பான்போல் தோன்றுகின்றது......" என்றவர் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

நான்காவது அத்தியாயம்.

செலவு பெற்றது

வஸந்தபுரியிலிருந்து ஸுவர்ணஸரஸுக்குப் போகும் தெருவில் கிட்டத்தட்ட கடைசி வீட்டில் ஒரு கட்கடை. உள்ளே பாட்டும் மேளமும் காதைப் பிளக்கின்றன. பாட்டைக் கேட்டு ஆனந்தப்பட்டு "பேஷ்! பேஷ்! ஹா! ஹா! நடக்கட்டும், நடக்கட்டும்" என்று கத்துகின்றனர் சிலர். மதுவால் மதி மயங்கி மல்லாந்து கிடக்கின்றனர் பலர். நுழைகின்றவர்களை "வா, வா" வென்று எதிர்கொண்டுபோய் உபசரிப்பவர் சிலர். கொஞ்சம் கொஞ்சமாய்ப் பக்கத்தில் வைத்திருக்கும் பாத்திரத்திலிருந்து பானம் செய்துவிட்டு, பாட்டுக்குத் தாளம் போடுகின்றவர் சிலர். உள்ளே இங்ஙனமிருக்க, வெளியே தெருவில் கவுஸ் ஸாகிப், கடையைத் திரும்பிப் பாராமல், அப்பால் போகின்றான். உள்ளிருந்து வரும் பாட்டு, மேளம், தாளம் இவற்றின் சப்தம் கூட அவன் காதில் படவில்லைபோலிருக்கின்றது. தலை குனிந்த வண்ணமே நடந்து செல்லுகின்றான்.

கவுஸ் போவதைக் கண்டு உள்ளிருந்து ஒரு மனிதன் வெளியே ஓடிவந்தான். அவனது தேகத்தையும், உடையையும், முகத்தையும், பார்த்தால் அவன் மல்லீக் மகமத் என்று அறிந்துகொள்ள சந்தேகமும் உண்டா? வந்த மல்லீக் சிப்பாய் "அரே! கவுஸ்! அரே கவுஸ்! கவுஸ்!" என்று கூப்பிட்டான்.

சப்தம் எப்புறமிருந்து வருகின்றதென்று அறிந்துகொள்ள, கவுஸுக்குச் சற்று நேரமாயிற்று. நாற்புறமும் சுற்றிப் பார்த்துப் பின் கடைப்புறம் திரும்பவே வாசற்படியிற் சிப்பாய் நிற்பதைக் கண்டான். மல்லீக் சிப்பாய் உள்ளே செய்துகொண்டிருந்த காரியம் என்னவென்று கவுஸுக்குத் தெரியாமலிருக்குமா! "ஏன் ஐயா கூப்பிட்டீர்: சீக்கிரம் சொல்லும், எனக்கு வேலையிருக்கிறது" என்றான் கவுஸ்.

மல்லீக்.—"என்ன அப்பே வேலை? நீதான் உள்ளே வரமாட்டையே. போவது நானாவது ஒன்னோடே வரேன். என்ன, வரலாமா?"

கவுஸ் மனத்துள் "இது என்ன தொந்தரவாயிருக்கின்றது; நாம் போகிற இடத்திற்கு இந்த யமனும் வரவேண்டுமோ?—(வெளிப்படையாய்) தடையென்ன வரலாம்" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டான்.

மல்லீக்.—(அவனைப் பின் தொடர்ந்து) "கவுஸ்! உனக்கு எப்போதும் வேலை இருந்துண்டே இருக்குது. எப்பொவும் ஒனக்கு அவசரம் தான். நேத்து சேவுகன் வந்து சொன்னானே தெரியுமா?"

கவுஸ்.—"எந்தச் சேவகன்? மந்திரியிடமிருந்து வந்தவனா? அதற்கென்ன. போகவேண்டியதென்றால் போகவேண்டியதுதான்."

மல்லீக்.—"அது எப்படியப்பா? எங்கேபோறது? இந்த மாதிரி ஆட்டுக்குட்டி போவது போலே போவுதென்னா என்ன இருக்குது.—போவுணும் சண்டைக்கு: கல்யாணமாம்! கல்யாணம்! யாருக்கு வேண்டிருக்கு! கல்யாணம் பண்ணிண்டா சண்டை யெப்பிடி நடக்கும்? என்ன கவுஸ் சொல்லு நீ."

கவுஸ்.—ஒன்றும் சொல்லவில்லை. இனி

பதில் சொல்லமாட்டான் என்று கண்டதும், மல்லீக், "இந்தக் கல்யாணமும், அடிக்கொருதரம், நாம் போறதும், சுத்தமாய் நன்னாயிலே. கல்யாணம் வேணுமானா அவங்க இங்கே வரட்டும்; இல்லாட்டா சண்டைக்குப் போகணும்" என்றான்.

கவுஸ்.—"என்ன ஐயா சண்டையின்மேல் உமக்கு அவ்வளவு ஆசை?"

மல்லீக்—"சண்டைலயா? பிச்சுடமாட்டே அந்தப் பாவிகளை! அந்த வாசக்காப்பான் ரெண்டு பேரையும் என்னான்னு எண்ணிக்கிட்டே. காணணும் அம்முட்டுத்தான், அனுப்பிடுவேன் எமப்பட்டணத்துக்கு.—சரி இது கெடக்கட்டும்: எங்கே போறே சொல்லு. நான் என்ன நாய்மாதிரி நீ போற இடத்துக்கெல்லாம் வந்துகிட்டு இருப்பேனா என்ன?"

கவுஸ்.—"இஷ்டமில்லா விட்டால் திரும்பிப் போகலாம் நீர். நான் கூப்பிடவில்லையே உம்மை."

மல்லீக்.—"அது கெட்க்குதுசொல் அப்பே! எங்க போறே?"

இதற்குள் ஸுவர்ண ஸரஸின் கரையோரமாய் வந்து சேர்ந்தனர். சாயங்காலத்து மஞ்சள் வெயிலும், குளிர்ந்த காற்றும், ரம்மியமான ஸரஸின் காட்சியும், மூடனான மல்லீக் சிப்பாயின் மனதையும் கவர்ந்தன.

கவுஸ்.—"ஐயா நாளை உதயபுரிக்குப் புறப்படுமுன், என் பெற்றோரிடம் விடைபெற்று வரப் போகிறேன். அவ்வளவே."

மல்லீக் "இம்மட்டுத்தானா — முன்னயே சொல்லியழக் கூடாதா? நான் அப்படியே போயிருப்பேனே—எனக்குத் தூக்கம் வரது. இதோ இந்த மண்டபத்திலே படுத்துத் தூங்கறேன். நீ திரும்பி வரப்போ, என்னை எழுப்பு" என்று பக்கத்தில் கட்டியிருந்த மண்டபத்தில் புகுந்தான்.

கவுஸ் "அப்படியே எழுப்புகிறேன். காற்று நன்றாய் அடிக்கிறது. தூங்கிக்கொண்டிரும்" என்று சொல்லி, மனத்துள் "சனி ஒழிந்தது. இது என்ன இவனுடன் பீடை பிடித்தது போல்; தூங்கட்டும் குடிவெறியில் பிணம் போல்" என்று எண்ணி அப்பால் போனான்.

அக்கரையில் பனந்தோப்பில் சில குடிசைகள் காணப்படுகின்றன. அவற்றின் புறமாய்க் கவுஸ் விரைந்து செல்கின்றான். மூன்றாவது குடிசையின் வீதித்திண்ணையில் ஒரு கிழவன் உட்கார்ந்திருக்கின்றான். அவனிடம் சென்றதும் கவுஸ் மெதுவாய் "அப்பா" என்றான். கிழவன் கண்ணை விழித்துப் பார்த்து சந்தோஷத்துடன், "கவுஸ்! கவுஸ்! என் குழந்தாய்! வந்தாயா? உள்ளேபோய்க் கால் அலம்பிக்கொண்டு உன் தாயிடத்தில் கேட்டு ஏதாவது தின்பண்டம் பெற்றுக்கொள். ஏது சாயங்கால வேளையில் வந்துவிட்டாய்" என, கவுஸ் "அப்பா, நாளையதினம் மறுபடியும் நாங்கள் ஒருமுறை உதயபுரி போய்வர வேண்டியிருக்கின்றது. சொல்லிக்கொண்டு போக வந்தேன்" என்பதற்குள் உள்ளிருந்த ஒரு கிழவி ஓடிவந்து, "என் கண்மணியே! குழந்தாய்! இப்பொழுதுதானே ஒரு முறை உதயபுரிபோய் வந்தாய். மறுபடியும் என்ன வேலை உனக்கு அங்கே? அரண்மனையில் வேறு ஒருவரும் இல்லையா? உள்ளேவா; சாவகாசமாய்ப் பேசுவோம்.உன் தகப்பனாரும் உள்ளே வருவார். இராத்திரி இங்குத் தங்குகின்றாயா? சமைக்கட்டுமா?" எனக்கேட்டாள்.

கவுஸ் "இராத்திரி அரண்மனையில் வேலையிருக்கின்றது. எனக்கு இங்கே தங்கமுடியாது. மேலும், நாளை விடியற்காலம் புறப்படவேண்டுமல்லவா?" என்று சொல்லித் தன் தாயாரைப் பின் தொடர்ந்து உள்ளே புகுந்தான்.

இதற்குள் இரண்டு குடிசைகளுக் கப்பால் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு கை யந்திரத்தால் நூலிழைத்துக் கொண்டிருந்த ஒரு சிறு பெண் கவுஸ் தூரத்தில் வரும்பொழுதே பார்த்து,நடையில் ஒரு பாயை விரித்து மறுபடியும் யந்திரத்தண்டை உட்கார்ந்தார்கள். கவுஸ் நேராய்த் தன் தகப்பனார் வீட்டிற்குத்தான் போவானென்று அவளுக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆயினும் அவன் வருவதைக் கண்டவள், முகம் மலர்ந்தவளாய்த் தன் யந்திரத்தை ஒழுங்கு படுத்திக்கொண்டு, அவனை எதிர்பார்த்தவள்போல் அவன் போன திசையையே இடைவிடாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தன் வீட்டினுள் நுழைந்த கவுஸ், தன் தாய் தந்தையருடன் சிறிது நேரம் பேசிவிட்டு, சிற்றுண்டி தின்று, நீர் அருந்திப் பின்னர் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினான். அப்பொழுது அவன் தாய் "கவுஸ்!

உனது இரண்டு தமையன்மார்களும் இருக்கும்போது என்னைப்போல் தைரியமுள்ள ஸ்திரீகள் இந்தப் பிராந்தியங்களிலேயே இல்லையென்பர் எல்லோரும். அவர்கள் இருவரும் ஒரே நாளில் சண்டையில் மடியவே, வயது சென்ற நானும் உன் தந்தையும் உன்னையே ஆதரவாக நம்பியிருக்கின்றோம். நீயும் அடிக்கடி தூரதேசம் போவதென்றால் என் தேகம் நிலைகுலைகின்றது. என்ன செய்வோம்! இராஜஸேவை பொல்லாததுதான். ஆனாலும் வயிறு ஒன்று இருக்கின்றதே! சுகமாய்ப் போய்வா. வழியில் சண்டை சச்சரவிடாதே. சுத்தவீரனைப்போல் நடந்துகொள், போய்வா!" என்றாள். அவன் தகப்பன், மகனை ஆசீர்வதித்து, "மேல், மேல், உனக்கு உத்தியோகம் உயரட்டும். இராஜபக்தி நிறைந்து உனக்கு அரசனது தயவு பரிபூர்ணமாய்க் கிடைக்கட்டும்" என்றான்.

இருள் மூள்கின்றது. வெளியே வந்தான் கவுஸ். இன்னும் "கீச்! கீச்" என்று நூல் இழைக்கும் இயந்திரம் கத்துகின்றது. சுற்றிலும் ஒருவருமில்லை. நேராய் அப்பெண்மணி வேலை செய்யும் வீட்டில் நுழைந்தான். அவளும் கவுஸ் வருவதைக் கண்டதும், எழுந்து உபசரித்துப் புன்சிரிப்புடன் "உட்காரும்" என்றாள்.

கவுஸ்.—"மங்களாபாய்! எனக்கு அதிக நேரம் உட்கார்ந்திருக்கச் சாவகாசமில்லை. நான் நாளை அதிகாலையில் எழுந்து மறுபடியும் உதயபுரிக்குப் போகின்றேன். இங்கே வந்து என் தாய் தந்தையரையும், உன்னையும், உன் தகப்பனாரையும் பார்த்துவிட்டுப் போவோம் என்று வந்தேன்" என்றான்.

மங்களாபாய்.—"ஐயா! முன் ஒருநாள் சாயங்காலம் இங்கு வருவதாக ஒரு கோபாலனிடத்தில் நீர் சொல்லி யனுப்பவில்லையா? அன்றையதினம் ஏன் வரவில்லை? இன்று வந்தும், அவசரப்படுகின்றீர். என்ன விசேஷம்? அரண்மனையில் உமக்கு வெகுவேலை போலும்—"

கவுஸ்.—"உண்மையே. எனக்கு இப்பொழுது அரண்மனையில் வேலை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. உண்மையாகவே எனக்கு உன்மீதுள்ள காதல் அன்பு உனக்கே நன்றாய்த் தெரிந்த விஷயம். பலவிதமாய் வர்ணிக்க எனக்குச் சக்தியுமில்லை, சாவகாசமுமில்லை. தெய்வாதீனமாய் இந்தத் தடவை நான் உதயபுரியிலிருந்து க்ஷேமமாய்த் திரும்பி வந்தவுடன் தப்பாமல் உன்னை மணந்து கொள்ளுகின்றேன். என் அருமைப் பெற்றோர்களும் உதவியின்றித் தவிக்கின்றனர். உன்னையல்லாமல் வேறு யாரை அவர்கள் மருமகளாக அடையப் போகின்றார்கள். இனித் தாமதிக்க நேரமில்லை. உன் தகப்பனார் இன்னும் ஸரஸிலிருந்து வரவில்லைபோலும். வந்தவுடன் அவரிடம் நான் வந்த சங்கதியைத் தெரியப்படுத்து, எனக்கு உத்தரவு கொடுக்கின்றாயா?"

மங்களாபாய்.—"உத்தரவுக்கென்ன? நமது கல்யாணம் எத்தனை சீக்கிரமாய் நடக்கின்றதோ அப்படியேதான் சுல்தானுடைய கல்யாணமும் நடக்கும்போல் இருக்கின்றது. ஏதோ உண்டு, இல்லை, என்று பேசிக்கொள்ளுகிறார்களே ஜனங்கள்!"

கவுஸ்.—"அரசன் கல்யாணம் எப்படியாகுமோ, நாம் க்ஷேமமாய் இருப்பின் நமது கல்யாணம் நடக்குமென்பதில் சந்தேகமில்லை. உன்னை மணக்கவேண்டுமென்றும், உன் உதவியால் என் பெற்றோர்களுக்குக் சுகம் உண்டாக வேண்டுமென்றுமல்லவா இவ்வுயிரை நான் வைத்திருக்கிறேன்? உன் அன்பினும் மேலான பெருமை எனக்கு என்ன இருக்கின்றது? உன் தகப்பனுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்வாய். நான் போய் வருகிறேன்."

மங்களாபாய் "உமக்கெல்லாக் காரியமும் கைகூடட்டும். வழியில் ஜாக்கிரதையாய்ப் போய்வாரும்" எனக் கண்ணும் கண்ணீருமாய் விடைகொடுத்தாள். சுத்த வீரனான கவுஸின் மனமும் சற்றுக் கலங்கிற்று.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றபடி கவுஸுக்கு அவர்களைத் தவிர வேறு தெய்வமே இல்லை யென்று அபிப்பிராயம். முன்னிரண்டு மக்களை இழந்து நொந்து கிடக்கும் தன் பெற்றோர்களைச் சந்தோஷப் படுத்த, என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிவான். அவர்கள் மனநிறைகிணங்கி தன் தமையன்மார்களைப்போல் ராணுவ வீரனானான். கல்வித்திறமையோ மிகக்குறை. வஸந்தபுரிக்கு வந்தபோது அடிக்கடி வந்து பெற்றோர்களை விசாரிப்பது போலவே ஐந்திரபுரியில் இருக்கும்பொழுதும் தான் நேரில் வந்தாவது, சிநேகிதர் மூலமாயாவது அடிக்கடி அவர்களின் க்ஷேமத்தை விசாரித்து அறிவான்.

இளம்பிராய முதற்கொண்டே மங்களாபாயோடு பழகி விளையாடி அவள் நடத்தையை அறிந்தவனாதலால் அவளுடைய அடக்கம் அறிவு, நேர்மை, சுறுசுறுப்பு, சிக்கனம், கருணை இவற்றைக் கண்டு வியந்து, அவள்பால் தன்னையறியாமலே ஈடுபட்டான். அவளும் கவுஸுடைய தைரியம், புஜபலம், வாய்மை, கம்பீரம் நேர்மை, இவற்றைக் கண்டு அவனிடம் அன்பு கொண்டாள். குழந்தைப் பருவம் முதற்கொண்டே முற்றின அன்பு இருவர் பெற்றோர்களுக்கும் தெரிந்தது. இருதிறத்தாரும் தடை செய்யாமல் சிறுவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்க இடம் கொடுத்தார்கள். கவுஸ் தன் பெற்றோர்களுக்குத் தற்காலம் எப்படி ஒரே மகனோ அப்படியே, மங்களாபாயும் ஒரே பெண். தாயையும் இழந்துவிட்டாள். தகப்பன் மட்டும் மீன் பிடித்து விற்று ஜீவனம் செய்து வருகின்றான். அவனது வலை, பை முதலிய சாமான்கள் செய்ய நூல் நூற்றுக் கொடுப்பதெல்லாம் மங்களாபாயே. இரண்டு குடும்பங்களும், மகமதிய மதத்தில் சேர்ந்து ஒருதலை முறைதான் ஆயிற்று. கற்பமைந்த பெண்ணை யடைவதினும், வேறு என்ன பெருமையை அடையப்போகிறான்? தன் உலக இன்பமெல்லாம் மங்களாபாயிடத்தில் குடிகொண்டிருப்பதாக நினைத்தான், கவுஸ் சாகிப்!

கல்விக் குறிப்புகள்

Educational Notes

மாகாணக் கல்வி மஹாநாடு

நாளது மாதத்தில் திருச்சினாப்பள்ளியில் மூன்றாவது மாகாணக் கல்வி மஹாநாடு, திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜில் சரித்திர போதகாசிரியரான பிரபல வாக்மி ஸ்ரீமான் K. V. அரங்கஸாமி ஐயங்காரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கல்வி, கேள்வி, அந்தஸ்து முதலியவைகளில் எவ்விதத்திலும் ஷை ஸ்தானத்துக்கு ஐயங்காரவர்கள் ஏற்றவர்களே. அருமைவாய்ந்த அவரது உபன்யாஸத்தை முழுவதும் போதினியில் பதிப்பிக்க முடியாததற்குப் பெரிதும் வருந்துகிறோம். ஆயினும் மஹாநாட்டில் தீர்மானமாகிய முக்கிய விஷயங்களை நமது அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். அவையாவன:—மஹாநாட்டில் தென்னிந்தியா உபாத்தியாயர்களும், உபாத்தியாயர் சங்கங்களும் அதிக சிரத்தை காட்டவேண்டியதுடன், சுதேச சமஸ்தான உபாத்தியாயர்களும் அதற்கு அழைக்கப்படவேண்டும்: ஆரம்பக் கல்வியையும் நடுத்தரக் கல்வியையும் நிர்வகிக்கவோ மேற்பார்வையிடவோ பலவகையான முறைகள் இருக்கக்கூடாது. ஒற்றுமைப்பும் அல்லது ஒரே மேற்பார்வையும்தான் வேண்டும்; மதப்படிப்பு சம்பந்தமாய் மனச்சாக்ஷியை மதித்து மாணவர்கள் நடந்துகொள்ள இடந்தரவேண்டும்; பள்ளிக்கூடங்களில் கைத்தொழில் பயிற்சிக்கான வசதிகள் ஏற்பாடாக வேண்டும்; பெரிய பிள்ளைகளுக்கும் உயர்தரப் படிப்புப்பெறும் மாணவர்களுக்கும் ராணுவப் பயிற்சி செய்துவைக்கவேண்டும்; உபாத்திமார் சங்கத்திலிருந்து சில பிரதிநிதிகளை ஸர்வகலாசாலைச் சங்கத்திற்கு அனுப்பவேண்டும்; முனிஸிபாலிடிகளில் ஆரம்பக் கல்வியை இலவசமாயும் கட்டாயமாயும் செய்யவேண்டும்; கலாசாலைகள் இருக்குமிடங்களிலெல்லாம் யூனிவர்ஸிடிப் பரீக்ஷைகளை நடத்தவேண்டும்; பாடசாலைகளில் வைத்ய பரிசோதனை விஷயத்தில் அதிகமான சிரத்தைவேண்டும்; இவைகளன்றி, கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றியும் சுகவழி, சுகாதாரம் ஆகிய பாடங்கள் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக்கப்படவேண்டியதை வற்புறுத்தியும், நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் தேசபாஷை மூலமாயே கல்வி போதிக்கப்படவேண்டுமென்றும், சர்க்கார் பள்ளிக்கூடங்களிலும் சர்க்கார் உதவிபெறும் பள்ளிக்கூடங்களிலும் ஜாதி வித்தியாசமின்றி எல்லா வகுப்பினரும் சேரச் சவுகரியம் செய்யவேண்டுமென்றும் சில தீர்மானங்கள் நிறைவேறின.

பஞ்சமர் கல்வி வசதி.

"சர்க்கார் நிர்வாகத்திலுள்ள எந்தப் பள்ளிக்கூடத்திலும் ஜாதியை உத்தேசித்து எந்தப் பையனையுஞ் சேர்த்துக்கொள்ள மறுக்கக்கூடாது" என்பது கவர்ன்மெண்டாரின் கொள்கை. ஆனால் அனுஷ்டானம் மட்டும் வேறாக விருக்கிறது. இந்த மாகாணத்தில் சர்க்காருடைய விசாரணையின் கீழிருக்கும் 8,157 பள்ளிக்கூடங்களில் பஞ்சமர்களைச் சேர்த்துக் கொள்ளும் பள்ளிக்கூடங்களின் சங்கியை 60 என்று தெரியவருகிறது. ஜாதியில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற மனோபாவமே இதற்குக் காரணமாகும். இந்தத் துர்த்தசையை நிவர்த்திக்கக் கருதிய கவர்ன்மெண்டார் செய்திருக்கும் உத்தரவை அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். சர்க்கார் விசாரணையிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் பஞ்சமர்கள் சேரமுடியாமல், பள்ளிக்கூடக் கட்டிடமானது அக்கிரகாரம், கோவில், சாவடி முதலிய இடங்களில் இருக்குமானால், பஞ்சமர்கள் போகக் கூடிய இடத்துக்குப் பள்ளிக்கூடத்தை மாற்றவேண்டும். வாடகைக் கட்டிடத்தில் பள்ளிக்கூடம் ஏற்பட்டிருந்து அதில் பஞ்சமர்கள் வரக்கூடாதென்று கட்டிடத்தின் சொந்தக்காரர் சொல்வாராயின், வேறு கட்டிடத்துக்கு பள்ளிக்கூடத்தை மாற்றவேண்டும். எல்லா வகுப்புப் பிள்ளைகளும் போகக்கூடிய இடத்திலல்லாமல் சர்க்கார் பணத்தைக்கொண்டு இனி பள்ளிக்கூடங்களைக் கட்டக்கூடாது. இந்த உத்தரவின் மேலான கருத்தை நாம் அங்கீகரிக்கிறோமென்றாலும், இவைகளில் மட்டும் மேலே கூறிய துர்த்தசை நிவர்த்தியாய்விடாது. உயர்ந்தோர் என்று நினைத்துக்கொண்டிருப்பவர்களுடைய அனுதாபத்தாலும் விவேகத்தாலும் தான் பஞ்சமரின் கஷ்டம் ஒழியவேண்டும்.

* * *

ஆசார்ய ஆச்ரமம்.

இப்போது நமது நாட்டில் நடையாடிவரும் கல்விமுறையானது ஜன ஸமூஹத்தின் புரோவிருத்திக்கு ஏற்றவண்ணம் அமைந்திருக்கவில்லையென்பதை யுணர்ந்த சில பிரமுகர்கள் ஆங்காங்கு புதியமுறையில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதைக் காண்கிறோம். உதாரணமாக பஞ்சாப் மாகாணத்திலுள்ள குருகுலம், வங்காளத்திலுள்ள சாந்தி நிகேதனம், ஆகியவற்றைச் சொல்லலாம். இப்போது, இவைகளுடைய கோஷ்டியில் சேரக்கூடிய 'ஆசார்ய ஆச்ரமம்' என்றொரு கல்விச்சாலை வங்காளத்தில் ஏற்படப்போவதாக அறிகிறோம். இச்சாலையிலே ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரே இடத்தில் வசித்து நெருங்கிப் பழகுவார்கள். பொதுவாக 7-வயதுமுதல் 12 வயது வரையிலுள்ளவர்களே அங்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தக்க சன்மார்க்கக் கல்வியும் மதக்கல்வியும் போதிக்கப்படும். போதனை வங்காளி பாஷை மூலமாகவேதான் நடைபெறும். லௌகிகக் கல்வியுடன் விவசாயம், கால்நடை வளர்த்தல், நெசவு முதலிய உபயோகமான தொழிற் கல்வியும் போதிக்கப்படும். இதில் ஹிந்துக்களில் யாவரும் சேரலாம். கனம் மணீந்திர சந்திரநந்தி, பாரிஸ்டர் வி. ஆர். தாஸ், நியாயமூர்த்தி. பி. ஆர். தாஸ் முதலியோர் இப்பள்ளிக்கூடத்துக்கு நிர்வாககர்கள்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஸேவை

கடப்பை ஜில்லாவிலுள்ள ஓர்பள்ளிக்கூடத்தில் பாடம் நடந்துகொண்டிருக்கின்றது. மணி ஸுமார் மூன்றிருக்கும். திடீரென ஊது குழலின் சப்தம் கேட்டது. அச்சப்தம் அதிவேகமாய் விட்டுவிட்டுக் கூவிற்று. சப்தம் கேட்டவுடனே பாடங்கள் நின்றன. பையன்கள் தம் உபாத்யாயரிடம் உத்தரவு பெற்று வெளியே சென்று, அங்கு சில மாணவர்களுடன் சற்றுப் பேசி விட்டுக் கனவேகமாய் ஊருக்குள் சென்றனர். ஊருக்குள் போகப் போக் கும்பல் அதிகமாயிற்று. எங்கேயோ நெருப்புப் பற்றிக்கொண்டதாம். அதையணைக்க, பாடசாலை மாணவர்கள் செல்கின்றனர் என்று வழியிலுள்ளோர் சொல்லிக்கொண்டனர்.

சிறுவர்கள் எல்லோரும் கடைத் தெருவே சென்று ஓர் சந்திற்குள் நுழைந்தனர். அங்கே ஓர் வீட்டின் முற்றத்தில் வைக்கோற்போர் ஒன்று பற்றி எரிந்துக்கொண்டிருந்தது. பக்கத்து வீடுகளிலும் பல வைக்கோற்போர்களிருந்தன. சிறுவர்கள் வருவதற்கு முன்னமே, சிலர் அணைக்க முயன்று கொண்டிருந்தனர். ஆனால்வேடிக்கை பார்த்துக்கொண்டு, அவ்வீட்டின் மண்மெத்தையின்மேல் உட்கார்ந்திருந்தவர்கள் அனேகர். சிறுவர்களுடன் அப்பாடசாலையின் உபாத்யாயர்கள் இருவரும் வந்திருந்தனர். வயதிலும் பலத்திலும் பெரியவர்கள் தெருவிலிருந்த கிணற்றிலிருந்து உள்முற்றம்வரைக்கும் அருகாமையில் நிற்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிரே சிறுபிள்ளைகள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். இரண்டு தாம்புக்கயிறுகளும் 10,15 பித்தளைக் குடங்களும் மண் குடங்களும் சேர்க்கப்பட்டன. பெரியவர்கள் நால்வர் கிணற்றண்டையிலிருந்து நீரை எவ்வளவு வேகமாய் எடுக்கமுடியுமோ அவ்வளவு வேகமாய் எடுத்துக்கொண்டிருந்தனர். நீர்க் குடங்கள் பெரியவர்களால் கைமாற்றப்பட்டு வெகு வேகமாய் உள்ளே அனுப்பப்பட்டன. உள்ளே முற்றத்தில் சிலர் அந்த நீரை வாரி வைக்கோற் போரின்மீது, இறைத்தனர். வேறு சிலர் தம் கால்களால் நெருப்பை அணைக்க முயன்றனர். வேறு சிலர் அணைந்த வைக்கோலை நெருப்புப்படாத வேறொருபுறம் சேர்த்தனர். மற்றும் சிலர், குடங்களினின்று நீர் கொட்டப்பட்டவுடனே காலியான குடங்களை சிறுவர்கள் மூலமாய் கிணற்றிற்குக் கொடுத்தனுப்பினர். வெகு சீக்ரத்தில் நெருப்பு அடங்கியது. மறுபடியும் ஊதுகுழல் கேட்டது; அனைவரும் நின்றனர். வேலையை நிறுத்துவதற்கு அது அறிகுறி. உபாத்யாயர் உட்சென்று பார்த்து நீர் போதுமென்று நினைத்ததும், வேலையை நிறுத்த உத்தரவிட்டார். சிறுவர்கள் தம்மிடங்களை விட்டு, உள்ளே என்ன நடக்கிறதென்று பார்க்கச் சென்றார்கள்.—ஆ, அதென்ன, புகை மறுபடியும் கிளம்புகிறது! "நீர் இன்னும் வேண்டும்" என்று முற்றத்திலிருந்து வார்த்தை வரவும், முன்போலவே பையன்கள் நிற்கின்றனர். காரியமும் முன் போலவே நடக்கின்றது.

கடைசியில் நெருப்பை அணைத்தாயிற்று, இனிப் பயமில்லை, என்று அங்குள்ளவர்கள் சொன்னதும், அனைவரும் வெளிச்சென்றனர். வைக்கோற்போரின் சொந்தக்காரன், மாணவர்களோடு வந்த உபாத்யாயர்களைக் கூப்பிட்டு, மாணவர்கள் செய்த செயலுக்குப் பலனாக, பணம் கொடுப்பதாகவும் அதைக்கொண்டு சிறுவர்களுக்குத் தின்பண்டம் வாங்கிக் கொடுக்கும்படியும் வேண்டினான். பணம் வாங்குவது தங்களுக்கு இழுக்கென்றும் பணத்திற்காக மாணவர்கள் வேலை செய்யவில்லையென்றும் சொல்லிவிட்டுப் பையன்களை அழைத்துக்கொண்டு உபாத்யாயர்கள் சென்றனர். இந்த சம்பவத்திற்கு முன்னும் பின்னும் பலஇடங்களில் நெருப்புப் பற்றினபோதெல்லாம் மாணவர்கள் போய் தங்களாலான உதவி செய்திருக்கின்றனர். மாணவர்களைக் கண்டால் அவ்வூராருக்கும் பிரியம் அதிகம்.

இனி இதைப்பற்றிச் சற்று யோசிப்போம். ஊது குழல் சப்தம் கேட்டதும் மாணவர்கள் வகுப்பிலிருந்து வெளி வருவானேன் ? என்று கேள்வி பிறக்கும். இந்தப் பள்ளிக்கூடத்தில் பாலஸேவைச்சேனை ஒன்றுஇருக்கிறது (Boy Scout Troop) அச்சேனையைச் சேர்ந்தோர் தம் பேருக்கேற்கே "ஸேவையை"விரதமாகக் கைக்கொண்டிருக்கின்றனர். ஊதுகுழல்பயிற்சி அவர்களுக்குண்டு. அதன் மூலமாய் ஸேவகர்களைச் சேர்க்கவும் அபாயம் என்று தெரிவிக்கவும் முடியும். அதன்படியே அவர்கள் வந்தனர். மற்றும் எப்பொழுதும் செய்யவேண்டிய காரியம் (இங்கு நெருப்பை அவித்தல்) நிதானமாகவும், கலவரமின்றியும் செய்தாற்றான், காரியம் ஸரிவர நடைபெறும் என்பதை அவர்கள் அனுபோகத்திலறிந்தவர்கள். சிலர் நீர் தூக்கவும், சிலர் அதை வேகமாய் உள்ளேயனுப்பவும், காலியான குடங்களைத் திருப்பியனுப்பவும் இராது, ஒவ்வொருவரும் தாமே எல்லாம் செய்யவேண்டும் என்றும் முயன்றால் வேகமாக வேலைசெய்ய முடியுமா ?

"சிறுவர் செய்த காரியத்திற்கு சொந்தக்காரன் பரிசு அளித்தபோது, உபாத்யாயர் பெற்றுக்கொள்ளாதது தப்பு" என்று சொல்வர் சிலர். ஏதாவது கொடுப்பது நல்லது என்று வேறு பலர் கூறுவர். அப்படியானால் உபாத்யாயர்கள் செய்தது ஸரியா ?

சற்று யோசிப்போம். உபாத்யாயர்கள் அவ்

வாறு செய்யக் காரண மென்ன?

சிறுவர்கள் நெருப்பை அவிக்கப்போனது பணத்திற்காகவன்று. தம்மாலான உதவி, கஷ்டப்படுபவர்களுக்குச் செய்யவேண்டு மென்ற எண்ணத்தினால்தான். இப்படியிருக்க, சொந்தக்காரன் கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டால், வேறு எவனுக்காவது உதவிசெய்யும் போது, இவனும் முன்னவனைப்போல நமக்குப் பணம் கொடுக்கமாட்டானா என்ற ஆசை உண்டாக இடந்தரும். அம்மாதிரி கொடுப்பது ஸேவையை விலைகொடுத்து வாங்குவதாகிறது. சிறுவர்கள் மனதில், பணத்தின்மேல் ஆசையுண்டாகக் கூடாதென்றே, பணம் வேண்டாமென்று உபாத்யாயர்கள் சொல்லிவிட்டனர்.

அப்படியானால், வைக்கோற் போரின் சொந்தக்காரன் செய்தது தவறா? அன்று. ஏனெனில், தன் ஸொத்து முழுவதும் பாழாய்ப் போகாமல் காப்பாற்றின மாணவர்கள் கொஞ்சம் ஸந்தோஷமடையட்டுமே என்றுகொடுக்க முன்வந்தான். தான் கொடுத்த பணத்தை வேண்டாமென்று உபாத்யாயர்கள் சொன்னதற்குக் காரணம் அவனுக்குத் தெரிந்திருக்குமாதலின், அவனும் அவர்கள்மீது வருத்தப்பட்டிருக்கமாட்டான்.

எப்பொழுதும், வெகுமதி எதிர்பாராது பிறர்க்குத் தம்மாலானவரை உதவி புரிய, சிறுவர் யாவரும் தயாராயிருக்கவேண்டும்.

என்று முகமனியம் பாதவர் கண்ணும்
சென்று பொருள் கொம்பர்—நீதற்றோர்
துன்று சுவைப் பூவிற் பொலிகுழலாய் பூங்கை
நாவிற்குதவு நயந்து. [புகழேோ

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

இரு பெண்களும் இரு குணங்களும்

ஒரூரில் சத்தியவல்லி என்றொரு பெண்ணிருந்தாள். அவளுடைய தாய் அவள் சிறு குழந்தையாய் இருக்கும்போதே இறந்துவிட்டாள். சத்தியவல்லியின் தகப்பனார் இரண்டாந்தடவை கல்யாணம் செய்து கொண்டார். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அழகு சுந்தரி என்று அவளுக்குப் பெயரிட்டார்கள் அவள் பெற்றோர்.

சுந்தரியின் தாயார் சத்தியவல்லியை மிகவும் கஷ்டப்படுத்தினாள். தன் பெண்ணுக்குப் பல விதமான புதுப் பாவாடைகளையும் பொம்மைகளையும் வாங்கிக் கொடுப்பாள். அடிக்கடி மிட்டாய்களையும் தின்பண்டங்களையும் செய்து கொடுப்பாள். நன்றாய்ச் சிங்காரித்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருப்பதே அழகு சுந்தரிக்கு வேலை. ஆனால் சத்தியவல்லிக்கு இந்த சுகம் ஒன்றுமில்லை. சுந்தரி கட்டிக் கிழித்த பாவாடைகளையே இவள் கட்டவேண்டும். கால்வயிறு கஞ்சிதான் அவளுடைய சாப்பாடு. வீட்டை விளக்கி பாத்திரங்களைத் தேய்த்து, துணிகளைத் தோய்த்து வைக்கவேண்டியது அவள் வேலை. ஏதாவது கொஞ்சம் செய்யாவிட்டால், பிரம்படி. இதைப்பற்றி அவள் ஒருவரிடமும் சொலவதில்லை. தன் கஷ்டங்களைப் பற்றி யாரிடம் சொல்லிக் கொள்கிறது? பகவானை நம்பினால், தன் கஷ்டம் என்றைக்காவது ஒரு நாள் நீங்கு மென்பது அவள் எண்ணம். ஆகையால், அவள் பயப்படாமல் தைர்யமாகவே இருந்தாள். அவள் தகப்பனார் தன் மூத்த பெண்படும் கஷ்டங்களைக் கண்டபோதிலும், என்ன செய்வது என்று தெரியாமலிருந்தார்.

இந்த விதமாக சில வருஷங்கள் கழிந்தன. சுந்தரிக்குக் கேட்டவை எல்லாம் கிடைக்கும். அப்படி அவளுக்குக் கிடைக்கா விட்டால், வாயில் வந்தபடி திட்டுவாள். அவள் இஷ்டப்படி ஏதாவது இல்லாவிட்டால் மூர்க்க குணமும், வசையுமே வெளிவரும். சத்தியவல்லிக்கு இந்த குணங்கள் இல்லை. அவள் ஏதாவது வேண்டுமென்றால் என்ன செய்கிறது? யாரைக் கேட்டால் வாங்கிக்கொடுப்பார்கள்?—தகப்பனார்தான் தன் சித்திக்குப் பயப்படுகிறாரே! ஆகையால் அவள் ஆசைப்படாமல், கடவுளை நம்பி, திருப்தியுடன், இனிய வார்த்தைகள் பேசிவந்தாள்.

சத்தியவல்லிக்குக் கல்யாணம் செய்யவேண்டிய காலம் வந்தது. அவளுடைய தகப்பனாருக்குத் தன் பெண்ணை ஒரு ஏழைக்காவது கல்யாணம் செய்துவிடலாம் என்று எண்ணம்.

ஆனால் அதற்குக்கூட செலவு கொஞ்சம் ஆகுமென்று அவன் மனைவிக்குத் தோன்றிற்று. அந்தச் செலவு செய்தால், பிற்காலத்திலும் செலவு உண்டாகும். ஆகையால் அவளை மெல்லக் கொன்றுவிட்டால் தனக்கும் தன் பெண் சுந்தரிக்கும் கஷ்டமேயில்லை என்று எண்ணமுண்டாயிற்று. ஆகையால், சத்தியவல்லியின் கல்யாணத்தைப்பற்றி அவள் கணவன் கேட்டபொழுது "இவ்வளவு கஷ்டமென்ன. நம் ஊருக்கடுத்த காட்டில் இந்திரனுடைய கோவிலிருக்கிறது. அங்கே விட்டுவிட்டால் அவனே விவாகஞ் செய்து கொள்கிறானென்று எல்லாரும் சொல்கிறார்கள். சத்தியவல்லியை அங்கே கொண்டுபோய் விட்டுவிடுங்கள். இன்றைய இராத்திரியே அவன் விவாகஞ்செய்து கொள்வான். நாளைக்காலை போய் அழைத்து வந்துவிடலாம்" என்றாள்.

வேறுவழி ஒன்றும் தோன்றாததால் சத்தியவல்லியின் தகப்பனார் ஒத்துக்கொண்டார்; சத்தியவல்லியை ஸ்நானம் செய்வித்து, கிழிந்த பாவாடைகளில், நல்லதாக ஒன்றைக் கட்டிக் கொள்ளச் சொல்லிவிட்டு தன் வண்டியைக் கட்டினான். அன்றைய தினம் சாப்பிடுவதற்கு பழைய அமுது ஒரு துண்டில் அவள் சித்தி கட்டிக் கொடுத்தாள். சத்தியவல்லி அதை எடுத்துக்கொண்டு தன் தகப்பனாருடன் புறப்பட்டாள்—"அப்பா! சனியன் தொலைந்தது!" என்று பெருமூச்சு விட்டாள் அவளுடைய சித்தி.

காட்டில் இந்திரன் கோவிலுமில்லை; இந்திரன் அங்கு வருவதுமில்லை. நடுக்காட்டில் சத்தியவல்லியை விட்டுவிட்டால் புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் அவளைக் கொன்று விடும் என்பது சத்தியவல்லியின் சித்தியினுடைய கெட்ட எண்ணம். காட்டிற்குள் சரியான பாதையில்லாததால், சத்தியவல்லியும் அவள் தகப்பனாரும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி, உள்ளே நடந்து சென்றார்கள். நடுக் காட்டில், சிறிய மண்டபம் ஒன்றிருந்தது "சத்தியவல்லி, நீ இங்கேயே தங்கி இரு. இராத்திரி இந்திரன் வந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்வான், நாளைக் காலை நான் வந்து அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிவிட்டு சத்தியவல்லியின் தகப்பன் போய்விட்டான்.

சத்தியவல்லி நடுக்காட்டில் இருக்கப் பயப்பட்டாள். ஆனாலும் கடவுளைத் தியானம் செய்து கொண்டே அன்றைய மத்தியானம் முழுவதும் கழித்தாள். இருட்டான பிறகு பயம் அதிகமாயிற்று. புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் கர்ச்சிப்பது கேட்பதற்கு மிகவும் பயங்கரமாயிருந்தது. இதனுடன் மழையும் பொழிய ஆரம்பித்தது. சத்தியவல்லி குளிரினாலும், பயத்தினாலும் நடுங்கின போதிலும், பகவானை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தாள். நடு இராத்திரியில் "சத்தியவல்லி, உனக்குப் பயமாயில்லையா?" என்று ஒருவர் கேட்பதுபோல் சத்தியவல்லி காதில் விழுந்தது.

"பயமென்ன! அகதிக்குத் தெய்வமே துணை?" என்றாள் சத்தியவல்லி. இடியும் மின்னலும், மழையும் அதிகரித்தன. கொடிய மிருகங்களுடைய கர்ச்சனைகளும் நெருங்கின. சத்தியவல்லி கொஞ்சமாவது பயப்படவில்லை. திரும்பவும், "சத்தியவல்லி-உனக்குப் பயமாயில்லையா? குளிரால் நடுங்கவில்லையா" என்று யாரோ கேட்பதுபோலிருந்தது. "ஐயா, எனக்குப் பயமில்லை. என் கணவருக்காக நான் காத்திருக்கும்போது எனக்குப் பயமென்ன, குளிரென்ன!" என்றாள் சத்தியவல்லி.

உடனே இடியும், மின்னலும், மழையும் நின்றன. காடு இருந்த இடத்தில் பெரிய அரண்மனை ஒன்று தோன்றிற்று. யௌவன வயதுள்ள அழகிய புருஷன் ஒருவன் வந்து அரண்மனைக்குள் சத்தியவல்லியை அழைத்துப் போனான். அங்கே அனேகர் வந்திருந்தனர். எங்கும் வெள்ளியினாலும் பொன்னினாலும், நவரத்னங்களாலும் செய்யப்பட்ட சாமான்களாகவே இருந்தன. சத்தியவல்லி உள்ளே சென்றதும் இரண்டு ஸ்திரீகள் அவளை அழைத்துக் கொண்டுபோய் ஸ்நானம் செய்வித்து அழகிய புடவை உடுத்தினர். விவாகம் நடந்தது. உடனே அவள் புருஷன் அவளைப் பார்த்து, "சத்தியவல்லி, உன் தகப்பனார், உன்னைக் காணக் காலையில் வருவார். அவருடன் போயிரு. நான் அடுத்த வெள்ளிக்கிழமை உன்னை அழைத்துக் கொள்கிறேன்" என்றான். சத்தியவல்லியும் சம்மதித்தாள்.

சத்தியவல்லி என்ன கதியானாளோ என்று அவள் தகப்பனார் இராத்திரி யெல்லாம்

கவலையாய் இருந்தான். மனைவியின் பேச்சைக் கேட்டு, பெண்ணை நடுக்காட்டில் விட்டோமே உயிருடனிருக்கிறாளோ !—என்று அவனுக்குப் பயம். அதிகாலையில் ஒருவருக்கும் சொல்லாமல் எழுந்து வண்டியைக் கட்டிக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான். வண்டியைக் காட்டில் கொஞ்ச தூரத்தில் நிறுத்திவிட்டு மார்பு படீர், படீர் என்றடித்துக்கொள்ள, முந்தின நாள் தம் பெண்ணை விட்ட இடத்திற்குச் சென்றான்.

அவன் கண்டது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. சத்தியவல்லி, கல்யாணப் புடவை தரித்து, ஆபரணங்கள் அணிந்து, ஓர்மரத்தடியில் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளைக் காண்பவர்கள், அவளை ஓர் அரச குமாரி என்று சொல்வார்களேயன்றி, ஓர் ஏழையின் பெண் என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்.

சத்தியவல்லியை அவள் தகப்பனார் எழுப்பி, நடந்த சமாசாரம் என்னவென்று விசாரித்தான். அவள் சொன்னதைக் கேட்கவே அவனுக்கு மிகவும் சந்தோஷமுண்டாயிற்று.

சத்தியவல்லி வீட்டிற்குப் போனபோது, யாரோ ராஜகுமாரத்தி வந்திருக்கிறாளென்று அவள் சித்தி நினைத்தாள். பிறகு தன் சக்களத்தியின் பெண் என்று அறிந்ததும், மிகுந்த அன்புடையவள்போலப் பேசி, நடந்த சமாசாரங்களை அறிந்துகொண்டாள். அவள் தன் மகளுக்கும் அம்மாதிரியான அதிர்ஷ்டம் உண்டானால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கலாம் என்று நினைக்க நினைக்க, அவளுக்கு சத்தியவல்லியின்மேல் பொறாமை யுண்டாயிற்று.

அடுத்த நாள், அவள் சுந்தரியை நன்றாய் ஸ்நானம் செய்வித்து புதுப்புடவை உடுத்திப் பல நகைகள் பூட்டினாள். பிறகு நல்ல பக்ஷணங்கள் செய்து, மூட்டை கட்டிக் கொடுத்து, 'எப்படியாவது இந்திரனை மணஞ்செய்துகொள்' என்று சொல்லி அனுப்பினாள். அவள் கணவனும் சத்தியவல்லியை விட்ட இடத்திலேயே விட்டுவிட்டு வந்தான். முதல் நாள் நடந்தது போலவே அன்றும் நடந்தது. சுந்தரிக்குப் பயம் அதிகமாயிற்று. தன் தாயாரையும் தகப்பனாரையும், சத்தியவல்லியையும் வைதாள். சத்தியவல்லியாலல்லவோ இவ்வளவு கஷ்டமும். "அகமுடையானும வேண்டாம் - மடையனும் வேண்டாம்" என்றாள் சுந்தரி. 'சுந்தரி, னக்குக் கல்யாணம் வேண்டாமா?' என்று யாரோ கேட்பது அவள் காதில் விழுந்தது. 'கல்யாணமும் வேண்டாம், கல்லெடுப்பும் வேண்டாம், எனக்கென்ன இந்த இழவு எல்லாம்" என்றாள் சுந்தரி. யாரோ சிரிப்பதுபோல் அவள் காதில் விழுந்தது. "நான் கஷ்டப்படுவது எனக்கல்லவா தெரியும். உனக்கென்ன கேடு. நீ சிரிப்பாய்" என்றாள். சிறிது நேரத்திற் கெல்லாம் "சுந்தரி, நீ கல்யாணம் செய்து கொள்கிறாயா?" என்று யாரோ கேட்பது போலிருந்தது. அவள் முன்போலவே பதில் சொன்னாள். "சரி, கல்லெடுப்புத்தான் உனக்கு" என்று யாரோ கோபத்துடன் சொல்வதுபோ லிருந்தது.

சுந்தரி உட்கார்ந்திருந்த இடத்திற்கு மேலிருந்த கிளைமீது இடி விழ அது முறிந்து அவள் மேல் விழுந்தது. மின்னலின் வெளிச்சத்தினால், அவள் பார்வையும் போயிற்று. ஓ வென்று அலறிக் கீழே விழுந்தாள்.

சுந்தரியின் தாயார் அதிகாலையில் எழுந்திருந்து தன் கணவனை எழுப்பி, இரண்டு வண்டிகள் கட்டிக்கொண்டு வரச்சொல்லி, அவைகளுடன் காட்டிற்குள் போனாள். அங்கே குருடாய், மழையால் நனைந்து, கை ஒடிந்து நினைவற்றுக் கிடந்தாள் சுந்தரி. வீட்டிற்கு வந்ததும் சமாசாரம் என்னவென்று விசாரிக்க உண்மை விளங்கிற்று.

அடுத்த வெள்ளிக்கிழமை ஓர் அரசகுமாரன் வந்து சத்தியவல்லியை அழைத்துக் கொண்டு போய்விட்டான். தன் சிறிய தாயார் தன்னைக் குரூரமாய் நடத்தினதை மறந்து சுந்தரியையும் அவள் தாயாரையும் சத்தியவல்லி அடிக்கடி வந்து விசாரித்துக்கொண்டு, தன் தகப்பனாரை நல்ல நிலைமையில் வைத்தாள்.

சந்தாதார்க்கு மாத்திரமே குறைந்த விலை

மரகதவல்லி	...	அணா	8
பஞ்சாத்தினம்	...	,,	12
இயற்கை அற்புதங்கள்	...	,,	8
ஆரியமத உபாக்கியானம்	...	,,	8
ஸ்ரீராமாயண ஸாரம்	...	ரூ.	1
ஐரோப்பிய மஹா யுத்தம்		,,	1

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

மாஜி திவான்ஜீ ஸ்ரீமான் சங்கரய்யாவின் தேக வியோகம்

வயோவிருத்தராயும், இந்திய ஜனஸமூகத்தின் அபிவிருத்தியை எப்போதும் கருதுபவராயும், கல்யாண குணங்கள் பொருந்தியவராயும் நமது அபிமானிகளுள் ஒருவராயும் இருந்த ஸ்ரீமான் சங்கரய்யாவின் தேக வியோகத்தைக் கேட்டுப் பெரிதும் துக்கிக்கிறோம். ஸ்ரீமானவர்கள் கி. பி. 1843-ம் வருஷத்தில் ஜனனமானார். அதிபால்யமான 18வது பிராயத்திலேயே அவர் பி. ஏ. பரீக்ஷையில் தேறி, ஐந்து வருஷம் வரையில் சென்னை வித்தியா இலாகாவில் உத்தியோகத்திலிருந்து பின்னர் கொச்சி ஸம்ஸ்தானத்தில் ஜட்ஜாக நியமனம் பெற்றார். அப்பால் அவர் திவான் பேஷ்காரானதும் மூன்று தரம் திவான்ஜியாக வேலை பார்த்ததும், கொச்சி வாசிகளுக்காக அவர் செய்த அரும் பெரும் முயற்சிகளும் நாடறிந்த விஷயங்களாம். வேலையை ராஜிவைத்து வந்த பின்னர், அனேக சன்மார்க்க விஷயங்களில் கருத்தைச் செலுத்திப் பொது நன்மைக்காகப் பெரிதும் உழைத்துவந்தார். 1880-ம் வருஷத்தில் "ஹிந்து" ஸபையை ஸ்தாபித்து அதன் மூலமாக ஆர்யதர்மத்தைப் பிரபலப்படுத்த முயன்றார். வித்யா விஷயத்தில் அவர் எடுத்துக்கொண்ட சிரத்தைக்கு திருச்சிராப்பள்ளி நாஷனல் ஹைஸ்கூலை உதாரணமாகச் சொல்லலாம். ஸ்ரீமானவர்களுடைய ஔதாரியத்தைப்பற்றி நாம் விஸ்தரிக்கவேண்டிய அவசியமில்லை. திருச்சி முனிஸிபல் ஆஸ்பத்திரியில் இவர் செலவில் கட்டப்பட்டிருக்கும் பிரஸவ அறை, நகர் மண்டபத்தில் ஏற்படுத்திய வேத வேதாந்த ஆச்ரமம், சென்னைக் கோஷா ஆஸ்பத்திரியில் இவரது செலவில் ஒரு படுக்கை, சர்வகலாசாலையில் வேல்ஸ் இளவரசர் இந்நாட்டுக்கு விஜயம் செய்ததன் ஞாபகார்த்தமாய் ஏற்படுத்திய சன்மானப் பதக்கம், ஆகிய இவையும் இவைபோன்ற பிறவும் ஸ்ரீமானவர்களுடைய பரோபகாரக் குணத்தைத் தெரிவிக்கும். ஸ்ரீமானின் புத்திரர்களான திருச்சி ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் K. S. சாம்பசிவ ஐயரவர்கள், மைசூரில் இரண்டாவது கவுன்ஸிலர் K. S. சந்திரசேகர ஐயரவர்கள், மதுரையில் டிஸ்டிரிக்ட் முன்சீபு உத்தியோகத்திலிருக்கும் K.S. கோபாலரத்னமய்யரவர்கள் ஆகிய அனைவருக்கும் நாம் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

சென்னையில் ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா.

நமது மாகாணத்தில் ஏற்பட்டுள்ள உத்யோகங்களில் பத்திரப் பதிவு இலாகாதான் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாத டிபார்ட்டுமெண்டாகும். அதில் உள்ள உத்யோகஸ்தர்களில் பெரும்பான்மையோர், ஆயுளளவும் அதிகச் சம்பளம் பெறாமல் போகின்றனர் என்பது அபிமானிகளுக்குத் தெரிந்த விஷயம். டிபார்ட்மெண்டு ஆரம்பமான காலத்தில், அவகாசம் நிரம்பக் கிடைக்குமென்ற காரணத்தால் இதில் புகுந்தவர்களில் சிலர் நம் மாகாணத்திலும் பிறவிடங்களிலும் மகோன்னதபதவியை அடைந்திருக்கின்றனர். காலஞ்சென்ற ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸர். வி. பாஷ்யம் ஐயங்காரவர்கள், திருவாங்கூரில் திவான்ஜியாயிருந்த சருக்கை கோபாலாசாரியாரவர்கள், மைசூரில் கவுன்ஸிலராகவிருந்த ஸ்ரீமான் நஞ்சுண்டய்யா அவர்கள், தற்காலம் போர்டு மெம்பராகவிருக்கும் கனம் அஜிஸுத்தீன் கான் பஹதூரவர்கள், ஹிந்துப்பத்திரிகையின் அதிபரான ஸ்ரீமான் கஸ்தூரி ரங்கய்யங்காரவர்கள், இவர்களெல்லோரும் பிரதமத்தில் ஸப்ரிஜிஸ்டிரார்களாகவே இருந்து மேல் ஸ்திதிகளுக்கு வந்தவர்கள். இந்த டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் குறைவாகவிருந்த துர்த்தசையைக் கவர்ன்மெண்டார் ஒருவாறு நீக்கியுள்ளனர். இதுவரையில் ஜில்லா ரிஜிஸ்ட்ரார்களின் சம்பளம் ரூ 200 முதல் 500 வரையில் இருந்தது. இனி ரூ 250 முதல் 700 வரையில் போகும். ரிஜிஸ்ட்ரார்களின் பிரயாண வர்த்தனை, முதல் வகுப்பு உத்தியோகஸ்தர்களுக்கு உள்ளதைப் போலக் கொடுபடுமாதலாலும், அவர்களுடைய சம்பளவிகிதம் வருஷா வருஷம் ரூ. 25 ஆக உயருமாதலாலும், இனி அவர்களுடைய குறைபாடுகள் நீங்கக் காரணமுண்டு. ஸப்ரிஜிஸ்ட்ரார்களுடைய சம்பளங்களை உயர்த்த வேண்டுமென்ற பிரார்த்தனையும் இப்போது கவர்ன்

மெண்டார் முன் இருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அவர்களுடைய தசையும் சவுகரியமாக முடியுமென எதிர்பார்க்கிறோம்.

* * *

ஜெயில் கமிட்டி

இந்தியாவிலுள்ள சிறைச்சாலைகளின் நிருவாகத்தையும், அமைப்பையும் பற்றித் தீர ஆலோசித்து, நாடு முழுவதற்குமே பொருந்தக்கூடிய ஒரு ஏற்பாட்டை உண்டாக்குவதற்காகக் கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கின்றனர். கமிட்டியார் முதலில் லண்டன் நகரில் கூடி, பின்னர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வழக்கத்திலிருக்கும் சிறை முறைகளைக் கவனித்து வந்து கடைசியாக இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்களாம். சிறைச்சாலைகளின் உபயோகத்தை விஸ்தரிப்பது, அவைகளின் நிர்வாகத்தைச் செம்மையாக்குவது, கைதிகளைத் தராதரங்கொண்டு பிரத்யேகப்படுத்துவது, சிறையை விட்டு வந்தவர்களுக்குக் காலக்ஷேபம் செய்யவும் ஜன ஸமூகத்தில் சேரவும் நல்ல உபாயத்தைத் தேடிக்கொடுப்பது, இவைபோன்ற காரியங்களைக் கமிட்டியார் தீர விசாரித்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஆலோசனை சொல்வார்கள். பொதுவாகக் கவனிக்குமிடத்து, மற்றைய நாடுகளில் அனுபவ சித்தமாகத் தெரிந்துகொண்ட முறைகளில் இந்தியாவில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரக் கூடியவை எவையென்பதைத் தெரிவிப்பார்கள்.

* * *

ஐக்கிய மாகாணத்தில் ஓர் புதிய பத்திரிகை

ஐக்கிய மாகாணத்தில் சர்க்கார் செலவில் ஒரு வாராந்தப் பத்திரிகை பிரசுரிப்பதற்கான ஏற்பாடுகள் ஆகிக்கொண்டு வருகின்றனவெனத் கேள்விப்படுகிறோம். அதில் அந்தந்த வாரத்தில் நடக்கும் உலக சமாச்சாரங்களும், ஏகாதிபத்ய சம்பந்தமான இதர விஷயங்களும், கிராமவாசிகளுக்கு உபயோகமான குறிப்புகளும் ஜனங்களுடைய கடமைகளைப்பற்றிய விபரங்களும், கவர்ன்மெண்டார் அறிக்கைகளும் வெளியாகுமாம். ராஜ்ய தந்திர விஷயங்களும், விளம்பரங்களும் அதில் வெளிவரா. இதற்குச் சுமார் ரூ. 115,000 செலவாகுமென்றும் பத்திரிகையை நடத்துவதற்கு ஒருஆலோசனை ஸபை அமைக்கப்படுமென்றும் தெரிகின்றது. இப்படி அதிகச் செலவில் ஒரு பத்திரிகையைப் பிரசுரிப்பதைக் காட்டிலும், அனேகம் பத்திராசிரியர்களுக்குப் போதுமான பண உதவி செய்து, அவைகளை விருத்திக்குக் கொண்டு வருவது மேல், என்பது நமது அபிப்பிராயம்.

* * *

ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனம்

இந்தியாவில் வழங்கிவரும் சுதேச பாஷைகளில் நமது தமிழைத் தவிர மற்றைய பாஷைகள் எல்லாம் வரவர முன்னேற்றமடைந்து வருகின்றனவென்பது மறுக்கவொண்ணாத விஷயம். வருஷா வருஷம் மேற்படி பாஷைகள் விஷயமாக மஹாநாடுகள் கூடி ஆகவேண்டிய காரியங்களைத் தீர்மானிப்பது, இப்படிப்பட்ட முன்னேற்றத்துக்கு முதற் காரணமாம். வங்காளி, தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம், மலையாளம் முதலிய பாஷைகளின் மஹாநாடு அவ்வப்போது கூடுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் நமது தமிழ் விஷயமான மஹாநாடு இனிமேல்தான் ஏற்படவேண்டும்.

நிற்க, சென்ற மாதம் பம்பாய் நகரத்தில், கனம் ஸ்ரீமான் மதன் மோஹன மாலவியாவின் அக்கிராசனத்தின்கீழ் நடந்தேறிய எட்டாவது ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனத்தைப் பற்றிய விசேஷங்களை அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். தீர்மானங்களில் முக்கியமானது ஹிந்தி பாஷை, ராஷ்டிர பாஷையாக வேண்டுமென்பது. ஹிந்தி பாஷையில் மொழி பெயர்ப்புச் செய்வதற்காக சத்ரபதி காயக்வார் மஹாராஜா அவர்கள் ரூ. 5,000 வெகுமதியளிப்பதாக வாக்களித்திருக்கிறார். ஹிந்தி பாஷையை நாடெங்கும் பரவச் செய்வதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கின்றன. அடுத்த வருஷத்திய மஹாநாடு பாடலிபுரத்தில் கூடும். நமது தமிழ்ப் பாஷையின் துர்த்தசை எவ்வாறு எப்போது நீங்கும்?

ஆரியமத உடாக்கியானம்
முதல் பாகம்
சிறந்த நீதிக்கதைகள் கொண்டது. அநேகம் அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. விலை அணா 8.
மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

["விவேக போதினி" அநுபந்தம்]

Supplement to the "Viveka Bodhini"]



லேடி வில்லிங்டன்

Her Excellency Lady Willingdon



லார்ட் வில்லிங்டன்

His Excellency Lord Willingdon

விவேகபோதினி

வருஷச் சந்தா	
உள்நாடுகளுக்கு	ரூ. 4
வெளிநாடுகளுக்கு	ரூ. 5
தனிப்பிரதி -	அ. 6

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

விளம்பர விகிதம்	
முழுப்பக்கம்	ரூ 10
அரைப்பக்கம்	ரூ. 6
கால்பக்கம்	ரூ. 3

தொகுதி XI | சித்தார்த்திஸு வைகாசிமீ :: 1919-ஸு ஜூன்மீ | பகுதி 12

லக்ஷ்ய பேதம்

CONFLICT OF IDEALS

என்கணு னோக்கிக் காண்டற்
கெங்கணு மூளன்கா ணெந்தைத்
உன்கணனன்பிற்சோ றலுறு
கோளென்றுணா கில்லாய்
நின்கணு னோக்கிக் காண்டற்
கெளியனோ நினக்குப் பின்னோன்
பொன்கணு னவி யுண்ட
புண்டரீ கக்க ணம்மான். 1

மூன்றவன் குணங்கள் செய்கை
மூன்றவ னுருவ மூன்று
மூன்றுகண் சுடர்கள் சோதி
மூன்றுதன் னுலக மூன்று
தோன்றலு மிடையு மீறுந்
தொடங்கிய பொருள்கட் கெல்லாம்
சான்றவ னிதுவே வேத
முடிவது காத மென்றான். 2

என்றலு மவுணர் வேந்த
னெயிற்றரும் பிலங்க நக்கான்
ஒன்றலில் பொருள்கட் கெல்லா
மொருவன்புக் குறைவ னென்றாய்
நன்றது கண்டு பின்னர்
நல்லவா புரிதுந் தூணில்
நின்றுள தென்னிற் கள்வ
நிரப்புதி நிலைமை யென்றான். 3

சாணினு முளனோர் தன்மை
யணுவினைச் சத கூறிட்ட
கோணினு முளன் மாமேருக்
குன்றினு முளனிந் நின்ற
தூணினு முளன்முன் சொன்ன
சொல்லினு முளனித் தன்மை
காணுதி விரைவி னென்று
னன்றெனக் கனகன் சொன்னான்.

உம்பர்க்கு முனக்கு மொத்திவ்
வுலகெங்கும் பரந்து ளானைக்
கம்பத்தின் வழியே காணக்
காட்டுதி காட்டி டாயேல்
கும்பத்தின் கரியைக் கோண்மாக்
கொன்றென நின்னைக் கொன்றுன்
செம்பொத் தகுருதி தேக்கி
யுடலையுந் தின்பெ னென்றான். 5

என்னுயிர் நின்னாற் கோறற்
கெளியதொன் றன்றி யான்முன்
சொன்னவன் றொட்ட தொட்ட
விடந்தொறுந் தோன்றா னாயின்
என்னுயிர் யானே மாய்ப்பல்
பின்னும்வாழ் வுகப்ப லென்னின்
அன்னவற் கடியே னல்லே
னென்றனன் றிவின் மிக்கான். 6

நசைதிறந் திலங்கப் பொங்கி
நன்றுநன் றென்ன நக்கு
விசைபிறந் துருமு வீழ்ந்த
தென்னவோர் தூணின் வென்றி
இசைதிறந் தமர்ந்த கையா
லெற்றினா னெற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறிச்
சிரித்தது செங்கட் சீயம். 7

நாடிநான் றருவெ னென்ற
நல்லறி வாள னாளும்
தேடிநான் முகனுங் காணாச்
சேயவன் சிரித்த லோடும்
ஆடினா னழுதான் பாடி
யாற்றினான் சிரத்திற் செங்கை
சூடினான் றொழுதா னோடி
யுலகெலாந் துகைத்தான் றுள்ளி. 8

விவேக போதினி

தொ.11] சித்தார்த்தி௵ வைகாசிமீ [ப.12

ஊடலுவகை

THE ECSTACY OF LOVE

'எம்மனை ! என் குலதெய்வமே ! என்னுடைய நாயகனே!
நின்னுள் ளேனைப் பெற்ற நன்மை இவ்வுலகினி லார் பெறுவார் ?'

என்னும் பேரெண்ணத்தோடு தங்கள் கணவர்களது உள்ளத்து உறையும் அழிவிற்பொருளிடை உண்மைக் காதல் கொண்ட கோபியர், கண்ணனைக் கண்டு மயலுற்றன ரென்பது மெய்யே. எனினும் அவர் தங்கள் கணவரைச் சற்றும் வெறுக்காது, மூலமுதற் பொருளாக விளங்கியதாகக் கண்ணனை எண்ணிச் சிறுதும் சிற்றின்பப் பற்றின்றி அசையா உள்ளத்தோடு அவரிடம் அன்பு கொண்டன ரென்பது உலகினர் யாவரறியார்? காதல் மிகுதியின் பெருக்கினால் அவர் ஒவ்வொருவரும்,

"காலும் எழா ; கண் நீரும் நில்லா; உடல் சோர்ந்து, நடுங்கிக் குரல்
மேலும் எழா ; மயிர்க் கூச்சும் அறு ; என தோள்களும் வீழ்வொழியா.
மாலு களா நிற்கும் என் மனனே ! உன்னை வாழத் தலைப் பெய்திட்டேன்"

எனத் தமது மனநிலைமையை வெளியிட, அவர்தமைக் கவனித்தல் கண்ணனது கடமையே யாகு மல்லவா ?

கண்ணனைக் காணுதலைந்த கோபியர், தமது அகந்தையின் போக்கையும், மாயக் கண்ணனது மனத்தூய்மையையும் ஒப்பிட்டுத் தமது சிறுமையையும் கண்ணனது உன்னத மனோநிலைமையையும் உய்த்துணர்ந்து, தாம் வீணே கொண்ட செருக் கொழிந்து, மனமுடைந்து, அன்பு நெக்குருகி, தமது தவறைப் போக்கி, தம் உள்ளத்து ஆவல் பெருக, அவர் ஊதிய குழலை நினைந்து நினைந்து, ஒவ்வொரு கோபியும்,

'மங்கல நல் வனமாலை மார்பி லிலங்க மயில் தழைப் பீலிசூடிப்
பொங்கிள வாடை யரையில் சாத்திப் பூங்கொத்துக் காதிற் புணர்பெய்து
கொங்கு நறுங் குழலார்களோடு குழைந்து குழலினி தூதிவந்தாய்
எங்களுக்கே யொருநாள் வந்தூத உன்குழலின் னிசை போதராதே'

என உள்ள முருகுவள் ; "இக்கோகுலம் செழிக்க வளரும்பெம்மானே; உமது காட்சியல்லால் என் உள்ளஞ் செழிப்ப தறியாதன்றே! எனது மனம் பிளக்கக் கரந்திருந்து இம்மாயஞ் செய்வதடாது; அது என் மார்பைப் பிளக்கும். நீவிர் ஆயர்தம் கொழுந்தே எனினும், யாவர் உள்ளத்தும் உறையும் உயிர்ப் பொருளல்லவோ? யானோ அபலை ; வலியற்றவள். என்னிடம் தாம் இவ்வாறு ஆடல் தகுமா? அல்லது அது உமது அருளுக்குப் பெருமை தருமா? கரந்துறைதல் ஒழிந்து, என் முன் தோன்றலே தமக்குரியது. அது ஒழிய நடப்பதேலாது. என் உள்ளக் கள்வனாக விளங்கி மனத்தை யாண்டு விளங்கு நீவிரே மாயஞ் செய்ய லொண்ணாது. இறுகத் தழுவி இணையற்ற இன்பந் தருவதே உமது கடமை. உயிரற்று விளங்கும் அக்குழலுக்கு உமது அதராம்ருதமே உணர்ச்சி தந்து உயிரை எழுப்பும்! அவ்வாறே யான் பெறப் பாக்கியமற்றேன்போலும்! உத்தமரே! உமது மயக்க மொழி, கடைக்கண் போக்கு, இளநகைக் குறும்பு முதலிய ஜாலங்கள் அடியேன் மனத்தை அளவுகடந்து தாக்கி வாட்டுகின்றன. 'உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன் எம்பெருமானென்றே கண்கள் நீர்' கள் மல்கி, யான் கதறுகின்றேன். நீவிரோ கரந்துறைவீர். கல்லொத்த நும் மனம் கரைந்திலது. என் செய்கேன்?

'என்மீ தியன்ற புறவண் டத்தாய் எனதாவி
உண்மீ தாடி யுருக்காட் டாதேயொளிப்பாயோ?'

இது உமக்குத் தகுமோ? தருமப்பொருளே! என் மனத்துள் சுடரே!

கண்டது பாம்பு கடித்தது மாங்கொட்டை.

குறுகா நீளா இறுதி கூடா எனையூழி
சிறுகா பெருகா அளவி லின்பஞ் சேர்ந்தாலும்
மறுசா லின்றி மாயோ னுனக்கே யாளாகும்
சிறுகா லத்தை யுறுமோ அந்தோ தெரியிலே !

அச்சுதா! உம்மை யல்லால் எனக்கி யாருளார் உலகில் ? ஐய ! இவ் வனத்தே ஓடி, என் போலார் மனத்தே கூடி விளங்கிய நுமக்கேன் வெறுப்புற்றது ? இந் நள்ளிரவில், இது சிறுதும் பொருந்தாது. சிரித்துக் குலிக்கிப் பிலுக்கி மனத்தைக் கலக்கி யன்பைப் பெருக்கி யுருக்காட்டாது ஒளித்தல் உமக் கியல்பேனும், நான் என் செய்யக் கடவேன்?" எனக் கதறுவள்; ஒவ்வொரு கோபியும் 'கங்குலும் பகலும் கண் துயி லறியாள் ; கண்ணநீர் கைகளா லிறைக்கும்';'கைகூப்பும்; "தாமரைக் கண்ண னென்றே தளரும்;' 'எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டென்னும் ; இருநிலம் கை துழா விருக்கும்'; 'உயிர்த்துயிர்த் துருகும்'; 'வானமே நோக்கும்'; 'கட்கிலீ உன்னைக் காணுமாறு அருளாய்க்' 'கண்ணனே என்னும்'; 'இட்டகா லிட்டகைகளா யிருக்கும் ; எழுந்துலாய் மயங்கும் ; கைகூப்பும்; கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும்'; சற்றே தெளிந்து 'சிந்திக்கும் ; திசைக்கும் ; தேறும்;' வந்திக்கும்;

அழும் தொழும்; ஆவி யனல வெவ்வுயிர்க்கும்;
அஞ்சன வண்ணனே யென்னும் ;
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும் ; எங்ஙனே நோக்குகே னென்னும்.

காதல் நோய் களங்கமற்று விளங்கக் கண்ணனைக்காண ஒவ்வொரு கோபியும் அவாக் கொள்வள்; மனம் விம்முவள்;வெதும்புவள்;தன்கண் முன் கண்ணனே இருப்பதாக நினைப்பள் ; வெளித்தோற்றங்களைக் கண்டு நாணமற்று,

'நானக் கருங்குழல் தோழீமீர்காள்! அன்னையர்காள் ! அயற் சேரியீர்காள் !
நானித் தனிநெஞ்சம் காக்கமாட் டேன்; என் வசமன்றிது; இராப்பகல் போய்
*　　　*　　　*
வானப் பிரான் மணிவண்ணன் கண்ணன்
செங்கனி வாயின் திறத்ததுவே'

எனத் தனது எண்ணத்தை வெளியிட்டுள்ளம் இளைப்பள்; சற்றே மயங்கி மீண்டும் கவலையில் ஆழ்ந்து அக்காட்டின் நிலையைக் கண்டு உள்ளங் கலங்குவள்; வெருண்டு

'பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடுமால்
முன்னின் றிராவூழி கண்புதைய மூடிற்றால்
பன்னின்ற சக்கரத் தெம் மாயவனும் வாரானால்
இந்நின்ற நீளாவி காப்பாரா ரிவ்விடத்தே?'

என வாய்விட் டலறி மயங்குவள்; உடல் பரவசமா யிருப்பற்றவர் போல விளங்குவள். தூங்காதே தூங்கும் பெரியார் நிலையும் அத்தகையதே யாகு மெனலா மன்றே !

"துயருண்டார் நெஞ்சத் துயரைத் துடைக்கு மருந்தாகிவந்த 'கோகுலத்து உறவே ! உலகே சாந்திபெறச் செய்யும் நீங்கள் எமக்குச் சாந்தி யளித்தல் தவறுகாதே ! பிரிவு நெருப்பிலிட்டு எம் காதல் மாற்றை அகந்தை யொழியக் கண்ட கருங்கொண்டல் வண்ணா! எங்கள் மனத்தே தூங்கும் கண்ணா! காலம் போக வார்த்தை நிற்கக் கரந்துறைவ தொழிந்து, எம் கண்குளிரத் தோன்றி மனங்குளிரச் செய்வ துமக்கேலாதோ? அது உமது புகழ்க்குச் சாலாதோ? எம் முயிர்க்கு மூலாதாரம் உமதாதாரமே. அதுவே எம் உயிர்ச்சுடரோங்கி விளங்கப் பெய்யும் நெய்யு மாகும். எமது ஐயனே ! இனி யாம் பொறுக்கேம் ; எல்லா முமது செயல். எம்மைக் காப்பதே தமது கடமை. அதைப் பெற எமது ஐந்து பூதங்களும் மற்றும் யாவும் தமது அடிமை" என அவர் யாவரு மனமொருமித்துக் கதறியதை முற்று முணர்ந்த கண்ணன், தமது வேய்ங்குழ லோசை யெங்கும் இனிக்க ஒலிக்கச் செய்தனர் ; இருள் மூட விளங்கிய மேகங்களை அப்புறப் படுத்திச் சந்திர நிலவைப் பால்வழிவ தொப்பப் பெருகச் செய்தனர் ; தமது வரவின் ஒலிபோல் தமது கால்களில் கட்டிய சதங்கை சிலம்பு தண்டை ஒலி யாவர் காதிலும் முழங்கும்படி செய்தனர். நிலவின் பெருக்கு, குழலின் இசை, இவற்றால் கண்ணன் தமதிடையே இருப்பதாக எண்ணிய கோபியர், அவரைப் பல திசைகளிலும் காணவென ஆவல் கொண்டு தேடினர். ஆனால் அவர் தென்படவே யில்லை. சற்றுத் தூரத்தில் அவர் குரல் கேட்டது போலக் கேட்டதும் அவர் அவரைக்காணத் திகைத்தனர். எனினும் அவரைக் காண முடியவில்லை. இவ்வாறு கண்ணன் தமது வரவை ஆவலோடவர் ஏற்கவெனப் பல விதமான மாயைகள் செய்யச் செய்யக் கோபியர்கள் தமது சிறுமையையும்

கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான்.

கண்ணனது அளவுகடந்த பெருமை, அருமை, மனத்திற் கெட்டா நிலைமை முதலியவற்றையும் எண்ணி மீண்டும் பேரவாவோடு அவரது வரவை வேண்டி

'கதையும் பெரும்பொருளும் கண்ணாநின் பேரே
இதைய மிருந்தவையே ஏத்தில்—கதையும்
திருமொழியாய் நின்ற திருமாலே உன்னைப்
பருமொழியால் காணப் பணி'

என உள்ளங் கனிந்து அருட்பேற்றைப் பெற அவாவுற்று விளங்கினர்.

அச்சமயம் வானம் முன்னினும் ஒளியோடு விளங்கியது; அவ்வனமும் புதிய அழகொடு குலாவியது; எங்கும் நறும் மணம் கமழ இளங்காற்று எழும்பியது. அதன் மெல்லிய ஸ்பரிசம், வாடிய அவ்வாய மங்கையரது உள்ளத்திருந்த மயக்கத்தை மறையச் செய்து அங்கு இன்பமரும்பி வளர இடந்தந்தது. அக்கால் அவர்,

'காய மிரண்டும் கலந்து கொதிக்கினும்
ஆயன் கத்தூரி யதுமிகு மவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணிலும்
ஈச னுறவுக் கெதிரில்லை தானே'

என்றதன் உண்மை நோக்கத்தில் ஆழ்ந்து ஆனந்தங்கொண்டு விளங்கும்போதே அவர் காதற் கள்வனாகிய கண்ணன், நடமிட்டு நயமொடு புன்னகை பொலியத் தலையசைத்தசைத்து வெகு அமரிக்கையொடு கண்ணெதிர் விளங்கக்கண்டனர்; துணுக்கங் கொண்டனர்; கண்விண்டனர்; எம்பெருமானது பெருமை பாய்ந்து உள்ளம் ததும்பினர்; அம்மாயனுருவைக் கண்ணுறப் பருகினர்; உவகை பெருக மனம் உருகினர்;

'அண்ணலே !
வந்தாய்; வளைகவர்ந்தாய்; மாலும் அருந்துயரும்
தந்தாய், இதுவோ தகவு?' என்று - நொந்தாள்போல்
கட்டுரைத்துக் கைசோர்ந் தகமுருகி மெய்வெளுத்து

“அண்ணல்! ஆழி மணிவண்ணா! எங்கள் மனங்கனியக் கலந்த கண்ணா! வண்ணப் பொன்னினும் பொலிந்து ஒளிரும் புத்தமுதமொத்த ஆயர் குலக் கொழுந்தே! ஆனந்த வெள்ளமே! குற்றமொழித்துக் காக்கும் உற்ற உறவே! அகந்தை யிருளொழித்து ஆநந்த ஒளியி லெம்மைப் பிரிவுக்கடலைக் கடந்து கரையேறவிட்ட பெம்மானே! உம்மை யாம் மறந்தோமில்லை; எம்மை நீர் ‘மறந்தீரில்லை. பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?” எனத் தொழுது, கண்ணன் கழலடியிற் பதிந்து கலக்கமற்று விளங்கினர்.

உலகப் பற்றை யெல்லாம் ஒழித்துத் தம்மையே தலைவனாக எண்ணி எவற்றையும் பரித்தியாகஞ்செய்த அக்கோபியரது உண்மை அன்பின் பெருக்கின் மிகையை யளவிட்ட கண்ணபிரான் அவரைக் கண் கொட்டாது பார்த்த வண்ணமாகவே இருந்தனர். கோபியரும் அவ்வாறே விளங்கினர். எனினும் சிலர் அவரைக் கண்டவிட மெல்லாம் முத்த மரும்பினர்; சிலர் அவர் வாய்த் தம்பலத்தைக் கையிலேந்தினர்; சிலர் அவர் பாதங்களைத் தமது மார்பொடு தழுவி, தாபமொழிந்தனர்; சிலர் அம்மங்கள உருவின் அமைப்பை அசைவற நோக்கிய வண்ணமே அதன் அழகின் பெருக்கைக் கண் கொட்டாது பருகினர். எனினும் யாவரும் தமது உள்ளம் கிளைக்க மனமாசு ஒழிந்து சலியாநிலையில் யோகிய ரொப்பக் கண்ணனைத் தமது மனத்தகத்தே அன்போடு கண்டு இறுகத்தழுவி இன்பமுற்றனரென்பது இழுக்காது.

அத்தகைய உள்ளப் பான்மையில் இருந்த கோபியரோடு கண்ணன் காளிந்திக் கரை சேர்ந்து, பால்வடியக் காய்ந்த அச் சரத்கால சந்திரனது நிலவில் அவரோடாட ஆவல் கொண்டனர். அக்கரையின் மெல்லிய மணற் பரப்பின்மேல் அவ்வாய மங்கையர், தமது மானம் நலம் நாணம் இவற்றின் விஷயக்கட்டுகளைக் கடந்து, கண்ணனிடங்கொண்ட அளவு கடந்த அன்பு மூடதத் தாம் மேலணிந்திருந்த ஆடையைக்களைந்ததிட்ட ஆஸனத்திவர்ந்தகண்ணன் என்றும் யாரும் கண்டிராத மோகன உருவங் கொண்டு அவ்வாய மங்கையர் புடைசூழக் குலாவிக் குறும்புரையாடி, - வேடிக்கையாகப் பொழுதைப் போக்கினர்; அவர்க்குத் தமது உண்மை எண்ணத்தை வெளியிட்டுத் தாம் கரந்துறைந்த காரணத்தை வெளியிட்டனர்; “என்னிடம் நீங்கள் கொண்ட அன்பைப் பெருக்கவெனவே யான் மறைந்து விளங்கினேன்; எனினும் உம்மை மறந்தேன் அல்லன். யாவற்றையும் துறந்து என்னையே நினைந்து உள்ள முருகிய உமது

கண்டது கேட்டது சொல்லாதே, காட்டு மரத்திலே நில்லாதே.

மெய்யன்பின் பெருக்கிற்கு ஏற்ற கைம்மாறு யான் என்ன செய்யக்கூடும்? ஸம்ஸார பந்தங்களை யறுத்து என்னையே சரணடைந்த உம்மோடு கூடி விளங்குதல் எனக்கு ஒரு நாளும் பழிதராதென்பது திண்ணம்!” எனமொழிந்து, அவர் அக்கோபியருடன் தமது மாயா விலாசப் பரப்பினால் தமது உண்மை நிலையை யூட்ட ராஸக்ரீடை என்னும் விளையாடலாட நிச்சயித்தனர். அவரன்பிற் பதிந்த கோபியரும் அதற்கிணங்கினர். அவ்வாய மங்கையரை ஊடலிற் பிணித்து உள்ளன்பிற் பதிக்க அவராட எண்ணிய குரவை எளிதன்று என்பது யாவருமறிவர்; அது திண்ணம்.

ராஸக்ரீடை என்பது கண்ணனார் கண்ட களியாடலுள் ஒன்றே எனலாம். இக்காலம் அத்தகைய ஆடல் இருப்பதாகத் தெரியவில்லை. ஆச்சியர்க் குரவை என்பது ஒருவேளை இதன் மருவிய வழக்கமா யிருப்பினுமிருக்கலாம்.

இவ் விராஸக்ரீடை யாட அவர் கொண்ட உருவம் கணக்கில் அடங்கா. இரண்டு கோபியர்க்கு இடை ஒரு கண்ணனாக எங்கும் பொலிந்து வட்டமாக அமைந்து, பாடிப் பாடி, அவருடன்சுற்றிச்சுற்றி விளையாடினர். கோபியரும் அவருடன் தமதிஷ்டப்படி குலாவி ஆடிப் பாடி விளையாடினர்; உலகத்தின் நினைப்பற்றுக் கண்ணனையே நினைந்து கசிந்துருகு முள்ளத்தோடு கூடியாடி ஆனந்தத்தேன்பருகி இச்சையற்று விளங்கினர். ஒவ்வொரு கோபிக்கும் ஒவ்வொரு கண்ணனாக இருந்து அவ்வவரது ஆவல்தீர அன்பொடு விளங்கிய எம்பெருமானது பிரபாவத்தை முற்று முணர்ந்தவர் இல்லை யெனவே சொல்லலாம். அவ்வாடலில் கோபியர் பாடிய பாடல் லயமற்றிருப்பினும் சுகப்படுத்தி அதற்கிணங்க அவர் பாடுவர்; நடித்து இளைத்த ஆயமங்கையர் சிரமத்தை அவர்தம் மேனியைத் தழுவிப் போக்குவர்; சிலர் தோள்களில் தமது சந்தனக் குழம்பிற் பதிந்த கரங்களைப் பதித்து அவருடலம் அன்பொடு கிளைத்துப் பரவசம்பெறச் செய்வர்; பேதமறத் தம்மொடு ஆடிய அம்மங்கையரது வாயுள் தம் வாய்த் தம்பலத்தை யுமிழ்ந்து இளநகை தருவர்; மற்றுச் சில கோபியா அவ்வெம்பெருமானது கரங்களை மார்பின்மேற் பதித்து மனம் விம்முவர்; சிலர் அவரைத் தழுவிய வண்ணமே பாடி நடிப்பார்; சிலர் களைத்து அவரை இறுகத் தழுவிக் களிப்பர். இவ்வாறு அன்பாகிய தேன் மடைபாய மனம்விண்டு அக்கோபியர் விஷய சுகங்களென்னும் நினைவற்று, பஞ்சேந்திரிய வியாபாரங்களற்று விளங்கினர். அவர் கலைகள் நெகிழ்ந்தன; தலைமயிர் கலைந்து படர்ந்தன; கைவளைகள் கீழ்வீழ்ந்தன; உடல் கம்பிக்க மனம் வியாபார மற்றுக் கிடந்தது. அவரது மோகன நிலையைக் கண்ட கந்தர்வரும் அந்நிலையையே பிரதிபலிக்க, அச்சரத்கால சந்திரனும் தனது அமுத கிரணங்களை முன்னினும் பன்மடங் கதிகமாய்ப் பரப்பி விளங்கினனென்பது அதிசய மன்றே!

தமதாடலிற் பதிந்து தேகம் திளைத்திளைத்த கோபியரது இளைப்பு நீங்கக் கண்ணபிரான் அவரோடு புனல் விளையாட யமுனா நதியி லிறங்கினர்; அங்கு அவரிஷ்டப்படி ஜலக்ரீடை செய்து, அக்கோபியர் இறைத்த நீரை அன்போடேற்று அவரது துனபமெல்லாமொழித்து விளங்கினர். பிறகு அவ்வனத்துச் சோலைகளிலும், மலர்க் காடுகளிலும், இளங்காற்றுத் தடவ விளையாடினர். இதற்குள் சூரியன் தனது பொற்கதிர் விரித்து வர ஆயத்தமாக, அக்கோபியரும் கோபாலனது ஆணைக்கிணங்கி, சமாதானமில்லா மனத்துடன் தத்தம் அகம் சென்றனர். அவர் இரவில் வீட்டில் இல்லாது காட்டிலுலாவிக் களித்து நடித்ததை அவர் கணவர்கள் அறியாதிருந்த தேனோ?

நிற்க, கண்ணபிரான் லோக ஹிதமாக அவதரித்து, துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்யத் தோன்றிய மூர்த்தியென யாவரும் அறிவர். மேலும், துஷ்டப் பழக்கங்களைக் களைந்து நற்பழக்கங்களை ஊட்ட வந்த பரமாசாரியருமாவர். அப்படி யிருக்க, கேவலம் காமக் காட்டில் அலையும் மிருகமொப்ப அவர் இவ்வாறு பிறர் மனைவியராகிய கோபியரோடு ஊடிவிளையாடி யாடித் திரிவது தகுமா? அவரது தரும நிலைமைக்கு அது ஓர் களங்கமன்றோ? அவரே அப்படி நடந்தால், தாழ்ந்த வழியிற் எளிதிற் பாயும் பாமர ஜனங்களுக்குத் துர்ப்போதனை செய்யவே அது உபயோகமாகு மல்லவா? ஆகவே கண்ணனை விடன், சிருங்கார லோலன், பிறர் மனை விரும்பும் கள்வன், கேவ

கண்டது பாம்பு கடித்தது கருக்கு மட்டை.

லம் துஷ்டன் எனச் சிலரும், வேறு மதத்தினரும் தூற்றுவதில் என்ன தவறு? இத்தகைய கேள்விகள் யாவர் மனத்து முதித்துக் கவலைக்கே இடந்தரும். எனவே, கண்ணனுக்கு இழிவேயல்லாது பெருமை எப்படி ஏற்படும்? இழிவிற் பதிந்த புருஷ னொருவனைக் கடவுளாக எவர் கொண்டாட முடியும்?

இத்தகைய எண்ணங்கள் எல்லாம் உண்மை நிலை யுணரமுடியாதவர் மனத்திலேயே நிகழ்வனவாகும். கண்ணன் விடன் என்பது முழுப் பொய். அவர் காதலிற் பதிந்து கோபியரைத் தாமே விரும்பியவர் அல்லர். அவரைக் கூடிக் குலாவி இன்பம் பெறவேண்டு மென்றது அவர் அவாவன்று. தம்மிடம் அன்பு கொண்டாரிடம் தமது மகிமையை வெளியிடவெனவே அவர் செய்த மாய லீலைகளில் ஒன்றேயாகும் இத்திருவிளையாடலும். சாந்தியும் திருப்தியும் அமைதியுமே என்றும் பெற்ற அவர், கோபியரைத் திருப்திபடுத்தவெனச் செய்ததே அது; மற்றுத் தன்னைத் திருப்திபடுத்தச் செய்ததன்று. மேலும், அச்சமயம் கண்ணன் சிறு குழந்தையாக விருந்தனரே அன்றி, யுவா புருஷனாகவில்லையெனல் கவனித்தல் அவசியம். பல்வேறு உருக்கொண்டு, ஒவ்வொரு கோபியரிடையும் விளங்கியது, அவரது சர்வவியாப்தியின் பெருமையையே குறிக்கும். நிஷ்காமனாக விளங்கி, ஸர்வ காமங்களுக்கும் ஆதாரமாக விளங்குந் தன்மையையே அவர் இங்கு விளக்கினர். தமது பக்தவத்ஸல குணத்தால் தம்மிடம் ஈடுபட்ட கோபியரது ஆசையை அவர்க்காகத் தணித்த எம்பெருமானது உள்ளெண்ணத்தை மாற்றி மாறாகக் கூறி அவரைத் தூற்றுவது சரியாகாது. சர்வாந்தர்யாமியாகி எங்குமிருந்து தமது உருவைக்கரந்துவிளங்கி, கோபியரது அகந்தையை ஒழித்து, அவர் மனஞ் சுத்திபெறச் செய்து நிஷ்காம்யமாக அவரை அவர் ஏற்றநிலையின் உண்மை, கற்றறிந்த பெரியோர்க்கே தெரியும். வெல்லமிட்டவேம்பென அவர் அக்கோபியரது பிரணய தாபத்தைப் பத்திவழியிற் மாற்றித் தம்மைக் காதல் தலைவனாக எண்ணாது, கணவர் மூலமாக அவர் அடைய அவாக்கொள்ளு மூலமுதற் பொருளாக எண்ணத் தூண்டியது புகழத்தக்கதே யன்றோ? மேலும் கண்ணன் கேவலம் சிருங்கார லோலனாக அக்கோபியரிடம் விளங்கியிருந்தால், அவர்க்கு அவரது கணவரிடம் அநுதாபம் எப்படி ஏற்பட முடியும்? அல்லது அக்கணவர் அவரைக் கடவுளராக எப்படி எண்ண முடியும்? ஒரு பொருளைக் காதலித்த இருவர் மனமுவந்து வாழ்ந்தவரெவரே! காதல் நோய் பட்டவர்க்குக் கருத்துச் சிறந்து எங்கு விளங்கும்? கண்ணனே தாமே அக்கணவரது மனைவியராக அவரிடை அன்று இரவு முழுதும் ஆங்காங்கு விளங்கி அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டனர். அவர் மனைவியரிடத்தும் தனித் தனிக் கண்ணனாக விளங்கினரே எனினும், இல்லற வழியே தாம் கணவரது மூலமாய் அடைய விரும்பும் பொருளையே தம்மிடைப் பெற்றதாகக் கோபியர் இருந்தனர். அவர் உள்ள நிகழ்ச்சியின் உண்மை நிலைமையை உணர்ந்தே கண்ணனும் அவரிடைத் தனித் தனியே விளங்கினர். பரமாத்ம நிலையில் தம்மைப் பின்பற்றிய கோபியரையே கடவுள் பாரமார்த்திகமாக ஆண்ட சர்வலோக நாயகனைத் தமது நாயகன் மூலம் காணும் நாயகனாகவே கோபியரும் அவரை நாடியது; கேவலம் மிருகத்தன்மை வாய்ந்த வாஞ்சையா லன்று. யாவருள்ளத்தும் தவழ்ந்து விளங்கும் தமது தெய்விக நிலையை உருவகப்படுத்த வெனவே அவராடிய இத்திருவிளையாடலை இளையோர் அறிவ தேலாது. உலக அனுபவம் முதிர்ந்த ஞானியரே அறிவதாகும். அதனாலன்றே பாகவத கிரந்தத்தைப் படிக்கும் அதிகாரம் சிறுவர்க்குக் கொடுக்கப் படவில்லை. காமநிலை கடந்து, நிஷ்காம்யமாக எம்பெருமானது லீலைகளை உணரும் உத்வேகம் ஐம்புலன்களின் சேஷ்டைகளைக் கடந்த பெரியோர்க்கே முடியும். இதன் உண்மையை உணர்ந்தவரே கண்ணனாது பெருமையைக் கைக்கொள்ள முடியும். மற்றோர்க் கிவ்வழி பொருந்தாது. அவ்வாறின்றி எம்பெருமானது விருப்பத்திற்கு மாறாகப் பேசி, அவரது நோக்கங்களை மாற்றிக்கூறி மயக்கத்தில் மாழ்குவது, மதாந்திரத்தினர் மயக்க அகந்தையின மூடப்பெருக்கிற்கே பொருந்து மல்லாது, உண்மை நிலைமையின் தன்மை யாகாது. அவ்வாறின்றி ஆப்தராகி, பக்தவத்ஸலராகி, எல்லாப் பொறுப்பையும் தம்மேல் ஏற்று விளங்கி, கோபியரது மனத்தைக் கொள்ளை கொண்டவாறு, அவ

கண்டால் முறை சொல்லுகிறது, காணா விட்டால் பெயர் சொல்லுகிறதா?

ரது மானத்தையுங் காக்க, அவ்வவரது உருவில் அவ்வவர் கணவர்முன் விளங்கிய நிலையைக் காணும்போது அவனன்றி ஓரணுவும் அசையா தென்பதன் உண்மைப் பொருளே விளங்கு மன்றோ? ஆகவே அவரது கல்யாண குணங்களில் ஆழ்ந்து அவருட்டிய வழியே நடப்பதே நமது கடமை. தூற்றுவது பெரும் பாபம், பயனும் தராது. கண்ணனது ஆடலைக் காண ஆவல்கொண்ட கோபியர் சிலர் கணவரால் தடுக்கப்பட்டுச் சித்தத்தை அவர்பாலே செலுத்தி, துக்கத்தில் அழுந்தி, கருமபந்தத்திருந்தே ஆத்மபந்தத்தைத்தெறித்தனர். அவ்வாறே நாம் செய்வதும் தகும். மற்றுப் பாபபுண்ய லேசமற்ற எம்பெருமான் செய்தாரென அவர் செய்தவாறே செய்ய முயல்வதடாது; அவ்வாறு நம்மால் நடத்தலும் முடியாதென்பது ஒருபால் நிற்க, கடவுளை இகழ்ந்த பாபம் நம்மைக் கவிந்து நரகத்திற் காளாக்கு மல்லவா? எனவே,

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

கந்த ரலங்கார ஆராய்ச்சி

KANDAR ALANKARAM (A CRITICAL STUDY.)

இந்நூல் முருகக் கடவுளுக்கு மிகவும் உகந்த பாமாலை. இதனை யாத்தவர் திருப்புகழ்ச் சந்தக் கவிச் சிங்கமாகிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள். முருகபிரானது திருவடி முதல் திருமுகம் வரையும் உள்ள அங்கங்களின் சிறப்பையும், அவர் ஊர்தி, படை, கொடி இவைகளின் பெருமையையும் எடுத்து ஓதும் நூலாதலால் இந்நூலுக்குக் கந்தர் அலங்காரம் என்னும் திருநாமம் வாய்த்தது. உதாரணமாக:—

(i) சிற்றடி

"தாவடி யோட்டு." ... (கரு)

"சேல்பட் டழிந்தது." ... (சo)

(ii) திருவரையிற் கிண்கிணி

"ஒருவரைப் பங்கில்" ... (கங)

"மண கமழுந்தி" ... (கூங)

(iii) பன்னிரு திருக்கை.

"குப்பாச வாழ்க்கை" ... (கச)

(iv) திருமுகம்.

"பத்தித் திருமுகம்" ... (சஎ)

(v) ஊர்தி (மயில்).

"குசை நெகிழா" (கக)

(vi) படை (வேல்).

"ஆலுக் கணிகலம்" ... (கூஉ)

(vii) கொடி (சேவல்)

"படைபட்ட" ... (சஉ)

"அருணைத் திருக்கோபுரத்தே வடவருகிற் சென்று கண்டுகொண்டேன்"—என வரும் காப்புச் செய்யுளால் இந்நூல் திருவண்ணாமலையில் புனைதல் பெற்றிருத்தல் வேண்டுமென்று தோன்றுகின்றது. நூற்பயன் கூறுஞ் செய்யுளில் "அலங்கார நூற்றுள் ஒருகவி தான் கற்றறிந்தவரே" என வருதலால் இந்நூல் நூறு செய்யுள்கள் கொண்டதா யிருத்தல் வேண்டும். நூற்றுக்கு மேற் காணப்பட்டதாய் அச்சிடப்பட்டுள்ள ஆறு பாடல்களின் வாக்கு, சுவாமிகள் வாக்குப் போலச் சிறந்ததாயிருப்பதால் அவர் செய்த தனிச் செய்யுள்களோ இவை என்னும் ஐயமும் நிகழ்கின்றது.

2. இவ் வலங்காரம் பாடினது சுவாமிகள் திருப்புகழ் பாடினதற்கு முன்னோ பின்னோ அல்லது இடையிலோ என்பதைத் தேர்ந்துணர வழியொன்றுங் காணோம். திருப்புகழில் எங்கும் விசேடித்துச் சொல்லியுள்ள "வயலூர்" என்னும் தலத்தைப்பற்றி இவ் வலங்காரத்துள் எங்குஞ் சொல்ல இல்லையாதலால் திருப்புகழ்பாடினதற்கு முன் என்று சொல்லலாம். ஆனால், எஃகமேந்திய எம்பெருமான் வயலூரை வைத்துத் தம்மீது நித்தம் திருப்புகழ் பாடு என நியமித்த வண்ணம் திருப்புகழில் மாத்திரம் வயலூரைப் பற்றிக் கூறித் தமது ஏனைய நூல்களில் கூறாது விட்டனரோ என்றும் வாதிக்கலாம். எது எவ்வாறிருப்பினும் இலைகுலாம் வேற்கரத் தெமதண்ணல் தம்மை ஆட்கொண்டு உபதேசித்த பிறகுதான் இந்நூலைச் சுவாமிகள் பாடியிருக்க வேண்டு மென்பது,

"பேற்றைத் தவஞ்சற்று மில்லாத என்னைப் ப்ரபஞ்ச மென்னுஞ் சேற்றைக் கழிய வழிவிட்டவா" (க)

கண்டால் ஆயம், காணாவிட்டால் மாயம்.

"வெறுங் களியைத், தெளிய விளம்பியவா முகமாறுடைத் தேசிகனே" (அ)

"வள்ளிசோ ரனன்றெனக் குபதேசித்த தொன்றுண்டு" (கூ)

"எல்லா மிழந்து சும்மா இருக்கும் எல்லையுட் செல்ல எனை விட்டவா" (சo)

"வடிவேலன் செவி நீ யன்று கேட்கச் சொன்ன குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது" (உச)

"கந்தச் சுவாமி எனைத் தேற்றிய பின்னர்" (சுக)

—எனவருந் திருவாக்கால் தெளிவாக ஏற்படுகின்றது. மேலும், திருப்புகழில் அரிதாய்க் காணப்படும் ஒரு விஷயம் இந்நூலிற் பல இடங்களிற் காணப்படுகின்றது. அது என்னவென்றால்—திருப்புகழிற் பல இடங்களும் "முருகா! யமன்கையிற் சிக்காது அடியேனை நீயே ஆண்டு கொண்டருள்" என இரக்கும் நமது சுவாமிகள் கந்தரலங்காரத்தில் அவ்வாறு இரக்கலோடு "நாம் ஆண்டவனுக்கு அடிமையாய் விட்டோம்: இனி யமன் யாது செய்யக் கூடும்" என்னும் துணிபு பெற்றவராய் அப்பர் சுவாமிகள் "நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்" எனக் கூறியவாறு தாமும் "பெருமாள் திருமுக மாறுங் கண்ட தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங் கெமராஜன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே—" (அஎ), "காலன் வெம்பி வந்திப்பொழுது என் செயலாம் சத்திவாளொன்றினாற் சிந்தக் துணிப்பன் தணிப்பருங் கோப த்ரிசூலத்தையே" (சுசு) என முருகன் அடியார் பெருமையையும் தமது துணிவையுங் கூறினவராகி அமையாது அக்காலனையே—

'தண்டா யுதமுந் திரிசூலமும் விழத் தாக்கியுன்னைத் திண்டாட வெட்டி விழவிடுவேன்***ஞானச்சுடர் வடிவாள் கண்டாயடா! அந்தகா வந்துபார் சற்றென் கைக்கெட்டவே" (உரு)

என்றும்

"பட்டிக் கடாவில் வரும் அந்தகா உனைப் பாரறிய வெட்டிப் புறங்கண் டலாது விடேன்! * * கட்டிப் புறப்படடா சத்திவாளொன்றன் கையதுவே" (சுச)

என்றும்

"வாரா தகலந்தகா வந்த போதுயிர் வாங்குவனே" (அக)

என்றும் விளித்து வெருட்டி வெருட்டித் திடுக்கிட்டோடும்படி அச்சுறுத்தி யுள்ளார். இதனை நோக்குமிடத்துத் திருப்புகழ் பாடிப் பாடி முருகன் திருவருள் ஊறி ஊறிச் சிந்தை-தெளிந்த திண்மை நிலையில் இச் செய்யுள்கள் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். மேலும். "செங்கோடனைச் சென்றுகண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே" (கூo) என்றது செங்கோட்டு வேலவர் திவ்விய சொரூபத்தை நேரிற் றரிசித்துச் சொல்லியதாதலின் திருச்செங்கோடு தரிசனஞ் செய்த பிறகு கந்தரலங்காரம் பாடி இருக்கவேண்டும். திருச்செங்கோட்டுத் திருப்புகழுள் வயலூரைப்பற்றிக் கூறி யிருக்கின்று ராதலின் வயலூரைத் தரிசித்த பிறகு கந்தரலங்காரம் பாடியிருக்க வேண்டும் என்று கொள்ளவும் இடம் ஏற்படுகின்றது.

3. நூலாசிரியர் சந்தப்பா பாடின சதுரர் என்பது கட்டளைக் கலித்துறைகளாலாகிய இக் கந்தரலங்காரத்திலும்—

"சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக் கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே" (ச)

"உதிரக்-குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்-களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே" (எ)

"உரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற் றுக் கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே" (சுக)

"சண்ட தண்ட வெஞ்சூர், மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டி மிண்டக், கண்டுருண் டண்டர் விண்டோடாமல் வேல்தொட்ட காவலனே" (கூஉ)

—எனவரும் உருட்டுச் சந்தப் பாக்களாற் பெறப்படும்.

4. சுவாமிகள் வரகவி என்பது தென்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளினின்றும் வாக்குப் பிரபாவம் தடையறத் தோற்றுவிப்பதால் நன்கு புலப்படும். வடமொழி நிரம்பிய திருப்புகழ்ப் பாக்களும் உள. அதுபோல இக் கந்தரலங்காரத்திலும்—

"சரணப் ப்ரதாப சசிதேவி மங்கல்யந் தந்து ரக்ஷா பரணக் க்ருபாகர ஞானு கரஸுர பாஸ்கரனே." (உக)

"பாச சங்க்ராம பணமகுட நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமாரா குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே." (ருஉ)

—என வடமொழி ததும்பும் பாவடிகளுமுள.

5. இக்கந்தரலங்காரத்தில் இரண்டு விஷயங்கள் முக்கியமாய் முன்னிற்கின்றன. ஒன்று அவர் வயலூரைப்பற்றி ஒன்றுங் கூறாதது. இது மேற்சொல்லினேம். பிறிதொன்று ஞான சம்பந்த மூர்த்தியை முருக பிரானுகத் திருப்புகழிற் பாராட்டியவாறு இங்கு ஒன்றுங் கூறாதது. இதன் காரணம் புலப்பட இல்லை.

6. திருப்புகழில் எவ்வாறு சிவபிரான், உமாதேவி, திருமால், தேவசேனை, வள்ளியம்மை இவர்களின் பெருமையைக் கூறி இன்னாருக்குக் குமரனே, இன்னாருக்கு மருகனே, இன்னாருக்குக் கணவனே எனவாழ்த்தி யுள்ளனரோ அவ்வாறே இவ்வலங்காரத் துள்ளுஞ் சிறப்பித்துள்ளார். உதாரணமாக—

"செஞ்சடாடவிமேல், ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின் கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்" (க)

—[சிவகுமாரனென்பது]

"த்ரியம்பகனைப் பாகத்தில் வைக்கும் பரமகல்யாணி தன்பாலகனே" (அo) [உமை சுதனென்பது]

"மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடு முட்டச் சேவடி நீட்டும் பெருமான் மருகன்" (கரு)

[திருமால் மருகனென்பது]

"மதகும்பகம்பத் - தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி யிறுகத்தழுவுங் கடகா சலப்பன்னிருபுயனே" (சுஎ)

[தேவசேனை காதலனென்பது]

"நெற்றுப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி முற்றுத் தனத்திற் கினிய பிரான்" (ருஅ).

[வள்ளி மணளனென்பது]

7. இந்நூலில் சுவாமிகளாற் சொல்லப்பட்டுள்ள தலங்கள் வெகுசில; அவை, காப்புச் செய்யுளில திருவருணையை நீக்கி, திருச்செந்தூர், பழநி, திருத்தணிகை, திருச்செங்கோடு, என்னும் நான்கு தலங்களே. இந்நான்கு தலங்களுள் திருங்செங்கோடு விசேடித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.—

(1) செந்தூர்.—"நீ செந்தி லோன் திருக்கை வேலென்கிலை, கொற்றமயூர மென்கிலை; வெட்சித் தண்டைக் காலென்கிலை, மனமே! எங்ஙனே முத்தி காண்பதுவே." (ஙு)

(2) பழநி.—"படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர்தாள் முடிக்கின்றிலை." (ஏரு.)

(3) திருத்தணிகை.—கோடாத வேதனுக் கியான் செய்த குற்றமென் குன்றெறிந்த தாடாளனே தென் தணிகைக் குமர நின் தண்டையந்தாள், சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாதகையும், பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே. (எசு)

(4) திருச்செங்கோடு—"செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே," (கூo)

8. இந்நூலிற் கூறப்பட்டுள்ள விசேட பிரயோகங்கள், பழமொழிகள் முதலிய:—

(1) சர்க்கரை மோக்கிய களிறு (காப்பு)
(2) கழுத்திற் சுருக்கிட் டிழுக்கு மன்றோ கவி கற்கின்றதே. (உ)
(3) வெய்யிற் கொதுங்க உதவா உடம்பு (கஅ)
(4) ஆழப்புதைத்து வைத்தால் வருமோ நும் மடிப்பிறக்கே! (உo)
(5) முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன். (உஉ)
(6) வந்துபார் சற்றென் கைக்கெட்டவே. (உரு)
(7) அம்பரம் பம்பரம் பட்டுழல. (ஙக)
(8) அவன் கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கை யெழுத்தே. (சo)
(9) காலை மிகவுண்டுகாலே யிலாத கணபணம் (சக)
(10) தொலையா வழிக்குப் பொதிசோறு. (ருக)
(11) ஒருபிடி சாம்பருங் காணுது மாய உடம்பிதுவே. (ருஎ)
(12) கட்டிப் புறப்படடா. (சுச)
(13) ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன்னடைக்கலமே. (அச)
(14) விதிதனை நொந்து நொந்திங்கே யென்றன் மனம் வேகின்றதே. (கூஅ)

9. நூலிற் கூறியுள்ள உபதேச மொழிகளாவன:—

(1) வேலன் கவியை எழுத்துப் பிழையறக் கற்கவேண்டும். (உ)
(2) மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம். (கசு)
(3) வெகுளியை விடவேண்டும். (கசு)
(4) ஏழைகளுக்கு நொய்யிற் பிளவளவேனும் பகிர்தல வேண்டும். (கஅ)
(5) தானம் என்றும் இடல் வேண்டும். (கசு)
(6) மயில் வாகனனைச் சாதுணைப் போதும் மறத்த லாகாது. (எஉ)

10. வேறு விசேட விஷயங்கள்.

(1) நக்கீர தேவர் "மலை கிழவோனே" என்று கூறினதற்கு மாருக நமது பாவலர் குமாரக் கடவுளை குழந்தையிலுங் குழந்தைக் குருந்து; அதைக் கிழவோன் என்று கூறலாமா என வேடிக்கையாகத் "திருந்தப் புவனங்கள் (ரு)" என்னும் பதிகத்திற் கூறுகின்றனர்.

(2) தமிழ் மொழியில் நமது கடவுள் மிக்க ஈடுபட்டவரென்பது "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன் (உஉ)" என்பதாற் போதரும்.

11. இவ்வலங்காரத்துள்ள நூறு செய்யுள்களையும் ஆராய்ந்து பொருள்வழி பிரிவுசெய்தால் அவை தாம் பின் வருமாறும்.

I

முருகர் பெருமையும், திறலும், கருணையும்—8.

1. திருந்தப் ... (ரு)
2. ஒருவரை ... (கஙு)
3. மொய்தாரணி ... (உஉ)
4. நாளென் செயும் ... (ஙஅ)
5. செற்றுப்பசுங்கதிர் ... (ருஅ)
6. விழிக்குத் துணை ... (எ0)
7. தேங்கிய ... (அங)
8. மணகமழ் ... (கூங)

II

நாம விசேடம்—1.

9. முடியாப் பிறவி ... (ஙங)

III

வேல்—2.

10. தேரணி ... (ங)
11. ஆலுக்கணிகலம்* ... (சூஉ)

IV

மயில்—3.

12. குசைநெகிழா ... (கக)
13. தடக் கொற்ற ... (கூசு)
14. சேலிற் றிகழ் ... (கூஎ)

V

சேவல்—1.

15. படைபட்ட ... (கஉ)

VI

நெஞ்சோடு கிளத்தல்—7.

16. வேதாகம ... (கஎ)
17. பாலென்பது ... (ங0)
18. சுழித்தோடு ... (ஙசு)
19. சூர்க் ... (சக)
20. படிக்கின்றிலை ... (எரு)
21. சேல்வாங்கு ... (எஎ)
22. தெள்ளிய ... (கூச)

* "பூவினுக கருமகலம" எனனும் தேவாரம் போன்ற செய்யுள்.

VII

தன் குறை கூறல்—8.

23. ஓரவொட்டார் * ... (ச)
24. கிணங்காட்டு † ... (சஉ)
25 கவியாற் † ... (சங)
26. புத்தியை வாங்கி ... (சஅ)
27. சாகைக்கு ... (ருச)
28. சிந்திக்கிலேன் ... (சூ0)
29. பெறுதற்கரிய ... (சூஎ)
30. கோடாத † ... (எசு)

VIII

கதியின்மை கூறல்—3.

31. தோலாற் ... (சச)
32. மைவரும் ** ... (அச)
33. கதிதனை ... (கூஅ)

IX

தன்னுறுதி கூறல்—1.

34. கண்டுண்ட ... (ஙஎ)

X

†† பிரார்த்தனைப் பதிகங்கள்—19.

35. சளத்திற் ... (எ)
36. ‡குப்பாச ... (கச)
37. தெய்வத் ... (உங)
38. பொக்கக் ... (ஙக)
39. இளைத்து ... (ஙஉ)
40. ஒட்டாக ... (ஙச)
41. பத்தித்துறை ... (ஙரு)
42. உதித்தாங் ... (ஙசு)
43 பாலே ... (சக)
44. நீயான ... (சசு)
45. படிக்கும் ... (ரு0)
46. சிகராத்ரி ... (ருஉ)
47. வெட்டும் ... (சூரு)
48. பந்தாடு ... (எசு)
49. மகத்தை ... (அ0)
50. தகட்டிற் ... (அஉ)
51. வணங்கித் ... (அஅ)

* "மூள்வாய தொழிற் பஞ்சேந்திரியம்" என்னும் அப்பர்சுவாமிகள் திருவாரூர்த் தேவாரங் காண்க.

† "தலையே நீ வணங்காய்" என்னும் தேவாரக் கருத்து.

** திருவாசகத்தில் "அடைக்கலப்பத்து" போன்ற செய்யுள்.

†† திருவாசகத்தில் அருட்பத்து, பிரார்த்தனைப் பத்து போன்ற செய்யுள்கள்.

‡ பிள்ளைத்தமிழிற் சப்பாணிப்பருவச் செய்யுள் போன்றது.

கண்ணாடி நிழலிற் கண்ட பணம் கடனுக்கு உதவுமா?

52. தொண்டர் ... (கூஉ)
53. காவிக் ... (கூசு)

XI

தரிசனப் பதிகம்—2 *

54. ஓலையும் ... (உஎ)
55. மாலோன் மருகனை ... (கூ0)

XII

† தன்னநுபவங் கூறினது (அச்சோப் பத்து)—10

56. பேற்றை ... (க)
57 ஒளியில் ... (அ)
58. தேனென்று ‡ ... (கூ)
59. சொல்லுகைக்கு ... (க0)
60 தாவடி ... (கரு)
61. கடத்திற் ... (உசு)
62. சேல்பட் ... (ச0)
63. ஒருபூதரும் ... (சரு)
64. பாதித் திருவுரு ... (சூங)
65. இடுதலை § ... (க00)

XIII

அற்புத மாலை—8 *

(தனனுநந்தம் கூறினது)

66. பெரும்பைம் ... (சூ)
67. சொன்ன ... (கசு)
68. இன்னங் ... (உச)
69. நீலச் சிகண்டி ... (உசூ)
70. வேலே ... (உஅ)
71. பத்தித்திருமுகம் ... (சஎ)
72. வரையற் ... (சூக)
73. போக்கும் ... (எங)

XIV

பிரமனை வெருட்டல்—1

74. பங்கேருகன் ... (அசு)

XV

யமனை வெருட்டல் - காலற்கடத்தல்—7

75. மரணப் ... (உக)
76. தண்டாயுதமும் ... (உரு)

77. பட்டிக்கடா ... (சூச)
78. தர்தைக்கு ... (சூசு)
79. தாராகணம் ... (அக)
80. வேலாயுதன் ... (அசூ)
81. குமரா சரணம் ... (அஎ)

XVI

உலகுக் குபதேசம்—19

82. அழித்து ... (உ)
83. தடுங்கோள் ... (கசூ)
84. வையிற் ... (கஅ)
85. கோழிக் ... (உ0)
86. மலையாறு ... (ருக)
87. வேடிச்சி ... (ருங)
88 ஆங்காரமும் ... (ருரு)
89. இழியும் ... (ருசூ)
90. பொருபிடி ... (ருஎ)
91. பொங்கார ... (சூசு)
92. நீர்க்குமிழி ... (சூசூ)
93. சாடும் ... (சூஅ)
94. துருத்தி ... (எக)
95. சேதனை ... (எஉ)
96. அராப்புனை ... (எச)
97. கூர்கொண்ட ... (எஅ)
98. காட்டிற் ... (அரு)
99. கருமான் ... (கூக)
100. யான்றான் ... (கூரு)

* திருவாசகத்திற் "கண்டபத்து" போன்ற செய்யுள்கள்

† திருவாசகத்தில் "அச்சோப்பத்து" போன்றது.

‡ அப்பர் சுவாமிகள் திருவொற்றியூர்த் தேவாரம் "மண்ணலலை விண்ணலலை" போன்றது.

§ திருவாசகத்தற் "அடியாரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே"—(அதிசயபபத்து)—என்பது போன்ற செய்யுள்.

** திருவாசகத்தில் அற்புதப் பத்து போன்ற பதிகங்கள்.

12. இக் கந்தரலங்காரத்துள் முக்கியமாக கீழ்க்குறித்துள்ள பன்னிரு பதிகங்கள் நித்திய பாராயணப் பதிகங்களாம்:—

I. உபதேசப் பதிகம்

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே. (கசூ)

II. * முருகன் நாமவிசேடப் பதிகம்

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே. (ஙங)

* தேவாரத்தில நமச்சிவாயப பதிகம், பஞ்சாக்ஷரப் பதிகம் போன்ற செய்யுள்.

கண்ணிற் பட்டாற் கரிக்குமா, புருவத்தில் பட்டால் கரிக்குமா?

III. †அங்கமாலைப் பதிகம்

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணுந் தொழாத கையும்.
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே (எசு)

IV ‡ ஆத்மசுத்திப்பதிகம்

சிந்திக் கிலேனின்று சேவிக்கி லேன்தண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேனொன்றும் வாழ்த்து கிலேன்மயில் வாகனனைச்
சந்திக் கிலேன்பொய்யை நிந்திக் கிலேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே. (சுo)

V. வழித்துணைப் பதிகம்

விழிக்குத் துணைதரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகாவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங் கோடன் மயூரமுமே. (எo)

VI. ** கோளறு பதிகம்

நாளென் செயும் வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்கு முன்னே வந்து தோன்றிடினே. (௩அ).

VII. †† கவசப் பதிகம்

வேலா யுதன்சங்கு சக்கரா யுதன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன் தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக் கொடி யோனரு ளாய கவச முண்டென்
பாலா யுதம் வரு மோயம னோடு பகைக்கினுமே. (அசு)

VIII ‡ தரிசனப் பதிகம்

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்குமே கந்த வேள் மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே. (உஎ)

IX. பரமானந்த பதிகம்

பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவன மெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த * சாகரத்தே. (சஎ).

X. பிரார்த்தனைப் பதிகம்

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை ,வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே. (உ௩)

XI. ஐக்கியப் பதிகம்

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னிலொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே. (௩௧)

XII. அடைக்கலப் பதிகம்

மைவருங் கண்டத்தர் மைந்த கந்தா வென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன் கற்ற கல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே. (அச)

†அப்பர் சுவாமிகள் "திரு அங்கமாலைப்பதிகம்" எனப்படும் "தலையே நீவணங்காய்" என்னும் தேவாரக் கருத்து.

‡ திருவாசகத்தில் "ஆடுகின்றிலை" என்னும் ஆத்ம சுத்திப் பதிகம் போன்றது.

** தேவாரத்தில் "வேயுறு தோளிபங்கன்" என்னுங் கோளறு பதிகம் போன்றது.

†† பிரமோத்தர காண்டத்திற் சிவகவசச் செய்யுள் காண்க.

‡ அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் "வடிவேறு திரிசூலந் தோன்றும் தோன்றும்" என்ற பதிகம் போன்றது.

* "ஆநந்த வெள்ளத் தழுந்து வித்தான் காணேடி"—திருவாசகம்.

சர்க்கரைக் கைத்தொழில்

OUR SUGAR INDUSTRY

"இந்தியாவில் பொது ஜனங்கள் தினந்தோறும் உபயோகப்படுத்துகிற முக்கியமான உணவுப் பொருள்களுள் சர்க்கரை ஒன்று. உயர் வகுப்பினரும், நடுத்திறத்தாரும், ஏழை ஜனங்களுள் மிகச் சிலருமே டம்பமாய்த் தாங்கள் சுகமனுபவிக்கும் நோக்கத்தோடு சர்க்கரையை உபயோகிக்கின்றனர்," என்று சொல்லுகிறார் இராஜாங்க சாஸ்திர விதிகளில் நிபுணரான ஒரு பண்டிதர். ஆயினும், நாம் இந்தியாவில் விளையக்கூடிய சர்க்கரை யெல்லாம் செலவழிப்பது மல்லாமல் பிரதிவருஷமும் இதர நாடுகளிலிருந்து ஏராளமாய்ச் சர்க்கரை இறக்குமதியும் செய்கிறோம். வெளியிடங்களிலிருந்து இந்தியாவுக்கு வந்திறங்கும் சர்க்கரையின் தொகை இவ்வளவென்று கணக்குப் பார்த்தால், அதை உபயோகிக்கும் ஜனங்கள் வருஷாவருஷம் எவ்வளவு விரைவில் அதிகமாய்க் கொண்டு வருகிறார்கள் என்பது விளங்கும்.

சர்க்கரை முக்கியமாய் இந்தியாவுக்கே ஏற்றுமதியாகின்றது. இப்படி ஏராளமாய் சர்க்கரை உண்டாக்குவதற்கு ஜாவா தேசத்தார் என்ன செய்கிறார்கள்? முதலில் அவர்கள் தற்காலத்து சாஸ்திர முறைகளை முற்றிலும் தழுவி கரும்பை அபிவிருத்தி செய்கிறார்கள்: கரும்பிலிருந்து ரசம் இறக்கச் சிறந்த யந்திரங்களை உபயோகிக்கின்றனர். சுத்தி செய்யாத வெல்லம் பழுப்புச் சர்க்கரை இவற்றைப் பொதுவான தக்கதோர் இடத்தில் சேகரித்து, ரசாயன சாஸ்திரிகளின் உதவியால் பரிசோதனை செய்து சேதமாகாமல் சர்க்கரை எடுக்கின்றார்கள். ஆகையால் கைத்தொழிலின் ஒவ்வொரு படியிலும் சாஸ்திர முறைமை அநுசரிக்கப்படுகிறது.*

இந்தியாவிலோ கரும்பு விளையும் பூமியின் விஸ்தீரணம் ஜாவாவை விட 7 மடங்கு அதிகமாயிருப்பினும் புராதன வழியை அநுசரித்தே கரும்பு விளைவிப்பதனுல், பயிர் ராசி காண்பதில்லை. மேலும் வியாதிகளால் கரும்புக்கு ரசமீனும் சக்தி குறைகின்றது. புழுவேறி, கரும்பின் உட்புறம் சிவந்து நாறிப்போவதையும்,

	1904—05	1906—07	1908—09	1910—11	1913—14
இறக்குமதியான சர்க்கரையின் விலை.	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
	6,90,27,319	8,73,81,164	10,62,00,000	12,62,00,000	14,47,00,000

இந்தியாவுக்குப் பிரபலமாய் ஏற்றுமதி செய்யும் தேசங்கள் ஐரோப்பாவில் ஜர்மனியும், ஆசியாவில் ஜாவா முதலிய தீவுகளுமே. ஜர்மனி தேசத்தார் பீட்கிழங்கிலிருந்து செய்த வெள்ளைச் சர்க்கரையை ஏராளமாய் ஏற்றுமதி செய்து நமது வியாபார ஸ்தலங்களையெல்லாம் கைப்பற்றினார்கள். ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமானதும் ஜர்மன் சர்க்கரை, நின்றுவிட்டது.

ஜாவாத் தீவில் சர்க்கரை கரும்பிலிருந்து செய்யப்படுகிறது. கரும்பு விளையக்கூடிய இடமோ இந்தியாவுடன் ஒப்பிடும்போது, 7-ல் ஒரு பங்குதான். அவ்வளவு குறைவான நிலத்தில் விளையும் கரும்பிலிருந்து உண்டாக்கிய சர்க்கரை, அச்சீமையாருக்கு வேண்டிய மட்டில் உபயோகப்பட்டு, வெளியூர்களுக்கும் ஏற்றுமதி செய்யப் போதுமாகின்றது! ஜாவா

நோய் பிடித்துப் பெருக்காமல் குன்றிப்போவதையும், இந்தியாவில் எல்லா விடங்களிலும் காணலாம். விளைந்த கரும்பிலிருந்து சாறு பிழிய பண்டைக்காலத்து யந்திரங்களே உபயோகப்படுகின்றன. அவை கரும்பிலிருந்து வரக்கூடிய ரசத்தை முழுவதும் இறக்குவதில்லை. அதினுலுண்டாகும் சேதம் சொல்லி முடியாது.

ரசத்தைக் காய்ச்சி வெல்லமாக்கிய பின் அப்பண்டங்களை ஓரிடத்தில் சேர்த்து வைப்பதில்லை. "மோரிஷஸ், பார்மோஸா முதலிய இடங்களில் செய்வதுபோல், நாமும் பண்டங்களைச் சேர்த்துவைத்து பொதுப் பண்டச் சாலைகளில் (Central factories) பிரபல

* Nature: January; Vol. 102 Page 394.

மாய்த் தொழில் செய்தாலன்றி நமது சர்க்கரைக் கைத்தொழில் விருத்தி யடையாது. அதுவரையில் நமது தொழில் ஜயமடையும் என்று நினைக்கவும் வழியில்லை.''* பணம் அவசியமாய் வேண்டிய ஏழைக்குடியானவன், தன் கிராமத்திலேயே வந்தது போதுமென்று வெல்லத்தை விற்று விடுகிறான். குடியானவர்கள் புஷ்டியா யிருப்பின், தங்களுக்கு லாபமான விலைவரும் வரையில் பண்டத்தைத் தேக்கி வைக்கவும், பலர் கூடிப் பொதுத் தொழிற் சாலைகள் எற்படுத்தவும், பிரயத்தனம் செய்வார்கள். நமது தேசத்துக் குடியானவர்களின் நிலைமை எவ்வித மிருக்கிற தென்பதை அனைவரும் அறிவார்கள்.

இவ்வாறு தொழில் முறையில் வித்தியாசம் இருப்பதனால், ஜாவா தேசத்தில், தற்கால ரசாயன சாஸ்திர முறைகளைத் தழுவி, விவசாயம் செய்யும் நிலங்களில் ஒரு ஏகராவுக்கு 110 மணுவு சர்க்கரை கிடைக்கின்றது: இந்தியாவில் பாராயிலி ஜில்லாவில், தற்காலத்திய விவசாய விதிகளை அனுசரித்துத் தொழில் செய்த விடத்தில் ஏகரா ஒன்றுக்கு 64 மணுவு சர்க்கரை கிடைத்தது. புராதன முறைப்படி பயிர் செய்த விடத்தில், (அதே ஜில்லாவில்) ஏகராவுக்கு $7\frac{1}{2}$ மணுவு சர்க்கரை தான் கிடைத்தது.* இக்கணக்குகளைப் பரிசீலனை செய்யும் போது, ஜாவா தேசத்தார் 100-க்கு 10-வீதம் இறக்குமதித் தீர்வைகொடுத்து, ரயில் சார்ஜ், கப்பல் தீர்வை இவைகளையும் கட்டிக்கொண்டு இந்தியா தேசத்தில் தங்கள் சர்க்கரையைக் கொண்டுவந்து சேர்த்து, நம்முடன் போட்டி போட்டு, தாழ்ந்த விலைக்கு விற்பதும், மிகுந்த லாபமடைவதும் ஆச்சரியமா? இவ்வளவு அநுகூலமும் அவர்களுக்குக் கிடைப்பது, ஏராளமான விளைவினாலல்லவா? இதைக் கவனித்தால், நாம், ஜாவா தேசத்தாரின் வியாபாரத்தைக் குறைத்து நமது சர்க்கரைக் கைத்தொழிலை விருத்திசெய்ய வேண்டுமானால், எவ்வளவு தூரம் பிரயாசப் படவேண்டுமென்பது விளங்கும்!

ஆகவே, நமது தேசத்தில் சர்க்கரை விளைவு அபிவிருத்தியடையவும், அதுபற்றி அன்னிய தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் பொருள் குறையவும் நாம் செய்ய வேண்டிய முயற்சி என்ன ?

முதலில் கரும்பின் விளைவை அதிகமாக்கி நோவில்லாமல் பயிரைப் புஷ்டியாய் வளரவிட வேண்டும். தக்க உரம்போட்டு, நிலத்தைப் பண்படுத்தி, பயிருக்குப் புழு விழாமல் பாதுகாத்து, விளைவை எவ்வாறு விருத்தி செய்ய வேண்டுமென்று காட்ட, கவர்ன்மெண்டார் (Experimental Farms) பரீக்ஷைப் புலங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவ்விதப் புலங்கள் ஆங்காங்கே மூலைக் கொன்றாயிருப்பதால் குடியானவர்கள் பயிரின் அபிவிருத்தியை நேரில் கண்டு, தாரதம்யத்வைத ஒப்பிடக் கூடாமலிருக்கிறது. வியவசாய விருத்திக்கென்று நியமித்திருக்கும் உத்தியோகஸ்தர்கள் இன்னும் பல இடங்களில்—குடியானவர்களின் நிலங்களிலேயே வேண்டுமானாலும்—முறைப்படி கரும்பு பயிரிட்டு, விளைவின் அபிவிருத்தியைக் காட்டவேண்டும்.

இரண்டாவது, பயிரான கரும்பைப் பிழிந்து ரசமிறக்கச் சீரான யந்திரங்களையும் வியவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் உபயோகித்துக் காட்டலாம். நேருக்குநேரே பார்க்கும் போது குடியானவன் மனதில் யந்திரத்தின் மேன்மை நன்றாய்ப் பதியும்.

இவ்விரண்டு விதமாகவும் வியவசாய இலாகாவில் உள்ள உத்தியோகஸ்தர்கள் தவறாமல் செய்பினும், வியவசாயிகள் தாமும் அவறறை மேற்கொண்டு தொழில் செய்ய முக்கியமான தடை ஒன்றுளது. அது என்ன வெனில், பண மின்மையே! தக்க உரம் வாங்கவும், புழுக்களை நாசம் செய்யத் தயாராய்க் கையில் மருந்து வைத்துக்கொள்ளவும், திருப்திகரமாய் வேலை செய்யக் கூடிய யந்திரங்களை வாங்கவும், பணமில்லா விட்டால் ஏழைக் குடியானவர்கள் என்ன செய்யக்கூடும் ? இதுவே கஷ்டங்களுள் எல்லாம் பெரிய கஷ்டம்! ஏழைத் தன்மை குடிகொண்டிருக்கும் தொழிலாளிகளை, பணங்கொடுத்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமானால் (Co-operative society) கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்துவதல்லாமல் வேறு வழியில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் சங்கம் ஏற்படுமானால் சங்கத்தார் பொதுப்பணத்தில் எருக்களையும்,

* V. G. Kale: Indian Industrial Problems p. 42.
* Pusa Agricultural Bulletin 82.

மருந்துகளையும் வாங்கிக் குடியானவர்களுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுக்கலாம். மெம்பர்களும், ஆன செலவைத் தக்கபடி பாகம் செய்து கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாய் அநுகூலமானபோது திருப்பிக் கொடுக்கலாம். தவிரவும், சங்கத்தில் பணமில்லாதபோது, கடன் வாங்க வேண்டியிருந்தால், சர்க்காரிலிருந்தும், பொது ஜனங்களிடத்திலிருந்தும், சுலபமாய்க் கடன் வாங்கமுடியும். பிரதி நபரிடத்திலும் தனித்தனியாயுள்ள நம்பிக்கையைக் காட்டிலும், பொதுவான சங்கத்தினிடத்தில் நம்பிக்கை அதிகமே, யல்லவா ? நம்பிக்கை அதிகமானபோது தானாகவே கடனுக்கு வட்டி குறைகின்றது. சுலபமாய்ப் பணம் பெறக்கூடிய சங்கத்தார் ரசமிறக்கும் யந்திரங்களையும் பொதுவில் வாங்கிவைத்துக்கொண்டு சொற்பக் கூலிக்கு ஒவ்வொரு குடியானவனும் வந்து ரசம் பிழிந்து கொண்டுபோகும்படி உதவி செய்யலாம்.

கோ ஆபரேடிவ் சட்டப்படி பல சங்கங்கள் ஒன்று சேர்ந்து, அநுகூலமான நடு ஸ்தலத்தில் பெரிய பொதுப் பண்டசாலைகள் (Central Stores) ஏற்படுத்திக்கொள்ளலாம். குடியானவர்கள் தயாராக்கும் வெல்லம் முதலிய சுத்திசெய்யாத வஸ்துக்களை மனம் போனபடி விற்று விடாமல், சுலபமாய்ச் சேர்த்து வைக்கலாம். பணம் அவசியமாய் வேண்டுகிற குடியானவனுக்கு அவனது பொருளுக்குத் தக்கபடி, பண்டகசாலையின் பொது நிதியிலிருந்து அட்வான்ஸ் கொடுக்க யாதொரு தடையுமிராது. ஆகையால் குடியானவன் கடன்காரனுடைய வலையில் அகப்பட்டுத் தவிக்காமல் தன் வேலையை அமைதியாய் கவனிக்க வழியுண்டாகும். இவ்விதமாய் ஏற்படும் பெரிய தொழில் சாலைகளில் (Factories) ஏராளமாய்ச் சர்க்கரை செய்ய வசதியுண்டு.

கூட்டுறவு சங்கத்தார் தாங்கள் மேற்கொண்ட காரியத்தின் பயனை அநேகருக்குக் காண்பிக்கவும், இன்னும் பல குடியானவர்களைத் தங்கள் சங்கத்தில் சேர்க்கவும், பலவிதமாய்ப் பிரயாசைப்படவேண்டும். அடிக்கடி நடக்கும் தேர், திருநாள், சந்தை, குதிரைக் காட்சி, முதலான சமயங்களில் தங்கள் சரக்குகளைக் கொண்டுவந்து பகிரங்கமாய் யாவரும் பார்க்கும்படி காட்டவேண்டும். சுலபமாயும், சிறப்பாயும், செட்டாயும் வேலை செய்யும் யந்திரங்களை ஜனங்கள் முன்னிலையில் ஓட்டி வேலைசெய்து, அவர்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி யந்திரத்தின் திறமையை ரூபிக்கவேண்டும். இப்படி ஊக்கத்துடன் செய்துவந்தால் நமது கைத்தொழில் பலப்படுமென்பதை யாராகிலும் சந்தேகிக்க முடியுமா ?

நாம் கவர்ன்மெண்டாரின் உதவியை இன்னும் ஒருவிதமாய் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அன்னிய தேசத்தார் ஏராளமாய் உண்டாக்குகிற தங்கள் சர்க்கரையை இந்தியாவுக்கு அனுப்பி விற்கவிடாமல் இறக்குமதித் தீர்வையை இன்னும் அதிகப்படுத்தலாம். அவ்விதம் செய்யுமுன் நமது கைத்தொழிலை பலப்படுத்திக் கொள்ளவேண்டும். நமது விளைவைக் குறைவாகவே விட்டுவிட்டு அன்னியருடைய சாமான்களையும் வரவொட்டாமல் தடுப்பது தேசத்துக்குத் தீமையை விளைவிக்கும்.

மேலும், வெளியூர்களில் சர்க்கரை செய்யும் முறைகளையும், அநுகூலங்களையும் பத்திரிகைகளின் மூலமாயும், புஸ்தகங்களின் மூலமாயும் அறிந்துகொள்வது மட்டுமே யன்றி, அவ்வழிகளையும் அநுகூலங்களையும் நேரில் கண்டுவர புத்திசாலிகளான அக்கரையுள்ள மாணாக்கர்களை வேறு தேசங்களுக்கு அனுப்பவேண்டும். நேரில் கண்டு வந்த மாணாக்கர்கள் சாமர்த்தியமாய் நமது கைத்தொழிலை சீர்திருத்துவார்கள் என்பதற்குச் சந்தேகமென்ன ?

இவ்வித முயற்சியெல்லாம் கைகூட வேண்டுமானால் படித்தவர்களே முன்னுக்கு வந்து ஆதரிக்கவேண்டும். அதுவும் உடனே செய்தல்வேண்டும். தாமதமானால், யுத்தம் முடிவானதுபற்றிக் கப்பல்களும், ரயில்வண்டிகளும் தங்களுக்கு ஏராளமாய்க் கிடைக்கக்கூடிய சௌகரியத்தால், அந்நிய தேசத்தார் தமது சரக்குகளை மேன்மேலும் கொண்டுவந்து நிறைத்து, நமது வியாபார ஸ்தலங்களைக் கைப்பற்றிவிடுவார்கள். மேலோங்கி யெழுந்து வரும் 'போட்டி'யென்னும் அலைகளில் அமழ்ந்துபோய் நமது கைத்தொழில்கள் மூச்சிழந்து போகும். ஆகையால் அவ்வெள்ளம் வருமுன் அணைப்போட்டுத் தடுப்பது புத்திசாலிகளின் செயலாகும்.

கல்விக் குறிப்புகள்

EDUCATIONAL NOTES

உயர்தரக் கல்வி யறிவுடன், சமய அறிவும் நம் சிறுவர்களுக்கு இருக்கவேண்டியது அவசிய மென்பதை அனைவரும் ஒத்துக் கொள்வர். சமய அறிவு கொஞ்சமும் இராது, வெறும் லௌகீக அறிவு பயன் படாது. இதை உத்தேசித்தே, மேனாடுகளிலும், நம் நாட்டிலும், சிறுவர்களுக்கு சமய அறிவு போதிக்கப்பட வேண்டுமென்று வித்தியா அதிகாரிகளும், பெரியவர்களும் கூறியிருக்கின்றனர். ஸ்ரீ காசி ஹிந்து யூனிவர்ஸிடியும் இவ்வெண்ணத்துடனேயேதாபிக்கப் பட்டது. ஆயினும் தென்னிந்தியாவில் அவ்வித கலாசாலைகள் மிகச் சிலவே. இக்குறையை நீக்கும் பொருட்டு நம்மவர்களிற் சிலர் திருச்சியிலிருந்தநாஷனல் ஹைஸ்கூலிற்குமேலங்கமாக, 'நாஷனல் காலேஜ்' ஒன்று ஏற்படுத்தியிருக்கின்றனர். சென்னை பச்சையப்பன் காலேஜில் வெகுகாலம் புரொபஸராக இருந்த ஸ்ரீமான் கே. ராமானுஜாசாரியர் அவர்கள் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட் டிருக்கின்றனர். உயர்தர யூநிவர்ஸிடிப் பட்டம் பெற்று, வித்தியா போதனையில் சிறந்த ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருப்பது காலேஜ் சரிவர நடக்குமென்பதைத் தெரிவிக்கின்றது. மேற்படி காலேஜ் ஸ்தாபிக்கப் படுவதற்காக, அல்லும் பகலும், மனதார உழைத்தவர்களில் முக்கியமானவர் கனம் டி. வி. சேஷகிரி ஐயராவர். திருச்சிராப்பள்ளியில் வேறு சில காலேஜ்கள் இருக்குமாயினும், புதிதாக ஏற்பட்ட நாஷனல் காலேஜ், ஓர் பெரும் குறையை நீக்கி, நன்மை பயக்கு மென்பது திண்ணம்.

நாஷனல் காலேஜ் திருச்சிராப்பள்ளி.

* * *

நாட்டின் கல்வி யபிருத்தியைக் கோரும் நம் சோதரசோதரிகள், தம்மாலியன்ற வரை பண உதவி செய்தாற் ருன் கல்வி யபிவிருத்தி யடைய வழியேற்படும். இவ்விஷயத்தில் 'ஹிந்துஸ்தான் ரிவ்யு' என்னும் பத்திரிகாசிரியரின் மனைவி ஸ்ரீமதி ஸிம்ஹா அவர்களின் நன்கொடை மிகவும கவனிக்கத் தக்கது. இம்மாது சிரோன்மணி மூன்று லக்ஷம் பொறுமான சொத்தை வித்தியாபிவிருத்திக்காக உயிலெழுதி வைத்ததாகத் தெரிய வருகிறது. அத்தொகை பஞ்சாப், ஆக்ரா, அயோத்தி, ஐக்கிய மாகாணங்கள், பீஹார், ஒரிஸ்ஸா முதலிய இடங்களில் செலவழிக்கப்படும். மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பாகம், பஞ்சாப் யூனிவர்ஸிடியில் கணித சக்திதத்வ சாஸ்திரி ஒருவரை நியமிக்க செலவாகும். அது ஸ்ரீமதி ஸிம்ஹாவின் பாட்டனார் ராய்பஹதூர் கன்யாலால் என்பவர் பேரால் வழங்கப்படும்; தொகையில் மூன்றில் மற்றொரு பாகம், செல்வவிருத்தி சாஸ்திர (Economics) போதகாசிரியரை நியமிக்கவும், மிகுந்த பணம், பாட்னா நகரத்தில் ஓர் பொதுஜன புஸ்தகசாலையும் வாசகசாலையும் வைக்கச் செலவழிக்கப்படும். இப்புத்தகசாலைக்கு ஸ்ரீமான் ஸிம்ஹா அவர்களின் சிறந்த புத்தகசாலையும் சேர்க்கப்படும் என்று தெரிய வருகிறது. பணமே பெரிதெனக் கொண்டாடப்படும் இந் நாட்களில் இம்மாதிரி தர்மம் செய்வது அரிது. நம் நாட்டில் தனவந்தர்களான மற்றவர்களும் ஸ்ரீமதி ஸிம்ஹா அவர்களைப் பின்பற்றுவார்களென நம்புகிறோம்.

கல்விக்கு ஓர் ஸ்ரீமதியின் நன்கொடை.

* * *

பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகள் ஒரே நிலைமை, சுகாதாரம், செல்வம் முதலியவைகளுடைய இடங்களிலிருந்து வருவதில்லையாதலால், நோய் பரவுவதற்குப் பல வசதிகளிருக்கின்றன. மற்றும் பள்ளிக்கூடங்கள் சிறுவர்கள் கூடி, சுகமாக வாசிப்பதற்கு வேண்டிய காற்று, வெளிச்சம், மேஜைகள், விசுப்பலகைகள் முதலியவைகள் இருக்க வேண்டியது அவசியம். இவ்விஷயங்களைக் கவனிப்பதற்கென்று அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் தனி இலாகாக்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிக்கத் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் ஒவ்வொரு பள்ளிக்கூடம் கட்டப்படும் போதும் விசாரிக்கப்பட்டு அவர்கள் அனுமதியின்பேரிலேயே அது கட்டப்படுகின்றது. சிறுவர்களின் சுகாதாரத்தைக் கவனிக்க வைத்தியர்களும், ஆஸ்பத்திரிகளும் பல இருக்கின்றன. இவ்வித ஏற்பாடுகள் நம் நாட்டில் இல்லாத பெருங்குறையை கொஞ்சகாலத்திற்கு முன் துரைத்தனத்தார் கவனித்து, ஒவ்

பள்ளிச் சிறுவர்களின் சுகாதாரம்.

வஸந்த மந்திரம்

ஐந்தாம் அத்தியாயம்

(349-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரகசியம் வெளியானது

மலைகளைத் தாண்டி உதயபுரிக்குப் போகும் வழியில் ஒரு கணவாய் உண்டு. இருபுறமும் உன்னதமான மலைகள். இடதுகைப்புறம் பாதையின் அருகிலேயே அம்மலைகள் செங்குத்தாய் மேன்மேலும் உயர்ந்துகொண்டிருக்கின்றன. சுமார் இரண்டு மைல் வரையில் ஒரு பள்ளத்தாக்கு; அதற்கு அப்பால் மலைகள் மறுபடியும் உயர ஆரம்பிக்கின்றன. முன்புறமும் பின்புறமும் ஒரே தணிவாய்ப் பள்ளத்தாக்குக் கண்ணுக் கெட்டிய வரையில் பரவியிருக்கின்றது. வலது புறமிருந்து ஒரு மலையருவி பாதையின் நடுவே பாய்ந்து இடதுபுறத்துப் பள்ளத்தாக்கில் விழுகின்றது. அவ்வருவியின் இருபுறமும் பல மரங்கள் வானத்தை யளாவி வளர்ந்து கிடக்கின்றன. சிலவற்றில் இலையுதிர்ந்து இப்பொழுதே துளிர் முளைக்கின்றது. சிலவற்றில் இளம் இலைகள் தளதளவென்று கண்ணைக் கவர்கின்றன. நடுவே நிற்கும் ஆலமரம் இலை அடர்ந்து உச்சிப் பொழுதிலும் சூரிய வெளிச்சம் உள்ளே நுழையாதபடி, நிழலைக் கொடுக்கின்றது. எத்திசை நோக்கிலும் பசும் புல் தரையே. மான்களும், மாடுகளும் மேய்கின்றன. மந்தை மந்தையாய்ப் பட்டி ஆடுகளை ஓட்டிக்கொண்டு இடையர் ஆடு மேய்க்கின்றனர்.

சூரியன் மேற்கே மறைந்து விட்டான். கணவாயில் வெயிலே கிடையாது. ஆனாலும் அஸ்தமனத்துக்கு இன்னும் நான்கு நாழிகைப் பொழுது இருக்கலாம். இடையர்கள் ஆடுகளை ஒன்று சேர்க்க நாய்களை ஏவுகின்றனர். நாய்களால் துரத்தப்பட்டு ஆடுகள் கத்துகின்றன. இடையன் அழைப்பதற்கு அவை ஒன்றன்பின் ஒன்றாய் இடைவிடாமல், 'ஏ, ஏ' என்று பதிலுரைப்பதுபோல் தோன்றுகின்றது. ஒன்றுசேர்ந்த மந்தைகளை ஓட்டிக்கொண்டு சிலர் தத்தம் ஊர்களுக்குப் புறப்பட்டு விட்டனர்.

மலை நிலத்துக்குரிய தானியங்கள் இன்னும் விதைக்கப்படவில்லை. பருவ மழையை எதிர்பார்த்திருக்கின்றனர் அவ்விடத்துக் கிராமத்தோர். ஆகையால் மலைப்புறமெல்லாம் காய்ந்து, ஒளியற்று, பயங்கரமாய்த் தோன்றுகின்றது. பலவிடங்களிலிருந்தும் பக்ஷிகள் விரைவாய்ப் பள்ளத்தாக்கை நோக்கியே பறந்து வருகின்றன. சுற்றிலும் பதினைந்து மைல் சுற்றளவுக்கு ஜலமென்ற பேரே கிடையாது. இப் பள்ளத்தாக்கின் பக்கத்தில்தான் ஜலமும் பசும் புல்லும் இருக்கின்றன.

இப்பள்ளத்தாக்கில் தெற்குநோக்கிஆறுபேர் குதிரைசவாரி செய்துகொண்டு வருகின்றனர். குதிரைகள் மேடேற அதிகப் பிரயாசப்படுகின்றன; சவாரி செய்கின்றவர்களும் சோர்ந்திருக்கின்றனர். கஷ்டத்துடன் குதிரைகள் ஆலமரத்தடியில் வந்து நிற்கின்றன. 'சல சல' வென்று நீர் ஓடும் சப்தத்தைக் கேட்டதும் அவை காதுகளை ஆட்டிக்கொண்டு சந்தோஷத்துடன் உறுமத் தொடங்கின. மனிதர்களும் ஒருவரையொருவர் கேட்காமலே கீழ் இறங்கிவிட்டனர். அவர்களுள் ஒருவன் "ஹே! கவுஸ் சாகிப்! நேற்று இராத்திரி நாம் வழிதப்பிப் போயிருக்கவேண்டும். இல்லையேல் இம்மாதிரி ஜலத்துக்குக் கஷ்டப்படவேண்டியிராதே. நாம் போகும் வழியில் ஜல கஷ்டமே இல்லை யென்றல்லவா சொன்னாய்? இவ்வழியிலோ ஜலமென்பதே கிடைக்கவில்லையே! உச்சிப்போதுக்குக் கிடைத்த தண்ணீருக்கப்புறம் இப்பொழுதல்லவா ஜலத்தைக் காண்கிறோம்? குதிரைகள் எப்படிக் குடிக்கின்றன பாருங்கள்! நாமும் கால்களைக் கழுவிக்கொண்டு ஜலத்தைக் குடிப்போம். இன்னும் வெளிச்சமிருக்கின்றது. இருட்டுவதற்குள் ஏழு, எட்டு மைல் நடப்போம்—ஏன் புறப்பட வேண்டியது தானே?" என்றான்.

இன்னொருவன்.—"புறப்படவா? என்ன அப்பா அப்படிச் சொல்லுகிறாய்? என்ன விந்தை இது! வழி தப்பிவிட்டோம் என்பதில் சந்தேகமில்லை. நேற்றுக் காலை குதிரை மாற்றியதற்குப்பின் வேறு குதிரைகள் உங்களுக்குக் கிடைத்தனவா? கிராமங்களே கிடையாதே இவ்வழியில்! இருட்டில் நடுவழியில் சிக்கிக்கொண்டால்—அப்பா! நான் வரமாட்டேன். புலி தின்றுவிடும் நம்மை—சுல்தானுக்குக் கல்யாணம்.—ஆனால் என்ன—ஆகா—"

மூன்றாவதவன்.—"என்ன தம்பீ பயப்படறே! நீ சுத்த பயங்காளீ! வழியும் தப்

பல்லே; ஒன்னுமில்லே. இதான் சரியான வழியய்யா! நான்தான் முன்னே போயிருக்கேனே!"

முதலில் பேசியவன்.— "என்ன ஐயா கவுஸ்சாகிப்! நீ என்ன பதில் சொல்லாமல் நிற்கின்றாயே? மல்லீக் மகமத் சொல்லுகிறபடி சரியான வழிதானா இது?"

கவுஸ் இன்னும் ஒன்றும் பேசவில்லை. மல்லீக் மஹமத் "என்ன கவுஸ்! பேசுகிறதில்லையோ! நீ சொல்லு அப்பா! சொல்லு!" எனக் கேட்டான்.

கவுஸ்.—"தப்பித்தான் போய்விட்டோம் என்று நினைக்கின்றேன்."

மல்லிக்.—"நினைக்கவாவது ஒன்றாவது! நீ சொல்லறது தப்பு. வழி இதேதான். பந்தியம் கட்டறயா?"

முதலில் பேசிவன்.—"இதற்கென்ன இத்தனை சண்டை? தப்பித்தான் போயிருக்கலாம். ஆனாலும் நமக்கு என்ன பயம்? கவுஸ்சாகிப்! நீதான் இருக்கிறவர்களுக்குள் சிறுவன். அதோ போகும் இடையர்களைக் கேட்டுச் சங்கதி தெரிந்து கொண்டுவா."

மல்லிக் "கவுஸ் போறதென்ன? இதோ நான் போறேன். அந்தப் பசங்களை அடிச்சுத் தெரிந்துண்டு வரேன்" என்று புறப்பட்டு "அடே, டே, டே! இடப்பசங்களா! ஏ, ஏ, ஏ, நில்லு, நில்லு, நில்லுடா! அடே, டே, டே,—" என்று இடி இடிப்பதுபோல் கூப்பிட்டுக்கொண்டே ஓடினான்.

அதற்குள் மற்றவர்கள் கை கால் கழுவிக்கொண்டு நீர் அருந்தி, 'உஸ்' என்று படுத்துக்கொண்டனர். கவுஸ் மட்டும் படுத்துக்கொள்ளாமல் சுறுசுறுப்பாய் எல்லாக் குதிரைகளுக்கும் கடிவாளத்தை நீக்கி விட்டான். அவை சுற்றிலும் பசும் புல்லை மேயத் தொடங்கின.

இவர் அறுவரும் யாவர் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இவர்களே ஆமத் பாக்ஷாவிடமிருந்து உதயபுரிக்குப் போகும் தூதர்கள். அதிக அவசரமாய் வழியில் குதிரைகளை மாற்றிக்கொண்டு வாயு வேகமாய்ப் பறந்து போகின்றனர். இவர்களுள் முக்கியஸ்தன் மற்றவர்களைப் பார்த்து "நண்பர்களே! இவ்வழியில் ஓர் ஊர் இருப்பதானால் இன்றிரவு நிசியானாலும் சரி, அவ்விடம் போய்ச் சேர்ந்து வேறு குதிரைகளைத் தேடிக்கொண்டு, காலை மறுபடியும் புறப்பட்டுவிடலாம். இன்னும் எத்தனை தூரம் இருக்கின்றதோ உதயபுரி தெரியவில்லையே!" என்றான். இன்னொரு தூதன் "ஐயா! இந்தக் கவுஸ் சாகிப், மல்லீக் மகமத், இருவரையும் நம்பி நாம் புறப்பட்டிருக்கக்கூடாது!—" எனக் கூறினான்.

கவுஸ்.—"நான் என்ன ஐயா செய்வது? ஏதோ வழி தப்பிவிட்டோம். தெய்வச் செயல் என்ன செய்வோம் அதற்காக?"

"என்ன செய்வதாவது? செய்வதுதான் பானையும் சட்டியும்! தாமதத்துக்குப் பாக்ஷா தண்டனை விதிப்பதானால், நீதான் ஜவாப்தாரி—"

"இல்லே ஐயா நான்தான் ஜவாப்தாரி! நாளை சாயங்காலம் உதயபுரி போய்விடலாம்! என்ன ஐயா!" என்றான் ஓடிவந்த மல்லீக்.

சமாசாரம் என்னவெனில், இடையர்களைக் கேட்டதில், இவர்கள் வழிதப்பினாலும், ஜோதிபுரியிலிருந்து உதயபுரிக்குப் போகும் பாதைக்கு வந்திருப்பதாயும், பத்து மைல் தூரத்தில் ஒரு கிராமம் இருப்பதாயும், அங்கிருந்து காலை புறப்பட்டால் சாயங்காலம் உதயபுரி சேரலாம் என்றும், மல்லீக் மஹமதினிடம் சொன்னார்கள். நல்ல வேளையாய் அவர்களுக்கும் மல்லீக் மஹமதுக்கும் சண்டையாகவில்லை. மலை ஜனங்களானபடியால் துருக்கச் சிப்பாயைக் கண்டு பயந்து அவன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் வணக்கமாய்ப் பதில் சொல்லிவிட்டனர். சிபாய் காரணமின்றி அவர்களை ஒரு முறை இரண்டு முறை திட்டியதையும் அவர்கள் கவனிக்கவில்லை.

வழியின் விவரம் இம்மாதிரியென்று தெரிந்ததும் அவ்வீரர்கள் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு நிதானமாய்ப் புறப்படலாம் என்று ஆலோசனை செய்தனர். போஜனம் முடிந்து, ஜலம் குடித்து, சோற்று மூட்டையையும் மறுபடி கட்டியாய் விட்டது. மல்லீக் மஹமத் பாடத் தொடங்கிவிட்டான். இருள் சூழ்கின்றது.

இதற்குள் கவுஸ், தூரத்தில் எதையோ கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரம் கழிந்ததும் "ஐயா மல்லீக் சாயப், கொஞ்சம் உமது பாட்டை நிறுத்தி, இப்புறம் திரும்பும்: அதோ அங்கே சிப்பாய்கள் வருகிறதுபோல் தோன்றுகிறதே;

கட்டோடே போனால் கனத்தோடே வரலாம்.

பாரும் நன்றாய்" என்றான். எல்லாரும் அத்திசையில் திரும்பிப் பார்த்தனர். குதிரை வீரர்கள் அதிவேகமாய்த் தூரத்தில் வருவது புலப்பட்டது. உடனே தலைவன் "வீரர்களே! இவர்கள் யாரோ தெரியவில்லை. நாம் இவர்களை வழியில் சந்திப்பது தகுதியன்று. குதிரைகளை மறைவில் ஓட்டி மேயவிட்டு, பாறை மறைவில் ஒளிந்துகொள்ளுங்கள். இவர்கள் போனபின் நாம் புறப்படலாம்" என்றான்.

மல்லீக்.— "ஐயா! நான் பாறை மறைவில் போக மாட்டேன். இங்கேயே இருப்பேன்!"

தலைவன் — "இருக்கக்கூடாது! போகத்தான் வேண்டும்! புறப்படும் உடனே!"

மல்லீக்.—"என்ன ஐயா ஒன்னோடே! பெரிய தொந்தரவாயிருக்கு! இந்த மரப்பொந்தில் ஒளிஞ்சுகிறேன் ஐயா. அவாள் இங்கே வந்தா என்ன பண்ணரான்னு பாக்க வேண்டாமா?"

தலைவன் "நீர் எப்படியோ போமய்யா! என்றைக்கும் உமது உபத்திரவந்தான்! தப்பான வழியைச் சரியான வழி யென்கின்றீர். எல்லாம் தலைமறைவாய் இருப்போம் என்றால் இங்கேயே இருப்பேன் என்கின்றீர். என்ன ஐயா செய்வது உம்முடன்! முரட்டுத்தனமே உம்மிடம் பிறந்தது போலும்" என்று சொல்லி மறைந்துவிட்டான்.

கவுஸ், குதிரைகளை ஒரு மறைவான இடத்திற்கு ஓட்டி மேயவிட்டுத் தானும் பாறைக்குப் பின்னால் மறைந்துவிட்டான்.

மரப்பொந்தில் உட்கார்ந்துகொண்ட மல்லீக், தலையை ஓணான்போல் வெளியே நீட்டி நீட்டிப் பார்த்துக்கொண்டு, பதுங்கியிருந்தான். அரை நாழிகைப் பொழுதில் குதிரை வீரர்கள் மரத்தடிக்கு வந்தனர்.

அந்த மரத்தடிக்கு வந்தவர் எவருக்குத்தான் அதைவிட்டுப் போக மனம் வரும். கூடாரம் அடித்தது போல் நாற்புறமும் கவர்ந்து நிற்கும் ஆலமரமும், அதனடியில் ஓடும் அருவியும், சுற்றிலும் தோன்றும் பசும் புற்றரையும், முன்னும் பின்னும் காண்கின்ற குறிஞ்சி நிலக் காட்சியும், அதி உன்னதமாய் இருபுறமும் ஓங்கி வளர்ந்த மலைகளும்—ஒருங்கே சந்தோஷத்தையும் மன அமைதியையும் பயங்கரத்தையும் விளைவித்தன.

வந்த குதிரை வீரர் நால்வர். மஹா பலசாலிகள்; வில்லும், வாளும், சூலமும் ஏந்திய கையினர்; மார்பில் யாளிப் பொறி தரித்தவர். அவருள் தலைவன் சுலோசனன். மற்ற மூவரும் சிப்பாய்கள். குதிரைகளோ போரில் பழகியவை. மலை நாடுகளில் செல்லத் தகுந்தவை. மரத்தடியில் வந்து நின்றதும் சுலோசனன் "சிப்பாய்களே, இன்று இரவு நாம் பீமபுரத்தில் தங்குவோம். அங்கிருந்து விடியற்காலம் புறப்பட்டு உதயபுரி செல்வோம். நாளை மாலை உதயபுரி எப்படியாகிலும் போய்த் தீரவேண்டியது. நமது தளகர்த்தர் ஜயசிங்கர் சொல்லியபடி ஒவ்வொரு நிமிஷமும் பிரதாபசிங்கருக்கு முக்கியமானது. இறங்குங்கள் குதிரைகளைவிட்டு. சற்று இவ்விடத்தில் இளைப்பாறியதும், உடனே குதிரை யேறிப் புறப்படுவோம். குதிரைகளுக்கு ஜலம் காட்டுங்கள்" என, எல்லோரும் இறங்கினர்.

சுலோசனன் "சிப்பாய்காள்! சூரியனும் அஸ்தமித்துவிட்டான். கால் கை சுத்திசெய்துகொண்டு இறைவனைத் தொழுவோம்" என்று தன் ஆடைகளைக் கழற்றிவைத்தான். அனைவரும் அவ்வாறே உடைகளை நீக்கிக் கை கால் சுத்திசெய்துகொண்டு, சாயங்காலம் முறைப்படி செய்யவேண்டிய கருமங்களைச் செய்து முடித்தனர்.

மரப்பொந்திலிருந்த மல்லீக் மஹமத் இவர்கள் பேசின வார்த்தைகளை யெல்லாம் கவனித்தான். ஆனால் அப்பொந்தில் செவ்வெறும்புகள் சொல்லி முடியாது. அவன் குப்பாயம் போட்டிருந்தபடியால் மேலே ஊர்வது முதலில் தெரியவில்லை. கொஞ்சநேரம் ஆனதும் உள்ளே நுழைந்து கடிக்கத் தொடங்கிவிட்டன. ஒவ்வொன்றும்தேனீ கொட்டுகிறமாதிரி கடிக்கின்றது. ஏழை மல்லீக் என்ன செய்வான்? பாவம்! கூக்குரலிட்டுக் கத்தலாம்போலிருக்கின்றது! இத்துடன் அவர் பேசுவதைக் கேட்க வேண்டுமென்ற ஆசை ஒருபுறம். கடிக்கும் இடத்தை யெல்லாம் தேய்த்துத் தேய்த்துக் கொன்றான் எறும்புகளை! ஒன்று இறக்கப் பத்து அதிகமாவதுபோல் தோன்றிற்று. ஏதடா இந்த ஆபத்தில் மாட்டிக்கொண்டோமே யென்று தன்னைத் தானே நொந்துகொண்டு வெளியே நடப்பதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தான்.

எல்லோரும் சற்று இளைப்பாறிய பின்னர்

கணக்கன் கணக்கு அறிவான்; தன் கணக்கைத் தான் அறியான்.

சுலோசனன் "இனி நாம் தாமதஞ் செய்ய வேண்டியதில்லை. இரவில் தூங்க நமக்குப் பீமபுரிதான் தக்கது. இறங்க அங்கே சத்திரமும் உண்டு. நாம் போகும் காரியமோ மிக முக்கியமானது.—(பொந்தில் மல்லீக் உஷாராய் காதைச் சற்று வெளியே நீட்டுகிறான்.)—நாம் போகும் காரியமோ அதிக முக்கியமானதுடன் அவசரமானது. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு வருஷமாகக் கழித்து வருகிறாராம் பிரதாபசிங்கர். நாம் சென்று ஜயசிங்கர் வருகிறார் சேனையுடன் என்று சொல்லிவிட்டால் போதும்! சீதையைக் கண்டதாக ஹனுமான் சொன்னபோது ஸ்ரீ ராமனுக்கு எவ்வளவு ஆனந்தமுண்டாயிற்றோ அவ்வளவு ஆனந்தப்படுவார். அத்துடன் நம்மிடமிருக்கும் கடிதத்தையும் அவரிடம் சேர்ப்பிக்கவேண்டியது. ஜோதிபுரியின் எல்லையைத்தாண்டி உதயபுரியின் எல்லைக்கே வந்துவிட்டோம். உதயபுரியில் சேர்ந்துவிட்டோமானால் நீங்கள் இப்போது பட்ட சிரமத்துக்குத் தக்க மரியாதை கிடைக்கும். ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறபடி துருக்கர் உதயபுரியை எதிர்த்தால்—(மரப்பொந்தில் மல்லீக் மீசையை முறுக்குகின்றான்)—எதிர்த்தால் நாம் சண்டைசெய்யச்சித்தமாயிருக்கின்றோம். இறப்பின் வீர சுவர்க்கம் நிச்சயமாயிருக்கின்றது. ஜயிப்பின் நமது இராஜ்யம் பலப்படுகின்றது—ஏறுங்கள் குதிரைமேல்! புறப்படலாம்" என மூவரும் குதிரை மேலேறினர். சுலோசனன் சட்டையை உதறிப் போட்டுக் கொள்ளும்போது 'சொட்' என்று என்னமோ கீழே விழுந்தது. குதிரைகள் போகிற சத்தத்தில் அது அவன் காதில் படவில்லை. தானும் ஏறி அவர்களைப் பின் தொடர்ந்தான்.

அவர்கள் பள்ளத்தில் தலைமறைவாய்ப் போனதும், எறும்புக்கடி பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படும் மல்லீக் 'தொப்' என்று கீழே குதித்தான். முதலில் அவன் கண்ணில் பட்டது ஒரு கடிதம். அதைக் கையில் எடுத்துக்கொண்டு இரண்டுபுறமும் திருப்பிப்பார்த்தான். முத்திரை வைத்திருந்தது. சாயங்கால வெளிச்சத்தில் பிரயாசத்துடன் பார்த்ததும் யாளியின் உருவம் அந்த முத்திரையில் காணப்பட்டது. பத்திரமாய் அதைக் கீழே வைத்து அதன்மேல் ஒரு கல்லையும் தூக்கிவைத்து விட்டு உட்கார்ந்தான் உடம்பைச் சொறிய; கை, கால், கண், காது, கன்னம், உதடு—ஒரு இடம் பாக்கியில்லை, எல்லா விடத்திலும் எறும்புக்கடி. உதடும் கண்ணிமையும் வீங்கிப் போயின. பித்துப் பிடித்தவன்போல் இரண்டு கையாலும் சொறிகின்றான் தேகத்தை!

கொஞ்சநேரத்தில் ஒவ்வொருவராய் வந்து சேர்ந்தனர் தலைவன், கவுஸ், முதலியவர்கள். சிப்பாய் சொறிவதைப் பார்த்து, சங்கதி தெரிந்ததும் எல்லாரும் ஒருங்கே சிரிக்கத் தொடங்கினர். என்றும் அதிகமாய் நகையாத கவுஸ் சாகிப்கூட இன்று சிரிக்கத் தொடங்கிவிட்டான். விழுந்து விழுந்து சிரிக்கின்றார்கள்; ஒருவன் மாற்றி யொருவனாய் மறுபடி ஆரம்பிக்கின்றான் சிரிக்க! மல்லீக் மஹமத் சாகிப்புக்குக் கோபம் பிறந்தது. "என்ன ஐயா நினைச்சுக்கிட்டே, உன்னை யெல்லாம் கடிச்சாத் தெரியும். சிரிக்கிறவன் தலையை உடைக்கிறேன். சண்டைக்கு வரட்டும் என்னோடே" என்று கோபித்தான். அதற்கு அவர்கள் மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தனர்.

தலைவன்.—"ஐயா, மல்லீக், உம்மை முன்னமேயே அங்கே போக வேண்டாம் என்றேனே கேட்டீரோ? சொன்னபடி கேட்காதவருக்கு இந்தக் கதிதான்; பார்த்துக்கொள்ளும்; எல்லாரையும்போல்—"

மல்லீக்.—"எல்லாரையும்போல் போயிருந்தா சங்கதி சொல்லறது ஆரு! எத்தனை சங்கதி தெரியுமா? யாரோ தளகர்த்தனும் சேனை கொண்டுகிட்டு வரானும், உதயபூருக்கு; தெரியுதாப்பா அவங்கோ சொல்லிக்கிட்டது? வருவாங்கோ வருவாங்கோ என்று தினம்தினம் பாத்து இருக்கானும் பிரதாபசிங்க ராஜா. இன்னும் என்ன வேணும்? இனிச் சண்டைதான் நமக்கு—"

தலைவன் "என்ன ஐயா மல்லீக்! விவரமாய்ச் சொல்லும். என்ன சங்கதி; என்ன சேனை; எங்கிருந்து வருகிறது? யாருடையது? என்ன விசேஷம்? விவரமாய்ச் சொல்லும் ஐயா" என்று கேட்கும்போது சிரிப்பெல்லாம் பறந்துவிட்டது. எல்லோரும் பக்கத்தில் நெருங்கினர். மல்லீக் மூன்றுமுறை சொன்னபின் அவர்களுக்கு விஷயம் சற்றே அர்த்தமாகத் தொடங்கிற்று.

கணக்கு அறிந்த பிள்ளை வீட்டில் இருந்தால் வழக்கு அறாது.

மல்லீக் "சண்டை, ஐயா சண்டை"—என்று பாடத் தொடங்கிவிட்டான்.

தலைவன்.—"இன்னும் என்ன ஐயா விசேஷம், சொல்லும்; உமது பாட்டு யாருக்கு வேண்டி யிருக்கிறது?"

மல்லீக்.—"கவுஸ்! அந்தக் கல்லைத் தள்ளு. கீழே தள்ளு; அடியில் பார், என்ன இருக்கிற தென்று!"

தலைவன் "என்ன, ஐயா, என்ன? காகிதம் போலிருக்கின்றதே, என்ன சமாசாரம்" என்று தானே ஓடிக் கல்லைத் தள்ளிக் காகிதத்தைக் கையில் எடுத்தான். முத்திரையில் யாளிக்கொடி நன்றாய்த்தெரிகின்றது. உடனே அவனுக்கு ஜோதிபுரியிலிருந்துதான் சேவகர்கள் வந்திருக்கவேண்டு மென்பதும், காகிதம் தப்பி விழுந்திருக்க வேண்டுமென்பதும், அவ்வரசன் பிரதாபசிங்கனுக்கு உதவி அனுப்பு விக்கிறான் என்பதும், அவர்கள் துருக்கர்களுடன் சண்டை போடுவது நிச்சயம் என்றும் விளங்கிற்று.

இனி என்ன செய்வ தென்பதைப்பற்றித் தீர்மானம் செய்தனர். மல்லீக் உடனேபுறப்பட்டுப்போய் அந்த நால்வரையும் கொல்ல வேண்டியதே தவிர வேறு வேலை இல்லை என்றான். தலைவன் "ஐயன்மீர்! அப்படிச்சொல்வது தப்பு. நாம் உதயபுரிக்குத் தூதாக வந்தோமே யொழிய சண்டைக்கு வரவில்லை. நாம் அவரைக் கொல்லச் சென்றால் அவர்களின் சேனை உடனேயே பின்வருவதானால் நம்மைச் சின்னாபின்னப் படுத்தும். நமக்கோ சேனை வரும் சமயம் முதலிய விவரம் ஒன்றும் தெரியாது. இப்போது அவர்கள் பாதி வழிக்கு மேலேயே போய் இருப்பார்கள். இன்னும் ஒரு நாழிகைக்குள் பீமபுரியை அடைவார்கள். அங்குப் போனவுடன் கடிதத்தைத் தேடிக் கிடைக்காவிடின் இங்கு வந்து அவர்கள் தேடுவது நிச்சயம். இனி நாம் இங்கு தங்குவது தப்பிதம். உடனே புறப்படவேண்டும். சண்டை நடக்குமென்றும், உதவி வருகிறதென்றும் சங்கதி தெரிந்தபின்னர் இக்கடிதமும் கிடைத்து இருக்க, நாம் இனி உதயபுரி போதல் தப்பிதத்துக்கெல்லாம் தப்பிதம். இதை உடனே நமது ஒற்றனிடம்கொடுத்துச் சுல்தான் ஆமத்பாஷாவின் சமுகத்துக்கு அனுப்புவேன். அவர் பார்த்து தக்க ஏற்பாடு செய்யட்டும். நாம் உதயபுரி போகவில்லை என்பதையும், நாம் தங்குமிடத்தையும், அவர் உத்தரவை எதிர்பார்ப்பதையும், ஒரு கடிதம் எழுதித்தெரியப்படுத்துவோம். கவுஸ் சாகிப்! குதிரைகளை உடனே ஒன்று சேரும்; ஐயா ஒருக்ஷணமும் தாமதம் செய்யாமல் புறப்பட வேண்டும்!" என்றான்.

மல்லீக்.—"ஐயா! ஐயா! ஒரு கை பார்க்கலாம், ஐயா! நாம் ஆறுபேர்—அவர் நாலு பேர். இப்போ என்ன பயம். மேலும் ராத்திரி; ஐயா புறப்பட்டுப் போகலாம்."

தலைவன்.—"உனக்குச் சண்டைப் பைத்தியம் பிடித்திருக்கிறது. மண்டையைப் பிளந்து ஜலத்தை ஊற்ற வேண்டியதுதான். புறப்படுங்கள் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு. சீக்கிரம்! சீக்கிரம்!"

கவுஸ் குதிரைகளை யழைத்துக் கொண்டுவர ஒவ்வொரு வீரனும் தனது குதிரையைத் தயார் செய்துகொண்டு சவாரி செய்தான். இந்த அவசரத்தில் தலைவன் தனது மூட்டை ஒன்றை ஆலமரத்தடியில் வைத்து மறந்துவிட்டுக் குதிரையேறிப் போய்விட்டான்.

ஆறும் அத்தியாயம்

பிரதாபசிங்கரின் மனக் கவலை

அனந்தப்பட்டர் உதயபுரியிலிருந்து போனதுமுதல் பிரதாபசிங்கருக்கு இருந்த வேலை அளவிடமுடியாது. மாளவ தேசத்தின் எல்லைகளில் உள்ள கோட்டைகளையும் உதயபுரியின் மதில், அகழ் இவற்றையும் முதலில் மராமத்து செய்து கோட்டைக்குத் தக்க சேனைகளையும், உணவுப் பொருள்களையும் சேகரித்து வைக்க இராணுவ உத்தியோகஸ்தர்களைத்தெரிந்தெடுத்தார். அவர்கள் தத்தமக்கிட்ட வேலையைச் சரிவரச் செய்வதோடு வாரம் மூன்று முறை வேலையின் அபிவிருத்தியைக் குறித்து அரசனுக்குச் சமாசாரம் தெரியப்படுத்தவேண்டும். இத்தகைய உத்தியோகஸ்தர் செய்யும் வேலையை மேல் பார்வை செய்துவர ஒரு அரண்மனை உத்தியோகஸ்தரை நியமித்தார். பக்கத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று நேராய்க் குடிகளிடம் வார்த்தையாடி அவர்களுடைய ஒத்தாசையினால் களஞ்சியம் களஞ்சியமாய்ச் சோளம், கேழ்வரகு, நெல், கோதுமை முதலிய பண்டங்களைச் சேகரித்தார்.

கணக்கன் வீட்டுக் கலியாணம் விளக்கெண்ணெய்க்குக் கேடு.

தினமும் காலையில் எழுந்து ஸ்நானம், பூஜைமுடித்துச் சூரிய உதயத்திற்கே மந்திரியுடனாவதுசேனாதிபர் மங்களநாயகனுடனாவது வெளியே புறப்படுவார். சிலநாள் கிராமத்தில் சுற்றுவார். சிலநாள் சேனைகள் படைபடையாய்த் தயார் ஆவதைப் பார்வையிடுவார். சிலநாள் குதிரைச்சாலைகளையும், யானைச்சாலைகளையும் சோதனை செய்வார். சிலநாள் வீரர்கள் சாஸ்திர முறைப்படி அம்புகளைப் பிரயோகம் செய்யக் கற்றுக்கொள்ளும் இடங்களுக்குச் சென்று அவர்களைப் பரீக்ஷை செய்வார். சிலநாள் தமது சேனையையே இரண்டாய்ப் பிரித்து மங்கள நாயகன் ஒரு புறத்தையும் தான் ஒரு புறத்தையும் நடத்தி இருதிறத்தாரும் பொய்ச் சண்டை போடும்படி செய்து சேனையின் வலிமையைச் சீர் தூக்கிப் பார்ப்பார். இவ்வகையாய்க் காலைப் பொழுதெல்லாம் கழிந்துவிடும்.

மாலையில் போஜனம் முடிந்ததும் ஒற்றர்களை விசாரித்துப் பிரஜைகளின் மனப்போக்கைக் கவனிப்பார். பிறகு எல்லைப்புறமிருந்தும் கோட்டைகளிலிருந்தும் சமாசாரம் கொண்டு வரும் தூதர்கள் தத்தம் ஓலைகளை அரசனிடம் கொடுப்பார்கள். ஒவ்வொருவருக்கும் தக்க பதில் உரைத்து அனுப்பிவிட்டு முக்கியமான இராஜாங்க விஷயங்களையும், நீதி செலுத்த வேண்டிய வாதங்களையும் மந்திரி பிரதானிகளுடன் கலந்து விசாரிப்பார். விருத்தாப்பிய தசையை அடைந்த பிரதாபசிங்கருக்கு இவ்வளவு வேலைகளையும் சலிக்காமல் செய்ய பலம் எப்படி உண்டாயிற்று என்று எல்லோரும் ஆச்சரியமடைந்தனர்.

அவருடைய தலை முன்னினும் அதிகமாய் நரைத்துவிட்டது; மீசையும் அப்படியே. நெற்றியிலும்,கன்னங்களிலும், வரைகள் படிப்படியாய் அதிகமாயின; தேகம் மெலிந்தது. ஆனால் உழைப்பும் சுறுசுறுப்பும், இலாகவமும் முறைமுறை அதிகமாயிற்றென்னலாம். இளம் வீரர்களும் அவருடன் குதிரை சவாரி செய்து வரமுடியாது. மலைப் பாங்கான தேசத்தில் குதிரை சலித்து நடக்க முடியாமல் போகும் வரையில், தான் ஒரு சிரமத்தையும் பாராட்டாமல் சவாரி செய்வார்.

இத்துணை சுறுசுறுப்பாயும், ஒழுங்காயும், முறை தவறாமலும், காலமறிந்து காரியம் செய்வதைப் பார்த்த ஒவ்வொருவரும் இயந்திரம்போல் வேலை செய்யத் தொடங்கினர். இராஜன் எத்தன்மையனோ அவ்விதமே யல்லவா பிரஜைகளும்! பிரதாபசிங்கர் முகத்தைப் பார்த்தவுடனேயே எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும், சிப்பாய்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் தங்களை யறியாமல் ஒருவிதமான பொறுப்பும், உற்சாகமும் இராஜ பக்தியும் உண்டாகி வரும்.

வெளியில் பலரும் காண இவ்விதம் தளர்ச்சியைக் காட்டாமல் உழைப்பே முக்கியமென்று மேற்கொண்டு அலைந்துவந்தார். ஆனாலும், அவரது மனக்கவலை சொல்லிமுடியாது. சாயங்கால வேளைகளில் சாவகாசம் கிடைத்தால் நந்தவனத்திலாவது பூந்தோப்பிலாவது உலாவப்போவார். சில வேளைகளில் காந்திமதி இராணி அவ்விடம் வருவதுண்டு. விசேஷமாய் அம்மாது சிரோன்மணி இப்போது வெளிப் புறப்படுவதில்லை. உலாவும்போது ஆலோசனையில் ஆழ்ந்து ஓர் இடத்தில் நின்று விட்டால் நான்கு நாழிகை ஐந்து நாழிகை இடம்விட்டு அசையமாட்டார். ஒவ்வொரு சமயங்களில் யாராவது வந்து தூக்கத்தில் இருப்பவனை எழுப்புவதுபோல் அவரை எழுப்ப வேண்டியிருக்கும். அவர் மனக்கவலையின் காரணம் நமக்குத் தெரிந்தவைகளே. துணை வலிமை கிடைக்குமோ என்ற சந்தேகம் முதலில். சுகுணபுரத்தரசன் வீரபத்திரன் சீக்கிரத்திலேயே பதில் அனுப்பிவிட்டான். துருக்கர் படை உதயபுரியை எதிர்ப்பதாயிருந்தால் 1000 காலாட்படைகளையும் 500 குதிரை வீரர்களையும் துணைக்கு அனுப்புவதாக வாக்குக்கொடுத்தான். ஆனால் அச்சேனைமட்டும் போதுமானதா? ஜயபாலனிடமிருந்து பதில் வரவில்லை. தினமும் சாயங்காலம் விசாரிப்பார். தினமும் சமாசாரம் கிடைப்பதில்லை. இதுகாரியமாகவே ஏமாங்கதனும் சித்திரகிரீவனும் ஜோதிபுரிக்குப் போனது. காரியம் முக்கியமானதாய், சீக்கிரம் முடியவேண்டியிருக்கும்போது, சற்றுத் தாமதமான போதிலும் மனிதன் மனதுக்கு யுகம்போல் தோன்றுகின்றது! காலையில் ஒரு முறை, மாலையில் ஒரு முறை, சாயங்காலம் ஒரு முறை—இவ்வாறாகஒருநாள் ஆறு, ஏழு முறை ஒவ்வொரு காரியத்தைப்பற்றியும், நினைத்தார். ஆறு,ஏழு நாள்

கழிந்து விட்டதாகவே மனந் தளருகின்றது. ஜயபாலனிடமிருந்துபதில்வர இன்னும் காலமிருக்கலாம். மனத்திற்குமட்டும் அவ்விதம் தோற்றுவதில்லை. இவ்விஷயத்தில் பிரதாபசிங்கருடைய ஆவலைப் பார்த்து அவரைத் தடைசெய்ய இஷ்டமில்லாமல் ஏமாங்கதனையும் சித்திரக்கிரீவனையும் அனுப்பினான் சுமதி!

ஆயினும் என்ன ஆயிற்று! மறுபடியும் திரும்பி வந்தனர் ஏமாங்கத சித்திரக்கிரீவா! என்ன சமாசாரம்! “ஒன்றுமில்லை. சீக்கிரம் தக்க ஏற்பாடு செய்து பதில் அனுப்புகிறேன் என்றான்” ஜயபாலன். “என்னஏற்பாடுசெய்யப் போகிறான்! எப்பொழுது! எப்பொழுது! ஆ! ஹா! எப்பொழுது! என் அவசரம் தெரிகின்றதா அவனுக்கு? சிறுபிள்ளை. ஒருக்கால் ‘உதயபுரி அரசன் மகளை நான் விவாகம் செய்துகொள்ள உத்தேசமே; ஆக்ஷேபணையில்லை. அவளை ஒரு மகமதிய பாக்ஷா மணம் செய்துகொள்ள ஆசைப்படும்போது நான் குறுக்கே சென்று, அது காரணமாய் உதயபுரியரசனைக் காப்பாற்ற என் சேனையை அனுப்புவானேன்? ஒருக்கால் உதயபுரி யரசன் தோற்று விட்டால் அடுத்தபடி யாருடைய தலை உடையும்? ஜோதிபுரி யரசனுடைய தலையே யல்லவா?’ என்று எண்ணி, துணை யனுப்பச் சரிப்படாது என்று சொல்ல இஷ்டமில்லாதவனாய் என்னை ஏமாற்ற இம்மாதிரி நய வார்த்தைகளைச் சொல்லி யனுப்பி விட்டானோ!—சீச்சீ! மனமே ஏன் இப்படித் தளர்கின்றாய்! ஏன் மனிதர்களின் நேர்மையைக் குறித்துச் சந்தேகப்படுகிறாய்! யோக்கியனை அயோக்கியன் என்று எண்ணுவதும், நல்லவனைத் தீயவன் என்று எண்ணுவதும், பாவமே யல்லவா! ஜயபாலன் உதவி செய்வான். ஆக்ஷேபணையில்லை. ஆனால், ஏன் இவ்வளவு தாமதம்? ஜயபாலன் இஷ்டப்பட்டு என்ன பயன்? அவன் மந்திரி சிதானந்தருடைய உத்தேசம் என்னமோ?”—என்றிவ்வாறு தினமும் கவலைப்படுவார். ஏனெனில் ஜயபாலன் அனுப்பக்கூடிய சேனையின் அளவு தெரிந்தால் தான் யுத்தத்துக்குத் தக்க ஏற்பாடுகள் செய்யக்கூடுமாய் இருந்தது.

இரண்டொரு நாட்கள் சென்றன. இன்னமும் பதில் கிடையாது. என்ன செய்வான் பிரதாபசிங்க ராஜன்? சுமதியை வரவழைத்தான். பிரதானிகளை வரவழைத்தான். ஆலோசனை சபையில் அனைவரும் கூடியவுடன் “ஐயன்மீர், இனி ஜயபாலனை நம்பி என்ன பயன்? அவனுடைய சேனையை எதிர் பாராமல் நாம் யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்ய முடியுமாகில் செய்யுங்கள். ஏனெனில் அவன் சொல்லியனுப்பிய கால எல்லையும் தீர்ந்தது. ‘கிட்டாதாயின் வெட்டென மற’ வென்று பெரியோர் சொன்னதை மறக்கக் கூடாது. ஜயபாலனே இதற்குக் காரணமாய் இராமல் இருத்தலுங்கூடும்! இருப்பினும் என்ன? நமக்கென்னவோ உதவி வேண்டும்; அதுவும் ஜயபாலனிடமிருந்து வரவேண்டும். ஏதோ காரணத்தால் கிடைக்கவில்லை என்றால் அதைப்பற்றிக் கவலையை ஒழியுங்கள்” என்றான் அரசன். தான்மட்டும் கவலையை ஒழிக்கவில்லை; ஒழிக்க இஷ்டமும் படவில்லை.

சுமதி “அரசே இதுவரையில் நான் தங்களுடன் இவ்விஷயத்தைப்பற்றி அதிகமாய்ப் பேசவில்லை. இன்று இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன். ஜயபாலனுக்குத் தன் சேனையை உதயபுரிக்கு அனுப்ப இஷ்டமில்லாமல் இருந்தால் உடனே அப்படியென்று பதில் உரைத்திருப்பான். தனது மந்திரிகளுக்கு இஷ்டம் இல்லையானால் நமக்கு நம்பிக்கைப் படும்படி வாக்குக் கொடுக்க மாட்டான். இராஜ்யத்தில் எத்தனையோ யோசனைகளால் காரியம் தவக்கப்படுகின்றன. அதையெல்லாம் தாங்கள் நன்றாய் ஆலோசனை பண்ணக்கடவீர். ஜயபாலன் உதவி அனுப்புவதாகச் சொன்னவன் அனுப்பியே தீருவான். நீர் சற்றும் ஆலோசனை செய்ய வேண்டியதில்லை. காலம் வேறுபட்டாலும் இராஜபுத்திரனது மனம் வேறுபடுமோ? சுத்தவீரனான ஜயபாலன், இருக்கும் இடத்தில் துரோக சிந்தை குடியிராது. செய்கிறேன் என்று சொல்லி மறுப்பானோ வீராதி வீரன். ‘காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய் மொழிதல் ஈதல் மறுத்தல் இவைகண்டாய் போதில் சினையாமை வைகும் திருநாட்’—பஞ்சமஹா பாதங்கள் என்றபடி பொய்யன் வாசனையே ஜோதிபுரி அரசனிடத்தில் கிடையாது. இராஜ காரியத்தில் தாமதத்தைக் கணக்கில் வைக்கக் கூடாது. ஜயபாலன் அனுப்புகிற உதவி இதுவரையில் வரவில்லையே என்றும், எவ்வளவு

என்று தெரியவில்லை யென்றும், பயப்படவேண்டியதே யல்லாமல், வராது என்று எண்ணி விசனிக்கக் காரணம் இல்லை'' என்று தேற்றினான்.

சுமதி பேசி முடிந்ததும் அரசனுக்கு ஒருவித திருப்தி. "சுமதி! மறுபடியும் ஒருமுறை ஜயபாலன் கடிதத்தைப் படியும் பார்ப்போம்'' என்றான். மறுபடி வாசிக்கவே அரசன் அதைக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, சிறிது நேரம் ஆலோசித்து, "ஐயன்மீர்! நான் ஜயபாலனைக் குறித்து வீணே தப்பாய் அபிப்பிராயப் பட்டேன். அதுவும் எனது அவசரத்தால் தான். இந்த விருத்தாப்பிய தசை மூளமூள நிதானமும் குறைகின்றதுபோலும்—மங்கள நாயகரே! சுமதியர் உறுதி சொல்லும்போது நமக்கு என்ன குறைவு? சேனைகளை எவ்விதம் வகுப்பது என்பதையும், எத்தன்மையோரை எவ்விடம் நிறுத்துவது யுக்தமென்பதையும் யோசித்து ஒருவிதமாய்த் தீர்மானம் செய்துகொண்டு வாரும். நானும் சுமதியும் உம்முடன் சேர்ந்து அந்த ஏற்பாட்டை ஸ்திரப்படுத்துவோம். இனிச்சபைகலைவோம்'' என்று சபையோரை அனுப்பிவிட்டுத்-தானாய் "ஈசா! இந்த மூப்பின் பாரத்தைப் பொறுக்க என்னால் ஆகவில்லை. இராஜ பாரத்தினும் பளுவாய் விட்டதே. என் இளம் பிராயத்தில் எதிரிகளுக்குப்பயந்தவனா நான்! என்னருமைக் காந்திமதியை மணக்குங்கால் எவ்விதம் ஊக்கத்துடன் முன்சென்றேனோ அவ்விதமே யல்லவா எதிரியின் முன்னும் யுத்தத்துக்குச் சென்றேன். அவ்விதமான மனவலிமை யுடைய பிரதாபசிங்கன் இப்பொழுது துணை வலியை நாடி ஏங்குவதேன்! எனது மனக்கவலையோ சொல்லி முடியாது. என்னருமைக் காந்திமதியையும், என் கண்ணினும் அருமையான லலிதையையும் கண்டாலே மனம் பதைக்கின்றது. ஒவ்வொரு காரியத்திலும் முன்செல்ல மனம் கூசுகின்றது. ஈசா! என்னைச் சரியான வழியில் நீயே நடத்தல்வேண்டும்! மனிதனால் ஆவதென்ன! இராஜராஜேசுவரீ! தாயே!'' என்று கைகூப்பி ஐயனையும் அம்மையையும் மனதாரத் தியானித்துச் சோலையுள் உலாவப் புகுந்தான்.

இத்தனை மனக்கவலைக்கும் மூக்கியகாரணம் என்னவெனில் பிரதாபசிங்கனுக்கு ஆமத் பாக்ஷா தன்மேல் படையெடுத்து வருவது நிச்சயமென்றுமனதிற்பட்டதுதான். எவ்வளவு சாதுர்யமாய்ச் சமாசாரம் சொல்லி யனுப்பியிருந்த போதிலும், தன் மந்திரிகள் எத்தனை தூரம் தைரியம் சொன்னபோதிலும் ஆமத் பாக்ஷா தன் பேச்சை நம்பிச்சும்மாவிருப்பான் என்று பிரதாபசிங்கன் எண்ணவேயில்லை. "அந்த ஆமத் சுல்தான் திடீரென்று வந்து சேருவான். நிச்சயமாய் வரவே போகிறான்—'' என்று அவன் மனதில் எண்ணம் உதித்துக்கொண்டே யிருந்தது. தன் வார்த்தையை நம்பிச்சுல்தான் ஆமத் ஒருமாத காலம் தாமதித்துப் பிறகு மறுபடியும் தூதனுப்பிச் சமாசாரம் தெரிந்துகொள்வானென்று முதலிலிருந்துபிரதாபசிங்கருக்கு நம்பிக்கையேகிடையாது. ஏதாவது ஒருநாட்காலையில் ஒருதூதன் வந்து "அதோ பாருங்கள், துருக்கப்படைவருகிறதனால் எழும்புகின்ற தூசி ஆகாயம் அளாவிச் செல்லுகின்றது. இனிச் சேனையைக் கொண்டு எதிர்க்க வேண்டியதுதான்'' என்று சமாசாரம் கொண்டுவருவான் என்றே நிச்சயமாய் இருந்தார். ஆனால் மந்திரி சுமதியும் மற்றப் பிரதானிகளும் சொல்லும் தைரியத்தினால் சற்றே தேறியிருந்தார். அதனால்தான் ஜயபாலனுடைய உதவியை அத்தனை துரிதமாய் எதிர்பார்த்தது.

யோசனைமேல் யோசனையாய் முன்வந்து நிற்க, ஒன்றைப் பற்றி மற்றொன்றைக் கைவிட்டு, போகும் திசை, வழி, இவற்றையும் கவனியாது செல்லுகின்றார், இளந்தென்றலையும் பூமணத்தையும் அறியாமல் நுகர்ந்துகொண்டே நம்மரசன்! எத்தனை நாழிகையாய் உலாவுகின்றார் என்பது அவருக்குத் தெரியவில்லை. கடைசியில் ஒரு சேவகன் வந்து முன்னின்று "ஐயா ஜயபால ராஜனிடமிருந்து நால்வர் வீரர்கள் வந்து அரண்மனை முன் நிற்கின்றனர். தங்களை உடனேயே அவசரமாய்ப் பார்க்க வேண்டுமாம். வர உத்தரவா?'' என்று கேட்டான். அரசன் "ஆம் ஆம்! ஆக்ஷேபனையென்ன? நான் அவர்களைக் காணச் சித்தமாய் இருக்கின்றேன். உடனே வசந்த மண்டபத்துக்கு வரச்சொல்'' என்று வசந்த மண்டபம் நோக்கிச் சென்றார். செல்லும்பொழுதே "இன்று மறுபடி ஜயபாலன் தூதர்களை அனுப்பியிருக்கின்றான் போலிருக்கின்றதே!

என்ன சமாசாரமோ? மனமே! பதராதே! எல்லாம் தெரியவரும் ஒருநாழிகைப் பொழுதில். பொழுதும் அஸ்தமித்து விட்டதே. காந்திமதியும் என்னைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியனுப்பினாளே! என்ன விசேஷமோ போய்க் கேட்கவேண்டும்'' என எண்ணமிட்டுக்கொண் டிருந்தான்.

ஏழாம் அத்தியாயம்

ஜயபாலன் சேவகர்களைக் கண்டது

வஸந்தமண்டபத்தின் முன்னே நான்கு வீரர்கள் நிற்கின்றனர். ஒருவன் குதிரைமேல் உட்கார்ந்திருக்கிறான். அவன்தான் சுலோசனன். மற்ற மூவரும் அவன் பின்னால் கீழே நிற்கின்றனர். பாதையின் இருபுறமும் அரண்மனைச் சேவகர்களும் அரண்மனை ஜனங்களும் கூடுகின்றனர். குதிரைமேல் நிற்கும் சுலோசனன் இப்புறம் அப்புறம் அசையவில்லை. அவனது குதிரையும் அப்படியே நின்றது. வழி நடந்த இளைப்பால் குதிரையின் மூக்கு விரிந்தும்தணிந்தும் தோன்றாவிட்டால் இக்குதிரையும் ஆளும் சிலையால் செய்யப்பெற்றதென்றே சொல்லிவிடலாம். இக்காட்சியைப் பார்த்து சந்தோஷப்படாதவர்களே கிடையாது. சில நிமிஷங்களுள் அரசன் அவ்வழியே வர, வழியில் நிற்கும் ஜனங்கள் விலகி நின்றனர். அரசன் வரவை அறிந்த சுலோசனன் கொடியில் குதிரைவிட் டிறங்கி தலைவணங்கி மறுபடி நிமிர்ந்து நின்றான். அரசன் அதை அங்கீகாரம் செய்துகொண்டு புன்சிரிப்புடன் "நீயோ ஜயபால ராஜாவிடமிருந்து வந்த தூதன்?'' என, சுலோசனன் மறுபடி வணங்கி "ஆம்'' என்றான். "ஆனால் உள்ளே செல்வோம் வாருங்கள். சாவகாசமாய் உட்கார்ந்து கொண்டு விசாரிப்போம்'' என்றான் அரசன்.

உள்ளே அரசன் முன் செல்ல, சுலோசனனும் மற்ற சேவகர்களும், சில அரண்மனை ஜனங்களும் உள்ளே நுழைந்தனர். அரசன் ஆசனத்தில் அமர்ந்ததும் "உனது பெயர் என்ன? அப்பா'' என்றார்.

சுலோசனன் "அடியேன் பெயர் சுலோசனன்.''

அரசன் "அப்பா, சுலோசனா! எனது மருமகன் ஜயபாலனும், எனது தமக்கையும் சுகமாயிருக்கிறார்களா?''

சுலோசனன் "அனைவரும் சௌக்கியமே. மஹாராஜ் தங்களுக்குத் தமது நமஸ்காரங்களைச் சொல்லும்படி உத்தரவு செய்தார்.''

அரசன் "எனது அருமை ஜயபாலன் தெய்வங்களின் அருளால் நீடூழிகாலம் இராஜ்ய பாரம் செய்யட்டும்—இன்னும் என்னப்பா சேதி சொல்லி யனுப்பினான் ஜயபாலன்?''

சுலோசனன் "சுவாமீ, எனது அரசன் சேனையினின்று 1,000 குதிரைவீரர் தமது தேசத்தைக்காக்க வருகின்றனர். அவர்களை நடத்துகிறவர் பிரசித்திபெற்ற கவுரவம் பொருந்திய வீரசிரோமணியாகிய ஜயசிங்கர். அவர்கள் புறப்பட்டு சீக்கிரமே உதயபுரி வந்து சேருவார்கள். மற்றபடி விவரங்கள்—.''

அரசன் "சொல், அப்பா, சொல் அந்த விவரங்கள்தான் எனக்குத் தெரியவேண்டும். சொல் விரைவாய்.—''

சுலோசனன் தலைகுனிந்து நின்றான். ஒன்றும் பேசவில்லை. அரசனுக்கும் ஒன்றும் தோன்றவில்லை. "சுலோசனா! என்ன சமாசாரம். சுத்த வீரனான நீ, தலைகுனிந்து நிற்பானேன்.'' "ஆம் சுவாமீ ஆம்! பெரிய தப்பிதம் செய்துவிட்டேன். என்னைத் துண்டம் துண்டமாய் வெட்டிவிடுங்கள். இத்தப்பிதம் செய்தபின், நான் ஜயசிங்க வீரரையாவது ஜயபால ராஜரையாவது கண்ணெடுத்தும் பார்ப்பேனா!!''—என்று விம்மி விம்மி யழத் தொடங்கினான்.

அரசன் இது என்ன விந்தையாய் இருக்கின்றதென்று தன் மனம் பதைபதைக்க, சற்று அதிருப்தியுடன் "என்னப்பனே, சமாசாரம் சொல், விரைவாய்.—''

"சுவாமீ! சேனை வருகிறதென்று சொல்ல முடிந்ததே தவிர என்று புறப்படுகின்றதென்பதும், சேனை எவ்வழியே வருகின்றதென்பதும் எவ்வூர்களில் தாங்கள் உணவுப் பொருள்களை சேகரித்து வைக்கவேண்டுமென்பதும் என்னிடம் சொல்லவில்லை. எல்லாம் இரகசியம் என்று ஒருவருக்கும் தெரியக்கூடாதிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு கடிதம் எழுதி அதில் எல்லா விவரமும் எழுதியனுப்பினார் போல் தோன்றுகின்றது. அக்கடிதம் எங்கேயோ—''

அரசன் "எங்கேயோ போட்டுவிட்டாயா? அட ஈசா! கைக்கு எட்டுவது வாய்க்கு எட்டுவ

தில்லையே நமது அதிர்ஷ்டம்! எங்கே போட்டுவிட்டாய்? அப்பா, இப்படியும் அஜாக்கிரதையாய் இருக்கலாமா?"

சுலோசனன் "அதற்காகவே என்னை சிரச்சேதம் செய்யுங்கள். அவ்வளவுதான் இனி யான் இருந்தும் பயனில்லை. அஜாக்கிரதையாய் இருந்து எஜமானத் துரோகியாய் விட்டேன். இனி இராஜ தண்டனைக்குத் தயாராயிருக்கிறேன்" என்று இரண்டு முழங்கால்களையும் மண்டியிட்டு நிலத்தின்மேல் கவிழ்ந்தான். அரசனுக்குக் கோபம் ஒருபுறம்; உயிரைத் துரும்பாக எண்ணி, அஜாக்கிரதையாய் இருந்ததற்காக பரிகொடுக்கத் தயாராய் இருக்கும் சேவகனைப் பார்த்து பரிதாபம் ஒருபுறம்; சங்கதி சரியாய்த் தெரியவில்லையே என்ற ஏக்கம் ஒருபுறம்; இத்தகைய உணர்ச்சிகள் ஒவ்வொன்றும் மனத்தை வதைக்க ஒன்றும் பேசாமல் சும்மாவிருந்தான் சிறிது நேரம்.

சிறிதுநேரம் பொறுத்து அரசன் "சுலோசனா! உன்னைத் தண்டிப்பது இருக்கட்டும். நடந்த விஷயங்களை விவரமாய்ச் சொல்வாய், அப்பா. சங்கதி தெரியப்படுத்தாமல் தண்டனையைக் கோரினால் எப்படி? எனக்கும் சமாசாரம் கிடையா விட்டால், மேல் நடக்கும் காரியங்களைச் செவ்வையாய் ஏற்பாடு செய்ய முடியாது. முதலிலிருந்து நடந்தவற்றை ஒன்று விடாமல் சொல்லப்பா" என்றான்.

சுலோசனன் "ஐயா, சொல்லுகிறேன். இன்றைக்கு எட்டாம் நாள் என்னிடம் கடிதத்தைக் கொடுத்து, ஜயசிங்கர் சுருக்கமாய் நான் மேற்சொல்லிய சமாசாரத்தையும் சொல்லியனுப்பினார். உதயபுரிக்கு வந்தவுடன் ஒரு தாமதமும் செய்யாமல் உமது கையிலேயே கடிதத்தை கொடுக்க வேண்டுமென்று உத்தரவு செய்தார். இதோ நிற்கும் இவ்வீரர்கள் பின்சூழ நான் புறப்பட்டேன். நேற்று சாயுங்காலம் வரையில் வழியில் யாதொரு தொந்தரவும் ஏற்படவில்லை. இதோ, இச்சட்டையின் உள்ளுறையில் கடிதத்தைப் போட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் நான் கடைசியாக அக்கடிதத்தைப் பார்த்தது. அவ்வந்திப் பொழுதில் நாங்கள் வீமபுரிக்கு பத்து மைல் தூரத்தில் வடக்கேயிருக்கும் மலைக்கணவாய்க்கு வந்தோம்; வந்தவிடத்தில் மாலைக்கடனை முடிக்கும்படி சட்டைகளைக் கழற்றிக் கீழே வைத்தேன். அப்பொழுதுகூட கடிதத்தைக் கவனித்தேன். கடவுளைத் தொழுது, நீர் அருந்தி, இளைப்பாறிய பின்னர், அவசரமாய் ஆடைகளை அணிந்து புறப்பட்டு வந்து விட்டோம். இரவில் வீமபுரிக்கு வந்து சத்திரத்தில் இறங்கியபின்புதான் கடிதம் பையில் இல்லையென்பது தெரிந்தது. உடனே வேறு குதிரைகள் வாடகைக்கு வாங்கிக்கொண்டு மறுபடி கால்வாய்க்குப் போனோம். போகும் வழியில் எங்களுடன் கூட்டிக்கொண்டு வந்திருக்கும் இவ்விடையனைக் கண்டோம். அவனை விசாரித்தால் எல்லா விவரமும் சொல்லுவான்" என்றான்

அரண்மனைச் சேவகர்கள் இடையனை முன்கொண்டுவந்துநிறுத்தினர். கைகால்கள் கிடுகிடுவென்று நடுங்கத் திருதிருவென்று விழித்துக்கொண்டு நிற்கும் இடையனை அரசன் பார்த்து, "பிள்ளாய்! நீ பயப்படாதே நடந்ததைச்சொல் கேட்போம்" என்றான்.

இடையன் விழுந்து நமஸ்கரித்து "சாமி! சாமி! பனைப்பொழுதுங்கோ; சாமி, அப்போ ஆலமரத்திலே எலபொறிச்சுக் கிட்டிருந்தேன்! அப்போ வந்தாங்கோ துலுக்கப் பசாசுங்கோ! ஆறு பேருங்கோ! நானு அப்படியே ஒளிஞ்சுகிட்டே. சாப்பட்டாங்கோ. அந்தப் பொளுதுக்குள்ளே எசமாங்கோ வந்துட்டாங்கோ" (சுலோசனனைப் பார்த்து) "அதுக்குள்ளே எல்லாரும் ஓடிட்டான். ஒத்தன் பொந்திலே ஒளிஞ்சிண்டுட்டான். நேக்கு பயம் சாமீ. கண்டுகிட்டா அடிப்பாங்கோன்னு இவங்கோ புறப்பட்டதும் வந்து சேர்ந்தாங்கோ மறுபடி பிசாசுங்கள். கீளே கிடந்ததாம் 'ஒரு காகிதம்'. அதை வெச்சுக்கிட்டு என்னவோ கத்தினாங்கோ துலுக்கிலே. மறுபடி குதிரையை ஓட்டிக்கிட்டு திரும்பித் திரும்பிப் பார்த்துக்கிட்டு ஓடினாங்கோ. நான் இறங்கிமெள்ள மூட்டை எடுத்துக்கிட்டு, இருட்டானபடியாலே ஊருக்கு வரப்போ என்னை கண்டுகிட்டாங்கோ, இதோ சாமீ மூட்டை! கடுதாசி எங்கிட்டே இருக்கன்னுட்டு அடி அடின்னு அடிச்சாங்கோ சாமீ; முதுகு பாருங்கோ வீங்கிடுச்சு! கடுதாசி என்னிடம் இல்லவே இல்லீங்கோ: அவங்கோ கொண்டு போரத்தே நானே பாத்தேன்"

அரசன் "சரிசரி நிறுத்து உன் கதையை.

சுலோசனா, என்ன தப்பிதம் செய்தாய்? கடிதம் போனதைப்பற்றிக் கூட நான் முதலில் அவ்வளவு கவலைப்படவில்லை. எனக்கு வரவேண்டிய கடிதம் துருக்கர்கையில் அகப்பட்டதென்றால் என்ன கஷ்டம் பார். நமது இரகசியமெல்லாம் வெளியாய்விட்டன. அவர்கள் எத்தேசத்தவர் என்று தெரியுமா?" சுலோசனன் "தெரியும், ஐயா, இதோ அம்மூட்டையில் இருந்த கடிதம் ஒன்று; தமக்கு சிந்து தேசத்து பாக்ஷா ஆமத் எழுதியது. ஆகவே அவர்கள் ஸிந்து தேசத்தவர் என்றே தெரியவருகின்றது.

அரசன் "கெட்டுப்போயிற்றே காரியம். அப்பா சுலோசனா! உன்னை நொந்துகொள்வதில் என்ன பயன்? இதுவும் என் விதியின் பயன்தான்—யாரடா சேவகன் மந்திரியை அழைத்துவா!"(மனத்துள்)—"ஆஹா! தெய்வ சங்கல்பம்தான் எப்படியிருக்கின்றது! நாம் ஒருவிதமாய் சூழ்ச்சிசெய்து இரகசியமாய் துலுக்கனை ஏமாற்றிவிட எண்ணினதால் தெய்வம் நம்மை ஏமாற்றுகின்றதே. ஈசா, இதுவும் உன் திருவிளையாடல் அல்லவா? எனது நண்பன், எனது மருமகன், இராஜ புத்திருள் திலகம் போன்றவன் எனக்கு நிருபம் எழுதியனுப்ப, அதன் சங்கதி யாதொன்றும் நான் அறியாமல் தேனில் விழுந்த ஈ போல் தடுமாற, என் எதிரி, ஆமத் பாக்ஷா, எல்லா விவரத்தையும் நன்கு அறிந்து என்னை எதிர்க்க இராஜமார்க்கம் செய்துவைத்தது போல் ஆயிற்றே! நன்று! நன்று! சூரியகுலத்தில் அரிச்சந்திரன் மரபில் தோன்றிய நான் துலுக்கனுக்காயினுமென்ன! பொய் சொல்லத்துணிந்தேன் அல்லவா? அதன் பயன் இது! நான் என்ன சொல்லியும் சுமதி கேட்கவில்லை. விநாச காலே விபரீத புத்தி: என்றபடி சுமதிக்கும் புத்தி விபரீதப்பட்டது போலும்.

"ஒருமாதத் தவணை சொன்னோம்! இந்த ஒரு மாதத்தில் என்ன அநுகூலம் ஏற்பட்டது? சுகுணபுரத்திலிருந்து வீரபத்ரன் 1,500 மனிதர்களை அனுப்புகிறான். சரி இருக்கட்டும். ஜயபாலனோ எப்பொழுது சேனையை இங்கு வரும்படி செய்கிறானோ தெரியவில்லை. ஆமத்பாக்ஷாவுக்கு எல்லைப் புறத்திலேயே 3,000 ஆள்கள் வரையில் உண்டு!

"ஆனால் ஒரு காரியம் அநுகூலமாயிற்று. மங்களநாயகர் தமது 4,000 போர்வீரர்களையும் தயார் செய்துவைத்துக் கொண்டிருக்கிறார். முகுந்தனும் ஆயுதசாலையில் இடமில்லாமல் ஆயுதங்களைச்செய்து நிரப்பியிருக்கிறான். இன்னும் 25,000 பேருக்கு வேண்டிய ஆயுதங்கள் செய்ய சாமான்கள் சேகரித்து இருப்பதாகச் சொல்லுகிறான். இவ்வளவுதான்; இதற்காகப் பொய் சொல்லி ஏமாற்ற வழி தேடியிருக்க வேண்டியதில்லை.

"ஆயினுமென்ன! இந்த சங்கதிதான் அந்தத் துருக்கனுக்குத் தெரிந்து என்ன செய்யப் போகிறான்! அவன் சேனை வழி நடந்து வர வேண்டும். அதற்குள்——அடே, யார் அங்கே! மந்திரி வந்துவிட்டாரா?——"

சேவகன் "இன்னும் வரவில்லை மஹாராஜ்!"

அரசன் "மறுபடி ஒரு ஆளைத் தூரத்து அவர் வீட்டிற்கு!" என்றான்.

இவ்வாறு அரசன், மனத்துள் ஆலோசனை செய்துகொண்டு மந்திரியை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, அரண்மனையில் நிகழ்ந்த குழப்பத்தைக் கவனிப்போம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

கூட்டு வியாபாரம்

இருநூறு வருஷங்களுக்கு முன்னே, ஆரணி நகரத்துச் சந்தையில் வியாபாரி ஒருவன் சாமான்களை விற்க வந்திருந்தான். அவன் பொதிமாடு ஒன்று வைத்துக்கொண்டிருந்தான். அக்காலத்தில் நல்ல பாதைகள் இல்லாததாலும், இந்த வியாபாரியினிடம் பணம் அதிகமாயில்லாதபடியாலும், ஒரு வண்டியும் மாடுகளும் வைத்துக்கொள்வதற்கில்லை.

சந்தைக்குப் பல வியாபாரிகள் வந்திருந்தனர். அவரவர்களுடைய வியாபாரம் மிகவும் சுறுசுறுப்பாய் நடந்தது. அப்போது அந்த ஊர் ஜாகீர்தார், சந்தையைப் பார்க்க வந்தார். அவர் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வரும்

போது அந்தப் பொதி வியாபாரி இருக்குமிடம் வந்தார். அவனைக் கண்டு "ஏனப்பா! உன் வியாபாரம் முடிந்ததா?" என்றார்.

"இல்லை—இன்னும் கொஞ்சம் தினுசுகளிருக்கின்றன" என, ஜாகீர்தார் அவைகளென்னவென்று வந்து பார்த்தார். சில துணிகளும், விளையாட்டுச் சாமான்களும் இருந்தன. "அப்பா! அவைகளை எல்லாம் எனக்குக் கொடுத்து விடு—உன் வியாபாரம் ஏன் இவ்வளவு கொஞ்சம்?" என்று அவர் கேட்க, வியாபாரி, "சுவாமி, எனக்கு இன்னும் ஒரு மாடு வேண்டும். அது இருந்தால் எனக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கும். இந்தவொருமாடு எனக்குப் போதாது" என்றான்.

"சரி; அப்படியானால் நான் உனக்கு ஒரு மாடு வாங்கித் தருகிறேன். உனக்குக் கிடைக்கும் லாபத்தில் பாதி எனக்குக் கொடுக்கிறாயா?"

அந்த வியாபாரி அதற்குச் சம்மதித்துக் கொள்ளவே, ஜாகீர்தார், அவனிடமிருந்த சாமான்களை வாங்கினதோடு இன்னமொரு மாடும், அதற்கு வேண்டிய சாமான்களையும் வாங்கிக் கொடுத்தார். வியாபாரியும் ஜாகீர்தாருக்கு வந்தனமளித்துப் போனான்.

ஒரு வருஷம் கழிந்தது. வியாபாரி போன வருஷம் நின்ற இடத்திலேயே தன் இரண்டு மாடுகளையும் ஓட்டிக்கொண்டு வந்து நின்றான். ஜாகீர்தாரர் அவ்விடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரும்போது, வியாபாரி நிற்பதைக் கண்டு "அப்பா, என்ன சமாசாரம்?" என்று விசாரித்தார். வியாபாரி ஜாகீர்தாரரை வணங்கி, "சுவாமி, இந்த வருஷம் எனக்கு 100 வராகன் இலாபம் கிடைத்தது. அதில் பாதி ஐம்பது வராகன் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று 50 வராகனைக் கொடுத்தான். அவர் அதை வாங்கிக்கொள்ளாமல் "இந்த 50 வராகனுக்கும் சரக்குகள் வாங்கி இந்த வருஷம் விற்றுவா. அடுத்த வருஷம் மொத்த லாபத்தையும் நான் எடுத்துக் கொள்கிறேன்" என்றார். வியாபாரி அதற்கு ஒத்துக்கொண்டு, "சுவாமி, உங்கள் ஜாகீரில் சில இடங்களில் கொள்ளைக்காரர்கள் என்னைத் தொந்தரை செய்கிறார்கள். அவர்கள் என்னைத் தொந்தரவு செய்யாதிருக்கும்படி, ஓர் பத்திரம் எழுதிக் கொடுத்தால் எனக்குப் போதும். சுங்கம் கொடுப்பதும் கஷ்டமாயிருக்கிறது. அதைக் கொஞ்சம் நிவர்த்தி செய்து தரவேண்டும்" என்றான். ஜாகீர்தாரரும் அவனிஷ்டப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டார்.

சில மாதங்களுக்குப் பிறகு வியாபாரி ஜாகீர்தாரரிடம் ஓடிவந்தான். "சுவாமி, நான் இவ்வூருக்கு 20 மைல் மேற்கே மைதானத்தில் வரும்பொழுது, அங்கே குடியிருக்கும் ஜனங்கள் என்னைப் பிடித்துக்கட்டி, அடித்து, சரக்குகளை பிடுங்கிக்கொண்டு, மாடுகளையும் ஓட்டிக்கொண்டு போய்விட்டனர்" என்று முறையிட்டான். ஜாகீர்தாரருக்குக் கோபம் உண்டாயிற்று. "ஆஹா, நம் உத்தரவு பெற்றிருக்கும் போதே இம்மாதிரி கொள்ளை நடக்கிறதா?" என்று சொல்லிவிட்டு உடனே சிறு சேனையுடன் புறப்பட்டு வியாபாரி சொன்ன இடத்திற்குப் போனார். அங்கே விசாரித்ததில், வியாபாரி கூறியது உண்மையென்று வெளிப்பட, துஷ்டர்களைத் தண்டித்து வியாபாரியினுடைய மாடுகளையும் சரக்குகளையும் கண்டுபிடித்துக் கொடுத்தார். வியாபாரி அவைகளை சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டுபோய், வர்த்தகம் செய்து அடுத்த வருஷம் அந்த இடத்தில் வந்து ஜாகீர்தாரருடைய பங்காக ஏற்பட்ட 150 வராகன்களையும் அவரிடம் கொடுத்துவிட்டான். ஜாகீர்தார் வியாபாரியினுடைய குணத்தைக்கண்டு மெச்சி, தன் பங்குக்கு லாபமாகக் கிடைத்த 150 வராகனையும் இனாமாகக் கொடுத்ததோடு, தன் அதிகாரத்தின் கீழிருந்த ஊர்களிலெல்லாம் சுங்கமில்லாமல் வியாபாரஞ் செய்யும்படியும் அனுமதிச் சீட்டுத் தந்தார்.

வியாபாரி யோக்கியமாய், தான் சொன்னபடி செய்ததாலல்லவா கடைசியில் சுகம் அடைந்தான்? அவன் கிடைத்தவரைக்கும் லாபம் என்று போய்விட்டிருந்தால் அவன் கதி என்ன வாகும்? கொஞ்சகாலம் சௌக்கியமாயிருந்திருக்கலாம். ஆனால் அவனை எவனாவது கொள்ளை யிட்டிருந்தால், யாரிடம்போய் முறையிட்டுக் கொள்வது? ஜாகீர்தாரரையே மோசம் பண்ணியிருப்பதால், அவரிடம்போய் சொல்லிக்கொள்ள முடியாது. ஆகையால் வியாபாரி அயோக்கியனாக இருந்தால, அவன் எல்லா விதத்திலும் நஷ்டம் அடைந்திருப்பான்.

உண்மையே பேசுகிறவன் சுகமடைவான்.

கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

தமயந்தி 22—மீட்சி

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்பெனெதிர்.

மனிதனது சிறுமையும் கடவுளின் பெருமையும் எளிதிலறிய முடியாதென்பதற்குப் புஷ்கரனே சாட்சி யெனலாம். வெறியிற் கவிந்து வீண் டம்பங்களில் உழன்று, தமக்கு நாளை வரக்கூடிய நிலையைச் சற்றுங் கவனியாது, அகந்தையிற் குளித்துத் தருக்கித் தலை தெரியாது கூத்தாடித் தன் அழிவைத் தானே தேடும் தாமஸ குணத்தின் உருவகமாகவே அவனைக் கூறலாம். எனினும் அத்தாமஸ நிலையி லுட்பட்டவரையும் தன்மயமாக்கிச் சரிப்படுத்த உழலும் பெருந்தன்மை வாய்ந்த நளன் பேரருள் ஆண்டு அவனைச் சீர்படுத்த முந்துவது தவறாகாது. அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது; புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது; அறைக்கினுஞ் சந்தனம் தன் மண மறாது; காய்ச்சினும் தங்கம் தன் ஒளிகுன்றாது. குணமே யுருவாகி வந்த நளன் துன்பமுறினும் பெருமை யிழந்திடான்—அல்லவா! உள்ளீர முலராப் பசை வாய்ந்த செந்தண்மை பூண்ட அம்மன்னன் இன்பமும் துன்பமும் ஒருங்கே விரும்பியவன். அதுவே பெரியோர் நிலைமை.

முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றிசைநிடீஇப் பயக்கும் பேரறம்
இன்பம்வந் துறுமெனின் இனிய தாயிடைத்
துன்பம்வந் துறுமெனின் துறக்க லாகுமோ?

கேவல ஆசாபாசங்களில் கட்டுண்டு உழலும் குறுகிய பார்வை யுடையார்க்குத் தம்மையல்லால் உலகில்லை. விசால நோக்கமும், வாழ்க்கை யுயர்வும் வாய்ந்தவர்க்கு அத்தகைய இடும்மை ஏற்பட மனமிடந்தராது காக்கும். அத்தகைய மனச் செம்மையே பெரியார்க்கு அணிகலம். இன்றைக் கிருப்பது நாளையிராது. நிலையாமையே தன் இயற்கையாகக் கொண்ட இவ்வுலகில் பொறுமை, சாந்தி, வைராக்கியமாகிய முக்காற் சோபானத்திருந்து எல்லாக்கும் நன்மை செய்யும் பெருமையே தெய்விகந் தரும். இத்தகைய எண்ணங்களே ஆரிய மக்களது அந்தரங்க வாழ்க்கையின் பெருமை என்றும் விளக்கி வந்ததென்பது, தன்னிடம் க்ஷாத்திரங்கொண்டு, தோற்று விளங்கிய புஷ்கரனிடம் நளமன்னவன் பேசிய மொழிகள் விளக்கும் என்பது திண்ணம்.

நாடு நகரம் பொருள் முதலிய யாவும் துறந்து, நற்றுணை யற்று, நற்சொல்லற்று, நடு நிலையற்று, கீழ்மையுற்று விளங்கிய புஷ்கரன் தனது நிலையை எண்ணமலே தருக்கியிருந்தான்; அவ்னது உண்மை நிலையை அவனை அறியவிடாது அவன் அகந்தை இடையே தடையாய் நின்றது. மேலும், தன்னை வென்றானே என்ற க்ஷாத்திரம் அவனை நளனிடம் வெறுப்பும் கோபமும் ஆத்திரமும் கொள்ளச் செய்ததாயினும், அலையற்று நிற்கும் நடுக்கடல்போல நளமன்னவன், நல்லோர் பொல்லோர் எனப் பாவியாது சந்திரன் நிலவு விரிப்பது போலக் குளிர்ந்த மொழிகளால் பின் வருமாறு சொன்னான்:—

"புஷ்கர! ஏற்றமும் இறக்கமும் எவர்க்கும் உண்டு; அது உலக இயற்கை. எனவே கவலையுறேல். உன்னை ஜயிக்கவென்று நான் இக்கவறாடவில்லை; என் பழியைக் கழிக்கவென்றே ஆடினேன்,

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா னன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்'

என்பது நீ அறியாத தல்ல. உனது முன் கோபமும் ஆக்கிரஹமும் உன்னை அரசருள் பதராக்கிவிட்டன; உன் நாவிற்கு நரம்பில்லாமல் பேசச் செய்தன. பிறர் சொத்து, தாரம் என்றால் தித்திக்குமா? முட்டாளே! பிறன் மனையாளாகிய தமயந்தியைப் பெற என்ன ஆசைப்பட்டாய்! கொம்புத் தேனுக்குக் கண்ணிலா முடவனாசைபட்டால் கிட்டுமா? நிலவைக் கண்டு கைக்கொள்ள அழும் அறியாக்குழந்தை போல் என்னவென்னவோ உளறினாயே! உன்னிக்குப் பரிமள மெங்கிருந்து வரும்? உன் கொடுமை உன்னை எனக்கு அடிமையாக்கியது; உன் வாய்க் கொழுப்பு உன்னைச் சேர்ந்தார் உற்றார் அனைவரையும் எனக்கு அடிமைகளாக்கியது. ஆனால் அந்நிலைக்கு நான் ஆதாரம் அல்ல. அவ்வாறே என்னை முன் வென்றதற்கும் நீ ஆதாரம் அல்ல என்பதை உணர்கிறாயா? எல்லாம் காலத்தின் கோலமாகும்.

கம்மாளன் பசுவைக் காது அறுத்துக் கொள்ளவேண்டும்.

'வருவன தாமே வரும்' 'அளந்தன போகம் அவரவர்க்கு அற்றை நாளே!' உன்னுள் ஒளிந்திருந்த கலியின் ஆவேசமே என்னை வெல்லுமாறு உன்னைத்தூண்டியது. இப்பொழுது மப்படியேயோ என்னவோ யார்க்குத் தெரியும்? புத்தியற்றவனே! கற்றறிமோழைகள்போல் நீ செய்தவற்றிற்காக நான் கோபங்கொண்டவன் அல்ல. தன்னைக் கண்டு குரைத்த நாயின்மேல் மலைக்கேன்கோபம்வரும்! அம்மலை அசையாது அமர்ந்து சாந்தியொடு விளங்குவது போலவே என் மனமும் உன் தவறான மொழிகளைச் சற்றுங் கவனியாது அசைவற்று இருந்தது. உன்மேல் எனக்கெப்படிக் கோப மரும்பும்? தாழ்ந்தோரை ஹிம்ஸிப்பது எனது இயற்கையல்ல; தருமமென்று உன்னைக் கொல்லத்தக்க நியாய மிருந்தாலும், பின் நீ என்னைக் கொல்ல விரும்பினாலும், நான் உன்னை ஒருநாளும் கொல்லேன். இது சத்தியம். உன்னைக் கொன்று யான் பெறவேண்டியதென்ன இருக்கிறது? அல்லது உன்னைச் சேர்ந்தாரைக் கொன்றுயான் என்ன பயன்பெறவேண்டும்? 'கொலையும் களவும் காமமும் ஒழிமின்' என்பது வேத வாக்கு. நீ சொல்லிய மொழிகள் சிறிதும் எனக்குத் துன்பம் தரா; உன்னிடமிருந்து வென்ற முன் எனதல்லாதிருந்த பொருளும் எனக்கு இன்பந் தரா. அப்பொருளை எல்லாம் நீயே பெறுவாய். நீ சுகமுற்றிருக்கக் காண்பதே எனக்குப் பேரின்பம். மெலிந்தோரைக் காப்பதே பெரியோர் கடமை. உன்னோடு சேர்ந்தாரும் அவ்வாறே பெறுவர் என்பதும் திண்ணம். அதுவே எனக்கானந்த மூட்டும். காலக் கொடுமையினால் வாய்தவறிப் பேசிவிட்டதால், உன்னிடமிருக்கும் எனது நட்பு தாழ்ந்து விடுமென எண்ண வேண்டாம். புஷ்கரா! உண்மையில் நீ என் தம்பி. குற்றம் பார்க்கில் சுற்ற மேது? நீர் ஒழுக்கை உத்தேசித்து மூக்கை யறுத்தால் மூசசுச்கே முடிவுவந்து விடுமல்லமா? குழந்தாய்! அறியாமையால் நீ செய்ததனைத்தும் எனக் கொருநாளும் தவறாகப்படாது. குழந்தை காலாலுதைத்து விளையாடினால் அதன் தளிரொத்த காலை வெட்ட எந்தப் புத்தியற்றவன் துணிவன் அப்பனே! நீ என்றுஞ் சிரஞ்சீவியாயிருந்து சுகமுற்று விளங்குவாயாக! நன்மை வழியே நடந்து நலம் பெறுவாயாக!"

நளன் இம்மொழிகள் கூறினான். அம்மொழிகள் வாயினின்று வரவேற்றும், புஷ்கரன், அவ்வினிய மொழிகளின் நாதத்தையே உட்கொண்டவன் போலத் தனது செவி சாய்த்து நின்றான். என் செய்வான்? அவன் மனத்துள் இருவகை எண்ணங்கள் எழும்பிப் போரிட்டுக்கொண் டிருந்தன. அப்போரின் கலக்கத்தினால் அவன் கண்களிலிருந்து வெளிவந்த நீரோட்டம் அவன் நெஞ்சதைத்தப் பிளந்து பண்படுத்திய அம்மொழிகளின் வேகத் தாக்கை வெளியிட்டது. அச்சமயம் புஷ்கரன் உயிரற்றவன் போல நளன் காலில் விழுந்தான்; தான் செய்த தவறை மன்னிக்க வேண்டினான்; தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சினான். அவ்வாறு மனங்கனிந்து குழைந்து விளங்கிய புஷ்கரனைத் தேற்றிய நளன் அவனைத் தழுவி ஆசீர்வதித்தான். அவனும் பலவாறு வாயார வாழ்த்திப் புகழ்ந்து நளனது ஆதரவைப் பெற்று விளங்கினான்; ஒரு மாதகாலம் அங்கேயே யிருந்து நளன் செய்த மரியாதையை ஏற்றுத் தன் பதி யடைந்தான்.

புஷ்கரன் சென்றதும் நளன் தமயந்தியைத் தனதூர்க்கு அழைத்துவர ஆவல் கொண்டான்; தக்க ஏற்பாடுகள் செய்யவும் உத்தரவளித்தான். ராஜ தம்பதிகள் வரவைச் சரிவர ஏற்கவெனப் பட்டணத்தார் ஏற்றுக்கொண்ட பிரயாஸம் வாக்கிலடங்கா. எங்குப் பார்த்தாலும் நித்திலப் பந்தலிட்டு, நெடுங்கலசந் தாங்கி, பொற்கொடி விரித்து, தோரணங்கள் கட்டி, தெரு முழுதும் மெழுகிக் கோலமிட்டு அலங்கரித்துக் களிப்புடன் விழாக் கொண்டாட ஜனங்கள் செய்த ஆரவாரம் காண அக்கடலும் வெட்கி யடங்கும். மங்கல கீதமும், மதுர நாதமும் கொஞ்ச விளங்கிய அப்பட்டணத்தின் அழகை, அவ்விராஜ தம்பதிகள் பட்டணப் பிரவேசஞ் செய்யு நாளன்று காணச்

> செஞ்சுடர் இருள் கீறித் தினகரன் ஒருதேர்மேல்
> மஞ்சிய வணிக்கோலம் காணிய வெனவந்தான்.

என்பது இழுக்காகாது.

வீமமன்னவன் பேரன்போடு தன் மகளுக்கென மீண்டுமெடுத்த வரிசைகளுடன் கற்பிற் சிறந்த தமயந்தி ஸ்ரீதேவியெனப் பொலிந்து மறுகில் விளங்க, களங்கமற்ற சந்திரன் போன்ற அவ்வம்மணியின் முகமண்டலத்

தைக் கண்டு அதிலிருந்து வெளிவரும் கருணை நிலவைப் பங்குகொள்ள வந்த ஜனங்களின் மனத்தாமரையின் உள்ளூறிக் கசிந்துவரும் தேனை யுண்ண ஆவல் கொண்ட சூரியன் போல நள மன்னவன், 'ஜயவிஜயீ பவ' வென வந்தணர் ஆசிகூற, பல்லியங்கள் பல இன்னிசை பொழிய, கன்னியர் சுப மங்கலம் பாட, நகர மாந்தர்கள் கண்களிலிருந்து ஆநந்தக் கண்ணீர் வழிந்தோடிப் புனிதமாகிய தெருக்கள் தோறும், தேர்மேலேறி தம் இரு குழந்தைகளும் அருகிலிருக்க, பட்டணம் பிரவேசஞ்செய்தனன். அச்சமயம் இடையிடையே தந்த பூரண கும்பங்களையும், பெய்த மலர் மாரியையும், சுழற்றிய ஆலத்திகளையும், இட்ட மாலைகளையும், கூறிய ஆசிகளையும் வேதமொழிகளையும் நெறிவழியே யாதரிக்க, அத்திருக்கூட்டம் ராஜ மறுகை யடைந்தது. அச்சமயம் ஜனங்கள் மனத்தெழுச்சியின் மிகையை அளவிட முடியாது. நள தமயந்தியரது பிரிவினால் பிரிவுற்றேங்கிய அவர், மழையைக் கண்ட பசும் புல்போல அப்பொழுது களித்துத் தழைத்தனர்; உத்ஸாக முற்றனர்; அரசவரவைக் கொண்டாட வாங்காங்கு கூட்டங்கூடினர்; களிகொண்டாடினர்; அவ்விருவரது பிரபாவங்களை விரித்துரைத்தனர்; கடவுளைக் கொண்டாடித் தம் அரச தம்பதியருக்குப் பெரும்பேறும் பெருவாழ்வுந் தரத்துதித்தனர்.

இவ்வாறு அந்நகரம் களிகொண்டாட உள்ளங்களித்து கன்றைக் கண்ட பசுவைப் போல அவ்விராஜ தம்பதியர் தமது அரண்மனையை அடைந்து தமது வரவைக் கொண்டாட ஜனங்கட்குப் பலவித நன்மைகளைச் செய்யஉத்தரவளித்துத் தமது அந்தப்புரத்தையடைந்தனர். கற்பிற் சிறந்த மனைவியுடன் நள மன்னவன்நெடுநாள்சுகமாகவாழ்ந்துவந்தான்;

> ஆழி சூழ்புவி முழுவதும் ஆழியொன் றுருட்டி
> வாழி நல்லறம் புரிந்தரு மகம்பல வாற்றிச்
> சூழி மால்வரைப் பிடருறு சுமையொழித் தாறப்
> பாழி யம்புயத் துலகெலாம் பரித்தினி திருந்தான்.

பின்னுரை.

"தருமநந்தன! இவ்வாறு கவறால் நளன் பட்ட பாட்டைக்காட்டிலும் இக்காட்டில் தாங்கள் ஒன்றும் படவில்லை. அவனைப் போலக் கஷ்டப் படாமல் எப்போதும் இக்காட்டில் சத்காலக்ஷேபஞ் செய்யும்போது உமக்கு ஒரு நாளும் குறை வாராது. கவலை யற்றிரும்" எனப் பிருஹதச்வர் கூறிய, இந்தத் தமயந்தியை மணந்து பெருமைபெற்ற நளனது கதையைப் படிப்போர் கேட்போர் அனைவரும் பெருமை பெறுவார்; கலிதோஷ மறுவாரென்பது பெரியார் கொள்கை.

> கலிவினைபோம் கார்க்கோட னஞ்சறும் கஞ்சத்
> தலமனையாள் சார்புறும் சாற்றும்-உலகிலெங்கும்
> வளன்யாவும் வாய்க்குந் தமயந்தி போற்று
> நளன்காதை சொல்ல நயந்து.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

இந்தியப்பஞ்சாலைகளின் நிலைமை.

1918௵ எப்ரல்மாதத்திலிருந்து 1919௵ மார்ச்சு ௴ வரையில் இந்தியப் பஞ்சாலைகளில் நூற்கப்பட்ட நூல் 615 மிலியன் பவுன்(lb) எனவும், நெய்த வஸ்திரங்கள் 350 மிலியன்(lb) பவுன்கள் எனவும் மதிப்பிடப் படுகிறது. இதே விஷயத்தில் 1917-1918௵ங்களில்உற்பத்தியானது 661 மிலியன், 381 மிலியன்பவுன்கள் ஆகும். இந்தியப் பஞ்சாலைகளில் 1918௵ எப்ரல் மாசமுதல் 1919௵ மார்ச்சு௴ நெய்யப்பட்ட துணிகள் 44 கோடி ரூபாய் பெறுமென்றும், இதற்கு முந்திய வருஷத்தியது 27 கோடி ரூபா யாயிற்று என்றும் தெரிய வருகிறது.

* * *

அமெரிக்க சேனையில்இந்தியவீரர்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில், நம்மிந்தியர்கள் இருக்கின்றன ரென்று பலர் அறிந்திருந்தபோதிலும், அவர்களில் பலர் இப்பொழுது அந்நாட்டுச் சேனையில் சேர்ந்து, ஜர்மனிக்கு விரோதமாக சண்டை செய்கின்றனர் என்பது பலருக்குத் தெரிந்திராது. 125 இந்திய மாணவர்கள் தற்காலம் அமெரிக்காவில் வாசித்து வருகின்றனர். அவர்களில் இதுவரையில் தெரிந்த வரையில், 18 பெயர்கள் யுத்தவீரர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். சிலர் லெப்டினண்டு பதவிகளையும் வகித்திருக்கின்றனர் என்பதை அறிய, நமக்கு மிகவும் சந்தோஷத்தைத் தருகின்றது.

மேனுட்டார் சண்டையி லிறங்கி யிருக்க, அவர்களுடைய வியாபாரம் க்ஷீணித்தது.

ஜப்பானின் ஊக்கம்.

இதே சமயமென்று, வெகு காலம் காத்திருந்த ஜப்பான் தன் வியாபாரத்தை முன்னுக்குக் கொண்டுவர ஆரம்பித்தது. அநேகமாய் ஐரோப்பாவிலிருந்து இதுவரைக்கும் கிடைத்த சரக்குகளெல்லாம் நமக்குத் தற்காலம் ஜப்பானிலிருந்தே வருகின்றன. ஜப்பானிய வியாபாரம் எல்லாத் துறைகளிலும். மிகத் தீவிரமாக விருத்திடைந்து வருகின்றது. உதாரணமாக 1915ஸ்ஹத்தில் ஜப்பானிலிருந்து £ 14, 700 மதிப்புள்ள புட்டிப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனல் இவ்வருஷம் 4 மாதங்களில் (அதாவது ஜனவரி முதல் ஏப்ரல் வரையில்) £ 19,300, புட்டிப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டது வியக்கத்தக்கதே.

* *

ஆயுர்வேதத்தின் மகிமை.

பல வருஷங்களாக லண்டனில் வசித்து வருபவரும், ஆயூர்வேதத்தில் நல்ல அனுபவமுள்ளவருமான எஸ். எம். மித்திரா என்பவர் இங்கிலாந்தில் பல நோய்களை ஆயுர்வேத முறைகளால் குணப்படுத்தினரென்பது நமக்கு மகிழ்ச்சித் தருகிறது. இவர் சில வருஷங்களுக்கு முன்னே "ஸர்வதேச வைத்திய மகா சபை" நடைபெற்ற பொழுது, நம் பூர்வீக வைத்தியத்தைக் குறித்து அச்சபையின் முன் பிரசங்கம் புரிந்தனர். போர்முனையிலே குண்டுகளினல் வெகு நடுக்கமுற்று நரம்பு தளர்ந்து சீர்கெட்டுப் போனவர்களுக்கு அவர் குணமுண்டாக்கியிருக்கிருர்" ஆங்கிலவைத்தியர்களால் கைவிடப்பட்ட நோய்களையும் அவர் பூரண சுகப்படுத்தியிருக்கிருர்" என்று அவரை யறிந்தவர் ஒருவர் கூறுவதை. ஆயுர்வேதமுறையை மறுப்பவர்கள் கவனிக்கவேண்டும்.

* * *

ஓர் செ[illegible]யாளரின் மரணம்.

செட்டிமார்களில் [illegible]வரும், தம்மினத்தாருக்கும், இந்[illegible] தேசத்திற்கும் மிகவும் உழைத்தவருமான திவான் பஹதூர் கல்வ[illegible] ராமானுஜம் செட்டியார் அவர்கள் இம்மாதம் காலஞ்சென்றதை அறிய மிகவும் வியசனிக்கிறோம். காலஞ்சென்ற செட்டியாரவர்கள் சிலகாலம் சென்னைமா நகரின் ஷெரிப்பாக இருந்து வந்தது அனைவரும் அறிந்த விஷயம். தாமும் தம் தமயனர் ஸ்ரீமான் கண்ணன் செட்டியாரவர்களும் சேர்ந்து பல தர்ம ஆயுர்வேத வைத்திய சாலைகளையும் பல பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்ததோடு தம்மிடம் வந்தவர்களுக்கு இல்லையெனது கொடுத்துவந்து "தர்ம ராமானுஜம்" என்னும் பெயரை யடைந்தார். செட்டியாரவர்களின் மரணம் நம்மவர்களுக்கு ஓர் பெரும் துரதிர்ஷ்டமென்றே கூறவேண்டும்.

* * *

ஓர் சிறுவர் கண்டுபிடித்த அதிசயங்கள்.

பம்பாய் மாகாணத்திலுள்ள ஈ. ஈ. தத்தர் என்னும் சிறுவர் ரஸாயன சாஸ்திரத்தில் பல விஷயங்களைக் கண்டுபிடித்ததாகத் தெரியவருகிறது. வெடிமருந்தாக உபயோகப்படக் கூடிய சதுப்பு நிலக்காற்றையுண்டுபண்ணும் வழியையுத்தத்தின் ஆரம்பத்தில்கண்டுபிடித்து அம்முறையைப் பாதுகாக்க உரிமை யளிக்கும்படி நம் ராஜாங்கத்தாரை அனுமதி கேட்டார். ராஜாங்கத்தார் அனுமதி கொடுத்து, இம்முறை எங்கு ஜெர்மானியர்களுக்குத் தெரிந்து விடுமோ என்று பயந்து, யுத்தம் முடியும் வரையில், வெளிப்படுத்த வேண்டாம் என்று உத்தரவு செய்தனர். கந்தகம், ஸோடா உப்பு, அலுமினு, மரவுப்பு முதலியவைகளை மிகவும் சுலபமான வழிகளில் தயார் செய்வதையும் தத்தர் கண்டுபிடித்திருக்கிருர். இவைகளெல்லாம் விவசாயத்திற்கு மிகவும் பயன் படுவனவாகையால் நம் நாட்டிற்கு மிகவும் நன்மை பயக்குமென்பதில் சந்தேக மில்லை. இவ்வளவு மதியூகியான சிறுவருக்கு வயது 17. அவர் இதுவரையிலும் எந்தப் பள்ளிக்கூடத்திலும் ரஸாயன விஷயங்களைப்பற்றி வாசிக்கவில்லை என்று தெரிகிறது. கடவுள் அவரை நீடூழிகாலம் வாழ அருள் புரிவாராக!

* * *

(372-ம் பக்கத் தொடர்ச்சி.)

வொரு பள்ளிக்கூடத்திலும் ஓர் வைத்தியர் நியமிக்கப்படவேண்டுமென்றும், மற்றும் பல சௌகரியங்களையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இதற்காக நாம் கவர்ன்மெண்டாருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

162025